ஓம்

தொல்காப்பிய முனிவரால் இயற்றப்பட்ட

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

(இரண்டாம் பாகம்)

பின்னின்கியல்களும் பேராசிரியமும்

கொழும்புத் தமிழ்ச் சங்க
நூலகத்திற்கு அன்பளிப்பாக
இந்நூலை வழங்கியவர்
புலவர் சிவங் கருணைய பாண்டியனார்
இரத்மலானை

புன்னாலைக்கட்டுவன்

தமிழ் வித்துவான், பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்

ஏட்டுப்பிரதிகளோடு ஒப்புநோக்கித்
திருத்திய திருத்தங்களோடும்,

எழுதிய

உரைவிளக்கக் குறிப்புக்களோடும்

"ஈழகேசரி" அதிபர்

நா. பொன்னையா அவர்களால்

தமது

சுன்னகம், தீருமகள் அழுத்தகத்தில்

பதிக்கப்பட்டன

1943

PRINTED AT
THE THIRUMAKAL PRESS
CHUNNAKAM

பொருளடக்கம்

முகவுரை vi
உரையாசிரியர் வரலாறு ... xiii
சிறப்புப்பாயிரம் xv
பிழைதிருத்தம் xix

பொருளதிகார மூலமும் பேராசிரிய ருரையும் உரைவிளக்கக் குறிப்புக்களும்

மெய்ப்பாட்டியற்சுருக்கம் ... *1*
மெய்ப்பாட்டியல் ... ... க
மெய்ப்பாட்டியல் உதாரணச்செய்யுளுரை அங
உவமவியற் சுருக்கம் ... ... கஅ
உவமவியல் ... ... கஉ
உவமவியல் உதாரணச்செய்யுளுரை ... கஅ
செய்யுளியல் ... ... உக
மரபியல் ... ... சுஉக
சூத்திரமுதற்குறிப்பகராதி ... *1*
உதாரண அகராதி *7*
அரும்பத முதலியவற்றின் அகராதி *19*

கணபதிதுணை

விநாயகக் கடவுள் வணக்கம்

தன்றே ணென்கி னென்று கைம்மிகூஉங்
களிறுவளர் பெருங்கா டாயினு
மொளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே.

குரவர் வணக்கம்

இமிழ்பெரும் பாற்கட லெழுமமு தனதிந்
தமிழ்கெழு நிலத்தினோர் தவத்தனி யுருவாய்
யாழ்ப்பாண மெனுநாட் டெழில்பெறு நல்லூத்
தனிநகர்த் தோன்றித் தமிழ்த்தொன் மொழிக்குஞ்
சைவ சமயந் தனக்குமோ ரரணுய்க்
காவலர் பாவலர் கணித்துநன் கேத்தப்
பலநூ றெளிவுகொளப் பதித்து மாக்கியு
முரைமணி பிறக்குமோ ருயரா கரமாய்ச்
சொன்மழை யெனப்பொழி வன்மையிற் சிறந்தும்
பெருநீர் வைப்பிடை யிரும்புகழ் நிறீஇய
ஆறு முகப்பெரு நாவலன் றனக்கு
நன்மரு மகனு யின்புறத் தோன்றித்
தொல்காப் பியமுந் தொகைநூ லாதியும்
பல்காப் பியமும் பயின்று மேம்பட இ
விதுவை சிரோமணி யாகி விளங்கிய
பொன்னம் பலப்பெயர் மன்னுசெம் மற்கு
மாரிய மொழிதமிழ்ச் சீரிய மொழிகளிற்
பேரியற் கலையும் பிறவுநன் குணருபு
பலநூ லியற்றி யிலகுபுக ழுறீஇய
சுன்னைக் குமார சுவாமிப் புலவனும்
விதிதுவ மணிக்கும் விருப்பொடு மெமக்கிவி
தருந்தமி ழுணர்த்திப் பொருந்துமறி வளித்த
விருஞ்செய லதன்பொருட் டீண்டுபெருந் துதிதனை
அன்பொடுஞ் செய்திங் கின்புறு குவனே.

முகவுரை

தென்மலை யிருந்த சீர்சால் முனிவராகிய அகத்தி யரின் முதன் மாணாக்கராகிய ஒல்காப் பெருமைத் தொல்காப் பியனரியற்றிய தொல்காப்பியத்துக்கு உரைசெய்தார், இளம் பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய் வச்சிலையார், கல்லாடனார் எனப் பலராவர். அவருள் சேனா வரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார் எனும் மூவருஞ் செய்த வுரைகள் சொல்லதிகாரம் ஒன்றற்கேயுள்ளன. நச்சினார்க்கினிய ருரை எழுத்ததிகாரத்திற்கும், சொல்லதிகாரத்திற்கும், பொரு ளதிகாரத்தின் மெய்ப்பாட்டியல், உவமவியல், மரபியல் நீங்க லாக ஏனை ஆறியல்களுக்கும் இப்போது காணப்படுகின்றது. பேராசிரியருரை பொருளதிகாரத்தின் பின்னான்கியல்களுக்குமே இப்போது காணப்படுகின்றது. நூல் முழுவதற்குங் காணப்படும் உரை இளம்பூரணருரையே. அவ்வுரைகளுள், நச்சினார்க்கினி யர் செய்த எழுத்ததிகாரவுரையும் சேனாவரையர் செய்த சொல் லதிகாரவுரையும் சில திருத்தங்களோடும் உரைவிளக்கக் குறிப் புக்களோடும் முன் எம்மால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டன. அடுத்த பொருளதிகாரத்துப் பின்னான்கியல்களுக்குமுள்ள பேரா சிரியருரையே பல திருத்தங்களோடும் உரைவிளக்கக் குறிப் புக்களோடும் இப்போது எம்மால் அச்சிட்டு வெளிப்படுத்தப் படுகின்றது. பொருளதிகாரத்து முன் ஐந்தியல்களுக்குமுள்ள உரையே இப்பொழுது அச்சிட்டு வெளிப்படுத்தப்படவேண்டி யது முறையாமாயினும், பின் நான்கியல்களுக்குமுள்ள பேரா சிரியருரை, மதுரைச் தமிழ்ச் சங்கத்தாராலும் இங்காட்டு ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தாராலும் நடாத்தப் படும் பண்டித பரீக்ஷைப் பாடநூல்களுளொன்றாக இப் பொழுது நியமிக்கப்பட்டிருக்கின்றமையாலும், அவ்வியல்களி னுரையே படிப்போர் எளிதில் விளங்கிக்கொள்ளமுடியாதிருத்த லாலும், அதனையே முன் அச்சிட்டு வெளிப்படுத்துவது நல மென்று பலரும் வேண்டிக்கொண்டமையாலே அதனை முன் னர் வெளிப்படுத்த ணண்ணினேம். முன்னியல்களி னுரையும் பின்னர் அச்சிட்டு வெளிப்படுத்தப்படும்.

பொருளதிகாரத்துப் பின் நான்கியற்குமுள்ள இப்பேரா சிரியருரையை, நச்சினார்க்கினியராலெழுதப்பட்ட முன்னியல்களி னுரையோடுஞ் சேர்த்து முதலில் அச்சிட்டுதவினவர்கள், யாழ்ப் பாணம்—ராவ்பகதூர் ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களே. அவர்கள் தாம் அச்சிட்டபோது முழுவுரையையும் நச்சினார்க்கினியருரையென்றே கருதி, அச்சிட்ட புத்தகத்தின் முகப்பில், பொருளதிகாரம் நச்சினார்க்கினியருரையென எழுதி வெளியிட்டார்கள். அங்ஙனம் அவர்கள் எழுதி வெளியிட்ட தற்குக் காரணம், இது பேராசிரியருரையெனத் தெரித்தெழு தாத பிரதிகள் கிடைப்ப, அவற்றைமாத்திரம் நோக்கி அச் சிட்டமையேபோலும். சிதலரித்தும் பாணந்தின்றும் எழுதுவோ ராற் பிறழ்வுற்றுங் கிடந்த ஏட்டுப்பிரதிகளை நோக்கி ஒரு வாறு திருத்தி முதலில் அச்சிட்டுப் பாதுகாத்துதவிய பிள்ளை யவர்களுடைய அரிய நன்றி தமிழுலகத்தாரால் என்றும் பாராட்டப்படத்தக்கதேயாம்.

பிள்ளையவர்களால் அச்சிடப்பட்ட இப் பொருளதிகாரம் வெளிவந்த சில காலத்தின்பின் "அப்பொருளதிகாரத்தின் பின் நான்கியல்களினுரையும் நச்சினார்க்கினியருரையன்று பேரா சிரியருரையே" எனத் தக்க காரணங்களாற் றெரித்துச் சேது சம்ஸ்தான மகாவித்துவானும், சிறந்த ஆராய்ச்சியாளருமாகிய பாஷாகவிசேகரர் ஸ்ரீமத் ரா. ராகவையங்கார் அவர்கள் மது ரைத் தமிழ்ச்சங்கத்தினின்று வெளிவரும் செந்தமிழ்ப் பத் திரிகையிலும், அச்சங்கத்துப் பிரசுரமாகிய, தொல். செய்யு ளியல் – நச்சினார்க்கினியருரை முகவுரையிலும் எழுதி வெளிப் படுத்தினர்கள்.

பொருளதிகாரத்து முன்னைய வைந்தியல்களுக்குமுள்ள நச் சினார்க்கினியருரையையும், பின் நான்கியல்களுக்குமுள்ள இப் பேராசிரியருரையையும் ஏட்டுப் பிரதிகளோடும் ஒப்பு நோக்கித் திருத்தி இரண்டாவதாக, ராவ்பஹதூர் ஸ்ரீமான் ச. பவானந்தம் பிள்ளையவர்கள் வெவ்வேறுகப் பதித்து வெளிப்படுத்தினர்கள். அவர்கள் பதிப்பானும் அவ்வுரைகள் சில திருத்தமடைந்தன. அதன்பின் மூன்றுவதாக, அவ்வுரைகளிரண்டனையும் முறையே, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதிப் பதிப்பாசிரியர் ராவ்சாஹிப், ஸ்ரீமான் S. வையாபுரிப்பிள்ளை (B.A., B. L.,)

அவர்களும், மயிலாப்பூர் P. S. உயர்தர கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் பிரம்மஸ்ரீ வே. துரைசாமி ஐயரவர்களும், ஏட்டுப் பிரதிகளோடு ஒப்புநோக்கித் திருத்தி உதவ, ஸ்ரீமான் S. கனகசபாபதிப்பிள்ளையவர்கள் வெவ்வேறுகப் பதித்து வெளிப் படுத்தினர்கள். அப்பதிப்பானும் சில திருத்தம் பெற்றன.

இம் மூப்பதிப்பாளர்களாலும் பதிக்கப்பட்ட உரைகளுள், பிற்பாகமாகிய இப்போசிரியருரையை உடன்வைத்து ஒப்பு நோக்கியபோது முற்பதிப்புக்கள் இரண்டன்கண்ணுமுள்ள பாடங்களினும் பிற்பதிப்பிலுள்ள பாடங்கள் சில, திருத்த முடையனவாகவும், பிற்பதிப்பிலுள்ள பாடங்களினும் முற் பதிப்புக்களிலுள்ள பாடங்கள் சில திருத்தமுடையனவாகவும், சில பாடங்கள் மூன்றினுந் திருத்தமில்லனவாகவுங் காணப் பட்டன.

இம் மூப்பதிப்புக்களானுந் திருந்தியவற்றைவிட இன்னும் மிகப் பல இவ்வுரையுள் திருந்தவேண்டியனவாகக் காணப்பட் டமையானே, அவற்றை ஏட்டுப்பிரதிகளோடும் ஒப்புநோக்கித் திருத்தலாமென முயன்றும் திருத்தமான பழைய பிரதிகள் அகப்படாமையினாலே பூரணமாகத் திருத்திக்கொள்ளுதல்கூடா தாயிற்று. அதனால், திருத்தமான பழைய ஏட்டுப் பிரதியைப் பெற விரும்பி அவ் விருப்பத்தை, தமிழ்நாட்டின் றவப்பயனுய்த் தோன்றிப் பழைய பல நூல்களைப் பதித்தும் புதிய பல உரைநூல்களை ஆக்கியு முதவிய மஹாமஹோபாத்யாய—தக்ஷிணத்ய கலாநிதி—டாக்டர், பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு எழுதினேம். அவர்கள் மனமுவந்து, செய்யு ளியன் மாத்திர மமைந்த போசிரியருரை ஏட்டுப் பிரதி யொன்றும், மற்றை மூன்றியலு மமைந்த கையெழுத்துப் பிரதியொன்றும் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் தக்க வியோக மடைந்தார்களாயினும் அவர்களுக்கு எமது பேரன்பு உரியதாகுக. அவர்களனுப்பிய பிரதிகளோடு அச்சுப் பிரதி களை ஒப்புநோக்கியபோது, அப்பிரதிகளிற் சில திருத்தங்கள் கிடைத்தன. அவற்றினு மனமமையாது மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புத்தகசாலையிலே பழைய நல்ல பிரதிகள் இருக்கு மெனக் கருதி அங்குச் சென்று, வித்துவமணியாய் விளங்கும் 'செந்தமிழ்'ப் பத்திராதிபர் ஸ்ரீமத் திரு. நாராயணையங்கார்

அவர்கள் அப்போது அங்கு இல்லாமையினாலே, செந்தமிழ் உதவிப் பத்திராசிரியரும், வித்துவானுமாகிய ஸ்ரீமத் T. K. இராமானுஜ ஐயங்காவர்களிடம் உசாவினேம். அவர்கள் சில பிரதிகள் இருப்பதாகச் சொல்லி மனமகிழ்ச்சியோடும் அவற்றை எடுத்து உதவியதுமன்றி யாமிருந்து அவற்றைப் படித்துப்பார்த் தற்கேற்ற வசதிகளும் செய்தார்கள். அவர்கள் செய்த பெருந் தகைமைச் செயல் எம்மால் என்றும் மறக்கற்பாலதன்று. நிற்க:

யாம் பிழையுடையனவென்று குறித்து வைத்திருந்த உரைப்பகுதிகளை அப்பிரதிகளோடு ஒப்புநோக்கியபோது சில திருத்தங்கள் காணப்பட்டன. அத்திருத்தங்களை எழுதிக் கொண்டு மீண்டு ஊர்க்கு வந்தபின், இந்தியாவில் வேறு சிலர் ஏட்டுப் பிரதிகள் வைத்திருக்கிறார்களென வறிந்து அவர்க ளுக்கு எங் கருத்தை எழுதித் தெரிவித்தேம். அவர்கள் தமிழ்மகளிடம் கொண்ட வெறுப்பாற்போலும் தங்களிடம் ஏட் டுப் பிரதிகள் கிடையாவென மறுத்துவிட்டார்கள். பின், கோப் பாய் அரசினர் ஆசிரிய கல்லூரியில் ஆசிரியராய் இருக்கும் வித்துவான் ஸ்ரீமான் கா. பொ. இரத்தினம் B. O. L. அவர்கள் ஒரு ஏட்டுப்பிரதி தந்து உதவினர்கள். அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகுக. அவர்களுதவிய பிரதியினும் சில திருத் தங்கள் கிடைத்தன.

ஏட்டுப்பிரதிகள் யாவும் பெரும்பாலும் அச்சுப் பிரதிக ளோடு ஒத்திருந்தமையானே பின் ஏட்டுப் பிரதிகள் தேடு வதை யாம் ஒழித்துக், கிடைத்த திருத்தங்களோடும் இப் பதிப்பைப் பதிப்பித்தேம். ஏட்டுப் பிரதிகளை நோக்கித் திருத் திய திருத்தங்களை விடப் பல்லாண்டாகப் பண்டித வகுப்பு மாணவர்களுக்கு யாம் படிப்பித்த அனுபவத்தினாலே அறிந்து வைத்திருந்த சில திருத்தங்களையும் கீழ்க்குறிப்பிற் காண்பித்துள் ளேம். அவை பின்னுளில் ஏட்டுப் பிரதிகளை நோக்கித் திருத் தஞ் செய்பவர்களுக்கு உபயோகமாகுமென எண்ணுகின்றேம். அவற்றுட் பொருந்துவன கொள்க.

ஏட்டுப் பிரதிகளை நோக்கித் திருத்திக்கொள்வது மிகவரி தான செயலாகும். யாது காரணத்தாலெனின்: ஒரு பிரதி யைப் பார்த்து வேறு பிரதி எழுதுவோர் சிதலும் பாண முன் தின்ற இடங்களுக்குப் புள்ளியிட்டெழுதாது சேர்த்து

எழுதிவிட்டமையானும், சிலவிடங்களிற் றங்கருத்திற்கேற்பச் சில சொற்களையும் வாக்கியங்களையும் பெய்து எழுதிவிட்டமையானும், பொருள் விளங்காத இடங்களைப் பிழைபட வுணர்ந்து திருத்திவிட்டமையானும், வரிகளை மாறி எழுதிவிட்டமையானும், உண்மைப் பொருள் இதுவென உணரமுடியாமையான் என்க. சொற்களும் வாக்கியங்களுஞ் சிதைந்த இடங்களையும், வரிகள் மாறியுள்ள விடங்களையும் அங்கங்கே (சிறப்பாக நூ00-ம், நூ0உ-ம், நூ0ஏ-ம், நூகநூ-ம், நூசூரு-ம், சூகசூ-ம், சூசஅ-ம், சூசூ0-ம், சூசூக-ம் சூத்திர உரைகளை) நோக்கி யுணர்ந்து கொள்க. சில சூத்திரவுரையுள் முன்வந்த வரிகள் பின்னும் வந்துள்ளன. அவற்றை நூ00-ம் சூத்திரவுரை முதலிய நோக்கியுணர்க. இன்னும் யாம் இப்படியிருந்திருக்கலாமென்று காண்பித்த இடத்திற் றிருத்தம் வேறுவிதமாகவு மிருந்திருக்கலாம். எங்ஙனமிருப்பினும் அப்பிழை அவ்விடத்திற் றிருத்தமுற வேண்டும் என்பதே எமது கருத்தாம்.

மேலும், எளிதில் விளங்கற்கரிய விடங்களையும், செய்யுளியலில் வருந் தொடைக் கணக்குகளையும் எளிதிலறிய விரித்து விளக்கியும், தொடைக்கணக்குப் பாக்களில் வரும் பிழைகளைத் திருத்தியுங் காண்பித்துள்ளேம். அவற்றை நூசக-ம், நூசூரு-ம் சூத்திர உரை முதலியவற்றை நோக்கி உணர்ந்துகொள்க. மேலும் யாம் திருத்தமென்று கண்ட விடங்களிலுஞ் சில சொற்களும் வாக்கியங்களும் எம் நோக்கிற்குத் தப்பிப் பிழையாகவு மிருக்கலாம். அவற்றையும் ஏட்டுப் பிரதிகளை நோக்கித் திருத்திக்கொள்வார்களாக. பேராசிரியர் எழுதிய உரை தானென்று கூற முடியாமல் அத்துணைப் பிறழ்ச்சியடைந்திருக்கும் இவ்வுரையை யாம் பூரணமாகத் திருத்திவிட்டேமென்று கூறுவது எமக்கே பெரும் அவமானமாகும். நிற்க:

யாமிப்போது அச்சிட்ட இப்பதிப்புப் பூரண்மாகத் திருந்தியதென்பது எமது கருத்தன்றுதலால், பழைய ஏட்டுப் பிரதிகள் வைத்திருப்பவர்கள் தமிழ்மகளின் நலம் கருதி அவற்றை அனுப்பி வைப்பின் இரண்டாம் பதிப்பில் இன்னுந் திருத்தஞ் செய்யலாமென்பதை அவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றேம். மேலும் யாம் திருத்திய திருத்தங்களிலும், எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களிலும் எமது முதுமை, மறதி முதலியவற்றால் நேர்ந்த பிழைகளைத் திருத்திக்கொள்ளுமாறு அறிஞர்களை வேண்டிக்கொள்ளுகின்றேம். அன்றியும் உண்மையான பிழைகளை அறிஞர்கள் எமக்கு அறிவிப்பின், அவற்றை அவர்கள் பெயரோடும் இரண்டாம் பதிப்பில் வெளிப்படுத்துவேம். அன்றி நன்னூல் சின்னூன் முதலிய சிற்றிலக்கணங்களைத்தானும் முறையுறக் கல்லாதும், ஆழ்ந்து நோக்காதும் பேர்வேண்டிப் பிழைகூறி ஆரவாரிக்கும் அவலமாக்கள் செயலையாம் ஒரு பொருட்படுத்தேம். அவர்கள் தாமே கூறித் தாமே மகிழ்ந்துகொள்வார்களாக.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்."

இவ்வுரையுள், மெய்ப்பாட்டியற் பொருள்களையும், உவம இயற் பொருள்களையும் எளிதினறிந்து கோடற்குபகாரமாக, அவ்வியல்களின் பொருள்களைச் சுருக்கி எழுதி, எழுதிய அச்சுருக்கங்களை அவ்வியல்களின் முகப்பிலே தந்துள்ளேம். அன்றியும், அவ்வியல்களின் பொருள்களை எளிதின் விளங்கிக் கோடற்குபகாரமாக, அவ்வியல்களில் வருமுதாரணச் செய்யுள்களுக்குப் பொருளு மெழுதி அவ்வியல்களின் பின்னுற் சேர்த்துள்ளேம். ஏனைய வியல்களுக்கு விரிவஞ்சி அவை எழுதாது விடப்பட்டன. அவற்றில் வரும் அரும்பதங்களின் பொருள்களைப் பின்னுற் சேர்க்கப்பட்டிருக்கும் அரும்பதவகராதி நோக்கியறிந்துகொள்க.

யாம் எழுதிய உரைவிளக்கக் குறிப்புக்களைப் பலமுறை நுண்ணிதாகப் படித்துப் பார்த்து இன்றியமையாத சில திருத்தங்கள் செய்து துணைபுரிந்த, திருநெல்வேலி ஆசிரிய கல்லூரித் தலைமைத் தமிழாசிரியரும், எமது ஆசிரியருளொருவராகிய சுன்னாகம் வித்துவமணி ஸ்ரீமான் அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடம் முறையாகக் கற்று விற்பன்னராய் விளங்குபவருமாகிய பண்டிதர் ஸ்ரீமான் சி. கணபதிப்பிள்ளை யவர்களுக்கு யாஞ் செய்யக்கிடந்த கடப்பாடு யாதென அறியேம். அவர்கள் செய்த நன்றியும், அவர்கள் நுண்மதியும் என்றுமெம்மாற் பாராட்டப்படத் தக்கனவே.

இன்னும், வடமொழி நூல்களுட் கூறிய மெய்ப்பாட்டிற் குரிய சில இலக்கண விதிகளை யாம் அறிதற்குத் துணைபுரிந்த,

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டித ரும், வியாகரண மஹோபாத்தியாயருமாகிய பிரமஶ்ரீ வை. இராமசாமி சர்மா அவர்களுக்கும் எமது நன்றியுரியதாகுக.

மேலும் இவ்வுரைப் பதிப்பிலுள்ள உரைக்குறிப்பு முதலிய வற்றைப் படித்துப்பார்த்து அன்போடு சிறப்புப்பாயிரமளித்த, அரியகற்றுசற்றவராகிய இரு பெரும் புலவருக்கும் எமது அன்பு உரியதாகுக.

இதனை யாம் அச்சிட்டபோது அச்சுத்தாள்களை நோக் கிப் பிழைகள் வாராவண்ணம் திருத்தியும், அரும்பதவகராதி, சூத்திரவகராதி முதலியவற்றை எழுதியும் எமது மாணவர்கள் செய்த உதவியும் எம்மான் மறக்கற்பாலதன்று.

மேலும், தொல்காப்பியத்து ஏனையதிகாரங்களைப்போலவே, பொருளதிகாரத்தையும் பதித்துத் தமிழுலகிற் குதவவேண்டு மெனக் கருதி, அவ்வதிகாரத்துப் பின் நான்கியற்குமுள்ள இப் பேராசிரியருரையையும், உரைவிளக்கக் குறிப்புக்களையும் தாமே விரும்பியேற்றுப் பதித்துதவிய, 'ஈழகேசரி'ப் பத்திராதி பரும், நெடுங்காலந் தமிழ்த்தொண்டி லீடுபட்டு உழைத்து வரு பவரும், பரோபகார சிந்தை யுடையவருமாகிய ஶ்ரீமான் நா. பொன்னையபிள்ளை யவர்களுக்கும் எமது நன்றி யுரியதாகுக.

ஐரோப்பியர்களுடைய பெரும்போரினாலே உலகம் முழு வதும் இடர்ப்பட்டு மயங்கு மிக்காலத்திலே எத்தனைப் பெருஞ் செல்வரும் நினைத்தற்குமரிய இப்பெருஞ் செயலைப் பிள்ளையவர் கள் தமக்குவரு மெவ்வகையிடரையு நோக்காது மனமுவந்து செய்த பேருதவியானது, எம்மாலன்றி இத் தமிழுலகானும் என்றும் போற்றப்படத் தக்கதேயாம்.

இப்பதிப்பினை யாம் இடையூறின்றி முற்றுவித்தற்கு உயிர்த் துணையாகி அகத்தும் புறத்தும் நின்றுதவிய எமது குலதெய்வ மாகிய விநாயகக் கடவுளுடைய திருவடிகளை, மனமொழிமெய் களால் சிந்தித்துத் துதித்து வணங்குதும்.

சி. கணேசையர்

உரையாசிரியர் வரலாறு

இவ்வுரையாசிரியர் பெயர் பேராசிரியர் என்பதாகும். இவரே மரபியல் கூஅ-ம் சூத்திரவுரையுள், "வலம்புரி முத் திற் குலம்புரி பிறப்பும்" என்னும் பொதுப்பாயிரஞ் செய் தான் ஆத்திரையன் பேராசிரியன் எனக் கூறலானே, அப் பேராசிரியர் இவர்க்கு முந்தியவரென்பதும், இவரவரின் வேறுவ ரென்பதும் பெறப்படும். இனி யாப்பருங்கலவிருத்தியுரையுள் "பிறை நெடுமுடிக் கறைமிடற்றரனர் பேர்மகிழ்ந்த பேராசிரி யன்" எனவும் "நீர்மலிந்த வார்சடையோன் பேர்மகிழ்ந்த பேராசிரியன்" எனவும் சிவன்பெயராற் பலவிடங்களிற் புகழ்ந்து கூறப்படும் பேராசிரியரும் ஒருவரருளர். அவர் செய்த யாப் பிலக்கணச் சூத்திரங்கள் அவ்வுரையுட் பலவிடங்களிற் பிர மாணமாக எடுத்துக்காட்டப்படுதலினாலும், அவ்வுரைக் கொள்கை களை இவர் எடுத்து மறுத்தலானும் இவர் அவர்க்கும் அவ் வுரைகாரருக்கும் பிந்தியுள்ளவர் என்பது பெறப்படும். இனித் திருக்கோவையாருரையாசிரியரும் பேராசிரியர் எனப்படுதலின் அவரும் இவரின் வேறுவரென்பது அவருரைப்போக்கானே அறியப்படும். ஆயினும் சில சொல்லாட்சி ஒப்புமைகொண்டு அவரும் இவரும் ஒருவரேயாவர் என்பாரும், சில சொல்லாட்சி யளவில் இருவரையும் ஒருவரெனல் கூடாதெனக் காரணங் காட்டி மறுப்பாருமுளர். சிலர் திருக்கோவையாருரையாசிரியரும், ஆத்திரையன் பேராசிரியனும் ஒருவரேயாவர் என்பர். உண் மையை ஆராய்ந்து கொள்க. இனி நேமிநாத நூலாசிரியருக் பேராசிரியர் எனப்படுகின்றார். அவர் அருகமதத்தினராதலா னும் நன்னூலாசிரியருக்கு முந்தியவராதலினாலும், நன்னூற் கொள்கைகளை இவரெடுத்து மறுத்தும் உடன்பட்டுஞ் சேற லானும் அவர் இவரின் முந்தியவராவர்.

இனி, இவ்வுரையாசிரியர் தொல்காப்பியத்துக்கு உரை செய்த இளம்பூரணருக்குப் பிந்தியவரென்பது, இவர் தமதுரை யுள் அவர் கொள்கைகளை எடுத்துக்காட்டி மறுத்தலானும், நச் சினார்க்கினியர்க்கு முந்தியவர் என்பது இவர் கொள்கைகளை நச்சினார்க்கினியர் தமதுரையுள் எடுத்து மறுத்தும் உடன்பட்

டும் சேறலானும், தமதுரையுள் இவர் பெயரையே எடுத்துக் கூறலானும் பெறப்படும்.

இவர் இளம்பூரணர் கருத்தை மறுப்பது உசுஅ-ம் உஅக-ம் சஙச-ம் சசo-ம் சூத்திரவுரை முதலியவற்றாலும், நச்சினார்க் கினிய ரிவருரையை மறுப்பது முதலியன செய்யுளியலுரை யானும், இவர் பெயரை எடுத்துக்கூறுவது களவியல் நு-ம் சூத் திரவுரை முதலியவற்றானுமறியப்படும்.

வெண்பாமாலை ஐயனரிதனாரும் இவர்க்கு முந்தியவரென் பது, அவர் பெயரை சுசகூ-ம் சூத்திரவுரையுள் எடுத்துக் கூறலானும், பாட்டியன் மரபுநூலாரும் இவர்க்கு முந்தியவரென் பது அந்நூற் பெயரை சுசுஙூ-ம் சூத்திரவுரையுள் எடுத்துக் கூறலானும் பெறப்படும். நன்னூலார்க்கும் இவர் பிந்தியவர் என்பது அவர் கொண்ட பகுபதமுடிபை இவர் சுசுடு-ம் சூத் திரவுரையுள் எடுத்துக்காட்டி மறுத்தலானும், அவர் சூத்திர அடிகளை எடுத்துத் தொடுத்து சுசுo-ம் சூத்திரவுரையுட் கூற லானும் பிறவாற்றானும் அறியப்படும்.

இன்னும் இவர் பொருளதிகாரத்து ஏனையவியல்களுக்கும் உரைசெய்துள்ளாரென்பது உசுசு-ம் சூத்திரவுரையுள் கள வியலுட் கூறினமென்றும் உசுஎ-ம் சூத்திர உரையுள் அகத் திணையியலுட் கூறினமென்றுங் கூறலானும், வேறு சூத்திர வுரைகளினுங் குறிப்பாக உணரக்கிடத்தலானும் அறியப் படும். அன்றியும், இவர் முன்னையவதிகாரங்கட்கும் உரை செய்திருக்கலாமென்பது சிற்சில சூத்திரவுரைகளானே ஒரு வாறு ஊகிக்கலாம்.

இவர் ஊர் கால முதலியன அறியமுடியவில்லை. ஆயினும் இவர் காலம் 14-ம் நூற்றாண்டளவில் இருக்கலாமெனச் சிலர் கருதுவர். ஆராய்ந்துணர்க.

சிறப்புப்பாயிரம்

"உயிரிளங்குமரன்" நாடக நூலாசிரியரும்,
கலாவிற்பன்னரும், கவிஞருமாகிய
நவாலியூர், ஸ்ரீமாந் க. சோமசுந்தரப் புலவரவர்கள்
இயற்றியது.

ஆசிரியப்பா

விண்டொடு நெடுவரை மந்தரந் நிறுவி
அண்டரும் பிறரும் பண்டைநாட் கடையப்
புண்ணியப் பாற்கட லீன்ற தண்ணிய
விண்ணவ ரமுதம் வெள்கி வாயூற
நூற்பய னுகிய நாற்பய னுடனே
நாச்சுவை யென்ரு செவிச்சுவை யென்ரு
மேற்படு மொன்பது விதச்சுவை யென்ரு
பல்வகைச் சுவையு மெல்லவர் தமக்கும்
உண்டிட வுதவுந் தண்டா வமுதருள்
செந்தமிழ்த் தெய்வத் திருமொழிக் கடறருஞ்
சந்தனப் பொதியத் தவமுனி தனது
சுந்தரச் சேவடி தொழுதுகற் றுயர்ந்த
பல்காப் பியமுணர் தொல்காப் பியனருள்
ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியநூல்
எழுத்துஞ் சொல்லும் பொருளு மென்ன
வழுத்திய மூன்று வகுப்பிற் றுங்கதன்
எழுத்தும் சொல்லும் பழுத்தநூற் புலவர்
உரையுடன் வைத்துப் புரைதப வாய்ந்து
கற்போர் முட்டறப் பொற்புடன் வெளியிட்
டந்நா ளருளின னுங்கது போல
வன்னமும் பதமும் மாசறக் கற்ற
பின்னரா ராயும் பெரும்பொருள் கற்புழிக்
கொள்வோ ருள்ளமுங் கொடுப்போ ரறிவும்
ஒள்ளிய வுணர்வுபெற் றுவகை பூப்பக்
கண்ணிய வுரையொடு நுண்ணிதி னுய்ந்து

பொருத்தமும் விருத்தமும் திருத்தமுங் காட்டுங்
குறிப்பும் விளக்கமு நெறிப்பட வமைத்துப்
பேரா சிரியப் பெருநா வலன்றன்
உரைதனைத் தெளிவுற வுணர்த்துமோ ருரைதனை
திருவருள் கூட்டச் செய்தனன், யாரெனின்;
பொன்னிலங் காவுரிப் பொற்கொடி தனது
சென்னியி லணிந்த திருமணி முடிபோல்
மன்னுயாழ்ப் பாண வளநக ரதனில்
நன்னு வலர்புகழ் புன்னுலைக் கட்டுவன்
வளமிகு பதியுதி யிளவள ஞாயிறு;
கடவுட் கற்பிற் காசிபன் மரபு
புடவியில் விளக்கப் புகுந்த புதுமதி;
முந்நூல் மந்திர முதுமறை யாளன்;
சிந்தயக் குரிசில் செய்த மாதவம்;
தூவமர் தண்டமிழ்ப் பூவலயந் தொழும்
நாவலர் பெருமான் நயந்திடு மருமான்
தத்துவ நெறியறி வித்துவ சிரோமணி
பொன்னம் பலப்பெயர்ப் புண்ணிய னிடத்தும்
மன்னிய வளம்பெறு சுன்னமா நகரான்
குறுமுனி யென்ன வறிவினி லுயர்ந்தோன்
மறுவறு குமார சுவாமியென் றோதும்
வரமுறு புலவன் மாட்டும் பெறுமிறை
தொன்னூற் கல்வித் துறையெலா மொருங்கே
பன்னுட் பயின்று பழகிய பண்டிதன்;
இலக்கியப் பொன்மலை; இலக்கண வரதி;
நலத்தகு சைவ நன்னூற் பாற்கடல்;
புண்ணிய நீறு சண்ணித்த மேனியன்
அண்ணலுந் தெழுத்து மெண்ணுநன் ஞானன்;
முன்னவன் சேவடி மன்னிய வுளத்தன்;
கற்றவர் விழையுங் **கணேசைய** னென்னும்
அற்புத நாமத் தருந்தவ; னதனைக்
கடும்போ ரேதுவிற் காகிதம் முட்டி
இடும்பைமீக் கூர விரங்குமிந் நாளிற்
கண்கவர் வனப்பு மெண்பெறு சிறப்பும்
நன்கொருங் கமைய வின்புடன் முயன்றே

எழுதா வெழுத்திற் பழுதறப் பதிப்பித்
துழுவ லன்புட னுலகினுக் களித்தனன்,
மன்னிய சிறப்பிற் சுன்னையம் பதியிற்
றிருமகள் நிலையத் தொருதனி யதிபதி
ஈழ கேசரித் தாளினைப் பரப்புந்
தாழாச் சிறப்பிற் றண்டமி ழறிஞன்
நன்னய மிகுந்த **பொன்னைய** நாமம்
மண்ணகம் விளங்கிட வந்த
புண்ணிய முயற்சிப் புகழ்ப்பெரி யோனே.

கொழும்பு அரசினர் கல்லூரித் தமிழாசிரியராயிருந்தவரும்,
வித்தகப் பத்திராசிரியரும்,
சுன்னகம், அ. குமாரசுவாமிப் புலவரவர்களிடங் கற்று
விற்பன்னராகி விளங்குபவருமாகிய
தென்கோவை, பண்டிதர் ஸ்ரீமாந் ச. கந்தையபிள்ளை
அவர்கள் இயற்றியது.

ஆசிரியப்பா

அமிர்தமா ருருவா மருணிலை யளிக்குந்
தொல்காப் பியனெறி தோன்றத் தெரிக்குந்
தொல்காப் பியமெனுந் தொல்லிய னூலின்
மெய்ப்பாடு முதலாச் செப்புநான் கியலையும்
பேரா சிரியராம் புலவர் பெருந்தகை
உலகிய னுடி யுரூற்றுபே ருரையுடன்
பிரதிபல கொண்டு வழுவற நாடிக்
கற்றோர் மற்றோர் யாவருங் கையுறு
கனியெனச் செம்பொருள் கண்டுநனி மகிழக்
குறிப்புரை விரிவா னெறிப்பட நிகழ்த்தினன்;
பன்மாண் புறுவளம் பழுநிய தொன்மா
இலங்கைப் பெயரிய வீழநன் னாட்டின்
திருமுக மாகி மருவியாழ்ப் பாணப்
புன்னையம் பதியிற் றன்னிகர் காசிப
குலவிளக் காகிக் குலவுபே ரறிஞன்;

சின்னைய விப்பிரன் பன்னுட் புரிதவப்
பெற்றியே யுருவா யுற்றிடு புதல்வன்;
செந்தமி ழிலக்கணச் செழுங்கடன் முகந்து
தண்டமிழ் வாணர் தமதுளப் புலமெலாங்
குளிர்ப்பப் பொழியுங் கொண்டலே யனையான்;
மணங்கமழ் தெய்வத் திளநலந் திகழுங்
கந்தழி சான்ற விந்துமத நிலைஇய
அமலமுதற் படியாம் விமலவாழ் வருளும்
விக்கின விநாயகன் மெய்ப்பத நாளும்
மறவாது வழுத்தும் வரமுறு பெரியோன்;
இத்தலம் புகழு மிணையிலா வியற்றமிழ்
வித்துவ கணேச விப்பிர மணியே.
இந்நூ லுரையையுமுன் னியம்புரைக் குறிப்புடன்
அழகுற வச்சி லமைத்து வழங்கும்
ஈழ கேசரி யிதழுக் கதிபனும்
பொன்னைய நாம மன்னிய செம்மல்
தன்னுளங் கொண்ட தமிழ்மொழி யார்வப்
பெற்றியு மம்ம பெறலருங் குரைத்தே.

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
க	உக	குறிப்புக்களே	சுவைக்குறிப்புக்களே
க	உசு	குறிப்பு	சுவைக்குறிப்பு
டு	உள	பொருளென்றது	பெயரென்றது
கo	கடு	கூறுதும்	கூறும்
கஉ	ஙசு	சுருக்குதல்	கண்ணேச்சுருக்கி நோக்குதல்
ககூ	சு	மருட்கை	மருட்கைச்
உகூ	ஙஙூ	வருவது	வருவன
ஙo	ஙo	உவகைப்பொருளாம்!	உவகைப்பொருளாம்;
ஙo	ஙஉ	உணரவைத்தான்	உணரவைத்தான். சுதந்திரத்தில் எண்ணி உணரவைத்தான் எனினும் கருதிஉணரவைத்தான் எனினுமாம்.
ஙகூ	ஙo	இது	இவை
சo	ஙக	ஒரு ஆண் மகனது	பெண்பாற் கைக்கிளை பற்றி ஒருஆண்மகனது
சo	ஙஙூ	வேண்டும்.	வேண்டும். அது பொருந்துவது முற் பிறந்த மெய்ப்பாடுகளுக்கு முன்னேகூறினென்று கூறலாமெனினும்; அஃதாவது என்பதை அங்ஙனம் பிரித்துக் கூறும் வழக்கு வேறிடத்திற் காணுமையின் பிழையிருத்தல்வேண்டுமென்றும்.
சச	உஙூ	போலர்	பேரலர்
சஎ	உச	அதுவோ	அதுவே
டுக	கo	ஞெழுங்க	ஞெமுங்க
டுசு	கo	அவை	இவை
டுஅ	சு	மதலை	மாலை
சுக	ஙஙூ	தவிர்த்தல்	தவிர்தல்
எசு	ஙஙூ	இதனை	இவ்வுரைக்கருத்தை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
எஅ	ஈடு	பெறப்படும்.	பெறப்படும். மார்பிற் சுணங்கு—மார்பின் முயக்கத்தாலாகிய (இவள் மூலையிற்) சுணங்கின முகையும். 'நின்மார்பு' என்னும் பிரயோகம் அடையடுத்தும் அடாதும் வருவனவும், நுங்தைமார்பு என்பதுபோல்வனவும் ஆறும் வேற்றுமைப் பொருளிலேயே கலியில்வருதலின் ஈண்டும் ஆறுவதே பொருத்தமும் சேர் பொருளுமாதல் காண்க. நச்சினார்க்கினியரும் ஆறுவதற்கு, தொல். எச்ச. கஎ-ம் சூத்திர உரையில்உதாரணமாக இதனையே காட்டுகின்றனர். கலியில் வேறு கூறுவர். அதனை உதாரணச் செய்யுளுரையிற் காண்க.
எக	ஈஈ	சிறப்பின்று	சிறப்பில
அச	அ	சுருக்குதல்	சுருக்கி நோக்கல்
அச	கசு	வாய்மையல்லாத	வாயிற்பொருந்திய
அடு	உ0	தோலாகித் திரங்கிஅலை	தோலாந் தன்மையோடு திரங்கித்தளை
அசு	ச	தண்னை	தான்
அசு	கஅ	மகள்	மகன்
கூச	எ	பொருந்தாது	பொருந்தாதும்
கூச	எ—அ	(பயனின்றிக் கழிந்தது போல்)	பயனின்றிக் கழிந்தது போல்
க0க	கச	உசுடு	உகடு
ககச	உஅ	ஒடிற்றெனவா	ஒடிற்றெனலா
கஉ0	எ	இம்முன்னமாதியவை	இவ்வுதாரணங்களை
கஉசு	உஉ	ஒத்துவரல்	ஒத்தல்
கஉசு	ஈக	இரட்டை	உவமை, இரட்டை
கஉள	உள	அது	அதுவும்
கஈ0	ஈக	இழுக்கில	இழுக்கிலது

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
கஙஙு	ஈக	[4]என்பது...தில்லை	——
கஙச	உ	படாது	படாது,
கசக	உஅ	சுருங்கல்	கண்மூடல்
கசகூ	க0	ஒவ்வாதனவும்	ஒவ்வாதெனவும்
கடுக	கஈ	சிவத்த	நிவந்த
கடுச	கச	னிருக்கழி	னிருங்கழி
கடுடு	ஈ	சொல்லுதும்	சொல்லும்
கடுடு	உஈ	பாத்தியிற்	பாத்திக்
கடுஅ	க	வாவிழை	வாலிழை
கடுஅ	கக	பண்புப்	பண்புங்
கசுஉ	ஈஉ	தன்	தங்
கசுஙு	ஈக	தந்	தன்
கஅஅ	உடு	சேறுகி	சேறுக
கஅக	சு	மாந்தளிர்போலும்	கரிய
கஅகூ	கக	என்னற்	எண்ணற்
கஅகூ	கச	வந்தது	வந்தன
கஅகூ	உஅ	அவ்விடத்து	அவ்விடத்து.
கஃக	கடு	குவிந்த	குவித்த
ககூடு	ஈச	விரும்பிய	விரும்பிப்
ககூசு	கஅ	அழாஅய்	அழாய்
ககூசு	ஈச	உரைக்க	உணர
ககூசு	ஈகூ	வேறுபடுவர்	இன்று வேறுபடுவர்
ககூள	ஈ	இன்று	——
ககூள	கச	இலை	ஓலை
ககூள	ஈ0	ஆவி	ஆலி
உ0உ	ஈச	[5]என...ஈகும்	——
உ0டு	ஈச	தொகுத்த...பாடம்.	தொகு...தில்லை என்பது தொகுத்ததாம்எனவும் பாடம். எண்ணி அம் மூன்றனையும் எனவும் பிரிக்கலாம்.
உகடு	கச	படுத்	பகுத்
உஉக	அ	குற்றியலுகரம்	குற்றியலிகரம்
உஙஉ	ச	முற்றியலுகரம்	முற்றியலுகரமும்
உஙசு	கூ	அசையும்	அசையையும்
உஙஅ	உஉ	அகலல்	அகவல்
உசக	உக	கருவிளம்	கருவிளங்காய்
உசஙூ	உஅ	எழுவாய்ச்	எழுவாய்
உசச	ஈஉ	நிறையும்	நிறையுமென்பது
உசஅ	ஈக	அகவல்வெண்பா	அகவல், வெண்பா,
உடுடு	கஈ	மூவகை	மூவகை

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
உருரு	கரு	மூவகை	மூவகை
உசுo	கூ	ணுவலா	ணுவலா
உசுகூ	சக	நேர்பு நிரை நிரைபு	நேர்பு நிரைபு நிரைபு
உளச	உசு	காணுத்தலே	நீடுகொடி
உளகூ	கஙூ	உரியசைபாற்	உரியசையாற்
உளகூ	உள	சீரன்று	சீரல்ல
உஅச	சு	நிரைதட்டல்	[3]நிரைதட்டல்
உஅச	உஉ	என்று பொருள் கொள் வேமோ	என்றுசொல்லாமோ
உஅரு	உகூ	கொள்வேமோ	கொள்ளுதல் செய்யாமோ
உஅள	கஅ	திரிந்த நிலைமை	திரிந்த நிலைமை வஞ்சி யுரிச்சீர்
உஅள	கஅ	ஒருமை	இயற்று என ஒருமை
உஅள	உள	நிரையிற்று	நிரையியற்று
உஅஅ	உச	அதன்மறுப்பு	அதன் மறுப்பு :—
ஙoசு	ஙகூ	நில்லாது	நில்லா
ஙoள	ஙo	எட்டுக்கும்	எட்டற்கும்
ஙகo	ஙக ஙஉ	சமனிலை, வியனிலை	சமநிலை, வியநிலை
ஙகரு	உ	தடப	தட்ப
ஙசுக	உகூ	ஆரிடம்	ஆரிடப்போலி
ஙசுள	ஙக	மணிகை	மணிவெண்ணகை
ஙளo	ஙo	படுக்க	பகுக்க
ஙளஙூ	உள	பண்ணை	பெண்ணை
ஙஅஙூ	கூக	நிம	நிர
ஙஅச	ஙக	கோடலின் (அற்றன்று)	கோடலின், 'அற்றன்று'
ஙஅள	க	நிரை	நரை
ஙகூச	உகூ	சனம். என நெடிலுங் குறிலும்	சினம். என நெடிலும் நெடிலும்
ஙகூச	ஙஙூ	இவற்றில் உயிர்கள் அணுவல்ல.	இவையும் வருக்கமெனப் படா.
ஙகூசு	உஉ	இகரம்	அகரம்
சoஙூ	ஙரு	செவ்வி	செவ்
சகஅ	ஙள	எழுதப்பட்டது. அது	எழுதப்பட்டன, அவை
சஙஉ	க	விருந்தினமா	விருந்தினவா
சஙஉ	ரு	பவ	பல
சசஅ	அ	ஈற்றடி	ஈற்றயலடி
சசுக	கள	ப. 1140	ப—சரிசு
சசுசு	உஅ	ஒரு நாடகநூல்	நாடகநூலின் ஒருறுப்பு. சஙo-ம் சூத்திர உரை நோக்குக.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
சசுள	ஙo	நிற்றவிற்	நிற்றலிற்
சசுஅ	ஙஙூ	உடையுறுப்புப் போறலி னால்	உறுப்புடைமையால்
சசுஅ	ஙரு	(சஙஙூ)	——
சளசு	உஅ	பயன்று	பயின்று
சளகூ	ஙo	"அடக்கியல்...ஒக்கும் என்னுஞ் சூத்திரத்தை.	"போக்கியல்.....வைப்பெ னப்படுமே" என்னுஞ் சூத்திரவியியை.
சஅஙூ	ஙஉ	புகழ்தல்.	புனைந்துரைத்தல்.
சஅச	உள	திரை	திரைபோல்வது.
சகச	உச	மதுலர	மதுரை
சகசு	உ	தரங்கவென்	தரங்கமென்
ரிகச	ஙஉ	பிறிதொன்று—பொடி	பிறிதொன்று — ஆற்றத் தக்க பிறிதொன்று. உமியும் நீரும் பெய்து ஆற்றுவது இக்கால வழக்கு. பிறிதொன் றிற் பெய்து என்று மிருந்திருக்கலாமோ என்பது ஆராயத்தக்கது.
ரிகச	ஙச	ஆராகித்தது என்றது... உருகியது.	ஆராகித்தது என்றது.... அரிது கடுகிச் சென் றது. செய்வது செல் வது என்றிருந்திருக்க லாமோ? ஆய்க.
ரிரிச	உசு	ஆயினென்றே	ஆயினன்றே
ரிசுஙூ	உள	நச்சினார்க்கினியர்	சிவஞானமுனிவர்
ரிசுஅ	உரு	கண்டங்கருங்கண்... பாடம்	கண்டனகண்...பாடம், அது பொருத்தமில்லை.
ரிசுகூ	கக	சுவா	[4]சுவா
ரிசுகூ	கச	[4]மந்திரம்	மந்திரம்
ரிளo	உள	தோன்றுமை	பொருள் தோன்றுமை
ரிஅச	கள	பெருங்காண்	பெருங்கான்
ரிஆசு	உஉ	கிழவி	கிளவி
ரிஅள	சு	கிழவி	கிளவி
ரிகo	அ	வாயினெ	வாயிலெ
ரிகo	உக	மென்பது;	மென்பது.
சுகஉ	உo	க-ம் சூத்திரம்	செய்யுளியல்க-ம்சூத்திரம்
சுகசூ	ஙக	அல்லாக்கால்...விடலாம்	இதனை சுகஉ-ம் பக்கத்து 4-ம்குறிப்போடுசேர்க்குக
சுஉஉ	ஙஉ	[5]என்று...தில்லை.	——

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
சுஉச	உஉ	ஏறெனப்புடுதலின்.	ஏறெனப்படுதலின்,
சுசுஙி	உசு	[1] அல்லவை	[1] உரையின்படி, அல்லவை
சுஙுக	உக	கூறினமையான்	கூறினமை
சுசஉ	உடு	மட்டிச்சுண்ணும்பு	மட்டி; சிப்பிவகையுளொன்று
சுசசு	உசு	ஆகும்	ஆரும்
சுசசுக	உக	வழங்கா...ஆராயத். தக்கது.	ஆணைடுதிரியாத: இயைபு நோக்கித் திரிந்து என்றும் பொருள் கொள்ளலாம்.
சுடுக	உடு	சி. வை. தாமோதரம் பிள்ளை	——
சுடுஙு	ஙூ	உள்ளது	உள்ளன
சுடுசு	கூள	பிணவம்	பிணவல்
சுசுஅ	உக	பரசராமன்	பரசராமன்தந்தை
சுஎஏ	ஙஙு	இயல்பு	தொழில்
சுஅஉ	ஙூக	ஒன்பதாக	ஒன்பதாமோத்தாக
சுஅசு	ஙூஏ	இலக்கண...நூலுள்ளும்	வழக்கு நூலாகிய இலக்கண நூலுள்ளும்
சுஅசு	கூக	அற்றன்று...தில்லை.	——
சுசுஏ	ஙூஏ	'வேதப்...நூல்	——
சுசுக	ஙூஉ	காண்டிகையுரை	விரிவுரை
எஏள	உச	கொண்டு	கொண்டமையின்
எஏள	ஙூஉ	ஆதலின்...என்றார்	ஆதலின் இவர் கருத்துப் பொருந்தாது என்க.
எஉக	ககூ	தொல்-எழு. சுக	——
எஉஉ	எ	வகையினி	வகையினும்
எஉசு	உ	கேர்த்தி	சேர்த்தி
எஙுச	உள	ளகரம் ளகரம்	ளகரம் ரகரம்
எடுஅ	ஙஙு	ககரஙு	சுசுஙு

சில பாடபேதக் கருத்து

சுக	உ	நிதிமேனின்றமரம்	சி. வை., S. கனக...பதி.
		நிதிமேனின்றமனம்	ச. பவா ,,
		நதிமேனின்றமரம் என்று மிருந்திருக்கலாம்.	
சுக	கள	அடுத்த மார்பு	சி. வை., ச. பவா., S கனக. பதிப்பு.
		வடுத்தமார்பு என்று மிருந்திருக்கலாம். இளம்பூரணருரை யுதாரணம் நோக்கியுணர்க.	

மெய்ப்பாட்டியற் சுருக்கம்

'மெய்ப்பாடாவது: உலகத்தாருள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதொருவழியால் வெளிப்படுதல்' என்றும், 'மெய்ப்பாடு - பொருட்பாடு' என்றுங் கூறுவர் பேராசிரியர். பொருள் - உள்ள நிகழ்ச்சி (சுவைக்குறிப்பு). பாடு - வெளிப்படுதல். படுதல் - தோன்றல் - வெளிப்படுதல். உலகத்தாருள்ளநிகழ்ச்சி என்றது, உலகத்திலுள்ளானெருவன் ஒரு பொருளைத் தன் பொறியால் உணர்ந்தவிடத்து அப்பொருள் காரணமாக அவனுள்ளத்து நிகழும் நிகழ்ச்சி (சுவைக்குறிப்பு) என்றபடி. புலப்படுவதொருவழி என்றது சத்துவத்தினை. ஒருவனுள்ளத்தே நிகழ்வது உடம்பின் வேறுபாட்டால் தோன்றுமென்பது,

> "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்."

என்று தேவர் கூறுதலானும் அறியப்படும்.

இனி இளம்பூரணர்,

> "உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதன்
> மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே."

என்று செயிற்றியனர் கூறலின், "அச்சமு (தலியனவு) ற்றுன் மாட்டு நிகழும் அச்சம் (முதலியன) அவன்மாட்டு நிகழுஞ் சத்துவத்தினுற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனுந்தன்மை மெய்ப்பாடு" என்றும், 'மெய்யின்கட்பட்டுத் தோன்றலின் மெய்ப்பாடாயிற்று' என்றுங் கூறுவர். உய்ப்போன் - அநுபவிப்போன் (= சுவைப்போன்) என்றபடி.

> "காதல காத லறியாமை யுய்க்கிற்பின்
> ஏதில வேதிலார் நூல்." (அதி. சச—செய். கo)

என்னும் குறளுரையில் 'உய்க்கிற்பின் - அநுபவிக்கவல்லனயின்' என்று பரிமேலழகர் கூறலுங் காண்க. உய்த்தல் - செலுத்தல். அஃது ஈண்டு மனத்தைச் செலுத்தி அநுபவித்தன்மேனின்றது. "உய்த்தாடித் திரியாதே உள்ளமே" என்பது தேவாரம்.

'மெய்ப்பாடு—மெய்க்கட்பட்டு விளங்குந் தோற்றம்' என்பர் வீரசோழியகாரரும்.

சொற்பொருளால் வேறுபடினும் வரைவிலக்கணங்களை உற்று நோக்கும்போது யாவர் கருத்தும் ஒன்றாகும்.

இனி, நாடகநூலார் கூறிய மெய்ப்பாட்டுப் பொருள்கள் முப்பத்திரண்டென்றும், அவை பதினாறும், அப்பதினாறும் எட்டாயும் அடங்குமென்றுந் தொல்காப்பியனார் கூறுவர்.

மெய்ப்பாடுகள் முப்பத்திரண்டாவன : சுவைக்கப்படு பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும் அது மனத்துப்பட்ட வழி உள்ளத்து நிகழுங் குறிப்பும், அக்குறிப்புக்கள் தோன்றிய உள்ளங் காரணமாக உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய சத்துவங்களும் என்னும் நான்கனோடும் மெய்ப்பாடு எட்டையும் உறழ முப்பத்திரண்டு பொருளாம்.

சுவைப்பொருளாவன : நகை முதலிய சுவைக்குக் காரணமாகிய பொருள்கள்.

சுவையாவது : நகை முதலிய சுவைக்குரிய பொருள்களும் சுவைப்போனுடைய பொறியுங் கூடியவழி நிகழு மனவுணர்ச்சி. இதுபற்றியே,

" இருவகை நிலத்தி னியல்வது சுவையே."

என்றார் பிறரும். இச்சுவையைக்குறித்துப் பேராசிரியர் உரைக்குமிடத்து, " இருவகை நிலத்தி னியல்வது சுவையே " என்னுஞ் சூத்திரத்துள் இருநிலமென்பன உய்ப்போன் செயலுங் காண்போனறிவும் என்னும் இரண்டிடமும் என்று பொருள் கூறுவார் கருத்தை மறுத்து, இருநிலமென்பன சுவைக்கப்படு பொருளுஞ் சுவைப்போனுமென்னும் இரண்டிடமுமே என்று நாட்டியுரைத்தலின் அவருரையையும் விளங்குதற்பொருட்டு ஈண்டுக் காட்டுதும். அது வருமாறு :—

" இனி இருவகை நிலமென்பன உய்ப்போன் செய்தது காண்போற்கெய்துதலன்றோவெனின், சுவையென்பது ஒப்பிலுனுய பெயராகலான் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப்பறிவினை நாவுணர்விலுற் பிறனுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர்விலுன் அறிவதன்றி. அதுபோல, அச்சத்துக்கு ஏதுவாகிய ஒருபொருள் கண்டு அஞ்சி ஓடிவருகின்றொனருவனை மற்றொருவன் கண்டவழி, இவன் வள்ளெயிற்றரிமா முதலாயின கண்டு அஞ்சினனென்றறிவதல்லது வள்ளெயிற்றரிமாவினைத் தான் காண்டல்வேண்டுவதன்று. தான் கண்டானுயின் அதுவுஞ் சுவையெனவேபடும். ஆகவே, அஞ்சினானைக் கண்டு நகுதலும் கருணைசெய்தலும் கண்டோர்க்குப் பிறப்பதன்றி அச்சம் பிறவாதாகலான் உய்ப்போன் செய்தது காண்போனுய்த்த அறிவின்பெற்றியாற் செல்லாதாகலின், இருவகை நிலமெனப்படுவன சுவைப்பொருளும் சுவைத்தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாகல்வேண்டுமென்பது." கண்டோர்க்குச் சுவை பிறவாதென்று பேராசிரியர் மறுத்துக் கூறிய அதனால் கண்டோர்க்கும் சுவை பிறக்குமென்று கூத்தநூலாருட் சிலர் கூறுவரென்பது பெறப்படும்.

குறிப்பாவது : பொறியுணர்வு மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுஞ் சுவைக்குறிப்பு.

சத்துவமாவது : அவ்வுள்ளநிகழ்ச்சி பிறந்தவழி உடம்பின் கண் தாமே தோன்றும் வேறுபாடு. அவையாவன : மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுங்கல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என்னும் பத்துமாம். இளம்பூரணர்க்கும் இதுவே கருத்தென்பது, " பேயானும் புலியானும் கண்டானொருவன் அஞ்சியவழி (அவன் கண்) மயக்கமும் கரப்பும் நடுக்கமும் வியர்ப்பு முளவாமன்றே, அவற்றின் அச்சத்திற்கேதுவாகிய புலியும் பேயும் சுவைக்கப்படுபொருள். அவற்றைக்கண்ட காலந்தொட்டு நீங்காது நின்ற அச்சம் சுவை. அதன்கண் மயக்கமும் கரத்தலும் அச்சக்குறிப்பு. நடுக்கமும் வியர்ப்பும் சத்துவம். இவற்றுள் நடுக்கமும் வியர்ப்பும் பிறர்க்கும் புலனுவன என்று கொள்க. ஏனைய மனநிகழ்ச்சி. பிறவுமன்ன. இவற்றின் விரிவை நாடகநூலிற் காண்க." என்று கூறுதலான் அறியப்படும்.

இங்ஙனம் பேராசிரியரும் இளம்பூரணரும் மனத்து நிகழ்வன சுவையும் குறிப்பும் என்றும், அச்சுவை உடம்பின் வழியாகப் பிறர்க்குப் புலனுவது சத்துவம் என்றும் கூறுதலானே, சுவையும் குறிப்பும் அகத்து நிகழும் மெய்ப்பாடுகள் என்பதும், சத்துவம் புறத்து நிகழும் மெய்ப்பாடு என்பதும் பெறப்படும். இதுபற்றியே,

"உண்ணிகழ் தன்மை புறம்பொழிந் தோங்க
எண்மெய்ப் பாட்டி னியல்வது சுவையே."

என்றூர் தண்டியாசிரியரும் என்க.

இனி, பேராசிரியர் கருத்தின்படி தொல்காப்பியரும் புறத்து நிகழுஞ் சத்துவத்தையும் அகத்து நிகழுங் குறிப்பையும் சுவையுளடக்கி அகத்து நிகழுஞ் சுவைமெய்ப்பாட்டையே கூறினு சென்பது, அவர் பொருளுஞ் சுவையுமாகப் பகுத்துக் கூறும் மெய்ப்பாட்டுச் சிறப்புச் சூத்திரங்களாலே யறியப்படும். படவே, அகத்துக்கண் சுவையாதே சுவைக்குறிப்பும் அதனுற் சத்துவ மாகிய புறத்து நிகழும் மெய்ப்பாடுகளும் தோன்றும் என் பதும், புறத்து நிகழும் மெய்ப்பாட்டானே அகத்து நிகழுஞ் சுவை அறியப்படுமென்பதும் பெறப்படும். ஆகவே, ஒருவனுள் ளத்து நிகழுஞ் சுவையை அறிதற்குக் கருவி அச்சுவையாற் றோன்றும் சத்துவங்களென்பதும், அவற்றை அறிதற்குக் கருவி அறிவோனுடைய கண்ணும் செவியுமென்பதும், சுவைக்குக் காரணமாகிய சுவைக்கப்படுபொருளை யறிதற்குக் கருவி சுவைப்போனுடைய ஐம்பொறிகளென்பதும் அறிந்துகொள்ளப் படுமென்க. சத்துவங்களை அறிதற்குக் கருவி அறிவோனுடைய கண்ணும் செவியுமென்பது,

"கண்ணினுஞ் செவியினுந் திண்ணிதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே."

என்று தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியலினிறுதியிற் கூறுத லானும், சுவைக்கப்படு பொருளை அறிதற்குக் கருவி சுவைப்போ னுடைய ஐம்பொறியென்பது தொல்காப்பியர் பொருளும் சுவையு மாகப் பகுத்துக் கூறலானும்,

"பொறியுணர் வொடுமொரு பொருளினை யெதிர்ந்த
நெறியுடை மனத்து நிகழ்தரு பான்மை
அயலவ ருறப்புறத் தாய்ப்பொரு ளெட்டின்
இயல்வது சுவையென் றியம்பினர் புலவர்."

என்னும் மாறனலங்கார சூத்திரத்தானும் அறிந்துகொள்க.

சுவைக்கப்படு பொருள்களை ஐம்பொறிகளாலுணர்ந்து சுவைக்குமாற்றிற் குதாரணம் வருமாறு :—

இவள் மேனி அணைபோலும்; இது பரிசத்தாலறிந்து சுவைத்தது. இக்கனி அமிழ்தம்போலும்; இது நாவாலுணர்ந்து

சுவைத்தது. இவள் மேனி மாந்தளிர்போலும்; இது கண்ணு லுணர்ந்து சுவைத்தது. இவள் கூந்தல் பூவின் நாற்றமுடை யது; இது மூக்காலுணர்ந்து சுவைத்தது. இவள் மொழி யாழிசைபோலும் இனிமையுடையது; இது செவியாலுணர்ந்து சுவைத்தது.

புறத்து நிகழும் மெய்ப்பாட்டை யுணருங் கருவிக்குதார ணம் பின்னர்க் காட்டுதும்.

இனித் தண்டியலங்காரசாரநூலார், 'மெய்ப்பாடாவது, (ஒருபொருளை) நேராகக் கண்டதுபோலத் தோன்றுங் கருத்து' என்றும், 'இவை நாட்டியத்திலும் காப்பியத்திலும் செய்கைத் திறத்திலுஞ் சொற்றிறத்திலுந் தூண்டப்பட்ட வாசனை யின் திண்மையால் தம்மவையேபோல அநுபவநிலையில் வந்து ஆநந்தமாகவே நிற்பன' என்றும் கூறுவர்.

செய்கைத்திறம் என்றது அவிநயத்தை. அவிநயம் எட் டுச் சுவையோடுங் கூடலானே எட்டுவகையாம். அவற்றுள் வீரச்சுவை யவிநயமாவது :—

"வீரச்சுவை யவிநயம் விளம்புங் காலை
முரிந்த புருவமுஞ் சிவந்த கண்ணும்
பிடித்த வாளுங் கடித்த வெயிறும்
மடிந்த வுதடுஞ் சுருட்டிய நுதலும்
திண்ணென வுற்ற சொல்லும் பகைவரை
யெண்ணல் செல்லா விகழ்ச்சியும் பிறவும்
நண்ணு மென்ப நன்குணர்ந் தோரே."

என்பதாம்.

ஏனைச் சுவைக்குரிய அவிநயங்களையும் சிலப்பதிகாரம் அரங் கேற்றுகாதை நோக்கி அறிக. இவ்வவிநயத்தைப்பற்றிக் கம் பரும் ஒரு செய்யுளிற் கூறியுள்ளார். அது,

"கூற்றுறழ் நயனங்கள் சிவப்பக் கூறுத
லேற்றிவ ளெயிறுக ளதுக்கி யின்றளிர்
மாற்றருங் கரதல மறிக்கு மாதொரு
சிற்றமா மபிநயந் தெரிக்கின் றனளே."
(கம்பரா. பால. உண். உடு)

என்பது. மாது மறிக்கும் என இயைக்க. இன் உவமவுருபு.

சொற்றிறமாவது : வன்சொல் மென்சொல் முதலியன. அவ்வச் சுவைக்கேற்ப வன்மையும் மென்மையுமான சொற்கள் தொடர்ந்திருப்பதே சுவைக்குக் காரணமாம். வன்மையு மென்

மையுமான எழுத்துக்கள் அவ்வச் சுவைக்கேற்பத் தொடர் நிலைச் சுவைக்குக் காரணமாகக் கூறுவாருமுளர்.

சிருங்காரம் (உவகை), கருணை (அழுகை), சாந்தம் (சம நிலை): இவை மூன்றும் மென்மையான சுவை. ரவுத்திரம் (கோபம்), பீபற்சம் (இளிவரல்), வீரம்: இவை மூன்றும் வன்மையான சுவை. ஆசியம் (நகை), பயானகம் (அச்சம்), அற்புதம் (அதிசயம்): இவை மூன்றும் நடுநிலைச் சுவை என்பது ஒருசாரார் பாகுபாடு.

சிருங்காரமும் (உவகையும்), கருணையும் (அழுகையும்) மிகுமென்மை. ரவுத்திரமும் (கோபமும்), பீபற்சமும் (இளிவரலும்) மிகுவன்மை. ஆசியமும் (நகையும்), சாந்தமும் (சம நிலையும்), அற்புதமும் (வியப்பும்) சற்றுமென்மை. வீரமும், பயானகமும் (அச்சமும்) சற்றுவன்மை என்பது ஒருசாரார் பாகுபாடு.

இவைகளெல்லாம் அவ்வச் சுவைக்கேற்ப வன்மை மென்மை இடைமைச் சொற்களாலே ஆக்கப்படும் என்க. மென்மைக்கும் வன்மைக்கும் முறையே உதாரணம் வருமாறு :—

" கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

" பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ."

" கொல்லேயஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லேநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லேயந் தீங்குழல் கேளாமோ தோழீ."

இது சிருங்காரம் (உவகை). மென்மை.

" இடித்து ரப்பி வந்து போரெ திர்த்தி யேல டர்ப்பனென்
றடித்த லங்கள் கொட்டி வாய்ம டித்த டுத்த லங்குதோள்
புடைத்து நின்று கூத்த பூசல் புக்க தென்ப மிக்கிடந்
துடிப்ப வங்கு றங்கு வாவி நின்செ வித்தொ ழுக்கனே."

இது ரவுத்திரம் (கோபம்). வன்மை. சொற்றிறம் என்பதற்குப் பிறவாறு கருத்துக் கூறுவாருமுளர்.

இனி வடநூலார், ஒருவன் ஒருபொருளைக் கண்டவிடத்து அப்பொருள் காரணமாக அவன் மனத்துக்கண் சூக்குமமாகத்

தோன்றுங் காதன்முதலிய சுவைத் தோற்றத்தை (அஃதாவது சுவையின் மூலையை) ஸ்தாயிபாவம் (நிலையான மனக்கருத்து) என்றும், அச் சுவைத்தோற்றத்திற்குக் காரணமான பொருளை விபாவம் என்றும், அச் சுவைத்தோற்றத்தை வெளியே வெளிப்படுத்தும் உள்ளநிகழ்ச்சியை (க் குறிப்பை) அநுபாவம் என்றும், அச் சுவைத்தோற்றத்தின் விரிவாய் உடம்பின்வழியாக வெளிப்படும் மனவிகாரங்களை(விறலை)ச் சாத்துவிகபாவம் என்றும், அதன் வளர்வுக்குக் காரணமாய் அதனை நிறைவுபடுத்தி நிற்பனவற்றை (துணைமெய்ப்பாட்டை)ச் சஞ்சாரிபாவம் என்றும், அச் சுவைத் தோற்றமானது வளர்ந்து அவனுலே சுவைக்கப்படுதலினுலே, சுவையை இரசம் என்றுங் கூறுவர். எனவே ஒருவனிடத்துச் சுவைத்தோற்றமானது விபாவங்களாற் றோன்றி அநுபாவங்களான் வளர்ந்து சஞ்சாரிபாவங்களாற் புஷ்டியடைந்து அவனுற் சுவைக்கப்படுதலினுலே சுவையாகின்றது என்றபடி. ஸ்தாயிபாவம் எனப்படும் சுவைத் தோற்றம்(சுவைமூலை)ஒன்பது வகைப்படும். அவையாவன: காதல், சிரிப்பு, துன்பம்,கோபம், எழுச்சி(முயற்சி), பயம், அருவருப்பு, ஆச்சரியம், அடக்கம் என்பன. காதலன்றி உவப்பும் உவகைக்கு ஏதுவாம். இவை ஒருவனுள்ளத்திற் றோன்றியபோது, நிலையாய்த் தடைப்படாமல் வளர்ந்து பால் தயிராஞற் போலச் சுவையாக மாற்றமடைகின்றன. சுவையும் ஒன்பது வகைப்படும். அவையாவன : உவகை (சிருங்காரம்), நகை (ஹாஸ்யம்), அவலம் (கருணை), வெகுளி (உருத்திரம்), பெருமிதம் (வீரம்), அச்சம் (பயானகம்), இளிவரல் (பீபற்சம்), மருட்கை (அற்புதம்), நடுநிலை (சாந்தம்) என்பன. இவற்றுள், சாந்தம் உலகியல் நீங்கினர் பெற்றியாகலின் அஃதொன்று மொழித்து ஏனைய எட்டுமே நூல்களாற் கூறப்படுகின்றன. அவலம், தனக்கு வருந் துன்பம் பற்றியது அவலம் என்றும் பிறர்க்கு வருந் துன்பம் பற்றியது கருணையென்றும் இரு வகைப்படும் என அறிந்துகொள்க. இனி விபாவமும் ஆலம்பன விபாவமும் உத்தீபன விபாவமும் என இருவகைப்படும். ஆலம்பன விபாவமாவது : ஒருவனுள்ளத்திற்றோன்றும் சுவைத் தோற்றத்திற்குக் காரணமாயுள்ள பொருள். உத்தீபன விபாவமாவது : அப்பொருளைச் சார்ந்தும் சாராமலும் பொருந்திச் சூக்குமமான சுவைத்தோற்றத்தை வளர்க்கும் பொருள்.

இளம்பூரணரும் பேராசிரியரும் உள்ளத்தில் நிகழ்வது குறிப்பு என்றும், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தால் உடம்பின்க ணுண்டாகும் வேறுபாடு சத்துவமென்றுங் கூறுவர். வட நூலாருட் சிலர் உடம்பினுருவிலிருந்து தோன்றும் மனோதர் மத்தைக் குறிப்பு (அநுபாவம்) என்றும், உடம்பின்வழியாக வெளிப்படும் மன விகாரங்களைச் சாத்துவிகம் என்றுங் கூறுவர். சாத்துவிகபாவம் அநுபாவத்தினின்றும் வேறுபட்டதும் வேறு படாததுமா யிருத்தலினாலே அநுபாவத்துட் சாத்துவிகம் அடங்குமென்பாருமுளர். இவற்றின் வேறுபாடுகளை ஆராய்ந் தறிந்துகொள்க.

இனித் தொல்காப்பியர் கூறியவாறு, மெய்ப்பாடுகளையும், அவை உண்டாதற்குக் காரணமான பொருள்களையும் இங்கே காட்டுதும்.

மெய்ப்பாடுகள் எட்டாகும். அவையாவன: நகை, அழுகை, இளிவரல், வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை என்பன.

இவற்றுள் நகைச்சுவைக்குக் காரணமான பொருள்களா வன: இகழ்ச்சியும், இளமையும், அறிவின்மையும், மடமும் என் பன. இவை காரணமாக நகை தோன்றும்.

அவலச்சுவைக்குக் காரணமான பொருள்களாவன:—இகழ்ச் சியும், இழத்தலும், நில்லா வேறுபாடுலும், வறுமையும் என்பன. இவை காரணமாக அவலம் (அழுகை) தோன்றும்.

இளிவரற்சுவைக்குக் காரணமான பொருள்களாவன:— மூப் பும், பிணியும், வருத்தமும், மென்மையும் என்பன. இவை காரணமாக இளிவரல் தோன்றும். இளிவரலெனினும், இழிபு எனினும், அருவருப்பு எனினு மொக்கும்.

வியப்புச்சுவைக்குக் காரணமாகிய பொருள்களாவன:— புதுமையும், பெருமையும், சிறுமையும், ஆக்கமுமென்பன. இவை காரணமாக வியப்புத் தோன்றும்.

அச்சச்சுவைக்குக் காரணமான பொருள்களாவன:— வருத் தும் தெய்வமும், விலங்கும், கள்வரும், இறைவரும் என்பன. இவை காரணமாக அச்சந் தோன்றும்.

வீரச்சுவைக்குக் காரணமான பொருள்களாவன:— கல்வி யும், தறுகண்மை (அஞ்சாமை) யும், புகழும், கொடையும் என் பன. இவை காரணமாக வீரம் பிறக்கும்.

வெகுளிச்சுவைக்குக் காரணமான பொருள்களாவன:— தன்னுறுப்பைச் சிதைத்தலும், தன்குடிக்குக் கேடுசூழ்தலும், தன்னறிவையும் புகழையுங் கொன்றுரைத்தலும், தன்னை அலைவு செய்தலும் என்பன. இவை காரணமாக வெகுளி பிறக்கும்.

உவகைச்சுவைக்குக் காரணமான பொருள்களாவன:— செல்வநுகர்ச்சியும், அறிவுரையும், புணர்ச்சியும், விளையாட்டும் என்பன. இவை காரணமாக உவகை பிறக்கும்.

இவற்றுள் நகை முதலிய நான்கும் தன்கண் தோன்றும் பொருள் காரணமாகவும் பிறன்கண் தோன்றும் பொருள் காரணமாகவுந் தோன்றுவனவாம். அச்சமும் வெகுளியும் பிறன் கண் தோன்றும் பொருள் காரணமாகத் தோன்றும். வீரமும் உவகையும் தன்கண் தோன்றும் பொருள்காரணமாகத் தோன் றும். உவகை பிறரின்பம்பற்றியும் தோன்றும். நகை முதலிய இச்சுவைகள் எட்டனையும் பேராசிரியர் காட்டிய உதாரணங்களை நோக்கி அறிந்துகொள்க.

இனி, நகை முதலிய சுவைகளெட்டனையும் எளிதினறிந்து கொள்ளுதற்கு உதாரணமாக பிற்கால இலக்கியங்களுள் ஒவ் வொரு செய்யுள் எடுத்துக்காட்டி வடமொழி நூலின் விதியை யுந் தழுவி முறையே விளக்குதும்.

நகை

"நிருதர்த மருளும் பெற்றே னின்னலம் பெற்றே னின்னே
டொருவருஞ் செல்வத் தியாண்டு முறையவும் பெற்றே னன்றே
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னை
வரிசிலை பிடித்த தோளான் வாளையி றிலங்க நக்கான்."

இதன்கண், சூர்ப்பநகை கூற்றைக் கேட்டு இராமனுக்கு மனத்திற்றோன்றிய சிரிப்பு—ஸ்தாயிபாவம். சூர்ப்பநகையின் கூற்று—பொருள் (ஆலம்பநவிபாவம்). அவள் பேதைமையான கருத்தைப் பலதாரமும் நினைத்தல்—உத்தீபநவிபாவம். வெறுப்பு, எள்ளுரை முதலியன—குறிப்பு (அநுபாவம்). இராமன் கடி வன கடிதல் (வரைவு)—துணைமெய்ப்பாடு (சஞ்சாரிபாவம்). அவள் பேதைமைபற்றி வந்த நகை—சுவை (இரசம்) ஆகும்.

அவலம்

உரனெரிந்து விழவென்னை யுதைத்துருட்டி மூக்கரிந்த
நரனிருந்து தோள்பார்க்க நானிருந்து புலம்புவதோ
கரனிருந்த வனமன்றே விலைபடவுங் கடவேனே
அரனிருந்த மலையெடுத்த வண்ணவோ வண்ணவோ.

இதன்கண், சூர்ப்பநகைக்குத் தன்னுறுப்பை யிழத்தலா லுண்டான துன்பம்—ஸ்தாயிபாவம். உறுப்பையிழத்தல்—பொருள் (ஆலம்பநவிபாவம்). அற்றவுறுப்புக்களா லுண்டாகும் வருத்தமும், இரத்தஞ் சொரிதலும், பிறர்க்கு நாணலும் முதலியன—உத்தீபநவிபாவம். உறுப்பையிழத்தலாலுண்டான மயக்கம், அரற்றுரை முதலியன—குறிப்பு (அநுபாவம்). கண்ணீர் வார்தல், அழுகைக்குரல் முதலியன—விறல் (சாத்துவிகம்). உறுப்பறுதலாலுண்டான மனக்கலக்கம், சோர்வு முதலியன—துணை மெய்ப்பாடு (சஞ்சாரிபாவம்). தன் உறுப்பையிழத்தலாலுண்டான அழுகை—சுவை (இரசம்) ஆகும்.

இளிவரல்

காசொடு மணியும் பூணுங் கரியதாங் கனகம் போன்றும்
தூசொடு மணியு முந்நூ லேறரு தோற்றம் போன்றும்
மாசொடு கருகி மேனி வனப்பழிந் திடவூர் வந்தான்
சீசியென் றரு மெள்ளத் திகைப்பொடு பழுவஞ் சேர்ந்தான்.

இதன்கண் திரிசங்குவின் தோற்றத்தை (உடம்பு வேறு பாட்டை) க் கண்டு ஊரவர்களுக்கு உண்டான அருவருப்பு—ஸ்தாயிபாவம். திரிசங்குவின் தோற்றம்—பொருள் (ஆலம்பநவிபாவம்). அவனணிந்திருந்த வஸ்திரம், அணி, பூணூல் முதலியவற்றின் வேறுபாடு—உத்தீபநவிபாவம். அவனுடம்பின்கண் வைத்த வெறுப்பு, மயக்கம், எள்ளலுரை முதலியன—குறிப்பு (அநுபாவம்). அருவருப்பாலுண்டான நடுக்கம், புளகம் முதலியன—சாத்துவிகபாவம். மனத்தடுமாற்றம் முதலியன—துணை மெய்ப்பாடு (சஞ்சாரிபாவம்). இளிவரல்—சுவை (இரசம்).

வியப்பு

பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
என்பிறங் கழுகிற் கெல்லை யில்லையா மென்று நின்ரூள்
கண்பிற பொருளிற் செல்லா கருத்தெனி னஃதே கண்ட
பெண்பிறந் தேனுக் கென்ரு லென்படும் பிறருக் கென்ரூள்.

இதன்கண், சீதையினழகைக்கண்டு சூர்ப்பநகைக்கு உண்டான ஆச்சரியம்—ஸ்தாயிபாவம். சீதையினழகு—பொருள் (ஆலம்பநவிபாவம்). அழகின் மிகுதி—உத்தீபநவிபாவம். அழகின் மயங்கலும், அதனைப் பலமுறை நோக்கலும், வியப்புரையும்—குறிப்பு (அநுபாவம்). பெண்பிறந்தேனுக்கென்றமையானே பெண்களைக்கண்டு பெண்களுக்குக் காதலுண்டாகாமையாகிய பெண்டன்மை பெறப்படலின் அது தன்மையென்னும் துணைமெய்ப்பாட்டுளடங்கும். என்படும் பிறருக்கென்பதுமது. என்னை? ஆண்டன்மை பெறப்படலின். மயங்கிநிற்றல், களிப்பு முதலியன—விறல் (சாத்துவிகபாவம்). அழகின் புதுமைபற்றி உண்டான வியப்பு—சுவை (இரசம்) ஆகும்.

அச்சம்

கைத்தல மொன்று நீண்ட காய்ப்புடை வெரிநிற் போட்ட
பைத்தலை பிடிப்ப வொன்று புகாத்தலைப் பாகு பற்ற
மொய்த்தலை வெய்திப் பின்முன் பார்த்திடு முகத்த ராகி
யெய்த்தவி ரிருதாள் சோர வேகுவார் வணிக ரெல்லாம்.

இதன்கண், யாற்றினெழுந்த யானையைக்கண்டு வணிகருக்குண்டான பயம்—ஸ்தாயிபாவம். யானை—பொருள் (ஆலம்பநவிபாவம்). அதன் பெருமையும், வருகையும், தம்மைக் கொல்லும் என்ற நினைவும் தடுப்பாரின்மையும்—உத்தீபநவிபாவம். அடிக்கடி பின்பக்க நோக்கலும், ஓடலும்—குறிப்பு (அநுபாவம்). பயத்தாலுண்டான நடுக்கம், வியர்வை முதலியன—விறல் (சாத்துவிகபாவம்). வெரூஉதல், இடுக்கண் முதலியன—துணைமெய்ப்பாடு (சஞ்சாரிபாவம்). களிற்றாலுண்டான அச்சம்—சுவை (இரசம்) ஆகும். இது விலங்குபற்றிய அச்சம்.

வெகுளி

தடுத்து மற்றிவை யுரைத்தலும் வெய்யரூர் தடக்கை
புடைத்து வெய்துயிர்த் துரப்பியே நகைநிலாப் பொடிப்பக்
கடித்து மெல்லித முதுக்கிமெய் பொறித்திடக் கனன்று
முடித்த னீத்தலை துளக்கியே யின்னன மொழிவான்.

இதன்கண், சிங்கனுடைய வார்த்தையைக்கேட்டு சூரனுக்குண்டான கோபம்—ஸ்தாயிபாவம். சிங்கனுடைய வார்த்தை—பொருள் (ஆலம்பநவிபாவம்). அவைக்களமும், பகைவரை வியத்தலும் முதலியன—உத்தீபநவிபாவம். கைபுடைத்தல், வெய்

துயிர்த்தல், உரப்பல், நகைத்தல், இகழுதற்கல், கனலல், தலை துளக்கல்—குறிப்பு (அநுபாவம்). கோபதீதாலுண்டான நடுக் கம், வெயர்வை முதலியன—விறல் (சாத்துவிகபாவம்). முனிவு, மனத்தடுமாற்றம், நடுக்கம் முதலியன—துணைமெய்ப்பாடு (சஞ் சாரிபாவம்). தன் பெருமையைக் கொன்றுரைத்தலால் வந்த வெகுளி—சுவை (இரசம்) ஆகும்.

வீரம்

ஆகா யாவுனக் கமைந்தன மாருத மறைந்த
பூகா யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாகா வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாகா தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

இதன்கண், இராமன் போரிலே சேனையிழந்து தனித்து நின்ற இராவணனைக் கொல்லாது நாகாவாவென நல்க எண்ணி யது — ஸ்தாயிபாவம். இராவணன் — பொருள் (ஆலம்பந விபாவம்). அவன் தனிமை—உத்தீபநவிபாவம். நாகாவாவென் றல் — குறிப்பு (அநுபாவம்). இரக்கம் — விறல் (சாத்துவிக பாவம்). தன்வலி மிகுதியும், தனித்தவனைக் கொல்லுதல் முறை யன்று என்னு நீதியை ஆராய்ந்த ஆராய்ச்சியும்—துணைமெய்ப் பாடு (சஞ்சாரிபாவம்). உயிர்க் கொடைபற்றி வந்த வீரம்— சுவை (இரசம்) ஆகும்.

உவகை

நல்லியன் மகர வீணைத் தேனுக நகையுந் தோடும்
வில்லிட வாளும் வீச வேல்கிடந் தனைய நாட்டத்
தெல்லியன் மதிய மன்ன முகத்திய ரெழிலி தோன்றச்
சொல்லிய பருவ நோக்குந் தோகையி னுடி னுரே.

இதன்கண், இராமன் வில்வளைத்தமை பற்றி மகளிருக் குண்டான உவகைத்தோற்றம் ஸ்தாயிபாவம். இராமன் வில் வளைத்தமை—பொருள் (ஆலம்பந விபாவம்). அதனால் சீதை கல்யாணம் நிறைவேறுமென்ற கருத்து—உத்தீபநவிபாவம். பாடலும் ஆடலும்—குறிப்பு (அநுபாவம்). உவகையாலுண் டான புளகம் களிப்பு முதலியன—விறல் (சாத்துவிகபாவம்). உள்ளமகிழ்ச்சி—துணைமெய்ப்பாடு (சஞ்சாரிபாவம்). உவகை— சுவை (இரசம்) ஆகும். இச்செய்யுளிலும் முற்செய்யுள்களிலும் வந்த குறிப்புக்கள் வடமொழிநூல்களின் விதிப்படி எழுதப் பட்டன.

மெய்ப்பாட்டியலுக்கு உரைகூறிய உரைகாரர் சொல்லிய சில முறைக்கும் வடமொழி நூல்களிற் சிலர் கூறிய முறைக்கும் சில வேறுபாடுகள் காணப்படலின் அவற்றை உணர்ந்துகொள் ளற்பொருட்டு வடமொழிநூல்களிற் கூறும் மெய்ப்பாடுபற்றிய விதிகளை இங்கே எடுத்துக்காட்டினும். வடநூல்களுள்ளும் வேறுபாடுகள் காணப்படலின் அவ் வேறுபாடுகளையும் ஆராய்ந் துணர்ந்துகொள்க.

தொல்காப்பியர் கூறிய 'உடமை யின்புறன் முதலிய' துணை மெய்ப்பாடுகள் முப்பத்திரண்டாவன :—உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, நைம் மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று தல், கனவு, முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறுமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கம் என்பன. இவை தனித்தும் நிகழும்.

இப்பொது மெய்ப்பாடுகளையன்றி அகத்திணையுள் களவின் கண் நிகழும் மெய்ப்பாடுகளையுங் கூறுவான் தொடங்கிய ஆசிரியர் தொல்காப்பியர், முதலில் ஒத்த கிழவனுங் கிழத்தியும் எதிர்ப் பட்ட வழிப் பெரும்பாலுந் தலைவிபால் நிகழும் மெய்ப்பாடு கூறுவான்றொடங்கிப், புணர்ச்சிக்குமுன் அவள்கண் நிகழும் மெய்ப்பாடுகளை மூன்றுபகுதியாகவும், பின் நிகழும் மெய்ப்பாடு களை மூன்று பகுதியாகவும் பிரித்துக் கூறினர். இது பேரா சிரியர் கருத்து. புணர்ச்சிக்குமுன் ஒன்றன்பின்னொன்றாக நிக ழும் மூன்றுவகை மெய்ப்பாடுகளுள் முதற்கண் நிகழும் மெய்ப் பாடுகளாவன :—

> "புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்
> நகுநய மறைத்தல் சிதைவு பிறர்க்கின்மை."

என்னும் நான்குமாம்.

இரண்டாவது நிகழும் மெய்ப்பாடுகளாவன :—

> "கூழை விரித்தல் காதொன்று களைதல்
> ஊழுணி தைவரல் உடைபெயர்த் துடுத்தல்."

என்னும் நான்குமாம்.

மூன்றுவது நிகழும் மெய்ப்பாடுகளாவன :—

> "அல்கு றைவரல் அணிந்தவை திருத்தல்
> இல்வளி யுறுத்தல் இருகையு மெடுத்தல்."

என்னும் நான்குமாம்.

புணர்ச்சிக்குப்பின் ஒன்றன்பின்னொன்றுக நிகழும் மூன்று வகை மெய்ப்பாடு களுள் முதற்கண் நிகழும் மெய்ப்பாடுகளா வன :—

"பாராட் டெடுத்தன் மடந்தப வுரைத்தல்
சூரமில் கூற்ற மேற்றலர் நாணல்
கொடுப்பவை கோடல்"

என்னும் நான்குமாம்.

இரண்டாவதாக நிகழும் மெய்ப்பாடுகளாவன :—

"தெரிந்துடம் படுதல் தேரப்புவிகை மறுத்தல்
கரந்திடத் தொழிதல் கண்டவழி யுவத்தல்."

என்னும் நான்குமாம்.

மூன்றுவதாக நிகழும் மெய்ப்பாடுகளாவன :—

"புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையற வுரைதல்."

என்னும் நான்குமாம்.

இளம்பூரணர் இவைகளைப் புணர்ச்சி நிகழாதவழி நிகழும் பத்தவத்தைக்கண் உண்டாகும் மெய்ப்பாடு என்றும், அப்பத்துள் ஆறும் அகத்திணைக்கேயுரியவாதலின் அவற்றையே கூறினர் என்றுங் கூறுவர். மேற்கூறிய அறுவகை மெய்ப்பாடுங் களவுக்கேயுரியன. சில கற்பினும் வரும். சில கைக்கிளை பெருந்திணைக்கண்ணும் வரும். ஆற்றுமை மிக்கவிடத்து மெய்ப்பாடின்றியும் புணர்ச்சி நிகழும் என்க.

இவையன்றி புணர்ச்சிக்கு நிமித்தமாய் களவு கற்பு என்னும் இரண்டற்கும் பொதுவான வேறுசில மெய்ப்பாடுகளுமுள. அவை "இன்பத்தை வெறுத்தல் துன்பத்துப் புலம்பல்" முதலாயினவாகும். இவையன்றி வரைந்தெய்தும் கூட்டத்திற்கு நிமித்தமான மெய்ப்பாடுகளுமுள. அவை முட்டுவயிற் கழறன் முதலியன. இன்னும் வரைந்தெய்தியபின் நிகழும் மெய்ப்பாடுகளுமுள. அவை தெய்வமஞ்சன் முதலிய பத்துமாம். இனி "ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" என்னுஞ் சூத்திரத்துட் கூறிய ஒப்புமைக்குரிய மெய்ப்பாடுகள் பிறப்பு குடிமையாகியன. இவை மெய்ப்பாட்டால் உணரப்படுமென்பர் பேராசிரியர். இளம்பூரணர் தலைவன் தலைவி என்னும் இருவர்க்குரிய ஒப்புப்பகுதி என்பர். 'நிம்புரி கொடுமை' முதலியன

வற்றைத் தலைவனுக்காகாத மெய்ப்பாடுகள் என்பர் பேராசிரியர். இளம்பூரணர் தலைவிகண் நிகழாத மெய்ப்பாடு என்பர். சிலர் இருவருக்கும் பொது என்பர். பொருத்தம் நோக்கிக்கொள்க.

இம் மெய்ப்பாடுகளெல்லாவற்றையும், பிறர் உணருங் கருவி கண்ணுஞ் செவியுமென்பர் தொல்காப்பியர். அது முன்னுங் கூறியுள்ளாம். புற மெய்ப்பாடுகள் கண்ணுஞ் செவியுமென்னு மிரண்டானுமுணர்தற்கு உதாரணம் வருமாறு :—

"இரண்டறி கள்விநங் காத லோளோ
முரண்கொ டுப்பிற் செவ்வேன் மகிழன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருகிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகுறை யானே." (குறுந். 312)

என்பதனுள், அமராமுகத்தளாதலும் தமரோரன்னளாதலும் தலைமகன் தன் கண்ணு லுணர்க்கியறிதலின் அது கண்ணுணர் வெனப்படும்.

"ஒழிகோ யானென வழிதகக் கூறி" (அகம் 110)

என்புழித் தலைமகன் மனத்து நிகழ்ந்த வழிவெல்லாம், ஒழிகோ யான் என்ற உரையானே தோழி உணர்ந்தமையின் அது செவியுணர்வெனப்படும்.

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

பேராசிரியம்

ஆருவது : மெய்ப்பாட்டியல்

[மெய்ப்பாடு இத்துணைய எனலும்
அவை இத்துணையவாய் அடங்குமெனலும்]

உசசு. பண்ணைத் தோன்றிய வெண்ணென்கு பொருளுங்
கண்ணிய புறனே நானென் கென்ப.

என்பது சூத்திரம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், மெய்ப்பாட்டியலென்னும் பெயர்த்து. [1] மெய்ப்பாடென்பன சில பொருள் உணர்த்தினமையின் அப்பெயர்த்தாயிற்று. இதனுனே ஒத்து முதலியதூஉம் மெய்ப்பாடு உணர்த்துதலென்பது பெற்றும். [2] மெய்ப்பாடென்பது பொருட்பாடு; அஃதாவது, உலகத்தார் [3] உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றுன் வெளிப்படுதல். அதனது இலக்கணங்

---

1. மெய்ப்பாடென்பனவாகிய சிலபொருள் என்க.

2. மெய் — பொருள். பொருள் உள்ளதாகலின் அதனை மெய் என்றுர்; ஆகுபெயரான்.

3. உள்ளநிகழ்ச்சி என்றது உள்ளத்தின்கண் நிகழும் நகை முதலிய குறிப்புக்களை. அவையே ஈண்டுப் பொருள் (மெய்) எனப்பட்டன. குணமும் பொருள் எனப்படுதலின் நகை முதலியன பொருள் எனப்பட்டன. படுதல் — வெளிப்படுதல். எனவே ஒருவன் உள்ளத்தே நிகழ்ந்த நகை முதலிய குறிப்புப் புறத்தார்க்கு அவன் உடம்பு வேறுபாட்டால் வெளிப்படுதல்

கூறிய ஒத்தும் [1] ஆகுபெயரான் மெய்ப்பாட்டியலென்றுயிற்று. மேலோத்தினோடு இவ்வோத்தினிடை இயைபென்னையோ வெனின், [2] மேலை ஒத்துக்களுட் கூறப்படும் ஒழுகலாற்றிற்கும் [3] காட்டலாகாப்பொருள் (தொ. பொ. 1கூ) என்றவற்றிற்கும் எல்லாம் பொதுவாகிய மனக்குறிப்பு இவையாகலின் இவற்றை வேறுகொண்டு ஓரினமாக்கி மெய்ப்பாட்டியலென வேறோரோத்தாக வைத்தமையானே [4] எல்லாவற்றோடும் இயைபுடைத்தென்பது. இதன் தலைச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், அம் மெய்ப்பாடு [5] பிறர் வேண்டுமாற்றான் இத்துணைப்பகுதிப்படு மென்றுணர்த்துத னுதலிற்று.

இதன் பொருள்: [6] பண்ணைத்தோன்றிய எண்ணென்கு பொருளும்—முடியுடைவேந்தருங் குறுநிலமன்னரு முதலாஞோர் நாடகமகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங்கேட்டுங் காமநுகரும் இன்ப விளையாட்டினுள் தோன்றிய முப்பத்திரண்டு பொருளும், கண்ணியபுறனே நானென்கு என்ப—அவை கருதிய

மெய்ப்பாடு என்பது பேராசிரியர் கருத்தாம். இனி, இளம்பூரணர் அச்சமுற்றான்மாட்டு நிகழும் அச்சம் அவன்மாட்டுச் சத்துவத்தினுற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனாகுந்தன்மை மெய்ப்பாடெனக் கொள்ளப்படும் என்றும், மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று என்றுங் கூறுவர். இது பிறந்த கருத்தேயாகும். சத்துவம்—விறல். அது,—"சத்துவ மென்பது சாற்றுங் காலை—மெய்ம்மயிர் குளிர்த்தல் கண்ணீர் வார்தல்—நடுங்கல் கடுத்தல் வியர்த்த றேற்றங்—கொடுங்குரற் சிதைவொடு நிரல்பட வந்த—பத்தென மொழிப சத்துவந் தானே" என்பதனுலறிக. குளிர்த்தல்—குற்சிதங்கொள்ளல் = சிலிர்த்தல்.

1. மெய்ப்பாட்டியல்—மெய்ப்பாட்டி னிலக்கணங் கூறுவ தென அவ்வோத்தின்மேனிற்றலின் ஆகுபெயர். இதுபோன்றன தொல்காப்பியர் கூறிய 'இருபெயரொட்டு' என்பது சேனாவரையர் முதலியோர் கருத்தாம்.

2. மேலோத்துக்களுட் கூறப்படும் ஒழுகலாறென்றது அகத்தொழுக்கம் புறத்தொழுக்கங்களை. அவை முன்னுள்ள ஐந்திலக்கணத்தானும் கூறப்படுவனவாதலின் மேலோத்துக்களென்றார். கூறப்படும்—கூறப்பட்ட என்றிருப்பது நலம்.

3. "ஒப்புமுருவும்" பொருளியல் 1கூ-ம் சூத்திரம்.

4. எல்லாவற்றோடும்—மேற்கூறிய எல்லாவியல்களோடும்.

5. பிறர்—நாடக நூலார்.

6. பண்ணை—விளையாட்டு. பண்ணை—விளையாட்டாயம் என்றும், பண்ணையுடையது பண்ணை என்றும் இளம்பூரணர் கூறுவர்.

பொருட்பகுதி, பதினாறாகி அடங்கும் நாடக நூலாசிரியர்க்கு என்றவாறு.

[1] அது முதனூலை நோக்கிக் கூறியவாறுபோலும்.

முப்பத்திரண்டாவன யாவையெனின்,—ஒன்பது சுவையெனப்பட்டவற்றுள் [2] உருத்திரமொழிந்த எட்டனையுங் கூறுங்காற் சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறியுணர்வும், அது மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழுங் [3] குறிப்பும், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தாற் கண்ணீரும்பலும் மெய்ம்மயிர் சிலிர்த்தலு முதலாக உடம்பின்கண் வரும் வேறுபாடாகிய [4] சத்துவங்களுமென நான்காக்கி, அச்சுவை யெட்டோடுங் கூட்டி, ஒன்று நான்கு செய்து உறழ, முப்பத்திரண்டாமென்பது. எனவே, சுவைப்பொருளும், சுவையுணர்வும், குறிப்பும், விறலுமென நான்காயின. விறலெனினுஞ் சத்துவமெனினும் ஒக்கும்.

சுவைப்பொருளென்பன:—அறுசுவைக்கு முதலாகிய வேம்பும் [5] கடுவும் உப்பும் புளியும் (மிளகும்) கரும்பும் போல்வன; அவையாமாறு:—நகைச்சுவைக்குப் பொருளாவன [6] ஆரியர் கூறுந் தமிழும், குருடரும் முடவருஞ் செல்லும் [7] செலவும், [8] பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன. அச்சப்பொருளாவன:—

---

1. அது—அவ்வாறு அடங்கல். முதனூல்—அகத்தியம்.

2. உருத்திரம்—வெகுளி. உருத்திரமொழிந்த எட்டாவன: நகை, அழுகை, இளிவரல், வியப்பு, அச்சம், வீரம், உவகை. சமநிலை என்பன. 'உருத்திரமொழித்து ஒழிந்த' எனவும் பாடம்.

3. குறிப்பு—நகை முதலிய சுவைக்குறிப்பு.

4. சத்துவம்—விறல்; உடம்பின்கணுண்டாகும் வேறுபாடு. அவை முற்கூறப்பட்டன.

5. கடு—கடுக்காய். அது துவர்ப்புக்குக் காட்டப்பட்டது. உறைப்புக்குரியமுதலே சொல்லப்படவில்லை. அது மிளகு என்று கூறலாம். அது தப்பிற்றுப்போலும்.

6. ஆரியர்—வடமொழியாளராகிய ஆரிய தேசத்தவர். அவர் தமிழை எழுத்து நிரம்பக் கூறமாட்டாராதலின் அதுவும் நகைக்கேதுவாயிற்று.

7. செலவு—நடை.

8. பித்தர் முதலியோர் சொற்களும் நகைக்கேதுவாகலின் அவர்களையுங் கூறினர். நகைச்சுவைப் பொருள்களிவையெனச்

1 "வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை
முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ
யீற்று மதமா வேக பாதங்
2 கூற்றங் கோண்மா குன்றுறை யசுணம்."

என்று சொல்லப்பட்டனவே போல்வன.

இவற்றைச் சுவைகோடலென்பதன்னையெனின், நகையும் அச்சமு முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலான் அறிவா னொருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள்பிற கண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகள் அவ்வச் சுவையெனப்படும். வேம் பென்னும் பொருளும் நாவென்பொறியுங் 3 தலைப்பெய்த வழி

செயிற்றியங் கூறுமாறு :— "உடனிலை தோன்றுமிடம் யாதெ னினே—முடவர் செல்லுஞ் செலவின் கண்ணும்.....தோன்று மென்ப துணிந்திசி னோரே" என்பது. இதனை இளம்பூரணம் நோக்கியறிக.

1. அரிமா—சிங்கம். வேங்கை—புலி. அரவு—பாம்பு. தீ—நெருப்பு. ஈற்று—ஈன்றணிமையான பசு. "புனிற்றுப் பாய்ந் தெனக் கலங்கி" (அகம். நூசு) என்பதனாலறிக. மதமா—யானை. ஏகபாதம்—ஒற்றைக்கால். அது, பூதங்களுளொற்றைக்காலுடை யனவுமிருப்பதாகச் சில புராணங்கூறலின் அவற்றைஉணர்த்தும்.

"ஒற்றைத் தாளின மூன்றுடைத் தாளின வுரைசால்
பொற்றைத் தாள்பல வுடையன பொருந்துதா ளொழிந்த
கற்றைச் செம்மயி ருடையன கணங்கணைக் கிறந்த
மற்றைக் கைகளு மன்னதன் மையவென வழங்கும்."

என்பது உபதேச காண்டம், கைலைமான்மியச் சருக்கம், நசூ-ம் செய்யுள். சேது புராணமும் பூதங்களுள் ஒற்றைக்காலுடை யனவிருப்பதாகக் கூறுகின்றது. தேவர்களு ளொருபகுதியார்க் கும் ஒற்றைக்காலிருப்பதாகத் தேவாரமுங் கூறுகின்றது. "உள்ள மிக்கார் பரிமுகத்தின ரொற்றைக்காலார்க-ளெள்ளலில்லா விமை யோர்கள்." எனத் திருக்கேதாரப் பதிகத்து (ச) வருதல் காண்க. இவை 'அணங்கு'ள் அடங்கும்.

2. கூற்றம்—இயமன். இறப்போர் இயமனைக்கண்டஞ்சுவ தாக நூல்கள் கூறுவது வழக்கு. "அக்கா லரைக்கால்கண் டஞ்சா மூன்" என்று கூறுதலுங் காண்க. கோண்மா—(இங்கே விதந்து சொல்லப்பட்டனவொழிந்த) கொலைத்தொழிலையுடைய மிருகங் கள். "ஊறுசெய்யுங் கோண்மாக்களே" எனக் கற்பியல் உகூ-ம் சூத்திரவுரையுள் நச்சினார்க்கினியர் கூறலுங் காண்க. அசுணம்—சூத்திரவுரையுள் நச்சினார்க்கினியர் கூறலுங் காண்க. அசுணம்— அசுணப்பறவை. இதனை அசுணமா என்றுங் கூறுப. ஏகபாதம், கூற்றம், கோண்மா என்பன முன்னிருந்து அழிந்துபோன விலங்கின் சாதிகள் என்று கூறுவாருமுளர். அவர் கருத்துப் பொருந்துமாயினுங் கொள்க.

3. தலைப்பெய்தல்—கூடல். 'தலைப்பெய்துழியல்லது' எனவும் பாடம்.

யல்லது கைப்புச் சுவை பிறவாததுபோல, அப்பொருள் கண்ட வழியல்லது நகையும் அச்சமும் தோன்றா. ஒழிந்த காம முத லியனவும் அன்ன. இக்கருத்தேபற்றிப் பிற்காலத்து நாடக நூல் செய்த ஆசிரியரும்,

"இருவகை நிலத்தி னியக்குவ துவையே." (செயிற்றியம்)

என்றாரென்பது.

இனி, இருவகை நிலனென்பன 1 உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதலன்றோவெனின், சுவையென்பது 2 ஒப் பினைய பெயராகலான் வேம்பு சுவைத்தவன் அறிந்த கைப் பறிவினை நாவுணர்விற்பி றவுணரான், இவன் கைப்புச் சுவைத்தானெனக் கண்ணுணர்வினன் அறிவதன்றி; அதுபோல அச்சத்துக்கு ஏதுவாகிய ஒரு பொருள் கண்டு அஞ்சி ஓடிவரு கின்றானை நவனை மற்றொருவன் கண்டவழி இவன் 'வள்ளெயிற் றரிமா' முதலாயின கண்டு அஞ்சினானென்றறிவதல்லது, வள் ளெயிற் றரிமாவினைத் தான் காண்டல் வேண்டுவதன்று; தான் கண்டானின் அதுவுஞ் சுவையெனவேபடும். ஆகவே 'அஞ்சி னானைக் கண்டு நகுதலுங் கருணைசெய்தலுங் கண்டோர்க்குப் பிறப்பதன்றி, அச்சம்பிறவாதாகலான் 3 உய்ப்போன் செய்தது 4 காண்போனுய்த்த அறிவின் பெற்றியாற் செல்லாதாகலின்,

---

1. உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல் என் றது,—சுவைப்போன் நிகழ்த்திய சுவை அவன்மாட்டு நிகழும் சத்துவத்தினைற் புறப்பட்டுக் காண்போர்க்குப் புலனுதல் என்ற வாறு. உய்த்தல் — அநுபவித்தல் — "காதல காதல றியாமை யுய்க்கிற்பின் — ஏதில வேதிலார் நூல்" என்னுங் குறளுரை நோக்குக. அன்றியும், சமணரே என்னுஞ் சுவையை — "உய்ப் போர் சமணர் சாரணர்" என்று செயிற்றியங் கூறுகின்றதனாலு மறியப்படும்.

2. ஒப்பினைய பொருளென்றது அறுவகைச் சுவைபோலச் சுவைக்கப்படுவதுபற்றி நகை முதலிய சுவைக்கும் சுவையென்று பெயராயிற்று என்றபடி. எனவே சுவைபோன்றது சுவை என் பது கருத்தாம்.

3. உய்ப்போன் செய்தது—சுவைப்போன் நிகழ்த்திய சுவை.

4. காண்போன் உய்த்த அறிவின் பெற்றியாற் செல்லா தாகலின் என்றது, சுவைத்தோனுடைய மெய்ப்பாட்டைக்கண்டு இவன் சுவைத்தான் என்று அறிந்தோன் செலுத்திய அறிவின் றன்மையால் அவனுக்கு அச்சுவை நிகழாது என்றபடி. காண் போர்க்குஞ் சுவைபிறக்கும் என்பது கூத்த நூலாருட் சிலர் கருத்து. அவர் கருத்தையே ஈண்டுப் பேராசிரியர் மறுத்தனர் என்க.

[1] இருவகை நிலமெனப்படுமென, சுவைப்பொருளுஞ் சுவைத் தோனுமென இருநிலத்தும் நிகழுமென்பதே பொருளாதல் வேண்டுமென்பது.

குறிப்பென்பது, கைப்பின் சுவையுணர்வு பிறந்தவழி வெறுப்பு. முதலாயின உள்ளநிகழ்ச்சிபோல, அஞ்சுதக்கன கண்டவழி அதனை நோக்காது வெறுக்கும் உள்ளநிகழ்ச்சி. விறலென்பன, அவ்வுள்ளநிகழ்ச்சி பிறந்தவழி வேம்பு தின் றூர்க்குத் தலை நடுங்குவதுபோலத் தாமே தோன்றும் நடுக்க முதலாயின. இவ்வகையால் இந்நான்கினையும் எட்டோடும் உறழவே முப்பத்திரண்டாயின.

இனி, அவை பதினாறினவாறென்னையெனின்,— வேம்பு முதலாயின பொருளும் அதனைநு நா முதலாயின பொறியும் வேறு வேறு நின்றவழிச் சுவை பிறவாமையானும் அவ் விரண்டுங் கூடியவழிச் சுவை பிறத்தலானும் [2] அவை பதினாறும் எட்டெனப்படும்; இனிக் குறிப்புஞ் சத்துவமென் பனவும், உள்ளநிகழ்ச்சியும் உடம்பின் வேறுபாடுமென்ப ராகலின் அவ்வுள்ளநிகழ்ச்சியை வெளிப்படுப்பது சத்துவ மாகலின் அவை பதினாறும் எட்டாயடங்குமாகலின், [3] அவை ஈரெட்டுப் பதினாறுமென்பது. மற்றிவை பண்ணைத்தோன்று வனவாயின், [4] இது பொருளோத்தினுள் ஆராய்வதென்னை [5] நாடக வழக்கத்தானே ஒருவன் செய்ததனை ஒருவன் வழக்கி னின்றும் வாங்கிக்கொண்டு பின்னர்ச் செய்கின்றதாகலானும், வழக்கெனப்படாதாகலானும், ஈண்டு ஆராய்வது 'பிறிதெடுத் துரைத்தல்' என்னுங் குற்றமாமென்பது கடா. அதுவன்றே, [6] இச்சூத்திரம் [7] 'பிறன்கோட் கூறல்' என்னும் உத்திவகையாற் கூறி அதுதானே மரபாயிற்றென்பது. (க)

1. இருவகை நிலமென்பன சுவைக்கப்படுபொருளும் சுவைக் கின்றவனும் என்பது பேராசிரியர் கருத்து.

2. அவை—பொருளும் பொறியும்.

3. அவை—முப்பத்திரண்டும்.

4. இது—மெய்ப்பாடு.

5. நாடக வழக்கத்தானே செய்கின்றதாகலானும் என இயைக்க.

6. இச்சூத்திரம்—இச் சூத்திரப் பொருள்கள்.

7. பிறன்கோட்கூறல்—பிறன் மதமெடுத்துரைத்தல். என வே கூத்தநூலார்க்குரியதை இப்பொருளியலுள் தாமும் எடுத்

[பதினாறடங்கியவை எட்டாயுமடங்குமெனல்]

உரும். நாலிரண் டாகும் பாலுமா ருண்டே

இது, மெய்ப்பாட்டின் அடக்கங் கூறுகின்றது.

இ—ள்: முப்பத்திரண்டு மெய்ப்பாடும் பதினாறுதலே யன்றி எட்டாதலும் உண்டு என்றவாறு.

அவை: வீரம் அச்சம் வியப்பு இழிபு காமம் அவலம் நகை நடுவுநிலை யென்பன. இவற்றின் விகாரமாகிய சத்துவங்க ளெட் டனையும் இவற்றுளடக்கி எட்டாக்கிக் கூறியவாறிதுவென்பது. நாலிரண்டாதலு முண்டென்றதனுன் எட்டாதலே யன்றி அவை ஒன்பதாதற்குப் பகுதியுமுடையவென்பது; என்னை?

"உருத்திரந் தன்னே டொன்ப தாகும்"

என்பவாகலின். [1] உம்மை, இறந்தது தழீஇயிற்றுதலான் இவை யும் பண்ணைத்தோன்றிய எண்ணென்கெனப்பட்டனவற்றுப் பகுதி யென இதுவும் பிறன்கோட் கூறியவாறுயிற்று. மற்றிவற்றது பயனென்னையெனின், பொருளதிகாரத்துக் கூறுகின்ற வழக் கியலே [2] அவையுமென்பது [3] கூறி, அச்சுவைக்கு ஏதுவாய பொருளினை அரங்கினுள்நிறீஇ, அதுகண்டு குறிப்புஞ் சத்துவ மும் நிகழ்த்துகின்ற கூத்தனையும் அரங்கிற்றந்து, பின்னர் [4] அவையரங்கினோர் அவன்செய்கின்ற மெய்ப்பாட்டினை உணர் வராக வருகின்ற முறைமையெல்லாம் நாடகவழக்கிற்கே உரிய பகுதியெனவும், அப்பகுதியெல்லாம் ஈண்டுணர்த்தல் வேண்டுவ

துரைத்தார் என்றபடி. உத்திவகையாற் கூறி அதுதானே இதற்கும் (பொருளோத்திற்கும்) மரபாயிற்று என்க. கூறி— கூறப்பட்டு. அதுதானே—அங்ஙனங் கூறப்பட்ட அப்பொரு ளானே. கூறியதுதானே என ஒரு சொல்லாகக் கொள்ளின் கூறப்பட்டதுதானே எனப் பொருள் கொள்க.

1. பாலும் என்பதிலுள்ள உம்மை முப்பத்திரண்டு பதினா றுதலேயன்றி எட்டாதலும் உடைய என நிற்றலால் இறந்தது தழீஇயிற்று.

2. அவையென்றது எட்டு மெய்ப்பாட்டினையும்.

3. கூறிக் கூறியவாறு என இயைக்க.

4. அவை அரங்கு—அவையாகிய அரங்கு.

தன்றெனவுங் கூறியவாறு. இங்ஙனம் அடங்குமென்பது நாடக நூலுள்ளுஞ் சொல்லுபவோவெனின், சொல்லுபவாகலினன்றே [1] அதன்வழி நூல்செய்த ஆசிரியர் செயிற்றியனுர் சுவையுணர்வும் பொருளும் ஒன்றுக வடக்கிச் சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென மூன்றுக்கி வேறு வேறு இலக்கணங் [2] கூறி அவற்றை,

"எண்ணிய மூன்று மொருங்கு பெறுமென
நுண்ணிதி னுணர்ந்தோர் நுவன்றன ரென்ப"

என்றுதினுராயிற்றென்பது. (உ)

[எண்வகை மெய்ப்பாடு இவை எனல்]

உருக. நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப.

இது, [3] பிறர்வேண்டுமாற்றுனன்றி இந்நூலுள் [4] இவ்வாறு வேண்டப்படும் மெய்ப்பாடென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இச் சொல்லப்பட்ட எட்டும் மெய்ப்பாடென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

நகையென்பது சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப. அழுகையென்பது அவலம்; அஃது இருவகைப்படும்; [5] தானே அவலித்தலும், பிறரவலங்கண்டு அவலித்தலுமென; இவற்றுள் ஒன்று கருணையெனவும் ஒன்று அவலமெனவும் பட்டுச் சுவை ஒன்பதாகலுமுடைய வென்பது. இளிவரலென்பது இழிபு. மருட்கையென்பது வியப்பு; அற்புதமெனினும் அமையும். அச்சமென்பது பயம். பெருமிதமென்பது வீரம். வெகுளியென்பது உருத்திரம். உவகையென்பது காம முதலிய மகிழ்ச்சி. இவை அவ்வெட்டுமாவன. இவற்றைச் சுவையெனவுங் குறிப்பெனவும் வழங்கினும் அமையும்.

1. அதன்வழி — நாடகநூலின்வழி.
2. கூறி ஒதினுரென இயைக்க.
3. பிறர் — நாடகநூலார்.
4. இவ்வாறு — (சூத்திரத்துட் கூறும்) இத்தன்மையாக.
5. தானே அவலித்தல் அவலம். ஏனையது கருணை.

[1] மற்று நகையை முன்வைத்ததென்னையெனின், 'பண்ணைத் தோன்றிய வெண்ணுன்கு பொருட்கும்' (உசகூ) இவை [2] என்னும் இயைபில்லனவல்ல என்றற்கு, விளையாட்டுப்பொருட்டாகிய நகையை முன்வைத்தானென்பது. அதற்கு மறுதலையாகிய அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான்; அழுகையும் இளிவரலோடு இயைபுடைமையின். தானிளிவந்து பிறிதோர் பொருளை வியக்குமாதலின் இளிவரலின்பின் வியப்பு வைத்தான். வியப்புப்பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ்வீரத்தின் பயனுகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலையாகலானும் எல்லாவற்றினும் [3] ஈண்டு ஒதுதற்குச் சிறந்ததாகலானும் முதற்கண்ணோதிய நகைக்கு இயைபுடைத்தாகலானும் உவகையை அவ்வீற்றுக்கண் வைத்தானென்பது.

இவ்வெட்டனுள் முதனின்ற நான்கும் முற்கூறுதற்கும், இறுதிநின்ற நான்கும் பிற்கூறுதற்கும் காரணம் வருகின்ற சூத்திரங்களானும் பெறுதும்.

மற்றிவ் வெட்டனோடுஞ் சமநிலை கூட்டி ஒன்பதென்னுமோ நாடகநூலிற்போலவெனின், அதற்கு ஓர் விகாரமின்மையின் ஈண்டுக்கூறியதிலனென்பது; [4] அதற்கு விகாரமுண்டெனின் முன்னையெட்டனுள்ளுஞ் சார்த்திக்கொள்ளப்படும். அல்லதூஉம்,

1. மற்றுநகையை.....முன்வைத்தானென்பது என்றது, பண்ணைத்தோன்றிய பொருளோடு இவையும இயைபுடையனவே வேறல்ல என்பதை உணர்த்தவே விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தானென்றபடி. விளையாட்டுக்கண் தோன்றும் எண்ணுன்கு பொருளைக் கூறிய சூத்திரத்தோடு இயைபு காட்டவே இச்சூத்திரத்து விளையாட்டுப்பொருட்டாகிய நகையை முன்வைத்தானென்பது கருத்து. பண்ணை — விளையாட்டு.

2. என்னும் — சிறிதும்.

3. ஈண்டு என்றது ஈற்றினை. சிறந்தபொருளை முதலில் வைத்தலன்றி ஈற்றிற் கூறுதலுமுண்டு. அது,— 'சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்' என்பதனுலறிக.

4. அதற்கு — சமநிலைக்கு. சமநிலை — சமமாகநிற்றல். அஃதாவது மனம் விகாரமின்றிச் சாந்தமடைந்து நிற்றல்.

அஃது [1] உலகியல் நீங்கினுர் பெற்றியாகலின், ஈண்டு உலக வழக்கினுட் சொல்லியதிலனென்பது. ஒழிந்த எட்டும் [2] உலகியலாகலிற் கூறினுன், 'வழக்குஞ் செய்புளு மாயிரு முதலின்' (பாயிரம்) என்று புகுந்தமையினென்பது. அவை எட்டு மாமாறு இனிக் [3] கூறுதும். (ங)

[பொருள்பற்றி நகைச்சுவை இத்துணைய எனல்]

உருஉ. எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான் கென்ப.

இது, நிறுத்தமுறையானே நகைக்குறிப்பு நான்கென்ப துணர்த்துதல் நுதலிற்று.

∴ **இ—ள்:** எள்ளுதலும் இளமையும் பேதைமையும் மடனுமெனக் கருதப்பட்ட நகை நான்கு என்றவாறு.

[4] இவை நான்கும் பொருளாகிச் [5] சுத்துவமுங், குறிப்பும், சுவையும் என்னும் மூன்றற்கும் முதற்கண்ணவாகலான் மூன்றினையும் [6] அடக்கிப் பொருட்பகுதியான் அவற்றைக் கூறுகின்ற வாறு இதுவென்பது. இவை நான்கும் ஒன்றிரண்டாகி எட்டாதலும் உடைய.

எள்ளலென்பது, தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நகுதலுமென இரண்டாம். இளமையென்பது, தான் இளமையாற் பிறரை நகுதலும் பிறரிளமை கண்டு தான் நகுதலுமென இரண்டு. [7] பேதைமையென்பது,

---

1. உலகியல் நீங்கினுர் — துறந்தோர்.

2. உலகியல் — உலகவழக்கு.

3. கூறும் — கூறுவான். என்றது ஆசிரியனை.

4. இவை நான்கென்றது எள்ளல் முதலிய நான்கை. பொருள் — சுவை பிறத்தற்குக் காரணமாகிய பொருள்.

5. இவை சுவையும் குறிப்பும் சத்துவமும் என்று மாறியிருப்பது நலம். தலைதடுமாற்றமென்னும் உத்தியாற் கூறினரெனினுமாம். சுவைக்கு முதற்கண்ணது பொருளாதலின்.

6. அடக்கல் — பொருளுளடக்கல்.

7. இளம்பூரணர், பேதைமை என்பதற்கும் மடமை என்பதற்கும் வேறுபாடென்னையெனின், பேதைமை என்பது உய்த்துணர்ந்து திரியக்கோடல்; மடமை என்பது பொருண்மை யறியாது திரியக்கோடல் என்பர்.

அறிவின்மை. மடமையென்பது பெரும்பான்மையுங் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. இவையுந் தன் பேதைமையானகுதலும் பிறன் பேதைமையானகுதலும், தன் மடமையான் நகுதலும் பிறன் மடமையான் நகுதலுமென இவ்விரண்டாம்.

எள்ளலென்பது இகழ்ச்சி.

1 "எள்ளி நகினும் வருஉம்" (கலி-சுக)

என்பது, தன்கண் நிகழ்ந்த எள்ளல்பொருளாக நகை பிறந்தது.

2 "நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே." (அகம்-உசஅ)

என்பது, பிறரெள்ளியது பொருளாகத் தன்கண் நகைபிறந்தது; என்னை? தன் மகள் தன்னை மதியாது இகழ்ந்தாளென நக்கவாறு. இது வெகுளிப்பொருளாக நக்கதன்றோவெனின், அது வீரர்க்கே உரித்தாகல் வேண்டும், இவள் அவளை வெகுண்டு தண்டஞ்செய்வாளல்லள் அதற்கே உவப்பினல்லதென்பது. அல்லதூஉம்,

3 "நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்." (புற-எஉ)

என்றாற்போல வீரத்திதழ்ந்த வெகுளிநகையும் எள்ளல்நகையென்றே அடக்கவேண்டும் ஈண்டென்பது.

4 "நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே." (கலி-கங)

என்புழித், தன் இளமை பொருளாக நகைபிறந்தது.

---

1. எள்ளி நகினும் வருஉம் என்பது தலைவிக்குக் குறை நயப்பித்த தோழி கூற்று. தலைவியே! அவன் குறையுற்று நிற்கின்ற காலத்து யான் இகழ்ந்து சிரித்தாலும் அவன் பலகாலும் வருவான் என்பது கருத்து. தன்கண் நிகழ்ந்த எள்ளல் பொருளாகத் தோழிக்கு நகை பிறந்தது.

2. தன் மகளை நோக்கி நீ மிகவும் நல்லை எனச் சிரித்துச் சென்றுள் என்றது, செவிலித் தாய் தன் மகள் தன்னை மதியாமை குறித்துச் சிரித்துச்சென்றுள் என்றபடி.

3. நகுதக்கனர் — சிரிக்கத்தக்கார். இவனது நாட்டை உயர்த்திச் சொல்வார் எம்மாற் சிரிக்கத்தக்கார் என்றமையின் வெகுளிபற்றிய நகையாயிற்று. இது எள்ளல் நகையுள் அடங்காது என்பது பேராசிரியர் கருத்து.

4. நடுங்குதல் காண்மார் நகை குறித்தனர்—தலைவியே உனது மெய்ந்நடுக்கத்தைக் காண்டற்கு ஒரு விளையாட்டைக் குறித்துச்சொன்னர். இது தலைவன் இளமைபொருளாக அவற்கு நகை பிறந்தது.

"இறனல்ல யாங்கழற யாரை [1] நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்." (கலி-அசு)

என்பதுமது.

அங்ஙனம் மகன் சிரித்தவழித் தாய்க்கு நகை தோன்றிற் றேல் அது பிறரிளமை பொருளாக நகை தோன்றிற்றும்.

[2] "நாவொடு நவிலா நகைபடு தீஞ்சொல்." (அகம்-ககசு)

என்பது, பிறரிளமை பொருளாக நகைபிறந்தது.

"நகைநீ கேளாய் தோழி." (அகம்-உசஅ)

என்பது, [3] தன் பேதைமை பொருளாக நகை பிறந்தது. என்னை? தான் செய்த தவற்றிற்குத் தாய் தன்னை வெகுண்டது தனக்கு நகையாகக் கொண்டமையின்.

"நகையா கின்றே தோழி....
மம்மர் நெஞ்சினன் [4] நெருதுநின் றதுவே." (அகம்-டுசு)

என்பது, பிறன் பேதைமை பொருளாக நக்கது.

[5] "நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே." (குறு-ககசுஅ)

என்பது, தன்மட்டுத்தான் நகை தோன்றிற்று; என்னை? நீயிர் கூறியதனையே மெய்யெனக் கொண்டு மகிழ்ந்து நக்கனமென் றமையின்.

[6] "குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்." (குற-கoகடு)

என்பதும் அது.

---

1. நகும் என்றது தன் மகனை. தன் மகன் தன்னியல்பானே நக அதனைத் தன்னை நகுதலாகக்கொண்டு தலைவி யாரை நகும் என்றாள்.

2. பிறரிளமை பொருளாக நகை தோன்றியதென்றது குழவி யின் நாவொடு பழகாத இனிய மழலைத் தீஞ்சொற்கேட்டு நகை தோன்றிற்று என்றபடி.

3. தான் செய்த தவற்றை ஓராமை பேதைமை என்க.

4. தொழுதுநின்ற பேதைமை கருதி நகையாகின்று என றாள். இது தோழி கூற்று. பிறன் என்றது தலைவனை.

5. இது தலைவி கூற்று. தோழி கூற்றுமாம். நீயிர் கூறியதனை யாம் மெய்யெனக் கொண்டு நும்மொடு நக்கது மடமை என்றாள்.

6. ஒரு கண் சிறங்கணித்தாள்போல என்னை நோக்கிப் பின் றன்னுள்ளே நகும். சிறங்கணித்தல் — சுருங்குதல். தலைவி

"நாநகை யுடைய நெஞ்சே நம்மொடு
[1] தான்வரு மென்ப தடமென் றோளி." (அகம்-கஉக)

எனப் [2] பிறர்மடம் பொருளாக நகை தோன்றிற்று. பிறவும் அன்ன.

இவ்வோதப்பட்டவற்றுக்கெல்லாம் உவகை உரித்து. உள் ளப்பட்ட நகை நான்கு என்றதனுள் உள்ளத்தோடு பிறவாத நகையுமுள; அவை,

"வறிதகத் தெழுந்த [3] வாயண் முறுவலள்." (அகம்-டு)

என்றாற்போல வருவனவெனக் கொள்க. (ச)

[அழுகைச்சுவை இத்துணைய எனல்]

உடுக. இளிவே யிழிவே யசைவே வறுமையென
விளிவில் கொள்கை யழுகை நான்கே.

இது, முறையானே அழுகையென்னுஞ் சுவையினைப் பொருள்பற்றி உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இளிவும், இழுக்கும், அசைவும், வறுமையு மென இந்நான்கு பொருள்பற்றித் தோன்றும் அவலம் என்ற வாறு.

இளிவென்பது, பிறரான் இகழப்பட்டு எளியனாதல். இழி வென்பது, தந்தையுந் தாயு முதலாகிய சுற்றத்தாரையும் இன் பம் பயக்கும் [4] நுகர்ச்சி முதலாயவற்றையும் இழத்தல். அசை வென்பது, [5] பண்டை நிலைமைகெட்டு வேறொருவாறாகி வருந்து

னைக்குதலைக் கண்டு தானும் விடாது நோக்கி நக்கதுமடமை என்பது இவ்வுரையாசிரியர் கருத்துப்போலும். இவ் வுதார ணம் அத்துணைப் பொருத்தமாய்க் காணவில்லை.

1. தான்வருமென்றது மடம்பற்றியது. கொளுத்திய இன் பத்தைக்கொண்டு அதனை விடாமல் தானும் வருவேனென்று தலைவி கூறியது மடமை. கொளுத்தல் — அறிவித்தல்.

2. பிறர் என்றது தலைவியை. இது பொருள்வயிற் பிரியுந் தலைவன் கூற்று.

3. வாயண் முறுவல் — வாயிற் பொருந்திய நகை. இப் பாடமே பொருத்தமானது.

4. நுகர்ச்சி — அனுபவித்த பொருள்.

5. பண்டை நிலைமை — தான் முன்னிருந்த நிலைமை.

தல். வறுமையென்பது, போகந் துய்க்கப்பெறுத பற்றுள்ளம். இவை நான்குந் தன்கண் தோன்றினும் பிறன்கண் தோன்றினும் அவலமாமென்பது; எனவே, இவையும் எட்டாயின. விளிவில் கொள்கை—கேடில் கொள்கை. அங்ஙனங் கூறிய மிகையாயினே அழுகைக் கண்ணீர்போல உவகைக் கண்ணீர் வீழ்தலும் உண்டு; அதனையும் அழுகைப்பாற் சார்த்தி உணரப்படும்.

"எழுதெழில் சிதைய வழுதன ளேங்கி
யடித்தென வருத்த நித்திப் பல்லூழ்
தொடித்தெனச் சிவந்த மெல்விரற் றிருகுபு
கூர்நுதி மழுங்கிய வெயிற்ற
ளூர்முழுது நுவலுநிற் காணிய சென்மே." (அகம்-களசு)

என்பது, பரத்தையை நீ யெள்ளினையென்று அழுதுவருகின்றா ளென்று தலைமகற்குச் சொல்லியதாகலின் இது [1] தன்கட்டோன்றிய இளிவரல் பொருளாக அவலச்சுவை பிறந்தது.

"கயமல ருண்கண்ணுய் காணு யொருவன்" (கலி-கூஎ)

என்னும் பாட்டினுள்,

"தானுற்ற,
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னளும்"

எனத் தலைமகன் இளிவந் தொழுகுவது காரணமாக,

"சேயேன்மன் யானுந் துயருழப்பேன்"

என்றமையின் இது [2] பிறன்கட்டோன்றிய இளிவரல் பொருளாக அவலச் சுவை பிறந்தது. இது கருணையெனவும்படும்.

"மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே" (புறம்-உசகூ)

என்புழிக், கணவனை யிழந்தாள் அவற்குப் பலிக்கொடை கொடுத்தற்கு மெழுகுகின்றாளோ, கண்ணீரே நீராக மெழுகு

---

1. தன் என்றது பரத்தையை. பரத்தை தன்னைத் தலைவனிகழ்ந்தமையின் தான் அவனால் இகழப்பட்டு எளியளாயினேன் என்று கருதியதனால் அவளுக்கு அழுகை பிறந்தது. இளிவரல் — இழிவு.

2. பிறன் என்றது தலைவனை. தலைவன் பலநாளும் இளிவந்து ஒழுகல்பற்றித் தோழி, யானுந் துயருழப்பேன் என்றமையின், இது பிறன்கட்டோன்றிய இளிவரல் பொருளாக அவலம் பிறந்தது. இவ்வவலம் அவன்மீதுகொண்ட கருணையாற் பிறந்தமையின் இது கருணை எனப்படுமென்றார். கருணையாற் பிறந்த அழுகையைக் கருணையென்றது உபசாரம்.

கின்றாளென்றமையின் இது [1] தன்கட்டோன்றிய இழவுபற்றிப் பிறந்த அவலச் சுவையாயிற்று.

[2]"ஐயோ வெனின்யான் புலியஞ் சுவலே" (புறம்-உஞஞ)

என்பதும் அது.

"பின்னெடு முடித்த மண்ணு முச்சி" (அகம்-எஙு)

என்னும் பாட்டினுள்,

"அனங்குறு கற்பொடு மடங்கொளச் சாஅய்
நின்னெய்த் தலையையு மல்லே றெறுவர
வென்னு குவள்கொ லளிய டானென
வென்னழி பிரங்கு நின்னெ டியானும்"

என்றவழி, தலைமகன் பிரிவிற்குத் தோழி படர்கூர்ந்தாளெனச் சொல்லினமையின், அது பிறன்கட்டோன்றிய [3] இழவுபற்றி அவலம் பிறந்ததாம்.

"துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவெண்ணெக் காட்டி யளியளென்
[4]னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சேன்." (கலி-கஙகூ)

எனத் தன்கட்டோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

"இல்வழங்கு மடமயில் பிணிக்குஞ்
சொல்வலே வேட்டுவ னுயினன் முன்னே" (புறம்-உஞஉ)

என்பது, [5] பிறன்கட்டோன்றிய அசைவுபற்றிய அவலம்; என்னை? அள்ளிலைத்தாளி கொய்யாநின்றான் இதுபொழுது என அவலித்துச் சொல்லினமையின்.

---

1. தன் என்றது கணவனை யிழந்தாளை. அவளுக்குக் கண் கலுழ்நீர் கணவனையிழந்தமைபற்றி வந்ததாகலின் இழவுபற்றிய அவலமென்றார்.

2. ஐயோவெனின் — ஐயோவென் றரற்றுவேனுயின். இது கணவனையிழந்தாள் கூற்றுதலின் தன்கட்டோன்றிய இழவுபற்றி வந்த அவலமாயிற்று.

3. இழவு ஈண்டுப் பிரிவு. தலைவன் பிரிவுபற்றி வந்த அவலமாகலின் பிறன்கட்டோன்றியதாயிற்று.

4. தன் நெஞ்சாறு கொண்டாள் என்றமையானே தான் முன்னிலைமைகெட்டனனென்றானகலின், தன்கட்டோன்றிய அசைவுபற்றி வந்த அவலமாயிற்று.

5. பிறன் என்றது ஈண்டுத் தாபதனையினை. முன் மடமயிலைப் பிணிக்கும் வேட்டுவனுயிருந்தவன் இப்பொழுது அந்நிலைவிட்டு அள்ளிலைத் தாளிகொய்தலின், இது பிறன்கட்டோன்றிய அசைவாயிற்று.

"இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழுஉந்தன் மகத்துமுக னேக்கி
நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணென்
மீனியோ ளெவ்வ நோக்கி நினீஇ
நிற்படர்ந் திரேனு நற்போர்க் குமண" (புறம்-ககூச)

என்புழி, முலைப்பசைகாணுது அழுகின்றது குழவியென்பது, [2] தன்கட்டோன்றிய வறுமைபற்றி அவலம் பிறந்தது. மகமுக னேக்கி அழுகின்றுள் என் மனைவியென்பது பிறன்கட்டோன்றிய வறுமையவலம்.

"இன்ன விறலு முளகொ னமக்கென
மூதிற் பெண்டிர் கசிந்தழ நானிக்
கூற்றுக்கண் ணேடிய வெருவரு பறந்தலை" (புற-ககூ)

என்புழி, மூதிற்பெண்டிர் இழவுபற்றி அழுதாராயிற் கூற்றுக் [3] கண்ணேடாதாகலின் அவர் உவந்தனரென்பது பெற்றும்; அதனுனே [4] அஃது உவகைக்கவுழ்ச்சியாமென்பது. (நு)

[இளிவரற்சுவை இத்துணைய எனல்]

உருச. மூப்பே பிணியே வருத்த மென்மையோ
டியாப்புற வந்த விளிவர னல்கே.

இது, மூன்றும் எண்ணுமுறைமைக்கணின்ற [5] இளிவரல் கூறுகின்றது.

இ—ள்: மூப்பும் பிணியும் வருத்தமும் [6] மென்மையுமென நான்கு பொருள்பற்றிப் பிறக்கும் இளிவரல் என்றவாறு.

வருத்தமெனினும் முயற்சியெனினும் ஒக்கும். 'யாப்புற வந்த' என்பது திட்பமுறவந்த என்றவாறு; அங்ஙனங் கூறிய

1. இல்லி — துவாரம்.

2. தன் என்றது குழவியை. குழவி தனக்குப் பாலின்றி வறுமையுற்று அழுதமையின் தன்கண்வந்த வறுமைபற்றிய அவல மாயிற்று. தன் மகமுகநோக்கித் தாயழுதாள் என்றது தன் மக வுக்குப் பாலில்லாமையால் அதன் முகநோக்கி அழுதாள் என்ற படி. ஆகலின் பிறன்கட்டோன்றிய வறுமைபற்றிய அவல மாயிற்று. பிறன் என்றது மகவை.

3. கண்ணேடல் — இரங்கல்.

4. அஃது — அம்மூதிற் பெண்டிரழுகை.

5. இளிவரல் — எளிமை; இழிவு.

6. மென்மை — வலியின்மை.

மிகையானே வீரமுதலாயினபற்றியும் இளிவரல் பிறக்கும் என்ற வாறு. இவையும் முன்னையபோலத் தன்கட்டோன்றுவனவும் பிறன்கட்டோன்றுவனவும் பற்றி எட்டாதலுடைய வென்பது கொள்க.

[1] "தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
[2] றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே." (புற-உசஙு)

என்பது, தன்கட்டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது. என்னே? இளமைக்காலத்துச் செய்தன செய்யமாட் டாது இளிவந்தனம் இக்காலத்து என்றமையின்.

"மாயப் பொய்ம்மொழி சாயினு பயிற்றியெம்
[3] முதுமை யெள்ளலஃ தமைகுந் தில்ல." (அகம்-சு)

என்பதும் அது.

"மூத்துத்தலை யிறைஞ்சிய நின்னே டியாளே
போர்த்தொழி ரொடங்க நாணுவ லதனுன்."

என்பது, பிறன்கட்டோன்றிய மூப்புப் பொருளாக இளிவரல் பிறந்தது.

"இமயமுந் துளக்கும் பண்பினை
[4] துணையில ரளியர் பெண்டிரஃ தெவனே." (குறு-கருஅ)

என்பது, தன்கட்டோன்றிய பிணிபற்றி இளிவரவு பிறந்தது; என்னே? மலையைத் துளக்கும் ஆற்றலுடையாய் காமப்பிணி கூர்ந்தோரை அலைப்பது நினக்குத் தகுவது அன்றென இளி வந்து வாடைக்குக் கூறினமையின்.

"குணகடற் றிரையது பறைதபு நாரை
தின்டேர்ப் பொறையன் ரெண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தாஅங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோமிஃப்பா லோயே." (குறு-கஉஅ)

1. தொடி — பூண்.

2. இரும் — இருமல்.

3. முதுமையெள்ளல் என்றது தன்கட்டோன்றிய மூப்புக் காரணமாகப் பிறந்த இளிவரல்.

4. துணையிலர் பெண்டிர் என்றது தலைவரைப் பிரிந்து காம நோயுழக்கும் பெண்டிர் என்றபடி. அதனுல் பிணிபற்றிவந்த இளிவரல் என்றுர்.

என்பது, நெஞ்சினை வேறு நிறீஇக் கூறினமையிற் [1] பிறன்கட் டோன்றிய பிணியெனப்படும். இதனுள்,

"சேய ளரியோட் [2] படர்தி"

என்றமையின் இது பிறன்கட்டோன்றிய வருத்தமும் வந்த தாயிற்று.

[3] "யான்ற னறிவ னுனறி யலளே." (குறு-கூஎ)

என்பது, தன்கட்டோன்றிய வருத்தம்பற்றி வந்த இளிவரல்; என்னை? அது பின்னின்ற தலைமகன் கூறியதாகலின்.

"ஒன், றிரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லும்" (கலி-சஎ)

என்பது பிறன்கட்டோன்றிய [4] வருத்தம்பற்றி வந்தது; என்னை? அவன் இவ்வாறுழுகுதல் நமக்கு இளிவரலாமென்னுங் குறிப்பினைக் கூறிக் குறை நயப்பித்தமையின்.

"வலியரென [5] வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்." (புறம்-உகூ)

எனத் தன்கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றிய மென்மைபற்றி இளிவரல் பிறந்தன; என்னை? மெலியார் இளிவந்தன கூறுவ ராயினும் வலியார் மீக்கூறுவராயினும் இவன் அவை செய்யா னென்றலின்.

[6] "ஒருகை யுடைய தெறிவலோ யானு
மிருகை சுமந்துவாழ் வேன்." (ப-உஎ)

---

1. பிறன் என்றது நெஞ்சினை.

2. படர்தி என்றது விரும்புகின்றாய் என்றபடி. விரும்புதல் பற்றி முயற்சிபற்றி வந்ததென்றார்.

3. யான், அவள் வருத்தும் பருவமுடையள் என்பதை அறி வேன். எனவே இளையள் விளைவிலள் என்றதி; என்னை வருத் தும் பருவம் உடையள் என இரந்து பின்னின்ற தலைமகன் கூறின மையின் தன்கட்டோன்றிய வருத்தமாயிற்று. இரந்து பின்னிற் றல் — வருத்தம் (முயற்சி); இதனால் அவற்கு இளிவரல் பிறந்தது.

4. இரப்பான்போல் இளிவந்து கூறல்—வருத்தம் (முயற்சி).

5. வழிமொழியலன் என்பது — தன் மென்மைதோன்ற நின் றது. மெலியர் என்பது பிறர் மென்மைதோன்ற நின்றது.

6. ஒரு கையுடையது—யானை. எறிவலோ என்றமையான், எறிதல் வீரத்திற்கு இழுக்காகும் என்றபடி.

என்பது வீரம்பற்றி இளிவரல் பிறந்தது; [1]இது, தன்கண்ணும் பிறன்கண்ணுந் தோன்றுமையின் இலேசினாற் கொண்டா மென் பது. (கூ)

[மருட்கைசுவை இத்துணையது எனல்]

உருபு. புதுமை பெருமை சிறுமை யாக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே.

இது, வியப்புணர்த்துதல் துதலிற்று.

இ—ள்: புதிதாகக் கண்டனவும், கழியப்பெரியவாயினவும், இறப்பச் சிறியனவும், ஒன்று ஒன்றுப்போற் றிரிந்தனவுமென நான் கும் பற்றி வியப்புத்தோன்றும் என்றவாறு.

'மதிமை சாலா மருட்கை' என்பது, அறிவினை உலக வழக்கினுள் நின்றவாறு நில்லாமற் றிரித்து வேறுபடுத்து வருவ தென்றவாறு. இவையுமெல்லாம் மேலனபோலத் தன்கட்டோன் றினவும் பிறன்கட்டோன்றினவுமென எட்டாதலுடைய.

"மலர்தார் மார்ப னின்றேற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லஃனையொடு பொருந்தி
யோரியா னுகுவ தெவன்கொ
[2] னீர்வார் கண்ணெடு நெகிழ்தோ ளேனே." (அகம்—அஉ)

என்பது, தன்கட்டோன்றிய புதுமைபற்றி வியப்புப் பிறந்தது; என்னை? தன் கருத்து வெளிப்படாது தன்மெய்க்கட்டோன்றிய புதுமையைத் தலைவி வியந்தாள்போலத் தோழிக்கு அறத்தொடு நின்றமையின்.

---

1. இவ்விளிவரல் தன்கண் பிறந்ததுமன்று. பிறன்கண் பிறந்ததுமன்று. வீரத்தின்கண் பிறந்தது என்றபடி. என்றது தனக்கும் இகழ்ச்சியாகாது யானைக்கும் இகழ்ச்சியாகாது வீரத் திற் கிகழ்ச்சியாமென்றபடி. இவ்விளிவு இரண்டிடத்தும் இல்லை. வீரத்திலுண்டு என்பது கருத்து. செயலால் வந்ததாகலின் வீரத் தில் இழிவுதோன்றும் என்க. "விலங்காமென மதவேழமு மெறி யான்" என்பது சிந்தாமணி.

2. கண்டோர் பலருள் தனக்குமாத்திரம் நீர்வார் கண்ணெடு நெகிழ்தோளானமை, புதுமை. ஆதலிற் புதுமைபற்றிய வியப்பு. புதுமை — முன்னில்லாதன தோன்றினமை.

"மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்
விழவுக்கள விறலியிற் ரேன்று நாடன்." (அகம்–அஉ)

என்றவழிப் பண்டு ஒருகாலுங் கண்டறியாதபடி ஆடிற்று மயி லென்றமையிற் பிறபொருட்கட்டோன்றிய புதுமையாயிற்று.

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனெடு நட்பே." (குறு–ஈ)

என்பது பெருமை வியப்பு; என்னை? கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறை முறை யாற் பெருகற்பாலதாகிய நட்பு, மற்றவனைக் கண்ணுற்ற ஞான்றே நிலத்தின தகலம்போலவும், விசும்பி னேக்கம்போலவுங், கடலி னுழம்போலவும் ஒருகாலே பெருகிற்றென்றமையின்; இது தன்கட்டோன்றிய [1] பெருமை வியப்பு; இது தலைமகன் கருத் தினுள் நட்பிற்குக் கொள்ளுங்காற் பிறன்கட்டோன்றிய பெருமை வியப்பாமென்பது கொள்க.

"மைம்மல ரோதி மணிநகைப் பேதைதன்
கொம்மை வரிமுலை யேந்தினு—மம்ம
கடையிற் சிறந்த கருநெடுங்கட் பேதை
[2] யிடையிற் சிறியதொன் றில்."

என்பது, பிறன்கட்டோன்றிய சிறுமை வியப்பு. தன்கட்டோன் றிய சிறுமை வந்துழிக் காண்க.

"எருமை யன்ன கருங்கல் விடைதோ
ருளிற் பரக்கும் யாகீய முன்பிற்
கானக நாடகீ நீயோ பெரும." (புறம்–டு)

என்பது, நரிவெரூஉத்தலையார் தம்முடம்புபெற்று வியந்து கூறிய பாட்டாகலின், [3] இது தன்கட்டோன்றிய ஆக்கம்பற்றி வியப்புப் பிறந்ததாயிற்று.

---

1. தலைவி தலைவனெடுபட்ட தன் நட்பின் பெருமையைக் குறித்து வியந்தமையின் தன்கட்டோன்றிய பெருமை வியப்பா யிற்று. தலைவன் தன்னிடத்து வைத்த நட்பின் பெருமையைத் தலைவி வியந்ததாகக் கொள்ளுங்கால் பிறன்கட்டோன்றிய பெருமை வியப்பாமென்றபடி.

2. இது பேதையினது இடையின் சிறுமையை வியத்தலின் சிறுமைபற்றிய வியப்பாயிற்று.

3. இது தன்கட்டோன்றிய ஆக்கம் என்றது நரிவெரூஉத் தலையார் சேரமான் ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறை

"உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்கு." (நால–ஈஅ)

என்பது, [1] பிறபொரு ளாக்கம்பற்றிய வியப்பு.

இனி, மதிமை சாலா மருட்கையானே சிறுமைப்பொருள் பெருந்தொழில் செய்தலும், பெருமைப்பொருள் சிறுதொழில் செய்தலும் வியப்பாமெனக் கொள்க.

[2] "கிண்கிணி கூளந்தகா லொண்கழ றொட்டு." (புறம்-எஎ)

என்னும் பாட்டுச் சிறியோர் பெருந்தொழிலைச் செய்தது.

"அன்னு ளெருவன்றன் ணுண்டகைவிட் [3]டென்னீச்
சொல்லுஞ்சொற் கேட்டி சுடரிழாய்." (கலி-சஎ)

என்பது, பெரியோன் சிறுதொழில் கூறலின் வியப்பாயிற்று.

புதுமையை ஆக்கத்துளடக்கி முதுமையென்பது பாட மாகவும் உரைப்ப; அன்னதோர் வழக்கின்மையானும் புதுமை [4] ஒன்று ஒன்றுய்த் திரியுமெனப்பட்டு அவ்வாக்கத்துள் அடங் காமையானும் அஃதமையாதென்பது.

இங்ஙனம் இவை நான்கு சூத்திரப்பொருளும், நாலுன்கு பதினுறகியும் முப்பத்திரண்டாகியும் விரியுமாகலின் இவற்றை ஓரினமாக்கி முதற் சூத்திரத்து முன் வைத்தானென்பது.

இனிவருஞ் சூத்திரநான்கினும் எண்ணப்படும் பொருள் ஒன்று இரண்டாகாமையின் அவை பதினுறேயாமென்பது; அஃதேயெனின், இத்துணையுங் கூறிவந்த முப்பத்திரண்டனை யும் இனிக் கூறும் பதினுறனையும் நோக்கி முதற் சூத்திரத்துள்,

---

யைக் கண்டபொழுதே சாபம்நீங்கித் தமக்கியல்பான உடம்பைப் பெற்று ஆக்கம் அடைந்தமையை (புறம்-டு).

1. சிறிய வித்துப் பெரிய மரமானது ஆக்கம்.

2. கிண்கிணி கூளந்தகால் என்றமையின் குழவிப் பருவ முடையான் என்பதூஉம அவன் போர்செய்யக் காலில் கழல் கட்டி என்றமையின் அவன் பெருந்தொழில்செய்ய முயன்றமை யும் பெறப்பட்டன.

3. என்னீச் சொல்லுஞ் சொல் என்பது பின்னின்றிரத்தலைக் குறித்தலின் சிறுதொழிலாயிற்று.

4. ஆக்கம் ஒன்று ஒன்றுய்த் திரிவது; புதுமை அவ்வாறு திரியாதாகலின் அதனுள் அடங்காது என்றபடி.

"பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானுன் கென்ப." (பொ-உசகூ)

என்றுனென்னுமோவெனின், என்னுமன்றே. பதினாறு பொருளும் மேற்கூறிய முப்பத்திரண்டு [1]மென்று படாமையி னென்பது; என்றார்க்குத் தன்கட்டோன்றுதல் பிறன்கட்டோன்றுதலெனப் பகுத்துப் பொருளுரையாது, [2]மேலனவும் இனிவருகின்றனவும் நானுன்கேயாகலாற் 'பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருள்' (உசகூ) என்றுனுமெனின், அங்ஙனங் கூறின் அவை 'கண்ணிய புறனே நானுன் கென்ப' (பொ-உசகூ) என்றும், 'நாலிரண் டாகும் பாலுமா ருண்டே' (உந்ஐ) என்று மடங்கக் கூறல் வேண்டாவாம்; வேண்டுவே, இச்சூத்திரம் எட்டு வகையாகியே செல்லுமென மறுக்க; அல்லதூஉம் இஃது உலக வழக்காதலிற் பண்ணைத்தோன்றிய பொருள் ஈண்டு ஆராயா னென்பது. அன்றியும் இவற்றைப் பண்ணைத்தோன்றிய பொருளினின் [3]ஒன் றிரண்டுக்கிக் கூறுது, கூத்தன் அரங்கினுள் இயற்றும் வகையானே சுவையுங் குறிப்புஞ் சத்துவமுமென வேறு வேறு செய்வான் ஆசிரியனென்பது. (எ)

[அச்சச்சுவை இத்துணையது எனல்]

உருகூ. அணங்கே விலங்கே கள்வர்த மிறையெனப்
பிணங்கல் சாலா வச்ச நான்கே.

இது, முறையானே அச்சமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தெய்வமும் விலங்கும் கள்வரும் தமக்கு இறைவராயினுருமென நான்கு பகுதியான் அச்சம் பிறக்கும் என்றவாறு.

1. என்று படாமையின்—என்று சூத்திரப்பொருள் படாமையின்.

2. மேலனவற்றையும் இனிவருவனவற்றையும் (8×4=32) முப்பத்திரண்டா மென்றுனெனின், முப்பத்திரண்டு பதினாறு மென்றும், பதினெட்டாமென்றும், ஒன்று ஒன்றுளடங்கக் கூறவேண்டாவாம் என்றபடி. அடங்கக்கூறல் வேண்டினமையானே இச்சூத்திரம் நான்குவகையாகாது எட்டுவகையாம் என்றபடி. எனவே இதன் முதற் சூத்திரங்களும் எவ்வெட்டுவகையாம் என்றபடி. ஆகவே இந்நான்கு சூத்திரத்தானுய முப்பத்திரண்டும் வேறு. பண்ணைத் தோன்றிய முப்பத்திரண்டும் வேறு என்றபடி.

3. ஒன்றிரண்டுக்கி—ஒன்றை யொன்று ளடக்கி. ஆக்கி—அடக்கி. அடக்கி என்று பாடமிருப்பினு மமையும்.

அணங்கென்பன: பேயும் பூதமும் பாம்பும் ஈருகிய [1]பதினெண் கணனும், [2]நிரயப்பாலரும், பிறரும் [3]அணங்குதற் றொழிலராகிய சவந்தின்பெண்டிர் முதலாயினரும் [4]உருமிசைத் தொடக்கத்தனவு மெனப்படும். விலங்கென்பன: அரிமா முதலாகிய அஞ்சுதக்கன. கள்வரென்பார்: தீத்தொழில் புரிவார். இறையெனப்படுவார்: தந்தையரும் ஆசிரியரும் அரசரும் முதலாயினர். 'பிணங்கல் சாலா அச்சம்' என்றதனுன் முன்னைய போல இவை தன்கட்டோன்றலும் பிறன்கட்டோன்றலுமென்னுந் தடுமாற்றமின்றிப் பிறிது பொருள்பற்றியே வருமென்பது.

உதாரணம்:—

"யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீரிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
[5]சூன்மகண் மாரு மறம்பூண் வாழ்க்கை." (பெரும்பா-134-6)

என்பதனுள், அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம் பிறத்தல் இயல்பென்பது கூறியவாருயிற்று.

"ஒருஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா னின்னை
[6]வெருஉதுங் காணுங் கடை." (கலி-அள)

இது, கள்வர் பொருளாக அச்சம் பிறந்தது; என்னை? அவனைக் கள்வர்பாற் சார்த்தியுரைத்தமையின்.

[7]"எருத்துமே னெக்குறின் வாழலே மென்னுங்
கருத்திற்கை கூப்பிப் பழகி—யெருத்திறைஞ்சிக்

1. பதினெண் கணங்களாவன: தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் போகபூமியினரும் ஆகாய வாசிகளும் என இவர்.

2. நிரயப்பாலர்—நிரயத் தலைவர். என்றது காலன் முதலியோரை. நிரயபாலகர் என்றும் பாடம்.

3. அணங்கல்—வருத்தல்.

4. உரும்—இடி.

5. சூல்—கரு.

6. வெரூஉதும்—அஞ்சுதும்.

7. எருத்து மேனெக்குறின்—கழுத்தை நிமிர்த்தி நோக்கின். வேந்து கண்டறியா என்க, அச்சத்தாற் கழுத்தை நிமிர்த்திப் பாரார் என்றமையின் அச்சச் சுவையாயிற்று.

கால்வண்ண மல்லாற் கடுமான்றேர்க் கோதையை
மேல்வண்ணங் கண்டறியா வேந்து." (இ-வி-ப-கஉச)

இஃது, [1] இறைபொருளாக அச்சம் பிறந்தது.

பிணங்காத அச்சமென்னுது 'சாலா அச்சம்' என்ற மிகையான் இந் நான்குமேயன்றி ஊடன் முதலியனவும் அச்சத்திற்குப் பொருளாமென்று கொள்க.

"சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
[2] ஞாணே கடக்கிற்பா ரியார்." (கலி-அக)

என்பது, புலவி பொருளாக அச்சம் பிறந்தது.

"அணிகிளர் சாத்தி னம்பட் டிமைப்பக்
கொடுங்குழை மகளிரி [3] னெடுங்கிய விருக்கை." (அகம்-உகசு)

"அச்சா குக வுணரிய வருபவன்
[4] பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல்." (கலி-எடு)

என வருவனவும் அவை. பிறவும் அன்ன. (அ)

[பெருமிதச்சுவை இத்துணையது எனல்]

**உடுஎ. கல்வி தறுகண் ணிசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமித நான்கே.**

இஃது, ஆறும் எண்ணு முறைமைக்கண் நின்ற வீரம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: கல்வியும் [5] தறுகண்மையும் புகழும் கொடையுமென்னும் நான்கும்பற்றி வீரம் பிறக்கும் என்றவாறு.

இச்சூத்திரத்துள் வீரத்திற்குப் பெருமிதமென்றெண்ணினன்; என்னை? எல்லாரொடும் ஒப்பநில்லாது மேலெல்லையாக நிற்றல் பெருமிதமெனப்படும் என்றற்கென்பது.

---

1. இறை—அரசன்.

2. ஆணை கடக்கிற்பார் யார் என்றமையின் அச்சமாயிற்று. புலவி—ஊடல்.

3. ஒடுங்கிய இருக்கை என்றது, ஊடற்கஞ்சி மகளிர்போல் அவன் ஒடுங்கியிருக்கின்ற இருக்கை.

4. பொய்ச்சூள்—பொய்ச் சத்தியம்.

5. தறுகண்மை—அஞ்சாமை.

கல்வியென்பது, தவமுதலாகிய விச்சை. தறுகணென்பது, அஞ்சுதக்கன கண்ட இடத்து அஞ்சாமை. இசைமையென்பது, இன்பமும் பொருளும் இறப்பப்பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை. கொடையென்பது, உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளுங் கொடுத்தல்.

உதாரணம்:

[1] "வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்." (கலி-கசக)

என்பது, கல்விபற்றிய பெருமிதம்; என்னை? என்னையுங் கல்லாமை காட்டினளெனத் தன் பெருமிதங் கூறினமையின்.

[2] "அடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்." (கலி-கசக)

என்பது தறுகண்.

"கழியாக் காதல ராயினுஞ் சான்றோர்
[3] பழியொடு வரூஉ மின்பம் வெஃகார்." (அகம்-ககஉ)

என்பது புகழ்.

"வையம்,
புரவுக்கு முள்ளத்தே னென்னை யிரவுக்கு
மின்னு விடும்பைசெய் தாள்." (கலி-கசக)

என்பது கொடை.

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
றபுதிகண் டஞ்சி [4] சிரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக." (புற-சஉ)

என்பதுமது.

'சொல்லப்பட்ட பெருமிதம்' என்றதனாற் காமம்பற்றியும் பெருமிதம் பிறக்குமென்று கொள்க.

---

1. வல்லார் முற் சொல்வல்லேனெனகிய என்னை என்றது கல்வி பற்றிய பெருமிதம்.

2. அடன்மாமேலாற்றுவேன் என்றது தறுகண் பற்றிய பெருமிதம்.

3. பழியொடு வரூஉ மின்பம் வெஃகாமை—புகழ்பற்றிய பெருமிதம்.

4. சிரை—துலைக்கோற்றட்டு. சிரைபுக்கது—கொடைபற்றிய வீரம்.

"பல்லிருங் கூந்தன் மகளி
ரொல்லா [1]முயக்கிடைக் குழைகவென் றூரே." (புறம்-எங)

என்பது, காம்பம்பற்றிய பெருமிதம். பிறவும் வருவன உளவேற் கொள்க. இது தன்கட்டோன்றிய பொருள்பற்றி வரும். என்னை? கல்வியும் தறுகண்மையும் [2] இசைமையும் வேட்கையுங் கொடைத் தொழிலுந் தன்கண்ணவாகலின். (கூ)

[வெகுளிச்சுவை இத்துணையது எனல்]

உருஅ. உறுப்பறை குடிகோ எலிகொலை யென்ற
வெறுப்பின் வந்த வெகுளி நான்கே.

இஃது, ஏழாம் எண்ணு முறைமைக்கண் நின்ற வெகுளி உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: உறுப்பறையென்பது, கை குறைத்தலும் கண் குறைத்தலும் முதலாயின; குடிகோளென்பது, தாரமுஞ் சுற்றமுங் குடிப்பிறப்பும் முதலாயவற்றுக்கட் கேடு சூழ்தல்; அலையென்பது, கோல்கொண்டலைத்தன் முதலாயின; கொலை யென்பது, அறிவும் புகழும் முதலாயினவற்றைக் கொன்றுரைத் தல்: இவை நான்கும் பொருளாக வெகுளி பிறக்கும் என்ற வாறு.

'வெறுப்பின்' என்றதனான் ஊடற்கண்தோன்றும் வெகுளி முதலாயினவுங் கொள்க.

3 "முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று" (கலி—நுஉ)

என்பது, உறுப்பறையான் வந்த வெகுளி.

---

1. முயக்கிடைக்குழைகவென்றமையின் முயக்கிடைக்குழை யாமை வீரம் என்க.

2. இசைமையும் வேட்கையும் என்பது இசைவேட்கையும் எனவும் பாடம். சூத்திரக்கருத்திற்கதுபொருத்தம். உரைகாரர் காமமுங் கூறலின் அங்ஙனமுமிருக்கலாம். அங்ஙனேல் வேட்கை பின்வருதல் நலம்.

3. முறஞ்செவி...புலிசெற்று—முறம்போலும் செவியாகிய மறைப்பு இடமாக வந்து பாய்ந்து மாறுபாட்டைச்செய்த புலியை வெகுண்டு எனவே புலிபாய்ந்து தன் உறுப்பைக் கடித்தலால் வெகுடலின் உறுப்பறையான் வந்த வெகுளியாயிற்று.

"நின்மகன்,
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னுயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினஇ." (புற—உளஅ)

என்பது, குடிகோள்பற்றி வந்த வெகுளி; என்னை? தன்மகன் மறக்குடிக்குக் கேடு சூழ்ந்தானென்று சினங்கொண்டாளாகலின்.

1 "நெருந லெல்லீநீ யெறிந்தோன் றம்பி
யகற்பெய் குன்றியிற் சுழலுங் கண்ணன்." (புறம்—ஈ00)

என்பதுமது.

2 "வரிவயம் பொருத வயக்களிறு போல
வின்னு மாருது சினனே." (புறம்—க00)

என்பதனுள், அலைபற்றிச் சினம் பிறந்தது; என்னை? புலியான் அலைக்கப்பட்ட யானை பொருது போந்தும் அவ்வலைப்புண்டலை நினைந்து சினங்கொள்ளா நின்ற தென்றமையின்.

"உறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை." (புற-எஉ)

என்பது, கொலைபொருளாக வெகுளிச் சுவை பிறந்தது; என்னை? சிறு சொற் சொல்லுதலென்பது, புகழ்கொன்றுரைத்தலாகலின்.

"செய்தவ றில்வழி யாங்குச் [3]சினவுவாய்." (கலி—அஎ)

என்பது, ஊடற்கண் [4] தலைமகள் வெகுட்சி கூறியது. பிறவு மன்ன.

இன்னும் அவ்விலேசானே,

"நெருப்புச் சினந்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை." (புற—கஉடு)

---

1. நேற்றுப் பகல் நீ யெறிந்தவனுடைய தம்பி, தமது குடியி லுள்ள தலையனைக் கொன்றமையின் குன்றிபோலச் சிவந்து சுழலுங் கண்ணனாயினன் என்றமையின் இது குடிகோள்பற்றி வந்த வெகுளி. குன்றி—குன்றுமணி. அகல்—மண்ணுலாயினும் உலோகங்களினுலாயினுஞ் செய்யப்படும் ஒருவகைச் சிறிய பாத்திரம். அது கண்ணின்வடிவிற் குவமை.

2. வரிவயம்—வரி பொருந்திய புலி.

3. சினவல்—வெகுளல்.

4. தலைமகள் வெகுட்சி—ஆரும் வேற்றுமைத்தொகை.

என்றுற்போலச் சினமில்லதனை உள்ளதுபோலக் கூறுவனவுங் கொள்ளாமோவெனின், உணர்வுடையனவற்றுக் கல்லது சுவை தோன்றுமையின் வெகுளியென்று ஈண்டுக் கூறப்படாவென்பது. [1] இது பிறன்கட் டோன்றிய பொருள்பற்றி வரும். (கo)

[உவகைச்சுவை இத்துணையது எனல்]

உருக. செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்ல னீத்த வுவகை நான்கே.

இஃது, ஈற்றுக்கண்ணின்ற [2] உவகை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: செல்வமென்பது, நுகர்ச்சி; புலனென்பது, கல்விப் பயனாகிய அறிவுடைமை; புணர்வென்பது, காமப்புணர்ச்சி முதலாயின; விளையாட்டென்பது, 'யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதன்' (ககக) முதலாயின. இவை நான்கும் பொருளாக உவகைச்சுவை தோன்றும் என்றவாறு.

உவகையெனினும் மகிழ்ச்சியெனினும் ஒக்கும்.

"உரனுடை யுள்ளத்தை செய்பொருண் முற்றிய
வளமையா னுகும் பொருளிது வென்பாய்." (கலி—கஉ)

என்புழி, வளமையா னுகும் மனமகிழ்ச்சி இதுவெனக் கூறினமையின், இது செல்வம் பொருளாகப் பிறந்த உவகையாம்.

"நன்கலம் பெற்ற வுவகையர்."

என்பதும் அது.

"பெண்டிர் நலம்வௌவித் தண்சாரற் [3] ருதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மகிழ." (கலி—சo)

என்பது, அறிவு பொருளாக உவகை பிறந்தது; என்னை? 'முகைப்பதம் பார்க்கும் வண்டுபோலத் தலைவியரை நகைப்பதம் பார்க்கும் அறிவுடைமை' காமத்திற்கு ஏதுவாமாகலின்.

---

1. இது—வெகுளி.

2. உவகைப் பொருள்களை "ஒத்தகாமத்தொருவனும்..... ஏக்கழுத்தம்மே" என்னுஞ் செயிற்றியனார் சூத்திரம் நோக்கியறிக. (இளம்பூரணருரை).

3. தாதுண்ணும் வண்டினென்றமையான் நகைப்பதம் பார்த்தல் பெறப்பட்டது. நகைப்பதம்—தன்னெடு நகும் பருவம்.

1 "இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பாம்—அகல்வானத்
தும்ப ருறைவார் பதி." (நால—கருஎ)

என்பதும் அது.

"இலமல ரன்ன வஞ்செந் நாவின்." (அகம்—கசஉ)

என்னும் மணிமிடை பவளத்துள்,

"தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்
வடிப்புரு நரம்பிற் றீவிய மொழிந்தே."

என்பது, புணர்ச்சிபற்றிய உவகை; என்னை? அவள் இவ்வாறு முயங்கினமையான்.

"உவவினி வாழியென் னெஞ்சே."

என்றமையின்,

"துயிலின்றி யானீந்தத் தொழுதையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னே." (கலி—நo)

என்புழி, 'ஆடி விளையாடி மயிலியலார் மருவுண்டு மறைந்தமைகுவான்மன்' என்றமையின் இது விளையாட்டுப் பொருளாக உவகை பிறந்தது. 'அல்லல் நீத்த வுவகை' என்றதனாற் பிறர் துன்பங் கண்டு வரும் உவகையும் உவகையெனப்படாதென்பது. இதுவுந் தன்கட்டோன்றிய பொருள்பற்றி வரும் என்றார்க்குப் பிறன்கட்டோன்றிய இன்பம் பற்றியும் உவகை பிறக்குமன்றே! அஃதெப்பாற்படுமெனின், அதுவும் 'அல்லல் நீத்த வுவகை' என்றதனுள் உவகையெனப்படும். இனித் தன்கட்டோன்றிய பெருமிதமும் உவகையும் முற்கூறுது, பிறன்கட்டோன்றிய அச்சம் முற்கூறி, இதனை ஈற்றுக்கண் வைத்தமையான் [2] எடுத்தோதிய நான்கும்போலாது இது பிறன்கட்டோன்றிய இன்பம் [3] பொருளாக வருமென்பது கொள்க. (கசு)

---

1. கல்வியாளர் தம்முட் கூடி மகிழ்தல் அறிவுடைமைபற்றி வந்த உவகை.

2. எடுத்தோதிய நான்கு—இச் சூத்திரத்தா லெடுத்தோதிய நான்கு. இது—இவ்வுவகை.

3. பொருளாகவும் வருமென்றிருப்பது நலம். போலாது என்றது; அவை நான்கும் தன்கட்டோன்றிய பொருள்பற்றி வருவதாகலின்.

[மேற்கூறியவன்றி இவையு மெய்ப்பாடு முப்பத்திரண்டு உள எனல்]

உசு0. ஆங்கவை யொருபா லாக வொருபா
லுடைமை யின்புற னடுவுநிலை யருள
றன்மை யடக்கம் வரைத லன்பெனுக்
கைம்மிக னலிதல் சூழ்ச்சி வாழ்த்த
ணுணுத றுஞ்ச லரற்றுக் கனவெனுஅ
முனித னினைதல் வெருவுதன் மடிமை
கருத லாராய்ச்சி விரைவுயிர்ப் பெனுஅக்
கையா றிடுக்கண் பொச்சாப்புப் பொருமை
வியர்த்த லிய மிகைநடுக் கெனுஅ
விவையு முளவே யவையலங் கடையே.

இச்சூத்திரம் முற்கூறிவந்த எண்ணுன்குமன்றி இவை முப்பத்திரண்டும் அவைபோல மெய்ப்பாடெனப்படுமென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஆங்கவை ஒருபாலாக—எள்ளன் (உருஉ) முதலாக விளையாட் (உருகூ) டிறுதியாகச் சொல்லப்பட்ட முப்பத்திரண்டும் ஒரு கூறாக; ஒருபாலென்பது, இனிச் சொல்லுகின்ற ஒரு கூறென்றவாறு: பின்னர் அவற்றையெல்லாம் எண்ணி, 'இவையு முளவே யவையலங் கடையே' (உசு0) என்றுன். ஈண்டெண்ணப்பட்டவையே ஆண்டு அடங்குவனவும் உள. அப்பொருண்மைய வல்லாதவிடத்து, இவை முப்பத்திரண்டும் ஈண்டு மெய்ப்பாடெனப்படும் என்றவாறு.

இவை முப்பத்திரண்டெனத் தொகை கூறியதிலுலெனின், 'ஆங்கவை யொருபாலாக வொருபால்' என்றுலுகலின் இரு கூறெனப்படுவன [1] தம்மினுத்த எண்ணுதல் வேண்டுமாகலின், அவை முப்பத்திரண்டெனவே இவையும் முப்பத்திரண்டு என்பது [2] எண்ணி உணரவைத்தானென்பது.

உடைமையென்பது, செல்வம்; செல்வ நுகர்ச்சியாயின் உவகைப்பொருளாம்! இஃது அன்னதன்றி நுகராதே அச்செல்வந்

1. தம்மின்—தம்முள்; ஒன்றேடொன்று.
2. எண்ணியுணர—எண்ணுமுறையாக எண்ணியுணர.

தன்னை நினைந்து இன்புறுதற்கு ஏதுவாகிய பற்றுள்ளம்; அஃதாவது, [1] 'நிதிமேனின்ற மனம்' போலச் செல்வமுடைமையான் வரும் மெய் வேறுபாடு. [2] இன்புறலென்பது, அவ்வுடைமையை நினையுந்தோறும் [3] இடையிட்டுப் பிறக்கும் மனமகிழ்ச்சி. நடுவு நிலையென்பது, ஒன்பது சுவையுள் ஒன்றென நாடக நிலையுள் வேண்டப்படுஞ் சமநிலை; அஃதாவது,

[4] "செஞ்சாந் தெறியினுஞ் செத்தினும் போழினு
நெஞ்சோர்ந் தோடா நிலைமை."

அது, காம வெகுளி மயக்க நீங்கினோர் கண்ணே நிகழ்வது; இது சிறுவரவிற்றுகலான் [5] இவற்றேடு கூறினுன். அருளலென்பது, மக்கண் முதலிய சுற்றத்தாரை அருளுதல்: அஃது,

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்." (கலி-கக)

என்றுற்போல வருவது. ஆண்டைக் கருணையினை அழுகையென்றமையின் இஃது அதனை டடங்காது. தன்மையென்பது சாதித் தன்மை; அவையாவன: பார்ப்பாராயிற் [6] குந்தி மிதித்துக் குறுநடைகொண்டு வந்து தோன்றலும், அரசராயின் [7] எடுத்த கழுத்தொடும் அடுத்த மார்பொடும் நடந்து சேறலும், இடைய

1. நிதிமேல் நின்ற மனம்—பொன்னின்மேல் நின்ற மனம். மனம்போல என்றமையான் மனம் வேறுபடுதல்போல என்பது கருத்தாம். 'மரம்போல' என்னும் பாடம் பொருத்தமாகக் காணப்படவில்லை. பொருந்துமேற் கொள்க.

2. இன்புறல்—நட்டாராகிப் பிரிந்து வந்தாரைக் கண்டுழி வருவதோர் மனமகிழ்ச்சி என்பர் இளம்பூரணர்.

3. நினையுந்தோறும் என்றமையின் நினைதலும் இடையிட்டு நினைதல் என்பது பெறப்படும்.

4. சிவந்த சாந்தை அப்பினும் தன்னுடம்பைத் துணிப்பினும் பிளப்பினும் அதன்கண் மனம் அறிந்து செல்லாத நிலை என்றது சமாதி நிலையை. 'அப்பினும் துணிப்பினும்' அறியா நிலை என்றதனுல் விருப்பு வெறுப்பு அற்ற சமநிலை பெறப்படும். சமநிலை—ஒருமருங்கோடாத மன நிகழ்ச்சி என்பர் இளம்பூரணர். செத்தல்—செதுக்கலுமாம்.

5. இவற்றேடு — இம் முப்பத்திரண்டோடு.

6. குந்தி மிதித்தல்—அழுந்த மிதியாது மெல்ல மிதித்தல். 'குந்திய நடையினர்' என்பர் கம்பரும்.

7. எடுத்த கழுத்து—நிமிர்த்திய கழுத்து.

ராயிற் [1] கோற்கையுங் [2] கொடுமடியுடையும் விளித்த [3] வீளையும் வெண்பல்லுமாகித் தோன்றலுமென் றின்னோரன்ன வழக்கு நோக்கிக் கொள்க. அடக்கமென்பது, உயர்ந்தோர்முன் அடங்கி யொழுகும் ஒழுக்கம்; அவை: பணிந்த மொழியுந் தணிந்த நடையுந் [4] தாமே மடக்கலும் வாய்புதைத்தலும் முதலாயின. வரைதலென்பது, காப்பன காத்துக் கடிவன கடிந் தொழுகும் ஒழுக்கம்; அவை: பார்ப்பாராயின் முத்தீ வேட்டலும் புலவுங் கள்ளும் முதலாயின கடிதலுமென் றின்னோரன்ன கொள்க. வரைதலென்பது தொழிலாதலான் இது தன்மையெனப்படாது. அன்பென்பது அருட்கு முதலாகி மனத்தில் நிகழு நேயம். அஃ தடையார்க்குப் பிறர்கட் டுன்பங் கண்டவழிக் கண்ணீர் விழு மாதலின் அவ்வருளாமே அன்புடைமை விளங்குமென்பது. இவையெல்லாந் தத்த மனத்தி னிகழ்ச்சியை வெளிப்படுப்பன வாகலின் மெய்ப்பாடெனப்பட்டன. இனி வருகின்றனவற்றிற் கும் இஃதொக்கும். கைம்மிகலென்பது ஒழுக்கக்கேடு. அது சாதித் தருமத்தினை நீங்கினமை தன்னுள்ள நிகழ்ச்சியாமே பிறர் அறியுமாற்றால் ஒழுகுதல். நவிதலென்பது, பிறர்க்கின்னு செய்து நெருங்குதல்; அது தீவினை மாக்கட்கண் நிகழும். அவரைக்கண்டு அச்சம் எழுந்ததாயின் அஃது அச்சத்தினுள் அடங்குமாகலின் அஃதன்று இஃதென்பது. [5] சூழ்ச்சியென்பது, சுழற்சி; சூழ்வருவானைச் சுழல்வருமென்பவாகலின்; அது வெளிப்படுவதோர் குறிப்பின் அவன்கட் டோன்றலின் அதுவும் மெய்ப்பாடு; அஃதாவது மனத்தடுமாற்றம். [6] வாழ்த்தலென்பது, பிறரால் வாழ்த்தப்படுதல்; இது பிறவினையன்றோவெனின், ஒருவனை நீடு வாழ்க என்று வாழ்த்தல் பிறவினையாயினும், அவன் வாழ்விக்கப்படுதலின் அவன் அவ்வாறுகூறல் அமைபுமென்பது.

1. கோல்—மூங்கிற்றண்டு.

2. கொடு மடி—வளைந்த மடி. இக்காலத்து கொடுக்கு என் பர். இலை முதலிய இடற்கு விடும் வளைந்த மடி என்பர் அக நானூற்று முரைகாரர்.

3. வீளை—சீழ்க்கை.

4. தாமே மடக்கல்—உடையை ஒதுக்கல்.

5. சூழ்ச்சி—எண்ணம் (சிந்தித்தல்) என்பர் இளம்பூரணர்.

6. வாழ்த்தல்—வாழ்த்தப்படுதல். வாழ்த்தல் — பிறரை வாழ்த்தல் என்றும், மனநிகழ்ச்சியாதலின் மெய்ப்பாடாயிற்று என்றும் இளம்பூரணர் கூறுவர்.

நாணுதலென்பது, நாணுள்ளம் பிறர்க்கு வெளிப்பட நிகழும் நிகழ்ச்சி. துஞ்சலென்பது உறக்கம்; அது நடந்துவருகின்றான் கண்ணும் விளங்கத் தோன்றுதலின் அதுவும் மெய்ப்பாடெனப் பட்டது. அரற்றென்பது, அழுகையன்றிப் பலவுஞ் சொல்லித் தன் குறை கூறுதல்; அது, [1] 'காடுகெழு செல்விக்குப் பேய் கூறும் அல்லல்போல' வழக்கினுள்ளோர் கூறுவன. கனவென் பது, வாய் வெருவுதல்; அதனானும் அவனுள்ளத்து நிகழ்கின்ற தொன்று உண்டென்று அறியப்படும். முனிதலென்பது, வெறுத் தல்; அஃது அருளுஞ் சினமுமின்றி இடைநிகர்த்தாதல்; 'வாழ்க்கை முனிந்தான்' எனவும்,

[2] "உறையுள் முனியுமவன் செல்லு மூரே." (புறம்-கூகு)

எனவுஞ் சொல்லுபவாகலின். நினைதலென்பது, விருப்புற்று நினைத்தல்; 'நின்னை மிகவும் நினைத்தேன்' என்பது வழக் காதலின்; அந் நினைவுள்ளம் பிறர்க்குப் புலனாதலின் மெய்ப்பா டாயிற்று. வெரூஉதலென்பது, விலங்கும் புள்ளும்போல வெருவி நிகழும் உள்ள நிகழ்ச்சி; அஃது, அஞ்சவேண்டாதன கண்ட வழியும் கடிதிற் பிறந்து மாறுவதோர் வெறி. மடிமையென்பது, சோம்பு. கருதலென்பது, மறந்ததனை நினைத்தல். ஆராய்ச்சி யென்பது, ஒரு பொருளை நன்று தீதென்று ஆராய்தல். விரை வென்பது, இயற்கை வகையானன்றி ஒரு பொருட்கண் விரைவு தொழில்பட உள்ளநிகழுங் கருத்து. உயிர்ப்பென்பது, வேண் டிய பொருளைப் பெறுதவழிக் கையற வெய்திய கருத்து. அது நெட்டுயிர்ப்பிற்கு முதலாகலின் அதனையும் உயிர்ப்பென்றுணென் பது. கையறவென்பது, அவ்வுயிர்ப்புமின்றி வினையொழிந் தயர்தல். இடுக்கணென்பது, மலர்ந்த நோக்கமின்றி [3] மைய றுணக்கம்படவரும் இரக்கம். பொச்சாப்பென்பது, அற்றப்படுதல்; அஃதாவது, பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கண் யாதானும் ஓர் [4] இகழ்ச்சியான் இடையறவுபடுதல். பொறுமையென்பது, அழுக்காறு; அஃதாவது, பிறர் செல்வங் கண்டவழி வெண்டா திருத்தல். வியர்த்தலென்பது, பொறுமை முதலாயினபற்றி

1. இதனைக் கலிங்கத்துப்பரணி நோக்கியறிக.

2. உறையுள் முனியும்—உறைதலை வெறுக்கும். உறைதல்—இருத்தல்.

3. மையல்—மயக்கம்.

4. இகழ்ச்சி—சோர்வு.

மனம் புழுங்குதல். ஐயமென்பது, ஒரு பொருண்மேல் இரு [1] பொருட்டன்மை கருதிவரும் மனத் தடுமாற்றம். மிகையென் பது, கல்லாமையுஞ் செல்வமும் இளமையும் முதலாக வரும் உள்ள மிகுதி. நடுக்கமென்பது, அன்பும் அச்சமும் முதலாயின உடம்பிற் புலப்படுமாற்றான் உள்ள நடுங்குதல்; புதல்வர்க்குப் பிணி இல்வழியும் எவனுங்கொலென்று நடுங்குதல் அன்பான் நடுங்குதலாம். அச்ச மென்னுஞ் சுவை பிறந்ததன் பின்னர் அதன்வழித் தோன்றிய நடுக்கம் அச்சத்தாற்றோன்றிய நடுக்கமா மென்பது.

இவை மூப்பத்திரண்டும் மேற்கூறிய மூப்பத்திரண்டும் போல அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகி நிகழும் மெய்ப் பாடெனக் கொள்க. இவையெல்லாம் உலகவழக்காகலான் இவ் வழக்கேபற்றி நாடக வழக்குள்ளுங் கடியப்படா வென்றவாறு. மற்றிவற்றை எண்ணிய மாத்திரை யல்லது இலக்கணங் கூறு கின்றிலனுலெனின், [2] சொல்லின் முடியும் இலக்கணத்தவாகலின் சொல்லாணையினு னென்பது. உதாரணம் இக்கூறியவாற்றான் வழக்குநோக்கியுஞ் செய்யுணோக்கியுங் கண்டுணரப்படும். (கஉ)

[ஒரு தலைவனும் ஒரு தலைவியும் எதிர்ப்பட்டவழி அவ்வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சியளவும் நிகழும் மூப்பகுதி மெய்ப்பாடுகளுள் முதற்பகுதி இத்துணையது எனல்]

உசுக. புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்த னகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு தகுமுறை நான்கே யொன்றென மொழிப.

இதன்மேலெல்லாம் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகி வரும் மெய்ப்பாடு கூறினான். இனி அகத்திணையுட் பெரும்பான்மையாகி வரும் மெய்ப்பாடு கூறுவான் தொடங்கி, அவற்றுள்ளுங் களவிற்குச் சிறந்துவரும் மெய்ப்பாடு கூறுவான், ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்படடவழி அவ்வெதிர்ப்பாடு தொடங்கிப் புணர்ச்சியளவும் மூன்று பகுதியவாம் மெய்ப்பா டெனவும், புணர்ச்சிப்பின்னர்க் களவு வெளிப்படுந் துணையும் மூன்று பகுதியவாம் அவையெனவும், அவையாறும் ஓரோ

1. பொருள் தன்மை எனப் பிரிக்க

2. சொல்லின் முடியு மிலக்கணமென்றது அவ்வச் சொல் லானே அவ்வவற்றி னிலக்கண முடிந்து கிடத்தலே.

வொன்று நங்கான்கு பகுதியான் ஒன்றன்பினொன்று பிறக்கு மெனவுங் கூறுகின்றான். அவற்றுண் முதலன மூன்றினும் முன்னர்நின்ற ஒரு கூற்றினை இங்காற்பகுதித்தென்கின்றது இச்சூத்திரமென உணர்க. ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட வழிக் காண்தொழுகும் உள்ள நிகழ்ச்சி பெண்பாலதாகலாற் பெரும்பான்மையும் அவள்கண்ணே ஈண்டுக் கூறுகின்ற மெய்ப் பாடு சிறந்ததென்பது.

இ—ள்: [1] புகுமுகம் புரிதல் என்பது, ஒருவனும் ஒருத்தி யும் எதிர்ப்பட்டவழித் தன்னை அவன் நோக்குதற்கண் விரும் பும் உள்ள நிகழ்ச்சியும்; புகுதலென்பது, தலைமகன் நோக்கிய நோக்கெதிர் தான்சென்று புகுதல்; முகமென்பது அங்ஙனந் தான் புகுதற்கிடமாகிய நோக்கு; நோக்கெதிர்நோக்குதலே முக நோக்குதல் என்பவாகலின் இந்நோக்கினை முகமென்றுணென் பது. புரிதலென்பது, மேவுதல் என்றவாறு. அஃதாவது, தலை மகன் காண்டலைத் தலைமகள் வேட்டல் என்றவாறும். மற்றிது தலைமகற்கு உரித்தன்றேவெனின், அவன் தான் காண்பினல்லது தற்காண்டலே நயவான்; அது தலைமையன்றுகலினென்பது; அது,

[2] "யாரேக்குங் காலை நிலனேக்கு நோக்காக்காற் றானேக்கி மெல்ல நகும்." (குற—கஅஅச)

என வரும்.

பொறிநுதல் வியர்த்தல் என்பது, தலைமகன் தன்னை நோக் கியவழி உட்கும் நாணும் ஒருங்குவந்தடைதலின் வியர் பொறித்த நுதலளாதலும்; அது,

[3] "பெரும்புழைக் குற்றின் பிறைநுதற் பொறிவிய ருறுவளி யாற்றச் சிறுவரை நிறைவென." (அகம்—கஅ.சு)

என வரும். இம்மெய்ப்பாடுந் தலைமகற்குரித்தன்று; உட்கும் நாணும் அவற்கின்மையின்.

1. தலைவன்நோக்கெதிர் தானும்நோக்கித் தன்னைப்பார்த் தலை விரும்பல்.

2. நோக்காக்கால் தானேக்கி மெல்ல நகும் என்றதனுள் நகும் என்றதனால் தன்னை நோக்கலை விரும்பினாள் என்பது பெறப்படும்.

3. இவ்வுதாரணம் பொறிநுதல் வியர்த்தற்குணம் அவட் குண்டென்ற அத்துணைக்கே யுதாரணம்.

நகுகய மறைத்தல் என்பது, அதன்பின்னர்த் தலைமகன்கட் டோன்றிய குறிப்புக்களான் நகுதற்கேதுவாகிய நயனுடைமை மனத்திற் பிறந்தவழியும், நகாது நிற்றலும்; அது,

"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
[1] நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு." (குற-கஉஎச)

என வரும். மடமையால் தோன்றிய நகையாகலான் இது மறைத்தலுங் [2] தலைமகற்குரித்தன்று; எனவே, அவற்காயின் நகை தோன்றப்பெறுமென்பது; மற்று,

"சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டின்" (குறு-ககூக)

என்னும் பாட்டினுள் 'நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே' என நகை [3] கூறிற்றிலெனின், அங்ஙனம் மறைக்கப்பட்ட நகை தலைமகன் அறிந்தது மெய்ப்பாடாமாகலான் [4] அவ்வாறு கூறினு னெனபது.

சிதைவுபிறர்க்கின்மை என்பது, அங்ஙனம் நகுகய மறைத்த வழியும், உள்ளஞ் சிதைந்து நிறையழியுமாகலின் அச்சிதைவு புறத்தார்க்குப் புலனுகாமை நெஞ்சினை நிறுத்தலும் என்றவாறு; அது,

"அகமலி யுவகைய ளாகி முகனிகுத்
தொய்யென விறைஞ்சி யோளே." (அகம்-அசு)

எனத் தலைமகன் அறிய மெய்ப்பட்டதென்பது. இதுவுந் தலைமகற் குரித்தன்று; [5] தன்சிதைவுணர்த்தினல்லது மறைக்குந் துணைச் சிதைவின்மையின்; என்னை?

1. நகை மொக்குள் :- நகை முகிழ்ப்பு. வெளிப்படாத நகை. தனக்குண்டாய நகையைத் தலைவி நாணத்தாலும் உட்காலும் மறைத்தாளாகலின் அது பிறர்க்கு வெளிப்படாதாயிற்று. அந் நகை தலைவற்குச் சிறிது தோன்றினமையின் மெய்ப்பாடாயிற்று.

2. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலுள்ள தலைமகட்குரித் தன்று என்னும் பாடமும் அவட்காயின் என்னும் பாடமும் பொருத்தமில்லை. தலைமகற்குரித்து என்னும் பாடமும் அவற் காயின் என்னும் பாடமுமே பொருத்தம். இது, சி. வை. தாமோ தரம்பிள்ளை பதிப்பிற் பாடம்.

3. கூறிற்றிலெனின் என்றிருப்பதே நலம்.

4. அவ்வாறு கூறுதல்—மெய்ப்பாடு எனக் கூறல். கூறி னுன் என்றது இந்நூலாசிரியனை. கூறினுள் என்று பாடங் கொண்டு அவ்வாறு என்பது நக்க என்பதைச் சுட்டிற்றுக் கோடல் நலம்.

5. தலைவன் தன் மனச்சிதைவு உணர்த்தினல்லது தலைவி போல மறைக்குமளவு சிதைவு நிகழாமையின் என்றபடி. எனவே இவற்குச் சிதைவு பெரிதுண்டாகுமென்பது கருத்து.

"பெருமையு நாணு மாடூஉ மேனா" (தொல்-களவி-எ)

என்பவாகலின்.

இவை களவிற் சிறந்தனவாவதல்லது கற்பினுள் வருவன வல்ல என்றுணர்க. 'சிதைவு பிறர்க்கின்மை' எனவே, சிதைவு தலைமக னுணருமென்றுணும்.

தகுமுறை நான்கு என்பது, இங்ஙனம் ஒன்றன்பின் ஒன்று தோன்றுதற்குத் தகுமெனப்பட்ட முறையானே வந்த அந் நான்கும் என்றவாறு; ஒன்றென மொழிப—களவிற்கு முதற் கூறென்ப என்றவாறு.

இனி, இவை நான்கும் முறையானே ஒருங்குவந்த செய்யுள் வருமாறு:

"யான்றற் காண்டொறுந் தான்பெரிது மகிழாள்
வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி
மிகைவெளிப் படாது நகைமுகங் கரந்த
தன்னுத லரிவை தன்மனஞ் சிதைந்ததை
நீயறிந் திலையா னெஞ்சே
யாமறிந் தனமது வாயா குதலே." (இல-வி-ப-டுநக)

இஃது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது. இதனுள், 'தான்பெரிது மகி ழாள்' என்புழிச் சிறிது மகிழுமென்றமையான் இது புகுமுகம் புரிதலாயிற்று. 'வாணுதல் வியர்ப்ப நாணின ளிறைஞ்சி' என் பது பொறிநுதல் வியர்த்தல். 'நகைமுகங் கரந்த' என்பது நகுகய மறைத்தல். 'மிகை வெளிப்படாது' என்புழி, மேல் 'அன்ன பிறவு மவற்றொடு சிவணி' (உசூஎ) என்னும் புனனடை யாற் றழீஇயின [1] நகைமொக்குளும் பெற்றும். 'தன்மனம் சிதைந்ததை நீயறிந்திலையால்' என்பது சிதைவு பிறர்க்கின்மை. பிறவும் அன்ன. (கஉ)

[இரண்டாம்பகுதி இத்துணையது எனல்]

உசூ. கூழை விரித்தல் காதொன்று கனைத
லூழணி தைவர லுடைபெயர்த் துடுத்தலோ
டேழு நான்கே யிரண்டென மொழிப.

1. நகைமொக்குளும் நகுகய மறைத்தலில் அடங்குமென்ற படி. என்னை? புறத்தார்க்குப் புலனுகாது அரும்பிய நகையா தலின். அது தலைவற்குப் புலனுமென்றபடி.

இஃது, இரண்டாம் மெய்ப்பாடுணர்த்துதல் நுதலிற்று; என்னை? உள்ளத்துச் சிதைவறிந்த வழியன்றித் தலைமகளிடைத் தலைமகன் சென்று கையுங் காலும் மெய்யுறத்தீண்டிக் கண்ணுறு ஞுகலின், அங்ஙனஞ் சிதைவு பிறந்தது எழுவாயாகப் பின்னர்த் தலைமகன் மெய்யுற்றவழி நிகழ்ந்த உள்ளநிகழ்ச்சியை இரண் டாவதென்றுணர்த்தினானென்பது.

இ—ள்: கூழை விரித்தன் முதலாகிய நான்கும் முறை யானே இரண்டாவதெனப்படும் என்றவாறு.

இவற்றுக்குத் [1] தலைமகன் ஏதுவாவதல்லது இவைதாம் அவற்கு நிகழாவென்பது.

கூழைவிரித்தலென்பது, மெய்யு மெய்யுந் தீண்டியவழி மெல் லியன் மகளிர்க்கு வரும் வேறுபாடு நான்கனுண் முதற்கண்ண தெனப்படும்; என்னை? தன்னுள்ளத்தில் நிகழ்ந்த வேறுபாட் டினை அக்காலத்துத் தலைமகள் நிறையுடையளாதலாற் கரந் தொழுகுதற்பாலளே; அங்ஙனங் கரக்குங்கால் தன்வயத்த தாகிய உடம்புபற்றிவரும் வேறுபாட்டினைத் [2] தாங்கும்; அங் ஙனந் தாங்குங்கால் உடம்பொடு தொடர்புடையவாகி வேறுபட்ட தலைமையினது முடி உள்ள நெகிழ்ச்சியானே தன்வயத்ததன்றி ஞெகிழும்; ஆகலின் இது முற்கூறப்பட்டது. [3] பிறசுவைபற்றி யும் உலகினுண் மயிர்க்குவந்த வேறுபாட்டினைக் கூறுப; என்னை? ஒன்றன் மதுரச்சுவைக்கு அதிசயங் கூறுவார் மயிரினைச் [4] செவ்வனின்றனவென்பது [5] போலக் கொள்க. அக்கூழை

1. தலைமகன் ஏதுவாவதல்லது என்பதே பொருத்தமான பாடம். கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலுள்ள தலைமகள் என் பது பொருந்தாது, அவட்கு என்பதும் பொருந்தாது. என்னை? தலைவிகண் கூழைவிரித்தல் முதலியன நிகழ்தற்குத் தலைமகன் காரணமாவதன்றி இவை அவன்கண் நிகழா என்பது கருத்தாக லின். இக்கருத்தே பொருத்தமென்பதைப் பதினெந்தாஞ் சூத்திர விரிவுரைநோக்கி அறிக.

2. தாங்கும்—அடக்கும், மறைக்கும்.

3. பிறசுவை என்றது மதுரச்சுவையை.

4. செவ்வனிற்றல்—நேர்நிற்றல்.

5. போலக் கொள்க என்பதை, போல இதனையுங் கொள்க என விரித்துக்கொள்க. யாழிசை முதலிய மதுரச் சுவைபற்றி உடம்பு குற்சிதங்கொள்ளும், அதனால் மயிர் நேர்நிற்குமென்க. இதனை இக்காலத்து மயிர்க்கூச்செறிதல் என்ப.

[1] விரித்தற்கு ஏதுவாயினுள் இவளாகலின், அதனைச் சினைவினையா னன்றி முதல்வினையாற் கூறினானென்பது.

காதென்று கிளைதலென்பது, உறுப்பிடைப் பூட்டுறப் புனை யாது [2] பெய்து வைத்தனவாதலால், தோடு முதலாயின எளி தின் வீழ்வனவாயின; [3] மற்று [4] அவை வீழ்தற்கு ஏதுவாய நெகிழ்ச்சி நிரம்பத்தோன்றுது இடைநிகர்த்ததாதலின் ஒன்று நிற்ப வொன்று வீழ்தலென்று னென்பது. இது கூழைபோலாது, [5] ஊறுணர்வுடைய உறுப்பாகலிற் காதின் வேறுபாட்டினைக் கூழை வேறுபாட்டின்பின் வைத்தான்; என்னை? கூழையிற் காது தனக்கு [6] உறவுடைமையின்.

ஊழுணிதைவரலென்பது, அக் [7] கூழையுங் [8] தோடும் போலப் பெய்யப்படு முறைமையவாகிய வளைகளை முன்கைமேல் இறுகச் செறித்தலும் [9] விரற் செறியினைத் திருத்தலும் முத லாயின. இவை தோடுபோலச் [10] செறிவில்லன அன்மையின் அவற்றுப் பின்வைத்தான். உடைபெயர்த் துடுத்தலென்பது, உடுத்த உடையினைப் பலகாலும் அழித்துடுத்தல்; அது கழ றுடிபோலாது செறிவுடைமையின் அவ்வுடை நெகிழ்ச்சியைத் தொடி நெகிழ்ச்சிக்குப்பின் வைத்தானென்பது; மற்று,

"தொடிஞெகிழ்ந் தனவே தோள்சா யினவே." (குறு—உகூ)

எனப் பிரிவின்கண் வந்த வேறுபாட்டினை ஈண்டுக் கூறுமோ வெனின், அவை இன்னதன்பின்னர் இன்னது தோன்று

1. விரித்தல் என்பது விரிதல் என்றிருத்தல் வேண்டும். விரிதல்—சினைவினை, விரித்தல்—முதல்வினை.

2. பெய்துவைத்தல்—இட்டுவைத்தல்.

3. மற்று அசை.

4. அவை—அத்தோடு முதலியவை. நிரம்பத் தோன்றுமை யின் ஒன்று வீழ்ந்தது எனல் முடிக்க.

5. ஊறு—பரிசம்.

6. உறவு—பரிச உணர்ச்சியின் மிகுதியாலான தொடர்பு.

7. கூழை—பெய்துகட்டுவது; சொருகிக்கட்டுவது என்றபடி.

8. தோடு—காதிற் பெய்வது. அதுபற்றியே போலப் பெய் யப்படுமென்றார்.

9. விரற்செறி—மோதிரம்.

10. செறிவில்லன அன்மையின் எனவே அதிலுஞ் செறி வுடையன என்றபடி.

மென்னும் முறைமையு வல்லவாகலின் ஈண்டுக் கூறுர்; அவை,

"வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே."
(தொல்-பொ-உசூஅ)

என்புழிச் சொல்லப்படுமென்பது. இவற்றிற்குச் செய்யுள்:

"விண்ணுயர் விறல்வரைக் [1]கவாஅ ஞெருவன்
கண்ணி னேக்கிய தல்லது தண்ணென
வுரைத்தலு மில்லை மாதோ வவனே
வரைப்பாற் கடவுளு மல்ல னதற்கே
யோதி முந்துறக் காதொன்று ஞெகிழ
நிழலவிர் மணிப்பூ ணெஞ்சொடு கழலத்
துகிலும் பன்முறை நெடிதுநிமிர்ந் தனவே
நீயறி குவையதன் முதலே
யாதோ தோழியது கூறுமா றெமக்கே." (இ. வி. ப. ருசுஉ)

என்றது, தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நின்றது; இதனுள், 'ஓதி முந்துற ஞெகிழ' என்பது கூழை விரித்தல்; 'காதொன்று ஞெகிழ' என்பது காதொன்று கழீதல்; 'நிழலவிர் மணிப்பூ ணெஞ்சொடு கழல' என்பது ஊழணி தைவரல்; 'நெடிது நிமிர்ந்தன துகிலும் பன்முறை' என்பது உடைபெயர்த் துடுத்தலாயிற்று. இவை [2]பாடாண்கைக்கிளையுள் இக்காலத்துப் பயின்றன. பிறவும் அன்ன. (கச)

[மூன்றும் பகுதி இத்துணையது எனல்]

உசூசு. அல்கு றைவர லணிந்தவை திருத்த
லில்வலி யுறுத்த லிருகையு மெடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றென மொழிப.

இது, முறையானே மூன்றுவது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அல்குறைவரல் முதலாகக் கூறப்பட்டன நான்கும் மூன்றுவதெனப்படும் என்றவாறு.

மேலது உடைபெயர்த் துடுத்தலாகலான் அதன்வழித் தோன்றுவது உடை பெரிதும் ஞெகிழ்ந்து காட்டுதலாயிற்று;

1. கவாஅன்—மலைப்பக்கம்.

2. பாடாண்கைக்கிளை—ஒரு ஆண்மகனது வீரம் அழகு முதலியவற்றைப் புகழ்ந்து பாடுவது.

[1] அதனைப் பாதுகாத்தலான் அவ் [2] வற்றம் மறைக்குங் கையினை 'அல்குறைவரல்' என்றுனென்பது.

அணிந்தவை திருத்தலென்பது, [3] கடிசூத்திரமுதலாயின திருத்தல்; அஃது உடை ஞெகிழ்ச்சிபோலப் போற்றிச்செய்வ தாகலான் அதனை அல்குறைவரலின்பின் வைத்தான்.

இல்வலியுறுத்தலென்பது, புணர்ச்சியை வேண்டாதாள் போல்வதோர் வன்மை படைத்துக்கொண்டு செய்தல்; என்னை? இல்லாத வலியை மிகுத்தலென்றமையின் அப்பொருட்டாயிற்று. அல்குறைவரலும் அணிந்தவை திருத்தலுந் தன் வலியின்மை காட்டவும் வலி தோற்றிக்கொண்டு செய்வதாகலின் அதனை இல் வலியுறுத்தலென்று மூன்றுமுறைமைக்கண் வைத்தானென் பது. இனி, [4] இற்பிறத்தலான் [5] அதன் வலி தோற்றுவதெனவுஞ் சொல்லுப; அஃதாவது, [6] முற்பிறந்தவற்றிற்கு முன்னே கூறி னென்பது.

இருகையு மெடுத்தலென்பது, அங்ஙனம் [7] படைத்துக் கொண்ட வலியானுந் தடுக்கப்படாது நிறையழிதலிற் கைகள் தாமே முயங்கல் விருப்பத்தான் எழுவன போல்வதோர் குறிப்பு. இந்நான்கும் மேலனவுமெனப் பன்னிரண்டுபகுதியும் புணர்ச் சிக்குமுன் நிகழ்வனவாம்.

1. அதனை—அவ்வுடையின் சோர்வை.

2. அற்றம்—இரகசியத்தானம். அஃது "அற்றமறைத்தலோ புல்லறிவு" என்னுந் தேவர் குறளின் அடியின் உரை நோக்குக. சோர்வுமாம்.

3. கடிசூத்திரம் என்பது அரைப்பட்டிகை என்று இக் காலத்து வழங்குவதுபோலும். முதலாயின என்றதனால் மேகலை முதலியனவுங் கொள்ளப்படும்.

4. இற்பிறத்தல்—உயர்குடிப் பிறத்தல்.

5. அதன்வலி—அவ்விற்பிறப்பின்வலி. இஃது இளம்பூரணர் கருத்தாகலின் அவர் கருத்தையே ஈண்டும் பேராசிரியர் 'சொல்லுப' எனக் குறித்திருத்தல் வேண்டும். ஆதலின், இற்பிறத்தலான் அதன்வலி எனக் கண்ணழித்தலே பொருத்தமாம். ஏனைப் பாடம் சிறப்பின்று.

6. முற்பிறந்தவற்றிற்கு முன்னே கூறின் என்பதில யாதோ பிழையிருத்தல் வேண்டும்.

7. படைத்தல்—உண்டாக்கல். என்றது உள்ளதை இல்லது போலக் காட்டல்.

1‹ சொல்லிய ' என்றதனுன் இவையெல்லாஞ் சொல்லப்படுவ தல்லது, ஈண்டுச் சொல் நிகழ்தல் வேண்டிலவென்பது. எண்ணு நிலைவகையால் தொகைபெற்ற நான்கென்னும் எழுவாய்க்கு மூன் றென்பது பெயர்ப்பயனிலையாய் வந்தது. இவை நான்குந் தலைமகற்குரியவல்ல; தான் அவற்றுக்கு ஏதுவாவதல்லதென உணர்க.

" ஒதிய நுதலு நீவி யான்றன்
மாதர் மென்முலை வருடலிற் கலங்கி
யுள்ளத் துகுநர் போல வல்குலின்
ஞெகிழ்நூற் கலிங்கமொடு புகுமிட னறியாது
மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தொடுங்கவும்
யாமெடுத் தணைந்தொறுந் நாமியைத் தெழுநலி
னிம்மை யுலகந் தன்றியு நம்மை
நீளரி நெடுங்கட் பேதையொடு
கேளறிந் தனகொலிவள் வேய்மென் றோளே."

(இ. வி. ப. ருகூ)

இஃது இயற்கைப் புணர்ச்சிக்கட் டலைவன் தன்னிலையுரைத் தது. இதனுள் உடம்பும் உள்ளத்துகுவன போன்றனவென்பது அல்குறைவரல்; என்னை? 2 அவ் வேறுபாட்டானே 3 அற்றப் படுதலின்.

" அல்குலின், ஞெகிழ் 4 நூற் கலிங்கம்."

என்பது அணிந்தவை திருத்தல்; அல்குலின் யாத்த நூலிற்கு ஞெகிழ்ச்சி கூறினமையின்.

" மெலிந்தில ளாகி வலிந்துபொய்த் தொடுங்கவும்."

என்பது, இல்வலியுறுத்தல்;

---

1. சொல்லிய—இங்கே சொல்லப்பட்ட என்பது கருத்து. இவையெல்லாம் தலைவிகண் நிகழ்ந்தனவாகச் சொல்லப்படுவ தல்லது இவற்றின்கண் தலைவிக்குச் சொன்னிகழ்தல் வேண்டில வென்பது. எனவே இவை தலைவிகண் நிகழ்ந்தனவாகச் சொல்வ தல்லது இவை குறித்துத் தலைவிக்குச் சொன்னிகழ்ச்சி இல்லை என்றபடி.

2. அவ்வேறுபாடு—உடம்பின் வேறுபாடு.

3. அற்றப்படுதல்—உடை சோர்வுபடுதல். இஃது அற்றம் படுதலின் என்று மிகுந்திருக்கலாம்.

4. நூல்—ஞாண் (கயிறு). கலிங்கம்—வஸ்திரம். இக்காலத்து உடுக்கும் ' பாவாடை ' போன்றதுபோலும்.

'யாமெடுத் தணைந்தொறுந் 1தாமியைந் தெழுதல்.'

என்பது, இருகையுமெடுத்தல்; அங்ஙனம் ஒடுங்கிய வழியும் உயிர்ப்பினளல்லள்போலத் தோள்களைத் 2 தன்வயத்தவாயின என்றமையின்.

'இம்மை யுலகந் தன்றியு நம்மைக், கேளறிந்தன.'

என்றமையின், இருவர் அன்பும் எழுமையுந் தொடர்ந்த 3உழுவ லன்பெனச் சொல்லித் தன்னிலையுரைத்தானும். பிறவும் அன்ன. (கரு)

[புணர்ச்சிப்பின்னர் களவு வெளிப்படுந்துணையு நிகழும் முப்பகுதியுள் முதற்பகுதியாகும் நான்காம்பகுதி இத்துணையது எனல்]

உகூச. பாராட் டெடுத்தன் மடந்தப வுரைத்த
லீரமில் கூற்ற மேற்றலர் நாணல்
கொடுப்பவை கோட லுளப்படத் தொகைஇ
யெடுத்த நான்கே நான்கென மொழிப.

இது, நான்காம்பகுதி கூறுகின்றது.

இ—ள்: பாராட்டெடுத்தல்—புணர்ச்சி நிகழ்ந்தபின்னர்த் தலைமகளை 4 இயற்பட நினையுங் குறிப்பும்; இது பாராட்டென் னுது எடுத்தலென்றதனுல் அதனை உள்ளமெடுத்தன்மேற்கொள்க. இது தலைமகற்கும் ஒக்கும்.

மடந்தபவுரைத்தல்—விளையாடும் பருவத்து நிகழ்ந்த 5அறி மட நீங்கக் காமப்பொருட்கண்ணே சிறிது அறிவு தோன்று தலும்; உரைத்தலென்றதனுல் அக்காலத்துப் பாங்கிக்குச் சில கூற்றுமொழி கூறவும் பெறுமென்பது கொள்க. அவை 6 மேலை

1. தாமியைந் தெழுதல்—தோள்கள் தாமாக வியைந் தெழு தல் என்க. இயைதல்—ஈடுன்படல்.

2. தன்வயத்தவாதல்—தோள்கள் தாமே எழுதல்.

3. உழுவலன்பு—பேரன்பு.

4. இயல்—ஒழுக்கம்.

5. அறிமடம்—விளையாட்டையே அறியு மடமை. என்று அதனையே பற்றிநிற்கும் அறிவுடையளாதலின்.

6. மேலையோத்து—களவு கற்பு முதலியன. ஆண்டுக் காட் டிய சூத்திர உதாரணங்களுள் தோழிக்கு அறிமடம் நீங்க உரைத்தமை காண்க என்றபடி.

யோத்துக்களுட் கூறப்பட்டன. மடந்தை வுரைத்தற்கு ஏது வாகிய கருத்து ஈண்டு மெய்ப்பாடெனப்படும்.

ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல்—அங்ஙனம் அறிமடங் கெடச் சொற்பிறந்தவழி இன்றளவுந் தமராற் கூறப்படாத கடுஞ்சொல் உளவாமன்றே, அவற்றை முனியாது ஏற்றுக் கொண்டு புறத்தார்க்கு இது புலனுங்கொலென்று நாணுதலும்.

கொடுப்பவை கோடல்—தலைமகனுற் கொடுக்கப்பட்ட தழை யுங் கோதையுந் தாருங் கண்ணியுந் தோண்மாலையு முதலாயின கொண்டு கையுறை பாராட்டுதலும்; உளப்படத் தொகைஇ எடுத்த நான்கே நான்கென மொழிப—கொடுப்பவை கோட லகப்படத் தொகுத்தோதிய நான்கும் நான்காவது என்றவாறு.

'எடுத்த' என்றதனாற் கொடுப்பவை கொள்ளாது [1] மறுத் தன் முதலியனவுங் கொள்க.

புணர்ச்சிப்பின்னரல்லது பாராட்டுள்ளம் பிறவாமையானும், அதன்பின்னரல்லது பிறரொடு கூற்று நிகழாமையானும், அக் கூற்றுக்கேட்டல்லது தமரான் [2] ஈரமில் கூற்றங் கோட்லின்மை யானும், அவையெல்லாம் முடிந்தவழித் தலைவன்மேற் சென்ற உள்ளத்தாற் கொடுப்பவை கோடற்குறிப்பினளா மாகலானும் அம்முறையான் வைத்தானென்பது. இவற்றுக்குச் செய்யுள்,

> "ஒருநாள் வந்து பலநாள் வருத்து
> நின்னையே போலுநின் றழையே யென்வயி
> னிற்பா ராட்டியுஞ் சொற்கொள வின்றியும்
> யாயெதிர் கழறலிற் போலர் நாணியு
> மயல்கூர் மாதர்க்குத் துயர்மருந் தாயினு
> நோய்செய் தன்றும் றானே
> நீதொடக் கரிதவி னோரிடத் தானே." (இ. வி. ப. ருஉ)

இது கையுறை மறுத்தது; இதனுள் 'நிற்பாராட்டி' என் பது பாராட்டெடுத்தல், [3] 'சொற்கொளலின்றி' என்பது மடந்தை யுரைத்தல்; என்னை? கொளுத்தக்கொள்ளாதுவிடின் அது

1. கையுறை மறுத்தன் முதலியன.

2. ஈரமில் கூற்றம்—அன்பில்லா மொழி.

3. சொற்கொளலின்றி — தோழி தன்சொல்லைத் தலைவி கொள்ளுதலின்றியென்றமையினாலே, தன் மடமை நீங்கத் தலைவி சிலசொற் கூறினளென்பது பெறப்படும். அதனால் மடந்தை உரைத்தலாயிற்று.

மடனுகாமையின். 'யாயெதிர் கழறலிற் போலர் நாணி' என்பது ஈரமில் கூற்ற மேற்றலர் நாணல்; [1] 'துயர்மருந்தாயினும்' என் பது கொடுப்பவை கோடல். இத்தழை நின்கைப்பட்டவழிக் கரிந்து காட்டி நின் மெய் வெப்பங் கூறுதலின் இதனை அவள் காணின் ஆற்றுளாமெனப் [2] பின்னொருகாலத்து மறுத்தாளென் பது. (கசு)

[ஐந்தாம்பகுதி இத்துணையது எனல்]

உசுரு. **தெரிந்துடம் படுதல் நிகழ்ப்புவினை மறுத்தல்**
கரந்திடத் தொழிதல் கண்டவழி யுவத்தலொடு
பொருந்திய நான்கே யைந்தென மொழிப.

இஃது, ஐந்தாங்காலத்து மெய்ப்பாடுணர்த்துகின்றது.

இ—ள்: மேற்கூறிய கொடுப்பவை கோடல் நிகழ்ந்தவழி அவ்வொழுகலாறு புறத்தார்க்கெல்லாம் ஐயமாகலின் அதன் வழித் தோன்றுவது தெரிந்துடம்படுதலென்றுனென்பது.

தெரிந்துடம்படுதல்—[3] தலைமகனைத் தலைமகள் இவ்வொழுக லாறு நிகழ்ந்தவாற்றைப் [4] பட்டாங்குணராதார் [5] தலைமை செய் தன ளிவளெனவும், தகாத வொழுக்கின ளிவளெனவும் பல்லாற் றானும் இவள்கண்ணே [6] ஏதமிட்டுத் [7] துணிந்தும் துணியாதும் உரைப்பாராகலான் அதற்கு நாணி, இனி யாதுகொல்லோ செயற்பாலதென்று ஆராய்ந்து, இவ்வொழுகலாற்றினை அறிவிப் பேங்கொல் அறிவியேங்கொல்லெனத் தடுமாறிப், பின்னொருவகை யான் ஆராய்ந்து முழுவதாவுஞ் சொல்லாது தன் குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் பெண்டன்மைக்கும் ஏற்றவகையான் வேண்டு

1. துயர்மருந்தென்றதனால் அவள் கொள்ளத்தக்கது என் பது பெறப்படும்.

2. பின்னொருகாலத்து மறுத்தாள் என்பது பின்னொருகால் அதனை மறுத்தாள் என்றிருப்பது நலம்.

3. தலைமகனெடு என்றும் பாடமுளது. அதுவே பொருத் தம். தலைமகள் என்பதும் தலைமகளிடை என்றிருத்தல் வேண்டும்.

4. பட்டாங்கு—உண்மை.

5. தலைமைசெய்தல்—தன்னெண்ணங்கொண்டு நடத்தல்.

6. ஏதமிட்டு—குற்றமேற்றி.

7. துணிந்தும் துணியாதும்: அவள் ஏதத்தை (களவினை)த் துணிந்தும் துணியாதும்.

வன தெரிந்துகொண்டு, இன்னவாறு [1] பட்டதென்று தோழிக்கு உடம்படுதலுந் தோழியாற் செவிலிக்கு உடம்படுதலுமென இன்னோரன்ன [2] குறிப்பினைத் தெரிந்து உடன்படுதலும்.

கிளைப்புவினை மறுத்தல்—அங்ஙனம் தமர்க்குத் தானுடம் பட்டதன்பின்னர்த் தலைமகனொடு பகலு மிரவும் பண்டு கிளைத்த வாறு கிளைத்தலை அச்சமு நாணு மடனுங் காரணமாக மறுத் தலும்; உடம்பாட்டின் பின்னர் மறுக்குமாதலின் அதனைத் [3] கிளைப்புவினை மறுத்தலென்று இரண்டாவது வைத்தானென் பது.

கரந்திடத்தொழிதல்—அக்காலத்து இற்செறிக்கப்படுதலால் தான் அவனை மறுத்த ஏதத்திற்கு நாணியும் அஞ்சியும் அவற்கு வெளிப்படாதொழுகுதலை உடையளாதலும்:

[4] தன்னிடத்தே தங்குதலை 'இடத்தொழிதல்' என்றான்.

கண்டவழியுவத்தல்—அங்ஙனம் கரந்தொழுகும் காலத்து அவனை ஒரு [5] ஞான்று கண்டவழிக் கழியுவகைமீதூர்தலும். இது தலைமகற்கும் உரித்து.

[6] பொருந்திய நான்கே ஐந்தென மொழிப—இவை நான்கும் ஐந்தாங் கூறெனப்படும் என்றவாறு.

'பொருந்திய நான்கு' என்றது, இவை இடையறவின்றி ஒருங்கு தொடர்தலுமுடையவென்பது. இதனானே இவை [7] நந்

1. பட்டது—நிகழ்ந்தது.

2. குறிப்பு-சொல்லவேண்டிய குறிப்பு. தெரிந்து-ஆராய்ந்து. உடன்படல்-அறத்தொடு நிற்றல்.

3. கிளைப்புவினை—கூட்டம்.

4. தன் இடம்—தனக்குரிய இடம்.

5. ஞான்று—நாள்.

6. பொருந்திய நான்கு—தம்முட்டாம் இயைபுடைய நான்கு. இடையறவு—இடைவிடல். ஒவ்வொரு கூறுகச் செய்யப்பட்ட நந்நான்கும் தம்முட்டா மியைபுடைய என்பான் பொருந்திய நான்கென்றான் என்பது பொருந்திய நான்கு என்பது சிங்க நோக்காக முன்னும் பின்னும் இயையுமென்க.

7. இவை நந்நான்கு என்றது முற்கூறிய நான்கன் கூட்டங் களையுஞ் சேர்த்துக் கூறியதாகும்.

நான்கினோடு [1] வருகின்றதற்குச் சிறிது இடையறவும்படு மென்பது கொள்க.

புகுமுகம் புரிதன் முதலாயின நான்குந் தலைமகளனவேயாகி ஒரினத்தவாயின. அவற்றுப் பின்னர்த் தலைமகன் அவளைப் பொருந்தியவழிக் கூழை விரித்தன் முதலாயின நான்கும் நிகழ்ந் தமையின் அவையும் அவற்றோடு சிறிது இடையறவுபட்டன. அல்குறைவரன் முதலாயின நான்கும் புணர்ச்சிக்கு மிகவும் இயைபுடைமையின் மேலவற்றோடொன்றாது வேறாயின. பாராட் டெடுத்தன் முதலாயின புணர்ந்து நீங்கியபின் நிகழ்ந்தமையின் அவையும் அவற்றிற் சிறிது வேற்றுமையுடைய. தெரிந்துடம் படுதன் முதலாயின களவு வெளிப்படுத்தற் குறிப்பினவாகலின் மேலனவற்றோடு தழுவாது வேறாயினவென்பது. இவற்றோடும் வருகின்ற நான்கன் வேறுபாடு ஆண்டுச் சொல்லுதும். அவ்வாறு நோக்கியன்றே இவ்வாறு சூத்திரப் பொருளினையும் இருபத்து நான்காக உடனைதாது வேறுபடுத்தோதிய கருத்தென்பது. இங்ஙனம் பொருத்தமின்றி வருவனவல்ல நந்நான்கு பகுதியாற் கூறியவை தம்முட்டாமென்பான் 'பொருந்திய நான்கு' என்றனென்பது. இவற்றுக்குச் செய்யுள்:—

> "அறியாய் கொல்லோ நீயே தெறுவர
> நோக்குநோறும் பனிக்கு நெஞ்சமொ டிவளே
> யாய்க்கறி வுறுவி னின்னெதிர் நாணி
> மனைவயிற் பிரியலண் மன்னே யதற்கே
> நினைவில ளிவளென வுரைத்தி
> புனைதார் மார்ப காண்டியோ வதுவோ." (இ. வி. ப. ருகூ)

என்பது, பகற்குறிக்கட் டலைமகளை இடத்துய்த்து வந்து தலை மகனை எதிர்ப்பட்டு நின்று தோழி வரைவு கடாயது. இதனுள் 'யாய்க்கறி வுறுவின்' என்பது, தெரிந்துடம்படுதலென்பது; என்னை? அவள் நோக்குதோறும் [2] பனித்தலென் றறிவுறுத்தா னென்றமையின். 'நின்னெதிர் நாணி' என்பது, கிளைப்பு வினைமறுத்தல்; என்னை? தமர்க்கு மறைத்தாள் இம்மறையினை

---

1. வருகின்றதற்கு என்றது நான்கு நான்காகக் கூறிய ஒவ் வொன்றற்கும் பின் வருவன. அது பின்னர்ப் பேராசிரியரால் விளக்கப்படுகின்றது.

2. பனித்தலென் றறிவுறுத்தாள் என்பது பனித்தலின் அறி வுறுத்தாள் என்றும் பாடமுள்ளது. அதுவே பொருத்தம்; என்னை? பனித்தல் அறிவுறுத்தற்கேதுவாகலின்.

யென்று தலைமகன் குறிக்குமென ஈணி எதிர்ப்படாமையின். 'மனைவயிற் பிரியலள்' என்பது கரந்திடத்தொழிதல். 'புனை தார் மார்ப காண்டியோ வதுவே' என்பது, கண்டவழி உவத்தல்; என்னை? நிற்கண்டவழி நகுதலுந் தோளும் பசலை நீங்கிய வாறு கண்டிலையோ வென்னுங் [1] குறிப்பினைற் [2] கூறினமையின். பிறவும் அன்ன. (கஎ)

[ஆரும்பகுதி இத்துணையது எனல்]

உகசு. **புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்**
கலங்கி மொழிதல் கையற வுரைத்தலொடு
புலம்பிய நான்கே யாறென மொழிப.

இஃது ஆருவது கூறுகின்றது.

இ—ள்: புறஞ்செயச் சிதைதல்—பூவுஞ் சாந்தும் பூணுங் துகிலும் முதலாயின கொண்டு [3] புறத்தே கோலஞ்செய்ய அகத்தே சிதைவுண்டாதலும்:

மேல்நின்றது கண்டவழி உவத்தலாகலானும், இது [4] காணுதவழி நிகழ்கின்றதாகலானும், அதற்கினமின்றியும் அதன்வழித் தோன்றியதெனப்படுமாகலான் இதனை இச்சூத்திரத்தின்முன் வைத்தானென்பது.

புலம்பித் தோன்றல்—அங்ஙனம் புனைந்தகோலம் [5] துணையொடு கழியப் பெருமையிற் புல்லென்றழிந்த நெஞ்சினளாகலான், எல்லாச் சுற்றத்தார்க்கும் இடைநின்றேயுங் [6] தனிய ளென்பது அறிவியா நிற்றலும்.

---

1. குறிப்பு—உவகையையுணர்த்துங் குறிப்பு.
2. கூறியது தோழி என்க.
3. புறத்தே கோலஞ்செய்வோர்—செவிலி முதலாயினோர். அகத்தே தலைவிக்குச் சிதைவுண்டாயதற்குக் காரணம் அக் கோலத்தைத் தலைவன் காண்டலை நினைத்தமை என்க.
4. காணுதவழி—தலைவனைக் காணுத வழி.
5. துணை—தலைவன். கழிய—காலங்கழிய.
6. தனிமை—தலைவன்பால் அறிவு கிடந்தமையானுண்டாயது. எனவே சுற்றத்தாரிடை நின்றும் அவரிடை நில்லாதவள் போல அவரை மறந்து நிற்றல்.

கலங்கி மொழிதல்—கையொடுபட்ட கள்வரைப்போலச் சொல்லுவனவற்றைத் தடுமாற்றந் தோன்றச் சொல்லுதலும்; அஃதாவது, தன்மனத்து நிகழாநின்றன தன்னையறியாமற் சில புலப்படச் சொல்லுதலாயிற்று.

கையறவுரைத்தல்—கலங்காது சொல்லுங்காற் செயலறவு தோன்றச் சொல்லுதலும்; அஃதாவது, [1] வன்புறை யெதிரழிந்து சொல்லுவனபோல்வன. புலம்பிய நான்கே ஆறென மொழிப—இவை நான்குந் தனிமை விகற்பமாகிய ஆறுங்கூற்று என்றவாறு.

கையறவுரைத்தலென்பதனை ஈற்றுக்கண் வைத்தான் களவொழுக்கத்தினுள் [2] இதனினுங்கு மெய்ப்பாடு கூறப்படாதென்றற்கு. என்னை காரணமெனின், கையறவுரை தோன்றிய தற்பின்னர் நிகழ்வன கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் மெய்ப்பாடாவதன்றி [3] நற்காமத்துக்கு ஆகாவென்பது கருத்து; என்னை? [4] கையறவுரைத்தலென்பது 'சொல்லாமரபினவற்றொடு கெழீஇச், செய்யா மரபிற் றொழிற்படத் தடக்குதலே' (ககசு) எல்லியாகவுடைமையின், அதனினும் இறப்பத் தோன்றுவன [5] மன்றத்திருந்த சான்றவரறியத் தன் துணைவன் பெயரும்பெற்றியுங் கூறி அழுதும் அரற்றியும் பொழுதொடு புலம்பியும் புள்ளொடு சொல்லியுங் நிகழும் மெய்ப்பாடாகலான், அவை 'நடுவணைந்திணை' எனப்பட்ட நற்காமத்திற்கு இலக்கணவகையான் ஏலாவாகலினென்பது.

கையறவு உரைத்தலென்றதனான் இம் மெய்ப்பாடு மனத்தளவேயன்றி [6] மாற்றத்தானும் பிறர்க்குப் புலனாக வெளிப்படு மென்பது கொள்க.

---

1. வன்புறை—வற்புறுத்தல். எதிரழிந்து கூறல்—தோழி வற்புறுத்துவழி ஆளாது வுதிரழிந்து சொல்லல்.
2. இதனினுங்கு—இதனின் மேற்பட.
3. நற்காமம்—அன்புடைக்காமம்.
4. கையறவுரைத்தல் என்பது உடைமையின் இறப்பத் தோன்றுவன மெய்ப்பாடாகலான் அவை ஏலா என இயைக்க. உடைமையின் ஏலா என முடியும்.
5. மன்றத்திருந்த சான்றவரறியக் கூறுவதை, கலி. கசஉ-ம் செய்யுள் நோக்கி யறிக.
6. மாற்றம்—சொல்.

இவை எல்லாம் முறையானே நிகழ்ந்தமைநோக்கி [1] யாழோர் கூட்டத்தினைத் தொன்மையுங் (நுசகூ) தோலும் (நுநம) போலப் [2] பொருட்டொடர் நிலையாக்கி உரைப்பாருமுளர். அஃது ஆகாமைக்குக் காரணங் களனியலுட் (கமக) கூறினுமென்பது. இவற்றுக்குச் செய்யுள் :

"இவளே,
அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇப்
பல்கிளை நாப்ப ணில்கிளை போல
மொழிவகை யறியாள் பொழிகண் ணீர்துடைத்
தியானே கையற வலம்வரும்
கூகுய் பெருமழிற் றேறு மாறே." (இ. வி. ப. நுகடு)

என்பது, வரைவுகடாயது; இதனுள் 'அணியினும் பூசினும் பிணியுழந் தசைஇ' என்பது புறஞ்செயச் சிதைதல். 'பல்கிளை நாப்ப ணில்கிளை போல' என்பது புலம்பித் தோன்றல். 'மொழி வகை யறியாள்' என்பது கலங்கி மொழிதல். 'யானே கையற [3] வலம்வரும்' என்பது கையறவுரைத்தல்; என்னை? தன் கண் ணீர்துடைத்தலும் ஆற்றுளென்றமையின். பிறவும் அன்ன. (கஅ)

[மேற்கூறியவும் பிறவும் நடுவணைந்திணைக் காமவொழுக்கத்துக்குக் காரணம் எனல்]

உகஎ. **அன்ன பிறவு மவற்றொடு சிவணி**
மன்னிய வினைய நிமித்த மென்ப.

இது மேலனவற்றுக்கு ஓர் புறனடை.

இ—ள்: அன்ன பிறவும்—மேற்சொல்லப்பட்ட இருபத்து நான்கு மெய்ப்பாடு போல்வன பிறவும், அவற்றொடு சிவணி—அவற்றின் வேறன்றி அவை தம்முட் பகுதியாகி வருவன பிற வும், மன்னிய வினைய நிமித்தம் என்ப—நிலைபெறத் தோன்றுங் காமவொழுக்கத்து நிமித்தமென்று சொல்லுவர் புலவர் என்ற வாறு.

---

1. யாழோர் கூட்டம்—கந்தருவ மணம். யாழோர் கூட்டத் தினை என்ற பாடமே பொருத்தமாதல் காண்க.

2. பொருட்டொடர்நிலை என்பது கோவையென்னும் பிரபந் தத்தைக் குறித்தபோலும்.

3. அலம்வரல்—சுழற்றியுறல்.

'மன்னிய [1] வினைய' என்பது நடுவணைந்திணைக்கே புரிய மெய்ப்பாட்டினவை என்றவாறு; என்னை? கந்தருவ வழக்க மல் லனவற்றை மன்னிய காம மென்னுரன்றே, [2] அஃது இடையறவு படாதாகலின். எனவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் வரை யறையின்றி வேண்டியவாறு வரப்பெறுமென்பதாம்; அவை [3] மன்னிய வினையல்லாமையின்; என்னை? 'காமஞ் சாலா விளமை யோள்வயி—னேமஞ் சாலா விடும்பை யெய்துகலும்' (நும) நாற்பத்தெட்டியாண்டையாவினுடு பன்னீராட்டையாள் கூட்டஞ் சொல்லுகலும் ஒக்க காமமெனப்படா வாகலி னென்பது. இவ் வாறு கூறவே, கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் இவை வைத்த முறையான் வரையறுத்துக் கூறப்படாவினவும், அவை வருவன வந்துழிக் கொள்ளப்படுமென்பதும் பெற்றும். இது [4] புல் னெறி வழக்கமல்லாத கந்தருவ மணத்திற்கும் ஒக்கும்.

'அன்ன பிறவு மவற்றொடு சிவணி' (உகஎ) வருவன யாவையெனின், புகுமுகம் புரிதற்கட் டலைமகன் நோக்கியவழி ஒரு வல்லிப் பொதும்பரானும் மற்றொன்றனுஞ் சார்புபெற்று மறைதலும் அவையில்லாதவழி இடர்ப்படுதலு மென்றற் போல்வன புகுமுகம் புரிதலையடங்கும்.

நகுநயமறைக்குங்கால் தலைமகன்கட்டோன்றிய நகை முத லாகிய குறிப் பேதுவாக, நகை தோன்றியதனை மறைக்குங்கால் [5] இகழ் மொக்குளுள் தோன்றுவது நகையெனப்படாது, நகு நய மறைத்தலின்பாற் படுமென்பது.

இனிச் சிலவு பிறர்க்கின்மையின் கண்ணும்,

"நாட்ட மிரண்டு மறிவுடம் படுத்தற்
கூட்டி யுரைக்குங் குறிப்புரை யாதும்."

1. வினை—காம ஒழுக்கம்; வினைய நிமித்தம்—காமஒழுக்கத் திற்குரிய நிமித்தங்கள். நிமித்தம்—வருவன மெய்ப்பாடுகள்.

2. அஃது—கந்தருவ ஒழுக்கமாகிய அஃது. இடையறவு பட்டமை—அன்பு இடையில் அற்றுப்போகாமை. எனவே ஏனைய இடையறவு படும் என்றவாறு.

3. மன்னியவினை—அன்பு நிலைபெற்ற காம ஒழுக்கம். எனவே ஒத்தகாமம் என்றவாறு.

4. புலனெறி வழக்கம்—செய்யுள் வழக்கம். அஃது அல்லாத கந்தருவமணம்—உலகியலான கந்தருவ மணம்.

5. இதழ் மொக்குளுட்டோன்றுவது—உதட்டினுட் டோன் றுவது. என்றது இதழ்க்குவிவுட் டோன்றுவது என்றபடி.

என்றமையாற் கண்ணின் வேறுபாடுளவாமன்றே, அவை சிறைவு பிறர்க்கறிவிக்குமாயினும் ஆண்டுத் தானது மறைத்தானென்னுங் கருத்தினளாகலின் அதுவுஞ் சிறைவு பிறர்க்கின்மையாமென்பது; அவை யாவையெனின், [1] அமர்த்து நோக்காது அலமர நோக்குதலும் [2] நிலங் கிளைத்தலும் போல்வன.

மற்றுப் பொறிநுதல் வியர்த்தற்குப் புறனடையாற் கொள்வன யாவையெனின்,—புறனடையாற் கோடல் [3] ஆணையன்றுகலான் [4] உள்ளனவற்றிற்குக் கொண்டொழிக வென்றவாறு. ஒழிந்தனவற்றிற்கும் இவ்வாறே வருவன அறிந்து அடக்கங் கூறுக.

மற்றும், 'பிறவு மவற்றொடு சிவணி' எனவே, மேற்கூறிய வற்றொடு பொருந்த வருவன கோடுமன்றே? 'அன்ன' என்றதனையெனின்; அதனானே தலைமகற்குரிய மெய்ப்பாடு வேறுள வாயினுங் கொள்க. அவை [5] ஐயப்படுதலும் ஆராய்தலுந் துணிதலு முதலாயின.

மற்றுத் தலைமகட்குரிய மெய்ப்பாடுபோலத் தலைமகற் குரியனவும் இன்னமுறையனவென்று வரையறுத்துக் கூறுசோ வெனின்; அற்றன்று; தலைமகன் குறிப்புச் சிலபற்றித் தலைமகள் குறிப்புப் பல பிறக்குமாகலானும் ஐயமுதலாயின மெய்ப்பாடு காமப் புணர்ச்சிக்கு இன்றியமையாதன அன்மையானுந் தலைமகட்குரிய மெய்ப்பாடே சிறந்தனவென்று அவற்றை வரை

1. அமர்த்து நோக்கல்—விரும்பி நோக்கல். மாறுபடநோக்கல். கண்டாருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்—பேதைக் கமர்த்தவை கண் (குறள்—கூஅச) என்பதனுரை நோக்குக.

2. நிலங்கிளைத்தல்—காற் பெருவிரலால் நிலத்தைக் கிளைத்தல். கிளைத்தல்—தோண்டுதல்; கீறலுமாம்.

3. ஆணை—ஆசிரியன் கட்டளை.

4. உள்ளனவற்றிற்குக் கொண்டு எனவே, இல்லாதனவற்றிற்குக் கொள்ளவேண்டுவதில்லை என்றபடி. பொறிநுதல் வியர்த்தற்கண் அடங்குவன இல்லை. ஆதலால் உள்ளவற்றிற்கே கொள்க என்பது கருத்து.

5. ஐயம்—தலைமகளை ஐயஞ்செய்தல். ஐயம் முதலிய மூன்றும் கந்தருவ மணத்தின் முன்னிகழும் காட்சிக்குப் பின்னிகழ்வன.

யறுத்துக் கூறினனென்பது. மற்றிவற்றை 'நிமித்தம்' என்றதென்னையெனின், இவை முறையானே நிகழ்ந்து புணர்ச்சி நிகழுமாகலினென்பது. 'வினைய' என்பது ஆறும் வேற்றுமைப் பன்மையுருபு.

இம் மெய்ப்பாட்டினுட் கைக்கிளை பெருந்திணைக்கு வருவன வருமாறு:

"ஒருக்குநா மாடுங் குரவையு னம்மை
யருக்கினுள் போனெஞ்சி யல்லனெய் செய்தல்
குரூஉக்கட் கொலையேறு கொண்டோன்யா னென்னுத்
தருக்கன்றே வாயர் மகள்." (கலி. கூஅ)

எனப் புகுமுகம் புரிதல் கைக்கிளைக்கண் வந்தது.

[1] "முன்னிய முன்றுங் கைக்கிளைக் குரிப்பே." (கூஅ)

என்பதனுன் இது கைக்கிளையெனப்பட்டது. மற்றிது முல்லைத் திணைப்பாட்டன்றோவெனின், அது [2] நிலத்தான் முல்லையாயிற் றென்பது அகத்திணையியலுட் கூறினும்.

இனித் தொன்மையுந் (நுசகூ) தோலும் (நுநுஅ) முதலாயின வனப்புக்களுட் புகுமுகம் புரிதன் முதலாயின பெருந்திணைப் பொருள்பற்றி வருவன வருமாறு அறிந்துகொள்க.

மற்றிவ்விருபத்துநான்கு மெய்ப்பாடுங் கற்பினுள் இம்முறையானே வரப்பெறுவோவெனின், அதற்கு இம்முறையான் இவையனைத்தும் வரல் வேண்டுவதின்மையிற் களவிற்கே விதந்து கூறினனென்பது. அஃதென்னெனின், 'பல்பொருட் கேற்பின் நல்லது கோடல்' (கூகுரு) என்னும் உத்திவகை.

இனிக் கற்பினுள் வருவன வருமாறு:

"இனிதெனக் கனவு மண்டனி
[3] நுண்ணிதின் மகிழ்ந்தன்று நெஞ்சுதான் முகனே." (குறு. கருஎ)

என்பதனுள், நகுநய பறைதல் வந்தது.

1. முன்னிய மூன்று—ஆசுரம், இராக்கதம், பைசாசம்.

2. நிலத்தான் முல்லையெனவே ஒழுக்கத்தாற் கைக்கிளை என்றபடி. ஏறும், ஆயரும் முல்லைக் கருப்பொருள்கள். குரவையாடல் அந்நிலத்தார் தொழில்.

3. நுண்ணிதின் மகிழ்ந்தன்று என்றதனுல் நகுநயம் மறைத்தலாயிற்று. நுண்மை—நுட்பம்.

"மாளமறந் துள்ளா நாவிலிக் கிப்போர்
[1] புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்பா விடேஎ மெனநெருஞ்சிற் றப்பினே
னென்றடி சேர்த்தலு முண்டு." (கலி. அசு)

இதனுட், சிதைவு பிறர்க்கின்மை வந்தவாறு; ஒழிந்தனவும் அன்ன.

[2] "நோய்சேர்ந்த நிறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்வினைப் வாராமற் பெறுகற்பின்." (கலி. எஎ)

என்பது, [3] மடந்தபவுரைத்தல். இவையெல்லாங் கற்பின்கண் வந்தன.

"அன்னை சொல்லு முய்க மென்னதூஉ
மீரஞ்சேரா வியல்பிற் பொய்ம்மொழிச்
சேரியம் பெண்டிர் கௌவையு மொழிகம்." (அகம். கூடு)

என்பதோவெனின், அது [4] 'பாராட்டெடுத்தல், மடந்தபவுரைத்தல்' (உசுஎ) என்புழி அடங்குமென்பது. (ககூ)

[மேற்கூறிய நிமித்தங்களின்றியும் புணர்ச்சி நிகழும் எனல்]

உசுஅ. வினையுயிர் மெலிவிடத் தின்மையு முரித்தே.

இது, மேலனவற்றுக்கோர் ஆவோதார் விதி கூறுகின்றது.

இ—ள்: 'மன்னிய வினைய' (உசுஎ) எனப்பட்ட புணர்ச்சி மேல் அறுவகையான் இருபத்துநான்கெனக் கூறப்பட்ட மெய்ப்

1. புறஞ்சாய்ந்து காண்டைப்பாய் நெஞ்சே என்பது சிதைவு பிறர்க்கின்மை. என்னை? தன் நெஞ்சிற்குச் சொல்லினமையின்.

2. நோய் சேர்ந்த நிறம்—நோயை சேர்ந்த நிறம் என்பது நச்சினார்க்கினியருரை. நோநிறம் என்று பரிபாடலும் சிலப்பதி காரமும் கூறுகின்றன. சிலப்பதிகார உரையாசிரியர் நொந்த நிறம் என்பர். சிலர் நோநிறம் வேறு, நோய்நிறம் வேறு என் பர். ஆராய்ந்துணர்க. நோநிறம், பாலைப்பண் ஐந்தனுளொன்று. அது,—"தக்கராகம் நோநிறம் காந்தாரம் பஞ்சமமே, துக்கங் கழிசோக ராகமே—ரிக்கநிறம், காந்தார மென்றைந்தும் பாலைத் திறமென்றும், பூந்தா ரகத்தியனும் போந்து" என்பதனு லறியப்படும்.

3. பெண்களுக்குரிய மடமை தீர்ந்து அறிவொடு கூடிச் சொன்னதனால் மடந்தப வுரைத்தலையிற்று.

4. தலைவி உடன்போவதைநிப் பாராட்டியதனால் பாராட் டெடுத்தலுள்ளும், உய்கம் ஒழிகம் என்றதனால் மடந்தப வுரைத் தலுள்ளும் அடங்கும் என்க.

பாட்டினை அம்முறையானே நிமித்தமாகக் கொண்டு வருதலின்மை யும் உரித்தெனப்படும்; ஆற்றுமை வந்தவிடத்து என்றவாறு.

மேற்கூறிய இருபத்துநான்கினையின்மை உரித்தென்பது [1] அதிகாரத்தாற் கொள்க.

"தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப
வின்னுயிர் குழைய [2] முயங்குதொறு மெய்ம்மலிந்து
நக்கென னல்லனே யானே யெய்த்த
நோய்தணி காதலர் வரவின்
டேதில் வேலற் குலந்தமை கண்டே." (அக. உஉ)

"வனைந்துவர விளமுலை நெழுங்கப் பல்லூழ்
விளங்குநெடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னிறந்தா னின்றே." (அகம். நுஅ)

என இவை, களவியலுள் (ககக) உயிர்மெலிந்தவிடத்துப் புணர்ச்சி நிமித்தமெனக் கூறப்பட்டவையின்றியும் புணர்ச்சி நிகழ்ந்த வாறு; என்னை? முயங்குதொறு நகைதோன்றிற்றெனவே, பாராட்டெடுத்தன் முதலாயினவின்றியும் புணர்ச்சி நிகழ்ந்ததாம். ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க. இவை கண்டவழி யுவத்த லாகாவோவெனின், ஆண்டுத் தன்னுவகை கூருளன்றே [3] கரந் திடத் தொழிந்தாளாகலினென்பது.

"தண்டுளிக் கேற்ற பலவுழு செஞ்செய்
மண்போன் நெகிழ்ந்தவற் கலுழ்ந்தே
நெஞ்சறை போகிய வறிவி னேற்கே." (அகம். உசு)

என்புழி, பாராட்டெடுத்தன் முதலாகிய பன்னிரண்டு நிமித்தமு மின்றி ஆற்றுமை [4] நிமித்தமாகக் கற்பினுட் புணர்ச்சி நிகழ்ந் தது. உம்மை [5] எதிர்மறை. உயிர் மெலிவிடத்து உடைமை யுடைத்துமாம் அவ்வினையென்பது.

"[6] தொடிநெகிழ்ந் தனவே நோள்சா யினவே." (குறு. உநசு)

1. மேற்கூறிய உசு மெய்ப்பாடும் அதிகாரப்பட்டு நின்ற மையின் இன்மையுரைத்து என்பதற்கு அவை செயப்படுபொரு ளாக வருவிக்கப்படும் என்பது கருத்து.

2. முயங்குதொறு நகை தோன்றிற்றெனவே முன் னுயிர் மெலிவாகிய ஆற்றுமை யுடையளாயினுள் என்பது பெறப்படும். நோய் தணி காதலர் என்பதனானும் அது பெறப்படும்.

3. அவன் காணுதலிடத்திருத்தலின் ஆண்டு உவகை கொள்வ தன்றிக் கூருள் என்பது கருத்து.

4. நிமித்தம்—காரணம்.

5. தொடி நெகிழ்ந்தன என்பது ஊழுணி தைவரல்.

என்பதனுள், ஊழணிதைவரலென்னும் மெய்ப்பாடு வந்தது. பிறவும் அன்ன.

இனி மேற்கூறிய ஆறுமேயன்றி இன்னும் இவற்றோடு நான்கு கூட்டிப் [1] பத்தென்பாருமுளர்; அவை [2] இன்பமாதற்குரியன வன்மையின், வரையறைகூறுதொழிந்தானென்பது. (உ0)

[புணர்ச்சிக்கு நிமித்தமான வேறும் மெய்ப்பாடுகள் உள எனல்]

உசுசு. [3] **இவ்வயு முளவே யவையலங் கடையே.**

இஃது எதிரது போற்றி இறந்தது காத்தது.

இ—ள்: அவையுமுளவே—எதிர்வருகின்றனவும் உளவாவது, அவையலங்கடையே—இறந்தனவற்றுக்கு இடனல்லாத விடத்தே என்றவாறு.

இதனது கருத்து: மேற்கூறிய இருபத்துநான்குமல்லாத வழி இன்பத்தை வெறுத்தன் (உ70) முதலாக இனிக் கூறுகின்ற மெய்ப்பாடும் உளவாம் என்றவாறு. அவையல்லாத விடத்து இவையும் உளவாமெனவே, வருகின்ற மெய்ப்பாடுங் களவிற்குங் கற்பிற்கு முரியவெனவும், களவிற்கு வருங்கான்

1. பத்துக்கூறு இவை என்பதை இளம்பூரணருரையில் உசுஉ-ம் சூத்திர உரை நோக்கியறிக.

2. இன்பமாதற்குரிய வன்மையின்—நடுவணைந்திணைக்குரிய வன்மையின்.

3. அவையும் என்னும் பாடம் இவையுமென்றிருப்பதே பொருத்தம். 'அவையல்லாதவிடத்து இவையுமுள' எனப் பின்வரு முரையையு நோக்குக. அன்றியும் வருஞ் சூத்திரத்து அவதாரிகையையு நோக்குக. 'அவையு முளவே யவையலங் கடையே' என்பது இளம்பூரணர் தம்முரைக்கேற்பக் கொண்ட பாடம். அவர் இதற்குக் கொண்ட வுரையாவது:— அவையலங் கடை — நடுவணைந்திணையல்லாத கைக்கிளைப் பொருட்கண்,— அவையுமுள—மேற்சொல்லப்பட்ட புகுமுகம் புரிதன் முதலாயினவுமுள என்பது. இவ்வுரையில், அவை என்றது மேற்கூறிய மெய்ப்பாடுகளைக் குறிக்கின்றது. பேராசிரியருரையில் அவை மேல்வருஞ் சூத்திரப்பொருளைச் சுட்டுவதாகக் கொள்ளவேண்டும். மேல் வருவனவற்றை அவை என்று சுட்டல் வழக்கானன்மையின் இவை என்ற பாடமே பொருத்தம் என்க. இவை என்பது அவை என வேறுபாடுணராதோரால் திருத்தி எழுதப்பட்டது.

முதற்கூறிய இருபத்துநான்கின் பின்னுமே இவை பெரும்பான்மையான் வருமெனவும், கற்பிற்காயிற் பயின்று வருமெனவுங் கூறியவாறு. அவை இனிக் கூறுகின்றான். (உக)

[களவுக்குங் கற்பிற்குமுரிய மெய்ப்பாடுகள்]

உ70. **இன்பத்தை வெறுத்த றுன்பத்துப் புலம்ப**
லெதிர்பெய்து பரித லேத மாய்தல்
பசியட நிற்றல் பசலை பாய்த
லுண்டியிற் குறைத லுடம்புநனி சுருங்கல்
கண்டுயின் மறுத்தல் கனவொடு மயங்கல்
பொய்யாக் கோடன் மெய்யே யென்ற
லீயஞ் செய்த லவன்றம ருவத்த
லறனளித் துரைத்த லாங்குநெஞ் சழித
லெம்மெய் யாயினு மொப்புமை கோட
லொப்புவழி யுவத்த லுறுபெயர் கேட்ட
னலத்தக நாடிற் கலக்கமு மதுவே.

இது, மேல் 'இவையுமுள' (உசுசு) எனப்பட்ட மெய்ப்பாடு கூறுகின்றது.

இ—ள்: எண்ணப்பட்ட இருபதும் 'மன்னிய வினைய நிமித்தம்' (உசுள) என்பான் [1] 'நலத்தகநாடின் அதுவே' யாமென்றனென்பது. இவை புணர்ச்சிக்கு நிமித்தமாகாதனபோன்று காட்டினும் அவற்றை மிகவும் ஆராய்ந்துணரிற் புணர்ச்சிநிமித்தமேயாம் என்றவாறு.

இன்பத்தை வெறுத்தலென்பது, யாழுங் குழலும் பூவுஞ் சாந்தும் முதலாக இன்பத்திற்கேதுவாகிய பொருள் கண்டவழி அவற்றின்மேல் வெறுப்புத் தோன்றுதல். [2] அவை காமத்திற்கு ஏருவகையான் ஏதுவாகலின் 'மன்னிய வினைய நிமித்தம்' (உசுள) எனப்படுமாகலான் அவற்றை வெறுத்தல் புணர்ச்சிக் கேதுவாகாதன்றேயாயினும் அதனை ஆராய்ந்துணரின் நிமித்தமென வேண்டுமென்பான் 'நலத்தக நாடினதுவே' என்றனென்

1. நலத்தகநாடல்—நன்மைதக ஆராய்தல். நன்றுக ஆராய்தல்.

2. அவை—யாழ் குழன் முதலியன. இவை இன்பத்திற் கேதுவாய பொருள்கள்.

பது. 'கலக்கமும்' என நின்ற உம்மை மேற்கூறிய பத்தோன் பானையுந் தழுவலின் இறந்தது தழீஇயிற்றும்.

"நின்வலித்த மைவென் மன்னே வல்கற்
புன்கண் மதலையொடு பொருந்திக் கொடுங்கோற்
கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் [1] வருந்நாக் காலே." (அகம். எச)

என்புழி, இன்பத்தை வெறுத்தனளாயினும் புணர்ச்சிக் கேதுவா மென்பது கருத்து.

"மகிழ்சேர் பெண்ணை மடிவா யன்றி
நுகிணையொன்று பிரியினுந் [2] துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொண்டு [3] கரக்கு
மொண்ணுத லரிவையா னென்செய்கோ வெனவே." (அகம். நூ0)

என்பதும் அது.

துன்பத்துப் புலம்பல் என்பது பிரிவாற்றாது துன்புறுங் காலை அவ்வாற்றுமை தலைமகற்கின்றித் தானே துன்புறுகின்றா ளாகச் சொல்லுதல். அவை கூட்டத்தை வெறுத்த குறிப்பா யினும் அக்கூட்டத்திற்கே நிமித்தமாகும் ஆராய்ந்துணரி னென்றவாறு; அவை,

"நின்னுறு விழுமங் களைந்தோ
டன்னுறு விழும [4] நீந்துமோ வெனவே." அகம். (கள0)

என வரும்.

எதிர்பெய்து பரிதலென்பது, உருவுவெளிப்பாடு; அது, தலைமகனையும் அவன் தேர் முதலாயினவற்றையுந் தன்னெதிர் பெய்துகொண்டு பரிந்து கையறுதல்; அது,

"வாரா தாயினும் வருவது போலச்
செவிமுத லிசைக்கு மரவமொடு
துயின்மறந் தனவாற் றோழியென் கண்ணே." (குறு. நo0க)

---

1. வருத்தாக்கால் நீ சொன்னவாற்றை நிச்சயித்திருப்பேன்; வருத்துவதால் அவ்வாறு இருக்கமாட்டேனாயினேன் என்றமை யின் குழலை வெறுத்துக் கூறியதாயிற்று. ஆதலின் இன்பத்தை வெறுத்தலாம்.

2. துஞ்சாகாணென என்றமையான் அன்றிலிசையை வெறுத்தமை தோன்றிற்று. அது காமத்தை மிகுத்தலான் பின் புணர்ச்சிக் கேதுவாதலுங் காண்க.

3. கரக்கும்—அழித்து மறைக்கும்.

4. நீந்துமோ எனவே நீந்தமாட்டாமை பெறப்பட்டமை யின் துன்பத்துப் புலம்பலாயிற்று.

என்புழி, வாராதென்றுணர்ந்தது [1] இக்காலத்தாகலான், அதற்கு முன் [2] இன்னவாறு பட்டதன்று என்றமையின் எதிர்பெய்து பரிதலாயிற்று.

ஏதமாய்தலென்பது, கூட்டத்திற்குவரும் இடையூறுண் டென்று பலவும் ஆராய்தல்; அது, [3] நொதுமலர் வரையக் கருதுவர்கொல்லெனவும், பிரிந்தோர் மறந்து இனிவாரார்கொல் லெனவுந் தோன்றும் உள்ளநிகழ்ச்சி; அது,

"வாரார் கொல்லெனப் [4] பருவருந்
தாரார் மார்பநீ நனந்த ஞான்றே." (அகம். கநo)

என வரும்.

பகையடநிற்றலென்பது, பகை வருத்தலும் அதற்குத் தளராது உணவு மறுத்தல்.

"அன்னைப் வாழிவேண் டன்னை நின்மகள்
பாலு முண்ணாள் [5] பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி." (அகம். சஅ)

எனவும்,

"இனியான் [6] உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்." (கலி. உந)

எனவும் வரும்.

பசலை பாய்தலென்பது, பசலை பரத்தல்; அது,

"கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் பீற்பா னிலைத்துக் காஅங்
கெனக்கு மாகா [7] தென்னைக்கு முதவாது

1. இக்காலம்—வரவில்லையென்று உணர்ந்த இக்காலம் (விடியற்காலம்) என்க. பிற்காலத்தாகலான் எனவும் பாடம். அது நன்கு பொருந்தும்.

2. இன்னவாறு பட்டதன்று — இவ்வாறு வாராதென்று பட்டதன்று, வருவதுபோலவே பட்டது என்றபடி.

3. நொதுமலர்—அயலார்.

4. பருவரல்—துன்பப்படல்.

5. பழங்கண்—துன்பம்.

6. உண்ணலுஞ் செய்யேன் வாழலுஞ் செய்யேன் என்பது பொருள்.

7. என்னை—எனது தலைவன்.

பசலை யுணீஇயர் வேண்டுந்
[1]திதலை யல்கு [2]லென் மாமைக் கவினே." (குறு. உஎ)

என வரும்.

உண்டியிற் குறைதலென்பது, பசியட நிற்றலேயன்றிச் சிறிது உண்டியூட்டியவழிப் பண்டுபோலாது, கழியவுஞ் சிறி துண்டல்; அது,

[3]"தீம்பா ஞாட்டினும் வேம்பினுங் கைக்கும்
வாரா யெனினு மார்வமொடு நோக்கு
நின்னிற் சிறந்ததொன் றிலவே
யென்னினும் படாஅ லென்னிதற் படலே." (இ. வி. ப. ருந.எ)

என வரும்.

உடம்புநனி சுருங்கலென்பது, அவ்வண்மை உயிரிற்செல் லாது உடம்பிற் காட்டுதல்; அது,

"தொடிநிலை நெகிழச் [4]சாஅய்த் தோளவர்
கொடுமை கூறிய வாயினுங் கொடுமை
நல்வரை நாடற் கில்லை தோழியென்
நெஞ்சிற் பிரிந்தது மிலரே
தங்குறை நோக்குங் கடிந்தது மிலரே." (இ. வி. ப. சசுசு)

என வரும்.

கண்டுயின் மறுத்தலென்பது, இரவும் பகலுந் துஞ்சாமை; அது,

"புலர்குர லேனற் புழையுடை யொருசிறை
மலர்தார் மார்ப னின்றேற் கண்டோர்
பலர்தில் வாழி தோழி யவரு
ளாரிருட் கங்கு லணியொடு பொருந்தி
யோர்யா னுகுவ தெவன்கொ
லீர்வார் கண்ணெடு நெகிழ்தோ ளேனே." (அகம். அஉ)

என வரும்.

---

1. திதலை—தேமல்.

2. என் மாமைக் கவின் பசலையுணீயர் வேண்டும் என்பது பசலை பரத்தலைக் கருதிநின்றது. மாமை—மாந்தளிர்போலும் நிறம்; அது பசலையாலுண்ணப்படவேண்டும் என்று கூறினமை யின் பசலை பரத்தலைக் கருதியதாயிற்று.

3. தீம்பாலூட்டினும் வேம்பினும் கைக்கும் என்றமை உண வின் வெறுப்பைக்காட்டலின் உண்டியிற் குறைதல் பெறப் பட்டது. கைக்கும்—வெறுக்கும்.

4. சாய்தல் என்பது உடம்பு நனி சுருங்கலைக் காட்டிற்று.

கனவொடு மயங்கலென்பது, [1]அரிதினில் துயிலெய்திய வழித் தலைமகனைக் கனவிற் கண்டு பின்னர் அவனன்மையின் மயங்கும் மயக்கம்.

"அலந்தாங் கமையலே னென்னுனைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்." (கலி. கஉ.அ)

என்பது கனவொடு மயங்கிற்று.

பொய்யாக்கோடலென்பது, மெய்யைப் பொய்யாக்கோடல்; அது,

[2]"கனவினு னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு." (கலி. சுஅ)

எனவும்,

"வானி னிலங்கு மருவித்தே நானுற்ற
சூள்பேணின் பொய்த்தான் மலை." (கலி. சுக)

எனவும்,

"வருது மென்ற நாளும் பொய்த்தன
வரியே ருண்க ணீரு நில்லா." (அகம். கசச)

எனவும் வரும்.

[3]மெய்யேயென்றலென்பது, பொய்யை மெய்யென்று துணி தல்; அது,

"கழங்கா டாயத் தன்றுநம் மருளிய
பழங்க ணீட்டமு னலிய
[4]வழுங்கின னல்லனே [5]யயர்ந்ததன் மணனே. (அகம். சுசு)

---

1. அரிதினில் துயிலெய்தல் — அரிதாக உறங்கல். பொய் யுறக்கம்.

2. கனவினெய்திய செல்வம் பொய்யாதல்போல நின்மார்பும் பொய்யாயிற்று என்பது மெய்யைப் பொய்யாகக் கோடல். அவன் மார்பை மெய்யாகப்பெற்றும் அரிதாதல் நோக்கிக் கன வின்கண் எய்திய செல்வமாயிற்றென்பது பொய்யாக்கோடல்.

3. மெய்யேயென்றல் என்பது தன் பொய்யான கருத்தை மெய்யென்று துணிதல்.

4. அழுங்கல்—தவிர்த்தல்.

5. அயர்ந்ததன்மணன்—செய்ததன்மணம்; என்றது பரத்தை மணத்தை. பழங்கண்ணீட்டம் என்றதனானும், நலிதர என்றத னானும் பொய்யே புகுந்தான் என்று கருதினள் என்பது பெறப் படும். பழங்கணீட்டமும் என்பதும் பாடம். அதிலுள்ள உம்மை இழிவு சிறப்பு.

என்பது, தானே தன்மகனை வாயில்கொண்டு புக்கானுயினும் அதனைப் பழங்கண்ணேட்டம் முன் நவிதரப்போய்யே புகுந்தா னென்று மெய்யாகத் துணிந்து கோடலின் அப்பெயர்த்தாயிற்று.

ஐயஞ்செய்தலென்பது,

"தூதவர் விடுதரார் துறப்பார்கொ னேதக
விருங்குயி லாஅ மரோ." (கலி. ங.ங.)

என்புழி, நம்மை இம்மைப்பிறப்பினுள் துறப்பார்கொல்லென வாழாதே ஐயஞ்செய்தமையின் ஐயமாயிற்று.

[1] அவன்றம ருவத்தலென்பது :

"ஊர னூரன் போனுந்
தேரும் பாணன் றெருவி னனே." (இ வி. ப. ருங.எ)

என்பது, [2] அவன்றமரைக்கண்டு உவந்தது. இது முனிவெனப் படாதோவெனின், அது தலைமகனைப் புலந்தாற்போல்வதோர் முனிவாயினல்லது, பகைபட நிகழாக் குறிப்பெனப்படும்; அல் லாக்கால், அது பெண்டன்மையன்றுமாகலின்.

"அவர்நாட்டு, மாலைப் பெய்த மணங்கமழ் [3]குழ்நியொடு
காலை வந்த [4]காந்தண் முழுமுதன்
மெல்லிலை குழைய முயங்கஅ
மில்லுய்த்து நடுதலுங் கடியா தோட்கே." (குறு. ங.சூக)

என்பதும் அது.

அறனளித்துரைத்தலென்பது, அறக்நிழவினை அன்பு செய் தல்; அது,

"பாங்கர்ப் பல்லி படுதொறும் [5]பரவிக்
கன்றுபுரு மாலை நின்றேரு ளெய்நி.' (அகம். கூ)

என வரும்.

---

1. அவன்றமர் என்றது பாணன் முதலியோரை.

2. அவன்தமர் என்றது ஈண்டுப் பாணனை.

3. உந்நி—ஆற்று வெள்ளம்.

4. அவன் நாட்டு ஆற்றுவெள்ளத்தோடுவரும் காந்தட் கிழங்கை உவந்தமையின் அவன்றமர் உவத்தலாயிற்று. அவன் நாட்டுக் காந்தளாதலின் தமராயிற்று

5. பல்லியைப் பரவினமையின் அறனளித்துரைத்தலாயிற்று. பல்லியில் அதிட்டித்து நின்று சொன்னது தரும தெய்வமென்று கொண்டு அன்புசெய்து அதனைப் பரவினள் என்க. அதிட்டித்து நின்று சொல்லுவித்தமையின் அத்தெய்வத்தைப் பரவினள் எனினுமாம்.

ஆங்குநெஞ்சழிதலென்பது, அங்ஙனம் உரைக்குங்கால் நெஞ்சழிந்துரைத்தல்; எனவே, அறனளித்துரைத்தல் அழி வின்றென்றுமென்பது சொல்லினுனும்; அது,

"பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவேன் வந்தே னென்னெஞ்ச
மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று." (கலி. கசஎ)

எனவும் வரும்.

எம் [1] மெய்யாயினு மொப்புமை கோடலென்பது, யாதானும் ஒருபொருள் கண்டவிடத்துத் தலைமகளை டொப்புமை கோடல்; அது,

"கணைகுழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னைப்
பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே." (கலி. உ0)

என, எம்மெய்யாயினும் ஒப்புமை கொண்டவாறு. 'எம்மெய் யாயினும்' என்றமையாற் கண்டபொருளும் கேட்டபொருளும் ஒப்புமைகொள்ளப்பெறுமென்றவாறு.

ஒப்புவழியுவத்தலென்பது, ஒப்புமையுண்டாகிய வழியே உவமைகொண்டு அதனனை உவகைதோன்றுவது. எனவே, முன்னது ஒப்பின்றி ஒப்புமை கொண்டதாயிற்று; என்னை? எம்மெய்யாயினுமென்றமையின்.

"காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னுதே." (கலி. அ0)

என்பது, ஒப்புவழியுவந்தது; என்னை? [2] காமரு நோக்கினை யென்றமையின்.

"பால்கொள லின்றிப் [4]பகல்போன் முறைக்கொல்காக்
கோல்செம்மை யொத்தி பெரும [5]மற் றெவ்வாஇ." (கலி. அசு)

என வருவதனுனும் சொல்லுப.

---

1. மெய்—பொருள்.

2. காமருநோக்கு—விரும்பப்படும் அழகு. தந்தையேபோல் வான் மகனுதலின் காமருநோக்கென்றுள். பெரும என்றது மகனை. மகனைத் தந்தையொடு ஒப்புமைகண்டு உவத்தலின் ஒப்புவழியுவத்தலாயிற்று.

3. பால்கொளல்—ஒருபக்கஞ் சாய்தல.

4. பகல்—நுகத்து நடுவாணி.

5. மற்று—கோலின் செம்மையல்லாத பிறகுணம்,

உறுபெயர் கேட்டலென்பது, தலைமகன் பெரும்புகழ் கேட்டு மகிழ்தல்; அது,

"பலவின் பழத்துட்டங்கு மலைகெழு [1] வெற்பனைப்
பாடுகம் வா." (கலி. சக)

எனவும்,

"மென்றோ ணெகிழ்த்தான் [2] நிறமல்லால் யான்காணே
னன்றுதீ தென்று பிற." (கலி. கசஉ)

எனவும் வரும்.

கலக்கமென்பது, சொல்லத்தகாதன சொல்லுதல்; அது,

"அவையெனக் [3] காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே [4] மாய்ந்தான் கரந்து." (கலி. கசஉ)

எனவும்,

"பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
னறம்புணை யாகலு முண்டு." (கலி. கசச)

எனவும் வரும். 'கலக்கமு நலத்தக நாடி னதுவே' (உசo) என்ற தனால், கலக்கமென்பதனை [5] வேறு பெயர்த்து வைத்ததென்னையெனின், [6] இக்காலத்து அதனினுங்கு நிகழும் மெய்ப்பாட்டுக் குறிப்புளவல்ல தலைமகட்கென்பது அறிவித்தற்கென்பது. இன்னும் அதனானே தலைமகற்காயின் அதனினுங்கு வருவதோர் கலக்கமும் உளதாமென்றது; அவை, மடனூர்தலே வரைபாய்தலே என்றற்றொடக்கத்தன; அது,

"மாவென மடனு மூர்ப பூவினைக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னூர்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே." (குறு..கஎ)

இதனுள் சாதல் எல்லையாகக் கூறியவாறு கண்டுகொள்க.

1. வெற்பனைப் பாடுகம்வா என்றது பெயர்கேட்டு மகிழ்தலைக் குறித்து நின்றது.

2. நிறமென்றது—அவனழகு முதலியவற்றை. அதுவும் அவன் புகழ்குறித்து நின்றது.

3. காண்கு—காண்பேன்.

4 மாய்ந்தான்—மறைந்தான். கனவிலே கணவனைக் கையாற் பற்றிக்கொண்டவளாக் கண்டு பின் விழித்துப்பார்த்துக் காணுமையின் கலக்கமுற்றுள். கனவிற் காணப்பட்டுப் பின் மறைந்தான் என்றதும் முந்நீர் இறைப்பேன் என்றதுஞ் சொல்லத்தகாதன.

5. வேறு பெயர்த்து வைத்ததென்றது—முன்னியவற்றோடு ஒருங்குவைத்தெண்ணுமையை.

6. இக்காலத்து—களவுக்காலத்து.

இவ்வாறு கூறவே, இச்சூத்திரத்துளோதிய இருபது மெய்ப்பாடுந் தலைமகற்கும் ஏற்றவகையானே கொள்ளப்படுமென்பது; அது,

[1] "எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றிணைமதி வாழிய நெஞ்சே மணைமரத்
தெல்லுறு மெளவ னறும்
பல்லிருங் கூந்தல் [2] யாரளோ நமக்கே." (குறு. ககூ)

என்பது, துன்பத்துப் புலம்பலாம்; என்னை? தானே துன்புறுகின்றுணர்த் தலைமகன் உரைத்தமையின்.

"அந்திங் கிளவி யாயிழை மடந்தை
கொடுங்குழைக் கமர்ந்த நோக்க
நெடுஞ்சே ணுளைவை [3] யிலங்கு நூன்மற்று." (அகம். ங)

என்பது, எதிர்பொருது பரிதல்; என்னை? [4] முற்காலத்து எதிர்ப்பட்டமை, பிற்காலத்துச் சொல்லினமையின். ஒழிந்தனவுந் தலைமகற்குரியனவாகி வருவன வந்தவழிக் கண்டுகொள்க.

இவையெல்லாம் அறனும் பொருளுமன்றி இன்பப்பொருள் நிகழ்ந்தவிடத்து அவரவருள்ளத்து நிகழ்வனவாதல் [5] வழக்கு நோக்கி உணரப்படுமென்பது. மேற்கூறிய நகை முதலாயவற்றுக்கும் இஃது ஒக்கும். இவ்வெண்ணப்பட்டனவெல்லாம் உள்ளத்து நிகழ்ந்தனவற்றை வெளிப்படுப்பனவாகலான் மெய்ப்பாடெனப்பட்டன. மேல்வருவனவற்றுக்கும் இஃது ஒக்கும். (உஉ)

[வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள்]

உஎக. முட்டுவயிற் கழறன் முனிவுமெய்ந் நிறுத்த
லச்சத்தி னகற லவன்புணர்வு மறுத்த
றுதுமுனி வின்மை நுஞ்சிற் சோர்தல்
காதல் கைம்மிகல் கட்டுரை யின்மையென்
றுயிரு நான்கே யாரிடை கூட்டம்.

1. எவ்வி—ஒரு வள்ளல்.

2. யாரள்—எத்தன்மையள்.

3. விலங்கல்—குறுக்கிட்டுத் தடுத்தல்.

4. முற்காலத்துப் பாலைநிலத்தெதிர்ப்பட்டு வருந்தினமையைப் பின்னும் போக்குவலித்த நெஞ்சிற்குக் கூறினமையின் எதிர்பெய்து பரிதலாயிற்று.

5. வழக்கு—உலகவழக்கு.

இது [1] வரைந்தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய மெய்ப்பாடு இவை எட்டுமென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: முட்டுவயிற் கழறல்—தலைக்கூட்டத்திற்கு முட்டுப் பாடாகியவழிக் கழறியுரைத்தலும்: அது,

"நொச்சி வேலித் திந்த னுறந்தைக்
கன்முகிர் புறங்காட் டன்ன
[2] பன்முட் டின்ரும் ரேழிநங் களவே." (அகம். கஉஉ)

என்பது; இது, தலைமகன் கேட்பக் [3] கழறியுரைத்தது.

[4] முனிவுமெய்ந் நிறுத்தல்—தலைமகளுள்ளத்து வெறுப்பு வெளிப்பட நிற்கு நிலைமையும்; அது,

[5] "இன்னுயிர் கழிவ தாயினு நின்மக
ளாய்மல ருண்கட் பசலை
காம நோயெனச் செப்பா தீமே." (அகம். ருஉ)

என்புழி, [6] வாழ்க்கை முனிந்து தலைமகள் சொல்லியது.

அச்சத்தினகறல்—தலைமகன்கண்வரும் [7] ஏதமஞ்சி அவணை நீங்குங் குறிப்பும்:

"மன்றுபா டவிந்து.....மயங்கி
இன்ன மாகவு நன்னர் நெஞ்ச
மென்னெடு நின்னெடுஞ் சூழாது கைம்மிக்
கிறும்புபட் டிருளிய விட்டருஞ் சிலம்பிற்
குறுஞ்சுனைக் குவளை வண்டுபடச் சூடிக்
கான நாடன் வருஉம் யானைக்
கயிற்றுப்புறத் தன்ன கன்மிசைச் சிறுநெறி
மாரி வானந் தலைஇ நீர்வார்

1. வரைந்தெய்துங்கூட்டம்—மணச்சடங்குசெய்து புணரும் புணர்ச்சி.

2. பன்முட்டின்று—பல முட்டுப்பாட்டையுடைத்து. முட்டுப் பாடு—தடை. இது முட்டுவயிற் கழறல்.

3. கழறல்—இடித்துக்கூறல்.

4. முனிவுமெய்ந் நிறுத்தல்—தலைமகள் தன் வெறுப்பை வெளிப்படக் காட்டிநிற்றல்.

5. இன்னுயிர் கழிவதாயினுஞ் சொல்லாதீம் என்றதனால் உயிர் வாழ்க்கையை வெறுத்துக் கூறியதாயிற்று. இச்செய்யுள் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

6. வாழ்க்கை—உயிர்வாழ்க்கை.

7. ஏதம்—நீங்கு: என்றது வரும்வழியின் கட்டங்கை. நீங்கல்—பிரிந்திருத்தல்.

பிட்டருங் கண்ண படுகுழி யியவி
னிருளிடை மிதிப்புழி நோக்கியவர்
தளரடி தாங்கிய சென்ற தின்றே." (அகம். கஉ-அ)

என்னும் பாட்டினை முழுதுங் கொள்க; அதன் கருத்தாவது; நாம் அவர் இருளிடை வருத லேதமஞ்சி அகன்று [1] வலித் திருப்பவும் என்னையும் நின்னையுங் கேளாது என்னெஞ்சு போவானேனென்றவாறாயிற்று.

அவன் புணர்வு மறுத்தல்—இரவுக்குறியும் பகற்குறியும் விலக்குதற்கெழுந்த உள்ள நிகழ்ச்சியும்; [2] அது தமரையஞ்சி மறுத்தமையானும், [3] இது வரைவு [4] கடாவுதற்குக் கருத்தாகலானுந் தெளிப்பு வினைமறுத்தலோடு (உசுரு) இது வேற்றுமை யுடைத்து.

"நல்வரை நாட நீவரின்
[5] மெல்லிய லோருந் தாவ்வா முலளே." (அகம். கஉ)

என்பது, தலைமகள் குறிப்பினைத் தோழி கூறியதாகலான் அஃது அவன்புணர்வு மறுத்தலெனப்படும். இஃது 'ஒன்றித் தோன்றுந் தோழி மேன' (சுசு) என்னும் இலக்கணத்தால் தோழி குறிப்பாயினுந் தலைமகள் குறிப்பெனவே படுமென்பது கொள்க.

தூது [6] முனிவின்மை—புள்ளும் மேகமும் போல்வன கண்டு சொல்லுமின் அவர்க்கென்று தூதிரந்து பன்முறையானுஞ் சொல்லுதலும்; அவை,

"கானலுங் கழறுது கழியுங் கூறது
தேனிமிர் நறுமல்ப் புன்னையு மொழியா
தொருநின் னல்லது பிறிதுயாது மிலனே
பிரும்பூழி மலர்ந்த கண்போ னெய்தற்
கழிதற் நாற்ற மமிழ்தென நசைஇத்
தண்டா தூதிய வண்டினங் களிசிறந்து
பறவை யிளருந் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமா வல்லவை." (அகம். களஅ)

1. வலித்திருத்தல்—நெஞ்சைத் திடப்படுத்தியிருத்தல்.
2. அது—தெளிப்பு வினைமறுத்தல்.
3. இது—அவன் புணர்வு மறுத்தல்.
4. கடாவுதற் கருத்தென்றிருப்பதே பொருத்தம்.
5. 'மெல்லி யாளொரு நாவ்வா முலளே' எனவும் பாடம்.
6. முனிவின்மை—வெறுமை.
7. அலவன்—ஞண்டு.

என்புழி, கூறப்பட்டனவெல்லாங் தூதாகலின், தூதுவிடுதலே வெறுதன்மை கூறியதாம் இப்பாட்டென்பது.

"புல்லி [1] முற்றிக் கல்லிவர் வெள்வேர்
வரையிழி யருவியிற் ரோன்று நாடன்
நீதி னெஞ்சத்துக் ளெவி நம்வயின்
† வந்தன்று வாழி தோழி நாமு
[2] நெய்பெய் தீயி னெரிகொண்டு
தாமணைந் தனையமென விடுகுந் தூதே." (குறு. கoசு)

என்பதேதோவெனின், அது கற்பிற்கல்லது எலாது; என்னை? களவினுள் நெய்பெய் தீயின்வந்து எதிர்கொளலாகாமையின்.

துஞ்சிச்சேர்தல்—மனையகத்துப் பொய்த்துயிலோடு மடிந்து வைகுதலும்.

துஞ்சுதலெனினும் மடியெனினும் ஒக்கும். வேண்டியவாறு கூட்டம் நிகழப்பெறுமையின் தலைமகனொடு புலந்தாள்போல, மடிந்தொன்றுமாதலின் அதனைத் துஞ்சிச்சேர்தலென்றனென்பது; எங்ஙனமோவெனின்,

[3] "என்மலைந் தனன்கொ ரூனே தன்மலை
யார நாறு மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே." (குறு. ககூக)

என்புழி, என்னகாரியம் மேற்கொண்டுவந்தானென்றமையின் இது துஞ்சிச்சேர்தலையிற்று. அல்லாக்கால் அங்ஙனஞ் சொல்லுதல் அன்பழிவெனப்படும்.

"ஆரிடை யணிவரை." (கலி. சுஅ)

என்னுங் குறிஞ்சிப்பாட்டினுட்,

"பின்னீர்ந் வேண்டுநீ பிரிந்தோளை பொன்னீவிப்
[4] பூங்கண் படுதலு மஞ்சுவல் ரூங்கிய

1. இற்றி—ஒருமரம்.

2. நெய்பெய்தீ சுவாலித்தெரிதின் யாங்ருந் தெரியும். அது போல வெளிப்படவந்தெதிர்கொள்ளல் கற்பிற்கல்லது களவிற் கின்று என்றபடி.

3. என்மலைந்தனன்—என்னகாரிய மேற்கொண்டு வந்தான்.

4. பூங்கண்படுதலு மஞ்சுவல்—கனவிலடையுந் துயரத்தா லான கேடு மலையினும் பெரிதாகலின் கண்படுதற்கும் அஞ்சுவேன் என்பது கருத்தாகலின் இதுவுந் துஞ்சிச்சேர்தற் கருத்து ளடங்கும் என்றபடி. இது தோழி கூற்று. தலைவி கண்படுதற்கும் அஞ்சுவேன் என்றதனால் பிரிவையாற்றாது துயிலின்றி மடிந்து கிடக்கின்றுள் என்பது பெறப்படும். ஆதலிற் றுஞ்சிச்சேர்தல் ஆயிற்று.

† நயந்தன்று எனவும் பாடம்.

வருந்துயி ரவளைத் தாக்கின்
மருங்குறி வாரா மலையினும் பெரிதே."

என்னுஞ் சுரிதகமும் அது.

காதல் கைம்மிகல்—காமங் கையிகந்தவழி நிகழும் உள்ள நிகழ்ச்சியும்: அது,

"உள்ளி னுள்ளம் வேமே யுள்ளா
திருப்பினெம் மனைவைத் தன்றே வருந்தின்
வான்ரோய் வற்றே காமஞ்
சான்ரோ ரல்லர்யா மரீஇ யோரே." (குறு. கoஉ)

என வரும்.

கட்டுரையின்மை—உரைமறுத்திருத்தலும்; அதனானே அதற்குத் தோழிகண்ணுயினுந் தலைமகன்கண்ணுயினும் உரைமுறை நிகழ்வதல்லது தலைமகள் உரையாளென்பது பெற்றும்; அது,

[1] "யான்ற னறிவ ரூனறி யலளே
யாங்கா குவள்கொ ரூனே
பெருமுது செல்வ ரொருமக ளகலே." (குறு. நஅ)

என்பது, தலைமகள் கட்டுரையாதிருத்தலின், தலைமகன் தானி னெய்தல் வேண்டினமையிற் கட்டுரையின்மையின் வரைவு கடாவுதலையிற்றென்பது. ஒழிந்தனவும் அவ்வாறே வரைவுகடா தற்கு ஏற்றவாறு [2] உரையிற் கொள்க.

என்முயிருநான்கே அழிவில்கூட்டம்—என்றெண்ணப்பட்ட மெய்ப்பாடெட்டும் பின் அழியாத கூட்டத்திற்கு எதுவாம் என்றவாறு. அஃதாவது, வைத்தெய்துங் கூட்டமென உணர்க. (உங)

1. இச்செய்யுள் குறுந்தொகையுள் வேறுதுறைக்கு உதாரணமாகின்றது. பேராசிரியர் வரைவுகடாதற் கருத்தென்று கூறலின் இவர் வேறுதுறையாக்கொண்டனர்போலும். வரைவு கடாதல் என்பது வரைவு வேண்டல் என்ற கருத்துப்போலும். வரைவுகடாவல் தோழிகூற்றாகலின். இளம்பூரணரும் வரைவு வேண்டலென்று கொள்ளுகின்றார் என்று உ. வே. சாமிநாதைய ரவர்கள் தமது குறுந்தொகையுரையுட் கூறியுள்ளனர். ஆயின் வெளிவந்த இளம்பூரணர் உரையுள் அவ்வாறு காணப்படவில்லை. உரைகளையும் பின்னுள்ளார் எட்டுப்பிரதிகளில் திருத்தி எழுதியுள்ளார்கள்போலக் காணப்படுகின்றது.

2. உரை—அவ்வவ்வாக்கியம்.

[வரைந்தெய்தியபின் தலைமகள்கண் நிகழு மெய்ப்பாடுகள்]

உஎஉ. தெய்வ மஞ்சல் புரையறந் தெளிதல்
லில்லது காய்த லுள்ள துவர்த்தல்
புணர்ந்துழி யுண்மை பொழுதுமறப் பாக்க
மருண்மிக வுடைமை யின்புதொக நிற்றல்
பிரிவாற் றுமை மறைந்தவை யுரைத்தல்
புறஞ்சொன் மாணைக் களவியொடு தொகைஇச்
சிறந்த பத்துஞ் செப்பிய பொருளே.

இஃது, அழிவில்கூட்டம் நிகழ்ந்தபின்னர் வருதற்குரிய மெய்ப்பாடு இவையென்கின்றது.

இ—ள்: இவ்வெண்ணப்பட்ட பதினொன்றும் மேற்கூறிய அழிவில் கூட்டமெனப்படும் என்றவாறு.

'செப்பியபொருள்' என்பது அழிவில்கூட்டமன்றே; அதற்கு முற்படும் மெய்ப்பாடெட்டனையும் அழிவில் கூட்ட மென்றதுபோல, பிற்படும் மெய்ப்பாட்டினையும் அழிவில் கூட்ட மென்பான் மேற்கூறிய அழிவில்கூட்டமே இவையுமெனக் கூறிய வாறு. எனவே, வரைந்தெய்தியபின்னர்த் தலைமகள் மனத்து நிகழ்வன இவையென்பது கூறினனும்.

தெய்வமஞ்சலென்பது, தலைமகற்குத் தொழுகுலமாகிய தெய்வமும் அவற்கு ஆசிரியராகிய தாபதரும் இன்னோரென்பது அவனுணர்த்தப்பட்டு உணர்ந்த தலைமகள் அத்தெய்வத்தினை யஞ்சி ஒழுகுமொழுக்கம் அவள்கட்டோன்றும்; அங்ஙனம் பிறந்த உள்ளநிகழ்ச்சியைத் 'தெய்வமஞ்சல்' என்றுனென்பது. மற்றுத் தனக்குத் தெய்வந் தன் கணவனுதலான் அத்தெய்வத் தினைத் தலைமகளஞ்சுதல் எற்றுக்கெனின், அவனின் தான் வேறல்லளாக மந்திரவிதியிற் கூட்டினமையின் அவனன் அஞ்சப் படுந் தெய்வந்தனக்கும் அஞ்சப்படுமென்பது. அல்லதூஉந் தலை வற்கு [2] ஏதம் வருமெனவும் அஞ்சுவளென்பது.

"தினைவார்ச் சிறுகுரல் தினைகுளிர் தீநீரைக்
கனைகதிர்க் [3] கனலியைக் காமுற லியைவதோ." (கலி. தகு)

1. அழிவில்கூட்டம்—இடையறவுபடாத கூட்டம். என்றது கற்பினை. மனமழிவில்லாத கூட்டம் என்பர் இளம்பூரணர்.
2. ஏதம்—தீங்கு.
3. கனலி—ஞாயிறு. இது தெய்வம்.

என்பது, தெய்வத்திறநோக்கித் தெருமந்ததாம்; என்னை? [1] அவற்கிலவெனவும் அன்னமெனவுந் தாம்வேண்டிய குறை முடியாது · பிரிந்தார்மாட்டு ஏதஞ் செய்யுங்கொ லென்றஞ்சி உரைத்தவாறு.

[2] "அச்சா ருகு [3] வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னுகுவல்." (கலி. எடு)

என்பதும் அது. இது,

"ஐயர் பாங்கினு மமரர்ச் சுட்டியுஞ்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற்கண்." (கசசு)

தலைமகள் கருத்தின்கண் நிகழுங் குறிப்பென்பது.

[4] புரையறந்தெளிதலென்பது, தனக்கொத்த இல்லறம் இன்னதென்று தலைமகள் மனத்துப்படுதல்; அது,

"விரியுளைக் கலிமான் றேரொடும் வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்ப லென்றும்." (கலி. எடு)

என வரும். இஃது அவனெடு சொல்லப்படாது ஊடியிருப்பே னுயின், விருந்துகொண்டு புகுதருகும்; அதனன் ஊடலை மறப்பே னென்றமையிற் புரையறந்தெளிதலாயிற்று.

இல்லது காய்தலென்பது, களவின்கட்போலாது தலைமகற்கு இல்லாததனை உண்டாக்கிக்கொண்டு காய்தல்; அது,

"நற்றா ரகலத்துக் கோச்சார் மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள் லெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு." (கலி. கூந)

என வரும்; இது கடவுளரையே கண்டு தங்கினனுயினும், நெட் டிருங் [5] கூந்தற் கடவுளரையே கண்டாயென்று இல்லது சொல் லிக் காயுமாகலின் அப்பெயர்த்தாயிற்று.

1. அவற்கிலவெனவும், அன்னமெனவும் என்னும் பாடங் களிற் சிலதவு இருத்தல்வேண்டும். 'அவற்கிவளென வினவுவ ளென்று தாம் வேண்டிய' என்றும் பாடம். 'கேளன்கேடென்றவும் (அகம். கூந.)' என்றும், 'இல்லோர்க்கில்லெனல்' எனவும் வருத லின், 'அவற்கிவளென' என்பது 'தமர்க்கிலவென' என்றுதல், 'இரவலர்க்கிலவென' என்றுதல் இருந்திருக்கலாம்போலும்.
2. அச்சு—அச்சம்.
3. உணரிய—உணர்த்த.
4. புரைதல்—ஒத்தல்=இயைதல்.
5. கூந்தற்கடவுளென்றது—பரத்தையரை.

உள்ளதுவர்த்தலென்பது, தலைமகனுற் பெற்ற தலையளி உள்ளதேயாயினும், அதனை உண்மையென்றே தெளியாது அருவருத்துநிற்கும் உள்ளநிகழ்ச்சி; அது,

"கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்" (அகம். கஎசு)

என்னும் பாட்டினுள்,

"வேப்புநனை யன்ன நெடுங்கண் ணீர்ஞெண்
டிரைதேர் வெண்குரு கஞ்சி யயல
தொலித்த பகன்றை யிருஞ்சேற் றள்ளற்
றிதலையின் வரிப்ப வோடி விரைந்துதன்
னீர்மலி மண்ணளைச் செறியு மூர."

என்புழி, தலைமகன் வாயில்வேண்டச் சென்றானைப் [1] பிறர் கூறும் பழிக்கு வந்தாயென்றமையின் இஃது உள்ளதுவர்த்தலாயிற்று.

"பட்டுழி யறியா தாகனீத் தேரொடும்
விட் [2] டவள் வரலெதிர் [3] விருந்தேற்றுக் கொளலின்றே."
(கலி. கூக)

என்பதும் [4] அது.

புணர்ந்துழியுண்மையென்பது, முற்கூறிய இல்லது காய்தலும் உள்ளதுவர்த்தலுமாகிய [5] விகாரமின்றிப் புணர்ச்சிக் காலத்துச் [6] செய்வன சென்ற உள்ளநிகழ்ச்சி; அது,

"குளிரும் பருவத்தே யாயினுந் தென்றல்
வளிபொறியின் மெய்யிற் கவிதா — மொளியிழை
யூடி யிருப்பினு மூர னறுமேனி
கூட லினிதா மெனக்கு."
(ஐங். ஐம். கூ0)

என்பது, என்னை? புணர்ந்துழியுண்மை கூறினுள், விகாரமின்றி யாதலின்.

1. பிறர்கூறும் பழிக்கு அஞ்சிவந்தானென்றது இச் செய்யுளில் 'வெண்குருகஞ்சி' என்ற இறைச்சியாற் பெறப்பட்டது.

2. அவள்—பரத்தை.

3. விருந்தேற்றுக்கொளல்—அவள் உன்னை விருந்தாக ஏற்றுக் கொள்ள.

4. அது என்றது உள்ளதுவர்த்தலை. அவன் தன்பால்வந்த துண்மையாகவும் பரத்தை வரக்காணுமையின் வந்தாய் என்றமையின் அன்னதாயிற்று.

5. இல்லதை யுள்ளதாக்கிக் கூறலும் விகாரம். உள்ளதை இல்லதாக்கி வெறுத்துக் கூறலும் விகாரம்.

6. செய்வனசென்ற—செய்வனவற்றிற் சென்ற. செய்வன—மேனி கூடல். கரணமுமாம்.

[1] பொழுது மறுப்பாக்கமென்பது, களவின்கட் பகற்குறியும் இரவுக்குறியுமென வரையறுத்தாற்போல்வதோர் வரையறை யின்மையின் அப்பொழுதினை மறுத்தலாகிய ஆக்கமென்றவாறு; எனவே, களவுக்காலத்துப் பொழுது வரைந்துபட்ட இடர்ப் பாட்டினீங்கிய மனமகிழ்ச்சி ஆக்கமெனப்படும்; அது,

"அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர தும்புடைத் திரள்கா
லாம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவ
ளிடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் [2] பிறையிற் றோன்றி யாங்குமக்
கரியே மாகிய காலைப்
பெரிய தோன்றனிர் நோகோ யானே."
(குறு - களஅ)

என்பதனுள், தொழுதுகாண் பிறையில் தோன்றினமென்பது, களவுக்காலத்து இடையீடு பெருகிற்றெனக்கூறி அங்ஙனம் வரைந்தபொழுதினை மறுத்தகாலத்து நடுங்கலானீரென்றமையின் இஃது அப்பொருட்டாயிற்று.

அருண்மிகவுடைமையென்பது, களவுக்காலத்துப்போலத் துன்பமிகுதலின்றி, அருண்மிகத்தோன்றிய நெஞ்சினளாதல்; அது,

"நின்ற சொல்லர் நீடுதோன் [3] றினிய
ரென்று மென்றேள் பிரிபறி யலரே."
(நற்றி - க)

எனவரும்.

அன்புதொகநிற்றலென்பது, களவுக்காலத்து விரிந்த அன் பெல்லாம் இல்லறத்தின்மேற் பெருகிய விருப்பினுளே ஒருங்கு தொகநிற்றல்;

"எம்போற்—புல்லுளைக் குடுமிப் புதல்வற் பயந்து
நெல்லுடை நெடுநகர் நின்னின் றுறையுங்
[4] கன்ன கடத்தளோ மற்றே."
(அகம் - களசு)

என்புழி, புதல்வற்பயந்து நின்னின்றுறையுங் கடத்தினம் யாமென்றமையின் இஃது அன்புதொகநிற்றலாயிற்று.

1. பொழுதை மறுத்தலாய ஆக்கம். மறுத்தல்—நீக்கப் பெறல். மறுத்தகாலம்—கற்புக்காலம்.

2. பிறை—மாதப்பிறை; கார்த்திகைப் பிறையுமாம்.

3. 'இனியர்', 'பிரிபறியலர்' என்றமையின், அன்பின்மிக்க அருளாயிற்று.

4. என்ன கடத்தள்—என்ன கடமையினள். எனவே யாம் கடமையேமென்பது பெறப்பட்டது.

பிரிவாற்றுமையென்பது, களவிற் பிரிவாற்றுதல் வேண்டு மாறுபோலக் கற்பினுட் பிரிவாற்றுதல் வேண்டப்படாமை; என்னை? புறத்தார்க்குப் புலனாகாமை மறைத்தல் கற்பிற்கு வேண்டுவதன்றுகலினென்பது.

"இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
வடமீன்போற் றெழுதேத்த வயங்கிய கற்பினு
ளடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை." (கலி - உ)

என்புழி, இன்ன கற்பினுளைப் பிரியாமை பொருளாயினன்றி நும்மால் தரப்படும் பொருள் பொருளாகுமோ என்றதன் கருத்தாவது: பிரிவாற்றுமையின் இவள் இறந்துபடுவள், பின்னை அப்பொருள்கொண்டு ஆற்றும் இல்லறம் யாண்டையதெனத் தலைமகள் பிரிவாற்றுமை கூறியவாறுயிற்று.

[1] மறைந்தவை யுரைத்தலென்பது, களவுக்காலத்து நிகழ்ந் தனவற்றைக் கற்புக்காலத்துக் கூறுதல்; அவை,

"களவினு னிகழ்ந்த வருமையைப் புலம்பி
யலமர னுள்ளமோ டளவிய விடத்தும்." (தொல் - கசசு)

என்புழித் தோன்றிய மனக்குறிப்பு; அது,

"முயங்கல் விடாஅ னிலையென மயங்கி
யாஞ்ஞை மென்னவு மொல்லார் காமப்
றிலைபா ராட்டிய பருவமு முளவே
யினியே; புதல்வற் றழுக்க பாலொடு தடைஇத்
தெதலை யணிந்த தேங்கொண் மென்முலை
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிள ரகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே
தீம்பால் படுத ருமஞ் சினரே." (அகம் - உசு)

என்பது, [2] முன்னிலைப் புறமொழியாகலான் [3] மறைந்த ஒழுக் கத்துக்கண் நிகழ்ந்த பொருளைக் கற்பினுள் உரைத்தவாறுயிற்று.

புறஞ்சொன்மாணக்கிளவியென்பது, தலைமகற்குவந்த புறஞ் சொல்லின் பொல்லாங்கு குறித்து எழுந்த கிளவி; அவற்கு வரும் பழிகாத்தலுந் தனக்கு அறமாதலின் அதுவுங் கற்பின் கண்ணே நிகழுமென்பது; அது,

1. மறைந்தவை—களவினிகழ்ந்தவை. மறைவு—களவு.

2. முன்னிலைப்புறமொழி—முன்னிலையில்வைத்துப் பிறரைக் கூறுவதுபோலக் கூறுமொழி.

3. மறைந்த ஒழுக்கம்—களவொழுக்கம்.

"களிறு கவர் கம்பலை போல
[1] வலரா கின்றது பலர்வாய்ப் பட்டே." (அகம் - கூசு)

என்றுற் போல்வன.

கிளவியொடுதொகைஇயென்பது, இதனோடுந் தொகுத் தென்றவாறு; சிறந்தபத்தும் என்பது, விதந்தோதிய பத்தும் செப்பிய பொருள் என்பது, அழிவில் கூட்டமெனச் செப்பிய கற்பின்கண் வரும் மெய்ப்பாடெனப்படும் இவையும் என்பது.

மற்றுப் பதிணென்றனை யெண்ணிச் 'சிறந்த பத்து இவை' என்றதன்னையெனின்,—அதனை,

"ஒன்பதுங் குழவியோ டிளமைப் பெயரே." (நருசு)

என்ற மரபியற் சூத்திரம்போல மொழிமாற்றி யுரைக்கப்படும். அங்ஙனஞ் சிறந்த பத்தும் புறஞ்சொன்மாணக் கிளவியொடு [2] தொகைஇயெனக் கூட்டியுரைக்க. சிறந்தபத்தென்றதனுள் இவையன்றிக் கற்பினுள் வருமெய்ப்பாடு பிறவுமுளவேற் கொள்க. (கச)

[ஒப்பினுக்குரிய மெய்ப்பாடுகள்]

உஎக. பிறப்பே குடிமை யாண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயி
னிறையே யருளே யுணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த வொப்பினது வகையே.

இதுவும் அம்மெய்ப்பாட்டுப் பகுதியே கூறுகின்றது; மேற் களவியலுள்,

"ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப." (கo)

என்றுன், அவ்வொப்பினது பகுதி இத்துணைக் குறிப்பு உடைத் தென்ப துணர்த்தினமையின்.

இ—ள்: ஒத்தபிறப்பும் ஒத்த ஒழுக்கமும் ஒத்த ஆண்மை யும் ஒத்த பிராயமும் ஒத்த உருவும் ஒத்த அன்பும் ஒத்த நிறையும் ஒத்த அருளும் ஒத்த அறிவும் ஒத்த செல்வமு மெனப் பத்துவகைய தலைமகளொப்பினது பகுதி என்றவாறு.

1. அலர்—பரத்தையிடு சேறலால் வரும் பழிமொழி.

2. பத்தும்தொகைஇயெனவே பதிணென்றல்பது பெறப் படும்.

இவை தலைமகற்கு மெய்ப்பாடெனப்படாவோவெனின் படுமாயினும் அஃது ஒப்பினது வகையென்றதனானே தலைமகட்கே உரிமைகொளப்படும்.

குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை யென்னையெனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கங் குடிமை எனப்படும். குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்றனென்பது; அதனை [1] ஊராண்மையெனவுஞ் சொல்லுப. ஆண்மை புருடர்க்காம். அஃது [2] ஆள்வினை யெனப்படும். இது தலைமகட் கொப்பதன்றுலெனின், [3] குடியாண்மை யென்புழி ஆண்மையென்பது இருபாற்கும் ஒக்குமாதலின் அமையுமென்பது. யாண்டென்பது ஒத்தவாறென்னையெனின், பன்னீரியாண்டும் பதினொரியாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பது ஒத்தினுள் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பனவே படும். 'உருவு நிறுத்த காம வாயில்' என்பது, பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்த வழி அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பென்றவாறு.

இங்ஙனம் ஓதியவகையான் இவை ஒன்பதாகலிற் பத்தாமாறென்னையெனின், காமவாயிலெனப்பட்ட இயற்கையன்பு வடிவு பற்றியல்லது தோன்றுமையானும், குணம்பற்றித் தோன்றுவன செயற்கையன்பாகலானும், உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினுமையினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்தெண்ணிக்கொண்டாமென்பது; என்னை?

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு." (குறள். கூஉ)

என்புழி, [4] கற்றறிதலென்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்.

1. ஊராண்மை—உபகாரியாந்தன்மை. 'பேராண்மையென்ப' என்னு முதலியுடைய குறளுரை நோக்குக.

2. ஆள்வினை—முயற்சி.

3. குடியாண்மை—குடியையாளுதல்.

4. இவ்வுரையால் பரிமேலழகர் பிந்தியவர் என்பது புலனாகின்றது. பரிமேலழகர் வேறுரை கூறி இதனை அநுவதித்துக் கூறலின்.

அஃதேல், உருவென்பது குறிப்பின்றுகலின் மெய்ப்பாடாமாறென்னையெனின், அவ்வுருவுபற்றி மனத்தின்கட் பிறப்பதோர் தருக்குண்டன்றே அதனன் அது மெய்ப்பாடெனப்படும். நிறையென்பது, மறைபிறரறியாமை (கலி. கஉக) நெஞ்சினை நிறுத்தல். அருளென்பது, எல்லாவுயிர்க்கும் இரக்கண் செய்யாத அருளுடையராயிருத்தல்; அதுவுங் காமத்திற்கு இன்றியமையாததோர் குறிப்பு. உணர்வென்பது, அறிவுடைமை; அஃதாவது, உலகியலாற் செய்யத்தகுவது அறிதல். திருவென்பது, பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றுந் திருத்தகவிற்றுகியதோர் உள்ள நிகழ்ச்சி. அது [1] வினையுளுடைமை யெனவும்படும். இவையெல்லாம் இருவர்க்குந் தம்மின் ஒக்கும் பகுதியெனவும் இவைபற்றி மெய்ப்பாடு பிறக்குமெனவுங் கூறியவாறு.

'வகை' என்றதனான், ஆண்மை பெண்மை என்பது பிறப்பொப்புமையெனவும், குடிமை வகையென்பது இருவர்க்கும் இளமைப் பருவத்தே தங்கிய ஒழுக்கமெனவும், பிறப்பினது வகையென்பது அந்தணர்க்கு [2] நான்கும் அரசர்க்கு மூன்றும் வணிகர்க்கு இரண்டும் வேளாளர்க்கு ஒன்றுமெனவுங் கூறுக. இனி, 'ஏவன் மரபினேனோர் பாங்கினும்' (உசு) 'அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும்' (உக) தம்மின் ஒத்த பிறப்புக் காரணமாக உள்ளத்து வருங் காமக்குறிப்பு முதலாயினவுங் கொள்க. இவ்வெண்ணப்பட்டன ஒத்துவரினன்றி அறிவுடையார்கட் காமக்குறிப்பு நிகழாமையின் இவற்றையும் ஈண்டு மெய்ப்பாடென்றோதினனென்பது. அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினும் (உக) வரும் இக்குறிப்பு முதலாயவற்றை இலேசினுற் கொண்டான், அவை பிறழ்ந்து வருமாகலினென்பது.

உதாரணம்,

"அவனுந்தா
னென னிதனைத் தெற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்"

1. வினையுளுடைமை—தினைக்காலத்தும் செல்வம் உடையர் போலிருத்தல்.

2. நான்கு—நான்குவருணத்தும் பெண்கோடல் உரித்தாதல்; ஏனையவுமன்ன.

தேனி னிருவென வேனி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்.'' (குலி - நகூ)

என்பது [1] பிறப்பொப்புமை.

''உள்ளினெ னல்லனே யானே யுள்ளிய
வினைமுடித் தன்ன விவிரியோண்
[2] மனைமாண் சுடரொடு படர்பொழு தெனவே.'' (நற் – ந)

என்பது, தலைமகன் தனது இல்லறத்தைத் தலைமகள்மேல் வைத்துச் சொல்லினமையிற் குடிமையாயிற்று.

''கேள்கே டுன்றவுங் கிளைஞ ராரவுங்
கேளல் கேளிர் கெழீஇயின ரொழுகவு
மாள்வினைக் கெதிரிய வூக்கமொடு புகல்சிறந்து.'' (அகம் - கூந)

என்புழி, இன்ன காரணத்திற் பிரிந்துபோந்து வினைமுடித்தன மாயினும் அவளை 'முயங்குகஞ் சென்மோ' என்றமையின் தன் ஆள்வினைக்குத்தக்க பெண்மையான் அவள் ஆற்றியிருந்தாளென் பதூஉம் கருதிய கருத்தினாற் காமக்குறிப்புப் பிறந்தமையின், அஃது ஆண்மையாயிற்று.

''என்ரே ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நீனத்துக்காண்.'' (கலி - கஅ)

என்பது, [3] யாண்டு.

''முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கண்ணு
[4] நல்லெ னென்ய னென்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி நின்னெடு சொல்லாற்ற கிற்பாரியார்.''
(கலி - கஅ)

என்பது, உருவு.

---

1. இருவரும் வேடசாதியிற் பிறந்தமைபற்றிப் பிறப் பொப்புமை என்றார். நச்சினார்க்கினியர் இதனைக் குலத்திற் சிறிதுயர்ந்தாளையினும் ஒப்பாமென்றது காளகநாடன் என வந்தமையிற்போலும். கலி - நகூ உரை நோக்குக.

2. மனைமாண் சுடரொடு என்றமையான் இல்லற நிகழ்ச்சி பெறப்பட்டது.

3. யாண்டு—பருவம். என்றோள் எழுதிய என்றதனானும், மைந்துடை மார்பு என்றதனானும் பருவம் பெறப்படும். எழுதற்குக்காரணம் தோளிற்கொண்ட விருப்பமாதலின் பருவம் பெறப்படும். மைந்துடைமார்பு என்றதனால் தலைவ னிளமை பெறப்படும்.

4. நல்லேன் என்று தருக்கிய என்றதனால் உருவாலாகிய மெய்ப்பாடு பெறப்படும்.

''நின்மக ளுண்கண் [1] பன்மா ணோக்கிச்
சென்றேன் மன்றவக் குன்றுகிழ வோனே
பகன்மா யந்திப் படுகட மையத்
தவன்மறை தேள நோக்கி மற்றிவன்
மகனே தோழி யென்றனள்.'' (அகம் – சஅ)

என்பது, உருவுநிறுத்த காமவாயில்.

''கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந்து.'' (கலி - நஎ)

என்புழி, முன்னத்திற் காட்டுதலல்லது தானுரையாமனென்பது தலைமகனிறையுடைமை கூறியவாறு.

''அவள் வயிற்
[2] சேயேன்மன் யானுந் துயருழப்பேன்.'' (கலி – நஎ)

என, தன்னிறையுடைமை காரணத்தாற் காமக்குறிப்பு நிகழ்ந்த வாறு.

[3] ''பெண்ணின் றுரைத்த னமக்காயின்.'' (கலி - நஎ)

என்பதும் அது. இது, தோழி கூற்றன்றேவெனின், அதுவும் தலைமகள் குறிப்பெனவே படுமென்பது முன்னர்க் (உஎக) கூறினுமென்பது.

[4] ''நாதுண் பறவை பேதுற லஞ்சி
மனைநா வார்த்த மாண்விளைந் தேரன்.'' (அகம் – ச)

என்பது அருள்பற்றிப் பிறந்த காமக்குறிப்பு.

''அணங்குடை நெடுவரை யுச்சியி னிழிதரும்.'' (அகம் – உஉ)

என்னும் பாட்டினுள்,

---

1. பன்மாணோக்கி என்றதனானும், அவன் மறைதேளம் நோக்கி என்றதனானும் உருவுநிறுத்த காமவாயில் என்பது பெறப்படும்.

2. சேயேன்—தூரியேன். உறவில்லாதேன். அவன் துயர் கண்டு துயருழப்பேன் என்றதனால் தோழியின் நிறையுடைமை பெறப்பட்டது. என்னை? அவன் துயருக்கிரங்கித் துயருழந் தமையைப் பிறரறியாமை மறைத்தமையின். இதுவும் முன்னதுந் தோழி கூற்றுதலின் இவ்வுதாரணங்கள் சிறப்பின்று.

3. நமக்காயின் நின்வருத்தத்திற்கு நானும் வருந்தினே னென்று கூறல் பெண்டன்மையன்று என்றமையின் இதுவும் நிறையாயிற்று, என்னை? தன்வருத்தத்தை மறைத்தமையின்.

4. தாதுண்பறவை—வண்டு. அதன் வருத்தத்திற்கஞ்சினு னெனவே அருள்பற்றியதாயிற்று.

[1] "தன்னசை யுள்ளத்து நந்நசை வாய்ப்ப." (அகம் – உஉ)

என்பது, இருவருணர்வும் ஒத்தவாறு; தலைமகள் குறிப்பு உணர்ந்து வந்தனனென்றமையின். இது, 'செல்வம் புலன்' (உருக) என்புழிப் [2] புலனெனப்படாது காமத்திற்கே உரித்தாகிய உணர்வாகி வேறு கூறப்பட்டது.

"நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற்
றொய்யில் லெழுதவும் வல்லன்றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ் செறிவினு னல்ல
பலவல்லன் றேளாள் பவன்." (கலி – கசஎ)

என்பது, திருவினுற் காமக்குறிப்புப் பிறந்தவாறு; என்னை? இனையனவல்லனுதல் செல்வக்குடிப் பிறந்தாரை அறிவிக்குமாகலின் அது காமக்குறிப்பினை நிகழ்த்துமென்பது. இது தலைமகட்கும் ஒக்கும்.

[3] "உழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னெனி
ழிழிந்ததோ கூனின் பிறப்பு." (கலி – கூச)

என்பதும் [4] பிறப்புவகையின்பாற்படும். பிறவும் இவ்வாறே கொள்க. (உரு)

[* தலைமகன்கண் நிகழாத மெய்ப்பாடுகள்]

உஎச. நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி
வன்சொற் பொச்சாப்பு மடிமையொடு குடிமை
யின்புற லேழைமை மறப்போ டொப்புமை
யென்றிவை யின்மை யென்மனர் புலவர்.

இது காமக்குறிப்பாகாதன கூறுகின்றது.

1. இது தலைவி கூற்று. தனது வேட்கையையுடைய உள்ளத்தில் நமது வேட்கையும் வாய்ப்ப, என்றதனால் இருவர் வேட்கையு மொத்தவாறு காண்க. இது பேராசிரியர் கருத்து. அகநானூற்றுக் குறிப்புரைகாரர் வேறுபொருள் கூறுவர்.

2. புலன் என்பது கல்விபற்றிய அறிவாதலின் அது வேறு என்றபடி.

3. உழுந்து—உழுத்தம் பணியாரம். துவ்வா—அநுபவிக்கப் பட்டு இருக்கிற. இருக்கிற என்பது சொல்லெச்சத்தான் வருவிக்கப்பட்டது. கலி—உரை நோக்குக.

4. கூனுங் குறளுமாதலின் பிறப்புவகையுளடங்கின.

* இளம்பூரணர் இவை தலைமகன்மாட்டு நிகழாத மெய்ப்பாடுகள் என்பர். இருவர்கண்ணும் நிகழாதன என்று கூறுவாருமுளர். எது பொருத்தமென்பது சங்க இலக்கியநோக்கி ஆராய்ந்து கொள்ளத்தக்கது.

இ—ள்: நிம்பிரி — [1] பொறுமை - தோன்றுங் குறிப்பும்; அவை 'இங்ஙாட் சிறிது பொறுத்தாய்' என்றாற்போல்வன. கொடுமை — கேடுசூழ நினையுந் தீவினையுள்ளமும்; வியப்பு — தலைமகள்பால் தெய்வத்தன்மை கண்டான்போல் வியந்தொழுகுதலும்; இனி குணத்தின்மேற்கொண்டு தன்னை வியத்தலெனினும் அமையும். புறமொழி—புறங்கூற்றும்; வன்சொல்—கண்ணோட்டமின்றிச் சொல்லுஞ் சொற்களும்; பொச்சாப்பு — [2] கடைப்பிடியின்றி ஞெகிழ்ந்திருத்தலும்; மடிமை—சோம்புள்ளமும். குடிமை—இவள் இழிந்த பிறப்பினளெனத் தன்னை நன்கு மதித்தொழுகுதலும்; இன்புறல்—ஒருவரொருவரிற்றாமே இன்புறுகின்றாராக நினைத்தலும்; ஏழைமை—நுழைந்த வுணர்வினரன்றி வரும் வெண்மையும்; மறப்பு—மறவியும்; ஒப்புமை—இன்னாளெயாக்கும் இவளென்று அன்புசெய்தலும்; என்றிவை இன்மை என்மனர் புலவர் — இவையெல்லாம் [3] இன்றி வருந் தலைமகன்கண் நிகழும் மெய்ப்பாடென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

எனவே, அவைதம்மை வரையறுத்துக் கூறுது அவற்றுக்கு ஆகாதன வரையறுத்துக் கூறினனென்பது. தலைமகட்குரிய மெய்ப்பாடாயின வரையறுத்துக் கூறினமையின் அவற்றுக்கு ஆகாதன கூறல்வேண்டுவதன்றென்பது. ஆகாதவற்றுக்கு உதாரணங் காட்டலாவதில்லை. (உக)

[மெய்ப்பாடுகளை அறிதற்குக் கருவி இவை எனல்]

உஎடு. கண்ணினுஞ் சொல்லினுந் தின்னிதி னுணரு
முணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியி
னன்னையப் பொருள்கோ ளெண்ணருங் குரைத்தே.

இது, மேற்கூறிய மெய்ப்பாட்டிற்கெல்லாம் புறனடை.

"எள்ள லிளமை பேதைமை மடனென்
றுள்ளப் பட்ட நகைநான்கு." (உருஉ)

1. பொறுமை—பொறுத்திராமை. அது சிறிது பொறுத்தாய் என்றதனால், பொறுத்திராமை தோன்றிற்றுப்போலும்.

2. கடைப்பிடி—உறுதி.

3. இன்றிவரும் மெய்ப்பாடு எனவே இவ்வு தலைமகன்கண் நிகழா என்றபடி.

என்புழி, நகைக்கேதுவாகிய பொருள் கூறியதல்லது அப் பொருள்பற்றிப் பிறந்த நகையுணர்வு புலப்படுமாறு இன்னவா றென்றிலன். இனி, 'உடைமை யின்புறல்' (உகூ) என்றற் றொடக்கத்தனவினும் அவ்வாறு எண்ணியதல்லது அவை உணரு மாற்றுக்குக் கருவி கூறியதிலன். அங்ஙனமே பிறவுங் கூறிய திலனுகலான் அதனை ஒருவாற்றுற் கூறுகின்றுன்.

இ—ள்: 'கண்ணுனுஞ் செவியானும் யாப்புற அறியும் அறி வுடையார்க்கல்லது (உருக) மெய்ப்பாட்டுப் பொருள்கோடல் ஆராய் தற்கு அருமையுடைத்து என்றவாறு.

மற்று மனத்து நிகழ்ந்த மெய்ப்பாட்டினைக் கண்ணுனுஞ் செவியானு முணர்தலென்பதென்னையெனின்,—மெய்ப்பாடுபிறந்த வழி உள்ளம்பற்றி முகம் வேறுபடுதலும், உரை வேறுபடுதலு முடைமையின் அவை கண்ணுனுஞ் செவியானு முணர்ந்து கோடல் அவ்வத்துறை போயினுரது ஆற்றலென்பது கருத்து.

1" இரண்டறி கள்வினுங் காத லோளே
முரண்கொ டுப்பிற் செல்வேன் மலையன்
முள்ளூர்க் கான நாற வந்து
நள்ளென் கங்கு னம்மோ ரன்னள்
கூந்தல் வேய்ந்த விரவுமல ருதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
யமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகலை யானே." (குறுந். நகஉ)

என்பதனுள், அமராமுகத்தளாகுதலும் தமரோரன்னளாகு தலும் தலைமகற்குப் புலனுகலின் அவை கண்ணுணர்வெனப்படும்.

"ஒழிகோ யானெனை வழிதகக் கூறி." (அகம். ககo)

என்புழி, தலைமகன்மனத்து நிகழ்ந்தவழிவெல்லாம் ஒழிகோயா னென்ற உரையானே உணர்ந்தமையின் அது செவியுணர்வெனப் படும். இங்ஙனம் உணர்தலும் உணர்வுடையார்க்கன்றிப் பெரிதும் அரிதென்பான் 'எண்ணருங்குரைத்து' என்றுனென்பது. (உஎ)

மெய்ப்பாட்டியல் முற்றிற்று.

1. இரண்டறிகள்வி என்னும் பாடத்திற்கு இருவேறெழு கலாற்றை அறிந்த கள்ளத்தன்மையுடையாள் என்பது பொருள். இரண்டறிகளவின் என்னும் பாடத்திற்கு இரண்டாந்தன்மையள்; அறியப்படுங் களவின்கண் என்பது பொருள்.

இரண்டாந்தன்மை—நம்மோரன்னளாதலும், தமரோரன்ன ளாதலும்.

மெய்ப்பாட்டியல்
உதாரணச்செய்யுளுரை

உருஉம் சூத்திரம்

1. (அவன்முன் குறையுற்று நிற்கின்ற காலத்து) யான் தன்னை இகழ்ந்து சிரித்தாலும் பலகாலும் வருவாள். இது தோழி தலைவிக்குக் குறை நயப்பித்தது. (கலி. 61)

2. (மனைப்புறத்தே வந்துநின்ற எந் தலைவனைக்கண்ட அன்னையானவள்) என்னை நோக்கி நீ மிகவும் நல்லை எனக்கூறி நக்குச் சென்றுள். இங்கே அன்னைக்குத் தன்னைத் தன் மகள் இகழ்ந்தாள் (மதித்திலள்) என்பது காரணமாக நகை பிறந்தது. இங்கே தலைவி கூற்றைத் தன் கூற்முகத் தோழி கூறினள் என்க. (அகம். 248)

3. நம்மாற் சிரிக்கத்தக்கார் இவன் ஆளும் நாட்டை மிகுத் துச் சொல்லுவார். சிரிக்கத்தக்கார் என்பது வெகுளிபற்றி வந்த சிரிப்பு. (புறம். 72)

4. நினது மெய்ந்நடுக்கத்தைக் காணும்படி ஒரு விளையாட் டைக்குறித்துக் கூறினுர் அன்றி, உண்மையாகக் கூறினரல்லர் என்றபடி. நகை - விளையாட்டு. இது தோழி கூற்று. (கலி. 13) (தன் இளமை என்றதில் தன் என்றது தலைவனை.) தொல்— உரை.

5. (இது தனக்குப் பின்புறம் வந்துநின்ற தலைவனைக்கண்டு நக்கபுதல்வனை நோக்கித் தலைவி கூறியது) இந்த நன்முகதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன், நற்குணங்களல்லாதவற்றை நீ யொவ்வாதெகொள் என்று யாங் கோபிக்க யாரைநோக்கி நகும். இது தலைவி கூற்று. இது தன் இளமை பொருளாக நகை பிறந் தது. தன் என்றது புதல்வனை. (கலி. 86)

6. நாவாற் பழகாத (பிறர்) நகைக்கத்தக்க இனியசொல். இது பிறரிளமை பொருளாக நகை பிறந்ததற்குதாரணம். தொல் —உரையுள் பிறர் என்றது புதல்வனை. புதல்வன் இளமைச் சொல் காரணமாக நகை பிறந்தது என்றபடி. நாவொடு பயிலாத தீஞ்சொல்-மழலை, நகை - மகிழ்ச்சிநகை. (அகம். 16)

7. ஒரு சிரிப்பு வார்த்தையைத் தோழியே நீ கேள். இது தோழி கூற்று. (அகம். 248)

8. பாணன் மயக்கம் பொருந்திய மனத்தையுடையோனுய்த் தொழுது நின்றது எனக்குச் சிரிப்பாகின்றது. இது தலைவி கூற்று. பிறன்பேதைமை - பாணனுகிய பிறனது பேதைமை. (அகம். 56)

9. யாம் உம்மோடு மகிழ்ந்து சிரித்த தூய வெள்ளிய பற்கள். இது தலைவி கூறியது. (குறுந். 169)

10. நேரே குறிக்கொண்டு நோக்காத் துணையல்லது ஒரு கண்ணே சிறங்கணித்தாள்போல என்னே நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழாநிற்கும். சிறங்கணித்தல் - சுருக்குதல்; போல என்றதனுல் வெளிப்படாமல் நோக்கினுள் என்பது பெறப்படும். இது பரிமேலழகர் கருத்து. (குறள். 1095)

11. பெருமை பொருந்திய மெல்லிய தோளையுடையாள் (தலைவி) நம்மொடு தாம் வருமென்ப. அது குறித்து நாம் நகையுடையேம். நாணுகையுடையேம் என்னும் பாடத்திற்கு நாளும் நகையுடையம் என்க. (அகம். 121) (தலைவியின் மடத்தை நினைத்துச் சிரித்தமையின் பிறர்மடமென்றர். தொல் - உரை.)

12. சிறிது உள்ளத்தெழுந்த வாய்மையல்லாத சிரிப்பையுடையவள். (உண்மையல்லாத சிரிப்பாதலின் உள்ளத்தோடு பிறவாத நகையென்றர்.) (அகம். 5)

உருசு-ம் சூத்திரம்

1. சந்தனக்குழம்பாலெழுதிய தெய்யிற்கோலஞ் சிதைய அழுதனளாய் ஏங்கி அழுத்திவிட்டதுபோல உருவுகொண்டதே மலையும் பலமுறை கொடித்தலைச் சிவந்த மெல்லிய விரலையும் பலமுறை திருகுதலாற் கூரிய நுதி மழுங்கிய எயிற்றையுமுடையளாய்வளர்முற்றும்நின்னியல்பைச் சொல்லிவருவாள். (அகம்.176) அத்தகைய அவள் நின்னைக் காணும்படி செல்வாய். இது தோழி சொல்லியது. தன் என்றது பரத்தையை. (தொல்—உரை)

2. கயம் - குளம். உண்கண் - மையுண்ட கண். உரைக்கல் லான் - உரையான். பெயரும் - வந்துசெல்லும். அவனுக்கு உறவில்லாதவளாகிய யானும் வருத்தத்தினே மீழ்ந்து அழுந்துவேன். (கலி. 37)

இளிவரல்-எளிமை. அவலம்-அழுகை.(தொல்—உரை) இவ்வவலம் கருணைபற்றி வந்தது; என்னே? தலைவன் இளிவந்தொழுகல்பற்றிப் பாங்கி இரங்கினமையின்.

3. கண்ணினின்றுஞ் சொரிகின்ற நீரே நீராகக்கொண்டு சாணகத்தான் மெழுகுவாள். (புறம். 249) இழவு - கணவனை இழத்தல் (தொல்—உரை)

4. ஐயோ என்று யான் அரற்றின் அவ்வுரைவழி வந்து புலி தாக்குமென்று புலிக்கு அஞ்சுவேன். இது, கணவனையிழந்தாள் காட்டிற் கணவனுடம்பைத் தழீஇநின்று கூறியது. (புறம். 255)

5. தெய்வத்தை ஒத்த கற்பொடு மடம்பொருந்த மெலிந்து நின் வருத்தத்தினிடத்தாயுமல்லே. அச்சம் வர எத்தன்மையாகு வாளோ? இவள் அளிக்கத்தக்காள் என்று என் வருத்தத்திற்கு இரங்கும் நின்னெடு யானும். இது தோழி கூற்று. என்பொருட்டு வருந்தினளென்றுதோழியறிவிற்குத் தலைவி இரங்கினுள் ஆதலின் அதனை உட்கொண்டு என்னழிபிரங்கும் நின் என்றுள் என்க. (அகம். 73)

6. இது மடலேறுகின்ற தலைவன் சான்றோர்க்குக் கூறியது. ஒருத்தி மயங்கினமழைக்கு நடுவில் பின்னுப்போல வந்து தோன்றி தன்னெளியோடே தன்னுருவையும் என்னைக் காணப் பண்ணி என்னை அளிக்குந்தன்மையளாய் அளித்துப் பின்னர் என்னெஞ்சைத் தான் வரும் வழியாகக் கொண்டுவிட்டாள். அதனை முதலாகக்கொண்டு துயிலேன். (கலி. 139)

7. மனையின்கணியங்கும் மடப்பத்தையுடைய மயிலை அகப்படுத்திக்கொள்ளும் சொல்லாகிய வலையுடைய வேட்டைக்காரனுடைய முன்பு; இதுபொழுது அள்ளிலைத் தாளிகொய்யாமின். இது தாபதவாகை என்னுந் துறை. (புறம். 252)

8. பாலின்மையின் தோலாகித்திரங்கி நுசுப்பூர்ந்த பொல்லாத வறிய முலையை வறிதே கலைக்குந்தொறும் அழுகின்ற தனது பிள்ளையினது முகத்தைப் பார்த்து நீரால் நிரம்பிய கரிய இமையையுடைய குளிர்ந்த கண்ணையுடைய வெள்ளுனியாது வருத்தத்தைப் பார்த்து (இந்த வருத்தந் தீர்ந்தற்குரியையாய் நீயென) நினைந்து நின்பால் வந்தேன், நல்ல போரையுடைய குமண! இது காடுபற்றியிருந்த குமணனைப் பெருந்தலைச்சாத்தனுர் சென்று பரிசில் கடாயது. (புறம். 164)

9. (யானேயை வெட்டி வீழ்த்திய வாள்வெற்றியராய் எந் தலைவரொடு கிடந்தார் எம் புதல்வர்.) இப்பெற்றிப்பட்ட வென்றியும் உளவோ நமக்கென்று சொல்லி முடிய மறக்குடியிற் பிறந்த பெண்டிர் இன்புற்று உவகையால் அழ அதுகண்டு நாணித் கூற்றம் இரங்கிய போர்க்களம். (புறம். 19)

உருசு-ம் சூத்திரம்

1. பூண்செறிந்த தலையையுடைய பரிய தண்டுக்கோலை ஊன்றித் தளர்ந்து இருமல் இடையே நெருங்கின சில வார்த்

தையையுடைய பெரியமுதுமையையுடையேமாகிய எங்களுக்கு. (புறம். 243)

2. புதல்வன் தாயேயென்று வஞ்சனையமைந்த பொய்ம் மொழிகளே அவர்தம்மிடத்திற் சாய்ந்து எம்பாற் பலகாற் சொல்லி எம்முதுமையை யெள்ளாதேகொள். அம்முதுமைக்கு நாங்கள் பொருந்துவோம். இது தலைவி கூற்று. (அகம். 6)

3. முதுமையுற்றுத் தலைவணங்கிய நின்னோடு யானும் போர்த்தொழிலைச் செய்தற்கு நாணுவேன், அதனால்.

4. வாடைப்பே நீ இமயத்தையும் துளக்கும் இயல்பினையுடையாய். துணையில்லாதவர்; இரங்கத்தக்கார்; பெண்கள்; அவர்களோடு மாறுபடுமிஃது என்ன பயனைத் தரும். (குறுந். 158)

5. கிழக்குக் கடலின் அலையிடத்தான பறத்தல் வலிகெட்ட நாரை வலிய தேரையுடைய சேரனது 'தொண்டி' யென்னும் ஊரின் முன்றுறையிடத்துள்ள அயிரைமீனுகிய அரிய இரையை விரும்பினாற்போல சேயளும் அரியளுமாயினளே உள்ளினேன்; கிட்டாமையின் நோயையுடையையாயினும் நெஞ்சே நோயைத் தரும் ஊழினையுடையாய். (அணவரல் - தலையை எடுத்தல் என்பது சாமிநாதையர் உரை.) இது அல்லகுறிப்பட்டு மீளும் தலைமகள் தன் நெஞ்சினை நெருங்கிச் சொல்லியது. (குறுந். 128)

6. வருத்துதலால் வருத்துந்தகையளென யான் அவளை அறிவேன். அவள் தன்னை அத்தகையளென அறிந்திலள். (குறுந். 337)

இது இரந்து பின்னின்ற தலைவன் கூற்றுதலின் தன்கட்டோன்றிய உயர்ச்சிபற்றி வந்த இளிவரலென்றும்.

7. என்னிடத்து ஒரு காரியத்தை இரந்து நிற்பான்போலே தன்னைப் பிறரா விகழப்பட்டு எளியனந்தன்மை தோன்றவும் சிலமொழி கூறும். இது தோழி கூற்று. (கலி. 47)

8. இவர் நம்மில் வலியரென்று கருதி அவர்க்கு வழிபாடு கூறியறியான். இவர் நம்மில் எளியரென்று கருதி அவரின்கண் மிகுத்துச் சொல்லியறியான். (புறம். 239)

9. ஒரு கையையுடைய யானையை எறிவேனே? யானும் இரு கையினைச் சுமந்து வாழ்வேன்.

உருபு-ம் சூத்திரம்

1. தினைப்புனத்தில் ஒருபால் நின்றேனுகிய மலர்தார் மார்பனைக் கண்டோர் பலர். தோழியே! அவருள் அரிய இருட்

கங்குலில் படுக்கையொடு பொருந்தி நீர்வாருங் கண்ணோடு நெகிழ் தோளினையுடையேன் யாஞ்சுருத்தியுமே. அங்ஙனமாதற்குக் காரணம் என்னையோ? (அகம். 82)

2. நல்ல மந்தித்திரள் ஆச்சியப்பட்டு நோக்க மூங்கில் வளராநின்ற மலைப்பக்கத்து உலாவியாடும் மயில் விழவுக்களத்திற் புக்கு நடிக்கின்ற விறலிபோலத் தோன்றுகின்ற நாட்டையுடையவன். (அகம்.82)

3. நிலத்தினும் அகலமுடையது; வானினும் உயர்ந்தது; கடலினும் அளவிடற்கரிய ஆழமுடையது; சாரலிடத்து வலிய தண்டையுடைய குறிஞ்சிமரத்தினது மலர்களைக்கொண்டு பெரிய தேனைச் செய்யும் (மலை) நாட்டையுடையவனுடைய தலைவனோடு நட்பு. (சிறுபா. 3)

இது தலைமகள் கூற்று.

4. குவளைமலரையணிந்த ஓதியையும் முத்துமணிபோலும் நகையையுமுடைய பேதைத்தன்மையையுடையாளது திரண்ட கச்சினையுடைய முலையினை ஏந்திளமுலும் கடைவிழியிற் சிறந்த கருமையையுடைய நெடிய கண்களையுடைய அப்பேதையினது இடையினும் சிறியதொன்று இல்லை.

இது இடையின் சிறுமையை வியத்தலின் பிறன்கட்டோன்றிய சிறுமை வியப்பு.

5. எருமைபோலும் வடிவையுடைய கரியகற் பொருந்திய இடந்தோறும் பெற்றம்போலப் பரக்கும் யானையையுடையவாய் வலியையுடைய காட்டிற்குள்ளாகிய நாட்டினையுடையாய்! நீயோ பெரும! (புறம். 5)

6. கிள்ளியெடுக்கும் அளவினையுடையதொரு ஆலம்வித்து முளைத்து கொம்பர்களால் நெருங்கி மிகநிழலைப் பயந்தாற்போல. (நாலடி. 28)

7. சதங்கை களைந்த காலிலே ஒள்ளிய வீரக்கழலைக் கட்டி. இது சிறியோன் தொழில். (புறம். 77)

8. அவ்வியல்பினையுடையானொருவன் தன்னுண்டகைமையைக் கைவிட்டுச், சுடரிழாய்! என்னை நோக்கிக் கூறும் பலகாரியங்களும் மாட்சிமைப்படுஞ் சொல்லைக் கேட்பாயாக. (கலி. 47)

உருபு-ம் சூத்திரம்

1. யானைவந்து தாக்கினும் பாம்பு தன்மேல் வரினும் வலிய இடியேறு ஒலிப்பினும் தன்கருமாரூத மறத்தன்மை பூண்ட வாழ்வையுடைய. (பெரும்பாண், 134)

2. யாம் நின்னைக் காணுமிடத்து வெருவுவோம், ஆதலால், எங் கூந்தலைத் தீண்டாதேகொள். நீ நீங்கென்றாள் தலைவி.

தலைவனைக் கள்வர்போலச் சார்த்தியுரைத்தமையின் கள்வர் பொருட்டுத் தோன்றிய அச்சமென்றார். நச்சினார்க்கினியர் வெருவுதலென்னும் மெய்ப்பாடென்பர். (கலி. 87)

3. கழுத்தையெடுத்து மேல்நோக்கின் வாழமாட்டேமென்னுங் கருத்தினாலே கைகூப்பி வணங்கிப் பழகிக் கழுத்தை வளைத்துத் (தலையிறைஞ்சிக்) கடுமான்றேர்க்கோதையின் கால் வண்ணமேயன்றி மேல்வண்ணம் கண்டறியமாட்டா அரசுகள். கோதை—சேரன். (இ. வி. ப. 124)

4. தூரினின்று நான் செய்யாதவற்றைச் சொல்லிச் சினவாதே. நின்னிணையைக் கடப்பார் யார்? ஆணை—கட்டளை. (கலி. 81)

5. அழகு விளங்குகின்ற சாந்திலேறு அழகிய பட்டிமைப்பவளைந்த குழையையணிந்த மகளிரைப்போல ஒடுங்கியிருக்கின்ற இருக்கை. (அகம். 236)

6. அச்சமே பயிலாக உளைத்துப்படி வருபவனுடைய பொய்ச்சூளுக்கு அஞ்சிப் புலவேனுகுவேன். (கலி. 75)

உருஎ-ம் சூத்திரம்

1. நரலிளவேனில் பொற்றேரொல்லை வல்லாய் முன்னை சொல்லுதல் வல்லேனுகிய என்னைப் பிறர்முன்னே ஒன்றாயுங் கல்லாத தன்மையேனுகக் காட்டியவள். 'வல்லோர் முற்சொல் வல்லேன்' என்றது தன் பெருமிதங் கூறியது. (கலி. 141)

2. போரிற்று வெற்றியையுடைய குதிரைமீதே யிருந்து போர்த்தொழிலே நடத்துவேனுகிய என்னை அம் மாவல்லாத மடன்மாவிலே வலி அக்களத்தேயன்றி மன்றின்கண்ணே தன்னை உள்ளுவித்தவள். அடல்மாமேலாற்றுவென் என்றது தறுகண் பற்றிவந்த பெருமிதம். (கலி. 141)

3. நீங்காத காதலையுடையராயினுஞ் சான்றோர் பழியொடு வரும் இன்பம் விரும்பார்.

எனவே புகழொடு வருமின்பத்தை விரும்புவர் என்றமையால் புகழ்பற்றிவந்த பெருமிதங் கூறியவாறு. (அகம். 112)

4. உலகத்தையெல்லாம் பாதுகாத்தலை முயலும் உள்ளத்தையுடையேனுகிய என்னை ஒருவர்பால் ஒன்றை யிரத்தலை

முயலும் இன்னுதாகிய வருத்தத்தைச் செய்தவள். 'புரவுக்கும் உள்ளத்தேன்' என்றமையின் கொடைபற்றிய பெருமிதம். (கலி. 141)

5. தன்னகம் புக்க குறிய நடையையுடைய புருவின் அழிவிற்கு அஞ்சித் துலைபுக்க, வரையாத ஈகையையுடைய வலியோனது வழியிலுள்ளாய், இதுவுமது. (புறம். 43)

6. பலவகைப்பட்ட கரிய கூந்தலையுடைய பொதுப் பெண்டிரது பொருந்தாத புணர்ச்சியிடை என் மாலை துவள்வதாக. தார்குழைக என்றது துவளாமை குறித்தலின் காமம் பற்றிய பெருமிதம். (புறம். 73)

உருஅ-ம் சூத்திரம்

1. முறம்போலுஞ் செவியாகிய மறைப்பிடமாக வந்து பாய்ந்து மாறுபாட்டைச்செய்த புலியைக் கோபித்து. (கலி. 52)

எனவே புலி பாய்ந்து தன்னுறுப்பைக் கடித்தலால் உறுப்பறையான் வந்த வெகுளி என்றார்.

2. நின்மகன் படைக்குத் தோற்றுப் புறங்கொடுத்தான் என்று பலர் கூறக்கேட்டு, என்மகன் மண்டியபோரிற் புறங்கொடுத்தானுயின் அவன் பாலுண்ட முலையை யறுத்திடுவேன் யானென்று கோபித்து. (புறம். 278)

3. நேற்றுப் பகல் நின்னுல் எறியப்பட்டவனுடைய தம்பி அகலிடத்துப்பெய்த குன்றிமணியைப்போலக் கோபத்தாற் சுழலுங் கண்களையுடையனுகி. (புறம். 300)

4. புலியைப் பொருத வலிய களிற்றின் சினம்போல இன்னுமாறாது கோபம். (புறம். 100)

5. எனது மிக்கவலிக்கு அஞ்சாதே மாறுபடுஞ் சினம் பெருகிப் புல்லிய வார்த்தைகளைக்கூறிய சினம்பொருந்திய அரசரை. (புறம். 72)

6. யான்செய்த தவறில்லாதவிடத்து எங்ஙனஞ் சினப்பாய். (கலி. 87)

7. நெருப்புத் தன் வெம்மையாறுதற் கேதுவாகிய நிணமடைந்த கொழுவிய தடி (இறைச்சி). எரியாது பூத்துக்கிடக்கும் தழல்போலும் நிணந்தங்கு கொழுங்குறை எனினுமமையும். (புறம். 125)

உகூ-ம் சூத்திரம்

1. நீதான் வலியுடைத்தாகிய மனத்தையுடையை. தேடும் பொருளைத் தேடிமுடித்த செல்வத்தான் உண்டாகும் பொருடான் இவ்வின்பமென்று கூறுகின்றவனே! (கலி. 12)

2. கல்ல கலங்களைப்பெற்ற மகிழ்ச்சியை யுடையார். கலம்—ஆபரணம். என்பது வண்மையாலுகும் மகிழ்ச்சி.

3. பெண்டிரது நலத்தை நுகர்ந்து தண்ணியமலிச்சார லிடத்துத் தாதையுண்ணும் வண்டு அப்பூவைத் துறக்குமாறு போல அவளைத் துறக்கின்றவனுடைய மலை. முகைப்பதம்—அலரும் பருவம். நகைப்பதம்—தன்னெடு நகையாடி. இன்பம் நுகர்தற்கேற்ற பருவம். (கலி. 40)

4. தம்மூட் பகையில்லாரும் கூரிய அறிவுடையாருமாகிய கல்விப்பெரியார் தம்மூட்கூடி. மகிழ்தலினும் இன்பமுடைத் தாயின் தேவருலகை யாம் பார்ப்போம். (நாலடி. 14-7)

5. வடித்த நரம்பையுடைய யாழைப்போல இனிய மொழி களைக்கூறி வலையினது மூட்டுவாயின் வடுப்பொருந்த எம்மைக் கூடினள். (அகம். 142)

6. யாம் துயிலின்றி யாமக்கடலை நீந்தித் தான் மயில்போலும் இயலினையுடைய பரத்தையர் மருதலை நுகர்ந்து அவருடனே யழகிய புனலையுடைய மடுக்களையாடி. நம்மை மறந்து அவரிடத்தே யமைந்திருப்பள். (கச்சினார்க்கினியரால் புனல் தொழுவை என மாற்றிப் பொருள்கொள்ளப்பட்டது. மடுவிலுள்ள நீரிலாடி. என்று நேரேயும் பொருள்கொள்ளலாம்.) (கலி. 30)

உகூக-ம் சூத்திரம்

1. யான் தன்னை நோக்குங்கால் (நாணி) நிலத்தை நோக்குவாள்; யானுக்காக்கால் தான் என்னை நோக்கி மெல்ல நகுவாள். (குறு. 1094)

2. பெரிய புழுக்கத்தையடைந்த பிறைபோலும் நெற்றியின்கண் எழுந்த புள்ளியையொத்த வியர்வையைச் சிறிய காற்று ஆற்றச் சிறிதுபொழுது நிற்பாய் என்று தலைவன் கூற. (அகம். 136)

3. முகையாது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாத நாற்றம்போல நின்பேதை என்னெடு நக்க நகையது முகிழ்ப்பினுளதாய்ப் புறத்துப் புலனுகாததோர் குறிப்புண்டு. (குறள். 1274)

4. நும்மொடு நகைத்த வெள்ளிய எயிறு. இது தலைவி கூறியது. (குறு. 169)

5. அகத்தே பொலிந்த மகிழ்ச்சியளாய் நாணினுல் முகத்தை வனைத்து விரைய வணங்கினுள் (தாழ்த்தாள்). (அகம். 86)

யான் தன்னைக் காணுந்தோறும் தான் பெரிது மகிழாளாய் (சிறிது மகிழ்ந்தவளாய்) ஒளிபொருந்திய நுதல் வியர்ப்ப நாணித் தலை வணங்கி அதிகம் வெளிப்படாது நகுதலையுடைய முகத்தை மறைத்த நல்ல நெற்றியையுடைய பெண்ணின் மனஞ் சிதைவுற்றமையை நெஞ்சே யறிந்திலை; அது உண்மையாதலை யானறிவேன். (இலக்கண. பக். 592)

உகூஉ-ம் சூத்திரம்

1. விண்ணின்கணுயர்ந்த வலியமலையின் பக்கத்தே ஒருவன் கண்ணுனேக்கியதன்றி என்னெடு குளிர உரையாடியதுமில்லை. அவன் மலையுறை தெய்வமுமல்லன். அவன் கண்ணுனேக்கிய அதற்கே ஒதிக்கு முற்பட்டுக் காது ஒருகுழை நெகிழ, ஒளிவிளங்குகின்ற மணியாற்செய்த பூண்கள் நெஞ்சொடுங் கழல, உடையும் பலதரம் நெடிது சோர்வுற்றன. அதன்காரணம் நீயறிகுவாய். அந்நோக்கினியல்பு கூறுமாறு எமக்கு எத்தன்மையது.

உகூஉ-ம் சூத்திரம்

1. யான் தனது கூந்தலையும் நுதலையும் நீவி அழகிய மெல்லிய முகிலை வருடலினுல் மனங்கலங்கி உடம்பும் உள்ளம் போல உருபவள்போல அல்குலின் மேலணிந்த நெகிழ்ந்த நூலையுடைய வஞ்சிரத்தோடு சாருமிடமறியாது மெலியாதவள்போல் வாளாய் வலிந்து பொய்ம்மைசெய்து ஒடுங்கவும் யாமெடுத்து அணைக்குந்தோறும் தாமே உடன்பட்டெழுதலின் வேய்போலும் மென்றோள் நீண்ட அரிபரந்த கண்களையுடைய பேதையோடு நம்மை இம்மையுலகத்தன்றி உம்மையினும் கேளாந்தன்மையை அறிந்தனபோலும்.

உகூச-ம் சூத்திரம்

1. ஒருநாள்போலப் பலநாளும் வந்து வருத்தும், நின்னையொக்கும் நினது தழையும் என்னிடத்து நின்னைப் பாராட்டியும் யான் சொல்லுஞ் சொல்லை ஏற்றுக்கொள்ளாதும், தாய் எதிரே கழறி யுரைத்தலினுலே பெரிய அலருக்கு நாணியும் மயக்கமடைகின்ற மாநிலத்துக்கு அவள் துயரை நீக்கும் மருந்தாயினும்; ஓரிடத்து நீ தொடக்கறிதலினுலே (அவளுக்கு) நோயைச் செய்தற்கேதுவாயது. நோய்செய்தது அதனுல் நின்தழையும் நின்னையொக்கும் என முடிக்க. (இ. வி. ப. 533)

உசுடு–ம் சூத்திரம்

1. தாய் இவளை வருந்த நோக்குந்தோறும் நடுங்கும் நெஞ் சினுல் அவட்கு அறிவுறுத்தலின் நின்னெதிர் வருதற்கு நாணி மனையகத்திறுத்தினாள். அதனை நீயறியாய்போலும். அவள் மனையிடத்தினின்று பிரியாத அதனால் புனைதார்மார்ப! என் நினைவிலள் அவள் என்று கூறுகின்றாய். உன்னைக்கண்ட இப் பொழுது அவள் பசலைநீங்கி உவகையடைந்தவாற்றைக் காண் பாய். (இ. வி. ப. 534)

உசுசு–ம் சூத்திரம்

1. இவள் யான் அணியினும் பூசினும் பிணியுழந்து வருந்திப் பல சுற்றத்தின் நடுநிற்பினும் நில்லாதவள்போல (தனிமை யுற்று) சொல்லும்வகையறியாளாய்ப் பொழிகின்ற கண்ணீ ரைத் துடைத்து யானை செயலற மனஞ்சுழல்வாள் நின்னைத் தெளியுமாற்றை இறைவனே சொல்வாய்.

உசுஎ–ம் சூத்திரம்

1. ஆயர்மகன் ஆயத்தோடே நாமாடுங் குரவைக்கூத்திலே நம்மை அருமைசெய்தான்போலே நோக்கி நமக்கு வருந்தத் தகும் நோயைச்செய்தல், நிறத்தையுடைய கண்ணையுடைய கொலையேற்றை யான் கொண்டேன் என்னு மனச் செருக் கன்றே? அது வேறொன்றல்லவே என்றாள். இது புகுமுகம் புரிதல். எமக்கு வருத்தத்தைச்செய்தல் என்றதனால் இவளும் எதிர்நோக்கினாள் என்பது பெறப்படும். (கலி. 104)

2. தானட்ட புளிப்பாகரை இனிதென்று கணவனுண்டலின் ஒள்ளிய நுதலையுடையாளது முகம் நுட்பமாக மகிழ்ந்தது. (குறு. 167)

3. நெஞ்சே இவனைப் பொய்சொல்ல விடேமென்று மாறு பட்டுக் கோபிக்கின் தப்பினேனென்று வணக்கஞ்செய்தலும் இவனுக்குப் பரிகாரமுண்டு. ஆதலான் நம்மை மறந்து ஒருகால மும் நாம் மாட்சிமைப்பட்டிருக்க நினையாத நாணமில்லாதவ னுக்கு இவ்வூடற் போரைத் தோற்று அதனாலுள்ள பயனைக் காண்பாய் என்று ஊடல் தீர்ந்தாள். (கலி. 89)

4. நின்னுடைய பாணன் நேற்றுசேர்ந்த திறப்பண்ணைப் பண்ணி எம்முடைய மனையிடத்தே நீசென்று சேர்ந்த பரத்தை யர் மனையை என்னைக்கேட்டு வராதிருத்தலை யான்பெறின். (கலி. 77)

5. எமது அன்னையின் கழற்றுரைக்கும் உய்வேம்; சிறிதும் இரக்கம் பொருந்தாத வியல்போடுங்கூடிய பொய்ம்மொழியைக் கூறுகின்ற சேரிப்பெண்டிரின் அலரையுநீங்குவேம். (அகம். 65)

உசுஅ–ம் சூத்திரம்

1. காவலரறியாமற் தன்னெஞ்சிரும்பும் உள்ளத்தே எம்மை யுள்ள வேட்கை வாய்ப்ப இனிய உயிருங்குழைய முயங்குந் தோறும் உடம்பு பொலிந்து இனைத்த நோய்தணி காதலர் ஈண்டு வர வேலன்பொருட்டு எந்நோய் தணித்தமையை அறிந்து யான் நக்கனனல்லனே? தோழீ! முயங்குதொறும் நக்கனனல்லனே என்க. (அகம். 22)

தமது வேட்கைபொருந்திய உள்ளத்தே எமது வேட்கையும் வாய்ப்ப என்று பொருள்கொள்வர் பேராசிரியர்.

2. புனைந்து வருதலையுடைய இளமுலை அழுந்தவும் பல முறை தொடி விளங்கும் முன்கை வனைந்து புறஞ்சுற்றவும் நின் மார்பைக் கூடுதலின் இன்பமாகின்றது. (அகம். 58)

3. தண்ணிய மழைத்துளிக்கேற்ற பதரம் உழுது சிவந்த வயலின் மண்போல நெஞ்சு நெகிழ்ந்து அவனைக் கலுழ்ந்து நெஞ்சு கிழற்றுப்போன அறிவுடையேற்கு. (அகம். 26)

4. வளை நெகிழ்ந்தன. தோள் மெலிந்தன. (குறுந். 239)

உஎ0–ம் சூத்திரம்

1. ஊதிப் பழகாத கோவலர்கள் (சிறுவர்) ஊதுகின்ற வலிய வாயையுடைய சிறிய வேய்ங்குழலோசை வருத்தாக்கால். (அகம். 74)

கல்லா—என்னை வருத்துமென்றறியாத எனினுமாம்.

2. இரவில் மனையைச்சேர்ந்த பனியிலுள்ள மடிந்த வாயை யுடைய அன்றில் தன் சேவலழகிய ஒன்றுபிரியினுந் துயிலாது காண். அங்ஙனமாக நான் பிரிந்து யாதுசெய்வேனென்று கண் கள் நிறைந்த நீர்கொண்டு (பின் அதனை அறித்து) மறைப்பாள். (அகம். 50)

3. நினது மிக்க துன்பை நீக்கினேனை தனது மிக்க துன் பத்தை நீக்குவாளோ. (அகம். 170)

4. எந்தலைவர் தேர் வாராதாயினும் வந்ததுபோலக் காதி னிடத்து ஓலிக்கும் ஓலியானே தோழி எங் கண் துயிலை மறந்தன. (குறுந். 302)

5. தாரையணிந்த மார்பனே! நீ பிரிந்தகாலை வாரார்கொல் என்று துயருறுவாள். (அகம். 150)

6. அன்னுய் வாழி. நான் சொல்வதை விரும்பு. அன்னை யாகிய நின்மகள் பாலுமுண்ணுகின்றிலள். துன்பங்கொண்டு மிகவும் நிறம் வேறுபட்டாள், என்று வினவுகின்ருய்.
(அகம். 48)

7. இப்பொழுது உண்ணுதலுஞ் செய்யேன்; வாழுதலுஞ் செய்யேன். (கலி. 23)

8. கன்றுமுண்ணுமலும் கறக்கும் பாத்திரத்தினும் பொருந்தாது நல்ல பசுவின் பால் நிலத்திலே சொரிந்து (பயனின்றிக் கழிந்ததுபோல்) என்றலேவற்கும் பயன்படாமலும், எனக்கு மாகாமலும் தேம்பல் பரந்த அல்குலையுடைய மாந்தளிர்போலும் நிறம் பசலை பரத்தல்வேண்டும். (குறுந். 27)

9. இனிய பாலையூட்டினும் அதனை வேம்பினுங் கைத்து வெறுப்பாள். நீ வாராதொழிவாயாயினும் உன்வருகையை விருப் போடு நோக்குவாள். எந்தலேவி நின்னினுஞ் சிறந்ததொன் றிலள். எனது சொல்லினும் அமைகின்றிலள் - இதனைப்படுத லெப்படி? (இலக். பக். 537)

10. வளைநிலை நெகிழ மெலிந்து என தோள்கள் அவர் கொடுமையைக் கூறியவாயினும், தோழீ! கொடுமையோ நல் வரை நாடன்கண் இல்லை. அவர் என் நெஞ்சிற் பிரிந்ததுமிலர்; யாம் மெலிய எமது நோக்கத்திருத்தலை நீக்கியதுமிலர்.
(இல. ப. 466)

11. தோழியே! முற்றிய கதிரையுடைய தினைப்புனத்தின் ஒருபக்கத்தில் நின்றேருனுகிய பரந்த தாரையணிந்த மார்பனைக் கண்டோர் புலர்தில். அவருள் அரிய இருட் கங்குலிலே படுக்கை யொடு பொருந்தி நீர்வடியுங் கண்ணுடு நெகிழ்ந்த தோளையு முடையேன் யானெருத்தியேயாகுதல் என்னையோ! (அகம். 82)

12. நின்னைப் பிரிந்தவிடத்து வருந்தி உயிர்வாழேனென்று கூறினவனைப் பிடித்துக்கொண்டு நீகொண்ட என்நலத்தை இனித் தாராயென்று வளைத்துக்கொள்வேன்போலவும், அவ் விடத்தே என்னுடைய கரிந்த அழகை யான் பெறும்படி புல்லிக் கூடி இனி வருந்தாதேகொள் என்று என்னையும் அளிப்பான் போலவும் (கனவிற் கண்டேன்). (கலி. 128)

13. ஐய நின் மார்பினிடத்து நீ விரும்பாத முயக்கம் கன வின்கண் வரப்பெற்ற செல்வத்தனையதொன்ருயிருக்கும். (பய னில்லை என்றபடி) (கலி. 68)

14. தான் சூளுற்ற சூளுறவினைப் பாதுகாத்தவனுய்ப் பொய்த்தவனுடைய மலையாயிருந்தும் மழைபெய்தலால் விளங் கும் அருவியையுடைத்தாயிரா நின்றது. (இஃது என்ன வியப்போ) (கலி. 41)

15. தலைவர் வருவேமென்ற நாளும் பொய்த்தன; வரி பொருந்தியமையுண்ட கண்களில் நீரும் நிற்கின்றில. (அக. 144)

16. கழங்காடலை ஆடும் நம்மாயத்தார் நடுவே அன்று நமக்கு அருளிய பழங்கண்ணேட்டம் தன்னைவருத்தலால், செய்த தன்மணத்தைச் சிறிது தவிர்ந்தானல்லனே. (அகம். 66)

17. ஒரு தூதாயினும் அவர் வரவிடாராய்த் துறப்பாரோ? துறவாரோ கூறுய். குயிலும் நோவுதரும்படியாகக் கூவும். குயில் கூவும் என்றதனுல் அவர் குறித்த வேனில் வந்ததெனக் குறிப் பித்தாள்.

18. தலைவன் பரத்தையர் ஊரினிடத்தான்போலும். அவ னைத் தேரும் பாணன் நந்தெருவின்கண் நிற்கின்ருன்.
(இல. ப. 537)

19. தலைவர் நாட்டு மலையிலே நேற்று மாலையிற் பெய்த வெள்ளத்தாரையாலாகிய மணங்கமழாநின்ற ஆற்றேடு இன்று வைகறையில் வந்த காஞ்சியின் முழுக் கொடியை மெல்லிய இலைகள் குழையத் தழுவலையும் இல்லிற்கொணர்ந்து நடுதலையும் நீக்காதாள்மாட்டு. (குறுந். 361)

20. பக்கத்தே பல்லி சொல்லுந்தோறும் கடவுளை வணங்கி கன்றுகள் மன்றிற்புகும் மாலைக்காலத்தே நின்றேனையடைந்து, வணங்கி நின்றேனையெய்தி என்க. (அக. 9)

21. பழிநீங்கும் ஞாயிற்ற! உலகியலறியாதாரிடத்துக் கழி யச் சீறுதற்கு விரைந்து செல்வையென்று (என் வருத்தங் கண் டார்) கூறக்கேட்டு நின்னை வழிபட்டு நீ அவரைமிகச் சீறுத படி இரந்துகொள்வேனுக வந்தேன். நீ என்னெஞ்சங் கெடும் படி என்னைக் கைவிட்டவனைக் கண்டு சீறும்பொழுது என்னை நீங்கவிடாதே கொள் என்று. (கலி. 143)

22. பெருங்கல்லின் நெருக்கத்தால் எய்த அம்பு ஓடாத அரிய வழியிடத்துப் பெருமையையுடைய கழுத்தினையும் அழ கையுமுடைய ஏற்றினின் நீங்காமற்றியும் பிணையையும் காணு திருக்கின்றீரோ! அவை நீர் அறியப் பிரியாவே! (ஆதலால் எம்மையும் உடன்கொண்டு சென்மின்.) (கலி. 20)

23. ஐயனே! விருப்பம் மருவுகின்ற அழகினையுடையாய்! அத்தா! அத்தா!! என்று கூறும் நினது இனிய மொழியைக் கேட்டு மகிழ்ந்திருத்தல் இனிது. அஃதொழிந்து நுந்தையால் நலனுண்ணப்பட்டு மெலிந்து நின்றவரது எவ்வநோய் காணுங் கால் அஃது இன்னுது. (கலி. 80)

24. பெருமா! நுகத்துப் பகலாணிபோல் ஒரு பக்கத்தைக் கொள்ளுதலின்றி முறைமை செய்தற்குச் சாயாத கோல் செவ்வி தாக நிகழ்த்துதலின் அவனே ஒப்பாய், மற்றுள்ள குணங்களில் அவனையொவ்வாதே கொள். (கலி. 86)

25. காவலன் யானைக்கெறிந்த கவண்கல் பலவின் பழத் துட்டங்கும் சிறிய மலைகள் பொருந்திய பெரிய மலையினையுடை யவனைப் பாடுகம் வா! (கலி. 41)

26. வெயிலே என்றேனை மெலிவித்தானது வடிவழகின் தன்மையை யான் விரும்பிக் காண்பதல்லது அவன் செய்த நன்று தீதென்று சொல்லுகின்ற பிறவற்றைக் காணேன். (கலி. 141)

27. யான் அவனைப் பிடித்துக்கொண்டு காண்பேனுகப் பை யென விழிப்ப யான் பிடித்த கையுள்ளே மறைந்து தோன்று னையினன். (கலி. 142)

28. கடற்றெய்வமே என்னைப் பாதுகாவானுய்த் துறந்த வனை யான் தேடிக் காணுமிடத்தை நீ விட்டுப்போகாமல் வறுவாயாயின், நின்னிடமெல்லாம் வெறு மணலாகும்படி என் காற்புறத்தாலே நின்னுடைய நீரெல்லாம் போம்படி இறைப் பேன். அது முடியுமோ என்னின், அங்ஙனம் முயலின் அதற்கு அறக்கடவுள் உதவியாதலு முண்டாயிருக்கும் என்றுங் கூறினுள். (கலி. 144)

29. ஆடவர், தமக்குக் காமங்காழ்க் கொள்ளிற் குதிரை யாகப் பனைமடலையும் ஊர்ப; பூவாகத் திரண்ட சுரும்பை யுடைய எருக்கம் பூமாலையையுஞ் சூடுப; மடலூர்ந்து வீதியிலே செல்லும்போது பிறர் தம்மைக்கண்டு ஆரவாரிக்கவும்படுவர். தங்கருத்து முற்றுதலின் சாதலுக்குரிய வரைபாய்தன் முதலிய வேறு செயலையும் உடையராவர். (குறு. 17)

30. நெஞ்சே! எவ்வியென்னும் வள்ளலையிழந்த வறு மையையுடைய யாழ்ப்பாணரது பொற்றாமரைப் பூவில்லாத வறிய தலையைப்போலப் பொலிவிழந்து வருந்துவாய். மணப் படப் பையிலுள்ள மரத்தே படர்ந்த ஒளிபொருந்திய முல்லை மலர் நாறுகின்ற பலவாகிய கரிய கூந்தலையுடையாள் நமக்கு எத்தகைய உறவினையுடையளாவளோ (அயலாள்போலும்). (குறு. 19)

31. அழகிய இனிய சொல்லையும் அழகிய இழையையு முடைய மடந்தையின் வளைந்த குழையோடு மாறுபடுகின்ற நோக்கம் நெடிய தூரிய அரிய (காட்டு) வழியில் (நின்னைத்) தடுக்கும்பொழுது. (அகம் 3)

உளகம் சூத்திரம்

1. நொச்சி வேலியாகச் சூழ்ந்துநிற்கின்ற தித்தனது உறந் தையிலுள்ள கன்முதிர்ந்த புறங்காட்டினையொத்த பல முட்டினை யுடையது தோழி நமது கள்ளப்புணர்ச்சி. நொச்சிவேலிப் புறங் காடு என்க. புறங்காடு ஊரின் புறத்தேயுள்ள காடு. (அகம். 122)

2. இனிய உயிர் நீங்குவதாயினும் நின்மகளது அழகிய குவளை மலர்போலும் மையுண்ட கண்ணின் பசலை காமநோயால் உண்டானதென்று சொல்லாதீம். (அகம். 52)

தலைவி கூற்று. இன்னுயிர் கழிவதாயினும் என்பது வாழ்க்கை முனிந்தது.

3. யாம் இத்தன்மையமாகவும் எமது கல்ல நெஞ்சமானது என்னெடும் நின்னெடும் ஆலோசியாது கைகடந்து சிறு மலை கள் பொருந்தி இருண்ட வழி நுணுகிய வருதற்கரிய மலையின் கண் மழையையுடைய மேகம் நீர்வடிந்து (நிறையப்பெற்ற) நுணுகிய அரிய கண்ணியுடைய யானைப்படுகுழியை வழியில் நிரவின்கண் மிதிப்புழி (அக்குழியின் மிதித்தலை நோக்கி) மிதி யாமல் அவர் தளிரடியைத் தாங்கும்படி இன்று சென்றது. (அகம். 128)

4. நல்லவரை நாடனே! நீ இரவில் வரின் மெல்லியரூன் உயிர் வாழாள். ஒரும் - அசைநிலை. (அகம். 12)

5. கடற்கரைச் சோலையும் எமது தலைவரிடம் எமக்காகச் சென்று தூது கூறுது; தேன் மொய்த்த நறுமலர்களையுடைய புன்னையுஞ் சொல்லாது; அலவ! ஒருவனுகிய நின்னையல்லது தூது போக்குதற்கு வேருென்றையுமிலேன். கரிய கழியின்கண் மலர்ந்த கண்போலும் நெய்தற்பூவின் கமழாநின்ற இதழ் நாற் றத்தை அமிழ்தாக விரும்பி அதன் தண்ணிய தாதை யூதிய வண்டுக் கூட்டங்கள் களிப்பாற் சிறந்து சிறகைக் கிளர்த்துகின்ற துறையையுடையனுகிய நீயே (சென்று) அத்தூதைச் சொல்ல வேண்டும். (அகம். 170)

6. புல்லிய வீழையுடைய இற்றியினுடைய கல்லிற் பட்டர்ந்த வெள்ளிய வேர் வரையினின்றும் கிழிகின்ற அருவிபோலத் தோன்றும் நாட்டையுடைய தலைவனது குற்றமற்ற நெஞ்சிற் றேன்றிய சொற்களை உரைக்குந் தூது நம்மாட்டு நயப்பைத் தந்தது. தோழியே! ஆதலால் நாமும் நெய்பெய் தீயைப்போலக் கிளர்ச்சியோடு அத்தூதை எதிர்கொண்டு அவன் மணந்தகாலத் தன்பையொத்த அன்பையுள்ளேம் என்று சொல்லித் தூதுவிடு வேம். (குறுந். 106)

7. தன் மகிழின்கணுள்ள சந்தன நாறும் மார்பன், மழைக் கண் நீங்க யாதோ போல வந்துநின்றான். என்ன காரியம் மேற் கொண்டு வந்தானோ? (குறுந். 161)

8. அவள் அங்ஙனமான இடத்து அவள் பூப்போலுங்கண் பாடின்மையைநீவிப். படுதற்கும் யானஞ்சுவேன்; அதற்குக் காரணமென்னெனில் அத்துயிலிடை நீங்கத்து வருந்தத்தக்க கனவாற் பின்னர்த்தாங்கிய அரிய வருத்தத்தால் உற்ற கேட்டைத் தூக்கிப்பார்க்கில் அஃது எல்லையறியவொண்ணுத மகிழினும் பெரிதாயிராநின்றது. இனி இவ்வருத்தம் உரைதபடி நீ வரையாமற் பிரியப்பட்டாளோடு கொண்ட உறவு பின்னுதலைக் கொடுத்தல்வேண்டும். (கலி. 48)

9. தலைவரை நினைப்பின் மனம் வேகும். அங்ஙனம் நினையாதிருப்பேமாயின் அவ்விருத்தல் எம்மளவின் அடங்குந் தன்மையதன்று. கடுமுரோயோ எம்மைவருத்தி வானத்தைத் தோய்வதுபோன்று பெருக்கத்தையுடையது. எம்மால் மருவப்பட்ட அத்தலைவர் சான்றோரல்லர். (குறுந். 102)

10. யான் அவனை வருத்துந் தன்மையனென்பதை யறிவேன்; தான் என்னை வருத்துந் தன்மையனென்பதை அவள் அறியாள். தான் எத்தன்மையள் ஆவளோ? பெரிய முதிய செல்வத்தை உடையோரது ஒப்பற்ற மடைமையையுடைய மகள். (குறுந். 337)

உவமம் சூத்திரம்

1. காதலர் செல்லும் அரிய வழியிடத்தில்நினைக்கொம்புகள் வாடும்படியாகச் சிறக்கும் நின் சினந்தணிவதாக என்று பரவிச் செறிந்த கதிரையுடைய ஞாயிற்றை யாம் வேண்டிக் கோடலும் நங்கற்பிற்கு இயைவதொரு காரியமோ? அல்லவே. (கலி. 16)

2. தன் பொய்ச்சூளுக்கு நாம் அஞ்சும் அச்சமே தான் ஊடலுணர்த்தும் வழியாக என்புலவியை உணர்த்த வருபவனது பொய்ச்சூளுக்கு அஞ்சி யான் ஊடேனாயிருப்பேன். (கலி. 75)

3. விரிந்த தலையாட்டத்தையுடைய மனச் செருக்குற்ற குதிரைபூண்ட தேரில் ஏற்றிக்கொண்டுவந்த விருந்தினரை ஏற்றுக் கோடலால் ஊடலை மறந்திருப்பேன் என்றும். (கலி. 75)

4. நல்ல தாரையணிந்த மார்பிற்கு ஓர் சார்பாகப் பொருந்திய நெடிய கரிய கூந்தலையுடைய கடவுளரெல்லாருக்கும் முட்டுப்பாடாகுதலும் உண்டு. (கலி. 93)

நச்சினார்க்கினியர் மார்பிற்கும் கடவுளர்க்கும் முட்டுப்பாடாகுதலும் உண்டு என்பதைத் தனித்தனி கூட்டியுரைப்பர்.

5. வேம்பின் அரும்பையொத்த நீண்ட கண்களையுடைய நீர்வாழ் ஞெண்டு இரையைத் தேடுகின்ற வெள்ளிய சுருக்குக் கஞ்சி அயலிலுள்ளதாகிய தழைத்த பகன்றையையுடைய அரிய அள்ளலாகிய சேற்று நிலத்தின்கண் தோலிப்போல வரிபொருந்த ஓடி நிரைந்து தன்னுடைய நீர்மலிந்த மண்ணிற் கிண்டிய புற்றின்கண் அடங்கியிருக்கு மூரனே! (அகம் 176)

6. அகப்பட்ட பரத்தையரது நெஞ்சு வலிதென்றறியாது பாகனைத் தேரொடும் போகவிட்டு அவள் உன்னை விருந்தாக எதிர்கொள்ள அவள் வரவினைக் கருதுகின்ற நீ. (கலி. 69)

7. குளிரான மாரிக்காலத்தேயாயினும் தென்றற்காற்று வீசின் உடம்பிற்கினிதாகும். (அதுபோல) தோழீ! ஊடியிருப்பினும் உரனுடைய நல்ல மேனியைக் கூடுதல் எமக்கு இன்பமாகும். (ஐங். 32)

8. அயிரைமீன் பரந்த அழகிய வயலிடத்தே தாங்குகின்ற அழகுமலர்ந்த உட்டுளையமைந்த திரண்ட தண்டையுடைய ஆம்பற்பூவைப் பறிப்போர் புனல் வேட்கையை அடைந்தாற்போல இவள் முலையிடைக் கிடந்தும் நடுங்கலுறுகின்றீராயினீர். தொழுதகாணும் மூன்றும் பிறைபோல யாமுமக்கு அரியேமாகித் தோன்றிய களவுக்காலத்து மிகவும் பொறுத்தீர் இதற்கு நோவேன்யான். (குறுந். 178)

9. நிலைகவருத வாய்மையையுடையவர்; நெடிதாகத் தோன்றுகின்ற இனிமையையுடையவர். (நற். 1)

10. எம்மைப்போலப் புல்லிய உயிர்போன்ற மயிரினையுடைய புதல்வனைப் பயந்து நெல்லையுடைய நெடுநகர்க்கண் நின்னையின்றியிருப்ப என்ன கடமையையுடையள். (அகம். 176)

இது தோழி கூற்று.

11. தமதுடைய இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருளில்லை யென்று கூறி வந்திரந்தவர்க்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இழிவாமென்றுகருதிக் காட்டைக் கடந்துபோய்த் தேடுதலிற் கருதின பொருள் நினைத்து மதிக்கும் பொருளாயினும் அருத்தி போலே எல்லோருக்குந் தொழுது வாழ்த்தும்படி விளங்கிய கற்பினையுடையவளுடைய காமச்செவ்வியாற் பெருமையையுடையவாய மெல்லியவாகிய தோள்களைப் பிரியாதிருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின் அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ? (கலி. 2)

12. இவற்றை முயங்கலே விடுகவென்று சொல்லத் தாம் மயங்கி யாம் ஒழியுமென்னவும் உடன்படாராய் இம்முலைகளைப்

பார்ட்டிய பருவமுமுள. இப்பொழுது புதல்வனைத் தடுத்த பாலொடு சாய்ந்து தேமலியணிந்த இனிய மென்முலைகளை அகலம் பொலிய முயங்கலி யாம் வேண்டினேம். தாம் தீம்பால் படுதலி அஞ்சினர். பருவம் என்றது களவுக்காலத்தைக் குறித்ததென்பர் பேராசிரியர். 272-ஞ் சூத்திர உரையுள் மறைந்தவையுரைத்தல் என்பதனுரை நோக்குக. (அகம். 26)

13. குறுமகளைக் கொண்டனை என்ப. அது, களிற்றைப் பிடித்த காலத்துப் பேரொலிபோலப் பலர்வாய்ப்பட்டு அலராகின்றது. (அகம். 96)

உரை-ம் சூத்திரம்

1. இவளேயன்றி, அவன்முனும் நினைப்புனத்திலிட்ட பரணிடத்து எரிந்த அகிலின் புகையாலுண்ணப்பட்டு ஒளிமழுங்கித் திரியும் மதியம் வானிடத்தே சென்று அம்மலைத் தலையிலே தங்கிற்றியின் அதனை அந்த மலையிலே வைத்த தேனினது இரு லென்று கருதி அதனை அழித்தற்குக் கண்ணேணி முதலியன சமைத்திருக்கும் காடு அகன்ற நாட்டையுடையவன் மகன். (கலி. 39)

2. யான் - நினைத்த வினையை முடித்தாலொத்த இன்பத்தைத் தருவோள் மனையின்கண் மாட்சிமைப்பட்ட தீபத்தை ஏற்றி அதனெடு வருந்துகின்ற மாலைப்பொழுது என்று. (நற். 3)

3. தஞ் சுற்றத்தாரது கேட்டைப் பாதுகாக்கவும் அவர்களுண்ணவும் சுற்றமல்லாத சுற்றத்தாரை (என்றது நண்பர்களை) நண்புசெய்து ஓழுகவும் தம் ஆள்வினைக்கு எதிர்ப்பட்ட உள்ளத்தோடு விரும்பி. (அகம். 93)

4. நீ விரும்பித் தலைவி தோளிலெழுதிய தொய்யில் தருகின்ற அழகினையும் இவள் மார்பில் நின்னை வலியாகவுடைய சுணங்கின் அழகையும் கைவிடல் ஒல்லுமாயின் நினைத்துப்பார். (கலி. 18)

5. அது கேட்டவன் நீ இங்ஙனம் இகழ்ந்து கூறுதலால் நின்னெடு ஒன்றுங் கூறேன்; முல்லையினது முகையையும் பீலி முருந்தையும் நிரைத்தாலொத்த பல்லும் பணைபோலுந் தோளும் பெரிய அமர்செய்யும் உண்கண்ணும் யான் நல்லேனென்று நின்னுடைய தகுதியைப் பிறர் நச்சுதலின்றி நீதானே நச்சியிருக்கின்ற சொல்லையுடையவளே! நின்னெடு மற்மாற்றஞ் சொல்லுதலை யார் நிகழ்த்துவாரென்முன். (கலி. 108)

6. நின் மகளது மையுண்ட கண்களைப் பலதரம் மாட்சிமைப்பட நோக்கி அக்குன்று நாட்டுக்குரியோன் சென்முன். பகல்நீங்கும் அந்தியாகிய சுடர்படுகின்ற காலத்து (மாலைக்

காலத்து) அவன் மறைந்த திக்குநோக்கித் தோழீ! இவன் ஒரு புருஷனே என்று வியந்து கூறினள். (அகம். 48)

7. கட்டுதல் மாட்சிமைப்பட்ட கண்ணியையுடையனுய் வில்லையுடையனுய் வரும்; அங்ஙனம் வந்து என்னைப் பார்த்துத் தானுற்ற நோயை மிகவுங் குறிப்பாலே யானுணரக் காட்டுவதன்றிக் கூற்முற் கூருனுய்ப் பலகாலும் மீண்டுபோம்; அது கண்டு அவனேயன்றி அவனிடத்து மிகவும் உறவில்லாத யானும் அவன் என்செய்கின்முனென்னும் நிலைவு மிக்குத் துயில்பெறேனுய் வருத்தத்திலே விழுந்து அழுந்துவேன். (கலி. 37)

8. நமக்காயின் நின் வருத்தத்திற்கு யாமும் வருந்தினேமென்று கூறுதல் பெண்டன்மையன்று. (கலி. 37)

9. தாதை உண்ணுகின்ற பறவை (வண்டு) வருந்துதலுக்கு அஞ்சி மணியின் நாவை ஒலியாவண்ணங் கட்டிய மாட்சிமைப்பட்ட தொழிலமைந்த தேரையுடையோன். (அகம். 4)

10. தனது வேட்கை நிறைந்த உள்ளத்தின்கண் எமது வேட்கையும் வாய்ப்ப என்பது பேராசிரியர் கருத்து. (காவல் அறியாமல்) தன்னை நச்சுதலையுடைய உள்ளத்தில் எம்முடை நசை (வேட்கை) வாய்ப்ப என்பது அகநானூற்றுக் குறிப்புரைகாரர் கருத்து.

11. என்முனைத் தொழில்கொள்கின்ற அவன் நெய்தற் பூவைப் புறவிதழொடித்து மாலைகட்டிச் சூடவும் வல்லன். நெடிதாகிய மென்முளிலே காமன் சிலையாகிய எழுது கரும்பை எழுதவும் வல்லன்; இளமுலைமேற் முய்யிற்குழம்பாற் கொடி எழுதவும் வல்லன்; இவையொழிந்து நீங்கியிருந்து மனம் வேட்கையடக்கி யிருக்குமிடத்துத் தன்கையில் வில்லைத் தொழில்கொள்ள வல்ல காமனை ஒக்கும்; அதுவன்றி வேட்கை நிகழ்ந்து கூடுங் காலத்து ஆண்டு நிகழ்த்தும் நல்ல தொழில்கள் பலவற்றையும் வல்லன். (கலி. 143)

12. பலவுங் கூடின உழுத்தம் பணியாரத்திலுங்காட்டில் துய்க்கப்பட்டிருக்கின்ற கூன் சாதியினுடைய பிறப்பு நின்னிற் முழ்ந்ததோவென்முள். (கலி. 94)

உவமையியற் சுருக்கம்

ஒரு பொருளை அறியாத ஒருவனுக்கு அதனை அறிவிக்குங்கால் அதனோடொத்த வேறொரு பொருளைக் காட்டி இதுபோலும் இது என்று கூறுவதே உவமையாம். ஆதலின், அவ்வுவமையும் பொருளைப் புலப்படுத்த வந்ததேயாம். பேராசிரியரும், உவமவியலிற்கு அதற்கு முதலிலுள்ள ஒத்திலோடு இயைபுகூறுங்கால், "மற்றிதுமேலெவ்வோத்திலே டியைபுடைத்தோவெனின், மேற்பொருள்புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோ டியைபுடைத்து; என்னை? உவமத்தானும் பொருள்புலப்பாடே கூறுகின்றனவின். எங்ஙனமெனின்? ஆபோலும் ஆமா என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்றவழி, அதனைக்கண்டுழி ஆபோலும் என்னும் உவமைபற்றி ஆமாவிதுவென்று அறியுமாகலான்" என்று கூறுதலானே உவமை பொருளைப் புலப்படுத்தற்பொருட்டே புலவர்களாலெடுத்தாளப் படுவதென்பது பெறப்படும். பொருளைப் புலப்படுத்தற்கேயன்றி, அப் பொருளைப் புனைந்துரைத்தல் காரணமாகவும் உவமை கூறப்படும். அங்ஙனமாதல், 'கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ' என்புழிக், கண்ணின் பிறழ்ச்சியை ஐயவுவமை வாய்பாட்டாற் புனைந்துரைத்தல் காரணமாகக் கயலின் பிறழ்ச்சி இங்கு எடுத்துக் காட்டப்பட்டதன்றிப், பொருளைத் தெரிக்கக் காட்டப்பட்டதன்றுதலானுணரப்படும். அன்றிக் கண்ணின் பிறழ்ச்சி தெரியாதானுக்கு அப்பிறழ்ச்சியை உணர்த்துமாறு கயலின் பிறழ்ச்சியை எடுத்துக்காட்டி இதுபோலும் இது என்று காட்டின் அதுவும் பொருள் புலப்படுக்கவந்ததேயாம்.

ஒரு பொருளுக்கு ஒரு பொருளை உவமிக்குங்கால், தொழிலும், பயனும், வடிவும், நிறமும் என்னும் நான்கனுள் ஒன்றனே உவமிக்கப்படும். எங்ஙனமெனின்? "புலிபோலும் மறவன்" என்புழி மறவனுடைய பாய்தற்றொழிலிற்குப் புலியின் பாய்தற்றொழிலை எடுத்துக்காட்டி, புலிபாய்வதுபோலப் பாயும் மறவன் என உவமித்தமையின் இது வினையுவமையாம். "மாரியன்னகை" என்புழிக் கையின் கொடைப்பயனை யுணர்த்தற்கு மழையை எடுத்துக்காட்டி, மழைபோல மிகக்கொடுக்கும் கை

யென அதன் புயன்பற்றி உவமித்தமையின் இது பயனுவமை யாம். "துடிபோலுமிடை" என்புழி மேலுங்கீழும் அகன்று நடுவே ஒடுங்கியிருக்கு மிடைக்கு, அங்ஙனமொடுங்கியிருக்கும் துடியை எடுத்துக்காட்டிக், துடிபோலும் இடையென உவமித்த மையான் இது வடிவுவமையாம். "பவளம் போலும் வாய்" என்புழி வாயின் செங்நிறத்தை உணர்த்துதற்குச் சிவந்த பவளத்தை எடுத்துக்காட்டிப் பவளம் போலும் வாயென உவமித் தமையின் இது நிறவுவமையாம். இங்ஙனம் நான்குவகையாக உவமித்தல்பற்றியே தொல்காப்பியரும் "வினை பயன் மெய் உரு என்ற நான்கே—வகைபெறவந்த உவமத் தோற்றம்" என்றார். உவமைகள் "வினை பயன் மெய் யுரு" என்ற நான்கனுள் ஒவ்வொன்றேபற்றி வருதலன்றி இரண்டும் மூன்றும் நான்கும் பற்றியும் வரும். அங்ஙனமாதலே "பிறையெயிறு", "அணிமலர் நறுந்தா தூதுந் தும்பி—கையாடுவட்டிற்றேன்றும்" என்னு மூதாரணங்களில் வைத்து உணர்ந்துகொள்க. பிறை, எயிற் றுக்கு நிறமும் வடிவும்பற்றி உவமஞ் செய்யப்பட்டது. பிறவும் இங்ஙனம் வரும் உவமைகளே இன்னதின்னதுபற்றி வந்ததென உய்த்துணர்ந்துகொள்க.

இனி, ஒன்றை உவமிக்குங்கால் உவமேயப் பொருளிலும் உவமைப்பொரு ளுயர்ந்ததாக விருத்தல்வேண்டும். ஏனெனின்? உவமைப்பொரு ளிழிந்ததாயிற் கேட்போனுக்குப் பொருட்கண் மனஞ் செல்லாதாகலான். உயர்ந்ததாயின் அவ்வுயர்ச்சிபற்றிக் கேட்போனுக்குப் பொருட்கண் மனஞ்சென்று அதனையும் அதன் மேன்மையையும் அறிந்துகொள்வான் என்றபடி. "பொன் மேனி" என்புழி பொன்னி னுயர்ச்சிபற்றிப் பொருளாகிய மேனிக்கண்ணே கருத்துச் சென்று அதனையும் அதன் சிறப் பையுங் கேட்போன் உணர்ந்துகொள்ளும் என்பது கருத்தாம். அதுபற்றியே, "உயர்ந்ததன்மேற்றே உள்ளுங்காலே" என்றார் தொல்காப்பியரும். உவமையையும் பொருளையும் பேதமாகக் கூறாது ஒன்றாக்கி "வாயே பவளம்", "வாய் பவளமாக" "வாயாகிய பவளம்" என்பனபோல அபேதமாகக் கூறுவது முண்டு. இவற்றை இக்காலத்தார் உருவகமென்பர்.

இனி, வினை முதலிய நான்கும்பற்றி ஒன்றை உவமிக்குங் கால் அவ்வுவமை பொருளின்கணுள்ள சிறப்பும், அழகும்,

காதலும், வலியும், இழிவும் என்னும் ஐந்தையும் இடமாகக் கொண்டு தோன்றும். அங்ஙனந் தோன்றுமாற்றை,

> முரசு முழங்குதானை மூவருங் கூடி
> யரசவை யிருந்த தோற்றம் போலப்
> பாடல் பற்றிய பயனுடை எழாஅற்
> கோடியர் தலைவ கொண்ட தறிஞ.

என்புழி, நிருத்த கீத வாச்சியம் என்னும் மூன்றோடுங் கூடிப் பாட்டுத் தோற்றம்பெற்றுச் சிறப்படைந்ததற்கு அரசர் மூவருங் கூடி அரசவையிருந்த தோற்றம் அவ்வவைக்குச் சிறப்பளித் தமையை உவமை கூறுதலானே, சிறப்பை யிடமாகக்கொண்டு பிறந்ததெனப்படுதலானும், 'ஓவத்தன்ன விடனுடை வரைப் பின்' என்புழி, ஓவம்போன்ற செயற்கை யழகையுடைய இட மென்றமையான், அங்ஙனதது செயற்கையழகையே இடமாகக் கொண்டு பிறந்ததெனப்படுதலானும், "பாவையன்ன பல ராய் மாண்கவின்" என்புழி, மகளிரிடத்துள்ள காதலை யிட மாகக்கொண்டு பாவையன்னவென்று கூறுதலின், இவ்வுவமை காதல் நிலைக்களமாகப் பிறந்ததெனப்படுதலானும், "அரிமா வன்ன அணங்குடைத்துப்பின்" என்புழி, பகைவரைக் கொல்லு தற்கு வலியே காரணமாகலின் அது காரணமாக அரிமாவை உவமை கூறுதலின், வலியை நிலைக்களமாகக் கொண்டு பிறந்த தெனப்படுதலானும், "அரவு நுங்குமதியின் நுதலொளி கரப்ப" என்புழி, நுதலொளி குறைந்தமைக்கு அரவு நுங்குமதியை உவமை கூறினமையின் இது இழிபை நிலைக்களமாகக் கொண்டு பிறந்ததெனப்படுதலானும் அறிந்துகொள்க.

இன்னும் உவமை, சுட்டிக்கூறும் உவமையும் சுட்டிக்கூறு வுவமையுமென இரண்டுவகைப்படும். சுட்டிக்கூறும் உவமையாவது பொதுத்தன்மையை வெளிப்படையாகச் சுட்டிக்கூறும் உவமை. அங்ஙனம் கூறுதது சுட்டிக்கூறு வுவமையாகும். "பவளம்போற் செந்துவர்வாய்" என்புழி உவமானம் உவமேயம் என்னும் இரண் டற்கும் பொதுத்தன்மையாகிய செம்மையை யிதுவென்று இங்கே சுட்டிக் கூறினமையின் இது சுட்டிக்கூறிய வுவமை யாகும். "பவளவா" யென்புழி அங்ஙனங் கூறுமையிற் சுட்டிக் கூறு வுவமையாகும். சுட்டிக்கூறும் உவமை விரியுவமையென் றும், சுட்டிக்கூறு வுவமை தொகையுவமையென்றுங் கூறப்படும். உவமை கூறுங்கால் உவமேயத்தோடு ஒத்த குணமுடையவற் றையே எடுத்து ஒப்புமை கூறவேண்டும். ஒவ்வாதவற்றை

எடுத்து உவமை கூறின் அது வழுவாம். ஆமாவெதுபோலு மெனின் ஆப்போலுமென அதனோடொத்த குணமுடையதையே ஒப்புமை கூறுவதன்றி அதனோடொவ்வாதவொன்றை உவமை கூறுதலாகாது. இதுபற்றியே தொல்காப்பியரும் "உவமையும் பொருளும் ஒத்தல்வேண்டும்" (சூ. 283) என்றார். இச்சூத் திரத்திற்கு இவ்வாறு பொருள் கூறுதலே பொருத்தமென்பது எமது கருத்து. பேராசிரியரும் இளம்பூரணரும் வேறு வேறு கருத்துக் கூறுவர். சூத்திரப் போக்குநோக்கிப் பொருந்து வதை ஆராய்ந்துகொள்க.

இனி, உவமையை உவமேயமாகவும், உவமேயத்தை உவமை யாகவும் மாறிக் கூறினும் அஃது உவமையாம். எங்ஙனமெனில், "பவளம்போலும் வா" யென்பதை வாய்போலும் பவளமென்று மாறி உவமஞ் செய்யினும், அஃதும் உவமையாகக் கொள்ளப் படும். அங்ஙனம் மாறிக் கூறுங்கால் ஆண்டும் உவமையாக நின்ற உவமேயப் பொருளே உயர்ந்ததாகக் கருதப்படும். இவ் வாறு மாறிக் கூறுவனவற்றை "விபரீத உவமை" யென்பர் தண்டியாசிரியர்.

இன்னும் மிகப் பெரிய பொருளையெடுத்தும் மிகச் சிறிய பொருளையெடுத்தும் உவமிக்குங்காலும் இன்பமுறும் சிறப்பிற் றீராதவாய்க் கேட்டார் மனங்கொள்ளுமாறு (விரும்புமாறு) வரும் உவமைகளையே எடுத்துக் கூறல்வேண்டும். ஏனெனின்? அவ் வாறு கூறலே ஆன்றோர் மரபாதலின்.

"மாக்கட னடுவ னெண்ணூட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்."

என்றவழி சிறிய கூந்தலுக்கு மிகப் பெரிய பரப்பையுடைய கடலையும் சிறிய நுதலுக்கு மிகப் பெரிய பரப்பையுடைய மதியையும் உவமை கூறலாமோவெனின்? அவ்வுவமைகள் பெருமையுடையனவாயினும் சிறப்புடைமையிற் றீராது கேட்டார் மனங்கொள்ளுமாறு நிற்றலான் அவை கூறத்தக்கனவேயாம்.

இனி, உவமையைக் காட்டும் உருபுகள் 'அன்ன' முதலாக முப்பத்தாறும், பிறவும் தொல்காப்பியனாற் கூறப்பட்டுள்ளன. அவையன்றி உவமான உவமேயங்களுக்கு இடைவருஞ் சொல் லெல்லாம் உவமை உருபாகு மென்பாருமுளர். அன்ன முதலிய உருபுகளுள் விஞ்முதலிய நான்கற்கும் உரியவாகவரும் உருபுக

ளிவை யிவையென்றும் அவை உரியவாதற்குக் காரணம் மரபு பற்றி யறியப்படும் என்றுந் தொல்காப்பியர் கூறுவர். அவ் வாற்றைப் பின்வரும் உவம வியலிற் காண்க. உவம வுருபுகள் தொக்குவருதலும் விரிந்துநிற்றலும் பற்றி விஞ்முதலிய உவமப்பகுதி நான்கும் எட்டாதலுமுள.

இன்னும் உவமை பெருமையுஞ் சிறுமையும்பற்றி மெய்ப் பாடுகள் எட்டோடுங் கூடிவரும், பெருமையுஞ் சிறுமையும்பற்றி வாராது மெய்ப்பாடெட்டோடு மாத்திரம் வருதலேசிறப்பென்பர் பேராசிரியர். உவமையானே உவமேயத்துக்குற்ற பொருள்கள் அறியப்படும். அறியுங்கால் மரபுபற்றி அறியப்படும். அடை யும் பொருளுமாய்வரும் உவமேயத்திற்கு அடையும் பொருளு மாயே உவமையும் வருதல் வேண்டும். சிறுபான்மை அடை யின்றியும் உவமை வருமென்க. இனி உவமேயப்பொருள்களை உள்ளுறுத்து வைக்கப்படும் உள்ளுறை உவமைகளும் செய்பு ளிடத்து வரும். அவைகளை ஓர்ந்துணர்க. அவ்வுள்ளுறை விஞ பயன் மெய் உரு பிறப்பு எனவரும் பொதுத்தன்மைகளானே ஐந்து வகைப்படும் என்க. உள்ளுறையுவமைகளைத் தலைவி சொல்லுங்கால் தானறிந்த பொருளானே சொல்லுவள். தோழி சொல்லுங்கால் தங்நிலப் பொருளானே சொல்லுவள். தலை வன் உள்ளுறை சொல்லுங்கால் தன்னறிவுடைமை தோன்றச் சொல்லுவான். அவன் எங்நிலப்பொருளானுஞ் சொல்லுவான். இவர்களல்லாத கூற்றுக்குரிய ஏனையோர் சொல்லுங்காலும் எங் நிலப் பொருளானுஞ் சொல்வர். தோழியுஞ் செவிலியும் உள்ளுறை சொல்லுங்கால் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்பக்கூறுவர். உவ மைகள் இன்பமுந் துன்பமுந் தோன்றச் சொல்லப்படும் என்க. இன்னும் முற்கூறிய இலக்கணங்களின் வேறுபடவரும் உவமை களும், ஒவ்வாதெனத்கூறி ஒப்பாகக்கொள்ளும் உவமைகளும், பெருமையுஞ் சிறுமையுந் தோன்றக் கூறாமல் இயற்கைபடக் கூறும் உவமைகளும், உவமேயத்தை உவமையாக்கிக் கூறும் உவ மைகளும் உளவென்க. உவமைக்குவமை கூறலாகாது. கூறிற் குற்றமாகும். நிரனிறையாகவும் உவமைகள் கூறப்படும். இவற்றை யெல்லாம் ஆன்றோர் செய்யுள் நோக்கியும் பின்வரும் 'உவமவியல்' நோக்கியு மறிந்துகொள்க.

ஏழாவது : உவமவியல்

[உவமையின் பொதுவிலக்கணமும்
அவற்றின் பெயராதியவும் உணர்த்தல்]

உசசு. வினைபயன் மெய்யுரு வென்ற நான்கே
வகைபெற வந்த வுவமத் தோற்றம்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோவெனின், உவமவியல் என்னும் பெயர்த்து. உவமம் என்பது, ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதல். இதனானே இவ்வோத்து முதலியதூஉம் உவமப் பொருளே கூறுதலாயிற்று. மற்று அகம் புறம் என்பனவற்றுள் இஃது என்ன பொருளெனப்படுமோ வெனின், [1] அவ்விரண்டுமெனப்படும் ; "மெய்ப்பாடுபோல" என்பது ; என்னை ?

"உவமப் பொருளி [2] னுற்ற துணருந்
தெளிமருங் குளவே திறத்திய லான." (உசுரு)

என மேல் வருகின்றதாகலின்.

மற்றிவ் விருதிணைப் பொருளும் உவமம்பற்றி வழக்கினுள் அறியப்படுதலானும், உவமம்பற்றியும் பொருள் கூறுகின்றனென்பது. மேல் அகத்திணையியலுள் (சகூ) உவமத்தினை இரண்டாக்கி ஓதினான், உள்ளுறையுவமம் ஏனையுவமமெனை ; அவ்விரண்டனையும் ஈண்டு விரித்துக் கூறுகின்றவாறு ; அவற்றுள், ஈண்டு ஏனையுவமத்தினை முற் கூறினான் ; அஃது அகத்திணைக்கே [3] சிறந்ததன்றாயினும் [4] யாப்புடைமை நோக்கி ; உலக வழக்

---

1. அவ்விரண்டும் என்றது அகம்புறம் என்னும் இரண்டையும். மெய்ப்பாடும் இரண்டற்கும் வருமென்றபடி.

2. 'உற்றதுணரும்' என்றதனால் அகம்புறமாகிய உவமிக்கப்படும் பொருளெல்லாங் கொள்ளப்படும் என்பதற்காக இச்சூத்திரங் காட்டப்பட்டது.

3. சிறந்ததன்றாயினும் எனவும் பாடம். அது சிறப்பு.

4. யாப்புடைமை—இயையுடைமை. பரப்புடைமை எனவும் பாடம். ஏனையுவமத்தினை முற் கூறற்குப் பரப்புடைமையே நோக்கமாதல் காண்க. சேனாவரையரும் சொல்லதிகாரத்து உரியியலில் 'குறிப்பும் பண்பும் இசையும் என்பவற்றுள் குறிப்புப் பரப்புடைமை நோக்கி முற் கூறினர்' என்று கூறுதல் காண்க. உள்ளுறையுவமம் செய்யுட்குமாத்திரம் வரும். ஏனையுவமம் வழக்குச் செய்யுள் இரண்டற்கும் வரும் என்றபடி.

கினுஞ் செய்புள் வழக்கினும் வருமாகலானுமென்பது. அஃதேல் உள்ளுறையுவமஞ் செய்புட்கே உரிமையின் அதனைச் செய்யுளியலுட் கூறுகவெனின், உவமப் பகுதியாதல லொப்புமை நோக்கி ஓரினப் பொருளாக்கி ஈண்டுக் கூறினுமாயினும், வருகின்ற செய்யுளியற்கும் இயையுமாற்றான் [1] அதனை ஈற்றுக்கண் வைத்தான். அது செய்புட்குரித்தென்னுங் கருத்தானென்பது. எனவே, எழுத்தினுஞ் சொல்லினும்போலச் செய்புட்குரியன செய்புட்கென்றே ஓதலும் [2] ஒருவகையாற் பெற்றும்.

மற்று, 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' (நூ) [3] அல்லாத வழக்கு, ஆராயப் பயந்ததென்னையெனின்,—அப்புலனெறி வழக்கிற்கு உறுப்பாகிய வழக்கினை ஆராய்தலும் அதற்கு உபகாரமுடைத்தாதலா லென்றவாறு. மற்றிது, மேல் எவ்வோத்தினோடு இயைபுடைத்தோவெனின், மேற் பொருள்புலப்பாடு கூறிய மெய்ப்பாட்டியலோடு இயைபுடைத்து; என்னை? [4] உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றாகலின், எங்ஙனமோவெனின்,—'ஆபோலும் ஆமா' என்றக்கால் ஆமா கண்டறியாதான் காட்டுட் சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையேயற்றி ஆமா இதுவென்று அறியுமாகலா னென்பது.

இவ்வோத்தின் தலைச்சூத்திரம் என்னுதலிற்றெனின், உவமத்திற்கெல்லாம் பொதுவிலக்கணங் கூறி, அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

1. அதனை—உள்ளுறையுவமையை. ஈற்றுக்கண் வைத்தமையாலே அடுத்துவரும் செய்யுளியற்கு உரித்தென்பது பெறப்படும் என்றபடி.

2. ஓருவகையாற் பெற்றும் என்றது சூத்திரத்தாற் கூறுது அதிகாரத்தாற் பெறவைத்தமையை. எழுத்ததிகாரத்தும் சொல்லதிகாரத்தும் சூத்திரங்களால் செய்யுட்குரியவற்றைச் செய்யுட்குரியவென எடுத்தோதுவர்; எடுத்தோதாதவற்றை அதிகாரத்தாற் பெறவைப்பர். அவ்வாறே ஈண்டும் உள்ளுறையுவமையதிகாரத்தைச் சாரச் செய்யுளியலை வைத்தமையால் செய்யுளுக்கே உள்ளுறை உவமை உரித்தென்பது ஓதியதாயிற்று என்றபடி.

3. அல்லாத வழக்கு—உலகவழக்கு.

4. உவமை பொருள் புலப்பாடும் அலங்காரமும்பற்றி வருமென்பர் இளம்பூரணர். அவருரை நோக்குக.

இதன் பொருள்: தொழிலும், பயனும், வடிவும், வண்ணமும் என்னும் நான்கெனப்படுங் கூறுபட வரும் உவமத் தோற்றம் என்றவாறு.

1 'உவமம்' என்பதனை வினைமுதலாகிய நான்கினொடுங் கூட்டி வினையுவமம் பயனுவமம் மெய்யுவமம் உருவுவமமெனப் பெயர் கூறப்படும்.

வினையாற் பயப்பது பயனதனின் பயத்திற்குமுன் வினை கூறப்பட்டது; அதுபோலப் [2] பிழம்பினுல் தோன்றும் நிறத்தினை [3] அதற்குப்பின் வைத்தான்; பயனும் பொருளாக நோக்கி மெய்யினையும் [4] அதனுடன் வைத்தானென்பது. மற்று மெய்யெனப்படுவது பொருளாதலின் அதன் புடைபெயர்ச்சியாகிய வினை பிற்கூறுகவெனின்,—வினையுவமந் தன்னுருபு தொக்கு நில்லாது விரிந்தே நிற்றற் சிறப்புடையனவும் உளவாக நோக்கி அது முற்கூறினனென்பது. அது 'புலிமறவன்' எனத் தொகாது 'புலியன்ன மறவன்' என விரிந்தே நிற்றலும், 'புலிப்பாய்த்துள்' எனத் தொக்குவருதலும் உடைத்தென்பது. தொகை நான்கென எண்ணிக்கொடுத்தான்.

வரலாறு:— 'புலியன்ன மறவன்' என்பது வினையுவமம்; அது பாயுமாறே பாய்வனென்னுந் தொழில்பற்றி ஒப்பித்தமையின்; அற்றன்றித் தோலும் வாலுங் காலும் முதலாகிய வடிவும் ஏனைவண்ணமும் பயனும் ஒவ்வாவென்பது; ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும்.

"மாரி யன்ன வண்கைத்
தேர்வே ளாயைக் காணிய சென்மே." (புறம். கஉக)

என்பது பயவுவமம்; என்னை? மாரியான் விளக்கப்படும் பொருளும், வண்கையாற் பெறும் பொருளும் ஒக்குமென்றவாறு.

1. உவமம் என்பது என்றிருப்பது நலம். கூறப்படும் என்பது பயனிலையாதலின். கூட்டி—கூட்டப்பட்டு. கூறப்படும் என்பதைக் கூறுதல்செய்யப்படும் எனவிரித்து எழுவாயும் பயனிலையுமாக்குவாருமுளர். (பிரயோகவிவேகம்)

2. பிழம்பு—திரட்சி. என்றது ஈண்டு வடிவினை.

3. அதற்கு—வடிவிற்கு.

4. அதனுடன்—பயனுடன்.

'துடியிடை' என்பது மெய்யுவமம்; அல்குலும் ஆகமும் அகன்றுகாட்ட [1] அஃகித் தோன்றும் [2] மருங்குலால் துடி அதனோடு ஒத்தது.

'பொன்மேனி' என்பது உருவுவமம்; பொன்னின்கண்ணும் மேனியின்கண்ணுங் கிடந்த நிறமே ஒத்தன; பிற ஒத்திலவென்பது. இந்நான்கும்பற்றி உவமந் தோன்றுமென்பது கருத்து. 'உவமத் தோற்றம்' என்பது மூன்றுவதன் தொகை, உவமத்தாற் பொருள் தோன்றும் தோற்றமென்றவாறு.

மற்று 'அடைசினை முதல்' (தொ. சொ. உசு) என்றற் போல, அடையெனலே [3] இந்நாற்பகுதியும் அடங்கக் கூறிப் 'பண்புத்தொகை' என்புழி வண்ணம் வடிவு முதலாயின அடக்கியவாறுபோலப் [4] பண்பென்று அடக்குதல் செய்யாது ஈண்டு நான்கெனப் பகுத்ததென்னையெனின்,—இது பொருளாராய்ச்சியாகலான் [5] கட்புலனும் பண்பும் உற்றுணரும் பண்பும் வேறுக நோக்கி வடிவினையும் உருவினையும் வேறுபடுத்தான்; என்னை? வடிவுபற்றிய பண்பு இரவின்கண் [6] உற்றுணரப்படும்; வண்ணமாயின் அவ்வாறு உற்றுணரப்படாதென்பது. [7] அல்லாக்காற் பகற்குறிக்கட் கூறப்படும் வண்ணம் முதலாயினவும் இரவுக்

1. அஃகி—சுருங்கி.

2. மருங்குல்—இடை.

3. இந்நாற்பகுதி—வினை பயன் மெய் உரு.

4. வண்ணம் வடிவு முதலிய நான்கையும் அடையெனக் கொண்டு அவ்வடைதன்னையும் பண்பென்று அடக்கிக் கூறலாமே? இந்நனம் நான்கெனப் பகுத்ததென்னை? என்று வினவிவிடை கூறுகின்றார்.

5. கட்புலனும் பண்பு—நிறம் (உரு). உற்றுணரும் பண்பு—வடிவு.

6. உற்றுணரப்படும் என்பது (உருவாக) உற்றுணரப்படும் என்று S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிற் காணப்படுகின்றது. உரு என்பது நிறத்திற்கே முன்பின் வாக்கியங்களிற் காணப்படுதலின் வடிவையும் உரு என்று ஈண்டுக் கூறல் மயக்கமாமாதலின் 'உருவாக' என்பது ஈண்டு வேண்டியதின்று. உற்றுணர்தல்—பரிசித்தறிதல். பண்பினை என்பது பண்பு என்றும் இரவின்கண் என்பது இரவின்கண்ணும் என்றுந் திருத்தப்பட்டன; அவ்வாறிருத்தலே பொருத்தமாதலின்.

7. அல்லாக்கால்—உற்றுணரப்படுமாயின்.

குறிக்கண் எய்துவான் [1] சொல்லும் வடிவும் பண்பும் ஒன்றுக [2] கூறினனென்பது; அல்லதூஉம், உணர்த்துகின்ற தினைப் பொருளினை எளிதிற் புலப்படுத்த லுபகாரம் நோக்கியும் அவ்வாறு பகுத்தானென்பது.

"களிற்றிரை தேரிய பார்வ லொதுக்கி
ஞெளித்தியங்கு மரபின் வயப்புலி போல." (அகம். உஉ)

என்புழி, பார்வலொதுக்கமாகிய வினை, பண்பெனப்படாது; என்னை? பண்பென்பது [3] குறிப்பின்றி நிகழுங் குணமாகலினென்பது. [4] அடையெனினும் அதுவேயெனக் கூறி மறுக்க. எனவே பார்வலொதுக்கமெனப்பட்ட வினைப்பகுதியாற் பிழையாமற் கோடற்குப் [5] பார்வலொதுங்கி நின்றானென்பதும் பிறர்க்கஞ்சிப் பார்வலொதுங்கி நின்றானல்லனென்பதுஞ் சொல்லி, அவன் தலைமைக்கேற்ற உவமையாதலின், அது [6] பொருட்டோற்றமாயிற்று.

1. சொல்லும் என்பது செல்லும் என்றிருத்தல்வேண்டும்.

2. கூறினனென்பது கூறின் என்றிருத்தல்வேண்டும். இப்படிப் பாடம் உள்ளது. கூறின் செல்லும் என முடிக்க. கட்புலனும் பண்பு வடிவு என்றும், உற்றுணரும் பண்பு உரு (நிறம்) என்றும் பவானந்தம்பிள்ளை பதிப்பிலும் S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலும் மாறி எழுதப்பட்டது. அது பொருத்தமில்லை என்பது பின் பேராசிரியரே, 'வடிவுபற்றிய பண்பினை யிரவின்கண உற்றுணரப்படும். வண்ணமாயின்வ்வாறுற்றுணரப்படாது என்று கூறலானும்', தண்டியாசிரியர் 'வடிவும் பண்பினு ளடங்குமென்று கொண்டாரேனும் இந்நூலுடையார் கட்புலனும் பண்பும் உற்றுணரும் பண்பும் என வேறுகக் கொண்டார். அங்ஙனங் கோடல் வடிவுபற்றிய பண்பு இருளின்கண்ணு முற்றுணரப்படும்; வண்ணமாகிய (கட்புலனும்) பண்பு இரவின்கண் அவ்வாறுணரப்படாதாதலின் வடிவினைக் கூட்டி நாலென்றார்' என்று வரும் மாறனலங்காரத்து உரையானு முணரப்படும். (உவமையலங்காரம் க-ம் சூத்திரம்.)

3. குறிப்பின்றியெனவே, வினை மனத்தாற்குறித்துச் செய்யப்படுவதென்றுயிற்று.

4. அடையெனினும்=அவ்வினையை அடையென்று சொல்லினும்; அதுவேயென்றது குறிப்பின்றி நிகழும் குணமாகிய அப்பண்பே என்றபடி.

5. பார்வலொதுங்கி நிற்றல்—பார்வைக்கு மறைந்து நிற்றல். ஒதுங்கி நின்றான் என்பது ஒதுங்குகின்றான் என்றும் பாடம்.

6. தலைமைக்கேற்ற உவமையாதலின் பொருட்டோற்றமாயிற்று என்றது — புலி தலைமகனுடைய தலைமைக்கேற்ற

"மாரியன்ன வண்கை" (புறம். கஙஉ)

என்பதூஉம் பண்பாயின், அதன் நிறத்து மேற்கொண்டு வண்கை யுங் கரிதெனல் வேண்டும்மாகலின் அது பண்பென அடங்காது.

"அணைத்தோள்" (கலி. அள)

என்பதும் அது.

"உருவுகிள ரோவினைப் பொலிந்த பாவை
யியல்கற் றன்ன வொதுக்கினள்" (அகம். கசக)

என்றக்கால், வடிவுபற்றி உவமங்கொள்ளவே, உயிரில்லாதாள் போல அச்சமின்றி, இரவிடை வந்தாளென்னும் பொருள் தோன்றும். வடிவு பண்பெனப்படாது; [1] பண்பு இழிபாகலின்.

"மாரிப் பீரத் தலர்சில கொண்டே" (குறுந். கூஅ)

காட்டி,

[2] "இன்ன ளாயின னன்னுதல்" (குறுந். கூஅ)

என்றவழி, குறித்த பருவங் கழிந்திதன்னும் பொருண்மை விளங்கிற்று. இது உருவுவமம்.

[3] இவ்வாறு பொருளுணர்த்துதற் பகுதிநோக்கி 'உவமப் பகுதி' என்றுனென்பது; என்றூர்க்கு, இந்நான்கு பகுதியே யன்றி அளவுஞ் சுவையுந் தண்மையும் வெம்மையும் நன்மையுந்

உவமையாதலின், புலிபோலப் பிழையாமற் கோடற்குப் பார்வ லொதுங்கினனன்றிப் பிறர்க்கஞ்சி ஒதுங்கினனல்லன்; என்னும் பொருள் தோற்றமாயிற்று என்றபடி.

1. பண்பு இழிபாகலின் என்பது பண்பியாகலின் என் றிருத்தல்வேண்டும். பண்பையுடையது பண்பி. என்னை? நிறத்தை யுடையது வடிவாகலின். முன்னும் 'பிழம்பினுற் றோன்றுவது நிறம்' என்றும், 'மெய்யெனப்படுவது பொருளாதலின்' என் றுங் கூறுதலானும், பின்னும் 'ஓடற்பெருமில் வடிவிற்கல்ல தின் மையின் அவ்வடிவிற்கேற்றது பண்பாயின், பண்பு—நிறப்பண்பு ஓடிற்றெனவாகாமையின் (உவம. கள) என்று கூறுவதனாலும் அறியப்படும். வடிவு பண்புக்காதாரமாதல்பற்றிப் பண்பி என்றூர்.

2. இன்னள் — இத்தன்மையள். என்றது, இப்பூவினைப் போலப் பசப்புற்றுள் என்றபடி. பசந்தமைக்குக் காரணம் பரு வங் கழிதல்.

3. உருவுவமம் என்பது முன் வாக்கியத்தோடு சேரல் வேண்டும் இன்னள் என்பது உருவுவமங் குறித்து நின்ற தென்றபடி.

நிறமுஞ் சிறுமையும் பெருமையும் முதலாயினபற்றியும் உவ மப்பகுதி கூறுரோவெனின்,—அவையெல்லாம் இந்நான்கனுள் அடங்குமென்றற்கும் அந்நான்கும் இன்ன பொருட்பகுதி உடைய வென்றற்குமன்றே அவற்றை 'வகைபெற வந்த' என்பானுயிற் றென்பது.

"பறைக்குர லெழிலி" (அகம். உஙு)

என்றக்காற் பறையும் எழிலியும் [1] ஒத்தல் விகினபற்றி உவமை கொள்வான் ஒன்றற்குக் குரல்கூறி ஒன்றினை வாளாது கூறினு னுயினும் விகினியுவமத்தின் வகையெனப்படும்.

"கடைக்கண்ணுற் கொல்வான் போனெக்கி" (கலி. டுக)

என்பதூஉம் அதன்வகை.

'வந்த' என்றதனுன் இல்லாத விகின வருவித்துஞ் சொல் லப்படும்; அவை,

"விசும்புரி வதுபோல்" (அகம். உச)

எனவும்,

"மணிவாழ் பாவை நடைகற் றன்ன" (நற். கஅச)

எனவும்,

"வான்றேய் வள்ள குடிமையும்" (பாயிரம்)

எனவும் வரும்.

இவை, [2] உவமையும் பொருளுமாகிய விகினபற்றி வந்தில வாகலின் அதன் வகையெனப்பட்டன. 'அன்ன' [3] 'ஆங்க' என்பன இடைச்சொல்லாகலின் விகினப்பின்னும் வந்தன. 'நடை கற்றன்ன' என்புழிக் கற்று என்னும் விகினயெச்சந் [4] தன்

---

1. ஒத்தல்—ஒலித்தல் என்றிருத்தல்வேண்டும்.

2. உவமையும் பொருளுமாகிய விகினபற்றி வந்தில என் றது உவமையாயும் உவமேயமாயும் நிற்குந் தொழில்பற்றி வந் தில என்பது கருத்து.

3. ஆங்க என்பதற்கு உதாரணம் இறந்ததுபோலும். செய் யுள் வழக்கில் ஆங்கு என்றே காணப்படுகின்றது; ஆதலின் இது ஆராயத்தக்கது.

4. தன் எச்சவிகின இகந்ததாயினும் என்றது தவக்குரிய முடிக்குஞ் சொல்லாகிய விகினயை நீங்கியதாயினும் என்றபடி. கற்று என்பது அன்ன என்னும் குறிப்பாகிய பிற கருத்தாவின் விகினயொடு முடிதலின் அவ்வாறு கூறினர். அன்றி, இடைச் சொல்லாதல் நோக்கிக் கூறினர் எனினுமாம்.

னைச்சவினை இகந்ததாயினும் அஃது உவமப் பகுதியாகலான் அங்ஙனம் வருதலும் 'வகை' என்றதனானே கொள்ளப்படும்.

"கொன்றன்ன வின்ன செயினும்" (குறள். கக—சு)

என்பதும் அது.

"இணரெரி [1]தோய்வன்ன வின்ன செயினும்" (குற. நக—அ)

என்பது, வினைப்பெயர்பற்றி உவமஞ் சென்றது.

[2]"பொன்மரம் போலக் கொடுக்கும்"

என்பது, பயவுவமத்தின் பகுதியாய் அடங்கும்; என்னை? [3]மழைத்தொழிலாகிய பெயலாற் பயந்த விளையுளுடன் இடையிட்டுப் போய் உவமங்கொள்ளாது கொடைப்பொருள் இரண்டும் ஒத்தமையின் மெய்யுவமம் எனப்படாது கொள்வார்க்குப் பயம் ஒத்தலாற் பயவுவமத்தின் வகையாயிற்று. 'நிலம்போலுங் கொடை' என்பதும் அது.

"தெம்முனை யிடத்திற் சேயகொல்"

என்னும் எல்லைப் பொருண்மை மெய்யுவமத்திற்கு வகையெனப் படும்; அஃது [4]அளவாகலினென்பது. [5]இடைக்கிடந்த நிலம் இரண்டினையும் வடிவுபற்றி உவமஞ்செய்தானென்பது. மற்றுச்

---

1. தோய்வு—தோய்தல். தொழிற்பெயர். வினைப்பெயர்—தொழிற்பெயர்.

2. பொன்மரம்—கற்பகமரம். அது பின் கச-ம் சூத்திரத்துட் காட்டிய "புத்தேளுலகிற் பொன்மரம் புல்லை" என்பதனால் அறியப்படுகின்றது.

3. 'மழைத்தொழிலாகிய.....கொள்ளாது' என்பது சண்டியைபில்லாத வாக்கியம் மாறி எழுதப்பட்டதுபோலும். அன்றி பயனுவமையை வகையுளடக்கியதற்கு ஏதுக் கூறியதெனின் பயனுவமை கொள்ளுங்கால் இடையிட்டுத்தான் கொள்ளவேண்டும் என்பது ஒரு நியதியா? என்பது ஆராயத்தக்கது.

4. அன்னவாகலின் என்பது முன்னுள்ள பாடம். அது பொருத்தமில்லை.

5. இடைக்கிடந்த நிலம்—இடை கிடந்த நிலம் என்று பாடம் உள்ளது. அதுவே பொருத்தம். இடை—வெளி. இரு பக்கத்துச் சேனைக்கும் நடுவே கிடந்த வெளி நிலம். இடத்திற் சேய—இடத்தினைப்போலத் தூரிய. இஃது அண்மைத் தூரம் "தெம்முனையிடத்திற் சேயகொல்' இ. வி. சுஙகூ-ம் சூத்திர உரைப் பாடம்.

சேய்மை அண்மை குணமாம் பிறவெனின்,—அற்றன்று; 'துடியிடை' என்றவழி அதன் இடை நுணுக்கமுங் குணனுகும், அவ்வாறு கொள்வார்க்கு என்பது; எனவே நிறப்பண்பு அல்லனவெல்லாம் மெய்யுவமத்தின் வகையெனப்படுவனவாயின. குணமாதலொப்புமையான் அவை நிறப் பண்பிற்கு இனமென வும்படும். அவ்வாறு திரிபுடைமையின் அவற்றை விதந்தோதாது 'வகை' என்றதனற் கொண்டானென்பது.

"தளிர்சிவந் தாங்குச் சிவந்த மேனி"

என்பது, உருவுவமத்தின் வகையெனப்படும்; என்னை? உவமத்தாற் கொள்ளப்பட்ட பொருள் [1]நிறமாயினும் அதனை வினை விரித்தாங்கு விரித்தமையின் அவ்வேறுபாடு நோக்கி வகையெனப்பட்டது. பிறவும் அவ்வாறே கொள்க. இப்பகுதியுடைமை நோக்கி 'வகைபெற வந்த' என்றனென்பது. (க)

[வினை முதலிய நான்கும் கலந்தும் வருமென்று எய்திய இகந்துபடாமற் காத்தல்]

உளஎ. விரவியும் வரூஉ மரபின வென்ப.

இஃது, எய்தியது இகந்துபடாமற் காத்தது; நான்கென மேல் (உஎசு) தொகை கொடுத்தமையின் அவை வேறு வருதலெய்தினவன்றி விரவியும் வரும் என்றமையின்.

இ—ள்: அந்நான்கும் ஒரு பொருளோடு ஒரு பொருள் உவமஞ் செய்யும்வழி ஒன்றேயன்றி இரண்டும் மூன்றும் விரவியும் வரும் அதன் மரபு என்றவாறு.

"செவ்வா னன்ன மேனி" (அகம். கடவுள் வாழ்த்து)

என வண்ணம் ஒன்றுமேபற்றி உவமஞ் சென்றது.

"அவ்வா
னிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று"
(அகம். கடவுள்.)

என்றவழி, [2]வண்ணத்தோடு வடிவுபற்றி உவமஞ் சென்றது.

---

1. நிறம்—செம்மை. அதனை—அச்செம்மை நிறத்தை. வினை விரித்தாங்கு விரித்தது என்றது சிவந்தாங்குச் சிவந்த என விரித்தமையை.

2. வண்ணம்—வெண்மை. வடிவு—வனப்பு.

"காயா மென்சினை தோய நீடிப்
பஃ[1] றுடுப் பெடுத்த வலங்குகீலக் காந்த
ளணிமலர் நறுந்தா தாதுந் தும்பி
கையாடு வட்டிற் றேன்று
மையாடு சென்னிய மலைகிழ வோனே." (அகம். கoஅ)

என்புழி, ஆடுகற்றெழில்பற்றியும் [2] வடிவுபற்றியும் வண்ணம் பற்றியும் வந்தது. பிறவுமன்ன.

'மரபின்' என்றதனுன் அவை அவ்வாறு விராய்வருதலும் மரபே; [3] வேறுவேறு வருகலே மரபெனப்படாதெனக் கொள்க. (உ)

[பொருளினும் உவமை உயர்ந்துவரல் வேண்டுமெனல்]

உஎஅ. உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை

இஃது, எய்தாதது எய்துவித்தது.

இ—ள்: உவமையெனப்பட்டது உயர்ந்த பொருளாகல் வேண்டும் என்றவாறு.

எனவே, உவமிக்கப்படும் பொருள் [4] இழிந்துவரல்வேண்டுமென்பது,

"அரிமா வன்ன [5] வணங்குடைத் 'துப்பின்" (பட்டின. உகஅ)

எனவும்,

1. துடுப்புப்போலும் பூவரும்பு. பூமடலுமாம். துடுப்பு—நெய்த்துடுப்பு. (அஃதாவது கருக்கு சுருவம்) சூடாமணி நிகண்டு பார்க்க.

2. வடிவு—வட்டம். வண்ணம் (-நிறம்), நீலவட்டாயின் நீலம். செம்மைவட்டாயின், வண்டு காந்தட்டாதின் அலைதல்பற்றி யுவமையாம். காந்தள் கைக்கு வடிவும் நிறமும்பற்றி வந்த உவமையாகும்.

3. வேறுவேறு வருதல்மாத்திரம் மரபென்று கொள்ளப்படாது. விரவி வருதலும் மரபாகும் என்பது கருத்து.

4. இழிந்துவரல்—உவமையினும் இழிந்துவரல்.

5. அணங்கு—வருத்தம். இது வலிபற்றியது. வலியால் வருத்துதல்பற்றி வினையுவமையாகும்.

1 "மாரி யம்பின் மழைத்தோற் சோழர்" (அகம். நுகசு)

எனவும்,

2 "கடல்கண் டன்ன கண்ணகன் பரப்பின்" (அகம். களசு)

எனவும்,

"பொன் மேனி"

எனவும் வரும்.

இவற்றுள், உவமையுயர்ச்சியானே உவமிக்கப்படும்பொருட்குச் சிறப்பெய்துவித்தவாறு கண்டுகொள்க.

'உள்ளுங்காலை' என்றதனுன் 'முன்னத்தி னுணருங் கிளவி' (தொ. சொ. சஙிகூ) யான் உவமங் கோடலும், இழிந்த பொருள் உவமிப்பினும் உயர்ந்த குறிப்புப்படச் செயல்வேண்டுமெனவுங் கொள்க. அவை: 'என் [3] யானை', 'என்பாவை' என்றவழி, அவைபோலும் என்னுங் குறிப்புடையான், பொருள் கூறிற்றிலனாயினும், அவன் குறிப்பினுன் அவை வினையுவமையெனவும் மெய்யுவமையெனவும்படும். [4] இவற்றுக்கு நிலைக்களங் காதலும் நலனும் வலியுமென்பது சொல்லுதும்; அவை பற்றுது சொல்லுதல் குற்றமாகலின்.

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு." (குறள். கoகூ—க)

1. மாரி—மேகம். அது மழையைப் பெய்து பயிர்களை வளர்த்துப் பயன்றரல்போல் அம்பும் பகைவரைக் கொன்று பொருட்பயன் வினைத்தலின் பயவுவமை என்பதற்கு உதாரணமாகக் காட்டினுர். வென்வேல் என்று முன்னும், மழைத்தோல் என்று பின்னும் வருதலின், மாரியீகை என்னும் பாடம் பொருத்தமோ என்பது ஆராயத்தக்கது. 'மாரியீகை' தாமோதரம்பிள்ளை பதிப்பிற் பாடம். அவ்வாறே பேராசிரியர் பாடங்கொண்டு பயவுவமைக்குக் காட்டினுரோ என்பது ஆராயத்தக்கது.

2. கடல்—வடிவுவமை.

3. யானை—வினையுவமை. பாவை—வடிவுவமை.

4. இவற்றுக்கு நிலைக்களங் காதலும் நலனும் வலியுமென்பது சொல்லுதும் என்பது. இவற்றுக்கு நிலைக்களம் சிறப்புங் காதலும் நலனும் வலியும் என்பது சொல்லும் என்றிருத்தல் வேண்டும். சொல்லும் என்றது ஆசிரியனை. அவன் சொல்லுதலை உகூ-ம், உஅo-ம் சூத்திரங்களானறிக.

என்பது, ஐயுற்று [1] முன்னத்தான் உவமஞ்செய்தது. [2] தாமரை யன்று முகமேயெனத் துணிந்தவழியும், [3] மழையன்று வண் டிருத்தலிற் குழலேயெனப் பொருட்குக் காரணங் கொடுத்த வழியும் [4] மதியங்கொல்லோ மறுவில்லையென்று உவமைக் குறை பாடு கூறுதலும்,

"நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினை
யை [5]தேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மகிலு மன்று
பூவமன் றன்று சுணையு மன்று
மெல்ல வியலு மயிலு மன்று
சொல்லத் தளரும் கிளியு மன்று." (கலி. நுரு)

என்பனவுமெல்லாம் அவை. இவற்றுண் [6] மகிலுஞ் சுணையும் உவமையின்மையின் அவற்றைப் பிறையோடும் மதியோடும் உடன் வைத்து உவமைபோலக் கூறி எதிர்மறுத்தது என்னை யெனின்,—அவையாமாறு 'முதலுஞ் சினையும்' என்புழிச் சொல்லுதும்.

"என்ற வியப்ப வென்றவை யெஞ்சு" (தொ. உவம. கக)

என மேல்வருஞ் சூத்திரத்துள் என்றவென்பதோர் உவமவுருபு கூறினமையின் 'வாயென்ற பவளம்' எனவும், 'வாய் பவளமாக' எனவும், 'வாய் பவளம்' எனவும் வருவனவும் அக்குறிப் புவமையின் பகுதியெனவே படும். இவற்றை வேறுவேறு பெயர் கொடுத்து விரித்துக் கூறுது முன்னத்தி னுணர்வனவே [7] இவை யெல்லாமென்னுந் துணையே இலேசினுற் கூறி ஒழிந்ததென்னை யெனின்,—இவற்றுற் செய்யுள் செய்வார் செய்யும் [8] பொருட்

1. முன்னம்—குறிப்பு. ஐயவாய்பாட்டாற் கூறினும் அவை குறிப்பால் உவமையாதல் பெறப்படும் என்றபடி.
2. இதனைத் தண்டியாசிரியர் உண்மை உவமை என்பர்.
3. தேற்றவுவமை என்பர்.
4. விலக்குவமையுளடங்கும்.
5. தேய்ந்தன்று—தேய்ந்தது. ஏனையுமன்ன.
6. மகில—மகிலிடம். சுணை—சுணையிடம். வருஞ் சூத்திரத்து உரை நோக்குக.
7. இவையெல்லாம்—இம்முன்னமாதியவெல்லாம்.
8. பொருட்படை—பொருளடுக்கு. பொருட்டிரள் எனினு மாம்.

படைப் பகுதி எண்ணிறந்தனவாகலின், அப்பகுதியெல்லாங் கூறுது பொதுவகையான் வரையறைப்படும் இலக்கணமே கூறி யொழிந்தானென்பது. 'வாயென்ற பவளம்' எனவும், 'வாய் பவளமாக' எனவும், 'வாய் பவளம்' எனவும் வந்த [1] பவளக் குறிப்புவமைகளை இக்காலத்தார் உருவகமென்றே வழங்குட இனி,

"வாய் பவளம்"

எனவும்,

"கண்ண் கருவிளை"

எனவும் பெயர்ப் பயனிலை வரின் அவற்றை ஒற்றுமை காட்டி உருவகம் என்று [2] ராகலின் அதுவும் உவமையெனவே படுமென் (ங) பது.

[உவமை பிறக்குமிடம் இவை எனல்]

உரு. சிறப்பே நலனே காதல் வலியோ
டந்நாற் பண்பு நிலைக்கள மென்ப.

இதுவும், எய்தாதது எய்துவித்தது.

இ—ள்: விளை பயன் மெய் உரு என்பனபற்றி உவமை கூறுங்கால் இவை நான்கும் இடனுகப் பிறக்கும் உவமை என்றவாறு.

'நிலைக்களம்' என்பது, அவை அவ்வாறு உவமை செய் தற்கு முதலாகிய நிலைக்களமென்றவாறு.

"முரசுமுழங்கு தானை மூவருங் கூடி
[3] யரசவை யிருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை யெழாஅற்
கோடியர் தலைவ கொண்ட தறிஞ." (பொருந. நுச)

என்பது, சிறப்பினுற் பெற்ற உவமமாகலிற் சிறப்பு நிலைக்கள னுகப் பிறந்தது.

1. பவளம் என்ற சொல் ஈண்டு வேண்டியதில்லை.
2. ஆகலின் என்பது ஆயினும் என்றிருப்பது நலம்.
3. இப்பாட்டிற் போல என்பதைப் பாடல்பற்றிய என் பதனோடு முடிக்க. தோற்றம் அவைக்குச் சிறப்பளித்ததுபோலப் பாடலும் நிருத்தகீத வாச்சியத்தோடு கூடித் தோற்றம்பெற்றுப் பாட்டிற்குச் சிறப்பளித்தமையின், தோற்றம்போல என்பதைச் சிறப்பு நிலைக்களனுகப் பிறந்த வுவமை என்றுர் என்க. சிறப்

[1] "ஓவத் தன்ன விடனுடை வரைப்பின்:" (புறம். உடுக)
என்புழி, அங்ஙகரினது செயற்கை நலந் தோன்றக் கூறினமை யின் அதற்கு நிலைக்களன் நலனுயிற்று.

[2] "பாவை யன்ன பலராய் மாண்கவின்" (அகம். கூஅ)
என்புழி மகள்கட் காதல் காரணமாக உவமை பிறந்தது; 'என் யானே' என்பதும் அது.

"அரிமா வன்ன வணங்குடைத் துப்பின்" (பட்டின. உகூஅ)
என, ஒருவன் வலி காரணமாக உவமம் பிறந்தமையின் அதற்கு நிலைக்களம் அவன் வலியாயிற்று.

இவ்வாறு கூறவே, உயர்ந்த பொருளின் இழிந்ததினப் பட்ட பொருள் யாதானும் இயைபில்லதொன்று கூறலாகாதென வும், உவமையொடு முழுதும் ஒவ்வாமை மாத்திரையாகி அதனை [3]டொக்கும் பொருண்மை உவமிக்கப்படும் பொருட்கண்ணும் உளவாகல் வேண்டுமெனவுங் கூறி, அவைதாமும் [4] பிறர் கொடுப் பப் பெறுவனவும், ஒரு பொருட்கண் தோன்றிய [5] நன்மை பற்றியவும், காதன் மிகுதியால் உளவாகக்கொண்டு உரைப்பன வும், தன்றன்மையால் [6] உளவாயின வலிபற்றினவுமென நான்கா

பாவது பிறர் கொடுக்கப் பெறுவது என்றும், இயல்புவகையா னன்றி விகாரவகையாற் பெறுவது என்றும் பேராசிரியர் கூறுவர்.

இனி, போல என்பதை இப்பாட்டின் இறுதியில் வரும் இன்மைதீர வந்தனன் என்பதனோடு முடித்துப் பயனுவமையாக நச்சினார்க்கினியர் கொள்வர். அம்முடிபின்படி, சிறப்பு நிலைக்கள மாகப் பிறந்த பயனுவமையாகக் கொள்ளுங்கால், தோற்றம் பெற்று அவை சிறப்புற்றதுபோல யானும் நின்பொருள் பெற் றுச் சிறப்படைய வந்தேன் என்பது கருத்தாகக் கொள்க. முந் திய முடிபே பேராசிரியர்க்குக் கருத்தென்பது, உதாரணங் காட்டுமிடத்து நான்கடியையுமே காட்டியதாலறியப்படுகின்றது.

1. ஓவம்—ஓவியம். வரைப்பு—நகர்.

2. பாவை—வடிவுவமை. மகளிற்கொண்ட காதல்பற்றிப் பாவை என்றலின் காதல்பற்றி என்றார். யானை என்பதும் காதல் நிலைக்களனுகப் பிறந்த வினையுவமை.

3. ஒக்கும் பொருள்—பொதுத்தன்மை.

4. பிறர் கொடுக்கப் பெறுவன—சிறப்பு.

5. நன்மைபற்றிய—நலம்பற்றி வருவன.

6. உளவாயினவாகிய வலி பற்றின என்க.

மென்றவாறு. இவற்றுக்கெல்லாம் வினை பயன் மெய் உரு என் னும் நான்குங் [1] தலைப்பெய்யுமென்பது.

சிறப்பென்பது, உலகத்துள் இயல்புவகையானன்றி விகார வகையாற் பெறுஞ் சிறப்பு. நலனென்றது அழகு. காதலென் பது அங்நலனும் வலியும் இல்வழியும் உண்டாக்கியுரைப்பது. வலியென்பது தன்றன்மையானே உள்ளதோர் வலியெனக் கொள்க. இவற்றை நிலைக்களமெனவே இவை பற்றுது உவமம் பிறவாதென்பதாம். தன்மேல் வருகின்ற பகைவனைப், 'பகை வன் புலிபோலும்' என்று [2] அவன் வீரக் குறிப்பு அறியா மற் கூறுங் குறிப்பு இன்மையின் அவ்வுவமைக்குத் தோற்றம் ஆண்டில்லை; [3] தன் வினையுவமமாகலிற் றிரியாதாயினுமென்பது. (சி)

[இதுவுமது]

உஅ. கிழக்கிடு பொருளோ டைந்து மாகும்.

இது மேற்கூறிய நிலைக்களத்திற்கு ஓர் புறனடை.

இ—ள்: அந்நிலைக்களம் நான்கேயன்றிக் கிழக்கிடு பொரு ளோடு ஐந்தெனவும்படும் என்றவாறு.

கிழக்கிடு பொருளென்பது, கீழ்ப்படுக்கப்படும் பொருள்.

[4] "இகுளை குரலே கிழக்குவீழ்ந் தனவே" (குறுந். நகஎ)
என்புழி, கீழ் வீழ்ந்தன என்பதனைக் கிழக்கு வீழ்ந்தன என்ப வாகலின். ஒரு பொருளின் இழிபு கூறுவான் உவமத்தான் இழிபு தோன்றுவித்தலின் அதுவும் நிலைக்களமா மென்றவாறு.

---

1. தலைப்பெய்தல்—கூடல். நான்குந் தலைப்பெய்யுமெனவே பதினாறும் என்றபடி.

2. ஒருவன் தன் பகைவனை, அவனுடைய வீரக் குறிப்பை அறிதற்குமுன் பகைவன் புலிபோலும் என்று கூறுங் குறிப்பு இன்மையின் அவ்வுவமைக்குத் தோற்றம் ஆண்டு இல்லை என் பது கருத்து.

3. தன் என்பது தான் என்றிருப்பது நலம். தான் என் றது உவமையை. தன்வினை உவமமாதலிற் றிரியாதாயினும் என்று கண்ணழித்துப் பொருள் கொள்ளினுமையும். ஆக லின்—இன், நீக்கம்.

4. கிழக்கு வீழ்ந்தன—கீழ் வீழ்ந்தன. என்றது தலையிற் சூடித்த மெல்லிய மயிர் கீழே தாழ்ந்தன என்றபடி.

[1] "உள்ளூ தாவியிற் பைப்பய [2] நுணுகி" (அகம். எக)

எனவும்,

[3] "அரவுதுங்கு மதியி னுதலொளி கரப்ப"

எனவும் வரும்.

இவை பொருளன்றி உவமையுங் கிழக்கிடப்பட்டனவா லெனின், அங்ஙனமாயினும் அவை பொருளோடு சார்த்தி நோக்க உயர்ந்தனவெனப்படும். (ரு)

[முதல் சினைபற்றி உவமை வருங்கால்
இவ்வாறு வரல்வேண்டும் எனல்]

உஅக. முதலுஞ் சினையுமென் றுயிரு பொருட்கு
நுதலிய மரபி னுரியவை யுரிய.

இது, மேற்கூறி வருகின்ற உவமை, முதல்சினைபற்றி வருங் கால் இன்னவாறாகவென்கின்றது.

இ—ள்: முதற்பொருளுஞ் சினைப்பொருளும் என்னும் அவ் விரண்டு பொருட்குங் குறித்தவகையான் மரபுபடவரின் உரி யவை உரியவாம் என்றவாறு.

இதன் கருத்து: முதலொடு முதலும், சினையொடு சினை யும், முதலொடு சினையும், சினையொடு முதலும் வேண்டியவாற் றான் உவமஞ் செய்தற்கு உரியவெனவும், அங்ஙனஞ் செய்யுங் கால் மரபு பிறழாமைச் செய்யப்படுமெனவுங் கூறியவாறு.

[4] "வரைபுரையு மழகளிற்றின் மிசை" (புறம். நஅ)

என்பது, முதற்குமுதலே வந்து உவமையாயிற்று;

[5] "தாமரை புரையுங் காமர் சேவடி" (குறுந். கடவுள்)

என்பது சினைக்குச் சினையே வந்து உவமையாயிற்று.

---

1. உள்ளது ஆவி — கண்ணுடியின் உள்ளே (வாயான்) ஊடிய ஆவி.

2. நுணுகல்—சுருங்கல் (குறைதல்). நுணுகுதற்கு ஆவி இரிவுபற்றி வந்த உவமை. இழிபு—குறைவு.

3. அரவு—பாம்பு. அரவு நுங்குமதி ஒளிமறைதல்போல ஒளிமறைய என்றபடி.

4. வரையும் களிறும் முதற் பொருள்கள்.

5. தாமரை—தாமரைப்பூ. இது சினை.

"நெருப்பி னன்ன சிறுகட் பன்றி" (குறுந். கசுo)

என்பது, முதல் உவமமாகப் பொருள் சினையாகி வந்தது.

"அடைமரை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றேன்றுறின் செம்மலைக் காணூஉ." (கலி. அச)

என்பது, சினையுவமமாக உவமிக்கப்படும் பொருண்முதலாயிற்று.

'நுதலிய மரபு' என்றதனால்,

"விசும்பி னன்ன [1] சூழ்ச்சி." (புறம். உ)

என்றக்கால், விசும்பென்பது முதலாதல் கருதி யுணர்தல்வேண் டும்; முதற் சினைப்பகுதி அதற்கு இன்மையினென்பது. இனி,

"வேயமன் றன்று மலையு மன்று" (கலி. நுடு)

என்றவழியும், மலைநோக்காது மலையுள்வேயெழும் இடங்கருதி அவ்விடமன்றென்றவாறெனக் கொள்க.

"பூவமன் றன்று சுனையு மன்று" (கலி. நுடு)

என்பதற்கும் ஒக்கும்.

உரிய என்னுது 'உரியவை' என்றதனால் தினையும் பாலும் மயங்கிவரும் உவமையுங் கொள்ளப்படும். அவை,

"மாரி யானையின் வந்துறின் றனனே" (குறுந். கசுக)

என்பது தினை மயங்கிற்று.

[2] "கூவற்,
குராலான் படுதுய ரிரவிற் கண்ட
வுயர்திணை [3] யூமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் றேமி நோய்க்கே" (குறு. உஉச)

என்பது உயர்திணைப்பான் மயங்கிற்று.

"கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடிக் கடக்கை யோடா வம்பலர்" (பெரும்பாண். எடு)

என்பது, ஒருமை பன்மை மயங்கிற்று.

"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று"
(அகம். கடவுள்)

என்பது [4] அஃறிணைப்பான் மயங்கிற்று; பிறவுமன்ன.

---

1. சூழ்ச்சி—ஆராய்ச்சி.

2. கூவற்குராலான்—கிணற்றில் விழுந்த குராற்பசு. குராற் பசு—கபிலைப்பசு.

3. ஊமன்—ஆண்பால்.

4. அஃறிணைப்பால் என்றது ஒருமை பன்மையை. எயிறு பன்றிக் கோடுகள். இவை பன்மை.

இக்கருத்து அறியார் இவற்றையும்,

"செப்பினும் விஞவினுஞ் சினைமுதற் கிளவிக்கு"
(தொ. சொ. கசு)

என்புழி, இலேசுகொண்டு உரைப்ப. (சு)

[தொகையுவமையிற் பொதுத்தன்மையை அறியுமாறு இவ்வாறெனல்]

உஅஉ. [1] சுட்டிக் கூரு வவம மாயிற்
பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே.

இஃது, எய்தாகதது எய்துவித்தது.

இ—ள்: உவமத்திற்கும் பொருட்கும் பொதுவாகிய ஒப்புமைக் குணம் நான்கினையும் விதந்து சொல்லி உரையாதவழி அவ்விரண்டனையும் எதிர்பெய்து கூட்டி ஆண்டுப் பொருந்திய தொன்று பொருந்தியதபற்றி வினை பயன் மெய் உருவென்னும் நான்கினுள் இன்னதென்று சொல்லப்படும் என்றவாறு.

'பவளம்போற் செந்துவர்வாய்' என்பது, சுட்டிக்கூறிய வுவமம்; என்னை? இரண்டிற்கும் பொதுவாகிய செம்மைக் குணத்தினைச் சொல்லியே உவமஞ் சொல்லினமையின். அது 'பவளவாய்' என்கின்றவழிச் சுட்டிக்கூரு வுவமமாம். ஆண்டுப் பவளத்தினையும் வாயினையுங் கூட்டிப்பார்த்துச் செம்மைக்குணம் பற்றி உவமஞ் செய்ததென்று அறியப்படும்; அல்லாக்கால், வல்லென்ற கல்லிற்கும் மெல்லென்ற இதழிற்கும் உள்ளதோர் ஒப்புமை ஆண்டில்லையென்பது; பிறவுமன்ன. (எ)

[உவமையும் பொருளும் ஒத்துவரல் வேண்டுமெனல்]

உஅங. [2] உவமையும் பொருளு மொத்தல் வேண்டும்.

இதுவும் அது.

இ—ள்: உவமானமும் பொருளுந் தம்மின் ஒத்தனவென்று உலகத்தார் மகிழ்ச்சி செய்தல்வேண்டும் என்றவாறு.

1. சுட்டிக்கூரு வவமையைத் தொகையுவமை என்பர் தண்டியாசிரியர். பொதுத்தன்மை தொகுவது தொகையுவமை என்றும் உருபு கூடத்தொகுவது தொகையுவமை என்றும் இரு பாலாகக் கூறுவர் ஆசிரியர்.

2. இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் இரட்டைக் கிளவியானும் நிரனிறை சுண்ணமாய் வரினும் அடையடுத்து வரினும்

"மயிற்றோகை போலுங் கூந்தல்"

என்பதன்றிக்,

"காக்கைச் சிறகன்ன கருமயிர்"

என்று சொல்லின், அஃதொத்ததெனப்படாதென்றவாறு.

"புலிபோலப் பாய்ந்தான்"

என்பதன்றிப் பிழையாமற் பாயும் என்பதேபற்றிப்

"பூசைபோலப் பாய்ந்தான்"

எனின், அதுவும் ஒப்பென்று கொள்ளாது உலகமென்றவாறு. ஈண்டு ஒத்தவென்பதனை,

[1] "ஒத்த தறிவான்" (குறள். உஉ—ச)

என்பதுபோலக் கொள்க.

[உவமேயமும் உவமமாகக் கூறப்படுமெனல்]

உஅச. பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினு
மருளறு சிறப்பினஃ துவம மாகும்.

இது மேற்கூறியவாறன்றி வருவதோர் உவமை விகற்பங் கூறுகின்றது.

இ—ள்: 'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை' (உஎஅ) என்புழி, உவமம் உயர்ந்துவரல் வேண்டுமென்றமுன்; இனிப் பொருளினை உவமமாக்கி உவமையை உவமிக்கப்படும் பொருளாக்கி மயங்கக் கூறுங்காலும் [2] அஃது உவமம்போல உயர்ந்ததாக்கி வைக்கப்படும் என்றவாறு.

"வருமுலை யன்ன வண்முகை புடைத்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை" (சிறுபாண். எஉ—ங)

தொழிற்பட்டு வரினும் ஒன்னும் பலவுமாகி வரினும் உபமேயமுமவ்வாறே வருதல்வேண்டும். அவ்வழியன்றி மிக்குங் குறைந்தும் வருவது குற்றமென்றவாரும் என்று பொருள்கொள்வர். அது பொருத்தமாகவே தோன்றுகின்றது. இதனை உவமையும் பொருளு மொத்தல்வேண்டும்; அன்றேல் வழுவாம் என்று அபவாதம் விதிக்க வந்ததாகக் கோடலுமாம். சரசுவதி கண்டாபரணம் என்னும் வடநூற் கருத்து மிதனோடொப்புடையது. அபவாதம்—வழு.

1. ஒத்தது—உலகத்தார் ஒப்புக்கொண்டது.

2. அஃது—உவமேயம். (பொருள்)

என்றவழி, வருமுலையும் திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும் பூவும் பொருளாயின ; [1] ஆண்டு முலையும் முகமும் உயர்ந்தவாகச் செய்தமையின் அவையே உவமமாயின.

இவை உவமத்தொகையாங்கால் 'முலைக்கோங்கம்', 'முகத்தாமரை' எனப்படும். இவற்றை வேறு உருவகமென்றும் பிறர் மயங்குப. சிறப்பென்றதனுன் ஒப்புமை மாத்திரையன்றித் தான் புனைந்துரைக்கக் கருதிய முலையினையும் முகத்தினையும் உயர்ந்த பொருளாகிய உவமத்தினும் உயர்ந்தவாகச் சிறப்பித்துரைத்தானென்பது. 'மருளறு சிறப்பின்' என்றதனுன், அங்ஙனஞ் சிறப்பிக்குங்கால் மயக்கந்தீரச் சிறப்பித்தல்வேண்டும். [2] அஃது உலகினுள் உயர்ந்ததென்று [3] ஒப்ப முடிந்த பொருளினையுஞ் சிறப்பித்தற்கு உவமஞ் செய்பவோவெனிற் செய்யாரென்பது ; என்னை ? 'முகமொக்குந் தாமரை' என்றல் முகத்திற்குந் தாமரைக்குஞ் சிறப்புடைமை மயங்கி வாராது ; பின்னும் முகத்திற்கே சிறப்பாமென்பது கருத்து. அஃதெனப்பட்டது [4] பொருளாகலான் 'உயர்ந்ததன்மேற்று' (உஎஅ) என்னும் விதி அப்பொருட்கு எய்துவிக்க. (கூ)

[பெருமையும் சிறுமையுமாய உவமைகளும்
சிறப்பிற்றீராவாயிற் கொள்ளப்படுமெனல்]

உஅரு. பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீராக்
குறிப்பின் வருஉ நெறிப்பா டுடைய.

இஃது, உவமத்திற்கு ஆவதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

---

1. ஆண்டு—பொருள் உவமையாயவிடத்து. செய்தமையின் என்பதில் செய்தமைக்குக் கருத்தா கவி.

2. அஃது—அஃதேதல் என்றிருப்பது நலம்.

3. ஒப்ப முடிந்த பொருள் — ஏற்றுக்கொள்ள (அங்கீகரிக்க) முடிந்த பொருள். அஃது உவமை. முலையன்ன கோங்கம் என்றவழிக் கோங்கமுகை இயல்பாகச் சிறந்தது. அதனை முலையோடுவமித்தவழி முலைக்கே சிறப்பாகுமன்றி இயல்பாகச் சிறந்த கோங்கிற்குச் சிறப்பாகாது என்றபடி. முகமொக்குந் தாமரை என்பதற்கும் அவ்வாறே கொள்க. முடித்த—முடிந்த என்றிருப்பது நலம். மாறிக் கூறுங்கால் உவமையாக வரும் முலைக்குச் சிறப்பு ஆக்கிக்கொண்டதன்றி இயல்பன்று என்றபடி.

4. பொருள்—உவமேயம்.

இ—ள் : இறப்ப உயர்வும் இறப்ப இழிவும் உவமிக்குங்கால் இன்னுவாகச் செய்யாது சிறப்புடைமையில் தீராவாகிக் கேட்டார் மனங்கொள்ளுமாற்றுன் வருதலே வழக்கு வலியாக வுடைய என்றவாறு.

"அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றே
ருசாஅப் போல வுண்டே நுசுப்பு."

என்றவழி, உலகத்தார் அவாப்போலப் பெரிதாகிய அல்குலெனக் கழிபெரும் பரப்பிற்றுகக் கூறினும் அது சிறப்பிற்றீராக் குறிப்பிற்றுதல் வழக்குண்டாகலின் உடம்படப்படும் என்றவாறு.

"மாக்கட னடுவ ணெண்ணுட் பக்கத்துப்
பசுவெண் டிங்க டோன்றி யாங்குக்
[1] கதுப்பயல் விளங்குஞ் சிறுநுதல்." (குறுந். கஉகூ)

என்றவழி, கடல்போன்றது கூந்தலெனவும், கடனடு எழுந்த எண்ணுட் பக்கத்து மதிபோன்றது நுதலெனவுங் கூறினுன். நுதலுற் கடல்போலும் மயிரென்றதும், பல காவதப் பரப்புடைய மதிபோன்றது நுதலென்றதுங் கழியப் பெரியவாயினும், அது வழக்காதலிற் சிறப்பிற்றீராது மனங்கொள வந்ததெனவே படும்.

"சுரும்பு [2]மூசாச் சுடர்ப்பூங் காந்தள்" (திருமுரு. சஉ)

என்பதும் அது.

"சான்றே
[3]ருசாஅப் போல வுண்டே நுசுப்பு"

என்றவழியும் நுண்ணுணர்வின் ஆராய்ச்சி ஒருவர்க்கும் புலனுகாததனை ஒக்கும் இடையென்றமையின் அதுவுங் கழியச் சிறிதாக உவமித்தார்.

"யாணை யணியவர் நட்பொரீஇ [4]நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்" (நால. உகஉ)

என்பதும் அது. இவையுஞ் (சிறுமையுஞ்) சிறப்பிற்றீராக் குறிப்பின் வந்த [5]வழக்காதல் அமைந்தனவென்பது. பிறவு மன்ன.

---

1. கதுப்பு—முற்பக்க மயிர்.

2. மூசாத—மொய்யாத.

3. உசாஅ—ஆராய்ச்சி. நுண்மைபற்றிய உவமை,

4. நாய் இழிந்ததாயினும நட்புபற்றிக் கூறலின் சிறப்பிற் றீராது என்றபடி. இவையும் அமைந்தன என இயையும்.

5. வழக்காதலின் என்றிருப்பது நலம்.

இவ்வாறன்றி 'மேரு மால்வரை காம்பொத்து விண்முகடு குடையொத்து விண்மீன் கணம் முத்துப்போன்றன' என வடிவு பற்றி உவமங் கூறுதல் [1] தமிழ் வழக்காகின்றதென்பது.

இனி,

[2] "வள்ளத்தி னீர்கொண் டுமிழ்ந்த முகிச்சாந்து மறுகிற்பரந் தள்ளல் யாணையெல்லா மடிவழுக் கினவே."

என்பதோவெனின், அவ்வாற்றானும் இன்பங் கொள்வார்க்கு அவையும் இழுக்கில் என்பது.

"சோறு வாக்கிய கொழுங் கஞ்சி
யாறு போலப் பரந்தொழுகி." (பட்டின. சச—சடு)

என்பதோவெனின், யாதென்ற துணையானே பேர்யாதெனக் கொண்டு உலகிறந்தனவாகாமைக்கன்றே,

[3] "ஏறுபோர்ச் சேருகித்
தேரோடத் துகள்கெழுமி." (பட்டின. சகூ—சள)

என்பதாயிற்றென்பது. (கo)

[உவம உருபுக ளிவையெனல்]

உஅசு. அவைதாம்,
அன்ன வேய்ப்ப வெறழ வொப்ப
வென்ன மான வெற்றவை யெனஅ
வொன்ற வொடுங்க வொட்ட வாங்க
வென்ற வியப்ப வெறிறவை யெனஅ
வெள்ள விழைய விறப்ப நிகர்ப்பக்
கள்ளக் கடுப்ப வாங்கவை யெனஅக்
காய்ப்ப மதிப்பத் தகைய மருள
மாற்ற மறுப்ப வாங்கவை யெனஅப்
புல்லப் பொருவப் பொற்பப் போல

1. தமிழ் என்பது தமீஇ என்றும் பாடமுள்ளது. இதுவும் பெருமைபற்றியதாயினும் சிறப்பிற்றீராமையிற் றழுவப்பட்டு வழக்காகின்றது என்பது கருத்து. தமிழ் வழக்காகின்றது என்பதும் பொருந்துமேற் கொள்க.

2. வள்ளம்—சிறு கிண்ணம். மகளிரின் மிகுதி கூறலின் இதுவும் இழுக்கில என்றபடி.

3. பேராறு ஏறுழக்கச் சேருகாது; தேரோடத் துகள் கெழுமாது; ஆதலால் சிற்றுறென்றபடி.

வெல்ல வீழ வாங்கவை யெனஅ
நாட நளிய நடுங்க நந்த
வோடப் புரைய வென்றவை யெனஅ
வாரு றவையு மன்ன பிறவுங்
கூறுங் காலைப் பல்குறிப் பினவே.

இஃது, உவமத்தினையும் பொருளினையும் ஒப்பிக்குங்கால் இடைவருஞ் சொல் இனைத்தென்கின்றது. 'அவைதாம்' என்பது வினை பயன் மெய் உருவென்னு நான்குவகையு மென்றவாறு.

இ—ள்: இவை எண்ணப்பட்ட முப்பத்தாறு சொல்லும் இவையேபோல்வன பிறவும் வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் வேறுபடு குறிப்பினவாகி வரும் என்றவாறு.

'ஆறுறவையும்' என்பது அவை முப்பத்தாறு மென்றவாறு, 'பல்குறிப்பின' என்பது அவை இடைச்சொல்லாகித் தொக்கு வருவனவுந் தொகாதே நிற்பனவும் வினைச்சொல்லாகி வேறுபட நிற்பனவுமெனப் பலவாமென்றவாறு.

இவ்வோதிய வாய்பாடெல்லாம் நான்கு உவமத்திற்கும் பொதுவென்பது ஈண்டுக்கூறி, இனி அவை [1] சிறப்புவகையான் உரியவாறு இதுவென்பது மேற்கூறுகின்றான்.

'பிறவும்' என்பதனான் எடுத்தோதினவேயன்றி நேர நோக்க துணைப்ப மலைய ஆர அமர அனைய ஏர ஏர்ப்ப செத்து அற்று கெழுவ என்றற்றொடக்கத்தன பலவும், ஐந்தாம் வேற்றுமைப் பொருள்பற்றி வருவனவும், எனவென்னெச்சங்கள்பற்றி வருவனவும், பிறவுமெல்லாங் கொள்க. ஈண்டு எடுத்தோதியவற்றுள் [2] வரையறை வகையெனவென மேற்கூறப்படுவன பொது வகையான் வருமாற்றுக்கும் உதாரணம், அவற்றை [3] உரிமை

1. சிறப்புவகை என்றது வினை பயன் மெய் உரு என்ப வற்றிற்குத் தனித்தனி உரியவாம் வகையை.

2. வரையறை வகையென்றது, வினையுவமை இவை பயவுவமை இவை என்றாற்போல வரையறை செய்யப்பட்ட வகையை யுடையவற்றை. கூறப்படுவன வருமாற்றுக்கும் என இயைக்க.

3. உரிமைவகை என்றது வினைக்குரியன இவை பயனுக் குரியன இவை என உரிமை கூறும் வகையை. என்றது சிறப்புச் சூத்திரத்துட் காட்டும் உதாரணங்களை.

வகையான் உதாரணங் காட்டும்வழிக் காட்டுதும். ஆண்டு எடுத்தோதாதன ஆறெனப்படும்; அவை, ஒன்ற என்ற மாற்ற பொற்ப நாட நடுங்க என்பன. அஃதேல் ஆண்டு வரையறை கூறப்பட்டன எண்ணென்கு முப்பத்திரண்டாயினவாறென்னை,—முப்பதேயாகல்வேண்டுமால் அவையியனின், அவற்றோடு புறனடையாற் கொண்டவற்றுள்ளும் நேர நோக்க என்னும் இரண்டு கூட்டி ஓதினன் ஆண்டென்பது.

அவை; பொதுவகையான் வருமாறு:—

"வே[1]லொன்று கண்ணுள்மேல் வேட்கைநோய் தீராமோ
கோலொன்று கண்ணென்று கொண்டு."

என்பது வினையுவமம்.

"மழையொன்று வண்டடக்கை வள்ளியோற் பாடி."

என்பது பயனுவமம்.

"வேயொன்று தோளொருபால் வெற்பொன்று தோளொருபால்."

என்பது மெய்யுவமம்.

"குன்றியுங் கோபமு மொன்றிய வுடுக்கை."

என்பது உருவுவமம்.

ஒழிந்தனவும் இவ்வாறே நான்கு பகுதியும்பற்றி வருமாறு கண்டுகொள்க.

'வாயென்ற பவளம்' என்றது பண்புவமைபற்றி வந்தது. இது 'வாயாகிய பவளம்' என்று ஆக்கச் சொல்லானும் வரும்.

"மணிநிற [2]மாற்றிய மாமேனி"

என்பது உருவுவமம்.

"மதியம் பொற்ப மலர்ந்த வாண்முகம்"

என்பது மெய்யுவமம்.

"வேயொடு [3]நாடிய தோள்"

என்பது, நாடவென்பது வந்த மெய்யுவமம்.

"படங்கெழு நாக [4]நடுங்கு மல்குல்"

என்புழி, நடுங்கவென்பது மெய்யுவமம்பற்றி வந்தவாறு. இவ்வோதிய வாய்பாட்டோடு பொருந்தவருந் சொல்லெல்லாம்

1. ஒன்ற என்னும் உவம உருபிற்குதாரணம்.
2. மாற்ற என்பதற் குதாரணம்.
3. நாட என்பதற் குதாரணம்.
4. நடுங்க என்பதற் குதாரணம்.

'பல்குறிப்பின' என்பதனுற் கொள்ளப்படும். இப்பகுதியெல்லாம் புறனடையாற் கொள்வனவற்றிற்கும் ஒக்கும். இச்சொற் பரப்பெல்லாம் நோக்கி,

"உவமச் சொல்லே வரம்பிகந் தனவே"

என்று ஓதி உரைப்ப; அவை அவ்வச் சொல்லுள் அடங்குமாற்முன் வரம்பிகந்தனவாகா வென்பது.

இனி, 'பிறவும்' என்றதனுல் ஓகப்பட்டன வருமாறு:

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று." (குற. நஉ)

என்பதனுள், துணைப்பவென்பதூஉம் அற்றென்பதூஉம் வந்தன.

"குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுஉ
குன்றி யனைய செயின்." (குற. கூள—டு)

என்று அனையவென்பது வந்தது. பிறவுமன்ன.

"கயமுழுகு மகளிர் [1]கண்ணின் மானும்." (குறு. கூ)

என, இன்வேற்றுமையும் உவமவுருபோடு வந்தது.

"குளித்துப் பொருகயலிற் கண்பனி மல்க."

என்பது உவமவுருபின்றி இன்னுருபு [2]தன்பொருட்கண்ணும் வந்தது.

"தூதுணம் புறவெனத் துறைந்தகின் னெழினலம்."

என்பது, எனவெனெச்சத்தால் உவமம் வந்தது. [3]பிறவுமன்ன.

இவை எல்லாம் வரைவின்றி நான்குவமமும்பற்றி வருமாறு கண்டுகொள்க. ஐந்தாம் வேற்றுமைப் பொருள் வந்த உவமங்களும் பிறவும் உவமத்தொகையெனப்படா; தொகைப் படாமையி[4]னென்பது. * அங்ஙனந் தொகைப்பட்ட வழியும் மற்று [5]மேலுரிமை கூறுகின்றதாமென்பது.

1. கண்ணின்—இன்னேச்சாரியை என்றுகொண்டு செய்யுள் விகாரத்தால் இரண்டாவது தொகச்சாரியை நின்றதெனலாம்.
2. தன்பொருள்—ஒப்புப் பொருள். ஐந்தாம் வேற்றுமைக் குரிய ஒப்புப் பொருள் என்றபடி.
3. பிறவுமென்றது எனவென் னெச்ச முதலியவற்றை.
4. 'என்பது' என்றது வேண்டியதில்லை.
5. மேலுரிமை கூறுகின்றதாமென்பது என்றது உகூஉ-ம் சூத்திரம் நோக்கி. கூறுகின்றது—கூறப்படுகின்றது. கூறுகின்றனமென்பது என்று மிருந்திருக்கலாம். தொகைப்படல்—உருபுகள் தொகைப்பட்டுவரல். தொகை—தொகுதல்.

* ஈண்டு வாக்கியம் விடப்பட்டிருத்தல்வேண்டும்.

"மதியொத்தது மாசற்ற திருமுகம்."

என்றவழி, உவமமாயினும் உவமத்தொகை யெனப்படாது [1] தொகைப்பாடின்மையினென்பது. (கக)

[வினை உவம உருபுக ளிவையெனல்]

உஅ. அன்ன வாங்க மான விறப்ப
வென்ன வேறழுத் தகைய நோக்கொடு
கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்.

இது, மேற் பொதுவகையாற் கூறியவாறன்றி வினை யுவமைக்கட் சிறந்து வருவன இவையென வரைந்து கூறு கின்றது.

இ—ள்: இவ்வெட்டும் வினையுவமம் என்றவாறு.

"எரியகைந் தன்ன தாமரைப் பழனத்து." (அகம். கoசு)

எனவும்,

"கயநா டியானையின் முகனமர்ந் தாங்கு." (அகம். சு)

எனவும்,

"கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்." (குறுந். கூ)

எனவும்,

"புலிவிறப்ப வொலி தோற்றலின்."

எனவும்,

"புலியென்னக் [2] கலிதிறந் துராஅய்."

எனவும்,

"மின்னுற [3] ழிமைப்பிற் சென்னிப் பொற்ப." (திருமுரு. அடு)

எனவும்,

"பொருகளிற் [4] றெருத்திற் புலித்தகைப் பாய்த்துள்."

எனவும்,

---

1. தொகைப்பாடின்மையின்—தொகைப்படுதலின்மையின். ஒத்தது என்பது முற்றுப் பின்று முகத்திற்குப் பயனிலையாத லின்; ஆண்டுத் தொகைப்பாடில்லை என்றபடி. மதிமுகம் என வரிற்றான் தொகையாகும். இஃது உவம உருபே பயனிலையாய் விரிந்து நிற்றலின் தொகுக்கமுடியாது என்றபடி.

2. கலி—ஒலி.

3. இமைப்பு—விளக்கம்.

4. எருத்து—பிடர்.

"மானேக்கு நோக்கு மடநடை யாயத்தார்.

எனவும் வரும்.

இனிக்,

"கார்மழை முழக்கிசை கடுக்கும்."

எனவும்,

"யாழ்கெழு மணிமிடற் றத்தணன்." (அகம். கடவுள்)

எனவும்,

"ஒளித்தியங்கு மரபின் வயப்புலி போல." (அகம். உஉ)

எனவும்,

[1] "ஒழுகை நோன்பக டொப்பக் குழிஇ."

எனவும்,

"குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவிங்கு [2] திவவின்."

(பெரும். கச)

எனவும், பிறவாய்பாட்டாற் சிறுபான்மை வரும் வினையுவமம் பொது விதியாற் கொள்ளப்படும். பிறவுமன்ன. (கஉ)

உஅஅ. அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்.

இஃது, எய்தியது இகந்துபடாமற் காத்தது.

இ—ள்: வினைக்கே உரிமையெய்தியதாகக் கூறிய அன்ன வென்பது நான்குவமைக்கும் உரிமையொக்கவரும் என்றவாறு.

அவை:—

"மாரியன்ன வண்கை." (புறம். கருஙு)

எனவும்,

"இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்று."

(அகம். கடவுள்)

எனவும்,

"செவ்வா னன்ன மேனி. (அகம். கடவுள்)

எனவும் [3] ஒழிந்த மூன்றற்கும் பெருவரவினன் வந்தவாறு வழக்கு நோக்கி உணர்க. (கஙு)

---

1. ஒழுகை—சகடம். பகடு—எருமையாண்.

2. திவவு—நரம்புக்கட்டு.

3. ஒழிந்தமூன்று—வினையொழிந்த பயன் மெய் உரு என்ற மூன்று.

[பயவுவம உருபுக ளிவையெனல்]

உஅசு. எள்ள விழையப் புல்லப் பொருவக்
கள்ள மதிப்ப வெல்ல வீழ
வென்றுங் கெட்டே பயனிலே யுவமம்.

இது, முறையானே பயனிலே யுவமைக்குச் சிறந்த வாய்பாடு இவையென்ப தூணர்ந்துரல் நுதலிற்று.

இ—ள்: இவை எட்டும் பயனிலேயுவமம் என்றவாறு.

[1] "எழிலி வ்வான மெள்ளினன் றருஉங்
[2] கவிகை வண்மைக் கடுமான் ரேன்றல்."

எனவும்,

"மழைவிழை தடக்கை வாய்வா [3] ளெவ்வி."

எனவும்,

"புத்தே ளுலகிற் [4] பொன்மரம் புல்ல."

எனவும்,

"விண்பொரு புகழ் விறல் வஞ்சி." (புறம். கக)

எனவும்,

"கார்கள்ள வுற்ற பேரிசை யுதவி."

எனவும்,

[5] "இருநிதி மகிக்கும் பெருவள் ளீகை."

எனவும்,

"விங்கு [6] சுரை நல்லான் வென்ற ளிகை."

எனவும்,

"விரிபுனற் பேர்யாறு வீழ யாவதும்
வரையாது சுரக்கு முரைசா ரேன்றல்."

எனவும் இவை ஓதியமுறையானே பயவுவமைபற்றி வந்தன. இவை எட்டும் 'பெருவரவின' எனவே, சிறுவரவினுள்

"அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்."

எனவும்,

---

1. எழிலி—மேகம்.
2. கவிகை—இடக்கவிந்த கை.
3. எவ்வி—ஒரு வள்ளல்.
4. பொன்மரம்—கற்பகம்.
5. இருநிதி — சங்கநிதி பதுமநிதி உடையவன். என்றது குபேரனை. இஃது ஆகுபெயர்.
6. சுரை—முலைமடி.

"மகன்ரு யாதல் புரைவதர னைவே." (அகம். கசு)

எனவும்,

"ஊறுநீ ரமிழ் தேய்க்கு மெயிற்ருய்." (கலி. உ0)

எனவும்,

"பல்லோ ருவந்த வுவகை யெல்லா
மென்னுட் பெய்தந் தற்றே."

எனவும்,

"யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலே யலைத்தரு உம்." (கலி. உசு)

எனவும்,

"உருமெனச் [1] சிலைக்கு மூக்கமொடு."

எனவும்,

"யாழ் [2] செத்,
திருங்கல் விடரீ னசுண மோர்க்கும்." (அகம். அஅ)

எனவும்,

"செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை." (முரு. ரு)

எனவும்,

"விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்து." (பத். மலை. உ)

எனவும் வரும்; பிறவுமன்ன. மேலைச் சூத்திரத்திற் சொல்லிய வாறே இதற்கும் வேண்டுவன உரைத்துக்கொள்க. (கச)

[மெய்யுவம உருபுக ளிவையெனல்]

உசo. கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய
வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென்
றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்.

இது, முறையானே மெய்யுவமத்திற்குரிய வாய்பாடு கூறுகின்றது.

இ—ள்: இவ்வெட்டும் மெய்யுவமம் என்றவாறு.

"நீர்வார் [3] நிகர்மலர் கடுப்ப."

எனவும்,

"மோட்டிரும் பாறை யீட்டு [4] வட் டேய்ப்ப." (அகம். கரு)

எனவும்,

---

1. சிலைத்தல்—ஒலித்தல்.
2. செத்து—கருதி.
3. நிகர்மலர் — இணைமலர் (தம்முளொத்தமலர்). நிகர்—ஒளியுமாம்.
4. வட்டு—உருண்டை.

"வேய்மருள் பணைத்தோள் ஞெகிழ." (குறு. நகஅ)
எனவும்,

"உரல் புரை பாவடி." (கலி. உக)
எனவும்,

"முத்துடை [1] வான்கோ டொட்டிய முகிழ்மிசை."
எனவும்,

"பாம்புரு வொடுங்க வாங்கிய நுசுப்பின்."
எனவும்,

"செந்தீ யொட்டிய வெஞ்சுடர்ப் பரிதி."
எனவும்,

"கண்ணெடு நிகர்க்குங் கழிப்பூங் குவளை."
எனவும், இவை ஓதிய முறையானே மெய்யுவமத்துக்கண் வந்த வாறு.

இவற்றை உரிமை கூறிப் பெருவரவினவெனவே ஒழிந் தனவுஞ் சிறுபான்மை வருமென்பதூஉம் அவை பொதுச் சூத் திரத்தான் (உஅசு) அடங்குமென்பதூஉங் கொள்க.

அவை:—

"கடல்போற் ருேன்றல கா[2]டிறந் தோரே." (அகம். க)
எனவும்,

"அஞ்[3]சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி." (அகம். கக)
எனவும்,

"புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்." (அகம். கஉ)
எனவும்,

"சேயித ழுண்ணு வாகி" (அகம். ககூ)
எனவும்,

"மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்ருங்கும்." (கலி. உ0)
எனவும்,

"கண்போன் மலர்ந்த சுணையும்."
எனவும்,

"நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த." (கலி. உஉ)
எனவும்,

"முழுவுறழ் தடக்கையி னியல வேந்தி." (முருகு. உகடு)

1. வான்கோடு—வெண்கோடு.
2. இறந்தோர்—கடந்தோர்.
3. சுடர்நெடுங்கொடி—விளக்கின் நெடிய வரிசை.

எனவும் வரும். இவை புறனடையாற் கொண்டனவிற்கு எடுத் தோதியனவும் பொதுவிதியான் வந்தவாறு. (கடு)

[உரு(நிற)வுவம உருபுக ளிவையெனல்]

உகக. போல மறுப்ப வொப்பக் காய்த்த
நேர வியப்ப நளிய நந்தென்
ருேந்துவரு கிளவி யுருவி னுவமம்.

இது, நான்காம் எண்ணு முறைமைக்கண் நின்ற உருவுவ மத்திற்குரிய வாய்பாடு கூறுகின்றது.

இ—ள்: இவ்வெட்டும் உருவுவமம் என்றவாறு.

அவை:—

"தன்சொல் லுணர்ந்தோர் மேனி
பொன்போற் செய்யு மூர்கிழ வோனே." (ஐங்குறு. சக)
எனவும்,

[1]"மணிநிற மறுத்த மலர்ப்பூங் காயா."
எனவும்,

"ஒண்செங் காந்த ளொக்கு நின்னிறம்."
எனவும்,

"வெயிலொளி [2]காய்த்த விளங்குமணி யழுத்தின."
எனவும்,

[3]"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்."
(அகம். கடவுள்)
எனவும்,

"தண்டளிர் வியப்பத் தகைபெறு மேனி."
எனவும் வரும்.

நளிய நந்த என்பன இக்காலத்து அரியபோலும்; அவை வந்தவழிக் கண்டுகொள்க.

இனி, இவைபோல உரியவன்றி உருவுவமத்தின்கண்ணும் பொதுச் சூத்திரத்தான் (உஅசு) வருமெனப்பட்ட வாய்பாடு சிறு வரவின வருமாறு.

1. மணி—நீலமணி.
2. காய்த்தமணி என்க. காய்த்த—காயச்செய்த. வெயில் வெப்பத்துக்கும் வெப்பமளித்த என்றபடி. இது உவமையாய் நின்றது.
3. கார்—கார்காலம்.

"துளிதகுத் [1] தகுஇய மழையே ரைம்பால்" (அகம். அ)
எனவும்,

"நெருப்பெனச் சிவந்த வுருப்பவிர் மண்டிலம்" (அகம். நக)
எனவும்,

[2] "செயலையந் தளிரேய்க்கு மெழினல மந்நலம்" (கலி. கடு)
எனவும்,

"மாயிதழ் புரையு மலர்க்கொ ளீரிமை" (அகம். ககூ)
எனவும்,

"பான்மருண் மருப்பி னூரல்புரை பாவடி" (கலி. உக)
எனவும்,

[3] "எரியுரு வுறழ விலவ மலர" (கலி. நஙூ)
எனவும்,

"பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு" (முரு. உ)
எனவும்,

"பொன்னுரை கடுக்குந் [4] திதகுயர்" (முரு. கசடு)
எனவும்,

"தீயி னன்ன வொண்செங் காந்தட்
டுவற் [5] கலித்த புதுமுகை [6] யூன்செத்து." (மலைபடு. கசடு—சூ)
எனவும் வரும்; பிறவுமன்ன. (கசூ)

[இன்ன உவமைக்கு இன்ன வாய்பாடு உரியவென்றற்குக் காரணம் வரலாற்று முறையா னறியப்படுமெனல்]

உகூஉ. தத்த மரபிற் றோன்றுமன் பொருளே.

இது, நான்கு உவமைக்கும் ஓரோவொன்று எட்டாகக் கூறிய வாய்பாட்டிற்கெல்லாம் புறனடை.

இ—ள்: இன்னதற்கு இன்ன வாய்பாடு உரியதென்றற்குக் காரணம் என்னையென்றார்க்கு, அவை தத்தம் [7] வரலாற்று முறைமையானே அவ்வவ பொருடோன்ற நிற்கும் என்றவாறு.

1. தகுஇய—பெய்த.
2. செயலை—அசோகு.
3. எரி—நெருப்பு,
4. திதகுல—தேமல்.
5. கலித்தல்—தழைத்தல்.
6. ஊன் செத்து—தசையென்று கருதி.
7. வரலாறு—மரபு.

"புலி பாய்ந்தாங்குப் பாய்ந்தான்" என வினையுவமத்திற்கு வந்த ஆங்கென் கிளவி 'தளி[1]ராங்குச் சிவந்தமேனி' எனிற் பொருந்தாது.

இனி, எள்ளவென்பது பயவுவமைக்கு ஏற்குமென்றூன்; அது, 'புலியெள்ளும் பாய்த்துள்' எனலாகாது; என்னை? புலிக்கு வலி கூறினன்றி அதனோடு உவமிக்கப்பட்ட சாத்தற்குப் புகழாகாதாகலானென்பது. ஒருவனை வென்றி கூறுங்கால் அவனோடு ஒப்பிக்கின்ற புலியேற்றினை அவனைக்கண்டு எதிர் நிற்கலாற்றாது புறங்கொடுத்ததெனலும், கடுங்கிற்றெனலும், கண் [2] சிம்புளித்ததெனலும், அவற்குப் புகழாமென்பதே கருதிக் கூறின் கூறின உவமை [3] வெளிப்பாடுமின்றி அவற்கது புகழுமாகாதென்பது கருத்து.

இனி, மழையினைக் கொடைக்கு இழித்துச் சொல்லவும் பெறுபவன்றே; அவ்வாறு சொல்லினும் அதனை அவனின் இழித்து நோக்காது உலகமாதலின்.

விழைய வீழ புல்ல மதிப்ப வெல்ல என்பனவும், உவமைதான் பொருளையொத்தற் கவாவினவென்று பொருள் தோன்றநிற்குமென்றவாறு. கள்ளவென்பதூஉம் அதன் குணம் அதன்கண் இல்லாமற் கதுவிற்றென்னும்பொருட்டு. பொருவவென்பதூஉம் மழையினையும் ஒருவனையும் [4] உறழ்ந்துணைச் சிறந்தனைச் சொல்லுதல். இவ்வாற்றான் இவை உரிமை கூறப்பட்டன.

இனி, மெய்யுவமத்திற்கு உரியவெனப்பட்டனவும் அவ்வாறே ஒரு காரணமுடையபோலும். கடுப்ப என்றக்கால் வினைக்கும் பயத்திற்கும் ஏலாது; என்னை? கடுத்தலென்பது ஐயுறுதல். [5] புலியோடு மறவனை ஐயுறவேண்டுவதோர் காரண

1. ஆங்கு என்பது பாய்ந்தாங்கு எனச் செய்யுள் வழக்கில் வினையோடியைந்தன்றி வராமையிற் பொருந்தாதென்றூர்.
2. சிம்புளித்தல்—சுருங்கல்.
3. வெளிப்பாடு—வெளிப்படுதல் (தோற்றம்).
4. உறழ்தல்—மாறுபடல்.
5. இது முதலாகக் கடுத்த என்னும் உவம உருபு வினை பயன் உரு என்னும் மூன்றற்கும் பொருந்தாமைக்குக் காரணங் கூறுகின்றூர். புலியோடு மறவனை என்னும் வாக்கியத்தில் வினை பற்றி என்பது விடப்பட்டிருத்தல்வேண்டும்.

மின்மையானும், மழையின் விளைத்த பயத்தோடு உவமித்தலின் மழையோடு ஒருவனே ஐயஞ்செய்தல் வேண்டுவதின்மையானும், வடிவுகண்டவழி ஐயம் பிறக்குமாகலானும், உருவென்பது குண மாகலாற் [1]பொருள் வேற்றுமை அறிந்தவழி ஐயஞ் செல்லா தாகலானும் மெய்க்குரிமை கூறினனென்பது. ஏய்த்தலென் பதூஉம் பொருந்துதலாகலின் வடிவிற்கேற்கும். மருள புரைய ஒட்ட ஒடுங்க என்பனவும் கடுத்தல்போலும் பொருண்மைய; என்னை? மருட்சியும் புரையுணர்வுங் கவர்த்தலைக் காட்டுதலா னும், ஒட்ட ஒடுங்க என்பனவும் இரண்டனையும் [2]ஒன்றென்னும் பொருண்மையவாகலானுமென்பது. நிகர்த்தலும் அவ்வினப் பொருளென்பதனைக் காட்டுதலின் வடிவிற்கேற்றது. ஒடவென் பதும் ஒடுதற்றொழில் வடிவிற்கல்லதின்மையின் அவ்வடிவிற்கேற் றது. பண்பாயிற் பண்பு நிறப்பண்பு ஒடிற்றெனலாகாமையின்.

இனி, உருவுவம வாய்பாட்டிற்குங் காரணங் கூறுங்கால், போலுமென்பது இடைச்சொல்லாகலானும், [3]மரீஇவந்த வினைப் பாற்பட்டதாகலானும், அதற்குக் காரணம் கூறப்படாதென்பது; அஃதேல், அதனை இவ்வெட்டற்கும் முன்பு கூறியதென்னை, பொருளுடையவற்றைப் பிற்கூறியெனின், அதுவும் அன்னவென் பதுபோல மற்றை மூன்று உவமத்தும் பயின்று வருமென்பது எய்துவித்தற்கென்பது. மறுப்ப ஒப்ப என்பன முதலாயினவும் ஒரு காரணமுடையவென்பது ஆசிரியன் பெருவரவினவாக உரி மைப்படுத்துக் கூறினமையின் அறிந்தாம். அல்லதூஉம் 'மர பிற்றோன்றும்' என்றதனான் இவையெல்லாம் மரபுபற்றி அறி யல்வேண்டும் எனவே தலைச்சங்கத்தார் முதலாயினர் செய்யுட் களுள் அவ்வாறு பயின்று வருமென்பது அறிந்தாமன்றே, இவ்வாறு சூத்திரஞ் செய்தலானென்பது.

---

1. பொன்கடுக்கு மேனி என்பதில் பொன்னும் மேனியு மாகிய பொருள்களின் வேற்றுமை அறிந்தவிடத்து அப்பொருள் களின் குணத்தில் ஐயஞ் செல்லாது. ஆகலின் ஐயம் பொருள் களின்கண்ணேயே (வடிவின்கண்ணேயே) தோன்றும் என்றபடி.

2. ஒன்று—அபேதம்.

3. மரீஇவந்த—தொன்றுதொட்டு வந்த. உவமவியல் உக-ம் சூத்திரம் நோக்குக.

[உவமை எட்டாகுமெனல்]

உகூ. *நாலிரண் டாகும் பாலுமா ருண்டே.

இதுவும், மேலனவற்றையே பகுக்கின்றது.

இ—ள்: வினை பயன் மெய் உரு எனப்பட்ட நான்கும் எட்டாம் பகுதியும் உண்டு என்றவாறு.

அவை: உவமத்தொகை நான்கும் உவமவிரி நான்குமென எட்டாதலும் உடையவென்றவாறு. அவை:— புலியன்ன பாய்த் துள் 'புலிப்பாய்த்துள்' எனவும், மழையன்ன வண்கை 'மழை வண்கை' எனவும், வேயன்ன தோள் 'வேய்த்தோள்' என வும், பவளத்தன்ன வாய் 'பவளவாய்' எனவுந் தொகைவிரி பற்றி நான்கும் எட்டாயினவாறு. [1]சொல்லோத்தினுள் இவ் வாய்பாடு விரிந்து வருமாறு கூறாது ஆண்டுத் தொகையாராய்ச் சிப்பட்ட மாத்திரையானே கூறினன்; அவ்வுவமத்தான் ஈண் டுக் கூறப்படுதல் [2]பொருளினவாகலானும், இடைச்சொல்லே யன்றிப் [3]பொருள் பயப்பனவும் அவ்வுருபாகலானும், அதன் விரிவினை ஈண்டுப் பெயர்த்தந்து கூறி அதன்றொகையொடு படுப்ப இத்துணைப் பகுதியவாம் அந்நால்வகை யுவமமும் என்ற னென்பது.

இதுவுமொரு கருத்து:— முன்னர் எவ்வெட்டாகக் கூறி யவை ஒவ்வொன்றும் இரண்டு கூறாகி எட்டாம் பகுதியுடைய வென்றவாறு. யாங்ஙனமெனின்,—அன்ன என்னுஞ் சொன் முத லாகிய எட்டனுள் அன்ன ஆங்க மான என்ன எனப்பட்ட நான்கும் [4]வேறொரு பொருளை உணர்த்தாமையின் ஓரினமாகி

---

* இதற்கு வேறு பொருள் கூறுவர். இளம்பூரணர்.

1. சொல்லோத்து—தொல்லதிகாரம்.

2. பொருளின—பொருண்மாத்திரைய.

3. பொருள்—உவமப்பொருள்.

4. வேறொரு பொருளை யுணர்த்தாமையினென்றது—உவ மையும் உவமேயமும் வேறல்ல ஒன்றேயென்னும் ஒரேபொருளை உணர்த்தலின் என்றபடி. புலியன்ன மறவன் என்றவழி அன்ன வென்பது மறவன் புலியே வேறன்று என்பதை யுணர்த்திநிற்கு மென்றபடி. ஏனைய மூன்றுருபுமன்ன. இதுவே கருத்தாதல் விறத்தன் முதலியவற்றிற்குப் பின்னர்க் கூறும் பொருளான் உணர்க.

ஒன்றுகவும், [1] விறப்ப உறழ தகைய நோக்க என்னும் நான்கும் ஒரு பொருளுடைமையின் [2] ஒரு பொருளாகவும், இவ்வாறே இன நோக்குதற் குறிப்பின் [3] வாயிற்று; [4] இவ்வாற்றான் இரண்டெனவும்படும் எட்டுமென்றவாறு. இதனது பயன் இவ்விரண்டு கூற்றான் அடக்கப்படும் வினையுவமச்சொல்எட்டும் (உஅ) என்றவாறு. விறத்தல், இனமாகச் செறியுமென்னும் பொருட்டு. உறழ்ச்சியுந் தன் இனமாகக்கொண்டு மாறுதற் பொருட்டேயாம். தகுதி அதுவெனப்படுவது என்னும் பொருண்மைத்தாகலின் அவற்றோடொக்கும், நோக்கென்பதூஉம் அவ்வாறே இனமாக்கி நோக்குதற்பொருட்டு. இவ்வாற்றான் இரண்டெனவும்படும் எட்டுமென்றவாறு. இதனது பயன்:—ஒதிய வாய்பாடு எண்ணென்கற்கும் இன்ன வாய்பாடும் இன்ன வாய்பாடும் ஒரு பொருளவென்று அறிதலுங் கருத்தம் மாபிற் பொருள் தோன்ற வருமென்பதும் இடைச்சொல்லென்றலும், ஒப்பில் வழியாற் பொருள்செய்யினும் [5] இசைச்சொல்லாகா; [6] தெரிநிலை வினை உருபாயினும் என்பதறிவித்தலுமெனக் கொள்க. மேல் வருகின்றனவற்றிற்கும் இஃதொக்குமென்பது.

இனிப், பயவுவமை வாய்பாடு எட்டனுள்ளும் எள்ள பொருவ கள்ள வெல்ல என்னும் நான்கும் உவமத்தினை யிழித்தற் பொருளவாகி ஒன்றியடங்கும்; என்னை? மழையைப் பொழிச் சொல்லுதலும் அதனது கன்மைக்குணங் கொள்ளப்

1. விறத்தல் முதலிய நான்கும் ஒரு பொருள் என்பதை விறத்தல் இனமாகச் செறிதல் என்று தொடங்கும் வாக்கியங்களாலுணர்க.

2. ஒரு பொருளாக—ஓரினமாக என்றிருப்பது நலம்.

3. ஆதலின் என்றிருப்பது நலம்.

4. இவ்வாக்கியம் வேண்டியதில்லை.

5. இசை—இடை என்றிருத்தல்வேண்டும்.

6. தெரிநிலைவினை உவமை ருபாயினும் என்று பாடமுள்ளது. அதுவே பொருத்தம். தெரிநிலைவினை உவமை ருபாயினும் ஒப்பில்வழியாற் பொருள்செய்யினும் இடைச்சொல்லாகா என்றபடி. இடைச்சொல்லாகா என்பது பின்வரல்வேண்டும். இவ்வாக்கியங்களில் பல ஏடெழுதுவோரால் மாறியும் திருத்தியும் எழுதப்பட்டன.

படுதலும் வல்லையும் [1] அதனை எள்ளுதல் [2] போல்வான் இழித்து வினையே காட்டுதலின். இனி, விழைய புல்ல மதிப்ப வீழ என்னும் நான்கும் உவமிக்கப்படும் பொருளினை உயர்த்தாமையானும் உவமத்தினை இழித்துக் கூறுமையானும் அவை நான்கும் ஒரு பொருளினப்பட்டன. இவ்வாற்றாற் பயவுவமையெட்டும் (உஅசு) இரண்டாயினவென்பது.

மெய்யுவமை இரண்டாங்கால்,—ஐயப் பொருட்கண் நான்கும் துணிபொருட்கண் நான்குமென இரண்டாம். கடுப்ப மருள புரைய ஓட என்னும் நான்கும் ஐயப் பொருளவாகி ஒன்றும். ஓடவென்பது உவமத்தின்கண்ணும் பொருளின்கண்ணும் 'உணர்வு களர்ந்தோடிற்று' என்னும் பொருள் தோன்றவும் சொல்லின் அதுவும் ஐயமெனப்பட்டதுபோலும். இனி, வெய்ப்ப ஒட்ட ஒடுங்க நிகர்ப்ப என்னும் நான்கும் ஐயமின்றி உவமையும் பொருளும் ஒன்றென உணர்வு தோன்றும் வாய்பாடாகலின் இவை நான்கும் ஒன்றெனப்பட்டு இவையெட்டும் (உசுஅ) இரண்டாயின.

இனி, உருவின் (உசுக) கண்ணும், போல ஒப்ப நேர நலிய என்னும் நான்கும் மறுதலையின்றிச் சேர்ந்தனவென்று கோடற்கு வாய்பாடாகி வருதலின் அவையும் ஒன்றெனப்பட்டன.

"கலியென் னெளிவி செறிவு மாகும்." (தொ. சொ. ந.உசு)

என்றதனால், அதனெனு சேர்ந்தென்னும் பொருட்டேயாயிற்று. இனி, மறுப்ப காய்த்த வியப்ப கந்த என்னும் நான்கும் உவமையோடு மறுதலை தோன்றி நிற்கும் பொருளவாகலின் நான்கும் ஒன்றெனப்பட்டு இவையும் இரண்டாயின. கந்துதலென்பது கேடு. வியத்தலென்பது உவமையான் வியக்கத்தக்கது பொருளெனவே அதன்கண் அக்குணமின்றென மறுத்தவாறும். காய்த்தலென்பதூஉம் உவமையைக் காய்ப்பித்தலாகலின் அதுவும் மறுத்தலென்பதன் பொருளினப்பட்டது. இவ்வாறு இவையெல்லாந் தொகுப்ப எட்டாதலும் உண்டென்பது இதன் கருத்து.

1. அதனை—உவமையை.

2. போல்வான்—போலும்படி. இஃது எள்ளுதல்போல்வனவாய் இழிவினையே காட்டலின் என்று மிருந்திருக்கலாம்.

[1] இவற்றுட் பலவற்றையுஞ் செயவெனெச்ச வாய்பாட்டால் ஓதியது என்னையெனின் அஃது, 'உடம்பொடு புணர்த்தல்' (கூஉ) என்பதனுன் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வினைச் சொற்போல நிற்குமெனவும், அவையுந் தெரிநிலைவினை யுவமை யாய் வருமெனவும் அறிவித்தற்கென்க. [2] இவற்றை இவ்வாறு எட்டாகச் சொல்லுதல் பெரிதும் நுண்ணுணர்விற்றென வுணர்க. (கஅ)

[மெய்ப்பாடு எட்டன்வழிப் பெருமையும் சிறுமையுந் தோன்றுமெனல்]

உகூச. பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன்
வழிமருங் கறியத் தோன்று மென்ப.

இது, மேற்கூறிய உவமை இன்னுமொருவாற்றுன் எட் டெனப்படுமென்பது உணர்த்துதல் துதலிற்று.

உ-இ—ள்: பெருமைபற்றியுஞ் சிறுமைபற்றியும் ஒப்புமை கொள்ளப்படும் உவமை மேற்கூறிய மெய்ப்பாடெட்டன்வழித் தோன்றுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

மெய்ப்பாடு எட்டென்பன:—

"நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை" (தொ. மெய். கு)

என மெய்ப்பாட்டியலுண் மேற்கூறப்பட்டன.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையா" (அகம் ககு)

என்பது, நகையுவமம்; என்னை? தலைமகளைக் கண்டறியாதாள் போலக் கரந்தொழுகுகின்ற பரத்தை அவளோடு ஒப்புமை

---

1. இளம்பூரணரும் பல்குறிப்பின என்றதனுல் இச்சொற்கள் பெயரெச்ச நீர்மையவாய் வருவனவும், வினையெச்ச நீர்மையவாய் வருவனவும், முற்று நீர்மையவாய் வருவனவும், இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும் உள எனக் கொள்க. புலிபோன்ற சாத் தன், புலிபோலுஞ் சாத்தன் என்பன பெயரெச்சம். புலிபோன்று வந்தான், புலிபோலப் பாய்ந்தான் என்பன வினையெச்சம். புலி போலும் புலிபோன்றனன் முற்று. அன்ன இன்ன இடைச் சொல் என இச்சூத்திர உரையுட் கூறுதல் காண்க.

2. இச்சூத்திரத்திற்கு எட்டாகும் பகுதியுமுள என்று பொருள்கொண்டு நிறப்பிச்சூத்திர நான்கனுள்ளுங் கூறிய 32-ம் எட்டாகும் என்று பொருள் கூறின் நலம். பேராசிரியர் கருத் தெல்லாம் இவற்றுளடங்கும்.

கண்டு தனிநின்று விளையாடும் புதல்வனைக்கொண்டு மகிழ்கின் றுளே, வாயிற்கதவம் மறைந்துநின்ற கலைமகள் நீயும் அம்மக விற்குத் தாயே காண் என்றவழிக், களவுகண்ட பொருளோடு கையகப்பட்ட கள்வர்போலச் செய்வதறியாது தடுமாறி முகம் வேறுபட்ட நிலைமையை உவமித்துச் [1] சிரித்தமையின் நகை யுவமமாயிற்று.

[1] "கலங்கவிழ்ந்த [3] நாய்கன்போற் களிதுளை பிழிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்"
(யா. வி. ப. நகஅ)

என்பது அவலவுவமை; கலங்கவிழ்ந்த நீகாமன்போலப் புலம் பினனென்றமையின் [4] அப்பெயர்த்தாயிற்று.

"பெருஞ்செல்வ நில்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் னெஞ்சு" (முத்தொ. அஅ)

என்பது, இளிவரலுவமம்; என்னை? தலைமகன்மாட்டு இன்ப விளையாட்டெய்துவார் பலரையுங் கண்டு நெஞ்சு தீரப் புன்க ணெய்தித் தனிநின்றும் புகப்பெறுது இளிவந்தமையின் அப்பெயர்த்தாயிற்று.

"சுரத்து ளின்னவை தோன்றி னிழற்கயத்து
[5] ணீருட் குவளைவெந் தற்று" (கலி. சக)

என்பது, மருட்கையுவமம்; என்னை? நிழற்கயத்தின் குவளை வேவனவின்மையின் இஃது அற்புதமாயிற்று.

"சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன்
[6] பாம்பகத்துக் கண்ட துடைத்து" (நால. கஉ—சு)

என்பது, அச்சமாகலின் அச்சவுவமை.

---

1. சிரித்தது—தலைவி.
2. கலம்—தோணி.
3. நாய்கன்—நீகாமன்.
4. அப்பெயர்த்தாயிற்று என்றது அவல உவமை என்னும் அப்பெயரை யுடைத்தாயிற்று என்றபடி.
5. ஒன்றை நெருப்பு வேவச்செய்யுமன்றி நீர் வேவச்செய் யாது. செய்யுமாயின் அது அற்புதமாகும். ஆதலின் நீருட் குவளை வெந்தற்று என்றது அற்புதவுவமையாயிற்று என்றபடி. மருட்கை யெனினும் அற்புதம் எனினும் அதிசயம் எனினு மொக்கும். முன்னையபோல இதுவும் 'அப்பெயர்த்தாயிற்று' என்று மிருந் திருக்கலாம்.
6. பாம்பைக் காணுவார்க்கு அச்சமுண்டாதலின் அச்ச மென்றார்.

"மல்லரை [1] மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பட்
கல்லுயர் நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள்" (கலி. நுஉ)

என்பது, பெருமிதவுவமை.

"கூற்று வெகுண் டன்ன முன்பொடு
மாற்றிரு வேந்தர் மண்ணைக் கிளையே" (புறம். சஉ)

என்பது, [2] வெகுளியுவமம்.

"பாடிச் சென்ற பரிசிலர் போல
வுவவினி வாழி தோழி" (அகம். சுநு)

என்பது, உவகையுவமை; பிறவுமன்ன.

இவற்றுள் எண்வகை மெய்ப்பாடும்பற்றி உவமை எட்டெனப்படுமென்று அறிந்து கூறினன்.

"பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற் றீரா" (தொ. உவ. கo)

என்புழிப், [3] பெற்றமாகலின் மெய்ப்பாடெட்டன்வழித் தோன்று மென்னுது 'மருங்கறிய' என்றதனாற் பெருமையுஞ் சிறுமையும்பற்றி வருதல் வழிமருங்கெனவும், அவை பற்றாது மெய்ப்பாடெட்டும்பற்றி [4] வாளாது உவமை வருதல் செவ்விதெனவுங் கொள்ளப்படும்.

"நீருட் குவளைவெந் தற்று" (கலி. சக)

என்பது, பெருமைப்பற்றியது; என்னை? உலகநடை யிறந்த தோர் உவமைகூறி அதனோடு தலைமகன் [5] ஈரத்தினை ஒப்பித் தமையின்.

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா" (அகம், ககு)

என்பது, [6] தனக்கு நிகராமல் இழித்துரைத்தமையிற் சிறுமை பற்றி வந்ததாம்.

---

1. மறஞ் சாய்த்தமை வீரத்தாலாதலின் வீரம் என்றார். பெருமிதம்—வீரம்.
2. வெகுளி—கோபம்.
3. செயப்படு பொருள் 'பெருமையுஞ் சிறுமையும்பற்றி வருதல்' எனப் பின் வரலின் முன் வாளா பெற்றமாகலின் என்றார்.
4. வாளாது என்பது ஈண்டு வேண்டியதில்லை.
5. ஈரம்—அன்பு.
6. தனக்கு என்றது தலைவியை.

உவமையும் மெய்ப்பாடும் பொருள்களை அறிவிப்பனவாகி அவை வேறு வேறு பொருள் அறிவித்தலின் [1] ஒத்து வேறுடையனவாயினும் சிறுபான்மை மயங்கியும் வருமென்றற்கு இது கூறவேண்டியதென்பது. (ககூ)

[உவமையானே உவமேயப் பொருட்கேற்றன அறிந்து துணியப்படுவனவு முளவெனல்]

உகூடு. உவமப் பொருளி னுற்ற துணருந்
தெளிமருங் குளவே தீறத்திய லான.

இஃது, எய்தாததெய்துவித்த னுதலிற்று. உவமையோடு பொருள் [2] ஒவ்வாதனவும் ஒப்புமை சார்த்திக்கொள்ளுமாறுணர்த்தினமையின்.

இ—ள்: உவமப் பொருளின்—உவமையெனப்பட்ட பொருளான்; இன் உருபு ஆன் உருபின்கண் வந்தது; உற்றதுணருந் தெளிமருங்குள—உவமிக்க வரும் பொருட்குற்றதெல்லாம் அறிந்து துணியும் பகுதியுமுள; திறத்தியலான—அங்ஙனந் துணியப்படும் பொருட்டிறம் பலவாகி வரும் இலக்கண வகையான் என்றவாறு.

[3] அப்பகுதி பலவும் உற்றுணராமற் சொல்லியவழியும் அஃது, உணர வருமென்பது கருத்து. திறத்தியல் எனப்பட்ட பகுதியாவன,—மேற் கூறப்பட்ட மெய்ப்பாடெட்டும்பற்றி உவமங் கொள்ளுங்கால் [4] 'உற்றதுணருந் தெளிமருங்கென' உவமானவடைக்கு உவமேயவடை குறைந்து வருவனவும், யாதும் அடையின்றி வருவனவுமென்று இவ்விரண்டும் உற்றுணராமற் சொல்லியவழி, அவற்றுக்கும் உவமைப் பொருளே தெளிமருங்காமெனவும் [5] வாளாதே உவமஞ்செய்து உற்றதுணர்த்தாதவழியும் [6] அதுவே தெளிமருங்காமெனவும் இன்னோரன்ன கொள்க.

---

1. ஒத்து—ஒத்து என்றிருத்தல்வேண்டும். ஒத்து—இயல்.
2. ஒவ்வாதனவும் என்றிருப்பது நலம்.
3. அப்பகுதி—உவமிக்கப்படும் பொருட்பகுதி.
4. உற்றதுணருந் தெளிமருங்கெனவே என்றிருத்தல்வேண்டும். இவ்வாக்கியம் இல்லாமலுமிருக்கலாம்.
5. வாளாது—அடையின்றி.
6. அது—வாளா கூறியது.

உதாரணம்,

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலம் நிகீயா." (அகம். கசு)

என்றவழிக், கண்டோர்க்கெல்லாம் பெருங்கையராகக் [1] களவுண்டாகப்படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளையாவென உற்றதுணரக் கூறிய திலனாயினுங் கையொடுபட்ட களவுடையார்போல நின்றுளென்னும் உவமைப் பொருளானே எள்ளுதற் பொருள் தோன்றி நகை புலப்படுவதாயிற்று.

"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி, ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னினைக்கு மிழிசனன் கையது
போழ்தூண் டுசியின் விரைந்தன்று மாதோ
ஊர்கொள வந்த பொருநனெ
டார்புனை தெரியல் நெடுந்தகை போரே. (புறம். அஉ)

என்னும் பாட்டினுள் உவமப் பொருளாகிய [2] போழ்தூண்டுசிக்குப் பல அடைகூறி அதனோடு உவமிக்கப்படும் போர்த்தொழிலினை யாதுமோர் அடையின்றி வாளாது கூறினுனாயினும் உவமப் பொருளானே போர்த்தொழிற் குற்றதும் உணரக் கூறினுனும். என்னை? உண்டாட்டும் கொடையும் உரனெடு நோக்கி மறுத்தலும் முதலாகிய உள்ளக் கருத்தினுன், ஒரு கணத்துள்ளே பல வேந்தரை ஒருங்கு வேறற்கு விரைகின்றது போர்த்தொழிலென்பது தெளியப்பட்டமையின்.

[3] "உழுத நோன்பக டழிதின் ருங்கு."
(நல்லமிழ் தாகநீ நயந்துண்ணு நறவே.) (புறம். கஉடு)

எனவும்,

---

1. களவு உடம்படுநரின் என்றிருப்பது நலம்.

2. போழ்தூண்டு ஊசி — வாரைச் செலுத்தும் ஊசி. போழ்—வார். தூண்டல்—செலுத்தல். போழ் தூண்டுசிக்கு அடைகள் சாறுதலைக் கோடலும் பெண்ணீனலும். இரண்டற்கும் போதற்பொருட்டுக் கட்டிலைப் பின்னி முடித்தற்காக இழிசனன் கையுசி விரைதல்போல இவனும் உண்டாட்டுக்கும் கொடைக்கும் உரனெடு நோக்கி மறுத்தற்கும் போதற்காக விரைந்து போர் செய்கின்றான் என்றபடி. உரனெடு நோக்கி மறுத்தல் என்பது எக்கருத்தில் வந்தது என்பது நன்கு புலப்படவில்லை. ஆயினும் அறிவொடு நோக்கி மறுத்தல்=வாதுசெய்தல் என்று கூறலாம். உரனெக்கி மறித்தல் எனவும் பாடமுள்ளது. உள்ளக் கருத்தினுல் விரைகின்றது போர் என்க.

3. உழுத பகடு தான் விளைத்த நெல்லையுண்ணுது வைக்கோலை உண்ணுமாறுபோல நின் முயற்சியாற் செய்த பொருளை நீயுண்ணுது கள்ளையுண்ணு நின்றாய்; அது உனக்கு அமிழ்தாகுக என்றபடி.

[1] "மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி." (புறம். கஅo)

என்றாற்போல்வனவும் அவை.

இனி, வாளாதே உவமஞ்செய்து உற்றதுணர்த்தாதவழிக் தெளியுமாறு;

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
[2] கச்சாணி யன்னு ருடைத்து." (குறள். நுள—எ)

என்பதனுள், அவர் செய்கை வன்மை கூறுதாயினும் அச்சாணியென்று உவமப் பொருள்தானே அச்செய்கை வன்மை கூறிற்று.

[3] "வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்." (கலி. அச)

என்பதும் அது. ஒழிந்தனவுமன்ன. இனி உவமத்தின் உற்றதுணர்கவென்னுது பொருளென்றதனுல் பொருட்கு அடுத்த அடையும் உவமவடைக்[4]கேற்றது உணரப்படாதன களையப்படுமென்பது. அது,

"பாசடை நிவந்த கணைக்கா னெய்த
லினமீ னிருக்குழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மாலும்." (குறுந். கூ)

என்றவழிப், பாசடை நிவந்த கணைக்காலென நெய்தலாகிய பொருட்கு வந்த அடையிரண்டுங் கண்ணெனப்பட்ட உவமத்திற்கேற்ப வாராமையான் அவை தெளிமருங்கில வென்று களைந்துகொள்க. ஒழிந்தனவுமன்ன. மற்றுப்,

"புறமதி யன்ன திருமுக மிறைஞ்சி."

என்றவழி, அகத்துத் தோன்றும் மறுப்போலப் புறத்து மறுமதிக்கில்லையென்பதூஉம், புறமதிபோலக் கறைதீர்ந்த முகமென்பதூஉம், உவமப் பொருளின் உற்றதுணருந் தெளிமருங்கென்றதனுற் கோடுமோவெனின், அங்ஙனங் கொள்ளாமைக்கன்றே வருகின்ற சூத்திரமென்பது. (உo)

---

1. மருந்து கொண்மரம் என்றதனுன் பலவடு விரவப்பெற்றமையும், மரம் அழியாமையும் பெறப்படும்.

2. அச்சாணி சிறிதாயினும் பெரும் பாரத்தையுடைய பண்டியைக் கொண்டுய்க்குமாறுபோலப் பெரிய காரியங்களைக் கொண்டு செலுத்துபவர் என்றபடி. எனவே அதன் செயல் வன்மை கூறிற்று.

3. வேனிற்புனல் பலருமாடற் கிடங்கொடுத்தல்போலப் பல மகளிரும் புணர்ந்து விளையாடற்கிடமானவன் என்றபடி.

4. ஏற்றதுணரப்படாதன—'உற்றதுணரப்படாதன' என்றிருத்தல்வேண்டும்; சூத்திரப்பகுதியாதலின்.

[உவமப் பொருள் மரபுபற்றி யறியப்படுமெனல்]

உகூ. உவமப் பொருளை உணருங் காலை
மரீஇய மரபின் வழக்கொடு படுமே.

இது, மேலதற்கோர் புறனடை; மேல் உவமப்பொரு ளானே உற்றதுணரச்செயல்வேண்டு மென்றான். இனி அங் ஙனம் உணருமாறு இது கூறினானெனின்.

இ—ள்: உவமப்பொருளான் உற்றதுணருங்காலை மரீஇவந்த வழக்கொடுபடுத்து அறியப்படும் என்றவாறு.

அவை வருமாறு :—

"களவுடம் படுநரிற் கவிழ்ந்துநிலங் கிளையா." (அகம். ககூ)

என்பது, களவுடம்படுநர்க்குள்ள வேறுபாடு உலகத்து அடிப் பட வந்த வழக்காதலான், [1] அஃது எதுவாக அதனையும் அறிந்துகொள்ளப்படு மென்றவாறு. எனவே, உலகத்து வழக் கினுள் அடிப்படத் தோன்றும் உவமையாயிற்றாயினும் உவமப் பொருள் புலப்பாடு செய்யாது,

"புறமதி போலு முகம்"

என்றது [2] போலவென்பது இதன் கருத்து. (உ)

[அடையும் பொருளுமாக வரும் உபமேயத்திற்கு அடையும் பொருளுமாகவே உவமையுங் கூறல்வேண்டுமெனல்]

உகூஎ. இரட்டைக் கிளவி யிரட்டை வழித்தே.

இஃது, எய்தாததெய்துவித்தது; அடையொடு வந்த பொரு ளொடு புணர்க்குமாறு கூறினமையின்.

இ—ள்: இரட்டைக் கிளவி — அடையும் அடையடுத்த பொருளுமென இரண்டாகச் சொல்லப்படுங் கிளவி; இரட்டை வழித்தே—அடையும் அடையடுத்த பொருளுமென இரண் டாக்கி நிறுத்தப்படும் உவமையின்வழித்து என்றவாறு.

---

1. அஃது—அடிப்பட வந்த வழக்கு. அதனையும்—உவமப் பொருளையும்.

2. போல—போல்வது என்றிருப்பது நலம். மதியுவமை யாயினும் புறமதியை உவமை கூறல் அடிப்பட வந்த வழக்கன் றென்றபடி.

அது,

"பொன்காண் கட்டளை கடுப்பத் [1] தன்ன
பைம்பூண் சுணங்கம் புடைத்த மார்பினன்."

(பெரும்பாண். உஉ)

என வரும்.

தன் பைம்பூண் புடைத்த செஞ்சுவட்டினையும் மார்பினை யும் பொன்னுரையோடுங் கல்லோடும் உவமித்தமையின் இரட் டைக்கிளவி இரட்டை வழித்தாயிற்று. இரட்டைக் கிளவியெனப் [2] பொருளினை முற்கூறியதனுன் இரண்டு பொருளினை ஒன்றாகக் கூட்டி உவமிக்கக் கருதினுன் உவமையினையும் இரண்டு ஒன் றாக்கியே உவமிக்குமென்பது கருத்து. உம்மையான் [3] ஒற்றைக் கிளவியும் இரட்டைவழித்தாகி வருவன கொள்க.

அது,

"கருங்கால் வேங்கை வியுரு துறுக
விரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை."

(குறு. சஎ)

என வரும். இரும்புலிக் குருளை [4] யென்றதனையே துறுகல் லோடும் வேங்கைவீயோடும் ஒப்பித்தமையின் இப்பெயர்த் தாயிற்று. (உஉ)

[உள்ளுறை உவமம் இவ்வாறு வருமெனல்]

உகூஅ. பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலைத்
துணிவொடு வருஉந் துணிவினோர் கொளினே.

---

1. 'தன்ன—பைம்பூண்' என்றே பேராசிரியர் பாடங் கொண்டார் என்பது 'தன் பைம்பூண்' என்ற அவர் உரையால் விளங்குகின்றது. 'சண்பின் புன்காய்ச் சுண்ணம்' என்பது நச் சினார்க்கினியர் கொண்ட பாடம். பெரும்பாண் உஉ-ம் அடி. (டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பு நோக்குக.)

2. பொருள்—உவமேயம்.

3. ஒற்றைக் கிளவி—உவமேயம். புலிக்குருளை உவமேயம். புலிக்குருளைபோல வியுரு துறுகல் தோன்றுமென்றதனால் வியுரு துறுகல் புலிக்குருளைக்கு உவமையாயிற்று என்றபடி. 'அடை யொடு பொருட்கடை புணர்க்கு மஃதிரட்டை' என்னுஞ் சூத் திரத்து (மாறனலங்காரம். கஎந) உரையுள்ளும் ஒற்றைக் கிளவி இரட்டுவழித்தாதற்கு இச்செய்யுளையும் உதாரணமாக எடுத் துக்காட்டுதல் காண்க.

4. இரும்புலிக் குருளை யென்றதனை என்பது இரும்புலிக் குருளையொன்றனையே என்றிருப்பது நலம். என்று அதனையே என வும் பிரித்தும் பொருள்கொள்ளலாம்.

இது மேலெல்லாம் ஏனையுவமங் கூறி உள்ளுறையுவமம் உணர்த்துதல் நுதலிற்று. [1] மேல் இசைதிரிந் திசைக்குமெனப் பட்டவற்றின் பகுதியாயினும் இதனை ஆண்டுக் கூறாது ஈண்டுக் கூறினான் உள்ளுறை யுவமமாகலானும் இவ்வோத்து உவம வியலாகலானுமென்பது.

இ—ள்: பிறிதொடு படாது — உவமையோடு உவமிக்கப் படும் பொருள் பிறிதொன்று தாராது, பிறப்பொடு நோக்கி— உவம நிலங்களுட் பிறந்த [2] பிறவிகளோடு [3] சார்த்தி நோக்கி, முன்னை மரபிற் கூறுங்காலை—கருத்தினான் இதற்கு இஃது உவமையென்று சொன்ன மரபினைற் கூறுங்காலை, துணிவொடு வருஉம் துணிவினோர் கொளினே—இன்ன பொருட்கு இஃது உவமமாயிற்றென்பது துணிந்து கொள்ளத் தோன்றும் அவ்வாறு துணிந்து கொள்ளும் உணர்வுடையோர் கொள்ளின் என்றவாறு.

எனவே, அஃது எல்லார்க்கும் புலனன்று நல்லுணர்வுடையோர்க்கே புலனென்பதூஉம், அவர் [4] கொள்ளச் செய்யவேண்டுமென்பதூஉங் கூறியவாறு. இதனானே செய்யுளுட் பயின்று வருமென்பது கூறினானும். அவற்றிற்கு உதாரணம் மேற் காட்டுதும். மற்றிதனை உவமையென்றதென்னை? உவமையும் உவமிக்கப்படும் பொருளுமாக நிறீஇக் கூறுவதினென்னின்? அங்ஙனம் கூறுவதினும் உவமம்போன்று பொருள் கொள்ளப்படுதலின் அதனை உவமையென்றான். [5] அஃது ஒப்பினுகிய பெயரென்பது; என்னை? இவற்றை உவமப் போலியென்பது கூறுமாகலின். (உசு)

[உள்ளுறை உவமையின் வகை]

உகூகூ. உவமப் போலி யைந்தென மொழிப.

இது மேற்கூறிய உள்ளுறையுவமை ஐவகைப்படுமென்கின்றது.

1. மேல் என்றது பொருளியல் க-ம் சூத்திரத்தை.
2. பிறவி—உள்ளுறைப் பொருள்.
3. சார்த்தி—உவமையைச் சார்த்தி.
4. கொள்ள—உள்ளுறைப் பொருளைக் கொள்ளத்தக்கதாக.
5. ஒப்பினுகிய பெயர் என்றது—உவமம்போன்று பொருள் கொள்ளப்படுதலின் இதனையும் உவமையென்றார் என்றபடி.

இ—ள்: உள்ளுறையுவமை ஐந்துவகையெனக் கூறுவர் புலவர் என்றவாறு.

அவையைந்துமாமாறு [1] முன்னர்ச் சொல்லுதும். இதனது பயம் ஏனையுவமத்திற்கு நிலைக்களம் ஐந்து ஒதினான், அவ்வாறே இதற்கு நிலைக்களம் ஒதாது அவைபோறலின் அவையே நிலைக்களமாமென்றலும் ஏனையுவமத்துள் [2] ஒரு சாதியோடு ஒரு சாதியினை உவமித்தல் வழக்கன்றாயினும் உள்ளுறையுவமத்திற்கு அமையுமென்றலுமென்பது. (உச)

[மேற்கூறிய உள்ளுறை ஐந்து இவையெனல்]

கூ○○. தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின்
வினையினும் பயத்தினு முறுப்பினு முருவினும்
பிறப்பினும் வருஉந் தீறத்திய லென்ப.

இது மேற்கூறிய ஐந்தும் இவையென்கின்றது.

இ—ள்: வினை பயன் மெய் உருவென்கின்ற நான்கினானும் பிறப்பினானும் வரும் மேற்கூறிய ஐந்தும் என்றவாறு.

உறுப்பென்றது மெய்யினை; உடம்பினை உறுப்பென்பலராகலானும் மெய்யுவமமெல்லாம் உறுப்பினையேபற்றி வருதல் பெரும்பான்மையவென்றற்கும் அவ்வாறு கூறினனென்பது. 'தவலருஞ் சிறப்பினத்தன்மை நாடின்' என்றதனான் ஏனையுவமத்தினும் உள்ளுறையுவமமே செய்யுட்கும் பொருளிலக்கணத்திற்குஞ் சிறந்ததென்பது.

அவை வருமாறு:—

"கரும்புநடு பாத்தியிற் [3] கலித்த தாமரை
சுரும்புபசி கூரியும் பெரும்புன லூர
புதல்வ னீன்றவெம் [4] முயங்க
லதுவே தெய்யநின் மார்புசிதைப் பதுவே." (ஐங்குறு. கூடு)

என்பது வினையுவமப் போலி; என்னை? தாமரையினை விளைப்பதற்கன்றிக் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுட் தானே விளைந்த தாமரை சுரும்பின் பசிதீர்க்குமாறெனன்றான். இதன்

1. முன்னர் என்றது வருஞ் சூத்திரத்தை.
2. சாதி—பிறப்பு என்பது பேராசிரியர்கொண்ட கருத்து. என்னை? பின் பிறப்பென வருதலின் கூ○எ-ம் சூத்திர உரை நோக்குக.
3. கலித்த—முளைத்த.
4. முயங்கல்—தழுவற்க.

கருத்து, — [1] அது காதற் பரத்தையர்க்கும் இற்பரத்தையர்க்கும் என்றமைக்கப்பட்ட கோயிலுள் யாமுமுளமாகி இல்லறம் பூண்டு விருந்தோம்புகின்றனம், அதுபோலவென்பதாகலான், உவமைக்குப் பிறிதொரு பொருள் [2] எதிர்ந்து உவமஞ்செய்யாது ஆண்டுப் [3] பிறந்தனவற்றொடு [4] நோக்கிக் [5] கருத்திஞற் கொள்ள வைத்தலின் இஃது உள்ளுறை யுவமமாயிற்று. அவற்றுள்ளும் இது சுரும்பு பசிகளையுந் தொழிலோடு விருந்தோம்புதற்றொழில் உவமங்கொள்ள நின்றமையின் விஞையுவமப் போலியாயிற்று. இங்ஙனங் கூறவே, [6] இதனை இப்பொருண்மைத்தென்பதெல்லாம் உணருமா [7]றென்னையெனின், முன்னர்,

"துணிவொடு வருஉந் துணிவினோர் கொளினே." (உகூஅ)

எனல்வேண்டியது இதன் அருமை நோக்கியன்றேயென்பது. அல்லாக்காற், 'கரும்புநடு பாத்திக் கலித்த காமரை—சுரும்புபசி களையும் பெரும்புன லூர' என்பது [8] பயமிலவென்பது கூறலா மென்பது.

"கரைசேர் வேழங் கரும்பிற் பூக்குந்
துறைகே ழூரன் கொடுமை நாணி
நல்ல னென்றும் யாமே
யல்ல னென்னுமென் றடமென் றோளே." (ஐங்குறு. கஉ)

---

1. கரும்புபோல்வர் — பரத்தையர். பாத்திபோன்றது — கோயில். காமரைபோன்றவள்—தலைவி. சுரும்புபோல்வர்—விருந்தினர் என உள்ளுறைப் பொருள் கொள்ளப்பட்டது.

2. பிறிதொரு பொருள் என்பதனைக், கொள்ள வைத்தலின் என்பதனோடு இயைக்க. எதிர்ந்து—எதிராக வைத்து.

3. பிறந்தன—உவம நிலங்களுட் பிறந்த உள்ளுறைகள். உள்ளுறையாகிய உவமேயப் பொருள்கள் தோன்றற்கு இடம் உவமைகளாதலின் உவமநிலம் என்றார்.

4. நோக்கல்—உள்ளுறையோடு உவமையைச் சார்த்தி நோக்கல். இதனை 'பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி' என்பதன் (உகூஅ) உரை நோக்கி அறிக.

5. கருத்திஞற் கொள்ள வைத்தலின் என்பதற்குச் செயப்படுபொருள்—பிறிதொருபொருள் என்பது.

6. இதனை—இவ்வுவமையை.

7. என்னை—எவ்வாறு.

8. பயமில கூறலாம் என்றது—பயன்படாதவற்றைச் சொல்வதாக முடியுமென்றபடி. பயமிலவென்பது என்பதில் 'என்பது' என்றது வேண்டியதில்லை. பிரதி எழுதுவோராற் சேர்க்கப்பட்டதுபோலும்.

என்பது பயவுவமப் போலி. இதனுட் தலைமகன் கொடுமை கூறியதல்லது அக்கொடுமைக் கேதுவாகியதொன்று விளங்கக் கூறியதிலளாயினும் இழிந்தவேழம் உயர்ந்த கரும்பிற் பூக்குமெனவே [1] அவற்றிற்கும் இழிபுயர்வாமென்பதொன்றில்லை; [2] எல்லாரும் இன்பங் கோடற்குரியர் தலைமகற்கென்றமையின், யாமும் பரத்தையரும் அவற்கு ஒத்தனமென்றமையின் அவை கூறினளென்பது.

"நீருறை கோழி நீலச் சேவல்
கூருகிர்ப் பேடை [3] வயாஅ மூர
புளிங்காய் வேட்கைத் தன்றுநின்
மலர்ந்த மார்பிவள் [4] வயவு நோய்க்கே." (ஐங்குறு. நுக)

என்பதும் அது. நீருறை கோழி நீலச் சேவலை அதன் கூருகிர்ப் பெடை நினைந்து கடுஞ்சூலான் வந்த வயாத் தீர்கற்பயத்தவாகும், அதுபோல நின்மார்பு நினைந்து தன் வயவுநோய் தீரும் இவளுமென்றவாறு. புளிங்காய் வேட்கைத்தென்பது நின் மார்புதான் இவளை வயவாதாயினும் இவடானே நின்மார்பை நயந்து பயம்பெற்றுள்போலச் சுவைகொண்டு சிறிது வேட்கை தணிதற் பயத்தளாகும்; புளியங்காய் நினைய வாய்நீர் ஊறுமாறுபோல என்பது.

"ஒன்றே னல்லை னென்றுவென் குன்றத்துப்
பொருகளிறு மிதித்த நெறிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார்
நின்றுகொய: மலரு நாடனை
டொன்றேன் றேழி [5] யொன்றி னனே." (குறுந். உ0அ)

என்பது மெய்யுவமப் போலி; என்னை? மிதியுண்டு வீழ்ந்த வேங்கை குறைபுயிரொடு மலர்ந்தாற்போல யானும் உளேனாயினேனென்றமையின்.

---

1. அவற்றிற்கும் என்றது வேழத்தையும் கரும்பையும். இப் பாடத்திற்கு உமைமை வேண்டியதில்லை. அவற்கும் என்றும் பாடமுள்ளது. அவற்கு என்பது பின்வருந் தலைமகனைக் குறிக்கும். அப்பாடமே சிறந்தது.

2. எல்லாரும் என்றது உயர்ந்தோருந் தாழ்ந்தோருமாகிய எல்லா மகளிரும் என்றபடி.

3. வயாஅம்—கருப்பத்தாலுண்டான வேட்கை தீரும் என்றபடி.

4. வயவுநோய்—கருப்பத்தாலுண்டான வேட்கை நோய்.

5. என்றிசினனே எனவும் பாடம்.

"வண்ணை வொண்டழை நுடங்கு வாவிழை
பொன்னுத லிவளை 1பண்ணீ பாய்ந்தெனக்
கண்ணறுங் குவளை கூற்றத்
தண்ணென் றிசினே பெருந்துறைப் புனலே." (ஐங். எஉ)

இஃது உருவுவமம். நீ புனலாடிய ஞான்று பரத்தை பாய்ந்தாடிய புனலெல்லாங் கண்ணென்றிதனைக் கூறியவழி, அத்தடம் போல இவள் உறக்கலுங்கித் தெளிந்து கண்ணென்றாளென்பது கருதியுரைப்பட்டது; அவ்வளவாடு புனல்பாய்ந்தாடிய இன்பச் சிறப்புக் கேட்டு நிலையாற்றாளென்பது கருத்து. 2இது நிற மன்றாலெனின் நிறமும் பண்பாகலின் அந்நிறத்தோடு நிறமல்லாத பண்புக் கொள்ளப்படுமென்பது,

"வகைபெற வந்த உவமத் தோற்றம்." (உஎசு)

என்புழிக் 3கூறினனென்பது.

4"பொய்கைப் பள்ளிப் புலவுநாறு நீர்நாய்
வாணீ நாளிரை பெறூஉ மூர
வெந்தலைத் தொகிலவ தாயினுந்
தன்னலம் பெருமிறற் றோய்ந்த மார்பே." (ஐங். கூஉ)

என்பது பிறப்புவமப் போலி. கல்லகுலத்திற் பிறந்தும் இழிந்தானைத் தோய்ந்தமையான் அவர் நாற்றமே நாறியது, அவளையே பாதுகாவாய், மேற்குலத்துப் பிறந்த எம்மைத் தீண்டலென்பாள் அஃதில்லாம லிளங்கக் கூறுது பொய்கைப்பள்ளிப் பிறந்த நீர்நாய் முன்னுட்டின்ற வாளைமீன் புலவு நாற்றத்தோடும் பின்னுளும் அதனையே வேண்டும் வளன் என்றமையிற் பரத்தையர் பிறப்பு இழிந்தமையுந் தலைவி பிறப்பு உயர்ந்தமையுங் கூறி அவன் பிறப்பின் உயர்வுங் கூறினமையின் இது பிறப்புவமப் போலியாயிற்று. இவையெல்லாங் கருதிக் கூறிற் செய்யுட்குச்

1. பண்ணீ—விளையாட்டு.

2. இது என்றது தண்மையை. தண்மை நிறமல்லாத பண்பு.

3. கூறினன் என்பது கூறினமென்றிருத்தல் வேண்டும். உவமவியல் க-ம் சூத்திர விரிவுரை நோக்குக. இலேசினுன் ஆசிரியன், கூறினனென்றல் சிறப்பின்று. கூறினனெனின், 'என்புழி' என்பது என்பதனால் என்றிருத்தல்வேண்டும்.

4. பொய்கைப்பள்ளி—உயர்குடிக்கும், நீர்நாய்—தலைவற்கும், வாளை—பரத்தையர்க்கும் உவமை என்க. பள்ளி—இடம் (படுக்கை) பொய்கைப்பள்ளி என்றதனால் தலைவியுயர்ச்சியுங் கூறியதாயிற்று.

*நிறப்பாமெனவும், வாளாது நீர்நாய் வாளைபெறூஉமூரனென்றதனுன் ஒரு பயமின்றெனவுங் கொள்க. 1"பிறப்பொடு வருஉந் திறத்த" தென்றது தலைமகளுல் இவ்வாறு நிறப்பாடு வேறு முளவென்பதூஉங் கொள்க. அவை:—

"தன்பார்ப்புந் தின்னு மன்பின் முதலையொடு
வெண்பூம் பொய்கைத் தவறூ ரென்ப
அதனும், தன்சொ றுவைத்தோர் மேனி
பொன்போற் செய்யு மூரிழை வோனே." (ஐங். சக)

என்றவழித் 'தன்பார்ப்புந் தின்னும் அன்பில் முதலை' யென்பது 2(இன்னுங்) தலைமகளது கொடுமைக்கு உவமையாயிற்று. வெண்பூம் பொய்கைத்த அவனூரென்பது தலைமகள் பசப்பு நிறம்பற்றி உவமையாயிற்று. ஆகலான் வினையுவமமும் உருவுவமமும் ஒரு செய்புளுள்ளே தொடர்ந்து ஒருங்கு வருதலும் உடையவென்பது. 3(அவை "தன்பார்ப்புந் தின்னு மன்பின் முதலையொடு.....பொன்போற் செய்பு மூரிழை வோனே" என்ற வழி) 4இன்ன நிறத்தனென்றதனுனே இத்தன்மைத்தாகிய ஊரனையாளெனச் சொல்லுதலுங், தலைவனுரிமை சொல்லத் தலைவற்கேயன்றித் தலைவிக்கேற்ற உவமை தோன்றச் செய்தலு 5மென உவமங் கூறியவழி உள்ளுறையுவமங் கோடலும், பிறவாறு வருவன வளவாயினும் எல்லாங் கொள்க.

*நிறப்பின்று என்பது முற்பாடம். நிறப்பாம் எனப் பாடம் உள்ளது. அதுவே பொருத்தம்.

1. பிறப்பொடு வருஉந் திறத்த வென்றது தலைமகளுல் என்பது, பிறப்பினும் வருஉந் திறத்தியலென்றதனு லென்றிருத்தல்வேண்டும். என்றதனுல் என்பதனோடு சில எழுத்துக்கள் சேர்த்து 'என்றது தலைமகளுல்' என்றெழுதப்பட்டது.

2. இன்னும் என்பது நின்னும் என்பதைச் சிதைத்து மீட்டும் எழுதப்பட்டதுபோலும். அது வேண்டியதில்லை. நிறம்—வகை. இது பின் கூறப்படுகின்றது.

3. பகரக் கோட்டில் அடைத்த வாக்கியம் முன்வந்ததையே திருப்பியெழுதப்பட்டது. அது நீக்கப்படல்வேண்டும்.

4. "இன்ன நிறத்தன்"—இன்னுங் 'நிறத்தியல்' என்றிருத்தல்வேண்டும்.

5. மென—மேனி என்று பாடமுள்ளது. இது உவமத்தோடு சேர்த்து வினையுவமம் என்று பிரிக்கப்படும். அதுவே பொருத்தம்.

"தேர்வண் கோமான் றேனூரன்ன விவள்." (ஐங். ருடு)

என்பது அவனூரனையாளென வந்தது. 'வெண்பூம் பொய்கைத்து அவனூர்' எனத் தலைவனூரின் உள்ளதொன்றனைத் தலைவிக்குவமையே பிறப்பித்தவாருயிற்று. அல்லாக்கால்,

[1] "வெள்ளே யாம்பலடை கரை.' (ஐங். சக)

என்றதனைப் பயமின்றென்பது. (உரு)

[கிழவியுந் தோழியும் உள்ளுறை சொல்லுங்கால் இவ்வாறு சொல்லவேண்டுமெனல்]

கூ0க. கிழவி சொல்லி னவளறி கிழவி
தோழிக் காயி னிலம்பெயர்ந் துரையாது.

இது மேற்கூறிய உள்ளுறையுவமைக்காவதோர் இலக்கணம்.

இ-ள்: ஐந்துவகைப்பட்ட உவமப் போலியும் பிறிதொடுபடாது பிறப்பு நோக்கி உணரக் கூறியவழி, அக்கூற்றுத் தலைமகட்குந் தோழிக்கும் உரித்தாங்காற், தலைவிக்காயின் அவளறியுங் கருப்பொருளானே செய்யல்வேண்டுங், தோழிக்காயின் அந்நிலத்துள்ளனவெல்லாஞ் சொல்லவும்பெறும்; பிறநிலத்துள்ளன அறிந்து சொல்லினளாகச் செய்புள் செய்யப்பெறு மென்றவாறு.

இதனது பயம்: தலைமகள், அந்நிலத்துள்ளனவெல்லாம் அறியுந்துணைப் பயிற்சியிலளெனவும், அவளாயத்தாராயின் அந்நிலத்துள்ளன அறியச் [2] சிதைந்திற்றெனவுங் கூறியவாறு.

"ஒன்றே னல்லெ னொன்று வென்." (குறுந். உ0அ)

என்னும் பாட்டினுட், பொருதளிறு மிதித்த நெரிதாள் வேங்கை மரம் [3] படப்பையிலுள்ளதாகலானுந் தன்னைப் பூக்கொய்யப்படுமாகலானும் அஃது அவளறி கிளவியெனப்பட்டது.

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை." (ஐங்குறு. சக)

என்பது தோழி கூற்று. என்னை? அவற்றின் செய்கையெல்லாம் அறியாளன்றே தலைமகள், பெரும் பேதையாதலினென்பது.

---

1. வெள்ளேயாம்பல் என்பது மேற்கூறிய செய்யுளில் வரும் வெண்பூ என்பதன் பொருள். அடைகரையையுடைய பொய்கை என்க. வெள்ளே யாம்பற்பூ என்றதனால் தலைவி பசப்புடையள் என்னும் உள்ளுறை பெறப்பட்டது.

2. சிதைதல்—அழிதல். சிதைந்ததின்று—குற்றமின்று.

3. படப்பை—தோட்டம்.

[1] அதிகாரத்தானின்ற உள்ளுறை யுவமையென்பதனை அவளறி கிளவியென்றதற்குப் பெயர்ப் பயனிலையாகவும் நிலம் பெயர்ந் துரையாதென்னும் முற்று வினைக்குப் [2] பெயராகவும் வேறு வேறு சொல்லிக் கொள்க. (உசு)

[தலைவன் உள்ளுறையை இவ்வாறு சொல்லுவனெனலும் ஒழிந்தோர்க்கு இடம் வரைவின்றெனலும்]

கூ0உ. *கிழவோற் காயி னுரனெடு கிளக்கு
மேனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே.

இதுவும் அது.

இ—ள்: கிழவோன் சொல்லும் உள்ளுறையுவமந் தன் [3] னுடைமை தோன்றச் சொல்லப்படும். ஏனைரெனப்பட்ட பாங்கனும் பாணனு முதலாயினர் சொல்லுங்காலை மேற்கூறிய வகையானே இடம் வரையப்படாது, [4] தாந்தாம் அறிந்த கிளவியானும் நிலம் பெயர்ந்துரையாத பொருளானும் அந்நிலத்துள்ள பொருளானும் உள்ளுறையுவமை சொல்லப்பெறுப என்றவாறு.

"கருங்கோட் டெருமைச் செங்கட் புனிற்றுக்
காதற் குழவிக் கூறுமுலை மடுக்கு
நுந்தை நும்மூர் வருது
மொண்டொடி மடந்தை நின்னையாம் பெறினே." (ஐங். கூஉ)

---

1. 'அதிகரித்து நின்ற' என்றிருப்பது நலம்.

2. பெயர்—எழுவாய்.

3. உடைமை—அறிவுடைமை என்றிருப்பது நலம். உரன் என்பதற்கு அறிவு என்பது பொருளாதலின். இளம்பூரணரும் அறிவொடு என்று கூறல் காண்க.

4. தாந்தாம் அறிந்த கிளவியானும் என்பது தானறிந்த கிளவியானும் என்றிருத்தல்வேண்டும். தான் அறிந்தகிளவியானும் நிலம் பெயர்ந்துரையாத கிளவியானும் என்பனவற்றை மேலே 'மேற்கூறிய வகையானே' என்பதன்முன் வைத்து, அவற்றோடு எனஎன் பதோர் சொற்சேர்த்து, "தானறிந்த கிளவியானும் நிலம் பெயர்ந்துரையாத கிளவியானும்" என மேற்கூறிய வகையானே இடம் வரையப்படாது; எந்நிலத்துள்ள பொருளானும் உள்ளுறையுவமஞ் சொல்லப்பெறும் எனத் திருத்தி எழுதிக்கொள்க. எந்நிலம் அந்நிலம் என மயங்கி எழுதப்பட்டது. 'இடம் வரைவின்றே' என்பதன் உண்மைக் கருத்தை நோக்குவோர்க்கு இது புலனும். இங்ஙனம் மாறியும் மயங்கியும் எழுதப்பட்டன பல உள. அவற்றை ஆங்காங்குக் காட்டுதும். இதுவே பொருத்தமாதல் கூ0-ம் சூத்திர உரை நோக்கித் தெளிக.

*சூத்திர முறையை நோக்கும்போது இச்சூத்திரத்தில் யாதோ பிழை இருப்பதாகத் தோன்றுகிறது.

என்றவழிக், தாய்போன்று தும்மைத் தலையளிப்பலெனத் தலை மகன் தலைமை தோன்ற உரைஞெடு கிளந்தவாறு காண்க. [1] ஒழிந்தோர்காயின் வரையறையின்மையிற் காட்டாமாயினும். அவை வந்துழிக் காண்க. (உஎ)

[இன்பமுந் துன்பமுந் தோன்ற உவமை சொல்லப்படும் எனல்]

கூஎகூ. **இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு**
முவம மருங்கிற் ரோன்று மென்ப.

இதுவும் மேலதற்கே யாவதோர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற்கூறப்பட்ட உள்ளுறையுவமம் இன்ப துன் பங்கள் தோன்றச் சொல்லவும்படும் என்றவாறு.

"கழனி [2] மாஅத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளை கதுஉ மூரன்." (குறுந். அ)

என்பது பலவகையின்பமும் வருந்தாது பெறுவரென்பதற்கு உவமையாகி வருதலின் இனிதுறு கிளவியெனப்பட்டது.

"தாய்[3]சாப் பிறக்கும் புள்ளிக் [4]கள்வனெடு
பிள்ளை நின்னு முகூலத்து." (ஐங்குறு. உச)

என்பது தலைமகன் [5] கொடுமை கூறினமையின் துனியுறு கிளவி யாயிற்று. இவ்விரு பகுதியும்படச் செய்யப்படும் மேற்கூறிய உள்ளுறையுவமமென்பது இதன் கருத்து. மருங்கென்னும் மிகை யானே ஏனையுவமத்தின்கண்ணும் இப்பகுதி கொள்ளப்படும். அவை :—

---

1. ஒழிந்தோர்க்காயின் என்றிருத்தல் நலம்.

2. மாஅத்து—மாமரத்தினது. வாளை தனக்குரிய உணவன்றி உகுதீம்பழத்தையுங் கதுவுமூர் என்றமையானே பலவகையின்ப மென்றும். பலவகையின்பமும் என்று பொருள் கொண்டமை யான் 'மரத்து' என்று பாடங் கொண்டாரோ என்பதும் ஆரா யத்தக்கது. மரத்து என்பது சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப் புப் பாடம்.

3. சா—சாக.

4. கள்வன்—ஞெண்டு.

5. நண்டும் முதலையும் அன்பின்றித் தன் கிளைக்கே கொடுமை செய்தல்போலத் தலைமகனும் தன் கிளைக்கு அன்பின்றிக் கொடுமை செய்பவன் என்பதாம்.

"மருந்தெனின் மருந்தே [1] வைப்பெனின் வைப்பே." (குறு. எக)

என்பது இனிதுறு கிளவி;

[2] "காஅத்தின் வெய்யவெந் தோள்." (ஐங். ஐம். உச)

என்பது துனியுறு கிளவி. (உஅ)

[தலைவி உள்ளுறை கூறும் நிலம் இவை எனல்]

கூஅச. **கிழவோட் குவம மீரிடத் துரித்தே.**

இஃது, அவ்வுள்ளுறையுவமையை வரையறுத்துணர்த்து தல் நுதலிற்று.

இ—ள்: தலைமகள் இரண்டிடத்தல்லது உள்ளுறையுவமை சொல்லப்பெறுள் என்றவாறு.

இரண்டிடமென்பன மருதமும் நெய்தலும்; அக்கிலத்துப் பிறந்த பொருள்பற்றியல்லது உள்ளுறையுவமஞ் சொல்லுதல் கிழத்திக்குரித்தன்றென்பது கருத்து. இவ்விடத்து உரிமை யுடைத்தெனவே குறிஞ்சிக்கண் அத்துணை யுரித்தன்றென்றவாறு.

"தாமரை
வண்டுது பனிமல ராரு மூர
யாரை யோநிற் புலக்கேம்." (அகம். சசு)

என்றவழி, வண்டுது பனிமலரெனப் பிறர்க்குரிய மகளிரென யும் அவரை நயப்பாயெனவும் உள்ளுறையுவமம் மருதத்துக் கண் வந்தது.

"அன்னை வாழிவேண் டன்னை கழிய
முண்டக மலருந் தண்கடற் சேர்ப்ப
னெந்தோ டுறந்தன ளயி
னென்னுங் கொல்லவ னயந்த தோளே." (ஐங். கஅ)

என்பது நெய்தல். இதனுட் கழிய முண்டக மலருமென முள் ளுடையதணைப் பூமலருமென்று உள்ளுறுத்ததனால் [3] இருவர் காமத்துறைக்கண்ணும் ஒருதலை இன்ன ஒருதலை இனிதென்று

---

1. வைப்பு—வைப்புநிதி.

2. காஅம்—முதலை.

3. இருவர்—தலைவனும் தலைவியும். ஒருதலை இன்ன என் றுள்; தந்தோழனைத் துறந்தமைபற்றி. ஒருதலை இனிது என்றுள்; அவன் நயந்த தோளின்மையின் எந்தோள் வாடுமென்று பிரைந்து வரைவான் என்பதுபற்றி. முள்ளி முள்ளாற் றுன்பஞ் செய்தலும் பூவாலின்பஞ் செய்தலுமுடையதுபோல இவனும் ஒருபக்கத்தாற் (பிரிதலாற்) றுன்பமும் ஒருபக்கத்தால் வரைந்து (புணர்வானதலின்) இன்பமுஞ் செய்தலுடையனென்பதாம்.

னென்பது. என்றோறுந்தனனென்பது முள்ளுடைமையோ டொக்க, என்னுங்கொல் அளனயந்தோடோனென்றவழி [1]அவன் அன்பிற்றியாமை கூனிமையின் முண்டக மலர்ச்சியோடொப் பிக்கப்படும். பிறவும் அன்ன.

"குன்றக் குறவர் புன்வேய் குரம்பை
மன்று டினமழை மறைக்கு நாடன்
புரைவளை வாழி தோழி விரைபெய
ரும்பனி யசையிய கூதிர்ப்
பெருந்தண் வாடையின் முந்துவந் தனனே." (ஐங். உறஉ)

என்னுங் [2]குறிஞ்சிப் பாட்டினுள் வறுமைகூர்ந்த புல்வேய் குரம்பையை மழை புறம்மறைத்தாற்போல, வாடைசெய்யும் நோய்தீர்க்க வந்தானென்று உள்ளுறையுவமஞ் செய்தவாறு கண்டுகொள்க. இனிக் கிழவோட்குவமம் பிரிவிடத்துரித்தென் பது பாடமாக உரைப்பாருமுளர். யாதானுமொரு நிலத்தாயி னும் பிரிந்திருக்கவிடத்து உள்ளுறையுவமங் கூறப்பெறுங் கிழத்தி என்பது [3]இதன் கருத்து. 'பெருந்தண் வாடையின் முந்து வந்தனனே' என்பது [4]பிரிவன்றுகவின், ஈடமென்றலே வலி தென்பது. (உசு)

[தலைவன் உள்ளுறை கூறுதற்கு வரையறையில்லை எனல்]

கூ0சு. கிழவோற் காயி னிடம்வரை வின்றே.

மேல் "உரிஞெடு நொக்குந்" என்றதல்லது இன்னவழிச் சொல்லப்பெறுந் தலைமகனென்றிலன், அதனுன் அவற்கு எல்லா நிலனும் உரியவாமென்கின்றனென்பது.

இ—ள்: தலைமகற்கு இடவரையறை இல்லை என்றவாறு.

வரையறை யில்லனவற்றுக்கு வரையறை கூறுமே முடி யாவோவெனின் அங்ஙனமாயினுங் கிழத்திக்குந் தோழிக்கும் இடம் வரையறுத்தகாலைக் கண்ட மாணாக்கன் இவ்வாறே தலை மகற்கும் இடம் வரையறையுண்டுகொலென்று கருதிற் கருதற்க வென்றற்கு இது கூறினனென்பது. (கூ0)

1. அவள் என்றிருப்பது பிறப்பு.
2. குறிஞ்சிப்பாட்டு என்றது, குறிஞ்சி ஒழுக்கத்திற்குரிய பாட்டு என்பது கருத்து.
3. இதன்—இப்பாடத்தின்.
4. வந்தது புணர்ச்சிப்பொருட்டாகலின் பிரிவன்றுமென்ற படி.

[தோழியும் செவிலியும் உள்ளுறை கூறுமாறு இவ்வாறெனல்]

கூ0சு. தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக் கூறுதற் குரியர் கொள்வழி யான.

இது தோழியுஞ் செவிலியும் உள்ளுறையுவமங் கூறுமிட முணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்துமாற்றான் உள்ளுறையுவமங் கூறப்பெறுப தோழியுஞ் செவிலியும் என்ற வாறு.

காலமுமிடனும் பொருந்துகலென்பது வெளிப்படக் கிள வாது [1]முன்னத்தான் மறைத்துச் சொல்லவேண்டியவழி அவ் வாறு சொல்லப்பெறும் அவருமென்றவாறு. இங்ஙனம் கூறவே,

"ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்று." (கூ0உ)

என்றவழி எல்லாரும் உள்ளுறையுவமஞ் சொல்லப்பெறுவரென் பது பட்டது; அதனா றற்றாயுஞ் ஆயத்தாருங் தன்னை யரும் உள்ளுறையுவமை கூறப்பெறுவரெனவுங், தோழி கூறின் நிலம் பெயர்ந்துரையாத பொருளான் ஒருவழிக் கூறுமெனவுஞ், செவிலிக்காயின் இடம் வரைவின்றெனப்பட்ட வகையாற் பொருந்தும்வழிக் கூறுதற்குரியளெனவுங் கூறினனும் இச்சூத் திரத்தானென்பது. கொள்வழியென்றதனாற் றோழிக்குப்போல நிலம் பெயர்ந்துரையாத பொருளான் உள்ளுறையுவமங் கூறு தலே செவிலிக்கு முரித்தென்பது கொள்க. மற்[2]றவையெல் லாம் அகப்பொருட்கே யுரியவாக விதந்தோதியதென்னை? புறப் பொருட்கு வாராதனபோலவெனின் ஆண்டு வருதல் அரிதாக லின் இவ்வாறு அதற்கிற்கே கூறினனென்பது.

"வள்புலக் கேளிர்க்கு வருவிருந் தயரு
மென்புல வைப்பி னன்னாட்டுப் பொருந." (புறம். சஉ)

என்றதனாற், பகை வேந்தரை வென்றிகொள்ளுங்கால் [3]அவர் தாமே தத்தம் பொருள் பிறர்க்களிப்பரென்னும் பொருள்

1. முன்னம்—குறிப்பு.
2. இவை—இவ்வுள்ளுறைகள்.
3. வள்புலம் மென்புலம் என்றதனானே வென்றோர் வலி யர் என்பதும் தோற்றோர் மெலியர் என்பதும், மெலியார் வலி யார்க்குத் திறை கொடுப்பர் என்பதும் உள்ளுறையாகத் தோன் றிற்றென்று கொண்டார்போலும்.

தோன்றினும் தோன்றுமென்பதல்லது ஒருதலையாக உள்ளுறை யுவமங் கோடல்வேண்டுவதன்று. என்னை?

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனெடு
பின்னி நின்னு முதலைத் தவனே." (ஐங்கு. உச)

என்றாற்போலக் கூறுது, அந்நாட்டுக் [1] கருங்களமர் முதலாயினர் வருந்தாமற் பெறும்பொருள் பிறநாட்டார்க்கு விருந்து செய்யத்தகுமென்று அந்நாட்டினது வளமை கூறினமையினென்பது. தோழி பொருந்தியவழிக் கூறுமாறு முன் காட்டப்பட்டன. செவிலி பொருந்துவழிக் கூறுவனவுங் கண்டுகொள்க. இலக்கணமுண்மையின் [2] அவையும் உளவென்பது கருத்து. (ஙக)

[வேறுபடவரு முவமைக ளிவையெனல்]

கூஎ. வேறுபட வந்த வுவமத் தோற்றங்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்.

இது மேலெல்லாம் இருவகை யுவமமுங் கூறி இன்னும் ஏனையுவமப்பகுதியே கூறுவான் எய்தாதெய்துவித்தது.

இ—ள்: வேறுபட வந்த உவமத் தோற்றம்—வேறுபாடு தோன்றவந்த உவமைச்சாதி, தோற்றமெனினும் பிறப்பெனினுஞ் சாதியெனினும் ஒக்கும்; கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்—அங்ஙனம் வேறுபடவந்தனவாயினும் மேற் கூறிய பகுதியானே கொள்ளுமிடனறிந்து கொளுத்துக என்றவாறு.

கொளுவுதலென்பது 'கொளாஅல்' என்பதாயிற்று.

வேறுபட வருதலென்பது:— உவமைக்கும் பொருட்கும் [3] ஒப்புமை மாறுபடக் கூறுதலும்: ஒப்புமை கூறுது [4] பெயர் போல்வனவற்று மாத்திரையானே மறுத்துக் கூறுதலும்,

1. கருங்களமர்—பறையர். சேனுவரையரும் வெண்களமர் கருங்களமர் என்பன பண்பு குறியாது சாதிகுறித்து வந்ததென்பர். (சொல். கிளவி. கஎ-ம் சூத்திர உரை நோக்குக.)

2. அவை என்றது உதாரணங்களை.

3. ஒப்புமை மாறுபடக் கூறலும் என்ற பாடமே பொருத்தம். என்னை? "வையங் காவலர்" என்ற உதாரணம் அதற்கே காட்டப்படலின்.

4. பெயர்போல்வனவற்றுன் மறுத்துக்கூறற் குதாரணம் பின்காட்டும் "கண்ணனவனிவன் மாறன்" என்பது. இது வேற்றுமையணியுள் அடங்கும்.

[1] ஒப்புமை மறுத்துப் பொருளை நாட்டிக் கூறுதலும், [2] ஒப்புமை மறுத்தவழிப் பிறிதோருவமை நாட்டுதலும், [3] உவமையும் பொருளும் முற்கூறி நிறீஇப் பின்னர் மற்றைய ஒவ்வாவென்றலும், [4] உவமைக்கு இருகுணங் கொடுத்துப் பொருளினை வாளாது கூறுங்கால் உவமையினை இரண்டாக்கி ஒன்றற்குக் கூறிய அடை ஒன்றற்குக் கூறுது கூறுதலும், [5] ஒப்புமை குறைவுபட உவமித்து மற்றொரு குணங்கொடுத்து நிரப்புதலும், [6] ஒவ்வாக்கருத்தினுன் ஒப்புமை கோடலும், [7] உவமத்திற்கன்றி உவமத்திற்கு ஏதுவாகிய பொருட்குச் சில அடைகூறி அவ்வடையானே உவமிக்கப்படும் பொருளினைச் சிறப்பித்தலும், [8] உவமானத்தினை உவமேயமாக்கியும் அது விலக்கியுங் கூறுதலும், [9] இரண்டு பொருளானே வெவ்வேறு கூறியவழி ஒன்று ஒன்றற்கு உவமையென்பது கொள்ளவைத்தலும் இன்னோரன்ன வெல்லாம் வேறுபடவந்த உவமத் தோற்றமெனப்படும்.

இவற்றைக் கூறிய மருங்கிற் கொளுத்துதலென்பது, முற் கூறிய ஏனையுவமத்தின்பாலும் பிற்கூறிய உள்ளுறையுவமத்தின் பாலும் படுத்துணரப்படுமென்பது. ஏனையுவமத்தின்பாற்படுத்த லென்பது வினை பயன் மெய் உரு என்ற நான்கும்பற்றி வருதலும் அவற்றுக்கு ஓதிய ஐவகை நிலைக்களனும்பற்றி வருதலுமெனக் கொள்க. உள்ளுறையுவமத்தின்பாற்படுத்தலென்பது, இவ்வேனையுவமம்போல உவமையும் பொருளுமாகி வேறுவேறு விளங்கவாராது குறிப்பினுற் கொள்ள [10] வருதலின் இக்கருத்தினானே [11] இதனை [12] ஈண்டு வைப்பாயிற்று.

1. இது தேற்றவுவமையுளடங்கும்.
2. இது பிறிது பொருளுவமை.
3. இது வேற்றுமையணி.
4. மறு பொருளுவமையுளடங்கும்.
5. பல பிறிதுபொருளுவமையுளடங்கும்.
6. கருத்துவமையுளடங்கும்.
7. மறுபொருள் உவமையுளடங்கும்.
8. தற்குறிப்பேற்றம்.
9. எடுத்துக்காட்டுவமை.
10. வருதலின் என்பது வருதல், என்றிருத்தல்வேண்டும்.
11. இதனை—இவ்வேறுபட வந்த உவமத்தினை.
12. ஈண்டு—உள்ளுறையுவமை அதிகாரப்பட்ட இடத்து.

வரலாறு :—

(க) "வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருஅ
நிடஞ்சிலை தென்னு முக்கூர் துரப்ப
வொடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்கன மொத்தியோ வியங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி
மாரி வருதி மலோமறைந் தொளித்தி
யகலிரு விசும்பி னுயரும்
பகல்விளங் கியசா யாற் பல்கதிர் விரித்தே." (புறம். 8)

[1] என்னும் பாட்டினுட் "கடந்தடு தானைச் சேர லாதனை" என்னுந்தானை உவமத்திற்கு வந்த அடையினைப் பொருட்கு மறுத்துக்கொள்ள வைத்தானென்பது. என்னை? "வெஞ்சுடர் வழி" என்னுந்தானை உவமத்திற்குரிய அடையினைப் பொருட்கு மறுத்துக்கொள்ள வைத்தானென்பது. "இனிப் பொழுதென வரைதி" என்பது தொடங்கிப் பாட்டு முடிகாறும் பொருட்குரிய அடையினை உவமத்திற்கு மறுத்துக்கொள்ள வைத்தானென்பது. என்னை? வெஞ்சுடர்வழித் தோன்றிய அரசனைத் தண்சுடரோடு பழிப்பான் பொருளே உவமஞ்செய்தானென்பது.

[என்னும் பாட்டினுட் "கடந்தடு தானைச் சேர லாதனை" என்னுந் தானை உவமத்திற்கு வந்த அடையினைப் பொருட்கு மறுத்துக்கொள்ள வைத்தானென்பது, இனிப் "பொழுதென வரைதி" என்பது தொடங்கிப் பாட்டு முடிகாறும் பொருட்குரிய அடையினை உவமத்திற்கு மறுத்துக்கொள்ள வைத்தானென்பது. என்னை? வெஞ்சுடர்வழித் தோன்றிய அரசனைத் தண்சுடரோடு [2] பழிப்பான் பொருளே உவமஞ் செய்தமையானென்பது.]

1. 'என்னும் பாட்டினுள்' என்றுதொடங்கு மிவ்வாக்கியம் பின் பகரக் கோட்டிலடைத்த வாக்கியம்போலிருப்பிற் பொருத்தமாகும். என்னை? 'வெஞ்சுடர்வழி' என்பது பாட்டினுள்ள அடிகளுளொன்றாகக் காணப்படாமையானும், ஏனைய வாக்கியம் முன்வந்தமையானும் 'என்னை? வெஞ்சுடர்வழி' எனப் பின்வரும் வாக்கியமே இங்ஙஞ் சேர்த்துப் பிழையாக எழுதப்பட்டிருத்தல்வேண்டுமென ஊகிக்கப்படுதலானுமென்பது. இப்பாட்டினுள் உவமம்—அரசன், உவமேயம்—சந்திரன் எனக் கொள்க.

2. பழிப்பான் — 'உவமிப்பான்' என்றிருத்தல்வேண்டும். அங்ஙனமே டாக்டர் உ. வே. சாமிநாதையரும் புறநானூற்றில் இப்பாட்டினடிக்குறிப்பிற் கூறியுள்ளார். ஆண்டுக் காண்க.

[பொருளே யுவமஞ்செய்தனர்] 'மொழியினு'(உஅச) மென்றதனாற் பொருளினை உவமையாகக் கூறாது, உள்ளுறையுவமம் போலக் கொள்ளவைத்துப் பின்னர் உவமத்திற்கு அடையாயவற்றுள், 'வையங் காவலர் வழிமொழிந் தொழுக' என்றான். வழிமொழிதலென்பது வேற்றரசர்க்குத் தன்றன்மையெனவேறின்றித் [1] தன்னகப்படுத்தல். ஆகலான் தக்க மொளியோடு [2] படுத்து ஒழுக்க கோளுஞ் செல்லுந் காலுஞ் செல்லும் மதியமென்று எதிர்மறுத்துக் குற்றங் கூறாங் குறிப்புப்படவைத்தானென்பது. 'போகம் வேண்டிப் பொதுச்சொற் பொருது' எனவே இன்பதுகர்வமுற்றுச் சிறப்பில்லாக் [3] கட்டுரை யெய்தானெனவும், அவனேறு உவமிக்கின்ற மதியமாயின் இருபத்தெழுவர் மகளிரோடு போகந் துய்த்துச் சிறப்பில்லாத கட்டுரை புனையுமென்றும் எதிர் மறுத்துக்கொள்ள வைத்தான். சிறப்பின்மை யென்பது, எல்லார்க்கும் ஒத்தலாற்றான் அறஞ் செய்யாது, உரோகணிமேற் கழிபெருங் காதலனெனப்படுதல் போல்வன.

"இடஞ்சிலை தென்னு முக்கூர் துரப்ப."

எனவே, எஞ்ஞான்றுந் தன்னெல்லைக்கண்ணே வரும், மதிமண்டிலமென்று எதிர்மறுத்துக் கொள்ளப்படும்.

"ஓடுங்கா வுள்ளம்"

எனவே, அம்மதியந் தேய்ந்தொடுங்குமென்பது கொள்ளப்படும்.

"ஓம்பா வீகை"

எனவே, நாடோறும் ஒரோவோர் கலம்பாகப் பல்லாயிரக்கும் இன்பம் பயக்குமாற்றாற் றருவதல்லாத காலுடையவெல்லாம் ஒருகாலே கொடாத மதியமெனப்படும். 'கடந்தடு தானை' எனவே, மதிக்குத் தானையாகிய தாரகையெல்லாம் பகைக்குதிரா கிய பருதி மண்டிலத்துக்குத் தோற்குமென்றனும். இவ்வாற்றான் உவமான அடையெல்லாம் எதிர்மறுத்துக் கொள்ளப்பட்டன.

இனிப் பொருட்குரிய அடையும் அவ்வாறே எதிர்மறுத்துக் கொள்ளப்படுமென்றவாறு. வியங்குசெலன் மண்டிலமெனவே,

1. தன்னகப்படுத்தல்—தன்னுட்படுத்தல்.

2. படுத்து—பொருந்தச்செய்து. பட்டு என்றிருப்பது நலம். ஒழிந்தகோள்—தன்னையொழிந்த கிரகங்கள்.

3. கட்டுரை—வார்த்தை; பேச்சு.

கடையாயினுர் [1] கதியிற் செல்லு மதியமென்று பாட்டுடைத் தலைவன் தலையாயினுர் கதியிற் செல்லுமென்றுன். பொழுதென வரைதியெனவே, நாடோறும் நாழிகை வேறுபட்டு எறித்தி யென்றதனுன் இவன் [2] பொழுது செய்யாமெனவும், புறங் கொடுத் திறத்தியெனவே, தோற்றுர்போன்று ஒளிமழுங்கிச் செறிகின்றுயெ [3] (னவும், விளங்கித் தோன்றவெ) ன்றதனுற் [4] (தொடர்கின்ற) சுடர்போல விளங்கிப் பிறர் தோற்றேடக் காயும் இவனெனவும், மாறி வருதியெனவே, திங்கடோறும் மாறிப் பிறத்தியென்றதனுன் இவன் நிலைபெற்றுனெனவும், மலை மறைந் தொளித்தியெனவே, மலைசார்ந்தவழித் தோன்றுயென்றத னுன் இவன் தன்னுட்டு [5] மலைமீக் கூறுமெனவும், அகல் விசும்பி னுமெனவே, இவன் இவ்வுலகத்து நிலைபேறுடையனெனவும், பகல் விளங்காயெனவே, இவன் இருபொழுதும் விளங்குமென வுங் கொள்ளப்படும். முற்பகுதியும் பிற்பகுதியும் வேறுபடு தலின் வேறுபட வந்ததாயிற்று. மற்றவையும் அன்ன.

இக்கூறிய அடையெல்லாம், வினை பயன் மெய் உருவெனக் 'கூறிய மருங்கிற் கொள்வழிக்' [6] கொளுவுவதாகக் காட்டுவன வற்றிற்கும் இஃதொக்கும்.

(உ) "கண்ணை னவனிவன் மாறன் கமழ்துழாய்க்
கண்ணி யவற்கிவற் நு வேம்புதார்—வண்ணமு
மாய னவனிவன் சேயன் மரபொன்றே
யாய னவனிவன் கோ."

என்பது, பெயருங் காரு முதலாயினபற்றி மாயனேடு உவமங் கருதி மறுத்துரைத்தவாறு. [7] பெயரென்பது பொருளுணர்த்து தலின் அதனை வடிவின்பாற்படுத்துணர்க.

---

1. கதி—செலவு.

2. பொழுது செய்யாமை—காலங்குறித்துத் தோன்றுமை. எனவே தான் விரும்பிய காலத்துத் தோன்றுவான் என்றபடி.

3.—4. இப்பகரக் கோட்டினுள் அடைத்தவையும் வேண் டியதில்லை.

5. மலைமீக் கூறும்—மலையிலுள்ளாராலும் புகழப்படுவான் என்பது. இவன் மலைக்கண் மறையான் என்றபடி.

6. 'கொளுவுவதாகக் காட்டுவனவற்றிற்கும்' என்பது, 'கொளுவுக இனிக் காட்டுவனவற்றிற்கும்' என்று பாடமுள் ளது. அதுவே பொருத்தமாதல் காண்க.

7. பெயரும் வடிவுளடக்கப்படும் என்றபடி.

(ஊ) "அடிநோக்கி ஞெழ்கடல் வண்ணன்றன் மேனிப்
படிநோக்கிற் பைங்கொன்றைத் தாரோன்—முடிநோக்கித்
தேர்வளவ னுந்த நெளிந்தேன்றன் சென்னிமே
லாரலங்க லுன்றிற்றுக் கண்டு."

என்பதனுள், ஆழ்கடல் வண்ணனேயுங் கொன்றைத்தாரோனே யும் உவமை [1] கூறி அவற்றை மறுத்துத் தேர்வளவனென்த் தெளிந்தேனெனப் பொருளேயே நாட்டுதலின் அஃது உவமம் வேறுபட வந்ததாயிற்று.

(எ) [2] "இந்திர னென்னி னிரண்டேகண் ணேறூர்ந்த
வந்தரத்தா னென்னிற் பிறையில்லை—யந்தரத்துக்
கோழியா னென்னின் முகமொன்றே கோதையை
யாழியா னென்றுனைற் பாற்று."

என்பதனுள், இந்திரனேயும் இறையோனேயும் முருகனேயும் ஒப்பு மறுத்து நெடியோனே உவமங் கூறலின் ஒப்புமை மறுத்துப் பிறிது நாட்டியது.

(ஏ) 1. "கூற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமகனுங்
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார்—பொற்றொடி
[3] யாழியுடை யான்மகன் மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்."

என்பதனுன் உவமையும் பொருளும் முன் ஒருங்கு நிறீஇப் பின்னர் ஒவ்வாமை கூறுதலின் இதுவும் பின்னும் வேறுபட வந்ததாயிற்று.

2. "புனனுடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுப—புனனுட
[4] னேற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவ
னேற்றிரந்து கொண்டமையா னின்று."

என்பதுவும் அது.

(ஐ) [5] "ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலி
னீர்த்துறை படியும் பெருங்களிறு போல
வினியை பெருமை வெமக்கே." (புறம். கூச)

---

1. கூறி அவற்றை எனப் பிரிக்க.

2. கோதையாகிய இவனை இந்திரனென்னின் அவற்குக் கண் ஆயிரம்; இவற்கு இரண்டே. ஆதலால் அவனல்லன் எனப் பொருள் விரித்துரைத்துக்கொள்க. ஏறூர்ந்த அந்தரத்தான்—இவன். கோழியான்—கோழிக்கொடியோன்=முருகன்.

3. ஆழி—சக்கரம். மாயன் — கரியன். சேயன் — செந்நிற முடையன். கோழி—உறையூர்.

4. ஏற்று—எதிர்த்து. எறிந்து—கொன்று. ஏற்று—யாசித்து.

5. ஊர்க்குறுமாக்கள் என்னுஞ் செய்யுளில் அமைந்துள்ள வேறுபடவந்த உவமத் தோற்றம் என்பதன் விளக்கமாவது:

என்னும் பாட்டினுள் உவமையாகிய பொருளினை யானையுங் கடாமுமென இரண்டாக்கி யானைக்கே ஊர்க்குறுமாக்கள் வெண்கோடு கழாவின் நீர்த்துறை படியுமென்னும் அடைகூறி [1] ஊர்க்குறுமாக்கள் போல்வாரைத் துன்னருங் [2] கடாஅத்திற் குச் சொல்லாமையின் இதுவும் வேறுபடவந்த உவமைத்தோற்ற மெனப்பட்டது.

(எ) "முதிர்கோங்க முகையென முகஞ்செய்த குரும்பையெனப்
பெயறுளி [3] முகிழெனப் பெருத்தநின் னிளமுலை." (கலி. ருசு)

என்றவழி, முதிர்கோங்கும் முற்றிய குரும்பையும் பெரியவாக லின் அவைபோலப் பெருத்தநின் இளமுலையென்றல் ஒத்தது, பெயறுளிமுகுளஞ் சிறிதாக இவற்றோடு அதனை உடன் கூறி அப்பெயறுளி முகுளத்திற்கில்லாத பெருமைக்குணம் [4] பொருட் குப் பின்னர் விதந்து கூறுதலின் அதுவும் வேறுபட வந்த உவமையாயிற்று.

(அ) "மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பா ரியாங்கண்ட தில்." (குறள். கoஎக)

என்பது ஒவ்வாப் பொருளை ஒப்புமைகொண்டது. என்னை? மக்களைக் கயவர் ஒவ்வாரென்னுங் கருத்தினன் மக்கள்போல் வர் கயவரென்றமையின் அதுவும் வேறுபடவந்த உவமையா யிற்று.

(கூ) "நெடுந் [5] தோட் டிரும்பனை நீர்நிழல் புரையக்
குறும் [6] பல முரிந்த குன்றுசேர் சிறுநெறி."

யானை இனிமை செய்தற்கு ஊர்க்குறுமாக்களைச் சொல்லி அது மதம் பட்டவழி இன்னு செய்தற்கு அவர்போல்வாரை இன்னு ரென விதந்து சொல்லாமையின் வேறுபடவந்த உவமமாயிற்று என்பது. ஊர்க்குறுமாக்களுக்கு வெண்கோடு கழுவுமிடத்து களிறு இனியது. அவர்போல்வாருக்கு மதம்பட்டவழி இன்னாது என்பது செய்யுட்கருத்து.

1. போல்வாரை என்ற பாடமே பொருத்தம். போல் அவரை என்ற S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிற் பாடம் பொ ருத்தமில்லை.

2. கடாத்திற்கு—கடாமாகிய உவமைக்கு.

3. முகிழ்—குமிழி—முகுளம் என்பதும் குமிழிக்குப் பெயர்.

4. பொருள்—உவமேயம். பின்னர்—பின். விதந்து—தெரித்து என்றது பெருத்த எனத் தெரித்துக் கூறினமையை. பெருமை, குமிழியாகிய உவமைக்கில்லாதபடியாற்றான் பின் தெரித்துக் கூறினரென்றபடி.

5. தோடு—இதழ். 6. பல—பலவாய்.

என்பதனுள் உவமையாகிய நிழல் பொருட்கெய்தியது [1] உவம வினையன்றே, அதற்கு நெடுந்தோடும் பெருமையும் அடையா கக் கூறினன்; கூறவே, பனைநிழலோடொக்குங் குன்றஞ்சேர் சிறுநெறி முடிந்தவழிச் சென்றுபுகும் ஊர்க்குவமை நெடுந் தோடென்று கொள்ளவைத்தமையின் அதுவும் வேறுபடவந்த உவமையாயிற்று.

(கo) "மண்படுதோட் கிள்ளி மதவேழ மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெருளியால்—விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதுஉந்
தேயுந் தெளிவிசும்பி னின்று."

என்பதனுள், [2] உவமானத்தினை உவமேயமாக்கி அதனையே விலக் கினர்; என்னை? வெண்குடையென்று யானை குத்துமென்று மதியினைக் குடையுடனெப்பிப்பான் மதியினைக் குடையாகவே கூறிக், தேயுந் தெளிவிசும்பினின்று என்பதனுற் குடையோடு உவமை கூறியதை விலக்கினமையின் அதுவும் வேறுபடவந்த உவமைத் தோற்றமாயிற்று.

(கக) "அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு." (குறள். க)

என்றவழி, இரண்டு பொருள் வேறுவேறு கூறியதன்றி, 'அகர முதல எழுத்தெல்லாம் அதுபோல' என்றுனும் 'ஆதிபகவன் முதற்று உலகம் அதுபோல' என்றுனும் ஒன்றுகத் துணியு மாற்றான் உவமையும் பொருளுங் கூறுமையின் அதுவும் வேறு படவந்த உவமமாயிற்று. பிறவுமன்ன. இவை எனையுவமத்திற் கெல்லாம் பொதுவிலக்கணம்.

[ஒவ்வாதெனக் கூறி உவமையாக்கலும் உளவெனல்]

கoஅ. ஓரிக் கூறலு மீரிய பண்பே.

இதுவும் எனையுவமத்திற்காவதோர் இலக்கணமுணர்த்து தல் நுதலிற்று.

---

1. உவமவினையன்றே என்பதற்கு வினையுவமமன்றே என் பது கருத்து. பனைநிழல் முடிந்தவழி நெடுந்தோட்டு நிழல் தோன்றுதல் சிறுவழி முடிந்தவழிச் சென்று புகும் ஊர் தோன்றுதற்குவமையாதலின் வினையுவமம் எனப்பட்டது.

2. குடைக்கு உவமானம்—மதி. அதனை ஈண்டு உவமேயம் ஆக்கி என்றது குடைக்குவமானமாகிய மதியைப் பின் குடை யாகிய உவமேயமாக்கி என்றபடி. தன்னையுங் குடையென்று தன்மேலும் பாயுமோவென்று கருதி அவ்வச்சத்தால் மதி தேயு மென்று மதியைக் குடையாகக் கூறினமையே உவமேயமாக் கியதாம்.

இ—ள்: ஓரிஇக் கூறலும்—ஒக்குமெனக் கூறுது ஒவ்வாதெனக் கூறுதலும், உம்மை இறந்தது தழீஇயிற்று; மரீஇய பண்பு—அதுவும் உவமையாதற்கு அடிப்படவந்த வழக்கு என்றவாறு.

உதாரணம்:

"யாங்ஙன மொத்தியோ விலங்குசெலன் மண்டிலம்." (புறம். அ)

எனவும்,

"மாதர் முகம்போ லொளிவிட வல்லியேற்
காதலி வாழி மதி." (குறள், ககஅ)

எனவும் வரும்.

[1]"நின்னே ரனையை நீ."

என்பதும் அது.

இவற்றுள் யாங்ஙனம் ஒத்தியோவென்பது ஒவ்வாயென்னும்பொருட்டு. காதலி வாழிமதி யென்றவழியும், யான் காதலியாமையான் மதியமே! அவள் வாண்முக மொவ்வாயென்றலின் ஓரிஇக் கூறிற்று. [2]இதுவும் [3]மரீஇய பண்பாகலானும் உள்ளுறையுவமம்போலக் குறிப்பினுன் உவமங்கோட லொப்புமையானும் ஈண்டு வைத்தானென்பது. பண்பென்றதனுன் அதுவும் இலக்கணத்தோடொக்கும் என்றவாறு. இவற்றையும் வேறுபடவந்த உவமமென்னுமோவெனின், உவமையும் அவ்வழி மாறுபட வருமாறு உவமத்துங் கூறினுன், உவமையின்மை கூறுதலும் உவமையெனப்படுமென்றற்கு இது கூறினுனென்பது. இவற்றுள்ளும் வேறுபடவந்த இலக்கணம் மேலைச்சூத்திரத்துள் அடங்கும். (கங)

[உவமை பெருமையுஞ் சிறுமையுந் தோன்றுமலுங் கூறப்படுமெனல்]

கூ.ஐகூ. உவமத் தன்மையு முரித்தென மொழிப
பயனிலை புரிந்த வழக்கத் தான.

இஃது எய்தாதது எய்துவித்தது; மேல் ஏனையுவமங் கூறுங்கால், உவமிக்கப்படும் பொருட்குப் பெருமையுஞ் சிறுமை

1. நின்போல்வாரை யெர்ப்பை நீயெனவே, நின்போல்வாரில்லையென்று ஒவ்வாமை கூறியதாயிற்று.

2. இதுவும் என்றது இச்சூத்திரத்தை.

3. மரீஇய பண்பு—மரபாகவந்த தன்மை,

யுஞ் சிறப்பக் கூறல்வேண்டுமென்றன; அவ்வாறன்றி உவமமுங் கொள்ளப்படுமென்றமையின்.

இ—ள்: உவமத்தன்மையும் உரித்தென மொழிப—விகாரவகையாற் பெருமையுஞ் சிறுமையும் ஒரு பொருட்குக் கூறுது [2]பட்டாங்கு உவமங் கூறுதலும் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர், பயனிலை புரிந்த வழக்கத்தான—அதனுனும் ஒருப்பயன் தோன்றச் சொல்லுத னெறிப்பாட்டின்கண் என்றவாறு.

அது,

"பாரி பாரி யென்று பலவேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்." (புறம். கoஎ)

என்னும் பாட்டினுள் உலகளித்தற்கு மாரியும் உண்டென உவமித்துச் சிறப்பித்துக் கூறுவான், மாரியைச் சிறப்பித்துப் பாட்டுடைத் தலைவனுகிய பாரியை உயர்த்துக் கூறுதான்போல இயல்பினுன் உவமை கூறினுனும்; இது மாரிக்கும் பாரிக்கும் ஓரிழில்லையென்னுந் தன்மைபடக் கூறவே அவனுயர்வு கூறுதலிற் [3]பயனிலைபுரிந்த வழக்கெனப்படுமென்பது.

"கொல்லிநெப் பொலிந்த கூர்ங்குறும் [4]புழுகின்
வில்லோர் [5]தூணி வீங்கப் பெய்த
[6]வப்புநனை யேய்ப்ப வரும்பிய விருப்பைச்
[7]செப்பட ரன்ன செங்குழை யகந்தோ
[8]நிழுகி னன்ன நீம்புழற் [9]றுய்வா
[10]யுழுதுகாண் டுகிய வாகி யார்கழல்
பாலி வானிற் காலொடு பாறித்

1. அவ்வாறன்றி உவமமும் என்பது அவ்வாறன்றியும் உவமம் என்றிருப்பது நலம்.

2. பட்டாங்கு—உண்மை. உண்மை. இயல்பு தன்மை என்பன ஒருபொருளன. இளம்பூரணர் தன்மையென்பதற்கு உவமையது தன்மை என்பர். தன்மை—குணம்.

3. பயன்—பிரயோசனம்.

4. புழுகு—மொட்டு. எஃகின் எனவும் பாடம்.

5. தூணி—அம்பறுத்தூணி.

6. தூணி வீங்கப்பெய்த அப்புநனை, இருப்பை அரும்புக்குவமை.

7. செப்படர்—செப்புத் தகடு.

8. இழுது—வெண்ணெய்.

9. துய்வாய்—என்றது பூவை. உவம ஆருபெயர்.

10. உழுது காண்டல்—தாள்நீக்கிக் காண்டல்.

துப்பி னன்ன செங்கோட் [1]டியவி
னெய்த்தோர் மீமிசை நினைத்திற் பரிக்கும்." (அகம். கூ)

எனவும்,

" நீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூநீயம் பகுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற வணிலொடு [2]கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தோட்
டித்திலை வேய்ந்த [3]எய்ப்புறக் குரம்பை." (பெரும். அசு)

என்றாற்போல்வனவும் அது.

" கொல்லிக்கீப் பொலிந்த."

என்பதனுள் இந்நிலத்தின் மக்கள் அம்பினை உவமையாக்கி ஆண்டையவாகிய இருப்பையின் பூங்கொத்தை உவமிக்கப்படும் பொருளாக்கியும், உவம நிலத்திற்கேற்ற வெண்ணெய்த் திரளொடு, கழன்ற பூவினை உவமஞ்செய்தும், அந்நிலத்தியல்பு கூறினமையின் அது பயனிலை புரிந்த வழக்கெனப்பட்டது. பிறவும் அன்ன.

உவமத்தன்மையுமென்ற உம்மையான் உவமத்தன்மையே யன்றி வாளாது தன்மை கூறுதலும், அந்நிலத்திற்கே பயனிலை யெனப்படுவனவுங் கொள்க. அவை:—

" மான்றேர்ப் பள்ளி மகவொடு முடங்கி
[4]பின்பிணை வொழியப் போகி நோன்கா
ழிரும்பு கலியாத்த திருந்து[5]கணை விழுக்கோ
ளுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் [6]கரம்பைப் படுநீ ருடீஇ
நுண்புல் லடக்கிய வெண்பல் லெயிற்றியர்
[7]பார்வை யாத்த பறைதாழ் விளவி
னீழன் முன்றி னிலவுரற் பெய்து." (பெரும். அசு—கூஎ)

என்றவழி உவமஞ்செய்யாது அந்நிலத்தியல்பு கூறப்பட்டதாயினும் உவமத்தாற் [8]பொருட்பெற்றி தோன்றச்செய்தார்போல

1. இயவு—வழி.
2. கருப்பை—காரெலி.
3. எய்—முட்பன்றி.
4. ஈன்பிணவு—ஈன்றபெண். ஈன்பிணை எனவும் பாடம்.
5. கணை—திரட்சி.
6. கரம்பை—பாழ்நிலம்.
7. பார்வை—பார்வை மிருகம்.
8. பொருள்—உவமேயம்.

அந்நிலத்திற்குப் பயப்பாடு வெளிப்படச் செய்யாமையின் உவம விலக்கணத்துள் [1]இதனையும் இலேசினுற் கொண்டாமென்பது. அற்றன்று;

" மரபே தானும்." (தொ. செய். அo)

என்புழி, " நாற்சொல்லிய " லெனச் சொற்றன்மையுங் கூறப் பட்டமையின் உவமையாராய்ச்சியுள் அது [2]கூருனென்பது. [3]உம்மை இறந்தது தழீஇயிற்று; என்னை? உயர்ந்ததன்மேற் றன்றி, உயர்பிழிபுடைத்தல்லாத தன்மையுவமையுங் கொள்க வென்றமையின். (கூச)

[தடுமாறு உவமமும் உளவெனல்]

கூகo. தடுமாறுவமங் கடிவரை யின்றே.

இதுவும் உவமத்திற்கேயாவதோர் இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தடுமாறுவமம்—உவமையும் பொருளும் வேறு நிற்ப இது போலும் இதுவென்னுது அவ்விரண்டனையும் [4]ஐயுறச் சொல்லுந் தடுமாறுவமம், இனி அவ்வாறன்றி உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமையாக்கியுந் தடுமாறச் சொல்லு தலும் தடுமாறுவமமெனப்படும்; கடிவரை இன்று—அவ்விரண் டும் உவமமென்று சொல்லற்பாட்டிற் கடியப்படா என்றவாறு.

" அரிமல ராய்ந்த கண்ணம்மா கடைசி
திருமுகமுந் திங்களுஞ் [5]செத்துத்—தெருமந்து
வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி
யையத்து நின்ற தரா." (பொய்கையார்)

என்பதனுள் உவமையினையும் பொருளினையும் வேறுவேறு துணி யாது ஐயுற்று வையத்தும் வானத்துஞ் செல்லாது; அரா வென்றமையின் இது தடுமாறுவமமாயிற்று.

" தளிபெற்று வைகிய தண்கூ நீல
மளிபெற்றுர் கண்போன் மலரு—மளிபெற்ற

1. இது தன்மையணியுளடங்கும்.
2. கூருனகலின் என்பது என்றிருப்பது நலம்.
3. உம்மை—உவமத்தன்மையும் என்றதிலுள்ள உம்மை.
4. உவமையுற என்றும் பாடம்; அது சிறப்பின்று.
5. செத்து—(ஒன்முக) நினைத்து.

நல்லார் திருமுகத் தோற்றத் தளிபெற்ற
கல்லாரம் போன்மலருங் கண்.''

என்புழி, நீலத்தோடு கண்ணினையும் கண்ணினோடு நீலத்தினை யும் ஒன்றற்கொன்று உவமையாக்கியும் பொருளாக்கியும் ஒருங்கே தடுமாறக் கூறினமையின் இதுவுந் [1]தடுமாறுவம மெனப்பட் டது. பிறவும் அன்ன. (கூரி)

[உவமைக்குவமை இல்லையெனல்]

கஉக. அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே.

இஃது எய்தியது மறுத்தது; என்னை? வேறு ஒரு பொரு ளோடு ஒரு பொருளை உவமித்து நிறீஇ அப்பொருளோடு பிறி தொரு பொருளை உவமித்தலும் உவமையென்று கொள்ளுவா ளாயினும் அது கொள்ளப்படாது பொருள் விளங்காமையி னெனக் கூறி விலக்கியமையின்.

இ—ள்: அடுக்கிய தோற்றம் — உவமையும் பொருளும் நிறுத்தி அடுக்கிய தோற்றம், விடுத்தல் பண்பு—சிறப்பினவா கக் கொள்ளப்படா என்றவாறு.

[2] ''மதியத் தன்ன வாண்முகம் போலும்
பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை.''

என்றக்கான் மதியத்தன்ன வாண்முகத்தினைத் தாமரையென் றமையின் அவை ஒன்று ஒன்றனோடு பொருந்தாவென்பது கருத்து.

''இலங்குவளை யன்ன நலங்கே ழாம்பற்
போதி னன்ன தாதவிழ் கைதை.''

என்றக்கால், ஒன்று ஒன்றனோடு ஒரு [3]வண்ணத்ததாய் உவ மைக்கேற்பினும் ஒன்றற்கொன்று உவமையாய் நின்றது. நின்றுற, [4]மற்றும் அதனோடு உவமங்கொள்ளப்படாது; இது வரை யறையுடைமையின் விலக்கப்பட்டது. மற்று,—

1. இதனை இதரவிதரமென்பர் வடநூலார்.

2. மதியத்தன்ன வாண்முகம் என்பது துணிக்கப்பட்டு வேறு முடிபுபெறின் உவமைக்குவமையாகுங் குற்ற மாகாது; பெருது வருதலின் ஒன்று ஒன்றனோடு பொருந்தாது குற்ற மாம் என்றபடி.

3. வண்ணம்—நிறம்.

4. மற்றும்—மற்று எனல் இருத்தல் வேண்டும். அதனோடு—உவமைக் குவமையாய் நின்றதனோடு. இவ் வாக்கியத்தில் பிழை யிருத்தல் வேண்டும்.

''சுரந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த [1]குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நெறிச்சினை வேங்கை நாண்மலர் நச்சி.'' (சிறுபா. ககூ)

என்பதூஉம் அடுக்கிய தோற்றமெனப்படாதோவெனின், படா தன்றே; யானைக்கையோலுங் குறங்கு; குறங்குபோலும் வாழை யெனவடுக்கிச் சொல்லாது குறங்கினையுடையாளென்று துணித் துக் கூறியபின்னர்க் குறங்கென மால்வரை ஒழுகிய வாழை யென்றலுதலினென்பது. தோற்றமென்றதனான் உவமையும் பொருளுமாக நிறீஇ உவமவுருபு தோன்றக் கூறுங்கால் அடுக் கப்படுவதென்பது. (கூ)

[உவமை நிரனிறையாகவும் வருமெனல்]

கஎ. [2]நிரனிறுத் தமைத்த னிரனிறை சுண்ணம்
வரைநிலை வைத்த மூன்றலங் கடையே.

இதுவும் எய்தாதன வரையறையுடைமையிற் கூறியவற் றோடு இனமாகலின் உவமத்திற்காவதொன் றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: நிரனிறுத்து அமைத்தல் நிரனிறை—உவமையை யும் நிரலே நிறுத்துப் பொருளினையும் நிரலே நிறுத்து ஒப் புமை கூறின் அது நிரனிறையெனப்படும், சுண்ணம் வரைநிலை வைத்த மூன்றலங் கடையே—சுண்ணத்தினை [3]வரைந்த நிலைமை யான் வந்த சுண்ணமும் அடிமறியும் மொழிமாற்றுமென்னும் மூன்றுமல்லாத இடத்து என்றவாறு.

1. குறங்கின் என்பது குறங்கெனவரு மதற்கு உவமை யாகாது தான் துணிக்கப்பட்டுநின்று பின்வரும் ஓதி முதலிய வற்றோடும் எண்ணப்பட்டு உடைய என்னும் (தொக்குநின்ற பொருளாகிய) பெயரெச்சத்தோடு கூடி விறலியர் என்னும் பெயர்கோடலின் உவமைக் குவமையாகாது என்றபடி.

2. இளம்பூரணர் இச் சூத்திரத்தையும் இதற்கு முற் சூத் திரத்தையும் ஒன்றாக்கி, இச் சூத்திரத்து 'வரைநிலைவைத்த' என்பதை 'வரைநிலை வந்த' எனப் பாடங் கொண்டு இம் மூன்றுமல்லாதவிடத்து உவமை பல அடுக்கிவருதல் கொள்ளப் படாது என்பர்.

3. வரைதல்—நீக்கல். வந்த என்று பொருள் கூறலின் வைத்த' என்பது 'வந்த' என்றிருத்தல் வேண்டும்போலும்.

சுண்ணத்தினை வரைந்தநிலைமையான் வந்தனவெனவே சுண்ணந்தவிர மூன்றுளவோவெனின் அதனை [1] ஒருவரை விலக்க மூவரும் வந்திலரென்றாற்போலக் கொள்க.

உதாரணம்,

"கொடிகுவளை கொட்டை நுகுப்புண் கண்மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைதோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்."

என வரும். நிரனிறுத்தலென்னுது அமைத்தலென்றதனான் நிரனிறையன்றி அமைத்துக்கொள்வதும் உண்டு; அது,

[2] "களிறுங் கந்தும் போல நளிகடற்
கூம்புங் கலனுந் தோன்றுந்
தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே."

எனவரும்; பிறவுமன்ன.

என்றார்க்கு, 'நிரனிறுத்தமைத்த நிரனிறை ஏனைவரை நிலைலைத்த மூன்றலங்கடையே' என்னுது, சுண்ணத்தினை வரைந்தோதியது என்னையெனின்? அவை மூன்றுஞ் சுண்ணம்போலச் சுண்ணஞ் செய்யப்படுதலின், அவ்வாற்றாற் சிதர்ந்து கிடப்ப உவமையுங் கூறின் அது பொருள் விளக்காதென்பது அறிவித்தற்கென்பது. என்னை? அடிமறியுள் ஓரடியுள் உவமங் கூறி ஓரடியுட் பொருள்வைத்தால் இனிது பொருள்கொள்ளாது அடிமறிக்குங்காலைப் [3] பிறிது பிறிதாகலுடைத்து. இனி ஓரடியுள் உவமங் கூறிப் பின்னர் எத்துணையுஞ் சென்று பொருள் கூறி மொழி மாற்றிக்கொள்ள வைப்பின் அதுவும் உவமத்தாற் பொருள் தோன்றாது. சுண்ணத்திற்கும் அஃதொக்கும்.

இனி, [4] இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சில வற்றையுஞ் சொல்லதிகாரத்தினுள்ளுஞ் செய்யுளியலுள்ளும்

1. மூவருள் ஒருவரும் அடங்குதல் போல என்பது கருத்து.
2. எதிர் நிரனிறை.
3. பிறிது பிறிதாகல்—உவமை வேறும் பொருள் வேறுமாகல்.
4. இவ்வோத்தினிற் கூறுகின்ற சில என்பது உவமைகளையும் வேறுபடவந்த உவமங்களையும் ஒரீஇக் கூறுவனவற்றையும் தடுமாறுவமங்களையும் நிரனிறை உவமைகளையும் குறித்து நின்றது. சொல்லதிகாரத்தில் கூறுவன சில என்றது குறிப்புப் பொருள், ஏது, பண்புத்தொகை (உருவகம்), உவமத்தொகை, பொருள்கோள் முதலியவற்றை. குறிப்புப்பொருள் அணியில் ஓட்டணியாகின்றது. செய்யுளியலுட் கூறுவன சில என்றது

சொல்லுகின்றன சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு, மற்று அவை செய்யுட்கண்ணே அணியாமென [1] இக்காலத்தாசிரியர் நூல்செய்தாருமுளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும் அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும், [2] தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையாவழியுமென்பது. என்னை?

"நாயகர்க்கு நாய்கள்போ னட்பிற் பிறழாது
கூஉய்க் குழாஅ முடன்கொட்கு—மாய்படை
பன்றி யனையர் பகைவேந்த ராங்கவர்
சென்றெவன் செய்வர் செரு."

என்றவழி, நாய்போலும் நட்புடையர் படையாளரென்பது வினையுவமம்; பன்றியனையர் பகைவேந்தரென்பது நாய்க்குப் பகையாகிய பன்றிபோல [3] வென்பது வேற்று வேந்தர் பகைவராதலால் அவ்வுவமை [4] விலக்கிற்று. அன்றுமாயினும் அஃதணியெனப்படாது; உவமைதான் உயர்ந்தின்மையின் அது குற்றமன்றாவெனின்?

"பேரூர் மட்ட களிற்
நாரில் கோயிற் றேருமா னின்னே." (புறம். கூ00)

என்பது குற்றமன்றாகலின் [6] அதுவுங் குற்றமன்றெனப்படும். இனிப் பொன்மாலையும் பூமாலையும்போலப் பொலிவுசெய்தலின் [7] இதுவுங் குற்றமாகாது [8] மேலதே குற்றமென்பது. அற்

தொடைகளுட்சில, உள்ளுறை, இறைச்சி, மெய்ப்பாடு முதலியவற்றை.

1. இக்காலத்தாசிரியர் என்றது தமிழில் அணிநூல்கள் செய்த தண்டி முதலிய ஆசிரியர்களைக் குறிக்கும். அணிநூல் என ஒரு நூல் இருந்ததாகவுஞ் சிலர் கருதுவர்.
2. தாம் என்றது அணிநூல் செய்தோரை.
3. என்பது என்னுஞ் சொல் சுண்டு வேண்டியதில்லை.
4. விலக்கலரிது—விலக்கக்கூடாது. அன்றுமாயினும் என்பதற்கு விலக்குதலரிதன்றுமாயினும் என்பது பொருள். விலக்கலாமாயினும் என்பது கருத்து.
5. ஓரில்—ஒரு வீட்டின்கண். கோய்—கள்முகக்கும் பாத்திரம். அது இழிவுடையதாகாததுபோல இதுவு மிழிவுடைத்தாகாதென்றபடி.
6. அதுவும்—அவ்வுவமையும்.
7. இது—கோய் வருஞ் செய்யுள். கோய் என்னும் உவமை உயர்ந்த பொன்மாலைபோலப் பொலிவு செய்யாதாயினும் அதிற் சிறிது குறைந்த பூமாலைபோலப் பொலிவுசெய்யுமென்றபடி.
8. மேலது—பன்றியனையர் பகைவேந்தர் என்னுஞ் செய்யுள்.

றன்று, இன்ன சொல்லும் இன்ன பொருளுமுடையன பொன் மாலையெனவும் பூமாலையெனவும் வரையறுத்துக் [1]கூறலன்மை யின் அதனானும் அதனைக் குற்றமென்று இலக்கணத்தார் கூறின் நிரம்பாது. அல்லதூஉம் பொருளதிகாரத்துட் பொருட் பகுதிகளெல்லாம் செய்புட்கு அணியாகலான்; அவை, "பாட லுட் பயின்றவை" யெனப்பட்டன என்றதனான் அவையெல் லாந் தொகுத்து அணியெனக் கூறுதல், வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில் கூற்றுமென்பது.

இனி, இரண்டு பொருளெண்ணி, அவற்றை விளைப்படுக் குங்கால் ஒருங்கென்பதோர் சொற்பெய்தல் செய்புட்கு அணி யென்ப. பிறவும் இன்னோரன்ன பலவுஞ் செய்புட்கணியாமென் பது அவர் கருத்து. ஒருங்கே யென்பதையன்றி மூன்று தாழிசையுண் மூன்று பொருள்கூறி எனவாங்கென்பதோரு சொல்லான் முடிந்தவழியும் எனவாங்கு என்பதோர் மொழி யில் எனவென்பது ஓரலங்கார மெனல்வேண்டுமாகலான் அவ் வாறு வரையறுத்துக் கூறலமையாதென்பது. பிறவும் அன்ன.

இனி, [2]அவற்றைப் பொருளுறுப்பென்பதல்லது, அணி யென்பவாயிற் சாத்தனையுஞ் சாத்தனுலணியப்பட்ட முடியுந் தொடியும் முதலாயவற்றையும் வேறு கண்டாற்போல அவ்வணி யுஞ் செய்புளின் வேறுகல் வேண்டுமென்பது.

இனிச் செய்புட் கணிசெய்யும் [3]பொருட்படை எல்லாங் கூறுது சிலவே கூறி ஒழியின் அது குன்றக் கூறலா (சூசூஙூ) மென்பது. [4]அவை யாவையெனின்,

"அகமனர் கேள்வ னகற்சி நீர்த்தற்கு
மகனெடு புகுந்த மகவுநிலை யெனுஅ
மறுக்குங் காலை மறுத்துரை மொழியாது
குறிப்புவேறு கொளீஇய குறிப்புநிலை யெனுப்
புலவிக் கண்ணும் போக்கின் கண்ணு
மழுதலு மழாவதலு முயங்கலு மென்றுங்
இருவகைப் பட்ட மங்கல மெனுஅப்

1. கூறலன்மையின்—கூறல் கூடாமையின்.

2. அவற்றை என்பது உவமங்களுட் சிலவற்றையும் சொல்லதிகாரத்துள்ளும் செய்யுளியலுள்ளுங் கூறிய சிலவற்றையுஞ் சுட்டி நின்றது.

3. பொருட்படை—பொருட்டிரள்.

4. அவை—அப் பொருட்படை.

புலம்புறு காலை யறிவொடு படாது
புலம்புகொள வந்த செய்வினை யெனுஅ
வின்னே ரன்ன பலபொருட் பகுதி
நன்னெறிப் புலவர் நாட்டல்வகை யுடைய."

என்றோர் சூத்திரஞ் செய்யின் அவையும் அலங்காரமெனப்படு மென்பது; அவற்றுக்கு உதாரணம்,

"ஆகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்." (அகம். ங)

என்பது மகவுநிலை.

"ஓவச் செய்தியி னொன்றுநினைந் தொற்றி." (அகம். ங)

என்பது குறிப்புநிலை; என்னை? தலைமகன் [1]போக்கினை உவக் குங் குறிப்பல்லாத குறிப்பாகலின் அஃதணியெனப்படும்.

"தும்முச் செறுப்ப வழுதாள்." (குறள். கஙகஅ)

என்பது, புலவியுளழுதமங்கலம்.

"பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
.....
மோயின ளுயிர்த்த காலை."
(அகம். ங)

என்பது போக்கின்கண் அழாதமங்கல நிலை.

"விளிநிலை [2]கொளாஅ டமியண் மென்மெல
நலமிகு சேவடி நிலமிசை வடுக்கொளாஅக்
குறுக வந்து கூரெயிறு தோன்ற." (அகம். ங)

என்பது, அறிவொடு படாது புலம்புகொளவந்த செய்வினை; என்னை? கேளாது கேட்டாள்போல் வந்தமையின், [3]அதுவும் அலங்காரமெனப்படுமென்று சூத்திரஞ் செய்துகொள்ளல்வேண் டுஞ் செய்புட்கு அணி வேறு கூறினென்பது.

இனி, இங்ஙனங் கூறினவெல்லாங் குற்றமென்று கொள் ளப்படா; என்னை? [4]வேறு காரணமுணரப்பெறுது பிறழ்ந்து

1. போக்கு—பிரிந்து போதல். உவக்குங் குறிப்பல்லாத குறிப்பு—வெறுப்பு.

2. கேளாள் எனவும் பாடம்.

3. அதுவும் என்பது இன்னோரன்னவும் என்று பாட முள் ளது. அது மிகப் பொருத்தமேயாம். என்னை? முன் சொன்ன வற்றையெல்லாம் தொகுத்துநிற்றலின்.

4. 'வேறு காரண முணரப்பெறுது பிறழ்ந்து இடையறவு பட்டகாலை' என்பது 'பொருளதிகாரமுறை பெறுது பிறழ்ந்து இடையறவுபட்டகாலை' என்று பாடமுள்ளது. அதுவே பொருத்தமாம். என்னை? பின்னரும், 'பகுத்தோதிய இலக் கணத்திற் பிறழ்ந்தவையெல்லாம் குற்ற'மென வருதலின். இங்

இடையறவுபட்டகாலே இடர்ப்பட்டுச் செய்தனவாதலான் அவையும் அவ்வாற்றுனமையுமென்பது.

இனி ஆகந்தவுவமையென்பன சில குற்றம் அகத்தியனுர் செய்தாரெனக் [1] கூறுபவாகலின் அவையிற்றை எவ்வாறு கோடுமெனின், அவைகள் தாம் அகத்துள்ளும் பிற சான்றோர் செய்யுளுள்ளும் வருதலிற் குற்றமாகா. அகத்தியனுரைாற் செய்யப்பட்ட மூன்று தமிழினும் அடங்காமை, வேறு ஆனந்தவோத்தென்பது ஒன்று செய்தாராயின், அகத்தியமுங் தொல்காப்பியமும் நூலாக வந்த சான்றோர் [2] செய்யுங் குற்றம் வேறுபடாவென்பது. அஃதேற் செய்யுட்கு இவை யணியென்பதூஉம் இவை குற்றமென்பதூஉம் மூன்றதிகாரத்துள்ளும் இவ்வாசிரியர் யாண்டுங் கூறுரோவெனின், செய்யுளியலில் முப்பத்துநான்குறப்புக் கூறி அவற்றதியைபு கல்லிசைப்புலவர் செய்யுளுறுப்பெனவும், அவை தொடர்ந்த தொடர்நிலே எண்வகையாற், தொடர்நிலைச் செய்யுட்கு [3] வனப்பெனவும் பகுத்தோதிய இலக்கணத்திற் பிறழ்ந்தவை எல்லாங் குற்றமென்பதுங் கொள்ளவைத்தானென்பது. (கூ)

உவமவியல் முற்றிற்று.

நனமே செய்யுளியல் க-ம் சூத்திர விரிவுரையிலுங் கூறல் காண்க. "அவ்வாற்றுன்...இடையறவுபட்டகாலே இடர்ப்பட்டுச் செய்தமையான் குற்றமென்று கொள்ளப்படா" என்று இவர் கூறியது, தாங்கூறியவற்றையும் அணியெனக் கொள்ளலாம் என்பதற்கு நியாயங்காட்டியதன்றி, அஃதுண்மையென்பது இவர் கருத்தன்று. அணிகொள்ளும் பிறரை மறுத்துரைத்தற்கு இங்ஙனம் பழித்துரைத்தார் என்க.

1. யாப்பருங்கல விருத்தியுடையாரும், ஆளவந்தபிள்ளையாரிரியரும் என்பர். 'தீயி னன்ன வொண்செங் காந்தள்' என்னும் மலிபடுகடாத்து கசரு-ம் அடியுரையில் நச்சினர்க்கினியரும் இதனே மறுத்தல் காண்க.

2. செய்யுங் குற்றம்—செய்யுட் குற்றமென்று பாடமுள்ளது. அதுவே பொருத்தமாதல் செய்யுளியல் க-ம் சூத்திர விரிவுரை நோக்கியறிக.

3. வனப்பு—அம்மை முதலியனவாகச் செய்யுளியல் க-ம் சூத்திரத்துளோதியன.

உவமவியல்

உதாரணச்செய்யுளுரை

உஎசூ-ம் சூத்திரம்

1. மேகம்போன்ற கொடைக்கையையுடைய தேரைக் கொண்ட வேளாயைக் காணச் செல்வாயாக. (புறம். கருரு)

2. களிருகிய இரையைத் தேரும்படி பார்வைக்கு ஒதுங்குதலோடு மறைந்து செல்லுகின்ற தன்மையினையுடைய வலிய புலியைப் போல. (அகம். உஉ)

3. வடிவுவிளங்குகின்ற ஓவியத்தொழிலாற் பொலிந்த பாவை நடையைப் பயின்ருற் போன்ற நடையையுடையள். ஓவுவினை—ஓவினை' என நின்றது. (அக—141) ஓவு—சித்திரம். "ஓவுறழ் நெடுஞ்சுவர்" என்பது பதிற்றுப்பத்து (சூஅ.—கள) ஓ என்பதுஞ் சித்திரத்துக்குப் பெயராக வரும்போலும். (அகம். கசஉ)

4. அணைத்தோள்—அணைபோன்ற தோள். (கலி.அசு)

5. மழைக்காலத்தில் அலருகின்ற பீர்க்கின் மலர்கள் சிலவற்றைக் கைக்கொண்டுகாட்டி. இப்பூவை யொத்தாள் நல்லநுதலையுடையாள். என்றது இப்பூவினிறத்தை (பசப்பை) அடைந்தாள் என்றபடி. (குறுந். கூஅ)

6. பறைக்குரலெழிலி—பறைபோன்ற ஒலியையுடைய மேகம். (அகம். உருு)

7. தன் கடைக்கண்ணுற் கொல்லுவான்போலப் பார்த்து—கொல்லுதல்போல எளிதுமாம். (கலி. ருக)

8. ஆகாயம் உரிவதுபோல். (அகம். உச)

9. மணிகள் பதிக்கப்பெற்ற பாவை நடை பயின்ருற் போல. (நற். கஅச)

10. வானந் தோய்ந்தால் ஒத்த விசாலமான குடிப்பிறப்பும். (பாயிரம்)

11. கொன்ருலொத்த துன்பங்களைச் செய்யினும். (குறள். கஐகூ)

12. பல சுடரையுடைய பெரிய நெருப்பு வந்து தோய்ந்தாலொத்த இன்னுதவற்றைச் செய்யினும். (குறள். நஐஅ)

13. கற்பகம்போலக் கொடுக்கும்.

14. போர்முனையின் இடத்தினைப்போலத் தூரமோ! என்றது அண்மைத் தூரத்தினை.

15. தளிர் சிவந்தாற்போலச் சிவந்த மேனி.

உஎஎ-ம் சூத்திரம்

1. செவ்வானத்தையொத்த மேனி. (அகம். கடவுள் வாழ்த்து)

2. அவ்வானத்தில் விளங்கும் பிறையையொத்த கூரிய பன்றிக் கோடுகள். (அகம். கடவுள் வாழ்த்து)

3. காயா மரத்தின் மெல்லிய கொம்பரிற் பொருந்தப் படர்ந்து பல துடுப்பினையொத்த பூங்கொத்துக்களைத் தாங்கிய விளங்குகின்ற குலைகளையுடைய காந்தளின் அழகிய மலர்களிலுள்ள நறிய தாதுக்களை (ப் படிந்தும் எழுந்தும்) ஊதும் வண்டுகள் கையினுலெறிந்து விளையாடும் வட்டைப்போலத் தோன்றும, மேகம் படிந்து அசைகின்ற சிகரத்தையுடைய மலைக் குரியோனே. துடுப்பு—நெய்த்துடுப்பு (சுருக்குச்சுருவம்). சூடாமணி நிகண்டு பார்க்குக. (அகம். கoஅ)

உஎஅ-ம் சூத்திரம்

1. சிங்கத்தையொத்த வருத்துதலையுடைய வலியினையுடைய. (பட்டின. உகூஅ-ம் அடி)

2. மழைபோற் சொரிகின்ற அம்பினையும் மேகம்போலும் கரிய பரிசையையுமுடைய சோழர். மாரியம்பு—பயவுவமை. மாரி பயிரை விளைத்துப் பயன்செய்தல்போல அம்பு பகைவரை அழித்துப் பயன்செய்வது பயம். (அகம். கஙசு)

3. கடலைக் கண்டாலொத்த இடமகன்ற பரப்பினையுடைய. (அகம். எசு)

4. இக்கனவிய குழையையுடையாள் தெய்வ மகளோ? மயில் விசேடமோ? ஓரு மானுட மகளோ? இவளை இன்னள் என்று துணியமாட்டாது என்நெஞ்சு மயங்கும். (குறள். கoஅக)

5. நுதலையும் முகத்தையும் தோள்களையும் கண்களையும் சாயலையும் சொல்லையும் நோக்கி (உவமை கூற) நினைந்து நுதல் வியப்பையுடைத்தாய்த் தேய்ந்தது: ஆயினும் பிறையுமன்று. முகம் மறுவற்றது: ஆயினும் மதியமுமன்று. தோள் மூங்கிலின் றன்மை நெருங்கிற்று: ஆயினும் அது பிறக்கும் மலையிடமுமன்று. கண் பூவின்றன்மை நெருங்கிற்று: ஆயினும் அது பிறக்கும் சுனையிடமுமன்று. சாயலிருந்தபடி. மெத்தென நடக்கும். ஆயினும் மயிலுமன்று. சொல்லுச் சொல்லத் தளரும்: ஆயினும் கிளியுமன்று. (கலி. ருரு)

உஎகூ-ம் சூத்திரம்

1. முரசொலிக்கின்ற சேனைகளையுடைய மூவரசரும் கூடி அரசின் அவையாக இருந்த தோற்றம்போலப் பாடல்பொருந்திய பயனையுடைய யாழைக்கொண்ட கூத்தர் தலைவ! பிறர் மனத்துட் கொண்டவற்றைக் குறிப்பால் அறிபவனே! (பொருந. ருசஎ)

2. ஓவியம்போன்ற அழகினையுடைத்தாகிய இட்முடைய இல்லின்கண். (புறம். உருக)

3. பாவையையொத்த பலராய்ந்து செய்த மாட்சிமைப்பட்ட அழகு. (அகம். கூஅ)

4. சிங்கத்தையொத்த வருத்துதலைக் கொண்ட வலியினையுடைய. (பட்டி. உகூஅ)

உஅo-ம் சூத்திரம்

1. கிளைத்த மெல்லிய மயிர்க்கொத்துக்கள் கீழே தாழ்ந்தன. (குறுந். நஙஎ)

2. கண்ணுடியினுள்ளே ஊதிய ஆவிபோல மெல்லமெல்ல நுணுகுதலுற்று. (அகம். எக)

3. பாம்பு மறைத்த மதிபோல நெற்றியினுளை மறைய. (அகம். நகஙக)

உஅக-ம் சூத்திரம்

1 மலையையொக்கும் இளைய களிற்றின்மேல். (புறம். நஅ)

2. செந்தாமரை மலரையொத்த அழகிய சிவந்த அடி. (குறுந். கடவுள்)

3. நெருப்பினையொத்த (சிவந்த) சிறிய கண்ணையுடையன்றி. (அகம். அச)

4. தாமரையின் இலையின்கீழ் மறைந்து நின்ற அழகிய இதழ்களையுடைய அரும்பைப் போலக் கையிற்கொண்ட பச்சைக் குடைநிழலிலே தோன்றும் நின்னுடைய புதல்வனைக் கண்டு. (கலி. அச)

5. ஆகாயத்தையொத்த அகன்ற சூழ்ச்சி. (புறம். உ)

6. மழைக்கண் நனைந்த யானைபோல வந்துநின்முன்.
(குறுந். ககூக)

7. திணற்றில் வீழ்ந்த குராற்பசு படுந் துயரத்தை இரவிலே கண்ட உயர்திணையாகிய ஊமனைப்போல என்பொருட்

டுத் தோழிபடும் வருத்தத்தினால் உண்டான என்துயரைப் பொறுக்கமாட்டேனுயினேன். ஊமன்—பேசமாட்டாதவன்.
(குறுந். உஉச)

8. கடம்பிடத்தேயிருந்த முருகனேயொத்த கூற்றுவனைப் போன்ற வேலையேந்திய பெரிய கையையுடைய புறங்கொடாத புலியோர். நெடுவேளன்ன வம்பலர் எல இயைக்க.
(பெரும்பாண். எடு)

9. வினங்குகின்ற பிறையையொத்த நுனுக்கிட்டுக் கடக்கின்ற வெள்ளிய பன்றிக்கோடுகள்.

உ-அசை-ம் சூத்திரம்

1. எழுகின்ற முகிலையொத்த செறிப்பான முகைவிண்டு அழகிய முகம்போல மலர்ந்த தெய்வத்தன்மை பொருந்திய தாமரை.
(சிறுபாண். எஉ—எக)

உ-அரு-ம் சூத்திரம்

1. உலகத்தார் அவைப்போல அகன்ற தன்னுடைய அல்குலின்மேல் சான்றோருடைய ஆராய்ச்சிபோல நுண்ணிதாகிய நுசுப்பு.

2. பெரிய கடலின் நடுவில் எட்டாந் திதிக்குரிய இனிய வெள்ளிய திங்கள் தோன்றியதைப்போல முன்பக்க மயிருக்கு அயலில் தோன்றும் சிறிய நெற்றி.
(குறுந். கஉக)

3. தான் (முருகன்) விரும்பலால் வண்டுகள் மொய்யாத நெருப்புப்போலும் பூவையுடைய காந்தள்.
(முரு. சஎ)

4. பலகாற் பழகியுங் கொல்லுகின்ற யானையை அன்னது கண்மீனை விட்டு நாயை ஒத்தாது கண்மீனைத் தழுவிக் கொள்ளுதல்வேண்டும்.
(நாலடி. உகஅ)

5. வள்ளத்தினுள்ள நீரைக் கழுவிய முகிழ்ச்சாந்து விரியிலே பரந்து சேறுபட அதில் யானைகள் வெள்ளாம் அடிவழுங்கின.

6. சோற்றை வடித்தெழுக்கிய கொழுவிய கஞ்சி ஆறு போலப் பரந்தெழுக ஆனிறைகள் தம்மிற் பொரச் சேறுபட்டுத் தேர்களோடலால் தூளியாய்ப் பொருந்தி.
(பட்டி. சச—சள)

உ-அகூ-ம் சூத்திரம்

1. வேலையொத்த கண்ணையுடைய, மகளிர்மேற் கொண்ட வேட்கை நோயைத் தீர்ப்போம்; அவருடைய அம்புபோன்ற கண்ணினால்.

2. மழைபோன்ற எளிய தடக்கையையுடைய வள்ளியோனைப் பாடி.

3. வேலையொத்த தோள் ஒருபக்கம்; வெற்றை ஒத்த புயம் ஒருபக்கம்.

4. குன்றிமணியையும் இந்திரகோபத்தையும் ஒத்த உடை.

5. நீலமணியின் நிறத்தை ஒத்த மாக்கவிர்போலும் மேனி.

6. மதியத்தைப்போல மலர்ந்த ஒளிபொருந்திய முகம்.

7. வேலையொத்த தோள்.

8. பாம்பொருந்திய அரவையொத்த அல்குல்.

9. இருவகைப் பற்றினையும் விட்டாரது பெருமையினை இவ்வளவென்று எள்ளற் கூறி அறியலாமோ? இவ்வுலகத்துப் பிறந்திறந்தாரை எண்ணி இத்துணையரென அறியலாற்றும் போதாம். இது பரிசிலைமுகங் கருத்து. இதனுள் துணை என்பதும் அற்று என்பதும் ஒப்புப்பொருளில் வந்தது என்பர் பேராசிரியர்.
(குறள். உஉ)

10. குடிப்பிறப்பான் மகிழ்போல உயர்ந்தாரும் காழ்த்த கேதுவாகிய செயல்களை ஒரு சூன்றியளவாயினும் செய்வாராயிற் சுழல்வர்.
(குறள். கூகூ)

11. குளத்தில் சூழ்ந்தும் மகளிரது கண்ணை ஒக்கும்.
(குறுந். கூ)

12. நீருட் குளித்துப் பொருந்திய காய்போலக் கண்ணில் நீர்த்துளிகள் நிறைய.
(அகம். கஉக)

13. கல்லே உண்கின்ற அழகிய புறவெள்ளை நெருங்கியின்னுடைய இவ்வெழில்
(கலி. நுகூ)

14. மதியத்தை ஒத்தது மறுவற்ற அழகிய முகம்.

உ-அள-ம் சூத்திரம்

1. எரி சென்றாற்போன்ற தாமரைப்பூவையுடைய வயலின்கண்.
(அகம். கoகூ)

2. குளத்தை நாடிச் சென்று முழுகிய யானையைப்போல முகம் மலிந்து அவ்விடத்து இதற்கு யானையின் முகம் மலர்ந்தாற் போல என்று பேராசிரியர் பொருள்கொண்டனர் போலும்.
(அகம். கூ)

3. புலியை யொப்ப ஒலி தோற்றுதலின்.

4. புலிபோல ஒலி நிறந்து உலாவி.

5. மின்னோடு மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவுபெற. (முருகு. அடு)

6. பொருகின்ற களிற்றினது எருத்தின்கண் புலி பாய்ந்தாற்போன்ற பாய்ச்சல்.

7. மானே ஒத்த நோக்கத்தினையும் மடநடையையும் உடைய ஆயத்தார்.

8. கார்காலத்து மழையின் முழக்கொலியை யொக்கும். (அகம். கச)

9. யாழ்போலும் சாமவேத இசையைப் பாடின நீலமணி போலும் மிடற்றினையுடைய அந்தணன். (அகம். கடவுள்)

10. வண்டியிற் பூட்டிய வலிய எருமைக்கடாக்களைப் போலக் கூடி. (அகம். கo)

11. குறிய வலியிலே ஒக்கும் நெடிதுவேண்டிய இடத்து நெடிந்து இறுகவேண்டியவிடத்து இறுகிய வார்கட்டினையும். (பெரும்பாண். கஉ)

உஅகo-ம் சூத்திரம்

1. எரிலியாகிய வாளத்தை இகழ்ந்தவனுக்கு கொடுக்கும் இடக்கவிந்த கையையும் கொடையையும் வேகமான குதிரையையுமுடைய தோன்றல். கலிகை—பொன்னுமாம்.

2. மழையை யொத்த நீண்ட கையையும் வாளையுமுடைய எவ்வி. எவ்வி—ஒரு வள்ளல்.

3. தேவருலகத்திலுள்ள கற்பகத்தை ஒப்ப.

4. விண்ணே ஒத்த விசாலித்த புகழையும் வெற்றியையுமுடைய வஞ்சி. (புறம். கக)

5. மேகத்தை ஒக்கும்படி பொருந்திய பெரிய இசையைக் கொடுத்து.

6. குபேரனை ஒக்கும் பெரிய வளமிய கொடை.

7. விரிந்த முகில் மடையையுடைய கல்ல பகுவை வென்ற கொடை.

8. விரிந்த புனலையுடைய பெரிய யாற்றை ஒப்ப எவற்றையும் வரையாது கொடுக்கும் புகழ் மிக்க தோன்றல்.

9. நெருப்புப் போன்ற வெவ்விய கதிர்கள் பசையறக் காய்தலின். (அகம். க)

10. மகனுக்குத் தாயாதல் ஒப்பதென்று. (அகம். ககூ)

11. ஊறுகின்ற நீர் அமிழ்தினை ஒக்கும் எயிற்றினை உடையாய். (கலி. உo)

12. பலர் மகிழ்ந்த மகிழ்ச்சியை யெல்லாம் என்னுள்ளத்தே பெய்துவிட்டாற்போலும்.

13. யாழோசையை ஒத்த முழங்குகின்ற ஓசை நடக்கும் மாலைக்காலம் வந்து விருத்தத்தைத் தரும். (கலி. உசு)

14. இடிபோல ஒலிக்கும் வலக்கத்தோடு. (அகம். கூக)

15. யாழ் என்று கருதி பெரிய கல்லையுடைய பிளப்பின் கண் அகணப்பறவை செவியால் ஓர்க்கும். (அகம். அஅ)

16. அறுத்தற்குரியாரை அறுத்த இடியை மாறுபட்ட பெரிய கை. (முருகு. இ)

17. விண்ணில் முழங்குகின்ற முழக்கை ஒப்பப் பண்கள் தன் கண்களில் உண்டாக்கப்பட்டு. (மலைபடு. உ)

உகo-ம் சூத்திரம்

1. நீர் வடிகின்ற ஒளிபொருந்திய மலையை ஒப்ப. (அகம். கக)

2. உயர்ந்த பெரிய பாறையிலே குவிந்த வட்டை ஒப்ப. வட்டு—உண்டை. (அகம். இ)

3. மூங்கிலை யொத்த பருத்த தோளிலணிந்த விளக்கம் பொருந்திய அணிகள் கழல. (ஐங்குறு. ககஅ)

4. உரலையொத்த பருத்த அடி. (நிலத்தே படவும் அடி என்பர் நச்சர்) (கலி. உக)

5. முத்தினையுடைய வெள்ளிய யானைக்கோட்டை ஒத்த முலைமேல்.

6. பாம்பின் வடிவு ஒடுங்க வளைந்த இடை.

7. நெருப்பினையல்லை யோட்டிய வெப்பமான கதிர்களையுடைய குரியன்.

8. கண்களோடு ஒத்த கழியின் முளைத்த குவளைப்பூ.

9. கடல்போலத் தோன்றுதலையுடைய காட்டைக் கடந்தோர். (அகம். க)

10. அழகிய விளக்கின் ஒழுங்குபோலத் தோன்ற. (அகம். கக)

11. புலி என்று கருதி அஞ்சிய புள்ளி பொருந்திய முகத்தையுடைய யானை. (அகம். கஉ)

12. சிவந்த இதழை யொத்தனவாகி. (அகம். ககூ)

13. மாட்சிமைப்பட்ட அழகிய மூங்கிலே வென்ற தோளே யுடையாய். நீ வந்தால் நின்னிலேப்பை ஆற்றும். (கலி. உ0)

14. கண்ணேப்போல (க் குவளைப் பூக்களே) மலர்ந்த சுனைகளும்.

15. நறிய முல்லையின் தம்முள் ஒத்த முகையை ஒப்ப நிரைத்த.

16. முழவையொத்த பெருமையையுடைய தனது கையினுலே அவர்கள் கையினேப் பொருந்த எடுத்துக்கொண்டு. இதற்கு நச்சினர்க்கினியர், இயல என்பதை முன்கூட்டித் தழீஇ என்பதை இங்குக் கூட்டிப் பொருள் கொள்வர்.

உகஉ-ம் சூத்திரம்

1. தன் சொல்லே மெய்யென்று உணர்ந்தார் மேனியை பொன்போலப் பசப்புற்ச் செய்வான் ஊரன். (ஐங்குறு. சக)

2. நீலமணியின் நிறத்தை ஒத்த மலரையுடைய பொலிவான காயா.

3. ஒள்ளிய செங்காந்தட் பூவை யொக்கும் உன்னுடைய நிறம்.

4. வெயிலொளியை (காயச்செய்த) ஒத்த விளங்குகின்ற மாணிக்க மணியழுத்தின.

5. கார்காலத்து விரிந்த கொன்றையின் பொன்போலும் புதிய மலர். (அகம். கடவுள்)

6. தண்டளிரை ஒப்பத் தகைமை பெற்ற மேனி.

7. துளியை இடங்கடோறும் பெய்த மழையை யொத்த கூந்தல். இனித் துளிதலேத் தலேஇய மணியே ரைம்பால் என்பதும் பாடம். இதற்கு துளிகள் தன்னிடத்துப் பெய்யப்பெற்ற நீல மணியை ஒத்த கூந்தல் எனப் பொருள்கொள்க. (அகம். அ)

8. நெருப்புப்போலக் கோபித்த வெப்பம் விளங்குகின்ற ஞாயிற்று மண்டிலம். (அகம். நக)

9. அசோகின் தளிரை ஒக்கும் அழகையுடைய நிறம். அத்தன்மையாகிய நிறம். (கலி. கடு)

10. குவளையின் நறிய இதழை ஒக்கும் நீர்த்துளியைக் கொண்ட குளிர்ந்த இமை. (அகம். ககூ)

11. பாலுமயங்கும் மருப்பினையும் உரலியொத்த பரந்த அடியையும். (கலி. உக)

12. எரியினிறத்தை ஒப்ப இலவுமலர. (கலி. நங)

13. பலரும் புகழுகின்ற ஞாயிற்றைக் கடலின்கண் கண்டாற்போல. (முருகு. உ)

14. பொன்னுரை விளங்கிஞற்போலும் தேமலையுடையராய். (முருகு. கசடு)

15. நீயினே ஒத்த ஒள்ளிய செங்காந்தளின் மழையாலே செருக்கி வளர்ந்த புதுமுகையை ஊஞ்சுகக் கருதி. (மலேபடு. கசடு)

உகசஃ-ம் சூத்திரம்

1. தாஞ்செய்த களவினேத் தாமே உடன்படுவாரைப்போலத் தலேகவிழ்ந்து நிலத்தைக் காலாற் கிளேத்து. (அகம். ககூ)

2. தோணியைக் கடலிற் செல்லும்போது கவிழச்செய்த வணிகனேப்போல, துயரத்தைக்களேயுந் துணே வேறின்றிப் புலம்பு மென்னிலேயைக் கண்டும் போகமாட்டேன் என்று கூறுகின்றாய். (யா. வி. ப. நகஅ)

3. பெரிய செல்வரது வீட்டின்கண் (அதன் வாயிலேயடைந்த) வறியார்போல மீண்டுவரும் மீளச்செல்லும், திரும்பி வரும் என்னெஞ்சம். (முத்தொள்ளாயிரம் அஅ)

4. அருளினிடத்தே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றின் நிழலேயுடைய குளத்துள் நீருள்நின்ற குவளை வெந்ததன்மைத்து. (கலி. சக)

5. சாந்தம் உள்ளிடத்தே உண்டென்று செப்பைத் திறந்து பாம்பை அவ்வுள்ளிடத்தே கண்ட தன்மையையுடைத்து. (நாலடி. கஉகூ)

6. மல்லரை மறத்தைக் கெடுத்த திருமால்போலே கல்லுயர்ந்த அகற்சியையுடைய சாரலிற் றன் சுற்றத்திற்கு நடுவே கூடித்திரியும் நாடனே! கேள். (கலி. நுஉ)

7. இயமன் வெருண்டாலொத்த வலியோடு பகையைக் கொண்ட இரு அரசரது மண்ணேக்கொள்ள நோக்கினுய். (புறம். சஉ)

8. உதியஞ்சேரலாதனேப் பாடிப்போன பரிசில் பெறுவாரைப்போல இப்பொழுது உவப்பாய் தோழி. (அகம். கூடு)

உகஎ-ம் சூத்திரம்

1. பொன்னே உரைக்கும் (கட்டளேக்கல்) உரைகல்லே யொப்பத் தனது பசிய அணிகள் புடைத்ததாலுண்டான செஞ்சுவட்டையுடைய மார்பு. (பெரும்பாண். உஉ0)

இதற்குரிய பாடம் இப்போது டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் வேறுவிதமாக உள்ளது. அப்பாடம் இங்கே கொள்ளலாகாது. கொள்ளிற் பேராசிரியர் இங்கே கூறிய உரையோடு மாறுபடும்.

2. கரிய காலையுடைய வேங்கையின் பூக்கள் சொரிந்த பாறைக்கல் கரிய புலிக்குட்டிபோலத் தோன்றும் காட்டின்கண்.
(குறுந். ஸ)

கூ00-ம் சூத்திரம்

1. கரும்பு நட்ட பாத்தியில் தானே முளைத்த தாமரைப் பூ வண்டின் பசியை நீக்கும் பெரிய நீரையுடைய ஊரனே! புதல்வனையின்ற என்னை முயங்காதே கொள். அம்முயங்கல் உன் மார்பினழகைச் சிதைப்பதாகும். (ஐங்குறு. கூடு)

2. கரையில் நின்ற வேழம் கரும்பைப்போலப் பூக்கும் நீர்த்துறை பொருந்திய ஊரன் கொடுமையை நாணி நாம் நல்லன் என்பேம். நல்லன் அல்லன் என்னும் எனது பெரிய மெல்லிய தோள்கள். இதன் பின்னடி வேறு விதமாக ஐங்குறுநூற்றுப் புத்தகப் பிரதியில் காணப்படுகின்றது. (ஐங்குறு. கஉ)

3. நீரினுறைகின்ற கோழியின் நீலநிறம் பொருந்திய சேவலைக், கூரிய உகிரையுடைய பேடை நினைந்து தன் வேட்கை தீருமூரனே! இவள் வேட்கை நோய்க்கு நின் பரந்த மார்பு புளிங்காய் வேட்கைபோன்ற தன்மைத்து. (ஐங்குறு. டுக)

4. தோழீ! யான் தலைவனோடு பொருந்தாத இயல்பினையுடையனல்லேன் பொருந்துமியல்பினேன். ஆயினும் நொதுமலர் வரைவொடு புகுமொரு காரணத்தினால் மலையினிடத்து மலர் வரைவொடு புகுமொரு காரணத்தினால் மலையினிடத்து ஒன்றோடொன்று பொருத களிறுகளால் முறிக்கப்பட்ட நெரிந்த அடியையுடைய வேங்கைமரம் குறமகளிர் தங்கூந்தலின்கண் அணிந்துகொள்ளும்பொருட்டு ஏறவேண்டாமல் நின்றபடியே கொய்யும்படி தாழ்ந்து மலர்தற்கிடமாகிய நாட்டையுடைய தலைவனோடு பொருந்தேன். (குறுந். உ0அ)

5. அழகிய ஒள்ளிய தழையசையத் தூய அணியையணிந்த ஒள்ளிய நெற்றியையுடைய பரத்தை விளையாட்டாகப் பாய்ந்தாளாகத் தேனைப் பொருந்திய நறிய குவளைமலர் படிந்து நாறலால் தண்ணென்றிருந்தது பெரிய துறைநீர். (ஐங்குறு. எங)

6. பொய்கையைத் தனக்குப் படுக்கையிடமாகக் கொண்ட புலான்மணங் கமழும் நீர்நாயானது வாளைமீனை நாட்காலத்தே இரையாகப் பெறுகின்ற ஊரனே! எனது அழகு கெடினும் பிற பெண்டிராகிய பரத்தையரைத் தோய்ந்த மார்பைப் பெறும! பொருந்தேன். (ஐங்குறு. கூங)

7. தனது பார்ப்பைத் தின்னும் அன்பில்லாத முதலையோடு வெள்ளிய ஆம்பற்பூவையுடைய பொய்கையையுடையது அவனூரென்று சொல்வர். அதனால் தன் சொல்லை மெய்யென்று கொண்டாரது மேனியைப் பொன்போற் பசப்புறச் செய்வான் ஊரன். (ஐங்குறு. சக)

கூ0உ-ம் சூத்திரம்

1. கரிய கோட்டினையும் சிவந்த கண்களையுமுடைய ஈன்றணிமையையுடைய எருமை ஆவானது தன் காதலையுடைய குழவிக்கு, ஊறுகின்ற முலையை வாய்ப்பெய்தூட்டும் நுந்தையின் நுமதூர்க்கு வருவேம். ஒள்ளிய வளையையணிந்த மடந்தையே! நின்னை யாம் வரையுமாட்சிமை பெற்றால். (ஐங்குறு. கூஉ)

கூ0ஙு-ம் சூத்திரம்

இச்சூத்திர உதாரணங்கள் முன்வந்துள்ளன ஆதலால் உரை எழுதவில்லை.

கூ0ச-ம் சூத்திரம்

1. அன்னையே! கழியிடத்துள்ள முள்ளி மலருகின்ற குளிர்ந்த கடற் சேர்ப்பன் எனது தோள்களை விரும்பாது துறந்தானாயின் அவன் விரும்பிய தோள் வேறு யாதாம். எவன்என என மருவிற்று. கொல் அசை. 'எவன்கொல்' என்றும் பாடமுள்ளது. (ஐங்குறு. கo அ)

2. குன்றக்குறவனது புல்லால் வேய்ந்த சிறுகுடிலாகிய மன்றை அசைகின்ற இளைய மேகங்கள் மறைக்கின்ற நாட்டையுடையோன் உயர்ச்சியையுடையோன். வாழ்வாயாக, தோழி! விரைந்து பெய்கின்ற அரிய நீர்த்துளிகளை அளைந்த கூதிர்க்காலத்துப் பெரிய தண்ணிய வாடையினும் முற்பட்டு வந்தான். (ஐங்குறு. உடுங)

கூ0சூ-ம் சூத்திரம்

1. வன்னிலத்தினின்றும் வந்த சுற்றத்தார்க்கு விருந்து செய்யும் மென்புலத்தார்களையுடைய நல்ல நாட்டையுடைய வேந்தே! (புறம். சஉ)

2. தாய் சாவப் பிறக்கும் புள்ளியையுடைய நண்டினோடு தன் பிள்ளையைத் தின்னும் முதலையையுடையது அவனூர்! (ஐங்குறு. சஉ)

கூ0எ-ம் சூத்திரம்

1. பூமியைக் காக்குமரசர் வழிபாடு சொல்லி நடக்க நுகரும் இன்பத்தை விரும்பிய பூமி பிற்வேந்தருக்குப் பொதுவென்

னும் வார்த்தைக்குப் பொருது தன்னுடு இடஞ் சிறிதென்னும் மேற்கோள் செலுத்த மடியாத உள்ளத்தையும் பொருளைப் பாது காவாது வழங்கும் வண்மையையும் வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் படையையுமுடைய சேரலாதனே எவ்வாறிருப்பை, தடைப்பட்டுச் செல்லும் கதியையுடைய மதிமண்டிலமே! காலத்தை நீ தோற்றுதற்கென வரைந்து கொள்கின்றாய் (இராப் பொழுதை நினக்கென வரைந்துகொள்கின்றாய் எனினுமாம்) தோற்றாய் போன்று ஒளி மழுங்கிச் செல்கின்றாய் (வெஞ்சுடர் மண்டலத்திற்குப் புறங்கொடுத்துச் செல்கின்றாய் எனினுமாம்) திங்களோறும் மாறிமாறித் தோன்றுவாய். (திசைமாறித் தோன்றுவாய் எனினுமாம்) மலை சார்ந்தவழி அதன்கண் மறைந்து ஒளிப்பாய். அகன்ற பெரிய வானின்கண்ணும் பல கிரணங்களையும் பரப்பிப் பகலில் விளங்காய். இதனுட் சில பாடபேதங் கொண்டு வெங்கதிர் மண்டிலத்திற்கேற்பப் பொருளுரைப்பர் புறநானூற்றுரையாசிரியர். (புறம். அ)

2. அவன் கண்ணன் என்ற பெயருடையோன். இவன் மாறன் என்ற பெயருடையோன். அவற்கு மாலை கமழுந் துழாய் மாலை. இவற்கு மாலை வேப்பம் பூமாலை. நிறமும் அவன் கரியோன். இவன் செய்யன். ஒன்றுபட்ட மரபும் அவன் இடையன். இவன் அரசன். எனவே அவனினும் இவனுயர்ந்தவன் என்றபடி. இது உயர்ச்சிபற்றி வந்த பொருள் வேற்றுமை. பெயரும் பொருளாதலின்.

3. அடியை நோக்கின் கடல்வண்ணனுகிய திருமாலையொப்பன். மேனியினியல்பை நோக்கின் பசிய கொன்றை மாலையையணிந்தோனே (சிவனே) ஒப்பன். முடியை நோக்கி அவன் தலையின்மேல் ஆத்திப் பூமாலை தோன்றியது கண்டு தேரையுடைய சோழனுதல் தெளிந்தேன். (தண்டி. ப. ஈக)

4. கோதையை இந்திரனென்னில் அவற்கு ஆயிரங்கண் இவனுக்கு கண் இரண்டே உள்ளன. ஆதலால் அவனல்லன். சிவனென்னின் அவனுக்குப் பிறையுண்டு. இவற்கில்லை. ஆதலால் அவனுமல்லன். வானிலுள்ள கோழிக்கொடியோன் (முருகன்) என்னில் அவற்கு முகமாறு இவற்கு ஒன்று. ஆதலாலவனுமல்லன். இவனே சக்கரத்தையுடைய திருமாலென்று உரைக்கற்பாற்று. (முத்தொள்ளாயிரம்)

5. பொற்றொடீஇ! வகுந்த வில்லையுடைய காமனும் சோழவரசனுகிய வெற்றி பொருந்திய கிள்ளியும் நிறத்தாலொவ்வார். ஏனெனில் திருமாலின் மகன் (காமன்) கருநிறத்தன். உறையூரையுடைய சோழன் மகன் செந்நிறத்தன்.

6. சோழனுந் திருமாலும் தொழிலின் வகையான் வேறுபடுவர். ஏனெனின்? சோழன் எதிர்த்துக் கொன்று பகைவர்பாலெய்திய பூமியை, மாயன் இன்று மாவலிபால் கையேற்று இரந்து பெற்றமையால்.

7. ஈரின்கணுள்ள சிறுபிள்ளைகள் தன் கோட்டைக் கழுவுதல் காரணமாக நீரையுடைய துறைக்கட் படியும் பெரிய களிறு அவர்க்கு எவ்வாறு இனிதாம். அவ்வாறு பெரும! நீ எங்களுக்கினியை. மற்றதனுடைய மதம் பட்ட நிலைமை (அவர் போல்வார்க்கு) எவ்வாறு இன்னுதாம் அதுபோலப் பெரும! நீ நின் பகைவர்க்கு இன்னை. (புறம். கூச)

8. முதிர்ந்த கோங்கின் இளமுகை போலவும் அடிவரைந்து தோற்றின (தென்னையின்) குரும்பை போலவும் மழைத் துளியி னுண்டான குமிழி போலவும் பெருத்த நின்னிளைய முலை. (கலி. நுசு)

9. வடிவான் முழுது மக்களையொப்பர் கயவர். அக்கய வரை யொப்பாரை யாங் கண்டதில்லை. (குறள். கoளக)

10. நெடிய இலைகளையுடைய கரிய பனையினது நீரின்கண் தோற்றும் நிழலை ஒப்பக் குறிய பலவாகி முரிவுபட்ட குன்றின் மீதுள்ள சிறிய வழி.

11. மண்ணுலகைச் சுமக்கின்ற தோளையுடைய கிள்ளியின் மதயானை பகையரசரின் வெள்ளைக் குடையைத் தெய்த்த கோடாயின

3. நீண்ட தாளினையுடைய இலவ மரத்தினது அசைகின்ற கொம்பு காய்த்த பஞ்சினையுடைய அழகினை உடைத்தாகிய பசிய காயினது முதுகு விரிந்து பஞ்சி தோன்றினை லொத்த வரியை முதுகிலேயுடைய அணிலோடே எலியுந் திரியாதபடி யாற்றினது அறலை யொக்கும் முதுகினையும் கொழுவிய மட விணையுமுடைய நெடிய மேட்டுநிலத்தில் நின்ற ஈந்தினது வேலின் முனையையொத்த கூர்மையினையுடைய முனையினையுடைய இலை யாலே வேய்ந்த எய்ப்பன்றி முதுகுபோலும் புறத்தினையுடைய குடிலில். (பெரும்பாண். அஉ-அ)

4. பிள்ளையைப் பெற்ற எயிற்றி மான்மேலாகிய படுக் கையிலே அப்பிள்ளையோடே முடங்கிக் கிடக்க ஒழிந்தோர் போய், பூண் தலையிலே யழுத்தின நன்மருகிய திரட்சியையும் வலியை யுடைத்தாகிய வயிரத்தினையுமுடைய சீரிய கோல் செருகின உளிபோலும் வாயினையுடைய பாரைகளாலே கட் டிகள் கீழ்மேலாகக் குத்துகையினாலே, கருநிலமாகிய கரம்பை நிலத்திலுண்டாகிய புழுதியை யளைந்து நுண்ணிய புல்லரிசியை வாரியெடுத்துக்கொண்ட வெள்ளிய பல்லியுடைய எயின் குடி யிற் பிறந்த மகளிர் பார்வைமான் கட்டிநின்ற தேய்ந்த தாளினையுடைய விளவினது நிழலையுடைய முற்றத்திடத்துத் தோண்டின நிலவுரலிலே அப் புல்லரிசியைச் சொரிந்து குறிய வயிரமாகிய உலக்கையாலே குற்றி. (பெரும்பாண். அசு-எ)

நகஉ-ம் சூத்திரம்

1. வரிபொருந்திய மலர்போலும் அழகிய கண்ணையுடைய அழகினையுடைய மாமை நிறத்தைக்கொண்ட பரதவப் பெண் ணின் அழகிய முகத்தையும் சந்திரனையும் ஒன்றாகக் கருதி சுழற்சியுற்று பூமியிலும் ஆகாயத்திலுஞ் செல்லாமல் ஐயத் தின்கணின்றது (இராகு என்னும்) பாம்பு. இது ஐயவுவமைப் பாற்படும். (பொய்கையார்)

2. நீர்த்துளி பொருந்தித் தண்ணிய சுனையில் வைகிய நீல மலர் அன்புடைய பெண்களது கண்போல மலர்ந்தன. அன்பு பெற்ற பெண்களது திருமுகத்தின் பொலிவிலே அவர்கள் கண்ணும் வண்டையுடைய நீலமலர்போல மலரும்.

நகக-ம் சூத்திரம்

1. இழுக்கப்பட்டு நிலத்தே செறியுங் கரிய பிடியினது பெருமையையுடைய கைபோல(த் தாமும் அடியோடு தொடர்பு பட்டு) முறையாற் பருத்து பெருமையையுடைய மலையிலே ஓழுங்குபட வளர்ந்த வாழையெனத் திரண்டு ஒரு குறங்குடனே ஒரு குறங்கு நெருங்கியிருக்கின்ற குறங்கினையும் வாழைப் பூ வெனப் பொலிந்த பனிச்சையினையும் (பனிச்சை-முன்னுச்சி மயிர்).

நகஉ-ம் சூத்திரம்

1. கொடியும் குவளைப் பூவும் தாமரைப் பொகுட்டும் (முறையே) போலும் நுசுப்பையும் மையுண்டகண்களையும் மேனி யையும், மதியும் பவளமும் முத்தும் (முறையே) போலும் முகத் தையும் வாயையும் பல்லையும், பிடியும் மானும் மயிலும் (முறையே) போலும் நடையையும் நோக்கையும் சாயலையும் உடைய வடிவையுடையவளாவள் வஞ்சியிலுள்ள (மகள்)பெண்.

2. யானையுந் தூணும் போல நீர் செறிந்த கடலிலே பாய் மரமும் தோணியுந் தோன்றும். தோன்றலை மறந்தோரது துறை பொருந்திய நாட்டின்கண். தோன்றல்—பெருமை.

3. நாயகர் - தலைவர். குழாம் - கூட்டம். படை - சேனை.

4. பெரிய ஊரிலே யட்ட கள்ளை முகத்தற்கு ஒரு வீட்டி லுள்ளே கட்கோளைத் தேடுவதுபோல நின்னைத் தேடுகிறான். கோய் - கள் முகக்கும் பாத்திரம். (புறம். கூ00)

எட்டாவது : செய்யுளியல்

[செய்யுட்குறுப்பாவன இவையெனல்]

கூகூ. மாத்திரை யெழுத்திய லசைவகை யெஞ்அ
யாத்த சீரே யடியாப் பெஞ்அ
மரபே தூக்கே தொடைவகை யெஞ்அ
நோக்கே பாவே யளவிய லெஞ்அத்
திணையே கைகோள் கூற்றுவகை யெஞ்அக்
கேட்போர் களனே காலவகை யெஞ்அப்
பயனே மெய்ப்பா டெச்சவகை யெஞ்அ
முன்னம் பொருளே துறைவகை யெஞ்அ
மாட்டே வண்ணமோ டியாப்பியல் வகையி
னிறு தலையிட்ட வந்நா லைந்து
மம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியையபே புலனே யிழைபெஞ்அப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வருத்துரைத் தனரே.

என்பது சூத்திரம்.

இவ் [1] வோத்து என்ன [2] பெயர்த்தோவெனின், செய்யுளியலென்னும் பெயர்த்து ; செய்யுளிலக்கணம் உணர்த்தினமையான் அப்பெயர்த்தாயிற்று. எனவே, ஓத்து நூதலியதூஉஞ் செய்யுளிலக்கண முணர்த்துதலென்பது பெற்றும்.

மேற்பாயிரத்துள் ,

"வழக்குஞ் செய்யுஞ் மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளும்." (பாயிரம்)

[3] ஆராய்வலென்று புகுந்தமையால் [4] எழுத்தினுஞ் சொல்லினும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவன [5] விராய்க்கூறிப்

1. ஓத்து — இயல்.
2. பெயர்த்து — பெயரையுடையது.
3. ஆராய்வல் — ஆராய்வேன்.
4. எழுத்தினுஞ் சொல்லினும் — எழுத்ததிகாரத்துஞ் சொல்லதிகாரத்தும்.
5. விராய் — கலந்து.

பொருளதிகாரத்துள்ளும் இதுகாறும் பெரும்பான்மையும் வழக்கிற்கு வேண்டுவனவே கூறிவந்தான், [1] அப்பொருள்பற்றிச் செய்யுள் [2] கூறுமாகலின் இவ்வதிகாரத்துட் செய்யுளிலக்கணமெல்லாந் தொகுத்துக் கூறுகின்றது இவ்வோத்தென்பது. எனவே, முற்கூறிய எழுவகையோத்தும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவென்பதூஉம், [3] இது செய்யுட்கே உரித்தென்பதூஉம் பெற்றும். முற்றிதனை யாப்பதிகாரமென வேறோர் அதிகாரமாக்கி [4] உரைப்பாருமுளர். அங்ஙனங் கூறின் வழக்கதிகாரமெனவும் வேறு வேண்டுமென மறுக்க. அல்லதூஉம், எழுத்துஞ் சொல்லும் பொருளு[5]மென மூன்றற்கும் மூன்றதிகாரமாக்கி அதிகாரமொன்றற்கு ஒன்பது ஓத்தாகத் [6] தந்திரஞ் செய்ததனோடு மாறுகொளாம் இதனை வேறோரதிகாரமென் பார்க்கென்பது.

மற்று, [7] ஓத்து நூலியலெல்லாம் நூலுவதன்றே ஓத்தினுள் வைத்த சூத்திரம்; அதனுன், இதன் முதற் சூத்திரம் என்னுதலிற்றோவெனின், இவ்வோத்தினு ளுணர்த்தப்படுகின்ற செய்யுட்குறுப்பாவன இவையெனவே, அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நூலுதலிற்று.

1. அப்பொருள் என்றது தான் சொல்லுமாறு அதிகரித்து எடுத்துக்கொண்ட அப் பொருளை. எழுத்தினுஞ் சொல்லினும் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவன கூறினுன்; பொருளினும் அவ்வாறே பெரும்பாலும் வழக்கிற்கும் சிறுபான்மை செய்யுட்கும் வேண்டுவன கூறி வந்தான். இனிச் செய்யுள் கூறுவதற்கியையபென்னையெனின்? தான் சொல்லுமாறு எடுத்துக்கொண்ட அப் பொருள்பற்றிச் செய்யுள் கூறலின் அதுவும் இயைபுடைத்தாயிற்று என்றபடி.

2. கூறும்—கூறுவான். என்றது ஆசிரியனை. ஆகலின் இவ்வோத்துத் தொகுத்துக் கூறுகின்றது எனவியையுக்க.

3. இது—இவ்வோத்து.

4. உரைப்பாரு முளர் என்றது களவியலுரையாசிரியரை. என்னை? முதலாஞ் சூத்திர உரையுள் எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமுமம வல்லாரைத் தலைப்பட்டு என்று அவரே கூறலின்.

5. என மூன்றற்கும் என்பது, எனுமூன்றற்கும் என்றே பாடம் இருந்திருத்தல் வேண்டும். அப்படி யிருத்தலே பொருத்தமாகும்.

6. தந்திரம்—நூல்.

7. ஓத்ததிகாரம் எனவும் பாடம்.

இ—ள்: இக்கூறப்பட்ட முப்பத்துநான்கும் பேரிசைப்புலவர் செய்யப்படுஞ் செய்யுட்கு உறுப்பாமென அவ்வாறு செய்தல் வன்மையாற் கூறினர் புலவர் என்றவாறு.

அப்பெயர், பெயர்; அம்முறை, முறை; அத்தொகை, தொகை. தொகை 'ஆறு தலையிட்ட வங்கா லொத்தும்' எனவும், 'எட்டு' எனவும் இருவகையால் தோன்றக் கூறியது, ஏனைய போலாமல் எட்டுறுப்பும் ஒரோர் செய்யுட்கு [1] ஒரோவொன்றேறியும் வருமென்பதறிவித்தற்கும், [2] அவைதாம் அச்செய்யுள் பல தொடர்ந்தவழியே பெரும்பான்மையும் உறுப்பாமென்பதறிவித்தற்கும் அவ்வாறு கூறினர் என்க. எனவே, ஒழிந்த உறுப்பு இருபத்தாறும் [3] ஒன்றிரண்டினை இன்றியமையாவென்பது பெற்றும்.

இனி, மாத்திரையென்பது எழுத்திற்கோதிய மாத்திரைகளைச் [4] செய்யுள் விராய்க்கிடக்கும் அளவையென்றவாறு. [5] மாத்திரையது மாத்திரையினை ஈண்டு மாத்திரையென்றுன். அது 'மாத்திரையளவும்' (ஙகசை) என்பதனுற் பெற்றும்.

1. ஒரோவொன்று — ஒவ்வொன்று. வனப்பெட்டனுள் ஒன்றே ஒரு செய்யுட்கு வருதலும் என்றபடி. வனப்புக் கூறிடத்து இளம்பூரணர் காட்டிய உதாரணங்களை நோக்கும் போது அவர்க்கு, பல தொடர்ந்தவற்றிலென்றித் தனிச் செய்யுளிடத்தேயே வனப்பு வருமென்பது கருத்துப்போலத் தோன்றுகின்றது. பல தொடர்ந்த தொடர்நிலைச் செய்யுளைப் பற்றித் தொல்காப்பியர் ஒன்றுங் கூறுமையின் பிற்காலத்துத் தொடர்நிலைச் செய்யுள்களை உதாரணங் காட்டல் பொருந்துமோ என்பது ஆராயத் தக்கது.

2. அவைதாம் என்றது அவ்வெட்டுந்தாம் என்றபடி.

3. ஒன்றிரண்டினை இன்றியமையாமையாவது;— மாத்திரையை எழுத்தும் எழுத்தை அசையும் அசையைச் சீரும் என்று இங்ஙனம் ஒன்றையொன்று இன்றியமையாமை. எனவே வனப்பெட்டும் ஒன்றையொன்று இன்றியமையாதனவல்ல என்றபடி.

4. செய்யுள் விராய்க் கிடக்கும் அளவை என்றது—செய்யுள் முழுவதையும் படிக்குமிடத்து அதன்கண் விரவிக் கிடக்கும் ஓசையின் அளவு என்றபடி. நச்சினார்க்கினியர் மாத்திரை என்றது எழுத்துக்குரியதாக எழுத்ததிகாரத்தோதிய மாத்திரைகள் தத்தம் அளவின் இறந்து பாவின் ஓசை வேறுபாடுகளை உணர்த்தி விராய் நிற்கும் ஓசை என்பர்.

5. மாத்திரையினது மாத்திரை என்றது—மாத்திரையினளவு என்றபடி.

எழுத்தியல் வகையென்பது, [1] மேற்கூறிய எழுத்துக்களை [2] இயற்றிக்கொள்ளுங் கூறுபாடு.

அசைவகையென்பது, அசைக் கூறுபாடு; அவை: இயலசையும் உரியசையுமென இரண்டாம்.

யாத்த சீரென்பது, (கூசு०) பொருள்பெறத் தொடர்ந்து நிற்குஞ் சீரென்றவாறு; எனவே, அசைபல தொடர்ந்து சீராங்கால் அவ்வசையுந் தத்தம் [3] வகையாற் பொருள்பெற்று நிற்றலும், அவ்வாறன்றிச் சீர்முழுதும் ஒரு சொல்லாங்கால் அவ்வசை பொருள்பெறாது நிற்றலும் அடங்கின. தேமா என்று அசை பொருள் வேறுபெற்றன; சாத்தன் எனப் பொருள் வேறுபெறாதுநின்ற அசையாற் சீர் யாத்து நின்றது. பொருள் பெறநின்ற எழுத்தும் அசையுஞ் சிறப்புடையவென்பாருமுளர். அற்றன்று, பொருள்பட நிற்பன எழுத்து யாண்டுமின்மையானும், பொருள்பெறநின்ற அசையாலுகிய தேமாவென்னுஞ் சீரும் அவ்வசைச் சிறப்பினாற் சிறப்புடைச் சீரெனப்படாமையானும் சாத்தன் எனத் தன்பொருளோடு தான் [4] துணிந்து நின்றவழி அதுவுஞ் சிறப்புடைச் சீரெனவும்படுமாதலானு மென்பது.

அடியென்பது, அச்சீர் இரண்டும் பலவுந் தொடர்ந்தாவதோர் உறுப்பு.

யாப்பென்பது, [5] அவ்வடிதோறும் பொருள்பெறச் செய்வதோர் செய்கை.

மரபென்பது, காலமுமிடனும்பற்றி வழக்குத் திரிந்தக்காலுந் திரிந்தவற்றுக்கு ஏற்ப, வழுப்படாமைச் செய்வதோர்

1. மேற்கூறிய எழுத்து — எழுத்ததிகாரத்துட் கூறிய எழுத்து.

2. இயற்றிக்கொள்ளுதல் என்றது, எழுத்தியலிற் கூறிய முப்பத்துமூன்று எழுத்துக்களையும் செய்யுட்கேற்பப் பதினெந்தாக இயற்றிக் கோடலை. அதனை 'மாத்திரையளவு மெழுத்தியல் வகையும்' என்னும் உ-ம் சூத்திரவுரையுட் காண்க.

3. வகை—அசையின் வகைகள்.

4. துணிந்து—துண்டுபட்டு=பிரிந்து.

5. அடிதோறும் என்று பாட்டிற்கியைய உரைகாரர் கூறினும், உரை முதலிய ஏனை அறுவகை நிலங்களிலும் இவ்வியாப்பு அமையும். என்னை? அவையும் யாப்பெனக் கூறப்படலின். நகக-ம் சூத்திரம் நோக்குக.

முறைமை. மற்றுச் சொல்லோத்தினுட் கூறிய மரபிற்கும், மரபியலுள் உரைப்பனவற்றுக்கும், இதற்கும் வேற்றுமையென்னையெனின்,—இது செய்யுட்கே உரித்து; அவை வழக்கிற்கும் செய்யுட்கும் பொதுவென்பது; அல்லதூஉம் அவற்றது வேறுபாடு முன்னர் அகத்திணையியலுள் கூறிவந்தாம்.

தூக்கென்பது, [1] பாக்களைத் துணித்து நிறுத்தல்.

தொடைவகை என்பது, தொடைப்பகுதி பலவுமென்றவாறு; அவை வரையறையுடையனவும் வரையறையில்லனவுமென இருவகைய. [2] இப்பகுதியெல்லாம் அடியாற் கோடலின் அடிக்கும் இஃதொக்கும்.

நோக்கென்பது மாத்திரை முதலாகிய உறுப்புக்களைக் கேட்டோர்க்கு நோக்குப்படச் செய்தல்.

பாவென்பது, சேட்புலத்திருந்த காலத்தும் ஒருவன் எழுத்துஞ் சொல்லுந் தெரியாமற் பாடமோதுங்கால், அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுளென்று உணர்தற்கேதுவாகிய பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை.

அளவியல் என்பது, [3] அப்பாவரையறை.

திணையென்பது, அகம்புறமென்று அறியச்செய்தல்.

கைகோளென்பது, அவ்வத் திணையொழுக்க விகற்பம் அறியச் செய்தல்; அது களவுங்கற்பும்.

கூற்றுவகையென்பது, அச்செய்யுள் கேட்டாரை இது சொல்லுகின்றார் இன்னரென உணர்வித்தல். [4] 'இவை' என்

1. பாக்கள் என்றது பரந்துபட்டுச் செல்லும் ஓசைகளை.

2. இப்பகுதி என்றது இருவகைத் தொடைப் பகுதியை. அடிக்கும் ஒக்கும் என்றது தொடைகள் வரும் அடியும் வரையறையுடையனவும் இல்லனவுமென இரண்டாமென்றபடி.

3. அப்பாவரையறை என்றது அடிவரையறையுள்ளனவும் இல்லனவும் ஆகிய பாவின் அளவியல் என்றபடி. இது பேராசிரியர் கருத்து. சஎ०-ம் சஎடு-ம் சூத்திர உரை நோக்குக.

4. இவை என்பது பாடமாயின் என்றது. கூற்றிவை என்று பாடமாயின என்றபடி. எண்ணிய மூன்று என்றது திணையும் கைகோளும் கூற்றும் என்ற மூன்றையும். எனவே திணையுங் கைகோளும் கூற்றுமாகிய இவையெனத் தொகுத்துக் கூறியதாகக் கொள்க என்றபடி. தொகுத்ததாம் என்பது தொகுத்தவாறே பிறிதில்லை எனவும் பாடம்.

பது பாடமாயின், எண்ணிய மூன்றனையுங் தொகுத்தவாறே பிறிதில்லை.

கேட்போர் என்பது, இன்னார்க்குச் சொல்லுகின்றது இது வெனத் தெரித்தல்.

களமென்பது முல்லை குறிஞ்சி முதலாயினவும் இரவுக் குறி பகற்குறி முதலாயினவும் உணரச்செய்தல். மற்றுக் கன்மை முன்னிலை படர்க்கையுமாம்.

[1] காலவகையென்பது, சிறுபொழுது பெரும்பொழுதென்னுங் காலப்பகுதி முதலாயின.

பயனென்பது, [2] சொல்லிய பொருளாற் பிறிதொன்று பயப்பச்செய்தல்.

மெய்ப்பாடென்பது சொற் கேட்டோர்க்குப் பொருள் [3]கண் கூடாதல்.

எச்சவகையென்பது, சொல்லப்படாத மொழிகளைக் குறித் துக்கொள்ளச் செய்தல்; அது [4] கூற்றினுங் குறிப்பினும் வரு தலின் 'வகை' என்றான்.

[5] முன்னமென்பது, உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத் தோரும் தத்தம் வகையான் ஒப்பச் சொல்லுதற்குக் கருத் துப்படச் செய்தல்.

பொருளென்பது, புலவன் தான் [6] தோற்றிக்கொண்டு செய்யப்படுவதோர் பொருண்மை.

துறைவகையென்பது, முதலும் கருவும் முறைபிறழ வந் தாலும் இஃது இதன்பாற்படுமென்று ஒரு துறைப்படுத்தற்கு

---

1. காலமென்பது முக்காலத்தும் தினை நிகழ்ச்சிக்கண்ணே பொருள் உணர்ச்சி நிகழக் கூறல் என்பர் நச்சினார்க்கினியர்.

2. சொல்லிய பொருளாற் பிறிதொன்று பயப்பச் செய் தல்—பாட்டிற் சொல்லப்பட்ட பொருளானே பிறிதொரு பொருள் தோன்றச் செய்தல்.

3. கண்கூடு—பிரத்தியக்ஷம். நேரே கண்டதுபோறல்.

4. எச்சவகையை ருக்அ-ம் சூத்திர உரை நோக்கியுணர்க.

5. முன்னம் என்பது கூறுவோர்தையும் கூறக்கேட்டோரை யும் குறிப்பான் எல்லாருங் கருதும்படி செய்தல் என்பர் நச் சினார்க்கினியர்.

6. தோற்றி—உண்டாக்கி.

ஏதுவாகியதோர் கருவி அச்செய்புட்குளதாகச் செய்தல்; அவை யும் பலவாதலின் 'வகை' என்றானென்பது.

[1] மாட்டென்பது, பல்வேறு பொருட் பரப்பிற்றாயினும் அன்றாயினும் [2] நின்றதனோடு வந்ததனை ஒருதொடர் கொளீஇ முடித்துக்கொள்ளச் செய்தல்.

வண்ணமென்பது, ஒரு பாவின்கண்ணே நிகழும் ஓசை விகற்பம். எனைவென்பன, எண்ணிடைச் சொல்.

யாப்பியல்வகையின் ஆறுகூலியிட்ட அங்காலேந்துமென்பது, யாப்பிலக்கணப் பகுதியாகிய இருபத்தாறுமென்றவாறு; இவை யாப்பிற்கு இன்றியமையாத இலக்கணப் பகுதியவென விதந் தோதலே: இனிக் கூறும் உறுப்பெட்டும் இன்றியமையாமை இல்லையென்றவாறு.

> "அம்மை யழகு தொன்மை தோலே
> விருந்தே யியைபே புலனே யிழைபெனுஅப்
> பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ."

என்பது, இக்கூறப்பட்ட எண்வகை வனப்பொடு முன்னர்க் கூறிய இருபத்தாறுந் தொகுப்ப முப்பத்துநான்கு உறுப்பா மென்றவாறு. மற்றிவற்றை வனப்பென்று கூறற்குக் காரணம் அவற்றைக் கூறும்வழிச் (நூசெ) சொல்லுதும்.

நல்லிசைப் புலவர் செய்யுளென்பது, இவ்வுறுப்பனைத்துங் குறையாமற் செய்யப்படுவன நல்லிசைப் புலவர் செய்யுஞ் செய்யு ளெனப்படு மென்றவாறு. நல்லிசைப் புலவர் செய்யுள் எனவே,

1. மாட்டென்பது அகன்றும் அணுகியும் கிடந்த பொருள் களைக் கொண்டுவந்து தொடராகக் கூட்டிமுடித்தல் என்பர் நச் சினார்க்கினியர். ஆயினும் அவர் சிலஇடங்களில் தூரமான அடிகளை வலிந்துகொண்டுவந்து கூட்டல் பிறப்பின்று.

2. நின்றதனோடு வந்ததனை ஒருதொடர் கொளீஇ முடித் துக்கொள்ளச் செய்தல் என்றது,

> 'முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
> வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
> வாரேன் வாழிய நெஞ்சே.' (பட்டி. உகஅ-உ०)

என நின்ற அடிகளோடு,

> 'வேலினும் வெய்ய கானமவன்
> கோலினுந் தண்ணிய தடமென் றோளே.'

என வருமடிகளை நெஞ்சே! அவள்தோள் கோலினுந் தண்ணிய வாதலான் வயங்கிழையொழிய வாரேன் எல ஒருதொடர் கொளீஇ முடித்துக்கொள்ளச் செய்தலை.

[1] எழுநிலத்தெழுந்த செய்புளுள்ளும் [2] அடி வரையறையுடைய வற்றுக்கே இவ்விலக்கணமென்பதூஉம், நிலையே கைகோளெனக் கூறும் உறுப்பு முதலாயினவெல்லாம் [3] ஏனை அறுவகைச் செய்யுட்கும் உறுப்பாகாவென்பதூஉம், அவை [4] யொழிந்த உறுப்பினுள் ஏற்பன பெறுமாயினும் ஆண்டு வரையறையின்மையிற் கூறுனென்பதூஉம், அவை செய்தாரெல்லாம் அவற்றுனே நல்லிசைப்புலவ ரெனப்படாரென்பதூஉம் பெற்றும்.

இனி, நூலும் உரையுஞ் செய்தார் நல்லிசையுடையரென்பது, அவற்றைப் [5] நூலினுன் உரையினுனென இதற்கு இடையின்றி வைத்தமையிற் பெறுதுமென்பது.

வல்லிதிற் கூறி வகுத்துரைத்தனர் என்பது, [6] இங்ஙனங் கூறிய நல்லாசிரியரிலக்கணமே கூறியொழிந்தார், எல்லாவற்

---

1. எழுநிலத் தெழுந்த செய்யுளாவன—பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. வாய்மொழி யென்பதற்குக் குறிப்புமொழி என்பது பேராசிரியர் கருத்து. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் மந்திரம் என்ப.

2. அடிவரையறையுடைய என்றது பாட்டை.

3. ஏனை யறுவகைச்செய்யுள் என்றது எழுநிலத்தெழுந்த செய்யுள்களுள் பாட்டொழிந்த உரை முதலிய ஆறையும். சாஎ-ம் சூத்திரம் நோக்குக.

4. ஒழிந்தவுறுப்பு என்றது நிலையே கைகோள் முதலியனவொழிந்த மாத்திரை முதலிய உறுப்புக்களை.

5. நூலினுன் உரையினுன் என்பது 'நூலினுனை உரையினுனை' என்றிருத்தல் வேண்டும். ஏன்னை? சாஎ-ம் சூத்திரத்தின் தொடக்கமாதலின். இதற்கு—பாட்டிற்கு. இடையின்றி வைத்தல்—அடுத்து வைத்தல். அதனை சாஎசு-ம் சூத்திர முடியப் பாட்டிலக்கணமும் அதன்பின் நூலிலக்கணமும் உரையிலக்கண முங் கூறுதலானுணர்க.

6. 'இங்ஙனங் கூறிய நல்லாசிரிய ரிலக்கணமே கூறியொழிந்தார் எல்லாவற்றுன் எல்லா மரபையச் செய்யுஞ் சுவடுடையராகி அவ்வத் துறைபோயினர் தாமுமென்றவாறு' என்பது, 'இங்ஙனங் கூறி அந் நல்லாசிரியரிலக்கணமே கூறியொழிந்தாரல்லர் வல்லவாற்றுன் எல்லா மரபையச் செய்யுஞ் சுவடுடையராகி வகுத்துரைத்தார் அவ்வத் துறைபோயினர்தாமும் என்றவாறு' என்றிருத்தல் வேண்டும். ஏன்னையெனின்? இச் சூத்திரத்துக் கருத்துரையுள் பேராசிரியர் 'செய்யுட்குறுப்பாமென... அவ்வாறு செய்தல் வன்மையாற் கூறினர்' என்று கூறுதலானும், நச்சினார்க்கினியரும் விரிவுரையுள் 'கூறி வல்லிதின் வகுத்துரைத்தனர் என மாறுக' எனக் கூறுதலானும், பதவுரையுள், 'இம் முப்பத்துநான்கும் நல்லிசைப்புலவர் செய்யப்படுஞ் செய்யுட்

நூனும் எல்லாமரபையச்செய்யுஞ் சுவடுடையராகி அவ்வத்துறை போயினர் தாமும் என்றவாறு; எனவே, இவ்வுறுப்பமையச் செய்தனவே செய்யுளெனப்படுவனவென்று சிறப்பித்தவாறு.

மற்று, 'கூறி' எனவும் 'உரைத்தனர்' எனவும் இருகாற் சொல்லியதென்னையெனின்,—[1] அச்செய்யுளானே கூறி அவற்றுப் பொருளுரைத்தாரென்றவாறு; என்றூர்க்கு, செய்யுட்குற்றம் ஈண்டோதாரோவெனின், [2] ஓதல்வேண்டுமே? இவ்விலக்கணத்துப் பிறழ்ந்துங் குன்றியும் வருவனவெல்லாம் வழுவென்பது அறியவைத்தா [3] னல்லனே, ஆசிரியனென்பது.

குறுப்பாமெனக்கூறி, அங்ஙன மிலக்கணமே கூறிவிடாதே, அவற்றைத் தாரு செய்தல் வன்மையி னமைந்து சுவடுபட வகுத்த அவ்வத் துறையெல்லாம் போயினர்' என்று கூறுதலானும் என்பது. நச்சினார்க்கினியர் உரைத்த பதவுரையுள்ளும் 'வகுத்த' என்பது வகுத்துரைத்தனர் என்றிருத்தல்வேண்டும். என்னையெனின், வகுத்த என்றிருப்பின் இப்பதவுரைக்குப் பயனிலையின்றி முடிதலானும், 'கூறிவல்லிதின் வகுத்துரைத்தனர்', என மாறுக என அவரே விரிவுரையுட் கூறுதலானுமென்க. ஏட்டுப் பிரதி சிலவற்றுள் 'நல்லாசிரியரிலக்கணமே கூறியொழிந்தாரல்ல ரவற்றுனெல்லா மரபையச்செய்யும்' என்று காணப்படலானும், வல்லிதின் என்பதற்கு இவ்விரிவுரையுள் பொருளின்றி முடிதலானும், 'கூறிவிடாதே' என்று நச்சினார்க்கினியருரையுட் காணப்படலானும், யாம் மேற்கூறிய வாறே பதவுரை இருத்தல் வேண்டுமென ஊகிக்கப்பட்டது. 'எல்லாவற்றுன்' என்பது தாமோதரம்பிள்ளை பதிப்பிற்பாடம். அது 'வல்லவாற்றுன்' என்றுமிருக்கலாம். இங்ஙனமன்றிக் கூறியொழிந்தார் என்பதை முற்றுக்கின், 'வல்லிதின்' என்பதற்குப் பொருளின்றும். ஆதலிற் பொருத்தநோக்கிக்கொள்க.

[இவ்வாறு உரைவாக்கியங்களுள் உண்மையறியமுடியாமற் பிறழ்ந்து கிடப்பன பல. அதற்குக் காரணம் ஏடெழுதுவோர், பிதன்முதலியன தின்று இடையிலற்றுக் கிடக்கும் வாக்கியங்களைப் புள்ளிபோடாமற் பின்சேர்த்தெழுதியதும் தாமுஞ் சில சேர்த்து எழுதியதும் மாறியெழுதியதுமேயாம்.]

1. அச்செய்யுளானே கூறி அவற்றுப் பொருளுரைத்தார் என்றது நல்லிசைப்புலவர் செய்த செய்யுளானே அதற்குரிய உறுப்புக்கள் கூறி, அவ்வுறுப்புக்களின் பொருளும் கூறினர் என்றபடி. பொருள் என்றது ஈண்டு இலக்கணத்தை.

2. ஓதல்வேண்டுமே—ஓதல்வேண்டாம்; ஏ எதிர்மறை.

3. அல்லனே—என்பதில் ஏகாரம் எதிர்மறை. வைத்தானும் என்று பொருளாம். அல்லனே என்பது அல்லனேல் என்று பாடமிருந்திருத்தல்வேண்டும். இப்பாடமுடிபிற்கு ஓதல்வேண்டுமே என்பதில் ஏகாரம் தேற்றப்பொருளில் வந்ததாகும்.

மற்றுச் செய்யுளுறுப்பு ஈண்டோதினுர்; செய்புள் யாண் டோதுபவெனின், அறியாது கடாயினுய், — உறுப்பென்பன உறுப்புடைப் பொருளின் வேறெனப்படா; பொருள் எனப் படுவன உறுப்பே, அவற்றது ஈட்டத்தினே முதலென வழங் குபவாகலான் உறுப்பினேயே சொல்லியொழிந்தார்; முதற் பொருளதிலக்கணமென, உறுப்பிலக்கணத்தினேயே வேறுபடுத் துக் [1] கூறலாவதின்மையாலும், உறுப்புரைப்பவே [2]அவ்வுறுப் புடைய பொருள் வழக்கியலாற் பெறலாமாகலானுமென்பது.

மற்று, யாத்த சீரேயடியாப்பென்றதென்னே? தளையென்ப தோர் உறுப்புப் [3]பிறர் வேண்டுபவாலெனின்,— [4]இவருஞ் சீரது தொழிலே தளையென வேண்டுப; தளைத்தலிற் றளையாத லானும் வேறு [5]பொருளென வேண்டாரென்பது; [6]என்ருர்க்கு, அசையின்றிச் சீருமில்லை; சீரின்றி அடியுமில்லையாம் பிற வெனின், அற்றன்று; உறுப்பும் உறுப்புடைச் செய்புளும்போல [7]அவை கொள்ளப்படும்; தளையென வேறொன்றின்மையிற் கொள்

---

1. கூறலாவதின்மையானும் — கூறும்வழக்கு இல்லாமை யானும்.

2. உறுப்புடைப்பொருள் — செய்யுள்.

3. தளைவேண்டுவார் சிறுகாக்கைபாடினியார் முதலிய ஒருசாராசிரியர்.

4. இவர் — தொல்காப்பியர். தளையாதலானும் என்றதன் உண்மையை நோக்குமிடத்து வேறும் எண்ணப்பட்ட வாக்கிய மிருந்து சிதைவுற்றதுபோலத் தெரிகின்றது.

5. பொருள் — உறுப்பு.

6. என்ருர்க்கு என்றது — சீரதுதொழிலே தளையாதலின் தளையென ஒருறுப்பில்லை என்ருர்க்கு என்றபடி. சீரியைந்தமை யைத் தளைஎன வேண்டாது தளையில்லையெனின்? அசையியைந் ததே சீராதலின் சீரென ஒருறுப்பும் வேண்டியதில்லையாகும்; சீரியைந்ததே அடியாதலின் அடியென ஒருறுப்பும் வேண்டிய தில்லையாகும் பிறவெனின்? என்க.

7. அவை—சீரும் அடியும். சீரைப்பிரித்து அசைகொள் ளப்படும். ஆதலால அசை இயைந்ததைச் சீரென வேண்டி னுர். அடியைப்பிரித்துச் சீர்கொள்ளப்படும். ஆதலிற் சீரி யைந்ததை அடியெனவேண்டினுர்; உறுப்பியைந்ததை உறுப் புடைச் செய்யுளென வேறுவேண்டினுற்போல என்பது. அசை யியைந்து சீரென வேறொன்று காணப்பட்டாற்போலவும் சீரியைந்து அடியென வேறொன்று காணப்பட்டாற்போலவும், சீரியைந்து தளையென வேறொருறுப்புக் காணப்படாமையின் தளையென வேறொன்று இவர் வேண்டாராயினர் என்றபடி. சீர்

ளான்; என்னே? அது குறளடியென வேறுறுப்பாயினமையி னென்பது; தளையென்று இதனைக் கோடுமேல் அதனைக் குற ளடியெனலாகாதென்பது; அல்லதூஉம், ஈரசை கூடி ஒரு சீரா யினவாறுபோல இருசீர் கூடியவழி அவ்விரண்டனையும் ஒன் றென்று கோடல்வேண்டும்; கொள்ளவே, [1] நாற்சீரடியினை இடை துணித்துச் சொல்லுவதன்றி, நான்கு பகுதியானெய்திக் [2] கண் டம்படச் சொல்லுமாறில்லையென்க. 'யாத்தசீர்' என்றதனுனே அசைதொறுந் துணித்துச் சொல்லப்படாசீரென்பதூஉம், அச் சீரான் அடியானவழிச் 'சீரியைந்திற்றது சீரெனவே' படுமென் றதனுற் சீரெல்லாந் துணித்துச் சொல்லப்படுமென்பதூஉங் கூறினுன் இவ்வாசிரியனென்பது; அற்றன்றியும், அவ்வாறு கூறினுன் இவ்வாசிரியனென்பதூஉங் குற்றமென மறுக்க. மற் றுத் தொடை கூறியதென்னே? அடியிரண்டு தொடுத்தற்றொழி லல்லது இன்மையினென்னின், அற்றன்று; தொடுத்தற்றொழின் மாத்திரையானே தொடையென்றுணல்லன்; அவ்வடிக்கண் நின்ற எழுத்துஞ் சொல்லும் [3] பிற பொருளாகலான் அவற்றுனே தொடை கொண்டமையின் வேறுறுப்பென்றுனென்பது. அஃதேல், சீருஞ்சீரும் இயைந்தவழி அவையிடமாக நின்ற அசையால் தளைகொள்ளாமோவெனின்,—கோடுமன்றே; அதனை அடியென்னுமாயினென முற்கூறியவாறே கூறி மறுக்க; அல் லதூஉம், அவ்விரண்டசையுங் [4] கூடிச் சீராமன்றுவெனினென் பது. மற்று நாற்சீரடியுள் இருசீரியைந்தவழிக் குறளடியென்னு

கூடிய உறுப்பைத் தளையென்று கொண்டால் அதனை அடி யெனலாகாது என்றபடி.

1. நாற்சீரடியினை இடைதுணித்துச் சொல்லுவதன்றி என் றது, முதலிருசீரியைந்து ஒருதளையாயும், மூன்றுஞ் சீரும் நாலாஞ்சீரு மியைந்து ஒருதளையாயுங் கொள்ளப்படுங் கால், அவ்விரு தளைக்கும் (முதலிரு சீருக்கும் பின்னிரு சீருக்கும்) இடையே துணித்துச் சொல்வதன்றி என்றபடி. நான்கு பகுதியானெய்திக் கண்டம்படச் சொல்லுமாறில்லை எனவே நான்கு சீராகத் துணித்துச் சொல்லுமாறில்லை என்பது கருத்தாகும்.

2. கண்டம்—துண்டு.

3. பிறபொருள்—அவ்வடியைவிட வேறுனபொருள். அவற் றுன்—எழுத்தானுஞ் சொல்லானும் எதுகை மோனை முதலியன எழுத்துத்தொடை. முரண்முதலியன சொற்றொடை.

4. கூடிற் சீராமன்றே என்பதும் பாடம். அதுவே பொ ருத்தம்.

மாகலின், அதனைத் தளையென்னுமோவெனின், அங்ஙனங் கொள்ளின் இரு சீரடிக்கண் தளை வேண்டாதானும்; ஆகவே, [1] ஒருவழிக் கொண்டு ஒருவழிக் கொள்ளாமை 'மயங்கக் கூறல்' (சுசுஙு) என்னுங் குற்றமாமென்பது; அல்லதூஉம், [2] அங்ஙனமன்றி வருமாயின் அடிக்கெல்லாம் பொதுவகையால் தளையுறுப் பெனப்படாது. எழுத்தும் அசையும்போல [3] யாண்டும் வருவனவெல்லாம் உறுப்பெனப்படுவனவென்றற்கு,

"இணைநூன் முடிபு தன்னூன் மேற்றே."

என்பதனாற் கார்க்கைபாடினியார் ஓதிய தளையிலக்கணம் [4] ஈண்டுங் கோடல்வேண்டுமெனின், அதுவே கருத்தாயின் [5] அவர்க்கும் [6] இவர் முடிவேபற்றித் [7] தளை களையல்வேண்டும்; அல்லதூஉம், இவர்க்கு [8] இளையரான காக்கைபாடினியார் தளை கொண்டிலரென்பது [9] இதனாற் பெற்றும். தளைவேண்டினுர் பிற் காலத்து ஓராசிரியரென்பது; என்னை?

"வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலறி னுண்மை வாலிதின் விரிப்பின்."

---

1. நாற்சீரடியுள் இருசீரியைந்ததனைத் தளை என்று கொள்ளுதலும், இருசீரடியுள் தளை என்றுகொள்ளாது குறளடியென்று கொள்ளுதலும் வரையறையின்றி மயங்கக்கூறலாம் என்பது கருத்து.

2. அங்ஙனமன்றி வருமென்றுகொள்ளின், எல்லாவடிக்கும் பொதுவிலக்கணமாக உறுப்பெனப்படாமையின் அது பொருந்தாது என்றபடி.

3. யாண்டும் வருவன — எல்லா அடிக்கண்ணும் வருவன. எழுத்தும் அசையும் யாண்டும் உறுப்பாய்க் கோடல்போலத் தளையும் குறளடிக்கண்ணும் அல்லாதவடிக்கண்ணும் வருவன வெல்லாம் உறுப்பென்று கொள்ளற்குத் தம்மோடொத்த நூலாசிரியர்கொண்ட தளை இலக்கணம் இவருங் கோடல்வேண்டும். கொள்ளின் யாண்டுந்தளையு முறுப்பாகக் கொள்ளலாம் என்றபடி.

4. ஈண்டும் — இந்நூற்கண்ணும்.

5. அவர் — காக்கைபாடினியார்.

6. இவர் — தொல்காப்பியர்.

7. தளைகளைதல் — தளையை நீக்கல்.

8. இளையரென்றது — ஒருசாலை மாணாக்கராதல் பற்றிப் போலும்.

9. இதனால் என்பது பின்வரும் 'தளைவேண்டினுர்.....ஓராசிரியர்' என்னும் வாக்கியத்தைச் சுட்டிநின்றது.

எனக் கூறி, வடவேங்கடந் தென்குமரியெனப் பனம்பாரனுர் கூறியவாற்றானே எல்லைகொண்டார் காக்கைபாடினியார்; ஒழிந்த காக்கைபாடினியத்து,

"வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்." (சுருக)

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தாரல்லரென்பதூஉம், [1] குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்றென்பதூஉம் பெற்றும். பெறவே, [2] அவர் இவரோடு ஒரு சாலை மாணாக்கரல்லரென்பது எல்லார்க்கும் உணரல்வேண்டுமென்பது.

மற்றிது முறையாயவா றென்னையெனின், — மாத்திரை எழுத்தினது குணமாதலானும், அசையுஞ் சீரும் அடியும் தூக்கும் பாவும் வண்ணங்களுமென்ற இன்னோரன்னவெல்லாம் மாத்திரைநிமித்தமாகத் தோன்றுவனவாதலானும், அது முன் (சுகச) வைத்தான். அக்குணத்திற்குரிய எழுத்தினை அதன்பின் வைத்தான். அவ்வெழுத்தான் அசையும், (சுகரு) அசையாற் சீரும், (சுஉச) சீரான் அடியும், (சுசசு) அவ்வடி பெற்றவழி அதனை ஆக்குமாறறியக்கூறும் யாப்பும் (சுகூஅ) அவ்வடியகத்தன சொல்லும் பொருளுமாகலான் அதன்பின் மரபும் வைத்தான். அவ்வடியிரண்டினைத் தொடுக்குங்கால் அவற்றை ஓரடியென ஒரு தொடர்ப்படாமைத் துணிப்பது தூக்காகலான் (சுகூசு) அதனைத் தொடைக்குமுன் (சஅஅ) வைத்தான். அவ்வடியிரண்டு தொடுத்தவழியுங் கொள்ளப்படும் நோக்கென்பதறிவித்தற்கு (சகசு) அதனைத் தொடைப்பின் வைத்தான். அவ்வடி இரண்டும் பலவுந் தொடர்ந்தவழி முழுவதுங் கிடப்பது பாவாகலான் அதனை அதன்பின் (சகஎ) வைத்தான். அப்பாத் [3] துணிந்த [4] துணிவினை (சுஅக) [5] எண்ணுதலான் அளவினை (சகூசு) அதன்பின் வைத்தான். இனையுங் கிணைக்குறுப்பாகிய (சகூஎ) ஓழுக

---

1. குறும்பனைநாடு — கடல்கோட்குமுன் தென்றிசைக்கண் இருந்ததொருநாடு.

2. அவர் என்றது பிற்காலத்திருந்த காக்கைபாடினியாரை.

3. துணிந்த — வரையறுத்த.

4. துணிவு — வரையறை. துணியினை என்றிருப்பது நலம். துணி — துண்டு = அடி.

5. எண்ணுதல் — அளவுசெய்தல்.

லாறும் அவ்வொழுக்கத்தவாகிய கூற்றும் (நிஅசு) அதன்பின் வைத்தான். கேட்போருங் (நிஅஅ) கேட்கும் (நிகஉ) இடனும் (நிகஅ) அதுபோலப் புலப்படாத காலமும் (நிகச) இவற்றுற் பயனும் (நிகநி) பயனது [1] பரத்துவரும் மெய்ப்பாடும் (நிகசு) இவ்வற்றினெல்லாம் ஒழிந்துநின்ற எச்சமும் (நிகஅ) அவ்வெச்சத்தோடுங் கூட்டியுணரப்படும் முன்னமும் (நிகசு) அம்முறைமையான் அதன்பின் வைத்தான். அவற்றிற்கெல்லாம் பொதுவாகிய பொருளை (நிஉஅ) அதன்பின் வைத்தான். அப்பொருட் பிறழ்ச்சியை ஓருப்படுக்குந் துறையை அதன்பின் (நிஉக) வைத்தான். மேல் (நிஉஉ) எச்சமும் மாட்டுமின்றியும் வருமென்பவாகலான் மாட்டினைத் துறைவகையின்பின் வைத்தான். அவற்றுள் எச்சத்தினை முன் ஓதினான் அது செய்புட்க[2]ணின்றி வருஞ் சிறுபான்மையாதலானென்பது. வண்ணம் பாவினதுபகுதியுறுப்பாதலான் அதனை அவற்றுப்பின் (நிஉச) வைத்தான். வனப்பினை (நிஉநி) எல்லாவற்றுக்கும்பின் (நிசஎ) வைத்தான். அவற்றை ஒன்றொன்றாக நோக்குங்கால் அவ்வெட்டுமின்றியுஞ் செய்யுள் செய்பவாகலினென்பது. மற்றிவ்வுறுப்பினையெல்லாம் ஆசிரியன் [3] குறியென்றுமோ உலகு குறியென்றுமோவெனின், அவ்விரு திறத்தானும் ஏற்பனவறிந்து கொள்ளப்படுமென்றுழிக. இவற்றை [4] உயிருடையது ஊறுபப்புப்போலக் கொளின் உயிர் வேறு கூறல்வேண்டுவதாம், அவ்வாறு கூறுமையிற் கலவையுறுப்புப்போலக் கொள்க. (க)

[மாத்திரையளவும் எழுத்தியல்வகையும் உணர்த்துதல்]

நகச. அவற்றுண்,
மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனர் புலவர்.

1. பரம்—மேல். பயனது பாத்துய்ப்ப வரும் என்றும் பாடம். ஆயின் நிருக்கோவையாருரையுள்ளும், பயனென்பது நெஞ்சினடுத்ததோர் மெய்ப்பாடு காரணமாகத் தன்வயினிகழ்ந்த சொல்லானெய்துவது என்று வருதலின் முன்னையதே பொருத்தம்போலும்.

2. இன்றி—இல்லாமல். வருவிப்பது என்றபடி.

3. குறி—பெயர்.

4. உயிருடையது—உயிருடைப் பொருள். உயிர் வேறு கூறுமையின் உயிரில்லாததோர் கலவையுறுப்புப் போலக் கொள்க என்றபடி. உயிர் என்றது செய்யுளைக் குறிப்பால் உணர்த்தி நின்றது.

இது, நிறுத்தமுறையானே முதற்கணின்ற மாத்திரையும் எழுத்தியலு முணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மாத்திரைகள் பல தொடர்ந்து செய்புட்கண்விராய் நிற்கும் அளவையும், எழுத்துக்களியற்றப்பட்டு எழுத்ததிகாரத்தின்வேறுபட்ட தொகையுமென இரண்டினமும் மேல் எழுத்தோத்தினுட் கூறப்படாதனவல்ல, அவையே: அவற்றை ஈண்டு வேண்டுமாற்றுற் கொள்க என்பான் மேற்கிளந்தவகையிற் பிறழாமற் கொள்க என்றுனென்பது.

[1] அன்ன எனவே, [2] இம்மாத்திரையளவும் எழுத்தியல் வகையும் வேறென்பதூஉம், வேறுயினும் ஆண்டுக் கூறியவற்றொடு வேறுபடாமைக் கொள்கவென்பதூஉம் உரைத்தானும்; எனவே, எல்லாவழியும் [3] வரையாது எய்தற்பாலவாகிய மாத்திரைகள், ஓரோவழி வரையப்படுமாயினும் அவை முற்கூறுத வேறுசில மாத்திரையுமல்ல; ஈண்டுப் பதினெந்து எழுத்தென்று கூறிப் [4] பயங்கோடுமாயினும் ஆண்டை முப்பத்துமூன்றெழுத்தின் வேறுபடப் பிறந்தன சிலவெழுத்து மல்லவென்பான் மேற்கிளந்தன்ன என்றுனென்பது. மாத்திரையென்றொழியாது மாத்திரையளவும் என்றதனான் அம்மாத்திரையை விராய்ச்செய்யும் அளவை ஈண்டுக் கூறினனென்பது கருத்து.

மற்று, எழுத்தியல் வகையினைமாட்டேற்றான் முப்பத்து மூன்றெனக் கொள்வதன்றிப் பதினெந்தென்று கொள்ளுமாறென்னையெனின் எழுத்தோத்தினுட் குறிலு நெடிலும் உயிருமெய்யும் [5] இனமூன்றுஞ் சார்பெழுத்து மூன்றுமெனப் பத்தும் இயல்புவகையான் [6] ஆண்டுப் படுத்தோதினான்; உயிர்மெய்யும் உயிரளபெடையுந் தத்தம் வகையாற் கூடுமாறும் ஐகாரம் ஔகாரம் போலிவகையாற் கூடுமாறும் யாழ்நூலகத்து

1. அன்ன என ஒப்புக் கூறியதனானே.

2. இம்மாத்திரையளவு என்றது இச்செய்யுளியலிற் கூறும் மாத்திரையளவு என்றபடி.

3. வரையாது—நீக்கப்படாது.

4. பயம்—பயன்.

5. இனமூன்று—வல்லினம், மெல்லினம், இடையினம்.

6. ஆண்டு என்றது எழுத்ததிகாரத்தை.

ஒற்றிசை நீளுமாறும் ஆண்டுத் [1] தோற்றுவாய் செய்தான். செய்யவே அவை ஈண்டுக் கூறும் எழுத்தியல் வகையோடொக்குமென்று உய்த்துணர்ந்துகொள்ள வைத்தானென்பது. இவற்றோடு மகரக்குறுக்கமும் கூட்டிப் பதினெழுத்து என் பாருமுளர். அதனாற் பயனென்னையெனின் பாட்டுடைத் தலைவன் கேட்டுக்குக் காரணமாமென்பர்; மற்[2] றுயிர்மெய்த் தொடக்கத்து ஐந்தனையும் மேல் எழுத்தென்றிலனாகலான் ஈண்டு எழுத்தியல்வகையுள் எழுத்தாக்கி அடக்குமாறென்னையெனின்? ஈண்டு அன்னவெனவே, ஆண்டு [3] இரண்டெழுத்தின் கூட்டமெனவும் [4] மொழியெனவும் [5] போலியெனவுங் கூறினுமினும் அவற்றை [6] எழுத்தியல்வகையெனப் பெயர் கொடுப்பவே [7] ஆண்டு நின்ற வகையானே ஈண்டு எழுத்தெனப்படுமென்பதாயிற்று. இதன் கருத்து: இயலென்றதனான் இயற்றிக்கொள்ளும் வகையான் எழுத்து இனையதென்றனும். வகையென்பதனான் முப்பத்துமூன்றினைக் குறிலும் நெடிலுமென்றற் றொடக்கத்துப் பெயர் வேறுபாட்டாற் பத்துவகைப்பட இயற்றுதலுங் [8] கூட்ட வகையானிரண்டும், [9] போலிவகையானிரண்டும், [10] யாழ்நூல் வேண்டும்வகையா னொன்றுமென ஐந்துவகையானியற்றுதலு மென இருவகையுங் கொள்ளப்படும்; அல்லதூஉம், செய்யுட்கள் அவ்வெழுத்துவகையான் இன்னோசையவாக விராய்ச்

1. தோற்றுவாய் செய்தல் — தோன்றுதற் கிடஞ்செய்தல். தொடக்கஞ் செய்தல்.

2. உயிர்மெய்த் தொடக்கத்து ஐந்து, உயிர்மெய், உயிரளபெடை, ஐகார ஔகாரப் போலி, ஒற்றளபெடை. ஆண்டு— எழுத்ததிகாரத்தினுள்.

3. இரண்டெழுத்தின் கூட்டம் என்றது, உயிர்மெய்யை.

4. மொழி என்றது அளபெடையை.

5. போலி என்றது ஐகார ஔகாரப் போலியை.

6. எழுத்தியல்வகையெனப் பெயர் கொடுத்தது, இச்சூத்திரத்துள்(2) என்க.

7. ஆண்டு நின்றவகையென்றது எழுத்தன்றி எழுத்தின் வகையாய் நின்றமையை.

8. கூட்டவகையானிரண்டு என்றது — உயிர்மெய்யையும், உயிரளபெடையையும்.

9. போலிவகையானிரண்டு ஐ, ஔ.

10. யாழ்நூல்—இசைநூல். ஒன்று—ஒற்றளபெடை.

செய்தலுங் கொள்க. மற்றளபெடையை மேல் மொழியென்றுன் ஈண்டெழுத்தென்றலைகளின், இதனை [1] ஒரெழுத்தென்று கோடுமோ இரண்டெழுத்தென்று கோடுமோ எனின்,

"நெட்டெழுத் திம்ப ரொத்தகும் றெழுத்தே." (தொ. எழு. சக)

என்று கூறியவாற்றான், ஆண்டு இரண்டெழுத்தினைக் கொள்ளக் கிடந்ததாயினும் [2] முன்னர்ப் போக்கி,

"அளபெடை யசைநிலை யாகலு முரித்தே." (நூஉ கூ)

என்றவழி, எழுத்து நிலைமையும் எய்துவிக்குமாகலான் எதிரது நோக்கி ஈண்டு ஒரெழுத்தென்று கோடுமென்பது. இனி அவற்றுட் குறிலும் நெடிலும் குற்றுகரமும் அசைக்குறுப்பாம்; மற்று,

"ஒற்றெடு வருதலொடு மெய்ப்பட நாடி." (நூகடு)

என்பதனான் ஒற்றும் அசைக்குறுப்பாகாவோவெனின்,— [3] அச்சூத்திரத்தானன்றே [4] அவை குறிலும் நெடிலும் அடுத்து வந்தும் வேறுபடாது [5] நேர்நிரையாதலெய்தியது நோக்கி அவை அசைக்குறுப்பாகாவென்றதென்க. மற்று இடைநின்று நிரையாதலை விலக்காவோவெனின்,— [6] அன்னதோர் விதியுண்டாயினன்றே இவை இடைபுகுந்து விலக்கவேண்டுவதென மறுக்க. நெடிலும் அளபெடையிரண்டும் உயிரும் உயிர்மெய்யும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமுமெனப் பத்தும் தொடைக்கு உறுப்பாம். குறிலும் நெடிலும் அளபெடையிரண்டும் இனம் மூன்றும் ஆய்தமும் வண்ணத்திற்கு உறுப்பாம். இங்ஙனமே வேறுபடவந்த பயனோக்கி எழுத்தினை இயற்றிக் கோடலின் 'எழுத்தியல் வகை' என்றுணர்ந்தது; அஃதேல், ஒற்றுங் குற்றிகரமும்

1. ஒரெழுத்தென்றும் ஈரிரண்டெழுத்தென்றுங் கோடுமோவெனின் என்பது தாமோதரம்பிள்ளை பதிப்பு.

2. முன்னர்—பின்.

3. அச்சூத்திரம்—ஒற்றெடு வருதலென்ற சூத்திரம். அச்சூத்திரத்தானன்றே எய்தியது நோக்கி ஆகாவென்றதென்க.

4. அவை—மெய்.

5. நேர் நிரை—நேரும் நிரையும்.

6. அன்னதோர் விதி—ஒற்றிடை நிற்குமென்ற விதி.

ண்டோதியதென்னையெனின்,—ஒற்று அளபெடையான் அசை நிலையுஞ் சீர்நிலையுங் கோடலின், ஈண்டு ஒற்றுக் கூறினுன். குற்றிகரமும் உயிராயினும் ஒற்றுப்போல எழுத்தெண்ணி அடி வகுக்குங்கால் எண்ணப்படாதென்றற்குக் கூறினுனென்பது; அஃதேல்,

"ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்." (நூஉ9)

என்பவாகலின், அதனை ஈண்டுத் தழாஅற்கவெனின், அக்கருத்தி னால் அவ்வாறும் அமையுமென்பது; அற்றன்று, இதனை மேற் புள்ளி பெறுமென்றிலனுதலான் புள்ளி பெறுமென்றற்கும்,

"ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்." (நூஉ0)

என்றுனென்பது.

இனி, ஒரு சாரார் மாத்திரையென்றது [1] எழுத்தலோசை யாகிய குறிப்பிசை கொண்டானென்பர். அக்குறிப்பிசை உறுப் பாக வருஞ் சான்றோர் செய்புள் யாண்டுங் காணுமையின் நாம் அது வேண்டாமாயினும். சிறுபான்மை ஓரோவழி வரினும் அத்துணையானே அஃது, இன்றியமையாத உறுப்போடு எண் ணப்படாதென மறுக்க. உறுப்பன்று என்றார்க்குக் குறிப்பிசை யாண்டுப் பெறுதுமெனின்,

"அசையுஞ் சீரு மிசையோடு சேர்த்தி." (நூஉந)

என்புழிப், பெறுதுமென்பது.

இனி,

"எழுத்தியல் வகையும் மேற்கிளந் தன்ன"

என்பதனையும் எழுத்திலக்கணத்திற்றிரியாமற் செய்புள் செய்க் வென்றவாறென்பவெனின், அஃதே கருத்தாயிற் சொல்லோத்தி னுள்ளும் எழுத்திலக்கணமாகிய [2] மயக்கமும், [3] நிலையும் முத லாகிய இலக்கணத்திற் றிரியாமற் சொல்லாராய்தல் வேண்டு மெனவும், இவ்வதிகாரத்துள்ளும் 'எழுத்தியல் வகையும் சொல் லியல் வகையும் மேற்கிளந்தன்ன' எனவுஞ் சூத்திரஞ் செய் வான்மன் ஆசிரியனென மறுக்க.

1. எழுத்தல் ஓசையாகிய குறிப்பிசையை நூஉந-ம் சூத் திர உரையுட் காண்க.

2. மயக்கம்—இடைநிலை மயக்கம்.

3. நிலை—முதனிலை; இறுதிநிலை.

மற்று, மாத்திரையளவைக்கு இலக்கணங் கூறுமி னெனின்,—அதுவும்

"அசையுஞ் சீரு மிசையோடு சேர்த்தி." (நூஉந)

என்புழி, வல்லோராதிறனப் பாவொடு பொருந்தக் கொளக் கூறுமென்பது; அல்லதூஉம், மாத்திரையினை அளவைப்பட நிறுத்துக என்ப தோரிலக்கணமாதலின், இங்ஙனம் வரையறை யுடைத்தாக நோக்கிச் செய்புளுறுப்பென்றுணுமென்பது.

மற்று, மாத்திரையினை அளவைப்பட நிறுத்தாக்காற் படுங் குற்றம் என்னையெனின்,—அற்றன்று;

'வரகு வரகு வரகு வரகு'

என்னும் அடியினை,

[1]'பஞ்சுட்டுப் பஞ்சுட்டுப் பஞ்சுட்டு'

என நிறுத்தின் அது மாத்திரைவகையாற் சிதைவுபட்டதாம்.

"அம்ம வாழி கேளாய் தோழீ"

என்றுற் பின்னர்நின்ற இருசீரும் நெடிலாதல் இன்னுதென்றும், தோழியெனப் பின்னர்நின்ற சீரைக் குறுக்கினவழி இன்னே சைத்தாமென்றும் அவ்வாறே செய்புள் செய்ப. பிறவுங் கொச்ச கக்கலியுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளும் இவ்வாறே கண்டு கொள்க. (உ)

[அசைவகை யிவையெனல்]

நூகரு. குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றெடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே.

இது, நிறுத்தமுறையானே அசைவகை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: குறிலும் நெடிலுங் தனித்து வந்தும், குறில் இரண்டு இணைந்து வந்தும் குறிற்பின்னர் நெடில் இணைந்து வந்தும் அவை ஒற்றடுத்தும் முறையானே நேர்நிரையாகை யானே நேரசையும் நிரையசையுமென்றும் என்றவாறு.

"குறிலே நெடிலே யொற்றெடு வருதலொடு."

எனவும்,

1. 'பஞ்சுட்டுப் பஞ்சுட்டு.....' என்னும் ஓசை நீண்டு காட்டலின் வழு.

"குறினெடி லொற்றொடு வருதலொடு."

ஏனவும், வேறு நிரனிறீஇப் பொருளுரைக்க. 'மெய்ப்பட நோடி' என்பது பொருள்பெற ஆராய்ந்து; எனவே, இப்பெயர் ஆட்சி காரணமேயன்றிக் குணங் காரணமாகலு முடைத்தெனவாறு. உயிரில்லெழுத்தல்லாதன (சூ நிசு) தனித்து நிற்றலின் இயலசை யென்னும் பொருள்பட நேரசையென்றுமாயிற்று.

அளபு இரண்டு நிரைதலின் இணையசையென்னும் பொருள் பட நிரையசையென்றுமாயிற்று; அல்லதூஉம், 'மெய்ப்பட நாடி.' என்றதனான் அவ்வாய்பாடே அவற்றுக்குக் காரணமென்பதூஉங் கொள்க. [1] உடம்பொடு புணர்த்தல் (சூகூரு) என்பதனால் உதா ரணமுங் கூறியவாறு. அவை நேர்நிரையெனச் சொல்லிக் கண்டு கொள்க. அ ஆ எனவும், அல் ஆல் எனவும், பல பலா எனவும், புகர் புகார் எனவும், பிறவும் இவ்வாறு வருவனவெல்லாங் கொள்க.

மற்று, குறினெடிலென எழுத்தாக ஓதியதென்னை? சொல் லாயவழி அசையாகாவோவெனின்,—அவை ஒற்றொடு வருத லென்றதனானே, சொல்லாதலும் நேர்தானுகவே அவை இரு வாற்றானும் [2] அசையாமென்பது [3] சீரின்றன்மைக்கண் வந்தது.

'உள் ளார் தோ ழி' என நேரசை நான்கும் வந்தன.

'வரி வரால் கலா வலின்' என நிரையசை நான்கும் வந்தன. (சூ)

---

1. உடம்பொடு புணர்த்தல் என்பதனை உடம்படு புணர்த் தல் (உடம் படுபு உணர்த்தல்) என்று பாடமிருப்பதாக, டாக் டர் உ. வே. சாமிநாதையர் நன்னூல் சங்கர நமச்சிவாயருரைப் பதிப்புட் கூறியுள்ளார். இங்கே உடம்பொடு புணர்த்தலால் அமைந்து கிடந்ததென்றது நேரு நிரையுமென்று கூறிய அசைப் பெயர்களே அவற்றிற் குதாரணமாயமைந்து கிடக்குமாறு சொன் னமையை.

2. அசையாமென்பது என்பதில் முற்றுத்தரிப்பு இருப்பதே பொருத்தம். பின்வரு முதாரணங்கள் சீரின்கண் அசை வந்த தற்குக் காட்டியனவாதலின்.

3. சீரின் றன்மைக்கண் வந்தது என்பதில் யாதோ பிழை இருத்தல்வேண்டும். அவ்வாக்கியம் உதாரணங்களை விளக்க வந்த தாகத் தோன்றுகின்றது. அசையாமென்பது வந்தது என்று முடிக்கில் உதாரணம் என்பது பின்வரல்வேண்டும்.

[இதுவுமது]

சூகூசு. இருவகை யுகரமோ டியைந்தலை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப.

இது, சொல்லாத அசைக்கூறுஞ் சொல்லுகின்றது.

இ—ள்: இருவகை யுகரமென்பன: குற்றுகர முற்றுகரங் கள்; அவற்றோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒரு சொல் விழுக்காடுபட இயைந்துவரின் நிறுத்தமுறையானே நேரசையோடொன்றிவந்த குற்றுகரமும் அதனோடு ஒன்றி வந்த முற்றுகரமும் நேர்பசையெனப்படும்; நிரையசையோ டொன்றிவந்த குற்றுகரமும் அதனோடொன்றிவந்த முற்றுகர மும் நிரைபசை எனப்படும் என்றவாறு.

இயைந்தென்றதன் இருவகை உகரமும் [1] இரு பிளவுபடாது ஒன்றுகி வரல்வேண்டும், அங்ஙனம் அசையாங்காலென்றற்கு. இருவகை உகரமும் ஒருகாலத்து ஒன்றன்பின் வாரா, வேறு வேறு வருமென்பது. இருவகை [2] உகரமும் இறுதிக்கண் நின்று அசையாக்குமென்பதென்னை பெறுமாறெனின்?—குற்றுகரம் ஈற் றுக்கணல்லது வாராமையானும்,

"நிற்ற லின்றே யிற்றடி மருங்கினும்." (சூஉக)

என்பதனானும் பெறுதுமென்பது; அல்லதூஉம், நுந்தையென் னும் முதற்கட் குற்றுகரம் [3] இறுதிக்கண் நேரசையல்லது

---

1. இரு பிளவுபடாது என்றது வருஞ்சொல்லோடு சேர்ந்து வேறசையாகாமல் ஒருசொல் விழுக்காடுபட நிற்றலே. உண் டுடுத்து இதில் உண்டு என்பது குற்றுகரமேனும் வருஞ்சொல் லோடு சேர்ந்து வேறசையானமையால் நேர்பன்றனமை காண்க. பிறவாறும் பிளவுபடுவன ஆகா என்க.

2. குற்றியலுகரம் மொழி ஈற்றுக்கண் வருதலானே இறுதி நின்று அசையாமென்பதும், முற்றியலுகரம் நிற்றலின்றே ஈற் றடி மருங்கினும் என்ற விதிப்படி அடியீற்றில் நில்லாதெனவே இடைக்கண் புணர்ச்சிவகையான் நிற்குமாதலின் மொழி இறு திக்கண் நின்று அசையாமென்பதும் பெறப்படும் என்க. புணர்ச்சி வகையான் வந்ததற்கு உதாரணம், 'நாணுத்தளை' 'விழவுத் தலைக் கொண்ட' என்பன. இவற்றில் வருமுகரம் புணர்ச்சி பற்றி வந்தன. நாண் உகரம்பெற்று நாணு எனவும், விழா பன்பது குறுகி உகரம்பெற்று விழவு எனவும் நின்றன. எழுத் ததிகாரம் நோக்குக.

3. இறுதிக்கண் நேரசையல்லது நிரையசையடுத்து வருத லின்மையானும் என்பதில் அல்லது என்பதை நீக்கிக்கொள்க.

நிரையசை அடுத்து வருதலின்மையானும் அது பெறுதுமென் பது. முன்னர் நேரசை நான்கும் நிரையசை நான்குமென எண்வகையான் அசை கூறி அவற்றுப்பின் இருவகை யுகர மும் வருமெனவே, அவை குற்றுகரத்தோடு எட்டும் முற்றுக ரத்தோடு எட்டுமாகப் பகுதியவாய்ச் சென்றதேனும், அவற்றுட் [1] குற்றெழுத்துப் பின்வரும் உக ரம் நேர்பசையாகாதென்பது,

"குறிலிணை யுகர மல்வழி யான." (உகஎ)

என்புழிச் சொல்லுதும்; ஒழிந்தன குற்றுகர(ம்) நேர்பசை மூன் றும் நிரையசை நான்குமாயின.

உதாரணம்: வண்டு, நாகு, காம்பு எனவும், வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு எனவும் இவை குற்றுகரம் அடுத்து நேர்பும் நிரைபும் வந்தவாறு.

இனி, முற்றுகரம் இரண்டசைப் பின்னும் வருங்காற் குறிலொற்றின் பின்னும், நெடிற்பின்னுமென நேரசைக்கு இரண் டல்லதாகாது. நிரையசைக்கண்ணும் குறிலிணைப்பின்னும் குறி னெடிற் பின்னுமல்லதாகாது.

உதாரணம்: [2] மின்னு, நாணு எனவும், உருமு, குலாவு என வும் வரும். வாழ்வு, தாழ்வு என நெடிலொற்றின்பின்னும் முற் றுகரம் வந்ததாலெனின்,—அவை ஆகாவென்பதூஉம் இக்காட் டிய நான்குமே ஆவனவென்பதூஉம் முன்னர்,

"நிற்ற லின்றே யிற்றடி மருங்கினும்." (உஉக)

என்புழிச் சொல்லுதும்.

இனி, ஒரு சாரார் நேர்பசை, நிரைபசையென்பன வேண்டா வென்ப; என்னை? குற்றுகர முற்றுகரங்களே வேறுக்கி

நுந்தை, நேரசை யிறுதிக்கண்ணும் நிரையசை யிறுதிக்கண்ணும் அடுத்துச் சின்னுந்தை, இராநுந்தை என வரும். அப்போது, முறையே நேர்பு நிரைபு ஆகாது. எனவே குற்றுகரம் இறுதிக் கண்ணே வந்து நேர்பு நிரைபு ஆகும் என்றபடி. இதனை கூம் சூத்திர உரை நோக்கியறிக.

1. குற்றெழுத்துக்குப்பின் வரும் உகரம் அது என்பது போல்வது. இது முற்றுகரமாவதன்றிக் குற்றுகரமாய் நேர்பசை யாகாது.

2. மின்னு—குறிலொற்றின்பின் வந்தது. நாணு—நெடிற் பின் வந்தது. உருமு—குறிலிணைப்பின் வந்தது. குலாவு—குறி னெடிற்பின் வந்தது. ஒரு சாரார் என்றது சிறுகாக்கை பாடினியார் முதலானோரை. அமையாதே—அமையாதா?

அலகிட அமையாதே? [1] ஞாயிறு எனக் குற்றுகரங் குறிலிணை யாய் அலகுபெறுமாறெனக் குற்றங் கூறுப. [2] முற்றுகரமும் தேமாவென நேரசையாயிற்றுப்போல, மின்னு என்றவழியும் வேறலகுபெற அமையுமென்பது; அற்றன்று; [3] குற்றுகரத் தினைக் குற்றெழுத்தென்ப; வேறு குற்றுகரம் வேண்டா தாரும். என்றூர்க்கு [4] வேண்டினானுங் குற்றங் கூறுவரவர்; என்னை? குற்றியலுகரம் அரைமாத்திரைத்தாகலின், [5] ஒற்றுப் போல ஓரசையுள் ஒடுக்கி அலகிடப்படும். அற்றன்றேற் குற் றெழுத்தாக்கி அலகுவைக்கவே அமையுமென்பதாம் அவர்

1. ஞாயிறு—நேர்நிரை. இதில், 'யிறு' குறிலிணையாக வைக் கப்படும். என—என்னுமென்று மிருக்கலாம்.

2. முற்றுகரமும் அமையுமென்பது என முடிக்க. தேமா என என்பது தேமா என்பது என்றிருத்தல்வேண்டும்.

3. நேர்பு நிரைபு எனக் குற்றுகரத்தை வேறசையாக வேண்டாதாரும் குற்றுகரத்தைக் குற்றெழுத்தாக வைத்தே அசைகொள்வர். ஆதலின் இவ்வாசிரியரும் ஞாயிறு முதலிய வற்றை மாத்திரம் குற்றெழுத்தாக வைத்து அசைகொண்டார். ஆகலின் யாண்டும் அவ்வாறு கோடல்வேண்டுமென்பது நியதி யன்று. ஆதலின் அற்றன்று என மேலே கூட்டுக. என்றூர்க்குக் கூறுப என இயைக்க. அவர் என்றது குற்றுகரத்தைக் குற் றெழுத்தாகக் கொள்ளும் ஒரு சாராரை.

4. வேண்டினானே என்றது குற்றுகரம் வேண்டினானே என்ற படி. வேண்டினான் — குற்றுகரத்தை (நேர்பு நிரைபு என) வேறசையாக வேண்டினான்; என்றது இந்நூலாசிரியரை.

5. ஒற்றுப்போல ஓரசையுள் ஒடுக்கி அலகிடப்படும் என் றது வரகு என்பதி கு என்பதை ஒற்றுகக்கொண்டு வர என் பதை நிரையசையாகக் கோடலே. அலகு வைத்தல் என்றது கு என்பதையும் குற்றெழுத்தாகக் கொண்டு வரகு என்பதை நிரை நேர் எனக் கோடலே. குற்றுகரம் ஒற்றுந் தானுமாகி அரைமாத்திரை என்றது ஒற்றுக்குரிய அரைமாத்திரை தன னுள் அடங்கத்தான் தனக்குரிய மாத்திரையோடு நிற்றலே. தனி மெய்யாயின் ஒடுங்கியிசைக்கும்; மெய்யின்மேல் அரைமாத்திரை யான குற்றுகரமுஞ் சேர்ந்து நிற்றலின் அகன்று இசைக்கும் என்றூர். ஒடுங்கியிசைத்தல் முன்னின்ற ஓரசையுள் ஒடுங்கி யிசைத்தல். நாள் என்றவழி முன்னின்ற நெட்டெழுத்துள் மெய் ஒடுங்கி இசைத்தலும் நாடு என்றவழி டுகரம் ஒடுங்கியிசை யாமையும் செவி கருவியாகவுணர்ந்துகொள்க. செயற்பாலது ஓரசையாக்குதல் எனக் கண்ணழிக்க.

நேர்புஅசை நிரைபுஅசைகளைத் தொல்காப்பியர் கொண் டமைக்கு இளம்பூரணர் கூறுங் காரணத்தையும் ஈண்டுக் காட் டுதும். அது வருமாறு:—

கருத்து. அதற்கு விடை:— குற்றுகரம் ஒற்றுப்போன்று ஒடுங்கி நில்லாது; என்னை? தன்னுன் ஊரப்பட்ட ஒற்றுங் தானுமாகி அரைமாத்திரைத்தாகியும், ஒடுங்கி இசையாது அகன்று இசைக்கும், அதனுல் ஒற்றென்றலுமாகாது; பின்னும் ஒரு மாத்திரைத்து ஆகாமையிற் குற்றெழுத்தெனலுமாகாது; மற்று, அதனுன் அதனை ஒற்றென [1]அடக்கார்; குற்றெழுத் தென ஏற்று அலகு [2]கொள்ளார்; இனி, அதனைச் செயற் பாலதோர் அசையாக்குதலென்பது நோக்கி நேர்பசை நிரை பசையென வேண்டினனென்பது. அவை வண்டு, கொண்டி என ஓசையொவ்வாமை செவி கருவியாக உணர்ந்துகொள்க. அஃதேல், ஞாயிறு, வலியது என்றவழிக் குறிலினை யுகரமெனக் குற்றெழுத்தாக்குவது ஏற்றுக்கெனின், அளபெடையை ஓசை யிற் சிதையாது [3]நிலப்படையுள் [4]அலகு சிதைத்தாற்போலக் குற்றுகரத்தைக் குற்றெழுத்துப்போல அலகுபெறுமென்பது இலக்கணமில்லதோர் வழுவமைதியானுயதனை இலக்கணமாக ஒத் துக்கொண்டு இலக்கண வகையாற் குற்றுகரமாதலை விலக்கு வாரும் உளரோவென மறுக்க. அஃதாக, [5]முற்றுகரம் ஒரு மாத்திரையாகலிற் குற்றெழுத்தாக்கி நேரும் நிரையும் ஆக்கப் பெறுவோவெனிற் பெறு; என்னை?

"அஃதேல் நேர்பசை நிரைபசையெனக் காக்கைபாடினியர் முதலாகிய ஒருசாராரிரியர் கொண்டிலரா லெனின், அவர் அதனை இரண்டசையாக்கி உரைத்தாராயினும், அதனை முடிய நிறுத் தாது, வெண்பாவிற்றின்கண் வந்த குற்றுகர நேரீற்றியற் சீரைத் தேமா புளிமா என்னுமுதாரணத்தான் ஓசையுட்டிற் செப்பலோசை குன்றுமென்றஞ்சி, காசு பிறப்பு எனவுகர வீற்ற னுதாரணங் காட்டினமையானும், சீருந் தளையுங் கெடு வழிக் குற்றியலுகரம் அலகுபெறுதென்றமையானும், வெண்பா வீற்றிலும் உகரஞ் சிறுபான்மை வருமென உடன்பட்டமையா னும் நேர்பசை நிரைபசை என்று வருதல் வலியுடைத்தென்று கொள்க." என்பதே.

1. அடக்கார்—அடக்கான் என்றிருப்பது நலம்.

2. கொள்ளார்—கொள்ளான் என்றிருப்பது நலம்.

3. நிலப்படை என்றது ஓசைக்கு இடமாகிய எழுத்தை.

4. அலகு சிதைத்தல்—அசைக்குரிய எழுத்தாகக் கொள் ளாது விடல்

5. முற்றுகரம் ஈற்றில் நின்று நேராதற்கன்றி நிரையா தற்கு உதாரணம் காணப்படவில்லை. ஆதலின், நிரை என்பது பொருந்துமோ என்பது ஆராய்ச்சிக்குரியது. நேராக்கப் பெறுவோ எனில் என்றிருப்பது நலம்.

'வண்டு வண்டு வண்டு வண்டு'

என நின்றவழிப் பிறந்த அகவலோசை,

'மின்னு மின்னு மின்னு மின்னு'

என நின்றவழியும் பெறப்படுமாதலின், [1]அதுவும், அது பட் டதேபட்டு அவ்வசையே பெறுமென்றுணர்ந்து; அல்லதூஉம், வெண்பாட்டிற்றடி வண்டு எனக் குற்றுகரவீற்றுன் இற்றவழி, கொல்லு என முற்றுகரவீற்றுன் இறுமாயினும் ஒத்தவோசை யாம்.

இனி, உகரவீறல்லாத தேமாவென்பதனுன் வெண்பா [2]முடியாவென்பர்; அதனுலுங் குற்றுகரத்தின் செய்கை முற் றுகரத்திற்கும் வேண்டி நேர்பு நிரைபு கொண்டானென்பது. அற்றன்றியுங் குற்றுகரஞ் சார்ந்துதோன்றுமாறுபோல [3]அம் முற்றுகரமும் வருமொழி காரணமாக நிலைமொழிசார்ந்து தோன்றுத லொப்புமை நோக்கியும் அதனைக் குற்றுகரம் போல ஓரசைக்கு உறுப்பாம் என்றுனென்பது.

'எழுத்தள வெஞ்சினுஞ் சிற்சில தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப.' (நூறு)

என்பதனுன் அவை அவ்வாறுதல் அறிந்துகொள்க. இவையும் [4]ஆட்சியுங் குணமுங் காரணமாகப் பெற்ற பெயர். ஆட்சி,

'நிரையவ ணிற்பி னேரு நேர்பும்' (நூஎள)

எனவும்,

'நேரீற் றியற்சீர் நிரையு நிரைபும்.'' (நூஅசு)

எனவும் வருமென்பது. இருவகை யுகரமும் அடைந்துவந்த [5]இயலசையிரண்டும், நேர்பும் நிரைபுமென்றலும், நேரும் நிரையுமென்னும் பொருண்மையவேயாகலான் அவற்றது பெய

---

1. அதுவும் என்றது முற்றுகரத்தை. அது என்றது குற் றுகரத்தை. வண்டு என்று முடியினும் கொல்லு என்று முடி யினும் நேர்பசையாகக் கொள்ளப்படும் என்றவாறு.

2. முடியாவென்றது வெண்பாட்டிற்றடியை.

3. அம்முற்றுகரம் என்றது மின்னு முதலியவற்றிலுள்ள முற்றுகரங்களை. இவை நிலைமொழிபற்றித் தோன்றுதலை எழுத் ததிகாரம் புள்ளிமயங்கியலிற் காண்க.

4. ஆட்சி என்றது ஆசிரியர் சூத்திரங்களில் ஆளுதலை.

5. இயலசை யிரண்டு - நேர் நிரை.

ரான் இவற்றையும் பெயர்கொடுத்தான் [1] ஆகுபெயராக்கியென் பது. எனவே, நேர் நிரையின்பின் உகரம் வருதலின் நேர்பு நிரைபெனக் குணங் காரணமாதலும் பெற்றும். (ச)

[குற்றுகரம் இவ்விடத்து நேர்பசையாகாவெனல்]

ஈகஎ. குறிலிணை யுகர மல்வழி யான.

இஃது, எய்தியது ஒருமருங்கு மறுத்தலாம்; எய்தாதது எய்துவித்ததுமாம்; வழுவமைத்தலெனினும் அமையும். தனிக் குறிலாகிய நேரசைப்பின்னும் *இருவகையுகரம் வந்து நேர் பசையாதலே விலக்கினமையின் எய்தியது ஒருமருங்கு மறுத்த தாம். குற்றுகரங் குற்றெழுத்துப்போன்று அலகு பெறுமென் றமையின் எய்தாதது எய்துவித்து வழுவமைத்ததாம்.

இ—ள்: இருவகை உகரமும் இருகுறிலாகி இணைந்தவழி நேர்பசையாகாது என்றவாறு.

கரு மழு என முற்றுகரம் நேர்பசையாகாது நிரையசை யாயிற்று, என்றூர்க்குக் [2] குற்றுகரம் விலக்கியதென்னே? குறி லிணை வந்தவழிக் குற்றுகரமாகாதென்பது,

*நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றியு முகரம் வல்லா னார்ந்தே.' (தொ. எழு. ஈசு)

என்றதனாற் பெறுதும் பிறவெனின், அது நோக்கிக் கூறிய னல்லன்; ஏற்புழிக் கோடல் என்பதனான் ஞாயிறு வலியது என ஓரசைப்பின்னர் வந்தவழி இது குற்றுகரமேயாமன்றே, ஆண்டும் அது குறிலிணை யுகரமெனவே படுமென்பது; பட் டக்கண்ணுங் குற்றுகரமேயென வழுவமைத்தவாறு. குறிலிணை யெனக் குற்றுகரத்தையும் உடம்படு புணர்த்தல் (சுசுரு) என் பதனாற் குற்றெழுத்தென வேண்டியனென்பது பெற்றும். இங்ஙனங் குற்றுகரங் குறிலிணையாகியும் குற்றுகரமாகி எழுத்

1. நேரின் பெயரையும் நிரையின் பெயரையும் நேர்புக் கும் நிரைபுக்கும் ஆக்கிக்கொண்டமையின் ஆகுபெயராயிற்று.

2. குறிலிணைந்தவழி, குற்றுகரமாகாதென்பது பெறுது மென்றது 'நெட்டெழுத்திம்பர்' (எழுத்து - நூன்மரபு) என் றதனால் அது இது எனவரும் தனிக்குறிலின் பின்வரும் உகரம் விலக்கப்பட்டதென்பது பெற்றமையை. இச்சூத்திரத்தையும் முற்சூத்திரத்தையும் ஒன்றாக்குவர் இளம்பூரணர்.

தள [1] வெஞ்சினும் அமையுமெனவே, [2] நுங்கையென்னும் முதற் கட் குற்றுகரமுங் குற்றெழுத்துப்போன்று அலகுபெறும் எழுத் தளவெஞ்சினுமென்பது கொள்க. இஃது ஒன்றின முடித்த றன்னின முடித்தல் என்னும் உத்திவகை. (ஞ)

[அசைகளின் பெயர் உணர்த்துதல்]

ஈகஅ. இயலசை முதலிரண் டேனைய வியலசை.

இது, மேற்கூறிய அசை நான்கினையும் இரு கூறுசெய்து அவற்றுக்கு எய்தாதது எய்துவிக்கின்றது. இனி, ஆட்சியுங் குணனுங் காரணமாக வேறுவேறு பெயர் கொடுக்கின்றது இச் சூத்திரமெனவும் அமையும்.

இ—ள்: முதற்கணின்ற நேரும் நிரையும் இயற்றிக்கொள் ளப்படாது, இயற்கைவகையான் நின்றுங்கு நின்று தளைப்பன வரம். ஒழிந்தனவிரண்டும் இயற்றிக்கொள்ளப்பட்டு இயலசை யாதற்கு உரியவாம் என்றவாறு.

எனவே, எய்தாதது எய்துவித்தது; தானே இயலசை உரியசையென்று ஆசிரியராலும் இயற்கையால் இயற்கையின் இயலசையெனவும், [3] அவை செய்யுக் தொழில் செய்தற்கு உரிய வாகலான் உரியசையெனவும், ஆட்சியுங் குணனுங் காரணமா கப் பெயரெய்துவித்ததாயிற்று.

அங்ஙனம் இயற்றிக்கொள்ளுமாறு சீர் கூறும்வழிக் கூறு தும். (சு)

[தனிக்குறில் முதலில் அசையாவது இவ்விடத்தெனல்]

ஈகக. தனிக்குறின் முதலசை மொழிதைத் தாகாது.

இஃது, எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கலுற் றது; உகரி, மயிரி என நின்றவழி, குறிலிணையன்றி

1. எஞ்சுதல்—ஈண்டு மாத்திரை குறைதல். ஞாயிறு அரை மாத்திரையான குற்றுகரமேனும் பாரிபோலச் சீர்கோடலின் குற்றுகரம் குற்றெழுத்தாகக் கொள்ளப்பட்டது.

2. நுங்கையென்னு முதற்கட் குற்றுகரமும் தேமாப்போலக் கொள்ளப்படும் என்றபடி.

3. அவை—இயலசை. இயலசை செய்யுந் தொழிற்குரி யது உரியசை யென்றவாறு.

மூன்றெழுத்து [1]நிறைந்தமையின் [2]நிரையசையாகா; தனித்தனி நேரசையாகலும், மூன்று குற்றெழுத்தினுள் இரண்டு குறி லிணையாக ஒன்று நேரசையாவதும் முதற்கண்ணே கொல்லோ வெனவும், எய்தியதனை விலக்கி விட்டிசைத்தவழித் தனிக் குறில் நேரசையாமென்பது எய்துவித்தமையின்.

இ—ள்: தனிக்குறிலானுகிய நேரசை முதற்கண் மொழி சிதைத்துச் செய்யப்படாது என்றவாறு.

இங்ஙனம் முதற்கண் வரையறுப்பவே இடையும் இறுதி யும் மேலோதியவாற்றான் நேரசையாமென்பது. மொழி சிதைத்த லென்பது, விட்டிசையாத மொழியை விட்டிசைத்து மொழி தல். எனவே, [3]விட்டிசைத்த மொழியாயின் அது மொழி சிதைத்ததெனப்படாது இயல்பாமென்பது பெற்றும். கரு மழு என முதற்கண் மொழி சிதைத்து நேரசையாகாமையும் குறி லிணையெனப்பட்டு நிரையசையாயினவாறும் கண்டுகொள்க.

'அஆ விழுந்தான்' (நாலடி. கூ)

எனவும்,

'அஉ வறியா வறிவி னிடைஎகனே.
நொ அலைய னின்னுட்டை நீ.''

எனவும் இவை விட்டிசைத்தலின் மொழி சிதையாது தனிக் குறில் முதற்கண் நேரசையாயினவாறும், அவை குறினெடி லும் குறிலிணையுமெனப்பட்டு நிரையசையாகாதவாறும் கண்டு கொள்க.

இனி, விட்டிசைக்கும் இடந்தான் மூன்றென்பது உரை யிற் கொள்க. அவை,

'அஆ விழுந்தான்' எனக் குறிப்பின்கண் வருதலும்,

'அஉ வறியா' எனச் சுட்டின்கண் வருதலும்,

'நொ அலையல்' என ஏவற்கண் வருதலுமென விட்டிசைக்கு மிடந்தான் மூன்றெனப்பட்டது. முதலசையென்பது, நேரசை

1. நிரைந்தமையின் என்று மிருந்திருக்கலாம்.

2. நிரையசை ஆகாமல் மூன்றெழுத்தும் தனித்தனி நேரசை யாதலும் பின் இரண்டுங் குறிலிணையாக ஒன்று நேரசையாத லும் முதற்கண்ணேயோ எனவும் எய்தியதென்க. ஆகாது என் பதில் து விடப்பட்டது.

3. விட்டிசைத்தல்—பிளந்திசைத்தல்

யென்பாருமுளர். [1]அது விதந்தோதல்வேண்டா, தனிக்குறி லான் அசையாமெனப்பட்டது நேரசையேயென்பது பெறுது மாகலான். மற்றும்,

'இஉக் குறுக்கம்'

என்றவழி, [2]விட்டிசைத்து மொழி சிதையாதாகலான் அவ் விரண்டெழுத்துங் கூட்டி நேர்பசையென்னுமோவெனின்,— அவை பிளவுபட நிற்றலின் இயைந்திலவென மறுக்க. (எ)

[குற்றியலுகரம் அலகு பெருதெனல்]

ஈஉ0. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.

இஃது, எய்தாதது எய்துவித்து ஐயம் அறுத்தது.

இ—ள்: மேற்கூறிய எழுத்திலக்கண வகையானும் ஈண் டோதும் அசைக் குறுப்பாமாற்றானும் எல்லாங் குற்றியலிகரம் ஒற்றெழுத்தியற்றேயாம் என்றவாறு.

[3]தேற்றேகாரம் அடுத்துக் கூறியவாறு. எனவே எழுத் தோத்தினுள்,

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்." (தொ. எழு. கoச)

எனக் கூறி,

"குற்றிய லுகரமு மற்றென மொழிய." (தொ. எழு. கoரு)

எனக் குற்றுகரத்திற்குப் புள்ளி பெறுதலுங் கூறினன்; அது போலக் குற்றிகரமும் புள்ளிபெற்று நிற்றல் உடைத்தெனவும், ஈண்டுக் குற்றுகரம் நேர்பும் நிரைபுமாகியவாறுபோலத் தானும் ஓர் அசைபாகுங் கொல்லென்று ஐயுறுவது வேண்டா, ஒற்று நின்றுங்குன்றி இயலசை உரியசைகளைச் சார்ந்து வருதலும் ஒற்றுப்போல் எழுத்தெண்ணப்படாமையுமுடைத்து என்றவாறு மாயிற்று.. எனவே, ஒற்றெழுத்தியற்றாயினுங் குற்றுகரம் இக ரக் குறுக்கம்போலாது செய்யுட்கு உபகாரப்பட்டதோர் அசை

1. அது—நேரசை, முதலசையென விதந்து ஓதல்வேண்டா என்றபடி.

2. விட்டிசைத்து மொழிசிதையாது நிற்றலின் மின்னு என்பதுபோல நேர்பசையாகக் கொண்டாலென்னையெனின்? இஉ என்று பிளவுபட்டிசைத்தலின் நேர்பு என்று கொள்ள லாகாதென்றபடி.

3. இயற்றே என்பதில் ஏகாரம் தேற்றம் என்றபடி.

வேறுபாடு தோன்ற நிற்குமென்றவாறாயிற்று. மற்று எண்ணப் படாதென்றது ஈண்டுக் கூறல்வேண்டுமே?

"உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ." (நடுசூ)

என்புழிப் பெறுதுமாலெனின், அது குற்றுகரத்திற்கே கூறிய தென்பது ஆண்டுச் சொல்லுதும்.

உதாரணம்:

[1] "மியாயிக மோமதி யிருஞ்சின் னென்னும்." (தொ. சொல். உளசூ)

எனவும்,

"அருளல்ல தியாதெனிற் கொல்லாமை," (குற. உருச)

எனவும் இவை இயலசை சார்ந்து ஒற்றியற்றுகிக் குற்றிகரம் வந்தவாறு. [2] நாகியாது வரகியாது எனக் குற்றிகரம் உரியசை சார்ந்து ஒற்றியற்றுகி வந்தவாறு. அது நிரையும் நிரைபுஞ் சார்ந்து ஒற்றியற்றுமாறு இல்லை போலும். இவற்றையெல்லாம் 'ஒற்றெழுத்தியற்றே' என்பதனுற் புள்ளியிட்டெழுதுக. இது சொல்லிய காரணம்: குற்றுகரம் அரைமாத்திரைத்தாகியும் ஒற்றியற்றுகாது நேர்பும் நிரைபும் ஆகியவாறுபோல அதற்கு இனமாகிய குற்றிகரமும் அரைமாத்திரைத்தாகி வேறோரசை யாங் கொல்லென்று ஐயுறுமற் காத்தவாறு.

• மற்று ஆய்தத்தினையும் ஒற்றியற்றென்னுமோவெனின், அஃது எழுத்தோத்தினுள்,

"எழுத்தோ ரன்ன" (தொ. எழு. கசக)

என்பதனுற் பெற்றுமென்பது. மற்று,

"முந்தியாய் பெய்த வளி கழலும்." (யா. வி. ப. சஉ)

எனவும்,

"நினக்கியான் சொல்லிய தின்ன தின்று."

எனவும் இவை ஒற்றியற்றுகாது எழுத்தியற்றுயினவென்று காட்டு வாருமுளர். [3] முந்தியாய் என்பது இகரவீறுமாமாகலின் அது

1. மியாயிக—குற்றியலிகரம் நீக்க நேர் நிரை. தியாதெனில்—நேர் நிரை.

2. நாகியாது—நேர், நேர்பு. வரகியாது—நிரை நேர்பு.

3. முந்தியாய் என்பதை முந்தி என்று இகரவீறுகப் பிரிக்கின் குற்றியலிகரமாகாது, நினக்கியான் என்பது இகரவீறுகப் பிரிக்கமுடியாதாயினும் சான்றோர் செய்யுளல்லவென்றதனால் மறுக்கப்பட்டது.

காட்டல் நிரம்பாது; அல்லதூஉம், அவை சான்றோர் செய்யு ளல்லவென மறுக்க.. [1] இனி, ஒற்றும் எழுத்துமென உம்மையோ டெண்ணலுமாகாது; இவ்வோத்தினுள்,

"உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ." (நடுசூ)

என ஒற்றினையும் எழுத்தென்றுணுகலின். (அ)

[நேர்பும் நிரைபுங் கொள்ளுங்கால் வருமொழியைச் சிதைத்து இருவகை யுகரமும் கோடலாகாதெனல்]

நஉக. முற்றிய லுகரமு மொழிசிதைத்துக் கொளாஅ நிற்ற லின்றே யிற்றடி மருங்கினும்.

இதுவும் ஐயம் அறுத்தது; இருவகை யுகரமொடு நேரும் நிரையும் இயையின், அவை நேர்பும் நிரைபுமாமென்றுன், அவற் றுண் முற்றுகரம் ஈறுகி நிற்குஞ் சொல், உலகத்து அரிய வாயினவாதலிற் [2] புணர்ச்சிக்கண் வந்த உகரமே ஈண்டு நேர் பும் நிரைபுமாவனவெனவும் புணர்ச்சிக்கண்ணும் நிலைமொழித் தொழிலாகிய உகரமும், [3] நிலைமொழி யீறுகெட்டு நின்ற உக ரமுமே கொள்ளப்படுவன எனவும், [4] வருமொழித் தொழிலாகிய

1. இனி ஒற்றியற்று என்பதற்கு ஒற்றியற்றுமாம் எழுத் தியற்றுமாம் என்று பொருள்கொண்டு ஒற்றுக நீக்கவும்படும்; எழுத்தாகக் கொண்டு அலகிடவும்படும் என்பாருமுளர். அங் ஙனம் உம்மைத் தொகையாகக் கோடற்கு ஒற்றினையும், 'உயிரி லெழுத்தும்' என்ற சூத்திரத்துள் எழுத்தென்றே கூறலின், ஒற் றும் எழுத்தெனப்பட்டு எழுத்தென்றதனுள் அடங்குமாகலின் அங்ஙனம் உம்மைத் தொகையாகக் கோடல் பொருந்தாதென்ற படி. இவற்குப்பின்னுள்ள நச்சினார்க்கினியரும் ஒற்றும் எழுத் தும் என்று பொருள்கொள்வர்.

2. புணர்ச்சிக்கண் வந்த உகரம்—மின்னு பன்னு உரிஞு பொருநு முதலியன.

3. நிலைமொழி ஈறுகெட்டுநின்ற உகரம்—மேவுஞ்சீர்—மேவு சீர் எனவும், விரவுங்கொடி—விரவுகொடி எனவும் மகரங்கெட்டு நின்றுற்போல்வன. நஉஉ-ம் சூத்திர உரை நோக்குக.

4. வருமொழித் தொழிலாகிய ஒற்று உறுப்பாவன, எற் றது நாணுத்தளை, சேற்றுக்கால் என்பனபோல்வனவற்றில் வரு வன. நாணுத், சேற்றுக் என்றுலும் ஒற்று உறுப்பாக நேர்பு என்றே கொள்ளப்படும். "குற்றியலுகரமு முற்றியலுகரமும்— றுற்றெருடுந் தோன்றி நிற்கவும் பெறுமே" என்பது சூத்திரம். வருமொழி யுகரம் 'நாணுடை அரிவை' என்பனபோல்வனவற் றில் வருவன. அவை நாணு எனப் பிரித்து வாங்கி நேர்பசை யாக்கப்படா என்றபடி.

ஒற்று நிலைமொழியாகி நேர்பு நிரைபிற்கு உறுப்பாவன கண்டு வருமொழி யுகரம் ஈண்டும் அதுபோல அவற்றிற் குறுப்பாங் கொல்லென்று ஐயுற்றீனை ஐயுறற்கிவனவுங் கூறினமையின்.

இ—ள்: முற்றியலுகரம் மொழி நிறைத்துக் கொளாஅ—இருவகையுகரமு மியைந்தவை வருங்கால் வருமொழியைச் சிறைத்துப் பிரித்து அவற்றினின்று வாங்கிக் கொடுக்கப்படா; நிற்றலின்றே [1] ஈற்றடி. மருங்கினும்—அங்ஙனம் வாங்கிக் கொடுக் கப்படாவாயின், நேரசை நிரையசைப்பின்னர் முற்றுகரம் ஈறாகி வருஞ்சொல்லும் உலகத்தியலாயின், முற்றுகரத்தால் நேர்பும் நிரைபும் ஆமாறென்னையென்றார்க்கு அடியிறுதிக்கணல்லது முற் றுகரம் புணர்ச்சிவகையான் [2] இடை நில்லாதனவல்ல கண்டா யென்ப துணர்த்தியவாறு.

இன்று என ஒருமை கூறினமையின், எடுத்தோதிய முற் றுகரமே கொண்டு [3] இலேசினுற் றழீஇய குற்றுகரங் கொள் ளற்க. மற்றிதனை இலேசினுற் கொண்டதென்னையெனின்,—நுந்தையென்னும் ஒரு மொழிக்கணன்றி வாராமையின் அதன் சிறுவரவு நோக்கி உம்மையாற் கொண்டாரென்பது. முற்றிய லுகரம் மொழிசிறைத்துக் கொளாஅ எனவே ஒற்றூர்ந்துவரி னுங் தனித்து வரினும் உடன் நிலைக்குன்றுமென்பது.

"நாணுடை யரிவை" (அகம். கச)

என்றவழி, நாண் என்னும் நேரசைப்பின்னர் [4] 'உடைய நிலை' எனத் தனித்து வந்த உகரம் நேர்பசையாகாது.

---

1. ஈற்றடி—அடியிறுதி என மாற்றப்பட்டது. அடியிறுதிக் கண் நிற்றலின்று எனவே, இடைநிற்கும் என்றபடி. அடியிறு திக்கண் நிற்றலில்லை என்றது, அக்காலத்து வழக்குப்போலும். இக்காலத்துச் செய்யுள்களுள் கோடு—வாரு, புல்லு, கதவு, என வழங்குகின்றன. இவ்வழக்கினைப் பேராசிரியர் மருஉ வழக் கெனப் பின் இச்சூத்திர உரையுள் எடுத்துக்காட்டி மறுப்பர்.

2. இடை நில்லாதனவல்ல என்றவாறு எனவும் பாடம்.

3. இலேசு—மிகை. ஈண்டு மிகை என்றது முற்றியலுகர மும் என்பதிலுள்ள உம்மையை. குற்றியலுகரத்துள் நுந்தை ஒன்றே முதற்கண் வரும் குற்றுகரமாய் நின்று வருதலின் அதன் சிறுபான்மை நோக்கி இலேசினுற் கொண்டானென்றபடி. எனவே நுந்தை என்பதும் வருமொழியாய் வருங்கால் வருமொழி யைச் சிறைத்து வாங்கி நிலைமொழியோடு சேர்த்து நேர்பு நிரைபு கொள்ளப்படாது என்றபடி.

1 வார்முரசு என்றவழி, வாரென்னும் நேரசைப்பின்னர் முரசென மகரம் ஊர்ந்துவந்த உகரமும் நேர்பசையாகாது. வற்றுறு செய்தி எனவும், பான்முரம்பு எனவும் வந்தவழி வற்றெனவும் பர லெனவும் நின்ற நேரசை நிரையசைப்பின்னர் உறுசெய்தியென வும் முரம்பெனவும் வந்த உகரங்களும் நேர்பசை நிரைபசை யாகா. 2 சின்னுந்தை இராநுந்தை எனக் குற்றுகரம் வந்தவழி யும் நேர்பசை நிரைபசையாகாவென்றவாறு.

3 "நாணுத் தகையாக வைஇ." (அகம். உசு)

என்றவழி, ணகாரவீறு புணர்ச்சிவகையாற் பெற்ற உகரம் நிலை மொழித் தொழிலாகலான் அது காரு என்னுங் குற்றுகரம் போல் ஒற்றுமைப்பட்டு நேர்பசையாயிற்று.

4 "விழவுத் தகைக்கொண்ட"

என்றக்காலும் அவ்வாறே ஆகாரவீறும் உகரம்பெற்று நிரை பசையாயிற்று.

"மின்னு மிளிர்ந்தன்ன கவங்குழை." (அகம். கடுஅ)

எனவும்,

"முழவு முகம் புரை" (அகம். உ0சு. நற். உ0)

எனவும் வருவனவும் அவை. காணுத்தகை என்றாற்போல வரும் முற்றுப்பேறு முன்னர்ச் 5 சொல்லுதும். நீர்க்கு நிழற்கு என்ற வருபும் நிலைமொழித் தொழிலாதலான் அவையும் நேர்பசை நிரைபசையாமென்பது இதனாற் பெற்றும். நிற்றலின்று என

---

1. வார்முரசு பரன்முரம்பு என்பன மூவசைச் சீராகக் கொள்ளப்படுமன்றி, 'வார்மு' 'பரன்மு' எனப் பிரித்து நேர்பு நிரைபாகக் கொள்ளப்படுதலின்று என்றபடி.

2. சின்னுந்தை, இராநுந்தை என்பன மூவசையாயன்றி, சின்னுந்—நேர்பு, இராநுந்—நிரைபு என்று கொள்ளப்படா.

3. நாண்+தகை என்பது உகரம்பெற்று நாணுத்தகை எனப் புணர்ந்தது. நிலைமொழித் தொழிலென்றது—நிலைமொழியாகிய நாண் என்னும் மொழியின் ணகரவீறு தகரத்தோடு மயங்க நாட்டாமை பற்றியே உகரம் வந்ததாகலின் வருமொழிபற்றி வந்ததன்றும். அதனால், நாணு என ஒரு சொல்லாய் நேர்பு என்றும் என்றபடி.

4. விழா என்னும் ஆகாரவீறு தகை என்பது வருங்கால் ஆகாரம் அகரமாய் உகரம்பெற்று விழவுத்தகை எனப் புணர்ந்த தாகலின் விழவு என்பது நிரைபு என்றும் என்றபடி.

5. சொல்லுதும் என்பது சொல்லும் என்றிருத்தல்வேண்டும்.

ஒருமை கூறி முற்றுகரமே கொண்டமையிற் குற்றுகரமாயின் இடையும் இறுதியும் நின்று கேர்பும் நிரைபுமாம் என்றவாறும். அவை: ஆட்டுக்தாள் சேற்றுக்கால் எனவும்,

"எய்போற் டெந்தானென் னேறு." (பு. வெ. வாகை. உஉ)

எனவும் இடையும் இறுதியும் குற்றுகரம் கேர்பசையாயிற்று. களிற்றுத்தாள் எனவும்,

"வேலான் முகத்த களிறு" (குறள் ஞ்oo)

எனவும் இடையும் இறுதியும் குற்றுகரம் நிரைபசையாயினவாறு.

மருங்கினும் என்ற உம்மையான் அடியிற்றேயன்றி மொழி யிற்றும் அவற்று இறுதி கெடநின்ற மொழிக்கண் இடைநின்ற உகரம் இறுதியாகி உரியசையாகுவனவும் உளவென்பது கொள்க. அவை [1] மேவிசீர் எனவும் கோலுகடல் எனவும் உலவுகடல் எனவும் விரவுகொடி எனவும்,

"கூனளவு நலனளவு"

எனவும்,

"சுரும்புலவு நறுந்தொடையலன்"

எனவும் வரும்.

இவை ஈற்று நின்ற ககாங்கெட்டு உகரவீருயின. இவற் றுள் நிரைபசை யுகரங்களை ஆகாரவீற்றுப் புணர்ச்சி யுகர மென்னுமோவெனின்,—என்னுமன்றே; வருமொழி யொற்று மிகாமையினென்பது. உலவுக்கடல் விரவுத்தளை எனின் [2] அவ் வாறே யமையுமென்பது. மருங்கு என்றதனான் ஈற்றடிக்கண் ணும் இறுதிக்கண்ணே முற்றுகரம் விலக்குண்டதெனக் கொள்க. என்றார்க்கு,

"புனைமலர்ந் தாரகலம் புல்லு" (யா. வி. ப. ருஅ)

எனவும்,

"கண்ணுரக் காணக் கதவு." (முத்தொள். ஙஉ)

எனவும் வருமாலெனின், அவை [3] மருஉ வழக்கென்க. (கூ)

1. மேனஞ்சீர் என்பதில் இறுதிகெட்டு மேவிசீரென நின்ற வழி மேவு என்பது கேர்புஆம். பிறவுமன்ன.

2. அவ்வாறு என்றது ஆகாரஈருகக் கொள்ளப்படு மென்றபடி.

3. புல்லு கதவு என்பனவற்றிலுள்ள முற்றுகரம் பிற் காலத்து மருவி வந்தது என்பது கருத்துப்போலும்.

[குற்றியலுகர முற்றியலுகரங்கள் தம்முன் தோன்றிய ஒற்றோடு நிற்பினும் கேர்பு நிரைபுமேயாமென்]

கூஉ. குற்றிய லுகரமு முற்றிய லுகரமு
மொற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

இஃது, எய்தாதது எய்துவித்தது; இயலசைகளை,

"ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி." (நகரு)

என்றான், உரியசைக்கு அது கூறுதான் ஈண்டுக் கூறுகின் றமையின்.

இ—ள்: மேற் கூறிவருகின்ற குற்றுகர முற்றுகரங்கள் ஒற்றொடு நிற்கவும்பெறும் அவ்வொற்றுத் தோன்றிய ஒற்று யின் என்றவாறு.

எனலை, நிலைமொழி ஒற்றுடையவாயின் அவை கேர்பும் நிரைபுமாகா; வருமொழி வல்லெழுத்து மிகினேயாமென்ற வாறு. அஃதெண்ணே பெறுமாறெனின்,

"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி." (தொ. எழு. ச0கூ)

[1] என்றதனான், [2] முன்னர் நிலைமொழித் தொழிலாகிய முற்றுக ரம் வருமெனக் கூறிய அதிகாரத்தானே ஒற்றுத் தோன்றி னென்றனுலும் பெறுதும்; நிலைமொழி யுகரம்பெற்று வரு மொழி ஒற்றியலுது கண்டானுலாமென்பது.

உதாரணம்,

"சேற்றுக்கா ளிலஞ் செருவென்ற வேந்தன்வேல்." (யா. வி. ப. உருகூ)

எனவும்,

"நாணுத் நகீயாக லைஇ." (அகம். உகூ)

எனவும்,

"நெருப்புச் னெந்தனித்த நினந்தயங்கு கொழுங்குறை." (புறம். கஉடு)

எனவும்,

1. என்றதனான் மென்றிருத்தல்வேண்டும்.

2. முன்னர் என்றது கூஉக-ம் சூத்திரத்தை. அதனுள் ஈற் றுகரம்பற்றி ஒற்றுத் தோன்றுமென்பது உய்த்துணரப்பட்டது. அதனை உணர்த்தற்கே பின் வருக்கியமெழுந்தது.

"களவுக்கொ ளீகண்டது." (கலி. கூ0)

என இவை இருவகையுகரமும் ஒற்றடுத்து உரியசையாயின வாறு. உம்மை, எதிர்மறையாகலான் ஒற்றின்றி வருதலே பெரும்பான்மை. இங்ஙனம் வருமொழியொற்று மிகின் அவை கொண்டு கேர்பும் நிரைபுமாமெனவே உண்ணும் எனவும் நடக்கும் எனவும் கிலிமொழி ஒற்று நின்றவழித் தேமாவும் புளிமாவுமாவதல்லது கேர்பசையும் நிரைபசையுமாகாதென்பதாம். விக்குள் கடவுள் என்பனவும் அவை. (கo)

[அசையுஞ் சீரையும் ஓசையொடு சேர்த்தி
வருத்துணர்த்துக எனல்]

கூஉசு. அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வருத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே.

இது மேற் கூறப்பட்டனவற்றுக்கும் இனி வருஞ் சூத்திரம் மெல்லாம் புறனடை.

இ—ள்: அசைகளையும் சீர்களையும் ஓசையொடு சேர்த்தி வேறுபடுத்து உணர்த்துதலும் அச்செய்யுளிலக்கணத் துறை போயினரது தெறி என்றவாறு.

மேல் (கூகக) மாத்திரையென்பதோர் உறுப்புரைத்தான்; அதனான் அசை சீர்களது ஓசையை அளந்து கூறுபடுத்து இன்னோசையும் இன்னோசையு முணர்த்துக. [1] எழுத்தியல் வகைக்கும் இஃதொக்கும்.

"குருத்துக் குறைத்துக் கொணர்ந்து தமது
கருப்புச் செறுப்புப் பரப்பு." (யா. வி. பா. கூக—கஅக)

எனின், வெண்பாவிற்றடி. இன்னோசைத்தன்றும்;

"கருப்புக் கொழுந்து கவர்ந்து"

என முடிக்கின் இன்னோசைத்தாய் [2] வெறுத்திசையின்றாமென்பது.

1. எழுத்தியல்வகைக்கும் இஃதொக்கும் என்றது, மாத்திரையைக் கொண்டு எழுத்துக்களையும் இன்னோசைத்தாக்களுக்கும் இஃதொக்கும் என்றபடி.

2. வெறுத்திசை—வெறுக்கப்படும் இன்ன ஓசை. 'ஒழுகிசையென்பது, வெறுத்திசையின்மை' என்னுந் தண்டியலங்காரச் சூத்திரத்துப் பழைய உரை நோக்குக. இவ்வுரையாசிரியரே இன்னோசையும் இன்ன ஓசையுமெனக் கூறுதலானும் வெறுத்திசை இன்னோசை என்பதறியப்படும்.

"நிலமிசை நீடுவாழ் வார்." (குறள். கூ)

இதனுள், வாழ்வார் என்னும் மொழியை வகுத்து வாரென நேரசைச் சீராக்கி வகுப்பவே அசையினை இசையொடு சேர்த்திற்றும். இனி [1] நீடுகொடி. என்பதனை மாவருவாய் என்று அசையுஞ் சீரும் இசையிற் சேர்த்துதலென்பாருமுளர். இவற்றைப் பிறதூலார் [2] வகையுளியென்ப.

இச்சூத்திரத்துள், வகுத்தணருணர்த்தல் என்றமையின் இனி, வெண்பாவினுள் வெண்சீரொன்றி வக்கவழியும் வேற்றுத்தளை விரவும் இடனுடைய. அவையும் இசையொடு சேர்த்தி வேறுபாடுணர்த்துக.

"மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்"

என்பது பன்னிரண்டெழுத்தடி.

"மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய்"

என்பது பதின்மூன்றெழுத்தடி.

"மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய் மாவருவாய்"

என்பது பதினான்கெழுத்தடி, இவை மூன்றும்.

"அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய." (கூஎo)

என வெண்பாவிற்கு ஓதிய அளவடியேயாயினும் [3] இக்காட்டிய அலகிடுகையாற் கலித்தளைதட்டுத் துள்ளலோசையும் பிறக்கும்.

1. நீடுகொடி—நேர்பு நிரை. இதனைப் பிறர் வகையுளி செய்து மாவருவாய் ஆக்குவர்.

2. வகையுளியாவது, நீடுகொடியை மாவருவாய் எனவும், வாழ்வார் என்பதை வாழ் வார் எனவும் பிரித்து வகுத்தல். ஓரசையாய் நிற்கவேண்டிய எழுத்தை வேறுகப் பிரித்தும் ஒரு சொல்லாய் நிற்கவேண்டிய அசைகளை வேறுகப் பிரித்தும் சீர் செய்தலின் வகையுளியாயிற்று. நீடுகொடி என்பதனை நேர்பு நிரை என்று கொள்ளவேண்டும். அதனை வகையுளி செய்வோர் நீ எனவும் டுகொ எனவும் டி எனவும் பிரித்து மாவருவாய் ஆக்குவர் என்றபடி. இது எழுத்து வகையுளி. நீடுவாழ்வார் என்பதனை வாழ்வார் என்னும் ஒரு சொல்லில் வாழ் என்பதனைப் பிரித்து நீடு என்பதனோடு சேர்த்து நீடுவாழ் எனவும் வார் என்பதை வேறு அசைச்சீராகவும் கோடல் வகையுளியாமென்க. இது சொல் வகையுளி.

3. இக்காட்டிய அலகிடுகை என்றது, இங்கே காட்டிய அலகிடுகையை. அஃதாவது, பன்னிரண்டு எழுத்தடி முதலியவற்றிற்கு நான்கு சீர்க்கும் வெண்சீரைக் கொடுத்து அலகிட்டமையை. இவைகளை நீட்டியுச்சரிக்கக் கலித்தளைதட்டுத் துள்ளலோசை

"மாசேர்வாய் மாசேர்வாய் பாதிரி பாதிரி"

எனவும்,

"மாசேர்வாய் பாதிரி பாதிரி காருருமு."

எனவும்,

"மாசேர்வாய் பாதிரி காருருமு காருருமு."

எனவும் முன்காட்டிய மூன்றினையுமே இவ்வாறு அலகிட்டு ஓசை பூட்டக் கலித்தளை தட்டாது வெண்பாவடியேயாம். இவ்விரு கூறும் ஓசையொடு சேர்த்துணர்த்துக. பதினெண்கெழுத்தின் இறந்த பதினைந்து நிலனும், பதினாறு நிலனும் பதினேழு நிலனு மென இம்மூன்றும் வெண்சீர்வந் தொன்றியக்காலும் இயற்சீர் வந் தொன்றுக்காலும் ஒருஞான்றும் செப்பலோசை பிறவா; அவையும் ஓசையொடு சேர்த்தி வருந்துணர்த்துக; அவை வருமாறு :—

"புலிவருவாய் மாசேர்வாய் மாசேர்வாய் மாவருவாய்."

எனவும்,*

"மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்."

எனவும்,

பிறக்கும் என்பது பேராசிரியர் கருத்து. அதனை இச்சூத்திர உரை இறுதியில் 'மற்று அதன்கண் துள்ளலோசை பிறந்ததா லெனின், அவற்றுக்கண் ஒரு மாத்திரை கொடுப்பத் துள்ள லோசை பிறந்ததாயினும்.....அங்ஙனம் நீட்டிச் சொல்லாது அகலலோசைப்படச் சொல்லுகவென்பது இதனாற் பெற்றுமாக லின்' என்பதனானறிக. இனி இயற்சீர் வெண்டளையன்றி வெண் சீர் வெண்டளைகலிக்கண் வரின் அது அலகிடு முறையாற் கலித் தளையாகக் கொள்ளப்படும் என்பது இதன்கண் பின்வரு முரை யாற் பேராசிரியர் காட்டலானும் நச்சினார்க்கினியர் சூத்திர உரையுள் "அளவுஞ் சிந்துமல்லாத ஏறிய நிலமெல்லாம் வெண்பாவுங் கலிப்பாவுந் தம்மில் தளைவகை யொக்குமென்றாளகலின் என் பது" என வருதலானும் நச்சினார்க்கினியர் சூத்திர உரையானும் அறிக. இங்ஙனங் கொள்வது சீர்வகையடிக்கன்றிக் கட்டளை யடிக்கன்று என்பது பேராசிரியர் கருத்து. கட்டளையடிக்கா யின் 'வெண்சீர் வெண்டளை நிரையசை யியற்றே' என்னுஞ் சூத்திர விதிப்படி கொள்ளப்படுமென்பது அவர் கருத்து. அலகிடு முறை என்றது பன்னிரண்டு எழுத்தடிக்கு மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய் என அலகிட அது கலித்தளையாதலும் அப்பன்னிரண்டெழுத்தடிக்கே மாசேர்வாய் மாசேர்வாய் பாதிரி பாதிரி என அலகிட வெண்பாவடியாதலும் ஆகிய முறையை. (அலகிடல்—எழுத்தெண்ணி அசைசீர்அடிகளை வகுத்தல்.) இத னைப் பின் பேராசிரியர் கூறுமாற்றானுமறிக. இன்னும் இதனை நச்சினார்க்கினியர் சூத்திர உரை நோக்கியும் அறிந்துகொள்க.

"புலிவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்."

எனவும் இவை வெண்சீரொன்றியுங் கலித்தளை தட்டின. இனி, இவற்றை இயற்சீர் கொடுத்துச் சொல்லுங்காலுஞ் செப்ப லோசை சிதையும்; என்னை?

[1]"காருருமு காருருமு காருருமு [2]பாதிரி."

எனவும்,

"காருருமு காருருமு காருருமு காருருமு."

எனவும்,

[3]"நரையுருமு காருருமு காருருமு காருருமு."

எனவும் இவை இயற்சீரான் வந்தும் வேறுசீர் சந்தப்பட்டுச் செப்பலோசை சிதைய நிற்குமென்பது, அசையுஞ் சீரும் இசை யொடு சேர்த்தி வருத்துணர்ந்துக. இன்னோரன்ன பிறவும் பெரிதும் எஃகுசெவியும், நுண்ணுணர்வும் உடையார்க்கன்றி உணரலாகா.

"ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் மாசேர்வாய்."

என்றக்கால், ஞாயிறு புலிவருவாய் என இயற்சீரின் பின்னர் நிரையசை வந்து,

"ரிளையை மருள்கி னெரசை யொப்பி
ஞெகிழத் தகீயென் றறிதல் வேண்டும்." (நூசூ அ)

என்பதனான், ஆசிரியத்தளையாயினும் அஃது ஆண்டுக் கலித் தளைப்பாற்படுமென்பது,

"அசையுஞ் சிறு மிசையொடு சேர்த்தி."

என்பதனான் உணரப்படும். இனி,

[4]"ஞாயிறு புலிசேர்வாய் புலிசேர்வாய் மாசேர்வாய்."

என்புழி, 'புலிசேர்வாய் [5]மாசேர்வாய்' என நேரொன்றிய தேனும் அது கலித்தளையென்பது,

---

1. காருருமு—நேர் நிரைபு.
2. பாதிரி—நேர் நிரை.
3. நரையுருமு—நிரை நிரைபு. இவை இயற்சீர்கள்.
4. ஞாயிறு என்பதில் குற்றியலுகரம் குற்றெழுத்தாகக் கொள்ளப்பட்டு நேர் நிரையாய் நிற்றலின் நிரையீற்றின் புலி என்னும் நிரைவந்த ஆசிரியத்தளையாகும்.
5. நேரொன்றியது கலித்தளையாதற்கு விதி "வெண்சீர் வெண்டளை நிரையசை யியற்றே" (உசு) என்பதனாற் கொள்ளப்படும்.

"அசையுஞ் சிரு மிசையொடு சேர்த்தி."

என்பதனுன் உணரப்படும். இன்னோரன்ன பலவுமுள; அவை யெல்லாம் வரையறுத்து இலக்கணங் கூறப்படா, அவற்றை அவ்வாறு வேறுபடுத்துணர்த்துதல் அவ்வுத்துறை போயினர் கடனென அடங்கக் கூறல்வேண்டி,

"அசையுஞ் சிரு மிசையொடு சேர்த்தி
வருத்தனு குணர்த்தலும் வல்லோ ராறே."

என்முனென்பது.

உம்மையான் அடியினை வருத்துணர்த்துதலுங் கொள்க; அது,

"துதல நிமையா நரட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே." (அகம். கடவுள்)

என்புழி, இகலட்டு என்னுஞ் [1] சீர் எழுத்து முதலாக வீண் டியவடியிற், குறித்த பொருளை முடிய [2] காட்டும் யாப்பென்னும் உறுப்பினுள் அடங்காது இகலட்டுக் கையதென மேலடியோடு பொருள் கூடியும் இசையொடு சேர்த்தி வருத்துணர்த்தியதே யாம். இன்னும் இவ்விலேசானே [3] எழுத்தலோசையும் அசை யொடுஞ் சீரொடுஞ் சேர்த்தி வருத்துணர்த்தலுங் கொள்க; அவை,

[4] "கூஉ தென்னுந் தண்டோட்டுப் பெண்ணே."

என்றுற்றபோல்வன.

இனி, [5] அகவலோசை மூன்றெனவும், செப்பலோசை மூன்றெனவும், அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி என

1. சீர் அடங்காது கூடியும் வருத்துணர்த்தியது என இயைக்க.

2. காட்டியும் என்னும் முன் பாடம் பொருந்தாது. என்னை? யாப்பென்னும் உறுப்பாவது குறித்த பொருளை காட்டு வதே என அதனை விளக்கவந்ததாதலின். (எ-ம் சூத்திரம் நோக்குக) ஆதலால் முடிய காட்டும் யாப்பு என அதற்கடை யாய் வந்ததென்க. பவானந்தம்பிள்ளை பதிப்பு நோக்குக.

3. எழுத்தலோசை—குறிப்பிசை.

4. கூஉ என்பது—குறிப்பிசை. இஃது ஒலிக்குறிப்பு.

5. அகவலோசை மூன்றுவன; ஏந்திசையகவல், தூங்கிசை யகவல், ஒழுகிசையகவல் என்பன. ஏந்திசையகவல், நேரும் நேருமொன்றுவது. தூங்கிசையகவல், நிரையும் நிரையுமொன்று வது. ஒழுகிசையகவல் நேரும் நிரையுங் கலந்து வருவது. செப் பலும் ஏந்திசை தூங்கிசை ஒழுகிசை என மூன்றுவகைப்படும்.

[1] வருத்துணர்த்துவாருமுளர். அவை இயலசை மயங்கிய இயற் சீரும், உரியசை மயங்கிய இயற்சீரும், வெண்சீரும்பற்றி ஓசை வேறுபட்டுத் [2] தோன்றுமென்க. அங்ஙனமாயினும், அவை மும்மூன்றுக்கி வரையறுக்கப்படாமையின் ஈண்டு அவை கூறு னென்பது.

இனி ஒரு சாரார், அசையுஞ் சிரு மிசையொடு சேர்த்தி வருத்துணர்த்தல் என்பதனை இவ்வாறு முரைப்ப. என்னை? ஒரு செய்யுளுட் கிடந்த அசை சீர்களை ஈண்டுக்காட்டிய தேமா புளிமாவென்பன முதலாகிய [3] உதாரணங்களோடு சேர்த்தி அவ் விரண்டனையும் ஒக்கும்வகையான் ஓசையூட்டிக் காட்டுப; அற் றன்று, இவ்வுதாரணஞ் சீரென்று வலித்திருந்தார்க்காம் அது செய்துகாட்டல்வேண்டுவது. [4] எல்லாச் சொல்லிற்கும் எற்றவாற் றான் அசையுஞ் சீரும் இசையொடு எனப் பொதுவகையாற் கூறினமையின் அது காட்டல் நிரம்பாதென்பது.

வெண்சீர் வெண்டளையான் வருவதும் இயற்சீர் வெண்டளையான் வருவதும் இரண்டுங் கலந்து வருதலுமென முறையே கூறுவர். இங்ஙனமன்றி வேறுவேறுங் கூறுப. (யாப்பருங்கல விருத்தி நோக்குக.)

1. வருத்துணர்த்துவாரென்றது, பிற்காலத்துச் சங்கயாப்பு உடையாரையும் யாப்பருங்கலமுடையாரையும். அதற்குமுன்னு முளர்போலும்.

2. தோன்றுமென்க என்பது பிரயோஜனமாதலின் என்றிருந் தல்வேண்டும். அங்ஙனமாயினும் அவை என்பன வேண்டிய தில்லை. சீர்பற்றி ஓசை வேறுபடலின் மும்மூன்றுக வரையறுக் கப்படா என்பர் நச்சினார்க்கினியரும்.

3. உதாரணங்களோடு சேர்த்தி ஒக்கும் வகையா லோசை யூட்டல் என்பதை ஒரு செய்யுளில் வைத்து விளக்குங்கால் 'எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழும்' என்னுமடியுள் வரும் எக்கர்—தேமா, செருந்தியொடு—கருவினம், கமழும்—புளிமா என்று சேர்த்திக்காட்டி அவைபோல் ஓசையூட்டச் செய்தல். வலித்தல்—நிச்சயித்தல். தேமா புளிமா முதலிய உதாரணங் களைச் சீராகக்கொண்டு செய்யுட்செறற்களோடு சேர்த்தி யாம் மேற்கூறியவாறு ஓசையூட்டிக் காட்டுதல் யாப்பருங்கல விருத்தியுட் சீரோத்துட் காண்க.

4. ஆசிரியர் தேமா புளிமா முதலிய சீர்களென்று விதந்து கூறாது செய்யுளில் வரும் எல்லாச் சொல்லுக்கும் பொதுவா கவே அசையுஞ் சீருமென்று கூறினமையானே அவைகளையே சீராகக் கொண்டு அவற்றைச் செய்யுளில் வரும் சொற்களோடு சேர்த்தி ஓசையூட்டிக் காட்டல் பொருந்தாது. அங்ஙனங் காட்டு வது அவற்றையே சீர் என்று குறித்தார்க்குப் பொருந்தும் என்றபடி.

இனி,

"கடியாறு கடியாறு கடியாறு கடியாறு."

என்பதனைத் துள்ளலாகச் சொல்லிக் கலியடியெனவும், கடியாறு என்பது நேர்பிறுமென்பதாயினும், அது வெண்சீரே ஈற்றசை நிரையசையியற்றாய் நின்றதெனச் சொல்லி அதற்கு இலக்கணம்,

"வெண்சீர் ஈற்றசை நிரையசை யியற்றே." (நசக)

எனப் பொருளுரைத்து, மற்றதனைக் கலித்தளையெனவுங் காட்டுப; அற்றன்று, [1] கடியாறு என்னுஞ் சீரின் உறழ்ந்த ஆகிய வடியும் அதுவே வாய்பாடாக [2] வருமாகலின். மற்றதன்கண் துள்ளலோசை பிறந்ததாலெனின், — அஃதற்றுக்கண் [3] ஓரோ மாத்திரை கொடுப்பத் துள்ளலோசை பிறக்குதாயினும் அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்திச் சொல்லுக எனவே அங்ஙனம் மாத்திரை நீட்டிச் சொல்லாது அகவலோசைபடச் சொல்லுக வென்பது இதனாற் பெற்றுமாகலின் அது பொருளன்றென்பது. (நக)

[சீராமாறும் அதன் வகையும்]

நஉச. சரசை கொண்டு மூவசை புணர்ந்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

இது, முறையானே அசையுணர்த்திச் சீராமாறுணர்த்து வான் தொடங்கி அவை இத்துணைப் பகுதியவென்பதூஉம் அவற்றுப் பொதுவிலக்கணமும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இரண்டசையானும் மூன்றசையானும் ஓரோர் சொற்கள் சீரியைந்திறுவன சீரென்று சொல்லப்படும் என்ற வாறு.

---

1. கடியாறு என்பதை நிரைநேர்பு என்று கொள்ளாது றுகரத்தை நேராகக் கொண்டால் வெண்சீராக்கலாம். ஒருமாத்திரை யகர ஆகாரத்தை நீட்டுவதாற்றான் அங்ஙனங் கொள்கின்றனர்போலும்.

2. வருமாகலின் என்பது—ஏது.

3. ஒரு மாத்திரை கொடுத்தல் ஆகாரத்தை ஒரு மாத்திரை நீட்டிச் சொல்லல்.

சீரியைந்திறுதல் என்பது, வழக்கியல் செய்யுளாமாற்றால் [1] யாப்பினும் பொருள்பெறப் [2] பகுத்துப் பதமாகிய வற்றுச் சேறல்.

உதாரணம்: சாத்தன் கொற்றன் எனவும், உண்டான் தின்றான் எனவும் இரண்டசைகொண்டு சீராயின. கானப்பேர், சாய்க்கானம், கூதாளி எனவும். உண்ணுதன தின்னுதன எனவும் இவை மூவசை புணர்ந்து சீராயின. இவை செய்யுளுள் வருமாறு:—

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு." (முருகு. க-ங)

என ஈரசைச்சீர் வந்தன.

"யாஅடத் தானுணர்ந்த யானுனரா விட்டபின்
நீஅட யாஅனார்ந்தத் தானுணர்ந்தான்."
(முத்தொள். கoச)

எனவும்,

"வசையில்புகழ் வயங்கு வெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்." (பட்டின. க-உ)

எனவும் இவை மூவசைச்சீர் வந்தன; பிறவுமன்ன.

மற்றுச் சீரென்றதென்னையெனின், — [3] பாணிபோன்று [4] இலயம்பட நிற்றலான் அது [5] சீரெனத் தொழிற்பெயராம்; என்னே?

"சொற்சீர்த் திறுதல்." (சஉடு)

என்புழித் [6] தொழிற்படுத்தோதினமையின்.

---

1. யாப்பினும்—யாத்தாலும்.

2. பகுத்துப்பதமாகிய அற்றுச் சேறல்—பகுக்கப்பட்டுப் பதமாகும்படி அற்று அற்றுச் சேறல். பதமாகிய—பதமாகும்படி. அறுதல்—இறுதலென்றிருப்பினுமமையும். அது பின் இடையிடையிற்று வரல்வேண்டுமென்பதனானு மறியப்படும். அற்றுச் சேறலுக்கு எழுவாய்ச் சொற்கள். 'பதமாக்கியவற்றுச் சேறல்' என்று மிருந்திருக்கலாம்.

3. பாணி—தாளம்.

4. இலயம்—தாளவறுதி.

5. சீர்—சீர்த்தல்.

6. தொழிற்படுத்தல்—சீர்த்து என்று தொழிற்படுத்தியது.

இனி, இயைபுல் என்பது அசைவகை ஒன்றுறன்றினெடு தொடர்ந்தவழியல்லாற் சீர்க்கு [1] அலகு பெறலாகாதென்றவாறு; எனவே, அவ்வாறு இலயம்பட நின்றனவாயினும் புணர்ச்சியெய்துமென்பதாம். மற்று, இற்றது என்றதென்னை? சீரென்பது தொழிற்பெயராதலால் [2] அது சீரியைந்து எனவே பெறுதுமெனின்,—அங்ஙனங் கொள்ளிற் சீரியைந்த தொடரெல்லாங் கூடி ஒரு சீராமன் செல்லுமாகலின் இடையிடை இற்றுவரல் வேண்டுமென்றற்கு அங்ஙனங் கூறினனென்பது; [3] இதனானே ஓரோவழிப் புணர்ச்சி விகாரம் எய்தாமையுங் கூறினனும்.

"வண்டுபடத் தகைந்த கண்ணி." (அகம். க)

என்புழி, வல்லெழுத்து மிக்க புணர்ச்சிவகையானே சீரியைந்தன.

"பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து." (யா. வி. ப. ஈஅ0)

என்றவழி, ஒன்றோடொன்று தொடர்ந்தேனும் இற்றது ஈன்பதனான் இறுதிபட நின்றமையின்,

[4] "எல்லா விறுதியும் முகர நிறையும்." (தொ. எழு. சஅ0)

என்றதனாற் குற்றுகர முற்றுகரமாகாது காலெழுத்தடியாயிற்று. இதனை [5] எழுத்தடியென்றலே வலியுடைத்து; வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரக்கால் காலெழுத்தடி

---

1. அலகு பெறல்—ஈரசை மூவசை என்று அலகு பெறல். அலகு—எண்.

2. அது என்றது—இறுதலை.

3. இதனானே—இறுதலென்றதனானே. ஓரோவழிப் புணர்ச்சி விகாரமெய்தாமை என்றது, பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து என்ற உதாரணத்தில் பேர்ந்து என்பதன்கணுள்ள உகரம், எல்லாவிறுதியு முகர நிறையும் என்ற புணர்ச்சி விதியைப் பெருமையை. பெறுமாயின் முற்றுகரமாகக் கொள்ளப்பட்டு, வருஞ் சீராகிய சென்று என்ற சீரோடு சேர்ந்து பேர்ந்து சென்று என நின்று நேர் நிரைநேர் என மூச்சீராகவும் கொள்ளப்படும். இற்று (பிரிந்து) நிற்றலினாலே அவ்விதி பெறுமல் குற்றுகரமாகவே கொள்ளப்பட்டு காலெழுத்தடியாயிற்று என்றபடி. சார்ந்து என்பதற்கும் இவ்விதி ஒக்கும்.

4. எல்லாவிறுதியு முகர நிறையும் எழுத்ததிகாரம் சஅ0-ம் சூத்திரம். (நிறையும் என்றதனால் குற்றுகரம் முற்றுகரமாக வைக்கப்படும் என்பது கருத்து. இது ஒரு வழுவமைதி என்பர் பேராசிரியர். (செய். 316-ம் சூத்.)

5. எழுத்தடி—காலெழுத்தடி என்றிருப்பது நலம். ஓரெழுத்துச்சீர் நான்காய அடி.

[1] வேறுண்மையின். ஈரசைகொண்டும் எனவும், மூவசைபுணர்ந்தும் எனவும் கூறினமையான் ஒருசீர் பலசொல் தொடர்ந்து வரினும் அவை ஒன்றுபட நிற்றல்வேண்டு மென்றவாறும். எனவே, உலகத்துச் சொல்லெல்லாம் ஈரசையானும் மூவசையானுமன்றி வாராவென்பது பெற்றும். இதனானே ஒரு சொல்லைப் பகுத்துச் சீர்க்கு வேண்டுமாற்றான் வேறு சீராக்கியவழியும், அச்சீர்வகையாலே வேறு சொல்லிலக்கணம் பெறுமென்பதுங் கொள்க; அது,

"மம்மர் நெஞ்சினேன் [2] தொழுதுதின் றதுவே." (அகம். நுசு)

என்புழி, நின்றது என்னுஞ் சீர் குற்றுகரவீற்றுச் சொல்லன்றே, அதனைப் பிரித்து அதுவே என வேறு சீராக்கவே அது மூற்றுகரமாகி வேறுபடுதல் கண்கூடாக் கண்டுகொள்க; என்னுர்க்கு 'எனப்படும்' என்றதென்னையெனின்,—[3] ஓரசையே சிறிலை பெறுமென்றுமாயினும், அவை சீரென முன்னைதப் படாவென்றற்கென்பது. மற்று [4] காலசையானும் ஐந்தசையானும் உண்ணுநின்றன அலங்கரியா நின்றனெனச் சொல் வருவன

---

1. உண்மையின் வலியுடைத்து என இயைக்க. வல்லொற்றுக் குற்றுகரத்தால் காலெழுத்தடி வேறுண்மையினென்றது 'போட்டுப் போட்டுப் போட்டுப் போட்டு' என வன்றொடர்க் குற்றுகரத்தான் வரின் டகரவுகரம் அடுத்த சீரோடு முற்றுகரமாக நின்று சேரமுடியாது வல்லொற்றுற் பிளவுபட்டுக் குற்றுகரமாகவே நிற்றல்பற்றி. எனவே 'பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து' என்பது அவ்வாறு பிளவுபட்டிசைத்துக் குற்றுகரவோசையை வன்றொடர்போலத் தாராதாயினும் வன்றொடர்க் குற்றுகரம் எப்படி நாலெழுத்தடியாகக் கொள்ளப்படுகின்றதோ அதுபோல இதுவும் இற்றுவருதலாற் கொள்ளப்படும் என்பது கருத்து.

2. தொழுதுதின்றதுவே என்பது தொழுதுதின் றதுவே எனப் பிளவுபட்டு வேறு சீராயவழி முற்றுகரமாகிப் புணர்ச்சியும் பெற்றது என்றபடி. நின்றதே என்பது குற்றுகரப் புணர்ச்சி. அதுவே எனப் பிரிந்து உடம்படு மெய் பெற்றது முற்றுகரப் புணர்ச்சி. இவ்விதி சிறுபான்மை.

3. ஓரசை—நேர்பு நிரைபு. இவை சீராயினும் சீரென் றோதப்படா. ஒதில் அசைச்சீர் என விதந்தோதுப. முன்—முன்னர். இது வேண்டியதில்லை.

4. காலசையானும் ஐந்தசையானும் வருஞ்சீர் என்றது பின்வரும் 'உண்ணுநின்றன', 'அலங்கரியாநின்றன்' என்பவை கானீர். உண்ணுநின்றன் இது காலசை. அலங்கரியாநின்றன் இது ஐந்தசை. இரண்டுசொல் விழுக்காடுபட நிற்றல் என்பது

உளவாலெனின்,—அங்ஙனம் வருஞ் சொற்கள் சிலவாகலானும், அவைதாமும் இரண்டுசொல்லிழுக்காடாய்ப் பிளவுபட்டு நிற்றலின் ஒரு சீரெனப்படாமையானும், அவை சீராக வருஞ் செய்யுளின்மையானும் என மறுக்க.

இனி [1] வஞ்சிப்பாவினுள் வந்த ஆசிரியவடியினை நாலசைச் சீர் காட்டல்வேண்டுவார் இருசீரடியாக. உரைப்பினும் அவை தூங்கலோசையிலவாகலானும் அவை சிறியைந்திறுதலின்மையானும் கொள்ளாவெனின்பது. ஈண்டு எனப்படும் என்பதேபற்றி [2] நாலசைச்சீர் கொண்டாரும் உளர். ஐயசைச்சீர் கொண்டாரைக் கண்டிலமென்க. (கூ)

[சரசைச்சீர் இவையெனல்]

கூஉடு. **இயலசை மயக்க மியற்சீ ரேனை**
யுரியசை மயக்க மாசிரிய வரிச்சீர்.

இது, நிறுத்தமுறையானே இயலசையும் உரியசையும் வேறு வேறு தம்முண் மயங்கிவரும் சரசைச்சீருணர்த்துகின்றது.

'உண்ணு.' என்பது ஒரு சொல்லும், 'நின்றான்' என்பது ஒரு சொல்லும், 'அலங்காரியர்' என்பது ஒரு சொல்லும், 'நின்றான்' என்பது ஒரு சொல்லுமாகப் பிரிந்து இரண்டுசொல் விழுக்காடு பட நிற்றலின். விழுக்காடு—விழுதல்.

1. இரு சீரடியான் வரும் வஞ்சிப்பாவினுள் நாற்சீராஞய ஆசிரியவடி மயங்கி வருதலுமுண்டு. அவ்வாசிரியவடியினை நாலசைச் சீராக்கி இருசீர் வஞ்சியடியாகவுங் காட்டலாம். அங்ஙனங் காட்டின் நாலசையாகப் பிரிக்கப்பட்ட அவ்விருசீரடியானே வஞ்சிக்குரிய தூங்கலோசை பிறவாமையானும், அந் நாலசைச் சீராகக் காட்டிய இருசீரடி, ஆசிரியவடியைப் பிரித்துச் சேர்த்தமையினலே இருசீரியைந்து ஒருசீராக நில்லாமையானும் அந்நாற்சீரடியை ஆசிரியன் கொள்ளான் என்றபடி. நாற்சீர் கொண்ட ஆசிரியவடியினை இருசீரடியாகப் பிரிக்கலாம் என்பதற்கு உதாரணம்:—

"அகநகர் வியன் முற்றத்துச்
சுடர்நுதல் மடநோக்கி
நேரிழை மகளிர் நுணங்குணக் கவருங்
கோழி யெறிந்த கொடுங்கால் கனங்குழை."

என்னும் பட்டினப்பாலை யடிகளுள் பின்வந்த அகவலடியிரண்டும் நாலசை வஞ்சிச்சீராகப் பிரிதிற்கேற்றவாறு காண்க.

2. நாலசைச்சீர் கொண்டார் சிறு காக்கைபாடினியார்; அமுதசாகரர் இதனைப் பொதுச்சீர் என்பர்.

இ—ன்: நேர்நேர் நிரைநேர் நிரைநிரை நேர்நிரை என்பன நான்கும் இயற்சீர்; நேர்புநேர்பு நிரைபுநேர்பு நிரைபுநிரைபு நேர்புநிரைபு என்பன நான்கும் ஆசிரியவுரிச்சீர் என்றவாறு.

இவற்றுள் இயற்சீரைத் தேமா புளிமா கணவிரி பாதிரி எனவும், வாய்க்கால் வாய்த்தலை தலைவாய் தலைமுகம் எனவும் (யா. வி. ப. கூ) பிறவும் இன்னோரன்ன வேறுவேறு காட்டுப. இனி வருவனவற்றிற்கும் இவ்விதிகாக்கும். ஆசிரியவுரிச்சீரை வீடுபேறு வரகுசோறு நடவமருது பாறுகுருகு எனவுங் காட்டுப; அவற்றுக்குச் செய்யுள்:

"அவரே,[1]கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே." (குறுந். உகசு)

என்புழி,

[3] "கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை."

என நான்கு இயற்சீரும் வந்தன.

"வெளிற்றுப்பனந் துணியின் விற்றுவிற்றுக் கிடப்ப." (புறம். கூ)

எனவும்,

"வண்புகழ் நிறைந்து வலிந்துவாங்கு நிமிர்தோள்." (முருகு. கoசு)

எனவும்,

"பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வன்."

எனவும்,

"நறவுண் மண்டை நுடக்கலீ விறவுக்களித்து." (அகம். கூசு)

எனவும் வரும். இவற்றுள் [2] வீற்றுவீற்று எனவும், வலிந்து வாங்கு எனவும், பூண்டுகிடந்து எனவும், இறவுக்களித்து எனவும் நான்காசிரியவுரிச்சீரும் வந்தவாறு கண்டுகொள்க. பிறவு மன்ன.

---

1. கேடில்—நேர்நேர்,—தேமா.
விழுப்பொருள்—நிரைநிரை,—கணவிரி.
தருமார்—நிரைநேர்,—புளிமா.
பாசிலை—நேர்நிரை,—கூவிளம்.
} இவை இயற்சீர் நான்கு.

2. வீற்றுவீற்று—நேர்புநேர்பு,—விடுபேறு.
வலிந்துவாங்கு—நிரைபுநேர்பு,—வரகுசோறு.
பூண்டுகிடந்து—நேர்பூநிரைபு,—பாறுகுருகு.
இறவுக்களித்து—நிரைபுநிரைபு,—நடவமருது.
} இவை ஆசிரியு உரிச்சீர் நான்கு.

இஃது, [1] ஆட்சியுங் குணனும் காரணமாகப் பெற்றபெயர். ஆட்சி :

"இயற்சீர் நிறுமென வோரவ னிற்பின்." (நூகூ)

எனவும் பிறாண்டும் ஆளுப. இயற்சீராகலானும் கான்கு பாவிற்கும் இயன்று வருதலானுங் குணங் காரணமாயிற்று. இயல்பு வகையான் [2] ஓரோவொன்றாகி நின்ற சொற்கள் வருதல் பெரும் பான்மையாகலானும், நான்கு பாவிற்கும் பொதுவாகி இயன்று வருதலானும், [3] இயலசையான் வரும் ஈரசைச் சீராகலானும், இவற்றை ஒரு பாவிற்குரிமை கூறுதல் [4] அரிதாகலானும், இவற்றை இயற்சீரென்றார். எனவே [5] சொல்லின் முடியுமிலக் கணத்தால் நான்கு பாவிற்கும் [6] உரியவென்பதூஉம் ஈண்டுப் பெற்றாம். அல்லதூஉம் 'அவற்றைக் களைகூறும்வழி' [7] மூன்று பாவிற்கும் உரிமை கூறிக் கலிப்பாவிற்கும் வஞ்சிப்பாவிற்கும் கோரீற்றியற்சீர் வாராவென, [8] ஒழிந்தசீர் வருமென்பதுடன்பட்டமையானும் நான்கு பாவிற்கும் இயன்றுவருஞ் என்பது பெறாம். ஆசிரியவரிச்சீரென்றதூஉம் அவ்வாறே ஆட்சியுங் குணனும் நோக்கிய பெயர். ஆட்சி :

"வெண்பா வரிச்சீர் ராசிரிய வரிச்சீர்." (நூகூ)

எனவும் பிறாண்டும் ஆளுப. உரியசை மயங்காமைகலானும் ஆசிரியத்திற் குரிமையானும் இக்குறி குணங் காரணமாயிற்று. மற்

---

1. ஆட்சி—எடுத்தாளல். குணம்—இயல்பு.
2. ஓரோவொன்று—ஒவ்வொன்று.
3. இயலசை—நேர்நிரை என்பன.
4. அரிது—அருமை : இல்லை.
5. சொல்லின் முடியும் இலக்கணமென்றது 'இயல்' என்ற சொல்லிலேயே அதனிலக்கணமு மமைந்துவிடத்தலின் அதனுள் அது முடியும் என்றபடி. எனவே இயல் என்றீ சொல்லாலே நான்கு பாவிற்கும் இயன்று வரும் என்பது பெறப்படும் என்றதாயிற்று.
6. உரிய என்றதற்கு எழுவாய்—இயற்சீர்.
7. மூன்றுபா—அகவல் வெண்பா கலி.
8. வருமென்ப நுடன்பட்டமையானும் என்னும் பாடம் S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலும், பவானந்தம்பிள்ளை பதிப்பிலும் உள்ளது. பி. வை. கூமோதரம்பிள்ளை பதிப்பில் வருமென்பட்டமையானும் என்றிருக்கின்றது. முந்தியது நலம்.

நிலை இயற்சீர்போல [1] ஓரோர் சொல்லாய் யாண்டும் நிற்க வில்லை பிறவெனின்,—அற்றன்று ; 'தோன்றுவாக்கு', 'இசங்கு வாக்கு' என்றாற்போல்வன உளவென்பது. [2] இனி, இவ்வியற் சீர்தாமும் இரண்டுசொற் கூடியும் ஒன்றுபோலவழியே சீரெனப் படும் ; அதுபோல [3] இவையும்,

"எல்லாத் தொகையு மொருசெஞ் னடைய."

(தொல். சொ. சஉ0)

என்பதனான், ஒரு சொல்லாயினவெனினும் அமையும். மற்று [4] ஒழிந்த இயற்சீருங் கூறாது ஆசிரியவரிச்சீர் ஈண்டு வைத்த தென்னையெனின், — இவ்விருபகுதியவற்றை இயற்சீரென்றும் ஆசிரியவரிச்சீரென்றும் [5] ஆளுமாகலின் என்றவாறு. (நூ)

[உரியசைப்பின் நிரையசை வரும் சீரும் உரிச்சீராமெனல்]

நூஉசு. முன்னிரை யுரினு மன்ன வாகும்.

இஃது, இயலசையும் உரியசையும் மயங்கியாவனவற்றுள் இரண்டுசீர் கூறுகின்றது.

இ—ள் : "உரியசை மயக்க மாசிரிய வரிச்சீர்" எனமேனின்ற அதிகாரத்தான் அவ்வுரியசைப்பின்னர் நிரையசையுறினும் அவ்வுரியசை மயக்கமாகிய ஆசிரியவரிச்சீராம் என்றவாறு.

அவை நேர்புநிரை நிரைபுநிரை என வரும். இவற்றை நீடுகொடி நாணுத்தளை, குளிறுபுலி விரவுக்கொடி எனவும் பிற வாற்றானுங் காட்டுப ; அவையெல்லாம் அறிந்துகொள்க.

---

1. ஓரோர் சொல்—தனித்தனிச் சொல்.
2. இனி இவ்வியற்சீர்தாமும் இரண்டுசொற் கூடியு மொன்றுபோலவழியே சீரெனப்படும் என்றது புளி என்ற சொல்லும் மா என்ற சொல்லுமாகிய இரண்டு சொல்லுங் கூடிப் 'புளிமா' என ஒரு சொன்னிலைமைப்பட்டு நின்றவழியே ஒரு சீரெனப்படுவது என்றபடி. அவ்வியற்சீர்போலவே உரிச்சீரும் இருசொற் கூடி ஒரு சொல்லாய் நின்றவிடத்துச் சீராம் என்க.
3. இவையும்—உரிச்சீரும் ; தொகைச் சொல்லெல்லாம் ஒரு சொன்னீர்மையாகக் கொள்ளப்படும் என்றபடி.
4. ஒழிந்த இயற்சீர் என்றது நேர்புநேர், நிரைபுநேர், நேர்புநிரை, நிரைபுநிரை என்பவற்றையும் இவை மாறி வருவனவற்றையும். அடுத்த சூத்திரங்கள் பார்க்க.
5. ஆசிரியன் ஆளுமாகலின் என்க.

மற்று, இயலசையும் உரியசையும் விரவி இயற்சீராவன இலவோவெனின்,—உள ; அவையன்றே மேற்சொல்கின்றனவென்பது. அஃதேல், இவ்விரண்டும் இயற்சீராகாவோவெனின்,—அன்ன என்று மாட்டெறிந்த கருத்தினன் அதுவும் அமையுமென்பது ; என்னுதலான், இவற்றை ஆசிரியவுரிச்சீரென்றல் குற்றமாம் பிறவெனின்,—பெரும்பான்மையும் ஆசிரியத்திற்கும் அகற்சினமாகிய வஞ்சிக்கும் உரியவாகலானும், ஒழிந்த இரண்டு பாவின்கண்ணுஞ் சிறுவரவினவாகலானும், வெண்பாவினுள் கட்டளையடிக்கண், வாராவென்பது,

"களித்தானை மருங்கிற் கடியவும் படாஅ." (நாநக)

என வரைந்தமையாற் பெறுதுமாகலானும் இவற்றை ஆசிரியவுரிச்சீரென்றலே வலியுடைத்தென்பது. [1] அன்ன என்பதனை இயற்சீரொடு மாட்டுங்கால் ஈற்றது அதிகாரம்பட இறுதி நின்ற நிரையீற்றியற்சீரிரண்டினோடும் கொள்ளப்படும் ; கொள்ளவே, அம்முறையானே நீடுகொடி என்பதனைப் பாதிரிபோலவும், குளிறுபுலி என்பதனைக் கணவிரிபோலவும் நுவலுகொள்ளப்படுமென்பதாம்.

அவை செய்யுளுள் வருமாறு :—

[2] "ஓங்குமலைப் பெருவிற் பாம்புருவாண் கொளீஇ." (புறம். நாந)

எனவும்,

[3] "உவவுமதி யுருளி னெஞ்சுகல் வெண்குவட." (புறம். ந)

எனவும்,

"ஓங்குநிரை யியல்பரப்பின்." (மதுரை. க)

எனவும்,

"நிலவுமணல் வியன்கானல்" (புறம். கஎ)

எனவும் இவை [4] ஆசிரியத்தானும் வஞ்சியுள்ளும் வந்தவாறு.

---

1. அவ்வாறும் இயற்சீர்போலாகும். அதனைநோ மாட்டுங்கால் அதன் ஈற்றிலுள்ளதாய் அதிகாரப்பட்டு நின்ற நேர்நிரை, நிரைநிரை என்னுமிரண்டனோடும் மாட்டப்படும் என்றபடி. நேர்நிரை—பாதிரி. நிரைநிரை—கணவிரி. ஈற்றது—ஈற்றிலுள்ள நிரை.

2. ஓங்குமலை—நீடுகொடி=பாதிரி.

3. உவவுமதி—குளிறுபுலி=கணவிரி.

4. முன்னிரு செய்யுளடிகள் ஆசிரியத்துள்ளும் பின்னிரு செய்யுளடிகள் வஞ்சியுள்ளும் வந்தன.

"தூங்குநிரை யன்னந் துயில்வதுஞ் சோணட்டே."

எனவும்,

"எடுகொடி யாக வெழுதுகொ." (முத்தொ. நo)

எனவும் இவை வெண்பாவினுள் கட்டளையடியல்வழிச் சிறுபான்மையான் வந்தன. மற்றிவையுங் கட்டளையடியென்னுமோவெனின்,—அற்றன்று ; அது கலிவகை கொள்ளுங் [1] துணை இன்னோசைத்தன்றென்பது,

"அசையுஞ் சிறு மிசையொடு சேர்த்தி." (நாஉக)

என்பதனுணர்க. [2] இப்பகுதியுரியதாம் அடியறுந்தநடைப் பயனென்னையென்றிகழ்ப.　　(கச)

[உரியசைப்பின்னர் நேரசைவருஞ் சீர் இயற்சீராமெனல்]

கஉச. நேரவ னீற்றி னியற்சீர்ப் பால.

இஃது, இயலசை உரியசை மயக்கத்துப் பிறப்பன இரண்டியற்சீர் உணர்த்துகின்றது.

இ—ள் : முன்னர் உரியசைப்பின்னர் நிரையசை வரின் ஆசிரியவுரிச்சீராமென்றான் ; அவ்வதிகாரத்தால் உரியசைபிரண்டன்பின்னும் நேரசை வரின் அவையிரண்டு சீரும் ஆசிரியப்பாலவாம் என்றவாறு.

அவை : நேர்புநேர் நிரைபுநேர் என வரும்.

உதாரணம் :—சேற்றுக்கால் வேணுக்கோல் களிற்றுத்தான் முழுவுக்கோல் எனவரும். நீத்தநீர் குளத்தநீர் போதுபூ நிறகுநீ எனவுங் காட்டுக. பிறவுமன்ன. இவை இயற்சீர் கான்கினுள்ளும் எப்பாற்படுமெனின், —[3] அதிகாரத்தால் நீடுகொடி குளிறுபுலி என்பனபோல இறுதியினின்ற பாதிரி கணவிரிப் பாற்படும் முறையானென்பது. எனவே, போதுபூ பாதிரியாகவும், நிறகுநீ கணவிரியாகவும் இயற்றப்படுமென்பது. இவ்வாறு

---

1. துணை—அளவு.

2. இப்பகுதி—கட்டளையடிக்கண் வருதலும், அல்லாத அடிக்கண் வராமையும் என்ற பகுதி. உறழ்தல்—பெருக்கல். கட்டளையடி, அல்லாவடி என்று வகுத்துணர்தல் ஒசைபற்றி என்பது இதனால் அறியப்படுவது பயன் என்றபடி.

3. அதிகாரத்தால்—இறுதியில் நிரையீறு அதிகாரப்பட்டு நின்ற அதிகாரத்தால்.

கூறலே, [1] இவை பாதிரி கணவிரிபோல [2] அசை நிரிந்து நிரையாமென்பது கொள்ளற்க. நேர்பு நிரைபு முதலாக நிரையீறாகிய சீர் தனே கொண்டாங்குக் கொள்ளப்படும் இவையுமென்ப தாம். தனேதோ வொக்கும் எனவே [3] எழுதனேயுள்ளும் இவற்றை ஒன்றொன்றனுள் அடங்குமென்று அடக்கற்க; என்னே? [4] இவை வேறுவேறுபட்ட அசையான் வேறுவேறு சீராயினமையினென்பது. அசைச்சீர்க்கு உரிச்சிலக்கணமின்மை யின் இதற்கு இவ்வெடுத்துக்காட்டு வாராதென்றுணர்க.

[5] "நீத்துநீர்ப் பரப்பி னிவந்துசென் மான்றேர்."

என்புழி, போதுபூவும் விறகுநீயும் வந்தவாறு கண்டுகொள்க. இவற்றை [6] ஆசிரியனுரிச்சீர்ப்பின் வைத்தலென்னையெனின்,— இவையும் அவைபோல ஈண்டொருங்கியைதல் பெரும்பான்மை யென்பது அறிவித்தற்கெனவுணர்க. (கரு)

[இயலசைப்பின் உரியசை வருஞ் சீரும் இயற்சீராமெனல்]

கூஉஅ. இயலசை யீற்றுமு னுரியசை வரினே
நிரையசை யியல வாகு மென்ப.

---

1. இவை—விறகுநீ போதுபூ முதலிய நேரீற்றுரிச்சீர்கள்.

2. அசைநிரிந்து நிரையாகாதென்றது—போதுபூ என்றவழி குற்றுகரமாகிய துவ்வும் நெடிலாகிய பூவும் இயைந்து நிரை யீறாகாது நேர்பு என நின்றபடியே நேரையாகத்திரம் நிரையீறாக வைக்கப்படும் என்பது கருத்து. நச்சினார்க்கினியம் நோக்குக.

3. எழுதனே என்றது—ஆசிரியத்தனே இரண்டு, வெண்டனே இரண்டு, கலித்தனே ஒன்று, வஞ்சித்தனே இரண்டு.

4. வேறுவேறுபட்ட அசை என்றது இயலசையும் உரி யசையும் சேர்ந்து வருதல்பற்றி. அசைச்சீர் என்றது ஈண்டு இயலசைச்சீரை. இயலசைச்சீர் நான்கனுள்ளும் நிரையீற்றுச் சீருள் நேர்பு நிரைபு முதலாகவரும் நிரையீற்றையும் நேரீற்றை யும் அடக்கற்க என்றபடி. அசைச்சீர் என்பது இயலசைச்சீர் என்றுயினும் இயற்சீரென்றுயினும் இருத்தல்வேண்டும். முன் னும் பின்னும் இயலசை என்றே உரையுள் ஆளுதல் நோக்குக. இதற்கு—இயலசைச் சீர்க்கு. இஃது உரியசைபெற்று வருஞ்சீர்.

5. நீத்துநீர்—போதுபூ. நிவந்துசென்—விறகுநீ.

6. ஆசிரிய உரிச்சீரென்றது—நீடுகொடி, குளிறுபுலி என் னும் நிரையீற்றுச் சீரிரண்டையும். ஒருங்கியைதல் என்றது அவ் வாசிரிய உரிச்சீர் இரண்டும் உரிச்சீரென ஒருங்கியைதல்போல இவ்வியற்சீரிரண்டும் இயற்சீரென ஒருங்கியைதலே.

இது, மேனின்ற இயற்சீரதிகாரத்தான் ஈரசைச்சீருள் இயலசை உரியசை மயக்கத்துள் ஒழிந்துநின்ற நான்கு இயற் சீரு முணர்த்துதல் துதலிற்று.

இ—ள்: [1] இயலசை இரண்டின்னும் உரியசை இரண் டும் ஒன்று இரண்டு செய்து மயங்கி நான்காருங்கால் அவ்விரண் டுரியசையும் இயலசை மயக்கமாகிய இயற்சீர் நான்கனுள் நிரை யீற்ற பாதிரியுங் கணவிரியும்போல வருஞ் சீரொடு கட்டும் என்றவாறு.

அவை நேர்நேர்பு நேர்நிரைபு நிரைநேர்பு நிரைநிரைபு என வரும். வருங்கால் நேர் முதற்சீர் இரண்டும் பாதிரிபோல வும், நிரை முதற்சீர் இரண்டுங் கணவிரிபோலவும் கொள்ளப் படுமென்றவாறு. எனவே, இச்சூத்திரமுஞ் சாமானியன்றிச் சீர் தனேக்குமாறுங் கூறியவாறுயிற்று. [2] இவற்றைப் போதேறு பூமருது கடியாறு மழகளிறு எனினும் இழுக்காது. (கசு)

[உயிரளபெடை சிற்சிலயாதலன்றி அசைநிலையுமாமெனல்]

கூஉக. அளபெடை யசைநிலை யாகலு முரித்தே.

இஃது, எய்தியதன்மேற் சிறப்புவிதி; மேல் எழுத்ததி காரத்தோதப்பட்ட அளபெடையை ஆண்டு மொழியெனக் கூறி னான், அவ்வாற்றானே அவை பெரும்பான்மையும் ஈண்டும் ஈரசைச்சீராகளின், ஈண்டுச் சீர் கூறியவாற்றான் எய்தி நின் றனவற்றை எழுத்துநிலைமைப்படுத்து அசைநிலையும் வேண் டினமையின்.

இ—ள்: அளபெடை மேற்கூறிய இயற்சீர் நிலைமையி யன்றி ஓரசையாய் நிற்றலும் உரித்து என்றவாறு.

1. இயலசைமுன் உரியசை வந்தன—நேர்நேர்பு, நேர்நிரைபு நிரைநேர்பு, நிரைநிரைபு என்பன. இவை இரண்டனுள் முன் னிரண்டும் பாதிரிபோலவும், பின்னிரண்டும் கணவிரிபோலவும் நிரையீறாக வைத்துத் தனே கொள்ளப்படும்.

2. இவற்றை என்றது நேர்நேர்பு முதலிய நான்கையும்:
நேர்நேர்பு—போதேறு. நேர்நிரைபு—பூமருது.
நிரைநேர்பு—கடியாறு. நிரைநிரைபு—மழகளிறு.
என்று வாய்பாடு கொள்ளப்படும்.

உம்மையாற் [1] சீர்நிலையெய்தலை எடுத்தது. நிலை என்றதனான் [2] எழுத்து நிலைமையும் சேர்த்தானும்; என்னை? அசையது நிலையைக் குறிலும் நெடிலுங் குறிலிணையுமென எழுத்தான் வகுத்தமையின். அவை மேற்கூறிய [3] ஈரசைச்சீர் பதினாறனுள்ளும் என்ன சீர்ப்பாற்பட்டனவெனின்,—ஆசிரியவுரிச் சீராறும், தேமாங்காய் என்னும் இரண்டு இயற்சீரும் ஒழித்து, ஒழிந்தவியற்சீர் எட்டுமாம். அங்ஙனமாதல் ஓர் மொழியகத்தே உடையவென்பது. ஆஅ எனத் தேமாவாயிற்று. கடாஅ எனப் புளிமாவாயிற்று. யாஅது என ஈரொழுத்து ஞாயிறும்; என்னை? [4] கடாஅ என்புழி அளபெடையகரம் பிரித்துக் குறிணெடிலாயினுற்போல [5] ஆகாரத்துப் பின்னின்ற அகரமுங் குற்றகரமுங் குறிலிணையெனப்பட்டமையின் என்பது. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். ஆயுழி என்பது மூவெழுத்துப் பாகியாம். [6] வடாஅ என மூவெழுத்துப் புளிமாவாம். படாஅகை என நாலெழுத்துக் கணவிரியாம். ஆஅங்கு என ஈரொழுத்துப் போரேறும். ஆஅலது என மூவெழுத்துப் பூமருது. புகாஅர்த்து என்பது கடியாறு. வீராஅது என்பது மழகளிறு. இவை ஓசைசார் சொல்லாகி நின்று எட்டியற்சீராலும் அளபெடை வந்தவாறு.

1. சீர்நிலை என்றது ஆ அ என்புழி நேர்நேர் எனச் சீர்கோடலே.

2. எழுத்துநிலை என்றது ஆ அ என்புழி அகரம் அளபெடை எழுத்தாகவே கொள்ளப்பட்டு அலகுபெறாது நிற்றலே. எனவே ஆ அ என்புழி அகரம் ஆகாரத்துள் மெய்போல் ஒடுங்கிநிற்ப ஆ என்பதே அசையாகக் கொள்ளப்பட்டு நிற்கும் என்பது கருத்தாயிற்று. அசைநிலையாகல்—ஆ அ என்புழி அகரம் ஆகாரத்தோடு சேர்த்து ஒற்றுப்போல வைக்கப்பட்டு நேரசையாகவே (கொள்ளப்பட்டு) நிற்றல்.

3. ஈரசைச்சீர் பதினாறுவன :—இயற்சீர் நான்கு, உரிச்சீர் நான்கு, உரியசைமுன் இயலசை மயங்கின சீர் நான்கு. இயலசைமுன் உரியசை மயங்கின சீர் நான்கு.

4. கடாஅ—நிரைநேர்; அகரம் தனியே வந்து நேரசையாகும். யாஅது—நேர்நிரை. யா—நேர். அது—நிரையாகக் கொள்ளப்படும். ஞாயிறுபோல.

5. ஆகாரத்துப்பின்னின்ற—யா என்பதிலுள்ள ஆகாரத்துப் பின்னின்ற என்க.

6. வடாஅ என்பது வடாஅது என்றும், புளிமா கணவிரி என்றும் இருத்தல் வேண்டும்.

[1] "தேஎந் தேரும் பூஉம் புறவிற்
போஒர் துள்ளுஞ் சோஒரி நண்ணிக்
குராஅம் பிணையல் விராஅ அங் குஞ்சிக்
குடாஅரிக் கோவல ரடாஅரின் வைத்த
கானெறிச் சென்றனர் கொல்லோ
மேனெறிச் சென்று பொருள்படைப் போரே."

என இதனுள், இயலசை மயக்கமாகிய இயற்சீர் கான்குமாகி அளபெடை வந்தன. ஒழிந்த இயற்சீரும் மேல் நான்கனுள் அடங்குமாகலின் அளபெடை நான்கென்பாருமுளர். [2] அவை: தனிநிலை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனப்படுமென்ப. ஒழிந்த இயற்சீரான் அளபெடை வந்த செய்யுளுங் கண்டு கொள்க.

வாஅழ்க என மூவகைச் சீரான் வரும் அளபெடை மொழியுமுள. மற்றுப் படாஅகை எனவும் ஆஅழி எனவும் இவை மூவகைச் சீராகாவோவெனின்,—ஆகா.

"தனிக்குறின் முதலசை மொழிதைத் தாகாது." (உகக)

என்புழி, முதற்கணல்லது விட்டிசைத்தல் சேர்ந்திலனகலானுங் குறிலிணைந்தனவும் குறினெடிலிணைந்தனவும் நிரையாமென்றுகலானுமென்பது; என்னுரைக்கு,

"தூஉமனி கெழூஉமனி"

என நேர்நிரைப்பின் முற்றுகரம் வந்து நேர்பும் நிரைபுமாம் ஆகலின் அவற்றையும் ஆசிரியவுரிச்சீரென்னுமோவெனின்,—என்னுதவாறு; அங்ஙனம் அளபெடையான் நேர்பசை நிரைபசை கொள்வாரும் அளபெழுந்த குற்றெழுத்து வருமெழுத்தொடு கூட்டி,

[3] "முதலிரிலை யளபெடை நேர்தே நியற்றே
[4] யிடைநிலை யளபெடை நிரைதே நியற்றே."

---

1. தேஎம்—நேர்நேர். போஒரி—நேர்நிரை. குராஅம்—நிரைநேர். குடாஅரி—நிரைநிரை.

2. அவை—மேற்கூறிய அளபெடை. தனிநிலை—ஆஅ என்பளபோல வரு மளபெடை.

3. முதனிலையளபெடை—தேஎம்—நேர்நேர். தனிநிலை என்றும் பாடம்.

4. இடைநிலை என்பது இறுதிநிலை என்று இருத்தல்வேண்டும். அங்ஙனம் பாடங்கொள்வர் யாப்பருங்கல விருத்திகாரர். கடைநிலையென்றுமிருக்கலாம். இங்ஙனங் கோடலின் தூஉ—நேர்பு என்றும், கெழூஉ—நிரைபு என்றும் கொள்ளல் முடியாது என்றபடி.

என்பவாகலின் அளபெழுந்தமொழி நேர்பும் நிரைபுமாகாவென்பது. அவ்வாறாயினும் [2] ஓரோர்கால் அளபெடை யுகரத்தைக் கூட்டி நேர்புநிரைபுமென்னுமோ, காசு பிறப்பென்பன தேமா புளிமாவாயினவாறுபோலவெனின்,—[2] அவை தேமா புளிமாவாகாமையும், நலிவகையொக்குமத் தூணெனபதூஉம் மேற் கூறப்பட்டதாகலின் அவைபோல இவையும் நேர்பசை நிரை பசையாகாவென்பது; அல்லதூஉம்,

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய." (தொ. எழு. சூ)

என்பட்டது அளபெடையாகலானும்,

[1] "நாணுத்தளை." (அகம்..உக)

என்பதுபோலாது இயல்பாக வந்து இயைந்த எழுத்தாகலானும் [2] அவைபோல அளபெடை,

[4] "இருவகை யுகரமொ டியைந்தவை வந்தன." (நூசூ)

என்பபடாமையானும், நேர்பசை நிரைபசையாகாவென்பது; அற்றன்றியும், அவை நேர்பசை நிரைபசையாதல் ஒருவகையான் நேர்ந்தானெனினும் அவை நாணுத்தளை விரவுக்கொடியென்னுஞ் [5] சீராதற்கு இழுக்கென்னெனவும்,

"நிரையீறு காசியு மாசிரிய வரிச்சீர்."

எனவோதி ஆசிரியவரிச்சீர் எட்டென்பான்போல விதந்தோதிப் பயந்ததென்னெனவும் கூறி மறுக்க.

இனி ஒருரை:

[3] "தூஉமணி கெழூஉமணி."

---

1. ஓரோர்கால்—ஓரோரிடத்து, வேண்டியபோது.

2. அவை—காசு, பிறப்பு என்பன.

3. நாணுத்தளை என்பதில், உகரம் புணர்ச்சிபற்றி வந்தது. அளபெடை எழுத்து இயல்பாக வந்தது என்பது கருத்து.

4. இருவகை யுகரமு மியைந்துவரின் அவை நேர்புநிரைபு ஆகும். இயைந்து வருதல்—ஒரு சொன்னீர்மைப்பட்டு வரல். அளபெடை ஒரு சொன்னீர்மைப்பட வாராது பிரிந்துவரும். ஆதலால் ஆகா என்க.

5. சீராதற்கு இழுக்கென்னை என்றது அவற்றுளடங்கி உரிச்சீராகுமன்றி இவையும் (அளபெடைச் சீரும்) வேருகி எட்டென்று விதந்து கூறலாற் பயனில்லை என்றபடி.

6. தூஉமணி—நேர் நிரை நேர். கெழூஉமணி—நிரை நிரை நேர். இவை வெண்சீராம்.

என்பன அளபெடை அசைநிலையாகியும் ஓகாதும் வருதலின் வெண்சீர்க்கும் இருநிலைமை கோடற்கென்ப. அது, நீடுகொடி குளிறுபுலி என்பனவற்றிற்கும் [1] ஒக்குமாதலானும், அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்துங்கால் அங்ஙனம் அசையாகாமையானும் அது பொருந்காதென்பது. இங்ஙனஞ் சீர்நிலை யெய்தி நின்ற அளபெடைகளெல்லாம் வழக்கிற்குஞ் செய்யுட்கும் பொதுவாயினவும், செய்யுட்கே உரியவாகிச் செய்யுள் செய்யும் புலவராற் செய்துகொள்ளப்படுவனவுமென இருவகைய; அவ்விரு திறத்தவும்,

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய." (தொ. எழு. சூ)

என்னும் இலக்கணத்துட்பட்டு அடங்கின.

இனி, அவற்றுள் வழக்குக்குஞ் செய்யுட்கும் பொதுவாகியதனை இயற்கையளபெடையென்றும், செய்யுட்குப் புலவர் செய்துகொண்டதனைச் செயற்கை யளபெடையென்றும், பெயரிட்டு வழங்கப்படும். [2] அவ்விரண்டனுள்ளும் ஈண்டு 'அளபெடை யசைநிலை யாகலு முரித்து' எனப்பட்டது இயற்கையளபெடையென்று பெயரிட்டு [3] வழங்கப்படும். செயற்கையளபெடை சீர்நிலையாதல் செய்யுட்கே யுரியவாறுபோல இயற்கையளபெடை அசைநிலையாகலுஞ் செய்யுட்கே யுரியதென்பது.

ஆகலுமுரித்து என்ற உம்மையான் [4] அவையிரண்டானும் அவ்வாற்றானும் அசைநிலையாகப் படாது புணர்ச்சிவகையான் வந்த அளபெடைக்கண்ணும் பொருள் புலப்பாட்டிற்கு உரியவாகச் செய்யுள் செய்யுமிடத்தும் அவ்வாறு அசைநிலையாகப் படுவதென்றவாறு.

---

1. ஒக்குமென்றது நீடுகொடியையும் குளிறுபுலியையும். அங்ஙனமே முறையே நேர் நிரை நேர், நிரை நிரை நேர் என்று கொள்ளலாம் என்றபடி. இசையோடு சேர்த்துங்கால் தூஉமணி என்பதன் மகரம் பிரிந்து உகரத்தோடு சேராது என்றபடி.

2. அவ்விரண்டு — இயற்கையளபெடை, செயற்கையளபெடை.

3. வழங்கப்படும் என்பது வழங்கப்படுவது என்றுதல், வழங்கப்படுமளபெடை என்றுதல் இருத்தல்வேண்டும்.

4. அவையிரண்டு—இயற்கை, செயற்கை. ஆன்வாற்றான் என்றது, வழக்கிற்குஞ் செய்யுட்குமுரியவாற்றான் என்றபடி. எவ்வாற்றானும் எனவும் பாடம். ஆகலும் உரித்து என்பது தொட்டுள்ள வாக்கியத்தில் யாதோ பிழையுளது.

உதாரணம்:—

[1] "பலாஅக்கோட்டுத் தீங்கனிமேம் பாய்ந்த கடுவன்."

எனப் பலாஅக்கோடென்புழி,

"குறியதன் முன்னரு மோரெழுத்து மொழிக்கு
மறியத் தோன்று மகரக் கிளவி." (தொ. எழு. உஉசு)

எனப்பெற்ற அகரமுண்டன்றே? அதுவும் அளபெடையெனப் படும்; அதனைப் பலாஅ என்புழிப் புளிமாவென்னுஞ் சீராக அலகுவையாது நிரையசை நிலைமைத்தாயாக வைக்கப்படு மென்பது.

"நிரம்பாஅய்ப்பாஅய்ப் பட்டன்று நீலமா மென்சேரட்
கரும்போஒய்ப்போஒய்க் கொளவை தரும்."
(யா. வி. ப. சரு—ந. சூ—சூகை)

என்புழி, [2] போஒய்ப்போஒயெனச் [3] சேய்மைக் குறிப்புப்படச் செய்யுள் செய்தவழியும் அளபெடை அசைநிலையாயிற்று. இனி, [4] இவற்றை விளியும் பண்டமாற்றும் [5] காவல்கூற்றும் முத லாயவற்றுள் வருமென்பாருமுளர். அங்ஙனம் வந்தது பிற்காலத் துச் செய்யுளென்ப; அல்லதூஉம் அங்ஙனம் வரையறைப் படாமையானும் நாம் [6] முன்னர்க் காட்டினவை ஆண்டு அவற் றுள் அடங்காமையானும் அல்லாதும் [7] இகந்து கூறினன் பதூஉம் படும்.

"உப்போ வெனவுரைத்து மீள்வா ளொருமுறுவல்."
(யா. வி. ப. சரு)

---

1. பலாஅக்கோடு—புணர்ச்சிவிகாரத்தான் வந்தது.

2. 'போஒய்ப் போஒய்' என்பது தூரப்பொருளைக் காட்ட வந்தது என்பது கருத்து.

3. செய்கைக் குறிப்பு என்பது வட்டிற் கண்ட பாடம். ஒரு தொழில் பலகால் நிகழுஞ் செயலைக் குறித்து வந்தென்ற படி. 'சேய்மைக் குறிப்பு' என்ற பாடத்திலும் இது சிறப் பாகத் தோன்றுகின்றது.

4. இவற்றை என்றது அளபெடையை.

5. காவல் கூற்றை—'காவலோ என்றுரைக்கு நாளோதை' என்பதனாலறிக.

6. முன் காட்டினவை — முன் காட்டிய உதாரணங்கள். அவற்றுள்—விளி முதலியவற்றுள்.

7. இகந்து—கடந்து—விதியளடங்காமல்.

எனப் பண்டமாற்றின்கண் வந்ததெனக் காட்டுப. பிறவும் இவ்வாறு வருவன அறிந்து அசைநிலைப்பாற்படுக்க. என்றார்க்கு, [1] இவை செய்யுளுள் தம்மோசை நிரையாவாயின் [2] அலகிருக்கை யுள் அழிந்துப் பயக்குதென்னையெனின்,—அஃதன்றே இதனை [3] எழுத்துநிலைப்படுமென்றற்குக் காரணமென்பது. அஃதேல், செய்யுளின் ஓசையை அழிக்கவமையும் பிறவெனின், — அற் றன்று; அவ்வோசையைச் செய்புட்கண்ணே அழிப்பது [4] சந்தி யிலக்கணத்தின் வழீஇயிற்றும். இனிப் [5] பிறவற்றுக்கண்ணும் அளபெடையைச் சிதைத்துச் சொல்லின் அச்செய்யுளுட் கரு திய பொருண்மை விளங்காதாம். அது நோக்கிச் செய்யுளின் பத்தைச் சிதையாது சண்டு காம் வேண்டப்பட்ட அலகிருக் கைக்கட் சிதைத்துக்கொள்கவென்றுமென்பது. (கஎ)

[ஒற்றளபெடையும் சீர்நிலையாதலன்றி அசைநிலையுமாமெனல்]

கூகo. ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப.

இஃது ஒற்றளபெடையும் உயிரளபெடைபோலச் சீர்நிலை யாதலேயன்றி அசைநிலையாகலும் உரித்தெனமாட்டெறிந்தமை யின் எய்தாதது எய்துவித்தது. இதனை அசைப்படுத்து எழுத்து நிலையும் வேண்டுமென்கின்றமையின் வழுவமைத்ததூஉமாம்.

---

1. இவை—அளபெடை.

2. அலகிருக்கை—எண்ணிருப்பு.

3. எழுத்து நிலைமைப்பாடு — அளபெடை எழுத்தென்று எழுத்து நிலைமையை அடைதல். அங்ஙனங் கொள்வதனாற் புள்ளி எழுத்துக்கள்போல அளபெடை எழுத்தென்று கோட லாம் என்றபடி. அசைநிலையாதலும் என்றதனானே இதுவும் எழுத்தாகக் கொள்ளப்பட்டது. என்னை? அசை எழுத்தான் வருத்துக் கோடலின். அதுபற்றி எழுத்து நிலையும் வேண்டி னன் என்றார்.

4. சந்தியிலக்கணத்தின் வழீஇற்று என்றது பலாஅக்கோடு என்பதுபோலப் புணர்ச்சிபெறும் இலக்கணத்தினின்றும் வழுவு தலே. என்றது புணர்ச்சிபெறுவது இருமொழி தம்மு ளியைந்து ஓசைபெற்று நிற்றற்கே. ஆதலின் அது வழுப்படும் என்றபடி. சந்தி—புணர்ச்சி.

5. பிறவற்றுக்கண் என்றது பொருள் புலப்பட அள பெடுக்கும் அளபெடை முதலியவற்றுள்; அவை போலும் போலும் என்பன போல்வன.

இ—ள்: ஒற்றளபெடுத்தலும் உயிரளபெடைபோலச் சீர்நிலையெய்தலும் ஓரசையாய் நிற்றலும் உரித்து என்றவாறு.

ஒற்றளபெடுப்பினும் எனவே ஒற்றுக்கள் அளபெடுத்து நிற்றற்கு உரியன; உரியவழி எல்லாம் [1] வரையாது கொள்ளப்படும். அவை வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் [2] இருவாற்றான் ஒருசொற்கு உறுப்பாய் நின்ற ஒற்றே [3] அளபெழினும், பின் [4] தோன்றிக்கொள்ளப்பட்ட ஒற்றளபெழினுமென இருவகைப்படும்.

"அஃறிண வுவலா தொழுந்துபுறந் தரைக்கும்."
(தொ. எழு. கoஉ)

என்பது சொற் [5] குறுப்பாய் நின்றது.

"ஆனு தோயொடு கான லஃதே." (குறுந். கூஎ)

என்பது, பின்னேறின்றிக் கொண்ட புள்ளியெனப்படும். அற்றென மொழிய என்றதனான், ஒற்றளபெடையும் உயிரளபெடை போலக் கானுங் கண்ணியொற்றிய எழுத்துங் கூடி அளபெடை மொழியாகிச் சீர்நிலையெய்தல் பெரும்பான்மை [6] யாகலானும், அவை இயற்கையளபெடையாகியவழி அசைநிலையாதல் சிறுபான்மையென்பதூஉம், உயிரளபெடை முதற்கணின்ற நெட்டெழுத்துப்போல ஒற்றளபெடை முதற்கணின்ற [7] குற்றெழுத்தும்,

"தனிக்குறின் முதலசை மொழிதைத் தாகாது." (கூகூ)

1. வரையாது—நீக்காது.

2. இருவாற்றான் என்பது அவையிரண்டிலும்பொதுவும்.

3. அளபெழினும் என்பவை அளபெழுதலும் என்றிருத்தல் வேண்டும். அன்றிச் சில தவறியுமிருக்கலாம்.

4. தோன்றிக்கொள்ளப்பட்ட எழுத்து—தோற்றிக்கொள்ளப்பட்ட எழுத்து என்றிருத்தல்வேண்டும். தோற்றுவித்துக் கொள்ளப்பட்ட எழுத்து என்பது பொருள். கானலதே என்பதைக் கான லஃதே எனஇருசீராக்கற்கு ஆய்தம் விரித்துக் கொள்ளப்பட்டது.

5. உறுப்பாய் நின்ற எழுத்து அஃது என்பதிலுள்ள ஆய்தம்போல்வன.

6. ஆகலானும் என்பது என்பதூஉம் என்றிருத்தல் வேண்டும்.

7. குற்றெழுத்தும் நேரசையாம் என இயைக்க

என்பதனான், விலக்குண்ணாது விடப்பட்டசையாது முதற்கணின்று நேரசையாமென்பதூஉங் கூறியவாறு. வல்லெழுத்தாறும் ரகார றகாரமும் ஒழித்து ஒழிந்த பதினேழொற்றுங் குறிற்கீழுங் குறிலிணைக்கீழும் அளபெய்தி நிற்கும்வழிச் சீர்நிலையாதலேயன்றி அசைநிலையாகவுமுரித்துச் சிறுபான்மையென்றவாறு; அவை,

"கண்ண் டண்ணெனக் கண்டுங் கேட்டும்."
(மகிபது. கூஉ)

என்றவழி, கண்ண் என்பது சீர்நிலையாகித் தேமாவாயிற்று. [1] கண்ணெனை என்றவழிக் கட்பத்துச் சிறப்பு உரைத்தற்கு ணகரவொற்றினை அளபேற்றிச் செய்யுள் செய்தான்; ஆண்டு அது மாசெல்சுரமென்னும் வஞ்சி யுரிச்சீராவதனைப் பாதிரி யென்னுஞ் சீரேயாமென வழுவமைத்தவாறு. சுற்றுகரங் குறிலோடு கூடி நிரையாவதனைக் குறிலிணையெனக் [2] குற்றெழுத்தாக்கி ஓதினான்; அதுபோல ஒற்றளபெடையும் ஒருமாத்திரையாவதனைக் குற்றெழுத்தென்று ஓதாதேனெனின்,—அங்ஙனம் ஓதின் அவ்வளபெடை குறிலாகிக் கன்முன் வந்த குறிலோடும் பின்வந்த குறிலோடும் நெடிலோடுங் கூடி நிரையசை [3] யாகுவதாவான் செல்லுமென மறுக்க.

மற்று, அரங்ங்கம் என்புழிப் புளிசெல்வாயென மூவசைச் சீருமாமாகலின் [4] இதனை மூவசைச் சீரின்பின் வைக்கவெனின்,—அற்றன்று; அவ்விரண்டற்கும் பொதுவகையாக இடைவைத்தானென்பது; அல்லதூஉம் ஈரசைச் சீராகலே பெரும்பான்மையாதலின் ஈண்டு ஈரசைச் சீர்ப்பின் வைத்தான் இவ்விரண்டளபெடையினையுமென்பது.

மற்று, வழக்கினுள் வரும் இயற்கையளபெடையன்றே அசைநிலையாவன, ஒற்றளபெடை வழக்கினுள் வருமோவெனின்,—அவையுஞ் சிறுபான்மை வழக்கினுள் வருமென்பது. அவை; கள்ளென்றது, புள்ளென்றது, கள்ளென்றது,

1. கண்ணெனை என்பது மாசெல்சுரம் என நிற்கவேண்டியதை, அளபெடையை அசைநிலையாக்கிப் பாதிரிபோலக் கோடல்வழு: அதுவும் அமைக்கப்பட்டது என்பது கருத்து.

2. குற்றெழுத்தாக்கியது நுவரிறுபோல்வது.

3. ஆக்குவது—ஆக்கப்படுவது.

4. இதனை—ஒற்றளபெடையை.

துண்ணென்றது, திண்ணென்றது என வரும். பிறவுமன்ன. இவை, செய்யுளகத்தல்லது [1] பரவை வழக்கினுள் வாராவென் பாருமுளர்; அவரறியார்; செய்யுட்குப் புலவர் செய்துகொண்ட அளபெடை பின்னர் அசைநிலையாதற்கு என்னை காரணமென மறுக்க. மற்று,

"அளபெடை யசைநிலை யாகலு முரித்தே." (ந.உசு)

என வரையாது கூறலே இச்சூத்திரமும் அடங்குமாகலின் இது மிகையாம் பிறவெனின்,—அற்றன்று; [2] எழுத்தோத்தினுள் ஒற்றளபெடுக்குமென்பது கூறுமையின் வேறு கூறினுன்; அல்லதூஉம், உயிரளபெடையின் வேறுபட்டதோர் இலக்கண முடைமையின் இதனை வேறு கூறினுனென்பது; என்னை? பணஅட்டு என்றவழி உயிரளபெடை, கடியாறு என்னுஞ் சோயவாறுபோலாகாது கொங்கு குரங்கு எஃஃகு பின்னு என அளபெழுந்த [3] இருவகையுகரவீற்றுச் சொற்கள், போதேறு கடியாறு என்னுஞ் சோனும், ஞாயிறு வலியது என்னுஞ் சோனுமாகாது இருவகையுகரமொடு இயைபின்றி வருதலானும் அவை வண்டு வாகு என்னும் உரியசைச்சீர்ப் பாற்பட்டு அசை நிலையாகுமாதலானும், இருவகையுகரமோடியையாதவழிக்,

"கண்ண டண்ணெனக் கண்டுங் கேட்டும்."
(மலைபடு. கூடுஉ)

எனவும்,

"கஃறெ னென்னுங் கல்லதர்."

எனவும் சீர்நிலை பெறுதலானுமென்பது. எனவே, இயற்கை யுயிரளபெடைபோலச் செயற்கையொற்றளபெடையும் ஓசை வழி [4] ஓசையுட் நிறைக்கப்படாதாயிற்று. இதனுனே உயிரள பெடைபோல ஒற்றளபெடை [5] வருகின்ற எழுத்தோடு கூடி

1. பரவை—உலகம்.

2. எழுத்தோத்து—எழுத்ததிகாரம்,

3. இருவகையுகரம்—குற்றியலுகரம், முற்றியலுகரம்.

4. ஓசை நிறைக்கப்படாதாயிற்று எனவே எழுத்து அளபு பெறுதென்பதாம். ஓசையுள் எனையும் பாடம்.

5. உயிரளபெடைபோல வருகின்ற எழுத்தோடு கூடி நிரையசையாய் வாராது என்றது—கொங்கு என்புழி பின் வருங் குற்றுகரத்தோடு கூடி நிரையசையாய் வாராமையை. படாஅ அணை என்பதில், வருமெழுத்தோடு சேர்ந்து தீயிரள பெடைஅகரம்நிரையாய்நிற்பதுபோல, இது நில்லாதுஎன்றபடி.

அசையாகாதென்பதாம். ஈர்க்கு நீர்க்கு என [1] ஈரொற்று நின்ற வழி வேறோரசையாகாதவாறுபோல ஒற்றளபெடையும் ஓரோ வழி அசைநிலை பெறுதென்பதாலும் கூறினனும்.

இனி, இயற்கையொற்றளபெடை சிறுபான்மை வருமாதலின் [2] இஃது அசைநிலையாதலே பெரும்பான்மையாதலினைக் கூட்டெறிந்தான் எனவும் அமையுமெனக் கொள்க. (கூஅ)

[வெண்பா உரிச்சீர் இதுவெனல்]

உசுக. இயற்சீ ரிறுதியு னேரவ னீற்றி
னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப.

இது, நிறுத்தமுறையானே ஈரசைகொண்டு சீரியைக்கிறு வான உணர்த்தி இனி மூவசைகொண்டு முடிவன உணர்த்துவா னெழுந்தான் அவற்றுள் இது வெண்பாவுரிச்சீர் முணர்த்து கின்றது.

இ—ள்: மேனின்ற அதிகாரத்து இயலசையாலாகிய இயற்சீ ரிறுதிக்கண் நேரசை பெறுவன கான்கும் வெண்பாவுரிச்சீரா மென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

உரிச்சீர் வெண்பா வெண்பாவுரிச்சீராகுமென மொழிமாற்றி யுரைக்க.

உதாரணம்:— நேர்நேர்நேர், நிரைநேர்நேர், நேர்நிரை நேர், நிரைநிரைநேர் என வரும். இவற்றை மாசெல்வாய், புளி செல்வாய், மாவருவாய், புளிவருவாய் எனவும், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் எனவும் வேறு வேறுதாரணங் காட்டுப. பிறவும் அவ்வாறு வருவன அறிந்து கொள்க.

1. ஈர்க்கு நீர்க்கு என்பவற்றில் ஒற்றிரண்டுங் கூடி வேறோ ரசையாகாதவாறுபோல கொங்கு குரங்கு என்னும் ஒற் றளபெடையும் ஓரோவழி வேறோர் அசையாகாது என்பதாம். அசைநிலைபெறுது என்பது வேறோரசையாகாது என்றிருத் தல்வேண்டும். பெறும் என்றுமிருக்கலாம்.

2. இஃது அசைநிலையாதல் என்றது இஃது சீர்நிலையாதல் என்றிருக்கவேண்டும். 'தானும் தன்னையொற்றிய எழுத்துங் கூடிச் சீர்நிலையாதலே பெரும்பான்மை' என்று இச் சூத்திர வுரையுள் முன்னும் வரல் நோக்குக. இஃது—ஒற்றளபெடை.

அவற்றுக்குச் செய்யுள் :—

[1] "காமன்கா ணென்று [2] கருஞாரா ரோராட்டத்
தாமந்தாழ் கோதை வருவாளோ—யாமு
[3] மிருகுடங்கை [4] யாலெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்.' (சிலப்—மேற்.)

இதனுட் 'காமன்காண்' எனவும் 'கருஞாரார்' எனவும் 'இருகுடங்கை' எனவும் 'யாலெதிரே' எனவும் நான்கு வெண் சீரும் வந்தன. இதுவும் ஆட்சியுங் குணனுங் காரணமாகப் பெற்ற பெயர்; வெண்பாவிற்கும் அகன் பகுதியாகிய கலிப்பா விற்கும் உரிமையாகலிற் குணங் காரணமாயிற்று. ஆட்சி :

"வெண்பா வரிச்சீ ராகிய வரிச்சீ
ரின்பா நோடிக் கொருங்குகில் லிலவே." (நநஉ)

எனவும் பிறவுண்டும். ஆளுமென்பது. மற்று இயற்சீரென்ற வழிப் பத்து இயற்சீருங் கொள்வரேமோவெனின், — அதற்கு விடை முன்னர்,

"இயலசை மயக்கம்." (நஉடு)

என்புழிச் சொல்லிப்போந்தாம். இயற்சீர் எனப் பொதுவகை யான் ஒதியவழி இயற்சீர் பத்துங் கொள்ளாது [5] இயலசை மயக்கமாகிய நான்கனையுங் கோடலும், ஆசிரியவரிச்சீரென்ற பொதுவகையான் ஒதியவழி ஆறனையுங் கொள்ளாது [6] உரி யசை மயக்கமாகிய கான்கனையுமே கோடலும் வேண்டுமெனின் பது. அஃது இச்சூத்திரத்தானும்,

"வெண்பா வரிச்சீ ராகிய வரிச்சீர்." (நஉடு)

என்பதனானும் பெறுதும். (கசு)

1. காமன்காண்—நேர்நேர்நேர்.
2. கருஞாரார்—நிரைநேர்நேர்.
3. இருகுடங்கை—நிரைநிரைநேர். சூ—வலெ.
4. யாலெதிரே—நேர்நிரைநேர்.
5. இயலசை மயக்கம் நான்கு :— நேர்நேர்
நேர்நிரை
நிரைநேர்
நிரைநிரை என்பன.
6. உரியசை மயக்கம் நான்கு :— நேர்புநேர்பு
நேர்புநிரைபு
நிரைபுநேர்பு
நிரைபுநிரைபு என்பன.

[வஞ்சிச்சீர் இதுவெனல்]

நஉட. வஞ்சிச் சீரென வகைபெற் றனவே
வெண்சீ ரல்லா மூவசை யான.

இஃது, ஒழிந்த மூவசைச்சீர் உணர்த்துகின்றது.

இ—ள்: வஞ்சிச்சீரெனக் கூறுபடுக்கப்பட்டன, மேற்கூறிய வெண்சீரல்லா மூவசைச்சீரெல்லாம் என்றவாறு.

[1] நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கனையும் மூன்றுபடியான் இழியவைத்து, முதற்கணின்ற நான்கசையையும் இடைநின்ற நான்கனோடு ஒரோவொன்று நான்காகக் கூட்டி, [2] இறுதி நின்ற நான்கசையோடும் ஒரோவொன்றற்குப் பதினாறாக

1. நேர்பு முதலிய நான்கையும் மூன்றுபடியான் இழிய வைத்தலாவது:-

முதல் (க)	இடை (உ)	கடை (ங)	
1. நேர்	நேர்	நேர்	என வைத்தல்.
2. நிரை	நிரை	நிரை	
3. நேர்பு	நேர்பு	நேர்பு	
4. நிரைபு	நிரைபு	நிரைபு	

	முதல்	இடை
1.	(1) நேர்	1. நேர்
	(1) நேர்	2. நிரை
	(1) நேர்	3. நேர்பு
	(1) நேர்	4. நிரைபு

முதல் நேரொடு இடை நான்குங் கூடின.

	முதல்	இடை
2.	(2) நிரை	1. நேர்
	(2) நிரை	2. நிரை
	(2) நிரை	3. நேர்பு
	(2) நிரை	4. நிரைபு

முதல் நிரையொடு இடை நான்குங் கூடின.

	முதல்	இடை
3.	(3) நேர்பு	1. நேர்
	(3) நேர்பு	2. நிரை
	(3) நேர்பு	3. நேர்பு
	(3) நேர்பு	4. நிரைபு

முதல் நேர்பொடு இடை நான்குங் கூடின.

	முதல்	இடை
4.	(4) நிரைபு	1. நேர்
	(4) நிரைபு	2. நிரை
	(4) நிரைபு	3. நேர்பு
	(4) நிரைபு	4. நிரைபு

முதல் நிரையொடு இடை நான்குங் கூடின.

இவை பதினாறுமாறு காண்க.

2. இறுதி நின்ற நான்கசையோடும் ஒரோவொன்றற்குப் பதினாறாக நாற்காலுமுழ என்றதனால் முன்கூட்டிய பதினாறு

ருக நாற்காலுறழ அறுபத்துநான்கு மூவசைச்சீர் பிறக்கும். அவற்றுள், இயலசைமருங்கின் [1] நேரிறுவன காண்கு சீருள; அவை முன்னர் (நூஙக) வெண்சீர் நான்கெனக் கூறப்பட்டன. ஒழிந்த மூவசைச் சீர்களெல்லாம் வஞ்சியுரிச்சீரெனப்படும் என்ற வாறு. அவை அறுபதுவகைப்படும்.

உதாரணம்: நேர் நேர் நேர், நேர் நிரை நேர், நேர் நேர்பு நேர், நேர் நிரைபு நேர் எனவும்; நிரை நேர் நேர், நிரை நிரை நேர், நிரை நேர்பு நேர், நிரை நிரைபு நேர் எனவும்; நேர்பு நேர் நேர், நேர்பு நிரை நேர், நேர்பு நேர்பு நேர், நேர்பு நிரைபு நேர் எனவும்; நிரைபு நேர் நேர், நிரைபு நிரை நேர், நிரைபு நேர்பு நேர், நிரைபு நிரைபு நேர் எனவும்; இவை நேரீற்று மூவசைச்சீர் பதினாறு. இவற்றுள் வெண்சீரென மேற்காட்டிய நான்குமொழித்து ஒழிந்த பன்னிரண்டும் வஞ்சியுரிச்சீர். இனி நிரையீற்று மூவசைச்சீர் பதினாறும் வருமாறு:— நேர் நேர் நிரை, நேர் நிரை நிரை, நேர் நேர்பு நிரை, நேர் நிரைபு நிரை எனவும்; நிரை நேர் நிரை, நிரை நிரை நிரை, நிரை நேர்பு நிரை, நிரை நிரைபு நிரை எனவும்; நேர்பு நேர் நிரை, நேர்பு நிரை நிரை, நேர்பு நேர்பு நிரை, நேர்பு நிரைபு நிரை எனவும்; நிரைபு நேர் நிரை, நிரைபு நிரை நிரை, நிரைபு நேர்பு நிரை, நிரைபு நிரைபு நிரை எனவும்; நிரையீற்றுச்சீர் பதினாறும் வந்தன. நேர் நேர் நேர்பு, நேர் நிரை நேர்பு, நேர் நேர்பு நேர்பு, நேர் நிரைபு நேர்பு எனவும்; நிரை நேர் நேர்பு, நிரை நிரை நேர்பு, நிரை நேர்பு நேர்பு, நிரை நிரைபு நேர்பு எனவும்; நேர்பு நேர் நேர்பு, நேர்பு

சீரோடும் பின்னின்ற நேர் நிரை நேர்பு நிரைபு முதலிய நான்கையும் தனித்தனி கூட்ட $4 \times 16 = 64$ ஆகும் என்றபடி. அறுபத்துநான்கும் பின் கூறப்படுமாறு காண்க. இறுதி நின்ற நான்கசையோடும் உறழ என்க.

1. நேரிறு நான்காவன:—

நேர் நேர் நேர்	இவை நான்கும் வெண்சீர்.
நேர் நிரை நேர்	
நிரை நேர் நேர்	இவை வஞ்சிக்கு வரா.
நிரை நிரை நேர்	

ஒழிந்த அறுபதும் வஞ்சிச்சீர் எனப்படும். அவை பின் வருவன்றன.

நிரை நேர்பு, நேர்பு நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு நேர்பு எனவும்; நிரைபு நேர்பு நேர்பு, நிரைபு நிரை நேர்பு, நிரைபு நேர்பு நேர்பு, நிரைபு நிரைபு நேர்பு எனவும்; இவை நேர்பீற்றுச்சீர் பதினாறும் வந்தன. நேர் நேர் நிரைபு, நேர் நிரை நிரைபு, நேர் நேர்பு நிரைபு, நேர் நிரைபு நிரைபு எனவும்; நிரை நேர் நிரைபு, நிரை நிரை நிரைபு, நிரை நேர்பு நிரைபு, நிரை நிரைபு நிரைபு எனவும்; நேர்பு நேர் நிரைபு, நேர்பு நிரை நிரைபு, நேர்பு நேர்பு நிரைபு, நேர்பு நிரைபு நிரைபு எனவும்; நிரைபு நேர் நிரைபு, நிரைபு நிரை நிரைபு, நிரைபு நேர்பு நிரைபு, நிரைபு நிரைபு நிரைபு எனவும் இவை நிரைபீற்றுச்சீர் பதினாறும் வந்தன. நேரீற்று வஞ்சியுரிச்சீர் பன்னிரண்டும் நிரைபீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறும் நேர்பீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறும் நிரைபீற்று வஞ்சியுரிச்சீர் பதினாறுமாக வஞ்சியுரிச்சீர் அறுபதும் வந்தன. அவற்றுக்குச் செய்யுள்:—

1 "மேற்கோட்டுநீர் கீழ்ப்பரந்துதன்
விழக்கோட்டுமெய் வியல்விசும்புதோய்ந்
தோங்குமுன்னர்க் காம்புகழியப்
பாய்ந்துசென்றுசென் ருங்குநிலைபுகின்
றெறிர்த்துமீண்டாங் கதிர்த்துக்கரைகொள்
றலங்குகோட்டுமுக் திலங்குநிலவுச்செய்
தூர்நிரைக்காளிர் பரக்குந்தண்டலை
மூதூரோனே பேரிசைவளவன்
சுரம்படர்ந்து வருந்துவதெவனோ
நிரம்பாவாழ்க்கைப் பாணர்க்கடும்போ."

நேரீறு பன்னிரண்டாவன:—

1. மேற்கோட்டுநீர்—நேர் நேர்பு நேர் 1 } நேர் முதல் நேரீறு 2
கீழ்ப்பரந்துதன்—நேர் நிரைபு நேர் 2 }

விழக்கோட்டுமெய்—நிரை நேர்பு நேர் 1 } நிரைமுதல் நேரீறு
வியல்விசும்புதோய்—நிரை நிரைபு நேர் 2 } 2—4

ஓங்குமுன்னர்—நேர்பு நேர் நேர் }
காம்புகழிய—நேர்பு நிரை நேர் } நேர்பு முதல்
பாய்ந்துசென்றுசென்—நேர்பு நேர்பு நேர் } நேரீறு 4
ருங்குநிலைபுகின்—நேர்பு நிரைபு நேர் }

றெறிர்த்துமீண்டாங்—நிரைபு நேர் நேர் }
கதிர்த்துக்கரைகொள்—நிரைபு நிரை நேர் } நிரைபு முதல்
றலங்குகோட்டுமுக்—நிரைபு நேர்பு நேர் } நேரீறு 4
திலங்குநிலவுச்செய்—நிரைபு நிரைபு நேர் }

இவை 12-ம் நேரீற்று வஞ்சியுரிச்சீர்.

இதனுள், நேரீற்று மூவசைச்சீர் பதினுள்ளும் வெண்பா வுரிச்சீர் நான்குமொழித்து ஒழிந்த பன்னிரண்டு வஞ்சியுரிச் சீரும் முறையானே வந்தன.

1 "தண்டண்டகீலத் தாதுறைத்தலின்
வண்டோட்டுவயல் வாய்புகைபுகரந்
தயலாகீலயி னறைக்கடிகையின்
வழிபோகுவர மறித்துருபுளைர்ந்
தேங்குசென்னிகீல வாங்குகதிர்தீஇ
போதுதூங்குகீல மீதுபுகுந்துபுகுந்
தொடுங்குசெய்தொழில் வழங்குகிளிக்குமூரந்
திருந்துகோட்டுமிசைக் குரங்குவிருந்துகொளு
நன்னர்நன்ற டென்னருளகொல்
பொன்னிநன்னாட்டுப் பொருநனெங்கோள்
முடோய் நடக்கைமல்ல
னூடுகெழுதிருவிற் பிடுகெழுவேந்தே."

இதனுள், நிரையீற்று வஞ்சியுரிச்சீர் பதினுறும் வந்தன.

2 "வான்பொய்யாது நீம்பெயல்பெய்து
மால்யாறுபோந்து கால்சுரந்துபாய்ந்து
சுரைபொய்யாது நிறைவளஞ்சான்று
வரையாதுதந்து பலாப்பழுத்துநிர்ந்து
பாம்புகொள்ளாது வீங்குசுடர்ஞீண்டு
வீத்துநாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புதீங்குமஞ்சு துயின்றுபெயர்ந்துபோந்து
வாழையோங்கிய கோழிலைபாக்குந்
தண்டாரயாளைத் தெண்படலன்னும்
பழனநாடுண்டு கடலதுதாக்கிக்
குடிபுறந் தருஉம்வேந்த
னெடுநிலைத்தண்ணுடை நிழற்றுநாடே."

இதனுள், நேர்பசையிறுதியாகிய பதினுறு வஞ்சியுரிச் சீரும் முறையானே வந்தன.

1 "நீற்றமிகுபு செல்வினஞ்நிறந்து
கூற்றெருத்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவு பொலங்கொடியெடுத்துப்
புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேந்துமீதணிபு போந்துபடத்தொடுத்து
வீற்றுவீற்றுப்புணர்ந்து வேற்றுச்சுரும்புளர்ந்து

நிரையீறு பதினுறும் வருமாறு :—

1. தண்டண்டகீல—நேர் நேர் நிரை
தாதுறைத்தலின்—நேர் நிரை நிரை
வண்டோட்டுவயல்—நேர் நேர்பு நிரை
வாய்புகைபுகரந்—நேர் நிரைபு நிரை
} நேர் முதல் நிரையீறு 4

தயலாகீலயி—நிரை நேர் நிரை
னறைக்கடிகையின்—நிரை நிரை நிரை
வழிபோகுவர—நிரை நேர்பு நிரை
மறித்துருபுளைர்ந்—நிரை நிரைபு நிரை
} நிரைமுதல் நிரையீறு 4

தேங்குசென்னிகீல—நேர்பு நேர் நிரை
வாங்குகதிர்தீஇ—நேர்பு நிரை நிரை
போதுதூங்குகீல—நேர்பு நேர்பு நிரை
மீதுபுகுந்துபுகுந்—நேர்பு நிரைபு நிரை
} நேர்புமுதல் நிரையீறு 4

தொடுங்குசெய்தொழில்—நிரைபு நேர் நிரை
வழங்குகிளிக்குமூரந்—நிரைபு நிரை நிரை
திருந்துகோட்டுமிசைக்—நிரைபு நேர்பு நிரை
குரங்குவிருந்துகொளு—நிரைபு நிரைபு நிரை
} நிரைபு முதல் நிரையீறு 4

நேர்பீறு பதினுறும் வருமாறு :—

2. வான்பொய்யாது—நேர் நேர் நேர்பு
நீம்பெயல்பெய்து—நேர் நிரை நேர்பு
மால்யாறுபோந்து—நேர் நேர்பு நேர்பு
கால்சுரந்துபாய்ந்து—நேர் நிரைபு நேர்பு
} நேர்முதல் நேர்பீறு 4

வித்துநாறுவாய்த்து முத்துக்கரும்புபூத்து
வரம்புகொள்ளாது நிரம்புபெருங்கூட்டு
விசும்புதீங்குமஞ்சு துயின்றுபெயர்ந்துபோந்து
வாழையோங்கிய கோழிலைபாக்குந்
தண்டாரயாளைத் தெண்படலன்னும்
பழனநாடுண்டு கடலதுதாக்கிக்
குடிபுறந் தருஉம்வேந்த
னெடுநிலைத்தண்ணுடை நிழற்றுநாடே."

இதனுள், நேர்பசையிறுதியாகிய பதினுறு வஞ்சியுரிச் சீரும் முறையானே வந்தன.

1 "நீற்றமிகுபு செல்வினஞ்நிறந்து
கூற்றெருத்துவிரைபு கோள்குறித்துமுயன்று
புலிப்போத்துலவு பொலங்கொடியெடுத்துப்
புகலேற்றுமலைந்து பகையரசுதொலைத்து
வேந்துமீதணிபு போந்துபடத்தொடுத்து
வீற்றுவீற்றுப்புணர்ந்து வேற்றுச்சுரும்புளர்ந்து

சுரைபொய்யாது—நிரை நேர் நேர்பு
நிறைவளஞ்சான்று—நிரை நிரை நேர்பு
வரையாதுதந்து—நிரை நேர்பு நேர்பு
பலாப்பழுத்துநிர்ந்து—நிரை நிரைபு நேர்பு
} நிரை முதல் நேர்பீறு 4

பாம்புகொள்ளாது—நேர்பு நேர் நேர்பு
வீங்குசுடர்ஞீண்டு—நேர்பு நிரை நேர்பு
வீத்துநாறுவாய்த்து—நேர்பு நேர்பு நேர்பு
முத்துக்கரும்புபூத்து—நேர்பு நிரைபு நேர்பு
} நேர்பு முதல் நேர்பீறு 4

வரம்புகொள்ளாது—நிரைபு நேர் நேர்பு
நிரம்புபெருங்கூட்டு—நிரைபு நிரை நேர்பு
விசும்புதீங்குமஞ்சு—நிரைபு நேர்பு நேர்பு
துயின்றுபெயர்ந்துபோந்து—நிரைபு நிரைபு நேர்பு
} நிரைபு முதல் நேர் பீறு 4

நிரைபீறு பதினுறும் வருமாறு :—

1. நீற்றமிகுபு—நேர் நேர் நிரைபு
செல்வினஞ்நிறந்து—நேர் நிரை நிரைபு
கூற்றெருத்துவிரைபு—நேர் நேர்பு நிரைபு
கோள்குறித்துமுயன்று—நேர் நிரைபு நிரைபு
} நேர் முதல் நிரைபீறு 4

புலிப்போத்துலவு—நிரை நேர் நிரைபு
பொலங்கொடியெடுத்து—நிரை நிரை நிரைபு
புகலேற்றுமலைந்து—நிரை நேர்பு நிரைபு
பகையரசுதொலைத்து—நிரை நிரைபு நிரைபு
} நிரை முதல் நிரைபீறு 4

வேந்துமீதணிபு—நேர்பு நேர் நிரைபு
போந்துபடத்தொடுத்து—நேர்பு நிரை நிரைபு
வீற்றுவீற்றுப்புணர்ந்து—நேர்பு நேர்பு நிரைபு
வேற்றுச்சுரும்புளர்ந்து—நேர்பு நிரை நிரைபு
} நேர்பு முதல் நிரைபீறு 4

களிறுகால்பெயர்ந்து குளிறுகுரல்படைத்துச்
சொரிந்துதூங்குகடாத்து விரைந்துமலைந்துதொலைந்து
மைக்கமாரமோடு கயங்கச்சூடிய
வென்வேற்செல்லி பொன்னியம்புனைகழல்
பாடுபெறு பாணிஞன்பலவே
பாடாதோடிய நாடுகெழுவேந்தே."

இதனுள், நிரைபிற்று வஞ்சியுரிச்சீர் பதினொன்றும் முறையானே வந்தன. (உ0)

[வஞ்சிச்சீர் ஏனைப்பாவின் பெரும்பான்மையும் வராவெனல்]

கூகூ. தன்பா வல்வரிந் தாளை யின்றே.

இஃது, அவற்றைப் பாவிற்குரிமை கூறுகின்றது.

இ—ள்: இவ்வாறுபத்து வஞ்சியுரிச்சீரும், தன்பாவினு ளல்லாத ஆசிரியம் வெண்பாக் கலியினுள் வாரா என்றவாறு.

சிறுபான்மையான் ஆவன முன்னர்ச் சொல்லுதும். [1] இவை ஆசிரியவுரிச்சீர் தூங்கலோசையாக்குமாறுபோல, ஆசிரிய வோசையும் ஆக்குங்கொல்லெனின்,—ஆக்காவென்பது இதனது பயன். (உக)

[ஆசிரிய உரிச்சீரும் வெண்பா உரிச்சீரும் வஞ்சிப்பாவையாக்குமெனல்]

கூகூ. [2] வஞ்சி மருங்கி [3] னெஞ்சிய வியை.

இது, மற்றைச்சீர் மயங்குமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வஞ்சியுரிச்சீர் பிற பாக்களே ஆக்காதவாறு போலாது ஒழிந்த ஆசிரியவுரிச்சீரும் வெண்பாவுரிச்சீரும் இவ் வஞ்சிப்பாவினையாக்கும் என்றவாறு.

உரிச்சீர் மேலதிகாரமாகலான் எஞ்சிய என இவ்விரண் டனையுமே கொண்டாமென்பது. வஞ்சியது பாவினை வஞ்சி என்

களிறுகால்பெயர்ந்து—நிரைபு நேர் நிரைபு	நிரைபு முதல் நிரை பிறு 4
குளிறுகுரல்படைத்து—நிரைபு நிரை நிரைபு	
சொரிந்துதூங்குகடாத்து—நிரைபு நேர்பு நிரைபு	
விரைந்துமலைந்துதொலைந்து—நிரைபு நிரைபு நிரைபு	

இவை அறுபதும் வஞ்சியுரிச்சீர்.

1. இவை ஆக்குங்கொல் எவின்? ஆக்கா என இயைக்க. இவ்வஞ்சிக்குரிய அறுபது சீரும் ஆசிரிய முதலிய ஏனைப் பாக்களில் வாரா என்றபடி.

2. வஞ்சி—வஞ்சிப்பா.

3. எஞ்சிய—வஞ்சி ஒழிந்த வெண்பாவும் ஆசிரியமும்.

ரூன் ஆகுபெயரான். மற்றுச் சீர் கூறும்வழிப் பாக் கூறுவ தென்னையெனின்,—அப்பாவினை யாக்குவன சீராகலிற் [1] சீரிலக் கணம் எய்துமென்பது. அவையாமாறு:

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
நிரைநிரைத்து தெற்கேகினும்
கற்பாடிய தனியுளைவின்."
(பட்டின. க-ங)

எனத் [2] தன்சீர் வாழ் தூங்கலோசை பிறக்கது.

"நாற்றாமரைத் நண்டண்டலீ." (பொருந. கசக)

எனபதும்,

"புட்டேம்பப் புயன்மாறி." (பட்டின. ச)

என்பதும் வெண்பாவுரிச்சீரால் தூங்கலோசை பிறக்கது.

"புட்டேம்பப் புயன்மாறி."

என்புழி,

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்."

எனத் தனதுசீராலே தூங்கலோசை பிறக்காங்குப் பிறக்கது.

[3] "நிரைநிரைத்து தெற்கேகினும்."

என, இயற்சீர் நிற்பத் தன்சீராலே தூங்கலோசை பிறக்கது.

[4] "புள்ளுந்துயின்று புலம்புகூர்ந்து."

என, ஆசிரியவுரிச்சீரான் வஞ்சித்தூக்காயிற்று. பிறவும் அன்ன. (உஉ)

[கட்டளையடிக்கண் ஆசிரியப்பாவுள் வாராத சீர்கள் இவையெனல்]

கூகூஉ. வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
ரின்பா நேரடிக் கொருங்குரிலை யிலவே.

இது, கட்டளையாசிரியப்பாவினுள் அடியுறழப்படாத சீர் இவையென்கின்றது.

1. சீரிலக்கணம் எய்தும் என்றது—சீரிலக்கணத்தைப் பாவும் எய்துமென்றபடி.

2. தன்சீர் என்றது—வஞ்சிச்சீரை.

3. நிரைநிரைத்து—நிரைநிரைபு. உரியசை மயங்கிய இயற் சீர். இது நின்றசீர். தெற்கேகினும்—வஞ்சிச்சீர். இது வந்தசீர். இது வரலிற்றூங்கலோசை பிறந்ததென்றபடி.

4. புள்ளுந் துயின்று—, நேர்பு நிரைபு.—(ஒற்றொருடுந் தோன்றி நின்றது) புலம்பு கூர்ந்து—நிரைபு நேர்பு. } ஆசிரிய உரிச்சீர்.

இ—ள்: வெண்சீரும் ஆசிரியவுரிச்சீரும் ஆசிரியப்பாவிற்கு ஒப்பவரும் நிலை இல என்றவாறு.

'இன்பா நேரடி' என்பது ஆசிரியவடியென்றவாறு. ஒருங்கு என்றதனான் இயற்சீராகிய தன்சீரேபோல வெண்சீரும் வரா தென்பதாம். இயலசை மயங்கினவே இயற்சீர் எனப்படுவன எனவும் உரியசை மயங்கினவே ஆசிரியவுரிச்சீர் எனப்படுவன எனவும் [1] முன்னர்ச் சொல்லிப்போந்தாஞகலின் ஈண்டு உரியசை மயக்கத்தினையே ஆசிரியவுரிச்சீரென்றான். [2] எனவே நீடுகொடி குளிறுபுலி என்னுமிரண் டாசிரியவுரிச்சீரும் ஆசிரியத்து வந்து அடியுறழுமென்பது ஈண்டுக் கொள்ளப்படும்.

'முன்னிசை யுறினு மன்ன வாகும்' என்ற மாட்டேற்றான் [3] இயற்சீர்த்தன்மை சிறுபான்மைவகையான் எய்துவித்ததூஉம் இப்பயன் நோக்கியாயிற்று. இக்கருத்து நோக்கிப்போலும்,

'கலித்தளை மருங்கிற் கடியவும்படா' என்றவும்மை [4] இறந்தது தழீஇயிற்றுமாமென்பது. இனி ஒரு சாரார் வெண்சீரும் ஆசிரியப்பாவினுள் வருங்கால் இயற்சீரிடையிட்டன்றி ஈட னியைந்து வாராவென்ப. அங்ஙனங் கொள்ளிற் கட்டளையடிக் கண்ணும் ஆசிரியவடியுள் வெண்சீரும் வந்து உறழப்பெறு மென்றலும். அல்லாதவடிக்காயின் அது [5] போக்கி,

"இன்சீ ரியைய வருவ தாயின்
வெண்சீர் வரையார் ஆசிரிய வடிக்கே."

என்புழிக் கூறப்படுமென்பது. ஈண்டு [6] நேரடிக்கென்பது கட் டளையடிக்கென்றவாறு. (உக)

1. முன்னர் என்றது—கூ-ம் சூத்திரத்தை.

2. நேர்புநேர்பு; நேர்புநிரைபு; நிரைபுநேர்பு நிரைபுநிரைபு; என்னும் உரியசை மயக்கமாகிய ஆசிரியவுரிச்சீர் நான்கையும் விலக்கலே, நிரையிற்றுசிரிய உரிச்சீரிரண்டும் வருமென்பது பெற்றும். அவையிரண்டுமாவன நீடுகொடி குளிறுபுலி.

3. இயற்சீர்த் தன்மை சிறுபான்மை எய்துவித்தது என் றது, இயற்சீரோடு மாட்டிளமையை. மாட்டினமையால் ஆசிரி யத்து வந்து அடியுறழுமென்பது பயனுயிற்று.

4. இறந்ததுதழீஇயிற்று என்றது நிரையிற்றுசிரியச் சீரிரண்டும் ஆசிரியத்திலன்றிக் கலித்தளையிலும் நீக்கப்படா எனத் தழீஇ நின்றமையை. வருஞ் சூத்திர உரை நோக்குக.

5. போக்கி—கழித்து.—பின்னே என்றபடி.

6. நேரடி—அளவடி. என்றது கட்டளை அளவடியை.

[நிரையிற்றுசிரியவுரிச்சீர் கலியுள்ளும் மயங்குமென்ல்]

உக. கலித்தளை மருங்கிற் கடியவும் படா.

இது கலிப்பாவிற் சீர் மயங்குமாறுணர்த்திற்று.

இ—ள்: மேல் ஆசிரியவடி யுறழ்தற்கண் விலக்கப்படாத நிரையிற்றுசிரியவுரிச்சீர் ஈண்டுங் கலிப்பாவினடங்குங்காற் கடி தலுமுடைய கொல்லென்பதன் ஈண்டும் அவை விலக்கப்படா என்றவாறு.

எனவே, நிரையிற்றுசிரியவுரிச்சீர் இரண்டுங் கலியடி யுறழ் வனவாயின. கடியவும்படா வென்பது இறந்தது தழீஇய எச்ச வும்மை, ஆசிரியத்திற் கடியப்படாவாகலேயன்றி ஈண்டுக் கடி தலும்படா வென்றமையின். [1] கலித்தளை மருங்கினென்பது வினை செய்யிடத்துக்கண் ஏழாவது வந்தது; தளைத்தலென்பது சீர்த் தொழிலாகலின். [2] அல்லாக்கால் இரு சாரானுமெதிர் தளை யிடைதொடப் பிறிதொருசீர் ஆண்டு வரல்வேண்டுமென மறுக்க. மற்றுக் கலித்தளை மருங்கின் வெண்சீர் வருக என்னுமேனு மென்? அது சொல்லவேண்டுமோ? ஆசிரியத்துக் தன்சீர் வாராதன கூறுவதன்றி வருமென்பது கூறுன்; வெண்பாவிற்கு மல்லாதே வெண்சீர் வருமென விதந்தோதாதான்; அதுபோல [3] அதனியற்றுகிய கலிப்பாவிற்கும் வெண்சீர் வருமென விதந்தோதாதல் வேண்டுமென்று, வஞ்சிப்பாவுக்குப் போல வேறு சிறப்பின்மையின் என்பது. அஃதேல், 'வஞ்சி மருங்கி னஞ்சிய வியல' என வஞ்சிப்பாவினுள் ஆசிரியவுரிச்சீர் வருமென்று கூறல் வேண்டாவெனின், வேண்டுமன்றே? வெண்சீர் வருமென விதந்தோதாதவாறன், ஆசிரியவுரிச்சீர்

1. கலித்தளை மருங்கின்—தெரிநிலைவினை தோன்றத் தளைத் தற்கண் எனப் பொருள்படும். இது வினை செய்யிடம். "ஏழா குவதே—கண்.....வினை செய்யிடத்தி னிலத்தின் காலத்தின்..... தோன்றுமதுவே" என்னும் (சொ. வேற்-20) சூத்திரம் நோக்குக.

2. அல்லாக்கால்—தளைத்தல் என்று கொள்ளாவிட்டால்.

3. அதனியற்று என்றது வெண்பாவினியல்பினது என்ற படி. எனவே வெண்பாவினியல்பினதே கலியுமாதலின் வெண் சீர் வருமென்று விதந்து சொல்லவேண்டியதில்லை என்பது கருத்து.

ஆண்டு [1] விலக்குண்ணுமாகலி னென்பது. [2] அவற்றுக்குச் செய்யுள் :

[3] 'ஓங்குவரை யடுக்கத்துப்பாய்ந் துயிர்செகுக்நந் துறைவகேள்.'
எனவும்,

[4] 'விளங்குமணிப் பகம்பொன்விள் வியலறைமேல் விரியாடி.
எனவும் நிரையீற்றுகியவழிச்சீர் கலிப்பாவினுள் வந்தன.

'வஞ்சியேன் என்றவன்றன் னருளைத்தான் யானவனே'
எனவும்,

'அறிதாய வறனெய்தி அருளியோர்க் களித்தலும்'
எனவும் [5] இவையிரண்டும் வெண்பாவினைத் தொகுக்கப்படுதலின் வெண்சீர் என்னுஞ் சொல்லின் முடியுமிலக்கணத்தான் [6] விதந் தோதாமேயும் [7] அவ்விரு பாவிற்குமுரியவாயின. மற்றுக் கலி மருங்கினெண்ணுது நேமருங்கு னென்றதென்னையெனின்? இவ் வாராய்ச்சியுடையன கட்டளையடி யென்றறிதன்பது. எனவே, நேர் யென்றோதுவனவெல்லாம் கட்டளையடியையே கோக்குமென்பது பெற்றும். இங்ஙனம் வரையறையுடையன கட்டளையடியெனவே [8] அல்லாத அடிக்கண் [9] ஒழிந்த ஆசிரியவரிச்சீரும் வருமென் பது பெறுதுமென்பது. மற்றுக் கட்டளையடியல்லாத வாசிரிய அடியுள் உரியசை மயங்கிய ஆசிரியவரிச்சீரும் வருமென்பதூஉங் கூறுகவெனின், அவை விலக்குண்டது கட்டளையடிக்காதலின் விலக்காதவழிக் தன்சீர் வருதல் விதந்தோதல் வேண்டாவென் பது முற்கூறியவாறே கொள்க. (உச)

1. விலக்குண்ணுமாகலின் ஒதுவான் (ஒதுபவன்) கூறல் வேண்டுமென்றே எனை யெனைக்க.
2. அவற்றுக்கு — நிரைநீற்றுவரிச்சொல் வருவனவற்றிற்கு.
3. ஓங்குவரை—நேர்புறை=நாணுத்தளை.
4. விளங்குமணி—நிரைபுறை—குளிறுபுலி.
5. இவை—இவ்வடிகள். வெண்சீர் என்ற சொல்லானே வெண்பாவுக்குரிய சீர் என அதிலிலக்கணமும் முடிக்கப்படும். எனவே வெண்சீர் ஒன்றுது வருதலே கலியாதலின் அதற்கும் அவ் விலக்கண மமையும்; விதந்து கூறல்வேண்டாம் என்றபடி. இங் ஙனே சூத்திரவரையுள் இவ்வரையாசிரியர் முன்னுங் கூறல் காண்க.
6. விதந்தோதல்—சூத்திரத்தான் விதந்து கூறல்.
7. அவ்விருபா—வெண்பா, கலிப்பா.
8. அல்லாத—கட்டளையடியல்லாத.
9. ஒழிந்த—நேர்புறையும், நிரைபுறையும் அல்லாத ஆசிரியவரிச்சீர்.

[நேரீற்றியற்சீர் கலிப்பாவின்கண் கட்டளையடியுள் வாராவெனல்]

கூகூ. கனித்தனை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்றே நெரிபு மோர்க்கே.

இதுவும் கட்டளையடிக்கெண்ணப்பட்டதோர் சீர் வரையறை.

இ—ள்: கனித்தனையடிவயின் — கலிப்பாவினது கட்டளை யடிக்கண், நேரீற்றியற்சீர்நிலைக்கு உரித்தன்று—தேமா புளிமா என்னுமிரண்டியற்சீரும் வாரற்பாற்று, தெரிபுமோர்க்கே—துள்ள லோசையைத் தெரிந்தவர்க்கு என்றவாறு.

ஆகாவென்றவற்றைக் காட்டளவாதலில்லை, ஆகாவென்பதல் லது. கட்டளையடிக்கண் வரைந்தோதலே அல்லனவற்றுக்கண் வருமென்பதாம். அவை :—

'பாஅ லஞ்சொலிப் பகைந்தான் மாவிரை'
எனவும்,

'உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை'
எனவும்,

'சுரமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்'
என்னும் கலியடியுள் வந்தன. [1] இயற்சீர் பத்துள்ளும் இவை யிரண்டனையும் கலிக்கண் வாராவெனலே, ஒழிந்த ஆசிரியத் துள்ளும் வெண்பாவுள்ளும் பத்தியற்சீரும் [2] வேறுவேறு வந்து அடியுறழுமென்பதூஉம், இதற்காயின் [3] எட்டியற்சீர் அடியுறழு மென்பதூஉம் கூறினனும். எனவே ஆசிரியம் இயற்சீர் பத் தும் ஆசிரியவரிச்சீர் இரண்டுமெனப் பன்னிரண்டுசீர் பெறுவ தாயிற்று. வெண்பாவும் இயற்சீர் பத்தும் வெண்சீர் நான்கு மெனப் பதினான்குசீர் பெறுவதாயிற்று. கலிப்பா [4] வடியின் இயற் சீரெட்டும், வெண்சீர் நான்கும், ஆசிரியவரிச்சீர் இரண்டுமெனப் பதினான்குசீர் பெறுவதாயிற்று.

1. இயற்சீர் பத்தாவன :— தேமா, புளிமா, கணவிரி, பாதிரி, (325) சேற்றுக்கால், கனிற்றுத்தாள், (327) போரேறு, பூம்நாகு, கடியாறு, மழகளிறு. (328) ஆசிரியவரிச்சீரிரண்டு— நீடுகொடி, குளிறுபுலி. இவைகள் வெண்பாவுக்குரியன.
2. வேறுவேறு வந்து—கனித்தனி வந்து.
3. கலிக்குரியன தேமா புளிமா ஒழிந்த இயற்சீரெட்டும்.
4. அடியின் என்பது வேண்டியதில்லை.

இனி, வஞ்சிப்பாவிற்கும் 'வஞ்சி மருங்கி னெஞ்சிய வியல' என முற்கூறியவாற்றுன் [1] ஈரசைச்சீர் பதினறும் மூவசைச்சீர் அறுபத்துநான்குமென எண்பது சிருங் கட்டளையடியல்வழி உரியவென வெய்துவித்தாம். அவற்றுள் தேமா புளிமா என்னு மிரண்டுசிரும் ஆகாத இடம் இனிச் சொல்லுகின்றுன். (உடு)

[நேரீற்றியற்சீர் வஞ்சிப்பாவினும் அடிமுதற்கண் நாங்கலோசைப்பட்டு நில்லா எனல்]

கூகூஅ. வஞ்சி மருங்கினு மிறுதி நில்லா.

இது வஞ்சிப்பாவினுள் வாரா இயற்சீர் கூறுகின்றது.

இ—ள்: வஞ்சி மருங்கினும் — மேற்கூறிய இயற்சீரிரண்டும் வஞ்சிப்பாவினும், இறுதி நில்லா — [2]ஈற்றில் நிலைமைப்படா என்றவாறு.

வஞ்சித்தளை மருங்கினென்றது வஞ்சி மருங்கின்னென வாளாது கூறினுன் அதனுல் கட்டளையடிக்கல்லாமையின். வஞ்சிப்பாவினுட் சீர் வருங்கால் ஒழிந்த பாவிற்குப்போலச் சிறியைந்திறுதல் மாத்திரையன்றிச் சீர்தோறும் தம்முள் வேறுபாடு தோன்றத் தூங்கப்படும். அவ்வாறு தூங்கலோசைப்பட நில்லா தேமா புளிமாவென்னும் இரண்டு சீருமென்றவாறும். உம்மை இறந்தது தழீஇயிற்று. இறுதி நில்லாவென்பது இறுதலோடு நில்லா என்றவாறு. எனவே, தூங்கலோசைப்பட முதற்கண் வாரா வென்றவாறும். என்னை? இருசீரினுள் வருஞ் சீரோடு தொடருங்கால் இறுதற்றொழில் பெறுவது நின்ற சீராகலினென்பது. இதனுனே ஒழிந்த இயற்சீர் தூங்கலோசைப்பட நிற்குமென்றவாறும்.

"கொற்றக் கொடியுயரிய"

எனவும்,

---

1. ஈரசைச்சீர் பதினறுவன :— இயற்சீர் 4. உரிச்சீர் 4. நேர்நிரையை முதலாகக் கொண்ட நேர்பு நிரைபு ஈறு 4. நேர்பு நிரைபை முதலாகக் கொண்ட நேர் நிரையீறு 4. ஆக 16.

2. ஈற்றில் என்பது பின் இறுதலோடு நில்லா என்று விளக்கலின் ஈண்டும் இறுதலில் நில்லா என்றுணும் இற்று நில்லா என்றுணும் இருத்தல்வேண்டும். ஆசிரியர் காலத்து இறுதியில் இவ்விரு சீரும் வந்நில என்பது சூத்திரத்தான் அறியக் கிடக்கின்றது.

"கனியுங் காலொறிந்தன"

எனவும் நேரீற்றியற்சீர் முதற்கண் தூங்காவாயின.

"அகல்வயல் மலிவேலி நிலைமாலை வியன்கானல்."

என ஒழிந்த இயற்சீர் தூங்கினவென்பது. இவையுங் கட்டளையல்லவென்பது "அசையுஞ் சிரும்" என்பதனுன் அறிக. இறுதிக்கண் விலக்காமையின்,

"மண்டிணிந்த நிலனு நிலனேந்திய விசும்பும்"

என நேரீற்றியற்சீர் வந்தன.

இனி, ஈற்றுக்கண் வருதல் சிறுபான்மையென்பாரும், யாண்டும் இறுதிக்கண் வாராவென்பாரும் இச்சூத்திரத்தை யுரைக்குமாறு; வஞ்சியடி இறுதிக்கண் இவை வாராவெனப் பெரும்பான்மைபற்றி யோதினுன் எனவும் சொல்லுப. அவ்வாறு கூறின் முதற்கண் அவ்விருசீரும் வருதல் பெரும்பான்மையாதல் வேண்டுமென மறுக்க. என்றற்கு,

"தண்பால் வெங்கவி
ஞலிவே லிலங்குகடக்கை."

எனவும்,

"புன்காற் புளர்மருள்
போதவிழ்பு னஞ்சுமரை."

எனவும்,

"தேன்முரல் வங்கரும்பின்"

எனவும் வந்தனவாலெனின், அங்ஙனம் நவிந்து காட்டினவை அளபெடை வெண்சீராம்; அது கெடின் கருவியாக உணர்க. என்னை?

"கொற்றக் கொடி யுயரிய."

என அளபெடாதவழித் தூங்காமையின். அல்லதூஉம் நேரீற்றியற்சீர் [1] இறுதிக்கண் நிற்றல் பெரும்பான்மையெனப்படும்.

"மண்டிணிந்த நிலனு
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலீஇய தீயுந்
தீமுரணிய நீருமீ"

எனவும்,

1. இறுதி நில்லா என்பதற்கு இறுதலோடு நில்லா என்று பொருள் கோடற்குக் காரணம் கடைச்சங்க நூல்களே நோக்கியதாகலின் அது பொருந்தாது. இந்நூல் செய்த காலத்து இறுதியில் நில்லாதிருத்தல் வேண்டுமென்று கோடலே பொருத்தமாம். அங்ஙனமாயின் கடைச்சங்க நூல்களுக்கு இலக்கணம் இல்லாதொழியுமெனின், வாரா என்னுது நில்லா என்பதனும் சிறுபான்மை வருமெனக் கொண்டனர்போலும்.

ஆற்றுபட்ட டெங்கி
னுயர்ந் தோங்கிய வாயில்.''

எனவும் ஓரோ செய்யுட்கண்ணே பல வந்தமையினென்பது. மருங்கென்றதனானே [1] நேர்நிலை வஞ்சிப் பகுதிக்கே இவ்வை யுறை கொள்ளப்படும். கொள்ளவே [2] வியனிலை வஞ்சிக்கு இவ் வையுறை யின்றென்பது. மற்று 'மண்டிணிக்கநிலனுமி'ன் பது நேர்நிலை வஞ்சியாகலின் அடிநிலையோடு அடிக் கூட்டத் துக்கண் அகற்சிக் தூங்கலோசை கொள்ளுமா [3] றென்னை யெனின், அஃது இலக்கணை அடியான்மையின் ஈண்டாராய்ச்சி யின்றென்பது. நேர்நிலை வஞ்சியுள் இலக்கணை அடிக்கண் இயற்சீ ரெல்லாம் வாராவென்பது, ''குரலடி முகலா வளவடி காறும்'' என்புழிச் சொல்லுதும். (உசு)

[அசையுஞ் சீராமெனல்]

உ.சு.சு. இசைநிலை நிறைய நிற்குவ வாயி
னசைநிலை வரையார் சீர்நிலை பெறலே.

இது [4] நான்கசையுஞ் சீராகும் இடனுமுடைய என்கின்றது.

இ—ள்: ஓசை நிலைமையாற் சீர்க்கண்மைப்பட நிறைந்து நிற்குமாயின் அசைநிலைவைப்பட்ட கொற்களையெல்லாஞ் சீர் நிலைபெறுதற்கண் வரையார் என்றவாறு.

''கழுமுமா மன்னர்நங் கை''

என்று நேரசை சீராயிற்று.

''புனனுடன் பேரே வரும்''

என நிரையசை சீராயிற்று.

''எய்போற் டெந்தானென் னேறு''

என நேர்பசை சீராயிற்று.

''மேவாரை யட்ட களத்து.''

என நிரைபசை சீராயிற்று. பிறவுமன்ன.

இவற்றை உண்மைவகையாற் சீராமென்றுள் அல்லன்,

1. நேர்நிலை வஞ்சி—இரு சீரான் வருவது.
2. வியனிலை வஞ்சி—மூச்சீரான் வருவது.
3. என்னையெனின்—எவ்வாறு எனின்.
4. நான்கசையாவன—நேர், நிரை, நேர்பு, நிரைபு.

''தொடர்மொழி யெல்லா [1] நெட்டெழுத் தியல.''
(தொ. எழு. நூ0)

என்றுற்போலக் கூறினுன் என்பது. இவை இன்ன பாவினுள் வருமென்பது முன்னர்ச் சொல்லுதும். இங்ஙனங் கூறுக்கால் வெண்பாவின் ஈற்றடியை முச்சீரடி என்னுமாறு இல்லை என் பது. (உச)

[உரியசைச்சீரண்டும் இயற்சீருள் அடக்கித் தனி கொள்ளப்படுமெனல்]

உ.சு0. இயற்சீர்ப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தனிவகை சிதையாத் தன்மை யான.

இஃது எய்தியதொரு மருங்கு மறுத்தல் துதலிற்று; இய லசையிரண்டுஞ் சீர்நிலை பெறினும் தனி கொள்ளப்படாவென் றமையின். இனி, எய்தாததெய்துவித்துதலாம். என்னை? உரி யசைபாற் றனிகொள்ளுமா றுணர்த்தினமையின்.

இ—ள்: இயற்சீர்க்கண்ணே கூறுபடுத்து இயற்றப்படும், அவை தனிவகை சிதையாத் தன்மைக்கண் என்றவாறு.

பாற்படுத்தெனவே [2] அதிகாரத்தான் இறுதி நின்ற உரி யசையிரண்டும் பகுத்துக்கொள்ளப்படும்.

நான்கியற்சீருள் இன்ன இயற்சீர்ப்பாற் படுமென்றுணை னெனின்,

''தனித்தனி யடிவயி னேரீற் றியற்சீர்.'' (337)

என அதிகாரம் வருகின்றமையிற் றேமா புளிமாவென்னுஞ் சீர் போல [3] இரண்டசையுந் தனிகொள்ளுமென்றமையின் இயற் றாகவென்றுன் என்பது. தானை [4] இயல்வதன்மையின் இயற் றாகவெனப்பட்டது. தனிவகை சிதையாத் தன்மையானவென்று

1. நெட்டெழுத்தியல என்றதற்கு நெட்டெழுத்துப்போலக் கொள்ளப்படுமென்பதன்றி நெட்டெழுத்தென்பது கருத்தன்று. அதுபோல இவையுஞ் சீராகக் கொள்ளப்படுமென்றிச் சீரன்று என்றவாறு.
2. அதிகாரம் — இயற்சீரதிகாரம்; உரியசை யிரண்டுமே இயற்சீர்ப்பாற்படுத்தற்குரியவாதலின் அவையிரண்டுமே பகுத் துக் கொள்ளப்படுமென்றுர்.
3. நேர்பு—தேமா, நிரைபு—புளிமா என்று வைக்கப்படும்.
4. இயல்வதன்மை—இயற்சீராகாமை.

இடம் நியமித்ததென்னையெனின், சீர்வகையான் [1] அசைச்சீரென வேறுப் நிற்றலுடைய, தளைவகை சிதையாத் தன்மை நோக்கியே இயற்சீர்ப்பாற்படுத்து இயற்றலெனை அடங்கக் கூறிற் றென அறிவித்தற்கென வுணர்க.

இவ்வியலை யிரண்டுஞ் சீர்வகையான் வேறுவேறு எண்ணித் தொகைபெற்றுச் சமக்கு ஓரிய அடியுறழுமெனவும், [2] அஃதெண்ணப்பட்ட தளைவகை நோக்குங்கால் வேறுவேறிறண்ணுத் தொகை [3] பெற்று இயற்சீரெனவே யடங்குமெனவுங் கூறப்பட்டதாம். இன்னுந் தளைவகைக்கண்ணெனவே, கட்டளை யடிக்கண்ணதே இவ்வையறை யென்பதூஉம், அல்லாதவழி [4] இக்நான்கசையும் வையறையின்மையிற் றளைகொள்ளப்படா தென்பதூஉங் கூறப்பட்டதாம். அஃது [5] ஓரசைச்சீரல்லாத சீராயிற் கட்டளையடியல்லழியுந் தளைகொள்பவாகலினென், தளை கொள்ளிற் கட்டளையடி யெனப்படுமாதலின் அல்லாதவழி வந்த சீர் தளைகொண்டனவென்றல் பயனில் கூற்றுமென மதுக்க.

"உலக முவப்ப வலனேர்பு நிலைஇ" (முருகு. க)

என்றவழி, ஆசிரியத்துட் பிறதளை வந்ததென்று இலக்கணங் கூறி வழுவமைக்கவேண்டா. என்னை? அது பெருவரவிற்றாகலின். இதனுள் வருஞ் [6] சீர்வகையான் வந்ததென்று ஒழிதலே

---

1. நேர்பு நிரைபு இரண்டும் பெயரால் அசைச்சீரெனப் படும். தளையால் இயற்சீராக வைத்துத் தளை கொள்ளப்படும் என்றபடி. எனவே இயற்சீருள் அடங்குவதன்றி இயற்சீரெனப் படா என்றபடி.

2. அசைச்சீரிரண்டும் அடியுறழுமிடத்து எண்ணுத்தொகை பெற்றும் இயற்சீருள் அடங்கும் என்றபடி. நோக்குங்கால் அடங்கும் என இயைக்க.

3. பெற்று—பெற்றும் என்றிருத்தல்வேண்டும். பெறுது எனினுமாம். இதற்குத் தளைக்கண் எண்ணுத்தொகை பெறுதென்க.

4. நான்கசை என்றது நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கையும்.

5. ஓரசைச்சீரல்லாத சீர் என்றது ஈரசையாய் 'வலனேர்பு' என்பதுபோல் வேறசையோடு வருவனவற்றை.

6. சீர்வகையான் என்றது கட்டளையடியல்லாத சீர்வகையடியான் என்றபடி. "வலனேர்பு" சீர்வகையான் வந்ததாகலின் வழுவமைக்கவேண்டா; சீர்வகையடியென்று ஒழியவே அமையும் என்றபடி.

அமையும்; வரையறையில்லனவற்றுக்கு வரையறை கூறல் குற்றமாகலின் என்பது. மற்று இவ்வியசைச்சீரிரண்டும் வரையாது கூறினமையின் மூன்று பாவிற்குஞ் செல்லும் பிறவெனின்,

"கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர்
நிலைக்குரித் தன்று." (337)

எனக் கூறி ஈண்டு இவற்றை இயற்சீர்ப்பாற்படுமென்றமையின் இவையும் கலிப்பாவிற்கு விலக்குண்டனவென்பது. எனவே, ஆசிரியத்திற்கும் வெண்பாவிற்கும் உரியசைச் சீரிரண்டும் உரியவாயின. ஆசிரியத்திற்கு மேற்கூறிய பன்னிரண்டும் இவையிரண்டுமென அடியுறழுஞ்சீர் பதினென்காயின. வெண்பாவிற்கு முன்னரைத்திய சீர் பதினென்கும் இவையிரண்டுமாக அடியுறழுஞ்சீர் பதினாறாயின. கலிப்பாவிற்கு மேற்கூறிய சீர் பதினென்குமேயாயின. இங்ஙனம் வகுக்கப்பட்ட சீர் நாற்பத்துநான்கினையும் சீர்வகையான் உண்மை நோக்கித் தொகுப்ப இயற்சீர் பத்தும் ஆசிரியவரிச்சீரிரண்டும் வெண்சீர் நான்கும் அசைச்சீரிரண்டுமெனப் பதினெட்டாம்.

மேல் (கூகூ) ஐவகை யடியெனப்பட்ட அறுநூற்றிருபத்தைந்தடியும் இச்சீர் பதினெட்டானுந் தோற்றிக்கொள்ளப்படும். இப்பதினெட்டுச் சீரும் இருநிலைமை யெய்துவனவும் எய்தாதனவுமாகி மூப்பத்தொன்றாகி விரியுமாறு முன்னர்,

"எழுத்தள வெஞ்சினும்" (355)

என்புழிச் சொல்லுதும். (உஅ)

[கலிப்பாவிற் கட்டளையடிக்கண் ஓரடியுள் இறுதியில் நிற்கும் வெண்சீரின் முதலசை நேராயினும் நிரையாகக் கொள்ளப்படும் எனல்]

கூகக. வெண்சீ ரிற்றசை நிரையசை யியற்றே.

இது வெண்சீராற் கலித்தளையாமா றுணர்த்திற்று.

"கலித்தளை மருங்கிற் கடியவும் படா." (334)

என்புழி, அவ்வாசிரியவரிச்சீராற் கலித்தளையாமென்றான். அவ்வதிகாரம் இடையறாது நின்றமையின் இதுவுங் கலித்தளைக்கே இலக்கணமாயிற்று. என்னுர்க்கு,

"வஞ்சி மருங்கினும்" (338)

எனவும்,

"இசைநிலை நிறைய" (339)

எனவும்,

"இயற்சீர்ப் பாற்படுத்து" (340)

எனவும் இம்மூன்று சூத்திரம் இடையிட்டனவாலெனின், அற்றன்று. கலிப்பாவிற்கு விலக்கப்பட்ட நேரீற்றியற்சீர் அதிகாரம் பற்றி இடை புகுந்தவல்லது [1] கலித்தளை யதிகாரம் விலக்கின வல்லவென்பது.

இ—ள்: வெண்சீர் பல தொடர்ந்து ஒரு கலியடியுள் நின்ற வழி அவ் வெண்சீருள் ஈற்று நின்ற சீரின் முதல்வந்த நேரசை மற்ற நிரைமுதல் வெண்சீர் வந்து முன்னைய இரண்டுங் கலித்தளையாயவாறுபோலக் கலித்தளையாம் என்றவாறு.

மேனின்ற அதிகாரத்தாற் றளைவகை சிதையாத் தன்மைக்கணெண்பது கூட்டியுரைக்க. எனவே, வெண்சீர்ப் பின்னர் நிரை வந்து கட்டளை சிறந்தனவும், [2] நேர்வந்து தேமாந்நிழலும் அவ்வொசையே பயந்து ஒரு நிகர்த்தாமென்பதூஉங் கூறி அவ்வாறுங்காலும் இறுதிச் சீரின் முதலசையே நிரையியற்றுவ தெனவுங் கூறினனும். [3] இது மொழிந்த பொருளோடொன்ற வவ்வரின் மொழியாகதனை முட்டின்று முடித்தலென்னும் உத்தி வகை. [4] வெண்சீரிறுதியென்பது ஏழாவதன் தொகை; என்னை? ஈறெனப்பட்டது சீராகலின். வெண்சீருள் ஈற்றுச்சீரெனவே வெண்சீர் பலவுந் தொடர்ந்து நிரை முதல் வந்தவழியன்றி, இறுதிச்சீ ரொன்றியது நிரையசை யியற்றாகதென்பதாம். இத

1. கலித்தளை மருங்கிற் கடியவம்படா என்று தொடங்கிய அதிகாரம் விலக்கப்பட்டது அன்று. ஏனெனின்? அடுத்துக் கலித்தளையில் நேரீற்றியற்சீர் வாரா என இயற்சீர்பற்றிய அதிகாரம் வந்தமையின் அவ்வதிகாரம்பற்றிய முடிபுகளை இடையின் மூன்று சூத்திரத்தாற் கூறி, மீளவுங் கலித்தளையதிகாரமே தொடங்கி இச் சூத்திரத்தால் அத்தளைக்கே விதி கூறுகின்றாதலின்.

2. நேர்வந்து ஒன்றினும் என்றிருந்திருத்தல்வேண்டும். பின் 'இறுதிச்சீ ரொன்றினும்' என வருதல் காண்க.

3. இறுதிச்சீரின் முதலசை என்பது 'மொழிந்த.....மொழியாததனை முட்டின்றி முடித்தல்' என்னு முத்திவகை.

4. வெண்சீர் இறுதி—வெண்சீருள் இறுதிச்சீர் என ஏழாவதன் தொகையாக விரிக்க என்றபடி.

னின் நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை தட்குங்கால் [1] இயற்சீர் அடிமுதற்கண் வருமென்பதாலும் கூறப்பட்டதாம். மற்று ஈறென்றது ஈற்றுச் சீரினையாயின் [2] அச்சீரி னிடையும் இறுதியும் நின்ற அசையினை நிரையசை யியற்றென்று கொள்வ லெனின், நின்றசீரின் ஈற்றசை வருஞ்சீரின் முதலசையோடு தட்டித்தளையாவதன்றி [3] ஒன்றிடையிட்ட அசையுஞ் சீரும்பற்றிக் தளை கொள்வாரின்மையின் அது கடாவன்றென்பது. இனி [4] வெண்சீரென்பது அஃறிணை யியற்பெயராகலானும் [5] பன்மை விணைகொண்டு பால் அறிய வந்தன்றாயினும் அதனை [6] யாணைக் கோடென்றாற்போல, இறுதி யென்றமையானும் பன்மைப்பாற் பட உணர்க. என்னை? [7] பின்னேன் முன்னேன் என்றவழி அவற்கு முன்னும் பின்னும் வேறு சிலருளரென்பது உணர்த்து

1. இயற்சீர் என்றது நூயிறு, வலியது, பாதிரி, கணவிரி போல்வனவற்றை. நிரைமுதல் வெண்சீரே வருதலின் முதற்கண் இயற்சீர் வரினும் ஓசை பிறழாதென்பது கருத்து.

2. அச்சீர் என்றது ஈற்றிலின்ற வெண்சீரை. 'மாசெல் வாய்' என்பதுபோல ஈற்றில் வருவனவற்றை. இவற்றிடையும் இறுதியு நின்ற அசை என்றது 'செல்வாய்' என்னுமிரண்டையும். இவ்விரண்டையும் சேர்த்து நிரையசையாகக் கொள்வல் எனின் என்பது கருத்து.

3. ஒன்று—முதலசை.

4. வெண்சீர்—அஃறிணை இயற்பெயராதலின், வெண்சீர்கள் எனப் பொருள்படும்.

5. பன்மை விணைகொள்ளின்—பன்மை விணையைக் கொண்டு வரின். எனவே கொண்டுவந்தால் வெண்சீர்கள் என்று பொருள் கொள்ளலாம். கொண்டுவராமையிற் பொருள் கொள்ளக்கூடா தென்றபடி.

6. யாணைக்கோடு என்பதில் கோடு என்பது, "கண்ணுந் தோளும்" என்னும் (சொல். கூக-ம்) சூத்திர விதிப்படி கோடுகள் எனப் பன்மையுணர்த்தும், அதுபோல வெண்சீரும் வெண்சீர்கள் என்றும் என்றபடி. இறுதியென்றமையானும் அது பன்மைப் பொருள் உணர்த்தும். ஏனெனில், முதல் இறுதி என்று கூறுவது பல சேர்ந்து நின்றவழியேயாகலின். போலக் கொள்க என இயைக்க.

7. பின்னேன் என்ற சொல்லே முன்னோர் பலருளர் என்பதையும் முன்னேன் என்ற சொல்லே பின்னோர் பலருளர் என்பதையும் காட்டும். அவைபோல இறுதியென்பதும் முன் பலசீர் உள என்பதைக் காட்டும். அதனாலும் வெண்சீர் என்பது பன்மையுணர்ந்தது என்றபடி.

மாகலின். என்றார்க்கு வெண்சீ ரிறுதி [1] நீடுகொடி குளிறுபுலி வக்கவழி அவற்று முன்னின்ற நேர்பசை நிரைபசைகளைக் கலிப்பாவினுட் கலித்தளையாக்குதற்கு நிரையசை யியற்றென்று னென்னுமோவெனின், அற்றன்று, [2] வெண்சீர்களின் இறுதி யெனவே மூன்றுஞ் சீரும் நான்காஞ் சீரும் வெண்சீராகல் கூறி, நிரைமுதல் வெண்சீர் வந்த நிரைதட்டல் (372) எனவே இரண்டாஞ் சீரும் வெண்சீர் வரல்வேண்டுமெனக் கூறி, நிரை தட்டுமெனவே இயற்சீராணும் [4] ஆசிரிய வுரிச்சீராணும் நிரையீ றுயினவெல்லாம் முதற்கண் நிற்குமெனவும் கூறினன். கூறவே, ஆசிரியவுரிச்சீர் இடை நில்லாவெனவும் அங்ஙனம் நிற்பிற் கலி யோசை யழியுமென்பதூஉமாம் இவர் கருத்தென்பது. அல் லதூஉம் [5] வெண்சீர்க்கு உரியசை யின்மையானும் அற்றன் றென்பது. எனவே, ஈற்றுச்சீர் நிரைமுத லியற்சீர் வரினும் ஆண்டுத் துள்ளலோசை [6] ஒடுங்குமென்பதாம்.

[7] "அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்."
(கலி. 11)

என்பது வெண்சீரிறுதி நிரையொடு தட்ட கலித்தளை.

---

1. நீடுகொடி குளிறுபுலி என்னும் சீர்களில் முன்னின்ற அசைகள் நேர்பும் நிரைபுமாதலின், இவை வெண்சீரின் பின் வரின் நிரையசையாகக் கொள்ளப்படும். அஃதாவது 'புலிவருவாய் நீடுகொடி' எனவும், 'புலிவருவாய் குளிறுபுலி' எனவும் வரின் நீடு, குளிறு என்பன நிரையாகக் கொள்ளப் படும் என்று பொருள் கொள்வேமோ எனின் என்பது கருத்து.

2. வெண்சீர்களினிறுதி என்றதனான் மூன்றுஞ் சீரும் நான் காஞ் சீரும் வெண்சீரென்பது பெறப்படும் என்றபடி.

3. நிரைதட்டல் என்பதனால் நிரையசை முன்வரும் என் பது பெறப்படும் என்றபடி.

4. ஆசிரியவுரிச்சீர் நீடுகொடி குளிறுபுலி.

5. வெண்சீர்க்கு உரியசை இன்மை என்றது நீடுகொடி, குளிறுபுலி என்பவற்றின் முன்னின்ற நீடு, குளிறு என்பவை கள் உரியசையாதலின் அவை வெண்பாவில் வரா என்றபடி. இவை வெண்சீரின்பின் வரா என்பது இவர் கருத்து. ஏனெனில் வெண்பாவிற் கட்டளையடிக்கு உரியசை முதற்சீர் விலக்கப்பட் டமையின். நஉசு-ம் சூத்திர உரை நோக்குக. உரியசை—உரி யசைச்சீர்.

6. துள்ளலோசை யொடுங்குதற்கு உதாரணம் "அரிதாய" எனப் பின் வருவது.

7. களித்தலும் என்பது நிரை முதலியற்சீர். இறுதியில் அது வரினும் கலியோசை யழியும் என்றபடி. அருளியோர் என்பதை வெண்சீர் என்றது அருளி என ஓசை பிளந்து நிற்றலிற்போலும்.

[1] "அடிதாங்கு மெனவின்றி யாழனன்ன வெம்மையான்."

என்பது வெண்சீர்கள் பலைத்துவந்து ஈற்றுச் சீரின் முதற்க ணின்ற நேரசை நிரையசைபோலக் கலியோசை கொண்டமை யின் அது கலித்தளை யெனப்பட்டது. இனி, வெண்சீர் நான் கும் ஒன்றி வரினுங் கலித்தளையாகுமேனும், அது வெண்பா வடியெனவும் பட்டுத் திரிபடுதலின் அதனைக் கட்டளையடி யென்னாது, இறுதிக்கண் ஓரோவழி ஒருசீர் ஒன்றிவரினும் அதன் முதற்கட் பல வெண்சீர் வந்து பலைத்தலிற் கலி யோசையே காட்டுமென்றுனென்பது. அஃதேற் "பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்" என்றவழி [2] இடை நின்ற சீரின் நேரசை நிரையசை யியற்றென்னுமோவெனின், அது கட்டளை [3] யடியென்பது "அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி" என்பதனுன் அறியப்படும். [4] அல்லாதாரும் இவை செவி கருவியாக உணர்தற்கருமை நோக்கி அடியறியுந் தன்மை யரிதென்று சொல்லுப.

இனி, இயற்சீரானன்றித் தளை [5] கொள்ளாமோவென்பார்

[6] "தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா." (நசுஎ)

என்பதனுன் வெண்சீர்க்குத் தளை விலக்கல்வேண்டி, அவ்வெண் சீரினையும் இயற்சீராக இயற்றிக்கொள்ளப்படுமென்றற்கு ஒரு வெண்சீரின் ஈற்றசை நிரையசை யியற்றென்றுனெனக் கூறி, [7] ஞாயிறென்னும் இயற்சீரினை மாசெல்வாயெனப் பின்னுமொரு

---

1. அடிதாங்குமென்னு மடியே இச் சூத்திரத்திற்குக் காட் டிய உதாரணம்.

2. இடை நின்ற சீர் 'ஆடுங்கால்' என்பது.

3. அடி என்பது அடியள்றென்பது என்றிருக்கவேண்டும். நச்சினர்க்கினியருரை நோக்குக.

4. அல்லாதாரும் — தொல்காப்பியரல்லாதாரும். இவை— இக்கலியடிகள்.

5. கொள்ளாமோ — (வெண்பாவிற்குக்) கொள்வேமோ என்பது பொருள்.

6. தன்சீர் என்றது வெண்சீரை. தளை விலக்கல் என்றது வெண்சீர் நிற்ப வெண்சீர் வந்து தளைகோடலே விலக்கலே. இயற் சீர் வெண்டளையே கட்டளையடிபெறும் வெண்பாவிற் குரிய தென்றபடி.

7. ஞாயிறு என்னும் இயற்சீரினை நிறுத்தி: எப்படி நிறுத்தி ஏனின், திரியாமல் ஞாயிறு என்றே நிறுத்தி என்றபடி. பின்னு

காற் றிரிக்தகனேயே திரியாமல் நிறுத்தி நிரைமுதல் வெண் சீர் வந்து நிரைதட்டினுங் கலியாமெனக் காட்டுப. அது ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய் என வரும். இவ்வாறே,

"கனித்தனே மருங்கிற் கடியவும் படா."

என்ற ஆசிரியவரிச்சீர்க்குந் திரிபு கூறுமாலெனின் அது நினைத் திலர்போலுமென்று இசுற்துரைப்பாராவர். மற்று, [1] வெண்சீ ரிறுதி நிரைவக்காற் கலித்தனேயாமென்பதற்கு ஒத்து வேறண் டாயினன்றே, கேரும் நிரையுங் தட்டதனே கேரும் நிரையும் பகைத்தனைனும், வேண்டுவதெனவும், அங்ஙனம் பொருளுரைப் பார்க்கு எவ்வாற்றானும் இச்சூத்திரம் ஏலாதெனவுங்,

"தன்சீர் வகையினும் தனிநிலை வகையினும்"

என்றவழித், [2] தன்சீரானுந் தனே கோடுமாகலானும் அது பொருந்காதென மறுக்க. [3] இனி வெண்சீரின் ஈற்றசையொன்றே

மொருகால் திரித்தது என்றது பின் தனிகோடற்கு மாசெல்வா யென வெண்சீராகத் திரித்தது என்றபடி. என் திரித்ததெனின் வெண்சீர்க்குமுன் நிரை வருவதே கலித்தனே எனக் கோடற்கு என்றபடி. ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய் என்றவழி ஞாயிற்றை மாசெல்வாய் எனத் திரித்துவைத்து வெண்சீரின் முன் புலி என நிரைவந்த கலித்தனேயாகக் கொள்ளப்படும் என்பது கருத்து. திரித்ததனேயே என்னும் பாடமே பொருத்தம்.

1. இப்படி ஞாயிறு என்பதை வெண்சீராக்கி நிரைவந்து முடியுங் கலித்தனே என்று காட்டுங்கால், அங்ஙனம் வெண் சீர்முன் நிரைவந்து பகைத்து முடியவேண்டுமென்று விதிக்குஞ் சூத்திரம் வேறுண்டாயினன்றே நேருநிரையுந் தனித்ததனே; வெண்சீரிற்நிலுள்ள நேர்முன் வருமொழி முதல் நிரை பகைத்து முடிந்ததென்றும் நேரும் நிரையும் பகைத்தே வரல்வேண்டுவ தென்றுங் கொள்ளலாம். அங்ஙனம் விதித்த சூத்திரம் வேறில்லே, இவ்வுரையானும் அவ்விதி பெற்றப்படாது; ஆதலானும், தன் சீரானும் தனே கோடுமாகலானும் பொருந்தாதென மறுக்க. தன் சீர்—ஆசிரியவரிச்சீர். ஞாயிறு என்னும் இயற்சீரும் நிரையரி ருதலின் அவ்வாசிரிய வரிச்சீரின் முடிபுபெறும். தொ. செய். கஎஉ-ம் சூத்திரவிதி நோக்குக.

2. தன்சீர்—நீடுகொடி, குளிறுபுலி என்னும் ஆசிரிய உரிச் சீர். இதனுற் றனிகோடல் கஎஉ-ம் சூத்திர நோக்குக.

3. இனி வெண்சீரி லீற்றசை ஒன்றேயாகலான் இயற்று என்று ஒருமை கூறினனென்பது 'வெண்சீரீற்றசை நிரையசை யியற்றே' என்ற சூத்திரத்திற்கு அவர் கூறும் பொருளே மறுக்க வந்த வாக்கியம். எங்ஙனமெனின்? இயற்று — இயல்பினது என்று ஒருமை கூறிய அதனுல் இறுதிநின்ற அசை ஒன்றே கொள்ளப்படுமன்றி அடுத்த அசை கோடற்கு விதி இன்று.

யாகலான் இயற்றென்று ஒருமை கூறினன். இடைநின்ற நேரும் நிரையுங் கோடுமென்னுமையின் இங்ஙனந் திரிந்த நிலைமை வஞ்சியுரிச்சீ ரெனப்படும். இனி: வெண்சீரென்பது [1] எழுவா யாயின் ஈற்றசை நிரையென்பது இயற்சீரின் பெயராதல்வேண் டும். அங்ஙனங் கருதினும் அசையென்பதனே ஒருகாற் சொல்லி ஈற்றசை நிரையசை யெனலாகாதென்பது. அல்லதூஉம்: [2]வெண் சீரினே இயற்சீராக்கி அவ்வியற்சீரினே வெண்சீராக்குதல் யாப்பி லுழப்பாகி வரம்பின்றுமென மறுக்க. [3] என்னுர்க்குந், 'தன்சீ ருள்வழித் தனிவகை வேண்டா' னெனல், "அரிகாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்" என்பதனுல் கலித்தனேயன்றிய

அஃதாவது:— மாசெல்வாய் என்பதன் இறுதிநின்ற வாய் என் னும் ஈற்றசையொன்றே கோடற் கிடமுண்டன்றி இடைநின்ற 'செல்' என்னும் அசை கோடற்கிடமின்று. அவ்வாறே மாவருவாய் என்பதிலும் இடைநின்ற 'வரு' என்னு நிரையசை கோடற் கிடமின்று என்பது கருத்து. எனவே மாசெல்வாய் என்பதில் வாய் என்பதனேடு செல் என்பதையும் மாவருவாய் என்பதில் வாய் என்பதனேடு வரு என்பதையும் கூட்டி நிரையசையாக் கற்கு விதியில்லே. இங்ஙனந் திரிந்தநிலைமை என்றது. ஒருமை கூறி யவதனுல் இடைநின்ற நேரும் நிரையும் விலக்குண்ணலின் ஈற் றசையே திரியவேண்டும்; இப்படி ஈற்றசை திரியின் அது வஞ்சி யுரிச்சீராம் என்றபடி.

1. இனி இச்சூத்திரத்துள் வரும் 'வெண்சீர்' என்பதை எழுவாயாகக் கொண்டு பொருள் கூறினும் வெண்சீரானது ஈற் றசையை நிரையாகக் கொண்ட இயற்சீர் இயல்பிற்று எனப் பொருள் கொள்ளல்வேண்டும். அங்ஙனங் கொள்ளின் பின் வரும் அசையென்பது மிகையாம் ஆதலின் அக்கருத்துப் பொருந் தாதென்றபடி. 'ஈற்றசை நிரையிற்று' என்று இருப்பின் அவர் கருதியபடி ஒருவாறு பொருள்கொள்ளலாம். அங்ஙனம் சூத் திரமில்லே என்றபடி.

2. மாசெல்வாய் என்னும் வெண்சீரினேத், தனிகோடற்கு ஞாயிறுளை இயற்சீராக்கியும், ஞாயிற்றை கலியாசை கோடற்கு வெண்சீராக்கியும் கோடல் விகியுழுப்பம் என்றபடி. விகியு ழுப்பு—தொழிலற்ற முயற்சி (பயனற்ற முயற்சி) என்றபடி.

3. என்னுர்க்கு எனல் என இயைக்க. தன்சீ ருள்வழித் தனிவகை வேண்டா என்பது கொண்டு வெண்பாவிற்கு ஒன் றுது வரல்வேண்டுமெனின், கலியும் வெண்பாவாம். என்னே? கலியும் ஒன்றுது வரலின். ஆதலால், கலி என ஒரு தனியின் றும். ஆதலின் வெண்சீர் ஒன்றி வருதல் வெண்பாவிற்குரிய தென்றபடி. எனல் என்பது எனில் என்றிருந்திருக்கவேண் டும். அன்றேல் என்னுர்க்கு எனல் என முடித்தல்வேண்டும். அது பொருத்தமின்று. என்னுர்க்கு என்பது இல்லாமலுமிருக்க லாம். அல்லது திதைவிருத்தல்வேண்டும்.

செல்லுமென்பது. கலிப்பாவிற்கு ஒன்றுது வருத லுரிமை யுடைய; வெண்சீரெனவே, வெண்பாவிற்கு ஒன்றுது வருதல் யாண்டுமில்லை, ஒன்றிவரி னல்லதென்பது உடம்படப்பட்டது. (உகூ)

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே"

என்னும் இச் சூத்திரத்திற்குப் போராசிரியர் கொள்ளும் உரையையும் பிறர் உரைகளை அவர் கடாவிடைகளான் மறுக்குமாற்றையும் விளங்கற்பொருட்டு இங்கே சுருக்கிக் காட்டுகின்றும்.

இச் சூத்திரத்திற்குப் போராசிரியர் கொள்ளுமுரை.

ஒரு கலியடியுள் வந்த பல வெண்சீர்களின் ஈற்றிலுள்ள சீரின் முதலிலுள்ள நேரசை நிரையசை யியல்பாகுமென்பது. எனவே முன்வந்த வெண்சீர்களின் முதலசைகளெல்லாம் நிரையசையாய் ஒன்றுது வந்தவிடத்திலேயே ஈற்றுச் சீரின் முதலசையாகிய நேர் நிரையாம் என்பது இதனுற் கொள்ளப்படுமென்பதும் பெறப்பட்டது. என்னை? ஈற்றுச்சீரின் முதலிலுள்ள நேரசையை நிரையசையாய்க் கொள்ளவேண்டுமெனவே முன்வந்த சீர்களின் முதலசைகளும் நிரையசையாயே வரல்வேண்டுமென்பது பெறப்படலின் என்பது அவர் கருத்து. அங்ஙனமாதலை,

"அடிதோங்கு மளவின்றி யழலன்ன வெம்மையான்"

என்னும் உதாரணத்தின் வைத்து அறிந்துகொள்க.

இனி, இதற்குப் பிற ருரையுளோருரை, வெண்சீரினீற்றில் நேடுகொடி, குளிறுபுலி வந்துழி அவற்றின் நேர்பசை நிரைபசைகளை நிரையாகக் கொள்ளுதல் என்பது. அதன் மறுப்பு அங்ஙனங் கொள்ளிற் கலியோசை யழியும் என்பது ஒரு நியாயம். மற்றொன்று நேடுகொடி, குளிறுபுலி ஆசிரியவரிச்சீராதலின் வெண்பாவிற் கட்டளையடிக்கு அவை வாரா. ஆதலின் அவை வெண்பாவினியற்றுகிய கலிக்கும் வெண்சீர்க்குப்பின்னே வாரா என்பது. மேற்காட்டிய ஆசிரியவரிச்சீரிரண்டும் கலிக்கு வருமெனின், அவை முதலில் வருமன்றி இடையில் வாரா வென்பதும் வரிற் கலியோசை அழியுமென்பதும் இவர் கருத்தாம். வெண்பாவில் ஆசிரியவரிச்சீர் வாராவென்பதனை, "வெண்பாவினுள் ஆசிரியவரிச்சீர் நான்கும் ஒழித்து ஒழித்தசீர்

[வெண்சீர் கட்டளையடியல்லாதவழி ஆசிரியவடியினுள் வருமென்]

உசஉ. இன்சீ ரியைய வருகுவ தாயின்
வெண்சீர் வரையா ராசிரிய வடிக்கே.

இது கட்டளையடியல்லாதவழிச் சீர் மயங்குமா றுணர்த்துது.

இ—ள்: இன்னோசைத்தாகிய தூணிலிற்றுமி வின் ஆசிரிய வடிக்கண் வெண்சீரும் வரப்பெறும் என்றவாறு.

"இமிழ்கடல் வங்கமிய லிண்டகன் மிடக்கைத்
தமிழ்தகு மயங்கிய நகியாலங் காளத்து."

என்னுங் நகியாலமென்றவழி ஆசிரியவடியுள் இன்சீரியையவெண்சீர் வந்தது. முன்னர் வெண்சீரினை,

"இன்பா நேரடிக் கொருங்கு நிகியில."

என விலக்கி ஈண்டு வரையாரென்றமையின் [1] அது கட்டளையடிக்கென்பதூஉம் [2] இது கட்டளையடிக்கன்றென்பதூஉம்

1. அது—அச்சூத்திரவிதி.
2. இது—இச்சூத்திரவிதி.

இருபத்துமூன்றும்" என்று கூஉ-ம் சூத்திரவுரையுட் கூறலானும், "நீடுகொடி குளிறுபுலி வெண்பாவின் கட்டளையடிக்கண் வாரா" என்பதனை கூஉகூ-ம் சூத்திரவுரையுட் கூறலானு மறிக. உரியசை யென்றது உரியசைச்சீரை. இவை சிறுபான்மை கலியின்கண் வரின் முதற்கண் வருமென்பது கருத்து.

இனி, "பண்டரங்க மாடுங்காற் பணியெழி லணைமெண் டோள்" என இதில் வரும் வெண்சீர் முதலில் நிரையசையியற்றென்று கூறுமோவெனின்? அது கட்டளையடியன்றுதலின் அதன்கண் ஆராய்ச்சியின்றென்பது. கட்டளையடியன்றென்பது அசையுஞ் சீருமிசையொடு சேர்த்தி என்பதனுணரியப்படும்.

இனி, ஒருரை "தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா" என்ற சூத்திர விதிப்படி வெண்சீரின் ஈற்றசைமுன் நேரசை வருங்கால், வெண்சீர் வெண்டளையாமாகலின் அது கட்டளையடிக் கேலாமையின் அதனை விலக்கவேண்டி மாசெல்வாய் முதலிய வெண்சீரின் ஈற்றசையை நிரையசையாக்கி ஞாயிறு போல வைத்து வெண்பாவில் தளை கொள்ளப்படும் எனவும்,

பெற்றும். வருகுவதாயினென்று ஒருமை கூறினமையானும் இயைய வென்றதனானும் ஓடிக்கண் ஒன்றே யாண்டும் வருவ தெனக் கொள்க. (கூ0)

[வஞ்சிச்சீரும் கட்டளையடியல்லாவழி ஆசிரியத்துள் வருமெனல்]

கூசஉ. அந்நிலை மருங்கின் வஞ்சி யுரிச்சீ
ரொன்றுத லுடைய வோரோர் வழியே

இது வஞ்சியுரிச்சீர் ஆசிரிய அடியுண் மயங்குமாறுணர்த் திற்று.

இ—ள்: கட்டளையடியல்லாதவழி இன்சீரியைய வருகுவ தாயின் வஞ்சியுரிச்சீர்களும் ஓசோர்வழி ஆசிரியத்துள் வரப் பெறும் என்றவாறு.

ஒருவழியென்னுது ஓசோர்வழி யென்றதென்னையெனின்? அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் பத்துச்சீரே வருமென்பதனாலும் அவை வருங்காலும் பயின்று வாராவென்பதனாலும் அறிவித்தற் கென்பது. அவை மாசேர்சுரம் புலிசேர்சுரம், மாசெல்காடு புலி செல்காடு, மாசெல்கடறு புலிசெல்கடறு, பாம்புசேர்வாய் பாம்பு

மாசெல்வாயின் ஈற்றசைகளே ஞாயிறு என வெண்பாவித் கொள் வதுபோல அதனியற்றாகிய கலிக்கு ஞாயிறு முதலியபோன்ற இயற்சீர் முதல்வரின் (அஃதாவது "ஞாயிறு புலிசெல்வாய் மாசெல்வாய்" என வரின்) ஞாயிறு முதலியவற்றையும் கலித் தளையாக்குதற்கு மாசெல்வாய் என வைத்துக்கொள்ளப்படு மெனவுங் கொண்டு, ஞாயிறு என்பதன்முன் புலிவருவாய் வரின் அது மாசெல்வாய்முன் நிரைவந்த கலித்தளையேயாமென்று கொள்வர். இவ்வுரையாலே வெண்சீரின்முன் நிரைமுதல் வெண்சீர் வரின் கலித்தளையாமென்பதே அவர் கருத்தென்பது பெறப் படலின், அவர் கருத்தின்படி கோடற்கு வெண்சீரின்முன் நிரைவந்தாற் கலித்தளையாமென்பதற்குச் சூத்திரவிதி வேறு வேண்டும்; அவ்விதி இச்சூத்திரத்தாற் பெறப்படாது. ஆக லானும், இயற்சீர்முன் நிரைமுதல் வெண்சீர் வரின் கலித்தளையா மென்பதற்கு விதியிருத்தலின் (கூஎஉ-ம் சூத்திரம்) இயற் சீரை வெண்சீராக்கல் வேண்டுதலின்மையாலும் அது பொருந்தா தென்பது.

வருவாய், கலிறுசேர்வாய் கலிதுவருவாய் என்பன. அவற்றுக் குச் செய்யுள்:

"மாரியொடு மலர்ந்த மாத்தாட் கொன்றை
சூரிஞ்யொடு கமழுங் குன்ற நாடன்."

என மாசேர்சுரம் புலிசேர்சுரம் என்பன அடிமுதற்கண் வந்தன.

"முன்றிலாடு மஞ்ஞை மூதில கொறிக்கும்."

என்பது மாசெல்காடு வந்தது.

"அலரிநாறு துவர்வாய் மாத்தா ணேக்கின்."

எனப் புலிசெல்காடு வந்தது.

"கண்போன் மலர்ந்து வண்டுமயங்கு தாமரை."

என மாசெல்கடறு வந்தது.

"கரடி வழங்கு குன்றுகண்டு போகி."

எனப் புலிசெல்கடறு வந்தது.

"கூடுதேரா வழிதரு கடுங்கண் யானை."

எனப் பாம்புசெல்வாய் வந்தது.

"செந்து தினையாச் செங்குரம் சிறுகிளை."

எனப் பாம்புவருவாய் வந்தது.

இன்னும் வெண்சீர்ற்றசை நிரையசையியற்றே என்பதில் இயற்று என்று ஒருமை வாய்பாட்டாற் கூறினமையால் 'மா செல்வாய்', 'புலி வருவாய்' என்பவற்றிலுள்ள ஈற்றசையென்று கொள்ளப்படுமேயன்றி, ஈற்றசையோடு சேர்த்து இடைநின்ற ('செல்' என்னும்) சொரும், ('வரு' என்னும்) நிரையுங் கொண்டு இயற்சீராக்க முடியாமையானும் அது பொருந்தாதென்க. மா செல்வாய் புலிவருவாய் என்பவற்றின் ஈற்றசையை (வாய் என் பதை) நிரையசையாகக் கொள்ளில் அவை வஞ்சியுரிச்சீரா மென்பது. ஆதலானும் அவ்வாறு பொருள்கோடல் பொருந்தா தென்பது. இனி வெண்சீரின் ஈற்றசையெனக் கொள்ளாது, வெண்சீரென்பதை எழுவாயாகக் கொண்டு ஈற்றசை நிரை என் பதை, ஈற்றசை நிரையாகவுள்ள இயற்சீர் எனக் கொண்டு, வெண் சீரானது இயற்சீர் இயற்று எனப் பொருள் கொள்ளினும், "ஈற்றசை நிரை"யியற்று என்று சூத்திரமிருக்கவேண்டும். அவ்வாறிராது "நிரையசை" என்று இன்னுமோர் அசை மிகையாயிருத்தலின் அவ்வாறும் பொருள்கொள்ள முடியாது. அதனானும் வெண்சீரை இயற்சீராக்கல் முடியாது. அன்றியும்

"மருந்து நாடாத் திருந்து லெம்பிற் கைக்கும்."
எனக் களிறுசெல்வாய் வந்தது.

"கடறுகவரா விழிந்து கண்யாறு வரிப்ப."
எனக் களிறுவருவாய் வந்தது. பிறவுமன்ன.

1 நேர் நிரையாகியும் நேர்பு நிரைபாகியும் ஈறு முதல் பெறச் சீர் வந்தது. (நக)

[அடியாவது இதுவெனல்]

நகச. நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே.

இது முதற் சூத்திரத்துள் "யாத்தசீரே யடியாப்பெனஅ" என நிறுத்தமுறையானே சிருணர்த்தி அடியுணர்த்தவெழுந்தான் அவற்றுள் இது நாற்சீரடி யுணர்த்திற்று.

இ—ள்: அடியென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன நாற் சீரடி என்றவாறு.

எனவே, இருசீரானும் முச்சீரானும் ஐஞ்சீரானும் அறு சீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பிலவென்ற வாறும். இருசீரான் வருவதனை என்ன அடியென்னுமோவெனின்

1. நேர்நிரை—உம்மைத்தொகை. நேர்பு நிரைபு என்பதும் உம்மைத்தொகை.

2. ஈறும் முதலும் ஆகிப் பெறச் சீர் வந்தது என இயையும். ஆகி என்பன ஆக எனவுமிருக்கலாம்.

வெண்பாவிற்குத் தனைகொள்ள வெண்சீரை இயற்சீராக்கி மீளக் கலிப்பாவிற்கு இயற்சீரை வெண்சீராக்குதல் வினையி னுழப்பாகி முடியுமாதலின் அது பொருந்தாதென்பது. அன்றியும் வெண்பா விற்கு ஒன்றுதான் வரவேண்டுமென்னும் விதி வேண்டியதில்லை. அங்ஙனங் கொள்ளின், வெண்சீரின்முன் நிரைமுதல் வெண்சீர் வருதலும் ஒன்றுத வரலின் அதனையும் (கலித்தனையென்னுத) ஒன்றுத வந்த் வெண்டனையெனலா மாதலின் வெண்பாவிற்கு வெண்சீர் ஒன்றி வருதலே இலக்கணமாம். அது சீர்வகை யடி யெனக் கொள்ளப்படுமாதலின் என்பது கருத்து.

வினையினுழப்பு — தொழிலற்ற முயற்சி = பயனில்லாத முயற்சி.

அடிக்கெல்லாம் 1 எழுத்துவகையானே மேற்பெயர் கூறும். அவ் வாறே சீர்வகையானுங் கொள்ளப்படுமென்பது. சுருங்கிய எழுத் தான் வருவன குறளடியென்றும் அவற்றின் ஏறிய எழுத்தான் வருவன சிந்தடியென்றும் இடைநின்றன அளவடியென்றும் அவற் றின் நெடியன நெடிலடியென்றும் அவற்றினும் நெடியன கழி நெடிலடியென்றுங் கூறுமாகலான் அவ்வாறே இருசீரடி குறளடி யென்றும் முச்சீரடி சிந்தடியென்றும் நாற்சீரடி அளவடியென் றும் ஐஞ்சீரடி நெடிலடியென்றும் அறுசீர் முதலியன கழிநெடி லடியென்றுங் கோடுமென்பது. இவற்றினெல்லாம் நாற்சீரடி சிறந்த தென்றதென்னையெனின், அளவிற்பட்டமைந்தமையானும் அது பயின்று வருதலானுமென்பது. உதாரணம்:—

"திருமழை தகுதிய விருணிற விசும்பின்." (மலைபடு. க)
எனவும்,

"அறுசுவை யுண்டி அமர்ந்தில்லா ஞுட்ட." (நால. க)
எனவும்,

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்." (கலி. கக)
எனவும் இவை 2 மூன்று பாவினும் அளவடி வந்தவாறு. 3 இவற் றது விகற்பமெல்லாம் முன்னர்ச் சொல்லுதும். (நஉ)

[நாற்சீரான் வரும் ஓரடிக்கண்ணே தனையுந் தொடையுங் கொள்ளப்படுமெனல்]

நகசு. அடியுள் எனவே தனையொடு தொடையே.

இதுவுமது. நாற்சீரடியது சிறப்புணர்த்திற்று. எதிரது நோக்கியதேகார் கருவியெனினும் அமையும்.

இ—ள்: முன்னர்க் கூறிய நாற்சீரடியுள் உள்ளனவே தனை யும் தொடையும் என்றவாறு.

மற்றுச் சூத்திரையும் எழுத்தும் அசையுஞ் சீரும் அவ் வடியுள்ளன அல்லவோவெனின்,—அற்றன்று; அவ்வடிக்கணுள் ளனவெல்லாங் கூறுகின்றுனல்லன் இதுவென்பது. என்னை?

1. எழுத்துவகையாற் பெறலே நகூ-ம், நஎ-ம், நஅ-ம், நகூ-ம், சம-ம் சூத்திரங்களை நோக்கி அறிக.

2. மூன்று பாவாவன—அகவல், வெண்பா, கலி என்பன.

3. இவற்றது விகற்பம்—இவ்வளவடிகளின் வேறுபாடு.

நாம் தளைப்பகுதியாற் கட்டளையடியென [1] உறழ்தலுரைம், அறு நாற்றிருபத்தைந்தடியென வரையறை கூறுவதுரைம், அவ்வள வடியே என்றற்கு [2] 'நாற்சீர்க்கண்ணது தளை' என்றுணர்த் பது. முன்னுஞ் சீர்வகையான் வருக்கும் அடியான்றிற் கட்டளை யடியெல்லாந் தளைவகை யுடையவென விருந்தேதி வந்தவழியே நாம் தளைகொள்வது நாற்சீரடிக்கணென்பான் 'அடியுள்ளது தளை' - என்றுணர்த்தினன்பது. [3] மற்றையடிக்கட் டளைகொள்ளின் அது வரையறையின் [4]றென்னுமாகலின் ஈண்டு வரைந்தேதாகினு னென்பது. அது தக்கது; மற்றுப் பொழிப்பும் ஒருஉவும் போலாத மோனை முதலிய தொடையெல்லாம் [5] அடியிரண் டியையத் தொடுக்கல்வேண்டுமன்றே? அவற்றை 'அடியுள் ளனவே தொடையும்' என்றதன்னையெனின்,—அற்றன்று; நாம் [6] தொடையுறழச் சீர் கொள்வதுரைம் இவ்வளவடிக்க ணென்பது கூறினன், ஆண்டுத் தொடைகூறும்வழி [7] வரை யாது கூறுமாகலி னென்பது. எனவே, கட்டளைப்படுப்பதுரைம் தொடையுறழ்தற்கு இடனுவதுரைம் நோடியேயெனச் சிறப் பித்தவாறு. (நூ)

[நாற்சீர் கொண்ட ஓரடியைக் கடந்து தளையுந் தொடையும் வாரா எனல்]

நூசசு. அடியிறந்து வருத லில்லென மொழிப.

இதுவும், கட்டளைப்பாட்டிற்கும் தொடைக்கும் ஆவதோர் கருவியுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அறுநாற்றிருபத்தைந்து அடியுள்ளும் ஓரடியின் இறந்துவாரா மேற்கூறிய தளையுந் தொடையும் என்றவாறு.

---

1. உறழ்தல்—பெருக்கல்.

2. நாற்சீர்க்கண்ணது—நாற்சீரடிக்கண்ணது என்றிருப்பது நலம்.

3. மற்றையடிக்கண் தளைகொள்ளின் எனக் கண்ணழிக்க. மற்றையடி—இருசீரடி, மூச்சீரடி, ஐஞ்சீரடி, அறுசீரடி முதலி யன. சீர்வகையடியுங் கொள்ளப்படும்.

4. என்னும்—என்பான்.

5. அடியிரண்டை இயைத்தே மோனை முதலிய தொடை பார்க்கப்படும் என்றபடி.

6. தொடையுறழச் சீர் கொள்வது அளவடிக்கணென்பதே யன்றி ஓரடிக்கண் என்றுனல்லனென்பது கருத்து.

7. வரையாது—அளவடி என்று வரையாது.

என்றது, மேற்கூறிய தளைவகையேயன்றி, அடியோடு அடிக்கூட்டத்துத் தளைகொள்ளுங்காலும் ஓரடிக்கண்ணே வழு வாமற் கோடல்வேண்டுமெனவும், அங்ஙனமே தொடை கொள் ளுங்காலும் வக்கவந்த அடியே வரப்பெறுவதெனவுங் கூறிய வாறு.

எனவே, தேமா தேமா தேமா தேமாவென்னும் - அடிக் கண் தொடைகொள்ளுங்கால்,

"வாமா னேறி வந்தோன் மன்ற."

என முன்வந்த அடியோ வரல்வேண்டுமென்பதுரைம், அன்றி,

"தேமாஞ் சோலைத் தீந்தே னுண்ட
காமர் தும்பி யாதல் [1] கண்டது."

என வரில் தளை வழுவாகிப் பதின்மூவாயிரத் தெழுநூற்றெட் டெனப்பட்ட தொடைப்பகுதியுட் படாவென்பதுரைம் பெற்றும்.

இனி, வெண்பாவினுள் அளை வருமாறு;

"சென்றே யெறிப வொருகூற் றிறுவரை
நின்றே யெறிப பறையினை—நன்றேகாண்" (நாலடி. உசு)

எனப் பன்னிரண்டெழுத்தடி ஒன்றினையும் இருகூற் சொல் லிக் கூட்டி எதுகைத்தொடை கொள்ளுங்கால் அடியோடு அடிக் கூட்டத்துத் தளைவகை சிதையாது வந்தமையின் அத்தொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டென வரையறைப்பட்ட தொ டையுட்பட்டது.

"யாரூடத் தாருணர்த்த யாருணரா விட்டபின்
ருரூட யாருணர்த்தத் தாருணர்ந்தான்—றேரூறு"
(முத்தொள்ளாயிரம் கoச)

என்றவழி, பதினான்கெழுத்தடியே தொடுத்தமையின் அடி யிறந்து வந்ததன்றுயினும் [2] தளைவகை ஒன்றுதலின் இது பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டி னுட்பட்டதாயிற்று.

"வண்டு வரசு வரசு வரசு."

என்கின்ற அடியினை மீட்டுங்கந்து தொடை கொள்ளுங்கால்,

---

1. கண்டது என்பதை ஞாயிறு என்று கோடலின், மீளவும் அந்த அடியே வருங்கால் தளைவழுவாம். ஆதலின் அடங்கா தென்க.

2. தளைவகை ஒன்றல் தன்சீர் வந்தமையான் என்க. "தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா" என்பது சூத்திரம். தன்சீர்—வெண்சீர்.

வண்டு வரகு வரகு வரகு

என்றது, [1] நேரொன்றாசிரியத்தளை தட்குமாதலால் இது வழு வெனப்படுமென்பது. கலிப்பாவிற்கு [2] அன்னதோர் வரையறை யில்லை; [3] இருவாற்றானும் வருமென்பது. என்னை?

"வெண்சீர் வெண்டளை விரையடை யியற்றே." (ந.சூக)

என்றாகலின், மேலைச் சூத்திரத்தானே தளைவகை சிதையா மல் அறுதாற்றிருபத்தைந்து வகைப்படுவது நாற்சீரடியே என்பதூஉங் கூறி, அந் நாற்சீரடியே காம் மூன்னர் வேண்டுந் தொடை விகற்பத்திற் குரியவென்பதூஉங் கூறினன். இச் சூத்திரத்தானே அந்தொடை கொள்வது தம்மின் வேறு காத இரண்டடிக்கண்ணென்பதூஉம் அறுதாற்றிருபத்தைந் தடியுள் ஒன்றனை இருகாற் சொல்லித் தொடை கொள்ளப் படுமென்பதூஉம், அங்ஙனந் தொடுக்குங்காலும் அடியோடு அடிக்கூட்டத்தின்கண்ணுந் தளைவகை சிதையாமல் வேண்டு மென்பதூஉங் கூறியவாறாயிற்று. இவற்றுளெல்லாம் நாற்சீ ரடியே சிறப்புடைத்தென்பது பெற்றாம். [4] இன்னும் [5] அதன் சிறப்புடைமையே [6] கூறுகின்றான். (ந.சூ)

[நாற்சீர் அடிகள் இரண்டும் பலவும் அடுத்துவந்த தொடையே பாட்டெனல்]

ந.சூஎ. அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே.

இது நாற்சீரடியே விசேடித்துக் கூறி, அதனது இடத் தானே பாட்டென்பதோர் முந்நற்பொருள் தோன்றுமென்ப தூணர்த்தியவாறு. 'எனப்படும்' என்றதனான் இவ்வடிகளான் வந்த செய்யுளே சிறப்புடையனவென்பதூஉஞ் சொல்லியவாறு. மாத்திரை முதலிய[7]வற்றை உறுப்புக்களான் இத்தூணை

1. இதுவும் வெண்பாவடி. ஆதலிற் றளைவழு.

2. அன்னதோர் வரையறை என்றது, வெண்பாவிற்குப் போன்ற வரையறையை.

3. இருவாற்றானும் வரும் என்றது, ஒன்றியும் வரும் ஒன்றா தும் வரும் என்றபடி.

4. இன்னும்—மேலும்.

5. அதன்—அந்நாற்சீரடியின்.

6. கூறுகின்றான் என்றது ஆசிரியனை.

7. வற்றை என்பது சேர்த்து எழுதப்பட்டது. அது வேண் டியதில்லை.

மாத்திரை கொண்டது செய்யுளென்றானும் இத்தூணை அசையுஞ் சீருந் தொடையுங் கொண்டது செய்யுளென்றானும் அளவியல் [1] கூறியவுறுப்புக்களான் வரையறுக்கப்படா. அடியளவே கூறச் செய்யுட் புலப்பாடாமென்பது. 'எனப்படும்' என்றதனான், [2] ஒழிந்த அடிகளானும் அவ்வாறு வருமாயினும் அவை சிறப் பிலவென்பது.

இ—ள்: அடியின் சிறப்பென்பது—அடி இரண்டும் பலவும் அடுத்துவந்த தொடையே பாட்டு என்றவாறு. தலை இடை கடைச்சுங்கத்தாரும் பிற சான்றோருந் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவும் கலியுமே பெரும்பான்மையுஞ் செய் தார்; வஞ்சிப்பாச் சிறுவரவிற்றெனக் கொள்க.

"மாயோள் மார்பி லாரம் போல
மனிவரை யிழிதரு மணிநிற வருவி
நன்பொன் வரன்று நாட
னன்புபெரி துடைய னின்சொல் வினனே."

(தொ. சூ. ந.கூ0—சூ.கூ—பேர்)

என நாற்சீரடியான் ஆசிரியம் வந்தவாறு.

"மகிழிசைத் தோன்று மதியம்போல் யாஞைத்
தகிழிசைக் கொண்டு குடையர்." (நாலடி. உக)

என்பது அளவடியானே வெண்பா வந்தவாறு.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தனும்."

(கலி. கக)

எனக் கலிப்பா அளவடியான் வந்தது. பிறவுமன்ன. (ந.சூ)

[நாற்சீரடியின் பகுப்பும் அவற்றின் பெயரும் முறையுந் தொகையும் இவையெனல்]

ந.சூஅ. நாலெழுத் தாதி யாக வாறெழுத்
தேறிய நிலத்தே சூளடி யென்ப. (ந.சூ)

ந.சூக. ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற [3] மல்வழி யான. (ந.சூ)

1. கூறியவுறுப்புக்களான் என்பது கூறி அவ்வுறுப்புக் களான் என்றிருப்பது நலம்.

2. ஒழிந்த அடி—அளவடி அல்லாத அடி.

3. அவ்வழியான எனவும் பாடம்.

கூறும். பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யொத்த நாலெழுத் தேற்றலங் கடையே. (கூ.அ)

கூறுக. மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப (கூ.கூ)

கூறுஉ. மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத்து மிகுதலு மிவட்பெறு மென்ப. (சு०)

இவை ஐந்து சூத்திரமும் உரையியைபு நோக்கி உட னெழுதப்பட்டன. நாற்சீரடி இத்துணைப் பகுதிப்படுமென அவற்றது பெயரும் முறையும் தொகையு முணர்த்துகின்றன.

இ—ள்: நாலெழுத்து முதலாக ஆறெழுத்தளவும் வந்த நிலம் மூன்றுங் குறளடியெனவும், ஏழெழுத்து முதன் மூன்று நிலனுஞ் சிந்தடியெனவும், பத்தெழுத்து முதல் ஐந்து நில னும் அளவடியெனவும், பதினேந்தெழுத்து முதன் மூன்று நில னும் நெடிலடியெனவும், பதினெட்டெழுத்து முதல் இருப தெழுத்துவரை மூன்று நிலனுங் கழிநெடிலடியெனவுஞ் சொல் லுப ஆசிரியர் என்றவாறு.

குறளடி நிலங்களே [1] வகுத்தொழியாது, [2] ஒழிந்தனவும் வகுத்துரைத்தான், அவை முதல் இடை கடையென மூன்று கூற்றுள் ஒன்றொன்றனிற் [3] சிறப்பு இழிபுடையனவென்று கொள்ளினுங் [4] கொள்ளலாமென்பது. அவற்றுக்குச் செய்யுள்:—

குறளடி { பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூரி நேர்ந்து
வண்டு சூழ வின்டு ளிங்கி

சிந்தடி { நீர்வாய் கொண்டு நீண்ட நீல
மூர்வா யூதை வீச வூர்வாய்
மணியேர் நுண்டோ டொல்கி மாகி

1. வகுத்தென்றது—குறளடியை. நாலெழுத்தடி ஐந்தெழுத் தடி ஆறெழுத்தடி என வகுத்தமையை. ஏனையுமன்ன.

2. ஒழிந்தன—குறளடி ஒழிந்த அடிகள்.

3. சிறப்பு இழிபு என்றது நான்கு எழுத்தடியினும் ஐந்து எழுத்தடி இழிபுடையது; அதினும் ஆறெழுத்தடி இழிபுடை யது எனவும், ஆறெழுத்தடியினும் ஐந்தெழுத்தடி சிறப்புடை யது; அதினும் நான்கெழுத்தடி சிறப்புடையது எனவும் கொள் ளப்படும் என்றபடி. ஏனையவுமன்ன.

4. கொள்ளாமல் என்னும் பாடம் பொருத்தமன்று.

நேரடி. { நன்மணங் கமழும் பன்னெல் லூர
வமையோர் மென்றோ ளம்பி நெடுங்க
ணிறைவீ சோதி யேந்தெ வனமுலை
யிறும்பமன் மலரிடை யெழுந்த மாவி
னறுந்தழை துயல்வருஉஞ் செறிந்தேந் தல்கு

நெடிலடி. { லணிநடை யசைஇய வரியமைச் சிலம்பின்
மணிமருள் வணர்குழல் வளரினம் பிறைநுத
லொளிநிலவு வயங்கிழை யருவுடை மகளிரொடு

கழிநெடில் { நலிமுழவு [1] முழங்கிய வளிநிலவு மணிநக
ரிருந்தளவு மலரளவு கரும்புவளவு நறுந்தெரடை
கலனளவு கலனளவு [2] நலனளவு நலனளவு

பெருமனம் புணர்ந்தீ யென்பவஃ
தொருநீ மறைப்பி னெழிருவ தன்றே.

என இதனுட் பதினேழு நிலத்து ஐவகையடியும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க. குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடியென நாற்சீரடிதானே ஐவகைப்படுமென்று அவற் றது பெயரும் முறையுந் தொகையுங் கூறினன். தொகை பதி னேழ் நிலத்து ஐவகையடியென்பது எண்ணிப்பார்க்க. இப் பெயரெல்லாங் காரணப்பெயர். மக்களுள் நீளக் குறியானைக் குறளனென்றும், அவனினெடியானைச் சிந்தனென்றும், ஒப் பமைந்தானை அளவிற்பட்டானென்றும், அவனினெடியானை நெடியானென்றும், அவனினெடியானைக் கழிநெடியானென்றுஞ் சொல்லுப. அவைபோற் கொள்க இப்பெயரென்பது. (சு०)

[சீர்கள் ஐந்தெழுத்தின் மிக்கு வாராவெனல்]

கூறுகூ. சீரிலை தானை யைந்தெழுத் தீறவாது.

இது, மேலெழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட ஐவகையடிக் குஞ் சீரும் எழுத்தெண்ணியே வகுக்கின்றது.

இ—ள்: சீரது நிலைமைதான் ஐந்தெழுத்து இறந்துவாராது என்றவாறு.

பெருமைக்கு எல்லை கூறி வரையறுக்கலே, சிறுமைக்கு எல்லை வரையறைப்படாது ஒன்று முதலாக வருமென்பதாம். சீர்நிலைதானேயென்பது பிரிநிலை யேகாரம். அதனை அசைநிலை யிற் பிரித்துக் கூறியவாறு. அதனை அவ்வாறு பிரித்துக் கூறவே

1. முழங்க எனவும் பாடம்.

2. கலனளவு கலனளவு எனவும் பாடம்.

[1] அசை சீராயவழி ஐந்தெழுத்திறவாமை அவற்றுக்கில்லையென்பது கொள்ளப்படும். அஃதேல், [2] அவற்றுக்கெல்லை கூறுதுமெனின்,—அவை மூன்றெழுத்தி னிறவாவென்பது [3] உரையிற் கொள்க. காணென்பதனை [4] இலேசுப்படுத்துக்கொள்ளினும் அமையும். மற்றிவற்றையுஞ் சீர்நிலை பெறுமென்பவாதலாற் சீரென அடக்காதுரைவெனின்,—அடக்கானன்றே; [5] அவை சீர்நிலைமையெய்தியவழியும் அசை யிரண்டாகாமையினென்பது.

"இயற்சீப் பாற்படுத் தியற்றினர் கொளலே
தகுவகை தெரியாத் தன்மை யான." (தொ. பொ. கூசo)

என்று ஆண்டு [6] வரைந்தமையின், அதனைச் சீர்நிலையென வாளாது பொதுவகையாலுரைகான். [7] அதுவே கருத்தாயின், அவற்றை நேர்பசை நிரைபசையெனக் கூறியதனானும், அவற்றை

"சுரசை கொண்டு மூவசை புணர்ந்துஞ்
சீரியைத் திற்றது சீரெனப் படுமே." (தொ. பொ. கூஉக)

என்றதனானும் பயந்தெதன்னையென மறுக்க; அல்லதூஉம், 'இயற்சீர்ப் பாற்படுத் தியற்றுக' எனவே, இவைதா மியற்சீ ரல்ல, [8] அவற்றது செய்கை இவற்றினுங் கொள்கவென்ற துணையே ஆண்டுக் கூறியதன்பது; அல்லதூஉம், தேவரும் நரகரும் மக்கட்பாற்படுத்துத் (நூஅ.அ) நிணை கொள்ளப்படுமென்ற துணையானே பிறப்பானும் [9] பெற்றியானும் மக்களென வழங்கார்; அதுபோல, அசைநிலைத் தளையும் சீர்நிலைத் தளையும் ஒக்குமென்ற துணையானே அவை அசைச்சீரெனவே அடை

1. அசை—தனியசை. அவை நேர் நிரை நேர்பு நிரைபு. இவையும் சீராக நிற்கும். அசைச்சீராயவழி எனவும் பாடம். அது சிறப்பின்று.

2. அவற்றுக்கு—அசைச்சீர்களுக்கு.

3. உரையிற் கொள்க—உரையிற் கோடல் என்னுமுத்தியாற் கொள்க.

4. இலேசு—மிகை.

5. அவை—அவ்வசைச்சீர்கள்.

6. வரைந்தது என்றது தளை சிதையாமல் இயற்றிக்கொள்க என்று வரைந்தமையை. எனவே அது சீராக இயற்றிக்கொள்ளப்படுமன்றி இயற்கைச் சீராகாது எனை நியமித்தவாறுயிற்று.

7. அதுவே—சீர் என்பதுவே.

8. அவற்றது—இயற்சீர்களது. செய்கை—தகுதித்தற்செய்கை.

9. பெற்றி—இயல்பு, தன்மை.

யடுத்தே சொல்லவேண்டுவனவற்றையும், வாளாதே சீரெனப் படுவனவற்றையும் ஒருவகையாலே சீர்நிலையென மயங்கக் கூறல் (சுசுகூ) குற்றமாமென்பது. மயங்கக் கூறல் குற்றமன்றென்பாரும் உளராயின் அவர் கருத்தினுள் அதுவும் அமையுமென்பது. ஒரு சாதியல்லனவற்றைச் [1] சாதியொன்றெனவும் புகலார்; அதுபோலச் சீரிலக்கணமுடைய இயற்சீர் உரிச்சீர்களைச் சீரெனக் கூறி அவ்வினத்தவல்லாத அசைச்சீரை இலேசினுற் [2] கொண்டானென்பது.

ஓரெழுத்துச்சீர் தனித்தியன ஒன்றேயாம்; இதனோடு வண்டு என்னும் அசைச்சீர் கூட்ட இரண்டாம்.

ஈரெழுத்துச்சீர் நான்கு; அவை: தேமா ஞாயிறு போதுபூ போரேறு என வரும். மின்னு மரகு என்னும் அசைச்சீ ரிரண்டினோடும் கூட்ட ஆறும்.

மூவெழுத்துச்சீர் பத்து; புளிமா பாதிரி வஞ்சி தண்ணறு பூமருது கடியாறு விறகுரீ மாசெல்வாய் கீடு கொடி எனவிவை. அரவு என்னும் அசைச் சீரோடுங் கூட்டப் பதினொன்றும்.

நாலெழுத்துச்சீர் ஒன்பது; அவை: கணவிரி காருருமு பெருகாணு உருமுரற்றி மழகளிறு மாவருவாய் புலிசெல்வாய் காணுக்கினை உறாபுலி எனவிவை.

ஐந்தெழுத்துச்சீர் மூன்று; அவை: நரையுருமு புலிவரு வாய் விரவுகொடி என வரும். இக்கூறுபட்டனவெல்லாம் ஈண்டுக் காட்டுவாமாயிற்று,

"எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிருதலு மில்லென மொழிப."
(தொ. பொ. கூருடு)

என வருகின்ற சூத்திரத்தினை நோக்கியென்பது. 'முடவுமருது' என்பதனைக் குற்றுகரங் கெடுத்து ஐந்தெழுத்துச் சீரென்று காட்டுவாருமுளர். அஃது உரியதை மயக்கமாகிய ஆசிரியவுரிச்சீ [3] ராகலின்,

1. சாதி—குலம்.

2. கொண்டாம் என்னும் பாடம் பொருத்தமின்று. இலேசு—சூத்திரத்துள் வரும் தான் என்பது.

3. ஆகலின் விலக்கப்பட்டது எனக் கூட்டுக.

"இன்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே." (கூகூ)

என்பதனுன் விலக்கப்பட்டதென்பது. இனி, [1] நுங்தையென் பதனை ஈரெழுத்துச் சீரென்பாருமுளர்; அங்ஙனங் கூறின்,

"இரண்டு தகையீட்ட முதலா நெருஃது." (தொ. எழு. கoங)

என்னும் எழுத்தோத்தினொடு மாறுகொள்ளுமென்பது. அது வழக்கிற்குங் கூறியது; செய்யுட்காயின் அவ்வாறு கொள்ளாமோ வெனின்,—கொள்ளாம். செய்யுட்கண்ணுமதனை [2] வேறெழுத் தென்று வேண்டுமாகலின்; என்னை?

"முற்றிய துகர மொழிதொறுக் கொளாஅல்." (கூஉக)

எனக் குற்றியலுகரமும் வருமொழியைச் சிதைத்துக் கொள் ளப்படாவென்பது கூறினனுகலினென்பது. (சக)

[சமநிலை வஞ்சிக்கு ஆறெழுத்தானுஞ் சீர் வருமெனல்]

கூருச. நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்.

இஃது, ஒழிந்த வஞ்சிப்பாவினுள் வருஞ்சீர் இத்துணை யெழுத்து இறவாதென்கின்றது. நேர்நிலை வஞ்சியென்பது, சம நிலை வஞ்சி; அஃது இருசீரான் வருதலிற் சமநிலை வஞ்சி யெனப்பட்டது. மூச்சீரான் வருவதனை வியநிலை வஞ்சி (கூகூஅ) யென்பவாகலின்.

இ—ள்: இருசீரடி வஞ்சியுள் ஒருசீர் ஆறெழுத்தாகவும் பெறும் என்றவாறு.

இதற்கு, மேனின்ற அதிகாரத்தாற் பெருக்கத்திற்கு எல்லை கூறினன், சுருக்கத்திற்கும் வரையறையுடைமையின். அது முன் னர்ச் (358) [3] சொல்லுதும். எனவே, அறுபது வஞ்சியுரிச்சீ

1. நுங்தை என்பதை ஈரெழுத்தாகக் கொள்ளின் முதலில் நிற்குமெழுத்து இருபத்திரண்டு என எழுத்ததிகாரத்து விதித்த தினொடு மாறுபடும். எங்ஙனமெனின்? அதுவும் எண்ணப்பட்டு இருபத்துமூன்று ஆதல் வேண்டிவரும் ஆதலின். இதனுலேயே முதலில் வரும் எழுத்து இருபத்திரண்டு எனக் கூறப்பட்டது. ஆதலின் ஒரெழுத்துச் சீரெனப்படுமன்றி ஈரெழுத்துச் சீரெனப் படாது என்றபடி.

2 வேறு எழுத்து—முற்றுகரத்தின் வேறுய எழுத்து. என் றது குற்றுகரத்தை. முதலெழுத்தின் வேறுய எழுத்து எனினு மாம்.

3. சொல்லுதும்—சொல்லும் என்றிருத்தல்வேண்டும்.

ருள்ளும் ஆறெழுத்தான் வருஞ்சீருங் கட்டளையடியாய் வரப் பெறுமென்றவாறு. [1] உம்மை இறந்தது தழீஇயிற்று.

"தன்சீ ரெழுத்தின் நின்மை முன்னே." (கூருஅ)

என்றதனுன், ஒன்றும் இரண்டும் எழுத்தான் வருத லொழித்து ஒழிந்த எழுத்தால் ஆறெழுத்தளவும் வஞ்சியுரிச் சீர் வருமென்பது கொள்ளப்படும். இதனை எச்சவும்மையென்பார் எழெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வருமென்ப; அங்ஙனங் கொள் ளின் இரண்டுசீராற் [3] பதினன்கெழுத்தளவாகிய செல்லும்; செல்லவே,

"குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப."
(கூகூகூ)

என்பதனொடு மாறுகொள்ளுமென்பது.

"தன்சீ ரெழுத்தின் நின்மை முன்னே." (கூருஅ)

என்பதனுன் இவற்றிற்கு உதாரணம் காட்டுதும். (சஉ)

[ஒருசீர் பல நிலைமை அடைதலால், எழுத்தளவு மிகினும் குறையினும் ஓசையால் தம்முள் ஒக்குமெனல்]

கூருடு. எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப.

இது, மேற்கூறிய சிறப்புவிதிக்கும் பொது விதி.

இ—ன்: ஒருசீர் இரண்டு முதற் [3] பதினெட்டீருகப் பல நிலைமைப்பட்டுப் பல சீராகிச் செய்யுளுள் வருமாற்றுற் றத்த மெழுத்துக் குறைந்தும் மிகுந்தும் அளவிறப்பினும் அவ்வச் சீரொனப்பட்டுச் செய்யுளுள் [4] ஒத்தவோசை [5] இருவகையும்

1. ஐந்தெழுத்தானன்றி ஆறும் என நின்றமையின் இறந் தது தழீஇயிற்று என்றுர்.

2. பதினன்கெழுத்து அளவடிக்கு முடிபாயுள்ளது. அது கொள்ளின் அதுவரையும் வஞ்சியுறழாதென்பதனொடு மாறு படும். என்னை? இச்சூத்திரத்தால் 12 எழுத்தடியே கூறலின், ஆதலிற் பொருந்தாதென்றபடி.

3. பதினெட்டீருக என்பது எட்டீருக என்றிருத்தல் வேண்டும். என்னை? இரண்டு நிலைமுதல் எட்டு நிலையீருகவே சீர்கள் வேறுபடலின். இதுவே பொருத்தமென்பது வரும் விரி வரையானறியப்படும்.

4. ஒத்தவோசையவாய் என்றிருப்பது நலம்.

5. இருவகை—மாத்திரை குறைந்தும் மிகுந்தும் வரு மிரு வகை. முறையே வண்டு மின்னு* என வருவனபோல்வன.

[1] ஒரு தன்மையவேயாகச் சுருங்கிற்றும் பெருகிற்றுமில்லை என்றவாறு.

எனவே, அவை எழுத்தெண்ணி அடிவகுக்குமாற்றான் இரு நிலைமையும், இரண்டிற்கும் பல நிலைமையும் படுவனபடும். அவ்விடத்து எழுத்திற்கல்லது சுருங்கப் பெருக்கமில்லையென்பதூஉங் கூறியவாறாயிற்று. 'தான்' என மிகுத்துச் சொல்லியதனான், [2] அசைச்சீர்க்கும் அவ்வாறே கொள்ளப்படும். 'தனவகைக் குரிய' என மேலோதிவந்த சீர் பதினைறும் அசைச்சீரிரண்டு மெனப் [3] பதினெட்டினுள்ளும் [4] இயற்சீர் பத்தினுட் புளிமாவும் வெண்சீர் நான்குமென ஐந்தும் ஒரு நிலைமையவேயாம். ஒழிந்தசீர் பதின்மூன்றும் இருநிலைமையவாய் இருபத்தாறும். ஆகச் சீர் முப்பத்தொன்றுமென்பது. அவற்றுக்குக் காரணம்:

தந்தை, தேமா; ஞாயிறு, பாதிரி; வலியது, கணவிரி; போதாடூ, மேவுசீர்; போதோடு, கன்னுளு; பூமருது, காருருமு; கடியாறு, பெருகாறு; விறகுதீ, உருமுஞ்சீ; மழகளிறு, கரையுருமு என ஒன்பதியற்சீரும் இருநிலைமையாற் பதினெட்டாயின. புளிமாவென்னும் இயற்சீர் ஒருநிலைமைத்தேயாம். [5] அல்லாதார் [6] வரகு என்பதனுட் குற்றுகரங் கலந்து புளிமாவிற்கு இரு நிலைமை காட்டுப; அங்ஙனங் காட்டின் வரகென்பதுபோலப்

---

1. ஒரு தன்மையவேயாம் என்றிருப்பது நலம்.

2. அசைச்சீர்—நேர்பு நிரைபு.

3. பதினெட்டினுள்ளும் என்றது,—இயற்சீர் நான்கு, நிரையிற்று ஆசிரிய உரிச்சீரிரண்டு, நேரிற்று ஆசிரியவுரிச்சீரிரண்டு. நேர்நிரை முதலாயும், நேர்புநிரைபு சுரூபும் வந்த ஆசிரியவுரிச்சீர் நான்கு, அசைச்சீரிரண்டு, வெண்சீர் நான்கு ஆகப் பதினெட்டு.

4. இயற்சீர் பத்தாவன—இயற்சீர் நான்கும், நேர்புநிரைபு முதலாக வரும் நேரிற்று ஆசிரிய இயற்சீரிரண்டும், நேர்பும் நிரைபு மீறுகி நேரும் நிரையும் முதலாக வரும் ஆசிரிய இயற்சீர் நான்குமாகப் பத்தாம்.

5. அல்லாதார்—பிறர்.

6. வரகு என்பதன்கண் குற்றுகரங் கலந்தால் ஒரு நிரையசையாம். புளிமா இரண்டசையாம். ஆதலால் புளிமாவிற்கு வரகு என்பதைக் காட்டி இருநிலைமை கோடல் பொருந்தாதென்பது. அதுபற்றியே வரகுக்கு அரவு இருநிலைமைக்கு உதாரணமாயிற்று. குற்றுகரத்திற்கு முற்றுகரம் ஒத்த ஓசையாதலின் இருநிலைமை கோடற்கு ஏற்குமென்பது கருத்து.

புளிமாவும் ஓரசையாகவானும், புளிமாவென்பதுபோல வரகு என்பது இரண்டசையாகவானும் கோடல்வேண்டும். கொள்ளவே இச்சூத்திரத்தினெடு மாறுகோளாமென்பது; என்னை?

"எழுத்தள வெஞ்சினஞ் சீர்நிலை தானே
குன்றது மிகுதலு மில்லை மொழிப." (கூடுரு)

என்றாராகலின் என்பது.

நீடுகொடி நாணுத்தினை எனவும், உறாபுலி விரவுகொடி எனவும் நிரையீற்றுகியவரிச்சீரிரண்டும் இவ்விரண்டாகி இருநிலைமையெய்தியவாறு.

இனி, வெண்சீர் நான்கும் ஒரு நிலைமையவேயாம்.

வண்டு, பின்னு, வாகு, ஆர எனவசைச்சீரிரண்டும் நான்காய் இருநிலைமையவேயாம்.

இவ்வாற்றான் இவையெல்லாந் தொகுப்ப, இயற்சீர் பத்தென்பதும், ஆசிரியவரிச்சீர் நான்கும், அசைச்சீர் நான்கும், வெண்சீர் நான்குமென முப்பத்தொன்றாயின. என்றார்க்கு,

'மாவருவாய், புளிவருவாய்'

என்பவற்றையும்,

[1] 'ஞாயிறுகொல், வலியதுகொல்'

எனக் குற்றுகரம்பெய்து இருநிலைமை கொள்ளாமோவெனில்,—கொள்ளாம்; அவை,

"எல்லா விறுதியு முகர நிறையும்" (தொ. எழு. சூஅ)

என்பதனான் முற்றுகரமேயாமென்பது. இனி, [2] முதற்கணின்ற குற்றுகரமுங் கொண்டு இருநிலைமை கொள்ளாம்; என்னை?

---

1. ஞாயிறுகொல், வலியதுகொல் என்பனவற்றில் குற்றுகரத்தை முற்றுகரமாகவே கோடலின், அவை மாவருவாய் புளிவருவாய் என்றே கொள்ளப்படும். ஆகலின் இருநிலைமை கோடல் வேண்டியதில்லை என்றபடி.

2. முதற்கணின்ற குற்றுகரம்—நுங்தை. இதுவும் நீநுங்தை என்றவிடத்து வெண்சீர்க்கு(த் தேமாங்காய்க்கு)ப் பதிலாக வைத்து இருநிலைமை கொள்ளாம். என்னை? வந்தூன்றது என்பது இரு சொல்லாயினும் சீர்வகையான் ஒரு சொல்லாயினது போல குற்றுகரம் முற்றுகரமாக வைக்கப்பட்டு அதுவுந் தேமாங்காய் ஆகவே கொள்ளப்படுதலின் தேமாங்காய்க்குப் பதிலாக வைத்து இருநிலைமை கொள்ளவேண்டியதில்லை என்றபடி. ஒருசொல்லாமாகவே என்றிருப்பது நலம். வேறு என்பது வேண்டியதில்லை.

துக்தையென்பது ஈரசையாகலானும் அதனை நீதுக்தையென வேறோர் சொற் பெய்து வெண்சீரெனக் காட்டின், அது 'வக்து நின்றது' என்றதுபோலச் சீர்வகையான் வேறோர் சொல்லா மாகலே அது முற்றுகரமாகலானுமென விடுக்க. என்றார்க்குப் [1] போதுபூ என்பதூஉம் இருநிலைமைத்தாகாதாம் பிறவெனின்,— அற்றன்று;

'சேற்றுக்கால், யாட்டுத்தாள், வட்டுப்போர்.'

எனப் பலவும் வருமாகலின் அஃது இருநிலைமைத்தேயாமென்பது. இனி வஞ்சியுரிச்சீர்க்கும் [2] இடைநின்ற குற்றுகரங்களை வன்றொடராக வருவித்துக்கொள்க. இனிச், [3] சிறுதுகிக் குற்றுகரங்கள் நிறையாது நிற்றலும் உடையவென்பது,

"சிறையுந் திற்றது சீரெனப் படுமே." (கூஉச)

என்றவழிக் கூறியவாற்றானறிக.

இனிச் சூத்திரம் வரையாது கூறினமையின் [4] அறுபது வஞ்சியுரிச்சீருள்ளும் இருபத்துநான்குசீர் இருநிலைமையாகவும், இருபத்தெட்டுச்சீர் நான்கு நிலைமையாகவும், எட்டுச்சீர் எட்டு நிலைமையாகவுங் கொள்ளப்படும். அவற்றுள்,

இருநிலைமைப்படுவன நேரீற்றுச்சீர் எட்டு, நிரையீற்றுச்சீர் எட்டு, நேர்பீற்றுச்சீர் நான்கு, நிரைபீற்றுச்சீர் நான்கு என இருபத்துநான்கு வஞ்சியுரிச்சீராம். அவை:—[5] மாபோகுவாய் மாவழங்குவாய் பாம்புசேர்வாய் பாம்புவருவாய், புளிபோகுவாய்

1. போதுபூவையும் நேர்நிரையாக வைக்கின் இருநிலைமையடையாதாமெனின் சேற்றுக்கால் முதலியன போதுபூப்போல வராது குற்றுகரம் பிரிந்து வருதலின் நேர்பு நேராகவே கொள்ளப்படுதலின் அவைபோலப் போதுபூவும் இருநிலைமையடையும் என்றபடி.

2. இடைநின்ற குற்றுகரம் என்றது வஞ்சியுரிச்சீரில் மாபோகுவாய் என்பதுபோல வருவனவற்றிலுள்ள போகு என்பது போல்வன. அவற்றையும் யாட்டுத்தாள் என்பதுபோல வன்றொடராக வருவிப்பின் ஓசை பிளந்து காட்டும் என்றபடி.

3. சிறுதுகிக் குற்றுகரமென்றது சார்ந்து, வரகு என்பன போலும் அசைச்சீராய் வருவனவற்றி லிறுதிக் குற்றுகரத்தை. இவை முற்றுகரமாக நில்லாது என்றபடி.

4. அறுபது வஞ்சியுரிச்சீர் என்றது வெண்சீர் நான்கையும் நீக்கி.

5. இவை நேரீற்றுச்சீர் எட்டுக்கும் உதாரணம்.

புளிவருவாய் களிறுசேர்வாய் களிறுவருவாய் எனவும், [1] மாசேர்சுரம் மாவருசுரம் மாபோகுசுரம் மாவழங்குசுரம், புளிசேர்சுரம் புளிவருசுரம் புளிபோகுசுரம் புளிவழங்குசுரம் எனவும், [2] மாசேர்காடு மாவருகாடு புளிசேர்காடு புளிவருகாடு எனவும், [3] மாசேர்கடறு மாவருகடறு புளிசேர்கடறு புளிவருகடறு எனவும் வரும்.

இவ்விருபத்துநான்கும் [4] இருநிலைமையால் நாற்பத்தெட்டா மென்பது.

இனி, நான்கு நிலைமைப்படுஞ்சீர் இருபத்தெட்டும் வருமாறு:

பாம்புபோகுவாய் பாம்புவழங்குவாய் களிறுபோகுவாய் களிறுவழங்குவாய் எனவும், பாம்புசேர்சுரம் பாம்புவருசுரம் பாம்புபோகுசுரம் பாம்புவழங்குசுரம் எனவும், களிறுசேர்சுரம் களிறுவருசுரம் களிறுபோகுசுரம் களிறுவழங்குசுரம் எனவும், மாபோகுகாடு மாவழங்குகாடு புளிபோகுகாடு புளிவழங்குகாடு எனவும், பாம்புசேர்காடு பாம்புவருகாடு களிறுசேர்காடு களிறுவருகாடு எனவும், மாபோகுகடறு மாவழங்குகடறு புளிபோகுகடறு புளிவழங்குகடறு எனவும், பாம்புசேர்கடறு பாம்புவருகடறு களிறுசேர்கடறு களிறுவருகடறு எனவும் வரும். இவற்றை,

'பாம்புபோகுவாய், பாம்புமன்னுவாய்,
மின்னுப்போகுவாய், மின்னுக்கோலுவாய்.'

என, ஒன்று நான்காக வாய்பாடு கொடுத்து ஒட்டியுணர்க.

இவற்றுள், உரியசை முதற்கணின்ற நிரையீற்று நான்கனையும் ஒன்று நான்கு செய்யுங்கால்,

'பாம்புசேர்சுரம், பாம்புசேர்வது.
மின்னுச்சேர்சுரம், மின்னுச்சேர்வது.'

என்றாற்போல வெவ்வேறு வாய்பாடு கொடுத்தரைக்க. இவையிருபத்தெட்டும் விரிப்ப நாற்றிருபத்திரண்டு வஞ்சியுரிச்சீராம்.

1. இவை நிரையீற்றுச்சீர் எட்டுக்கும் உதாரணம்.

2. நேர்பீற்றுச்சீர் நான்கற்கும் உதாரணம்.

3. நிரைபீற்றுச்சீர் நான்கற்கும் உதாரணம்.

4. இருநிலைமை யடைதற்குக் குற்றுகர அசைகளுக்கு முற்றுகர அசைகளைப் பெய்து காண்க; மாபோகுவாய் = மாமன்னுவாய் என்பதுபோல.

இனி, எட்டுநிலைமைப்படுஞ்சீர் எட்டுமாவன :—

பாம்புபோகுகாடு பாம்புவழங்குகாடு களிறுபோகுகாடு களிறுவழங்குகாடு எனவும், பாம்புபோகுகடறு பாம்புவழங்கு கடறு களிறுபோகுகடறு களிறுவழங்குகடறு எனவும் வரும்.

இவை மும்மூன்று உரியசையுடையின் முதற்கணின்ற உரியசையிரண்டும் கான்கு நிலைமை எய்தும். பின்னர் நின்ற உரியசையொன்றனை இருநிலைமையாக்கி அவற்றோடு முன்னர் நின்ற கான்கினையும் வேறுவேறு கூட்ட எட்டாமென்பது. உதாரணம் :

பாம்புபோகுகாடு மின்னுப்போகுகாடு பாம்புமன்னுகாடு மின்னுமன்னுகாடு, பாம்புபோகுகாவு மின்னுப்போகுகாவு பாம்பு மன்னுகாவு மின்னுமன்னுகாவு என வரும். இவ்வாறே ஒழிந்த சீர் ஏழினையும் வெவ்வேறு வாய்பாடு கொடுத்துசைக்க அறு பத்துகான்கு வஞ்சியுரிச்சீராம்.

இவ்வாற்றான் இருநிலைமையும் கான்குநிலைமையும் எட்டு நிலைமையும்பட்ட சீரெல்லாங் தொகுப்ப வஞ்சியுரிச்சீர் இருநூற் றிருபத்துநான்கெனப்படும். இவற்றுள் எழுமுழுத்தும் எட்டெழுத் தும் ஒன்பதெழுத்தும் பெற்றசீர் இருபத்துமூன்றுள. அவை கோடில வஞ்சிக்காகாவென்பது.

"உறழ்நில யிலவே வஞ்சிக்கு." (கூசுக)

என்புழிச் சொல்லுதும்.

இனி, [1] ஆசிரியவுரிச்சீர் நான்கும் ஒன்று நான்கு நிலை மைப்படுமென்பதூஉம் [2] ஈண்டடங்கும். நீடுகொடி குளிறுபுலி என்பன இருநிலைமைப்படும் என்பது கூறினும் என்றூர்க்கு அவற்றை இருநிலைமை யென்பதென்னே? நீடுகொடி நீடுவது எனவும், நாணுக்கோ நாணுவது எனவும் ஒன்று நான்காம் பிறவெனின்,—அற்றன்று ; நீடுவது (உகஉ) என்பதனை அலகு வைக்குங்கால்,

1. ஆசிரியவுரிச்சீர் நான்கு நிலைமைப்படல்: பாம்புபோகு, மின்னுப்போகு, பாம்புமன்னு, மின்னுமன்னு எனவும்; பாம்பு வழங்கு, மின்னுவழங்கு, பாம்புவிரவு, மின்னுவிரவு எனவும்; களிறுபோகு, அரவுபோகு, களிறுவிரவு, அரவுவிரவு எனவும்; களிறுவழங்கு, அரவுவழங்கு, களிறுவிரவு, அரவுவிரவு எனவும் வரும்.

2. ஈண்டு—வஞ்சியுரிச்சீருள்.

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி." (கூஉங)

என்பதனான், அவ்வச் சீராய் இசையாவாகலிற் பூமருது (உஙஎ) என்னுஞ் சீராக வைக்கப்படுமாகலானென்பது. (அகூ)

[எழுத்தென்னிச் சீர் வகுக்குங்கால் ஒற்றுங் குற்றுகரமும் ஆய்தமும் எண்ணப்படா எனல்]

கூருகூ. உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ
வுயிர்த்திற மியக்க மின்மை யான.

இது, மேல் எழுத்தென்னிச் சீர் வகுக்குமுறையானே ஒற்றும் ஆய்தமும் குற்றுகரமும் ஒருங்கெண்ணப்படுத லெய் தினவற்றை விலக்கினவாறு.

இ—ள் : உயிரில் எழுத்தும் எண்ணப்படாஅ — தத்தம் நிலை இனிது [1] விளங்கத் தத்தந் தன்மையான் ஒலித்தற் றொழிலில்லாத எழுத்துக்கள் ஈண்டு எண்ணப்படா ; உயிர்த் திறம் இயக்கம் இன்மையான—அங்ஙனம் எண்ணப்படாதவும் எழுத்தெனப்படுதலிற் சிறிது நாப்புடை பெயருந்துணையான் ஒலித்தலும் மொழிசார்ந்து ஒலித்தலும் உடையவன்றே? அங் ஙனம் ஒருவாற்றான் உயிர்க்குந் திறமுடையவாயினும் அவ் வுயிர்க்குந் திறம் ஈண்டுச் செய்யுட்பாற்படுங்கால் உபகாரப்பட இயங்குமாறிலவாகலின் எண்ணப்படா என்றவாறு.

மேற் சீர்தோ இருநிலைமைப்படுத்த அதிகாரத்தான் ஒற் றொடு குற்றுகரமுமே ஈண்டு விலக்கினனென்பது இச்சூத்திரம் வகுத்ததாயிற்று.

"ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்." (கூஉ0)

என மேற்கூறினனுகலினென்பது.

"பேர்த்து சென்று சார்த்துஞார்த்து."

என ஒற்றுங் குற்றுகரமும் ஒழித்து [2] எண்ணப்பட்டமையினு லெழுத்தடியாயிற்று. பிறவும் அன்ன. (அச)

1. விளங்கத் தத்தந் தன்மையான் என்பது விளங்கத்தக்க தன்மையான் என்றிருந்திருக்கவேண்டும். தன்மையான்—தன்மை யோடு.

2. பட்டமையினு லெழுத்தடியாயிற்று என்பதைப் பட்ட மையின் நாலெழுத்தடியாயிற்று என்று கண்ணழிக்க.

[சமநிலை வஞ்சியடி இருசீரான் வருமென்னல்]

நூஅ. வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்.

இது,

"நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்." (நூசை)

எனவும்,

"தன்சீ ரெழுத்தின் சின்மை முன்றே," (நூசஅ)

எனவும் எழுத்தெண்ணி வரையறுக்கப்பட்ட சீர் இரண்டு கொண்டது 'வஞ்சியடியென்பதுணர்த்துதல் தலைத்து.

இ—ள்: குறளடியே வரையறையுடைய வஞ்சியடி யெனப் படுவது என்றவாறு.

ஏகாரம் பிரிநிலை; என்னை? சிறப்புடை வஞ்சியடியைப் பிரித்து வாங்கிக்கொண்டமையின்; எனவே, முச்சீரான் வரும் வஞ்சியடியும் உள; அவை கட்டளையடியல்லவென்றனையிற்று. இங்ஙனங் கூறவே, வஞ்சியடியும் ஒருவாற்றான் உறழ்ந்துகொள்ள வழி காட்டியவாறுயிற்று. இவ்வாறு கூறுக்கால் மூன்று பாவிற் குங் கூறினன் இதற்குக் கூறியதிலனெனக் குன்றக்கூற (நூகூஉ) லென்னுங் குற்றமாமென்பது; இதனை மேல்,

"குறளடி முதலா வளவடி காறு
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப." (நூகூக)

என [1]உறழ்நிலை ஒருவாற்றானே [2]கூறுமென்பது. அச்சூத்திரத்தான் முச்சீரும் உறழ்பவென்று கொள்பவெனின்,—அஃதே கருத்தாயின் [3]இருசீரும் [4]முச்சீரும் வஞ்சிக்கென்பவென்று உடனெனுவான்மன் ஆசிரியனென மறுக்க. (சரு)

[நேர்நிலை வஞ்சிப்பாவிற்கு வருஞ்சீர் முன்றெழுத்திற் சுருங்கி வாராதெனல்]

நூஅ. தன்சீ ரெழுத்தின் சின்மை முன்றே.

இது மேற்கூறிய வஞ்சியடிக்கண் இருசீர்க்கும் பெருமைக் கெல்லை,

1. உறழ்தல்—அடியுறழ்தல்.
2. கூறும் என்றது ஆசிரியனை.
3. இருசீர்—சமனிலை வஞ்சிக்குரியது.
4. முச்சீர்—வியனிலை வஞ்சிக்குரியது.

"நேர்நிலை வஞ்சிக் காறு மாகும்," (நூசை)

என்று கூறினன்; ஈண்டு அவை முன்றெழுத்திற் சுருங்கா வெனச் சுருக்கத்திற்கு எல்லையுணர்த்துதல் தலைத்து.

இ—ள்: வஞ்சியடிச்சீர் மூன்றெழுத்திற் சிறுமைபெறும் என்றவாறு.

சிறுமைக்கெல்லை வஞ்சிச்சீர்க்கல்லது இன்மையின் இதனை,

"வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்." (நூஉஎ)

என்றதன்பின் வைத்தானெனினுமது. இது முச்சீர்க் குரித்தன்மை யானும் மூன்றெழுத்தி னிழிந்துவரும் வஞ்சியுரிச்சீர் பெரும் பான்மையும் முச்சீரடிக்கு உரிமையானும் இதன்பின்,

"முச்சீ ராஞும் வருமிட னுடைத்து." (நூஉக)

என்றுனென்பது.

"கொன்றுகோடீடு கொலைக்களிறுகடாம்." (யா. வி. ப. சக)

என்புழி, இருசீரடி முதற்கண் மூவிழுத்தான் வஞ்சியுரிச்சீர் வந்தது. பிறவும் அன்ன. 'நுந்தை காடு' என ஈரெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வந்தவாறு. (சக)

[வியநிலை வஞ்சியடி முச்சீரான் வருமென்னல்]

நூஉக. முச்சீ ராஞும் வருமிட னுடைத்தே.

இஃது, ஒழிந்த வியநிலை வஞ்சி கூறுகின்றது.

இ—ள்: வஞ்சியடி முச்சீரானும் வரப்பெறும் என்றவாறு.

'இடனுடைத்து' என்றதனான் இஃது உறழும் அடிக் கண்ணதன்றென்றவாறு. மற்று இருசீரடி வஞ்சிக்கும் இத் தானையென அடிவிரிபுமாறு கூறியதிலனுகலின், இதற்கே வரை யறையின்றென்றது என்னையெனின்,—இருசீரடிக்காயின் ஒரு வாற்றான் உறழ்ச்சி கூறி வரையறுப்பதோராது கூறினனுன், இதற்கு அன்னதூஉம் இன்றென்பது. மற்று உறழுமடி இல் வழி வஞ்சியடி இருசீர்த்தாகப் பெறுதோவெனின்,—அதற் கன்றே முச்சீரானும் வருமென்று உம்மை கூறி [1]இருசீரடி யுக் கழீஇக்கொண்டு 'இடனுடைத்து' என வேறுபடுப்பானுமிற்

1. இருசீரடி யென்றது ஈண்டு உறழாத இருசீரடியை.

றென்பது. இவ்விரண்டனையும் வஞ்சியடியென வரையாது கூறவே, அவற்றுள் வேறுவேறு வருதலும் அவை மயங்கி வருதலு முடைத்து வஞ்சிப்பாட்டென்பதும் பெறுதும். இக்கருத்தானே அவற்றைக் குறளடி வஞ்சியெனவும் சிந்தடி வஞ்சியெனவும் மயக்கடி வஞ்சியெனவுஞ் சொல்லுப. சிந்தடியான் வருதல் சிறு பான்மையெனக் கொள்க. (சஎ)

[வஞ்சியடியுள் அசை கூனுங் வருமெனல்]

கஉ○. அசைகூ னுது மல்லயி னெ.

இதவும், அதற்கெய்தியதோர் விதி.

இ—ள்: மேற்கூறிய வஞ்சியடி இரண்டன்கண்ணும் நான் கசையுங் கூனுங் வரப்பெறும் என்றவாறு.

எனவே, அடியெனப்பட்ட இருசீர்க்கும் முச்சீர்க்கும் அசை கூட்டிக்கொண்டு சொல்லப்படாவென்றவாறு. அவை:

"வாள், வலந்தர மறுப்பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன." (புற. ச)

எனவும்,

"அடி, அதர்சேர்தலி னகஞ்சிவந்தன."

எனவும்,

"வண்டு, மலர்சேர்ந்து வரிபாடின."

எனவும்,

"களிறு, கதவெறியாச் சிவந்தாஅய்
நுதிமழுங்கிய வெண்கோட்டா
னுயிருண்ணுங் கூற்றுப் போன்றன." (புற. ச)

எனவும் முறையே கான்கசையுங் கூனுயின.

இனி, இடையும் இறுதியுங் கூனுமென்பாருமுளர். அது [1] வஞ்சித்தூக்கு இரண்டுகொள்ள வருமாயின் அமையுமென்பது; என்றூர்க்கு, 'வாள் வலந்தர' என்பதனை ஒரு சீராகக் கோடு

1. வஞ்சித்தூக்கு இரண்டுகொள்ள வரின் என்றது, ஒரு தூக்கைப் பிளந்து இரண்டாகக் கொள்ள வரின் அமையும் என்றபடி. உதாரணம், — "கலங்கமாலிற்—றுறை—கலக்கானுதே" இது தூக்கு இரண்டாக இடை வந்தது. "மாவழங்கலின் மயக்குற்றன—வழி". இது தூக்கிரண்டாகக் கடை வந்தது. இதனை நச்சினார்க்கினியருரை நோக்கியறிக.

மெனின்,—'யாத்தகீர்' என்றதனான், வலந்தருதல் வாண்மேற் சென்று, வருகின்ற [1] பயனிலை நின்று வற்றுமென்பது. (சஅ)

[சீர் கூனுகுமிட மிதுவெனல்]

கஉகக. சீர்கூ னுது னேரடிக் குரித்தே.

இஃது, எய்தாதது எய்துவித்தது.

இ—ள்: தனிவகையானும் சீர்வகையானும் நின்ற நேரடிக் காயின் அசை கூனுகாது சீர் கூனுகும் என்றவாறு.

"அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாகிலை
வாடா வள்ளியங் காடுறத் தோரே." (குறுந். உகசு)

எனவும்,

"உதுக்காண், குரந்தாழ வண்கைச் சுவர்ணமாப் பூதன்."

எனவும்,

"அவனுந்தா, னென லீதனைத் தெற்புகை யுண்டியங்கும்." (கலி. கக)

எனவும் இவை மூன்று பாலினும் அளவடிக்கட் சீர் கூனுயின வாறு; என்றூர்க்கு, நேர்பசை நிரைபசைகளையுஞ் சீர்நிலை பெறு மென்றுணர்தலின் அவற்றையும்,

"சீர்கூ னுது னேரடிக் குரித்தே."

என்றதனானே கொள்ளலினின், அசைச்சீரினை வாளாது சீரென்னுனென்பது,

"சீர்நிலை தானே யைந்தெழுத் திறவாது." (கூருக)

என்றவழிக் கூறியவதனான் அறிக. அசைச்சீரினை வாளாது சீரென்னுமைக்கு மேலைச் சூத்திரமும் இச்சூத்திரமுந் தாமே [2] கரியாயினவென்பது; என்றூர்க்கு, இவற்றையும் முதற்கண்ணே காட்டியதென்னை? சூத்திரத்துள் அவ்வாறு வைத்தசைத்த

1. பயனிலை நின்றுவற்றும் என்றது வாள் என்பது வலந்தர என்பதனை டியையின் வாளானது வலந்தர என்றுய் மறுப்பட்டன என்பதற்கு ஈழுவாய் இன்றும். இன்றுகவே அஃது நின்றும் பயனில்லையாம். ஆதலால் வாள்பிரிந்து கூனுய் நின்றுல் மறுப்பட்டன என்பதனைடு முடியும் வலந்தர என்பது இடைப்பிறவரலாகிப் பொருந்தும் என்றபடி. அவாய்நிலையான் வரும் எழுவாய் வேறுஇன்மையின் நின்று வற்று மென்றூர். "வாள் வலந்தர என்பதை ஒருசீராகக் கொண்டால் பின்வரும் அடியிலுள்ள அடியென்பது இடையிற் கூனும்" என்பது பிறர் கருத்து. அது பொருந்தாதென்பது பேராசிரியர் கருத்து.

2. கரி—சான்று.

தில்லையாலெனின்,—[1] ஏற்புழிக் கோடலென்பதனான் 'முதற்கணின்று' என்றது கொள்ளப்படும். இக்கருத்தானே வஞ்சிப் பாவிற்கும் அவ்வாறே கொள்க. (சசு)

[ஐவகையடியும் விரிக்குங்கால்
அறுநாற்றிருபத்தைந்தடியாகுமெனல்]

நகஉ. ஐவகை யடியும் விரிக்குங் காலை
மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்த
வெழுபது வகைமையின் வழுவில வாகி
யறுநாற் றிருபத் தைந்தா கும்மே.

இது, முன்னர்ச் சிறப்புடைத்தென வேண்டிய நாற்சீரடியினைக் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடியென வகுத்தமையாமாறு கூறினான்; (நகஅ, நகக, நகஙி, நகஞ, நகஉ) இனி, அறுநாற்றிருபத்தைந்தென [2] அவைபட்டவிகற்பமுங் கூறியவாறு.

இ—ன்: மேற்கூறிய ஐவகையடியினையும் விரிக்குங்காலைப் பொருள்வகையமைந்த பதினேழ் நிலத்து எழுபதுவகைக் குற்றநீங்கி அறுநாற்றிருபத்தைந்தாம் என்றவாறு.

எனவே, பதினேழ் நிலத்து ஏறினும், எழுபதுவகைக் குற்றம் விரவச்செயினும் அறுநாற்றிருபத்தைந் தெனப்படாவென்பதாம். பதினேழ் நிலனும் ஆசிரியம் பெறுமென்பதூஉம், வெண்பாவுங் கலிப்பாவும் ஓரோவொன்று எட்டுநிலம் பெறுமென்பதூஉம் முன்னர்ச் சொல்லுதும். அவை மூன்றுந் தொகுப்ப முப்பத்துமூன்று நிலனையின.

[3] வெள்ளைநிலம் பதினென்பார்க்கு முப்பத்தைந்து நிலனும். எழுபது கூற்று வழுவெனப்பட்டன தளைவழு. தளைவழுவாவன:—ஆசிரிய நிலம் பதினேழனுள் வெண்டளையுங் கலித்தளையுமாகி வேற்றுத்தளை தட்ப [4] முப்பத்துநான்கு தளைவழுவாம். வெள்ளைநிலம் பத்தினும் ஆசிரியத்தளை பத்துங் கலித்தளை பத்துங் கட்ப இருபது தளைவழுவாம். இனிக், கலிநிலமெட்டனுள் ஆசிரியத்தளை எட்டும் வெண்டளை எட்டுந் தட்பப் பதினாறு தளைவழுவாம். இவையெல்லாந் தொகுப்ப முப்பத்தைந்து நிலத்தும் ஒன்றிரண்டு செய்து, எழுபது தளைவழுவாயினவாறு. இது வெள்ளைநிலம் பத்தென்பாருரை.

அது பொருந்தாது. என்னை? ஆசிரியத்து காலெழுத்தடியுள் [1] இரண்டு தளைவழுவுங் காட்டுகவெனின் அவர்க்கு அவை காட்டலரிய. [2] குறிப்பசை செய்து காட்டின் அது கூறப்பட்ட உறுப்பினுள் இன்று என்றவாறு. எடுத்தோதிய எழுத்து முதல் உறுப்பினுள் வந்த அடிக்கண்ணே காட்டாதொழிதலின் அது தான் மாறுகோளாம்; அல்லதூஉம், அவ்வாறு தளைகொள்ளின் முழுவதுங் குறிப்பசையானே வரும் அடியும், ஓரெழுத்தடி முதல் மூன்று நிலனுங் கொள்ளல்வேண்டும்; கொள்ளவே, நிலம் இருபத்தொன்றுகளும், காட்டுந் தளைவழுத் தொண்ணூற்றுநான்காகளும் பெற்று,

[3] 'ஞாயிறு வரகுவண்டு வண்டு வண்டு'

என்பது கலித்தளை தட்ப ஆசிரியவடி அன்றுவான் செல்லுமெனவுங் கூறி மறுக்க.

இனி, ஆசிரியத்துட் கலித்தளை தட்குங்கால் அவர்தாந் தளை வேண்டுமாற்றான் வெண்சீர் நிற்ப இறுதி நிரை வரவேண்டுமாகலானும், [4] கட்டளையடிக்கண் வெண்சீர் வருமென்றிலனாகலானும்,

---

1. ஏற்புழிக் கோடல்—சொன்ன விதியை ஏற்ற இடத்திற் கோடல். என்றது செய்யுட்கண் முதலிலேயே சீர் கூறுதலின் அவ்விடமே கொள்ளவேண்டும் என்பது கருத்து.

2. வகைப்பட்ட எனவும் பாடம்.

3. யாப்பருங்கலவிருத்தியுள்ளும் வெள்ளை நிலம் பத்தெனக் கூறப்படுகின்றது.

4. வெண்டளை தட்பப் பதினேழும் கலித்தளை தட்பப் பதினேழும் ஆக முப்பத்துநான்கு தளைவழுவாம்.

1. இரண்டுதளை—வெண்டளை, கலித்தளை.

2. குறிப்பசை என்று இவர் கூறியது நன்கு புலப்படவில்லை. ஆயினும் குறிப்பிசை என்று இருக்கலாம் என்பது எமது கருத்து. என்னை? அது கூறப்பட்ட உறுப்பினுள் இன்றென்றவாறு என்று கூறலின். முன்னும் (இரண்டாம் சூத்திரத்தும்) குறிப்பிசை இன்றியமையாத உறுப்போடு எண்ணப்படாதென்று கூறுதல் காண்க. இதிற் கூறிய கணக்கும் நன்கு புலப்படவில்லை.

3. ஞாயிறு என்பதன்முன் வரகுவண்டு என்பது வரின் கலித்தளை என்க. நிரையீற்று இயற்சீர்முன் நிரை வெண்சீர் வரின் கலித்தளை என்பது இவர் கருத்து. அது "நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்டல் — வரைநிலையின்றே அவ்வடிக்கென்ப" என்னுஞ் சூத்திரவுரையால் அறிக.(நஎஉ-ம் சூத்திரம்)

4. கட்டளை அடி. என்றது ஆசிரியத்துட் கட்டளையடியை.

"வெண்சீர்ற்றசை நிரையசை யியற்றே." (நசக)

என்பதனுன் [1] இயற்சீரை வெண்சீராக்கிக்கொள்ளினும் அச் சூத்திரத்துக்கு அவ்வாறு பொருளுரைப்பிற் [2] படுங் குற்றம் ஆண்டுக் கூறினுமாகலானும் அது நிரம்பாதென்பது. அற்றன்றி யும், ஒசொழுத்து முதலிய நிலங்கள் ஓசோநிலத்து இரண்டும் மூன்றும் தளைவழுக் காட்டலாமாகலின் எழுபதுவகையின் வழு வெனலுமாகாது என்பது. இனி,

"அளவுஞ் நெந்தும் வெள்ளொக் குரிய." (நஎ0)

என்னும் [3] எடுத்தோத்துக் கிடப்ப, இலேசினுன் இரண்டுநில னேற்றி வெள்ளைநிலம் பத்தெனலுமாகாது; என்னை?

[4] "அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய." (நஎக)

என ஓதினுன்; இதனினுஞ் சிறந்த வெண்பாவிற்கும் அங்ஙனம் ஓதுவான்மன் ஆசிரியன் அதுவே கருத்தாயினென்பது. அல்ல தூஉங் கலிப்பாவினுள் வெண்சீரொன்றினுங் கலியோசை பிறக்கு மென்று பதினேழெழுத்தடியான் வந்த வெண்பாவடியினைக் [5] தாமுங் களைபவராகலானும் அது கூறி நிரம்பாதென்பது.

மற்றென்னை தளைகொள்ளுமாறெனின், — ஆசிரியத்துள் இயற்சீர் பத்தொன்பதும், ஆசிரியவுரிச்சீர் நான்கும் அசைச் சீர் நான்குமென இருபத்தேழாகி,

"எழுத்தள வெஞ்சினுஞ் சீரிலை நாலே
குன்றலு மிகுதலும்" (நஙஙு)

இன்றி வரும்.

---

1. இயற்சீரை வெண்சீராக்கல் என்றது, ஞாயிறு என் பதை மாசெல்வாய் ஆக்கல். அங்ஙனமாக்கிய மாசெல்வாய்முன் வரகுவண்டு என வருவித்துக் கலித்தளையாக்கல் என்பர் பிறர்.

2. படுங்குற்றம் என்றது இயற்சீர்முன் நிரைமுதல் வெண் சீர் வரினும் கலித்தளையாமாதலின் இயற்சீரை வெண்சீராக்கல் குற்றம் என்றும் 'சுற்றசை நிரையியற்று' என்னுது 'நிரையசை' என்றது மிகையாதலின் குற்றமாமென்றுங் காட்டியவற்றை.

3. எடுத்தோத்து—சூத்திரம். இலேசு—மிகை.

4. அளவடியாவன—பத்தெழுத்தடி முதல் பதினெண்கெழுத் தடி வரையுமுள்ளவடி; அவற்றுள் மிகுதி என்றது பதின்மூன் றெழுத்தடியையும் பதினெண்கெழுத்தடியையும்.

5. தாமும் என்றது வெள்ளைநிலம் பத்தென்பாரை.

வெண்பாவினுள், ஆசிரியவுரிச்சீர் நான்கும் ஒழித்து, ஒழிந்தசீர் இருபத்துமூன்றும் வெண்சீர் நான்கினோடுங் கலைப் பெய்ய அவையும் அவ்வாறே இருபத்தேழாம்.

கலிப்பாவிற்கு, நேரீற்றியற்சீர் மூன்றொழித்து ஒழிந்த இயற்சீர் பதினைறும், ஆசிரியவுரிச்சீர் நான்கும், வெண்சீர் நான் கும் என இருபத்துநான்காம். இவை மூன்று பகுதியுந் தொகுப்ப எழுபத்தெட்டாயின. அவற்றுள், ஆசிரியத்துள் வந்த அசைச் சீர் நான்கினையும் வெண்பாவினுள் வந்த அசைச்சீர் நான்கினை யும் ஈண்டுத் தளைகொள்ளுங்கால், இயற்சீர்ப்பாற்படுத்து அடக்குக வென்று ஆண்டுக் (நசo) கூறினமையின், ஈண்டு அவற்றை இயற் சீர்ப்பாற்படுத்து அடக்கின் எழுபதாகக் கொள்ளப்படும். அங் ஙனங் கொள்ளப்பட்ட சீர் ஒன்றொன்றினோடு தட்குங்கால் அவ் வெழுபது வகையானுமன்றித் தட்குமாறில்லை. அது நோக்கி 'எழுபது வகையின் வழுவில வாகி' என்றனென்பது. அவை தட்குமாறு முன்னர்ச் (நசo) சொல்லுதும்.

அங்ஙனந் தளை தெரியா அடி, அறுநாற்றிருபத்தைந்தும் மூன்று பாவிற்கு [1] முரியவாம்; யாங்ஙனம்? ஆசிரியவடி முந் நாற்றிருபத்துநான்கும், வெண்பாவடி நாற்றெண்பத்தெட்டும், கலியடி நாற்றிருபதுமென அறுநாற்றிருபத்தைந்தாம். 'மெய் வகை யமைந்த' என்றதனுன் நான்கு சீருள்ளும் உறழ்கின்ற சீரினை அடிமுதற்கண்ணே வெளிப்பட வைத்து அச்சீரின் அடி யாக்கி உறழப்படுமென்பது கொள்க. அல்லாக்கால், [2] இடை யும் இறுதியும் வைத்து [3] உறழ்தன் முதற்கணின்றதோர் சீர் இரண்டான் அடியாகியும் அவ்வடி மயங்குமாகலான் அது மயங் கக் கூற (நகக) லென்னுங் குற்றமாமென மறுக்க.

[4] "எள்ளற்ற முந்நூற் றிருபத்து நான்ககவல்
வெள்ளைக்கு நாற்றெண்பத் தொன்குகுந்—துள்ள

---

1. மூப்பகுதியவாம் எனவும் பாடம்.

2. இடையும் இறுதியும் வைத்துறழின் என்றது—தேமா என்னுஞ் சீரினை வண்டுதேமா வண்டுவண்டு என்று இடையி னுதல் வண்டு வண்டு தேமா என்று சுற்றினுதல் வைத் துறழ்தலே. இங்ஙனமுறழின் முன்சிரு சீரும் பிரிந்து ஓரடி போலக் காணப்படும் என்றபடி.

3. உறழ்தன்—உறழின் என்றிருப்பது நலம்.

4. இகழ்தலில்லாத அகவலடி—நஉச ஆகும்.
வெண்பாவடி—கசக ஆகும்.
கலியடி—கஉo ஆகும்.

நாடின் அவை மொத்தம்=சுஉடு ஆகும்.

னவையது நாற்சீருப தாமடி நாடின்
அவையது நாற்சிருப் தைந்து."

ஆசிரியத்துள் வருமெனப்பட்ட சீர் இருபத்தேழும் ஓசோ வொன்று பன்னிரண்டாயுறழ அகவலடி முந்நாற்சீருபத்து நான்காம். இது [1]பயனில் வெளி.

[2]"நால்வே றுரியசைச்சீர் நால்வே [3]றகவற்சீர்
பால்வேறு பாட்டியற்சீர் பத்தொன்ப நாக
விருபஃதேழ் சீரகவற் கீரிரண் டாகி
யிருப தெழுந்தளவு மேற்று."

[4]"ஆசிரியப் பாவினுள் கைந்தாறே மெட்டொன்ப
தாதி நிலமாரு மைஞ்சீரா லீறு
நிரையாஞ்சீர் நேரசைச் சீர்க்கொள்ருென் றேற்ற
வரையாதொன் றேறிற்றே வந்து."

[5]ஓரொழுத்துச் சீரும் ஓரொழுத்தசைச்சீருஞ் சுருங்கத்திற் கெல்லையாகிய சீராகலான் அவை சுருக்கத்திற்கு எல்லையாகிய [6]நாலெழுத்தடி முதற் பதினைந்தெழுத்தடியளவும் [7]உயரும்.

1. பயன்—பொருள்.

2. நான்கு பகுதி யுரியசைச் சீரும் நான்கு பகுதியான அசைச்சீரும், பகுதி வேறுபாட்டையுடைய இயற்சீர் பத்தொன் பதுமாக இருபத்தேழு சீரையும் அகவலடிக்கு (சரிரண்டு) நாலெழுத்துத் தொடங்கி இருபது எழுத்துவரையும் ஏற்று. ஏற்றும்வகை அடுத்த பாட்டாலறிக.

3. அகவற்சீர் என்பது அசைவருஞ்சீர் என்றிருத்தல் வேண்டும். இயற்சீர் பத்தொன்பதெனப் பின் வரலின்.

4. அகவற்கண் நான்கெழுத்தடி முதலாக ஒன்பதெழுத்தடி வரையும் ஐவகைச் சீரானும் நிலம் ஆரும். நேரசைச்சீரினும் நிரையசைச்சீர்க்கு ஒவ்வோரெழுத்து முதனிலத்தில் ஏறலால் சற்று நிலத்தினும் ஒவ்வோரெழுத்து ஏறிவரும். நான்கு முதல் ஒன்பதுவரையு மெண்ணி ஆறு நிலமாதல் காண்க.

5. ஓரெழுத்துச்சீர்—நுங்தை.

6. நான்கெழுத்து அடிமுதல் பதினைந்து எழுத்தடிவரை யும் கூ அடியாதல் எண்ணிக் காண்க. இங்ஙனமே ஏனைய ஐந் தெழுத்து முதலாய அடிகளையும் எண்ணிக் காண்க. அவற்றை இங்கே விளக்கிக் காட்டுதும்:—

1	நிலம்	4	எழுத்தடி முதல்	15	எழுத்து அடிவரை	12	அடி
2	,,	5	,,	16	,,	12	,,
3	,,	6	,,	17	,,	12	,,
4	,,	7	,,	18	,,	12	,,
5	,,	8	,,	19	,,	12	,,
6	,,	9	,,	20	,,	12	,,

7. உறழும் எனவும் பாடம்.

அவை: [1]நுங்தை வண்டு வண்டு வண்டு எனவும், நுங்தை காருருமு நனிமுழவு நனிமுழவு எனவும் ஓரொழுத்துத் தேமா வடி பன்னிரண்டற்கும் முதலடியும் முடிந்தவடியுங் கண்டுகொள்க. வண்டு வண்டு வண்டு வண்டு எனவும், வண்டு காருருமு நனி முழவு நனிமுழவு எனவும் இவை வண்டு முதலும் முடிவுங் காட்டிய அடி.

இனி, கேழ்ற்று ஈரொழுத்துச்சீர் ஒன்றும் ஐந்தெழுத்தடி முதலாகவும் பதினேழெழுத்தடி யீறுநியாகவும் வரும். அது: தேமா வண்டு வண்டு வண்டு எனவும், தேமா காருருமு நனி முழவு நனிமுழவு எனவும் வரும். மின்னு வாரு என்னும் ஈரொழுத்து அசைச்சீரிரண்டும் அவ்வாறே யுறழும். நிரையீற் றீரொழுத்துச்சீர் மூன்றும் ஆறெழுத்தடிமுதற் பதினேழெழுத் தடியளவும் உயரும்; அவை: ஞாயிறு போதுபூ போசேறு என்பனவற்றை முதனிறீஇ வாரு வண்டு வண்டு வண்டு எனவும், நனி முழவு நனிமுழவு நனிமுழவு எனவும் தந்து இங்ஙனமாயினவாறு கண்டுகொள்க. இனி, மூன்றெழுத்தான் வருவன ஒன் பது சீரும் அசைச்சீருமெனப் பந்து. அவை: புளிமா பாதிரி வலியது மேவுசீர் நன்னுனு பூமருது கடியாறு விறருதி நீடுகொடி. அரவு என்பன. இவற்றுட் புளிமாவும் அரவும் ஆறெழுத் தடி முதலாகப் பதினேழெழுத்தடியளவும் உறழ்ந்து ஓரொன்று பன்னிரண்டு நிலம்பெறும்.

ஓழிந்தசீர் எட்டும் நிரையீருகளின் ஏழெழுத்தாதி பதி னெட்டெழுத்தடியளவும் உறழும்; அவை: புளிமா வண்டு

1. நுங்தை பன்னிரண்டடி யுறழுமாறு காட்டுதும்.

நுங்தை	வண்டு	வண்டு	நாலெழுத்தடி
நுங்தை	தேமா	வண்டு	ஐந்தெழுத்தடி
நுங்தை	தேமா	தேமா	ஆறெழுத்தடி
நுங்தை	தேமா	தேமா	ஏழெழுத்தடி
நுங்தை	மேவுசீர்	புளிமா	எட்டெழுத்தடி
நுங்தை	மேவுசீர்	புளிமா	ஒன்பதெழுத்தடி
நுங்தை	பாதிரி	கணவிரி	வரகு	பத்தெழுத்தடி
நுங்தை	பாதிரி	கணவிரி	புளிமா	பதினொரெழுத்தடி
நுங்தை	பாதிரி	நனிமுழவு	புளிமா	பன்னிரண்டெழுத்தடி
நுங்தை	காருருமு	நனிமுழவு	புளிமா	பதின்மூன்றெழுத்தடி
நுங்தை	காருருமு	நனிமுழவு	உருமுத்தீ	பதினான்கெழுத்தடி
நுங்தை	காருருமு	நனிமுழவு	நனிமுழவு	பதினைந்தெழுத்தடி

இதுபோல ஏனைய சீர்களு முறழப்படும்.

வண்டு வண்டு எனவும், புளிமா காருருமு கனிமுழவு கனி முழவு எனவும், பாதிரி வாகு வண்டு வண்டு எனவும் பாதிரி கனிமுழவு கனிமுழவு கனிமுழவு எனவும் உறழ்ந்தவழிப் புளிமா ஆறெழுத்துமுதற் பதினேழன்காறும் உயர்ந்தவாறும், பாதிரி எழெழுத்துமுதற் பதினெட்டன்காறும் உயர்ந்தவாறுங் கண்டு கொள்க. ஒழிந்தனவும் அன்ன.

இனி, நாலெழுத்துச்சீர் எழுவகைய; அவை: கணவிரி காருருமு பெருநாணு உருமுந்தீ மழகளிறு நாணுத்தளை உறு புலி என்பன. இவையெல்லாம் எட்டெழுத்தடிமுதற் பத்தோண்ப தளவும் உயர்ந்தே ஓரோவொன்று பன்னிரண்டடிபெறும்; அவை: கணவிரி வாகு வண்டு வண்டு எனவும், கணவிரி கரை யுருமு கரையுருமு கரையுருமு எனவும் வரும்; ஒழிந்தனவும் இவ்வாறே ஓட்டிக்கொள்க. ஐந்தெழுத்துச்சீர், கரையுருமு விரவு கொடி என இரண்டு. அவை ஒன்பதுமுதல் இருபதின்காறும் உயரும்; அவை: கரையுருமு வாகு வண்டு வண்டு எனவும், [1] கலனளவு கலனளவு கலனளவு கலனளவு எனவும் வரும்; விரவுகொடிக்கும் இஃதொக்கும். இவ்வாற்றான் ஓரெழுத்துச் சீரிரண்டும், ஈரெழுத்துச்சீர் ஆறும், மூவெழுத்துச்சீர் பத்தும், நாலெழுத்துச்சீர் ஏழும், ஐயெழுத்துச்சீர் இரண்டுமாகச் சீர் இருபத்தேழினையும் பன்னிரண்டிற் பெருக்கிப்பெற்ற ஆசிரிய வடி முந்நாற்றிருபத்தாகான்கும் [2] பாட்டினுங் [3] தொகையினும் வருமாறு கண்டுகொள்க.

இனி, வெண்பாவடி நாற்றெண்பத்தொன்றும் உறழ்ந் கால், [4] எழெழுத்தடியும் எட்டெழுத்தடியும் ஒன்பதெழுத்தடியும்

1. கலனளவு—கரையுருமு என்ற வாய்பாட்டில் வந்தது.
2. பாட்டு—பத்துப்பாட்டு.
3. தொகை—எட்டுத்தொகை.
4. வெண்பா அடி வருமாறு:—

7	எழுத்தடி முதல்	14	எழுத்துவரை	8 அடி.
8	,,	14	,,	7 ,,
9	,,	14	,,	6 ,,
10	,,	14	,,	5 ,,

நுந்தை வண்டு ஞாயிறு போதுபூ போரேறு என்னும் ஐந்து சீரும் எட்டடி பெறுவன. தேமா முதல் 11 சீர் 7 அடி பெறுவன. புளிமா முதல் 9 சீர் 6 அடி பெறுவன. புளிவரு வாய் கனிமுழவு இரண்டும் 5 அடி பெறுவன.

பத்தெழுத்தடியும் முதலாய் நிற்பப் பதினெண்கெழுத்தடி யளவும் ஏறி ஓரோசீர் எட்டடி பெறுவனவும், ஏழடி பெறு வனவும், ஆறடி பெறுவனவும், ஐந்தடி பெறுவனவுமாகி முறை யானே வருமென்பது.

[1] "இயற்சீர் ரசைச்சீர் பதினேழ் மூன்றே
நிரிச்சீர் நான் கேற்றச்சீர் சொன்பதிற்று மூன்று
மயக்கறு வெள்ளாக்க ணேழே நொடங்கி
யுயர்ச்சி பன்னென்கென் றெட்டு."

[2] "நாலெழுத்துச் சீரெல்லா மேழெழுத்தா னூறியத்
நாறுபெரு தொன்றிலிற் குங்குபோ னூலெழுத்தான்
வத்தசீர் வெண்பாவிற் பத்தெழுத்தான் வாராவா
யைஞ்சீர்க்கு நான்கா முதல்."

நுந்தை வண்டு ஞாயிறு போதுபூ போரேறு என ஐந் தும் எழெழுத்தடி முதற் பதினென்கெழுத்தடியளவும் உயர்ந்து ஓரோவொன்று எட்டடி யுறழப்பெற்ற அடி நாற்பதாம்.

"ஞாயிறு போதுபூ போரேறு நுந்தைவண்
டேமாநி பெட்டா மடி."

தேமா மின்னு வாகு பாதிரி வலிய தா மேவுசீர் நன்னுனு பூமருது கடியாறு விறகுநீ மாசெல்வாய் எனப் பதினென்றும் எட்டெழுத்தடி முதற் பதினென்கெழுத்தடியளவும் ஒரொன்று ஏழடியுறழப்பெற்ற அடி எழுபத்தேழாம்.

"மின்னு வாகு வலிய தா மேவுசீர்
நன்னுனு பாதிரி பூமருதே [3] யாறுநீ
மன்னுத மாசெல்வாய் தேமா வெனப்பதினே
ரென்னுகு [4] மெட்டாடி யேற்."

1. இயற்சீர் பத்தொன்பதும் அசைச்சீர் நான்குமாக 23 சீர் என்க. உரிச்சீர்—உரியசைச்சீர். ஒன்பதிற்று மூன்று 27. இவை வெண்பாவுக்குரிய சீர். ஓரடி ஏழெழுத்துமுதல் பதினென்கு வரையும் உயர்தல் மேலே காட்டப்பட்டது.

2. நாலெழுத்துச் சீரெல்லாம் ஆசிரியத்துக்கு ஏழெழுத் தடி முதலாக உறழாது எட்டெழுத்தடி முதலாக உறழப்பெற் றது. அதுபோல வெண்பாவிற்கு நான்கு எழுத்துச்சீர்கள் உறழா. அவை ஒன்பதெழுத்தடி முதலாக உறழும். ஓரெழுத்துச்சீர் முத லிய சீர்கள் ஐந்திற்கும் ஏழு முதலாக ஒவ்வோரெழுத்து ஏறி 10 எழுத்துவரையுமேற நான்கெழுத்தேறும். நாலெழுத்துச் சீரெல்லாம் என்பது மூன்றெழுத்துச் சீரெல்லாம் எனவும்பாடம்.

3. ஆறு—கடியாறு. நீ—விறகுநீ.

4. எட்டெழுத்தடி நிலம் தொடங்கி பதினென்கெழுத்தடி வரை ஏழுநிலம் பெறும்.

புளிமா அரவு கணவிரி காருருமு பெருவேணு உருமுத்தீ மழகளிறு மாவருவாய் புலிசெல்வாய் என இவை ஒன்பது சீரும் ஒன்பதெழுத்தடி முதற் பதினொன்றெழுத்தடியளவும் உயர்ந்து ஓரோவொன்று ஆறடியுறழப்பெற்ற அடி ஐம்பத்து நான்காம்.

"அரவு புளிமா கணவிரி [1]வேணு
புலிசெல்வாய் காருருமுப் பெருருமுந் [2]தீயே
மழகளிறு மாவருவா யொன்பது [3]மொன்ப
தெழுவா யிருமூன் றெனல்."

கனிமுழவு புலிவருவாய் என்னும் இரண்டுசீரும் பத்தெழுத்தடிமுதற் பதினொன்றெழுத்தடியளவும் உயர்ந்து ஓரோவொன்று ஐந்தடி யுறழப்பெற்ற அடி பத்தாயின.

"புலிவரு வாயு நனிமுழவு மென்னுமிவை
[4]யிரைத்தீ ரேழுற்றீ ரைந்து."

இவையெல்லாக் தொகுப்ப [5]வெண்பாவடி நூற்றெண்பத் தொன்றாயின. அவற்றுட் சில வருமாறு :—

1. வேணு—பெருவேணு.

2. தீ—விறருதி.

3. ஒன்பதெழுத்து முதல் பதினொன்றெழுத்துவரை உறழ ஆறடி பெறும்.

4. ஈரைந்து ஈரேழுற்று ஈரைந்து என இசையறுக்க. இருசீரும் பத்தெழுத்து முதல் பதினொரு எழுத்துவரை ஐந்தடி உறழ இரண்டற்கும் பத்தடியாம். இவை முறையே தொகுப்ப வெண்பா அடி நாற்பது, எழுபத்தேழு, ஐம்பத்து நான்கு, பத்து ஆக நூற்றெண்பத்தொன்றாகும்.

5. வெண்பா அடி உறழுமாறு :—

நுந்தை வரகு வரகு வரகு	— 7	எழுத்தடி.
நுந்தை வரகு வரகு கடியாறு	— 8	,,
நுந்தை வரகு வரகு கணவிரி	— 9	,,
நுந்தை வரகு புளிமா கணவிரி	— 10	,,
நுந்தை புளிமா புளிமா கணவிரி	— 11	,,
நுந்தை புளிமா கணவிரி காருருமு	— 12	,,
நுந்தை கணவிரி காருருமு நனிமுழவு	— 13	,,
நுந்தை நனிமுழவு காருருமு காருருமு	— 14	,,

இவற்றுள் ஏழெழுத்தடி தன்னொடு தன்னைத் தொடுக்குங்கால் தளைவழுவும், ஆதலின் அது நீக்கிக்கொள்ளப்படும். ஏனைய சீர்களையு மிவ்வாறே தளைவழுவாது தொடுத்துக்கொள்க. தளைவழுக் களையுமாற்றை மோனைத்தொடை முதலிய சிறப்புச் சூத்திர உரைகளாலறிக.

நுந்தை வரகு வரகு வரகு எனவும், நுந்தை நனிமுழவு காருருமு காருருமு எனவும், இவை ஏழெழுத்தடிமுதற் பதினொன்றெழுத்தடியளவும் நுந்தை வந்தவாறு. வண்டென்பதற்கும் இஃதொக்கும். ஞாயிறு வண்டு வரகு வரகு எனவும், ஞாயிறு காருருமு மாவருவாய் காருருமு எனவும் இவை ஏழெழுத்தடியும் பதினொன்றெழுத்தடியுமாயினவாறு. போதரூ போசோறு என்பனவற்றிற்கும் இஃதொக்கும். தேமா வரகு வரகு வரகு எனவும், தேமா நனிமுழவு காருருமு பாதிரி எனவும் எட்டெழுத்தடி முதலாகப் பதினொன்றெழுத்தடியளவும் உயர்ந்து தேமா ஏழடிபெற்றது. ஒழிந்த பத்துச்சீர்க்கும் இஃதொக்கும். புளிமா வரகு வரகு வரகு எனவும், புளிமா புலிவருவாய் காருருமு தேமா எனவும் இவை ஒன்பதெழுத்தடி முதலாகப் பதினொன்றெழுத்தடியளவும் உயர்ந்து ஆறடிபெற்றது; ஒழிந்த எட்டுச்சீர்க்கும் இஃதொக்கும். நனிமுழவு வண்டு வரகு வரகு எனவும், நனிமுழவு காருருமு பாதிரி தேமா எனவும் இவை பத்தெழுத்தடி முதற் பதினொன்றெழுத்தடியளவும் எறி ஐயெழுத்து நனிமுழவு ஐந்தடிபெற்றது; புலிவருவாய்க்கும் இஃதொக்கும். இவற்றுக்கெல்லாம் பதினொன்றெழுத்தின் எறியக்காற் செப்பலோசை திரிபுடையவென்பது வல்லார்வாய்க் கேட்டு உணர்க; என்னை?

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன குணர்த்தலும் வல்லே ராறே." (கூ உ ரு)

என்றமையின்.

"அடியி னுட்ப [1]மறிவருங் குரைத்தே."

எனப் [2]பிறருஞ் சொல்லுப.

இனி, கலியடிக்குரிய சீர் இருபத்துநான்கும் ஒரோவொன்று ஐந்தடியுறழ அதன் அடித்தொகை நூற்றிருபதாம்.

"அளவடி மிகுதி யுளப்படத் [1]தொன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய." (கூ எ க)

என்பதனான், பதின்மூன்றெழுத்தும் பதினொன்றெழுத்தும் பதினைந்தெழுத்தும் பதினேழெழுத்தும் முதலாக ஒரோவொன்று ஐந்தடி உறழ்ந்து கலியடியளவு பதினேழெழுத்துமுதல் இருபதின்காறும் உயருமென்பது.

1. அறிவருங்குரைத்து—அறிவரிது.

2. எந்நூலிலுள்ளது என்பது புலப்படவில்லை.

[1] "நிரையீற் றியற்சீர் பதினாறு மேனை
நிரையீற் றகவற்சீர் நான்கு மொருநான்கு
வெண்சீரும் துள்ளற்கு வெவ்வே ருருசீரா
னேந்தா முறழ்ந்த வடி."

[2] "ஈரெழுத்துச் சீர்பதின்மூன் ருதி யிருபதின்கா
ருேரியசீர் நான்கற் குயர்வு."

ஞாயிறு போதுபூ மோரோறு என்னும் ஈரெழுத்துச்சீர் மூன்றும், பதின்மூன்றெழுத்து முதற் பதினேழெழுத்துவரை ஒரோவொன்று ஐந்தடியுறழும். பாதிரி வலியது மேவுசீர் நன்னனு பூமருது கடியாது வீறகுநீ மாசெல்வாய் நீடுகொடி என மூவெழுத்துச்சீர் ஒன்பதும், பதினன்கெழுத்து முதற் பதினெட்டெழுத்தளவும் ஒரோவொன்று ஐந்தடியுறழும். கணவிரி காருருமு பெருகாணு உருமுரற்றி மறங்கிளறு மாவருவாய் புலிசெல்வாய் நாணுந்தளை உரறுபுலி எனநாலெழுத்துச்சீர் ஒன்பதும், பதினைக் தெழுத்துமுதற் பத்தொன்பதெழுத்தளவும் ஒரோவொன்று ஐந்தடியுறழும். நரையுருமு புலிவருவாய் விரவுகொடி என்னும் ஐந்தெழுத்துச்சீர் மூன்றும், பதினெறெழுத்தடி முதல் இருபதெழுத்தடியளவும் உயர்ந்து ஒரோவொன்று ஐந்தடிபெறும்.

இவ்வாற்றுற் சுட்டலைக்கவியடி [3] நூற்றிருபதாமென்பது, அவற்றுட் சில வருமாறு :—

ஞாயிறு புலிசெல்வாய் [4] மாசெல்வாய் புலிசெல்வாய் என வும், ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் புலிவருவாய் எனவும்,

1. நிரையீற்றியற்சீர்—16-ம்
ஏனைய நிரையீற்று ஆசிரிய உரிச்சீர்—4-ம்
வெண்சீர்—4-ம்

ஆக 24-ம் கலிக்குரிய. ஒருசீரான் உறழ்ந்த அடி ஐந்தாம். எனவே ஒவ்வொரு சீரும் ஐவைந்தடி யுறழும்.

2. ஈரெழுத்துச்சீர் முதலாகச் சொல்லப்பட்ட சீர்கள் (2, 3, 4, 5) நான்கற்கும் 13 எழுத்துமுதல் 20 எழுத்துவரை உயரும்.

அடியைந்தாமாறு :—

2	எழுத்துச்சீர்	13	எழுத்துமுதல்	17	எழுத்துவரையுயர	5	அடியாம்.
3	,,	14	,,	18	,,	,,	
4	,,	15	,,	19	,,	,,	
5	,,	16	,,	20	,,	,,	

3. 24 சீரும் ஐந்தடி உறழக் கலி 120 அடி ஆகும் என்க.

4. இதில் மாசெல்வாய் இறுதிச்சீராய் வருதல்வேண்டும், மாறி எழுதப்பட்டது. பின் புலிசெல்வாய் மாசெல்வாய் என 'ஈற்றுக்கண்' எனக் கூறும் வாய்பாட்டானறிக.

முதலும் முடிவும் பதின்மூன்றும் பதினேழுமாகி ஈரெழுத்துப் பாதிரி ஐந்தடியுறழ்ந்தவாறு. ஞாயிறு புலிவருவாய் என முதற் கண் ஆசிரியத்தளை தட்டதென்னெனின்,—என்னும் ;

"நிரைமுதன் வெண்சீர் வந்துநிரை தட்டல்
வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப." (கஎஉ)

என்புழி அதனைக் கலித்தளை யென்னுமாகலின். புலிசெல்வாய் மாசெல்வாய் என ஈற்றுக்கண் வெண்டளை வந்தது என்னெனின், என்னும் ;

"வெண்சீ ரிற்றளை நிரையசை யியற்றே." (கூசக)

என்றலுகலின்.

ஒழிந்த மூவெழுத்துச்சீரும், நாலெழுத்துச்சீரும், ஐயெழுத்துச்சீரும் அவ்வாறே உறழ்ந்துகொள்க. (ரு0)

[நாற்சீரடிபோல ஏனைய அடிகள் விரிக்கப்படா எனல்]

கூசஙூ. ஆங்கவும் விரிப்பி னளவிறந் தனவே
பாங்குற வரைந்தோர் பன்னுங் காலை.

இஃது, ஒழிந்த அடியும் இக்நாற்சீரடிபோல உறழ்கவென் றார்க்கு அவை யுறழாவெனவும் உறழாமைக்குக் காரணமுங் கூறுகின்றது.

இ—ள் : அங்நாற்சீரடிபோல் மற்றையடிகளையும் விரிப்பின், அஃது இலக்கணக் கட்டளையின் இகந்துபட்டதாம், அப்பகுதியெல்லாம் அறிந்தோர் விரிக்குங்காலத்து என்றவாறு.

அளவிறந்தன—எண்ணிறந்தன. அஃது இலக்கணங் கூறுமாறு அன்றென்றவாறு ; அஃது எற்றுற் பெறுதுமெனின்,—இதன் முதனூல் செய்த [1] ஆசிரியன் சொல்லுமாற்றுற் பெறுதுமென்றவாறு.

கலியடி உறழுமாறு :—

ஞாயிறு புலிசெல்வாய்	புலிசெல்வாய் மாசெல்வாய்	13 எழுத்து
ஞாயிறு புலிசெல்வாய்	புலிசெல்வாய் புலிசெல்வாய்	14 ,,
ஞாயிறு புலிசெல்வாய்	புலிசெல்வாய் புலிவருவாய்	15 ,,
ஞாயிறு புலிசெல்வாய்	புலிவருவாய் புலிவருவாய்	16 ,,
ஞாயிறு புலிவருவாய்	புலிவருவாய் புலிவருவாய்	17 ,,

பிறசீர்களையு மிவ்வாறே உறழ்ந்துகொள்க.

1. ஆசிரியனகத்தியன் எனவும் பாடம்.

எனவே, என் சொல்லப்பட்டதாம்; அங்ஙனம் [1] வரையாது சிறப்புடையனவற்றுக்குஞ் சிறப்பில்லனவற்றுக்கும் ஒருங்கு இலக்கணங் கூறின் அவையெல்லாம் எடுத்தோதப்பெறுக இலக்கணத்தவாம்; அதனால் வரையறையுடையனவற்றுக்கு அன்றி, வாளாதே [2] பரந்துபட்டவகையான் இலக்கணங் கூறிற் பயனில் கூற்றுமெனவும், அது சுருங்கி இதன் முதனூல் செய்த ஆசிரியருங் கூறிற்றிலரெனவுங் கூறியவாறு.

வடநூலாசிரியர் [3] ஆறுவகைப் பிரத்தியங்களான் எழுத்துக்களைக் குருவும் இலகுவுமென இருகூறுசெய்து உறழ்ந்து பெருக்கிக் காட்டுவதோராறுமுண்டு. அவரும் இருபத்தாறெழுத்தளவும் உறழ்ந்துகாட்டி, ஒழிந்தன ஞகிழ்ந்துபோவர். அவ்வாறே சீர்களையும், குருவும் இலகுவும்போல இருசீரடி இத்தனையெனப் பெருக்கவும் ஒழிந்தனவும் இவ்வாறே பெருக்கவுஞ் [4] சிதைந்தகில்லை. அங்ஙனம் பெருக்குங்காலும் ஓரடிக்

1. வரையாது கூறின் என இயைக்க. வரையாது—வரையறை செய்யாது.

2. பரந்துபட்டனவற்றிற்கும் எனவும் பாடம். இது சிறப்பு. நச்சினர்க்கினியருரை நோக்குக.

3. பிரத்தாரம், நட்டம், உத்திட்டம், குருலகுச்செய்கை, சந்தத்தொகை(எண்),நிலவளவு என்பன ஆறுவகைப் பிரத்தியங்களாம். பிரத்தாரம்—உறழ்ச்சி. நட்டம்—கேடு. உத்திட்டம்—நித்திட்டம். (சுட்டு) (வீரசோழியம் - யாப்பு - கூ.o-ம் செய்யுள் உரை நோக்குக.) குருவாவது நெட்டெழுத்தும் நெடிலொற்றும் குறிலொற்றும் வருவதாம். இலகுவாவது—குற்றெழுத்து வருவதாம். இதனை :—

"உறழ்ச்சிகே ளுத்திட்ட மொன்றிரண்டென் றேத்தித்
திறப்படுத்த திண்ணிலகுச் செய்கை—சிறப்பித்தாங்
கெண்ணி லிலவளவோ டேய்ந்த விருமூன்றே
திண்ணியோர் கண்ட தெளிவு."

(யாப்பருங்கல விரு. 495-ம் பக்கம்)

என்னும் வெண்பாவானும்,

"ஏறிய நெட்டெழுத் தேநெடி லொற்றே யெறில்வடநூற்
கூறிய சீர்க்குறி லொற்றே குருவாங் குறிலதுவே
வேறியல் செய்கை லகுவென் றுகுரும் வியன்குறிலு
மீறிய லிற்பிறி தாமொரு காலென் றியம்புவரே."

என்னும் (வீரசோ. யாப்பு 26) கட்டளைக்கலித்துறைச் செய்யுளானும் அறிக. பிரத்தியம்—தெளிவு என்பர் வீரசோழிய காரர். "செப்பார் தெளிவுக ளாறையும்" என்பதனுலறிக. (யாப்பு—27).

4. சிதைவு—அழிவு, குற்றம்.

குறிய சீர் பத்தும் தாறும் ஆயிரமுமாக வைத்து உறழ்க்கக் காலும் வருவதொன்றில்லை; அங்ஙனம் உறழினும் இத்தனைச் சீரான் வந்த அடிக்கே உறழ்ச்சி கூறுவதென்று ஒரெல்லை கூறிக்கொள்ளல்வேண்டும்; கொள்ளவே எத்தனையிடஞ் சென்றக்காலும், இத்தனையென வரையறைப்பாடு உடையனவல்ல; அவ்வரையறை இன்மையின் அதனை அளவிலவென்பதற்கோர் காரணங் கூறல்வேண்டுமாதலான் அதுநோக்கி நாற்சீரடி சிறப்புடைத்தென [1] வேறு பல காரணங் கூறி, அவற்றுக்கே வரையறை கூறி, அல்லனவற்றுக்குச் சொல்லப்படாதென்றுன் இச்சூத்திரத்தானென்பது. அஃதேல், அவை சிறப்புடையவற்றுக்குக் காரணங் கூறியவாற்றுற் சான்றோர் செய்புளுட் பயின்றுவரல்வேண்டும் பிறவெனின்,—இந்நூல் செய்தகாலத்துத் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் அவ்வாறு கட்டளையடியாற் பயின்றுவரச் செய்யுள் செய்தாரென்பது இச்சூத்திரங்களாற் பெறுதுமென்பது. இதன் முதனூல் செய்த ஆசிரியனுற் செய்யப்பட்ட [2] யாழ்நூலுள்ளும் சாதியும் உவமத்தருவும் திருவிரியிசையுமெனக் கூறப்பட்டவற்றுட் [3] கட்டளைப்பாட்டுச் சிறப்புடையன சாதிப்பாட்டுக்களே; அவை இக்காலத்துப் பயின்றிலவென்று மற்றையவற்றோடு ஒக்குமெனப்படாவென்பது; அல்லதூஉம், உலகத்து மக்கட் பிறவி பலவாயினும் நால்வகை வருணமென்ப, அவர் வரையறை யிலக்கணத்தராகலினென்பது; இனி, அவருள்ளும் அந்தணரும் வேளாளரும்போல இடையிருவகையோரும் பயின்றிலரென்று சிறப்பிலராகரென்பது.

இனி, கடைச்சங்கத்தார் அறுநூற்றிருபத்தைந்தடியும் பயின்றுவரச் செய்யுள் செய்திலராலெனின்,—கட்டளைபடியாற் செய்தவல்லன வேண்டாவென்பதோர் ஆணையுடைமையின் நல்லர்; உடையவரும் இவ்வாசிரியனுற் சிறப்புடைத்தென்று சொல்

1. வேறு பல காரணம்—அளவிற்பட்டமைந்தமையும் பயின்றுவருதலும் தளையமைந்து நிற்றலும் தொடைப்பாடமைந்து நிற்றலும் என்பன. இவற்றை கூஉ-ம், கூக-ம் சூத்திர உரை நோக்கியறிக.

2. யாழ்நூல்—இசைநூல். சாந்நி முதலிய மூன்றும் இசைப்பாட்டின் பேதங்கள்.

3. கட்டளைப்பாட்டு என்பது கட்டளைப்பட்டு என்றிருப்பது நலம்.

லப்பட்ட [1] அளவடியாற் செய்புள் செய்தாரென்பது. இனி, [2] பிற்காலத்தார் அளவடியாற் பயின்றுவரச் செய்புள் செய்கில ரென்று கடைச்சங்கத்தார் செய்புள் [3] செய்த அடியுஞ் சிறப் பிலவாமோவென்பது. வஞ்சியடிக்கும் இவ்வனம் வரையறை யின்மையதாக்கும். அது முன்னர்ச் சொல்லுதும். (நிக)

[குறளடி முதலிய ஐந்தும் ஆசிரியத்துக்குரியவெனல்]

கூகூச. ஐவகை யடியு மாசிரியக் குரிய.

இஃது, எய்தாதது எய்துவித்தது; மேல் வருக்கப்பட்ட அடியினை இன்ன பாவிற்குரிய அடி இவையென்று கூறுதான் அது கூறினமையின்.

இ—ள்: காலெழுத்து முதலாக இருபதெழுத்தின்காறும் உயர்ந்த பதினேழ் நிலனும் ஆசிரியத்திற்குரிய என்றவாறு.

"மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்த
.....அறுநாற் றிருபத் தைந்தாரும்." (கூகூஉ)

என்றான், அதனை ஈண்டுப் [4] போந்தந்து ஆசிரியத்திற்கு எய்து வித்தவாறு. அவற்றுக்குச் செய்புள் ஐந்தடியுங் கூறியவழிக் காட்டப்பட்டது. மற்று,

"மெய்வகை யமைந்த பதினேழ் நிலத்தும்." (கூகூஉ)

எனவே இதுவும் அடங்காதோவெனின்,—அடங்காது; பாத் தோன்றும் அங்நிலங்கள் பருத்துக்கொள்ளப் பொதுவகையால் ஆண்டோதினனென்பது; மற்று ஐவகையடியும் ஓராசிரியத்துக் கண் வரல்வேண்டுமோவெனின்,—அன்னதோர் வரையறை யுண்டே? வரையாது கூறினமையின் அவையெல்லாவாற்றானும் வருக; வருங்கால் ஐந்தும் ஆசிரியத்துக்கு உரியவென்பதே கருத்து. ஒழிந்த பாவிற்கு நிலங் கூறாராவெனின்,—ஆசிரி யம் பதினேழ் நிலனுமுடைமையின் அக்கூறிய பதினேழ் நில னுக் தளை விரவுதலின் தளை அகற்றுப்பின் கூறித் தளையதிகாரம்

1. அளவடி—கட்டளையடியல்லாத நாற்சீரடி. கட்டளையடி யாற் செய்திலராயினும் கட்டளையல்லாத அளவடியாற் செய் தனர் என்பது கருத்து.

2. கடைச்சங்கத்துக்குப் பிற்காலத்தார்.

3. செய்த அடி—கட்டளையல்லாத அளவடி.

4. போத்தந்து—போகத் தந்து—கொண்டுவந்து.

பட்டமையின் அவற்றுப்பின் ஒழிந்த பாவிற்கு நிலனுங் கூறு மென்பது.

மற்று, ஆசிரியமென்பது மகரவீறுதலின்,

"மஃகான் புள்ளிமுன் னத்தே சாரியை."
(தொ. எழு. கூஉடு)

என்பதனான், அத்துச்சாரியை பெறல்வேண்டுமெனின்,—அது செய்புள் விகாரமென்பாருமுளர்; அற்றன்று; ஆண்டு நின்றது தான்காமுருபாயினன்றே அது கடாவாவது; அதனை ஏழாவ தன் பொருண்மைக்கண் [1] அக்குச்சாரியை ஈறு திரியாது வந்த தென்று கொள்ளப்படும். (நுஉ)

[ஆசிரியத்துள் கட்டளையடியல்லாதவடிக்கண் தளை விரவிவரினும் நீக்கப்படா எனல்]

கூகூநு. விராஅய் வரினு மொருஉநிலை யிலவே.

இஃது, எய்தியது இகந்துபடாமைக் காக்கின்றது; 'மெய் வகை யமைந்த பதினேழ் நிலம்' எனவும், 'எழுபது வகையின் வழு' எனவும் மேனிறுத்த (கூகூஉ) முறையானே ஆசிரியத் திற்குப் பதினேழ் நிலமாமாறு கூறினான். இனி, எழுபதுவகை யின் வழுவாயினை, அப்பதினேழ் நிலத்து யாண்டுமாகாதென் பது பட்டதனை இகந்துபடாமைக் கூறினமையின்.

இ—ள்: தளை விரவிவரினும் ஒருவப்படா என்றவாறு.

மற்றிதனைத் தளை விரவிவரினுங் கட்டளையடியாமெனப் புறனடுத்தானென்று கோடுமோ, தளை விரவிற் கட்டளையடி யாகாதென்று [2] கோடுமோவெனின்,—தளை மயங்காதனவே தளை வகை யடியெனவும் அல்லன கட்டளையடியாகாவெனவுங் கோடு மென்பது. அஃதேல், தளை மயங்கின அடிக்கும் பதினேழ் நிலனுங் கோடுமோவெனின்,—கோடுமன்றோ? 'விராய் வரினும்' என்ற [3] உம்மை இறந்தது தழீஇயிற்றாகலி னென்பது. (நுகூ)

1. ஆசிரியக்கு என்பதில் அக்கு, சாரியை என்பது இவ் வுரையாசிரியர் கருத்து.

2. கோடும்—கொள்ளுதும்.

3. விராய் வரினும் என்ற உம்மை விரவாது வரினும் என் பதைத் தழுவலின் இறந்தது தழீஇயிற்று. ஆதலின் விரவாது வருவது பதினேழ் நிலக்கண்ணதலின் விரவுதலும் அதன் கண்ணே என்பது பெறப்படும் என்பது கருத்து.

[ஆசிரியத்துள் உரிச்சீராறும் இயற்சீரோடு கூடி கட்டளையடியல்லாத ஐந்தடிக்குமுரியவெனவும் அவற்றுள் நிரையீற்று உரிச்சீரிரண்டுந் தளைத்து வருமெனவும்]

கஉசுசு. தன்சீர் வகையினுந் தளைநிலை வகையினு
மின்சீர் வகையி னைந்தடிக்கு முரிய.

இஃது, எய்தாதது எய்துவித்தது; என்னை? இயற்சீராற் கட்டளையடியாமாறெல்லாம்,

"ஐவகை யடியு மாசிரியக் குரிய." (கஉசை)

என்னுந் துணையுங் கூறிப் பின்னும்,

"விராய் வரினு மொருஉறில பிலவே." (கஉசூ)

எனக் கட்டளையடியன்றியும் அளவடி வருமெனவும் அவை பதினேழ் நிலத்தவெனவுங் கூறி, இனி, உரிச்சீராலும் சீர்வகையடி உளவென்பதூஉம், அவையும் பதினேழ் நிலத்தின் இகந்து வாராவென்பதூஉங் கூறுகின்றமையின்.

இ—ள்: தன்சீர்வகையினும்—ஆசிரியவுரிச்சீராலும்; அதனை [1] அதிகாரத்தாற் கொள்ளப்படும்; தளைநிலை வகையினும்—அவ்வாசிரியவுரிச்சீராலாகிய தளைநிலைமைப் பகுதியாலும், இன்சீர் வகையினும்—இன்சீர்ப்பகுதியாலும், ஐந்தடிக்குமுரிய—அவையும் மேற்கூறிய ஐவகையடிக்கும் உரியவாம் என்றவாறு.

'ஐந்தடிக்கு முரிய' எனவே பதினேழ் நிலத்தின் இகந்து வாராவென்பதாம். தன்சீரென்றது 'வகை' என்றது அவற்றை இருபகுதியாலே,

"முன்னிரை யுழியு மன்ன வாகும்." (கஉசு)

என்றதும்,

"வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீர்." (கஉசூ)

என்புழி, [2] உடன் கூறுது கூறிய வேறுபாடும் நோக்கியென்பது அதனது பயம்; வருகின்ற தளைவகைக்காயின் ஆசிரிய

1. ஆசிரியம் அதிகாரப்பட்டமையின் அதிகாரத்தாற் கொள்க என்றார்.

2. உடன் கூறுது என்றது நிரையீற்று ஆசிரியவுரிச்சீரிரண்டையும் உடன் கூறுமை.

வுரிச்சீராறுங் தளைகொள்ளப்படா, முன்னிரையீற்ற இரண்டு மல்லதென்றவாறு. தளைநிலைவகை சிறப்புடைமையின் அது முற் கூறுகவெனின்,—அங்ஙனமாயினும் அறுவகைச் சீராஞ் சீர் வகையடிவருதல் பெரும்பான்மையாகலானும் அவற்றுள்ளும் நீடுகொடி குளிறுபுலி என்னும் இரண்டுமேபற்றித் தளைகோடல் சிறுபான்மை நோக்கியுந் 'தன்சீர்வகை' முற் கூறப்பட்டது. அல்லதூஉங் 'தளைநிலைவகை' முற்கூறின் மேற்கூறிய வியற் சீர்த் தளைமேற் செல்லும். அவ்வாறன்றிக் [1] தன்சீர்த் தளையே கோடற்கும் அது பிற்கூறினு னென்பது. மற்றுத் தன்சீராலுந் தளையினு இன்சீர் வகையோடு ஐந்தடிக்கு முரித்தென்றிதன்னை யெனின்,—ஆசிரிய வுரிச்சீர் நான்கும் நிரலே நின்றுழி அகவலோசை பிறவாதென்பது அறிவித்தற்கென்பது. எனவே, ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் இன்சீர் வரல் வேண்டுவதாம்.

'இன்சீர் வகையின்' என இயற்சீர்களான் உரிச்சீர்களை வகுத்து நிறீஇக் கொள்ளப்படும்.

உதாரணம்:

"ஓங்குகோட்டுக் கொடுத்த பாம்புபுரை வருவி"

எனவும்,

"நிவந்துதோன்று களிற்றி லிலங்குகோடு புரைய"

எனவும் இவை இயற்சீரொன்று இடையிட்ட ஆசிரியவுரிச்சீரான் வந்த நேரடி.

"பசும்புமணி யுமிழும் பானு ளீங்குவரல்"

என்பது, இயற்சீரிரண்டு இடையிட்டு வந்தது. இதுவும்,

"அரையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி" (கஉக)

என்பதனுன் அகவலோசை வழுவினவாறு அறிந்துகொள்க.

இனி, தன்சீரால் தளைநிலையடி வருமாறு:

[2] "ஓங்குமகிப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ." (புற. ருடு)

1. தன்சீர் — ஆசிரியவுரிச்சீர்.

2. ஓங்குமகி — நீடுமதி என்னும் வாய்பாடு.

[1]"உவவுமதி யுருவி னேங்கல் வெண்குடை." (புற. ங)

எனவரும்.

தளைவகை யென்னுது 'நிலை' என்றதனுன், அவற்று இரண்டு ஆசிரியவுரிச்சீரும் அடிமுதற்கணின்று சீராவதன்றி இடைவாராவென்பது கொள்க. தளைநிலையென்னுது 'வகை' என்ற தென்னையெனின்,—உரிச்சீரால் தளைவழங்கின் ஓரடிக் கண் இரண்டுவரின் ஓசையுண்ணுதென்பது உணர்வித்தற்கென் பது. இவையும் இன்சீர்வகையொடு வருமெனவே [2]தன்சீர் இயற்சீரொடு தட்குமென்பதாம்; அஃதேதல்,

"தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா." (நசுஎ)

என வருகின்ற சூத்திரத்தானே தன்சீர் பெறுதுமாகலின், ஈண்டுத் தளைநிலைவகையே கூறுகவெனின்,—இஃது ஆசிரியத் திற்குக் கூறினுன், அது வெண்பாவிற்குக் கூறினுன்; அல் லாக்கால், அது மிகையாமென்பது. எனவே, தன்சீர்வகை [3]நாலெழுத்திற்கு உரித்தன்றென்பதூஉம், [4]தளைவகையடி, குறளடி முதன்மூன்று நிலத்திற்கும் உரித்தென்பதூஉம் உரை யிற் கொள்க.

"ஓங்கு கோட்டுமீது பாய்ந்து பாய்ந்து
முசுக்கலை யாடு நாடற்
குரைப்பதை யெவன்கொனந் தோளே தோழீஇ."

என்பது, ஐந்தெழுத்தால் தன்சீரடி வந்தது.

"ஆடுகொடி நுடங்கு காடு போந்து
விளங்கிழை நகர்வயிற் சேர்ந்தன
முழங்குக வானந் தழங்குரல் சிறந்தே."

என்பது, ஏழெழுத்தால் [5]தளைநிலையடி வந்தது. பிறவும் அன்ன.

இன்சீரென்னுது 'வகை' என்றதனுல் இயற்சீர்ப்பாற் படுத்து இயற்றிக்கொள்ளப்பட்ட [6]அசைச்சீரும் (நசஅ) இன்

1. உவவுமதி — குளிறுபுலி என்னும் வாய்பாடு.
2. தன்சீர் — ஆசிரியவுரிச்சீர்.
3. நாலெழுத்திற்கு — நாலெழுத்தடிக்கு. எனவே ஐந் தெழுத்தடி முதலாகவரும்.
4. தளைவகையடி — நிரையீற் றுசிரியவுரிச்சீரடி.
5. தளைநிலையடி — நிரையீற் றுசிரியவுரிச்சீரடி.
6. அசைச்சீர்—நேர்பும் நிரைபும்.

சீரேயாம்; தன்சீர்வகையினுந் தளைநிலைவகையினும் இடை யிட்டு வந்ததென்பது. இவை மேற்காட்டியவற்றுட் காணப் படும். (நுசு)

[வெண்சீர்முன் வெண்சீர்வந்து ஒன்றிய வெண்டளை வெண்பாவில் கட்டளையடிக்கண் வாராவெனல்]

நகூஎ. [1]தன்சீ ருள்வழித் தளைவகை வேண்டா.

இது, மேல் ஆசிரியத்திற்குத் தன்சீர்வகையுந் தன்றளை வகையுங் கூறியவழியானே வெண்பாவிற்குச் சீர்வகையுந் தளை வகையுங் கூறுகின்றது.

இ—ள்: தன்சீர்—வெண்சீர், உள்வழி—வெண்சீரே வருஞ் சீராகியும் வந்தவழி; என்னை? தளைவகைக்கு இரண்டுசீர் வேண்டு தலானும் தளைவகை வேண்டாதநிலம் இதுவென்கின்றுணுகலானு மென்பது. தளைவகை வேண்டா—தளைவகை நிலைமை கொள் ளப்படா மற்றவ்வடிக்கண் என்றவாறு.

எனவே, வெண்சீர் நிற்ப இயற்சீர்வந்தான்றின் வெண் டளையாமென்பதே கருத்தாயிற்று. இஃது, உய்த்துக்கொண் டுணர்தலென்னும் உத்திவகை. இதனுனே வெண்சீர்க்கு வெண் சீரே வந்தான்றுவது கட்டளையடி யெனப்படாது சீர்வகை யடியாமென்பது பெற்றும்.

"வெண்சீ ரொன்றின் வெண்டளை கொளாஅல்."

"வெண்சீ ரொன்றினும் வெண்டளை யாகு
மின்சீர் விரவிய காலை யான."

என்றுர் காக்கைபாடினியாரும்.

வெண்சீ ரொன்றியது வெண்டளையாகாதென்றற்குக் காரண மென்னையெனின்,—

"அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
தளைவகை யொன்றுத் தன்மை யான." (நஎ0)

1. வெண்சீர்நிற்ப வெண்சீர்வரின் வெண்பாவிற்குத் தளை கொள்ளப்படா என்பது கருத்து. இயற்சீர்வெண்டளையே கட் டளைக்குரியது. வெண்சீர்முன் வெண்சீர்வந்து தட்பின் அது கட்டளையடியாகாதென்பது கருத்து.

என்புழி, அளவுஞ் சிந்தும் அல்லாத [1] வேறிய நிலமெல் லாம் வெண்பாவுங் கலிப்பாவுந் தம்மில் தளைவகை யொக்கு மென்றலுகலினென்பது. எனவே, வெண்சீர் நான்கும் ஒன்றி வரின் அது கலிப்பாவிற்குஞ் சீர்வகையடியாவதாயிற்று.

மற்று, வஞ்சியுரிச்சீருந் தன்சீராகலின் இன்னவாறு தளை கொள்ளுமென்றலேனெவினின், — அவை தன்சீருள்வழி ஒன்றினும் ஒன்றுவாயினும், பிறசீர்வந்துழி ஒன்றினும் ஒன்று வாயினும் வஞ்சித்தளையாகி வரையறைபின்மையானும் வஞ்சி யடி அறுநூற்றிருபத்தைந்தடியுட்படாமையானும் அவை கூறு னயினன் ஆசிரியனென்பது. (நிநி)

[இயற்சீர் ஆசிரியத்துக் கட்டளையடிக்கண் தட்குமாறு இவ்வாறெனல்]

நகஅ. **சீரியை மருங்கி னேரசை யொப்பி**
னாசிரியத் தளையென் றறியல் வேண்டும்.

இது, கட்டளையடிக்கண் இயற்சீர் தட்குமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: [2] இயற்சீர் பத்தும் பிறிதொன்றனோடு இயையுங் கால் அவை தத்தம் ஈற்றசை ஒன்றி வருஞ்சீரின் முதலசையோ டொப்ப நிற்பின் ஆசிரியவடிக்குந் தட்கும் முறைமையென்றறி யப்படும் என்றவாறு.

'ஒப்பி னாசிரியத்தளை' எனவே ஒவ்வாதொழியின் வெண் டளையென்று எதிர்மறுத்துக் கொள்ளப்படும்; என்னை?

"எடுத்த மொழியினஞ் செப்பது முரித்தே." (தொ. சொ. கூக)

என்றமையின்,

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகி" (பெரும்பாண். க)

என்றவழி, நேரும் நிரையும் 'சீரியை மருங்கின் ஓரசை யொன்றி' ஆசிரியத்தளையாயின.

1. ஏறியநிலம்—12 எழுத்தடிக்கு மேற்பட்டநிலம் என்பது இவர் கருத்து.

2. இயற்சீர்பத்து:— தேமா, புளிமா, கணவிரி, பாதிரி, (325)சேற்றுக்கால், களிற்றுத்தாள்(327) போரேறு, பூமருது, கடியாறு, மழகளிறு (328) என்பன.

"மல்லர்க் கடந்தா னிறம்போ லிருண்டெழுந்து" (ஐந். ஐம். க)

என்புழி முதலடி இயற்சீர் ஒன்றுது வெண்டளையாயிற்று.

மற்றுச் சீரியைமருங்கின் ஓரசையே வரினென்னுது 'ஒப் பின்' என்றதென்னையெனின்,—[1]உரியசை முதலும் ஈறுமாகிய வழி அவை [2]இயலசையோடு ஒப்புமைநோக்கித் தளை கொள்ளினல்லது தம்மொடுதாம் ஒன்றுதல் கொள்ளாரென்றற் கென்பது இதனானும் பெற்றும். போதுபூ என்பது வருஞ் சீராயவழிப் போரேறு என்பது ஓரசையொன்றிற்றென்று ஆசிரி யத்தளை யென்னுமையென்பது. இனி, [3]அவை நின்ற சீராயவழி நிரையீறுகல் 'அறியல்வேண்டும்' என்ற மிகையானுங் கொள் ளப்படும்; இனி, 'ஈரசையொப்பின்' என்பது, பாடமாக வுரைப்பின் நேரும் நிரையும் [4] ஒன்றினென்றவாறுமாமெனக் கொள்க. (நசு)

[வஞ்சியடி உறழுமாறு இவையெனல்]

நகக. **குறளடி முதலா வளவடி காறு**
முறழ்நிலை யிலவே வஞ்சிக் கென்ப.

இது, வஞ்சியடி யுறழுமாறும் அதுபெறும் நிலனும் உணர்த் துதல் நுதலிற்று.

இ—ள்: நாலெழுத்து முதலாகப் பதினெண்கெழுத்தளவும் உறழும் நிலையில வஞ்சியடிக்கு என்றவாறு.

இனி, முதலும் ஈறும் யாதெனப்படுமோவெனின்,—

[5] "தன்சீ ரெழுத்தின் சின்மை மூன்றே." (நருஅ)

என்றதனான் ஆறெழுத்தடி முதலாகவும்,

1. உரியசை முதலுமீறுமாகியவழி என்றது, போரேறு போதுபூ என்றவழி, ரேறு என்பதும் போது என்பதும் உரி யசையாதலின் அவை நிரையசையாகவைத்துத் தளைகொண்டு ஆசிரியத்தளை கொள்ளப்படாதென்பது கருத்து.

2. இயலசை—நேர், நிரை.

3. அவை—உரியசை.

4. ஒன்றல்—ஈரசையுந் தம்முளியைதல். என்றது நேரும் நேரும் நிரையும் நிரையுமாக இயைதல்.

5. ஒருசீர்க்கு மூன்று எனவே இருசீர்க்கும் ஆறுகும்.

1 "நேரிலே வஞ்சிக் காறு மாகும்." (கூடுச)

என்றதனாற் பன்னிரண்டெழுத்தடியிறுதியும் உறழுமென்ற வாறு. எனவே வஞ்சியடிக்கு நிலன் ஏழென்பது சொல்லிய வாறு. 2[அதுவே கருத்தெனின், இச்சூத்திரம் மிகையாம் பிறவெனின், — அற்றன்று; வஞ்சியுரிச்சீர் மூன்றெழுத்திற் சுருங்கா, ஆறெழுத்தின் ஏறுவனவே நேரிலே வஞ்சிக்கு மூவெழுத்துச்சீர் இரண்டுவந்த இருசீரடிக்கு ஆறெழுத்து முதலாமென்பதூஉம், ஆறெழுத்துச்சீர் இரண்டுவரிற் பன்னிரண்டெழுத்தடி ஈறுமென்பதூஉம் பெறுதுமால் அவ்வச் சூத்திரங்களானேயெனின், —] ஆண்டு வஞ்சியுரிச்சீர்க்கு எழுத்து வரையறை கூறினுன்; அவ்வடி இத்துணைநிலன் பெறுமென் றற்கு இது கூறல்வேண்டுமென்பது. அல்லதூஉம், அங்ஙனங் கொள்ளின் உய்த்துணர்ச்சியாம். இஃது 3 எடுத்தோத்தாக லின் எடுத்தோத்துக் கூறுந்து உய்த்துணராரென்பது. இனி, இது கூருக்காற் கட்டளையடிக்கண் இயற்சீர் வாராதென்ப தூஉம் பெறலாகாதாமாகவே, ஞாயிறு புகுசெல்சுரம் என்பது கட்டளையடியாகிய செல்லும். வஞ்சித்தூக்கின் அது கொள்ளாமை யின் அது விலக்கல்வேண்டி இது கூறினுன், என்னை? 4 இயற் சீர் கொள்ளின் ஓரெழுத்தானுகிய இயற்சீரும் ஆண்டே கோடல் வேண்டும், அதுகொள்ளின் இச்சூத்திரத்திற்கு ஏலாமையி னென்பது.

இனி, வஞ்சியுரிச்சீர் அறுபதும் இருநிலைமைப்படுவன இருபத்துநான்கும், நான்கு நிலைமைப்படுவன இருபத்தெட்டும் எட்டு நிலைமைப்படுவன எட்டுச்சீருமாகி இருநூற்றிருபத்துநான் காய் விரியும்.

---

1. ஒருசீர்க்கு ஆறு எனவே இருசீர்க்கும் பனிரண்டாம். ஆறுதொடங்கிப் பன்னிரண்டுவரை உறழ நிலம் ஏழாதல்காண்க.

2. பகரக்கோட்டில் வாக்கியம் மாறி எழுதப்பட்டது. அது, "அதுவே கருத்தெனின், வஞ்சியுரிச்சீர்.....அவ்வச் சூத்திரங்களானே இச் சூத்திர மிகையாம் பிறவெனின், — அற் றன்று," என்றிருத்தல் வேண்டும்.

3. எடுத்தோத்தில்வழி உய்த்துணர்வதென்பர் சொல்லதி காரத்தினுட் சேனுவரையரும்.

4. ஞாயிறுபோல்வன ஈரெழுத்து இயற்சீர். இவை விலக் குண்ணுவது, தன் சீரெழுத்தின் பின்மைமுன்றே என்றதனுலும் 'உறழ்நிலையில்' என இச்சூத்திரத்துட் கூறினமையானும் என்க.

1 "இரண்டுதான் கெட்டு நிலைமைய வாகித்
திரண்ட நிலைவஞ்சிச் சீர்க — ளொருங்கே
யிருபத்து நான்கிருபத் தெட்டுட னெட்டா
யிருநூற் றிருபத்து நான்கு."

அவ்வஞ்சியுரிச்சீர் இருநூற்றிருபத்துநான்கினுள்ளும் ஒன்ப தெழுத்துச்சீ ரொன்றும், எட்டெழுத்துச்சீ ரொன்பதும், ஏழெழுத்துச்சீர் முப்பத்துமூன்றுமாக நாற்பத்துமூன்றுவகை யான் உறழ்நிலம் இல; இச்சூத்திரத்தின் ஓதியவாற்று னென்பது.

2 "நாலாறி யீற்றன நான்கு பதினுறு
ஞெய வெண்சீ ரகப்பட்ட மூவைந்து
பொய்ப்பினை வஞ்சி யாயுமுமா மோரீ
மூவைந்து மூன்றுமூன் றென்ன."

3 "இரண்டெட்டு மூவெட்டு நாலேழா றைந்தொன்
றகன்றநாற் பத்துநான் கூறேழும் பத்திரண்டு
நான்கைத்தெட் டொன்பா னெனுபஃ தொன்றுநான்
கரவேழு பெற்றனமு வைந்து."

---

1. இரண்டுநிலை, நான்குநிலை, எட்டுநிலையாகி என்க. நிர லிறையாகப் பின்வருவனவற்றை இயைக்க.

2. காலசையையும் (நேர் நிரை நேர்பு நிரைபு) முதலிலும் ஈற்றிலும் (நடுவிலும்) வைத்துறழ்தலால் ஆன (நான்கு பதினுறு 64) அறுபத்து நான்கு சீருள் முதற் பதினுறனுள்வரும் வெண் சீரும், அறுபதுள் அகப்பட மற்றுப் பதினைந்து சீரும் வந்து பொய்ப்படுமாயின் அவ்வஞ்சியடி உறழாவாம். மோனை — என் றது சீரைப்போலும். இன்னும் வஞ்சியுறழாதன. மேற்கூறிய பதினைந்தும், மூன்றும் மூன்றும் ஒன்றுமாக இருபத்திரண்டா ரும். இவற்றின் விரி பிற்காண்க. இச்செய்யுளிற் பிழை உண்டு. ஆயினும் கருத்துநோக்கிப் பொருள் கூறப்பட்டது.

3. இரண்டெட்டு	—16-ம் சீர்	ஐம்பத்திரண்டு	—52-ம் சீர்
மூவெட்டு	—24-ம் ,,	ஐம்பத்துநான்கு	—54-ம் ,,
நாலேழ்	—28-ம் ,,	,, ஐந்து	—55-ம் ,,
ஆறைந்து	—30-ம் ,,	,, எட்டு	—58-ம் ,,
,, ஒன்று	—31-ம் ,,	,, ஒன்பது	—59-ம் ,,
நாற்பது	—40-ம் ,,	அறுபஃதொன்று	—61-ம் ,,
,, நான்கு	—44-ம் ,,		
,, ஆறு	—46-ம் ,,	இவை பதினைந்தும் வஞ்சி யடி யுறழாத சீர்கள்.	
,, ஏழு	—47-ம் ,,		

4. "அறுபஃதொன்றுநான்" கென்பது "அறுபத்தொன் றைந்துநான்" கென்றிருத்தல்வேண்டும். என்னை? ஐந்தெழுத்துச் சீரும் வருதலின்.

1 "நாலெட்டே யேழெட் டறுபத் திரண்டிவற்று
னேமெழுத்தா வெட்டெழு பத்துமூன் றேழா
மேமெழு மும்மூன்று யெட்டெழுத்தா னேரொன்று
மாறெட் டறுபஃது மூன்று."

"எழுத்தள வெஞ்சிலுஞ் சீர்நிலை யொக்கு
மசைக்கு வரையறை யின்மை யான."

2 "வஞ்சி யுரிச்சீர் நிரையுரி யுறழ்ந்து
மெல்லாங் குறைத்து மிகுத்துக் கொளாஅல்."

எனவே, இவ்வாற்றான் வஞ்சியுரிச்சீர் எழுமுழுத்தும் எட்டெழுத்தும் ஒன்பதெழுத்துமாகி வரும். அவையிலந்து மாற்றுக. அவையாவன :

(க)
1. களிறுபோகுவாய்
2. களிறுவழங்குவாய்
3. புலிவழங்குசுரம்
4. மாவழங்குசுரம்
5. களிறுவருசுரம்
6. களிறுபோருசுரம்
7. புலிவழங்குகாடு
8. பாம்புவழங்குகாடு
9. களிறுவருகாடு
10. களிறுபோருகாடு
11. மாவழங்குகடறு
12. புலிபோருகடறு
13. பாம்புவருகடறு
14. பாம்புபோருகடறு
15. களிறுசெல்கடறு

---

1. இப்பாட்டு :—
நாலெட்டே யேழெட் டறுபத்தி ரண்டிவற்று
னேமெழுத் தாருக வெட்டெழுத்து மூன்றேயா
மேமெழுத்து மும்மூன்று யெட்டெழுத்தா னேரொன்று
மாறெட் டறுபஃது மூன்று.
என்றிருத்தல்வேண்டும்.

இதன்பொருள் :— நாலெட்டு—32-ம் சீர். ஏழெட்டு—56-ம் சீர். அறுபத்திரண்டு—62-ம் சீர். இவை மூன்றும் நான்கு நிலைமை பெறலால் ஏழெழுத்துச்சீராறும் எட்டெழுத்துச்சீர் மூன்றுமாகும். இனி, ஆறெட்டு—48-ம் சீர். அறுபஃது, அறுபதாம் சீர். (அறுபஃது) மூன்று—63-ம் சீர். இவை மூன்றும், இவை ஏழெழுத்துச்சீர் ஒன்பதும், எட்டெழுத்துச்சீர் மூன்றுமாக மாறும். எட்டுநிலைமைப்படுஞ் சீர்ப்பாட்டுத் தவறிற்றுப்போலும்.

2. வஞ்சியுரிச்சீர் என்ற பாட்டில் வஞ்சியுரிச்சீர்களே முறையே அவ்வவ்வுரிச்சீர்களையுறழ்ந்தும் அவற்றுள், குறைப்பன குறைத்தும் சேடமாக்குவனவற்றை சேடமாக்கியுங்கொள்க. மிகுத்தல்—(குறைத்து) மிகுத்தல்—சேடமாக்கல். எனவே உறழாத சீர்களை நீக்கி உறழுஞ் சீர்களை மிகுத்துக்கொள்க என்றபடி.

க. 1. களிறுவழங்குவாய். 2. புலிவழங்குசுரம். 3. பாம்புவழங்குசுரம். 4. களிறுவருசுரம். 5. களிறுபோருசுரம். 6. புலிவழங்குகாடு. 7. பாம்புவழங்குகாடு. 8. களிறுவருகாடு. 9. களிறுபோருகாடு. 10. மாவழங்குகடறு. 11. புலிவருகடறு. 12. புலிபோருகடறு. 13. பாம்புவருகடறு. 14. பாம்புபோருகடறு. 15. களிறுசெல்கடறு என்றிருத்தல்வேண்டும்.

என இவை பதினைந்தும் எழுமுழுத்தாங்கால் உறழ்நிலை இலவெனப்படும். 'களிறு வழங்குவாய்' என்பதனை அரவு விரவு வாயென எழுமுழுத்துச்சீராம். ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க. இவை பதினைந்தும் எழுமுழுத்தின் இகவாதன. இனி, எழுமுழுத்துச் சீரின் இவ்விரண்டும் எட்டெழுத்துச்சீர் ஒரோவொன்றுமாகி வருவன மூன்றுசீர் உள ; அவை :

(உ) 1. களிறுவழங்குசுரம், 2. புலிவழங்குகடறு, 3. களிறுவருகடறு என்பன. இவற்றைக் களிறுவிரவுசுரம், அரவுவழங்குசுரம், அரவுவிரவுசுரம் என்றாற்போல வாய்பாடுபடுத்து ஒட்டிக்காணலே எழுமுழுத்துச்சீராறும் எட்டெழுத்துச்சீர் மூன்றுமென ஒன்பதாம்.

(ங) 1. களிறுவழங்குகாடு, 2. பாம்புவழங்குகடறு, 3. களிறுபோருகடறு என இவை மூன்றுசீரும் ஒரோவொன்று எழுமுழுத்துச்சீர் மூன்றும் எட்டெழுத்துச்சீர் ஒன்றுமாக முங்கான்கு பன்னிரண்டும் உறழ்நிலையில எனப்படும் ; அவை :

களிறுவிரவுகாவு, அரவுவழங்குகாவு, அரவுவிரவுகாடு, அரவுவிரவுகாவு என எழுமுழுத்துச்சீர் மூன்றும் எட்டெழுத்துச்சீர் ஒன்றுமாயினவாறு கண்டுகொள்க. ஒழிந்தனவும் அவ்வாறே கொள்க.

இனி, களிறுவழங்குகடறு என்பது ஏழெழுத்துச்சீர் ஒன்றும், எழுமுழுத்துச்சீர் மூன்றும், எட்டெழுத்துச்சீர் மூன்றும், ஒன்பதெழுத்துச்சீர் ஒன்றுமென அதுவும் எட்டு நிலைமைத்

உ. 1. களிறுவழங்குசுரம் களிறுவிரவுசுரம் அரவுவழங்குசுரம் அரவுவிரவுசுரம்
2. புலிவழங்குகடறு புலிவிரவுகடறு புலிவழங்குருவு புலிவிரவுருவு
3. களிறுவருகடறு களிறுவருருவு அரவுவருகடறு அரவுவருருவு

ங. 1. களிறுவழங்குகாடு களிறுவிரவுகாவு அரவுவழங்குகாவு அரவுவிரவுகாடு அரவுவிரவுகாவு
2. பாம்புவழங்குகடறு பாம்புவிரவுகாவு காவுவிரவுகடறு காவுவழங்குருவு காவுவிரவுருவு
3. களிறுபோருகடறு களிறுமன்னுருவு அரவுமன்னுகடறு அரவுபோருருவு அரவுமன்னுருவு

நாம். அவற்றுள், ஆறெழுத்துச் சீரொன்றும் ஒழித்து, ஒழிந்த வஞ்சியுரிச்சீரேழும் உறழ்நிலையில வஞ்சிக்கெனப்பட்டன; அவை:

கனிறுவஞ்சுரவு, கனிறுவிரவுகடை, அரவுவஞ்சுகடை என மூன்றும் ஏழெழுத்துச்சீர்.

கனிறுவிரவுசுரவு, அரவுவஞ்சுசுரவு, அரவுவிரவுகடை என மூன்றும் எட்டெழுத்துச்சீர்.

அரவுவிரவுசுரவு என்பது ஒன்பதெழுத்துச்சீர்; இவை யெல்லாக் தெர்குப்ப [1] ஏழெழுத்துச்சீர் முப்பத்துமூன்றும் [2] எட் டெழுத்துச்சீ சொன்பதும் [3] ஒன்பதெழுத்துச்சீ சொன்றும் ஒழித்து, ஒழிந்த வஞ்சியுரிச்சீர் நூற்றெண்பத்தொன்றும் உறழ் நிலையுடையவெனக் கொள்க.

ஏழெழுத்துச்சீரும் எட்டெழுத்துச்சீரும் ஒன்பதெழுத்துச் சீரும் அடியுறழ்வனவாக்கி மேன் மூன்றுசீரானும் மூன்று நில னேற்றிப் பதினொன்தெழுத்தடியளவும் உறழும் வஞ்சியடி என் பாருமுளர். அங்ஙனம் ஒன்பதெழுத்துச்சீர் இரண்டுவந்த குற எடி பதினெட்டெனப்படுதலின், [4] வஞ்சிநிலம் பதின்மூன்றுதல் வேண்டும், ஒசை நோக்காது சீர்நோக்கி உறழ்ச்சி கொள்ளி னென மறுக்க.

அவை அளவடியோடு ஒத்த சிறப்பினவன்மையானும், அவற்றுக்குத் தனிவகையின்மையானும் எடுத்தோதிக் தொகை கூறிற்றிலனாயினும், நாம் அவற்றை எண்ணி உணர்ந்து கூறுங்

1. ஏழெழுத்துச்சீர் முப்பத்துமூன்றுவன :—

15	சிருமுறம்ந்ததனல்	வந்த	ஏழெழுத்துச்சீர்	15
3	,,	,,	,,	6
3	,,	,,	,,	9
1	,,	,,	,,	3
ஆக				33
2. எட்டெழுத்துச்சீர்				9
3. ஒன்பதெழுத்துச்சீர்				1
ஆக				43

இவை அடி உறழாதன.

வஞ்சியுரிச்சீர் 224-ல் 43 கழிக்க 181-ம் உறழ்வனவாம்.

4. 12-க்குமேல் 18 எழுத்தடி கொள்ளின் 6 நிலம் கூடும். கூடவே 7 நிலமும் 6 நிலமுமாகப் 13 நிலம் வரும் என்றபடி.

கால் [1] ஒருசீர்க்கு அடி தான்காக வஞ்சியடி எழுதூற்றிருபத்து தான்காமெனக் கொள்க. அளையுறழுங்கான் மூன்றெழுத்துச்சீர் ஆறுகி ஒன்பது உயர்வும், காலெழுத்துச்சீர் ஏழாகி பத்தெழுத் துயர்வும், ஐயெழுத்துச்சீர் எட்டாகி பதினொன்றுயர்வும், ஆறெழுத்துச்சீர் ஒன்பதுமுதல் பன்னிரண்டுயர்வும்பெற்று நின்ற சீரோடு மூன்றெழுத்துச்சீரும் காலெழுத்துச்சீரும் ஐயெழுத்துச் சீரும் ஆறெழுத்துச்சீருக் தந்துறழ்கவென்பது. அவை :

"காள்காய்ந்தது கரம்புகீடி."

என்பது ஆறெழுத்தடி.

"நன்கூர்ந்தது வில்லோர்சுரம்."

என்பது ஏழெழுத்தடி.

"வான்பெய்தது மண்குளிர்ப்புறு."

என்பது எட்டெழுத்தடி.

"தேன்பெய்தது செழுநகர்தொறும்."

என்பது ஒன்பதெழுத்தடி.

இவை மூவெழுத்து மாசெல்காடு நின்றுறழ்ந்த தான்கடி யும் வந்தவாறு. ஒழிந்தனவும் அன்ன.

"மண்மாய்ந்தென வள்விழ்ந்தது."

என்பது ஏழெழுத்தடி.

"விண்பாய்ந்தென மேல்நெடுத்தது."

என்பது எட்டெழுத்தடி.

"தாடோங்கிய கண்கெழுசுரம்."

என்பது ஒன்பதெழுத்தடி.

"தோடோங்கிய குறும்பொறைமருங்கு."

என்பது பத்தெழுத்தடி.

இவை தான்கடியும் நாலெழுத்து மாசெல்சுரம் நின்று உறழ்ந்த அடி.

"மழைபெய்தென வான்வெள்ளென்று."

என்பது எட்டெழுத்தடி.

"தழைபச்செனுந் தண்ணென்காவு."

என்பது ஒன்பதெழுத்தடி.

1. வஞ்சிச்சீரில் அடிக்குரிய 181 ஐயும் 4 அடியாற் பெருக்க 724 அடி காண்க.

"கமழ்பூந்துணர் கள்ளவிழ்தொறும்.
என்பது பத்தெழுத்தடி.

"இமிழ்தும்பிசை மிசைசுரும்புவர."
என்பது பதினொழுத்தடி.

இவை கான்கும் ஐயெழுத்துப் புலிசேர்சுரம் நின்றுறழ்ந்த அடி.

இனி, [1] ஆறெழுத்துப் புலிவருசுரம் ஒன்பதெழுத்து முதல் பன்னிரண்டளவும் உயர மற்றையனபோல கான்கடி பெறும்.

"அமைவிடுகோடி யஞ்சியோர்ந்து."
என்பது ஒன்பதெழுத்தடி.

"சுகிர்குரலை கானத்தலகு."
என்பது பத்தெழுத்தடி.

"இனப்புளத்திக ணையற்பிரியாது."
என்பது பதினொழுத்தடி.

"மனக்குமமகள் கடைப்புறந்தரும்."
என்பது பன்னிரண்டெழுத்தடி.

இவ்வாறே ஒழிந்தனவும் உறழ்ந்துகொள்க.

மூன்று பாவின்றுணைச் சிறப்பின்மையின் வஞ்சியடி ஈண்டுப் போதந்து கூறினனென்பது. ஒழிந்த [2] முச்சீரடி சிறுவரிற்றுகளின் அதற்குங் கூறியதிலனென்பது. (நிசு)

[வெண்பாவுக்குரிய நிலம் இவையெனல்]

கசஅ. அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய
நிலவகை யொன்றுத் தன்மை யான.

இஃது, ஆசிரியவடிக்கும் அதன் கடைத்தாகிய வஞ்சியடிக்கும் உரிய நிலங்கூறி வெண்பாவிற்குரிய நிலங் கூறுகின்றது.

1. ஆறெழுத்துப் புலிவருசுரம் என்பது எழுதுவோரால் விடப்பட்டதுபோலும்.

2. முச்சீரடி வஞ்சிக்குரியது.

இ—ள்: அளவடி ஐந்துஞ் சிந்தடி மூன்றுமென எட்டு நிலம்பெறுங் குளிரவாதலாற்றான் வெண்பாவடி என்றவாறு.

அளவடி முற்கூறியதென்னையெனின், — [1] மேல் நிறுத்த முறையாற் கொள்ளாது [2] ஈண்டுச் சொல்லும் முறைமையாற் கூறினனென்பது.

"நின்று நிலைந்து கெடுத்து பெயர்த்து."
என்பது எழெழுத்தடி.

"அறிவறிந்தார்த் தேற்றியக்கா லஞ்சுவ தில்லை."
என்பது பதினொன்கெழுத்தடி.

[3] இதனும்பர் நெடிலடியாதலும் வெண்பாவடி வருவன உள. அவை கட்டளையடியெனப்படா, [4] செப்பிக் கூறும் பாவாகாது செய்கை தோன்றியே நிற்குமாகலினென்பது; பிறிது காரணம் உண்டாயினும் அறிந்துகொள்க. குளவகை ஒன்றுமையென்பது வெண்பாவும் வெண்பா கடைத்தாகிய கலிப்பாவும் மயங்காமை காரணத்தானென்றவாறு. கலியோசை மயங்கி வருவனவும் வெண்பாவடியுளுள. அவை [5] நெடிலடி மூன்றுமே வருமெனக் கொள்க. ஓரோவடியே வெண்பாவடியுமாய்த் துள்ளிசை யடியுமாகித் குளவகை ஒன்றுமாகலான் அம்மயக்கந் தீராதென,

"அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய."
என்றுனென்பது.

"மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்."
என்றக்கால் இதனை,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி." (கூஉங)
என்றதனாற் கலியோசை பிறப்பவுஞ் சொல்லிக் கண்டுகொள்க.

1. மேல் நிறுத்தமுறை என்றது கசகூம், கூடுo-ம் சூத்திரங்களில் நிறுத்தமுறையை.

2. ஈண்டுச் சொல்லுமுறை என்றது அளவடிக்கே நிலங் கூறுமுறை.

3. இதனும்பர்—கச எழுத்தடியின்மேல்.

4. செப்பிக் கூறும் பாவாகாது செய்கை தோன்றியே நிற்கும் என்பது வெண்பாவாகாது வெண்பாவின் செய்கை தோன்றிய மாத்திரையே நிற்கும் என்றபடி.

5. நெடிலடி மூன்றுவன—15 எழுத்தடியும் 16 எழுத்தடியும் 17 எழுத்தடியும் என்பன.

"மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாவருவாய்
மாவருவாய் தேமா வரரு."

என்றிதனையே ஓசையூட்ட வெண்பாவாயிற்று. இது,

"மாவருவாய் மாவருவாய் மாவருவாய் மாற்றினரே."

எனக் கலியோசையாயினவாறறிக. (இஅ)

[கலிப்பாவிற்குரிய நிலம் இவை எனல்]

கசக. அளவடி மிகுதி யுளப்படத் தோன்றி
யிருநெடி லடியுங் கலியிற் குரிய.

இது, முறையானே கலிக்குரிய நிலமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஐவகையடியினும் அளவடி மிகுதியாகிய பதின் மூன்றெழுத்தும் பதினான்கெழுத்தும் நெடிலடியுங் கழிநெடிலடியுங் கலியடிக்குரிய என்றவாறு.

எனவே, அதுவுக் தன் முதற்பாவாகிய வெண்பாப்போல எட்டுநிலம் பெறுவதாயிற்று. ஒழிந்த அடி மூன்றினேடும் ஒவ்வாது மிக்க நிலம் இரண்டனையும் மிகுதியென்றுனென்பது. இனி,

"ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே." (கூ0)

என்பதே கொண்டு பதினேழெழுத்தடிமுதல் நான்கு நிலனும் அளவடி மிகுதியெனப்படும் எனவும், அவை கலிக்குரிய எனவுங் கொள்வாருமுளர்; அங்ஙனங் கொள்வார்க்கு,

1 "ஞாயிறு கடியாறு கடியாறு கடியாறு."

என்றதனைப் பதினேழெழுத்தடியென்று காட்டல்வேண்டும்; அஃது ஆசிரியவடியாம்; ஆகலான், அற்றன்றென்பது. இனி,

"ஞாயிறு மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய்."

என்பதாவெனின்,—அது கலிப்பாவோடு தளைவகையொன்றிய வெண்பாவடியாகலானும், நிரைமுதல் வெண்சீர் வந்து நிரை கட்டினன்றி ஞாயிறு என நின்ற நிரையீற்று இயற்சீர்ப்பின்னர் நேர்வந்தாற் கலித்தளையாகாது வெண்டளையாமாகலானுங் கட்டளையடிக்கு அவ்வாறு கோடல் குற்றமென்பது. அல்லதூஉம், கலிப்பாவிற்குப் பத்துநிலங் கொள்ளிற் கட்டளையடி அறுநூற்று நிருபத்தைந்தன்றிப் பல்குமென்பது. (நிகூ)

1. ஞாயிறு கடியாறு என்னுமடி இயற்சீரான் வந்த ஆசிரியவடி.

[நிரையீற்றுஇயற்சீர்முன்னும் நிரையீற்றுஇயலசைச்சீர் முன்னும் நிரைமுதல் வெண்சீர் வந்து கட்டினும் கலித்தளையாமெனல்]

கசஉ. நிரைமுதல் வெண்சீர் வந்துநிரை கட்டினும்
வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப.

இதுவும், கலித்தளை விகற்பங் கூறுகின்றது.

இ—ள்: நிரையீற்று இயற்சீரும் நிரையீற்று ஆசிரியவுரிச்சீரும் நிற்ப நிரைமுதல் வெண்சீர் வந்து நிரையொன்றியக் காலுங் கலித்தளையாம் என்றவாறு.

"மணிபுரை யிருமார்பின் மறுத்தயங்கு நேரான்றுங்கால்."

என்புழி, 'இருமார்பின்' என நிரைமுதல் வெண்சீர் வந்து 'மணிபுரை' என்னுஞ்சீர் இறுதி நிரையொடு கட்டுக் கலித்தளையாயிற்று. எனவே, நிரைமுதல் இயற்சீர் வந்து நிரைகட்டினும், நேர்முதல் வெண்சீர் வந்து ஒன்றுதொழியினும், அது கட்டளைவகையாற் கலியடியாகாதென்றவாறு; என்னை? தளை தட்ட இயற்சீர்ப்பின் நிரைமுதல் வெண்சீர் வந்து துள்ளுவிக்கல் வேண்டுமாதலானும், 'ஞாயிறு மாசேர்வாய்' என்பது வெண்பாவடியுமாம் ஆகலானுமென்பது. 'அடிக்கென்ப' என்றதனான் 1 இதுவுங் கட்டளையடிக்கேயென்பது கொள்க. மற்று நிரைமுதல் வெண்சீர் வருவது முதனின்ற இயற்சீர்ப்பின்னர் இடைநின்ற இயற்சீர்ப்பின்னரென்ப தறியுமாறென்னையெனின்,—அங்ஙனம் வரையாது கூறினமையின் முதற்கண்ணதே இவ்விதியென்பதாம். அல்லதூஉம் அவ்வாறு இயற்சீரினே இடையும் வருமென்று கொள்ளிற் பதின்மூன்றெழுத்திற் குருங்கிய நிலனும் அது பெறுவான் செல்லும். செல்லவே கலியோசை இனிது பெறலாகாவென மறுக்க. என்றார்க்குப் பின்வருஞ்சீர் மூன்றும் நிரைமுதல் வெண்சீர் வருவதென்றிலனுகலின் மூன்றுஞ்சீர் நேர்முதல் வெண்சீர் 2 வந்தும்,

1. இதுவும்—இச்சூத்திரமும்.

2. வந்தும் என்றதன்பின் சில சொற்கள் தவறினபோலும். வந்தும் அது கட்டளையடியன்றென்பது என இயைக்க. "ஞாயிறு புலிவருவாய் மாவருவாய் புலிவருவாய்" என்பது மூன்றுஞ் சீர் வெண்சீர் வந்ததற்குதாரணம். இது கட்டளையடியன்று.

"வெண்சீ ரிற்றளை நிரையசை யியற்றே" (கசக)

என்றதனானும் [1] இடைநிற்பன வெண்சீரென்பது பெறுதுமாக வானும் அது கட்டளையடியன்றென்பது. இனி, முதனின்றது நிரையீற்றியற்சீராகலான் துள்ளலோசை பிறவாமையின் அவற் றோசை குறைபடாக் கலித்தளை பலவாகி வரல்வேண்டுமென்பது. இவ்வாற்றான் ஓசைச் சுருக்கப் பெருக்கம் உணர்தற்கு அருமை நோக்கி,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன குணர்த்தலும் வல்லோ ராறே." (கஉக)

என்பானுயிற்றெனவுணர்க. இக்கருத்தினானன்றே நிரைமுதல் வெண்சீர் வருகவெனவும் நிரையீற்று இயற்சீர்ப்பின்னர் மாசெல் வாய் மூன்று வரினுஞ் சிறிது கலியோசை பிறக்குமாயினும் அதனைக் கட்டளையடியென நோனுயிற்றுமென்பது. (கo)

[சீர்வகையான் வருங் கலியடி தளை விரவியும் வருமெனல்]

கூஎங. விராஅய தளையு மொருஉநிலை யின்றே.

இது, சீர்வகையான் வருங் கலியடி தளைவிரவினுங் கடியுப் படாதென்கின்றது; யாதனுலெனின்,—[2]வெண் பாவினுடு விராய்த் தட்பினுமென்றவாறு; என்னை?

"தளைவகை யொன்றுந் தன்மை யான." (கஎo)

என வெண்பாவிற்குங் கூறினமையின்.

இ—ள்: வெண்சீர் ஒன்றி வருதலுங் கடியப்படா களிக்கு என்றவாறு.

'சீர்வகையடிக்கண்' என்பது, என்னை பெறுமாறெனின்,—'விராஅயதளை' என்றமையிற் பெறுதுமென்பது; உதாரணம்:

"தளைவகை யொன்றுந் தன்மை யான." (கஎo)

என்புழிக் காட்டப்பட்டது. (கக)

---

1. இடைநிற்பன நிரைமுதல் வெண்சீர் என்பது பெறுது மாகலானும் என்றிருத்தல்வேண்டும்.

2. இதற்கு ஆசிரியத்தளையோடும் வெண்டளையோடும் விராய் என்பர் இளம்பூரணர். நச்சினர்க்கினியரும் அவ்வாறே கொள்வர்.

[கட்டளையடியல்லாதவழி ஆசிரியப்பாவினுள் இயற்சீர் வெள்ளடியும் வருமெனல்]

கூஎச. இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே.

இது, வெண்சீரொன்றிவரும் அடி கலிப்பாவிற்கும் உரித் தென்ற முறையானே, இயற்சீர் வெள்ளடியான் வரும் அடி ஆசிரியத்திற்கு மயங்கியல்வகையான் நிலைக்குரித்தாகி நிற்கவும் பெறுமென்கின்றது.

இ—ள்: அம் மயங்கியல்வகைதான் அப்பாவிற்கு உரிமை பூண்டுநிற்கும்; ஆசிரிய அடியோடு கூடிய கூட்டத்துக்கண் என்றவாறு.

வெண்பாவினுளாயின் ஆசிரியவடி முழுவதுந் தன்னள வோடு வாராது; என்னை?

[1] "தூஉத் நிம்புகை தொல்விசும்பு போர்த்ததுகோல்
பாஅய்பீ பகல்செய்வான் பாம்பின்வாய்ப் பட்டான்கோன்
மாஅ மிசையான்கொ னள்ள னறுநுதலார்
மாஅமை யெல்லாம் பசப்பு." (மகிழபடுகடாம்)

என்பதன் முதலடியுள்ளே 'தூஉத்நிம்புகை' என ஓர் ஆசிரி யத் தளைவர, மற்றையன வெண்டளையாகி வக்தமையின். அற் றன்றி முழுவதுமுடம் ஆசிரியத்தளை வரின் வெண்பா நிறையு மாகலின் இதனையே [2] சொல்லின் முடிவிலக்கணத்தான் வெண்பா வென்றுன்; எனவே, [3] வேற்றுசை விராயவழித் தன்னோசை அழிதல் இதற்குப் பெரும்பான்மையாயிற்று; ஆசிரியமாயின் அவ்வாறு அழியாதென்பது கருத்து. என்போலவோவெனின்,—

1. தூஉத்நிம்புகை என்பதை நேரும் நேருமொன்றிய ஆசிரி யத்தளை என்று இவர் கொண்டதற்குக் காரணம் — அள பெடையை ஒரெழுத்து மிகுத்து ஓரளபு கொண்டமையே. 'தூஉஉ' என இன்னுமோரெழுத்து மிகுத்து சரளபு கொண் டால் வெண்டளையாம். அவ்வாறு கொள்வர் நச்சினர்க்கினியர்.

2. வெண்பாவென்ற சொல்லானே 'வெள்ளைப்பா' என அதலிலக்கணந் தோன்ற நின்றதென்றபடி.

3. வெண்பாவிற்குரிய செப்பலோசை வேற்றுசை விராய வழித் தன்னோசையழியும். ஏனைய ஆசிரியப்பா வெண்பாவோசை விரவினும் தன்னோசையழியா. என்போல எனின் பலிங்குடன் பஞ்சு சேருங்கால் பலிங்கு வேறுபடும். பஞ்சு வேறுபடாது. அதுபோல என்பது கருத்து. வேற்றுசை எனவும் பாடம்.

பளிங்குடன் அடுத்த பஞ்சி வேற்றுமையால், பளிங்கு வேறு படுமல்லது பஞ்சி வேறுபடாததுபோலவென்பது. இதனுனே வெள்ளையென்பது ஒப்பினுன் ஆகிய பெயரென்பதூஉம் பெற்றும்.

"எறும்பி யகையிற் குறும்பல் கனை
வலிக்க வன்ன பாறை யேறிக்
கொடுவி லெயினர் பகழி மாய்க்கும்." (குறுந். கஉ)

இவ்வாசிரியத்துள், எல்லாவடியும் பா வேறுபட்டு இசை யாமையின் முதற்கண்ணின்ற இயற்சீர் வெள்ளடி நிலைக்குரி மரபின் நின்றதாயிற்று.

"கொலைதலில் வேட்டுவன் கோள்வேட் டெழுந்த
புகர்முக யாகை நுதல்மீ தமழுத்திய
செங்கோற் கொடுங்கணை போல மெனதது
நெஞ்சங் கவர்ந்தோ னிலையிதற்குக் கண்ணே."

என்பது, செய்யுள் முழுவதும் இயற்சீர் வெள்ளடியான் வந்தது.

மற்று, இயற்சீர் வெள்ளடியல்லது பிறவடி ஆசிரியத்துண் மயங்கப்பெறுதோவெனின்,—அது [1] நிலைக்குரி மரபின் நில்லா மையின் உம்மையால் தழீஇக்கொள்ளப்படுஞ் சிறுபான்மை யென்பது.

[2] "பாஅல் புளிப்பினும் பகலிருளினும்." (புறம். உ)

என்றாற்போல்வன.

"மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணுது." (யா. வி. கo)

என்னும் ஆசிரியவடியினைக் கலிப்பா மயங்கிற்றென்பாரும் உளர். அது துள்ளச்செல்லுங்கால் [3] அளபெடுக்கவேண்டுமெனக் கூறி மறுக்க. (கூ)

[கலிப்பாவினுள் ஐஞ்சீரடியும் வருமெனல்]

நகரு. வெண்டளை விரவிய மாசிரியம் விரவிய
மைஞ்சீ ரடியு முளவென மொழிப.

இஃது, ஐஞ்சீரடியும் வருமாறு கூறுகின்றது.

இ—ள்: மேனின்ற அதிகாரத்தாற் கலிப்பாவிற்கு ஐஞ்சீ ரடியும் உள என்றவாறு.

1. நிலைக்குரி மரபின் என்றது நிற்றற்குரிய மரபினை. என் றது பா வேறுபட்டு இசையாமையை.

2. இது வஞ்சியடி.

3. காட்டு—காஅட்டு எனவும், காணுது என்பது காணஅது எனவும் அளபெடுக்கவேண்டும் என்றபடி.

"வெண்டளை விரவிய மாசிரியம் விரவியும்."

என்றது என்னையெனின், — அல்வஞ்சியடி வெண்பாவோடு விராயும் ஆசிரியப்பாவோடு விராயும் வருமென்றவாறு. ஈண் டுக் கலியென்றது அப் [1] பாக்களையாதலான் அப்பாக்களோடு விரவுமெனவே அப்பாக்களை உறுப்பாகவுடைய [2] பிற செய்யுட் கண்ணும் அவ்வஞ்சியடி வருமென்பது பெற்றும். வெண்டளை யொடு விரவுமெனவே ஐஞ்சீரடி [3] அவற்றுக்கு உரியவல்லவென் பதாம்; எனவே, கலிப்பாவின்கண் வரும் ஐஞ்சீரடியாயின் அக் கலியோசைக்கு உரிமையுடைத்தென்பதாம்.

'உள' எனவே, ஐஞ்சீரடி கலியிலுட் பாின்று வருமென்ப தூஉம், அல்லனவற்றுட் பாிலாவெனவுங் கொள்க.

[4] "விராய தளையு மொருவழிக் கின்று." (நகூ)

எனப்பட்ட கலிப்பாவினோடு இயைபுபட்ட வெண்பாவடியும், அதனோடு இயைபுபட்ட ஆசிரியவடியுங் கூறி, அம்மூன்றனை யும் உடன் கூறினுனாயினும், ஆண்டுச் சிறந்தவாறே ஈண்டும் அவ்வதிகாரத்தாக நாட்டி, ஐஞ்சீரடியும் உளவென்று ஆண்டு நின்ற கலிக்குக் [5] கூறிய அல்வழி, வெண்டளை விரவியும் ஆசிரி யம் விரவியும் வருமெனப் பிறவற்றுக்குங் கூறினனென்பது.

---

1 பா—ஓசை.

2. பிற செய்யுள்—வெண்பாவும் ஆசிரியப்பாவும்.

3. அவற்றுக்கு—அவ்வெண்பாக்களுக்கு.

4. விராயதளை (நகந) என்பதற்கு வெண்பாவோடு விராய தளையென்று பொருள்கூறி, வெண்சீர் ஒன்றிவருமடியும் கலிப்பா விற்கு வருமென்று முன் கூறியபடியே ஈண்டும் கலிப்பாவோடு இயைபுபட்ட வெண்பாவடியும் என்றும், நகந-ம் சூத்திரத்து வெண்பாவடி ஆசிரியவடியுள் மயங்கி வருமென்று கூறியபடியே ஈண்டும் அதனோடு (வெண்பாவோடு) இயைபுபட்ட ஆசிரியவடி யுங் கூறி என்றுங் கூறினர். அம்மூன்றனையும் உடன் கூறுதல் என்றது, அவ்விரண்டு சூத்திரத்தையும் உடன்வைத்து கலியை யும் வெண்பாவையும் ஆசிரியத்தையும் ஒருங்கு கூறுதலே. ஆண் டுச் சிறந்தவாறு என்றது, அச்சூத்திரத்து எப்படிக் கலி சிறந் ததோ அவ்வாறே ஈண்டும் சிறந்ததாகக்கொண்டு என்றபடி. அவ்வதிகாரமென்றது கலியதிகாரப்பட்டு நின்றமையை.

5. கூறிய—கூறி என்றிருக்கவேண்டும்; இச்சூத்திரத்தானே கலிக்கும் விதித்தலின்,

[1] 'ஐஞ்சீரடி' என்பதனை, அளவடி மூன்று பாவிற்கு உரித்தென்றால் அவ்வப் பாவிற்கு வேறுவேறு கொண்டாற்போல, ஐஞ்சீரடியும் பாத்தீகாறும் வேறுபடுத்துக்கொள்க. உதாரணம்:

"தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரிளமாக."

எனக் (கூஅ) கலிப்பாவினுள் ஐஞ்சீரடி வந்தது.

"அரவணிந்த கொடி வெய்யோ னகம்புக்க
னரசனையான் றகற்றியே."

எனக் கலியடி வெண்சீரான் வந்தது.

"கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
வொண்செங் குருதியிறைஞ் சிடப்பதே—கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் விடந்தாடப் பன்னு
ளழுதகண் ணீர்துடைத்த கை." (யா. வி. கூஉ)

என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி ஐஞ்சீரான் வந்தது.

"சிறுசோற் குணு நவிய கலத்நன் மன்னே
பெருஞ்சோற் குணு நவிய கலத்நன் மன்னே."
(புற. உஅடு)

என்பன ஐஞ்சீரான் வந்த ஆசிரியவடி. ஆசிரியத்துள் இவ்வாறு இரண்டடி ஒருங்கு நிற்குமென்பது அறிவித்தற்கு ஐஞ்சீரடிக்குச் சிறந்த கலிப்பாவோடு வைத்தான் அகனை முறை பிறழுவென்பது. எனவே வெண்பாவிற்கு ஐஞ்சீரடி ஒன்றல்லது வாராதாயிற்று; இக்கருத்தேபற்றி,

"ஐஞ்சீ ரடுக்கது மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல."

என்றார் பிறருமென்க. உம்மையான், இருசீரடியுங் கலியடியாம்.

"மன்று பாய்ந்து, நின்று தாவைக்,
கன்று பார்க்கு, மின்றும் வாரா."

எனக் கொச்சகக் கலியுள் இருசீர் வந்தது.

மூன்று பாவிற்கும் மூச்சீரடி உரித்தென்பது முன்னர்ச் [2]சொல்லுதும். வரையாது கூறினமையின் கலிப்பாவிற்காயின்

1. அளவடியை மூன்று பாவிற்கும் அவ்வப்பா வோசை யோடு வேறுவேறு கொண்டாற்போல ஐவ்வடியையும் அவ்வவ்வோசையாற் கொள்க என்றபடி. எனவே, அவ்வத் தனியடியான் வருமென்றவாறு. பின் ஐஞ்சீரடியும் என வருதலின் முன்னுள்ள 'ஐஞ்சீரடி என்பதனை' என்பது வேண்டியதில்லை. ஐஞ்சீரடியும் என்பது ஐஞ்சீரடியையும் என்றிருப்பது நலம்.

2. சொல்லுதும்—சொல்லும் என்றிருத்தல்வேண்டும்.

ஐஞ்சீரடி வருங்கால் தனியாகியும் விரவாதும் வேண்டியவாறு வரப்பெறுமென்பது. (கூஎ)

[கலிப்பாவினுள் அறுசீரடியும் வருமெனல்]

கூஎசு. அறுசீ ரடியே யாசிரியத் தனையொடு
நெறிபெற்று வருஉ நேரடி முன்னே.

இது, முறையானே அறுசீரடியுங் கலிப்பாவிற்கு உரித்தென்கின்றது.

இ—ள்: காற்சீரடி முன்னும் பின்னும் அறுசீரடியும் வருதலுமுண்டு; அன்னது வருங்கால் [1]தனக்குரிய வெண்டளையோ டன்றி ஆசிரியத்தளையொடும் வழக்குப்பெற்று கடைக்குங் கலிப்பாவினுள் என்றவாறு.

'நெறிபெற்று வருஉம்' என்றதனாற் சிறுபான்மை நேரடி இடையிட்டன்றி ஒரு செய்யுள் முழுவதூஉங் காணே வருதலுங் கொள்க.

'ஆசிரியத் தனையொடும்' என்ற உம்மையாற் கலி தனக்குரிய வெண்டளையான் வருதலும் மயங்கிவருதலும் உரியவாம்.

"முன்னீத்தஞ் சிற்றின் முழங்கு கடலோத மூழ்ப்பெயர
வன்னீக் குரைப்ப னறிவாய் கடலேயென் றலைப்பேருந்
தன்மை மடவரச் தளர்ந்துருத்த வெண்முத்தம்
புன்னீ யரும்பென்னப் போவாரைப் பேதுறுக்கும் புகாரே யெம்மூர்"

என்பது, மூன்றும் அடி நேரடியாக முன்னும் பின்னும் அறுசீர் வந்தது; பிறவுமன்ன.

"கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதி ராயி
னரையிருள் யாமத் தடுபுலியோ நம்மஞ்சி யகன்று போக
தரையுருமே றுங்கையே லஞ்சுக நும்மை
வரையர மங்கையர் வல்லத லஞ்சுதும் வாரலீயோ."

என்பதன் முதலடியுள், 'வருதிராயின்' என்பது ஆசிரியத்தளை; ஒழிந்தன வெண்டளை. 'முன்' என்றதனுள் இடமுன்னுங் காலமுன்னுங் கொள்ளப்படும்.

1. தனக்குரிய வெண்டளை என்றது,—கலித்தளையன்றி வெண்டளையும் கலிப்பாவிற்குரியது என்றதை. ஏனெனில் வெண்சீரானே கலி பிறத்தலின்.

" தொக்குத் துறைபடியுந் தொண்டையஞ்செல் வாய்மகளிர்
தோண்மேற் பெய்வான்
கைக்கொண்ட நீருட் கருங்கண் பிறழ்வ
கயலென் றெண்ணி
மெய்க்கண்ணும் பெய்கலார் மீண்டுகரைக் கேசொரிந்து
மிளிர்வ காணூ
செக்கர் மணற்கிளக்கு மேமழை மகளிர்த்தே
யெழிதீர்க் கொற்கை."

எனச் செய்யுள் முழுவதும் அறுசீரடியே வந்தது.

" வரைபுரை நிரைபோற்ந்து மணைதாறு
நறுநுதல் பொருட்டு வந்தோர்ம்."

என ஆசிரியத்தினையானும் அறுசீரடி வந்தது.

மற்றுத் தனியென்றோதுவது கட்டளையடிக்கென்றால், [1] ஈண்டுத் தனியென்றதென்னையெனின்,—அவ்வரையறை ஒருவன் சொல்லுவது: அறுசீரடி வருங்கான் முதற்கண் [2] நேரடி தூங்கிப் பின் இருசீரொடு தொடுத்தல்வேண்டும் என்னும். அஃது [3] இச்சூத்திரத்திற்கு ஏலாது; நேரடிமுன் அறுசீர் வரினென்பது பதின்சீரடியாமாகலின்; அல்லதூஉம், குறளடி தூங்கியுஞ் சிந்தடி தூங்கியும் அறுசீரடி வருகலின் அஃது அமையாதென்பது, என்னை?

[4] " வாரா தமந்தகன்மூர்
வருமாறு பார்த்திருந்தார்
வடிக்கண் பேரல."

என்றவழி, இருசீரான் யாத்தமைப்பின் அது தூக்கினைப் படாது.

---

1. ஈண்டு—இவ்வாக்கியத்தில் வரும் வினவிற்கு விடை காணுமையின் நிலவரி தப்பியதோவென்று ஐயம் உண்டாகின்றது. அல்லது ஆசிரியத்தினையானும் தனியே வருமென்று இவர் உதாரணங் காட்டியிருத்தலின் அதுவே விடையாக உய்த்துணரவைத்து இதனால் பிறர் கருத்தைக் கூறியிருத்தல்வேண்டும்.

2. நேரடி நாற்சீரடி.

3. இச்சூத்திரத்திற்கேலாது என்றது, நேரடிமுன் இருசீரடி என்று சூத்திரஞ் செய்யாது 'அறுசீரடியே' என்று சூத்திரஞ் செய்தமையின் ஏலாது, அன்றியும் நேரடிமுன் அறுசீரடிவரின் என்று கொள்ளவேண்டும். கொள்ளின் அது பதின்சீரடியாமாகலின், அதனானும் பொருந்தாது என்றபடி.

4. இது குறளடி தூங்கியதற்குதாரணம்.

1 " செல்கூர்ந்தள் கைகாட்டுங் காலஞ்
சேட்சென்மூர் வாரார்கோல் பாவம்."

என முச்சீரான் யாத்தமையின் அதுவுந் தூக்கினைப்படாது; அறுசீரடியே தூக்கினைக் கொண்டமையின், நேரடிமுன் இருசீரடி வந்தென்றதூஉம் பிழைக்குமென்பது. (கூச)

[கலிப்பாவினுள் முடுகியல்பெற்று எழுசீரடியும் வருமெனல்]

கூடஎ. எழுசீரடியே முடுகியலடக்கும்

இஃது, எழுசீரான் வரும் அடி கூறுகின்றது.

இ—ள்: எழுசீரான் [2] வருமளவும் அடியுள, அவை பயின்று நடப்பது முடுகியற்கண் என்றவாறு.

எனவே, முடுகாதவழி அந்நிலை கடையரட்டம் இல எழுசீரடி என்பதாம். பாவென்னும் உறுப்பு இடனுகும். உதாரணம், பிரிகலி.

" நாதமு முழிசெழி நடமல மிடையிடை
தழலென விரிவன பொழில்."

எனவும்,

" கனிதரு கதுவிய நுவரித ழரிவையர்
கனிமயிற் கணஞ்சென்று விளையாட."

என எழுசீரடி முடுகிவந்தது. இவை பரிபாடலுள்ளுங் கலியுள்ளுங் காணப்படும். முடுகாது வரும் எழுசீரடி வந்தவழிக் கண்டுகொள்க. (கூடு)

[கலிக்கண் வருமென முற்கூறிய ஐஞ்சீரடியும் அறுசீரடியும் முடுகியல்பெற்றும் வருமெனல்]

கூடஅ. முடுகியல் வரையார் முதலீ ரடிக்கும்.

இஃது, எய்தாதது எய்துவித்தது; எழுசீரடியெயன்றி ஐஞ்சீரடியும் அறுசீரடியும் [3] அராகந் தெரடுக்குமென்றமையின்.

இ—ள்: எழுசீரடிக்குமுன்னர் இடைநின்ற ஐஞ்சீரடியும் அறுசீரடியும் முடுகியல் நீக்கார் என்றவாறு. அவற்றுக்குச் செய்யுள்:

---

1. இது சிந்தடி தூங்கியதற்குதாரணம்.
2. வருமளவும்—வருவனவும் என்றிருத்தல்வேண்டும்.
3. அராகம் என்றது ஈண்டு முடுகியலடியை.

"காசெறிக் கலியொளி கடியிடி யுருமி னியங்கறங்க
நேரிதழ் நிரைநிரை நெறிவெழிற் கோதைய ரணிநிற்ப."
(கலி. கo டு)

என்பன ஐஞ்சீரடி முடிந்து வந்தன.

"மலர்மலி புகலெழ வலம்மலிர் மணிபுரை மிடற்றோன் பிணை இ."
(கலி. கo உ)

என்பது அறுசீரடி முடிந்தது.

'முதல் ஈரடிக்கும்' என்ற உம்மை, எச்சவும்மை. அவ்வும்மையால் நாற்சீரடியும் இத்துணைப் பயிலாது முடிகுமென்பது.

"புரிபு புரிபு புக்க பொருவரைத்
தெரிபு தெரிபு குத்தின வேறு."
(கலி. கo ங)

என வரும்.

"இமிழெழு பதிப்பதிர் மிகத்துடன் பலர்நீக்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானே யாட்டிக் கிளிபுமுக்கும்
வாடில் வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று."
(கலி. கo ச)

என்பதனுண் முடிகியலடி இரண்டு வந்தன.

மற்றிவற்றை அராகமென்னுமோவெனின்,—அதனைப் பரிபாடற்கு உறுப்பென்றமையாற் [1] பிறவடியொடு தொடராவற்று வரவேண்டும், இஃது அன்னது அன்று என்பது. எழுசீரடியிற் சிறுவரவினவாகலான் ஐஞ்சீரடியினையும் அறுசீரடியினையும் வரையாரென்றுணர். அவற்றினுஞ் சிறுவரவிற்றுகளின் [2] இதனை உம்மையாற் கொண்டான். முற்றும்மையாகாதோவெனின்,—[3] அதுவும் எச்சப்படுதலின் அமையுமென்பது. அல்லதூஉம் முதலடி [4] யிரண்டே அன்மையின் முற்றுகாதென்பது. (கூக)

1. பிறவடியோடு தொடராவற்று—பிறவடியோடுதொடரா தற்று என்றிருத்தல்வேண்டும். அராகம் பிறவடியோடு தொடராது தனித்து வருதலின். ஈகூ-ம் சூத்திரவுரையையும் முடுகு வண்ணச் சூத்திரத்தையும் நோக்குக. நச்சினார்க்கினிய ருரையையு நோக்குக.

2. இதனை—நாற்சீரடியினை.

3. அதுவும்—முற்றும்மையும். முற்றும்மை ஒரோவழி யெச்சமுமாகும் என்பது சூத்திரம்.

4. இரண்டன்மையின் என்றது ஐஞ்சீரடி கூறமுன்னர் நாற்சீரடியுங் கூறப்பட்டமையின் மூன்றுள என்றபடி.

[முற்கூறிய நாற்சீரடி முதலிய மூவடியும் முடுகியல்பெற்று ஆசிரியத்தும் வெண்பாவினும் வாரா எனல்]

கூடசு. ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு
மூவகை யடியு முள்ளுத லிலவே.

இது, முடுகியல் இன்ன பாவிற்கு உரித்தென்கின்றது; எய்தியது இகந்துபடாமற் காக்கின்றதுமாம்; என்னை? நாற்சீரடி முதன்மூன்றும் அகவலோசைக்கும் செப்பலோசைக்கும் உரியவெனலே, அவை முடுகி ஆண்டுஞ் சேறலெய்தியதனைக் கலிப்பாவிற்கு அல்லது ஆகாதென்றமையின்.

இ—ள்: ஆசிரியம் வெண்பா என்னும் இரண்டுபாவினும் முடுகியலடி மூன்றும் புகா என்றவாறு.

உம்மை, முற்றும்மை. மற்றை முச்சீரடியோடு நான்கென்னுமெண்ணின்,—அஃது இவற்றுக்கு ஈண்டு ஒவ்வாது. முடுகிவருதல் பெரும்பான்மைத்தாகலின் 'மூவகையடி' என வகையென்னும் அடையடுத்துக் கூறினனென்பது. [1] அல்லதூஉம் எழுசீரடி விலக்கானன்றே, [2] அதனை ஆசிரியமருங்கினும் வெண்பா மருங்கினும் மயங்குமென்பதின்மையினென்பது.

இனி, அறுசீரடி ஆசிரியத்தினையொடும் வருமென்றது (கூடசு) அகவலோசைக்கு உரித்தென்றமையானும்,

"வெண்டளை விரவிய மாசிரியம் விரவியும்
ஐஞ்சீரடியும் வரும்."
(கூடரு)

என்றமையானும் அவற்றை அளவடியுடன் எடுத்தோதி விலக்கினனன். மூவகை அடியுமென்றது [3] ஐஞ்சீரடி முதன்மூன்று மெனப்படுமென்பார், அளவடி முடுகுதல் ஆசிரியத்திற்கும் உரிமையின் அது வரையறையின்றென்றலும் ஒன்று; அது,

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்." (மலைபடு. க)

1. அல்லதூஉம் என்றமையின் முன் நிலவரி னெதிர்நிருத்தல்வேண்டும்.

2. அதனை—எழுசீரடியை.

3. ஐஞ்சீரடி முதன்மூன்று—ஐஞ்சீரடி அறுசீரடி எழுசீரடி என்பன. என்பார் என்பதற்கு முடிபில்லியாதலின், இத்தொடரில் யாதோ பிழையுண்டு.

எனவரும். அதற்கு முடியற்றன்மை [1] இன்றென்பது கருத்து. வஞ்சிப்பாவிற்குச் சுறளுஞ் சிந்தும் அல்லது இன்மையின் இவ்வாராய்ச்சி இன்றென்பது.

எனவே, ஆசிரியத்தளையோடு முடியலடியினைக் கலியடி யென்றும் முடிகாத அஃசிரடி ஆசிரியத்தளையோடு கூறிபெற்று [2] வருதற்கும் கலிப்பாவிற்குச் சிறபான்மையான் வருமென்ப தூஉஞ் சொல்லப்பட்டது. அல்லாதார் ஐஞ்சீரடி முதலிய மூன் றும் கலிக்குரிய, பிறபாவிற்கு உரியவல்ல என்றற்கு வந்தது இச்சூத்திரமென்ப; அற்றன்று; அங்ஙனங் கூறில் காம் வேண்டும் ஐஞ்சீரடி ஆசிரியத்துள்ளும் புகாதென்று மறுக்க. 'மூன்றுதலில' என்றது, யாண்டுமாகாதென்றவாறு. இவ்விலக் கணமெல்லாம் மேற்காட்டிய செய்யுளுட் கண்டுகொள்க. (சுச)

[ஆசிரியப்பாவினுள் ஈற்றயலடியும் இடையடியும் முச்சீராகும் வருமெனல்.]

சுஅ. **ஈற்றய லடியே யாசிரிய மருங்கிற்**
றோற்ற முச்சீர்த் தாகு மென்ப. (சுஅ)

சுஆ. **இடையும் வரையார் தொடையுளர் வோரே.** (சுசு)

இவை இரண்டு சூத்திரமும் உரையியைபு நோக்கி உட னெழுதப்பட்டன. இவை, ஆசிரியத்துட் சிந்தடி இன்றுமி வருமென்றமையின் எய்தாதது எய்துவித்தனவாம்.

இ—ள்: ஆசிரியத்துள் [3] எருத்தடி யொன்றும் இடை யிரண்டுமாகி முச்சீரடி வரும் என்றவாறு.

'முச்சீர்த்து' என்று ஒருமை கூறினமையின் அஃது ஒன்றாகலும், 'தொடையுளர்வோர்' என்றமையின் இடைவரு வன இரண்டாகலுங் கூறினனென்பது.

'இடையும் வரையார்' என்றமையான் ஈற்றயன் முச்சீர்த் தாதல் பெரும்பான்மை. உதாரணம்:

---

1. முன் வரையறையின்று என்று கூறுதலானே ஈண்டும் இன்றென்பது வரையறையின்று என்றிருத்தல்வேண்டும். வரை யறையின்மை—வருதல்கூடாது என்னும் நியதியின்மை. எனவே வருதலுங்கூடும் என்றபடி.

2. வருமென்பதூஉம் என்றிருப்பது நலம்.

3. எருத்தடி—ஈற்றயலடி.

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
.....
நீரற வறியாக் கரகத்துக்
காம்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே." (புறம். க)

என அப்பாட்டினை முழுவதூஉங் கொள்ள ஈற்றயலடி முச் சீர்த்தாயிற்று.

"நீரின் றமையுந் நிலின் வெம்மையுஞ்
சாரச் சாரத்து நீரத் நிருஞ்
சார னுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
நீரத் நீரத் நிர்போல்வரதே." (யா. வி. உருள)

என்பதனுள்,

"சார னுடன் கேண்மை."

எனவும்,

"சாரச் சாரச் சார்ந்து."

எனவும் முச்சீரடி இரண்டு வந்தன. எகாரம் பிரிநிலை, மற்று,

"நரந்த நாறுந் நன்கையாற்
புலவுநாறு மென்றலை கைவரு மன்னே." (புறம். உருடு)

என முச்சீரடி இடையும் ஒன்று வந்தகாலெனின்,—"தேரற் றம்" என்றதனுன் எருத்தடி முச்சீராய காலத்துக் [1] குட்டம் பட்டு இனிது விளங்கும். இடையிடை ஒன்று வருதலும் உண்டாயினும் [2] அத்தனை இனிதன்று அதுவென்பது கொள்க.

"பெரியகட் பெறினே." (புறம். உருடு)

என இருசீரடி வந்தகாலெனின், அதனைச் சொற்சீரடியென்று கோக.

"உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு [3] பிறக்கு நோக்காது." (புறம். கூருரு)

எனவுங் காட்டுப; இவை வஞ்சியடி யெனப்படு மென்பது. வெண்சீரான் வஞ்சியடி வருமிடமெனின்,—யாம; வஞ்சிச்சீர் விரவினல்லதென்பது.

"உப்பிலாஅ வவிப்புழுக்கல்."

---

1. குட்டம்—குறைவு. 'மண்டிலங்குட்டம்' என்னும் சூத்திரம் நோக்குக.

2. அத்தனை—ஈற்றயலடி முச்சீரடியாக வருதலளவு.

3. 'பிறக்குநோக்காது' என்பது வஞ்சிச்சீர். அது முன்வந்த வெண்சீரோடு விரவி வந்தது.

என்பதோவெனின்,—அது மற்றை இருசீரடியொடு [1]கூட்டத்துக் காட்டலானும் வஞ்சியடிபோன்றது. (கூஙு)

[கலிப்பாவிற்கு முச்சீரடியும் உரித்தெனல்]

கூஅஉ. முச்சீர் [2]முரற்கையு ணிறையவு நிற்கும்.

இது, கலிப்பாவிற்கு அளவடியும் நெடிலடியும் அகவலிறக்க அடியும் உரிமை கூறி, இனிச் சிந்தடியும் உரித்தென்கின்றது.

இ—ள்: கலிப்பாவினுண் முச்சீரடி நிரம்பவும் நிற்கும் என்றவாறு.

'நிறைய நிற்றல்' என்பது, அச்செய்யுள் முழுவதும் அவ்வடியே வருதலாம். உம்மையான் ஒரு செய்யுள் நிறைய வாராது ஒன்றும் இரண்டும் பலவாகி அம்முச்சீரடி வருதல் பெருவரவிற்றென்பது. [3]தாம் குறைக்க அடியாதலிற் கலிப்பாவிற்கு உறுப்பாகிய [4]சின்னத்துக் குறையநிற்கும் இயல்பினவாயினும், நிறைய நிற்றலுடைய கொச்சகத்தினென்றவாறு.

"செய்தாளைக் கள்வன் மகன்." (கலி. ருக)

எனவே, வெண்கலியுள் இறுதிக்கணல்லது வாராது.

"நின்கண்ணுற் காண்பென்மன் யான்." (கலி. கூ)

என்பது, இடைவந்தது. [5]எண் உறுப்பின்கண் இரண்டும் நான்கும் வருமாறு கண்டுகொள்க.

---

1. கூட்டம்—வஞ்சியடிக் கூட்டம். என்றது வஞ்சியடியோடு கூடல் என்றபடி. வஞ்சியடிபோன்றது என்றதனால் அன்னதன்று. அதுபோன்று ஓசைதந்து நின்றது என்றபடி.

2. முரற்கை—கலிப்பா.

3. தாம் என்றது முச்சீரை.

4. சின்னம்—எண்ணுறுப்பின் பகுதி.

5. எண்ணுறுப்பு என்றது அம்போதரங்கத்தை. இவர் எண்ணுறுப்புள் (457-ம் சூ.) முச்சீரை இருசீர் என்றும் இருசீரை ஒருசீர் என்றுங் கோடலின் அவற்றோடு சண்டுக் கூறியன மாறுபடுகின்றன. ஆதலின் இது இடைச்செருகல்போலும். அன்றேல் மறந்து கூறினர் எனலுமாம். அன்றேல் அதுவும் உடன்பாடுபோலும். ஆராய்தற்கது.

"நீர்வரக் கண்கலுழ்ந் தாங்குக்
கார்வரக் கண்டனங் காதலர்
தேர்வரக் கண்டில மன்னே
பீர்வரக் கண்டனந் தோளே-"

என முச்சீரடி ஒரு செய்யுள் நிறையவும் வந்தவாறு. (எ0)

[வஞ்சிப்பாவினிறுதி ஆசிரியவடியான் முடியுமெனல்]

கூஅஊ. வஞ்சித் [1]தூக்கே [2]செந்தூக் கியற்றே.

இது, முறையானே அடியுரிமை கூறியவாற்றுன் வஞ்சிப்பாவிற்குக் கூறியதிலன்; எற்றுக்கு? அது,

"வஞ்சி யடியே யிருசீர்த் தாகும்." (கூடுஎ)

எனவும்,

"முச்சீ ராஞும் வருமிட னுடைத்து." (கூடுகூ)

எனவும் மேற் கூறப்பட்டமையின், அதுகோக்கி அடியுரிமை கூறப்படாத வஞ்சிப்பாவிற்கு வஞ்சியினது ஈற்றடியும் அவ்விருசீரடியும் முச்சீரடியுமாவான் சென்றதனை விலக்கி இன்ன அடியான் முடியுமென்கின்றது.

இ—ள்: வஞ்சிப்பாவினது இறுதியடி ஆசிரியவடி இறுதி போன்று இறுக என்றவாறு.

எனவே, ஆசிரியத்திற்கு ஓதிய சீரானுந் தளையானும் இறுமென்றவாறு. உதாரணம்:

"மாக்கட னீவந்தெழுதரு
செஞ்ஞாயிற்றுக் கவிகைமாதோ
வகனை யாகன்மாறே
தாயிலூவாக் குழவிபோல
வோவாது கூஉநின் னுடற்றியோர் நாடே-" (புற. ச)

என [3]மண்டிலவாசிரியத்தானிற்றது.

'செந்தூக்கியற்றே' என்ற மாட்டேற்றுமை,

"சுற்றிய லடியே யாசிரிய மருங்கிற்
றோற்ற முச்சீர்த் தாகு மென்ப." (தொல். செய். கூஅ)

எனவும்,

---

1. தூக்கு—தூக்கப்பட்ட (இறுதி) அடி.

2. செந்தூக்கு—ஆசிரியவடி.

3. மண்டிலம்—எல்லாவடியும் நாற்சீரடியான் வருவது.

"இடையும் வரையார் நொடையுளர் வோரே."
(தொல். செய். சுசு)

எனவும் எய்தியவிதி [1] ஈண்டும் எய்துவிக்க,

"அனையை யாகன் மரபே."
(புறம். ச)

என முச்சீரடி இடைவந்தது.

"இழைபெற்ற பாடினிக்குக்
குரல்புணர்சீர்க் கொகுவல்பான் மகனும்மே, எனவாங்
கொள்வழுல் புரிந்த நாமரை
வெள்ளி நாராற் பூப்பெற் மிசினே."
(புறம். சக)

இஃது, ஈற்றயலடி முச்சீர்த்தாகி வந்த செந்துறுக்கியற் றுயிற்ற வஞ்சிப்பா. பிறவும் அன்ன. ஈண்டுத் தனிச்சொல் வேண்டுமென்று பிற்காலத்து [2] நூல்செய்தாரும் உளர். அது சான்றோர் செய்யுள் எல்லாவற்றோடும் பொருந்தாமையானும், பிற்காலத்திற் செய்த நூல்பற்றி முற்காலத்துச் செய்யுட்கெல் லாம் இலக்கணஞ் சேர்த்துதல் பயமின்றுதலானும் அஃதமையா தென்பது. வஞ்சிப்பாவின் ஈற்றடி வரைந்தோதவே இடை யாயின எல்லா அடியும் வரப்பெறுமென்பதாம்.

"நேரிழை மகளி ருளங்குளுக் கவரும்
கோழி யெறிந்த கொடுங்கா ற் கனங்குழை."
(பட்டின. உசு)

என ஆசிரியவடியும் [3] வெண்பாவடியும் இடை வந்தன. (எக)

[வெண்பாவினிறுதியடி முச்சீரான் வருமெனல்]

கூஅச. வெண்பாட் டீற்றடி முச்சீர்த் தாகும்.

இது, வெண்பாவிற்கு ஈறு உணர்த்துகின்றது. ஆசிரியத் துக்கோவெனின்,—தனக்கோதிய அளவடியானே இறுதலின் வேறுபாடு கூறலேண்டா; [4] எருத்தடியும் இடையடியும் முச் சீரான் வருமென வேறுபட்டவழிக் கூறி, அல்லாதன அள வடியாதல் கொள்ளவைத்தானென்பது.

1. ஈண்டு—வஞ்சிப்பாவினிறுதியில் ஆசிரியவடிவருமிடத்து.

2. நூல்செய்தார்—சிறு காக்கைபாடினியார் முதலியோர் போலும்.

3. வெண்பா அடி என்றது—காட்டிய உதாரணத்துள் 2-ம் அடியை. அது முழுவதும் இயற்சீர் வெண்டளையான் வந்தமை காண்க.

4. எருத்தடி—ஈற்றயலடி.

இ—ள்: வெண்பாவின் இறுதியடியொன்றும் முச்சீரான் அன்றி வாராது என்றவாறு. அவை முன்னர்க் காட்டுதும்; அஃதேல்,

"அட்டாலும் பால்கலையிற் குன்று தளவளாய்
கட்டாலு நண்பல்லார் நண்பன்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசன்று
கூட்டாலும் வெண்மை தரும்."
(மூதுரை ச)

என முச்சீரடி இடையும் வந்தகால் வெண்பாவினுளெனின்,—முச்சீர்த்தென்னுது 'ஆகும்' என்று ஆக்கங் ([1] கூறக்) கொடுத் தமையான் அத்துணை ஆக்கமின்றி இடையுஞ் சிறுபான்மை வருமெனக் கொள்க. [2] அல்லாதார் அதனை வெண்பாவன் றென்ப. (எஉ)

[வெண்பாவினிறுதிவரும் முச்சீரடியின் ஈறு அசைச்சீரான் வருமெனல்]

கூஅடு. அசைச்சீர்த் தாகு மவ்வயி னான.

இது மேலதற்கு எய்தியதோர் விதி.

இ—ள்: வெண்பாவின் இறுதிவரும் முச்சீரடியீற்றுச் சீர் வரப்பெறுது அசைச்சீரல்லாது என்றவாறு.

மேல்,

"அசைநிலை வரையார் சீர்நிலை பெறல்."
(தொல். செய். உஎ)

என்றுன், அவற்றுள் உரியசைச்சீர் முதலும் இடையும் இறுதி யும் வருமென்பான்,

"இயற்சீர்ப் பாற்படுத்து."
(தொல். செய். உஅ)

இயற்றுக என்றுன். அவ்வாறே [3] இயலசைச்சீரும் முச்சீரடி இறுதிவருமென்பது ஈண்டுக் கூறியவாறு. (எசு)

1. கூற என்பது வேண்டியதில்லை. கூறி என்றிருந்திருக் கலாம்.

2. அல்லாதார்—இவ்வாசிரியரல்லாதாரும் அவர் பாலிடம் என்ப. யாப்பருங்கல விருத்தி நோக்குக.

3. இயலசைச்சீர்—நேரும் நிரையுமாகிய இயலசைச்சீர்.

[வெண்பாவி னிறுதியடியின் இரண்டாஞ்சீர் நேரீறாய் வரின் அதனெடு நிரையும் நிரையும் இறுதிச் சீராகி வந்து தனிக்குமெனல்]

கஅசு. நேரீற் றியற்சீர் நிரைய நிரைபுஞ்
சீரேற் றிறுஉ மியற்கைய வென்ப.

இது, மேற்கூறப்பட்ட இயற்சீர் நான்கும் வருங்கால் இன்னுழி நின்று இன்னவாறு கொள்ளப்படுமென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: [1] நேரிறுதி வந்த நிரையும் நிரைபுமே இறுதிச் சீராய் நிற்பன என்றவாறு.

எனவே, [2] தனிவந்த நிரையும் நிரைபும் நிரைமுதற் சீர் போலத் தனிகொள்ளப்படுமென்பதாம். 'ஏற்றிறுஉம்' என்ற இலேசினுண் [3] இடைவந்த நிரைபசையும் அவ்வாறு கொள்க; அஃது,

"இயற்சீப் பாற்படுந் தியற்றினர் கொளலே"
(தொல். செய். உஅ)

என்பதனுன் அடங்காதாவெனின், — அடங்காது; என்னை? [4] அசைச்சீர்தான் அடங்குமாற்றுக்கு ஆண்டுக் கூறினுன், அது பிறிதுசீர் அசைச்சீரோடு தட்குமாற்றுக்குங் கூறல்வேண்டுமென்பது; அல்லதூஉம், ஆண்டு அளவடிக்குக் கூறினுன் இது சிந்தடிக்கென்பது. வரலாறு:—

"வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்ந்தனபோ
லேரிய வாயிலு மென்செய்வ—கூரிய
கோட்டியாகீந் தென்னள் குவிச்சாந் தலையகலங்
கோட்டுமண் கொள்ளா முகம்." (முத்தொள்ளாயிரம். எக)

எனவும்,

"அயிற்கதவம் பரப்புழக்கி யாழித்தேர் குத்தி
யெயிற்கதவங் கோத்தெடுத்த கோட்டாற் பணிக்கடலுட்

1. நேரிறுதி வந்த என்றது இரண்டாஞ் சீராகிய நேரீற்றியற்சீருக்குப்பின்னே நிரையும் நிரைபும் இறுதிச்சீராய் வந்து தனித்து முடியும் என்றபடி.

2. தனிவந்த—முன்னுஞ் சீராகித் தனியே வந்த.

3. இடை—வெண்பாவினிடை.

4. அசைச்சீர் இயற்சீருள் அடங்குமாற்றுக்குக் கூறினுன் என்றபடி.

பரப்செய்த நாவாய்போற் றோன்றுமே யெங்கோமான்
காய்சினவேற் கோதை களிறு."
(முத்தொள்ளாயிரம். கஎ)

எனவும் இவற்றினுட் 'கொள்ளா' எனவும் 'கோதை' எனவும் நின்ற நேரீற்றியற்சீர் முன்னர் முறையினவும் களிறென வும் நிரையும் நிரைபுஞ் சீரேற்றவாறும் வெண்பாட்டிற்றடி முச்சீர்த்தாயவாறும் ஆண்டு அசைச்சீராய் வந்தவாறுங் கண்டு கொள்க.

[1] என்னூர்க்கு முச்சீரடியின் முதற்சீர்க்குத் தனி கூறுமோ வெனின்,—ஆண்டுத் தனிவகையின்றியும் வருதலின், அதனை வரைந்து கூறுவென்பது; [2] என்னை?

"கோட்டுமண் கொள்ளா முகம்." (முத். எக)

எனவும்,

"காய்சினவேற் கோதை களிறு." (முத். கஎ)

எனவும் தனிவகையான் வந்தன.

"உருஅச் குறுநோ யுரைப்பாய் கடலைச்
[3]செருஅய் வாழியென் னெஞ்சு." (குறள். கஉ00)

எனவும்,

"கனைஅற் பிளிகடியுங் காளக நாட
[4]விலைஅர்க் கில்லை நமர்." (நால. உஅஉ)

எனவுந் தனிவகையின்றி வந்தன. (எக)

[வெண்பாவி னிறுதியடியி னிரண்டாஞ்சீரிறுதி நிரையாய் வரின் அதனெடு நேரும் நேர்பும் வந்து தனித்து முடியுமெனல்]

கஅச. நிரையவ னீற்பீ னேரு நேர்பும்
வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்.

இஃது, ஒழிந்த அசைச்சீர் நிரையீற்றுப்பின்னன்றி வாரா வென்கின்றது.

1. என்னூர்க்கு...கூறுமோ எனின் என்பது வலிந்து கோடலாம்.

2. என்னை என்பது வேண்டியதின்று.

3.—4. செருஅய் இலாஅர் என்பவற்றை இவர் மூன்று மாத்திரையாக்கித் தனிவகையின்றி வந்தனவென்றது பொருத்தமின்று. செருஅய் எனவும் இலாஅர் எனவும் நான்குமாத்திரை அளபெடையாக்கின் தனிவருவதாது. அங்ஙனங் கொள்வர் நச்சினார்க்கினியர். அவருரை நீக்குக.

இ—ள்: கோடு நியற்சீர் நின்றவழி நிரையீற்றியற்சீர் நிற்பினென்பான் 'நிரையவண் நிற்பின்' என்றான். ஆண்டு நிரையும் நிரைபும் வரில் தளைவழுவாமாதலான் நேரும் நேர்புமே வந்து சீரேற்று முடிதல் வரையின்று என்றவாறு.

"கொழுதகீன மைந்தன் கொணர்ந்ததம் காக
முழுமுதீ பாய்ந்தன பால்."

எனவும்,

"வண்டொன்று வந்தது வாரற் பலிவாடாய்
பண்டன்று பட்டினங் காப்பு." (முத்தொள். கூ)

எனவும் இவற்றுட் பாய்ந்தனவெனவும் பட்டினமெனவும் வந்த நிரையீற்றியற்சீர்ப்பின்னர் நேரும் நேர்பும் வந்தன. முன்னர்,

"நேரீற் றியற்சீர் நிரையு நிரையும்." (தொல். செய். எச)

எனக் கூறி ஈண்டு நிரையவண் நிற்பினெனச் சுட்டிக் கூறியவதனானே அதுவும் நிரையீற்றியற்சீரென்பதூஉம் அஃதிரண்டாஞ் சீரென்பதூஉங் கொள்க; [1] அல்லாதார், அதனை வெண்சீர்க்கும் பொதுவெனக் கூறி,

"வெண்சீ ரீற்றசை நிரையசை யியற்றே."
(தொல். செய். உக)

என்றதனான் வெண்சீரிறுதி நிரையாக இயற்றி அதன் அடிப்பின் நேர்பசை கொடுப்ப,

"எய்போற் றொடந்தானெல் னேறு." (பு. வெ. வாகை. உஉ)

என்புழி,

"டந்தானெல்."

என நின்ற புலிசெல்வாயினைக் கணவியாக இயற்றி,

"நிரையவ னிற்பின் நேரும் நேர்பும்."

என்றதனான் ஏறு என்னும் நேர்பசை கொடுப்பர். அஃது, ஈண்டு ஆராய்ச்சியின்றென்பது; என்னை? [2] இது கட்டளையடியன்மையின். (எடு)

[கலிப்பாவினிறுதி ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் முடியுமெனல்]

கூஅஅ. எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே. (எசு)

கூஅகூ. வெண்பா வியலினும் பண்புற முடியும். (எஎ)

1. அல்லாதார்—தொல்காப்பியரல்லாதார்.
2. இதுவென்றது 'எய்போற்றொடந்தானென்னேறு'என்றவடியை.

இவை, இரண்டு சூத்திரமும் முறையானே கலிப்பாவிற்கு, அன்னதோர் அடி அதற்கு வருத்தில்லாமையின் வருகின்றன.

.....

என்றார்க்கு முதலது நேரடியும் ஈற்றது நிரந்தடியுமாகக் கொள்ளல் [1] அவ்வெழு நிலையுமெனின் அங்ஙனங் கொள்ளாமைக் கன்றே,

"சுற்றய லடியே யாசிரிய மருள்பெற்
றேற்ற முச்சிக் காரு மென்ப." (தொல். செய். கூஅ)

எனவும்,

"இடையும் வரையார் தொடையுளர் வேறே."

எனவும் கூறிற்றென்பது. 'எழுசீரிறுதி யாசிரியம்' (கூஅஅ) எனவே, ஆசிரியவடி பலவும் வந்து எருக்கடி முச்சீராக வருமென்பது கொள்க.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்."

என்னும் கலிப்பாவினுள்,

"இனநல முடைய காளஞ் சென்மோர்."

என்பது, ஈற்றயன் முச்சீரிறுதி ஆசிரியத்தாற் கலிப்பா இற்றது.

"மனைநீ மலர்ப்பொய்கை."

என்னும் கலிப்பாவினுள்,

"மெல்லியான் செவிமுதல் மேல்வந்தான் காகமோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக நின்பெண்டி.
ரில்லி னெழீஇய யாழ்நரம்பி னல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்."
(கலி. எ0)

என வெண்பாவியலினுளும் பண்புற வந்தவாறு.

பண்புறவென்பது, விசேடம்; மிக முடியுமென்றவாறு. எனவே, [2] ஈண்டுக் கூறுத [3] இருசீரடியானும் தாழிசான் வந்த கலிப்பாவடியானும் ஐஞ்சீரடியானும் முடிவன கொச்சகக் கலியுள; அவை இத்தனை விசேடமிலவென்றவாறு. ஈண்டு விதந்து ஓதியவெல்லாம் பெரும்பான்மையும் ஒத்தாழிசைக் கலிக்கென வுணர்க. 'இயல்' என்றதனாற் கட்டளை வெண்பாவே வரல் வேண்டுவதில்லை எனக் கொள்க. 'பண்புற' என்றதனான் மூன்றடியின் இழியிற் பண்புபட வாரா வென்னுஞ் சுருதகமெனவுங் கொள்க. (எஎ)

1. அவ்வெழுநிலை—அந்த எழுசீர்நிலை. (கூஅஅ)
2. ஈண்டு— இவ்விரண்டு சூத்திரத்துள்ளும்.
3. இருசீரடி— வஞ்சியடி.

[யாப்பினிலக்கணம் இதுவெனல்]

கூசூ. எழுத்து முதலா வீண்டிய வடியிற்
குறித்த பொருளோ முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்.

இஃது,

"யாத்த சீரே யடியாப் பெனுஅ." (தொல். செய். க)

என நிறுத்தமுறையானே அடியுணர்த்தி யாப்புணர்த்துகின்றது.

இ—ள்: எழுத்து முதலா ஈண்டிய அடியிற் குறித்த பொருள்களோ முடிய யாத்தல் யாப்பாவதென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

அடிக்கண்ணே முடியுமென்னலே, இருசீரும் முச்சீருங் கிடப்ப முடிய நாட்டினும் நாற்சீர்கொண்டு முடிய நாட்டினும் அமையுமென்பது. மாத்திரை முதலாகவென்னுது 'எழுத்து' என்ற தென்னையெனின்,—எழுத்தும் அசையுஞ் சீருங் கொண்டியன்ற ஓரோவடிக்கண்ணே இன்பஞ்செய்யும் [1] அது; [2] பொருட்காய் இன்றியமையாமையின் எழுத்து முதலாகவென்றோனென்பது. 'ஈண்டியவடி' என்பது, [3] அவை மூன்றும் ஒன்றுகத் தொடர்ந்து ஈண்டிய அடியென்றவாறு. எனவே, [4] இவற்றைப் [5] பொருளின்றி வேறுவேறு செய்யாது, பொருட்டொடர்படச் செய்ய வேண்டுமென்பதாயிற்று (6 கூறி, ஓரடிக்கட் பொருளாற் செய்யாது, ஒழிக்க அடிக்கண் ஒரு சொல்லினைப் பகுத்து வாங்கிக்கொண்டு போய் [7] வைத்தலாமென்பதாயிற்று) கூறியவாறாயிற்று. குறித்த பொருளென்றது, அவ்வடியில் தான் வைக்கக் கருதிய பொருளைப் பிறிதோர் அடியுங்கொண்டு கூட்டாது [8] அமைத்து மாறச்

1. அது—மாத்திரை.
2. பொருட்காய் இன்றியமையாதது எழுத்து என்க.
3. அவை மூன்று—எழுத்து, அசை, சீர் என்பன.
4. இவற்றை—எழுத்து முதலிய மூன்றையும்.
5. பொருளின்றி—பொருள்படாமல்.
6. அடைக்கப்பட்ட வாக்கியம் ஏட்டில் இல்லை என்பர் பவானந்தம்பிள்ளை.
7. 'வைத்திலானென்பதாயிற்று' என்பது S. கணகசபாபதிப் பிள்ளை பதிப்பிலுள்ள பாடம். அது பொருத்தமில்லை.
8. அமைந்து மாறல்—அமைந்து முடிதல்.

செய்தல். 'யாப்பறி புலவர்' என்பது, அவ்வாறு செய்தல்வல்ல புலவர் அது கூறினரென்றவாறு. [1] இதுபோலச் சீரும் பொருண்முடிய நிற்றலின் யாத்த சீரென்றுரைனென்பது.

"மரையோன் மார்பி னரம் போல
மனிவரை யிழிதரு மனிகிளர் சுருவி
நன்பொன் வரன்று நாட
னன்புபெரி துடைய னின்சொல் லினனே."

என இது குறித்த பொருளோ நாற்சீரடிநாலும் முடிய நாட்டினவாறு.

[2] "மண்டில மழுங்க மறுகிறங் கிளர
வண்டின மலர்பாய்ந் தூத மீமிசைக்
கண்டம் காளம் குருகின மொலிப்ப." (அகம். உசூ)

என்றவழி, இருசீரானும் முச்சீரானும் நாற்சீரானுங் குறித்த பொருளோ முடிய நாட்டினவாறு கண்டுகொள்க.

முச்சீரான் முடிய நாட்டுவன ஒருசார் வெண்பாட்டினுட் பயின்று வருமென வுணர்க.

"முயற்கோடு சினி முதுவிசும்பு போழ்ந்தான்."

என்றவழி, எழுத்தும் அசையுஞ் சீரும் பொருளிலவாகி வந்தமையின் அஃதமையாது, யாப்பெனப்படாது; சொல்லிலக்கணத்தாற் சொற்றொறும் பொருளுடையனவாயினு மென்பது.

[3] "மனிவெண் ணகைவன முகிழ்மதி முகமலர்
விழியினைச் செவ்வாய் மென்னடைப் பேதை."

என்றவழியும், முதலடிக்கூட் பொருட்டொடர்பினை அறுத்துங் குறைத்துஞ் செய்தமையின் அதுவும் யாப்பறி புலவரான் யாப்பெனப்படா தென்றவாறு. (எஅ)

1. இது—அடி.
2. இது இருசீரானும் முச்சீரானும் நாற்சீரானும் முடிய நாட்டியது.
3. இவ்வடி பொருட்டொடர்பினை அறுத்துக் குறைத்துச் செய்தது. முதலடிக்கண் பொருள் முடியாமையின். இனி, மணிகை, வனமுலை, மதிமுகம், மலர்விழியினை என்று பொருள் தொடராது பிரிந்துநின்றலின் பொருட்டொடர்பினைச் சீர்க்கண்ணும் அறுத்துக் குறைத்துச் செய்ததாயிற்று.

[யாப்பின் பகுதி இவ்வெனல்]

கசுக. பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
யங்கத முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பி
னுற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்.

இச்சூத்திரம் அறிமாநோக்கு, மேற்கூறிய யாப்பிற்கும் வருகின்ற மரபிற்கும் அப்பகுதியுரிமை கூறினமையின்.

இ — ள்: பாட்டும், உரையும், நூலும், வாய்மொழியும், பிசியும், அங்கதமும், முதுசொல்லுமென்று சொல்லப்பட்ட அவ்வேழு நிலத்தும்,

"வடவேங்கடந் தென்குமரி யாயிடை." (பாயிரம்)

நாட்டார் கடாத்துகின்ற செய்யுளின் பெயரே தனக்குப் பெயராகவுமுடைத்து மேற்கூறிய யாப்பு என்றவாறு.

எனவே, மேற்குறித்த பொருளே அடிக்கண் முடியுமாட்டல் யாப்பென்றுமன், அதுவேயன்றி இப்பகுதிப்படச் செய்தலும் யாப்புறுப்பே யென்றுமாம். இவ்வேழுவகையானுஞ் செய்தன்மரபென எதிரது நோக்கிற்று. பாட்டு உரை நூல் என்ப வற்றிலக்கணம் முன்னர்ச் சொல்லும். யாப்பின் வழிய தென்பது இவ்வேழுவகைப்பட்ட யாப்பின் பெயரது மரபாகும் யாப்பாகிய உறுப்பென்றவாறு. இதனை 'நூல் [1] யாப்புப்' போற் கொள்க. இப்பகுதிதாந் தமிழ்நாட்டு மரபாகலின் மர பென்னும் உறுப்பு மரபென எதிரது நோக்கிற்று. 'வண் புகழ்மூவர்' என்பது, வளனுடைமையாற் புகழ்பெற்றென்ற வாறு; அஃதாவது, கொடுத்துப்பெறும் புகழெனக் கொள்க. மூவரெனப்படுவார் தமிழ்நாட்டு [2] மூவேந்தருமாயினர். 'தண் பொழில் வரைப்பு' என்பது, நிலத்துக்கு நிழல்செய்யும்

1. யாப்புப்போற் கொள்க என்றது தொகுத்தன் முதலிய நான்கும் நூல் யாப்பென்று பெயர்பெற்றாற்போல இந்த யாப்புறுப்பும் இவ் வெழுவகைப் பகுதியையு மடக்கி யாப்பு என்று பெயர்பெறுமென்றபடி.

2. மூவேந்தர்—சேர சோழ பாண்டியர்.

[1] நாவலம் பொழிலுள் வரைந்து கொள்ளப்படும் வரைப்பினை யுடைய வென்றவாறு. தண்பொழிலுடைமையின் நாவலந் தண் பொழிலெனப்பட்டது. நாற்பெயரெல்லை யகமென்பது, தமிழ் நாடென்றவாறு. வடவேங்கடந் தென்குமரியன்றிக் கிழக்கும் மேற்கும் கடலெல்லை கூறினமையானின்,—அறியாத கடாயி னும்; வரையறை யிலவென்று கூறுதனவெல்லாங் கொள்ளப் கொள்ளப்படுவனவல்ல; வகைகூறுமையும் [2] தமிழ் கொள்ளப் படுங் கண்டாய்; அவர் வழங்கும் யாப்பின்வழியதென்பது அந்நாட்டார் வழங்கும் [3] யாப்புப்பகுதி அவை என்றவாறு. தமிழ்நாட்டார் வழங்கும் [4] மரபுப்பகுதி அவையெனவே யாப் பும் மரபுங் கருதியதாயிற்று இச்சூத்திரமென்பது இதனாற் பெற்றும்.

[5]"வடவேங்கடந் தென்குமரி யாயிடை."
என்புழி நான்கெல்லையும் கூறினனென்பது. (எசு)

[மரபாவது இதுவெனல்]

கசுஉ. மரபே தானு
நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன.

இது, நிறுத்தமுறையானே மரபினை விளங்கக்கூறுகின்றது.

இ — ள்: மரபேதானும்— [6]அங்ஙனங் கூறப்பட்ட மரபு தானும். ஏகாரம் பிரிநிலை; உம்மை இறந்தது தழீஇயிற்று; மேல் எழுவகையான் யாக்கப்படுதன் மரபென்றமையின், மரபேதானு மென்றுனெனின்பது. நாற்சொல்—பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்; இயற்சொல் திரி

1. நாவல்—ஒரு மரம். இதுபற்றி நாவலந் தண்பொழில் (சம்புத்தீவு) என்று பெயர்பெற்றது.

2. தமிழ் என்பது தழீஇ என்றிருந்திருக்கவேண்டும்.

3. யாப்பின் மரபுப்பகுதி என்றிருத்தல் வேண்டும். யாப் பின்வழியது என்பதற்கு முன்னுரைத்த விரிவுரை நோக்குக.

4. யாப்பின் மரபுப்பகுதி என்றிருத்தல் வேண்டும்.

5. வடவேங்கடம் என்பது தொடங்கியுள்ள வாக்கியம் முன் வரும் வடவேங்கடம் எனத் தொடங்கியுள்ள வாக்கியத் துக்கு முன் வரல்வேண்டும்.

6. அங்ஙனங் கூறப்பட்ட - எழுவகையாக முற்கூறப்பட்ட.

சொல் திசைச்சொல் வடசொல்லெனினும் அமையும். இயலான்—காற்சொல்லினையுடைய உலகத்தார் வழங்குகின்ற வழக்கு வடிவினன். யாப்புவழிப்பட்டன—மேற்பகுத்த யாப்புவழிப் பொருத்தமுடைத்தாகிக் கிடப்பது என்றவாறு.

[1]அஃதாவது, வழக்கெனவுஞ் செய்யுளெனவும் [2]இடை தெரியாமல் ஒருவாய்பாட்டான் வழக்குஞ் செய்யுளுமாகி ஒரு சொற்றொடரினைச் சொல்லியதுபோலச் செய்யுள் செய்கலென்ற வாறு. 'சாத்தனுண்டான், கொற்றனுண்டான்' எனவும், 'சாத்தனுறங்கினான், கொற்றனுறங்கினான்' எனவும், 'சாத்தனை யறியாதார் ஒருவரையு மறியாதார்' எனவும், 'சாத்தனிற் கொற்றன் போமே' எனவும் நின்ற வழக்கியலே முறையாலே ஆசிரியமும் வெண்பாவுங் கலிப்பாவும் வஞ்சியுமாகப் [3]பரப்பப் பட்ட யாப்பு வழிப்படுத்துக் கண்டுகொள்க.

"ஓஒ மோதா குணர்வினார்." (காலடி. உஎo)

என்னுஞ் செய்யுள் வழக்கிற்றாகவும் சொல்லப்படும். வழக்கு வடிவினனெனவே சொன்மாபும் பொருண்மாபும் அடக்கக் கூறினன்; என்னை? பொருளன்றி காற்சொல்லியும் வழங்கா ராகலின்; எனவே, சொல்லும் பொருளும் அவ்வக்காலத்தார் வழங்குமாற்றானே செய்யுள்செய்க என்பதாயிற்று. இதனது பயன்: ஒருகாலத்து வழங்கப்பட்ட சொல் ஒருகாலத்திலவாகலும் பொருள் வேறுபடுதலும் உடைய. அவை: [4]அதேதாளி இதேதாளி உதேதாளி (சுவி—சுகக) எனவுங் குயின் எனவும் இவை ஒருகாலத்துளவாகி இக்காலத்திலவாயின. அவை முற்காலத்துளவென்பதே கொண்டு வீழ்ந்தகாலத்துஞ் செய்யுள்

1. மரபாவது நாற்சொற்களும் வழக்கின்கண் வழங்குகின்றபடியே செய்யுளின்கண்ணும் யாக்கப்பட்டுக் கிடப்பது. யாத்தல் - இயைத்தல்; வழக்குமரபே செய்யுளாதலின் செய்யுண் மரபு மதுவாகும்.

2. இடை - இடம்; வேறுபாடுமாம்.

3. பரப்பப்பட்ட - படுக்கப்பட்ட என்றிருப்பது கலம்.

4. தொல் - எழுத்ததிகாரத்து, "சுட்டுமுதலாகிய இகரவிறுதியும்" என்பதனால் முடிக்கப்பட்ட அதேதாளி முதலியனவும் "குயின்என இளவி இயற்கை யாகும்" என்பதனால் முடிக்கப் பட்ட 'குயின்' என்கிளவியும் தொல்காப்பியர் காலத்து வழங்கின என்பது பெறப்படும். இவை தொல் - சொல்லதிகாரத்து "கடிசொல் லில்லை காலத்துப் படினே" என்னுஞ் சூத்திரத்து ஒன்றனை முடித்தலாற் கடியப்பட்டன.

செய்யப்படா. அவை ஆசிரியர் தொல்செய்ககாலத் துளவாயினுங் கடைச்சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் [1]பாட்டினுந் தொகையினும் அவற்றை காட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர்; அவற்றுக்கு இது மரபிலக்கணமாகலி னென்பது.

இனி, பாட்டினுந் தொகையினும் உள்ள சொல்லே மீட்டொருகாலத்துக்கு உரித்தன்றிப் [2]போயினவும் உள; அவை முற்காலத்துளவென்பதே கொண்டு பிற்காலத்துக் காட்டிச் செய்யுள் செய்யப்பெறு என்பது.

இனி பொருளும் இவ்வாறே காலத்தானும் இடத்தானும் வேறுபடுதலுடைய. ஒருகாலத்து அணியுங் கோலமும் ஒருகாலத்து வழங்காதனவுள. ஓரிடத்து நிகழும் பொருண் மற்றோரிடத்து நிகழாதனவுமுள. அவ்வக் காலமும் இடனும் பற்றி ஏற்றவாற்றுற் செய்யுள் செய்யவேண்டு மென்பது. ஒருகாலத்துக் [3]குழைபெய்தாரென்றும், ஒருகாலத்துக் [4]குழல் பட முடித்தாரென்றும் ஆண்மக்களை ஒழிந்த காலத்தும் அது கூறார். பதினெண்பாடைத் [5]தேசிகமாக்கள் அணியினையுங் கோலத்தினையும் விரவிக் கூறாது அவ்வக்காட்டாரே பூணுமாற் றானும் புனையுமாற்றானும் ஏற்பச் சொல்லுதல் மரபு.

இனி நான்கு நிலத்தினும் ஓரிடத்துப் பொருளை ஓரிடத்ததாகச் சொல்லுதலும், உலகொடு மலைதலும், சமயங்களொடு மலைதலும், கலியொடு மலைதலும் பிறவும் இன்னோரன்னவும் பொருண்மரபின்பாற்பட்டடங்கும். [6]இவை நாடகவழக்கின் ஆமென்பது முன்னர் அகத்தினையியலுட் கூறினும்.

"புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி
யொலிக்குழைச் செயலை யுடைமா னல்குல்." (அகம். எ)

என்பது, [7]பருவத்துக்கேற்ற அணிகூறியது.

1. பாட்டினுந் தொகையினும் என்றது பத்துப் பாட்டினும் எட்டுத்தொகையினும் என்றபடி.

2. போயின - விகாரப்பெயர்.

3. குழை - தோடு.

4. குழல் - பெண்கள் மயிர்முடிக்கும் ஐம்பாலுள் ஒன்று.

5. தேசிகம் - தேச சம்பந்தம்.

6. இவை - ஓரிடத்துப் பொருளை ஓரிடத்துப் பொருளாகச் சொல்லுதன் முதலியன.

7. பருவம் - வயசுப்பருவம். ஈண்டுப் பேதைப்பருவம்.

[1]"கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் [2]புழுதின்
வில்லோர் தூணி விங்கப் பெய்த
வப்புநீர் வேய்ப்ப வரும்பிய விருப்பை
செப்பட ரன்ன செங்குரை யகந்தோ
நீழுநி னன்ன நிம்புழற் [3]றுய்வா
[4]யுழுதுகாண் டுகீய வரவி யார்கழல்
பாஞ்சி வானிற் [5]காலொடு பாறித்
[6]துப்பி னன்ன [7]செங்கோட் டியவி
[8]னெய்ந்தோர் மீமிசை நினைத்திற் பரிக்கு
மத்த நண்ணிய வங்குடிச் சீறூர்க்
கொடுநுண் ணேக்கின் மகளி ரோச்சிய
தொடிமா ணுலக்கைத் தூண்டுரற் பாணி
நெடுமரம் வரைய குடிஞையொ டிரட்டுங்
குன்றுபி னெழியப் போகி யுரந்துரந்து
ஞாயிறு படினு மூர்சேய்த் தெனாது
துனிபரி துரக்குந் துஞ்சாச் செலவி
னெம்மிலும் விரைந்துவல் லெய்திப் பன்மா
ணேங்குயர் நல்லி லொருநிறை நிலைஇப்
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுரு மாகில் லின்றே லெய்திக்
கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் நிண்டிற்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணுடை மிடைந்த கற்பின் வாணுதற்
கந்நிங் கிளவிக் குறுமகண்
மென்றோள் பெறனசைஇச் சென்றவெ னெஞ்சே." (அகம். கூ)

என்றவழிக் குறிஞ்சிக்கும் முல்லைக்கும் ஏற்றபொருள் தத்தம் மரபிற்றாய் வந்தபலவுங் கண்டுகொள்க.

மற்றும் நாற்சொல்லியலென்பது, வழக்காயின் அது செய்யுட்குரிய [9]திரிசொற்கும் ஏற்றவாறெண்ணியெனின்,—அவையுஞ் சான்றோர் வழங்கினவாறன்றி வேறுபடக் காட்டப்படா

1. கொல்வினை—கொற்றொழில்.
2. புழுகு—அம்பின்மொட்டு
3. துய்வாய்—பூ ; ஆருபெயர்.
4. உழுதுகாணல்—துலாதாள் நீக்கிக்காணல். ஆர்—ஆர்க்கு.
5. காலொடு—காற்றுல்.
6. துப்பு—பவளம்.
7. செங்கோடு—சிவந்தமேடு.
8. நெய்த்தோர்—இரத்தம்.
9. திரிசொல்லும் சான்றோர் வழக்காதலின் வழக்கினுள் அடக்கினுன் என்றபடி.

வனவும், அவற்றுள்ளும் காலம்பற்றித் திரிந்தனவும் உளவாயினும் அவை தவிர்த்துச் செய்புள் செய்யப்படுமென்றற்கும் 'நாற்சொல்லியலான்' என அடங்கக் கூறினனென்பது. மலை யென்றதனைப் பிறங்கலென்று சென்று இக்காலத்துச் செய்புள் செய்யுங்கால் அப்பொருண்மையானே உயரென்று செப்பவோ வெனின் அது மரபன்று.

இனிக் குடவாயிலென்பதனை,

"கொற்றச் சோழர் குடந்தை வைத்த." (அகம். கூ)

எனவும்,

உறையூரென்பதனை,

"பிறங்குநீர் மாடத் துறந்தை போகி." (புறம். கூக)

எனவும் மேலியார் திரித்தவகையானே இக்காலத்துத் திரித்துக்கொள்ளப்படுவன உள. அவை [1]'களந்தை' என்றற் றொடக்கத்தன. பிறவும் இவ்வாறு வருவனவும் அறிந்துகொள்க.

[2]"கடையாயர் நட்பிற் கமுகினையர்." (நாலடி. உகக)

என இதனுள் ஓரினத்தனவாகிய புல்லே கூறி ஒழிந்த மரங்களொப்பன உளவாயினும் உடன்கூறாராயினர். இன்னோரன்ன வுஞ் செய்புட்கு மரபெனப்படுமென்பது.

மற்று, 'பாட்டுரை நூலே' என எழுவகை வகுத்த பகுதியையுஞ் செய்புட்கு மரபென மேற்கூறினுன்; அதனானே இவ்வேழுவகையானன்றி [3]ஆரியர் வேண்டுமாற்றானும் பிறபாடை மாக்கள் வேண்டுங் கட்டளையானுந் தமிழ்ச் செய்யுள் செய்தல் மரபன்றென்றவாறு. (அ0)

1. களந்தை—களத்தூர்.
2. "கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
யிடையாயார் தெங்கி னனையர்—தலையாயா
ரெண்ணரும் பண்ணைபோன் றிட்டருன் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு."

என்னும் (நாலடி. உகக) செய்யுளில் கமுகு தெங்கு பனை என்னும் மூன்றும் புறக்காழனவாதலின் புல்லினமென்றார். "புறக்கா ழனவே புல்லெனப் படுமே" என்பது (தொல்காப்பியம் மரபியல். அடு) சூத்திரம்.

3. ஆரியர் என்னு முற்பாடம் பொருத்தமில்லை.

[இன்னவோசை ஆசிரியப்பாவெனல்]

கூகூ. அகவ லென்ப தாசி யம்மே.

இது, நிறுத்தமுறையானே தூக்கு உணர்த்துவா [1] னெழுந் தான், அஃதாவது பாவினைத் துணிக்கப்படுவதாகலான் அப் பாவினை உணர்த்துகின்று னென்பது. நிறுக்கப்படுபொருள் பொன் [2] னும் வெள்ளியானும் ஒன்றுபெற்ற வழியன்றிக் கழஞ்சுக் தொடியுந் துலாமுமெனத் துலைக்கோலால் தூக்கி அளக்குமாறில்லை; அதுபோலப் [3] பாவின்றித் தூக்கியளக்கப் படும் பொருள் இன்மையானும், பாவினை எழுநிலத்தெழுந்த [4] செய்யுள் அடி வரையறையுடைய பாட்டிற்கு இன்னவாறு வந்த தென்றறிவிப்பது தூக்காகலானும், எல்லாப் பாவினுக்குந் தூக் குப் பொதுவாகலானும் பாவொடு புணர்த்தோத தூக்குணர்த்தப் பட்டது.

இ — ள்: அகவல் என்பது ஆசிரியம்மே — வழக்கினுள் அகவலென்று வழங்கப்படும் பாவினை ஆசிரியத்திற்குரிய பாவென்ப என்றவாறு.

[5] அகவிக் கூறுதலான் 'அகவல்' எனக் கூறப்பட்டது. அஃதாவது, [6] கூற்றும் மாற்றமுமாகி ஒருவன் கேட்ப அவற்கு ஒன்று செப்பிக் கூறுது தங்கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவதோ ராறும் உண்டு. அதனை வழக்கினுள்ளார் [7] அழைத்தலென்றுஞ் சொல்லுப; அங்ஙனஞ் சொல்லுவார்

1. எழுந்தான்—வினையாலணையும் பெயர். அஃதாவது—தூக்காவது.
2. ஆனும் என்பன விகற்பப்பொருளில் வந்தன.
3. பா—ஓசை; செய்யுளை அறிவிப்பது.
4. செய்யுள் என்பது செய்யுளுள் என்றிருத்தல்வேண்டும்.
5. அகவல்—அழைத்தல். "அகவன் மகளே அகவன் மகளே" (குறு—உக) என்னும் பாட்டையும் அதன் உரையையும் நோக்குக.
6. கூற்று—ஒருவர் ஒன்று கூறுவது. ஒருவர் வினவிக் கூறுவதுமாம். மாற்றம்—அதற்கு மறுமாற்றம் பின் ஒருவர் கூறுவது. விடையாகக் கூறுவதுமாம். ஆகிச் சொல்வது என இயையும். இதனை இக்காலத்தும் கனிக்கூத்தர்பாற் காணலாம். கேட்பச் செப்பிக்கூறுது என இயைக்க. ஆகி என்பதனைக் கூறுது என்பதனோடு முடிப்பது சிறப்பன்று.
7. அழைத்தல்—அழைத்துக் கூறல்.

சொல்லின்கண் எல்லாந் தொடர்ந்துகிடக்க ஓசை அகவலெனப் படும்; அவை: தச்சுவினை மாக்கள் கண்ணும், [1] களம்பாடும் வினைஞர்கண்ணும், கட்டுங் கழங்குமிட்டு உரைப்பார்கண்ணும் தம்மில் [2] உறழ்ந்துரைப்பார்கண்ணும், [3] பூசலிசைப்பார்கண்ணும் கேட்கப்படும். கழங்கிட்டுரைப்பார் அங்ஙனமே வழக்கினுள்ள தாய்க் கூறும் ஓசை ஆசிரியப்பாவெனப்படு மென்றவாறு. (அக)

[இன்னவோசை வெண்பாவெனல்]

கூகூ. அஃதான் றென்ப வெண்பா யாப்பே.

இது, வெண்பாவமாறு உணர்த்துதல் நுதலிற்று.

இ — ள்: மேற்கூறிய அகவலோசையன்றிச் செப்பிக் கூறும் ஓசை எல்லாம் வெண்பாவெனப்படும் என்றவாறு.

யாப்பென்றதனான் அப்பாக்கள் செய்யுள் முழுதும் ஒருங்கு நிலைஇக் கிடக்குமென்பது கொள்க. அகவிக் கூறுது ஒருவற்கொருவன் இயல்புவகையானே ஒரு பொருண்மை கட் டுரைக்குங்கால் எழும் ஓசை செப்பலோசை யெனப்படும். இவ்விரண்டுமல்லது வழக்கினுள் இன்மையான் அஃதான் றனவே [4] அகனிலக்கணம் [5] போல்வதாயிற்று. (அஉ)

[இன்னவோசை கலிப்பாவெனல்]

கூகூரு. துள்ள லோசை கலியென மொழிப.

இனி, துள்ளலுந் தூங்கலுஞ் செய்யுட்கணன்றி வழக்கி னுஞ் செய்யுளினும் ஒப்பவருவனவல்ல; அவற்றுள், துள்ள லோசை உணர்த்துகின்றது.

இ—ள்: துள்ளலோசையென்பது, வழக்கியலாற் சொல் லாது [6] முரற்கைப்படுமாற்றால் துள்ளச் சொல்லும் ஓசை; அது கலிப்பாவெனப்படும் என்றவாறு. (அஊ)

1. களம்—போர்க்களம்.
2. உறழ்ந்து—மாறுபட்டு.
3. பூசல்—போர்.
4. அதன்—வெண்பாவின்.
5. போல்வது—பெறுவது என்றிருப்பது நலம். நச்சருரை நோக்குக.
6. முரலல்—துள்ளி ஒலித்தல்.

[இன்னவோசை வஞ்சிப்பாவெனல்]

கூகூசு. தூங்க லோசை வஞ்சி யாகும்.

இது தூங்கலோசை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அடியிற்றூங்காது சீர்தொறுந் தூங்குமோசை தூங்கலோசை எனப்படும். அது [1] போலும் வஞ்சிப்பாவாவது என்றவாறு. (அசை)

[மருட்பா இவ்வாறு வருமெனல்]

கூகூஎ. மருட்பா வேனி யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே.

இது, மருட்பாவிற்கு வேறுபாடு இல்லை என்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மருட்பாவிற்கு உறுப்பாவது ஒழிந்த இருகூறு மல்லது தானாக வேறுபடுத்து இதுவெனக் காட்டுந் தனிநிலை யின்று என்றவாறு.

எனவே, இரண்டன் கூட்டத்துக்கண்ணது மருட்பாவாவ தென்றவாறு. பரிபாடற்கு [2] இருசார் அன்மையின் ஈண்டுக் கூறிற்றிலர். அது மேற்கூறுப. 'ஏனை இருசார்' என்றதென்னை யெனின்,—இச்சூத்திரத்து முன்னர் அதிகாரப்பட்டு நின்ற துள்ளலோசையுந் தூங்கலோசையு [3] மல்லது, அங்ஙனஞ் செய்யுட்கு உரியவன்றி வழக்கிற்கு வருவனவாகி ஒழிந்து நின்ற செப்பலும் அகவலுமே என்றற்கு [4] அவ்வாறு கூறினனென்பது. அவை இரண்டுங் கொள்ளுங்கால் நிறுத்தமுறையாற் கொள்ளாது, எதிர்சென்று கொள்ளப்படும். கொள்ளவே செப்பண் முன்னுகவும் அகவல் பின்னுகவும் வருவதாயிற்று மருட்பா. இனி நிறுத்தமுறையானே கொள்வார் வெண்பா முதல்வந்து அகவல் பின்னுக வருவது மருட்பாவன்றெனவும்,

1. போலும் என்பது பெறுவது என்றிருப்பது நலம். S. கனக சபாபதிப்பிள்ளை பதிப்புப் பொருத்தமின்று.

2. இருசார் இன்மையின் என்றிருப்பது நலம். S. கனக சபாபதிப்பிள்ளை பதிப்புப் பொருத்தமின்று.

3. அல்லது என்பது ஒழிந்துநின்ற என்பதோடு முடியும். அல்ல எனினுமாம்.

4. அவ்வாறு கூறினன் என்றது, ஏனை இருசார் என்று கூறினர் என்றதை.

வெண்பா வொழிந்து ஒழிந்த பாத்தம்முண் மயங்குவனவே மருட்பாவெனவுங் கூறுப. கலிப்பாவும் வஞ்சிப்பாவும் [1] ஆசிரியத்தோடும் வெண்பாவோடும் மயங்கியிறினும் மருட்பாவெனப் படாமையின் அது பிழைக்குமென்பது. (அடு)

[அப் பாக்களாவேயே பாட்டு வருமெனல்]

கூகூஅ. அவ்விய லல்லது பாட்டாங்குக் கிளவார்.

இது, மேலவற்றிற்கு ஓர் வரையறை கூறுகின்றது.

இ—ள்: மேற்கூறிய நான்குபா விலக்கணத்தானல்லது பாட்டின்கண் வேறுபாக் கூறப்படாது என்றவாறு.

இது கூறிப்பயந்த தென்னையெனின்,—மேற்கூறிய பாக்களாற் பெயர் கூறுத செய்யுட்களும், [2] அவை பாவாகவினல்லது வேறு தமக்குப் பாவிலவென்பதூஉம்,

"மருட்பா வேனி யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே." (கூகூஎ)

எனவே அவ்விரண்டன் கூட்டத்தின்கண்ணும் வேறோர் பாப் பிறக்குமென்று கொள்ளினுங் கொள்ளற்க வெனவும், பிற்காலத்து தூல் செய்யும் ஆசிரியர் பிறவகையாற் பாவுறுப்பினை, மயக்கம்பட வேண்டுவாருளராயின் அவரை விலக்கியுங் கூறிய வாறு. அல்லதூஉம் மாணாக்கன் இதன் [3] முதனூல் செய்த ஆசிரியன் பண்ணுந் திறனும் பருக்காணக் கண்டு இவற்றையும் பாவும் இனமுமெனப் பருக்கான்கொலென்று ஐயுறுமை விலக்கி [4] இயனூலுள் அவ்வாறு கூறிற்றிலனெனச் சொல்லினு னென்பது. தான்கு பாவினையுங் கோக்கி 'ஆங்கு' என்றான்; [5] ஐந்து செய்யுளை நோக்கி 'அவ்வியல்' என்றனென்பது. (அசு)

1. ஆசிரியவிற்றானும் வெண்பாவிற்றானும் முடியும் கலியும் வஞ்சியும் அவ்விரண்டோடும் மயங்கியும் மருட்பாவென்று சொல்லப்படாமையின் அது பிழைக்குமென்றபடி.

2. அவை மேற்கூறிய அகவன் முதலிய நான்கும். பா—ண்டு ஓசை.

3. முதனூலாசிரியன்—அகத்தியன்.

4. இயனூல்—இயற்றமிழ் நூல். இயல்—இலக்கணம்.

5. ஐந்து செய்யுளாவன—ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்பன.

[தூக்காவது இதுவெனலும் அது நடக்குமிடம் இவைஎனலும்]

கூகூகூ. தூக்கியல் வகையே யாங்கென மொழிப.

இது, தூக்காமாறு உணர்த்துகின்றது.

இ—ள்: தூக்கெனப்பட்ட உறுப்பு நடக்கும் இடவகை அச்சொல்லப்பட்ட நான்கிடமுமாம் என்றவாறு.

ஆங்கென்றது அப்பெற்றித்து என்றவாறாகக் கொள்ளற்க. அவ்விடம் தூக்கு இயலும் இடப்பகுதி என்றவாறு; என் றூர்க்குத் தூக்கினது இலக்கணம் ஈண்டுக்கூறியதிலனாலெனின்,— தூக்கென்பது சொல்லின்முடியு மிலக்கணத்[1]திற்றது. தூக் கென்பது, நிறுத்தலும் அறுத்தலும் [2]பாடலுமென்றின்னோ ரன்னவற்றுமேல் நிற்கும்; ஈண்டும் அவ்வாறே பாலீனு இத் தூணியடியென நிறுத்துக் [3]கூறுபாடறிதலும், அவ்வத் தூக் குள்வழிச் சொல்லுவாரது உறுப்பு விகாரப்பட்டு [4]ஓடுவது போன்று, அசையுமாறுங் கண்டுகொள்க. இனி, அதுதான் இன்னபொருளை அறுத்துநிற்கு மென்பான் பாக்கூறி அப் பாலின்கண்ணது [5]இவ்விறுதியென்றான்; எனவே, இனிக் கூறுதுநின்றதில்லை தூக்கிற்குவேண்டும் இலக்கணமென்பது. இக்கருத்தினாலே தூக்கினைப் பாவெனினும் அமையும்.

"பாவென மொழியினுந் தூக்கெனது பெயரே."

எனப் பிறருஞ் சொல்லுப.

அகவலோசைக்கண் தூக்குவருங்கால் இருசீர்முதலா எண் சீர்காறும் பரந்துபட்ட அகவலோசையை நாற்சீர்க்கண்ணே தணித்துக்கொள்ள, அஃது ஆசிரியத்தூக்காமென்றவாறு. இரு சீரால் தணிப்ப ஆசிரியவோசையாகாது; முச்சீரால் தணிப் பினும் ஆசிரியவோசையாம்; என்னை? ஈற்றயலடி முச்சீர்த்தா மெனவும், இடையும் வரையாதெனவுங் கூறினமையின்.

1. இற்றது—முடிந்தது.

2. பாடல்—அவ்வரையறை அளவைச் சொல்லல்.

3. கூறுபாடறிதல்—வரையறுத்தல்.

4. ஓடுவது—ஓதுவது என்றும் பாடம். அதுவே பொருத் தம்போலும். ஓதுதல்—சொல்லுதல், அவ்வத் தூக்கை ஓதுதல்.

5. இவ்விறுதி-என்பது இவ்வறுதி என்று காணப்படுகின்றது. அதுவே பொருத்தம். S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பு நோக்குக.

அஃதேல், அடிவகையானே அறுதியுணர்த்து மாகலின் தூக்கு எவன்செய்யுமெனின்,—அவ்வடியினையுந் தூக்கானன்றி உணர்த்த லாகாது; என்னை? இருசீர் முதலாகப் பலசீர் தொடர்ந்த வழித் [1]தூக்கு அறுப்புக்கொண்டன்றி இத்தூணச் சீர்கொண்ட அடி இஃதென்பது அறியலாகாமையின். அல்லதூஉம், ஆசிரி யத்துள் எண்சீர் தொடர்ந்தும் பாச்சென்றவழி அதற்கு வரு மெனப்பட்ட முச்சீரடியும் ஐஞ்சீரடியுமாகாது நாற்சீரடி இரண் டென்று அறிதற்குக் கருவி தூக்கென்பது கொள்க; அல் லாக்கால்,

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யவெங்குருகே யீந்தின் னெம்பிபொறி செங்காய்." (ஐங்குறு)

என்றவழி, 'உள்ளார்', 'முள்ளுடை' என்பன அடியெதுகை யாக முச்சீரடியும் ஐஞ்சீரடியு மெனக்கொண்டு மயக்கமா மென்பது.

"நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றகே தைவரு மன்னே." (புறம் உகூ)

என்றவழி, எண்சீரான் இரண்டு நாற்சீரடி வந்தனவென்று கோடுமன்றே தூக்கின்றுயினென்பது.

தூங்கலோசை அவைபோல நாற்சீரடிக்கண்ணும் இரு சீர்க்கண்ணும் சிறுபான்மை முச்சீர்க்கண்ணும் தூக்குக் கொள் ளப்படும். அங்ஙனங் கொள்ளாக்கால் இருசீரடியெனவும் முச் சீரடியெனவுந் தூக்கின்றி [3]இடைதெரியப்படாவென்பது. (அ)

[தொடைவகை இவை எனல்]

சஂஂ. மோனை யெதுகை முரணே யியைபென
நானெறி மரபின தொடைவகை யென்ப.

இது,

"மரபே தூக்கே தொடைவகை எனஅ." (கூகூ)

என நிறுத்தமுறையானே, தூக்குணர்ந்திக் தொடைவகை உணர்த்துவா னெழுந்தான். அவைதாம் இவையெனப் பெய ரும் முறையுந் தொகையு முணர்த்துதல் நுதலிற்று.

1. தூக்கு அறுப்பு—தூக்கினது அறுப்பு.

2. புலவு என்பதை முன்னடியோடு சேர்ப்பின் நாற்சீ ரடியாம்.

3. இடை—வேறுபாடு; அளவுமாம்.

இ—ள்: மோனைத்தொடையும் எதுகைத் தொடையும் முரண்டொடையும் இயைபு தொடையுமென நான்குவகைப் படும் தொடை என்றவாறு.

'நெறி மாபு' என்பது, நெறிப்பட்ட தொடையிலக்கணம் இதுவென்றவாறு. எனவே,

"அளபெடை தலைப்பெய வைந்து மாகும்." (சoக)

என்றவழி, இதுபோலச் சிறந்ததன்று அளபெடைத்தொடை என்பதாம்; என்னை? அதுவும் வழுவமைத்துக்கொண்ட எழுத்தாகலானென்பது. 'தொடைவகை' என்பது தொடைப்பகுதி பலவுமென்றவாறு. அவை மேற்கூறுமாற்றான் மோனைதான்கும், எதுகை பதினைந்தும், முரண் ஐந்தும், இயைபு இரண்டுமென்று இவ்வகைப்படுதலும், இனி ஈண்டு எண்ணப்பட்ட தொடைப்பகுதிகளும் அறுதாற்றிருபத்தைந்தடியினையும் ஓரோவொன்றுதத் [1] தம்மொடு தம்மைத் தொடுப்பனவும், அவைதம்மொடு பிறவந்தது தொடுப்பனவும், [2] ஓரடிக்கண்ணே தொடுப்பனவும் அவற்றைக் கட்டளையடியல்லனவற்றும் [3] ஈறுய்விசாய்த் தொடுப்பனவும், கட்டளையடியல்லனவற்றைத் தம்மொடு தம்மைத் தொடுப்பனவும், தம்மொடு [4] பிறவந்தது தொடுப்பனவுமென இன்னோரன்ன பலவுமுள. அப்பகுதியெல்லாம் அறிவித்தற்குத் 'தொடைவகை' என்றுணென்பது. (அஅ)

[அளபெடையோடு தொடை யைந்துவகை எனல்]

சoக. அளபெடை தலைப்பெய வைந்து மாகும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி.

இ—ள்: அங்ஙான்கேயன்றித் தொடைவகை ஐந்தென வும்படும் அளபெடைத் தொடையோடு தலைப்பெய்ய என்றவாறு.

1. தம்மொடு தம்மை—எடுத்த அடியோடு அந்த அடியை.

2. ஓரடிக்கண்ணே தொடுப்பன—முரண், பொழிப்பு, ஒரூஉ முதலிய.

3. ஈறுய்—ஈற்றில் வைத்து.

4. பிற வந்தது—என்பது பிறவற்றை என்றிருப்பது நலம்.

அளபெடை எழுத்தோத்தினுள் [1] வேறு எழுத்தெனப் படாமைச் சிறப்பின்மை நோக்கி, ஈண்டுமதனை வேறுபோதந்து கூறினனென்பது; என்னுர்க்கு, மேலெச்சூத்திரத்து நானெனி மரபினவெனத் தொகை கூறினமையின், ஈண்டு அளபெடையுந் தொடையாமென அமையும். நான்கின்மேல் ஒன்றேறியக்கால் ஐந்தாமென்பது ஈண்டுச் சொல்லவேண்டுவதன்று பிறவெனின்,—அற்றன்று; நான்கினோடு ஒன்றினையே சொல்லுதின்றனுயின் அது கடாவாவது; ஐந்தெனவும் ஆறெனவும் படுமென்றற்கு இது கூறினன்; எனவே, உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென அளபெடை இரண்டாகலினென்பது. அஃதே கருத்தாயின், ஆறுமாகு [2]மென்பினென்னின், அங்ஙனங் கூறின் உயிரளபெடையோடு ஒத்த சிறப்பிற்றுவான் செல்லும் ஒற்றளபெடையென மறுக்க. உயிரின் பின்னது ஒற்றுகலான் எடுத்தோத்துப் பெறுவது உயிரளபெடையெனவும், உம்மை யாற் பெறுவது ஒற்றளபெடையெனவுங் கொள்க. [3] உம்மை எச்சவும்மை. ஒற்றளபெடை மூன்றுபாலினுஞ் செல்லாது; கலிப்பாலினுள் துள்ளலோசையான் [4] நில்லாமையினென்பது.

[வேறுந் தொடையுள எனல்]

சoஉ. பொழிப்பு மொருஉவுஞ் செந்தொடை மரபு
மைத்தனர் தெரியி னவையுமா ருளவே.

இதுவும் அது.

இ—ள்: மேற்கூறிய ஐந்தியல்பின்றிப் பொழிப்புத் தொடையும், ஒருஉத்தொடையும், செந்தொடையுமென இவையு முள என்றவாறு.

செந்தொடை மரபென்பது செந்தொடை யிலக்கணம் என்றவாறு.

1. வேறுஎழுத்து—முப்பத்துமூன்றினிட வேறுன எழுத்து. முப்பத்துநான்கென வேறுரெழுத்தாக வேண்டிற்றிலர் என்றபடி. வேறெழுத்தெனப்படாமையாகிய சிறப்பின்மை என்க.

2. என்மினெனின்—என்னுமெனின் என்றிருப்பது நலம்.

3. ஐந்துமென்றதினுள்ள உம்மை ஆறுமாகுமென்பதை எதிர்தழீஇ நிற்றலின் எச்சவும்மை.

4. நில்லாமையிற் செல்லாது என இயைக்க.

'அமைத்தனர் தெரியின்' என்றதனுன், அமையுமாற்றுன் அமைத்துக்கொள்ளப்படும்; யாங்ஙனம்? பொழிப்பும் ஒருஉவும் ஓரடியுள்ளே வருமெனவும், செந்தொடை ஓரடியுள் வரினும் இரண்டடியானன்றி வாராதெனவுங் கொள்க. இக் கருத்துநோக்கி, இவை ஈண்டுப்போதந்து கூறினனென்பது.

'அவையுமா ருளவே' என்ற உம்மையான் [1] இவை போல ஓரடிக்கண்ணேவரும் முற்றெதுகையும், இனமுற்றெது கையும், [2] இரண்டந்தாதியும், இருவகை விட்டிசைத்தொடை யுங் கொள்ளப்படும். (கூ0)

[இவையுந் தொடையுள எனலும்
இவை முற்கூறிய தொடைகளுள் அடங்கு மெனலும்]

சoகூ. நிரனிறுத் தமைத்தலு மிரட்டை யாப்பு
மொழிந்தவற் றியலான் முற்று மென்ப.

இது, நிரனிறைத் தொடையும் இரட்டைத் தொடையு மென இரண்டுதொடைகூறி, அவை முற்கூறிய தொடைப்பாற் படுமென்று அடங்கக் கூறுகின்றது.

இ—ள்: நிரனிறைப் பொருள்வகையால் தொடுக்குந் தொடையும், வந்தசீரே நாற்கால் தொடுக்குந் தொடையும் முன்னைத் தொடைப்பாற்பட்டு அடங்கும் என்றவாறு.

யாத்த வெனினும் தொடுத்தவெனினும் ஒன்று.

"அடல்வே லமர்நோக்கி னின்முகங் கண்டே
[3]யுடனு மிருந்தோடு மும்மலரும் பார்க்குங்
கடலுங் கனியிருளு மரம்பதும் பாம்புந்
தடமுடிய மாமென்று தாம்"

என்றவழி, உடனுங் கடலுமென நிரனிறைத் தொடைமேற் கூறுமாற்றுன் எதுகைத் தொடையாய் அடங்கும்.

"பரவை மாக்கடற் றெகுதிரை [4]பரவும்
பண்டைச் செய்தி யின்றிவள் வரவும்."

1. இவைபோல—பொழிப்பு முதலியபோல.
2. இரண்டந்தாதி—அசையந்தாதி, சீரந்தாதி.
3. கடல் உடனும், இருள் இனிந்தோடும், ஆம்பல் மலரும், பாம்பு பார்க்கும் என நிரனிறையாம்.
4. பரவும் வரவும் என நிரனிறுத்தல் இயைபு தொடைப் பாற்படும். பரவும் என்பது வரவும் என்று கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிற் காணப்படுகின்றது.

என இவ்வாறு நிரனிறுத்தலும் ஒன்று; அஃது 'இயைபின் பாற்படுமென்ப. ஒழிந்தனவும் அன்ன.

இரட்டைத் தொடை என்பது, ஒரு சொல்லே நான்கு சிருமாறி வருமென்பது; அது,

"ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்."
(யா. வி. ப. கஅo)

எனவரும். இது குறையீற்றிரட்டை; இயைபுத்தொடையாய் அடங்கும்.

"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ
பாவிற் பிரிந்த புலவிர்காள் பாடுகோ."
(யா. வி. ப. கஅக)

என்பது, நிறையீற்றிரட்டை: இதுவும் இயைபாய் அடங்கிற்று.

[1] செந்தொடையாய் அடங்குவன உளவேற் கண்டுகொள்க.

மற்று இவை இவ்வாறு அடங்குவனவற்றை வியந்தோதுவது என்னையெனின்,—இவையுங் [2] தொடைப்பாடு கண்டு ஐயுற்றுன ஐயமறுத்தனென்பது; எனவே, [3] ஒழிந்த பொருள்கோள் தாமேகின்று தொடைப்பாடுகாட்டி ஐயஞ்செய் யாமையின் அவை கூறுதுமினென்பது. நிரனிறையாயின் [4] இனைத்தென்றெண்ணி நிறுத்தபொருட்கேற்ப, எதிர்பொரு ளும் எண்ணி நிறுத்துச் செய்யப்படுதலின் அது வேறு தொடையாங்கொலென்று ஐயுற்செல்லுமென்பது.

'மொழிந்தவற் றியலான்' எனவே, தனக்கு [5] வேறியல் இல்லாத செந்தொடை நீக்கப்பட்டது. பொழிப்பும் ஒருஉவும் போல ஓரடியுள்நின்றுந் தொடையை செய்யினும் அவை முற் றுப் அடங்கும்; ஈரடிக் கூட்டத்துத் [6] தத்தம் வகையால் தொடையை செய்யாவென்பது. (கூக)

1. நிரனிறையும் இரட்டையுஞ் செந்தொடையாய் என்க.
2. தொடைப்பாடு—தொடைப்படுதல்.
3. ஒழிந்த பொருள்கோள்—நிரனிறையொழிந்த பொருள் கோள்.
4. இனைத்து—இவ்வளவு.
5. வேறியல்பு—வேறு தொடையா மியல்பு.
6. தத்தம் வகையால் தொடையை செய்யாவென்றது நிம நிறைத்தொடை, இரட்டைத்தொடை எனத் தொடையை

[மோனைத்தொடை இதுவெனல்]

சoச. அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை.

இது, நிறுத்தமுறையானே மோனைத்தொடையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அடிதோறும் முதற்கண் ஒரெழுத்தே வரத் தொடுப்பது மோனைத்தொடையா மென்றவாறு.

"கண்டம் கானற் குருகின மொளிப்பத்
.....
கரையா டலவ னகிலையிற் செயிய." (அகம். உசo)

என்பது, அடிதோறும் முதலெழுத்தொன்றி மோனைத்தொடை வந்தவாறு.

"கோதை மார்பிற் கோதை யானும்
கோதையைப் புனைந்தோர் கோதை யானும்." (புற. சஅ)

என்பதும் அது.

இனிவருந் தொடையும் இதுவுமெல்லாம் அறுநாற்றிருபத்தைந்தடிக்கு உரியவாகியும், [1] பிறவடிக்கு உரியவாகியும், வஞ்சியடிக்குரியவாகியும், குறளடி. சிந்தடி. நெடிலடி. கழிநெடிலடி யெனும் நால்வகையடிக்கு உரியவாகியும் வருமெனக் கொள்க. [2] அற்றன்று, அறுநாற்றிருபத்தைந்தடிக்கும் மோனைத்தொடை ஒன்றொன்றுகச் சென்று பெருகி அறுநாற்றிருபத்தைந்து தொடையாமென்பது. மற்று அடியிரண் டியைந்தவழியன்றே தொடையாவது? இவை அறுநாற்றிருபத்தைக்கு தொடையாங்கால் [3] இஃது ஓரடிக்கண்ணே வரல் வேண்டும்;

செய்யா என்றபடி. எனவே, எதுகையும் இயைபுமெனத் தொடைமை செய்யும் என்றபடி. தொடையும — தொடை இயல்பு.

1. பிறவடி - கட்டளையடி யல்லாதன.

2. அற்றன்று என்பது ஏனையடிகளுக்குத் தொகைக்கணக்குக் கோடலே மறுத்து அறுநாற்றிருபத்தைந்தடிக்கே தொடைக் கணக்குக் கொள்ளுதலைக் குறிப்பித்து நிற்கின்றது. ஆயின் தொடைகள் ஏனையடிகளுக்கும் கட்டளையடிக்குப்போல வரு மென்று கோடலின் (அற்றன்று) என்பதன்முன் உள்ள வாக்கி யம் நிறைந்திருத்தல்வேண்டும். தொடைகள் ஏனையடிகளுக் கும் வருமென்று பேராசிரியர் கூறலே, பொருள். சகச-ம் சூத் திரநோக்கிக் காண்க.

3. இஃது - மோனைத்தொடை.

வேண்டலே, [1] 'அடிதோறுங் தலையெழுத் தொப்பது மோனை' என்றதனோடு மாறுகொள்ளும் பிறவெனின்,—இதுநோக்கி யன்றே,

"அடியுள் ளனவே தலையொடு தொடையே." (தொ. செ. கஉ)

எனக் கூறி,

"அடியிறந்து வருதலின்." (தொ. செ. கச)

என்பானாயிற்று; எனவே, அறுநாற்றிருபத்தைந்தடியுள், ஒன் றனையே இரட்டித்துத் தொடைகொள்ளலென்பது பெற்ற மன்றே; ஈண்டு அடிதோறுமெனப் பன்மை கூறலே அவற் றையே இரட்டித்தலும் பிற அடிவந்து தொடுத்தலும் எல் லாம் அடக்கக்கூறினன் ஈண்டென்பது.

"மெய்பெறு மரபிற் றொடைவகை." (தொ. செ. கoக)

என மேல்வரையறுக்கப்படுந் தொகை பதினமூவாயிரத் தெழு நூற்றெட்டனுள்ளும், மோனைத்தொடை வருங்கால் [2] மூன்று பாவிற்கும் ஒகிய எழுபத்தெட்டுச் சிறினும் வரப்பெறும்; அவ்வாறு வருங்கால்,

"அடியுள் ளனவே தலையொடு தொடையே." (தொ. செ.கஉ)

என்ற தனையிலக்கணமும்,

"அடியிறந்து வருதலின்." (தொ. செ. கச)

என்பதுமாகலான், அவ்வடி இரண்டன் கூட்டத்துத் தலைவழுக் காமையல்வேண்டும்; தலையுங்கால் ஆசிரியத்து நாற்பத்தொன் றும், வெள்ளையடியுட் பதினெட்டும் ஆக ஐம்பத்தொன்பது மிலங் தலையப்படும். கலிப்பாவிற்கு அவ்வாறு தலையவேண்டுவ தில்லையென்பது.

ஆசிரியத்து நாற்பத்தொரு நிலமாவன:—தனக்கு ஒகிய இருபத்தேழு சீரும் பதினைஞ்சு நேராகியும், பதின்மூன்று

---

1. அடிதோறும் என்றதனால் இரண்டடியில் வருதல் பெறப்படுதலின், ஓரடிக்கண் வரல் என்பது மாறுபடும் எனின்? அடியுள்ளன தொடை என்றதனால் முன்வந்த அடியையே மீள வும் தொடுத்தலின் மாறுபடாது என்க.

2. மூன்று பாவிற்கு முரிய எஅச் சீராவன:—ஆசிரியத்திற் குரிய சீர் உசo வெண்பாவிற்குரிய சீர் உசo கலிக்கோகிய சீர் உசo ஆகமொத்தம் எழுபத்தெட்டாம். இவை இன்ன என்பதை நகூ உo சூத்திரவுரை நோக்கியறிக.

நிரையாகியுமாதலான், அவற்றுள் [1] நேராதி பதினெண்கும் ஒரோவொன்று பன்னிரண்டடி. உறழுங்காற் பெருகியநிலத்தின் இவ்விரண்டடியாக இருபத்தெட்டடியும், இனி நிரையாதி பதின்மூன்றற்குஞ் சுருங்கிய நிலத்தின் ஒரோவொன்றுகப் பதின்மூன்றடியுமென காற்பத்தேராடியுந் தம்மொடுகாம்மற் திரட்டிக்குங்கால் கலிவழுப்பறுகளின், அவை தெரடுக்கப்படா வென்பது.

இனி, வெண்பாவடி. உறழுஞ்சீர் இருபத்தீநழினுள்ளும் [2] நேராதிச்சீர் பதினெண்குஞ் சுருங்கியநிலத்துள் ஒரொன்றுகப் பதினெண்கடியும், நிரையாதிச்சீர் பதின்மூன்றனுள் ஒன்ப தொழித்து ஒழிந்த காண்குசீரும் நின்றுறழ்ந்த அடியுட் பதினென்கெழுத்தடி. [3] பெருகிய நிலத்துள் காண்குமாகப் பதினெட்டடியுந் தம்மொடு நம்மை இரட்டித்துத் தெரடுப்பத் கலிவழுவமாகலிற் கலியப்படுமென்பது.

நிரையாதிச்சீர் காண்குமாவன :—

வரகு வலியது கடியாறு விறகுநீ என்பன.

ஒழிந்த நிரையாதி ஒன்பதுசீரும் நின்று உறழ்ந்த அடி எஞ்ஞான்றுங் கலியப்படாது தொடைப்படு மென்பது ; அவை ஒன்பதுமாவன :—அரவ புலிமா கணவிரி பெருகாறு உருமுத்தீ மழகளிறு நரையுருமு [4] புலிசெல்வாய் குளிறுபுலி எனவிவை.

---

1. நேராதி பதினெண்கும் பெருகிய நிலத்தில் இவ்விரண்டு அடி தகவு வழுப்படக் கலியநிலம் உஅ ஆகும். நிரையாதி பதின்மூன்றும் சுருங்கிய நிலத்தில் ஒவ்வோர் அடி தகவழுப் பட கஉ ஆகும். பெருகியநிலம் என்றது எழுத்துக்கள் எண் ணின் மிகுந்த நிலத்தை. சுருங்கிய நிலம் என்றது எழுத்துக் கள் எண்ணிற் குறைந்த நிலத்தை. மோனைத்தொடை ஆசிரியத்தில் நேராதிச்சீரில் உஅ-ம் நிரையாதியில் கஉ-ம் ஆக சக நிலம் வழுப்படும்.

2. வெண்பாவில் நேராதிச்சீர் கச-ம் நிரையாதிச்சீர் சஅ-ம் ஆக பதினெட்டுநிலம் வழுப்படும் ஆகவே வழுப்பட நிலம் இரண்டுபாவினும் சக + கச = டுக ஆகும்.

3. பெருகியநிலத்துள் என்பது முற்பதிப்புக்களில் தவ றிற்று.

4. புலிவருவாய் என வருதல்வேண்டும். பின் உறழ்ந்து காட்டுமிடத்துப் புலிவருவாய் என வருதலின்.

[1] வரகு நிரையுருமு காருருமு பாதிரி
எனவும்,

வலியது கடியாறு காருருமு பாதிரி
எனவும்,

கடியாறு தேமா நரையுருமு காருருமு
எனவும்,

விறகுநீ தேமா புலிவருவாய் காருருமு
எனவும், இப்பதினென்கெழுத்தடி கான்குந் தெரடுக்குமுறையில்லை. ஒழிந்த நேராதியும் இவ்வாறே சுருங்கினநிலத்து உறழ்ந்தவடி தெரடுக்குமாறில்லை யென்பதூஉங் கண்டுகொள்க.

இனி, கலியப்படாத நிரை முதற்சீர் ஒன்பானுள்ளுஞ் சுருங்கிய எழுத்துச்சீர் [2]ஒன்பது. பெருகிய எழுத்துச்சீர் :— நரையுருமு புலிவருவாய் என்பன. அரவ வரகு வரகு வரகு எனவும், அரவ புலிவருவாய் காருருமு தேமா எனவும் இவை முதலும் முடிவுங் காட்டிய அடிக்கண் அவைதம்மொடு தம்மைத் தொடுக்கப்படுதலிற் கலியநில மிலவாயின.

நரையுருமு வண்டு வரகு வரகு எனவும் நரையுருமு காருருமு பாதிரி தேமா எனவும் ஐயெழுத்துச்சீர் முதலும் முடிவுங் காட்டிய அடி கலியப்படாது தெரடைப்படுமென்பது ; புலிவருவாய்க்கும் இஃதொக்கும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

இவ்வாற்றுன் [3] அறுதாற் றிருபத்தைந் தடியுள் ஐம்பத் தெண்பது நிலங்களோடு ஒழிந்தவடி ஐஞ்ஞூற் றறுபத்தா

---

1. வரகு நரையுருமு காருருமு பாதிரி இது பதினென் கெழுத்து வெண்பாவடி. இதனை மீளவும் வரகு நரையுருமு காருருமு பாதிரி எனத் தந்து தொடுக்குங்கால் நிரையும் நிரை யும் ஒன்றி ஆசிரியத்தளையாகி வழுப்படும். ஆதலால் தொடுக்கு மாறில்லை என்றபடி. வலியது முதலியவற்றுளாய அடியும் இப் படி ஒன்றுடொன்றுதொடுக்கப்படா என்றபடி. வலியது கடி யாறு என்பது வலியது காருருமு எனத் திருத்தப்படவேண்டும்.

2. ஒன்பது ஏழு என்றிருத்தல்வேண்டும்; பின் ஒன்பதுள் இரண்டுசீர் சொல்லப்படுதலின்.

3. கூடீடு அடியுள் தகவழு டுகூம் கலிய மோனைத் தொடை டுகூகூ ஆகும்.

க-வது	மோனைத்தொடை	டுகூகூ
உ-வது	தளையாகெதுகை	டுகூகூ
ங-வது	அடியெதுகை	டுகூகூ
ச-வது	எழுத்தடியியைபு	டுகூகூ
ஞ-வது	சொல்லடியியைபு	டுகூகூ
	ஆக ஐந்தும்	உஅங0 ஆம்.

ருளும் பெற்ற மோனைத்தொடை ஐஞ்ஞூற்றறுபத்காறனப் படும்.

இவ்வாறே கலியாகெதுகை, அடியெதுகை, எழுத்தடியையடி, சொல்லடியினையடி என்னும் நான்கு தொடைக்குங் கனிவன கூனைத்து தொகைகூட்டிக்கொள்க.

இவற்றுள், ஆசிரியப்பாவினுள் வரும் அடி மோனைத் தொடை இருநூற்றெண்பத்துமூன்றும், வெண்டொடை நூற்றறு பத்துமூன்றும், கலிப்பாவிற்குரிய தொடை நூற்றிருபதுமாகி மூன்று பாவிற்குந் தொருப்பத் தொடை ஐஞ்ஞூற்றறுபத் காறும். ஒழிந்த நான்கற்குமும் இவ்வாறே கொள்க; கொள் ளவே இத்தொடை ஐந்தனுளும் பெற்ற தொடை இரண்டா யிரத்தெண்ணூற்றுமுப்பஃதாம். இவற்றுள் அகவற்றொடை ஆயிரத்துகானூற்றொருபத்தைந்து. வெண்டொடை எண்ணூற் றொருபத்தைக்து. கலித்தொடை அறுநாறெனக் கொள்க.

"அடியெதுகை மோனை கலியா கெதுகை
[1] யடியினையடி சாமிரண்டென் றறைந்துங்—கடியப்
படுநில மைம்பது மொன்பது மென்ப
வெழுபத்தெண் சீரடிக்கு மேற்ற."

எனவும்,

[2] "ஒழிந்த நிலத்து நிரையின்மூன் றெல்லா
தொழிந்த வுயர்ந்துழி யொன்றுக்—கழிந்த
நிரையொன்றுய் நேரிரண்டாய் நாற்பத்தொன் றாகு
மவையகவற் காகா தன."

எனவும்,

---

1. (பா) அடி இயைபு இரண்டு: எழுத்தியைபு, சொல் லியைபு. கடியப்படுந்தனை எழுபத்தெட்டுச் சீர்க்கும் ஐம்பத் தொன்பதாகக் கொள்க. ஐந்து தொடைக்கும், ஐம்பத்தொன் பது, ஐம்பத்தொன்பது தனியாகக்கொண்டு கனியப்படும் என் பது கருத்து.

2. (பா) ஒழிந்தநிலம் இழிந்தநிலம் என்றிருத்தல் வேண் டும். இழிந்தநிலம்—சுருங்கியநிலம். நிரை பதின்மூன்றுசீரும் இழிந்தநிலத்தொல்லா (பொருந்தா). நிரையொழிந்த நேர் பதி னைலும் மேனிலத்தொன்று. ஒன்று—பொருந்தா. நிரைக்கு ஒவ் வொரு அடியும், நேருக்கு இவ்விரண்டு அடியுமாக நாற்பத் தொருநிலம் அகவலிற் கனியப்படும். 'உயர்ந்துழி' எனப் பின்வருதலின் 'ஒழிந்த' என்றார் என்று கொள்ளலாமெனினும் அது தெளிவின்றும். எல்லாம் என்பது ஒல்லா என்று பாட முள்ளது. ஒழிந்த எல்லாம் என மாற்றினு மமையும்.

[1] "வரகு வலியது வரன்கடி யாறு
விறகுநீ வெள்ளைக்கு மேலிலத்து வொன்று
[2]வழிவழி நேர்முகும்மீ சேரிரண்டு மாக
வவையைம்பத் தொன்பா னகும்று."

எனவும்,

[3] "ஐம்பத்தொன் பானன்றி யைந்நூற் றறுபாக்கா
லொன்றும் குறியவா மொட்டு."

எனவும்,

[4] "ஐந்து தொடையா னகவற் றொடையிருநூற்
றெண்பத்து மூன்று மெனமொழிப—வொன்றெழுத்
வெள்ளைத் தொடைநூற் றறுபத்து மூன்றுருத்
துள்ளற்கு நாற்பிரு பாம்."

எனவும்,

[5] "சொல்லி னவைநான் றொடையிரண் டாயிரத்
தெண்ணூற்று முப்பஃ தெனல்."

எனவும் இவ்வாறே விரித்துரைத்துக்கொள்க. (கூஉ)

[எதுகைத்தொடை இதுவெனல்]

சூ0கு. அஃதொழித் தொன்றி னெதுகை யாகும்.

இஃது, இரண்டாம் எண்ணுமுறைமைக்கனின்ற எதுகைத் தொடை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இரண்டடியினும் முதனின்றசீர் முதலெழுத் திரண்டும் ஒழிய அல்லனவெல்லாம் ஒன்றிவருதலும் ஒசை வெழுக்கே ஒன்றிவருதலுமென இங்ஙனங் கூறியவற்றுள்

---

1. வெண்பாவிற்கு வரகு வலியது கடியாறு விறகுநீ என் னும் நான்கும் பெருகியிலத்தொன்று. வழிவழி—கீழ்நிலம். வழி—பின்=கீழ். நேராதி பதினைலும் சுருங்கியிலத்தொன்று. மேனிலத்து நாலும் கீழ்நிலத்துப் பதினைலுமாகத் தனிவழுப் பதி னெட்டாம். இரண்டு பாவிற்கும் ஐம்பத்தொன்பது நிலங் கனி யப்படும்.

2. வழிவழி என்பது இருவரி என்றிருந்திருக்கவேண்டும். மோனைக்கு மதுவே பொருத்தம்.

3. ஐம்பத்தொன்பது நிலங் கனிந்து நூசு நிலம் மோனைக் குக் கொள்ளப்படும்.

4. மோனை முதலிய ஐந்து தொடைக்கண்ணும் தனித்தனி (தொடை நூசு-ம்) அகவற்கு உஅசு-ம் வெள்ளைக்கு சுசு-ம் கலிக்கு சுஉ0-ம் ஆகப் பிரிக்கப்படும். தொடையான்—தொடைக் கண்; வேற்றுமை மயக்கம். ஒடுவுமரம்.

5. ஐந்தற்கும் மொத்தம் உஅசு0 ஆகும்.

[1] அஃதொழித்து அரசீர் முழுதொன்றில் தலையாகெதுகை யென்றும், இரண்டாமெழுத்தொன்றில் அடியாகெதுகையென்றும் வழங்கப்படும். அயலெழுத்தொன்றி னென்னுது [2] முதலெழுத்தினைச் சுட்டிக்கூறுக லென்னையெனின்,—இவ்வாறு எதுகையாங்கான் முதலெழுத்துக்களின் மாத்திரை தம்மின் [3] ஒத்துவரல்வேண்டுமென்றற்குக் கூறினனென்பது.

உதாரணம் :—

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்." (தொ. அகத். ரு)

என்பது, தலையாகெதுகை.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி." (பெரும்பாண் கூ)

என்பது அடியெதுகை; இதனை இடையாகெதுகை யெனவும் அமையும்; ஒழிந்தன கடையாகெதுகை யெனப்படும். பிறவும் அன்ன.

அஃதேல், தலையாகெதுகை யென்றதுபோலத் தலையாகு மோனையுங் கொள்ளாமோவெனின்,—அற்றன்று; ஆசிரியன்,

"அடிதொறுத் தலையெழுத் தொன்பது மோனை." (சூoச)

என்றலானும், அடிமோனையேகொண்டாமென்பது. என்றார்க்கு,

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகலும் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்." (நாலடி கூ)

என்றவழி, அடிதோறும் ஒருசொல்லே வந்து தொடையாயிற்றன்றேவெனின்,—அஃது இரண்டடிக்கண்ணே வந்தன்று; செய்யுண்முழுவதும் பயின்றுவந்து சுவைமைப்படாதாகலின் வழிமோனைப்பாற்பட்டடங்குமென்க. இச்சூத்திரத்துக் காட்டப்பட்ட [4] தொடையிரண்டும், மூன்றுபாவிற்கும் ஒகிய அறுநூற்றிருபதங்கைந்து அடியோடுங் கூட்டுத்தொகை சொல்லுமாறு மேலைச்சூத்திரத் துணைக்கப்பட்டது. (கூ)

1. அஃதொழித்து—முதலெழுத்தொழித்து.

2. முதலெழுத்தினைச் சுட்டிக் கூறலாவது—அஃதொழித்து எனச் சுட்டிக் கூறியது.

3. ஒருமாத்திரை எழுத்துமுதற்கண் வரின் இரண்டாமடிக்கண்ணும் அதுவே வருதலும் இரண்டுமாத்திரை எழுத்துவரின் அதுவே வருதலும் வேண்டும் என்றபடி.

4. தொடையிரண்டு—தலையாகெதுகை, அடியெதுகை.

[மோனையெதுகைத்தொடைகளுக்குங் கிளை எழுத்துக்களும் உரியவாமெனல்]

சூoகூ. ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய.

இது, மேற்கூறிய தொடைப்பாற்பட்டு வருவன வேறு பல தொடைகண்டு அவை கூறுகின்றது.

இ—ள்: ஆயிரு தொடை யென்பன மோனையும் எதுகையும்; இவை இரண்டற்குங் கிளையெழுத்துக்களும் ஒன்றிவரப் பெறும் என்றவாறு.

இதன் கருத்து: அங்ஙனங் கிளையாகிலுக்கு வேறுபாட்டான் எல்லாத்தொடையும் வேறுபலவாமென்றவாறு. கிளையெழுத்தென்பன:—வருக்கமும் நெடிலும் [1] அனுஸ்வரமும் மெல்லினமும் இடையினமும் உயிருமெனவிவை. இவையெல்லாம் ஒரோகிளைமையுடைமையிற் கிளையெனப்பட்டன.

இனி, ஆசெதுகையும் மூன்றுமெழுத் தொன்றெதுகையும் அடியெதுகைக் குரித்தாகிய [2] இரண்டாமெழுத்தின் முன்னும் பின்னுந் தொடர்ந்து நிற்பனவே அனைய நெடிலும் அமையும்; அற்றன்று; அடிமோனையுங் தலையாகெதுகையும் அடியெதுகையும் வந்து, தந்தை யென்னுஞ் சீர்க்கண் [3] மூன்றுமெழுத் தொன்றிவருதல்,

"மெய்பெறு மரபிற் றொடை." (தொ. செ. கoக)

எனப்பட்டமையின், ஆண்டு அது கிளையாகாது: 'மெய்த்தல் ஒத்தல்' என்றவழியன்றி, 'ஈதல், காய்தல்' என்றவழி நெடிண்மோனையாய்த் திரிபுபடுதலின் ஆசிடையெதுகையுங் கிளையாகாது. 'உரிய' என்றதனானே [4] இவை அத்தலையாயிலவன்றே

1. அனு - வழி = ஒத்த எழுத்து.

2. இரண்டாமெழுத்தின் முன்தொடர்ந்து நிற்பது - ஆசெதுகை. இரண்டாமெழுத்தின் பின்தொடர்ந்து நிற்பது - மூன்றுமெழுத் தொன்றெதுகை.

3. மூன்றுமெழுத் தொன்றெதுகையென்று கோடலின் கிளையென்று கொள்ளவேண்டியதில்லை என்றபடி. நுந்தையை, பின் மூன்றுமெழுத் தொன்றெதுகைக்கு வாராதென்று விலக்கலின், உண்டு எனப்பட்டமையின் என்பது. எனப்படாமையின் என்றிருப்பது நலம்.

4. இவை—ஆசிடை எதுகையும் மூன்றுமெழுத் தொன்றெதுகையும்.

மெனக் கொள்க. மற்று [1] 'நுந்தை தந்தை' என்றவழி, ஆண்டு முதனின்ற மோனை நிறந்தெரிஞமோவெனின் என்ன மன்றே, [2] இரண்டாயவழி [3] ஈரெழுத்துத் தேமாவாகலே பெரும்பான்மையாகலின். இதனானே, இது கலியாகு மோனை யெனத் தலைமைகூறப்படாததுமாயிற்று; என்னை? தொடை என்பன, 'பூந்தொடை' போலச் செய்யுட்குப் பொலிவுசெய்ய வேண்டுமாகலின்; இக்கருத்தினானன்றே தொல்லடியையினைத் தலையாகையெனத் தலைமைகூறாயிற்றென்பது; அடியெதுகை யாயின் தலையாகெதுகைபோலச் சிறந்துகாட்டுமென்பது. செந் தொடையுஞ் செய்புட்பொலிவு செய்யுங்காற் [4] கொன்றையுங் கடம்பும்போல நின்றவாறே நின்று தொடைப்பொலிவு செய்யு மென்பதாம். [5] அனுவுங் கிளையெனப்படுமோவெனின்,—அது வுங் கிளைமைபற்றியல்லது அனுவாகாதென்றற்கு இவற்றோடுங் கூறினனென்பது.

ஈண்டு ஓதிய கிளை உயிரும் ஒற்றுமென இரண்டாகலின் அவ்விருவாற்றானுங் கிளைமைபற்றி அனுக்கொள்ளப்படும். என்னை?

"அஆ வாயிரண் டங்காத் தியலும்." (தொ. எழு. பிற. கூ)

என அகர ஆகாரக் கிளையாயின. ஐகார ஔகாரம் போலி வகையான் [6] அவையெனப்படும். இ ஈ எ ஏ என்பனவும் உ ஊ ஒ ஓ என்பனவும் உடன்பிறப்பினவாகலான் அவையுங் கிளை யெனப்படும். ஒற்றுக்கிளை யென்பன தம்முன்னர்த் தாம்

1. நுந்தை தந்தை என்பது நுந்தை நுந்தை என்றிருப்பது நலம். ஏன்னை? நுந்தை என முதலடியில் வந்து அடுத்த அடி யிலும் நுந்தைவரினே முதனின்றமோனை முதலொன்றி வந்த அடிமோனையாகும்.

2. இரண்டாயவழி—இரண்டடியாய வழி.

3. ஓரெழுத்துத்தேமா என்றிருத்தல்வேண்டும். குற்றிய லுகரம் எண்ணப்படாமையின் அது நிறைந்த அடிமோனை எனப் படாது என்றபடி. அது அடியெதுகையாகும். சகுந்தம் சூத்திர உரையுள் 'நுந்தை நுந்தை' என்றும் 'ஓரெழுத்துத்தேமா' என்றுங் கூறப்படல் நோக்குக.

4. கொன்றையுங் கடம்பும் இயற்கையாகவே தொடை யாகப் பூத்துப் பொலிவுசெய்வன என்றபடி.

5. அனு-வழி=ஒத்த எழுத்து. தாமோதரம்பிள்ளை பதிப் பில், அனு அதுவென்று காணப்படுகிறது. அது பொருந்தாது.

6. அவை—அகர ஆகாரங்களின் கிளை.

வருதலும் பிறவருதலுமென இரண்டு. அவற்றுள் தம்முன்னர்த் தாம்வருங்கால் வந்த உயிரே வாரா. அஃ[1]வனுவிற்கு ஓகிய உயிரே வேறுபடலருமென்பது. இனி, ஓரடிக்கண்ணுயின் ஐஞ் சீரானும் அறுசீரானும் வந்தவழியினும் அனுவெனப்படுமென் பது. இனித் தம்முன்னுகப் [2] பிறவருங்கால் வந்த உயிரே வரவும்பெறுமெனக் கொள்க. பிறவருங்கால் ஞகாரநகாரங்க ளும் மகரவகரங்களுஞ் சகரதகரங்களும் இனம்பற்றிக் கிளையா மென்பது. அவற்றுள், மகரவகரங்கள் இதழ்பற்றிப் பிறத் தலிற் கிளையாயின. இவ்வாறே இ ஈ எ ஏ என்பனவும் யகர மும் மிடற்றுவழியாற் பிறத்தலானும் இயல்பு ஒப்புமையா னுங் கிளையாமென்பது.

ஒற்றும், உயிரும், உயிர்மெய்யும் என மூன்றுவகையாற் கிளைமைகூறி மெய்ம்மோனை உயிர்மோனை உயிர்மெய்ம்மோனை யெனவுங் கொள்ளாரோவெனின்,—அவை,

"மெய்பெறு மரபிற் றொடைவகை." (தொ. செ. கஙக)

அன்மையிற் கொள்ளாரெனபது; அல்லதூஉம், அவை யெல்லாங் கொள்ளிற் செந்தொடை [3]இழைபடுமென மறுக்க. எதுகைக்கும் இஃதொக்குமாறு கண்டுகொள்க.

இங்ஙனம் ஈண்டுக் கிளையெனக் கூறியவற்றுள், எற்புழிக் கோடலென்பதனுன் வருக்கமென்பது மோனைக்கும் எதுகைக் கும் உரிமையான், வருக்கமோனை வருக்கவெதுகை யென்று இருவகைப்படும். நெடிலும் அதுவும் மோனைக்குரிய; உயிரும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் ஆகிடையிடுதலும் மூன்றுமெழுத்தொன்றுதலுமென்ற ஆறும் எதுகைக்கே உரிய வாம். இவை பத்துத்தொடையுள்ளும் மோனை மூன்றும் வருமாறு:

[4] "வயல்குகிர் கரந்த வுகடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடந் தொழுஇ." (அகம். உச)

1. அனுவிற்கோதிய உயிர்—அ ஆ ஐ ஔ முதலிய உயிர் கள். க கா கை கௌ என வேறுபடவரும் என்றபடி.

2. பிறமெய் வருங்கால் வந்தஉயிரே வருதல்—ச த; ந ஞ எனவருதல். உம்மையால் ச தா; ந ஞா எனவும் வரும்.

3. இழைபடுதல்—இல்லையாதல்.

4. வ—வி வகரவருக்கம்

என்பது வகரவருக்கம் முதற்கண் வந்தமையின் வருக்கமோனை யாயிற்று.

"கலக்கொண்டல கள்ளென்கோ
காழ்கோத்தன சூட்டென்கோ." (யா. வி. ப. கூசு)

என்பதும் அது. இவை ஒருமெய்யின் வருக்கமாகலான் வருக்க மெனப்பட்டன. அஃதேல், [1] உயிர்வருக்கமும் வருக்கமெனப் படாதோவெனின், அங்ஙனங்கொள்ளின் நெடிலும் அனுவும் விரவும் வருக்கமும் வருக்கமெனப்படுமென மறுக்க; அல்ல தூஉம், [2] நெடிலும் குறிலும் ஊர்ந்த மெய்யிரண்டு இயைந்த வழித்தொடையாகல் வேண்டுமென்றோதலின்; என்னுயிர்க்கு, முதற்கண் உயிர்வந்ததனையே [3] இன்னதொடை எனுமோ வெனின், அவை அனுவாகி வருவன வழிமோனையெனவும் அல்லாக்காற் செந்தொடையெனவுங் கூறுபடுவென்பது. இஃது, ஓரடிக்கண் வரினும் ஒக்குமென்ப தறிப்பதுணர்க.

"மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்கால் பித்திகந்து."
(நெடுநல். கூசு—சஅ)

என்றவழிச் செந்தொடையாவதன்றி மோனைத் தொடைப்பாடின் றென்பது. இவ்வாறே குறிலும் நெடிலும் எதுகையாகாமையின் அவையும் வேண்டியதிலவென்பது.

[4] "வெள்ளி வள்ளி விளங்கிறைப் பணைத்தோள்
மெத்தென் சாயன் முத்துறழ் முறுவல்."

என்பது வழிமோனை.

(நெடுநல். கூசு—கூஎ)

---

1. உயிர்வருக்கத்தை ஒன்றாகக்கொள்ளின் அனுமோனை என்பதொன்றின்றும். ஆ என்னும் நெடில் முதலடியில் வந்து அ இரண்டாமடியில் வரின் அது அனுவாகுமன்றி வருக்கம் எனப்படாது. ஆதலின் அது பொருந்தாது. அனுவாய் வந்தன நெடிலுங் குறிலுமாமாதலின் வருக்கமோனைக்குப் பொருந்தா என்றபடி.

2. கானம்—சனம். எனை நெடிலுங் குறிலுமூர்ந்த மெய் வரினும் உயிர்பற்றி வருக்கமோனையாகக் கொள்ளவேண்டி வரும். ஆதலானும் அது பொருந்காதென்க.

3. என்ன தொடை என்றுமிருக்கலாம்.

4. ம+செ—இவற்றில் உயிர்கள் அனுவல்ல. ஆதலின் செந்தொடையாயிற்று.

5. வெ+மெ—வழிமோனை. இவையெழுத்துப்பின்னும் வருவது வழிமோனை.

"ஒங்குநிரை வியன்பரப்பி
ஞெலிமுந்நீர் வளம்பாக." (மதுரை. க—உ)

என்பதும் அது. இவற்றை அனுமோனையெனினும் அமையும். [1] அவை விகற்பங் கொள்ளாமோவெனிற் கொள்ளாம்.

"முன்னீத்தஞ் றெற்றின் முழங்கு கடலோத மூழ்கிப்பெரு
வன்னீக் குரைப்ப னறிவரய் கடலேயென் றலறிப்பேரும்."

என்னும் அறுசீரடியினும் எழுசீரடியினும் எண்சீரடியினும் நாற்சீரடியினும் ஒப்ப வருதலானும், [2] எண்சீரடியுள் ஒரு நான்குசீர் அற்றவழி ஒழிந்த நான்கனுண் முதற்கண்ணும் இடைக்கண்ணும் [3] இனம் வந்தால் அவை வந்தவழியெல்லாந் தொடையாகாமையானுமென்பது. பிறவும் அன்ன. எதுகைக் குப்போல இனமோனை கொள்ளா தனிமெய்; மொழிக்கு முதலாகாமையினென்பது.

"கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே." (குறுந். உகசு)

என்பது, வருக்கவெதுகை.

"அத்தக் கள்ள ராதொழு வறுத்தெனப்
பிற்படு பூசலின் வழிவழி யோடி." (அகம். எ)

என்பது, வல்லினவெதுகை.

"நும்மில் புலம்பினு முள்ளுதொறு நலியும்
நண்வர லசைஇய பண்பில் வாடை." (அகம். டுஅ)

என்பது, மெல்லினவெதுகை.

"மள்ளர் மள்ள மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந." (பெரும்பாண். சடுரு)

என்பது, இடையினவெதுகை.

---

1. வழியும் அனுவும் விகற்பங்கொள்ளாமோ எனின் கொள்ளாம் என்க. ஒன்று என்றபடி.

2. எண்சீரடியுள் என்றது 'திருவேயென் செல்வமே தேவே வானோர்—செழுஞ்சுடரே செழுஞ்சுடர்ந்ற் சோதி யிக்க' என எண்சீர் வருங்கால் முதல் நான்கு சீரினு மிற்றுநின்று பின்னுஞ் செழுஞ்சுடரே என வந்தால் ஆண்டும் வேறுகத் தொடை கொள்ளப்படாமையான் அனுவும் வழியும் ஒன்றென்றபடி. அன்றியும் சீர்தோறும் வருதலானும் வந்தவழி எல்லாம் அது வழிமோனைத் தொடையென்று கொள்ளப்படாமையானும் இரண்டு மொன்றென்றபடி.

3. இனம் வந்தால் என்புழி, இனம் இனை உயிரும் இனை மெய்யும் எனக் கொள்க.

"புள்ளி யிறுதியு முயிரிறு நிலையுஞ்
சொல்லிய வல்ல வேனைய வெல்லாம்." (தொ. எழு. உ0உ)

என்பதும் அது.

[1] "இமிழ்கண் முழவி னின்சீர் வாமனைப்
பயிரவன் போலைத் திசைப்பவுந் தவிரான்."

என்பது, உயிரொதுகை; இஃது ஒற்றார்ந்த உயிரொன்றினமை யின் உயிரொதுகையாயிற்று.

"நெய்த்தோர் மீமிசை நிணத்திற் பரிக்கு
மத்த நன்னிய வங்குடிச் சீறூர்." (அகம். கூ)

என்பது, யகரவொற்றிடையிட்டு வந்த ஆசிடையெதுகை. பிற வும் ஒற்றிடையிடினும்,

"மெய்பெறு மரபிற் றொடை." (தொ. செய். கoக)

யாவன கொள்க.

[2] "உவவுமதி யுருவி னேங்கல் வெண்குடை
நிலவுக்கடல் வரைப்பின் மன்னர நிழற்ற." (புறம். ங)

என்பது, மூன்றுமெழுத்தான்றெதுகை.

இவையும் மேற்கூறப்பட்டனவும் இனிக் கூறுவனவுமெல் லாம் ஈண்டு பாவினும் வருமாறு கண்டுகொள்க.

இனி, மூன்று பாவினும் அறுநூற்றிருபத்தைந்தடியோடும் இவற்றைப் பெருக்கி உணருங்கால், [3] இவை பத்துத் தொடை யானும் பெற்ற தொடை மூவாயிரத்தெண்ணூற்றறுபத்தேழு;

---

1. இகரத்துக்கு இகரம் உயிரெதுகை.
2. வகர உகரம் மூன்றுமெழுத்து.
3. இவை பத்துத்தொடை என்றது :—

க.	வருக்கமோனை	கூ.	வல்லினவெதுகை
உ.	வருக்கவெதுகை	எ.	மெல்லினவெதுகை
ங.	நெடின்மோனை	அ.	இடையினவெதுகை
ச.	வழிமோனை	கூ.	ஆசிடையெதுகை
ஞ.	உயிரெதுகை	கo.	மூன்றுமெழுத்தான்றெதுகை

இவற்றுள் வருக்கமோனை முதலிய மூன்றையும் வேறாக எடுத்து அவற்றிற்குத் தொடைக் கணக்குக் கூறுகின்றார். வருக்க மோனை முதலிய மூன்றையும் பாவிரண்டினு முறழுங்கால் நுங்தை என்னுஞ் சீர் அதற்கேலாமையின், நுங்தைக்கு ஆசிரியத்துப் பன்னிரண்டடியும் வெண்பாவில் எட்டடியுமாக இருபது அடி, அறுநூற்றிருபதைந்து அடியைப் பெருக்க அறுநூற்றைந்தடி யாகும். இச்சீர்க்குரிய தனிவழு மூன்றையும், ஐம்பத்தொன் பது வழுவிற் கழிக்க இருபத்தாறு சீர்க்கும் ஐம்பத்தாறாகும். முற்கூறிய அறுநூற்றைந்தடியின் தனிவழு ஐம்பத்தாறுங் கழிய வருக்கமோனை முதலிய மூன்றற்கும் தனித்தனி தொடை ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதாம்.

இவற்றுள், வருக்கமோனையும், வழிமோனையும், உயிரொதுகையு மென இவை மூன்றும், நுங்தையென்னுஞ் சீர்க்கு ஏலாமை யின் அச்சீர் முதற்பா இரண்டினும் உறழ்ந்த அடி இருபதும் ஒழித்து, ஒழிந்தசீர் எல்லாவற்றினு முறழ்ந்த அடி அறுநூற் றைந்தனுள் ஐம்பத்தாறு நிலங் கழிய ஒரோவொன்றற்குப் பெற்ற தொடை ஐஞ்ஞூற்று நாற்பத்தெண்பதாம்.

இவ்விலக்கணமெல்லாம் இனிக் கூறும் முரணுக்கும் ஒக்கும்.

அவற்றை அகவற்செய்யுட் இருநூற்றெழுபத்துமூன்றென வும், வெண்டொடை நூற்றைம்பத்தாறெனவும், கலியிற் கழி வன இன்மையின் அவை நூற்றிருபஃதெனவும் பருத்துக் காணப்படும். இம்மூன்று தொடையும் முரண் ஐந்துந் தொகுப் பப்பெற்ற தொடை காலாயிரத்து மூந்நூற்றுத் தொண்ணூற் றிரண்டு. இவை பிற அடிக்கண் வருங்கால் அவ்வையாயிரத் தாற் பயிலாவென உணர்க. பிறவும் அன்ன.

[1] "வழிவருக்க மோனை யுயிர்முரணைக் கேட்டு
மொழிவின்ற நுந்தை யொருபா—வழுவில
மைம்பதின்மே லாறகற்ற வைஞ்நூற்று நாற்பதென்மே
லொன்பதென் றோதப் படும்."

எனவும்,

"இருநூற் றெழுபத்து மூன்றகவல் வெள்ளைக்
கொருநூற்றை யம்பத்தா றுரிய—வொருநூற்
றிருபதாற் துள்ளற் கெனல்."

எனவும்,

"நாலா யிரத்துமுந் நூற்றுத்தொண் ணூற்றிரண்டி.
[2] னூனீ டடித்து நவிற்று."

எனவும்,

[3] "பதின்மூன்று பாற்றொடை யேழா யிரத்தோ
டிருநூற் றிருபத் திரண்டு."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

---

1. 6-வது வழிமோனை, 7-வது வருக்கமோனை, 8-வது உயி ரெதுகை இவை மூன்றும் 9—10—11—12—13 ஆவதாகும் முரண் ஐந்தும் ஒரு சேர எட்டுத்தொடையாகும். இவற்றிற்கு வாராத நுந்தையொழிய, தனிவழு முகூம் கழிய ஒவ்வொன்றற்கும் முகூ தொடையாக சஅகூஉ ஆகும்.
2. நாலிரிடம்—எட்டிடம்.
3. பதின்மூன்றுபாற்றொடை—மேற்கூறிய மோனை முத லிய ஐந்தும் இங்கே கூறிய வழிமோனை முதலிய எட்டும் என்ற படி. மோனை முதலிய ஐந்தற்கும் உஅகo. வழிமோனை முத லிய எட்டற்கும் சஅகூஉ. இரண்டற்கும் மொத்தம்—எஉஉஉ.

இனி, மூன்றுமெழுத்தொன்றெதுகைக்கு வண்டு, மின்னு, துங்கை, சேற்றுக்கால், நீடுகொடி என்னும் ஐந்து சீரானும் உறழ்ந்த அடி அறுபஃதெழுத்து, ஒழிந்தசீர் இருபத்திரண்டானும் பெற்ற அடி இருநூற்றுபத்தொன்களுள்ளும், ஒன்பது கோ முதற்சீராற் பதினெட்டும், பதின்மூன்று நிரை முதற்சீராற் பதின்மூன்றுமாக முப்பத்தெரு நிலங் களைக்கொள்ளப்பெற்ற ஆசிரியத்தொடை இருநூற்றுமுப்பத்துமூன்று.

இனி, வெண்பாவினுள் நீடுகொடி வாராமையின், வண்டு, மின்னு, துங்கை, சேற்றுக்கால் என்னும் நான்கு சீரும் உறழ்ந்த அடி முப்பத்தெண்ணெழுத்து, ஒழிந்தசீர் இருபத்துமூன்று னும் பெற்ற அடி நூற்றைம்பதாகலின், அவற்றுள்ளும் கோ முதற்சீர் பத்தும், வாரு, வலியது, சுடியாது, விறருநீ என் னும் நான்கும் ஆகப் பதினைந்து சீரானும், பதினைறு நிலங் களைக்கொண்டு பெற்ற வெண்டொடை நூற்றுமுப்பத்தாறும். இவ் வாற்றான் இரண்டு பாவிற்குங் கூடியநிலம் நாற்பத்தைந்து.

கலிப்பாவினுள்ளுஞ் சேற்றுக்கால் நீடுகொடி என்னும் இரண்டும், மூன்றுமெழுத்தொன்றெதுகைக்கு வாராமையின், ஒழிந்தசீர் இருபத்திரண்டனானும் பெற்ற தொடை நூற்றிருபதாம்.

இவ்வாற்றான் இவை மூன்றுபாவின் தொடையுந் தொகுப்ப தானூற்றெழுபத்தொன்பதாம். இம் மூன்றுமெழுத்து ஒன்றுங் கால் இரண்டாமெழுத்து ஒன்றாது வரல்வேண்டும்; அல்லாக் கால் கூடியாகெதுகையாமாகுவினென்பது.

1 "வண்டுமின்னி ரண்டுநுங்கை சேற்றுக்கா னீடுகொடி
யென்றிரண்டு மூன்று மெழுத்தியையா—னின்ற
வுயிர்த்தேற் சீரா னடிந்தொடை நானூற்
றெழுபத்தொன் பானு மியற்று."

எனவும்,

2 "வந்த பதினைந்து மேழா யிரத்தெழுநூற்
றென்றென் றுரைக்கப் படும்."

எனவும்,

1. வண்டும் மின்னுவுமாகிய இரண்டும், நுங்கையும் சேற் றுக்காலும் நீடுகொடியுமாகிய மூன்றும் மூன்றெழுத்தொன் றெதுகைக்கு வாரா. ஒழிந்துநின்ற கூவ சீர்க்கும் அடித்தொடை எஎக ஆகும்.

2. மேற்கூறிய கஙு தொடைக்கும் எஉஉஉ. 14-வது மூன்றுமெழுத்தொன்றெதுகைக்கு எஎகூ. மொத்தம்—எஎஙூ.

1 "நேர்முத லொன்பா னிரட்டி நிரைபதின்மூன்
றுரிசீரப் பாமுப்பத் தொன்றகற்றி—நேர்முதற்சீர்
பத்தொடு நான்குவெண் பாவகற்ற வாங்கதற்
கற்றன நாற்பத்தைந் தாம்."

எனவும்,

2 "இருநூற்று முப்பத்து மூன்றகவல் வெள்ளைக்
கொருநூற்று முப்பத்தா றுரு—பொருநூற்
றொருபதாற் துள்ள வொருங்கிவை மூன்று
மெதுகையாற் பெற்றனவா மின்று."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி ஒருக்கவெதுகை ஆசிரியத்துள் எழுசீர்க்கும், வெண்பா வினுள் ஐந்துசீர்க்கும், கலிப்பாவினுள் நான்குசீர்க்கும் வாரா. அவை வண்டு, மின்னு, போதாபூ, மேவுசீர், நீடுகொடி, காலுத் தளை, துங்கை என இவைபோலும் ஆசிரியத்துள் ஆகாதன. இவற்றுள் நீடுகொடி, காலுத்தளை இரண்டும் ஒழிந்து ஒழிந்த சீர் ஐந்தும் வெண்பாவிற்கேலா. அவற்றுள்ளும் வண்டு, மின்னு, துங்கை ஒழிந்து ஒழிந்த நான்கும் கலிப்பாவிற்காகாவென வுணர்க. இனி, ஆசிரியத்துள் கோமுதற்சீர் ஏழும், பதின் மூன்று நிரைமுதற்சீரும் உறழ்ந்த அடி இருநூற்றுநாற்பதாம். இவற்றுட் கூடியும் நிலம் [3]இருபத்தேழாம். ஆகவே அகவற் றொடை இருநூற்றிருபத்துமூன்று ஆயின. [4] வெண்பாவினுள்

1. கோ முதற்சீர் ஒன்பதற்கும் 18-ம் நிரை முதற்சீர் பதின் மூன்றற்குப் பதின்மூன்றுமாக ஆசிரியத்திற்குத் தளைவழு நகஙூ-ம். கோ முதற்சீர்க்குப் பத்தும் நிரை முதற்சீர்க்கு நான்குமாக கச தொடைவெண்பாவிற்கு வழுவாம். அவ் விரு பாவிற்கும் தளை வழு சசு ஆகும்.

2. அகவற்கு —உநகூ
வெண்பாவிற்கு —கநகூ
கலிக்கு —ககஙூ
} முதலெழுத்தொன் றெதுகை பெறுந் தொடை.

3. 15-வது வருக்க எதுகை. ஆசிரியத்துக் கூடியநிலம் கோ முதலேழற்கும் கஎ-ம் நிரைமுதற் பதின்மூன்றற்கும் கநஙூ-ம் ஆக உள நிலம் கூடியப்படும். உஙூ சீரும் கஉ அடி. உறழ உசஙூ ஆகும். தளைவழு உள கூடிய உகநஉ ஆம்.

4. வெண்பாவில் நுங்கை, வண்டு, போதாபூ மூன்றும் அ அடி உறழும். மின்னு, மேவுசீர் இரண்டும் ஏழடி உறழும். நஉ-ம் அ அடி உறழ உசஙூ அடி ஆம். உஉ ஏ அடி உறழ கசஙூ அடி ஆம். தொகுப்ப நஅ நிலம். வராதன கூடினவாம். அவற்றோடு வெண்டொடை வழு கநஉ-ம் கூடியவேண்டும். வெண்டொடை கஅகஉ-ல் வராத நிலம் நஅ-ம் வழு கநஉ-ம் ஆக நுக நிலங் கூடிய கநஙூ தொடையாம்.

ஐந்துசீரானும் முப்பக்கெட்டடியொழிக்து, ஒழிக்க அடி நாற்று நாற்பத்தைஞ்ஞான் கோ்முகற்சீர் சொன்பதும், நிரைமுதற் சீர் நான்குமெனப் பதின்மூன்ஞனுங் களையும் நிலம் பதின் மூன்றகற்றிப் பெற்ற வெண்டொடை நூற்றுமுப்பதாம். கலிப்பா விற் களைக்சீர் நான்கொழிக் தொழிக்த சீரான் அடி நாறு எனப்படும். அம்மூன்றுக் தொருப்ப வருக்கவெதுகை நானூற்று நாற்பத்தைஞ்ஞான்.

1 "நேர்பிரண்டு நேர்பு முதனிலற்று நுக்தையுமென்
குகாச்சீர் சேறைந்து நான்காக வாகாத
நாற்பதும்போய் நானூற்று நாற்பத்து மூன்றுக்
தோற்றும் வருக்கத் தொடை."

எனவும்,

2 "முறையா லிருநூற் றெருபத்து மூன்றே
டொருநூற்று முப்பதுதா ரெட்டு."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி, 3 நெடின்மோனையும், மெல்லினவெதுகையும், இடை யினவெதுகையும், ஆசிடையெதுகையுமென நான்கற்கும் நிரை முதற் சீரும் துக்தையுமெனப் பதினைஞ்சீர் எலாமையின், ஒழிக்த நேராதிச்சீர் பதின்மூன்றன் ஆசிரியத்து ஒரோசீர்க்கு இரண்டு நிலங்களைக்து பெற்றதொடை நூற்றுமுப்பதாம்.

வெண்பாவினுள் கோ்முகற்சீர் பதின்மூன்றும் உறழ்க்த அடி தொண்ணூற்றுமூன்றனுள் ஒரு சீர்க்கு ஒரு நிலமாகப் பதின்மூன்று நிலங்களைக்து பெற்ற வெண்டொடை எண்பஃதாம்.

---

1. நேர்பு உ.—வண்டு, மின்னு. நேர்புமுதல் ச—போதுபு, மேவுசீர், நீடுகொடி, நானுத்தலை. மூன்றற்கும் ஆகாச் சீர்கள் முறையே ஏழும், ஐந்தும், நான்குமாம். இரண்டற்கும் களைநிலம் சஂ ஆகும். இரண்டுபகுதி நிலமுங் கழிக்க 15-வது வருக்க வெதுகை சசஅ ஆகும்.

2. மூன்றற்கும் முறையே வருநிலம் :—உகஅ-ம், கஅ0-ம், க00-ம் ஆகும்.

3. 16-வது நெடின்மோனை, 17-வது மெல்லின எதுகை, 18-வது இடையின எதுகை, 19-வது ஆசிடை எதுகை என் னும் நான்கற்கும் நுந்தையும், நிரை பதின்மூன்றும் ஒழித்து நேராதி பதின்மூன்று சீர் வரும். இவற்றில் நேராதி பதின் மூன்று சீர்க்கும் மேலிலத்து இரண்டிரண்டாக இருபத்தாறு நிலம் வழுக் கொயப்படும். வெண்பாவினும் பதின்மூன்று சீர்க்கும் பதின்மூன்று நிலம் வழுக் கொயப்படும்.

கலிப்பாவிற்கு கோ்முகற்சீர் பன்னிரண்டனுற் பெற்ற தொடை அறுபஃதாம். ஆசு மூன்று பாவிற்குக் தொடை ஓரோ வொன்றற்கு இருநூற்றெழுபதாக நான்கனுலும் பெற்றதொடை ஆயிரத்தெண்பதாம்.

1 "இடையின மெல்லின மாசெதுகை யேனை
நெடின்மோனை நான்காகி நின்ற—தொடைநா
லிருநூற் றெழுபஃ தொரோவொன்றற் கெய்து
நிரைமுதலு நுந்தையு நீக்கு."

எனவும்,

2 "பதின்மூன் றிரட்டித் தகவினிலை ராதி
பதின்மூன்றே வெண்பாவிற் பாற்றி யவைதொகுப்ப
மூவகை மூன்று நூலியிட்ட முப்பஃது
தாலவகையா னிற்க நவிற்று."

எனவும்,

3 "மூவகைப் பாவின் மொழிந்த நொடைத்தொகை
யாயிரத்து மேலெண்ப தாகுமாம்—பாவின
மூன்றாற்று முப்பதா மெண்பதாம் வெண்பாக்
கூடைய கலிக்கடுப்பஃ தாம்."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

இனி, வல்லினவெதுகைக்கு நிரைமுதற்சீர் பதின்மூன் றும் மின்னு, தங்கை, மேவுசீர், நானுத்தலை என நான்கு மாகப் பதினேழுசீர் தொடைகொள்ளாமையின், ஒழிந்த நேராதிச் சீர் பத்தனுலுங் களைவன களைந்துபெற்ற அகவற்றொடை நூறுக வும், வெண்பாவிற்கு நானுத்தலை வாராமையின் அஃதொழிக்கல்

---

1. இடையினம் முதலிய நான்கற்கும் நுந்தை ஒன்றும், நிரை பதின்மூன்றும் நீக்கி ஒழிந்த கசு சீராலும் தொடை பெறும். பெறுங்கால் வழுக்களைந்து நான்கு தொடையுள் ஒவ் வொன்றும் உஎ0 தொடைபெறும்.

2. நேராதி பதின்மூன்றற்கும் அகவற்கு இரட்டித்து உசு நிலங் கணியப்படும். வெண்பாவிற்கு கசு ஆகும். இரண்டுங் தொகுத்து நகூ களைவழுக் கணியப்படும். இம் முப்பத்தொன் பதும் நான்கு தொடையுள் ஒவ்வொன்றற்கும் கொள்ளப் பெறும்.

3. மூவகைப் பாவிற்கும் மொழிந்ததொடை உஎ0-ஐயும் நான்கற்கும் கொள்ள கஅ0அ0 ஆகும். ஆசிரியம் கசு0 பெறும். வெண்பா அ0 பெறும். கலிக்கு கூ0 ஆகும். மூன்என்றது முதற் பாவாகிய ஆசிரியத்தை. மூன்றும் தொகுப்ப உஎ0 ஆகும். நான்கு தொடைக்கும் உறழ கஅ0அ0 ஆகும்.

வேண்டுவதன்றியிற்றகலே மின்னு, நுங்தை, மேவிசீர் என்னும் முன்றெழிந்து, ஒழிந்த கோசிகிச்சீர் பகிலென்றனனுங் கலிவன கூலைந்து கொண்ட வெண்டொடை அறுபத்தெட்டாகவும், கலிப்பாவின் கேர்முதற்சீர் பன்னிரண்டனுள் மேவிசீர், காணுத்தனே ஒழிந்து ஒழிந்த* பத்தனனும் கலிக்தொடையம்பதாகவும் மூன்று பாவினனும் வல்லினவெதுகை இரு நூற்றெருபத்தெட்டு ஆயினவென்பது.

[1] "முற்றுகர நேர்புநேர் முன்னருஞ் சீரிரண்டும்
குற்றுகரத் தேமாவுங் கொள்ளாது—மற்றை
நிரைமுதலுங் கூட்டாது நேர்முதலான் வல்லொற்
றெதுகையிரு நூற்றெருபத் தெட்டு."

எனவும்,

[2] "இரும தகவல்பதி னென்றுவெள்ளைக் காகா
நிரைம்பத் தொன்றுக நீக்கி—வலியெதுகைக்
நிரைம்பா நாமகவள் வெள்ளைக் கறுபத்தெட்
டோரைம் பதுதுள்ளற் கோட்டு."

எனவும் இவற்றை விரித்துரைக்க.

இவையெல்லாங் கிளைபற்றி வந்தமையின்

'ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் தாயிய'

என்றனென்பது. இப் பத்துக் தொடையானும் முரணுங்காலும் பெற்ற தொடை ஆறுயிரத்தறுநூற்றெருபத்திரண்டு எனப்படும். ஆறுயிரத்தறுநூற்றெருபத்திரண்டும் பெறும், கிளையும் முரண் ஐந்தும். மேற்கூறிய மோனை எதுகையிரண்டனேடும் இனிக் கூறும் முரணுங்தும் இயைபு இரண்டும் உடன் கூட்டிக் [3] தொடை கூறினும். இவற்றோடு இயைந்தமையி னென்பது. இத் தொடையெல்லாங் தொகுப்ப ஒன்பதினுயிரத்து நானூற்று நாற்பத்திரண்டு ஆயினவாறு கண்டுகொள்க.

---

1. 20-வது மெல்லினவெதுகைத்தொடை.

முற்றுகர நேர்பு—மின்னு. நேர்—நேர்பு என்றிருத்தல்வேண்டும். நேர்பு முன்னருஞ் சீரிரண்டு—மேவிசீர், நானுத்தனே. குற்றுகரத் தேமா—நுங்தை. இவையும் நிரை முதற்சீரும் கூட்டாது, நேர் முதற்சீரான் வந்த வல்லின எதுகை—உகஅ ஆகும்.

2. அகவலுக்குக் கனியுநிலம் உ0-ம் வெள்ளைக்கு ககம் ஆக நகநிலங் கனியப்படும். அகவல் க00 தொடையும் வெண்பா சுஅ-ம் கலி ரு0-ம் பெறும்.

3. தொடை—தொகை என்றிருப்பது ரலம்.

[1] "மோனை யெதுகை முரணியைபு நான்கற்கு
மானவை யொன்பதி னுயிரத்து நானூற்று
நாற்பத் திரண்டாகு மோரடியே யாயினுங்
கூட்டத்துக் கொண்ட குமரன்." (சூசி)

[முரண்டொடை இதுவெனல்]

சஅச. மொழியினும் பொருளினு முரணுதன் முரணே.

இது, முறையானே முரண்தொடை உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: சொல்லும் பொருளும் பகைத்தல் காரணமாக முரண்டொடை வரும் என்றவாறு.

அவை ஐவகைப்படும்;

சொல்லுஞ் சொல்லும் முரணுதலும், பொருளும் பொருளும் முரணுதலுஞ், சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணுதலும், சொல்லும் பொருளும் பொருளொடு முரணுதலும், சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடும் முரணுதலும் என.

[2] "செல்வி வாய்ந்த செம்பாட் டுரத்து
வெள்ளை வெண்மதி மேய்புனத் தொழிய."

என்புழி, செல்வி வெள்ளையென்பன பொருளின்றிச் சொல்லுஞ் சொல்லும் முரணியன. வெள்ளையென்பது சாதிப்பெயர்.

[3] "செந்தொடைப் பகழி வாங்கிச் செஞ்சிறந்து
கருங்கைக் கானவன் கலிற்றுயிறத் தழுத்தலின்."
(யா. வி. ப. கசடு)

என்பதும் அது.

---

1. மேற்றொகுத்த ககக தொடைக்குரிய கூஉசஎன்கனேடும் வல்லினத்துக்குரிய தொடை உகஅம் தொகுப்ப சுசசஉ ஆகும். கினைக்கும் முரணுக்கும் உரியவை கூகஉ. மோனை முதலிய ஐந்தற்குமுரியன உஅசுஉ. இரண்டுந் தொகுப்ப சுசசஉ-ஆம். கினை, மோனையும் எதுகையும்பற்றி வரலின் அவற்றையுமடக்கி மோனை எதுகை என்றார். கூட்டம்—அடிக்கூட்டம். இரண்டடிக் கூட்டத்துத் தொடை கொள்ளப்படும்.

2. செல்வி — காலம் (பருவம்) என்ற பொருளிலும் வெள்ளை—சாதிப்பெயராயும் வந்ததன்றி நிறப்பொருளில் வாராமையின் செல் முரண் என்பது பேராசிரியர் கருத்து. இவ்வாறே யாப்பருங்கல விருத்திகாரரும் கொள்வர்.

3. இதிலும் செல்வி, கரு, நிறப்பொருளில் வரலில்லை. ஆதலாற் செல்முரண் ஆயின.

[1] "நீரோ ரன்ன சாயற்
நீயோ ரன்னவென் னுரனவித் தன்றே." (குறுந். கூடு)

என்பது பொருளும் பொருளும் முரணியது.

[2] "தண்ணிய லற்ற நயங்கறற் காளத்து
வெந்நீர்ப் பொருணசை இ முன்னீச் சென்றோர்."

என்பது, சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணியது.

[3] "நிநீர் நஞ்சக் நிருமிடற் றொடுக்கிய
வுவரி யன்ன வுடைப்பெருஞ் செல்வர்."

என்பது, சொல்லும் பொருளும் பொருளொடு முரணியது. இதனுள் சொல்லும் பொருளுஞ் சொல்லொடு முரணியது போலப் பொய்ப் பொருளோடு முரணுதல் வேண்டுமென்று கொள்ளற்க.

[4] "செல்வேற் சேஎய் நிருமணி மறுத்த
கருவிற் கானவன் வரிலவ நிலரே, யதுபோல"

என்புழி, சொல்லும் பொருளுஞ் சொல்லொடும் பொருளொடும் முரணியது. பிறவும் அன்ன.

இவை ஐந்துதொடையுந் தலைவகையடிக்கண் வருங்கால் இன்னவாறு வருமென்பது மேற் கூறியவாற்றானே கொள்ளப்படும். இவை விரித்து நோக்கப் பலவாமாறும் விரித்துறழ்ந்து கண்டுகொள்க. (கூடு)

[இயைபுத்தொடை இதுவெனல்]

சொஅ. இறுவா யொன்ற லியைபின் யாப்பே.

இது, முறையானே இயைபிரண்டும் உணர்த்துகின்றது.

இ—ள்: இரண்டடியும் ஈறொத்தல் இயைபுதொடைக்கிலக்கணம் என்றவாறு.

---

1. நீரும் நீயும் சொல் முரணுது பொருண் முரணியன.

2. இங்கே தண்ணியல் அற்ற காளம் என்பதில், தண்—குளிர்ச்சி என்று பண்புப் பொருள் தரலின் சொல்லும் பொருளும் ஆயிற்று. வெம் என்பது வெப்பத்தையுணர்த்தாது விருப்பமென்று பொருடந்து அதற்கு எதிர்ப்பொருளாகாமையின் சொல்லாயிற்று.

3. நி—நீமை. இது சொல்லும் பொருளும். உவரி—பொருள் அதற்கு எதிராகாமையின்.

4. செல்வேல், கருவில் என்பனவற்றில் செல் கரு என்பன பொருளே விசேடித்து நிறப்பொருளில் வருதலின் சொல்லும் பொருளும் சொல்லொடும் பொருளொடும் முரணியது.

வாளாதே 'இறுவாயொன்றல்' என்றனுயினும் ஈண்டு ஒன்றுவது பொருளியைபின்றி, எழுத்துஞ் சொல்லும் ஒன்றி [1] யடையின் இயைபாமென்பது. எனவே, எழுத்தடியியைபும் சொல்லடியியைபும் எனக் தொடை இரண்டாயின.

"அவரோ வாரார் கரவுந் தன்றே
கொடிதரு முல்லையுங் கடிதரும் பின்றே."

என்பது, எழுத்தடியியைபு.

"பரவை மாக்கடற் றிரைதிரை வரவும்
பண்டைச் செய்தி யின்னினள் வரவும்."

என்பது, சொல்லடியியைபு.

இவையும் அடி மோனை போல [2] எல்லா அடியோடுந் தொடுக்கப்படுமென்பதூஉம் அவற்றது விரியும் எல்லாம்,

"அடிதொறுந் தலையெழுத் தொப்பது மோனை."
(தொ. செ. கூஉ)

என்புழிச் சொல்லியவாற்றானே கொள்ளப்படும். (கூசு)

[அளபெடைத்தொடை இதுவெனல்]

சொக. அளபெழி னவையே யளபெடைத் தொடையே.

இது முறையே, அளபெடைத்தொடை உணர்த்துகல் நுதலிற்று.

இ—ள்: அடிமுதற்கண் எழுத்துக்கள் அளபெழுங்காலவாயின், அவை அளபெடைத்தொடை எனப்படும் என்றவாறு.

அவை என்றது, உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென்றிரண்டென்பது கோடற்கு.

"பாஅ லஞ்செவிப் பகைத்தாண் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கி."

என்பது, உயிரளபெடை.

"கஃறீ றென்னுங் கல்லகற் காளிடைச்
சுஃறீ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை."

என்பது ஒற்றளபெடை.

---

1. அடையின்—வரின்.

2. எல்லா அடியோடும் என்றது, குறளடி முதலிய எல்லா அடியோடும் வஞ்சியடியோடும் கட்டளையடியல்லாத அடியோடும் என்றபடி. சொ-ம் சூத்திர வுரையை நோக்குக.

இவை கட்டளையடியொடு தொடுக்குங்கால் உயிரளபெடை முந்நூற்றுமுப்பத்துமூன்றும். அவை மூன்று பாவினும் வருங்கால் [1] உரியசைச்சீர் நான்கும், உரிமுதற்சீர் எட்டும், [2] நிரையசையுமெனப் பதின்மூன்றும் ஒழித்து, ஒழிந்தவற்றுள் வரும்.

அவை ஆசிரியத்துள் நேர்முதற்சீ ரேழும், நிரைமுதற்சீ ரேழும்; [3]வெண்பாவினுள் நேர்முதற்சீரொன்பதும், நிரைமுதற்சீ ரொன்பதும்; கலிப்பாவினுள்ளும் உரிமுதற்சீ ரெட்டொழித்து, நேர்முதற்சீ ரெட்டும், நிரைமுதற்சீ ரெட்டும் எனப் பதினாறு மாக, நாற்பத்தெட்டுச் சீர்க்கண்ணும் வருமென்பது. அங்ஙனம் வருங்கால், ஆசிரியத்து நூற்றுநாற்பத்தேழும், வெண்பாவினுள்

---

1. உயிரளபெடைக்கு வாராத சீர்கள் :—

உரியசைச்சீர் நான்கு :— வண்டு, மின்னு, வரகு, அரவு.

உரிமுதற் சீரெட்டு :— போதுபூ, மேவுசீர், விறகுதீ, உருமுத்தி, நீடுகொடி, நாணுத்தளை, குளிறுபுலி, விரவுகொடி.

2. நிரையசையுமென்பது ஓரெழுத்துச் சீரும் என்றிருத்தல்வேண்டும், அன்றி நுந்தை என்றும் இருக்கலாம். ஏனைய பாடங்கள் பிழை. நுந்தை என்றிருத்தல்வேண்டுமென்பதைப் பின்வரு முரைச் சூத்திர வெண்பாவை நோக்குக.

3. வெண்பாவினுள் நேர்முதற்சீ ரொன்பதும் நிரைமுதற்சீ ரொன்பதும் வருமாறு.:—

நேர்முதற்சீர் ஒன்பது:

ஞாயிறு, போரேறு	இரண்டு சீர்க்கும் அ அடியாக ககசு அடி.
தேமா, பாதிரி, நன்னுணு, பூமருது, மாசெல்வாய்	ஐந்து சீர்க்கும் எ அடியாக கடு அடி.
மாவருவாய், காருருமு	இரண்டு சீர்க்கும் சு அடியாக கஉ அடி.

நிரைமுதற்சீர் ஒன்பது:

வலியது, கடியாறு	உ சீர்க்கும் எ அடியாக கச அடி.
புளிமா, மழகளிறு, கணவிரி, புலிசெல்வாய்	டு சீர்க்கும் சு அடியாக கo அடி.
புலிவருவாய், நனிமுழவு	உ சீர்க்கும், டு அடியாக கo அடி.

நூற்றுறும், கலிப்பாவினுள் எண்பதுமாகி முந்நூற்று முப்பத்து மூன்றும். அவை ஆசிரியத்துள் இருபத்தொன்றும், வெண்பாவினுட் பதினெண்ணுமாக முப்பத்திரண்டு நிலங்களுந்து பெறப்பட்டன.

[1] "உரியசைச்சீர் நான்கு முரிமுதற்சீ ரெட்டு
மளபெடைக்கு நுந்தையோ டாகா—வொருநாற்பத்
தெண்சீரான் முந்நூற்று முப்பத்து மூன்றென்ப
ரொண்சீர் பெருமுறையா னுய்த்து."

எனவும்,

[2] "நேரேழ் நிரையேழ் முதற்சீர் முதற்பாவிற்
கோரேழான் மூவேழ் நிலமிலவா—னேராதி
யொன்ப திரண்டு நிரையாதி வெண்பாவிற்
கென்றிவை முப்பத் திரண்டு."

எனவும்,

[3] "நூருெடு நாற்பத்தே ழாமகவ னூற்றின்மே
லாறு தொடைவெள்ளக் காருமா—லேறுதுள்ளற்
கெண்பதா மீரேழ் ரொன்பஃ தெண்ணிரண்
டென்றுமாம் பாமூன் றிடத்து."

எனவும் இவற்றை விரித்துக்கொள்க.

[4] ஈரொற்றளபெடை கலிப்பாவினுள் வாராது; என்னை? அது துள்ளலோசை தள்ளி நிற்றலின். அங்ஙனமாதல்,

---

1. உரியசைச்சீர் நான்கு முதலியன முன் விளக்கப்பட்டன. அளபெடைக்கு வருஞ்சீர் சஅ ஆவன :— ஆசிரியத்திற்கு நேர்முதல் ஏழும் நிரைமுதல் ஏழும் வெண்பாவிற்கு நேர்முதல் ஒன்பதும் நிரைமுதல் ஒன்பதும் கலிக்கு நேர்முதல் எட்டும் நிரைமுதல் எட்டும் இந் நாற்பத்தெட்டுச் சீராலும் மூன்றுபாவிற்கும் வரும் உயிரளபெடை முந்நூற்றுமுப்பத்துமூன்று.

21-வது உயிரளபெடை நஙஉ.

2. நேர்முதற்சீ ரேழற்கும் பெருகிய நிலத்துப் பதினெண்கு நிலம் களீயப்படும். நிரைமுதற்சீரேழற்கும் சுருங்கியநிலத்து ஏழு நிலம் களீயப்படும். ஒருசேர இருபத்தொருநிலம் களீயப்படும்.

வெண்பாவிற்கு நேராதி ஒன்பது சீர்க்கும் ஒன்பதும் நிரையாதி இரண்டுசீர்க்கும் இரண்டும் ஆகப் பதினெரு நிலம் களீயப்படும். இரண்டு பாவிற்கும் ஒருசேர முப்பத்திரண்டு நிலம் களீயப்படும்.

3. அகவலுக்கு நூற்றுநாற்பத்தேழு. வெண்பாவிற்கு நூற்றாறு. கலிக்கு எண்பத்துமாக முந்நூற்றுமுப்பத்துமூன்றாகும். பாவென்றற்கும் வருஞ்சீர்கள் முறையே ஈரேழ் (14) உம், ஈரொன்பதும் (18), எண்ணிரண்டு (16) உம் ஆம்.

4. ஈரொற்றளபெடை :— இரண்டொற்றுச் சேர்த்துவரும் ஒற்றளபெடை. இது துள்ளலோசையைப் பிறப்பியாதாகலின்

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி." (தொ. செ. ககo)

அறிக.

இனி, ஆசிரியத்துள் தேமா புளிமாவென்னும் இரண்டும், வெண்பாவினுள் தேமா புளிமா மாசெல்வாய் புளிசெல்வாய் என்னும் நான்குமாகச் சீராறன்கண்ணும் பெற்ற தொடை நாற்பத்தைந்து. இவை ஆசிரியத்திருபத்தொன்றும், வெண்பாவினுளிருபத்துநான்குமெனப்படும். இவை ஆசிரியத்துண் மூன்றும், வெண்பாவினுள் இரண்டுமாக ஐந்து நிலங்களோந்து பெறப்பட்டன. களையுநிலம் அதனிற் சுருங்குவதில்லை.

[1] "தேமா புளிமாவே மாபுளிசெல் வாயென்ரு
தானுற்பத் தைந்தொற் றளபாம்—வேறு
தனித்தொளி யொன்ரு களையுநில மூன்ரு
முதற்பாவின் வெள்ளைக் கிரண்டு."

எனவும்,

"எழுமூன்ரு மாசிரியத் தெண்மூன்றும் வெள்ளைக்
கழியாத வீரொற் றளவு."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க. ஆக அளபெடைத் தொடை இரண்டுங் கூட்டிப் பெற்ற தொடை முந்நூற்றெழுபத்தெட்டு. ஆக முதற்றொடை இருபத்திரண்டனுனும் பெற்ற தொடை ஒன்பதினாயிரத்தெண்ணூற்றிருபஃது.

"ஒன்பதி னாயிரத் தெண்ணூற் றிருபஃதா
மந்தமில் காட்சி [2] யளபெடைத்தே
[3] வந்த விருபத்தி ரண்டு." (கூச)

துள்ளலோசையான் வருங் கலிக்கு வாராது. ஆசிரியத்துத் தேமா புளிமா என்னும் இரண்டுசீரினும் வரும். அவை கஉ அடி உறழ உச அடி ஆம். இவற்றுள் தேமாவுக்கு மேனிலத்தொன்றும், புளிமாவுக்கு கீழ்நில (சுருங்கிய நில)த்திரண்டுமாக * நு நிலங் களைய உக நிலமாம். வெண்பாவுள் தேமா முதலிய நான்கு சீரும் உறழ உசு தொடையாம். இரண்டு நிலங் களைய உச ஆகும். இரண்டு பாவுக்கு மொத்தம் சரு தொடையாம். உஉ-வது ஒற்றளபெடைக்கு சரு தொடையாம். முற்கூறிய உo தொடையும் இவை இரண்டும் சேர்ந்து உஉ தொடைக்கும் கூஅஉo ஆகும்.

1. மாபுளிசெல்வாய் என்பதை மாசெல்வாய், புளிசெல்வாய் எனச் செல்வாய் மாவுக்குங் கூட்டிக்கொள்க. நான்கு + நாற்பத்தைந்து எனப் பிரிக்க. நான்கு—மேற்கூறிய நான்குசீர். முதற்பா—ஆசிரியப்பா.

2. அளபெடை தன்னொடு என்றிருப்பது நலம்.

3. இருபத்திரண்டுஎன்றது அளபெடையோடு உஉதொடை என்றபடி.

[பொழிப்பெதுகைத்தொடை இதுவெனல்]

சகo. ஒருசீ ரிடையிட் டெதுகை யாயிற்
பொழிப்பென மொழிதல் புலவ ராறே.

இது, பொழிப்பெதுகையாமா றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒருசீரிடையிட்டு எதுகையாயிற் பொழிப்பாம் என்றவாறு.

இடையிடினெனவே முதற்சீர் நிற்பதாயிற்று. எதுகை யாயின் எனவே, மூன்ருஞ் சீரோடு தொடுப்பதாயிற்று. [1] இவற்றுள் ஆசிரியங் களைவன களையப்பெற்ற தொடை நூற்றுநாற்பது எனவும், வெண்பா களைவன களையப்பெற்ற தொடை நூற்றுமூன்று எனவுங் கொள்க.

[2] "நிரைமுதற்சீர் பன்னிரண்டுங் கிழ்நிலத்து ளொன்ற
வருகலி முந்நூற்றெட் டாம்."

எனவும்,

[3] "மேவுசீர் வெள்ளைக்கொன் றேற்கிளை முற்றே
லோரிரு நூற்றுமுப்பத் தெட்டாகு மாக
விருநூறு நானூரெ டேம்பத்தைந் தாக
வருமுற்று மொன்றும் வகை."

எனவும் இவை முற்றெதுகைக்கு உரைச்சூத்திரம்.

இன்னும் 'புலவராறே' என்று மிகுத்துச் சொல்லியவதனுனே அமைவன வேறுளவெனத் தழீஇப் புகுந்தவற்றுள் ஈண்டுக் கூறுத அந்தாதித் தொடையும், மற்றை

---

1. இவற்றுள் என்பதன்முன் பொழிப்பின் கணக்கு வரலாறு சொன்ன வரிகள் சிதைந்தனபோலும். 23-வது பொழிப்பு எதுகைத்தொடை. ஆசிரியம் கசo. வெண்பா கoந. கலிக்கு நoஅ என்ற கணக்குப் பிழைபோலத் தெரிகிறது. ஆசிரிய வெண்பாக்களின் கணக்கும் அதனுேடு சேர்ந்துள்ளதோ அன்ரே என்பது ஆராயத்தக்கது. கிளைப் பொழிப்பின் கணக்கு வேறு பாடுமில்லை.

2. இப்பாவில் முன்வரிகள் இரண்டுமில்லை. முன்வரவேண்டிய ஆசிரிய முதலியவற்றின் கணக்குப் பாக்களு மில்லை.

3. முற்றுக்கும் கிளை முற்றுக்கும் முன் கூறவேண்டிய கணக்கு வரிகளில்லை. கணக்குக்குரிய உரைச் சூத்திரங்களுமில்லை. இதிற் சொல்லிய கணக்குப் பகுப்பும் விளங்கவில்லை. சரியோ என்பதும் ஆராயத்தக்கது.

23-வது பொழிப்பு 25-வது முற்று
24-வது கிளைப் பொழிப்பு 26-வது கிளைமுற்று

விகற்பத் தொடையாகிய [1] ஒருஉத் தொடையுங் கூறிக் கொள்க. (கூஅ)

[ஒருஉவெதுகைத்தொடை இதுவெனல்]

சகக. இருசீ ரிடையிடி னெருஉவெ னொழிப.

இது, நிறுத்தமுறையானே ஒருஉத்தொடை உணர்த்து கின்றது.

இ—ள்: நாற்சீருள்ளும் இடையிருசீரொழித் தொழிந்த முதற்சீரும் கான்காஞ் சீரும் இரண்டாமெழுத்தொன்றிவரத் தொடுப்பின் அதனை ஒருஉவென்ப என்றவாறு.

அதிகாரத்தான் ஒருஉவெதுகை யெனப்பட்டது. அதுவும் பொழிப்புப்போல வந்த எழுத்தொத்த வருதலும் ஒலியெழுத்து வந்து ஒலியொருஉ எனப்பட்டு இரண்டாதலு முடைத்து.

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை." (ஐங்குறு)

என்பது, ஒருஉவெதுகைத்தொடை.

[2] "சூலஞ் சுடுவலி யெடுப்ப வாருற்று." (அகம். க)

என்பது, ஒலியொருஉவெதுகை.

இவை இரண்டு தொடையுங் கட்டளையடிக்கண் வருங்கால், ஒருஉவெதுகை ஐஞ்ஞூற்றிருபத்தெட்டாம்.

அவை ஆசிரியத்திற்கு உரியசீர் இருபத்தேழனுள்ளும் [3] நேர்முதற்சீர் பதினொன்றும் ஓரோவொன்று உறழ்ந்த அடி.

---

1. ஒருஉத்தொடை வருஞ் சூத்திரத்தாற் கூறலின் விட்டிசைத்தொடையும் என்றிருக்கவேண்டும். இவற்றின் கணக்கு வருஞ் சூத்திரத்துள் கூறுகின்றார்.

2. ரகரத்திற்கு ருகரம் ஒலி.

3. 27-வது ஒருஉவெதுகை } ஆசிரியத்து நேர்முதற்சீர்
28-வது ஒலியொருஉ } கச-ம் கஉ-அடி உறழ கசு-அம்
நிரைமுதற்சீர் கஙு-ம் கஉ
அடி உறழ கடுசு-ம் ஒருசேர
கஉச-ஆம்.

இவற்றுள் வராது கலியுநிலம் சுருங்கிய நிலத்து நேர் பதின் மூன்றற்கும் ங நிலமாக சஉ. பெருகிய நிலத்து நிரை பதின் மூன்றற்கும் உ நிலமாக உசு. ஆகக் கலியுநிலம் சுஅ-ங் கலிய ஆசிரியம் பெற்ற தொடை உருசு. இவற்றுள்ளும் மின்னு முதலிய மூன்று சீர்க்கு மூன்றுநிலம் முதலிலத்து நீக்க உருஙஆம்.

பன்னிரண்டனுள், சுருங்கிய நிலத்தொன்றும் ஒன்பதிகான்பதாக நாற்சீரடிக்கண்ணும், நிரைமுதற்சீர் பதின்மூன்றும் பெருகிய நிலத்து ஓரோவொன்று பத்தாக நாற்றுமுப்பஃதாகவும் அகவற் றொடை இருநூற்றைம்பத்தாறு; அவற்றுண் மின்னு, மேவுசீர், காணுத்தேள் என்னும் மூன்று சீரானும் மூன்று நிலம் முதனிலத்தகற்றிப் பெற்ற தொடை இருநூற்றைம்பத்துமூன்று. வெண்டொடை இருபத்தேழுசீருறழ்ந்த அடி. அனைத்தினும் பெற்ற தொடைநிலை நூற்றெண்பத்தொன்று; இவற்றுண் மின்னு, மேவுசீர் என்னும் இரண்டனுள்ளும் முதனிலத்து இரண்டு நிலங் கூடிப் பெற்ற தொடை நூற்றழுபத்தொன்பதாம்.

இனி, கலிப்பாவினுள் நேர்முதற்சீர் பன்னிரண்டாகப் பெருகிய நிலத்து ஓரோவொன்று கூடியபெற்ற தொடை நாற்பத் தெட்டும், நிரைமுதற் சீர் பன்னிரண்டும், சுருங்கிய நிலத்து ஓரோவொன்று கூடியபெற்ற தொடை நாற்பத்தெட்டுமாகக் கலிப்பாவிற்குரிய தொடை தொண்ணூற்றாறும். ஆக மூன்று பாவினும் பெற்ற ஒருஉத்தொடை ஐஞ்ஞூற்றிருபத்தெட்டாம்.

ஒலியொருஉவும் இவ்வாறே ஐஞ்ஞூற்றிருபத்தெட்டாகவும், அவற்றுமேல் மின்னு, மேவுசீர் என்னும் இரண்டும் வெண்பாவினுள் உறழ்ந்த முதனிலமிரண்டுங் கூடியாது கொள்ளக் ஒலியொருஉத்தொடை ஐஞ்ஞூற்றுமுப்பதாம். ஆக வொருஉத் தொடை இரண்டனுள்ளும் பெற்ற தொடை ஆயிரத்தைம்பத் தெட்டாம்.

[1] "நேராதி யாதி நிலத்தொன்பா தொள்பதா
மீரைந்தா மாசிரியத் தேற்று—நிரையாதி
யாக விருநூற்றைம் பத்துமூன் றுமாதி
நேர்புகா மூன்றனீ யீந்து."

எனவும்,

வெண்பாவுக்கு இருபத்தேழு சீரானும் பெற்ற அடி கஅக. இவற்று இரண்டு சீர்க்கு முதனிலத்திரண்டகற்றிப் பெற்ற தொடை கஎசு ஆம். கலி உசு சீர்க்கும் கஉ அடியாம். கலியு நிலம் உச கலிய கூசு ஆகும். ஒருசேர ஒருஉ ஐஞ்ஞூற்றிருபத் தெட்டாம்.

1. ஆசிரியத்து நேராதிச்சீர் கச-ற்கும் முதனிலத்து மூன்று நிலம் நீக்கி ஒன்பதொன்பதாம். நிரையாதி ஈற்றிலத்து இவ்விரண்டு கூடிப் பத்தாம். ஆக உருசு ஆம். மூன்று சீர்க்கு முதனிலத்து மூன்றுநிலம் நீக்க உருஙஆம்.

[1] "மேவுசீர் மின்னுக்குண் முன்னிலைத் தொரோவொன்
ருகா வொருஉவெள்ளைக் காதலா—ஞவன
நூற்றெழுபத் தொன்பதா நோக்கு."

எனவும்,

[2] "முன்பினே ராதி நிரையாதி துள்ளற்கோ
ரொன்றெழியத் தொண்ணூற்று ருகுங் கிளைவெள்ளைக்
கொன்று யிரண்டா னெருஉவிரண்டு மாயிரத்
தைம்பான்மே லெட்டா மவை."

எனவும் இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

மேலைப் பொழிப்பிரண்டும் முற்றிரண்டும் இவையிரண்டு மென விகற்பத்தெதாடை ஆறனுலும் பெற்ற தொடை இரண்டா யிரத்தைஞ்ஞூற் [3] றிருபத்தொன்று. இவை ஆறு தொடையும் ஓரடிக்கண்ணே வருதலின் தலைவழுப்பட்டனவென்று கலையும் நிலமிலவென்பது.

இன்னும் புலவராறென்றதனுல், தொடையந்தாதியும் விட் டிசையும் ஒரோவொன்று இரண்டாகி அசையந்தாதியுஞ் சீரந் தாதியும் விட்டிசைத்தொடையுங் குறிப்பு விட்டிசையுமென நான்காம்.

ஓரடியுள் இறுதிச் சீருள் ஈற்றசையும் மற்றையடியின் முதற்சீரின் முதலசையும் ஒன்றத் தொடுப்பது அசையந்தாதி. அவை தொடுக்குங்காற் கட்டளையடிக்கண் [4] உரியசைச் சீரினை

---

1. வெண்பா உள சீர்க்கு வருந் தொடை கஅகல் இரண்டு சீர்க்கும் முதனிலத்து இரண்டுநிலம் வாராமையின் அவ்விரண் டுங் கலைய களகூ ஆம்.

2. முன்னின்ற நேராதிச் சீர்க்கு கஉ×டு=சுo. பின்னின்ற நிரையாதிச் சீர்க்கு கஉ×டு=சுo ஆம். ஆக கஉo அடியுள் ஒவ் வொரு நிலமாக உள நிலம் கழித்து சுசு ஆகும். கிளையொரூஉ வுக்கு வெண்பாவுள் இருசீர்க்கு இருநிலங் கலையாது கொள்ள இரண்டு ஒருஉவுக்குந் தொடை கoடுஅ ஆகும்.

'முன்பி னிரையாதி நேராதி' என்ற பாடத்திற்கு எதிர் நிர னிறையாகப் பொருள் கொள்ளவேண்டும்.

3. உடுஉக என்பது உடுகஅ என்று இருத்தல்வேண்டும். ஏனெனில்? பின் மொத்தம் கஉஎoஅ-க்கு மூன்று கூடுகிறபடி யால். பொழிப்புச் சூத்திரத்தில் இப்பிழை வந்திருத்தல்வேண்டும்.

4. உரியசைச்சீர்—நேர்பு நிரைபு என்னும் உரியசைச்சீர். உகo-வது அசையந்தாதி.

அசையெனக் கொள்ளற்க; இவை பிறசீர்ப்பாற்படுத்துத் தலை கோடலின். அடியிறுதிக்கட் கடியாறு மழகளிறென வந்தவழி யாறு களிறு என்னும் இரண்டு உரியசையும் நிரையசையாக இயற்றப்பட்டன. ஆயினும் இயற்கை நிரையசையோடு தொடுக் கப்படா; இரண்டசையும் ஒருசொல்லாயினன்றி அந்தாதி யாகாமையினென்பது.

இனி, இறுதிச்சீர் முதற்சீரோடு சேரிற் சீரந்தாதியாம். உதாரணம்:—

"குன்றகச் சாரற் குதித்தன கோண்மா
மாவென மதர்த்தன கொடிச்சி வான்கண்."

என்பது அசையந்தாதி.

"தழைபுஞ் சாரற் பூத்த முல்லை
முல்லை சான்ற கற்பி னல்லோள்."

என்பது சீரந்தாதி.

இது கட்டளையடிக்கண் வருங்கால் அசையந்தாதி முந்நூற் றிருபத்தைந்தாம்.

அவை ஆசிரியத்துள் [1] இரண்டு நேர்பசைச் சீர்க்கும் ஒரெழுத்துத் தேமாவிற்கும் எலாமையின் ஒழிந்த நேர்முதற் சீர் பதினென்றும் உறழ்ந்த அடி நூற்றுமுப்பத்திரண்டனுள் ஒருசீர்க்கு முதனிலமிரண்டும் இறுதிநில மொன்றுமென மூம் மூன்றுக முப்பத்துமூன்றகற்றி ஒரோ சீர்க்கு ஒன்பதொன்ப தாகப் பெற்ற தொடை தொண்ணூற்றிருன்பது. இனி, நிரை முதற்சீருள் நிரைபசைச் சீரிரண்டும் ஒழித்து ஒழிந்த பதி னென்றும் உறழ்ந்த அடி நூற்றுமுப்பத்திரண்டனுள் முதனிலத் தொன்றுவன இவ்விரண்டாக இருபத்திரண்டு நிலங் கலைய ஒவ்வொன்று பத்தாகப் பெற்ற தொடை நூற்றிருபதாக ஆசிரியத்துள் அசையந்தாதி இருநூற்றிருன்பதாயின.

---

1. நேர்பசை உ. வண்டு, மின்னு. ஒரெழுத்துத் தேமா— நுங்தை. இவை மூன்றும் வாரா. நேர்முதற்சீர் கக. கக சீரை யும் கஉ அடி உறழ கஙஉ தொடை. இச்சீருள் வாராத நிலம் ஙஙு கலைய கூகூ தொடையாம். நிரையசையுள் கடியாறு மழ களிறு என்னும் நேர்பசை நிரைபசை யீறு இரண்டும் வாரா. அவை நீக்கி ஒழிந்த கக சீர்க்கும் கஉ அடி உறழ்ந்த கஙஉ தொடையில் வாராத நிலம் உஉ கலைய ககo ஆகும். இரண்டுஞ் சேர்ந்து ஆசிரியம் உoகூ ஆகும்.

[1] வெண்பாவினுள் அசையந்தாதி வருங்கால் நேர்பசைச் சீரிரண்டுந், தேமாவிரண்டுமென நான்கனுள் தத்தம் முதனிலந் தொடங்கி ஓரோவொன்று அவ்வாறாக நாலாறிருபத்துநான்காம். இனி, நிரைமுதற்சீருள் நிரைபசைச்சீரிரண்டும் புளிமாவுமென மூன்றெழுத்து ஒழிந்த பத்துச் சீரானும் வருங்கால் அவை உறழ்ந்த அடி பன்னிரண்டனுண் முதனிலம் மூன்றும் பெருகிய நிலத்திரண்டுமாக வைந் தொழித்து ஓரோவொன்று எவ்வேழாக எழுபதாம். ஆக அகவற்றொடை தொண்ணூற்றுநான்காம்.

இனி, வெண்பாவினுள் வருங்கால் நேர்பசைச்சீரிரண்டுந் தேமாவிரண்டும் நிரைமுதல் வெண்சீரிரண்டும் நிரைமுதல் நிரையீறுகலிற் [2] கணவிரி எட்டுமாகச் சீர் பதினொன்றும் ஒழித்து ஒழிந்த சீர் பதின்மூன்றனுளும் பெற்ற அடி தொண்ணூறும்; அவற்றுள், வரகும் அரவும் புளிமாவும் என்னும் மூன்றும் பெற்ற அடி [3] பத்தொன்பதாகலின், அவற்றுள் வரகிற்குப் பெருகியநிலத்து மூன்றும், அரவும் புளிமாவுஞ் சுருங்கிய நிலத்தும் பெருகியநிலத்தும் ஓரோவொன்றுக நான்குமாக ஏழுமொழித்து ஓரோவொன்று நான்காகப் பெற்ற அடி பன்னிரண்டாம். காருருமு, மாவருவாய் என்னும் இரண்டனுளும் பெற்ற அடி பன்னிரண்டனுள் முதனிலத்து மும்மூன்றுக ஆறெழுத்

---

1. 30-வது சீரந்தாதி

நேர்பசைச்சீரிரண்டு—வண்டு, மின்னு. தேமா இரண்டு—ஓரெழுத்துத் தேமாவாகிய நுந்தையும் ஈரெழுத்துத் தேமாவும். இவை நான்கு சீரும் வரும்: வருங்கால் நான்கும் கஉ அடி உறழ சஅ நிலமாம். கீழ்நிலத்து (பெருகியநிலம்) அவ்வாறாக உச கழிக்க உச நிலம் வரும். நிரைபிரண்டு—வரகு, அரவு என்பன. முதனிலம்—சுருங்கிய நிலம்.

2. கணவிரி எட்டாவன :— கடியாறு, பெருநாணு, மழகளிறு, நரையுருமு, குளிறுபுலி, விரவுகொடி, விறகுதீ, உருமுத்தீ என்பன.

3. கசு-ல் எ கழிக்க கஉ ஆதல் காண்க. ஓரோவொன்று நான்காக மூன்றற்கும் முந்நான்கு பன்னிரண்டாம்.

எனவும் இவ்வுரைச் சூத்திரங்களான் அசையந்தாதி முந்நூற்றிருபத்தைந்தும் ஆயினவாறு அறிந்துகொள்க.

இனி, சீரந்தாதி நூற்றறுபத்துநான்கு :— அவை ஆசிரியத்து வருங்கால் [1] நேர்பசைச்சீரிரண்டுந் தேமாவிரண்டுமென நான்கனுள் தத்தம் முதனிலந் தொடங்கி ஓரோவொன்று அவ்வாறாக நாலாறிருபத்துநான்காம். இனி, நிரைமுதற்சீருள் நிரைபசைச்சீரிரண்டும் புளிமாவுமென மூன்றெழுத்து ஒழிந்த பத்துச் சீரானும் வருங்கால் அவை உறழ்ந்த அடி பன்னிரண்டனுண் முதனிலம் மூன்றும் பெருகிய நிலத்திரண்டுமாக வைந் தொழித்து ஓரோவொன்று எவ்வேழாக எழுபதாம். ஆக அகவற்றொடை தொண்ணூற்றுநான்காம்.

இனி, வெண்பாவினுள் வருங்கால் நேர்பசைச்சீரிரண்டுந் தேமாவிரண்டும் நிரைமுதல் வெண்சீரிரண்டும் நிரைமுதல் நிரையீறுகலிற் [2] கணவிரி எட்டுமாகச் சீர் பதினொன்றும் ஒழித்து ஒழிந்த சீர் பதின்மூன்றனுளும் பெற்ற அடி தொண்ணூறும்; அவற்றுள், வரகும் அரவும் புளிமாவும் என்னும் மூன்றும் பெற்ற அடி [3] பத்தொன்பதாகலின், அவற்றுள் வரகிற்குப் பெருகியநிலத்து மூன்றும், அரவும் புளிமாவுஞ் சுருங்கிய நிலத்தும் பெருகியநிலத்தும் ஓரோவொன்றுக நான்குமாக ஏழுமொழித்து ஓரோவொன்று நான்காகப் பெற்ற அடி பன்னிரண்டாம். காருருமு, மாவருவாய் என்னும் இரண்டனுளும் பெற்ற அடி பன்னிரண்டனுள் முதனிலத்து மும்மூன்றுக ஆறெழுத்

---

1. வெண்பா அசையந்தாதி நேர்முதற்சீர் கக உறழ்ந்த அடி எஅ ஆம். வாராத மேனிலம் உஉ கனிய வருவன நுசு தொடையாம். கலிப்பா நேர்முதல் கஉ-க்கும் நு அடி உறழ சூ0 ஆம். அசையந்தாதி மூன்று பாவிற்கும் உ0கூம் நுசும் சூ0ம் ஆக நஉநு ஆம்.

2. ஆசிரியம் நேர்பசைச்சீர் உ—வண்டு, மின்னு. இரண்டு—இரண்டுநிலம். ஒன்று—ஒருநிலம். அகற்றி—கனிந்து. முன்—மேனிலம். பின்—கீழ்நிலம். நிரைமுதல் பத்தாக—நிரைமுதற் சீரில் பப்பத்து நிலம் ஒவ்வொரு சீர்க்குங் கொள்ளப்படும். நீங்கியவாறுக—நீங்கியதன்மைத்தாக.

3. நேர்முதற்சீரில் இயற்சீர் ஒன்பது. வெண்சீர் இரண்டாகப் பதினொரு சீர் வரும். இவ்விரண்டுநிலங் கனியப்படும். நேர்பசையிரண்டும் நுந்தையும் நிரைமுதலும் வாரா. அவை நீக்கப்படும். நீ—நேர் என்றிருத்தல்வேண்டும்.

4. அசையந்தாதி பா மூன்றற்கும் நஉநு-ம்.

துப் பெற்ற தொடை இருமூன்றும். [1] பாதிரியேழும் மாசெல் வாயுமென எட்டனுளும் பெற்ற அடி ஐம்பத்தொன்பதாகலின் அவற்றுள் ஈரொழுத்துப் பாதிரி மூன்றுஞ் சுருங்கிய நிலத்து ஓரோவொன்றும், பெருகியநிலத்து இவ்விரண்டுமாக மும்மூன் றென்பதும், ஒழிந்த மூவெழுத்துப் பாதிரி நான்கும், மாசெல் வாயுமென ஐந்துஞ் சுருங்கிய நிலத்து இவ்விரண்டாகப் பத்து மெனப் பத்தொன்பதுங் கூடிக்கெட்ட தொடை நாற்பதா மெனக் கொள்க. ஆகக் கூடியும்நிலம் முப்பத்திரண்டு ஒழிந்து ஒழிந்ததொடை வெண்பாவிற்கு ஐம்பத்தெட்டாயின.

இனி, கலிப்பாவினுள் வெண்சீர் நான்கனுளும் பெற்ற அடி இருபஃதாகலின், அவற்றுண் மாசெல்வாய் உறழ்ந்த அடி ஐந் தினும் ஏறிய நிலத்திரண்டும், புலிவருவாய் உறழ்ந்த அடி ஐந் தினுஞ் சுருங்கிய நிலத்திரண்டும் ஒழிந்த மாவருவாய் புலி செல்வாய்கள் இரண்டும் முன்னும் பின்னும் ஓரோவொன்றாக நான்காகும்; ஆக எட்டுங் கூடிய ஓரோவொன்று மும்மூன்று கப் பெற்ற தொடை பன்னிரண்டாம். ஆக மூன்று பாவிற் குஞ் [2] சீரந்தாதி தூற்றறுபத்துநான்காம்.

உ "வண்டொன்று தேமா விரண்டு வலியதுபன்
னெஞ்செடுச்சீ ரந்தாதிக் கிரோழாம் நேராதி
பத்தும் புளிமா வரதிரண்டும் வெள்ளொக்கா
மொத்த கலிக்குரிச்சீர் நான்கு."

எனவும்,

4 "நிரைநிரைபத் தெல்வேழா மூன்று மிரண்டு
முதனிலை வீக்கிமூன் றுக—வகவலி

---

1. பாதிரி வழாவன :— ஞாயிறு, போதுபூ, மேவுசீர், போரேறு, நன்னுனு, பூமருது, நீடுகொடி என்பன. இவற்றுள் ஈரெழுத்துப் பாதிரி ஞாயிறு போதுபூ போரேறு. எனைய மூன் றெழுத்து.

2. சீரந்தாதி மூன்று பாவிற்கும் முறையே கூ-அ-ம் று-அம்-ம் கூ-ம் ஆக கசூ ஆகும்.

3. வண்டிரண்டு தேமாவிரண்டு நிரையதொன்பான் என் றிருத்தல்வேண்டும். வண்டிரண்டு — வண்டு, றின்னு. தேமா விரண்டு—நுந்தை, தேமா. நிரை ஒன்பான் ஒன்று—நிரை பத்து அகவற்குப் பதினென்கு சீராம். வரதிரண்டு — வரகு, அரவு. வெண்பாவிற்கு கஉ சீர் வரும். கலிக்கு அ சீர் வரும்.

4. அகவலில் நிரைநிரையாகவுள்ள கo சீரும் உறழுங்கால் மேனிலத்து மூன்றும் கீழ்நிலத்திரண்டுமாக ஐந்துநில நீக்கிக் கொள்ளப்படும். மூன்றுசீர் கொள்ளப்படா. நேராதி நான்கும் முதனிலந் தொடங்கி அவ்வாறு நிலங் கொள்ளப்படும்.

னேராதி நான்கு மெழுவாய் நிலந்தொடங்கி
யாருரு மந்தாதிச் சீர்."

எனவும்,

1 "ஆக வகவற்சீ ரந்தாதி (தொண்ணூற்று)
நால்வகை யாக நவிற்று."

எனவும்,

2 "வரகு பெருநிலத்து மூன்றகற்றி மற்றை
யரவு புளிமா வருதிரண்டு மாற்றி
முதலிலத்துக் காருருமு மாவருவாய் மும்மூன்
றெனவுரை யந்தாதிக் கின்று."

எனவும்,

3 "சுரெழுத்துப் பாதிரிமூன் றீருரு மேனிரண்டாய்
மூவெழுத்துப் பாதிரிக்கு முன்னிரண்டாய் மாசெல்வா
யொன்றற்கு மல்வா ருழுதிதுரைப்ப நாற்பஃதாம்
வெண்டொடைச்சீ ரந்தாதி வேறு."

எனவும்,

4 "விரிந்தசீ ரந்தாதி வெண்டொடை யைம்ப
தெனப்படு மெட்டுமே லிட்டு."

எனவும்,

5 "மாசெல்வா யீற்றும் புலிவருவாய் மற்றிடந்து
மேனி யிரண்டு மிரண்டிடத்து மாக
விரண்டிரண்டு நீக்கிச்சீ ரந்தாதி துள்ளம்
கமைந்த தொடைநான்மூன் றும்."

எனவும்,

---

1. 'தொண்ணூற்று' என்னுஞ் சீர் நவிற்று.

2. வெண்பாவில் வரகுக்கு மூன்றுநிலம் பெருகிய நிலத்து நீக்கி அரவுக்கும் புளிமாவுக்கும் மேனிலத்தும் கீழ்நிலத்தும் இவ்விரண்டு (உ) நிலம் நீக்கி, காருருமு, மாவருவாய் இரண் டற்கும் மேனிலத்து மும்மூன்று கூ நிலம் நீக்கப்படும்.

3. பாதிரி ஏழுள் ஈரெழுத்துப் பாதிரி மூன்றும் மேனிலத் தும் கீழ்நிலத்தும் இவ்விரண்டு நிலங் கழிக்கப்படும். மூவெழுத் துப் பாதிரிக்கு மேனிலத்திரண்டும் மாசெல்வாய்க்கும் அவ் வாறே மேனிலத்திரண்டும் நீக்கி வெண்பாவிற் சீரந்தாதி நாற் பது ஆகும்.

4. வரகு அரவு புளிமா மூன்றனும் பெற்ற அடி கஉ-ம் காருருமு மாவருவாய் என்னு மிரண்டானும் பெற்ற அடி 6-ம் பாதிரி முதலிய எட்டானும் பெற்ற அடி ரo-ம் சேர்ந்து றுஅ ஆயின.

5. ஈறு — கீழ்நிலம். மற்றையிடம் — மேலிடம். ஏனை யிரண்டு—மாவருவாய், புலிசெல்வாய். இரண்டிடம் — மேலுங் கீழும். இவ்விரண்டாக நான்கற்கும் அ நீக்கிக் கலிக்குச் சீரந் தாதி கஉ ஆம்

[1] "பாத்தோறும் வந்தசீ ரந்தாகி பாற்படுப்ப
நாற்சே டறுபத்து நான்கு."

எனவும் இவ்வாற்றானே, சீரந்தாதியாமா றுரைத்துக்கொள்க.

[2] "அந்தாதி யோரிரண்டு மாகத் தொடைநானூற்
றென்பான்மே லென்ப வெனல்."

இனி, விட்டிசைத்தொடை கூறுங்கால் எழுத்தினுஞ் [3]எழுத்தல் ஓசையானும் விட்டிசைத்தல் இருவகைப்படும்.

"அ உ வறியா வறிவி னிடைமகனே
நொஅல்ல வின்னுட்டை நீ." (இடைக்காடனார்)

என்பது, எழுத்தினுணியது.

[4] விட்டிசையின் இறுதியடி வல்லொற்றடுப்பின் விட்டிசை வல்லொற்றெதுகையென்பாரும் உளர். ஆண்டு வல்லொற்றெதுகை யாமாகாமையின் அது வேண்டுவதன்று; வேண்டினும் விட்டிசை யெனவே அடங்குமென்பது.

[5] "தவன்று தாமிசைப்ப தாயே தண்ணுமைகேட்
டெனன் றெழுந்தார் பலர்."

என்பது குறிப்பு விட்டிசை.

இவை கட்டளையடிக்கண் வருங்கால் ஒரோவொன்று தாற் றறுபத்துநான்காகி முக்நூற்றிருபந்தெட்டாம்.

அவை வருங்கால் [6] நேர்பசைச்சீரிரண்டும் ஒருமுத்துத் தேமாவும் போதுபூவிரண்டும் ஒழித்தொழிந்த தேமாவும் பாதிரி யிரண்டும் போரேறு இரண்டும் [7] [ஒன்றிக் கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும், இரண்டு விட்டிசையும் தொகுப்பப்]

---

1. மூன்று பாவிற்கும் ககூச தொடையாம்.

2. அந்தாதித் தொடை அசையந்தாதியும் சீரந்தாதியும் என்னுமிரண்டுஞ் சேர்ந்து சஅகூ-ஆம்.

3. எழுத்தல் ஓசையான் வருவது குறிப்பு விட்டிசையாம்.

4. 31-வது எழுத்து விட்டிசை.
32-வது குறிப்பு விட்டிசை.

5. த, எ என்பன ஓசைக் குறிப்புக் காட்டி நின்றன.

6. நேர்பு அசை இரண்டு—வண்டு, பின்னு. போதுபூ இரண்டு—போதுபூ, மேஎசீர் என்பன. இவை ஒழித்து ஒழிந்த தேமா—ஈரெழுத்துத் தேமா. பாதிரி இரண்டு—நீடுகொடி, நாணுத்தளை. போரேறிரண்டு—போரேறு, நன்னுனு. இதில் போ ரேறு விடப்பட்டது. போரேறு வெண்பாவில் கூறப்படுகின்றது.

7. பகரக்கோட்டிலடைத்தன பின்வருதலின் முன் மாறி எழுதப்பட்டது. அது வேண்டியதில்லை.

[1] பூமருதிரண்டும் நேர்முதல் வெண்சீரிரண்டுமாக ஒன்பது சீரும் பற்றி விட்டிசைக்குமெனவுங் கொள்க. அவற்றை அகவற்றொடை ஓரோவொன்றெழுபதாகவும், வெண்டொடை ஓரோவொன்றைம் பத்து நான்காகவும், கலிப்பாவிற்குத் தொடை நாற்பஃதாகவும், இரண்டு விட்டிசையுந் தொகுப்பத் தொடை முக்நாற்றிருபத் தெட்டாயினவாறு கண்டுகொள்க.

இவை ஆசிரியத்துப் பதினைந்தும் வெண்பாவினு ளொன் பதுமாக இருபத்துமூன்று நிலங் கிளந்து பெற்றன.

[1] "நேர்பிரண்டு நேர்பு முதலிய சீர்நான்கு
மோரெழுத்துந் தேமாவும் விட்டிசைக் கொள்ளுவா
மேனை நிரைமுதற் சீர்களு மின்னாறே
யாகா தனவெள் ளறி."

எனவும்,

[2] "அகவற்கேழ் நேராதி யொன்பதுஞ்வெண் பாவிற்
குளவென் றுரைக்கப் படும்."

எனவும்,

[4] "வெள்ளியு ளொன்ப தகவலி லீரேழாய்க்
கொள்ள விருபத்து மூன்றுருந்—துள்ளலுட்
போரேறு பாதிரி பூமருது மாசெல்வாய்
மாவருவா யொட்டும் வரும்."

எனவும்,

[5] "அகவற் கெழுபதா மைம்பத்து நான்கா
நிகரற்ற வெள்ளைக்குந் துள்ளல்—புகரற்ற
நாற்பதாய் விட்டிசை நூற்றறு பத்துநான்
கேற்பதா மோரொள் ளெனல்."

எனவும்,

---

1. பூமருதிரண்டு—பூமருது, காருருமு.

2. நேர்பு இரண்டு—வண்டு, பின்னு. நேர்பை முதலாகக் கொண்டன: போதுபூ, மேஎசீர், நீடுகொடி, நாணுத்தளை என் பன. ஒரெழுத்துத் தேமா—நுந்தை. நிரைமுதற் சீர்களும் வாரா.

3. நேர் முதற் பதினில் அகவற்கு எ சீரும் வெண்பாவிற்கு கூ சீரும் வரும்.

4. வெண்பாவிற்கு கூ-ம் அகவற்கு கச-ம் கலியிலுமாம். கலிக்கு வருஞ்சீர் எட்டாம். போரேறு இரண்டு—போரேறு, நன்னுனு. பாதிரி இரண்டு—பாதிரி, ஞாயிறு. பூமருது இரண்டு—பூமருது, காருருமு.

5. அகவற்கு எ0 தொடை
வெண்பாவிற்கு நுச
கலிக்கு சஅ0
மொத்தம் ககூச.

[1] "இருவிட் டிசைமுந்நூற் றீரொருபத் தெட்டா
வருவித்துக் கோடல் வழக்கு."

எனவும் இவற்றைப் பதிநெகிழ்த்துரைக்க.

[2] "விகற்பமா றந்தாதி விட்டிசைநான் கேற்றி
யிசைத்தவீ ரைந்து தொடையாற் றொடைத்தொகை
மூவா யிரத்தொடு முந்நூற்று முப்பத்தா
ருமா றறிந்து கொளல்."

[3] "இருபத் திரண்டு பிலைபந்து மாக
வருவித்த முப்பத் திரண்டா—னெருபத்தின்
மூவா யிரந்தொரு நூற்றைம்பத் தாறைந்நூற்
ரோடோரைம் பத்திரண் டேற்று."

எனவிவை உரைச்சூத்திரம். ஆகத் தொடை முப்பத்திரண்டினற் பெற்றதொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டு. (கூகூ)

[செந்தொடை இதுவெனல்]

**சகஉ. சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப.**

இது, மேற் செந்தொடையாமெனக் கூறிய துணர்த்து கின்றது; எய்தாததெய்துவித்ததூஉமாம்.

இ—ள்: மேற் கூறப்பட்ட தொடை எல்லாவற்றோடும் ஒவ்வாதுவரின் அதனை இயற்கைச் சொல்லாற் செய்யுள் செய்

1. இரண்டு விட்டிசைக்கும் நஉஅ ஆம்.

2. விகற்பத்தொடை ஆருவன—பொழிப்பு உ-ம் முற்று உ-ம் ஒருஉ உ-ம் ஆம். அந்தாதி உ-ம் விட்டிசைத்தொடை உ-ம் ஆகப் பத்துத் தொடையாலும் வந்த தொடைத்தொகை நஙஙசு. இத்தொகை நஙஙசு என முன்தொகைகளோக் கூட்ட வருகின்றது. ஆகையால் ங கூடற்கு முன் கூறிய தனித் தொகைகளுட் பிழையிருத்தல்வேண்டும்.

3. முன்வந்த இருபத்திரண்டும் இவை பத்துமாக தொடை நஉ ஆம்.

நஉ	தொடைக்கும்	கஙகருசு	
	செந்தொடை	ருசகூ	
	பிற	ங	
	மொத்தம்	கஙஎ0அ	

சக0-ம் சூத்திர உரையிற் சொன்ன கணக்கிற் பிழையிருக் கிறபடியால் இத்தொகையினும் மூன்று கூடி வருகிறது. அதனைக் கழிக்க கஙஎ0அ ஆம். சக0-ம் சூத்திர உரை முற்ற இல்லாமை யால் அப்பிழை காணமுடியவில்லை.

யும் புலவரது செந்தொடையென்று சொல்லுப ஆசிரியர் என்ற வாறு.

எனவே, விகாரப்படச் செய்யுள் செய்புஞ் செந்தொடை இன்னதென்றுணரும்; அது,

"இருங்கழி மலர்ந்த வள்ளிதழ் நீலம்
புலாஅன் மறுகிற் சிறுகுடிப் பாக்கத்
தினமீன் வேட்டுவர் ஞாழலொடு மிலையு
மெல்லம் புலம்ப நெகிழ்ந்தன தோளே." (அகம். உஎ0)

எனவும்,

"சேயிரு முகந்த நுரைபிதிர்ப் படுதிரை
பரதரைப் புன்னை வாங்குசினை தோயும்." (அகம். உஎ0)

எனவும் வரும்.

"பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே."
(யா. வி. ப. களகூ)

என்பதும் அது.

'இயலின்' என்றதனால், இரண்டடியால் தொடைபெற்று நின்று இரண்டடி யெதுகையாகியவை தம்முள் தொடுக்குங் காற் செவ்வன் தொடுப்பினும் அதனைச் செந்தொடையென்னாது இரண்டடி யெதுகையென்றும், இனி ஓரடி இடையிட்டுத் தொடுத்தவழியுந் தொடர்ந்த அடி இரண்டுஞ் செந்தொடையா மாயினும் மூன்றுமடி எதுகைபடத் தொடுத்தன் [1] மாத்திரை யானே அதனை இடையீட்டெதுகையென்றுங் கொள்ளப்படும்; என்னை? அவ்வெதுகை ஆண்டுச் சிறந்தமையினென்பது; அவை முன்னர்க் காட்டுதும்.

"முன்பொழுது முன்செல்லுந் [2] தூரியமா மந்திகூயே
பின்பொழுது பின்செல்லு நெய்தலா—னன்பிலவே
கொல்யானை வேகப்பேரீர்க் கோக்கோதை மாறேற்ற
பல்யானை மன்னர் பறை."

என வரும். இஃது இவ்விரண்டடிகளது கூட்டத்துக்கண்ணன்றி வாராவாயினுங் கட்டளையடிக்கு அகப்பட்ட தொடையொடுங் கூறினர். கட்டளையடிக்கண் வருந் தொடையே சிறந்தனவென்று

1. மாத்திரை—அளவு.

2. தூரியம்—வாச்சியம், பேரூர்ப்பறை. நெய்தல்—இரங்கற் பறை; சாவுக்கடிக்கும் பறை.

கொள்ளினுங் கொள்ளற்கவென்பான், [1] ஒழிந்த தொடையுள்ளு மென்று கூட்டித் தொடை கூறினனென்பது.

இனி, செந்தொடை கட்டளையடிக்கண் தொடையாங்கால் ஓரெழுத்துத் தேமா ஒழித்து ஒழிந்த சீரெல்லாவற்றினும் வருமென்பது. [2] இம்மூவகை அடியினுனும் பெற்ற தொடையெல்லாங் தொகுப்பத் தொடை ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதாம்; அவற்றோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடுங் கூட்டத் தொடை ஐஞ்ஞூற்றைம்பத்திரண்டாம்.

[3] "நுந்தையில் செந்தொடை யைஞ்ஞூற்று நாற்பான்மே
லொன்பானே யோரிடையிட் டோரிரட்டி
வந்த வெதுகை யிரண்டென வைத்தைஞ்ஞூற்
றைம்பத் திரண்டென் றறி."

என்பது உரைச்சூத்திரம். ஆக முப்பத்துமூன்று தொடையும் அறுநூற்றிருபத்தைந்து அடியுட் கூவன கூளந்து பெற்ற தொடைவிரி யெல்லாந் தொகுப்பப் பெற்ற தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றைந்துடன் இரண்டடி யெதுகையிரண்டும், இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டாயினவாறு கண்டுகொள்க.

[4] "தொடையின் பகுதி முழுவதூஉஞ் சொன்மற்
றடியி னறுனூற் றிருபத்தைந் தாயி
னடிய திலக்கண மாமதுவென் றஞ்சிப்
பிறதொடைமூன் றேற்றினர் பின்."

இவ்வாறு தொடை கூறப்பட்ட தொடைப்பகுதியெல்லாம் அவ்வச் சூத்திரங்களோடாறும் எடுத்தோதாதது கட்டளையடிக்கும் அல்லாவடிக்கும் பொதுவகையாற் கூறி வந்தாஞசிரியனுயினும்,

"மெய்பெறு மரபிற் றொடைவகை." (தொ. செய். கoக)

---

1. ஒழிந்ததொடை என்றது கூறப்படா தெஞ்சி நின்றவற்றை. கூட்டிக் கூறினன் என்றது இரண்டடி எதுகையையும் இடையீட் டெதுகையையும். தொடை—தொகை என்றிருப்பது நலம்.

2. கணக்கு வரிகள் இல்லை.

3. நுந்தை என்பது செந்தொடைக்கு வாராது. செந்தொடை நுசகூ ஆம். ஐ—சாரியை. இடையீட்டெதுகை ஒன்றும் இரண்டடி எதுகை இரண்டும் சேர்க்க நுநுஉ ஆம் என்க.

4. தொடையின் பகுதி முழுவதும் சொல்லப்பட்ட அறுநூற்றிருபத்தைந்தடிக்காம். ஆயின் அடியினிலக்கணம் அவ்வளவாமென்றஞ்சி பிற தொடை கூ கூட்டினர் என்றபடி.

என்னுந் தொடைச் [1] சூத்திரத்திற்கு ஏற்பதாம். அவற்றை அவ்வச் சூத்திரங்களுட்போலக் கூறி வந்ததாமென்பது. முற்கூறிய முப்பத்துமூன்று தொடையினையும் அறுநூற்றிருபத்தைந்தடியோடு மாறியக்கால் இருபதினுயிரத்தறுநூற்றிருபத்தைந்து தொடையாகற்பாலனவாம்; அன்னவை [2] தொடைக்குந் தளைக்குமாகாதன களைந்து கொள்ளப் பதின்மூவாயிரத் தெழுநூற்றைந்தாயினவென்பது. ஆறுயிரத்துத் தொள்ளாயிரத்திருபது நிலங் கூளையப்பட்டன. இங்ஙனம் இவை களைந்து பெற்ற தொடையோடும் இரண்டடியெதுகை இரண்டும் இடையீடொன்றுங் கூட்டத் தொடை பதின்மூவாயிரத் தெழுநூற்றெட்டாயின. (கoo)

[தொடைகளின் தொகை இதுவெனல்]

சகக. மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
யையீ ராயிரத் தாறைஞ் ஞூற்றெடு
தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற்
றொன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே.

இது, மேற்கூறிய தொடையுள் [3] ஒருசீரான் வரையறையுடைமையின் அவற்றை அடிக்கட்போலத் தொகுத்தோதாதுகின்றது; விரித்ததூஉந் தொகுத்ததூஉமாம்; என்னை? கட்டளையடியோடுபட்ட தொடை விகற்பம் முற்கூறிய சூத்திரங்களுட் பெற்றமையானும் அவற்றையும் ஈண்டுத் தொகுத்துக் கூறினமையானுமென்பது.

இ—ள்: மெய்பெறு மரபில் தொடைவகை — கேட்டார்க்குத் தொடைப்பாடு வெளிப்படும் இலக்கணத்தவாகிய தொடைக்கூறுபாடு; 'தாமே' என்பது பிரித்துக் கூறியவாறு; [4] ஐயீராயிரத்து [5] ஆறு ஐஞ்ஞூற்றெடு — பதின்மூவாயிரத்தோடு;

---

1. ஏற்ப ..... அவ்வச் சூத்திரங்களுட் கூறிவந்தாம் என்றிருப்பது நலம்.

2. தொடுக்கப்படாத அடிகளும் தளைவழுவும்.

3. ஒருசீரான்—ஒவ்வொரு சீரான்

4. ஐயீராயிரம்—பதினுயிரம்.

5. ஆறைஞ்ஞூறு—மூவாயிரம்.

[1] தொண்டு தலையிட்ட [2] பத்துக்குறை எழுநூற்றிருன்பஃது—எழுநூற்றெட்டு என்றவாறு.

தொடைப்பகுதி பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டு என்று சொல்லுப ஆசிரியரென்பது இதன் பொழிப்பு. 'மெய்பெறு மரபின்' இவையெனவே, விளங்கத் தோன்றுதனவுந் தொடையுளவென்பதாம்; அவை, இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கடையிணை, கடைக்கூழை, இடைப்புணர்ப்பின எனச் சொல்லுப. பிறவும் வேறுபடுத்துக் கூறுவார் கூறுவனவெல்லாம் இதனுனே 'தழீஇக் கொள்ளப்படுமென்பது.

'தொடைவகை' என்பது கட்டளையடியொடு வருமெனப்பட்ட முப்பத்துமூன்று தொடையும் பிறவாற்றுன் வருமெனப்பட்ட இடையீட்டெதுகை இரண்டடியெதுகையென இரு கூற்றனவு மென்றவாறு.

'ஐயிராயிரத் தாறைந் நூற்றிரண்டு' என்பது, உம்மைத் தொகை. 'தொண்டு தலையிட்ட' என்பது, ஒன்பானெயகப்படும் மொழியாகவுடையவென்றவாறு. அது செய்தவென்னும் பெயரெச்சமாகலின் எழுநூற்றிருன்பதென்னும் பெயர்கொண்டு முடியும்; எனவே, எழுநூற்றிருபத்தெட்டாமென்றஞ்சிப் [3] பத்துக்குறை எழுநூற்றிருன்பது என்றுனென்பது; எனவே, ஆண்டு நின்ற ஒன்பானுடுந் தொண்டு தலையிட்ட எனப்பட்ட ஒன்பானெயுங் கூட்ட எழுநூற்றெட்டாயினவென்றவாறு; அஃதே கருத்தெனின்,

> "பதின்மூ வாயிரத் தெழுநூற் றெட்டென
> மொழியப் பட்டன தொடைதெரி வகையே."

என அமையும்; இவ்வாறு அரிதும் பெரிதுமாகச் சூத்திரஞ் செய்ததென்னையெனின்,—அங்ஙனமே அதனை [4] ஞாபகப்படச் செய்தான் ஆசிரியன் ஒரு காரணம் நோக்கி. என்னை? இத்

---

1. தொண்டு—ஒன்பது.

2. எ0கூ-ல் க0 குறைக்க சூ கூ கூ-ஆம். சூ கூ கூ-ஓடு கூ-ஐக் கூட்ட எ0அ ஆம். பதின்மூவாயிரத்தொடு எ0அ-ஐக் கூட்ட கஉ எ0அ ஆகும். தொடை என்றபடி.

3. பத்துக்குறை எழுநூற்றிருன்பது—(எ0கூ—க0) சூ கூ கூ அதனெடு ஒன்பது கூட்ட—(சூ கூ கூ + கூ) எ0அ-ஆம்.

4. ஞாபகம்—மூப்பத்திரண்டு உத்தியுள் ஒன்று. அதனை இந்நூல் சூ சூ சூ-ம் சூத்திரத்திற் காண்க.

தொடைகளை அடியொடு மாறுங்காற் குறைக்கப்படுவன உளவென்பதூஉம், அவை [1] தொண்டு தலையிட்ட ஐந்துபத்தளவும் ஆறுமுதலாகக் களையப்படுமென்பதூஉங் கோடற்கென்பது. 'ஒன்பது' என்று இருகாற் சொல்லியவதனுன் அங்ஙனங் குறைக்கப்படு நிலங்கள் ஒன்பது பகுதியவாமெனக் கொள்க. அவையாவன:— ஐம்பத்தொன்பது ஐம்பத்தாறு - நாற்பத்தைந்து நாற்பது முப்பத்தொன்பது முப்பத்திரண்டு முப்பத்தொன்று இருபத்துமூன்று ஆறு என ஒன்பது பகுதியாற் குறைவனவாயின. இங்ஙனம் ஐம்பத்தொன்பது நிலத்தின வாகலால் தொண்டு தலையிட்ட பத்து என்றுனெனவும், ஒன்பதுங் தொண்டுமென இருகாற் கூறியவதனுன் அங்ஙனங் களையுநிலம் ஒன்பஃதெனவுங் கொள்ளப்பட்டது.

[1] "பாய பதினு யிரமென் றிலகீயி
ராயிர மென்று னதனுனுங்—தூயதன்றிப்
பத்துங் குறைத்த பயத்தானு மொன்பதென்
றுய்த்துக் கொளற்பாற் றெருங்கு."

எனவும்,

[3] "ஒரொன்ப நேற்றியு மோரொன்ப திட்டுரைத்து
மீரொன் பதுமிகுத்தா னீங்கிவற்று—ளோரொன்ப
தைம்பான்மே லேறவு மைந்தந்த மாய்க்குறைந்
லொன்பான் வகைத்தென்று மோர்ந்து."

எனவும்,

"ஆறென்றுன் மூவா யிரமென்று நாங்கதனு
லாறந்த மாங்குறையு மாறு."

எனவும்,

---

1. தொண்டு தலையிட்ட ஐந்துபத்து—டுகூ. ஆறு முதல் டுகூ வரையும் ஒன்பதுபகுதி களையப்படும் என்றபடி.

2. சூத்திரத்துள் பதினுயிரமென்று சூத்திரியாது 'ஐயிராயிரம்' என்று சூத்திரித்தமையானும் 'பத்துக் குறை' என்று பத்தைக் குறைத்தமையானும் குறைப்பன. ஒன்பது பகுதி என்று உய்த்துணர்ந்துகொள்ளப்படும் என்பது கருத்து.

3. ஏற்றி—மிகைப்படுத்தி. இட்டுரைத்தல்—சேர்த்துரைத்தல். ஈரொன்பது—இரண்டுதரம் ஒன்பது. இரண்டுதரம் ஒன்பது கூறியது ஐம்பதற்குமேல் ஒன்பது ஏறி வருமென்பது காட்டவும் ஒன்பதுவகை என்பதைக் காட்டவும் என்பது கருத்து. ஐந்தந்தமாய் ஆறந்தமாய் என்றிருப்பது நலம். ஒன்பது ஐம்பான்மே லேறல் டுகூ ஆதல்.

[1] "ஐம்பத்தொன் பானேழெட் டையொன் பதுநாற்பஃ
தொன்பா னுடைமுப்பத் தெண்ணுன்கு முப்பத்தொன்
றென்பா லிருபத்து மூன்ரு தெனக்குறைப்ப
வொன்பான் பகுதி யுள."

எனவும், இவ்வுரைச் சூத்திரங்களான் அவை குறைக்கப்படுமா றறிந்து குறைக்க. இவற்றுள் ஒன்பது நிலங் களையப்படும். [2] மோனை முதலாயின தொடை ஐந்தற்கும் [3] ஓரெழுத்துத் தேமா உரித்தென்றிராயின், அதனை நுந்தை நுந்தையென்று இருகால் தொடுக்கவேண்டும்; தொடுத்தவழி, அடிமோனையுங் கூலியாகெதுகையும் அடியெதுகையும் மூன்ரு மெழுத்தென்றது கையுமென நான்கு தொடை பெறப்படுமாகலின், அவற்றுள் அதனை என்ன தொடையென்றுமோவெனின்,—செய்யுள்செய்த ஆசிரியன் பல தொடைபடச்செய்து வைத்தவழி, அவற்றுட் சில களைந்து ஒன்றுகோடற்குக் காரணமின்மையினன் அவை யனைத்துங் கோடுமென்பது; [4] அல்லாதார் முதனின்ற தொடையே கொண்டொழிகவென்ப; அது குற்றம்; என்னை?

[5] "செங்காற் பைந்தினை யிதண மேறிப்
பைங்காற் சிறுகிளி கடிவோ டந்தை."

என்றவழி, எதுகையும் முரணும் வந்தவழி இவற்றுண் முதற் கண் இன்ன தொடையென்று துணிபலாகாமையின் அது நிரம்பாதாகலான் அது வந்ததொடை யெல்லாவற்றினும் விரித் துத் தொடை கூறுதல் அமையுமென்பது; என்போலவோ வெனின்,—எழுத்தும் அசையுஞ் சீரும் அடியும் அங்ஙனம் முதல் வந்ததனன் எண்ணுங் தொகையும் பெயருங் கொடுத்து வழங்காதவாறுபோலவென்பது; அல்லதூஉம், தொடைகளெல் லாந் தம்மையுணரும் மாத்திரையானே தனித்தனி வருதல்

---

1. ஒன்பான் பகுதியாவன—டுகூ, ருகூ, சடு, சஅ, ஙகூ, நஉ, ஙக, உங, சு என்பன.

2. ஐந்து தொடையாவன — மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை.

3. ஓரெழுத்துத் தேமா—நுந்தை.

4. அல்லாதார்—தொல்காப்பியரல்லாதார். அவர், அவிநயி னார், காக்கைபாடினியார் முதலியோர். யாப்பருங்கல விருத்தி யும் சூத்திர உரை நோக்குக.

5. செங்கால்—பைங்கால் தலையாகெதுகையும், செம்மை—பசுமை, முரணுமாம்.

இலக்கணமென்பதூஉம் இல்லையென உணர்க; என்னை? பல உறுப்புக் கொண்டது ஓர் செய்யுளென்றமையின்.

இனி. [1] ஓரெழுத்துத் தேமா முதற்கணிற்ப அடியிறுதிக் கண்ணும் இயைபு வருதலின் அச்சீர் நின்றுறழ்ந்த அடிக்கண் இயைபு வருதற்கு ஆராய்ச்சியின்றென்பது. ஒழிந்த தொடைக் குரியவல்லவெனப்பட்ட சீருள் [2] அவை வாராமையும், உரிய வெனப்பட்டவற்றுள் அவை வருமாறும் முறையிற்கொண்டு உதாரணங் கண்டுகொள்க.

இனி, இக்காலத்துள்ள ஆசிரியருள் ஒரு சாரார்,

"தொண்டுதலை யிட்ட பத்துக்குறை யெழுநூற் [3]ரொன்றும்."

எனப் பாடங் திரிப்பாரும் இன்னொருசாரார் 'எழுநூற்றொன் றும்' [4] எனப் பாடங் திரிப்பாரும் உளர். [5] ஒரு பகுதியார்; ஒன்றும் என்பது முற்று விகினையென்ப.

"மெய்பெறு மரபிற் ரொடைவகை.....
பத்துக்குறை யெழுநூறு."

என்னும் எண்ணினோடு ஒன்றும் எனக் கூட்டுப. பதின்மூவா யிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்பது அவர் கருத்து. ஒன்றுமென்பதனை எண்ணுப்பெயர் முற்றுமைபடுத்த தென்பாரும் அதுவே கூறுப; அவரறியார். அவ்வாறு சூத்திரஞ்செய்வது ஆசிரியர் கருத்தன்று. அல்லதூஉம்,

"ஒன்பஃ தென்ப வுணர்ந்திசி னோரே."

---

1. 'நுந்தை நுந்தை நுந்தை நுந்தை நுந்தை நுந்தை நுந்தை நுந்தை' — இதன்கண் இறுதியில் இயைபுவருதல் காண்க. நுந்தையை முதல்வைத்துப் பிறசீர் ஒன்றுதொடுப் பினும்இயைபுவரும்

2. அவை—தொடை.

3. ஒன்றும் என்பவென்று இருப்பது நலம்.

4. என்பன என்றிருப்பது நலம். நச்சினார்க்கினியம் நோக்குக.

5. ஒரு பகுதியாரென்றது இளம்பூரணரை. ஒன்றும்—பொருந்தும் எனப் பொருள்படின் முற்று விகினையாம். ஆயின், வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதித்து வெளியிட்ட இளம்பூரண ருரைப் பதிப்பில் 'ஒன்றும்' எனப் பாடங் காணப்படவில்லை.

என்பது பழம் பாடமாகலானும் அஃதமையாதென்பது; அவ் வாறு கொள்வார்க்குத் தொடை பதின்மூவாயிரத்தறுநூற்றுத் தொண்ணூற்றொன்பதாகலும் பிழைக்குமென்று மறுக்க; என்னை? அறுநூற்றிருபத்தைந்தடியினும் தமக்குப் பொருந்துமாற்றான் இருபத்திரண்டு தொடையோடும் பெருக்குங்கால் அவர்க்கும் ஓரடிக்கண்ணே தொடை கோடல்வேண்டுமாகலானும், அங்ஙனங் கொள்ள இரட்டைத்தொடை முதலாயின அறுநூற்றிருபத்தைந்து ஆகாமையானுமென்பது. (கஅக)

[வரையறையில்லாத தொடைகளுக்கு வரையறை கூறல் முடியாதெனல்]

சகச. தெரிந்தனர் விரிப்பின் வரம்பில பல்கும்.

இது மேற்கூறிய தொடைக்காவதோர் புறனடை.

இ—ள்: அறுநூற்றிருபத்தைந்து அடியோடு மாறிப்பெற்ற தொடை பதின்மூவாயிரத்தெழுநூற்றெட்டெனப்பட்டனமேல்; இனி, அவ்வடி ஒன்றன்கண்ணேயன்றி [1] ஒன்றிநிற்ப நின்ற வடி அறுநூற்றிருபத்துநான்கினையும் தந்துதந்து தடுமாற வந்து தோன்றுந் தொடை விகற்பமும் [2] இருசீரடி முதலாக எண்சீரடியீறாகக் கிடந்த அடி வேறுபாட்டின்கணெல்லாம் [3] இத் தொடைகளைக் கூட்டவும், [4] பிற விகற்பத் தொடைகளைக் கூட்டவும் வருந் தொடைப்பகுதி வரையறையின்றிப் பலவாம் என்றவாறு.

வரையறை உடையனவற்றுக்கன்றி வரையறை கூறுதல் பயமின்மையின் ஒழிந்த விகற்பமெல்லாங் கூறியகிலங் கூறிற்றிலேனென்பதூஉம்,

"மெய்பெறு மரபிற் றொடைவகை." (தொ. செய். கஅக)

எனப்பட்டன வரையறையுடைமையின் அது கூறினேனென்பதூஉஞ் சொல்லினுன் இச்சூத்திரத்தானென்பது.

---

1. ஒன்றி நிற்ப—ஒன்று நிற்ப என்பதே பொருத்தம். ஓரடி நிற்ப என்பது பொருளாதலின். நின்ற—எஞ்சி நின்ற.
2. இருசீரடி—குறளடி.
3. இத்தொடைகள்—மோனை முதலிய ஐந்து தொடைகள்.
4. பிற விகற்பம்—பொழிப்பு முதலிய விகற்பத்தொடை.

இனி, [1] ஐந்துதொடை, விகற்பத்தொடை பலவற்றோடுங் கூட்டவும் பிறவாற்றான் விரிப்பவும் வரம்பிலவாமென்றருளினார்; அவை எவ்வாறு விரிப்பினும் வரம்பிலவல்லனவென மறுக்க. வரம்பிலவென்பது வரையறை கூறப்படாவென மேலுரைத்ததே உரை. (கஅஉ)

[தொடைப்பகுதி இரண்டெனல்]

சகடு. தொடைவகை நிலையே யாங்கென மொழிப.

இதுவுமது. மேல் ஒரு சாரன வரையறையுடைமையிற் கூறப்பட்டனவென்புழி, ஒழிந்தன வரையறையின்மையிற் கூறப் படாவெனவுங் கூறினானைக் கண்ட மாணாக்கன், வரம்பில்லன தொடுக்கப்படா கொல்லென ஐயுற்றானை அவையுந் தொடுக்கப் படுங் கண்டாயெனக் கூறினமையின் ஐயம் அறுத்ததெனவும் அமையும்.

இ—ள்: தொடையது பகுதி வழக்கே அவ்விரண்டுமென்ப என்றவாறு.

எனவே, அப்பகுதியுளொன்று தெரித்திலமென்பது இதன் கருத்து. ஆங்கு என்றதனான் மேற்பகுத்த [2] இரண்டிடமுங் கொள்க. (கஅசு)

[நோக்காவது இதுவெனல்]

சகஎ. மாத்திரை முதலா வடிநிலை காறு
நோக்குதற் காரண நோக்கெனப் படுமே.

இது, நிறுத்தமுறையானே நோக்குணர்த்துகின்றது. நாற் சொல் வழக்கினைப் பாவிற்படுப்பது மரபென்றான். எனவே, ஆண்டு நோக்கி யுணரப்படுவதொன்றின்றிச் செய்யுள்களும் வழக்கியல்பினவாகி [3] வெள்ளைமையுமாய்க் காட்டுவனவாயின. அவ்வாறன்றி நோக்கென்பதோர் உறுப்புப் பெறினே அது செய்யுளாவதாகலான் அது கூறுகின்றானென்பது.

---

1. ஐந்து தொடை—மோனை முதலிய வைந்து தொடை. இவர் இளம்பூரணர்.
2. இரண்டிடம்—வரையறை யுடையனவும், இல்லனவும்.
3. வெள்ளைமை—நுண்ணிதான பொருளில்லாமை.

இ—ள்: மாத்திரையும் எழுத்தும் அசைநிலையும் சீரும் முதலாக [1] அடி நிரம்புந்துணையும், நோக்குடையவாகச் செய் தல்வன்மையாற் பெறப்படுவது நோக்கென்னும் உறுப்பாவது என்றவாறு.

[2] கேட்டார் மறித்து நோக்கிப் பயன்கொள்ளுங் கருவியை நோக்குதற் காரணமென்றுனென்பது. 'அடிநிலைகாறும்' என் பது, ஓரடிக்கண்ணேயன்றியுஞ் செய்யுள் வந்த அடி எத்துணை யாயினும் அவை முடிகாறுமென்றவாறு; வரலாறு:

"முல்லை வைந்நுனை தோன்ற [3] வில்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி யவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பர [4] லவ லடைய விரலூ [5] றெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புபுறக் கொடுப்பக்
கருவி வானங் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு காலம்
[6] குரங்குகூப் பொலிந்த கொய் [7] சுவற் புரவி
நரம்பார்ப் பன்ன வாங்கு [8] வள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை [9] பேதுற லஞ்சி
மணிநா வார்த்த மாண்விசைத் தேர
னுதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவி னுறந்தைக் குணாது
நெடும்பெரும் குன்றத் தமன்ற காந்தட்
போதவி முலரி னுறு
மாய்தொடி யரிவைநின் மாணலம் படர்ந்தே." (அகம். ச)

1. அடி நிரம்புந் தொடையும் என்பது. சி. வை. தாமோ தரம்பிள்ளை பாடம். அது பொருத்தமில்லை.

2. மறித்து நோக்கல்—மீட்டுந் தன்னை நோக்கல்.

3. இல்லம்—தேற்ரை.

4. அவல்—பள்ளம்.

5. தெறித்தல்—துள்ளல்.

6. குரங்குகூ—வளைந்த நெற்றி மயிர்.

7. சுவல்—பிடர்மயிர்.

8. வள்—வார்; வாய்க்கயிறு.

9. பேதுறல்—வருந்தல்.

என வரும். இப் பாட்டின் ஓசை முதலியனவெல்லாங் [1] கேட் டோரை மீட்டுந் தன்னைநோக்கி நோக்கப் பயன்கொள நிற் கும் நிலைமை தெரிந்துகொள்க.

இனி, 'அடிநிலைகாறும்' என்றதனைச் செய்யுள் முழுவதும் எவ்வகையுறுப்புங் கூட்டி நோக்கியுணருமாறுங் கூறுதும். முல்லை யென்பது முதலாகக் கீானம் என்பதீறாக நாற்சொல்லியலான் யாப்புவழிப்பட்டதாயினும் பருவங்காட்டி வற்புறுக்குந் தொழி [2] பருவந் தொடங்கிய துணையேகாணென்று வற்புறுத்தினு ளென்பது நோக்கி யுணரவைத்தானென்பது. 'உதுக்காண் டோன்றுங் குறும்பொறை நாடன்' என்னுந்துணையுந் தலைமக னது காதன்மிகுதி கூறி வற்புறுத்தினுளென்பது நோக்கி யுணரவைத்தான். ஒழிந்த அடிநிலைகாறும் பிரிந்தகாலம் அணித் தெனக் கூறி வற்புறுத்தினுளென்பது நோக்கி யுணரவைத்தா னெனப்படும்; என்னை? முல்லையென்னுது 'வைந்நுனை' என்றத னான், அவை அரும்பியது அணித்தென்பது பெறப்பட்டது; சின்னுள் கழியின் [3] வைந்நுனையாகாது [4] மெல்லெனுமாக லின். இல்லமும் கொன்றையும் மெல்லென்ற பிணியவிழ்ந்தன வென்றான், முல்லைக்கொடி [5] கரிந்ததுணை [6] அவைமுதல் கெடாது முல்லையரும்பியகாலத்து மலர்ந்தமையின். இரலை மருப்பினை, 'இரும்பு திரித்தன்ன மருப்பு' என்றதூஉம் நீர் தோய்ந்தும் வெயிலுழந்த வெப்பந் தணிந்தில, இரும்பு முறுக்கிவிட்டவழி வெப்பம் மாறுவிட்டவாறுபோல வெம்பாகின்றன வின்னுமென்ற வாறு. 'பரலவ லடைய விரலூ றெறிப்ப' எனவே, பரல்படு

1. கேட்டார் மீட்டுந் தன்னை நோக்கிப் பயன் கொள்ள என்றிருப்பது நலம். இது முன்னும் கேட்டார் மறித்து நோக் கிப் பயன் கொள்ளுங் கருவியை என்று கூறப்பட்டமை காண்க. நோக்கி நோக்கி என்றுமிருக்கலாம். எல்லாம் நிற்கும் நிலைமை என இயையும்.

2. பருவந் தொடங்கிய துணை—பருவந் தொடங்கிய (ஆரம் பித்த) அளவு.

3. வைந்நுனை—கூரியநுனை—மொட்டு.

4. மெல்லெனல்—இளகுதல்.

5. கரிந்ததுணை—இலை முதலியன கருகிய அளவு.

6. அவை—இல்லமுங் கொன்றையும். முதல்—மரம். அவை மலர்ந்தமையின் என இயைக்க.

[1] குழிதோறுந் தெளிக்துநின்ற நீர்க்கு [2] விருந்தினமாகலாற் பலகாலும் நீர் பருகியும் அப்பால் அவலினது [3] அடைகரை விடாது துள்ளுகின்றனவென அதுவும் பருவக் தொடங்கினமை கூறியவாறுயிற்று. 'கருவி வானங் கதழுறை சிதறி' என்ப தூஉம் பலவுறப்புங் குறைபடாது தொக்குநின்ற மேகங் தனது வீக்கத்திடைக் காற்றெறியப்படுதலின் ஈரைக்து துவி சிக தினவென் றவற்றையும் புதுமை கூறினுள்; எனவே, இவை யெல்லாம் பருவக்தொடங்கி யணித்தென்றமையின் வற்புறுத்து தற்கு இலேசாயிற்று. 'குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி' என்பது, [4] கொய்யாத உளை பல்கியும் கொய்த உளை பலகாலுங் கொய்யவேண்டுதலுமுடைய குதிரையென்றவாறு; எனவே, தனது [5] மனப்புகழ்ச்சி கூறியவாறு. அத்தகை [6] மிகுதியுடைய குதிரை பூட்டின வாரொலி விலக்காது [7] மணி யொலி விலக்கி வாராநின்றான், அங்ஙனம் மாட்சிமைப்பட்ட மான்றேரானதலானென்றவாறு. அதற்கென்னைகாரணமெனின்,— 'துணையொடு வகியாக் காதலன் பறவை' எனவே, பிரிவஞ்சி யென்றவாறு. மணிகாவொலி கேட்டின் வண்டு வெருவுமாகலின் அது கேளாமை மணிகாவினை இயக்காமை யாப்பித்த மாண் விணைத் தேரானதி வாராநின்றானென. இவையெல்லாக் தலைமகள் வன்புறைக்கேதுவாயின. 'கறங்கிசை விழவி னுறக்தைக்குணாது, நெடும்பெருங் குன்றத் தமன்ற காந்தள்' [எனவே] [8] தெய்வமலை யாகலான் அதனுளாமன்ற காந்தளைத் தெய்வப் பூவெனக் கூறி

1. குழி—பள்ளம்.

2. விருந்தினமாகலின் என்பது பழைய பாடம். நீர் விருந் தினதாகலான் என்றிருப்பது நலம். விருந்தினது—புதிது.

3. மான் அடைகரையை விடாதது நீர் வேட்கைபற்றி; அது பின்னும் பின்னும் உண்ணற்பொருட்டுக் கரையை விடாதுநின்றது என்க.

4. கொய்யாத உளை—தெற்றி மயிர். கொய்த உளை—பிடர் மயிர்.

5. மனப்புகழ்ச்சி—மனச்செருக்கு. மனப்புகழ்சி என்றிருப் பது நலம் தனது—அதனது என்றிருந்திருக்கவேண்டும்.

6. மிகுதி—செருக்கு.

7. மணி—தேர்மணி.

8. இதன் மிதுள்ள 'எனவே' என்ற சொற் சிதைந்திருத் தல்வேண்டும். முன்னுள்ள மற்றை வாக்கியங்களே நோக்குக.

அவை போதவிழ்ந்தாற்போல அவர் புணர்ந்தகாலத்துப் புது மணங் கமழ்ந்த நின் கைக்தொடிகள் [1] [அவை அரியவாகிப் பிரிந்த காலத்துப்போன்று வடிவொத்து மணங் குறைபட்ட துணையேயால் அவர் பிரிந்துசெய்த தன்மையினென இதுவும் வன்புறைக்கே உறுப்பாயிற்று.]

இவ்வாறே பலவும் நோக்கியுணர்தற்குக் கருவியாகிய சொல் லும் பொருளும் எல்லாம் 'மாத்திரை முதலா வடிநிலை காறும்' என அடங்கக் கூறி நோக்குதற் காரணம் நோக்கென்றுனென் பது. மாத்திரை முதலாயினவுக் தக்கும் இலக்கணத்தில் இரி யாது வந்தமையின் அவையும் அவ்விலக்கணம் அறிவார்க்கு நோக்கிப் பயன் கொள்ளுதற்கு உரியவாயினவாறு கண்டுகொள்க. 'எனப்படும்' என்றதனுன், இவ்வாறு [2] முழுவதும் நோக்கு தற்குச் சிறப்புடையவெனவும் இவை யிடையிட்டு வந்தன சிறப் பிலவெனவுங் கொள்ளப்படும். பிறவும் அன்ன. (கo)

[பாவகையும் அவற்றின் பெயரும்]

சகஎ. ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே.

"நோக்கே பாவே." (நகஙு)

என நிறுத்தமுறையானே நோக்குணர்த்திப் பாவுணர்த்திய வெழுந்தான் அதனை இத்துணைப் பெயர் வேறுபாட்டதெனவும், பொருட்சுருக்கமையவும் அடிச்சுருக்கமையவுமாமாறுஞ் செய் யுட்கு வரையறைவகையான் உரியவாறும் ஓரோ செய்யுட்கண்

1. பகரக்கோட்டில் அடைத்த இவ்வாக்கியம், [அவை அரரரகி விரிந்த காலத்துப்போன்று வடிவொத்து மணங் குறை பட்ட துணையேகாண் அவர் பிரிந்து சேய்த்தன்மையின் என இதுவும் வன்புறைக்கே ஏதுவாயிற்று.] என்றிருப்பதே பொருத் தம். ஏனெனின்? நீ புணர்ந்தகாலத்துக் காந்தளின் போது போலப் புதுமணங் கமழ்ந்த தொடிகள் அப் போது நன்கு அலர்ந்தகாலத்துச் சிறிது மணங் குறைந்திருத்தல்போல மணஞ் சிறிது குறைந்தவாகவே காணப்படுகின்றன, அவர் பிரிந்து நெடுங்காலமன்மையின் என்று பொருடரலின். போது—சிறி தலர்ந்த பேரரும்பு. நன்கு விரிந்த காந்தட்பூ—தொடியின் வடிவுக்குவமையாகும். அதுபற்றி 'வடிவொத்து மணங்குறைந்த துணை' என்றுள்.

2. முழுவதும் வந்தன என்றிருப்பது நலம்.

[1] ஒரோவுறுப்புப்பற்றி வருங்கால் அவ்வுறுப்புக்கள் இத்துணையடியவாகுமெனவும் எல்லாங் கூறுவான் தொடங்கினமையின். அவற்றுள் இது, பெயர் வேறுபாடும் அஃது [2] இணைத்தென விரியும் உணர்த்துகின்றது. இவ்வுறுப்பு வேறுபாட்டானே [3] உறுப்பியலாகிய செய்யுளும் இவ்வாறு பெயர்கொள்ள வைத்தானென்பது.

இ—ள்: ஆசிரியப்பாவும் வஞ்சிப்பாவும் வெண்பாவுங் கலிப்பாவுமென நாற்கூற்றது பாக்களவற்று விரி என்றவாறு.

'வகை' என்றதனான் [4] உறுப்பாகிய செய்யுளின் வேறுபட நோக்கி உணரப்படும் இவ்வுறுப்பெனவும், இவற்றுள் [5] வழக்கிற்குரியன செய்யுட்கு வந்தனவும் [6]வழக்கிற்கேயுரியவாகிக் கூறுபடுவனவும், [7] ஒன்றொன்றனோடு விராய்ப் பிறக்கும் பகுதியுமெல்லாங் கொள்ளப்படும். பாக்கூற்று விரி நான்கெனவே பாவினை உறுப்பாகவுடைய செய்யுட்கு வரையறை கூறிற்றில னென்பது பெற்றும்; என்னை? [8] அவற்றுப் போதுங்கால் அவற்றது பெயர் வேறுபாடும் அச்சூத்திரங்களான் அறிதுமென்பது; என்றார்க்கு இவை நான்கேயன்றிப் பாவாமாறு கூறுனே வெனின்,—இவையின்றித் தூக்குப் பிறவாமையின் இப்பாவிலக்கணமும் [9] நோக்கோத்தினுட் கூறினுங்கலான் ஆண்டோதிய வாறே அமையுமென்பது. இக்கருத்தேபற்றி,

---

1. ஒரோவுறுப்பு — ஆசிரியப்பா முதலிய பாவுறுப்புள் ஒன்று.

2. இணைத்து—இத்துணையது.

3. உறுப்பியாகியவென்றிருந்திருக்கலாம்.

4. உறுப்பாகிய—இப்பாவை உறுப்பாகக்கொண்ட; 'உறுப்பியாகிய' என்றிருந்திருக்கவேண்டும்.

5. வழக்கிற்குரியன—அகவல், செப்பல்.

6. வழக்கிற்கே உரியவாகி என்பது செய்யுட்கேயுரியவாகி என்றிருத்தல்வேண்டும். அவை—வஞ்சியும், கலியும். இவ்வியல் அடி-ம் சூத்திர உரை நோக்குக.

7. ஒன்றொன்றனோடு விரிராய்ப் பிறக்கும் பகுதி—மருட்பா.

8. அவற்றுப் போதுங்கால்—அச் செய்யுட்கண் செல்லுங்கால்.

9. நோக்கோத்தினுள் என்பது தூக்கோத்தினுள் என்றிருத்தல்வேண்டும். பின்வரும் எடுத்துக்காட்டுச் சூத்திரத்தானுமறிக.

"பாவென மொழியினும் தூக்கினது பெயரே."

என்றார் இந்நூலின் [1] வழிநூல் செய்த ஆசிரியருமென்பது.

உதாரணம்:—

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
யலங்குலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய்
நுகில்பொதி பவள மேய்க்கு
மகில்படு கள்ளியங் காடிறந் தோரே." (ஐங்குறு)

என்பது ஆசிரியப்பா. உறுப்பாகி வந்த செய்யுள்.

"வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
றிசைதிரிந்து தெற்கேகினும்." (பட்டின. க.உ)

என்பது, வஞ்சிப்பா உறுப்பாகிவந்த செய்யுள்.

"வாரிய பெண்ணை வருகுரும்பை வாய்த்தனபோ
லேரிய வாயினு மென்செய்வ—கூரிய
கோட்டியாகீந் தென்னன் குளிர்சாந் தணியகலங்
கோட்டுமண் கொள்ளா மூலை." (முத்தொள். எக)

என்பது, வெண்பாவுறுப்பு வந்த செய்யுள்.

"அரிதாய வறனெய்தி" (கலி. சக)

என்பது கலிப்பாவுறுப்பு வந்தது. பிறவும் அன்ன.

இவை இன்ன அடிபான் வந்தனவென்பது என்னையறியுமாறெனின்,—அதுவன்றே தூக்குப் பயம்படுகின்ற இடமென்பது. மூன்றுபாவினை நாற்சீரானும், வஞ்சிப்பாவினை இருசீரானும் முச்சீரானுந் தூக்குக்கொண்டு இத் தூக்காமாறு உணர்ந்துகொள்க.

ஆசிரியம் வெண்பாக்கலி வஞ்சியெனச் சிறப்புமுறையாற் கூறுதலென்னையெனின்,—அது,

"முந்து மொழிந்ததன் கிளைஞரு மாற்றே." (சூசூரு)

என்பாருமுளர். வஞ்சிப்பா முதற் கூறுமையின் அற்றன்றென்பது. மற்றென் கருதியதெனின்,—ஆசிரியம் வெண்பாவென்று ஓதினவை வழக்கிற்குஞ் செய்யுட்கும் உரிமையின் அவையே போலுஞ் சிறப்புடையவென்று கொள்வானுமினும், அற்றன்று; இவை செய்யுளிலக்கணமாகலான் அவை நான்கும் ஓத்த இலக்கணத்த செய்யுளென்றற்கு இம்முறையான் ஓதினனென்பது.

---

1. வழிநூல் செய்த ஆசிரியர்' என்றது நத்தத்தனாரை.

இனி [1] ஒரு சாரார் இந்நான்கனையும் ஒன்று மூன்றுக விகற் பித்துக் கூறுப; என்னை? எந்திசை தூங்கிசை ஒழுகிசை என் றாற்போல; அற்றன்று; ஓரெழுத்து முதல் ஐயெழுத்துச் சீரளவும் உயர்ந்த *சீரான் வருஞ் செய்யுட்கு ஒன்று ஒன் றனின் வேறுபட்டொலிக்கும்; அவ்வேறுபாடுதோறும் பா வேறு படா; என்னை?

"எழுத்தள வெஞ்சினும் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப." (உருரு)

என்றமையினென மறுக்க; அல்லதூஉம் அங்ஙனம் வேறுபாடு கொள்ளின் ஓரோவொன்று ஐந்தாகலுந் தூங்கலோசை ஆறும் ஏழுமாகலு முடையவென்பது. (கஅருி)

[பாக்கள் அறமுதலிய பொருட்கு முரியவெனல்]

சகஅ. அந்நிலை மருங்கி னறமுத லாகிய
மும்முதற் பொருட்கு முரிய வென்ப.

இது, பாவினைப் பொருட்குரியவாற்றுன் வரையறை கூறு வான் தொடங்கிப் பொருட்குரிமை பொதுவகையான் உணர்த்து கின்றது; இது பொருளதிகாரமாகலின் இங்ஙனங் கூறுகின்றுன்.

இ—ள்: அந்நிலை மருங்கின் — அம் மேலைச்சூத்திரத்துத் தோற்றுவாய் செய்யப்பட்ட செய்புளிடத்து, அற முதலாகிய மும்முதல் — அறம்பொருளின்பமென்பன: அறமுதற் பொரு ளெனவே, அவையும் அவற்றது நிலையின்மையும் அடங்கும், பொருட்கும் உரியவென்ப—அப்பொருட்கெல்லாம் உரிய நான்கு பாவும் என்றவாறு.

'அந்நிலை மருங்கின்' எனவே, அவை மும்முதற் பொருட்கு உரியவாங்காற் செய்புளிடத்தன்றித் தாமாக உரிமை பூணுவென் பது. வீடென்பது செய்புளுள் வாராதோவெனின்,—[2] அறமுத லென்பது புறப்பாட்டெல்லையாகக் கூறினுனென்பார் நான்கு பொருளுந் தழீஇயுரைப்ப; இனியொருசாரார், மும்முதற்

1. ஒரு சாரார் என்றது சிறுகாக்கைபாடினியார் சங்க யாப்புடையார் யாப்பருங்கலநூலுடையார் முதலியோரைப் போலும்.

2. அறத்தைப் புறப்பாட்டெல்லையாகக் கொள்ள மும் முதலும் பொருள் பொருளும் இன்பமும் வீடுமென்றும்.

பொருட்கும் உரியவென்பதனை [1] எச்சப்படுத்திக்கொள்ப; அற் றன்று, உலகிற் பொருண் மூன்றனையும் கூறுவான் அவற்றை மும்முதற் பொருளென்றன், அவையின்றி வீடு பெறுமாறு வேறின்மையின் வீடும் ஆண்டுக் கூறினுனென்பது. அல்லாதார் வீடென்னும் பொருண்மை செய்புட்கண் வாராமையின் அது கூறுனென்ப. அங்ஙனங் கருதின் அறமுதற் பொருளுஞ் செய் யுட்கண் வாராவென மறுக்க. (கஅசு)

[முதற் பாக்களும் அவற்றுளடங்கும் பாக்களும்]

சகசு. பாவிரி மருங்கினைப் பன்புறத் தொகுப்பி
னாசிரி யப்பா வெண்பா வென்றுங்
காயிரு பாவினு ளடங்கு மென்ப. (கஅள)

[இன்ன பாவுள் இன்ன பா அடங்குமெனல்]

சஉ஦. ஆசிரிய நடைத்தே வஞ்சி யேனை
வெண்பா நடைத்தே கலியென மொழிப.

இவை இரண்டு சூத்திரமும் உரையியைபு நோக்கி உட னெழுதப்பட்டன. மேற் பாவினது விரி நான்கென்றமையின் தொகையுமுண்டென்பது பெற்றும். அவை தொகுங்கால் இரண் டாகித் தொகுமென்பதூஉம், அங்ஙனம் இரண்டாமிடத்தும், யாதானும் [2] ஒன்றடக்கி இரண்டாகா; முதற்பாவென நாட்டப் படுவன இவையெனவும், [3] அவை முதலாகத் தோன்றி ஆண் டடங்குவன இவையெனவும் உணர்த்துகின்றன.

இ—ள்: மேற் பாக்கண் விரிந்த பகுதியை உண்மைத் தன்மை நோக்கித் தொகுப்பின் ஆசிரியமும் வெண்பாவுமே யாம். அவற்றுள், ஆசிரியத்து விகற்பமாகித் தூங்கலோசை விரிந்தடங்கும்; வெண்பாவின் விகற்பமாகிக் கலிப்பா விரிந் தடங்கும்; அங்ஙனம் அடங்கி இரண்டாகும் பாவின்றொகை என்றவாறு.

1. எச்சப்படுத்துவது உம்மையை.

2. யாதானும் ஒன்றடக்கி இரண்டாகா என்பது ஆசிரி யம் வஞ்சி வெண்பா கலி என்னும் நான்கனுள் (முறையின்றி) யாதானுமொன்றை ஒன்றுளடக்கி இரண்டாகா என்றபடி.

3. அவை முதலாக—அம் முதற்பாவே முதலாக. முதல்—அடி.

"விடுபேறு மிகவிழைந்து, நீடுநினைந்து நெடிதிருந்து."

என அகவற் சீரான் வஞ்சித் தூக்குப் பிறந்தது. மாசேர்வாய் மாசேர்வாய் மாசேர்வாய் என வெண்பாவினுட் கலிப்பா பிறந்தது. பிறவும் அன்ன.

இனி, ஒருசாரார் வஞ்சிப்பாவினுங் கலிப்பா பிறக்குமாதலின் அது கூறி நிரம்பாதென்ப; (யா. வி. ப. உ0கூ) என்னை?

"விளங்குமணிப் பசும்பொன்னின்
விசித்தமைத்துக் கதிர்காண்று." (யா. வி. ப. உகூஅ)

என்னும் இரண்டு வஞ்சியடியும் ஒரு கலியடியாகச் சொல்லப் படுமென்பது அவர் கருத்து; அற்றன்று. அவை [1]யிரண்டு மாதற்கோர் கட்டளையிலவாம். [2]கட்டளையழிந்த கலிப்பாவே யெனினும், வஞ்சியடியாதற்கு ஒரு காரணம் இல்லை; தலை குலுக்கி [3]வலியச்சொல்லினுந் தன்சீரின்மையினென மறுக்க. அல்லதூஉம், ஒன்று ஒன்றினொடு ஒக்குங்காற் பிறப்பித்ததனொடு பிறந்ததொப்ப வேண்டுமென மறுக்க.

"வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மகிழ்ந்தும்."
(பட்டின. சுச-டு)

என்றக்காற் கலிப்பாவாகச் சொல்லியவழியும் அத்தூங்கலோசை யொடு ஒத்தல்வேண்டும், அதனின் அது பிறந்ததாயினெனமறுக்க. அல்லதூஉம் [4]அவ்விரண்டடியுங் கூட்டிச் சொல்லியவழி அகவலோசையாதலே வலிது; என்னை? [5]தன்னளவு விராய் வந்தமையின்.

---

1. இரண்டும்—இரண்டு பாவும்.

2. கட்டளை—வரையறை.

3. வலியச் சொல்லினும்—வலிய சொல்லினும் என்றும் பாடமுள்ளது. அதுவே பொருத்தம். வலியச் சொல்லினும் என்பதற்கு வலிந்து கோடலாகச் சொல்லினும் என்று பொருள் கொள்ளவேண்டும். அது தலை குலுக்கி என்பதனோடு இயைந்து தகுதியாகப் பொருடராது. அழியச் சொல்லினும் என்றும் பாடமுள்ளது. தன்சீர்—வஞ்சிச்சீர்.

4. அவ்விரண்டடி என்றது "விளங்குமணிப் பசும்பொன்னின், விசித்தமைத்துக் கதிர்காண்று" என்பதை. இது ஆசிரிய வுரிச்சீர் வந்தமையின் அகவலோசையாதல் வலிது என்க.

5. தன்னளவு—ஆசிரியத்தளவு.

'பண்புற' என்றதனுன் ஆசிரியப்பாவும் வெண்பாவும் இயல்பெனவும், ஒழிந்தன விகாரமெனவுங் கொள்க; [1]எனவே? வெண்பாவென்றதனுன் மூன்று பாவினுந் துள்ளிய கலியோசை யும் ஒருவகையான் [2]வெண்பா நெறித்தேயாம், இலக்கணக் கலியோசையன்றுயினுமென்பது கொள்க. (கஅ)

[வாழ்த்துப் பொருள் நான்கு பாவிற்கும் உரித்தெனல்]

சஉக. வாழ்த்தியல் வகையே [3]நாற்பாற்கு முரித்தே.

இது முற்கூறிய 'மும்முதற் பொருட்கண்' (சகஅ) ஒரு சாரானவற்றை வாழ்த்துதல் என்பதோராறும் உண்மையின் அப்பகுதி நான்கு பாவிற்கும் உரித்தென்கின்றது.

நால்வகைப்பட்டது பாவாகலின் அப்பாவினை நான்கென் றுன். வாழ்த்தியலென்றது 'வகை' என்றதனுன் மேற்கூறிய [4]மும்முதற் [5]பொருளின் அறுவகையும் பெரும்பான்மையெனப் படுமென்பதூஉம், அங்ஙனம் வாழ்த்துங்கால் தனக்குப் பயன் படுதலும் படர்க்கைப் பொருட்குப் பயன்படுதலுமென இரு வகையான் வாழ்த்துமென்பதூஉம், இனி முன்னிலையாக வாழ்த்து தலும் படர்க்கையாக வாழ்த்துதலும் என இருவகைப்படுமென் பதூஉம் எல்லாங் கொள்க. அங்ஙனம் வாழ்த்தப்படும் பொரு ளாவன:— கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அர சரும் மழையும் நாடு மென்பன. அவற்றுட் கடவுளை வாழ்த்துஞ் செய்யுள் கடவுள் வாழ்த்தெனப்படும். ஒழிந்த பொருள்களை வாழ்த்திய செய்யுள் அறுவகை வாழ்த்தெனப்படுமென்பது.

"மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைஞரல் பௌவ முடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்

---

1. எனவே என்பது ஏனை என்றிருத்தல்வேண்டும். "ஏனை வெண்பா நெறித்தே" என்று சூத்திரத்துள் வருதலின். நச்சினார்க் கினியருரையும் அவ்வாறே கூறுகின்றது.

2. வெண்பா நெறித்தே என்றது வெண்பா நெறித்தான கலியோசையாம் என்றபடி.

3. நாற்பாக்கும் என்றும் பாடமுள்ளது.

4. மும்முதற் பொருள்—அறம் பொருள் இன்பம்.

5. பொருளின் அறுவகை—பொருளின்கண் வரும் அறு வகை. பொருளின்கண் என்றிருப்பது நலம். அறுவகை என்றது அறுவகை வாழ்த்தினை.

பகுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணுக
வியன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
நீதற விளங்கிய நிகிரி யோனே.'' (நற்றி—கடவுள்)

என்பது, தெய்வவாழ்த்து.

'' கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலியன் மலிந்த கண்ணியன்
மார்பி னஃதே மையி னுண்ஞா
ணுதல நிமையா நாட்ட மிகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலு முண்டத் தோலா தோற்கே
யூர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே
செவ்வா னன்ன மேனி யவ்வா
னிலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்
றெரியகைந் தன்ன வவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா வமரரு முனிவரும் பிறரும்
யாவரு மறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமா னுரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
ருவி ருணிழற் றவிர்ந்தன்ரு லுலகே.'' (அகம்—கடவுள்)

என்பதும் அது. முன்னையது தனக்குப் பயன்பட வாழ்த்தி யது; பின்னையது உலகிற்குப் பயன்பட வாழ்த்தியது. பிற பாவினும் மருட்பாவினும் பிற பொருட்கண் வந்த வாழ்த்து வந்துழிக் கண்டுகொள்க.

வாழ்த்தென்பது அறமாகலின் அற முதலாகிய மும்முதற் பொருள்கள் (சுகஅ) என்புழி அடங்கும்பிற, இச் சூத்திரம் மிகையாலெனின்,—அற்றன்று; [1] புறநிலை வாழ்த்து முதலியன உள, அவை நீக்குதற்கு இது விதந்தோதினனென்பது. 'வாழ்த் தியல்' என்றதனான், இயற்கை வாழ்த்தெனப்படுவன இவை யெனவும், இனி வரும் புறநிலை வாழ்த்து முதலியன இயற்கை வாழ்த்தெனப்படா; ஒருவகையான் [2] வாழ்த்தின்பாற் சார்த்தி யுணரப்படுவதல்லதெனவும் கொள்க. (கoசு)

1. புறநிலை வாழ்த்து — தெய்வத்தைப் புற நிறுத்தி ஒரு மகனை வாழ்த்துவது.

2. வாழ்த்தின்பாற் சார்த்தி யுணரப்படுவதல்லதெனவும் என்பது S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பு. அது பொருத்தம்.

[புறநிலை வாழ்த்து இன்ன பாவிற்குரியவென்ல்]

சஉஉ. வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெருஅ.

இது, காற்பாக்கும் உரித்தன்றி வரையறைப்படும் வாழ்த்து வேறுபாடு உணர்த்துகின்றது.

இ—ள்: நினக்குத் தொழுகுலமாகிய தெய்வம் நின்னைப் புறங்காப்ப, இல்லறம் முதலிய செல்வத்தாற் பழியின்றிப் பூத்த செல்வமொடு புதல்வர்ப் பயந்து, புதல்வரும் இப்பெற் றியராக எல்லீரும் நீடு வாழ்வீராமினென்று தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்துவது புறநிலை வாழ்த்து. அங்ஙனம் வாழ்த் திய அச்செய்யுள் கலிப்பாவுறுப்பாகவும், வஞ்சிப்பாவினும் வருத லில்லை என்றவாறு.

தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்துதலிற் புறநிலை வாழ்த் தாயிற்று.

'' வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப''

என்றோதினமையின் வழிபடு தெய்வம் உள்வழியே புறநிலை வாழ்த்தெனப்படுவதென்பது. எடுத்துக்கொண்ட காரியத்துக்கு ஏதுவாகிய கடவு[ள் நிற்ப, அக்கடவு]ளாற் பயன்பெற நின்ரு னோர் சாத்தனை முன்னிலையாக்கி அவற்குக் காரியங் கூறுதலின் இது புறநிலையாயிற்று. 'கலிநிலை வகை' என்றதனாற் கலி வகைத்தாகிய பரிபாடற்கும் இஃதொக்கும். [1] இனி கடவுளாற் காக்கப்பட்ட சாத்தனை வாழ்த்தப்படாரெனவுஞ் சொல்லுப; அற்றன்று, கடவுள் வாழ்த்தென்ரல் அவ்வாறு பொருள் படாமையினென்பது. இவற்றுக்குச் செய்யுள்:

'' இமையா முக்க ணிலங்குசுடர் வாய்ந்த
வுமையொரு பாகத் தொருவன் காப்பநின்
பல்கிளைச் சுற்றமொடு நல்லறி னந்தி
நீபல வாழிய வாய்வாட் சென்னிநின்
னெருகுடை வரைப்பி லீழல் பெற்றுக்
கிடந்த வெழுகட னுப்ப
னுகலிரு விசும்பின் மீனினும் பலவே.''

எனவும்,

1. இனிக் கடவுளாற் காக்கப்பட்ட சாத்தனை என்பது கடவுளாற் காக்கப்படச் சாத்தனை என்றிருப்பது நலம்.

"திங்க் ளிளங்கதிர்போற் றென்றிங்க ளூர்த்தேவன்
மைந்தர் சிறப்ப மகிழ்சிறந்து—இங்கட்
கலிபெற்ற கற்றைச் சடைக்கடவுள் காப்ப
நிலைபெற்று வாழியரோ நீ."

எனவும் வரும்.

இனி, கலிப்பாவினுள் வருங்காற் கடவுண் முன்னிலையாக வரும்; என்னை?

"தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே." (சரு0)

என்றமையின் அது 'வாழ்த்தியல் வகை' என மேலேயடங் கிற்று; வஞ்சிப்பாவிற்கும் [1] அவ்வாறு கொள்ளப்படும்.

இச்சூத்திரம் பாவென்னும் உறுப்பிற்குப் பொருள் வரை யறுத்தது. மற்று 'நிற்புறங் காப்ப' என ஓருமை கூறிப் 'பொலிமின்' எனப் பன்மை கூறினதென்னையெனின்,—

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப."

என்றமையிற், புதல்வரொடுங் கூட்டிப் பாட அமையுமென்றற்கு அவ்வாறு கூறினனென்பது. (ககo)

[வாயுறை வாழ்த்து முதலியவும் இன்ன பாவிற்குரியவெனல்]

சஉக. வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉவென வவையு மன்ன.

இதுவும் பாக்களை மூன்றுக வரையறுக்கின்றது.

வாயுறை வாழ்த்தும், அவையடக்கியலும், செவியறிவுறூஉ வும் என மூன்றும் மேலைப் புறநிலை வாழ்த்துப்போல் வாழ்த் துப் பகுதியவாகலும் கலிநிலை வகையும் வஞ்சியும் பெருமையு முடையவென மாட்டெறிந்தவாறு; அவையாமாறு முன்னர்ச் சொல்லும்.

இ—ள்: வாய்—வாய்மொழி; உறை—மருந்து; [2] வாயுறை யென்பது, சொன்மருந்தெனப் பண்புத்தொகையாம். இனி, வாய்க் கட்டோன்றிய மருந்தென வேற்றுமைத்தொகையுமாம்: மருந்து போறலின் மருந்தாயிற்று. [3] அவன் சிறப்புக் கூறி வழுத்தி

1. அவ்வாறு—மேலேயடங்கியதாக

2. வாயுறை—மெய்ம்மையை (மெய்ப்பொருளை) உறுத்து வது. மெய்யறிவித்தில் என்று உரையாசிரியருங் கூறுவர்.

3. அவன் என்றது பின்வருஞ் சாத்தனை.

ஒருசாத்தற்குப் பயன்படச் சொல்லினமையின் வாயுறை வாழ்த் தெனப்படுமென்பது. மற்று, 'நிற்புறங் காப்ப' எனப் புறநிலை வாழ்த்திற்கு இடம் நியமித்தாங்கு இதற்கும் இடநியமங் கூறுமோ வெனின், அது மாட்டேற்றுனே அடங்குமென்பது.

அவையடக்கியல்—அவையை வாழ்த்துதல், அவையடக்குத லென்பது, இரண்டாம் வேற்றுமைத்தொகை; அடக்கியலென் பது விளைத்தொகை; தானடங்குதலாயின் அடங்கியலெனல் வேண்டும்; அஃதாவது, அவையைத்தாமடங்குமாற்றால் இனிய வாகச் சொல்லி அவரைப் புகழ்தல்.

செவியறிவுறூஉ — ஒரு சாத்தற்குச் செவியறிவுபடுத்து அவனை வாழ்த்துதல்; என அவையும் அன்ன—என்ற இம் மூன்றும் அத்தன்மையவேயாம் என்றவாறு.

தெய்வத்தொடு பட்டமையிற் புறநிலை வாழ்த்து முற்கூறி இவை பிற் கூறினுன். இவற்றுள், வாயுறை வாழ்த்து முன் னிலைக்குரிமையின் அதன்பின் வைத்தான்; முன்னிலைக்கே உரித் தாயினுஞ் செவியறிவுறூஉவினை ஈற்றுக்கண் வைத்தான், பயம் பெறுவானையே நீ [1] இன்ன குணத்தையாவாயென்று புகழ்பட வாழ்த்திச் சொல்லப்படுதல் வேறுபாடுடைமையினென்பது. இங்ங னம் வரையறுக்கின்றது நால்வகைப் பாவாகிய உறுப்பினை நோக்கியாகலின், அவற்றுள் இவ்வுறுப்புடைய நால்வகைச் செய் யுட்கும் [2] இவ்வுறுப்பினதிலக்கணம் எய்துவித்துக்கொள்ளப் படும்; கொள்ளவே, ஆசிரியப் பாட்டும் வெண்பாட்டும் மருட்பா வும் எல்லா வாழ்த்திற்கும் உரியவென்பதூஉம், கலிப் பாட்டும் வஞ்சிப் பாட்டும் புறநிலை முதலிய நால்வகைப் பொருட்கும் உரியவல்லவென்பதூஉம் பெற்றும்; என்னை?

"மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தனிநிலை யின்றே." (தொ. செய். அடு)

என்றமையின். (ககக)

1. இன்ன வருணத்தையாவாய் என்பது முற் பாடம்; அது இன்ன குணத்தையாவாய் என்று திருத்தப்பட்டது. அங்ங னம் பாடமுண்மையின். ருவுக்கும் குவ்வுக்கும் வேறுபாடின்மை யின் ருவ்வைக் குவ்வாகக் கொண்டு வகர அகரஞ் சேர்க்கப்பட் டது. இதுவே உண்மையாதலை நச்சினர்க்கினியருரை நோக்கித் தெளிக; செவியறிவுறூஉச் செய்யுட்களையு நோக்கியுணர்ந்து கொள்க. S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்புப் பொருத்தம்.

2. இவ்வுறுப்பினதிலக்கணமென்றது — நால்வகைப் பாவி னிலக்கணத்தை.

[வாயுறை வாழ்த்தாவது இதுவெனல்]

சூஉ.ச. வாயுறை வாழ்த்தே வெங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
[1] ருங்குத லின்றி வழிநலி பயக்குமென்
ரேம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே.

இது, முறையானே வாயுறை வாழ்த்துணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: முற் பருவத்துக் கைத்தும் பிற்பருவத்து உறுதி பயக்கும் வேம்பும் கடுவும்போல [2] வெய்யவாய சொல்லினைத் தடையின்றிப் பிற் பயக்குமெனக் கருதிப் பாதுகாத்துக் கிளக்கும் இளப்பினுன் மெய்யாக அறிவுறுத்துவது வாயுறை வாழ்த்தெனப்படும் என்றவாறு.

'வாயுறை' என்பது மருந்தாகலான் [3] 'வேம்புங் கடுவும் போல' என்றுனென்பது; அதற்குச் செய்யுள்:

"இருங்கட னுடுத்த பெருங்கண் மாநில
முடையிலை நடுவண தெடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவல
ரிடுதிரை மணலினும் பலரே கடுபினைக்
காடு பதியாகப் போகித் தத்த
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே
யதனுல், நீயுங் கேண்மதி யத்தை வியா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்க
ணுப்பிலை அ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
நிழிபிறப்பினை னீயப்பெற்று
நிலங்கல னுக விளங்குபலி மிசையு
மின்னு வைகல் வாரா முன்னே

1. தாங்குதலின்றி—தடையின்றி. தாங்குதல்—தடுத்தல்.

2. வெய்யவாய் இன்சொல்லினை என்பது வெய்யவாயின சொல்லினை என்று பாடம். அதுவே பொருத்தமாகும். இது எழுதுவோரால் இன் சொல் எனப் பிரித்தெழுதப்பட்டது போலும். வெய்யவாய சொல் என்பது S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிற் கொண்ட பாடம். அதுவும் பொருத்தமே.

3. வேம்புங் கடுவும்போல என்றதனுல் வேம்புங் கடுவும் முதற் கைத்தும் பின் உறுதி பயக்கும் மருந்தாயினற்போல இச்சொல்லும் முன் வெறுப்பைக் கொடுத்துப் பின் உறுதிபயக்கும் மருந்தாகுமென்பதாம்.

செய்ந்நீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே." (புற. நகூந)

பிறவும் அன்ன. (ககஉ)

[அவையடக்காவது இதுவெனல்]

சூஉரு. அவையடக் கியலே யிறைபத் தெரியின்
வல்லா கூறினும் வகுத்தனர் கொண்மினென்
றெல்லா மாந்தர்க்கும் வழிமொழிந் தன்றே.

இது, முறையானே அவையடக்கிய வுணர்த்துகின்றது.

இ—ள்: [1] வல்லாதன சொல்லினும் அவற்றை ஆராய்ந்து கொண்மினென அவையகத்தாரெல்லார்க்கும் வழிபடு கிளவி சொல்லுதல் அவையடக்கு என்றவாறு.

'வல்லுதல்' என்பது, ஒன்று வல்லணுதல்; ஒருவன் வல்லனவற்றை 'வல்ல' என்பவாகலான் வல்லாதனவற்றை [2] 'வல்லா' என்றுனென்பது. அதற்குச் செய்யுள்,

"திரைத்த விரிக்கிற் நிரைப்பினு வாய்போ
லுரைத்த வுரைபோகக் கேட்டு—முரைத்த
பயன்றவா செய்வார் சிலரேதந் நெஞ்சந்
தியன்றவா செய்வார் பலர்."

இது, பூதத்தார் அவையடக்கு. 'அறிறபத் தெரியின்' என்றதனுனே, யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைய கொச்சகவொருபோகினும் அவையடக்கியல் சிறுபான்மை [3] தொடர் நிலைக்கண் வருமெனக் கொள்க. (ககந)

[செவியுறையாவது இதுவெனல்]

சூஉசு. செவியுறை தானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்ப
ணவிதல் கடனெனச் [4] செவியுறுத் தன்றே,

இஃது, இறுதி நின்ற செவியுறை யுணர்த்துகின்றது.

இ—ள்: செவியுறை—செவிமருந்து, அதுவும் ஒப்பினுகிய பெயர்; தானேயென நின்ற ஏகாரம் பிரிநிலை; பொங்குதலின்றி—

1. வல்லாதன—வல்லன அல்லாதன.

2. வல்லா—வல்லாதன (=மாட்டாதன).

3. சிந்தாமணி முதலிய தொடர்நிலை நோக்கி இவ்வாறு கூறினர்போலும்.

4. செவியுறுத்தற்றே எனவும் பாடம்.

பெருக்கமின்றி, புரையோர் நாப்பண் அவிதல் கடன் எனச் செவியுறுத்தன்று — பெரியோர் நடுவண் அடங்கி வாழ்தல் கடப்பாடெனச் சொல்லிச் செவிக்கணறிவுறுத்துவது செவியறிவுறூஉ என்றவாறு.

அஃது அடங்கி வாழ்வார்க்குப் புகழாதலான் வாழ்த்தின் பாற்பட்டது; அதற்குச் செய்யுள்:

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்." (புறம். சு)

என்பதனுள்,

"பணியிய ரத்தைநின் குடையோ முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
யிறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ நேந்துகை யெதிரே."

எனவும்,

"என்று,
மின்சொல் [1]லெண்பதத்தை யாருமறி பெரும" (புறம். சo)

எனவும்,

"பணிவுடைய னின்சொல்ல னுத லொருவற்
கணியல்ல மற்றுப் பிற." (குறள். கூடு)

எனவும் வரும்.

இத்துணையும் பாவினது பெயரும் முறையும் எண்ணும் பொருட்கு [2]உரியவற்றுக்கண் வரையறையுங் கூறியவாறு. (ககச)

[குட்டம் இன்னபாவுள் இவ்வாறு வருமெனல்]

சஉஎ. [3]ஒத்தா ழிசையு மண்டில யாப்புங்
குட்டமு நேரடிக் கொட்டின வென்ப.

இதுவும், மேனின்ற அதிகாரத்தாற் பாவிலக்கணமே கூறுகின்றது.

இ—ள்: ஒத்தாழிசைக் கலியின்கண்ணும் மண்டில யாப்பின்கண்ணும் குட்டம் வருங்கால் அளவடிக்குப் பொருந்திவருந்தத்தம் பாக்கள் என்றவாறு.

1. எண்பதம்—காண்டற்கெளிய செவ்வி.

2. உரிய—உரியவாய பாக்கள். வரையறை — இன்ன பா இன்ன பொருட்குரிய என்னும் வரையறை.

3. மூன்றையும் எழுவாயாகக் கொண்டனர் நச்சினர்க்கினியர். அதுவே சூத்திரப் போக்கிற்குப் பொருத்தம்.

பாவென்பது, [1]அதிகாரத்தாற் கொள்ளப்படும். ஒத்தாழிசைக்கலி அளவடியுஞ் சிந்தடி குறளடியும் விராய் நிற்குமாயினும் [2]அளவல்லாவடியேனும் அளவடிக்குப் பொருந்துமாற்றாற் கொளுத்தப்படுமென்பது.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்." (கலி. கக)

என அளவடிக்கண் துள்ளலோசை வந்தது.

"போரவுணர்க் கடந்தோய்நீ
புரைமருதம் பிளந்தோய்நீ." (விளக்கத்தனார் பாடல்)

எனக் குறளடிக்கண்ணும் அவ்வாறே துள்ளலோசை வந்தவாறு கண்டுகொள்க.

"நீரின் றமையுந் நெயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து நேரத் தேருஞ்
சார னுடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
நேரத் நேரத் நேர்போல் லாதே."

என இஃது இடையடி குறைந்தமையிற் குட்டமெனப்பட்டது. நாற்சீரடி யாத்து வருவன மண்டில யாப்பெனப்படும். அவை போலக் குட்டமும் நேரடிக்குப் [3]பாப் பொருந்தின என்றவாறு.

ஈற்றின் மண்டிலமோதியதென்னையெனின், — அது சொல்லாக்காற் குட்டமே நேரடிக்கு ஒட்டுவதாவான் செல்லுமாகலினென்பது. மண்டிலமென்பன:—

"மாருக் காதலர் மலைமறந் தனரே
யாருக் கட்பனி வரலா னுவே
வேரு மென்றேள் வகிளநெகி ழும்மே
கூரும் தோழியான் வாழு மாறே." (யா. வி. ப. கூசுகூ)

என்றற்றொடக்கத்தன.

ஒத்தாழிசையை முன் வைத்ததென்னையெனின், — மண்டிலம்போல்வனவும் குட்டம்போல்வனவும் கலிப்பாவினுட் சிறுபான்மையென்றற்கென்பது. [4]அவை அளவடிக்குரிமை யாண்

1. அதிகாரம்—பாவதிகாரம்.

2. அளவல்லாவடி—குறளடி, சிந்தடி. இவையே குட்டம். சிந்தடி கலியில் வாராதென்பது இவர் கருத்தாகலின் அது இடையிற்சேர்க்கப்பட்டது. எண்ணுறுப்புப்பற்றி வரும் இருசீரடியைப் பிறர் சீச்சீரடியெனினும், இவர் அதனை மறுத்து (457) இருசீரடியென்று கூறலின் அது ஆராயத்தக்கது.

3. பாப்பொருந்தின—பாவாகப்பொருந்தின. பா—ஓசை.

4. அவை—ஒத்தாழிசையும், மண்டிலமும்.

டுப் பெறுதுமெனின்,—அவை தம்மை உறழுங்கால் [1] ஓதிய நிலவகையானும்,

"இன்சீர் வகையி னேந்தடிக்கு முரிய." (தொ. செய். ருச)

என்னுஞ் [2] சீர்வகையானும் பெறுதுமென்பது. இதனது பயம்: [3] குறளடி வஞ்சிப்பாப்போலப் பா வேறுபடாவென்பது. ஒட்டி என்றதனான் இத்துணைபோகாது சிறுவரவிற்றாய் வரும் வெண் பாக்கண்ணு மென்பது கொள்க. (ககரு)

[குட்டம் ஆசிரியத்துள் ஈற்றடிக்கண்ணும் வருமெனல்]

சஉஅ. **குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்.**

இது, குட்டத்திற்கோர் சிறப்பு விதி.

இ—ள்: குட்டம் [4] எருத்தடியின்கண்ணும் வரும் என்ற வாறு.

மேல் ஆராய்ச்சிப்பட்ட குட்டம் இடை வருதலன்றி ஒரு பாட்டின் ஈற்றயலடிக்கண்ணே வந்தொழிதலும் உண்டன்றே? அதுவும் பாவிற்கேற்பக் குறைக்கப்படுமென்பான்,

"குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்."

என்றான், குறைத்தற்குக் கூறினனல்லனென்பது. இதனை இவ் வாறு கூறவே மேற்கூறிய குட்டம் ஒத்தாழிசைக்கட்போல இடையிடை வருமென்பது பெற்றாம். (அகம். உ)

"உடைதிரைப் பிதிர்வின் பொங்குமுன்
கடல்போற் றோன்றல காடிறந் தோரே."

என, ஈற்றயலடி முச்சீரான் வந்தது. பிறவும் அன்ன. (ககசு)

[மண்டிலமும் குட்டமும் வருமிட மிதுவெனல்]

சஉக. **மண்டிலங் குட்ட மென்றிவை யிரண்டுஞ்**
[5] செந்தூக் கியல வென்மனர் புலவர்.

1. ஓதிய நிலம்—குறளடி முதலிய நிலம்.

2. சீர்வகை—சீர்வகையடி. சீர்வகையடியும் அளவடிக்குரிய என்று கூறலின் அதனானும் அளவடிக்குரிமை கொள்ளப்பட்டது என்பது கருத்து.

3. குறளடி வஞ்சிப்பாப்போல வேறுபடா என்றது குட்டம் குறளடியான் வரினும் ஓசை வேறுபடா, அவ்வப் பாவோசையே பெற்று வரும் என்றபடி.

4. எருத்தடி—ஈற்றயலடி.

5. செந்தூக்கு—ஆசிரியம்.

இது, மண்டிலமும் குட்டமும் வருமிட ணுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற்கூறிய மூன்றனையும் இன்ன பாவென்பது உணர்த்தினான்; அவற்றுள், இறுதி நின்ற மண்டிலமும் குட்ட மும் ஆசிரியப்பாவினை உறுப்பாகவுடைய என்றவாறு.

எனவே, ஒத்தாழிசையாகிற் கலிப்பாவினை உறுப்பாக வுடைத்தென்பது பெறுதும்; என்னை?

"ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே." (தொ. செ. கசுஅ)

என்பவாதலான்.

மேற்கூறிய மண்டிலவாசிரியத்தினை, நிலைமண்டிலமெனவும் அடிமறிமண்டிலமெனவும் பெயரிட்டு வழங்குவாரும் உளர் (யா. வி. சூ. எசு—சு); நின்றவாறு நிற்றலும், அடிமறித்துக் கொள்ளினும் பொருள் திரியாது நிற்றலுமுடையவென்பது போலும் அவர் கருத்து. அடிமறித்தல் பொருள்கோட் பகுதி யாகலான் அஃதமையும்; அங்ஙனங் கொள்ளின் நிரனிறை முத லிய பொருள்கோட் பகுதியானுஞ் செய்யுள் வேறுபடுமென மறுக்க. இனி, குட்டமும் இருவகைத்தென்ப; இணைக்குற ளாசிரியப்பா நேரிசையாசிரியப்பாவென: அவை அவ்வாறு கொள் ளின் (யா. வி. சூ. எக—உ) [1] இழுக்கென்னை?

"குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்." (தொ. செ. ககசு)

என்று [2] இருவகையாற் கூறினமையின் என்றலுமொன்று. இனி ஒன்றாக வழங்குதலே வலியுடைத்து.

"குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்."

என ஒருமை கூறியவதனான் [3] ஒழிந்தவழி இரட்டித்துக் குறைய வேண்டுமென்பது கொள்க. மற்று,

1. இழுக்கே என்பது இழுக்கென்னை என்று S. கனக சபாபதிப்பிள்ளை பதிப்பிற் காணப்படுகின்றது. அதுவே பொருத் தம். என்றலும் ஒன்று என்று கூறியதை நோக்கும்போது முன் சில வரி தவறியதுபோலக் காணப்படுகின்றது. அன்றேல் அது வேண்டியதில்லை.

2. இருவகை—குட்டம் இடையிடை வரலும், எருத்தடி பெற்று வரலும் என்னும் இருவகை.

3. ஒழிந்தவழி—எருத்தடி அல்லாவிடத்து.

"ஒத்தாழிசையு மண்டியலாப்பும்." (சூஉள)

என்றவழிக் கலிப்பா முற்கூறியதென்னையெனின், குட்டம் ஆண்டுப் பாவின்றுவருகலின் ஆசிரியத்திற்கும் அதனை முற்கூறினான்; இனி, முறையானே வெண்பாக் கூறுமென்பது.

குட்டமென்பது [1] வழக்குச் சொல்லாற் செய்பு வென்பாரு முளர். நாற்சொல்லானுமன்றிச் செய்யுள் செய்யப்படாமையின் அது குட்டமென்றல் நிரம்பாது. ஒத்தாழிசையென்பதும் எல்லாச் செய்யுண்மேலுஞ் செல்லுமெனவும் உரைப்ப; பாவும் இனமுமெனப் பருத்துரைப்பார்க்காம், அது பொருளாவதெனமறுக்க; அல்லதூஉம், [2] ஒரோவொன்றே வருவது ஒத்தாழிசையெனப்படாவென்பது. செந்தூக்கென்பது ஆசிரியப்பாவென்றவாறு; பாவினைத் தூக்கெனவுஞ் சொல்லுப. 'இயல்' என்பது அப்பாவானே கடக்குமென்றவாறு. இதனும் இன்ன செய்யுட்கு உரித்தெனப் பாவினை வரையறுத்துரைத்தலாம். (ககஎ)

[வெண்பா யாப்பான் வருஞ் செய்யுள் இதுவெனல்]

சஙo. நெடுவெண் பாட்டே குறுவெண் பாட்டே
கைக்கிளை பரிபாட் டங்கதச் செய்யுளை
தொக்கவை யெல்லாம் வெண்பா யாப்பின.

இது, வெண்பாவென்னும் உறுப்பினை இன்னுழிப்பாவா மெனப் பொருளுஞ் செய்யுளுட்பற்றி வரையறுக்கின்றது.

இ—ள்: நெடுவெண்பாட்டும் குறுவெண்பாட்டும் கைக்கிளையும் பரிபாடலும் அங்கதச் செய்யுளுமென ஐந்தும் தம்மின் ஒத்து வெண்பாவென்னும் உறுப்பினையே வகுக்கப்படும் என்றவாறு.

நெடுவெண்பாட்டென்பன:— காமுடைய பன்னீரடியுயர்பு, இழிபு ஏழடியாக வருவனவென்பது; எனவே, நாற்சீர் அளவடியாயினுற்போல நாலடியான் வருதலே அளவிற்பட்டதாகலான் ஐந்தடி முதலாக வருவனவெல்லாம் நெடுவெண்பாட்டென்

1. வழக்குச் சொல்லாற் செய்யுள் என்பது — வழக்குச் சொல்லாற் செய்த செய்யுளென்றிருத்தல்வேண்டும்.

2. ஒரோவொன்று—ஒவ்வொன்று; மூன்று பாட்டு ஒத்து வருவதன்றித் தனித்தனி வருவது ஒத்தாழிசையெனப்படாது என்பது கருத்து.

றலே வலியுடைத்து. குறுவெண்பாட்டென்பன:— இரண்டடியான் மூன்றடியான் வருவன. குறள்வெண்பா சிந்தியல்வெண்பா வெனப்படலும் ஒன்று; எனவே, நான்கடியான் வருவன அளவியல் வெண்பாவெனப்படும். கைக்கிளைப் பொருண்மைக்காகின் மருட்பாவினையுங் 'கைக்கிளை' என்றான். பரிபாடலென்பது, பிரிந்துவருவது; அஃதாவது, கலியுறுப்புப்போலாது பலவடியும் ஏற்றுவருவது. அங்கதமென்பது,—[1] முகவிலக்கு முதலாகிய விலக்குறுப்பாகியும் பிறவாற்றானும் [2] அவை பொருளாக வருவன. 'ஒத்து' என்பது, இலக்கணத்தில் நிரியாதென்றவாறு. இதனது பயம்: கைக்கிளை வெண்பாவினுன் வரினும் [3] கலிப்பாவின்பாற்படுமென்பது. பரிபாடலுஞ் சிற்றுறுப்பு வகையான் ஒப்புமையுடையவென்பது கொள்க. அல்லதூஉம், குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் பலவாகியும் ஒன்றுய் அடங்குமென்பதூஉமாம்.

இனி, [4] அல்லாதார் வெண்பாவினை ஐக்கினவுஞ் சொல்லுப. அவை தனிச்சொற் பெற்றும் பெறுதும் வருமெனவும் [5] அவ்வாறு வருங்கால் ஈற்றடி ஒழித்த எல்லாத் தனிச்சொற் பெறுதலும் அவற்றை ஒன்றொன்றனோடு பரிமாற்றித் தனிச்சொற் கொடுத்து உறழ்வனவுமாகிப் பலவாமென்பது.

அங்கதச் செய்யுளென்பது பண்புத்தொகை. உம்மைத் தொகையென்பார் செய்யுளென்பதும் வேறென்ப; அதற்கு விடை முன்னர்ச் சொல்லுதும்; [6] 'எல்லாம் வெண்பா யாப்

1. முகவிலக்கு முதலாகிய விலக்குறுப்பு என்பனை கூத்த நூற்குரியனபோலும்.

2. அவை என்பது வசை என்றிருத்தல்வேண்டும். நச்சினர்க்கினியருரை நோக்குக.

3. கலிவெண்பாட்டு கைக்கிளைப் பொருளில் வருமென 472-ம் சூத்திரவுரையுட் கூறலின் கலிப்பாவின்பாற்படுமெனக் கூறினர்போலும். ஒப்புமை—கலியோடொப்புமை.

4. அல்லாதார்—தொல்காப்பியரல்லாதார். அவர் யாவர் என்பது புலப்படவில்லை.

5. அவ்வாறு—தனிச்சொற் பெற்று. பரிமாறல்—கொடுத்து மாறல்.

6. எல்லாம் வெண்பாயாப்பின என்பதனைச் செயற்படுத்து அவற்றுள் எனப் பிரிக்க. செயல்—செய்கை. யாப்பு என்பதைப் பாட்டு என்று கொள்ளாது யாத்தல் என்று பொருள்கொள்க என்பது கருத்து. செய்கை—தொழில்.

பின' என்பதனை செயற்படுத்தவற்றுள் அங்கதமும் கைக்கிளையும், மற்றப் பாக்களும் உறுப்பாக வருமென்பதுபடும். (ககஅ)

[கைக்கிளைச் செய்யுள் இவ்வாறு வருமெனல்]

சஙக. கைக்கிளை தானே வெண்பா வாகி
யாசிரிய வியலான் முடியவும் பெறுமே.

இஃது, எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வெண்பா உறுப்பாகி வருமென்றான், அற்றன்றி வெண்பாவினோடு ஆசிரியப்பாவும் உறுப்பாகக் கைக்கிளை வரும் என்றவாறு.

அங்ஙனம் வருவது மருட்பாவாகலாற் கைக்கிளைப்பொருளை மருட்பாவிற்குரித்தென்பது பெற்றும்; பெறவே,

"கலிநிலை வகையும் வஞ்சியும் பெரு." (தொ. செ. ககo)

என்புழி, விலக்கப்படாத ஆசிரியப்பாவும் வெண்பாவும் உறுப்பாக வருதலின், [1] வாழ்த்தியல்வகையும் புறநிலை வாழ்த்து முதலாயினவும் [2] கைக்கிளைப் பொருளாக வரும் மருட்பாவென்பது பெற்றும். கைக்கிளையதிகாரப்பட்டது கண்டு அதனை ஈண்டுக் கூறினான். ஒழிந்த புறநிலை வாயுறை செவியறிவுறூஉக்களும் பொருளாக மருட்பா வருமென்பது முன்னர் அளவியலுள் (சஎஉ) சொல்லும். இவற்றுக்கெல்லாஞ் செய்யுளும் ஆண்டுக் காட்டுதும். (ககக)

[பரிபாடல் இவ்வாறு வருமெனல்]

சஙஉ. பரிபா டல்லே தொகைநிலை விரியி
னிதுபா வென்னு மியனெறி யின்றிப்
பொதுவாய் நிற்றற்கு முரித்தென மொழிப.

இது, பரிபாடற்காவதோர் புறனடை யுணர்த்துதல் நுதலிற்று.

1. வாழ்த்தியல்வகையும் என்பது வாழ்த்தியல் வகையுள் என்றிருத்தல் நலம்.

2. கைக்கிளைப் பொருளாக — கைக்கிளையும் பொருளாக என்றிருத்தல்வேண்டும். பின்வரும் வாக்கியத்தாலறியப்படும்.

இ—ள்: பரிபாடல் [1] வெண்பாவுறுப்பாக இன்னபாவென்ப தணராமைப் பொதுப்பட நிற்றற்கும் உரித்து என்றவாறு.

"மண்ணுர்ந் திசைத்த முழவொடு கொண்டதோள்
[2]கண்ணு துடன்விழுஉங் காரிகை கண்டார்க்குத்
தம்மோடு நிற்குமோ நெஞ்சு." (கடவுள் வாழ்த்து)

எனப் பரிபாடல் வெண்பா உறுப்பாக வந்தது.

"ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலைத்
தீயுமிழ் நிறலொடு முடிமிசை யணவர." (பரி. க)

என்பது வெண்டளையும் ஆசிரியத்தளையும் விராய்வந்து துள்ள லோசைபடச் சொல்லவும்படுதலின்,

'இதுபா வென்னு மியனெறி யின்றிப் பொதுவாய் நின்றது' எனப்படும். உம்மை இறந்தது தழீஇயிற்று. மற்றிது கலிப்பாட்டிற்கும் ஒக்கும் பிறவெனின்,— [3] ஒவ்வாதாகாதே? ஆசிரியன் இவ்வாறு கூறினமையினென்பது; அல்லதூஉங் கலிக்கு ஓதிய இலக்கணமின்மையானும் பரிபாடலெனவேபடும் பெரும்பான்மையுமென்பது. தொகுத்து விரித்தபா நான்கனுள்ளும் வேறுங்கால் அது வெண்பாவினன் யாக்கப்படாது பொதுவகையான் யாக்கப்படுமென்றவாறு.

[பரிபாடற்குரிய உறுப்பும் பொருளுமுணர்த்தல்]

சஙஙு. கொச்சக மராகஞ் சுரிதக மெருத்தொடு
செப்பிய நான்குந் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.

இது, மேற் கூறியவகையாற் பரிபாடற்கேற்ற பாவுறுப் பினையெடுத்து விரிகூறி இத்துணை உள்ளுறுப்புடைத்தென்கின்றது. உள்ளுறுப்பென்பன முப்பத்துநான் [4] குறுப்பான் எண்ணப்படாவோவெனின்,—அவை எல்லாச்செய்புட்கும் பொதுவாகலான்

1. வெண்பா உறுப்பாக என்பது—வெண்பா உறுப்பாக வருதலேயன்றி என்றிருத்தல்வேண்டும். நச்சினார்க்கினியர் உரை நோக்குக.

2. கண்ணோடுடன் விழுஉம் எனவும் பாடம்.

3. ஒவ்வாதாகாதே என்றது ஒவ்வாதல்லவா என்றபடி. ஆகாதே என்ற இடைச்சொல் அல்லவா என்னும் பொருளில் வந்து வழங்குவதை இறையனாரகப்பொருளுரையிற் பரக்கக் காணலாம்.

4. உறுப்பான்—உறுப்போடு.

அவற்றுடெண்ணுது இவற்றை இப்பாவிற்குறுப்பாகக் கூறினு னென்பது. மேல் வருகின்ற கலியுறுப்பிற்கும் இஃதொக்கும்.

இ—ள்: செப்பிய நான்குறுப்புங் கலிக்குறுப்பாகச் சொல் லப்பட்டவகையானே வரும் அவை ஈண்டும் என்றவாறு.

தனக்கு என்றதனுன் அவையல்லா உறுப்புளவென்பது முன்னர்ச் சொல்லும்.

"சொற்சீரடியும்," (தொ. செ. கஉஉ)

என்புழிக் காண்க,

கொச்சகமென்பது, ஒப்பினுகிய பெயர்; ஓராடையுள் ஒரு வழியடுக்கியது கொச்சகமெனப்படும்; அதுபோல ஒரு செய்யு ளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சகமெனப்பட்டது. குறிலிணை பயின்ற அடி அராகமெனப்படும். சுரிதகமென்பது, அடக்கியலெனப்படும். எருத்தென்பது, தரவு. இவை நான்குறுப் பாக வருவது பரிபாடலென்றவாறு. பெரும்பான்மையுங் கொச் சகவுறுப்புப் பயின்று வருதலின் அதனை முன் வைத்தான். [1] அராகம் எழுவாயாகாமையின் அதனை இடை வைத்தான். சுரிதகமென்பது, எஞ்ஞான்றும் ஈற்றதாகலான் அதனை அதன் பின் வைத்தான். எருத்தினை ஈற்றுக்கண் வைத்தான், அதனை யின்றியும் வரும் பரிபாடலென்றற்கும் [2] இஃது இடைவருமென் றற்குமென்பது.

உதாரணம்:—

"வானு ரெழிலி மழைவள நந்தத்
தேனுர் திமைய மகலியி னிழிதந்து
நான்மாடக் கூட லெதிர்கொள்ள வானு
மருந்தாகுந் தீநீர் மலிதுறை மேய
விருந்தைஇ ரமர்ந்த செல்வநின்
றிருந்தடி தலியுறப் பரவுதுந் தொழுதே." (இது தரவு.)

"ஒருசார், அணிமலர் வேங்கை மராஅ மகிழம்
பிணிநெகிழ் பிண்டி நிவந்துசேர் போங்கு
மணிநிறங் கொண்ட மலை.

ஒருசார், தண்ணறுந் தாமரைப் பூவி னிடையிடை
வண்ண மரையிதழ்ப் போதின்வாய் வண்டார்ப்ப
விண்வீழ் திருக்குங் கயமீன் விரிதகையிற்
கண்வீழ் திருக்குங் கயல்.

1. எழுவாய்—முதல் வருவது.

2. அஃது என்றும், இடையும் வரும் என்றும் இருத்தல் வேண்டும்.

ஒருசார், சாறுகொ ளோதத் திசையொடு மாறும்
றுழவி னுதை பயின்றறி விழந்து
திரிதரு மார்த்து நடுநரு மீண்டித்
திருநயத் தக்க வயல்.

ஒருசார், அறத்தொடு வேதம் புணர்தவ முற்றி
விறற்புகழ் நிற்ப விளங்கிய கேள்வித்
திறத்திற் றிரிவில்லா வந்தண ரீண்டி
யறத்திற் றிரியா பதி." (இவை நான்கும் கொச்சகம்.)

ஆங்கொருசார், உண்ணுவ பூசுவ பூண்ப வுடுப்பவை
மண்ணுவ மணிபொன் மலைய கடல
பண்ணிய மாசறு பயந்தரு காருகப்
புண்ணிய வணிகர் புனைமறு கொருசார்.
விலைவதை விலையெவன் மென்புல வன்புலக்
களம ருழவர் கடிபறு பிறசார்
ஆங்க, அனையவை நல்ல நுகரூடு மின்ப
மியல்கொள நண்ணி யவை." (இது கொண்டுநிலை.)

"வண்டு பொரேரென வெழ
வண்டு பொரேரென வெழுந்
கடிப்புகு வேரிக் கதவமிற் றேரூட்டிக்
கடிப்பிகு காதிற் கனங்குழை தொடர
மிளிர்மின் வாய்த்த விளங்கொளி நுதலா
ரூர்களிற் றன்ன செம்ம லோரும்
வாயிருள் பனிச்சை வரிசிலைப் புருவத்
தொளியிழை யோங்கிய வொண்ணுத லோரும்
புலத்தோ டனைஇப் புகழனிந் தோரு
நலத்தோ டனைய நாணனிந் தோரும்
விடையோ டிகலிய விறனடை யோரு
நடைமட மேவிய நாணனிந் தோருங்
கடனிரை திரையிற் கருநரை யோருஞ்
சுடர்மதிக் கதிரெனத் தூநரை யோரு
மடையர் குடையர் புகையர்பூ வேந்தி
யிடையொழி வின்றி யடியுறையா ரீண்டி
விளைந்தார் விளைவின் விழுப்பயன் றுய்க்குந்
துளங்கா விழுச்சீர்த் துறக்கம் புரையு
மிருகே ழுத்தி யணிந்த வெருத்தின்
நகைகெழு செல்வ னகர்.
வண்டொடு தும்பியும் வண்டொடையா ரூர்ப்ப
விண்ட கடகரி மேகமொ டதிரத்
தண்டா வருவியோ டிருமுழ வார்ப்ப
வரியுண்ட கண்ணரோ டாடவர் கூடிப்
புரிவுண்ட பாடலோ டாடலுந் தோன்றக்
கூடு நறவொடு காமமகிழ் விரியக்
கூடா நறவொடு காமம் விரும்ப
விலைய பிறவு மிவைபோல் வனவு
மனையவை யெல்லா மியையும் பூநையிழைப்
பூமுடி நாகர் நகர்." (இவையும் கொச்சகம்.)

"மணிமரு டகைவகை நெறிசெறி யொலிபொலி
யவிர்நிமிர் புகழ்கூந்தற்
பிணிநெகிழ் துணையிணை தெளியொளி நிகழ்ஞெகிழ்
தெரியரி மதுமகிழ் பரிமலர் மிழுண்கண் வாணுதலோர்
மணிமயிற் குழிலெழி லிகன்மலி நிகழ்பிறி
நிகழ்கடுங் கடாக்களிற் றண்ணை லவரோ
டணிமிக வந்நிறைஞ்ச வல்லலிகப்பப் பிணிநீங்க
நல்லவை யெல்லா மியைதருந் தொல்சீர்
வரைவாய் தழுவிய கல்சேர் கிடக்கைக்
குளவா யமர்ந்தா னகர்." (இது முடுகியல்.)

நிகழொளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்
நிகழ்பெழு வாங்கித்தஞ் சீர்சிறத் தேற்றி
மகர மறிகடல் வைத்து நிறுத்துப்
புகழ்சால் சிறப்பி னிருநிறத் தோர்க்கு
மமிழ்ந்து கடைய விருவயி ணுணுகி
மிகாஅ விருவட மாழியான் வாங்க
வுகாஅ வலியி னெருதோழங் கால
மருஅ நிமிர்தாருந் தாம்.
மிகாஅ மறலிய மேவலி யெல்லாம்
புகாஅ வெதிர் பூண்டாருந் தாம்.
மணிபுரை மாமலி ஞாறிய ஞால
மணிபோற் பொறுத்தாருந் தாம்.
பணிவில்சீர்ச் செல்விடைப் பாகன் றிரிபுரஞ் செற்றுழிக்
கல்லுயர் சென்னி யிமயவி ணுணுகித்
தொல்புகழ் தந்தாருந் தாம்." (இவையும் கொச்சகம்.)

"அணங்குடை யருந்தலை யாயிரம் விரித்த
கணங்கொள் சுற்றத் தண்ணலை வணங்கி
நல்லடி யேத்திநிற் பரவுது
மெல்லேம் பிரியற்கெஞ் சுற்றமொ டொருங்கே."
(என்பது ஆசிரியச் சுரிதகம்.)

"அறவோ ருள்ளா ரருமறை காப்ப."

என்னும் பரிபாடலுள்,

"செறுநர்கர் விழையாச் செறிந்தநங் கேண்மை
மறுமுறை யானு மியைக நெறிமாண்ட
தண்வரல் வையை யெமக்கு."

இது, வெள்ளைச் சுரிதகத்தான் இற்றது.

"காமங் கண்ணிய நிலைமைத் தாகும்."

என்பது, காமப்பொருள் குறித்து வருமென்றவாறு. கண்ணிய என்றதனானே, [1] மும்பொருளுமன்றிக் கடவுள் வாழ்த்தினும் மலை விளையாட்டினும் புனல் விளையாட்டினும் பிறவுமெல்லாங் காமங்கண்ணியே வருமென்பது. என்னை?

1. மும்பொருள்—அறம் பொருள் இன்பம்.

"எல்லேம் பிரியற்கெஞ் சுற்றமொ டொருங்கே."

எனத் துணைபிரியாமை காரணமாகத் தொழுதேமென்றலின்.

"காமரு சுற்றமொ டொருங்குநின் னடியுறை
யாமையைத் தொன்றுபு வைகலும் பொலிகென
வேமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வநின் றுணிழ றெழுதே."
(பரி-க: சுஉ - ரு)

என்பதும் அது,

இனிச் செப்பிய நான்கு என்றது, [2] எண்ணப்பட்ட நான்கனையுமன்று; அன்னவற்றோடு மேற்கூறிய நான்கு பாவும் இடை வந்து விரவுமென்பது. அதுவும் நோக்கிப்போலும் பரிபாடல் என்றது,

"எரிமலர் சினைஇய கண்ணை பூவை
விரிமலர் புரையு மேனியை மேனித்
திருஞெமிர்ந் தமர்ந்த மார்பினை மார்பிற்
றெரிமணி விளங்கும் பூணினை மால்வரை
யெரிதிரிந் தன்ன பொன்புனை யுடுக்கையை
.....
நாவ லந்தண ரருமறைப் பொருளே." (பரி-க: சு-கசு)

என ஆசிரியம் வந்தது.

"நின்னெக்கும் புகழ்நிழலவை." (பரி-க: நுரு)

என்பது வஞ்சித்தாக்கு. பிறவும் அன்ன காட்டுப. அது பொது வாய் நிற்றலும் உரித்தென்றதனுன் அடங்கும்.

இனி, செப்பிய நான்கு என்றதனுன் அராகமின்றி வருதலும் கொச்சகம் ஈற்றடி குறைந்து வருதலும், அவ்வழி அசை சீராகி இறுதலும், மேற் கலிப்பாவிற்குச் செப்பிய சுரிதகமாதலுங் கொள்க. (கூஉக)

[சொற்சீரடியும் முடுகியலடியும் பரிபாடற்குறுப்பாமெனல்]

சருச. சொற்சீ ரடியு முடுகிய லடியு
மப்பா நிலைமைக் குரிய வாகும்.

இதுவும் பரிபாடலுறுப்பு உணர்த்துகின்றது.

1. பிரியற்க என்றது காமங்கண்ணிற்று.

2. எண்ணப்பட்ட நான்கனையுமன்று—கொச்சகம் அராகஞ் சுரிதகம் எருத்து என்று எண்ணப்பட்ட நான்கனையு மாத்திரமன்று.

இ—ள்: எண்ணப்பட்ட இரண்டும் பரிபாடற்குள்ள உறுப்பாய் வரும் என்றவாறு.

சொற்சீரும் முடுகியலுமென்னுது அடியென்றதனான் [1] மேற் கூறிய அடியொடு தொடர்ந்தல்லது வாராவென்பதாம். சொற் சீரடியாமாறு முன்னர்ச் சொல்லும். முடுகியலடியென்பது முடுகியலோடு விராய்த் [2] தொடர்ந்தொன்றுகிய வெண்பாவடி. அராகமென்பது, தாமே வேறுசில அடியாகி வருவன. இவையன்றிக் குறிலிணை பயில்வன முடுகியலெனவும், குறிலிணை விரவி வருவன அராகமெனவுஞ் சொல்லுவாரும் [3] உளர்.

"முடுகுவண்டை,
மடியிறந் தோடி யதனே ரற்றே." (தொ. செ. உகச)

என்பவாகலின் மேலதேயுரை.

உரிய என்றதனான், இத்துணை பயின்றுவாரா இவ்விரண்டுங் கலிப்பாவினுளென்பது கொள்க. எனவே, அராகவுறுப்புத் [4] தேவபாணிக்கல்லது அக் கலிக்கண் யாண்டும் வாராதாயிற்று. (கஉ)

[சொற்சீரடியாமாறும் அதன் வகையும்]

சூகூ. கட்டுரை வகையா லெண்ணெடு புணர்ந்து
முட்டடி யின்றிக் குறைவுசீர்த் தாகியு
மொழியசை யாகியும் வழியசை புணர்ந்துஞ்
சொற்சீர்த் திறுதல் சொற்சீர்க் கியல்பே.

மேலெண்ணப்பட்ட சொற்சீரடியாமாறுணர்த்துதல் நூதலிற்று.

இ—ள்: சொற்சீரடி இக்கூறிய நான்குவகையாலும் வந்து பயிலும் என்றவாறு.

[5] கட்டுரைவகையான் எண்ணெடு புணர்ந்தது:

1. மேற்கூறிய அடி—வெண்பாவடி.

2. தொடர்ந்தொன்றுகிய என்பது முற்பதிப்புப் பாடம். அது, தொடர்ந்தொன்றுகிய என்று S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிற் காணப்படுகின்றது. அது, பொருத்தமே. முடுகு வண்ணச்-சூத்திரம் நோக்குக. (தொல். செய். உகூ)

3. உளர் என்றது—இளம்பூரணரை.

4. தேவபாணி—கடவுள் வாழ்த்துச் செய்யுள்.

5. கட்டுரை—பாட்டன்றி அதுபோலத் தொடுத்துச் சொல்லும் வாக்கியம். இது பேச்சு எனப்படும். எண்ணெடு புணர்

"வடவேங்கடந் தென்குமரி
யாயிடை." (பாயிரம்)

எனவும்,

"அஇஉ,
எஒ என்னு மப்பா லைந்தும்." (தொ. எழு. கூ)

எனவும் இவை கட்டுரைக்கட் சொல்லுமாறுபோல எண்ணினமையிற் கட்டுரைவகையான் எண்ணெடு புணர்ந்தன; இனி, [1] 'முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகும்' இயல்பாய் வருமாறு:—

"நின்னெக்கும் புகழ்நிழலவை." (பரி—க: ருடு)

எனவும்,

"கறையணி மிடற்றினவை
கண்ணணி நுதலினவை
பிறையணி சடையினவை."

எனவும் வரும்.

'முட்டடியின்றி' என்ற இவை [2] தூக்குப்பட்டு மூடியுமடியல்ல என்றவாறு.

மேற்காட்டிய பரிபாடற் செய்யுளுள் 'ஒருசார்' என்பது [3] ஒழியசை; என்னை? அது சீராகலின் அதனெடு சில அசை கூடியன்றி அசையெனப்படாமையின். 'ஆங்கு' என வருந் தனிச்சொல் [4] வழியசையெனப்பட்டது, என்னை? அஃது,

தல்—எண்ணுதலோடு பொருந்தல். வடவேங்கடந் தென்குமரி என்பது, வடவேங்கடமும் தென்குமரியும் என எண்ணுதற்கண் வந்தது. அ இ உ எ ஒ என்பனவும் அகரமும் இகரமும் உகரமும் எகரமும் ஒகரமும் என எண்ணுதல் குறித்து வந்தன.

1. முட்டுதல்—நிறைதல். முட்டடி—நிறைந்த அடி. இது முற்றடி எனவும் பாடம், எனினும், குறைவு என்பதற்கு முட்டு என்பது முரணுய் நிற்றலின் அப்பாடமே பிறப்புடையது. காட்டிய உதாரணங்களில் சீர் குறைந்து அடி நிறைவுபெறுமை காண்க.

2. தூக்குப்படுதல்—அவ்வப் பாவுக்குரிய ஓசையைக் காட்டற்கு அடி முட்டத் துணிக்கப்பட்டு நிற்றல்.

3. ஒழியசை—தன்னை யசையென்று பகுத்துச் சொல்லற் கேற்ற சீர்கள் வாராமையால் அசைத்தன்மை ஒழிந்து நிற்பது. ஒருசார் என்பதனெடு வேறுஞ் சீர்கள் வந்து அடி நிரம்பிற்றுன் அது அசையெனப் பிரிக்கப்படும். அவ்வாறின்மையின் ஒழியசையென்றுயிற்று.

4. வழியசை—தன்னெடு பின்னும் அசை வந்து சேர்தற் குரியதாய் நிற்பது. ஒழியசைபோலத் தனியசையாய் நில்லாது பின்னும் சில அசையொடு புணர்ந்து வருவது வழியசை என்பர் நச்சினார்க்கினியர்.

அசையராய் நின்று சொற்சீரடியாகலின். மற்றுச் [1] சொற்சீரடியினை 'அசையென்றதென்னையெனின், இயலசை தானேயும் ஒழியசையாய் நிற்குமென்றற்கென்பது.

"ஒருஉக், கொடியிய னல்லார் குரைஞ்றத் துற்ற
முடியுநிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்று தவர்." (கலி. அ அ)

என்புழி 'ஒருஉ' என நின்ற இயலசைதானே ஒழியசையாய் நின்றது.

"உருவது போலுமென் னெஞ்சு ; [2] எள்ளித்
தொருபுட னுடுவ போலு மயில்." (கலி. கூ கூ)

என்பது, வழியசைபுணர்ந்த சொற்சீரடி ; என்னை ? 'எள்ளி' என நின்ற சீரின்வழித் 'தொருபு' என வந்தவசை, 'உருவதுபோலும்' என்னுந் தொடையொடு பொருந்தி,

"உருவது போலுமென் னெஞ்செள்ளித்
தொருபுடன்."

எனப் புணர்ந்து நின்றுற்போல்வதோர் சுவையை செய்து நின்றமையின். கொச்சகம் [3] இடைநிலைப். பாட்டெனப்படாமையின்.

"தொருபுட னுடுவ போலு மயில்."

என நாற்சீரடியாலும் வருவதாயிற்று, வையறையின்மையின். இங்ஙனம் வந்தமையின் சொற்சீரடி மேல் [4] எண்ணவும்படும். இவை [5] கலிக்கண் வருங்கால் ஒத்தாழிசைக்கண் முடுகியலடி வாராதென்பதூஉம், சொற்சீரடி வருஞான்றுத் தனிச்சொல்லாகியன்றி வாராதென்பதூஉம், உறழ்கலிக்கண்ணும் முடுகியலடி உரித்தன்றென்பதூஉங் கொள்க.

1. சொற்சீரடியினை அசையென்ற தென்னையெனின் என்னும் வினை ஒழியசை வழியசை என்னும் இரண்டனையும் சேர்த்து வினவி நின்றது; சீரன்றித் தனியசையும் ஒழியசையாய் நிற்கும் என்றற்கு என்பது அதற்கு விடை. ஒருஉ என்னும் இயலசையாகிய தனியசை ஒழியசையாக வந்தமை காண்க.

2. எள்ளி என்னும் சீரை சொற்சீரடியாக்காது மேனின்ற முச்சீர் அடியோடு கூட்டி நாற்சீரடியாக்க, உருவது என்பதற்குத் தொருபு என்பது எதுகையாயமைந்து சுவைசெய்து நிற்குமென்றபடி. வழி—பின்.

3. இடைநிலைப் பாட்டு—தாழம்பட்ட ஓசையின்றி வரும் தாழிசைப் பாட்டு.

4. எண்ணவும்படும் என்றது அளவியலிற்படுத்து எண்ணவும்படும் என்றபடி.

5. இவை—சொற்சீரடி.

சொற்சீர்த்திறுதலென்பது :— ஒருசொற்தொருமொழி முதலிய சொற்களெல்லாம் தாமே சீராய் அடிபிறுதிக்கண் அடிப்பட முடிந்து அடியாதலிலக்கணத்த அவையென்றவாறு.

இனி, ஒழியசையினையும் வழியசையினையுங் [1] கூ(றினு)னென்னுமோவெனின்,—

"சீர்கூ னுதா னேரடிக் குரித்து." (தொ. செ. சகூ)

என்றமையின் ஈண்டு அசை கூனுகாது; அல்லதூஉம், ஆண்டுக் கூனெனப்பட்டதும் ஈண்டுச் சொற்சீரடியெனப்பட்டு அடங்கு [2] மென்பதனனு முடைத்தென்பது. இவையெல்லாம் பரிபாடற்கண்ணதே கூறினுனையினும் ஒழிந்த பாவினுட் சொற்சீரடி வருமென விதந்தவழி, [3] அதுவே இலக்கணமாக வரும் ஆண்டுமென்பது. 'இயல்பு' என்றதனுனே யாண்டு வரினும் அஃதிலக்கணமென்பது பெற்றும்; அல்லதூஉம்,

"தொகைநிலை யிரி." (தொ. செ. கஉo)

என்ற மிகையாற் பரிபாடற்கு உரியவாகக் கண்டுகொள்க. அவையாவையோவெனின்,— [4] முடுகியலடி மேற்காட்டிய பரிபாடலுள்,

"மணிமருடகை." (ப—1140)

என்பது முதலாகக்

"குளவா யமர்ந்தா னகர்."

என்பதீறுகக் கண்டுகொள்க. (கஉகூ)

[அங்கதச் செய்யுளின் வகை]

சகூசு. அங்கதந் தானே யிரிறபத் தெரியிற்
செம்பொருள் கரந்த தெனவிரு வகைத்தே.

இது, முறையானே அங்கதச்செய்யு ளுணர்த்துதல் நுதலிற்று.

1. கூறினுனென்னுமோ எனின் என்பது கூனென்னுமோ எனின் என்றிருத்தல்வேண்டும். மூன்று பதிப்பிலும் பிழையாய் உள்ளது.

2. என்பதனனுமுடைத்து என்பது—என்பது என்றவரையிலிருந்தாலமைவும் மேலுள்ளன வேண்டியதின்று. இதில் யாதோ பிழையுளது.

3. அதுவே என்பது இதுவே என்றிருப்பது நலம் இது—இங்கே சொல்லிய சொற்சீர்க்குரிய இலக்கணம்.

4. அடிக்கு என்பது முற்பதிப்பிலுள்ள பாடம். இஃது அடிக்கு உதாரணம் என்றிருக்கிறது பொருந்தும்.

இ—ள்: அது செம்பொருள் காந்தது என்று இருவகைத் தாம் என்றவாறு.

அங்கதமென்பது வசை; அதனை இருவாற்றுங் கூறுக வென்பான் இது கூறினன். அவையாமாறு முன்னர்ச் சொல்லும். 'அரிறப' என்றதென்னையெனின்,—அவை புகழ்போன்று வசையாதலும் பட்டுத் தோன்றும் மயக்கமுடையவாகலின் மயக்கமறத் தெரியினென்றவாறு.

"நூற்றுவர் கூலைனைக் குறங்கறுத் திடுவான்" (கலி. ருஉ)

என்பது, புகழ்போன்று வசையாயிற்று; என்னை? கொன்றனியினுங் [1] குறங்கினகத்துத் தண்டுகொண்டு எற்றுதல் குற்றமாதலின் என்பதறிக. கொடைமடங் கூறுதல், வசைபோன்று புகழெனப்படும். அஃது அங்கதமாகாதென்பான் 'அரிறப' என்றனென்பது; பிறவும் அன்ன. (கஉச)

[செம்பொருளங்கதம் இதுவெனல்]

சஙஎ. செம்பொரு ளாயின வசையெனப் படுமே.

இது, முறையானே செம்பொரு ளங்கதமுணர்த்துதல் துதலிற்று.

இ—ள்: வாய் காவாது சொல்லப்பட்ட வசையே செம்பொரு ளங்கதமெனப்படும் என்றவாறு; அஃது,

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்ற—மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள."

என்பது [2] ஏழிற்கோவை அவ்வை முனிந்து பாடியது.

"எம்மிகழ் வோரவர் தம்மிகழ் வோரே
யெம்மிக ழாதவர் தம்மிக ழாரே
தம்புக ழிகழ்வோ ரெம்புக ழிகழ்வோர்
பாரி யோரி நள்ளி யெழினி
யாஅய் வேகன் பெருந்தோன் மலையனென்
றெழுவரு ளொருவனு மல்லை யதனு

1. குறங்கினைக் கதத்தண்டு கொண்டு எற்றல் எனவும் பாடம்.

2. ஏழிற்கோவை என்று S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலுமுள்ளது. அது வே பொருத்தம். நச்சினார்க்கினியருரை நோக்குக.

னின்னை நோவ தெவனே
யட்டார்க் குதவாக் [1] கட்டி போல
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யாணு முளனே தீம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் [2] தேளத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுருத் தேனே."

எனவும் வரும்.

கலிப்பாட்டினுள் வருவன [3] வசைக்கூத்தினுட் கண்டு கொள்க.

"அறச்சுவையிலன் வையெயிற்றினன்
மயிர்மெய்யினன் மாசுடையினன்
பொய்வாயாற் புகழ்மேவலன்
மைகூர்ந்த மயலறிவினன்
மேவருஞ் சிறப்பி னஞ்சி
யாவரும் வெரூஉ மாவிக் கோவே.

என்பது, வஞ்சிப்பாட்டு. இது வெண்பாவினுள் வருதலே பெரும்பான்மை. (கூஉரு)

[பழிகரப்பங்கதம் இதுவெனல்]

சஙஅ. மொழிகரந்து சொல்லினது பழிகரப் பாகும்.

இது, பழிகரப்பங்கதம் உணர்த்துகின்றது.

இ—ள்: வசைப்பொருளினைச் செம்பொருள் படாமல் [1] னிசைப்பது பழிகரப்பங்கதம் என்றவாறு.

மாற்றரசனையும் அவனிளங்கோவினையும் வசை கூறுமாறு போலாது தங்கோனையும் அவனிளங்கோனையும் வசைகூறுங்கால் [5] தாங்கியுரைப்பர்; [6] அவைபோலப் பழிப்பனவென்றவாறு; அது,

"நன்குயர்ந்த செங்கோலாய் நாடிய நின்னிளங்கோக்
குன்றெறிந்த சேந்த னெனமதியா—வன்றிறத்து
நின்றெதிர்க்குந் தானையோ டெல்லா நிகர்த்தார்மேல்
வென்றெறியும் வேலே விடும்."

1. கட்டி—ஒரு சேனைத்தலைவன்.
2. தேளம்—இடம்.
3. வசைக்கூத்து—ஒரு நாடக நூல்போலும்.
4. இசைத்தல்—சொல்லுதல்.
5. தாங்கி—பாதுகாத்து.
6. அவை—தாங்கியுரைப்பன.

என வந்த [1]வெண்டொடைச் செய்யுளுட் கண்டுகொள்க. இதனுள்,

"வென்றெறியும் வேலே விடும்."

என்பது, [2]'முனையகத்துப் படையோடும்' என வசை கூறுவான் [3]'குன்றெறிந்த சேந்தனே'ப்போல எறிந்தானெனப் புகழ்ந்தான்போலக் கூறினனென்பது.

"இன்றுள னெயி னன்றும னென்றநின்
னுடுகொள் வரிசைக் கேற்பப்
பாடுவன் 'மன்னுல் பகைவரைக் கடப்பே." (புற. நூ)

என்பதும் அது. (கஉசு)

[அங்கதச் செய்யுள் இவ்வகையானும் வகுக்கப்படுமெனல்]

சகக. செய்யுட் டாமே யிரண்டென மொழிப.

மேற்கூறிய இரண்டனையும் இவ்வகையானும் வகுக்கப்படுமென்கின்றது.

இ—ள்: செம்பொருட் செவியுறை, செம்பொருளங்கதம், பழிகரப்புச் செவியுறை, பழிகரப்பங்கதமென நான்கு கூறுபடும் மேற்கூறிய அங்கதமிரண்டும் என்றவாறு.

"பாய்த்துள், விக்குள்" என்றாற்போலச் 'செய்யுள்' என்பதூஉந் தொழிற்பெயர். அவையாமாறும் அவற்றது வேறுபாடும் முன்னர்ச் சொல்லும்.

இனி, ஒருவனுரை: இவற்றுள் தொகைச்சூத்திரத்துட்,

"கைக்கிளை பரிபாட் டங்கதஞ் செய்யுள்." (தொ. செ. ககஅ)

என்று ஓதிச் செம்பொருளங்கதமுஞ் செய்யுளுமென இரண்டாக நிறுத்தான்; நிறுத்தமுறையானே அங்கதமுணர்த்திச் செய்யுளுணர்த்தியவிதந்தானென்பது; அற்றன்று, எல்லாப் பாட்டுஞ் செய்யுளெனப்படுதலின் ஒன்றனையே செய்யுளெனலாகாது; அல்லதூஉம்,

---

1. வெண்டொடைச் செய்யுள்—வெண்பா.

2. முனையகத்துப் படையோடும் விடும் என முடித்தல் வேண்டும். தான் தனித்து நின்றுவிடாது படையோடும் விட்டதே வசைபோலும்.

3. குன்றெறிந்த சேந்தன்—குமரன்.

"அங்கதச் செய்யு ளென்மனார் புலவர்." (தொ. செ. கஉகூ)

என வருகின்ற சூத்திரத்து ஓதுமாதலான் இவையும் அங்கதச் செய்யுளே. [1]மேலைச் சூத்திரத்துள்ளும் அங்கதச்செய்யுளென்பதே பாடமென்பதூஉம் அதனுற் பெறுதுமென்பது. [2]அல்லாத பாடம் ஓதினும் அங்கதச் செய்யுள் செய்கைமேலென அதனைத் [3]'தாய்க்கொலே' என்றதுபோல இரண்டாவதன் பொருண்மைப்படுத்துக்கொள்க. (கஉஎ)

[செவியுறையங்கதம் இதுவெனல்]

சகo. துகளொடும் பொருளொடும் புணர்ந்தன் ருயிற் செவியுறைச் செய்யு ளதுவென மொழிப.

இது, மேற்கூறிய அங்கதச் செய்யுட்பகுதி இரண்டனுள் ஒன்று கூறுகின்றது.

இ—ள்: மேற் செம்பொருளும் பழிகரப்புமெனப்பட்ட இரண்டும் அங்கதச் செய்யுளெனப்படுதலேயன்றி, அதனனே அரசர்க்குப் பொருள்வருவாயாகச் செய்தானேயெனினும் அது செவியுறையங்கத மெனவும்படும் என்றவாறு.

துகளாவது: படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்னும் இவற்றைப் பாதுகாவாதிருத்தல். [4]'அரசியல்' என்பனவற்றுனே, தங்கோன் அறியாமல் வருத்தலை வருமாயின் அவற்றை உள்ளவாறுரைத்தலுமொன்று. மாற்றரசன் நமரது ஊரடுகின்ற நாட்டவர் யாதிவை நுதலியனவேதுவாகப் போய்ச் சார்ந்தவற்கு நாட்டழிவு கூறுதலுமொன்று. அன்ன பிறவும் அவற்கு உறுவகையாகலான் அவற்றை உள்ளவாறு உணர்த்திப் பொருள்செய அவற்குப் பொருள் செயல்வகை கூறினமையின் அது செவியுறைப்பாற்படுமென்பது; அது:

---

1. மேலைச் சூத்திரம் என்றது "நெடுவெண் பாட்டே அங்கதச் செய்யுள்" என்ற சூத்திரம்.

2. அல்லாத பாடம் அங்கதஞ் செய்யுள் என்பது. அதனை அங்கதச் செய்யுளைச் செய்தல் எனப் பொருள்கொள்க என்றபடி. செய்யுள்—செய்தல்.

3. தாய்க்கொலே—தாயைக் கொல்லல்.

4. இவ்வாக்கியங்கள் சரியான பிரதி கிடையாமையால் திருத்தமுடியவில்லை.

" அறவை யாயி னினதெனத் திறத்தன்
மறவை யாயிற் போரொடு திறத்த
லறவையு மறவையு மல்லே யாகத்
திறவரி தடைத்த திண்ணீர்க் கதவி
னீண்மதி லொருசிறை யொடுங்குத
ணுணுத்தக வுடைத்திது காணுங் காலே." (புற—சச)

என இது செம்பொருட் செலியுறை; பிறவும் அன்ன. இவை [1] முகவிலக்கினுட் பயின்று வருமென்பது. இனி, மொழிகரந்து சொல்லினும் இஃதொக்கும்; இனி,

[2] " புகழொடும் பொருளொடும்."

என்பதூஉம் பாடமாக உரைப்ப. புகழும் பொருளும் புணர்ப்பது அங்கதமாயின் அஃதமையும்; அற் [3]றன்றாயின் ஈண்டாராய்ச்சியின்றென்பது; என்னை?

" வசையொடு நசையொடும் புணர்ந்தன் றாயி
னங்கதச் செய்யுள்." (தொ. செ. கஉசு)

என மேலோதுமாதலின் இவனென்பது. (கஉஅ)

[ஏனை அங்கதம் இதுவெனல்]

சசக. வசையொடு நசையொடும் புணர்ந்தன் றாயி
னங்கதச் செய்யு ளென்மனார் புலவர்.

இஃது, ஒழிந்த அங்கதச் செய்யுளுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற்கூறிய அங்கதச் செய்யுள் வசையேயன்றி அவ்வசையானே [4]நசை தோன்றச்செய்வது செவியறிவுறை யெனப்படாது அங்கதச் செய்யுளெனவே படும் என்றவாறு.

எனவே, இல்லாதன சொல்லி நகைப்பொருட்டாகச் செய்யினும் அங்கதச் செய்யுளெனப்படும் என்றவாறு. அவை, விலக்

1. முகவிலக்கு—ஒரு நாடகநூல் போலும்.
2. இங்ஙன முரைப்பவர் இளம்பூரணர்.
3. அன்றாயின்—பயவாதாயின். அங்கதம் பயவாதாயின் அதனைக் குறித்தது நமக்காராய்ச்சியில்லை என்பது கருத்து. அங்கதம் புகழும் பொருளும் பயவாதென்பதே கருத்து.
4. நசையென்றது விருப்பத்தாற்றுங்கியுரைத்தலிற்போலும். பின், 'இல்லாதன சொல்லி நகைப்பொருட்டாக' என்றும், 'வெகுளியும் பொருளும் நகையும்' என்றும் வருதலின் இது நகையென்று மிருக்குமோ எனபது ஆராயத்தக்கது. ஏனையுரைகளிலும் நசையென்றே காணப்படலின் திருத்தாதிருந்தனம். நசை என்பதே பாடமாயின் நகை என வருவன நசை என்றிருத்தலவேண்டும்.

கியற் செய்யுளுட் கண்டுகொள்க. இதுவுஞ் செம்பொருளாகியும் பழிகரப்பாகியும் வருமெனவுணர்க; எனவே, கூறப்பட்டனவெல்லாம் வெகுளியும் பொருளும் நகையும் பயப்பனவாயின. (கஉக)

[கலிப்பாவின் வகை]

சசஉ. ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே
கொச்சக முறழொடு கலிநால் வகைத்தே.

இது, கலிப்பாவெனப்பட்ட உறுப்பினை இத்துணைப் பகுதியான் வருமென அது வருஞ் செய்யுள்பற்றி விரி கூறுகின்றது.

இ—ள்: ஒத்தாழிசை — ஒத்தாழிசை யென்னும் உறுப்புடைச் செய்யுள்: [1]ஒத்து ஆழ் இசையை ஒத்தாழிசையென்றன்; அது, வினைத்தொகையாகலின் [2]மருவியவகையான் முடியுமென்பது. [3]தாழிசையென்பது, தானுடைய துள்ளலோசைத்தாம்; இது [4]முறைமையிற் பெற்ற பெயர்; எனவே, தரவு வேறுபடினும் வேறுபடாதென்பதூஉம், கொச்சகக் கலிபோல் வனவற்றுள் வரும் இடைநிலைப் பாட்டுக்கள் அவ்வாறு தாழ முடையவன்றியும் வருமென்பதூஉங் கொள்க. இது பண்மை பற்றிப் பெற்ற பெயர்; தாழிசையின்றியும் ஒத்தாழிசை சிறுபான்மை வருதலின். இனி, ஒழிந்த உறுப்பு நோக்கத் தாழிசை சிறந்தமையின் தலைமையாற் பெற்ற பெயரெனவும் அமையும்.

" வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வவ்வலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை
வெள்வேல் வலத்திர் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன ளென்றோழி." (கலி. ஓ)

1. ஒத்து ஆழிசை—ஆழிசை=வினைத்தொகை. ஆழ்தல்—தாழ்தல். அதுபற்றித் தாழிசை என்றுங் கூறுப. "தந்துமுன் னிற்றலிற் றரவே தாழிசை — ஒத்தாழ்ந் திறுதலின் ஒத்தாழிசையே" என்பது யாப்பருங்கல விருத்திப் பிரமாணச் சூத்திரம்.
2. மருவியவகை—தொன்றுதொட்டு வந்தமுறை.
3. தாழிசை—துள்ளலோசை—தாழம்பட வருவது.
4. முறைமை—இயல்பு. துள்ளிச்செல்லும் இயல்புபற்றி வருதலின் தாழிசை" என்று கருத்தாம். தாழ்தல் — துள்ளல்; தாழம்பட்ட வோசை என்பதும் இக்கருத்தாம்.

என்பது தாழ்ந்த ஓசைத்தன்றி ஒத்தாழிசைக் கலியுள் தாவு வந்தது; எனவே, இவ்வேறுபாடு, கட்டளைக்கலி அல்லாதவழி யென்பது பெற்றும். [1] அதுவன்றே, இதன்முழிசையுள்ளும் நேரீற்றியற்சீரும் வந்தென்பது; என்னை?

"காழ்விரி கவையார மீவரு மிளமுலை
போழ்விடைப் படாஅமன் முயங்கிய மையாரென்
ரூழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்." (கலி. ச)

என்புழி "அறியே னென்னும்" என ஈண்டைத் தாழிசை தோறும் இரண்டு நேரீற்றியற்சீரும் வந்தன. பிறவும் அன்ன.

"நீயே,
வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமாண் மரிஇய வம்பு தொரிதியே;
இவட்கே, சுணைமா னீலங் கூரெரிர் பவைபோ
லினைநோக் குண்க னீர்நில் லாவே." (கலி. எ)

எனக் கொச்சகக் கலியுள் இடைநிலைப் பாட்டுத் தாழிசையின்றி வந்தது; பிறவும் அன்ன.

இனிக், கலிவெண்பாட்டு — கலிப்பாவாகிய வெண்பாட்டு; இது பண்புத்தொகையானே [2] முன்மொழிப் பொருட்டாயிற்று. [3] கொச்சகமென்பதும் உறுப்பினைற் பெற்றபெயர். [4] உறழ்கலி யென்பது, பொருள்பற்றி வந்த பெயர். ஒத்தாழிசையென்பது தம்மினைத்து வருதற் [5] கட்டளையுடைமையானும் கலிப்பாவிற் குச் சிறந்து வருமாகலானும் முன்வைத்தான்; என்னை இது கலிப்பாவிற்குச் சிறந்தவாறெனின்,—தூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசை அறுபத்திரட்டு வந்தனவாகலின் அது பெருவர வின எனப்பட்டுச் சிறப்புடைத்தாயிற்று. அது நோக்கி முன்

1. அதுவன்றே — கட்டளைக்கலியல்லாமையினன்றே. வரு முதாரணச் செய்யுளுள் 'அறியேன்', 'என்னும்' என்பன நேரீற் றியற்சீர்.

2. முன்மொழிப் பொருட்டு என்பது முன்மொழியாகிய கலி என்ற மொழிக்கண் பொருள் சிறந்து வந்தது என்பது கருத்து.

3. உறுப்பு—கொச்சகம் என்னும் உடையுறுப்புப்போறலி னைற் கொச்சகம் எனப்பட்டதாகலின் உறுப்பினைற் பெற்ற பெயர் என்றார். (சங.ந.)

4. ஒன்றோடொன்று மாறுபட்ட பொருளையுடைமையான் உறழ்கலி என்று பெயராயிற்று என்றபடி.

5. கட்டளை—நியமம்.

வைத்தான். [1] இது, பாவென்னும் உறுப்பிலக்கணங் கூறுகின்ற இடமாகலின் கலிவெண்பாட்டினை ஒத்தாழிசைக்குங் கொச்சகத் திற்கும் இடை வைத்தான்; [2] அதுபோல உறுப்புடைத்தாகி யும் வருமென்றற்கு. அதன்பின் கொச்சகப்பா வைத்தான்; அது தரவும் போக்குஞ் சிறுபான்மையின்றியும் வருகலின். எல்லாவற் றுப் பின்னும் உறழ்கலி வைத்தான்; அவைபோலாது சுரிதக மின்றி வருதலே பெரும்பான்மையாகலானென்பது. அஃதேல், உறழ்கலியுங் கொச்சகக் கலியுள் அடங்காதே? அதுவும் அடக் கியலின்றியும் யாப்பினும் பொருளினும் வேற்றுமை உடைத் தாய் வருமாலெனின், — அற்றன்று; அடக்கியலின்றி வரின் அடி நிமிர்தலும் ஒழுகிசைத்தாகலும்வேண்டும்; உறழ்கலியா யின் அடி நிமிராதும் ஒழுகிசையின்றியும் வருமென்பது. அத் தனையான் இதனை வேறென்பதென்னை? ஒன்றுகவோதுக வெனின்,—அற்றன்று. மேற் கூறிவருகின்ற செய்யுளெல்லாஞ் சீரும் அடியும் பாவும் பொருளுமெனச் சிலவுறுப்புவகையான் வேறுபடுகின்றதன்றிப் பிறிதின்மையின் அவற்றின் வேறு பாடுஞ் சிலவாக நோக்கி [3] ஒன்றென்னுமாகலின் அது கடா வன்றென்பது; அல்லதூஉம், நூல் செய்புங்கான் மரபென்பது வேண்டும்; என்னை?

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூரு மிருவகை யியல." (தொ. மர. கூந)

என்பதனான், முதனூற்காயினும் மரபு வேண்டுதலின். [4] அது வன்றே நிலம் நீர் தீ வளி விசும்பென்னும் ஐம்பெரும் பூதங் களும், அவற்றதியைபாகிய பொருள்களும், அஃறிணையான் வழங்கினும் பொருளின் இயைபாகிய மக்களுந் தேவரும் முத லாயினுரை உயர்திணை வாய்பாட்டான் வேறுபடுத்து வழங்கு கின்றதென்பது. மற்று உறழ்கலியென்னும் வழக்குண்டாயி னன்றே மரபொடு மாறுபடுவதெனின்,—மரபென [5] ஆசிரியர் வழக்கும் அடங்குமாகலின் அது கூறினான்; அல்லாக்கால், ஒழிந்த செய்யுளும் வேறுபாடிலவாமன்றோவென்பது.

1. பா—செய்யுட்குரியமுப்பத்துநான்கு உறுப்பினுள் ஒன்று.

2. அது—ஒத்தாழிசை.

3. ஒன்றென்னுமாகலின்—ஒன்றென்னுகலின் என்றிருத் தல்வேண்டும். பதிப்புக்கள் மூன்றும் பிழை.

4. அதுவன்றே—மரபு வேண்டுதலினன்றே.

5. ஆசிரியர் வழக்கு—செய்யுள் வழக்கு.

இனி, பரிபாடலுங் கலிப்பாவினுள் அடங்குமென்பாரும் உளர். கலியும் பரிபாடலுமென வெட்டுத்தொகையுள் இரண்டு தொகை தம்மின் வேறுகளின் அவ்வாறு கூறுவார் செய்யுள் அறியாதாரென்பது; அல்லதூஉம், [1] அராகவுறுப்பில்லாத முடுகியலடியும், கொச்சகக்கலியல்லாத கலிப்பாவினுள் [2] உண்டாவதாகலும், கொச்சகக் கலியுறழ்ந்து வருதலும் உடையவாம், அவ்வாறு கூறினுல் என மறுக்க. (கஙo)

[ஒத்தாழிசைக்கலியின் வகை]

சசங. அவற்றுள்,
ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகும்.

இது, முறையானே ஒத்தாழிசைக்கலி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒத்தாழிசைக்கலி இரண்டு கூற்றதாம் என்றவாறு.

இதனது பயம்:— அவை இரண்டுந் தம்முட் பகுதியுடைய வென்பது; அவையாமாறு முன்னர்ச் சொல்லும். (கஙக)

[அகநிலை ஒத்தாழிசைக் கலியினுறுப்புக்கள் இவை எனல்]

சசச. இடைநிலைப் பாட்டொடு தரவுபோக் கடையென
[3] நடைநவின் றொழுகு மொன்றென மொழிப.

இ—ள்: மேற்கூறிய ஒத்தாழிசை இரண்டனுள் ஒன்று தாழிசையுந் தரவுஞ் சுரிதகமுந் தனிச்சொலுமென நான்கு உறுப்பாகப் பயின்றுவரும் என்றவாறு.

'பயின்றுவரும்' எனவே இவ்வாறன்றிப் பயிலாது வருவனவும் இதன் பகுதியா [4]யடங்குவனவும் உளவென்பது. அவை தாழிசைப்பின்னர் [5] எண்ணுறுப்பு வருங்கால் ஐந்துறுப்புப்

1. அராகவுறுப்பில்லாத முடுகியலடி — பரிபாடற்குரியது. "சொற்சீரடியு முடுகியலடியும்" என்னும் சஙச-ம் சூத்திரம் நோக்குக.

2. உண்டாவதாகல்—வருதல்.

3. நடை பயின்றெனவும் பாடம்.

4. அடங்குவனவும் என்பதி லும்மை இல்லாதிருப்பது நலம்.

5. எண்ணுறுப்பு—அம்போதரங்கம்.

பெறுதலும், அவற்றிடை அராகம் பெறின் ஆறுறுப்பு வருதலுமென இவை [1] யென்ப; அற்றன்று, நூற்றைம்பது கலியுள்ளும் ஒத்தாழிசைக் கலியின் அராகவுறுப்பும் அம்போதரங்கவுறுப்பும் பெற்று வருவன இன்மையின் அவை பொருளன் றென்பது.

மற்று, 'நடைநவின் றொழுகும்' என்றதென்னையெனின்,— இத்துணை பயின்றுவாராது [2] ஏனையொன்றும் என்றற்கென்பது. தாழிசையினை இடைநிலைப் பாட்டென்பவோவெனின்,— அவ்வாறுஞ் சொல்லுப; அச்செய்யுள் இடைநிற்றலா னென்பது. இனி இடைநிலைப் பாட்டென்பது தாழிசையினை நோக்காது; என்னை? தாழம்பட்டவோசையல்லாதனவும் இடைநிலைப் பாட்டாய் வருமாதலினென்பது. அது:—

"காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணுநோய் செய்தான்கட் சென்றுய்மற் றவனீநீ
காணவும் பெற்றுயோ காணுயோ மடநெஞ்சே."
(கலி. கஉங)

என்பது, தாழிசையெனவும் இடைநிலைப் பாட்டெனவும் படும்.

"இன்மணிச் சிலம்பிற் சின்மொழி யெம்பாற்
பின்னெடு கெழீஇய தடவர லல்கு
லுண்வரி வாட வாராது விடுவாய்
தண்ணந் துறைவ தகாஅய் காணீ."
(கலி. கஉரு)

என்றாற்போல்வன தாழிசையல்லாத இடைநிலைப் பாட்டு. இவ்விரு பகுதியுங் கூட்டித் தாழிசையென்னுது இடைநிலைப் பாட்டென்பது, [3] இங்ஙனந் தம்முட் பகுதியுடைமையானுமாயிற்று. ஒத்தாழிசைக்கலி இருவகைத் [4] தென்றற்குப் [5] பயனுந் தோற்றுவாய் செய்து [6] போந்ததென்பது.

1. என்ப என்றார்; பிறர் கூற்றென்பது அறிவித்தற்கு.

2. ஏனையொன்று—இச்சூத்திரத்தாற் கூறிய ஒத்தாழிசையல்லாத ஒத்தாழிசை; அது சருo-ம் சூத்திரத்தாற் கூறப்படும்.

3. இங்ஙனந் தம்முட் பகுதியுடைமையானும் இடைநிலை என்று பெயராயிற்று என்றது தாழிசையும் ஏனைப் பாட்டு மாகாது இரண்டற்கும் இடைநிலையாய் நிற்பதானும் ஆயிற்று என்றபடி.

4. என்றற்கு என்றதற்கு என்றிருப்பது நலம்.

5. பயனுந் தோற்றுவாய்—பயனுகிய தொடக்கம்.

6. போந்தது—இது என்க. இவ்வெழுவாய் சிதைந்திருத்தல்வேண்டும். இன்றேல் இது என்பது வெளிப்படாது நின்றதாகக் கொள்ளல்வேண்டும்.

தரவு என்ற பொருண்மை என்னையெனின்,—முகத்துத் தரப்படுவதென்ப; அதனை எருத்தெனவுஞ் சொல்லுப; என்னை? உடம்புக் தலையுமென வேறுபடுத்து வழங்கும் வழக்குவகையான் உடம்பிற்கு முதல் எருத்தென்பதாகலின். இனி, இசைநூலாரும் இத்தரவு முதலாயினவற்றை முகம் நிலை கொச்சகம் முரியென வேண்டுப. கூத்தநூலார் கொச்சகமுள்வழி அதனை நிலையென அடக்கி முகம் நிலை முரியென மூன்றுக வேண்டுப. அவரும் இக்கருத்திற்கேற்ப முகத்திற்படுந் தரவினை முகமெனவும், இடை நிற்பனவற்றை இடைநிலையெனவும், இறுதிக்கண் முரிந்து மாறுஞ் சுரிதகத்தினை முரியெனவுங் கூறினரென்பது. செந்துறைச் செய்புள் [1] அடைநிலை பயப்பதின்மையின் அது சிறந்ததின்றென்று அடக்கி மொழிப. உள்ளுறுப்பின் பொருளெல்லாம் ஒருவகையான் அடக்குமியல்பிற்றாகலின் [2] அடக்கியலென வும், குறித்த பொருளை முடித்துப் போக்குதலிற் போக்கென வும், அவையெல்லாம் போதந்து வைத்தலின் வைப்பெனவும், கூறிய பகுதியைப் பின்னும் பற்றிக் கூறுதலின் [3] வாரமென வும் எல்லாம் ஒன்றொன்றனை ஒத்தே பெயராயின. அடைநிலை யென்பது, முன்னும் பின்னும் பிறவுறுப்புக்களை அடைந்தன்றி வாராது; அது, தனிநின்று சீராதலின் தனிச் சொல்லெனவும் படும். [4] இடைநிலை யுறுப்பென்றது 'பாட்டு' என்றதென்னையெனின்,—அவை தாமே [5] பாட்டாயும் வருமிடனுடைய; வருங்கால் அவை ஒன்றும் இரண்டும் [6] பலவுமாய் வருமென்பது. இடைநிலைப் பாட்டினைத் தரவிற்கு முற்கூறினான், [7] அது பெயர்

1. அடைநிலை—தனிச்சொல். பயத்தல்—பயன்படல்.

2. அடக்கியல் என்றது சுரிதகத்தை. அடக்கியல் போக்கு வைப்பு வாரம் என்பன சுரிதகத்தையே குறித்து வந்தன. பொருளால் சிறிது சிறிது பேதமுள்ளன.

3. வாரம்—ஒரு பகுதியைச் சார்ந்து வருவது. 'வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்' என்பது சீவகசிந்தாமணி.

4. இவை நிலை எனவும் பாடம். அது பொருத்தமின்று.

5. பாட்டு—தாழம்பட்ட ஓசையின்றி வருவது.

6. பலவாய் எனவும் பாடம்.

7. அது பெயர்பெறுதலின் என்றது இடைநிலைப் பாட்டு என்று அவ்வுறுப்புப் பெயர்பெறுதலின் என்றபடி. இடைநிலைப் பாட்டு என்ற பெயராலேயே இடைவருதல் பெறலின் முன் வைப்பினுமையுமென்றபடி.

பெறுதலின்; எனவே, தரவு முன்வைத்தலே மரபாயிற்று. ஒத்தாழிசை கூறியமுறையானே தரவு தாழிசை போக்கென்னும் மூன்றுறுப்பானுஞ் சிறுபான்மை வந்து தனிச்சொலின்றி வருதலின் தனிச்சொல்லினை இறுதிக்கண் வைத்தானென்பது. இவையெல்லாம் போக்கிச் சொல்லும். (கஙஉ)

[தரவின் அடியளவு கூறல்]

சசருு. தரவே தானு நாலடி யிழிபா
யாறிரண் டுயர்பென் [1]றேறவும் பெறுமே.

இது, தரவின் அடியளவுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற் கூறப்பட்ட தரவுதானும் நான்கடி முதலாய்ப் பன்னிரண்டடிகாறும் வரப்பெறும் என்றவாறு.

எனவே, ஒன்பது நிலம்பெறுந் தரவென்றவாறாயிற்று.

"உயர்பென் றேறவும்பெறும்."

என்றதனாற் பன்னிரண்டடியின் இகந்துவரவும்பெறும் சிறுபான்மையெனக் கொள்க. இதனை எடுத்தோதாது இலேசினாற் கொண்டான், பன்னிரண்டடியின் இகந்தன துள்ளலோசையான் வாராமையின்; அது,—

"நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
தேரிதழ் நாம்ப னிரையிதழ் கொண்மார்." (கலி. எடு)

என்னும் மருதத்தினைக் கலிப்பாட்டினுட் கண்டுகொள்க. (கஙங)

[தாழிசையின் அடியளவு கூறல்]

சசசூ. இடைநிலைப் பாட்டே
தரவகப் பட்ட மரபின தென்ப.

இது, தரவிற்குச் சுருங்கியன்றித் தாழிசை வாராதென்ப துணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தரவின் அகப்பட்டது தாழிசை என்றவாறு.

[2]'அகப்படுதல்' என்பது, அகம்புறமென் றிருகூறு செய்த வழி முற்கூற்றினுட் படுதல். முன்னென இடவகையுங் கால

1. அறையவும் பெறுமே எனவும் பாடம்.

2. அகப்படுதல் — முற்கூறுகிய அகத்துட்படுதல். அகம்—உள்.

வையும்பற்றிய இரு கூற்றின் [1] யாதானுமொன்று கொள்க. எனவே, பதினேரடிமுதல் இரண்டடிகாறும் இழிந்து வரப் பெறும் என்றவாருயிற்று; அது,

"கருங்கோட்டு நறும்புன்னை மலர்கின்ன மிசைதொறும்
சுரும்பார்க்குங் குரலினெடி ருந்தும்பி யியைபூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்;

காணுமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணுநோய் செய்தான்கட் சென்ருய்மற் றவனீநீ
காணவும் பெற்ருயோ காணுயோ மடநெஞ்சே;

கொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனெய் செய்தான்கட் சென்ருய்மற் றவனீநீ
புல்லவும் பெற்ருயோ புல்லாயோ மடநெஞ்சே;

பொறிகொண்ட புள்ளினம் வதிசேரும் பொழுதினுற்
செறிவுகூ நெகிழ்த்தான்கட் சென்ருய்மற் றவனீநீ
யறியவும் பெற்ருயோ வறியாயோ மடநெஞ்சே;
எனவாங்கு;
எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூ
ழரும்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே." (கலி. கஉந)

என இது தரவகப்பட்ட மரபிற்ருகித் தாழிசை வந்தது.

தரவிற் சுருங்குமென்னுது 'அகப்படும்' என்ருன். தரவோடு ஒத்துவருந் தாழிசையென்பதுங் கோடற்கு; என்னை? [2] 'மக்களகத்துப் பிறந்தான்' என்றவழி, அச்சாதியோ டொக்கப் பிறந்தானென்பது படுமாகலினென்பது.

"ஞாலமூன் றடிந்தாய முந்நல்வற்கு முதுமுறைப்
பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய
நீலநீ ருடைபோலத் தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

---

1. யாதானும் என்றதனுல் இடமுன்னுங் கொள்ளலாம், காலமுன்னும் கொள்ளலாம் என்றபடி. நான்கையும் பன்னிரண்டையும் இடமுன்னுக வைக்குங்கால் இரண்டுமுதல் நான்கு வரையும் ஐந்துமுதல் பன்னிரண்டுவரையும் கொள்ளப்படும். இங்கே இரண்டற்கு நான்கு இடமுன்னுதலும் ஐந்தற்குப் பன்னிரண்டடி இடமுன்னுதலுங் காண்க. இனிக் காலமுன்னுகக் கொள்ளுங்கால், நான்கற்குமுன் எண்ணப்படும் இரண்டும், பன்னிரண்டற்குமுன் எண்ணப்படும் ஐந்தும் காலமுன்னுதல் காண்க. இருமுன்னுக வைத்துப் பார்ப்பினும் பொருள் ஒன்ருமென்றபடி..

2. மக்கள் என்றது மானுட சாதியை.

ஊரல ரெடுத்தரற்ற வள்ளாய்நீ துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
காரிகை பெற்றுதன் கவின்வாட்கு கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால்;

இணைபிவ்வு ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகைபெற்ற நொன்னலை மிழந்தினி
யணிவனப் பிழந்துதன் னணிமென்ரு ளல்லாக்கால்;

இன்றிவ்வு ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலி
னின்றுதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவெ னுடியேய்க்கும் விறனல மிழந்தினி
நின்றுநீ ருகக்கலுழு நெடும்பெருங்க ணல்லாக்கால்;

அதனுல்,
பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னு டுணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுகைக் கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே."
(கலி. கஉச)

என வரும்.

பன்னிரண்டடியின் இகந்த தரவிற்கும் இவ்வாறே தாழிசை கொள்ளப்படும். மற்று [1] மேற்கூறிய வரையறையில் தாழிசை கூறுகவெனின்,— [2] ஆண்டு முறைபிறழ வைத்ததற்குக் காரணங் கூறிப்போந்தாமென விடுக்க. இனிவருஞ் சூத்திரத்திற்கும் இதுவே விடை. 'மரபின்' என்றதனன் மேலெடுத்துக்கொண்டும் [3] அடிபட வந்த மரபினுற் சுருங்குமென்பது; எனவே, நான்கடியின் உயர வாராவென்பது கொள்க; இன்னும், 'மரபின்' என்றதனன் சிறுபான்மை ஐந்தடியானும் வருவனவும் உள.

"அரிதே தோழி நாணிறுப்பா மென்றுனர்தல்" (கலி. கஉச)

என்னும் நெய்தற்றிணைக் கலிப்பாட்டினுள்,

"நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி னிவ்வ தல்லதவர் நம்மை
வகைமையி னெழுந்த தோண்முத லாகப்
பகைமையி னலிதலோ விலனு மாயிழை
பகைமையிற் கடிதவர் தகைபி னலியுநோய்."

என ஐந்தடியால் தாழிசை வந்தது.

---

1. மேற்கூறிய வரையறை என்றது இடைநிலைப் பாட்டுத் தரவு நீபோக்கு அடை என வைத்தமுறை வரையறையை.

2. சசசு-ம் சூத்திர உரை இறுதி நோக்குக,

3. ஆன்ருேர்களால் பரம்பரையாகக் கொள்ளப்பட்டுவந்த மரபு.

[1] ஆறடியான் வருவன வந்தவழிக் கண்டுகொள்க. மற்று நான் கடியின் [2] இழிந்தசைராடியானுந் தாழிசை வருமாலெனின்,—வாராதன்றே, 'இடைநிலைப் பாட்டே' என்றாராகலின்; என்னை? பாட்டெனப்படுவன ஓரடியான் வாராமையின். (கஙச)

[தனிச்சொல்லாவது இதுவெனல்]

சசஎ. அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி.

இஃது, ஆங்கென்னுஞ் சொல் தனிச் சொல்லெனப்படு மென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தாழிசைப்பின்னர் ஆங்கு, தனிச்சொல்லாய் நின்று பயிலும் என்றவாறு.

ஆங்கென்னுஞ் சொல்லினை எடுத்தோதினான், அது [3] நடை நவின்றொழுகும் ஆகலின். ஆங்கென்னுஞ் சொல் பயின்று வரு மெனவே அல்லாதனவும் உள, இத்துணைப் [4] பயிலாதனவென் பது கொள்க. ஆங்கு என்பது ஏழாம் வேற்றுமை இடப்பொரு ளுணர நின்ற சொல்லாகலின் அஃது எல்லாச் செய்யுட்கண் ணுங் [5] தன் பொருண்மைக்கேற்பச் [6] செய்யல்வேண்டும் பிற வெனின்,—அற்றன்று: அதனை அசைநிலையாகக் கொள்க; அல்ல தூஉம், எல்லாச் செய்யுளும் இதன் பொருண்மைக்கேற்பச் செய் யல்வேண்டு [7]மென்றான் மிகை கூறிப் பயந்தகின்மையானென் பது. அசைநிலை பெய்து செய்யுள் செய்தன் மரபாகலின் அஃ தமையுமென்பது. நடைநவிலாதன பொருள்பெற வருமென் பது; அவை முன்னர்க் காட்டுதும். (கஙஞ)

1. ஆறடியான் வருவன வந்தவழிக் கண்டுகொள்க. என்ற தனால் முன் ஐந்தடியானும் ஆறடியானும் என்று கூறியிருத்தல் வேண்டும். அது தப்பிற்றுப்போலும்.

2. இழிந்தது ஓரடியானும் எனக் கண்ணழிக்க.

3. நடை நவின்றொழுகல் — செய்யுள் வழக்கினுட் பயன் றொழுகல்.

4. பயிலாதன — 'எனவிவள்' (பாலைக்கலி-க) எனவும், 'எனநின்' (பாலை-எ) எனவும் வருவன போல்வன.

5. தன் என்றது ஆங்கென் கிளவியை.

6. நிற்றல்வேண்டும் எனவும் பாடம்.

7. என்றாரை எனவும் பாடம். இவ்வாக்கியத்தில் யாதோ பிழையுளது.

[சுரிதகமாவது இதுவெனல்]

சசஅ. போக்கியல் வகையே வைப்பெனப் படுமே.

இஃது, ஒழிந்த சுரிதகம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: போக்கினதிலக்கணப் பகுதி வைப்பென்று சொல் லப்படும் என்றவாறு.

[1] இங்ஙனங் கூறப்பட்ட உறுப்பினை அடக்கியலெனவும் வாரமெனவுஞ் சொல்லுப. அடக்கியல் வாரந் தரவோடு ஒக் கச் சொல்லப்படுமென்றவாறு. என்றதென்னெனின்,—போக்குதலும் வைத்தலுமென்னும் இரண்டிலக்கணமுடைத்து; வாரமெனச் சொல்லின் முடியுமிலக்கணமே கூறுவான்போலப் போக்கு நிலக்கணப்பகுதி வைப்பென்றதனைச் சுட்டிக் கூறப் படுமாகலின்.

[என்றதென்னெனின், போக்குதலும் வைத்தலு மென்னும் இரண்டிலக்கணமுடைத்து எனச் சொல்லின் முடியு மிலக்கணமே கூறுவான்போலப், போக்குநிலக்கணப்பகுதி வைப் பென்று அதனைச் சுட்டிக் கூறியவாறு. இங்ஙனங் கூறப்பட்ட உறுப்பினை அடக்கியலெனவும் வாரமெனவுஞ் சொல்லுப. "அடக் கியல் வாரந் தரவோ டொக்கும்" என்பவாகலின்.] (கஙசு)

[சுரிதகத்தின் அடியளவும் அதன் பொருள்வைப்பு முணர்த்தல்]

சசக. தரவிய லொத்து மதனகப் படுமே
புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே.

இதுவுஞ் சுரிதக முணர்த்துகின்றது.

1. இங்ஙனங் கூறப்பட்ட என்பதை முதலாகக் கொண்ட வாக்கியம் என்றவாறு என்ற உரைப்பின்னே காணப்படுவது பொருத்தமில்லை. ஒரு பிரதியில், பின் பகரக்கோட்டுள் வரு மாறு காணப்படுகிறது. அதுவே பொருத்தமாகும். இரண் டிலக்கணமுடைத்தென்று கூறுவான்போலச் சுட்டிக் கூறியவாறு என்று அவ்வாக்கியம் முடிக்கப்படும். போக்கு வைப்பு என் னுஞ் சொற்களின்கண்ணேயே அவற்றின் இலக்கண மு மமைந்து கிடக்கின்றனவென்பார் சொல்லின் முடியு மிலக்கண மென்றார் என்க. அதனை என்றது வைப்பினை. சுட்டுதல்—குறித்தல்.

இ—ள்: [1] தரவியலொத்தும் அதனகப்படும்—சிறுபான்மை தரவுகளோடொத்தும் உம்மையான் ஏறி வருமாயினும் பெரும் பான்மை தரவின்பாகம் பெறுதலே இலக்கணமாகவுடைத்து மேற் கூறிய சுரிதகம். புரைதீர் இறுதிநிலை உரைத்தன்றே—இடை நிலைப் பாட்டுப் பொருளினை முடிபு காட்டிநிற்கும் அதுதான் என்றவாறு.

[2] அகப்படும் என்று அதற்கும் உம்மை கொடுத்தமையின் அஃது இலக்கணமாயிற்று; ஆகவே, அவ்விலக்கணத்திற்கேற்ற தரவின்கண்ணே ஒத்தலும் உயர்தலும் கொள்க. [3] சுருங்கிய வெல்லை, ஆசிரியத்திற்கு இழிந்தவெல்லையாகிய மூன்றடிச் சிறுமையிற் கூருமையிற் (அகற்) சுருங்காது வருவதாயிற்று. ஈண்டும் அகப்படும் எனவே பன்னீரடித்தரவின் பாகமாகிய ஆறடியே சுரிதகத்திற்கு உயர்விற் கெல்லையென்பதூஉம், இழிந்த வெல்லை கூருமையிற் பன்னிரண்டடித் [4]தரவிற்காய் ஈற்று மூன் றடிச் சுரிதகம் வருதலும் [5] ஒழிந்த கலி நாலிற்கும் அவ்வாறே வருதலுங் கூறினனென்பது. இனி, வெள்ளைச் சுரிதகத்திற்கும் இஃதெல்லாமொக்கும்.

[6] புரைதீர் இறுதிநிலை உரைத்தன்றே என்பது, இடை நிலைப் பாட்டுப் பொருளினை முடிபுகாட்டியே நிற்கும் அது தான் என்றவாறு.

---

1. தரவியலொத்தும் என்பதன் உரை S. கனகசபாபதிப் பிள்ளை பதிப்பிற் காணப்படுகிறபடி ஒரு ஏட்டுப் பிரதியிலுங் காணப்படுகிறது. அதுவே பொருத்தம். நச்சினார்க்கினியர் உரை யினும் அவ்வாறே காணப்படுகின்றது.

2. அகப்படுமென்று அதற்கும் உம்மை கொடுத்தமையின் என்றது செய்யும் என்னு முற்றுச்சொல் வாய்பாட்டாற் கூறி னமையைக் கருதிப்போலும். அகப்பட்டும் என்று அதற்கும் உம்மை கொடுத்தமையின் என்றும் பாடங் காணப்படுகிறது. தர வின்கண்ணே ஒத்தலுமுயர்தலுமென்றது நாலடித் தரவிற்கு நாலடிச் சுரிதகம் வரையும் அதின் ஏறி ஐந்தடி வருதலுமாம்.

3. சுருங்கிய எல்லை கூருமையின் என்பதில், கூருமையின் என்பது சிறுமையின் என்பதனோடு மாறி எழுதப்பட்டது.

4. தரவிற்காய்—தரவிற்காயின் என்றிருத்தல்வேண்டும்.

5. ஒழிந்த கலி நான்கு—இவ்வகநிலை ஒத்தாழிசையல்லாத ஏனை ஒன்றெனப்பட்ட ஒத்தாழிசையும் கலிவெண்பாட்டும் கொச் சகமும் உறழ்கலியும்.

6. இவ்வாக்கியம் முன்னும் வருதலின் வேண்டியதில்லை.

இனித் [1] தரவியலொத்தல் ஈற்றயலடி முச்சீராகாது மண் டிலமாகி வருதலுஞ் சிறுபான்மையெனக் கொள்க. [2] இறுதி நிலை என்பதனை நுனிவிரல் என்றுற்போலக் கொள்க. நிலை யெனப்பட்டது, இடைநிலைப் பாட்டு அதனிறுதியைக் கூறு மெனவே அவற்றுப் பொருளினை முடித்து விடுக்குமென்பதாம்.

"போக்கியல் வகையே வைப்பெனப் படும்." (சூ சூ அ)

என்றவழி, உள்ளுறுப்பின் பொருளினைத் தன்கண் வைக்கப் படுவது சுரிதகமென்றதன்றி இன்ன உறுப்பின் பொருள் வைக் கப்படுமென்றிலாதான் [3] முற்கூறியது பொதுவிதி மாத்திரையே யன்றி இடைநிலைப் பாட்டின் பொருளே பெரும்பான்மையும் வைக்கப்படுமென்பதூஉம், பொதுவிதியாற் சிறுபான்மை தர வின் பொருண்மை வைத்தலுமுடைத்தென்பதூஉங் கூறினன். 'தரவியல்' என்றதனால் தரவோடொத்த பொருட்கேற்றனவுங் கொள்க.

"நச்சல் கூடாது பெரும விச்செல
வொழிதல் வேண்டுவல்." (கலி. அ)

என்பது, தாழிசைப் பொருண்முடிவு தன்பால் வைக்கப்படுத லின் இறுதி யுரைத்தது. புரைதீ றிறுதி என்றதனான் அத் தாழிசைப் பொருளேயன்றி [4] அவற்றோடு போக்கியற் பொருள் வந்தக்கால் அவ்விரண்டினையும் புரைப்படாமற் பொருந்தச் செய்க வென்பது; அது,

"தன்னகர் விழையக் கூடின்." (கலி. அ)

எனப் போக்கியற் பொருளோடு புரைதீர்ந்திற்றது; பிறவும் அன்ன.

---

1. தரவியலொத்தல் என்பது தரவியல் ஒத்தல் என்றதனால் என்று இருக்கவேண்டும். மண்டிலம்—ஈற்றயலடியும் நாற் சீராய் வரல்.

2. இறுதிநிலை—நிலை இறுதி. என்றது இடைநிலைப் பாட் டின் முடிபு என்றபடி.

3. முற் கூறியதென்றது அடக்கியல்வாரம் தரவோடொக் கும் என்பதை.

4. அவற்றோடு என்றது—தாழிசைப் பொருளோடு என்ற படி. தாழிசைப் பொருளும் போக்கியற் பொருளும் வந்தால் இவ்விரண்டினையும் மாறுபடாது பொருந்தச்செய்க என்பதாம். புரை — மாறுபாடு. போக்கியற் பொருள் — தான் முடித்துப் போக்குதற்குரிய பொருள். போக்குதல்—விடுத்தல்.

"இமையவில் வாங்கிய விர்ஞ்சடை யந்தணன்." (கலி. நஅ)

என்னுங் குறிஞ்சித்திணைப் பாட்டினுள்,

"கோடுபுய்க் கல்லா துழக்கு நாடன்."

என்று உள்ளுறையுவமத்தால் தலைவியது விழுமங் கூறினமை யின் அதனையு முட்கொண்டு போந்து, சுரிதகத்து

"நின்னுறு விழுமங் கூறக் கேட்டு
வருமே தோழி நன்மலை நாடன்."

என வைத்தமையின் அது தரவியலொத்ததாயிற்று; இனி,

"ஞாலமூன் றடித்தாய." (கலி. கஉச)

என்னும் நெய்தற்றிணைக் கலிப்பாட்டு [1] அளவியலாற் சுரிதக மொத்தது.

"கருங்கோட்டு நறும்புன்னை." (கலி. கஉங)

என்பது, தரவிற்கு அடி ஐந்தாகச் சுரிதகம் நான்கடியாய்ச் சுருங்கி வந்தது; அஃதேல் [2] தரவகப்பட்டதெனச் சுருங்குத லன்றி ஒத்தற்பொருளும் படுமாயின் தரவகப்படும் போக்கென் னுது தரவியலொத்தும் என்றதென்னையெனின்,—[3] தரவுமென்ற உம்மையாற் சிறுபான்மை மிக்கு வரும்பெறும் போக்கென் பது கொள்க.

"பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க
வாடுபு வனப்போடி வனங்கிறை வளைபுர
வாடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கா னீர்ப்பதொன் றுடையேன்மன் னதுவுந்தான்."
(கலி. கசு)

என்னும் பாலைப்பாட்டுத் தரவுந் தாழிசையும் நான்கடியாகி யொத்தவழிச்,

"செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வார்மாட் டினையன
தெய்வத்துத் திறநோக்கித் தெருமர றேமொழி
வறனெடின் வையகத்து வான்றருங் கற்பினு
னிறனெடிப் பசப்பூர்த வுண்டெனை
வறனெடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே." (கலி. கசு)

எனச் சுரிதகம் ஐந்தடியாயிற்று. (கஉச)

1. அளவியல்—அளவின் இயல்பு. இங்கே தரவினளவை ஒத்தது அளவியல் என்க.

2. இவ்வாக்கியத்தில் யாதோ பிழையுளது.

3. தரவியலொத்தும் என்றிருத்தல்வேண்டும்.

[ஏனை ஒத்தாழிசைக்கலி இப்பொருட்கண் வருமெனல்]

சரிo. ஏனையொன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே.

இஃது, ஒழிந்த ஒத்தாழிசையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அது முன்னிலையிடமாகத் தேவரைப் பராவும் பொருண்மைத்து என்றவாறு.

எனவே, இஃது அகநிலைச் செய்யுளாகாதென்றன: இத னானே முன்னையது அகநிலையொத்தாழிசையெனப்படும். மற்றிது,

"வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்து."
(தொ. செ. கoகூ)

என்றவழிச் சொல்லப்பட்டதாமெனின், அஃது உறழ்கலிக்கும் வெண்கலிக்கும் கொச்சகக் கலிக்கும் பொதுவாகலின் அவற் றுக்குத் தேவபாணி விலக்கினனென்பது.

மற்று முன்னிலைக்கணென்றதென்னையெனின், — தெய்வத் தினை முன்னிலையாகச் சொல்லப்பட்டனவன்றி அல்லன தேவ பாணி யெனத்தகாவென்பது; என்னை? யான் இன்ன பெருஞ் சிறப்பின் இன்ன தெய்வமென்று தன்னைத்தான் புகழ்ந்து கூறி நின்னைக் காப்பேன்; நீ வாழிய எனத் தெய்வஞ் சொல்லிற் முகச் செய்யுள் செய்தலும் ஆகாது. [1] வாழ்க்கினுள் அவ்வா றுண்டாயினென்பது. இதனானே படர்க்கையும் விலக்கினனும்; ஆகவே, தெய்வம் படர்க்கையாயவழிப் புறநிலை வாழ்த்தாவதன் றித் தேவர்ப்பராயிற்முகாது பாட்டுடைத் தலைவனைக் கூட்டிச் சொல்லினுமென்றனும். இங்ஙனங் கூறவே, பாட்டுடைத் தலை வனைக் கூட்டினுங் கூட்டாக்காலுந் தேவர்ப்பராயிற்றேயாம், முன்னிலையாயினென்பது பெற்றும். [2] மற்றிவை பாடல் சான்ற [3] புலனெறி வழக்கிற்கன்றித் தேவர்ப்பராயதற்கும் உரியவோ

1. வழக்கினுள் என்றும் பாடம். அதுவே பொருத்தம்.

2. இவை—ஒத்தாழிசை. இவை எனப் பன்மை கூறியது ஒத்தாழிசையின் பன்மை நோக்கிப்போலும். 454-ஞ் சூத்திரம் நோக்குக.

3. புலனெறி வழக்கு—செய்யுள் வழக்கு. என்றது அகப் பொருட்குரிமையாய் வரும் வழக்கை. அகத்திணை—நுந-ம் சூத் திரம் நோக்குக.

வெனின்,—[1] ஆண்டு [2] அகப்பொருட் குரிமையுடையன கலியும் பரிபாடலுமென்றதனானே [3] அத்துணையன்றிக் கடவுள் வாழ்த்துப் பொருள்படவும் வருமென்பது ஈண்டுக் கூறினமென்பது. அதுவன்றே [4] ஏனையது எனச் சிறுமை தோன்றப் பிற கூறியதென்பது. (சுஅ)

[ஏனையொத்தாழிசை இருவகைப்படுமெனல்]

சுருக. அதுவே,
வண்ணக மொருபோ கெனவிரு வகைத்தே.

இஃது, அதன் வகையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஏனையொன்று எனப்பட்ட ஒத்தாழிசை, வண்ணக வொத்தாழிசையெனவும் ஒருபோகெனவும் இரண்டாம் என்றவாறு.

இதன் பயன்:— ஒத்தாழிசை யெனப்படாது இவற்றுளொன்றென்பது அறிவித்தவாறுமாயிற்று; அஃதென்னை பெறுமாறெனின்,—மேல் ஒத்தாழிசைக்கலி இருவகைத்தாகுமென்றான்; பின்னர் அவ்விரண்டனுள் ஒன்றற்கு வண்ணகம் ஒருபோகென வேறுபெயர் கூறவே [5] முன்னரதே ஒருகலியாக ஒத்தாழிசைக் கலியெனப்படுவதென உய்த்துணர வைத்தமையானும், ஏனையொன்று என வேறுபடுத்தமையானும் [6] அப்பெயரும் உடன் கூறுது [7] போத்தந்து வைத்தமையானும், அதனோடு ஒன்னத்த வல்லவென்பது பலவாற்றானுங் கொள்ள வைத்தானென்பது; அஃதேல், வண்ணகமும் ஒத்தாழிசையெனப்படாதாம் பிற வெனின்,—அது மாற்றுதற்கன்றே வண்ணகம் முற் கூறி

1. ஆண்டு—அகத்திணை இயலுள்.

2. 'உரிமை உடைமையின்', 'உரிமையுடையன பயன்' என்ற பாடங்கள் பொருத்தமில்லை.

3. அத்துணையன்றி — கலிக்கும் பரிபாடலுக்குமுரிய அத்துணையன்றி.

4. 'ஏனையொன்று என' என்றிருத்தல்வேண்டும்.

5. முன்னரது—முன் கூறிய அகநிலையொத்தாழிசை.

6. பெயரும் உடன் கூறுமை—'ஏனையொன்று' என்னுஞ் சூத்திரத்திலேயே, பெயரையும் உடன் கூறுமை.

7. போத்தந்து—போகத்தந்து. அங்கே சொல்லாது இங்கே கொண்டுவந்து.

1 அதிகாரம்பட வைப்பானுபிற்றென்பது. இக்காலத்தார் ஒரு போகினையும் ஒத்தாழிசையென்று தாழிசை பெய்து காட்டுப.

"எருத்தே கொச்சக மராகுஞ் சிற்றெண்
ணடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே." (தொ. செ. கருஉ)

என்புழித் தாழிசையுறுப்பு ஒராமையின் அது பொருந்தாது. (கருக)

[வண்ணக ஒத்தாழிசையின் உறுப்புக்கள்]

சுருஉ. **வண்ணகந் தானே**
தரவே தாழிசை யெண்ணே வாரமென்
றந்நால் வகையிற் றோன்று மென்ப.

இது, முறையானே வண்ணகவொத்தாழிசை யுணர்த்துகின்றது.

இ—ள்: தரவும் தாழிசையும் எண்ணும் வாரமுமென்னும் உறுப்புமுறையானே வருவது வண்ணகவொத்தாழிசையாம் என்றவாறு.

2 அது,

"முதற்றொடை பெருகிச் சுருங்குமன் னெண்ணே."
(தொ. செ. கசடு)

என்றவழிக் காட்டுதும். 3 வண்ணித்துப் புகழ்தலின் வண்ணக மெனப்படும். எண்ணே? தரவினானே தெய்வத்தினை முன்னிலையாகத் தந்து நிறீஇப் பின்ன ரத்தெய்வத்தினைத் தாழிசையானே வண்ணித்துப் புகழ்தலின், அப்பெயர் பெற்றதாகலின். ஒழிந்த உறுப்பான் வண்ணிப்பினுஞ் சிறந்த உறுப்பு இதுவென்க; எனவே 4 அகநிலைச்செய்யுட்டாழிசை, வண்ணித்துவராவென்பதாம். எண்ணுறுப்பாமாறு முன்னர்ச் சொல்லும். அவ் வெண்ணுறுப்புத்தான் நீர்த்திரைபோல வரவரச் சுருங்கிவருத

1. அதிகாரம்பட வைத்தல் — முற்கூறி யதிகரித்து நின்ற அகநிலையொத்தாழிசையோடு சேரவைத்தல்.

2. அது என்றது வண்ணக ஒத்தாழிசை இவ்வுறுப்புக்களையுடையதாய் வருவதை. வண்ணக ஒத்தாழிசைக்குரிய உதாரணம் தொ. செ. கசசு-ல் காட்டப்படுகிறது. அது என்றது உதாரணம் என்றுமிருக்கலாம்.

3. வண்ணித்தல்—வருணித்தல், புகழ்தல்.

4. அகநிலைச் செய்யுள்—அகநிலை ஒத்தாழிசைச் செய்யுள்.

லின் அம்போதரங்கமெனவும் அமையுமாகலின் அதனை [1] அம் போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவெனவுஞ் சொல்லுப.

இனி வண்ணகமென்பது, அராகமென உரைத்து அவ் வுறுப்புடையன வண்ணகவொத்தாழிசையெனவுஞ் சொல்லு வாரும் உளர். எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு [2] இது முன்னூலாதலின் இவரோடு மாறுபடுதல் மரபன்றென மறுக்க. இசைநூலுள்ளும் மாறுபடின் அஃது [3] அவர்க்கும் மரபன் றென்பது. மற்றிதற்குத் தனிச்சொல்லில்லையாலெனின் அதனை அதிகாரத்தாற் கொள்க. (கசஅ)

[வண்ணக. ஒத்தாழிசைத் தரவுக்கு அடியளவு கூறல்]

சநிக. தரவே தானே
நான்கு மாறு மெட்டு மென்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்.

இஃது, ஒத்தாழிசையுள் ஏனையொன்றற்குத் தரவு வேறு பட்ட இலக்கணத்திற்றாகலான் அது கூறுகின்றது.

இ—ள்: இது நான்குமுதல் பன்னிரண்டடியீறாக வாராது; தேவபாணிக்காயின் எட்டும் ஆறும் நான்குந் தரவடியாம் என்ற வாறு.

இதனுனை தலையளவும் இடையளவுங் கடையளவுமென்பன கூறினனும். இங்ஙனங் கூறவே ஒழிந்தவுறுப்பிற்குந் தலை யிடை கடை யென்பது கொள்ளப்படும்.

நேரடி பற்றிய நிலைமைத்தாகும் என்பதனை, [4] அளவடி யான் வருமென்றற்குக் கூறினனெனபாருமுளர்; அற்றன்று; பிறவடி மயங்குவனவும் அளவடியுரியவென்பதும் முன்னர்க் கூறப்பட்டமையின்; மற்றென்னை கருதியெதனின்,— [5] சமநிலை யின்றி வியநிலை வாராவென்பது.

---

1. அம்போதரங்கம்—நீரின்கணுண்டாகும் திரை.
2. இது—இந்நூல்.
3. அவர்க்கும்—இசைநூலார்க்கும்.
4. அளவடி—நாற்சீரடி. கூறினனும் என்பதில் ஆம் வேண் டியதில்லை.
5. சமநிலை—நான்கு ஆறு எட்டு என்று எண்கள் சமமாய் வருவது. வியம்—சமமின்றி வருவது; மூன்று ஐந்து ஏழு என் பனபோல் வருவன. நேரடி—சம அடி.

இனிப் 'பற்றிய' என்ற மிகையானே, முற்கூறிய தரவுந் தாழிசையும் [1] அளவடியான் வருதலில்லையென்பது கொள்க. வருகின்ற ஒத்தாழிசைக்கும் பேரெண்ணிற்குஞ் சிற்றெண்ணிற் கும் [2] இஃதொக்கும். (கசக)

[வண்ணகத்திற்கு ஒத்தாழிசை இவ்வாறு வருமெனல்]

சநிசு. ஒத்துமூன் றுகு மொத்தா ழிசையே.

இது, முறையானே ஒத்தாழிசை உணர்த்துகின்றது.

இ—ள்: தம்மின் ஒத்த [3] அளவினவாகலும் ஒத்த பொருள வாகலு [3]முடைய தேவபாணிக்கண் மூன்றுக வரும் ஒத்தாழிசை என்றவாறு.

இவை பொருள் ஒக்குமெனவே, முன்னை அகநிலையொத் தாழிசைக்கண் வரும் இடைநிலைப்பாட்டிற் பொருள் ஒவ்வாது வருதலுஞ் சிறுபான்மையுண்டெனவறிக; அவை,

"கல்லெனக் கலின்பெற்ற விழுவாற்றுப் படுத்தபிற்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண் டமைவாளோ." (கலி. டு)

என இடத்தியல் பொருளொழிய இடப்பொருளோடு உவமங் [4] கூறினன்.

"ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ." (கலி. டு)

என இடப்பொருளொழிய [5] இடத்தியல்பொருளோடு உவமங் கூறியமையின் [6] வேறுபட்டன. ஒத்துவருவன முன்னர்க் காட் டினும். (கசஉ)

---

1. அளவடியான் என்பது—நேரடியான் என்றிருத்தல்வேண் டும். நேரடி—சமநிலை அடி.
2. இஃது என்றது—வருதலின்மையை.
3. உடையவாய் என்றிருப்பது நலம்.
4. கூறினன்—வினையாலணையும் பெயர். இதிற் தொடரிசை யிருத்தல்வேண்டும்.
5. இடம்—பொய்கை. இடத்து நிகழ்பொருள்—மலர்.
6. உவமிக்குங்கால் ஒருதரம் இடமும் ஒருதரம் இடத்து நிகழ் பொருளுங் கூறினமையின் இடைநிலைப் பாட்டின் பொருள் ஒவ்வாதாயிற்று.

[வண்ணகத்திற்குரிய ஒத்தாழிசையின் அடியளவுகூறல்]

சூநிடு. தரவிற் சுருங்கித் தோன்று மென்ப.

இஃது ஐயம் அறுத்தது; அகநிலை [1] யொத்தாழிசைகட்குப் போலத் தரவோடொத்து வருங்கொலென்றையுறுமைத் தரவிற் சுருங்கித் தோன்றுமென்றமையின்.

இ—ள்: [2] மூவகை வண்ணகத்தின் தாழிசையுஞ் சமநிலைத் தரவிற் சுருங்கித் தோன்றும் என்றவாறு.

வாளாதே தரவென்றமையின் இடையளவின்மேற் செல்லும், 'அடியென்றவழி, அளவடிமேற்றாயது' போலவென்பது. தோன்றும் என்பதனுன் [3] இடைநிலையாகிய நான்கடியானும் மூன்றடியானுமன்றி ஐந்தடியானுகாதென்பது கொள்க. [4] எண்ணேடு தொடர்தலின் இரண்டடியானுகாதென்பது பெற்றும். இடையளவு தரவிற் சுருங்குமெனவே, கடையளவு தரவினுந் தாழிசை சுருங்குமென்பது உய்த்துணரப்படும். [5] இங்ஙனங் கூறுக்கால் ஓரடிமுதலாகத் தாழிசை கோடல்வேண்டு மஃதன்றேவென்பது. தோன்றும் என்றதனுற் கடையளவினை ஒழித்து மற்றைத் [6] தரவு இரண்டளவாகக் கொள்வாமெனக் கொள்க. (கசஎ)

[வண்ணகத்திற்குரிய சுரிதகம் இவ்வாறு வருமெனல்]

சூநிசு. அடக்கியல் வாரந் தரவோ டொக்கும்.

இது, சுரிதகவிலக்கணங் கூறுகின்றது.

---

1. ஒத்தாழிசைகட்கு இவைபோலத் தரவோடொத்து என்பது, ஒத்தாழிசைகட்குப்போல இவை தரவோடொத்து என்றிருக்கவேண்டும்.

2. மூவகை வண்ணம்—முதனிலையளவுடையது, இடைநிலையளவுடையது, கடைநிலையளவுடையது என்னு மூன்றுவகை வண்ணம்.

3. இடைநிலை—தரவு அளவுள், எட்டும் ஆறுமாகிய இவற்றின் இடையான நிலை.

4. எண்—அம்போதரங்கம். எண் இரண்டடியான் வரலின் இதுவும் இரண்டடியான் வரின் வேறுபாடு தெரியாது மயங்குமாதலின் வாராது என்றபடி.

5. இவ்வாக்கியம் கொள்க என்பதன்பின் வரல்வேண்டும். நச்சினர்க்கினியருரை நோக்குக.

6. தரவிரண்டு—முதலனவும் இடையனவும்.

இ—ள்: தரவோடு ஒத்துவரும் அடக்கியல் வாரம் என்றவாறு.

அடக்கியல் வாரமென்பது, அடக்கும் இயல்பிற்றுகிய வாரமென்றவாறு. நிறுத்தமுறையானே எண்ணுறுப்புணர்த்தாது மயங்கக்கூறியவதனுனே தனிச்சொல் [1] வருஞான்று எண்ணீற்றினுஞ் சுரிதகத்து முன்னும் புணர்க்க. அடக்கியலென்றுன் முன்னர்ப் பலவகையாற் புகழப்பட்ட தெய்வத்தினை ஒரு பெயர் கொடுத்தடக்கி நிற்றலின். [2] வாரமென்றுன் தெய்வக்கூற்றின் மக்களைப் புகழ்ந்த அடி மிகுமாகலினென்பது. (கசஅ)

[அம்போதரங்கம் இவ்வாறு வருமெனல்]

சூநிஎ. முதற்றொடை பெருகிச் சுருங்குமன் னெண்ணே.

இஃது, [3] எண்ணுறுப்பாமா றுணர்த்துகின்றது.

இ—ள்: முதல் பெருகியவழி முதலெண் என்றவாறு.

தொடை என்றதனுல் தலையெண் இரண்டு அளவடியான் ஒரு தொடையாகி வருமெனவும், பெருகி என்றதனுன் இரண்டடியான் இரண்டனை நாட்ட, அதுவேபற்றி முதல் பெருகியவென்றதனுன் ஒழிந்த எண்ணுத்தொடை பெறுதலும் கோர்காணும். இதனை முதல் எனவே, வழிமுறைவருவனவும் எண்ணளவென்பது பெற்றும். அவை இத்துணையென்பது அறியுமா [4] றென்பதென்னை? முதற்றொடை பெருகி என்றதனுன், இரண்டடியான் இரண்டனை நாட்டி, அதுவேபற்றிச் சுருங்கும் என்றமையின் ஈரடியிற் சுருங்கி ஓரடியாதலும், ஓரடியிற் சுருங்கி இருசீராதலும், இருசீரிற் சுருங்கி ஒருசீராதலும் கொள்ளப்படும். முதலடி இன்னதென்றிலனுயினும் அளவடியே கொள்ளப்படும்.

---

1. வருஞான்று—வரும்பொழுது.

2. வாரம் என்ற சொல்லின் பொருள், ஒருபகுதியைச் சார்ந்து வரல் என்பது, 'வாரம் பட்டுழித் தீயவு நல்லவாம்' என்பதனுனுமறிக. வாரம்—ஒருபக்கஞ் சார்ந்த அன்பு.

3. எண்—அம்போதரங்கம்.

4. என்பது என்பது வேண்டியதில்லை. என்னை எனின் என்றிருப்பது நலம்.

"நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே" (தொ. செ. ஈஉ)

என்றலானும். ஆகவே இருசீரெனப்பட்டது குறளடியாயினும் இவை இரண்டு தொடர்ந்தன்றி எதுகையாய் அமையாமையிற் குறளடியென்னுமியல்பினனென்பது. ஒருசீர்க்கும் அளவடிப்படுத்துத் தொடைட் கோடலொக்கும்; என்னை?

"போரவுணர்க் கடந்தோய்நீ ;
புணர்மருதம் பிளந்தோய்நீ ;
நீரகல மளந்தோய்நீ ;
நிழறிகழும் படையோய்நீ."

எனவும்,

ணழிநீ ; உலகுநீ ; உருவுநீ ; அருவுநீ ;
ஆழிநீ ; அருளுநீ ; அறமுநீ ; மறமுநீ ;

எனவும், அளவடிப்படுத்தே தொடை கொள்பவாகலின்.

அஃதேல், ஒரு சீரினுஞ் சுருங்கப்பெறுதோவெனின்,— [1] கந்தருவ நூலின்கண்ணும் ஒருசீரிற் சுருங்கின வாராவாகலின் [2] இவரும்,

"பிறநூன் முடிந்தது தானுடம் படுதல்." (சூசு)

என்னும் உத்திவகையான் ஒருசீரிற் சுருங்குதல் [3] நேராமென்பது. மற்று, வழிமுறையாற் பாகஞ் சுருங்குதல் பெறுமாறென்னையெனின்,—

"வகார மிசையு மகாரங் குறுகும்." (தொ. எழு. புள். ஈடு)

என்றாற்போல மேலைக்கொண்டும் வருகின்றவாற்றாற் [4] பாகமே சுருங்குதல் பெறலாமென்பது. மன்னென்பது, ஆக்கத்தின்கண்ணும் வந்ததாகலிற் சுருங்கிப் பலவாமென்பது கொள்க. எனவே, இரண்டடி யிரண்டும், ஓரடி நான்கும், இருசீ ரெட்டும், ஒருசீர் பதினாறுமாகி எண் பல்குமென்பது. இருசீர் குறளடியுமாகலின் ஒருசீரான் வருவன சிற்றெண்ணெனவேபடும்; ஆகவே ஒழிந்த எண் மூன்றும் தலையெண்ணும் இடையெண்ணும் கடையெண்ணுமென மூன்றுங் கூடியே எண்ணென்றற்குரியவாயின. இது நோக்கிப்போலும் எண்ணென்று அடக்காது,

1. கந்தருவநூல்—இசைநூல்.

2. இவரும் என்பது இவனும் என்றும், (3) நேரார் என்பது நேரான் என்றும் S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பில் இருப்பது பொருத்தம்.

4. பாகம்—சரிபாதி ; 'குறுகும்' என்றல் அரையிற் பாதி கொள்ளல்போல.

"சின்ன மல்லாக் காலே." (தொ. செ. கசசு)

என ஒரு சீரினை வேறுபடுத்து மேற் கூறுகின்றதென்பது.

இனி, அளவடியினை நாட்டியே முதற்றொடை பெருகிச் சுருங்குமென்றமையின் அளவடியிற் சுருங்கின இருசீரும் ஒசோவழிச் சின்னமெனப்படும். இனி, [1] அல்லாதார் ஈரடியிரண்டினைப் பேரெண்ணெனவும், ஓரடி நான்கினைச் சிற்றெண்ணெனவும், கடையெண்ணினை இடையெண்ணெனவும், ஒருசீரான் வருவனவற்றை அளவெண்ணெனவுஞ் சொல்லுப. அளவடியாக நோக்கிப் பேரெண் சிற்றெண்ணென்றலும், சின்னம்பட்டவழி இடை நின்றது இடையெண்ணுதலும், எல்லையளவைத்தாகிய சின்னம் அளவெண்ணுதலும் அமையும். அவற்றுள் இருசீரினை [2] முச்சீராகவும், ஒருசீரினை இருசீராகவும் அலகு வைப்பினும் அதனை,

"அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி." (தொ. செ. கக)

என்பதனுன் மறுக்க. இதற்குச் செய்யுள் முன்னர்க் காட்டுதும். (கசஎ)

[அம்போதரங்க உறுப்பிற்குப் புறனடை]

சஎஅ. எண்ணிடை யொழித லேத மின்றே
சின்ன மல்லாக் காலே யான.

இது, மேலதற்கோர் புறனடை.

இ—ள்: முற்கூறிய எண்களின்றி வருதல் செய்புட்கு [3] ஏதமின்று ; சின்னவெண்ணொன்று மொழிந்து நில்லாவிடத்து என்றவாறு.

என்வே, [4] சின்னவெண்ணெழியாது மூவகையெண்ணும் [5] ஒழிதலும் சின்னவெண்ணெழிய மூவகையெண்ணும் பெறுதல் பெரிதும் சுவைமைபுடைத்தென்றவாறுயிற்று. இதனுனே

1. அல்லாதார்—தொல்காப்பியரல்லாதார்.

2. முன்னின்ற சீர் எனவும்பாடம்.

3. ஏதம்—குற்றம்.

4. சின்னவெண்—ஒருசீரடி.

5. ஒழிதலினும் என்றிருப்பது நலம். அன்றேல் உம்மைக்கு முடிவின்று.

எண்ணெழுத்தல் என்னுது இடை என்றதனால் தலையெண்ணும் இடையெண்ணுமல்லன எட்டு நான்காகியும், பதினாறு எட்டாகியும் குறைந்து வருமென்பதுந் கொள்க. மூவகையெண்ணுஞ் சின்னமும் பெற்று வருதல் சிறப்புடைமை ஏதமின்று என்றதனாற் பெறுதும். அவை வருமாறு :—

" மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பாணிறத்த சுரிசங்கு
மிருகடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகுத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்கண் ணுதலோனுந் தேருங்கா லீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயா
யளப்பரிய நான்மறையா னுணர்த்துதற் கரியோனே."
(எட்டடித் தரவு)

" எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
யவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினால்
வெவ்விணைசெய் தவையிழந்து வெம்பிறவிக் கடலழுந்த
வவ்விணையை யகற்றும னீப்பதுநின் னருளன்றே ;

பல்லுயிரும் படைப்பதுநின் பண்பன்றே பகலினால்
வல்விணையின் வகிப்பட்டு வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்விணையே பயில்வித்து நடுக்கஞ்செய் தவைநீக்கி
யல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே ;

அழிப்பதுநின் றொழிலன்றே யறைந்தாலு முயிரெல்லா
மொழித்தவற்றுள் ளுணர்வுகூ யொருவாம லுடனிருத்தி
பழிப்பின்றிப் பலகாலு மிப்பரிசே பயிற்றுதலி
னழிப்பதுவு மில்லையா லங்கதுவு மருளன்றே." (தாழிசை)

" வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை ;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யு
முனிவர் தமக்கு முத்தி யாயினை." (ஈரடியிரண்டு)

" இலனென விகழ்ந்தோர்க் கிலையு மாயினை ;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை ;
யருவரு வென்போர்க் கவையு மாயினை ;
பொருவற விளங்கிய போத மாயினை." (ஓரடி நான்கு)

" பானிற வண்ணனீ ; பனிமதிக் கடவுணீ ;
நீனிற வுருவுநீ ; நிறமிகு கனலிநீ ;
அறுமுக வொருவனீ ; ஆனிழற் கடவுணீ ;
பெறுதிரு வுருவுநீ ; பெட்பன வுருவுநீ." (இருசீரெட்டு)

" மண்ணுநீ ; விண்ணுநீ ; மவலயுநீ ; கடலுநீ ;
எண்ணுநீ ; எழுத்துநீ ; இரவுநீ ; பகலுநீ ;
பண்ணுநீ ; பாவுநீ ; பாட்டுநீ ; தொடருநீ ;
அண்ணாநீ ; அமலனீ ; அருளுநீ பொருளுநீ."
(ஒருசீர் பதினாறு)

'ஆங்க' (தனிச்சொல்.)

" இனையை யாகிய விறைவனின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னுள் பரவுது
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லா
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி
முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவா முத்தியை
மயலற வளித்தனின் மலரடி
யரிய வென்னு யுரிதினிற் பெறவே." (சுரிதகம்.)

இஃது, எட்டடித் தரவும், [1] தரவின் பாகம்பற்றிய நான்கடித் தாழிசை மூன்றும், ஈரடியிரண்டும், ஓரடி நான்கும், இருசீரெட்டும், ஒருசீர் பதினாறுமாகிய நால்வகையெண்ணும், தனிச்சொல்லும், எட்டடிச் சுரிதகமும் பெற்ற தலையளவு வண்ணகப்பெருந் [2] தேவபாணி.

' பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப்
புலியுரிமேற் பைத்தலைநாம் பூங்கச்சை விரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்
தண்கமழ்பூந் தாரிதழி தலைமலைந்து பிறைதயங்க
மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் ருலாதே
விழிவலத்தா னுருவழிந்தோன் வேடங்கண் டுணர்வழியக்
கலிகெழு கடற்கச்சிக் கமழிளந் தேமாவி
னெலிதளிரு முகிழ்ச்சுவடு முடன்சிறப்ப வுலவுங்கால்.' (தரவு)

' நீரேறுந் திருமேனி நெடும்பகலே நிலாவெறிப்ப
வேரேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுது மிடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ ;

நாணுக மடந்தையர்பாற் பலிக்கென்று நடந்தக்காற்
பூணுகந் தழீஇக்கொளினும் பொங்காது போலுமாற்
பூணுகந் தழீஇக்கொளினும் புகையுயிர்த்துப் பொங்காத
கோணுகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ.

பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற முகிலமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முகிலமகளிர் மனமறுக நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடினுங் கொள்ளுமோ கொள்ளாதோ.'
(தாழிசை மூன்று)

' எரிகல னிமைக்கு மிடவயிற் றெடிக்கை
யரிகல மேந்தும் பரிசிறந் ததுகொல்,
உமையவள் விலக்கவு மொலிகட னஞ்சு .
மிமையவர் தம்மை யிரந்துகொண் டதுகொல்.'
(ஈரடி இரண்டு)

---

1. தலையளவு என்றது தரவு எட்டடிபெற்று வருவதை.
2. தேவபாணி—கடவுள் வாழ்த்துச் செய்யுள்.

'இடையெழு பொழில்கட்கு மிமைப்பளவிற் கொல்லேறே ;
கடைதொறு மதுநிற்பக் கற்பித்த வாறெவன்கொல்
இரப்புநீர் வேட்டதுகேட் டிமையவரென் பட்டனரே ;
பரப்புநீர்க் கங்கையே படர்சடையிற் கரந்ததோ.'

(ஓரடி நான்கு)

'பூண்டன வென்பு ; புனைவது தும்பை ;
ஆண்டன பூதம் ; அறைவன வேதம் ;
இசைப்பன பல்பேய் ; எழீஇயது வீணை ;
அசைப்பன வேணி ; அதிர்வன பொற்கழல்.'

(இருசீரெட்டு)

'எனவாங்கு' (தனிச்சொல்)

'எல்வளை மகளிர் நீடுபலீ நசைஇப்
பல்கடை நிரைதரூஉஞ் செல்வநிற் பரவுதுங்
கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்த்த வன்ருள் வளவ
னிமிழிசை வேங்கடம் போலத் தமிழகத்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல் போற்றி வாழிய நெடிதே.' (சுரிதகம்)

இஃது, எட்டடித்தரவும், தரவிற் சுருங்கிய வொத்தாழிசை மூன்றும், சின்னமல்லா மூவகை எண்ணும், தனிச் சொல்லும், தரவோடொத்த அடக்கியல் வாரமும் பெற்று வந்தது.

'ஆயிரங் கதிராழி வொருபுறந்தோன் றீகலத்தான்
மாயிருந் திசைசூழ வருகின்ற வரவுணர்த்த
மனக்கமல மலரினீயு மலர்த்துவான் ருஞ்ச
லினக்கமல முனர்த்துவன்போன் றெவ்வாயும் வாய்திறப்பக்
குடதிசையின் மறைவதூஉ மறையென்று கொள்ளாமைக்
கடவுளர்த முறங்காத கண்மலரே கரிபோக
வாரிருளும் புலப்படுப்பா னவனேயென் றுலகறியப்
பாரகலத் திருள்பருகும் பருதியஞ் செல்வகேள்.' (தரவு)

மண்டலத்தி னிடைநின்றும் வாங்குவார் வைப்பாராய்
விண்டலத்திற் கடவுளரை வெவ்வேறு வழிபடுவா
ராங்குலக முழுதுபோர்த் திருவுருவி னொன்ருக்கி
யாங்கவரை வேறுவே ருளித்தியென் றறியாரால் ;

மின்னுருவத் தாரகைநீ வெளிப்பட்ட விடியல்வாய்
நின்னுருவத் தொடுங்குதலா னெடுவிசும்பீற் காணுதா
ரெம்மீனுங் காலைவா யிடைகரந்து மாலைவா
யம்மீனை வெளிப்படுப்பாய் நீயேயென் றறியாரால் ;

தவாமதியத் தொறுநிறைந்த தண்கலிக் டலெத்தேய்த்
துவாமதிய நின்னெடுவந் தொன்ருகு மென்றுணரார்
தண்மதியி னின்னெளிபுக் கிருளகற்ருத் தவற்ருற்கொ
லம்மதியம் படைத்தாயு நீயேயென் றறியாரால்' (தாழிசை)

'நீராகி நிலம்படைத்தனை ; நெருப்பாகி நீர்பயந்தனை ;
ஊழியிற் காற்றெழுவினை ; ஒளிகாட்டி வெளிகாட்டினை.'

(இருசீர்நான்கு)

'கருவாயினை ; விடராயினை ; கதியாயினை ; விதியாயினை ;
உருவாயினை ; அருவாயினை ; ஒன்ருயினை ; பலவாயினை '

(ஒருசீரெட்டு)

'எனவாங்கு' (தனிச்சொல்)

'விரிதிரைப் பெருங்கட லமிழ்த்தத் தன்ன
வொருமுதற் கடவுணிற் பரவுதுந் திருவொடு
சுற்றந் தழீஇக் குற்ற நீக்கித்
துன்பந் தொடரா வின்ப மெய்திக்
கூற்றுத்தலை பனிக்கு மாற்றல் சான்று
கழிபெருஞ் சிறப்பின் வழிவழி பெருகி
நன்றறி புலவர் நாப்பண்
வென்றியொடு விளங்கி மிகுகம்யா மெனவே.' (சுரிதகம்)

என்பது, எட்டடித்தரவும், தாழிசையும், [1] இருவகைச் சின்ன மும், தனிச்சொல்லும், தரவோடொத்த சுரிதகமும் பெற்று வந்த தலையளவு வண்ணகப் பெருந் தேவபாணி.

சின்னமெனவே, இருசீரெட்டும், ஒருசீர் பதினறும் அடங்கு மென்ருராகலின், இது [2] சின்னமல்லாக்கால் எண்ணிடையிட்டு வந்த வண்ணகவொத்தாழிசையாயிற்று.

இனி, இருசீருமன்றி ஒருசீர்பதினறுகிய சின்னவெண் பெற்றும் வரும் அது வருமாறு :—

'உறைபதியி னுடனயனை யுந்தியாற் படைத்தோயு
மறைகடல்சூழ் நிலமுதலா யனைத்துலகும் புரப்போயுந்
திருநிறமே கரிபோகத் திருமேகம் பயந்தோயு
மொருநிறமே நிறமாக வொள்ளெரியை யுயிர்த்தோயு
மறுவத்து மார்பென்ன மலர்மகளை வைத்தோயு
நிறத்தோடு நெஞ்சத்த நிலமடந்தை கணவனுநீ.' (தரவு)

'பின்னமா யொன்ருகும் பெருமாயை யியற்றுவா
யின்னமா யந்தெளிய வெமக்கருளி யிமையவர்க்கு
மன்னமாய் முன்னெருகா லறம்பயந்த வாறுநீ.

குறியாதும் பிழையாத குலமறைய மதன்மயக்கி
வெறியாதி மலரோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த வறிவனீ.

---

1. இருவகைச்சின்னம்—இருசீரெண்ணும் ஒருசீர் எண்ணும்.

2. சின்னமல்லாக்கால் எண்ணிடையிட்டு வந்தது என்றது சின்ன எண் ஒழியாது நிற்ப ஏனை எண் ஒழிந்துவந்ததென்றபடி. சூத்திர நோக்குக. சின்னம் என்பதில் ஒருசீரன்றி இருசீரும் சிறுபான்மையடங்கும்.

மாணுத மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோணுத மதிவாங்கிக் கொடுத்தருளி யடியவர்க்குக்
காணுத மதிகாட்டுங் கருணைகூர் காட்சியைநீ.' (தாழிசை)

'வானுநீ ; நிலனுநீ ; மதியுநீ ; விதியுநீ ;
தேனுநீ ; அமிழ்துநீ ; திருவுநீ ; அருவுநீ ;
அன்புநீ ; அருளுநீ ; ஆதிநீ ; அந்தநீ ;
இன்பநீ ; துன்பநீ ; இன்மைநீ ; உண்மைநீ.'
(ஒருசீர்ச் சின்னம்)

'எனவாங்கு.' (தனிச்சொல்.)

'நால்வகை யுருவிற் பால்வே றுகிய
கால முதல்வநிற் பரவது ஞாலத்து
நல்லவை யல்லவை யெல்லா நினதது
செல்வ நோக்கி னெய்தி வல்லிதிற்
றுயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யா மெனவே.' (சுரிதகம்)

எனவரும்.

இதனுள் தரவுந் தாழிசையும் ஒருசீர்ச்சின்னமும் தனிச் சொல்லும் சுரிதகமும் வந்தவாறு கண்டுகொள்க.

'கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றெழுதேத்தக்
கடல்கெழு கானகடரிற் கலந்தொளிரும் வாளுளைய
வழல்வகீ சுழல்செங்கண் ணரிமாவாய் மலிந்தாவனைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனணிப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலிமலி தடக்கையோய்.' (தரவு)

முரசதிர வியன்மதுரை முழுவதூஉந் தலிபனிப்பப்
புரைதொடிந் திரடிண்டோட் போர்மலிந்த மறமல்ல
ரடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ ;

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோவ
மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலக்கச்
சேணுய நிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ ;

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலிந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்படர வீழ்த்துநிறம் வேருக
வெருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ.'
(தாழிசை)

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியினர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.'' (ஈரடியிரண்டு)

''கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை ;
யொளியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை.'' (ஓரடிநான்கு)

''போரவுணர்க் கடந்தோய்நீ; புணர்மருதம் பிளந்தோய்நீ ;
நீரகல மளந்தோய்நீ ; நிழறிகழும் படையோய்நீ.''
(இருசீர் நான்கு)

'' ஊழிநீ ; உலகுநீ ; உருவுநீ ; அருவுநீ ;
ஆழிநீ ; அருளுநீ ; அறமுநீ; மறமுநீ.'' (ஒருசீரெட்டு)

''எனவாங்கு.'' (தனிச்சொல்)

''அடுதிற லொருவநிற் பரவது மெங்கோன்
றெடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைச் செவ்வே லச்சுதன்
றென்று முதிர்கட லுலக முழுதுட
னென்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.''
(சுரிதகம்—விளக்கத்தனர்பாடல்)

இது நால்வகை எண்ணினுள் [1] இறுதிநின்ற எண்ணிரண்டுஞ் சுருங்கி வந்தது; பிறவும் அன்ன. (கசசு)

[ஒருபோகின்வகை]

சருகூ. **ஒருபோ கியற்கையு மிருவகைத் தாகும்.**

இஃது, ஒத்தாழிசை இரண்டனுள் ஏனையொன்றனை வண்ணகவொத்தாழிசை ஒருபோகென இருவகைத்தென்றன்; அவற்றுள் ஒருபோகின்வகை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒருபோகும் இருவகைத்தாகும் என்றவாறு.

உம்மை, இறந்தது தழீஇய வெச்சவும்மை. இதனதுபயம்: ஒருறுப்பு இழுத்தலின் [2] ஒருபோகாதல் ஒக்குமாயினும் நிகழ்கின்ற உறுப்புத் [3] தம்மின்வேறுதல் அறிவித்தலென்பது; அது முன்னர்ச் சொல்லும். (கசஎ)

---

1. இறுதி நின்ற எண் இருசீரெட்டும் ஒருசீர் பதினாறும். இவை நான்கும் எட்டுமாகச் சுருங்கிவந்தன.

2. ஒருபோகு—வண்ணக ஒத்தாழிசைக்கு ஓதிய உறுப்புள் யாதானும் ஒன்று இல்லாமல் வருவது. இது பெரும்பான்மை.

3. தம்மின்வேறுதல்—இரண்டுபிரிவாதல்.

[ஒருபோகின் வகைக்குப் பெயரும் முறையு முணர்த்தல்]

சகூ. கொச்சக வொருபோ கம்போ தரங்கவென்
ருெப்ப நாடி யுணர்தல் வேண்டும்.

இது, மேல்வகுக்கப்பட்ட இரண்டற்கும் பெயரும் முறையும் உணர்த்துகின்றது.

இ—ள்: கொச்சக வொருபோகும் அம்போதரங்க வொருபோகுமென இரண்டாக உணரப்படும் அவை என்றவாறு.

[1] கொச்சகம் இழுத்தலிற் கொச்சகவொருபோகாயிற்று. 'வண்ணகமொருபோகு' என்றவழி ஒன்றேயாகி, நின்ற கொச்சகம் ஒருவழி வாராமையின் அது கொச்சகவொருபோகாம். [2] இனி, ஏனையொன்றெனப்பட்ட [3] ஒன்றனுள் வண்ணகப்பகுதிக்குரிய எண்ணுறுப்பு ஒருவழியின்றியெனப் பிறந்த அன்மொழித்தொகை. அம்போதரங்கவொருபோகு . என்பதுமது; ஒருபோகென்பது, பண்புத்தொகை. இடையீடில்லாத நிலத்தினை ஒருபோகென்பவாகலின் அஃது ஒப்பினுகிய பெயர். ஒருபோகென்பதனைத் 'திரிகோட்டவேணி' என்றதுபோலக் கொள்க.

[இனி ஏனையொன்றெனப்பட்ட ஒன்றனுள் வண்ணகப்பகுதிக்குரிய [4] எண்ணுறுப்பு ஒருவழியின்றி வருவது, அம்போதரங்க வொருபோகு. ஒருபோகென்பது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இடையீடில்லாத நிலத்தினை ஒருபோகென்பவாகலின் அஃது ஒப்பினுகிய பெயர். ஒருபோகென்பதனைத் [5] திரிகோட்டவேணி என்பதுபோலக் கொள்க.] (கசஅ)

1. கொச்சகம் ஒரோவிடத்து வாராமையின் கொச்சக ஒருபோகாயிற்று என்றபடி. கொச்சகம் இன்னதென்பதை 464-ம் சூத்திர நோக்குக.

2. இவ்வாக்கியம் பின் பகரக்கோட்டில் அடைத்தவாறிருத்தல்வேண்டும். இதுவே பொருத்தமாதல் நச்சினர்க்கினியருரை நோக்கியறிக.

3. ஒன்று—வண்ணகமொரு போகெனப் பட்டவொன்று.

4. வருவது என்னுஞ்சொல் சிதைந்துபோயிற்று. எண்ணுறுப்பு—அம்போதரங்கம். அது இழந்துவருதலின் அம்போதரங்க வொருபோகு என்று பெயராயிற்று. ஒருபோகு—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என்றமையின் ஒன்றுகிய போகியதையுடையது என விரியும். எனவே போகிய ஒன்றையுடையது என்பது கருத்தாம்.

5. திரிகோட்டவேணி — இதன் பொருள் நன்கு புலப்பட

[கொச்சக ஒருபோகு இவ்வாறு வருமெனல்]

சகூக. தரவின் ருகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு
மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு
மடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப.

இது, முறையானே கொச்சகவொருபோகுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: எண்ணிய இந்நாற்பகுதியான் வந்தும் அமையாது பின்னரும் யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடைத்தாகி வருவது கொச்சகவொருபோகாம் என்றவாறு.

'தரவின் ருகித் தாழிசை பெற்றும்' என்பது, தனக்கு இனமாகிய வண்ணகத்திற்கு ஓதிய தரவின்றித் தாழிசை பெற்றுமென்றவாறு. அவை பாணிப்பாட்டாகிய தேவபாணி முதலாயினவெனக் கொள்க. என்னூர்க்கு, அவை தாழிசையாயன்றி வாராமையின் தாழிசையாயுமென்றெழுந் சூத்திரமெனின்,—அங்ஙனங்கூறில் தரவொடுவருந் தாழிசையிலக்கணத்தவாம் இவையுமென்றஞ்சித் தரவொடுபட்ட தாழிசையன்றிப் புறத்துள்ளனவென்றற்கு அது விலக்கினனென்பது; எனவே, இவை ஒத்து மூன்றுதலும் ஒருபொருண்மேல் வருதலுந் தாழம்பட்ட ஓசையவேயாதலும் பாடினுமென்பதூஉஞ் சொல்லினுயிற்று. அங்ஙனஞ் சொல்லியவதனானே பாணியுளெல்லாம் இரண்டடியானே வருதலும் தாழம்பட்ட ஓசை விராய் வருதலும் முடுகிவருதலும் பெறுதும்.

வில்லை. ஆயினும், கோடுபோலத் திரிந்ததாகிய வேணியையுடையவன் என்றும் பொருள்கொள்ளலாம். கோடு—கொம்பு. வேணியையுடையவனை உணர்த்தியதுபோலப், போகு—போகியதையுடையதை உணர்த்தியதற்கும் சொன்மாறியதற்கும் காட்டப்பட்டதுபோலும். வேறு கருத்துளவேனுங் கொள்க. திரிகோட்டவெளி என்றும் திரிதோட்டவெளி என்றும் பாடம். வெளி என்பது வெளிநிலத்தையுணர்த்தும்.

இனி, தாழிசை மூன்றுகியவழி, மூன்றடியானும் நான்கடியானும் வரும். இனி, [1] பத்தும் பன்னிரண்டுமாகி ஒரு பொருண்மேல் வரும் பதினென்று மகப்பட்டு [2] நான்கடியின் ஏறுது வருதலும், அங்ஙனம் வருங்கால் தாழ்ந்த ஓசைபெற்றும் பெறுதும் வருதலும், அவையும் இருசீர் முதலாக எண்சீரளவும் வருதலுமென் றின்னோரன்ன பகுதியெல்லாம் அவ்வரையறையின்றித் தழுவப்பட்டன; அஃதேல், அவற்றைத் தாழிசையென்றதென்னோயெனின்,— பெரும்பாலுந் தாழம்பட்ட ஓசையவாகலினென்பது; என்றூர்க்குத் தரவு விலக்கியதனுன் எண்ணுஞ் சுரிதகமும் விலக்குண்ணுவாம் பிறவெனின்,— அற்றன்று; தாழிசைப்பேறு விதந்தோததலே ஒழிந்தன விலக்குண்ணுமென்பது. மற்றுத் தாழிசை பெறுவதியாதோவெனின்,— [3] கொச்சகவொருபோகெனப் பொதுவகையாற் செய்யுளெனக் கொள்க. அதுநோக்கிப்போலும் பலவுமெண்ணி,

'யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது'

என்று ஒருமை கூறுவானுயிற்றென்றுணர்க; அஃதேதல், இரண்டடியான் வருந் தாழிசை பேரெண்ணுகாவோவெனின்,— [4] அதுவன்றே, முதற்றொடை பெருகினன்றி யெண்ணெனலாகாமையின் என்பது. இவை வருமாறு:—

1. பத்தும் பதினென்றும் பன்னிரண்டுமாகி வருவன பதிகம் என்றும், அவை திருவாசகம், திருப்பாட்டு, திருவாய்மொழி முதலியவற்றிற் காண்க என்றுங் கூறுவர் நச்சினர்க்கினியர்.

2. நான்கடியின் ஏறுது என்பது நான்கடியின் ஒன்றுது எனவும் பாடம். அது சிறப்பின்று. நச்சினர்க்கினியரும் நான்கடியின் ஏறுது என்றே கூறுதல் காண்க. பதினென்கடியின் ஏறுது வருதலும் என்பது S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்புப் பாடம். இதில் நான்கடியின் ஏறுது என்பதற்கு முன்னுள்ள பதினென்று மகப்பட்டு என்பதில் பதினெழிய ஏனைய சிதலரிக்க அப்பதினென்பதையும் நான்கையும் எழுதுவோர் சேர்த்து எழுதியிருத்தல் வேண்டும். அன்றேல், எழுதுவோரால் விடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கொச்சகவொருபோகெனப் பொதுவகையாற் செய்யுள் என்பது கொச்சகவொருபோகெனப் பொதுவகையாகின்ற செய்யுள் என்றிருத்தல் வேண்டும். நச்சினர்க்கினியரும் இவ்வாறே கூறுவர். பெறுவது செய்யுள் எனை முடிக்க.

4. அதுவன்றே என்றது ஆகாதன்றே என்றிருத்தல் வேண்டும். முதற்றொடை—எண்ணுள்வரு முதற்றொடை (பேரெண்). இத்தாழிசை தனிவருதலின் எண்ணுறுப்பாகாதென்றபடி.

'உளையாழி யோரேழு மொருசெலுவி னெடுங்குதலான்
விளையாட நீர்பெரு மீனுருவம் பரவுதுமே.'

என்றுற்போலப் பரணிச் செய்யுளுட் பயின்றுவருமென்பது.

இவ்வாறு பல தாழிசை தொடர்பொருளவாகலின் அவற்றைப் பல அடுக்கிவரினுந் தாழிசையாமெனவே, இதற்கு வாராவெனப்பட்ட கொச்சகம் [1] தாழிசையின்றி வெண்பாவாகி வருமென்பது உய்த்துணரப்படும்; என்னை? வெண்பாவினுன் [2] வஞ்சி பரிபாடலுட் கொச்சகம் வருமென்றமையின். [3] பல அடுக்கி வருவதைப் பஃறுழிசைக் கொச்சகமெனவும் அமையும். அவை சில வருவன சிஃறுழிசைக் கொச்சகமெனப்படும்; பிறவும் அன்ன.

மற்றுப் பரணியுட் புறத்திணை பலவும் விராய்வருதலின் அது தேவபாணியாமென்றதென்னையெனின்,— அவையெல்லாங் காடுகெழு செல்விக்குப் பரணிநாட் கூழுந்துணங்கையுங்கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றி யதனுட் பாட்டுடைத் தலைவனைப் பெய்து சொல்லப்படுவனவாதலான், அவையெல்லாவாற்றானுந் தேவபாணியேயாமென்பது; என்றூர்க்கு, ஒரு தாழிசையோ பல தொடர்ந்தவழியோ கொச்சகவொருபோகாவதெனின் வரையறையின்மையின் இருவாற்றானுமாமென்பது. இனித் தாழிசை மூன்றடுக்கியவழி மூன்றடியான் வருமாறு:—

'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ;

பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவ
னீங்குநம் மானுள் வருமே லவன்வாயி
லாம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ;

கொல்லியஞ் சாரற் குருந்தொசித்த மாயவ
னெல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.'

(சிலப். ஆய்ச்சியர் குரவை.)

என வரும்.

1. தாழிசையின்றி—தாழம்பட்ட வோசையின்றி.

2. வஞ்சி—கலி என்றிருத்தல் வேண்டும். வெண்பாவினுலே கொச்சகம் கலியில் வருமென்பது கலிவெண்பாவுக்குக் கொச்சகமும் உறுப்பாக வருமென்று கோடலானும், கொச்சகக்கலி கலிவெண்பாவின் உறுப்புவகையான் வரும் என்று கோடலானும் பிறவாற்றானும் பெறப்படும்.

3. பல அடுக்கிவருவதை என்னுந் தொடர் முற்பதிப்பில் விடுபட்டது.

இனி, நான்கடியான் வருதல் சிறுபான்மை; அவை வந்த வழிக் கண்டுகொள்க.

'தாழிசை யின்றித் தரவுடைத் தாயும்' என்பது மேற் கூறிய தாழிசையின்றித் தரவேபெற்று வருதலுமென்றவாறு. பொதுவகையானின்ற கொச்சகவொருபோகு இரண்டு தரவுடைத் தெனப்பட்டது. மேல் 'தரவின்றுஇ' என்றதுபோல ஈண்டுந் தாழிசையின்றி யென்றதனால்; தாழிசையொடுபட்ட தரவிலக் கணத்தில் [1] திரிந்துவரும் இதுதரவெனக் கொள்க. அது தரவு கொச்சகமுந் தரவிணைக் கொச்சகமுமென இரண்டாய் [2] வருதலும் நான்கும் ஆறும் எட்டுமாய் வருதல் [3] கடப்பாடின்றென் பதூஉங் கொள்க.

'உடைத்து' எனப்பட்டது, தரவெனவே ஒழிந்த உறுப்புவிலக்குண்டன. 'ஆகியும்' என்றமிகையான், இரண்டு வருதலே பெரும்பான்மையெனவும், தரவோடொக்குமெனப் பட்ட சுரிதகம் பெரும்பான்மையும் பெறுஞான்று பெறுவது அதுவேயெனவுங் கொள்க. சுரிதகம் பெறுவன சுரிதகத் தரவிணை யென்று வழங்குப. மேல் தனிச்சொற்கு வரையறையின்மையின் அது பெற்றும் பெறுதும் வருமென்பது. மற்றுத் தரவிலக் கணம் இழந்ததாயின் அதனைத் தரவென்று பயந்ததென்னை யெனின், — தாழம்பட்ட ஓசையின்றி அது வருதல் பெரும் பான்மையென்றற்கென்பது; எனவே, யாண்டுந் தரவென்பது தாழம்பட்ட ஓசைக்கு ஒரு [4] தலைமையின்றி வருமென்பது நேர்ந்தவாறுயிற்று; அது,

'நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளர்த்ததுபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமுகிலோ குறிசெய்ய
வேறணிந்த சுவடெறிப்ப வேனிலாற் கெரிவிழித்த
வேறணிந்த வெல்கொடியோ வெவ்வுயிர்நிற் றவிர்ந்தனவே.'

என்பது தரவு கொச்சகம்.

---

1. திரிதல்—வேறுபடல்.

2. வருதலும், என்பதூஉம் கொள்க என இயையும்.

3. கடப்பாடு—முறைமை, நிச்சயம்.

4. தலைமை—முதன்மை. இன்றிவருமெனவே தாழம்பட்ட வோசைபெற்று வருதலே முதன்மையாகக்கொள்ளாதென்றபடி. ஒரு தலைமையின்றி என்பது ஒருதலையின்றி என்றிருப்பினும் பொருந்தும். ஒருதலை—நிச்சயம்.

'பூணுக வென்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணுகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணுக வெண்ணூலான் வாணுதலாள் பாகத்தா
னூணுரும் பிச்சையா னுண்ணுத நஞ்சுண்டான்
வானறு தோய்ந்த சடையான் மழுவலத்தான்
யானீர்வஞ் செய்யு மிறை;
எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
விளைமாசு தீரும் விளக்காருந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் பயந்த
புனைபூங் கழற்கான்மேற் பூவொடு நீர்தூஉ
மனைமாண்ட பாக முளப்பட வாழ்ந்தி
யெனைநாளு மேத்துது மெந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு.'

என்பது, தரவிணைக்கொச்சகம். இது சுரிதகம்பெற்று வருவன வும், தனிச்சொற்பெற்று வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

மற்றுத் தேவபாணியல்லாத [1] தொடர்பொருட் செய்யுட் கண் தரவின்றித் தாழிசை வந்தியன்றுமோ தாழிசையின்றித் தரவுடைத்தாயதென்றுமோவெனின், — அவை,

'யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது.'

என்றதனானே [2] ஒன்றற்கொன்று தரவெனப்பட்டுத் தரவு கொச்சகமாமென்பது; என்னை? ஆறும் எட்டுமெனப்பட்டு வாராமையானும், மூன்றடித் தாழிசையாய் வாராமையானுந் தாழிசையெனப்படாமையின். அவை [3] தம்பொருளொடு தாம் முடியாமையின் தரவுகொச்சக மாயின.

இனி, [4] அத்தொடர்நிலையின் முதற்கண்நின்ற [5] தேவ பாணி தன்பொருளொடு தான் முடிதலின் அது விதந்தோதிய தரவு கொச்சகமாம்; என்னை? [6] எருத்தென்பது உடம்பிற்கு முதலாகலினென்பது.

---

1. தொடர் பொருட் செய்யுள் — சூளாமணி, சிந்தாமணி முதலியன.

2. ஒன்றற்கொன்று—தரவுந் தாழிசையும் ஒன்றற்கொன்று. தரவை நோக்கத் தாழிசை தரவாயும், தாழிசையை நோக்கத் தரவு தாழிசையாயும் வரும் என்றபடி.

3. பொருள் தொடர்ந்து வருதல்பற்றித் தம்பொருளொடு தாம் முடியாமையின் என்றார்.

4. தொடர்நிலை—தொடர்நிலைச் செய்யுள். சூளாமணி, சிந் தாமணி முதலியன.

5. தேவபாணி—கடவுள் வாழ்த்து.

6. எருத்து—தரவு.

'எண் இடையிட்டுச் சின்னங் குன்றியும்' என்பது, வண்ணகத்திற்கு ஓதிய எண்ணுஞ் சின்னமுமின்றி ஒழிந்ததாம். தரவுதாழிசை தனிச்சொற் சுரிதகமென்னும் நான்கு உறுப்புடையதுங் கொச்சகவொருபோகா மென்றவாறு. இதற்கு இல்லாத உறுப்பே கூறி உள்ளது கூறிலன், அல்லாத உறுப்பினையெல்லாம் அவற்றுனே நிற்றலே வேண்டியென்பது. உதாரணம் :—

'ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் தடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூருமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாருப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி ;

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடிய ரகலல்குல்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ ;

மண்டமர் பலகடத்து மதுகையா லீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணியெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ ;

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலையங்கை கொண்டுநீ கார:பால மாடுங்கான்
முலையணிந்த முறுவலாண் முற்பாணி தருவாளோ ;

எனவாங்கு ;
பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வானமில் பொருளெமக் கமர்ந்தனே யாடி.'

(கலி. கடவுள்)

எனவரும்.

[1] இது 'ஏனையொன்று' எனப்பட்ட தேவபாணி ஒத்தாழிசையாகலான் உறுப்பொன்றியும் [2]முதனிலையொத்தாழிசையாகாது. [3] ஏனை ஒத்தாழிசையின் உறுப்பிழுத்தல்பற்றி,

"ஒப்ப நாடி யுணர்தல் வேண்டும்" (தொ. சசுo)

என்பதனுற், சின்ன எண் நிற்பவும் எண் இழந்ததெனப்பட்ட

1. இது என்பது புத்தகப் பிரதிகளில் இல்லை. தவறிற்றுப் போலும். இது என்றது, எண் இடையிட்டுச் சின்னங் குன்றியதை. உறுப்பொன்றல்—அகநிலைக்குரிய நான்கு உறுப்பும் பெறல்.

2. முதனிலை யொத்தாழிசை என்றது அகநிலை யொத்தாழிசையை. (சசசஞ் சூத்.)

3. ஏனை ஒத்தாழிசையின்—வண்ணக ஒத்தாழிசையினது. நச்சர் உரை நோக்குக.

அம்போதரங்க வொருபோகுபோலக் கொச்சகமேயன்றி [1] எண்ணுறுப்பு இழந்ததூஉங் கொச்சக வொருபோகெனப்பட்ட ஒரு போகாமென்றுனென்பது.

'அடக்கிய வின்றி யடிநிமிர்ந் தொழுகியும்' என்பது, [2] அடக்கும் இயல்பிற்றல்லாத ஈற்றதாகி [3] ஒருதொடையான் அடிநிமிர்ந்தொழுகியுமென்றவாறு. 'ஒழுகும்' எனவே [4] அற்று வாராது ஒன்றேயாகி வருமென்பது. 'அடிநிமிரும்' என்றதனுன், மேல் அடிவரையறுத்துச் சொல்லப்பட்ட தரவுதாழிசை முதலிய உறுப்பு இதற்கில்லையென்றவாறும். அடக்கியல் வாரத்தினை அடக்கும் இயல்பின்றெனவே இதற்கு வாரம் நேர்ந்தானுமாகலின், ஒழுகுமென்றதனேடு மாறுகொள்ளும் பிறவெனின்,—அங்ஙனம் படுமாயினும் ஒருகாரணம் நோக்கி அவ்வாறு நேர்ந்தானென்பது ; என்னை ? அடிநிமிர்ந்தொழுகுங்கால்,

"எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே."

எனவும்,

"வெண்பா வியலினும் பண்புற முடியும்."

எனவும் ஓதியவாற்றுனே [5] இறுதிநிற்ப, ஏனையடியெல்லாங் கலியடியாகி ஒழுகி வாரம்பட்டு நிற்குமென்று கோடற்கென்பது ; ஈதறியாதார், வெண்பாவியலாற் பண்புறமுடிந்த கலியடியுடைய தனை வெண்கலியென்ப ; வெண்கலியாமாறு முன்னர்ச் சொல்லும்.

'மழைதுளைத்துப் புறப்பட்ட மதியமு ஞாயிறும்போ
லுழைமுழங்கு வலம்புரியுந் திகிரியு மொளிசிறப்பப்
பச்சென்ன வானிட்ட வில்லேபோற் பசுந்துழாய்
கச்சென்னக் கனல்கின்ற கதிர்முகமேற் கவின்செய்ய
வம்மேகத் திடைப்பிறந்த நரையுருமே றதிசயிப்ப
மைம்மேனி மருங்கசைய நகுத்தரியே வால்புடைப்ப
விண்டோயு மணிநீல வெற்பினிடை வேய்மிடைந்தாங்
கெண்டோளு மிடுநீழ லிளங்கிளிகள் களிகூரக்

1. எண்ணுறுப்பு—அம்போதரங்க உறுப்பு.

2. அடக்குமியல்பிற்றல்லாத எனவே, தரவு தாழிசைப் பொருள்களை அடக்குமியல்பிற்றல்லாத சுரிதகம் வருமென்பதாம்.

3. ஒருதொடையான்—ஒருதொடையாக.

4. அற்று—முடிந்து.

5. இறுதி—முடிவு. இற்று நிற்ப என்று பாடங்கொள்ளினு மமையும்.

கொதியாது கொழித்தெறிந்த கோடெருமைத் தகிலின்மிசை
மிதியாத சிறடி மிதித்தன போற்றேன்றத்
தாங்கிய புகர்வாளுங் கேடகமுந் தளித்தனி
வாங்கிய கோளரவு மதியமும் போன்றிலங்க
மைதொடுத்த கடற்புறஞ்சூழ் மகிலென்ன மணியல்குல்
கொய்துடுத்த பொற்றுகிலின் கொழுஞ்சோதி கொழுந்தோட்ட
நீனின்ற படிவத்தா னெடியோனே முதற்பயந்த
தாயென்று முதுமறை பரவினும்
யாயென் றல்ல தியாந்துணி யலமே.'

எனவரும். வெண்பாவினுண் முடியுங் கொச்சக வொருபோகு தேவபாணியாய் வந்தன கண்டுகொள்க.

" யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது."

எனவே யாப்பின் வேறுபடுவனவும் பொருளின் வேறுபடுவனவு மென இரண்டாம்.

அவற்றுள், யாப்பின் வேறுபடுதலென்பது மேற்சொல்லின வாறும், இனி வருகின்றவாறுமின்றி யாப்பிலக்கணத்தின் வேறு படுதல். அவை இருசீர்முதலாக எண்சீர்காறும் வந்த அடி மேற் கூறியவாறன்றி நங்நான்கே பெற்றுவருதலும், அவற்றுட் பிற வடி விராய்வருதலும், பா மயங்கி வருதலும், இரண்டும் மூன் றும் நான்கும் ஆகிய அடியுள் ஈற்றடி குறைதலும், குறையாத வழி இயலசைச்சீர் வருதலும், மூன்றடியாயிற் குறையாது வரு தலும், நான்கடிச்செய்யுண் முடியவும் அடியிரண்டு மிகுதலும் [1] இனவியலின் வேறுபடுதலும், கடவுட் டொடர்நிலைகள் பல தரவுந் தாழிசையுமாகி இடையிடைச் செய்வனவும், அடக்கிய லின்றி [2] அடிப்பட நிமிர்ந்தொழுகுமெனப் [3] பட்ட அடக்கிய லுடைத்தாகலும் என்றின்னோரன்ன பல பகுதியுங் கொள்ளப் படும். இப்பகுதியெல்லாம் பொருள் வேறுபட்ட வழியும் நிகழு மென்பது, இரண்டனையும் உடன்வைத்தோதியதனுற் கொள் ளப்படும்; என்றார்க்கு, வரையறையின்மையிற் களம்பாடு பொருநர் கட்டுரையும், தச்சுவினைமாக்கள் சொற்றொடரும் ஏற்று இக்காலத்து உரைநிகழ்ந்தனவும், ஓலைப் [4] பாயிரமும் முதலாயினவெல்லாங் கொச்சகமாகற்கு இழுக்கென்னையெனின்

1. இனவியல்—இன்னவியல்பு.
2. அடிப்பட—அடி என்றிருப்பது நலம்.
3. பட்ட—பட்டன.
4. பாயிரம்—பாசுரம் என்றிருப்பது நலம்.

அவையே [1] அடிவரையறையில்லன ஆறென்றவழி உரையெனப் பகுத்தோதார்க்கன்றே அது கடாவாவதென மறுக்க.

இவ்வாறு வந்த கொச்சகங்களை ஒரு வரையறைப்படுத்துப் பாத்தோதும் இனஞ் [2] சேர்த்தலும், பண்ணிற்குத் [3] திறம் போலப் பண்ணிருபகுதியவாமென்பார் உரைக்குமாறு: விருத்தந் துறை தாழிசையென மூன்றனையும் நான்கு செய்யுளோடும் உறழ்ந்துரைப்பப் பண்ணிரண்டாமென்பது. மருட்பாவும் பரி பாடலுமோவெனின், அவற்றுக்கு அஃது ஆராய்ச்சியன்றென வும், [4] அவற்றை ஒப்பனவெல்லாம் ஒப்பெனமொழிய அடங்கு மென்பதூஉம் அவர் கருத்து. இனி நூற்றைம்பது கலியும் எழு பது பரிபாடலுமெனச் சங்கத்தார் தொகுத்தவற்றுள் [5] ஒன் றனை யில்லையென்றார்; அஃது இக்காலத்தினும் வீழ்ந்த தின்மை யின் அவரிலக்கணத்தினை வழுப்படுத்ததென்பது. இனி, விருத் தமுந் துறையுந் தாழிசையுமன்றி ஒப்புந் திறனு மென்றுற் போல்வன சிலகூட்டி அறுவகைச் செய்யுளோடுறழ முப்பதாம்; இனி, அவற்றை விகற்பித்துநோக்க எண்ணிறந்த பகுதியவாம்; என்னை? சீரும் அடியுந் தொடையும் பாவும் முதலாயவற்றோடு குறளடி முதலாயவற்றை வைத்துறழவும் அவ்வடிதம்மொடு தம்மைப் [6] பரிமாற்றவுந் தம்மொடு பிறவற்றை மயக்கவும் பல்கு மாகலின்,

" கொன்றை வேய்ந்த செல்வ னடியினை
யென்று மேத்தித் தொழுவோம் யாமே."

(கொன்றைவேந்தன்)

1. அடிவரையறையில்லன ஆறு—நூல், உரை, வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல். கடா—வினை. ஓலைப்பாசுர முதலி யன உரையுளடங்குமென்றபடி.
2. சேர்த்தலும்—சேர்த்தி என்றிருப்பது நலம். உம்மையால் வேறுதொடர் சிதைந்திருத்தல்வேண்டும், என்றும் கருதத்தக்கது.
3. திறம்போல என்றதனோடு சேர்ந்த வாக்கியம் விடப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.
4. அவற்றை ஒப்பன—அந்நான்கு பாவையு மொப்பன. பரிபாடலும் கலிப்பாவும் ஒப்புளடங்குமென்பது அவர் கருத்து.
5. ஒன்றனை என்றது—பரிபாடலிப்போலும். 441-ஞ் சூத் திரவுரையுள் பரிபாடலும் கலிப்பாவினுள் அடங்குமென்பாரு முளர் என வருதல் நோக்குக.
6. கொடுத்துமாறல்.

என்பது, இரண்டடியாகலின் [1] வெண்பாவினுள் ஒரு சாரனவற் றுக்கும் கலியுள் ஒருசாரனவற்றுக்கும் இனமெனப்படும். இனி, சீரும் தளையும் நோக்க ஆசிரியத்திற்கு இனமெனப்படும். இங்ங னம் பலவற்றுக்கு இனமாயினும் இரண்டடியானே ஒரு செய்யுள் வருவது வெண்பாவென்பது நோக்கி அதற்கினமாக்கி வெண்செந் தறையென்ப. இரண்டடியும் ஒத்து வருதலானும், [2]ஒழிந்த காரணங்களான் [3]நேர்ந்த பாக்கட்கு இனமாகலே விலக்குதல் அரிதாகலானும், அங்ஙனம் இனஞ் சேர்த்துதற்கு வரையறை யின்றென்பது. இனி, [4] சந்தஞ் சிதைந்தனவும் புன்பொருளவாய் வருவனவுஞ் செய்யுளென்பார், அவற்றைத் தாழிசையென்ப; அதற்குக் காரணமின்றென்பது; அல்லதூஉம் தாழ்ந்த ஓசை யல்லாவொன்றைத் தாழிசையினின் தரவு தாழிசைகளுள் தாழிசையுஞ் சந்தம் அழியல்வேண்டுமென்பது. இனி, விழுமிய பொருளல்லனவற்றைத் தாழிசையென்றற்கு என்னே காரண மெனவும் மறுக்க; அல்லதூஉம்,

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவ
னின்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ."

(சிலப். ஆய்ச்சி)

என மூன்றும் மூன்றடியான் முடிந்ததனே ஆசிரியத்தாழிசை யெனின்,— அதனுட் கிடந்த வெண்டளே அதற்கொன்று [6]தென்னுமெனபது; இனி, இதுவே நான்காகிவரிற் கலிவிருத்த மென்ப; அது,

"நெருப்புக் கிழித்து விழித்ததோர் நெற்றி
யுருப்பிற் பொடிபட் டுருவிழந்த மார
னருப்புக் கணையா னடப்பட்டார் மாதர்
விருப்புச் செயதின்னே விரும்புகின் றூரே."

என்றவழி, இது நான்கடியாசிரியத்திற்குத் தாழிசையாங்கால் இழுக்கென்னேயெனவும், வெண்டளே தட்டது வெண்டாழிசை

1. ஒருசாரன—குறள்வெண்பா.

2. ஒழிந்த காரணம்—சீரும் தளையு முதலான காரணம்.

3. நேர்ந்த—இயைந்த. இது ஒழிந்த என்று பாடமிருப்பது நலம்.

4. "அந்தடி குறைநவுஞ் செந்துறைச் சிதைவும் — சந்தழி குறளுந் தாழிசைக் குறளே" என்பது யாப்பருங்கலம். (செய் யுளி. சூசு)

5. என்னும் என்பது என்றுமென்றிருப்பது நலம். இல்லாம லிருப்பதும் நலம்.

யாதற்கு இழுக்கென்னேயெனவும், கலித்தளையில்லது கலிப்பா விற்கு இனமாயவாறு என்னேயெனவுங் கூறி மறுக்க.

இனி, குறளடியானுஞ் சிந்தடியானும் வருவனவற்றை வஞ் சிப்பாவிற்கு இனமாமென்ப. சீரளவொப்பினும் அடி நான்காத லானும், வருஞ்சீர் இயற்சீராதலானும், பா வேறுபடுதலானும் அதற்கு இவை இனமாகாவென்பது. இனி, குறளடிச்செய்யுண் மூன்றுவரில் தாழிசையெனவும், சிந்தடிச்செய்யுண் மூன்று வரா வெனவும் கூறின் அதற்கும் ஓர் காரணங்கூறல் அரிதென்க. ஒழிந்தனவும் இவ்வாறே இனஞ்சேர்த்திற் பிறிதொருகாரணத் தாற் பிறபாவிற்கும் அவையே இனமாதல் [1] கூட்டி மறுக்க; என்றார்க்கு, இங்ஙனம் ஒன்றற்கு இனஞ்சேர்த்தல் அரியன வற்றைக் கலிப்பாவென்றதென்னேயெனின்,— பெரும்பான்மை யுங் கலிப்பாவிற்கேற்ற ஓசையவாகலின் அவையெல்லாவற்றுக் கும் ஒரு [2] பரிகாரங் கொடுத்துச் சூத்திரத்தினுள் அடக்கினுன் இவ்வாசிரியன்,

"முந்நூல் கண்டு முறைப்பட வெண்ணி." (பாயிரம்)

என்பது. இது மேலேக்கொண்டு அடிப்படவந்த மரபு. இவை யெல்லாம் நான்கடியான் வருகலே பெரும்பான்மையெனக் கொள்க. எனவே, சிறுபான்மை [3]பாவைப்பாட்டும் அம்மனைப் பாட்டு முதலாயின நான்கடியின் இகந்து வருவனவாயின.

இனி, அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியது ஒழித்து, ஒழிந்த கொச்சகவொருபோகு முப்பகுதியுங் தம்முறுப்புவகை யானே அளவை கொள்ளப்படும். இப்பகுதி பலவாயினும் மரபுபட்டு வந்தவகையானே செய்யுள் செய்யப்படும்; இனி யவற்றுட் சில வருமாறு:

"நெய்யொடு நீயொக்கச்
செய்யாளைச் சேர்வார்க்குப்
பொய்யாத வுள்ளமே
மெய்யாகள் வேண்டுமே."

1. கூட்டி—காட்டி என்றிருப்பது நலம்.

2. பரிகாரம் என்றது—பெரும்பான்மையுங் கலியோசை பெற்று வருதலின். 'யாப்பின் வேற்றுமை யுடையதென்று பரிகாரங் கொடுத்தமையை.' பரிகாரம்—பாதுகாப்பு.

3. பாவை — திருவெம்பாவை. அம்மனை—திருவம்மானை. இவையிரண்டும் திருவாசகத்திலுள்ளன.

எனக் குறளடி நான்காக வந்தது. இது குட்டம்பட்டு வாரா தென்பது மேற்கூறப்பட்டது.

"மையனி கண்டகோ வாணே
ரையகீ னாயிரம் பேழ்வாய்ப்
பையர வம்பல பூணு
மெய்யகீ மேயது வீடே."

என்பது, முச்சீரடியான் வந்த கொச்சகம்; இஃது, இயலசைச் சீராகி [1] வந்தவழியுங் கண்டுகொள்க.

"பூண்ட பறையுறையப் பூத மருள
நீண்ட 'சடையா ஞடு மென்ப
மாண்ட சாயன் மகிமைகள் காணவே காணவே."

(யா. வி. ப. நூகக)

என்பது, சிறுபான்மை மூன்றடியான்வந்து இடையடி குட்டம் பட்டது. இது [2] கந்திருவமார்க்கத்தான் இடைமடக்கி நான்கடி யாதலும் ஈற்றடி ஒருசீர் மிகுதலுமுடைத்தென்பது.

"ஒரு வான்யா ருடுச டாடவிப்
பெரு நாகமே பூணும் பெருமா
னரு வாயினு ளுயினு மன்பர்க்
குரு வாயினு ளுள்ளத்தி னுள்ளே."

என்பது, நிரையசைச்சீர் முதற்கண்வந்த அளவடி நான்கான் வந்தது; அசைச்சீரின்றி அளவடி நான்கான் வருவதும்,

"தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்."

என்றவழி, தரவு கொச்சகமா யடங்குமென்பது.

"வண்டணி கொண்ட மதுமலர்க் கொன்றை யினமாலை
கொண்டணி செஞ்சடைக் கோட்டினந் திங்கள்போற்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தா
னுண்டணி கொண்டநஞ் சுண்பார்க் கமிழ்தாமே."

என நாற்சீரடியிரண்டும் ஐஞ்சீரடியிரண்டுமாய் வந்தது. இனி,

"அறுசீ ரடியே யாசிரியத் தளியொடு
நெறிபெற்று வருஉ நேரடி முன்னே."

[3] என்றதுபோல இலக்கணங்கள் கொச்சக வொருபோகிற்கே உரித்தாகவும் இன்னும் வேறுபட்டதாகவும் வரும்; அது,

1. வந்தவழியும் என்பது வந்தவாறும் எனக் காணப்படு கின்றது. அதுவே பொருத்தமாதல் மேற்காட்டிய செய்யுள் நோக்கி உணர்க.

2. கந்தருவமார்க்கம்—இசைநூன்மார்க்கம்.

3. என்றதுபோல இலக்கணங்கள்—என்றதுபோல வரும் இலக்கணங்கள் என்பதனுள் இதுவும் வேண்டும்.

"கல்லாலத் தண்ணிழற்கீழ்க் கல்வித் துறைபயந்த காமர்காட்சி
நல்லாகீ நல்லா ளொருபாக மாயெ ஞானத்தாகீ
யெல்லாரு மேத்தத் தகுவாகீ யெஞ்ஞான்றுஞ்
சொல்லாதார்க் கெல்லாந் துயரல்ல நில்லீ தொழுமின்கண்டீர்."

என வரும். இவ்வாறே ஒழிந்தனவெல்லாம் [1] பரிமாற்றுப் படுப் பப் பலவாகி வரும்; அவை வந்தவழிக் கண்டுகொள்க.

இனி, நான்கடியும் ஒத்தவழி மயங்கி வருமாறு:—

"தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு தழீஇ
வென்ருடு நிருத்தாதை வியந்துகை துடிகொட்ட
நின்ருடு மழகளிற்றை நினைவாரே வினையிலரே."

என வரும்.

"புனமலர்க் கடம்பின் பூந்தார்ச் சேந்த
னரிணையடி பரவுதும் யாம்."

என்பது இரண்டடியான் ஈற்றடி குறைந்து வந்தது.

"கொன்றை வேய்ந்த செல்வ னடியினை
யென்று மேத்திக் தொழுவோம் யாமே."

என்பது, இரண்டடியுள் ஈற்றடி குறையாது அடிதோறும் மயங்கச் சீர் இயலசையான் வந்தது. ஒழிந்த மூன்றடியும் நான் கடியும் [2] ஈற்றடியும் குறைதலுங் குறையாதவழி இயலசைச் சீராதலுங் [3] கண்டுகொள்க.

"வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிறைகழ லுழுதனம்."

(யா. வி. ப. உசூச)

என்பது, மூன்றடியால் தரவு வாராமையின் யாப்பு வேறுபட்ட கொச்சகமாயிற்று.

"கடாமுங் குருதியுங் கால்வீழ்ந்த பச்சைப்
படாமும் புலித்தோலுஞ் சாத்தும் பரம
னிடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் கங்கை
விடாமுண்ட வார்சடையான் வெண்ணீ றணிந்தோன்
மெய்யுறு நோயில்லை வேறோர் பிறப்பில்லை
யையுறு நெஞ்சில்லை யாகாத தொன்றில்லை."

1. பரிமாறல்—ஒரு அடியோடு வேறடியைக் கொடுத்து மாறிச்சொல்லல். நான்கோடு ஐந்துசீரடியையும், ஐந்துசீரடி யோடு ஆறுசீரடியையுங் கொடுத்து மாறல்.

2. உம்மை வேண்டியதில்லை.

3. வந்தவழிக் கண்டுகொள்க என்றிருப்பது நலம்.

என நான்கடியும் முடிந்தவழி இரண்டடி வேறுவந்த கொச்சகம்; ஒழிந்தனவும் பிற வேறுபாட்டான் வருவனவுமெல்லாம் வந்த வழிக் கண்டுகொள்க. இச் சொல்லப்பட்டனவெல்லாங் தரவு கொச்சகத்தின்பாற் சார்த்திக்கொள்ளப்படுவனவென்ப; வேறும் உள; அவையும் அவ்வாறுந லறிந்துகொள்க.

மற்றங்ஙனங்கூறின் இரண்டடியான் வருவன தாழிசையாகலின்,

"கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
யென்று மேத்திக் தொழுவோம் யாமே."

எனவும்,

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை." (முதுமொழி)

எனவும் வருவன தாழிசையாம் பிறவெனின்,— தாழிசை இலக்கணஞ் சிதையவரினுங் தாழிசைக் கொச்சகமெனவேபடுமன்றே? தரவிலக்கணம் அழிந்து தரவிரட்டித்துச் சுரிதகம் பெற்றதூஉந் தரவு கொச்சகமாயிற்றுப்போலவென்பது; அல்லதூஉம்,

"ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை."

என்பது, இரண்டடியின்றி முதுமொழியாகலானும்,

"ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்."

என்பது, [1] பலவற்றுக்கும் பொதுவாகலானும் அஃது இரண்டடி வரையறையுடைய பாட்டெனப்படாது.

"கொன்றை வேய்ந்த செல்வ னடி."

என்பது, கந்திருவ மார்க்கமாதலின் ஈண்டையிலக்கணமெல்லாம் பெறுதல் சிறுபான்மையெனக் கொள்க.

இனி, பொருளினும் வேற்றுமையென்பது, [2] முற் கூறிய வகையானும், மாபு வேற்றுமையானும் ஏற்றவகையான் வந்து பொருள் வேறுபடுதல்; அஃதாவது,—தேவரை முன்னிலை

1. பலவற்றிற்கும் என்றது அந்நூலின் பின்வரும் முதுமொழிகள் பலவற்றிற்கும் என்றபடி.

2. முற்கூறியவகையென்றது தரவின்றொடித் தாழிசைபெறுதன் முதலிய நான்குவகையானும் என்றபடி. மரபு வேற்றுமையானும் என்பது யாப்பு வேற்றுமையானு மென்றிருத்தல் வேண்டும். அதுவே பொருத்தமாதல் பின் எடுத்தோதிய நான்கற்கும் யாப்பு வேறுபட்டவற்றுக்கும் என வருதலானறிக.

யாக்கி நிறீஇச் சொல்லாது [1] படர்க்கையாகச் சொல்லுதலும் மக்களே நாட்டி வெட்சிமுதற் பாடாண்டிணை யிறுதியாகிய புறப் பொருளான் வந்து அதனுக்குரித்தென்று கூறப்பட்ட [2] பொருளின் வேறுபடுதலுமெனக் கொள்க.

ஏற்றவகையாற் பொருள் வேறுபாடு கொள்கவெனவே, [3] முன்னிலை படர்க்கையான் வரும் பொருள் வேறுபாடே இஃது ஓதிய நான்குமாமாறு. வேறுபட்டவற்றுக்கு மெல்லாம் பொதுவொழிந்த வெட்சிமுதற் பாடாண்டிணை யிறுதியாகிய பொருள் வேறுபாடு வரையறையுடையவென்பது; என்னை? எடுத்தோதிய நான்கனுள்,

"எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்."

வரும் பகுதியொழிந்து [4] வருமாகலின்; இப்பொருள் வேறுபாடு பாணிச் செய்புளுள் இடையிடை விரவி வரினல்லது வேறு வாராதெனக் கொள்க. இவ்வாற்றுற் கொச்சகக் கலிப்பாவினை வரைந்தோதலே ஆசிரியப்பாவும் வெண்பாவும் ஒருபொருண்மேற் பல தொடர்ந்தவழி [5] மூன்றும் ஐந்தும் ஏழும் ஒன்பதுமாகி வருதலும், பிறவாற்றுன் வருதலும் வரையறையிலவாயின. [6] தேவபாணியல்லாத தொடர்நிலைச் செய்புளெல்லாம்

1. படர்க்கையெனச் சொல்லுதலும் என்பது முற்பாடம். அப்பாடத்தினும் படர்க்கையாகச் சொல்லுதலும் என்றபாடமே பொருத்தமாதல் காண்க.

2. பொருளின் வேறுபடுதலினுலும் என்னும் பாடம் பொருத்தமில்லை. பொருளின் வேறுபடுதலும் என்றிருத்தலே பொருத்தம். அவ்வாறு பவானந்தம்பிள்ளை பதிப்பிலும் காணப்படுகின்றது. அதனுக்கு = கலிக்கு. காமப்பொருளின் எனவும் பாடம்.

3. 'முன்னிலை.... என்பது.' என்பது, முன்னிலை படர்க்கையான்வரும் பொருள் வேறுபாடே எடுத்தோதிய நான்கற்கும் யாப்பு வேறுபட்டவற்றுக்குமெல்லாம் பொது. இஃதொழிந்த வெட்சிமுதற் பாடாண்டிணை இறுதியாகிய பொருள் வேறுபாடு வரையறையுடையதென்பது என்று இருக்கவேண்டும். பொருள் வேறுபாடு எழுவாய். உடையது—பயனிலை. நச்சினார்க்கினியம் நோக்குக.

4. வருமாகலின் வரையறையுடையதென்பது என முடிக்க.

5. இவற்றை ஐங்குறுநூறு, முத்தொள்ளாயிரம் கீழ்க்கணக்கு முதலியவற்றிற் காண்க என்பர் நச்சினார்க்கினியர்.

6. தேவபாணி—கடவுள் வழுத்து.

யாப்பு வேறுபாட்டோடு பொருள் வேறுபாடு முடையவெனக் கொள்க. அவையெல்லாம் [1] அவ்வச் செய்புளூட் காணப்படும்.

'புகலிரும் பனிச்சோலைப் பொன்மலோபோற் பொலிந்திலங்கி
யகல்விசும்பிற் சுடர்மாட்டி யையம்பூத மகத்தடக்கி
மண்ணக மிருணீங்க மன்னுயிர் படைத்தக்கா
லண்ணலேற் றெழிலார்ந் தருமறை முதல்வனுந்
தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்றாய் வானவில் லனையரே.''

எனப் படர்க்கையதாய்த் தெய்வம் பாராஅதலிற் பொருள் வேறு பட்டது.

''வெண்பலிச் சாந்த முழுமெய்பூ மேற்பூசி
யுண்பலிக் கூரூர் நிரவு மேலிட்டுக்
கண்பலிக் கென்று புகுந்த கபாலிமுன்
னெண்பலித் தாளிவள் யாதுவாய் வாளே.''

என்பது,

''காமப் பகுதி கடவுளும் வரையார்:''

எனப்பட்ட பாடாண்டிணையாகலிற் பொருள் வேறுபட்டது.

''கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்.''

என்பதோவெனின், அது முல்லை நிலத்துக்குத் தெய்வமாக லானும், முல்லை நிலத்தார் தம் தெய்வத்தினை அவ்வாறு அன்பு செய்து முன்னிலைப் புறமொழியாகக் கூறுதலானும், அது கைக் கிளையெனப்படாதென்பது; ஒழிந்தனவும் இவ்வாறு வருவன வந்தவழிக் கண்டுகொள்க.

மற்றிவற்றையெல்லாங் கொச்சகவொருபோகென்றதென்னை? மற்றைபுறுப்புப் பலவிழந்தனவாலெனின், — அங்ஙனமாயினுங் கொச்சகவொருபோகென்னும் பொதுவிதி விலக்குண்ணுமையின் இது பொதுவகையானெய்திய [2] பெயரெல்லாம் அவற்றுக்கு மாகுமென்று எய்துவித்தானென்பது. இனி, கொச்சக வொரு போகென்னுது 'ஆகும்' என்றதனான், ஒருபோகென்னுது கொச்சகமென்றே வழங்கினும் அமையுஞ் சிறுபான்மை யென்பதுகொள்க. (ககூக)

1. அவ்வச்செய்யுள்—அவ்வத் தொடர்நிலைச் செய்யுள்.

2. எல்லாம் அவற்றுக்கு என்பது எல்லாவற்றுக்கும் என் றிருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியருரை நோக்குக. பெயர் எல்லாவற்றுக்கும் எனப் பிரிக்க.

[கொச்சகவொருபோகின் அளவு இவையெனல்]

சசூ. ஒருபானீ சிறுமை யிரட்டியத னுயர்பே.

இஃது, அதிகாரத்தான் மேல்நின்ற நான்கனுள் இறுதி நின்ற கொச்சகவொருபோகிற்கு அளவுணர்த்துகின்றது; ஒழிந்த வற்றுக்கெல்லாம் உள்ளுறுப்புப்பற்றி [1] இரண்டளவை கூறி அங்ஙனங் கூறப்படாததற்கும் அவற்றோடு இனம்பற்றி ஈண்டை அளவு கூறினமையின்.

இ—ள்: பத்தடியிற் சுருங்காது, இருபதடியி னேறாது வரும் அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகுமெனப்பட்ட கொச் சகவொருபோகு என்றவாறு.

முன்னர் நால்வகையாற் பகுத்து நிறீஇ, அதற்கிடையின்றி 'அது' என்று ஒருமையாற் சுட்டிக் கூறினமையானும், மேல் 'நிமிர்ந்தொழுகும்' என்றக்கால் அடி எத்துணையும் பலவா மென்று ஐயுறுதலை விலக்கல்வேண்டுவதாகலானும் 'ஏற்புழிக் கோடல்' என்பதனானுமெல்லாம் அதுவே கொள்ளப்பட்டது. அவற்றுக்குச் செய்யுள்;

''தடங்கடற் பூத்த தாமரை மலராகி
யடங்காத முரற்சியா னருமறை வண்டிசைப்ப
வாயிர வாராழி யவிரிதழின் வெளிப்பட்ட
சேயித ழெனத்தோன்றுஞ் செழும்பகலி னிரவகற்றிப்
படுபனிப் பகைநீங்கப் பருவத்து மழையானே
விடுமழை மறுத்திடினு மென்மலரின் மதுமழையா
னெடுநிலங் குளிர்கூர நீர்மைசா னிழுஞறி
யண்டங்கள் பலபயந்த வயன்முதலா மிமையோரைக்
கொண்டங்கு வெளிப்படுத்த கொள்கையை யாகலி
னேங்குயர் பருதியஞ் செல்வநின்
னீங்கா வுள்ள நீங்கன்மா ரெமக்கே.''

என்பது, பத்தடியிற் சுருங்காது இருபதடியி னேறாது வரும்.

''அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகும்.''(தொ.செ. கசகூ)

எனப்பட்ட கொச்சகவொருபோகென்றவாறு. இருபதடியான் வருவது வந்தவழிக் கண்டுகொள்க. (கநிஅ)

1. இரண்டு—உயர்பும் இழிபும். ஈண்டளவை கூறி என்று மிருக்கலாம்.

[அம்போதரங்க வொருபோகின் அளவு இவையெனல்]

சசுஉ. அம்போ தரங்க மறுபதிற் றடித்தே
[1]செம்பால் வாரஞ் சிறுமைக் கெல்லை.

மேனின்ற அதிகாரத்தான் இதுவுங் கடவுள் வாழ்த்துப் பொருட்டாகிய அம்போதரங்கவொருபோகிற்கு அடிவரையறை கூறுகின்றது.

இ—ள்: அம்போதரங்கவொருபோகுந் தன் உறுப்பெல்லாங் கூடி அறுபதடித்தாகியும், அதன் [2]செம்பாலாகிய முப்பதடித்தாகியும், [3]அதன் வாரமாகிய பதினைந்தடியாகியுஞ் சிற்றெல்லை பெறும் என்றவாறு.

எனவே, இது தலையளவம்போதரங்கவொருபோகும், இடையளவம்போதரங்கவொருபோகும், கடையளவம்போதரங்கவொருபோகுமென மூன்றற்குஞ் சிற்றெல்லை கூறியவாறுயிற்று.

அவற்றுக்குப் பேரெல்லை கூறுமாறென்னையெனின்,—அறுபதிற்றடித்தெனத் தலையளவிற்கு வேறு கூறி, அவ்வளவைப் பற்றி அதன் செம்பாலும் அதன் வாரமுமெனப் பாகஞ்செய்து வந்தாஞ்சுலாற் கடையளவம்போதரங்கத்திற்குச் சிற்றெல்லை பதினைந்தாகியவழிப் பேரெல்லை முப்பதின்காறும் உயருமெனவும், இடையளவிற்குச் சிற்றெல்லை முப்பதாகியவழிப் பேரெல்லை அறுபதின்காறும் உயருமெனவும், தலையளவிற்குச் சிற்றெல்லை அறுபதாகியவழி அதனையும் இவ்வாறே இரட்டிப்ப அதன் பேரெல்லை நூற்றிருபதாமெனவும் கொள்ளவைத்தானென்பது. அங்ஙனம் நூற்றிருபதாங்கான் மேனின்ற அதிகாரத்தால் தரவிற்கெல்லை இருபஃதாகவும், அதனோடொப்ப வருதலிலக்கணத்தாகிய [4]அடக்கியல் இருபதடியாகவும் நாற்பதடி பெறப்படும். இனி சிற்றெண் பதினைறும், அராகவடி நான்குமாக இருபதடி பெறப்படும். கொச்சகம் [5]இருமூன்றுகிய பத்தடியின் இகவாது

1. செம்பால்வாரம்—உம்மைத்தொகை.
2. செம்பாகம்—சரிபாதி.
3. அதன்வாரம்—அதன்பாகம்.
4. அடக்கியல்—சுரிதகம்.
5. இருமூன்று—ஆறு. இருமூன்றுகிய பத்து—அறுபது.

அறுபது அடி பெறுமென்றவாறுயிற்று. இனி, [1]பதினைந்தாங்கால் தரவு இரண்டடியும், கொச்சகம் மூன்றுறி ஆறடியும், அராகவடி ஒன்றும், சிற்றெண் நான்கும், அடக்கியல் இரண்டுமெனப் பதினைந்தடியாம். ஒழிந்த [2]இடையளவிற்குந் தலையளவிற்கும் இவ்வாறே வருமென்றறிந்துகொள்க. இவ்வுறுப்புக்கண் மேற் கூறுகின்றுணுகலின் ஈண்டு அளவை கூறினனென்பது. கலிப்பாவின் உள்ளுறுப்பிற்கெல்லாம் ஈண்டே வேறுவேறு அளவை கூறி வருகின்றுணுகலின் இவற்றுக்கும் அவ்வாறே ஈண்டு அளவை கூறினுன் [3]அளவியலுட் கூறுதென்பது.

"சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே." (தொ. மர. கசஉ)

என்பதனுன் இதனுள்ளுறுப்பிற்கு அடிவரையறை உய்த்துணர்ந்து [4]காட்டினுமென்பது. (கருக)

[அம்போதரங்க வொருபோகின் உறுப்புக்கள் இவை எனல்]

சசுச. எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெ
ணடக்கியல் வாரமொ டந்நீலைக் குரித்தே.

இது, முன்னர்க் கூறிய அம்போதரங்கவுறுப்பு இவை ஐந்துமெனக் கூறியவாறு.

இ—ள்: தரவும், கொச்சகமும், அராகமும், சிற்றெண்ணும் அடக்கியல் வாரமுமென ஐந்துறுப்புடையது அம்போதரங்கவொருபோகு என்றவாறு.

தரவெனினும் எருத்தெனினு மொக்கும்.

இனி, கொச்சகமென்பது, ஒப்பினுகிய பெயர்; என்னை? பல [5]கோடுபட வடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகமென்ப;

1. பதினைந்து சிற்றெல்லையளவு. இதுமுதலாகச் சிற்றெல்லைக்கு அளவு கூறுகின்றுரென்க. இனிச் சிற்றெல்லை என்றிருத்தல்வேண்டும்.
2. இடையளவிற்குந் தலையளவிற்கும் இவ்வாறே வரும் என்பது அவற்றின் சிற்றெல்லையைக் குறித்தது. அவை முப்பதும் அறுபதும். அவற்றிற்கும் இவ்வளவைப்படி ஏற்றிக் கொடுக்கப்படும் என்றபடி.
3. அளவியல்—அளவிலக்கணம்.
4. காட்டினுமென்பது, முற்பாடம். அது பிழை; ஆசிரியன்மேற்றுகுமாதலின். காட்டினும் நாம் எனவும் பாடம்.
5. கோடு—வஸ்திரவு. இவ்வுடை ஆடவர்க்குரியது. முன் ஆடவர் முற்பக்கத்திற் கோடுபடக் கொய்து உடுப்பது வழக்கு. இக்காலத்தும் அஃது அருகி வழங்குகின்றது.

அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியும் தம்முளொப்ப வடுக்கியும் செய்யப்படும் பாட்டுக்களைக் கொச்சகமென்றுணர்கவி னென்பது. இக்காலத்தார் அகவினைப் பெண்டிர்க்குரிய உடை யுறுப்பாக்கியுங் கொய்சகமென்று சிதைத்தும் வழங்குப. இவை வெண்பாவாகல் பெரும்பான்மை; வழிமுறை [1]சுருங்கியும் வரை யறையெண்ணுப்பெறும் [2]எண்போலாது பாவினுந் தளையினும் வேறுபட்டுப் பலவாகியும் வருங் கொச்சகமென்பது.

அராகமென்பது அழுது கடுகிச் சேறல்; [3]பிறிதொன்று பெய்து ஆற்றவேண்டுந்துணைச் [4]செய்வதாகிய பொன்னினை [5]அராகித்ததென்பவாகலின், அதுவும் ஒப்பினுகிய பெயராயிற்று; என்னை? மாத்திரை நீண்டும் துணிந்தும் வாராது குற்றெழுத் துப் பயின்றுவந்து நடைபெறுதலின்.

சிற்றெண் என்பது, நால்வகையெண்ணினும் இறுதியெண் ணனமையின் அப்பெயர்த்தாயிற்று.

அவ்வுறுப்புக்களிற் கூறிய பொருளை அடக்குமியல்பிற்று வாரமாகலின் அதனை அடக்கியல் வாரமென்றுன்; அதற்குச் செய்யுள்:

" செஞ்சுடர் வடமேரு விருமருங்குந் திரிகின்ற
வெஞ்சுடரு மதியமும்போல் வேலொடுகே டகஞ்சுழல
மாயிரு மணிப்பீலி மயிலெருத்திற் றேன்றுங்கார்
சேயொளி கடற்பிறத்த செந்தீயிற் சிறந்தெறிப்ப
மறுவருந்தம் மனத்துவகைக் கனலுழ்ச்சியான் வளர்த்தெடுத்த
வறுவருந்தம் முலைசுரந் தகடிருந்தூ றமுதூட்ட
வாருருவத் தெயின்மூன்று மொருங்கவித்தோன் வியப்பெய்த
விருருவத் தொருபெருஞ்சூர் மருங்கறுத்த விகல்வெய்யோய்
(தரவு)

ஆங்க, வினையொழி காலத்து வெவ்வெயிற் கோலத்
தினைவருந் தத்த மறம்புரிந் தாங்கு
மூனையடு கொற்றத்து முந்நான் குருவிற்
கனைகடல் சுட்டன கண்;

1. உம்மை வேண்டியதில்லை.
2. எண்—அம்போதரங்கம்.
3. பிறிதொன்று—பொடி..
4. செய்வது—உருக்குவது.
5. அராகித்தது என்றது பொடியிட்டு ஆற்றத்தக்கதா யுருகியது என்றபடி.

தேவரு மக்களுஞ் சிற்றத்தா னஞ்சாமைக்
காவல் புரியுங் கதிர்மதி போலுமே
15 மூவிரு தோன்றல் முகம்;

மடமகள் வள்ளி மணிக்கம் பலம்போல
விடையிடை சுற்றுந லின்றுக் கவிரா
தொடையமை தார்க்கடம்பன் றேரே;
அவ்வழி, அடியினை சோரா கவரர் நுங்கிப்
20 பொடிபொடி யாகிய போர்ப்பொடு மாய
விடியுமிழ் வானத் திடைநின்றுங் கூகை
கொடியணி கோழிக் குரல்;

விழச்சீ ரமரர் விசும்பிடைத் தோன்றிப்
பழிச்சினின் சூர்த்தார் பலர்; (தாழிசை)

25 உருகெழு முருகிய முருமென வதிர்தொறு
மருகெழு சிறகொடு மனைவரு மணிமயில்;
பெருகள வருமறை பெறுநெடு மொழியொடு
பொருகள வழியிசை புகல்வன நிலகுறள்; (அராகம்)

சிவந்தனதிசை ஆர்த்தனமறை
30 நிலம்பினமலை ஆடினர்பலர்
நிவந்தனதலை 35 போர்ந்தனருகள்
நிரம்பின குறை பொழிந்தனமலர்; (சிற்றெண்)

ஆங்கனந் தோற்றிய வடுபோர் வென்றியின்
வீங்கிருந் தொடித்தோள் விடலை நினக்கே
யாமறி யளவையிற் றமிழ்பூனந் தேத்துக
40 நின்னீ தக்க தாயினு நின்னெதிர்
நாணில மாகல் வேண்டும் பாணர்க்
கடம்புங் களிமயிற் பீலியுந் தடஞ்சுனை
நீரொடு நின்வயி னமர்ந்த
வாராப் புலமை வருகமா ரெமக்கே." (அடக்கியல்)

என்பது இடையளவம்போதரங்க வொருபோகு.

இவ்வுறுப்புக்களின் அளவு வேறுவேறு கூறுஞ்சிலும் அவற் றுக்கு ஏற்றவாறு அறிந்து செய்யப்படும். இது, நாற்பத்து நான்கடியான் வந்தது. ஒழிந்தனவும் இவ்வாறே வரும். இவை யெல்லாம் இக்காலத்து வீழ்ந்தனபோலும்.

மற்றுக் கொச்சகவொருபோகினை முற்கூறி அதற்கு அளவை பிற் கூறினன், இதற்காயின் அளவை முற் கூறியதென்னை யெனின்,— அங்ஙனம் அளவைபெற்ற அம்போதரங்கவொரு போகின் அளவை, இனிக் [1]கூறுதுநின்ற கலிப்பா [2]மூன்றற்கும்

1. கூறுது நின்ற—கூறுநின்ற என்றிருத்தல்வேண்டும்.
2. மூன்று என்றது கலிவெண்பாட்டு, கொச்சகக்கலி, உறழ்கலி என்னு மூன்றையும்.

அளவென்பதறிவித்தற்கென்பது ; அஃதேல் [1] இதனையும் அம் போதரங்கத்திற்களவென வரைந்தோதியதன்னையெனின்,— அது தலை இடை கடையென மூன்றளவுபெறுமென்றற் கென் பது. இவ்வதிகாரத்தானே வருகின்றவற்றோடு இதற்கு வேற் றுமையிலக்கணம் ஒப்பன அறிந்துகொள்க. [2] வருகின்ற கலி வெண்பாட்டிற்கு,

"வெள்ளடி யியலாற் றிரிபின்றி வரும்."

என்றமையின் அதற்கு இவ்வளவை ஒவ்வாதென்பது. (கருஉ)

[கலிவெண் பாட்டாவது இதுவெனல்]

சகூரு. ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி வருவது கலிவெண் பாட்டே.

இது, நிறுத்தமுறையானே கலிவெண்பாவாமா றுணர்த்து தல் நுதலிற்று.

இ—ள்: ஒரு பொருளைக் கருதி மற்றொரு பொருள்பட வுஞ் சொற்றொடர்ந்து கிடப்பத் தொடுக்கப்பட்ட வெள்ளையடி யால் திரிபின்றி வருவது கலிவெண்பாட்டாம் என்றவாறு.

'இயல்' என்றதனான், வெண்பாவிலக்கணஞ் சிதையாத வற்றுக்கே ஒரு பொருள் நுதலவேண்டுவதெனவும், அவ்வா றன்றித் திரிந்து வருவனவெல்லாம் [3] ஒரு பொருள் நுதலா வென்னுங் கலிவெண்பாவாமெனவுங் கூறியவாறு. வெண்பா விலக்கணமென்பது, கட்டளையாகி வருதலும் தளைவகையொன்றி வருதலும், பன்னிரண்டடியின் இகந்துவாராமையுமென இவை யென்பது மேற்கூறினும். அவ்வாறன்றிக் திரிந்து வருங்கால் வாளாதே 'அசையுஞ் சீரு மிசையொடு சேரா' தன பாவகை சிதைந்து கலித்தளையோசை எனப்படும்; அற்றன்றியுந் தனக் கோதிய சீருந் தளையுஞ் சிதைந்தவழியும், பன்னிரண்டடியின்

1. இதனை—இவ்வளவினை.

2. வருகின்ற கலிவெண்பாட்டென்றது—ஒரு பொருணுத லிய கலிவெண்பாட்டினை. எனவே ஏனை ஒருபொருணுதலாது வரும் உறுப்புடைக் கலிவெண்பாட்டே கொச்சகக்கலி, உறழ் கலியோடு ஒருங்களவை பெறுமென்றது.

3. ஒரு பொருள்—வேறும் ஒரு பொருள். இது பேராசிரி யர் கருத்து.

இகந்தவழியும், கலிவெண்பாவாதற்கு வரைந்து கூறல்வேண்டுவ தன்றென்பதூஉம், அவை ஒரு பொருள் நுதலாது வரினுங் கலிவெண் பாட்டாமெனவுங் கூறினனும்; என்னை? ஒரு பொருள் நுதலியதனைத் திரிபின்றி முடிந்த கலிவெண் பாட்டெனவே [1] ஒரு பொருணுதலியும் நுதலாதும் [2] ஈண்டுக் கூறிய வேறு பாட்டான் வருவனவெல்லாம் [3] திரிபின்றி முடியாதாகலின் வெண் பாட்டென்பது கொள்ளவைத்தமையினென்பது.

இன்னும் 'திரிபின்றி முடியும்' என்றதனானே ஒரு பொரு ளன்றிப் பலவுறுப்புடைத்தாகித் திரிபுடையதூஉங் கலிவெண் பாட்டுளதென்று கொள்ளவைத்தானும்; அது [4] முன்னர்ச் சொல் லும். உதாரணம்:—

"அரும்பொருள் வேட்கையி னுள்ளத் துரப்பப்
பிரிந்துறை நூழாகி யைய விரும்பிநீ
யென்றே ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணுதுஞ் செல்லா
ரிளமையுங் காமமு மோராங்குப் பெற்றூர்
வளமை விழைதக்க துண்டோ வுளநா
ளொரோவொகை தம்முட் டழீஇ யொரோவொகை
யொன்றன்கூ ருடை யுடுப்பவரே யாயினு
மொன்றிரு வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு." (கலி. கஅ)

என்பது, பன்னிரண்டடியான் வந்து [5] பல பொருணுதலிவந் தமைதலிற் கலிவெண்பாட்டாயிற்று. 'ஒரு பொருள் நுதலிய' எனவே, சொல்லப்படும் பொருளின் வேறுகிக் கருதியுணரப் படும் பொருளுடைத்தென்பதும் பெற்றும்; என்னை? இப்பாட்டி னுட் பெண்டன்மைக்கேலாது நுண்பொருளினைத் தலைமக னெதிர்

1. ஒரு பொருணுதலாது வருவது என்று நச்சினார்க்கினி யருங் கூறலின் நுதலியும் என்பது வேண்டியதில்லை.

2. ஈண்டுக் கூறிய வேறுபாடென்றது, இசையொடு சேரா மையும், சீருந் தளையுஞ் சிதைதலும், பன்னீரடியி னிகத்தலும்.

3. திரிபின்றி முடியாதாகலின் வெண்பாட்டென்பது திரி பின்றி முடியாத கலிவெண்பாட்டென்பது என்றிருத்தல் வேண்டும்.

4. முன்னர் என்றது வருஞ் சூத்திரத்தை.

5. பல என்பது ஒரு என்றிருத்தல்வேண்டும். நச்சினார்க் கினியரும் அவ்வாறே கூறுவர். ஒன்றல்லாததுபற்றிப் பல என்ற ரெனினுமாம். வந்தமையின் என்றுமிருக்கலாம்.

நின்று உணர்த்துவாள் [1] செவ்வனஞ் சொல்லாது தலைமகன் பண்டு கூறியன சிலவற்றை வாங்கிக்கொண்டு சொல்லி, அவன் [2] மறந்தானென்பது உணர்த்துகின்ற பொருண்மை கருதி உணர வைத்தமையின் அவ்வாறுயிற்று. [3] ஒழிந்த பாக்களும் அவ்வாறு ஒரு பொருணுதலுமாயினும் அங்ஙனம் [4] நுதலிய பொருள்பற்றிச் செய்யுள் வேறுபடாமையின் ஆண்டாராய்ச்சியின்றென்பது. வெண்பாவிற் குறித்த பொருளினை மறைத்துச் சொல்லாது [5] செப்பிக் கூறல்வேண்டுமாகலானும்; இஃது, அன்னதன்றி ஒரு பொருணுதலிக் துள்ளினமையானுங் கலிவெண்பாட்டெனப் பட்டதென்பது.

"மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்ந
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெருஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்ரு
லென்னீ ரறியாதீர் போல விவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு." (கலி. சு)

என்பது, பதினேரடியான் ஒருபொருணுதலிவந்த கலிவெண் பாட்டு. நூற்றைம்பது கலியுள்ளுங் கலிவெண்பாட்டு எட்டாக லின் அவற்றுள் ஒருபொருணுதலி வருவன பிறவும் உள. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இனி, பன்னிரண்டடியின் இகந்து ஒருபொருணுதலாது வருமாறு:

"தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிரீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரு
முல்லையுந் தாய பாட்டாங்காற் ரேழிநம்
புல்லினத் தாயர் மகளிரொ டெல்லா

1. செவ்வனம்—நேர்மை. சொல்லி உணரவைத்தமையின் என முடிக்க.

2. மறந்தது என்றது தலைவன் தான் பண்டு கூறியதை.

3. ஒழிந்த பா—கலிவெண்பாட்டல்லாத வெண்பா.

4. நுதலிய—கருதிய.

5. செப்பி—வெளிப்படச் சொல்லி. செப்பு உத்தரமாதலின் வெளிப்படக் கூறல்வேண்டுமென்க.

மொருங்கு விகீயாட வவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்கீ
முற்றிழை யேளர் மடநல்லாய் நீயாடுந்
சிற்றில் புகீகோ சிறிதென்ரு னெல்லாநீ
பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்றறிலே மற்ற காணென்றேன் முற்றிழாய்
தாதுசூழ் கூந்தற் றகைபெறத் தையிய
கோதை புகீகோ நிகீகென்ரு னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றேன் மாதரா
யைய பிதிர்ந்த சுணங்கணி மென்முகிமேற்
ரெய்யி லெழுதுகோ மற்றென்ரு னாம்பிறர்
செய்யுற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையகீ மாதோ விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவகீநீ
யாயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயு மறிய வுரைத்தியின் யானுற்ற
நோயுங் கூகுவை மன்." (கலி. ககக)

என வரும். பிறவும் அன்ன.

இனி, பாவகை சிதைந்தனவும் தளைவகை சிதைந்தனவும் வந்தவழிக் கண்டுகொள்க. இவையெல்லாங் காமப்பொருண்மேல வாம். எனவே, கட்டளைவகையானும், தளைவகையொன்றியும் வரும் வெண்பாவாயிற் காமத்திற்கே உரியவெனப்படாவாயின; பிறவும் அன்ன.

இனி, அம்போதரங்கவொருபோகிற்கு இடையின்றிக் கலி வெண்பாட்டு வைத்தமையான்,

"வானூர் மதியம்."

போலும் ஒருசார்த் தேவபாணியுங் கலிவெண்பாட்டேயாம். ஒரு பொருணுதலி [1] வரினென்பது. [2] இதனுள்,

"ஆட்சிய ஞால வென்கோ."

என்பது வியங்கோளாயினும், அரசன் வாழ்க்கையும் அரங்கிற் கும் ஆடற்கும் இடையூறின்மையுஞ் சொல்லுவாயாகென்று தெய்வத்தினை வினவுய் [3] வாய்ப்புள் வேண்டி நின்றமையின் அது குறித்துணரப்பட்டு ஒருபொருணுதலியதாயிற்று. [4] கந்திருவ

1. வரினென்பது வருதலின் என்பது என்றிருத்தல்வேண்டும்.

2. இதனுள்—வானூர்மதியம் என்னுமிச் செய்யுளுள்,

3. வாய்ப்புள்—சொல் நிமித்தம்.

4. கந்திருவம்—இசைநூல்.

மார்க்கத்து [1] வரியுஞ் சிற்றிசையும் பேரிசையும் முதலாயினபோலச் [2] செந்துறைப் பகுதிக்கே உரியவாகி வருவனவும், கூத்தநூலுள் வெண்டுறையும் அராகத்திற்கே யுரியவாகி வருவனவும், ஈண்டுக் கூறிய செய்யுள்போல [3] வேறு பாடப் பெறும் வழக்கியலவென்பது கருத்து. இக்கருத்தானே அவற்றை இப்பொழுதும் இசைப்பாவென வேறு பெயர்கொடுத்து வழங்குப.

இனி, யாப்பிலக்கணத்திற்கு ஒப்பவே இசைநூலுட் சொல்லப்பட்ட செய்யுளும் உள; என்னை?

> "வெண்பா வியலீன் விரவுறுப் பின்றித்
> தன்பா வகையொடு பொருந்திய பொருளே
> யொன்றுவிளைந் திற்ற விறுதித் தாகும்."

என்றவழி, விரவுறுப்பின்றியென வேண்டா கூறி விரவுறுப் புடையது பொருளொன்று விளையாதென(வும்), விரவுறுப்பில் லது 'பொருளொன்று விளைந்து இற்ற இறுதித்தாகுமே'னவுங் கூறினமையின். எனவே, ஈண்டு ஒருபொருணுதலி வருமெனப்பட்ட கலிவெண்பாட்டுப் பொருள் வெளிப்படாதெனவும், விரவுறுப்புடையது 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' பொருட்டெனவும் நேர்ந்தானும். அது நோக்கியன்றே வருகின்ற சூத்திரத்து 'வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்' எனக் கலிவெண்பாட்டினையே கருதி ஓதுவானுமிற்று மென்பது. (கருஉ)

[விரவுறுப்புடைய கலிவெண்பாட்டு இவ்வாறு வருமெனல்]

சஉசு. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து
மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும்
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்.

---

1. வரி முதலியன இசைப் பாட்டின் வகைகள். போல உரியனவாகி வருவனவுமென இயைக்க.

2. செந்துறை இசைநூற்குரிய பாட்டு.
"செந்துறை என்பது ஓலி குறித்தன்றே
வெண்டுறை என்பது கூத்தின் மேற்றே."
என்பது ஒருசாரார் கூற்று. நாற்பெரும்பண்ணும் இருபத்தொரு திறனும் ஆகிய இவையெல்லாஞ் செந்துறை. மேற்புறம் பதினெரு ஆடலும் என்றிவையெல்லாம் வெண்டுறை என்பது வாய்ப்பியம் என்பர் யாப்பருங்கல விருத்தி நூலார்.

3. வேறுபடப் பெறாஉம் என்றிருக்கலாம்போலும். விரவுறுப் புடையது, இல்லது என இசைநூலுள் வருவதாகப் பிற் கூறப் படுதல் நோக்குக. ஈண்டுக் கூறிய செய்யுள் கலிவெண்பாட்டு.

இது, மேல் 'வெளிப்படு பொருட்டு' எனப்பட்ட வெண்கலி விரவுறுப்புடைமையின் அதனை வேறு கூறுகின்றது.

இ—ள்: தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும் என்பது, தரவிற்கும் போக்கிற்கும் [1] இடையின்றிப் பாட்டாகிப் பயின்றுவருதலும் என்றவாறு; எனவே, தரவும் போக்கும் முன்னர் ஓதியவகையானே முன்னும் பின்னும் நிற்குமென்பதூஉம், சுரிதகமாயின் வெள்ளையும் அகவலுமாய்ப் பாவோடு வந்துழிப்போலத் தனிச்சொற் பெற்றும் பெறுதும் வருமென்பதூஉங் கொள்க. 'தரவும் போக்கும்" எனப் பாட்டிறுதி நின்ற போக்கினை முன்வைத்தான் அவை ஓரினத்தவாகலின்; என்னை? தரவிறுதி, சீரான் இறுமாறுபோல வெள்ளைச் சுரிதகவிறுதியும் ஓரோவழிச் சீரானே இறுதலின். அது,

> "தாதுதேர் வண்டின் கிளைபாடத் தையிய
> கோதை பரிபாடக் காண்கும்." (கலி. அ0)

என நான்கசையானுமின்றித் தேமாவானிற்றது.

இனி, பாட்டினைப் போக்கின்பின் வைத்தகனும் போக்குப்போல நாற்சீரான் இறுவனவும் அப்பாட்டுள் சிறுபான்மையென்பது; அது,

> "கரந்தாங்கே யின்னுநோய் செய்யுமற் றிஃதோ
> பரந்த சுனங்கும் பணைத்தோளாள் பண்பு." (கலி. கசக)

என்றாற்போல வரும். இங்ஙனம் வைப்பவே, வருகின்ற ஐஞ்சீரடுக்கலும் ஆறுமெய் பெறுதலும்' அவற்றுக்கன்றி ஏலாவாயின; அல்லதூஉம், இதனை இறுதிவைத்தான் இதனோடொக்குமென முற்கூறப்படுங் கொச்சகம், தரவும் போக்குமின்றிப் பாட்டு மிடைந்தேவருமென்பது இவ்வதிகாரத்தாற் கோடற்கென்பது. அது முன்னர்க் காட்டுதும்.

ஐஞ்சீரடுக்கியுமென்பது, வேறு நின்றதொரு சீரினை அளவடியுடன் அடுக்கிச் சொல்ல ஐஞ்சீராகியும் என்றவாறு; ஆறுமெய்பெற்றும் என்பது, அவ்வாறே இருசீரடுக்க ஆறுசீர் பெற்றும் என்றவாறு; 'மெய்' என்றதனான் அடுக்குஞ்சீர் முதலும் இறுதியும் வருமென்பது கொள்க.

---

1. இடையின்றி என்பது இடையன என்று ஏட்டுப்பிரதியிற் காணப்படுகின்றது. அதுவே பொருத்தமாகும். நச்சினார்க்கினியரும் இடையன என்றே கூறுதல் காண்க.

வெண்பா இயலான் வெளிப்படத் தோன்றுமென்பது வெண்பாவென்னும் உறுப்பினியற்கை சிதையாமற் பொருள் புலப்படத் தோன்றும் என்றவாறு.

இயற்கை சிதையாமல் தோன்றுமெனவே கட்டளையும் கட்டளையல்லதும் எனப்பட்ட வெண்பாவிலக்கணம் இரண்டுஞ் சிதையாமை வருமென்றவாறும்; தரவும் போக்குமென நின்ற உம்மை, எண்ணும்மை. 'பாட்டிடை மிடைந்து' என்பது முதலாக வந்த உம்மை மூன்றும் இறந்தது தழீஇய எச்சவும்மை. என்னை? மேற்கூறிய தனிநிலை வெண்பாட்டேயன்றித் [1] தரவுறுப்பாகவும் என்றமையின். இவ்வாறன்றி, [2] அவ்வினைத்தும் எண்ணும்மை கொள்ளின் உறுப்பினையே எண்ணல்வேண்டும்; அல்லாக்கால், வினையொடு பொருளெண்ணின் அதன் உறுப்பினையே [3] எண்ணினவாகலானென்பது; அல்லதூஉம், தரவும் போக்கும் [4] முதல் வந்தும் இறுதிவந்துமென அவையும் தம் வினையான் எண்ணவும் படுமன்றோவென மறுக்க. அவற்றுக்குச் செய்யுள் கூறுங்கால், தரவும் போக்கும் பாட்டிடை [5] மிடைந்து தோன்றும்; அதுவே ஐஞ்சீரடுக்குப் பெற்றதென்றும், அறுசீரடுக்குப் பெற்றதென்றும், அவையிரண்டும் உடன் பெற்ற [6] தென்றுமென்றும் இங்

1. தரவுறுப்பாகப் பாட்டிடைமிடைந்தும் என்றிருப்பது நலம். தரவுறுப்பாகவென்றுமிருக்கலாம். அல்லது இறந்தது தழீஇய எச்ச உம்மைக்கு விளக்கமின்றும்.

2. அவ்வினைத்தும் என்றது தரவும் போக்கும் என்பவற்றிலுள்ள உம்மைகளையுஞ் சேர்த்து எண்ணும்மை கொள்ளின் என்றபடி.

3. எண்ணினவாகலான் என்பது எண்ணினவல்லவாகலான் என்று இருத்தல்வேண்டும். என்னை? மறுத்துக் கூறலின். பெயரும் பெயருமெண்ணினன்றிப் பெயரும் வினையுமெண்ணின் அப்பாவின் உறுப்பினை எண்ணினவல்லவாய் முடியுமென்றபடி.

4. தரவு முதல் வந்தும் போக்கு இறுதி வந்தும் பாட்டு இடைமிடைந்தும் என்று வினைகொடுத்து ஆசிரியர் சூத்திரிக்கலாம் என்றபடி.

5. மிடைந்து தோன்றும் என்பது மிடைந்ததென்றும் என்றிருப்பதுவே பொருத்தம். மேல் உதாரணம் நோக்கித் தெளிக.

6. 'தோன்றுமென்றும்' என்பது 'தோன்றும் என்று' என்றிருத்தல்வேண்டும். முன்னுள்ள ஒன்றும் என்பன என்றும் என்றுமிருக்கலாம். பவானந்தம்பிள்ளை பதிப்பில் ஒன்றும் என்பன என்றும் என்றும், தோன்றும் என்பது தோன்றுவதென்றுங் காணப்படுகின்றது. அப்படியுமிருக்கலாம்.

ஙனம் விகற்பித்துக் கூறப்படுமென்பது. [1] அவை கட்டளை வெண்பாவான் வருதலும் ஒழிந்த வெண்பாவான் வருதலுமென விகற்பிக்கப்படாவோவெனின், — அவ்விகற்பம் அடிக்கல்லது பாவிற்கின்மையானும் ஈண்டுப் பா வேறுபடாமையானும் அங்ஙனம் பகுத்ததனாற் பயந்தறிதன்மையென மறுக்க; வரலாறு;—

"சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனறி வில்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பேன் மான்ற
துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணியலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
வேங்கிரும் பெண்ணை மடலூர்ந்தென் னெவ்வநோய்
தாங்குத றேற்ற விடும்பைக் குயிர்ப்பாக
வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவன் பாய்மா நிறுத்து;
யாமத்து மெல்லியு மெவ்வத் திரையலைப்ப
மாமேலை னென்று மடல்புணையா நீந்துவன்
றேமொழி மாத ருருஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு;
உய்யா வருநோய்க் குயலாரு மையல
னுறீஇயா ளீத்தவிம் மா;
காணுந ரெள்ளக் கலங்கித் தகிலவந்தெ
ணெழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளேதெனக் காமன
தானையால் வந்த படை;
காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா;
அகையெரி யானுதென் னுயி ரெஞ்சும்
வகையினு ளுள்ளஞ் சுடுதரு மன்னே
முகையே ரிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றகைக்கொண்ட நெஞ்சு;
அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா;
ஆங்கதை;
அறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முறீஇ யாங்கென்
னுயர்நிலை தீர்த்த னுந்தகைக் கடனே." (கலி: கஉகூ)

என்பது, தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்த கலிவெண்பாட்டு ஆசிரியச் சுரிதகத்தான் வந்தது.

1. அவை என்றது மேற்கூறிய உறுப்பான் வருவன நான்கையும்.

இனி, வெள்ளைச் சுரிதகத்தான் வந்தனவும் கண்டுகொள்க.

"கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல நோக்குவிர் கொண்டது
மாவென் றுணர்மின் மடலன்று மற்றிவை
பூவல்ல பூவே வுழிஞையோ டியாத்த
புனவரை யிட்ட வயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி
நெடியோன் மகனயந்து தந்தாங் கனைய
வடிய வடிந்த வனப்பினென் னெஞ்ச
மிடிய விடைக்கொள்ளுஞ் சாய லொருத்திக்
கடியுறை காட்டிய செல்வேன் மடியன்மி
னன்னே னெருவனேன் யான் ;
என்னுளும் பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன்—பாடுகோ
வென்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக
நன்னுத லீத்தவிம் மா ;
திங்க ளரவுறிற் றீர்க்கலா ராயினுந்
தங்காதல் காட்டுவர் சான்றவ—ரின்சாய
லொண்டொடி நோய்நோக்கிற் பட்டவெள் னெஞ்சநோய்
கண்டுங்கண் ணோடாதிவ் வூர் ;
தாங்காச் சினத்தொடு காட்டி யுயிர்செகுக்கும்
பாம்பு மவைப்படி னுய்யுமாம்—பூங்கண்
வணர்ந்தொலி யைம்பாலாள் செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர் ;
வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைநின்ரு
ரஞ்சலென் ரூஉ முயிர்ப்புண்டா—மஞ்சிர்ச்
செறிந்தோர் முறுவலாள் செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர் ;
ஆங்க,
என்க ணிடும்பை யறீஇயினெ னுங்கட்
டெருளுற நோக்கித் தெரியுங்கா லின்ன
மருளுறு நோயொடு மம்ம ரகல
விருளுறு கூந்தலா ளென்னை
யருளுறச் செயினுமக் கறனுமா ரதுவே." (கலி. கசo)

என்பது, தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்த கலிவெண் பாட்டு ஆசிரியச் சுரிதகத்தாலிற்றதாகலின், இதனுள்,

"என்னுளும் பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே:"

என்னும் அடி ஐஞ்சீரடுக்கியும் வந்தது; என்னை?

"பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ."

என்னும் அளவடியிரண்டும் எதுகையாய் அமைந்தவழி 'என்னுளும்' என வேறுநின்ற சீரொடுங் கூடி ஐஞ்சீரடுக்கினமையின். இதனுள் 'ஆங்க' எனத் தனிச்சொல் வந்தது.

"காராரப் பெய்த" (கலி. கoசு)

என்னும் முல்லைப்பாட்டு ஐஞ்சீரடுக்கி வெள்ளைச் சுரிதகத்தானிற்றது.

"அரிதினிற் ரேன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்தாங்குக் காட்டிமற் ரூங்கே
யறம்பொரு ளின்பமென் றம்மூன்றி னொன்றன்
றிறஞ்சேரார் செய்யுந் தொழில்க ளறைந்தன்
றணிநிலப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி
யணிநலம் பாடி வரற்கு ;
ஒருதொகா ஜள்வழிய ளாகி நிறைமதி
நீரு ணிழற்போற் கொளற்கரியள்—போரு
ளடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள் ;
வாழி சான்றீர், பொய்தீ ரூகை மெடுத்த கொடிமிசை
மையறு மண்டிலம் வேட்டனள்—வையம்
புரவுக்கு முள்ளத்தே னென்னை யிரவுக்கு
மின்னு விடும்பைசெய் தாள் ;
அம்ம சான்றீர், கரந்தாங்கே யின்னுநோய் செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு ;
இடியுமிழ் வானத் திரவிருள் போழுங்
கொடிமின்னுக் கொள்வேனென் றன்னள்—வடிநாவின்
வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள் ; வாழி சான்றீர் ;
என்ரூங்கே ;
வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்." (கலி. கசக)

என்பதனுள், 'வாழி சான்றீர்', 'அம்ம சான்றீர்', என ஐஞ்சீரடுக்கியாங்கு அடுக்கிச்சொல்ல அறுசீராயின. இதற்கும் 'ஐஞ்சீர் அடுக்கியும்' என்றதுபோல, அறுசீரடுக்கியுமென்று [1] அடுக்குதற்ரொழில் கொள்ளப்படும், ஈண்டு இரண்டளவடி தொடைப்படச் செய்தமையினென்க. இதனுள்ளும் 'என்ரூங்கே' என்பது தனிச்சொல்.

"புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயநின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது."
(கலி. கசஉ)

என்பதனுள்,

"இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தனள்."

1. அடுக்கல்—நாற்சீரோடு அடுக்குதல். அடுக்குதல் என்றதனால் அது வேரூய் நிற்கும் என்பது பெறப்படும்.

எனவும், இயற்சீர் நிரையொன்றியும் பா வேறுபடாமையின் இதுவும் கலிவெண்பாட்டாயிற்றென்பது கொள்க.

இங்ஙனம் பா வேறுபடாமையினன்றே,

"உருஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
[1] செருஅய் வாழிய நெஞ்சு." (குறள். கூஉ00)

என்பதனை வெண்பா என்பாமாயிற்றென்பது; இனி,

"எல்லிரா நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல." (கலி. கசஉ)

என வெள்ளைச் சுரிதகத்துள் ஐஞ்சீரடியும் வந்தது. வெண்பாவிற்கு முன்னர்,

"வெண்டளை விரவிய மாசிரியம் விரவிய
மைஞ்சீ ரடியு முள." (நூஎடு)

என்றலானும், மேற்கூனனவும் சொற்சீரெனவுங் கூறப்பட்டனவே ஈண்டு ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய் பெற்றுங் கூறப்பட்டன என வுணர்க. இதற்கு ஐஞ்சீரும் அறுசீரும் விதந்தோதவே, மேற் சிறுபான்மை பொதுவகையாற் கலிக்கு நேரப்பட்ட சொற்சீரடி ஒத்தாழிசைக்கும் முற்கூறிய கலிவெண்பாட்டிற்குமாயின் எஞ்ஞான்றும் வாராதென்பதூஉம், அதுதானும் இதற்கு வருங்கால் இருசீரின் இகந்து வாராதென்பதூஉங் கூறினனும். இங்ஙனஞ் சொற்சீரடி விலக்கவே அதற்கினமாகிய முடுகியலடியும் ஒத்தாழிசைக்கு வாராதென்பதாம். அது வெண்கலிக்கோ வெனின்,

"வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்." (சசுசு)

எனவே விலக்குண்டதன்றேவென்க.

இனி, தரவிற்கும் போக்கிற்கும் பாட்டிற்கும் இவ்வளவைத்தென்பது அம்போதரங்கத்திற்கு ஓதியவகையாற் கோடுமென்றமையின் அதற்கேற்றவகையான் வருவதன்றி வேறுவேறு வரையறையிலவென்க. 'பாட்டிடை மிடையின்' என்றமையின், ஈண்டுப் பாட்டென்றது, கொச்சகத்திற்கேயுரித்தென்பது; மற்று,

"வெண்டளை [2] தன்றளை யியற்றள விரவியும்
வெண்பா வுடையது வெண்கலி யாகும்."

1. செருஅய் என இருமாத்திரை நீண்ட வளபெடையாகக் கொள்வர் நச்சினார்க்கினியர். அங்ஙனங் கொள்ளின் வழுப்படாது. ஆதலின் பேராசிரியர் கூற்று ஆராயத்தக்கது. வாழியென் லெஞ்சு எனவும் பாடம்.

2. தன்றளை—கலித்தளை.

எனத் தளை விரவியும் வெண்பாச் சிதையாதவழிக் கலிவெண்பாட்டாமென்று [1] ஒரு சூத்திரஞ் செய்யாரோ பலவுறுப்பு வந்தவழியும் இது புறனடையாகவெனின்,—அற்றன்று,

"வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்." (சசுசு)

எனவே இவையெல்லாம் அடங்குதலின் அது வேறு கூறு னென்பது. இனி, பலவுறுப்பின்றி [2] அவ்வாறு ஒரு பாட்டே வரின் அதனை வெண்கலியென்பாரும் உளர். நூற்றைம்பது கலியுள்ளும் அன்னதோர் கலிவெண்பாட்டின்மையின் அது சான்றோர் செய்யுளொடு மாறுகோளாமென மறுக்க.

மற்று, 'பாட்டிடை மிடைந்து' என்றவழி, பாட்டெனப் பட்டது, இடைநிலைப் பாட்டென்றுமோ கொச்சகமென்றுமோ வெனின்,—எஞ்ஞான்றுந் தாழம்பட வாராமையின் இடைநிலைப் பாட்டென்னும்: துள்ளலுஞ் செப்பலுமென்னும் இருவகைக் கொச்சகமும் ஒருங்கு வாராமையிற் கொச்சகமென்னும். கொச்சகமென்னும் பொதுப்பெயரான் அது கூறாயினும்,

"வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்."

என்றதனான் வெள்ளைக் கொச்சகமெனப்படும் அவையென்பது; அஃதேல், கொச்சகமென்று ஓதுகவெனின்,—அங்ஙனம் ஓதின் [3] இது கொச்சகக் கலியாமென்று கருதினுங் கருதற்கவென்பான் வளாதே 'பாட்டு' என்றான். இதனாலும் பெற்றும் இது கொச்சகக்கலியல்லாமை. (கருசு)

[கொச்சகக் கலிப்பாவி னிலக்கணம் இதுவெனல்]

சசுஎ. பாநிலை வகையே கொச்சகக் கலியென
நூனவில் புலவர் நுவன்றனைந் தனரே.

இது, நிறுத்த முறையானே அகநிலைக் கொச்சகக்கலியுணர்த்துகின்றது. 'பாநிலைவகை' என்பது, உம்மைத்தொகை;

1. ஒரு உத்தரம் என்பது, சி. வை. தாமோதரம்பிள்ளை பாடம். அது பொருத்தமில்லை. ஒரு சூத்திரமென்று இருக்க வேண்டும்.

2. அவ்வாறு—தளைவிரவி.

3. வருஞ் சூத்திரத்தை வேறு பிரித்தற்காக இங்ஙனங் கூறினார் பேராசிரியர். இளம்பூரணர் வருஞ் சூத்திரத்தையும் இதனையும் ஒன்றாக்குவர். அதுவே பொருத்தமாம்.

பாநிலையும் வகையுமென விரியும். பாநிலையென்பது, ஆரும் வேற்றுமைத்தொகை.

இ—ள்: மேற் [1] பாவினின்ற வகையானே கொச்சகக்கலியா மென்று நூலாசிரியர் கூறித் துணித்தனர் என்றவாறு.

அறைதலெனினும் துணித்தலெனினும் ஒக்கும்; என்னை? துணித்த கரும்பினை,

"அறைக் கரும்பு." (பொருந. ககூந)

என்பவாகலின். 'பாநிலை' என்றது, யாதனை நோக்கியெனின்,— இது கொச்சகமாதலான் அதுவும் மேலே ஒருபோகெனக் கூறப் பட்ட கொச்சகப் பாநிலையெனக் கொள்க. அதனைத் துணித் தனென்றதனால்,

"தரவின் ருகித் தாழிசை பெற்று." (சசுக)

வருமென்ற கொச்சகத்தினை இதற்கு இயைபின்றாக முன்வைத் துச் சேட்படுத்தமையின் அஃதொன்றனையுந் துணித்துமாற்றி அல்லாத [2] கொச்சகப்பாவினின்ற வகையான் [3] இவ்வகநிலைக் [கொச்சகம் வரும். பரணிப்] [4] பாட்டுப்போல அகநிலைக் கொச் சகம் வாராவென்றனும். 'வகை' என்றதனான், அதிகாரத்தா னின்ற வெண்கலிப்பாவினது பாநிலையுங் கொள்ளப்படும். அஃ தேல், அதனைப் பாநிலையென்னாது 'வகை' என்பது எற்றுக் கெனின்,—வெண்கலிப்பா,

"தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து
.....
வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்."

1. பாவினின்ற என்ற பாடம் பொருத்தமில்லை. பாவினின்ற என்ற பாடமே பொருத்தம். பாநிலை — ஆரும் வேற்றுமைத் தொகை என்றலின். மேற்பா என்றது கொச்சக ஒருபோகை. சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்புப் பொருத்தம். பாநிலை வகை—உம்மைத் தொகையென்று கூறியதற்கேற்பப் பதவுரை கூறப்படவில்லை. பாவினின்ற நிலைவகை என்றிருப்பது நலம். நச்சினார்க்கினியம் நோக்குக.

2. கொச்சகப்பாவினின்ற என்ற பாடமே பொருத்தம். பவானந்தம்பிள்ளை பதிப்பு நோக்குக.

3. இவ்வகநிலை என்பது இவ்வகநிலைக் கொச்சகம் வரும் என்றிருத்தல்வேண்டும்.

4. பாட்டுப்போல என்பது, பரணிப்பாட்டுபோல என் றிருத்தல் வேண்டும். நச்சினார்க்கினியருரை நோக்குக. பரணி— தரவின்றுகித் தாழிசையான் வருவது. அது துணிக்கப்பட்டது.

என்றதனான் [1] வெண்பாவிற் சிதையாது வருமென்று [2] உறுத் துக் கூறினனென்பது; எனவே, [3] பாவொழிந்த உறுப்பெல் லாம் பொருணோக்காது [4] வெளிப்படத் தோன்றுங் கலிவெண் பாட்டின் உறுப்புவகையான் வருதலும் [5] உடைத்தென்றவாறு. அங்ஙனம் வருங்கால் இடைநின்ற கொச்சகங்களை,

"ஐஞ்சீர் நடுக்கலும்."

என்ற கலிவெண்பாவிற்கு ஓதியவாறே கொள்க.

மற்று, 'நூலறி புலவர்' எனவேண்டியதென்னையெனின்,— தரவு இணைந்து வாராது யாப்பின் வேறுபட்டு ஒரு தரவே கொச்சகமாதலும், தரவிணைந்தவழிச் சுரிதகம் பெறுதலும், அவை தனிச் சொல்லுஞ் சுரிதகமும் உடன் பெறுதலுமெல் லாம், 'யாப்பின் வேறுபட்டன' என்றலும், ஒத்தாழிசை மூன் றடுக்கினும் அவற்றினை வேறுபாடறிந்து கொச்சகமெனக் கோட லும், தேவபாணியாகாதவழிக் [6] காமப்பொருளேபற்றி வாராது, அறம்பொருளின்பம்வீடென்னும் நான்கும்பற்றிப் பொருள் வேறுபட வருதலும், பா வேறுபட வருதலும் [7] [பற்றிக்] கொச்சகக்கலியென்று உணர்வோர் நூலறிபுலவரெனவும் [8] அல்லா தது புலனாகாதெனவுமெல்லா மறிவித்தற்கு,—

"நூலறி புலவர் துவன்றமைந் தனர்."

என்றனென்பது. எனவே, கொச்சகக்கலியுள் ஒருசாரனவற்றை [9] இனமென்று வேண்டுவாருளராயின் [10] அவை அவ்வப் பாவின்

1. வெண்பாவியலின் என்றிருப்பது நலம்.
2. உறுத்தல்—வலியுறுத்தல்.
3. பா—கொச்சகப்பா.
4. வெளிப்பட—பொருள் வெளிப்பட.
5. உடைத்து என்பதற் கெழுவாய் கொச்சகக்கலி.
6. காமம்—இச்சை.
7. பற்றி என்பது வேண்டியதில்லை. முன்வந்த பற்றி மீட் டுஞ் சேர்க்கப்பட்டது.
8. 'அல்லாதது' — 'அல்லாதார்க்கு அது' என்றிருத்தல் வேண்டும்.
9. பாவினம்.
10. அவை—அவர் இனமாகவேண்டுவன. அவ்வப்பா என் பது இனஞ்சார்த்தும் வெண்பா முதலிய அவ்வப் பாக்களை.

இனங்கட்கு இவ்வகையே [1] கொச்சகமென வேறுபடுமென்றவா றுயிற்று.

உதாரணம்:—

"செவ்விய நீவிய சொல்லி யவற்றொடு
.....
மகனல்லா னன்ற வினி." (கலி. ககூ)

எனவும்,

"செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
.....
அவலம் படுதலு முண்டு." (கலி. ககூ)

எனவும், தரவிரண்டு அடுக்குதலின் தரவிணைக் கொச்சகமெனப் படும். இது நூற்றைம்பது கலியுளொன்றுகலின் வெண்பாவாகி யுந் தனித்து வரும். வருங்காற் கலிவெண்பாட்டென்றுயிற்று. ஒருபொருணுதலி இவ்வாறு வரினும் இஃதொக்கும். இது தாழிசையோடு [2] கோடாத் தரவாகலின் வெண்பாவாகியும் வந்தது.

"மாமலர் முண்டகந் தில்லியோ டொருங்குடன்
.....
சென்றனை கூறுமோ பூங்கழின் றேரே." (கலி. கநஉ)

என்பது, தனிச்சொல்லின்றி ஆசிரியச் சுரிதகம் பெற்ற தர விணைக் கொச்சகம்.

"மின்னெளி ரவிரற விடைபோழும் பெயலேபோல்
.....
யேழைத் தன்மையோ வில்லை தோழி." (கலி. நந)

இது, தனிசொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்ற தர விணைக் கொச்சகம். இனி, பல [3] அடுக்கிய பொருட்டொடராய் வருந் தர்வு கொச்சகங்களும், [4] பொருட்டொடர் நிலையுள் அறம் பொரு ளின்பம் விராய்வருந் தரவுகொச்சகங்களும் வந்தவழிக் கண்டுகொள்க.

"வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தான்."
(கலி. ககஅ)

---

1. நச்சினர்க்கினியரும் கொச்சகம் எனல்வேண்டும். ஆத லின் அது பொருந்தாது என்பர்.
2. கோடா—கொள்ளாத.
3. அடுக்கி என்றிருத்தல்வேண்டும்.
4. பொருட்டொடர் நிலையுள்—அப் பொருட்டொடர் நிலை யுள் என்றிருத்தல்வேண்டும். அவை சிந்தாமணிபோல்வன. நச்சி னர்க்கினியம் நோக்குக.

இது, தரவுந் தாழிசையும் போக்கும் முறையானே வந்த தாயினும்,

"அடைநிலைக் கிளவி தாழிசைப் பின்னர்
நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி."

என்னும் இலக்கணஞ் சிதையத் தாழிசைகடோறுஞ் சொற்சீர் பல வருகலான் ஒத்தாழிசையெனப்படாது அதன்வகைத்தாய் [1] எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றிய கொச்சகமென்பதூஉ மாயிற்று.

"அருடீர்ந்த காட்சியா னறநோக்கா னயஞ்செய்யான்."
(கலி. கஉ0)

"நயனும் வாய்மையும் நன்னர் நடுவும்." (கலி. கநஉ0)

என அடக்கியலின்றி அடிநிமிர்ந்தொழுகியதுபோலுங் கொச்ச கம் வருங்கால் ஒத்தாழிசையும் வண்ணகமும்போலத் தனிச் சொற் பெற்றும் பெறுதும் வரும். [2] நெய்தற்றிணைப் பாட்டுக் கும் இஃதொக்கும். அது வருமாறு:—

"கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலங்கோதை." (நுச)

என்னுங் கலியுள், 'அதனுன்' எனத் தனிச்சொற் பெற்று அடக்கியலில்லாச் சுரிதகத்தோடு அடிநிமிர்ந்தொழுகிற்று.

"பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி
.....
அமைக்கவின் கொண்ட தோளிநீ மறந்தே." (கலி. உக)

என்னுங் கலிப்பாட்டுத் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம்பெற்று அடிநிமிர்ந்தொழுகிற்று.

"எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற வைம்பால்போல்."
(கலி. நஉ)

என்னும் பாலைப்பாட்டும்,

"அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாக."(கலி. ககக)

என்னும் நெய்தற்றிணைப்பாட்டும் அங்ஙனமாமாறு கண்டுகொள்க.

இனி, [3] யாப்பின் வேறுபட்ட கொச்சகவொருபோகோ டொப்பனவற்றுட் சில வருமாறு:

---

1. எண் — அம்போதரங்கம். சின்னம் — ஒருசீராய் வரும் அம்போதரங்க வுறுப்பு.
2. நெய்தற்றிணைப்பாட்டு என்றது நெய்தற்கலியை.
3. யாப்பு—செய்யுள்.

"மன்றுபார்த்து, நின்றுதாயைக்
கன்றுபார்க்கு, மின்றும்வாரார்."

என்பது [1] இருசீர் நான்கடித் தரவு கொச்சகம்.

"தஞ்சொல் வாய்மை தேற்றி
யஞ்ச லோம்பென் றகன்ற
வஞ்சர் வாரா ராயி
னெஞ்ச நில்லா தேதான்."

என்பது [2] முச்சீர் நான்கடித் தரவு கொச்சகம்.

[3] "நீரலர் தூற்றத் துயிலா நெடுங்கங்குல்
வாரல ராகி யவரோ வலித்தமைந்தர்
ராரலார் நாரைகா ளன்றில்கா ளன்னங்கா
ளூரலர் தூற்றுயா னுள்ள முகுவேனே."

என்பது, நாற்சீர் நான்கடித் தரவு கொச்சகம்.

[4] "கன்னி ஞாழல் கமழ்பூங் கானல் யான்கண்ட
பொன்னங் கொடியை யின்றே நில்லீ போலுமான்
மன்னன் காக்கு மண்மேற் கூற்றம் வரவஞ்சி
யின்ன தொன்று படைத்த தாயி னெவன்செய்கோ."

இஃது, ஐஞ்சீர் நான்கடித் தரவு கொச்சகம்.

இனி, கோவையாக்கி [5] எழுக்தெண்ணி அளவியற்படுத்துச் செப்பினும் அவையேயாம்.

[6] "காண்பா னவாவினுற் காதலன் காதலிபின் னடவா நிற்ப
நாண்பால ளாதலா னன்னுதல் கேள்வன்பின் னடவா நிற்ப
வாண்பான்மை குன்று வயிவே லவன்றனக்கு மஞ்சொ லாட்கும்
பாண்பால வண்டினமும் பாட வருஞ்சுரமும் பதிபோன் றன்றே."

என்பது, அறுசீர் நாலடித் தரவு கொச்சகம். பிறவும் அன்ன.

[7] "இலங்கொளி வெண்மருப்பி னிட்டகை தூங்கவோ ரேந்தல் யானை
கலங்கஞ் ரெய்திக் கதுஉங் கவளங் கடைவாய் சோரச்
சிலம்பொழி குன்றென நின்றது செய்வ தெவன்கொ லண்ணாய்."

இஃது, அறுசீர் மூன்றடித் தரவு கொச்சகம்.

---

1. இருசீர் நான்கடி முதலியவற்றை இனமென்பர் யாப் பருங்கல நூலார். அவர் இதனை வஞ்சித்துறை என்பர்.
2. வஞ்சி விருத்தம் என்பர் யாப்பருங்கல நூலார்.
3. கலிவிருத்தம்.
4. கலித்துறை.
5. இது கட்டளைக் கலித்துறை.
6. ஆசிரியவிருத்தம்.
7. ஆசிரியத் தாழிசை.

[1] "தண்ணந் துறைவன் றூர்மேற் போன
வண்ணை வண்டு வாரா தம்றே
வண்ணை வண்டு வாரா தாயிற்
கண்ணீர் நில்லா தேகாண்."

என்பது, நான்காசிரியவடியுள் இறுதியடி முச்சீரான் வந்து யாப்பு வேறுபட்டது.

[2] "நினங்கொள் புலாவுணங்க னின்றுபுள் ளோப்புத றவிக்கி டாகக்
கணங்கொள் வண்டார்த் துலாங்கன்னி நறுஞாழல் கையி னேந்தி
மணங்கமழ் பூங்கானன் மன்னிமற் றுண்டோ
ரணங்குறையு மென்ப தறியே னறிவேனே லடையேன் மன்னே."
(சிலப். கானல். கூ)

என்பது, இடையடி குறைந்து வந்தது. இஃது,

"அறுசீ ரடியே யாசிரியத் தகவொடு
நெறிபெற்று வரூஉ நேரடி முன்னே." (நூஎச)

என்றோதப்பட்டதாயினும் [3] பா மயங்கிவரும் பகுதிபற்றி வேறு கூறப்பட்டது.

[4] "புன்கீ நீழ னின்றூர் யார்கொ
லன்கீ காணின் வாழாள் தோழி."

எனவும்,

[5] "மல்ல னூர விவ்வி லன்றும்
பல்பூங் கோதை யில்."

எனவும் இவை இரண்டடியான் ஈற்றடி குறையாதுங் குறைந்தும் வந்தன. இன்னும் மேற்கூறிய கொச்சகவொருபோகின் பகுதியுள் ஒழிந்தனவும் இவ்வாற்றான் வருவனவெல்லாம் வந்த வழிக் கண்டுகொள்க.

இனி, 'வகை' என்றதனான் வெண்கலியுறுப்பு நிலையோத்துப் பா வேறுபடுந் கொச்சகம் வருமாறு:

"ஒன்று, இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
.....
மற்றவன் மேளவழி மேவாய் நெஞ்சே." (கலி. சள)

என்பது, தரவும் கொச்சகமும் சுரிதகமும் முறையானே வந்து ஆசிரியச் சுரிதகத்தான் இற்றது. இதனுள் 'ஒன்று' எனவும்,

---

1. ஆசிரிய இணைக்குறட்டுறை.
2. ஆசிரியத்துறை.
3. பா—ஓசை.
4. வெண்செந்துறை.
5. குறட்டாழிசை.

'அவனை' எனவும் சொற்சீருந் தனிச்சொல்லும் வந்தன. இப் பாட்டு மூன்றனுள் ஒன்று ஓரடிமிக்கு மற்றைய நான்கடியாயே வருதலின் மூன்றும் ஒருபொருண்மேல் வரினும் நூலறிபுலவ ரான் ஒத்தாழிசையெனப்படாக் கொச்சகமாயிற்று. பிறவும் இன்னோரன்னவற்றுற் கலியொடு இதனிடை வேறுபாடு தெரிந்து உணரப்படும், அஃதறியாதார்க்கு ஒன்றுபோலக் காட்டினு மென்பது.

"வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
.....
முன்னிய தேஎத்து முயன்றுசெய் பொருளே." (கலி. எ)

என்னும் பாட்டு, தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து ஐஞ்சீ ரடுக்கி வந்தது. இதனுள் தரவடி நான்கும் வெண்பாவாயினும் அச்செய்யுண் முழுதும் வெண்பாவன்மையிற் கொச்சகமாயிற்று. இனி, அறுசீரான் வருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்." (கலி. நகூ)

என்னுங் கொச்சகக்கலியுள்,

"ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிருளென வேனி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்."

என இடைநின்ற கொச்சகம் ஈற்றடி குறைந்தது.

"புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றே
தனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றே."

எனக் கொச்சகம் ஈற்றடி குறையாது வந்தது. இவை இரண் டும் வெண்பா. இதனுள் ஒழிந்த [1] பா மயங்கியவாறு கண்டு கொள்க.

"கொடுமீட ஞஞ்ஞிலான் குர்போன் மராத்து." (கலி. நகூ)

என்னும் பாட்டினுள்,

"பாஅய்ப் பாஅய் பசந்தன்று நுதல்
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன தோள்."

என முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடி வந்தது.

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்." (முல். கஅச)

என்னும் முல்லைப்பாட்டினுள்,

1. ஒழிந்தபா—ஆசிரியம் முதலியன.

"இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்தீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடா வெகுளி யெழிலேறு கண்டை."

எனவும்,

"தாளெழு துணிபிணி யிசைதவிர் பின்றித் தகுலசென்று."

எனவும் முடுகியலடி வந்தது.

இவற்றுளெல்லாஞ் சொற்சீரடி வந்தன. ஒழிந்த கொச்ச கப் பகுதியும் இவ்வாறே வந்தவழிக் கண்டுகொள்க.

இனி, தரவும் போக்குமின்றிக் கொச்சகம் பலதொடர்ந் திற்றது வருமாறு :

"காலவை, சுடுபொன் வனீஇய வீரமை சுற்றெடு."
(கலி. அடு)

என்னும் மருதக்கலி [1] உறழ்பொருட்டன்மையிற் கொச்சகக் கலியாயிற்று. இவையெல்லாம் பாங்கியெனப்பட்ட கொச்சகமா மெனின்,—அற்றன்று ;

"அம்போ தரங்க மறுபதிற் றடித்து." (சகூஉ)

என்றவழி, அளவை முற்கூறிய மயக்கினுன் இனியெல்லாந் தன்னளவெனப்படுமென்று புகுந்தமையின். இதற்குக் கொச்ச வொருபோகின் அளவை கொள்ளப்படாது, பாங்கியவகைத்தென் ணுமையின்; பிறவும் அன்ன.

இனி, கலிவெண்பாட்டெனக் கூறிய உறுப்புடைக் கலி வெண்பாட்டும், ஈண்டுப் பாங்கியெனப்பட்ட கொச்சகப் பகுதியு மென இரண்டுங் கொச்சகவுறுப்புடைமையிற் கொச்சகக்கலி யென ஒன்றேயாமென மேலைச் சூத்திரத்தோடு இத்தனை [2] ஒன் றுக வகுப்ப ; அற்றன்று ; மேல் ஒருபொருள் கரவாது வெளிப் படத் தோன்றின் ஒரு பொருணுதலியதுபோலக் [3] கலிவெண் பாட்டாகாமைக்கும் வாளாது சலிப்பாவாதற்கும் காரணமென்னை

1. உறழ்பொருட்டு அன்மையின் எனப் பிரிக்க.
2. ஒன்றுகவகுப்பவர்—இளம்பூரணர். அதுவே பொருத்தம்.
3. கலிவெண்பாட்டாதற்கும் வாளாது கலிப்பாவாகாமைக் கும் என்றிருத்தல்வேண்டும். என்னை ? பின்வரும் விடைக்கியை யாமையின். அல்லது சிலவரி என்னையெனின் என்பதன்பின் விடுபட்டிருத்தல்வேண்டும்.

யெனின்,—பிறிது மொருபொருள் கூறுவது கலிவெண்பாட் டென்றதற்கு இடையின்றியே,

"வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்."

[1] கரந்தபொருட்டன்று [2] இது என்றமையின் இதுவும் வெண் கலியாம்; அல்லதூஉம்,

"வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்."

என [3] வேறொரு பாவினை உறுப்பாகக் கூறுதன் [4] மற்றொரு பாவிற்கு ஏதுவாகக் கூறுதலாமோவென மறுக்க. ஒரு பொரு ளுணர்கலிய வெண்பாட்[5]டாயின், "ஒத்தாழிசைக்கலி கலிவெண் பாட்டென [6] மற்றையவற்றோடு ஒக்க பரப்புடையதுபோல உட னோதாமையின் [7] இதுவும் அவ்வாறு [8] பரப்புடைத்தாகல்வேண்டு மாகலானும் அஃதமையாதென்பது. இங்ஙனம் மயங்குவாரை நோக்கியன்றே 'நானவின்றோர்க்கே' இவ் வேறுபாடுணரலாவ தென்று ஆசிரியன் ஓதலானுயிற்றென்பது."

மற்றிதற்கு அளவை கொள்ளுமாறென்னை, மேற் கொச் சகவொருபோகின் அளவு இன்னதென்றிலனுலெனின்,—அற் றன்று; வண்ணகத்திற்கு ஓகிய உறுப்பு அமையவராமையின் [9] அது கொச்சகமேயாமெனவும், எண்ணுஞ் சின்னமும் இமிழ் தலேபற்றி [10] அதுவும் ஒருபோகேயாமெனவும்,

---

1. கரந்த—மறைந்த.
2. இது—வெளிப்படத் தோன்றும் என்ற இது.
3. வேறொருபா—வெண்பா.
4. மற்றொருபா—கலிப்பா.
5. ஆயின் ஓதான் என இயைக்க.
6. மற்றைய என்றது அச் சுத்திரத்தோதிய ஏனைய கலிகளை.
7. இது என்றது கலிவெண்பாட்டை. உறுப்புடைக் கலி வெண்பாட்டாயின் ஒத்தாழிசைக்கலி முதலிய மற்றையவற்றோடு ஒத்த பரப்புடைத்தாம் என்பது கருத்தாகும்.
8. யாப்பு என்ற முற்பாடம் பொருத்தமில்லை.
9. கொச்சகமென்றது—கொச்சகவொருபோகை. அமைய வாராதென்றது 'தரவின்றித் தாழிசை பெறுதலும் தாழிசை யின்றித் தரவுடைத் தாதலும்' முதலியன பெற்று அமையவரா மையை. இவை வண்ணகத்துக்குரிய உறுப்பிழுக்தலின் கொச்ச வொருபோகாயின.
10. அது—எண்ணுஞ் சின்னமு மிழுந்தது.

"அடக்கிய லின்றி அடிநிமிர்த் தோடியது."

வெண்பாவும் ஆசிரியமுமாகி இறுதலின் அடக்கியலில்லாச் சுரி தகம் பெற்றுக் காவதிபோல வருமெனவும், இவ்வாறன்றி [1] ஒப் பழிய வருமெனவும் மேற்கூறினனன்றே? அங்ஙனங் கூறலே, அவ்வுறுப்புக்கள் [2] அவ்வவ்வளவினவென்பதூஉம், அவற்றிற் சிறிய வேறுபட்டு வருமென்பதூஉம், அங்ஙனம் வேறுபடுங் கால் அடிநிமிர்த்தோடியதன் இறுதிக்கவிஸ்லையின் ஒன்றிற்றென் பதூஉம் தெரித்தானும்; என்னை? அடிநிமிர்த்தோடியதற்கு இறுதி எல்லே பத்து அடியென்றமையின்.

இனி, அடிநிமிர்த்தோடியது ஒவ்வாமையின் அதற்கு அளவை இத்துணையென்று,

"ஒருபான் றிறமை யிரட்டியத னுயர்வு." (சகூ உ)

என விதந்தோதினன். இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட அள வின் வேறுபட்டவற்றையும் யாப்பின் வேறுபட்டு வருமென் றன்; எனவே, ஈரடியானே தாழிசைக் கொச்சகம் வருமென வும், அடிநிமிர்த்தோடியதன் இற்றெல்லையாகிய பத்தடியானும் [3] பாவைப்பாடலும் [4] அம்மனைப் பாடலும்போலுங் கரவுகொச்ச கம் வருமெனவும், அவையும் இரண்டடியின் இழியாவெனவும்,

"எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியது." (சகூக)

வேறுபட்டு ஏழடியும் ஐக்கடியுமாகிக் கரவுவினும் வருமெனவும், எட்டடிப்பாகமாகிய நான்கடியின் உயரா தாழிசையெனவும், எல் லாம் ஆண்டே கொள்ளப்படுமாகலின் அவற்றுக்கு அளவை கூறியகிலனென்று கடா வருவதென்னையென மறுக்க. அஃதேல், தாழிசைக் கொச்சகமாகிய பாணிச் செய்யுளும் கரவுகொச்சகமா கிய தொடர்நிலைச்செய்யுளும் முழுவதும் ஒன்றாக நோக்கியகால் உயர்ந்த எல்லே கூறுதோவெனின்,—அஃது அடி [5] வரையறையின்

---

1. ஒப்பழிய வருவன என்றது, யாப்பினும் பொருளினும் வற்றுமையுடையனவற்றை.
2. அவ்வவ்வளவு—வண்ணகத்திற் கோதிய அந்த அந்த உறுப்பளவு.
3. பாவை—திருவெம்பாவை.
4. அம்மனை—அம்மானை.
5. வரையறையின்—வரையறையின்கண். வரையறையினுல் எனினுமாம்.

[1] ஒரு செய்யுளாக்கியே அளவை கூறினுன், அவை கொச்சக மாயினுங் தரவு கொச்சகமெனப் பெயர் [2] பெறுதலாயினமையி னென்பது; அஃதேல், [3] அகநிலைக் கொச்சகத்திற்கும் அவையே அளவாம் பிறவெனின்,—அற்றன்று;

"அம்போ தரங்க மறுபதிற் றடித்து."

என்றவழி, அளவை முற்கூறிய மயக்கினுன் இனிக் கூறும் உறுப்புடைக் கலிப்பாவிற்கெல்லாம் [4] அதனளவெனப்படுமென்று புகுந்தமையின் இதற்குக் கொச்சகவொருபோகின் அளவை கொள்ளப்படாது; [5] பாநிலைவகைத்தென்னுமையின் இவற்றைத் [6] தொகைநிலையளவின் அடியுடையவென்பது,

"தொகுநிலை யளவி னடியில." (சளஉ)

என்புழிச் சொல்லுதும். அஃதேல், 'பாநிலைவகையே கொச்சகக்கலி' என்றவழி, கொச்சகவொருபோகொடு ஒப்பது அளவொழித்தெயென்பதும் வரைந்தோதுகவெனின், — ஒருவழி யொப்பனவும் உளவாகலின் அங்ஙனங் கூறினுனென்பது. அவை இரண்டடி முதலாகப் பத்தடியளவும் வருவன தரவுகொச்சக மென மேற்காட்டிய செய்யுளுட் காணப்படும். (சருஙு)

[உறழ்கலியினிலக்கணம் இதுவெனல்]

சகூஅ. கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்
போக்கின் ருக வுறழ்கலிக் கியல்பே.

இது, முறையானே உறழ்கலியுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒருவர் ஒன்று கூறுதற்கு மறுமாற்றம் மற்றொருவர் கூறிச்சென்று பின்னர் நின்றது உறழ்கலி என்றவாறு.

1. ஒரு செய்யுள் ஆக்கி—ஒவ்வொரு செய்யுளாக வைத்தே. ஏனெனின் தரவு என்னும் உறுப்புப்பற்றி. தரவுக்குரிய அளவு பற்றி ஒவ்வொரு செய்யுளாகவே கூறுவர் என்றபடி. ஒரு என்பது ஒவ்வொரு என்றிருந்திருத்தல்வேண்டும்.

2. பெறுதலாயின் என்பது S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிற் பாடம். அது பொருத்தமில்லை.

3. அகநிலைக் கொச்சகம் என்றது, இச்சூத்திரத்தாற் சொல்லிய கொச்சகத்தை.

4. அதனளவு—அம்போதரங்கத்தினளவு.

5. பாநிலைவகைத்து என்று கூறின், ஒருபோகின் அளவை கொள்ளப்படும். அன்றிப் 'பாநிலைவகையே' என்றமையின் கொள்ளப்படாது என்றபடி.

6. தொகுநிலை என்றிருத்தல் நலம்.

'போக்கின்று' எனவே, தரவுபெறுதலும் பாட்டிடை மிடைதலும், ஐஞ்சீரடுக்கலும், ஆறுமெய்பெறுதலும் ஒழிந்த சொற்சீரடி பெறுதலும், பா மயங்கிவருதலும், அம்போதரங்கத்திற் கோதிய அளவை பெறுதலுமெல்லாம் வெண்கலிப் பாட்டிற்குப்போல மேனின்ற அதிகாரத்தாற் பெறப்படுவ தாயிற்று. 'போக்கின்றுக வியல்பு' எனவே, இயல்பின்றி விகாரவகையாற் சில போக்குடையவுமாமென்றுணும்; அதுவும்,

"பல்பொருட் கேற்பி னல்லது கோடல்." (சுசுரு)

என்பதனுன், வெள்ளைச் சுரிதகம் ஒழித்து ஆசிரியச் சுரிதகமே கொள்ளப்படும்; என்னை? வெள்ளைக் கொச்சகம் பல வந்தவழி ஒன்றனைச் சுரிதகமெனலாகாமையானும், அச்சுரிதகம் இரண்டும்,

"போக்கியல் வகையே வைப்பெனப் படும்." (சசஅ)

எனக் கூறப்பட்ட [1] இலக்கணத்தவல்லவாயினும்,

"எழுசீ ரிறுதி யாசிரியங் கலியென." (நஅஅ)

நின்றவழி அப்பாட்டு முடிந்துகாட்டி நிற்றலானும், அதுவே கொண்டாஞ் சிறுபான்மையென்பது.

மற்றுத் தரவின்றி வருவனவும் உளவாலெனின்,—இதற்குத் தரவு முதலாயின உறுப்பு விதந்தோதியதிலைகலின் அஃது ஆராய்ச்சியின்றென்பது; அற்றன்று; தரவும் போக்கும் உடன் கூறியதனுல், 'போக்கும் பாட்டிடை மிடைந்தும்' என்னும் அதிகாரம்பற்றி ஈண்டுப் போக்கு விலக்கினமையின் அது பொருந்தாது; மற்றென்னை கருதியதெனின்,—இதற்கு அதிகாரம்பட நிறீஇய கலிவெண்பாட்டு ஓதிய சூத்திரத்திற் பாட்டினை [2] இடை கூறுது தரவும் போக்கும் உடன் கூறியதனுற் [3] போக்கின் இலக்கணத்தனவும் பெறுமென்றுணும்; அதனுனே ஈண்டு விலக்குண்ட போக்குப்போலச் சிறுபான்மை தரவின்றியும் வருமென்பது; இக்கருத்தினுன்றே, இதனைப்

1. இலக்கணத்த அல்ல என்றது இவ்வுறழ்கலிக்கு வரும் போக்கின் வேறுபாடு நோக்கி.

2. இடை—தரவிற்கும் போக்கிற்குமிடை.

3. போக்கின் இலக்கணம் பெறுதல் என்றது தரவும் போக்கினிலக்கணத்தைப் பெறலை. எனவே போக்கை விலக்கவே உடனெண்ணிய தரவும் விலக்குண்ணும் என்றபடி.

[1] பாங்கிலேயோடு கூறுது தாவுவகைப்படுங் [2] கொச்சகத்தின் பின்னர் வைப்பானுபிற்றென்பது.

இனி, போக்குடையன தாளின்றி வாரா, அவை ஓரின மென்று ஓதப்பட்டமையினென்பது. மற்றிதற்குப் போக்கின்மை யும் இலக்கணமாகலின் அதுபற்றியும் பெயர் கொள்ளாமோ வெனின்,—போக்கின்மை சிறுபான்மை கொச்சகத்திற்கும் உரி மையின் [3] அவ்வகையுரியதோர் இலக்கணம்பற்றிப் பெயர் கூறு னென்பது. மற்றிதனையுங் கொச்சகமென்றக்கால் இழுக்கென்னை யெனின்,—நாடகச் செய்யுட்போல வேறுவேறு துணிபொருள வாகியும் பல தொடர்ந்தமையிற் பெரிதும் வேறுபாடுடைமை நோக்கியும் இது பொருளதிகாரமாதலாற் பொருள் வேறுபாடு பற்றியும் வாலாற்று முறைமைபற்றியும் வேறு செய்யுளென்று னென்பது; என்னை?

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லி னான."

என, (சூசரு) மாபியலுள் ஓதுகின்றமையினென்பது. [4] அல் லாக்காற் கைக்கிளையுஞ் செவியறிவுறூஉவும் வாயுறையும் புற நிலையுமென்னும் நான்கும் [5] மருட்பாவும் ஒன்றேயாகிய செல்லு மன்றோவென மறுக்க.

அவற்றுக்குச் செய்யுள்:—

"அரிநீ ரவிழ்நில மல்லி யனிச்சம்." (கலி. கூக)

என்னும் பாட்டினுள், தரவும் பாட்டும் உடைத்தாகிய பாட்டுத் தாம் ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்து போக்கின்றி நின்று முடிந்தது. என்றார்க்கு,

"காணி னெகிழுமென் னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணுநீ பெட்பச் செயல்." (கலி. கூக)

என்பது, வெள்ளைச் சுரிதகமாகாதோவெனின்,—ஆகாதன்றே?

1. பாங்கிலே—கொச்சக ஒருபோகு.
2. கொச்சகம்—கொச்சகக்கலி.
3. அவ்வகை உரியது—வேறொன்றற்கும் உரியது.
4. அல்லாக்கால்—பொருள் வேறுபாடும் மரபும் நோக் காக்கால்.
5. மருட்பாவென என்றிருத்தல்வேண்டும்.

"போக்கியல் வகையே வைப்பெனப் படும்." (சசஅ)

என்ற இலக்கணத்தான் முற்கூறியவற்றையெல்லாந் தொகுத்து இதன்கண் வைத்திலாமையினென்பது; அல்லதூஉம், அவ்வாறு முடிதலேயன்றி இன்னும் ஓர் கொச்சகம் பெய்து சொல்லி உறழ்ந்தவழியும் அஃது ஏற்பதாகலான் அஃது [1] ஒருதலையாக [2] அமைந்ததெனப்படாது; என்னை?

"அன்னதே யாயினு மாகமற் றுயிழாய்
நின்னகை யுண்க முயங்குவாய்—நின்னெஞ்ச
மென்னெஞ்சு நின்ற தெனின்."

என்றாற்போலப் பின்னு [3] மொன்று தலைமகன் உரைத்தற்கு இடம்பட்டு நின்றமையின் அது 'போக்கியல்வகைத்தாகிய வைப் பெனப்படாது' என்க.

இனி, அவ்வாறன்றி ஆசிரியச்சுரிதகம் வந்தவழி அக் கலிப்பாட்டு [4] முடிந்து காட்டுதலின் அதுவும் அடக்கியலன் றாயினும் அதனைச் சிறுபான்மை நோக்கான் இது வழிநூலாக லின் மூதனூல்பற்றியென்பது.

"நலமிக நந்திய நயவரு கடலென்றோள்." (கலி. ககங)

என்னும் முல்லைக்கலி போக்கிலக்கணமில்லாத ஆசிரியச் சுரி தகம்பெற்று வந்த உறழ்கலியாயிற்று.

"வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த." (கலி. ககச)

என்னும் முல்லைப்பாட்டும்,

"சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட." (கலி. சுஅ)

என்னும் குறிஞ்சிப்பாட்டும் அது.

"ஒரூஉநீ யெங்கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை;
தெரியிழாய்,.....பரியாஞப்
பாடில்கண் பாயல் கொள.." (கலி. அள)

என்பது, தரவும் போக்குமின்றி வந்த உறழ்கலி. இவற்றுள் ஐஞ்சீரும் அறுசீரும் வந்தன. ஒழிந்த சொற்சீரடி வந்தன பிறவுங் கண்டுகொள்க. (கருசு)

1. ஒருதலை—நிச்சயம்.
2. அமைந்தது—முடிந்தது.
3. ஒன்று—ஒரு பாட்டு.
4. முடிந்து காட்டலின் நோந்தான் என இயைக்க.

[ஆசிரியப்பாவடியின் உயர்ந்த அளவும் இழிந்த அளவும்]

சூசுகூ. ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லே
யாயிர மாகு மிழிபுமூன் றடியே.

இத்துணையும் பாவுறுப்புக் கூறி, இனி அப்பாவி னுள் ளுறுப்பாகிய அடியளவை கூறுவானெழுந்தான், முறையானே ஆசிரியப்பாவிற்கு அளவு கூறுகின்றனென்பது.

இ—ள்: ஆசிரியப்பாவின் பெருக்கத்திற்கு எல்லை ஆயிரம் அடி; சுருக்கத்திற்கு எல்லை மூன்று அடி என்றவாறு.

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே." (ஐங்குறு. கடவுள்)

என்னும் ஆசிரியப்பா மூன்றடியால் வந்தது.

"மாயோன் மார்பி னுரம் போல."

என்பது, நான்கடியான் வந்தது.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
.....
பெருந்தே னிழைக்கு நாடனெடு நட்பே." (குறுந். கஅ)

என்பது, ஐந்தடியான் வந்தது.

"தாமரை புரையும் காமர் சேவடி
.....
ஏம வைக லெய்தின்று லுலகே. (குறுந். கடவுள்)

என்பது, ஆறடியான் வந்தது.

"மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வகைநரல் பவ்வ முடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணுகை
வியன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே." (நற்றிணை. கடவுள்)

என்பது, ஏழடியான் வந்தது; பிறவும் அன்ன. ஆயிரம் அடியான் வருவனவும் உளவேற் கண்டுகொள்க.

ஆசிரியப்பாட்டி னெல்லையென்னுது 'அளவு' என்றதனான், அதனியற்றாகிய வஞ்சிப்பாவிற்கும் இவ்வாறே கொள்ளப்படும். இனி, வெண்பாநெறித்தாகிய கலியளவை [1] அதனின் வேறு படுதலின் அதற்கு வேறு விதந்து [2] கூறுமென்பது. (கரிஎ)

1. அதனுள் என்னும் முற்பாடஞ் சிறப்பின்று.
2. கூறுமென்றது—ஆசிரியனே.

[நெடுவெண்பாட்டின் அடிக்கும் குறுவெண்பாட்டின் அடிக்கும் உரிய அளவு]

சஎ0. நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே
குறுவெண் பாட்டி னளவெழு சீரே.

இது, முறையானே வெண்பாவின் அடியளவு கூறுகின்றது.

இ—ள்: வெண்பாவிற்கு இரண்டும் பன்னிரண்டும் இழிபும் ஏற்றமுமாம் என்றவாறு.

மற்றிவற்றையும்,

"ஆசிரியப் பாட்டி னளவிற் கெல்லே."

என்றாற்போலக் கூறாது, குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டு மெனப் பெயர் கொடுத்ததனாற் பயந்ததென்னையெனின்,—குறுமையும் நெடுமையும் அளவியலோடு படுத்துக் கொள்ளப்படுதலின் [1] அளவியல் வெண்பாட்டும் உளவென்பதூஉம், அதுவே சிறப்புடையதென்றற்கும் அங்ஙனங் கூறினனென்பது.

இனி, அவற்றைத் தத்தம் வகையாற் சுருக்கம் பெருக்கம் உணருங்கால் 'உய்த்துக்கொண்டுணர்தல்' (கூசுரு) என்பதனான் உணரப்படும்; என்னை? நெடுவெண்பாட்டிற்கு உயர்ந்த அளவை பன்னிரண்டடியெனவே, அதன் பாகமாய ஆறு அளவியல் வெண்பாவிற்கு உயர்ந்த எல்லையெனவும், நெடுவெண்பாட்டிற்கு இழிந்தவெல்லை ஏழடியெனவும், அளவியல் வெண்பாவிற்கு இழிந்தவெல்லை நான்கடியெனவும் கொள்ளவைத்தமையினென்பது. இங்ஙனம் அளவியல் வெண்பாச் சிறப்புடைத்தாதலினுக்கிப் [2] பதினெண்கீழ்க் கணக்கினுள்ளும் [3] முத்தொள்ளாயிரத்துள்ளும் ஆறடியினேறுமற் செய்யுள்செய்தார் பிற சான்றோருமெனக் கொள்க; இக்கருத்தினனே,

"அம்மை தானே யடிநிமிர் பின்று." (தொ. செ. உருடு)

1. அளவியல் — நெடுவெண்பாட்டின் பாகம் பெறுவது. பாகம்—ஆறடி.
2. பதினெண்கீழ்க் கணக்கு இவை என்பதை, "நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்—பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்—இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே—கைந்நிலையு மாங்கீழ்க் கணக்கு." என்பதனாலறிக. இன்னிலைய — மெய்ந்நிலைய எனவும் பாடம்.
3. முத்தொள்ளாயிரம்—ஒரு நூல்.

1 எனக் 2 கூறிய நெடுவெண்பாட்டும் நேர்நிலன் ஆசிரியன் 3 அதற்கென்பது ; அஃதேல், அவ்வளவியல் வெண்பாவுள்ளும் ஆறடியானும் ஐந்தடியானும் வருதல் சிறு வரவினவாலெனின்,— அங்ஙனமே 4 செப்பிக் கூறிய மரபிற்றாகிய வெண்பாவினைப் பாந்துபடக் கூறல் இயல்பன்றாகலின் 5 அவற்றுள்ளுஞ் சுருங்கிய நான்கடியே சிறந்ததென்று அதனையே பற்றிப் பெரும்பான்மையுஞ் செய்யுள் செய்தாராவரென்பது. அஃதேல், குறள் வெண்பா அதனினுஞ் சிறந்ததாம் பிறவெனின்,—அற்றன்று ; செப்பிக் கூறுங்கால் 6 தெரியக் கூறல்வேண்டுமாகலின் அளவியல் வெண்பாவே பயின்றவென்பது. நெடுவெண்பாட்டுப்போலச் சிறப்பின்றாங் குறுவெண்பாட்டுமெனின்,—

"சிறப்புடைப் பொருளோப் பிற்படக் கிளத்தல்."

என்பதனான், அவ்விரண்டினுள்ளும் அதனைப் பிற் கூறியது அச்சிறப்பு நோக்கியன்றோவென்பது ; உதாரணம் :

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
கூரிற்செகுத் துண்ணுமை நன்று." (குறள். உசு—கூ)

ஏனையும்,

'அறிந்தாங் கியற்றி யறிவாங் கறிந்து
செறிந்தார்க்குச் செல்வ னுரைப்பச்—சிறந்தார்
செறிந்தமை யாராய்ந்து கொண்டு.' (யா. வி. ப. உஉசு)

என இவை குறுவெண்பாட்டு.

"துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்." (நாலடி. க—உ)

எனவும்,

'நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்—தூண்மாய்ந்து

1. என—என்று.

2. கூறிய நெடுவெண்பாட்டு எனப் பிரிக்க. கூறிய—இங்கே கூறிய. கூறியிந்நெடுவெண்பாட்டு என்றிருப்பது நலம்.

3. அதற்கு—அவ்வம்மைக்கு.

4. செப்பு—விடையாதலின் சுருங்கச் சொல்லல் என்பது கருத்துப்போலும்.

5. அவற்றுள்ளும்—அவ்வெண்பா அடியுள்ளும்.

6. தெரிய—புலப்பட=பொருள் விளங்க.

முற்பக லெல்லாங் குழம்பாகிப்—பிற்பகற்
றுப்புத் துகளிற் கெழுஉம் புனலுடன்
றப்பியா ரட்ட களத்து." (களவழி க)

எனவும்,

"நானும் நிசையும் பிணம்பிறங்க யானை
யடுக்குபு வேற்றிக் கிடந்த விடித்துறறி
யங்கண் விசும்பி னுருமெறிந் தெங்கும்
பெருமலைத் தூறெறிந் தற்றே யெரிமணிப்பூ
ணேந்தெறின் மார்பத் தியறிண்டேர்ச் செம்பியன்றெவ்
வேந்தரை யட்ட களத்து." (களவழி சு)

எனவும், இவை அளவியல் வெண்பாட்டு.

"பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவி
லென்னோடு நின்று 1 ரிருவ ரவருள்ளும்
பொன்னேடை நன்றென்று னல்லளே—பொன்னேடைக்
கியானநன் றென்றுளு மந்நிலையள்—யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்." (யா. வி. ப. உஎ)

என்பதும் அது. நெடுவெண்பாட்டு வந்தவழிக் கண்டு கொள்க. (கரிஅ)

[அங்கதப்பாட்டடிக்குரிய அளவு]

சஎக. அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்.

அங்கதப் பாட்டிற்கும் வெண்பாவே உறுப்பாகலின் ஈண்டு வைத்தான். இதுவும் மேற்கூறிய 2 இரண்டெல்லையும், பெறுமென்றவாறு.

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவை
குருடேயு மன்றுநின் ஞ்ற—மருடீர்ந்த
பாட்டு முரையும் பயிலா தனவிரண்டு
டோட்டைச் செவியு முள."

என்பது, நான்கடியான் வந்த அங்கதம் ; பிறவும் அன்ன.

இது, 3 மந்திரத்தின் வேறுபட்டு அடிவரைத்தாயினமையின் இதுவும் வெண்பாட்டுப்போன்று அமைந்து நில்லேவண்டு

1. இருவர் என்றது—மகளிரிருவரை. அவர்கள் என்னைப் போலத் தாரை விரும்பாமையின் நல்லராயினர். யான் தாரை விரும்பி அது பெருமையின் தியேனுயினேன் என்றுள் என்க. ஓடை—யானையின் முகத்திலணியும் படாம். தியேன்—குறுக்கல் விகாரம்.

2. இரண்டெல்லை—நெடுமை, குறுமை.

3. மந்திரம்—மந்திரச் செய்யுள்.

மென்றற்கும், இது [1] வேறு பாட்டெனப்படாமையின் அடி வரையின்றுகொலென்னும் ஐயந்தீர்த்தற்கும் இதற்கே ஈண்டு அளவை கூறி, அதனினும்

"கைக்கிளை பரிபாட் டங்கதுச் செய்யுள்." (சஉ0)

என்று ஓதப்பட்ட கைக்கிளைச் செய்யுள் முத்தொள்ளாயிரத்துப் போலப் பலவாயினும் அவற்றுக்கு அளவையும் வெண்பாவின் அளவேயென்று அடக்கினனென்பது. [2] நாற்பாவாக அடிவரைப் படுவன உளவாயினவற்றுக்கும் இஃதொக்குமென்பது மேற் கூறுதும். (கருகூ)

[கலிவெண்பாட்டு முதலிய ஐந்து செய்யுளும் அடியின் பெருமைக்கு அளவு கூறப்படா எனல்]

சஎஉ. கலிவெண் பாட்டே கைக்கிளைச் செய்யுள்
செவியறி வாயுறை புறநிலை யென்றிவை
தொகுநிலை யளவி னடியில வென்ப.

இஃது, வழக்காதெய்துவித்தது; அளவை கூறுதவற்றுக்கு அளவை கூறினமையின்.

இ—ள்: இவை ஐந்தும் பெருமைக்கு எல்லை இத்துணை யெனத் தொகுத்துக் கூறுந் தன்மையுடைய அளவால் வரும் அடியையுடையவல்ல என்றவாறு.

[3] கலிவெண்பாட்டென்பது, [4] ஒருபொருணுதலுதலால் திரி பின்றி நடப்பதன்றிப் பன்னிரண்டடியின் இகந்துவந்து,

"தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து."

வாராது ஒன்றேயாகி வருவதெனக் கொள்க.

---

1. இது—அங்கதம். வேறுபாட்டெனப்படாமையின் என்பது வேறுபாட்டெனப்பட்டமையின் என்றிருத்தல்வேண்டும். வேறுபாட்டுதல்—அங்கதப் பாட்டெனப்படுதல்.

2. நாற்பா — சூத்திரப்பா. ஈண்டுச் சூத்திர வெண்பா. நேமிநாதம் சூத்திர வெண்பாவாலாயது. நாற்பா எனவும் பாடம்.

3. இக் கலிவெண்பாட்டு பன்னிரண்டடியின் இகந்து ஒரு பொருணுதலாது உறுப்புமின்றி வருவது. இவ்வுரையாசிரியர் கருத்துப்படி இது இரண்டாவது பிரிவு. விரவுறுப்புடையது மூன்றுவது பிரிவு.

4. பன்னிரண்டடியின் இகவாது ஒருபொருணுதலித் திரி பின்றி வருவதை கருச-ம் சூத்திரத்தாலறிக.

கைக்கிளைச் செய்யுளென்பது, கைக்கிளைப்பொருட்கு உரித்தாய் வரும் மருட்பாவென்றவாறு. அஃதேல், ஈண்டோதிய கலிவெண்பாட்டு மொழிந்த கைக்கிளைப் பொருண்மேல் வாராவோ வெனின்,—வருமென்பது,

"நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்." (நங)

என்புழிக் கொண்டாமென்பது. எனவே, [1] வெண்பாட்டல்லா தன கலிப்பாட்டுக்கள் கைக்கிளைப் பொருண்மேல் வந்தவழி யும் அவற்றுக்கு அளவை மேற்கூறியவாற்றானே அடங்குமென்ப தாயிற்று. செவியறி வாயுறை [2] புறநிலையென்பனமேற்,

"கலிநிலை வகையும் வஞ்சியும் பெறுஅ." (சஉஉ)

எனவே, ஒழிந்த பாவான் வருமெனப்பட்ட பொருண்மேல் வருஞ் செய்யுள். ஆண்டோதியவற்றுக்கு ஈண்டு அளவை கூறுனே வெனின்,—அஃது [3] ஆசிரியமும் வெண்பாவுமாகி வேறு வரு தலின் முற்கூறிய வகையானே அடங்குமென்பது. மற்றுக் [4] கொச்சகவொருபோகாகியுந் தொடர்நிலைச்செய்யுட்கண் வருமால் அவையடக்கெனின், அஃது,

"யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடைய." (சசுக)

கொச்சகவொருபோகென்றுழிக.

"தொகுநிலை யளவி னடியில." (சஎஉ)

என்பது, விரவுறுப்புடை வெண்கலியும் கொச்சகக்கலியும் உறழ் கலியுமென்றிவற்றிற்கு மேல் அம்போதரங்கம் பெற்ற அளவினை முதலாக நாட்டிக்கொண்ட தொகுநிலையளவு எனப்பட்ட அடி மேல் அடியிகந்தோடாவென்றவாறு. 'தொகுநிலையளவு' என் பது, கீழையளவு இடையளவு கடையளவெனப்பட்ட அம்போ தரங்கம் மூன்றற்கும் பெருகியவெல்லையாகி அளவின் விரியாது அவற்றுக்குச் சுருங்கியவெல்லையாகி அறுபதும் முப்பதும் பதி னைந்துமெனத் தொகுத்துநிற்கும் அளவினவாகிய அடிமேலேறு வென்றவாறு. தொகுமளவென்னாது 'தொகுநிலை' என்றான்

---

1. வெண்பாட்டல்லாதனவாகிய கலிப்பாட்டுக்கள் என்க.
2. புறநிலை என்பன செய்யுள் என முடிக்க.
3. சஉஅ-ம் சூத்திரம் நோக்குக.
4. கொச்சகவொருபோகாதல் அவையடக்கு வருதல் தொடர் நிலைச் செய்யுளாகிய சிந்தாமணி முதலியவற்று லறியப்படும்.

மூன்று தொகையினும் முப்பஃதாகிய இடைநிலைத் தொகையே கோடற்கென்பது. இன்னென்னும் ஐந்தாமுருபு நீக்கத்தின்கண் வந்தமையின் முப்பஃதடியின் இகந்துவரும் அடி இலவென்ற வாறு. இனி, அம்முப்பஃதாகிய தொகுநிலை இவ்வைந்தற்கும் நீண்டவடிக்கு எல்லையாதலின், தொகுநிலையென்னுது 'அளவு' என்றுணென்பது. [1] 'நீண்டதனை அளவுடைத்து' என்பவாகலின். மற்றிங்ஙனம் இவை முப்பதடியின்மேல் வாராவென்று பெருக்கத்திற்கெல்லை கூறவே, சுருக்கத்திற்கெல்லை வரையறையிலவென்றுணும்; ஆகவே, இரண்டடியானும் வருமென்றுணும் பிறவெனின்,—அற்றன்று; 'ஒருபொருணுதலி வருங் கலிவெண் பாட்டாயிற்' பன்னீரடி இகவாதென்பது,

"திரிபின்றி வருவது கலிவெண் பாட்டு." (சூசுடு)

என்றவழிப் பெறுதுமாகலின், நீண்டு ஒதிய கலிவெண்பாட்டுப் பதின்மூன்றடியிற் சுருங்காதென்பது பெற்றும். இது கைக்கிளைப் பொருண்மேல் வந்தாயினும் ஒக்கும்.

[2] ஒழிந்த நான்கும் மருட்பாவாதலான்,

"வெண்பா வாசிரிய வியலான் முடியவும்பெறும்"

என்றுணுகலானும்,

"வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும்." (சூளசு)

என வருகின்ற சூத்திரத்தானும், அவ்விரண்டு பாவின் கூட்டம் இரண்டடியாகி வாராவாகலானும் அவையும் [3] நான்கடியிற் சுருங்காவென்பது உய்த்துக்கொடுணரவைத்தான் என்பது; என்னை? கைக்கிளைப்படலத்துள்,

"போற்றி வெண்பா வாகி மற்றத
னீறுதி [4] யைஞ்சீ ராசிரி யம்மே."

---

1. நீண்டதனையளவுடைத்து என்றது அதிகம் நெடிதல்லாதது என்ற கருத்தினுற்போலும். அளவு என்றது எல்லையை உணர்த்தக் கூறினர் என்றபடி.

2. "ஒழிந்த நான்கு—கைக்கிளை, செவியறிவுறூஉ, வாயுறை, புறநிலை.

3. ஐந்தடியிற் சுருங்கா என்று பின் வருதலின் இங்கு நான்கடி என்றது நான்கடியானும் வருதலிற்போலும்.

4. ஐஞ்சீர்—அஞ்சீர் என்று இருத்தல்வேண்டும்.

என்றாகலின். மற்று மூன்றடியிற் சுருங்காது ஆசிரியமாதலானும் இரண்டடியிற் சுருங்காது வெண்பாவாதலானும் இவ்வைந்தடியிற் சுருங்காவென்று கொள்க. இது,

"பண்புற முடியும் பாவின." (சூளசு)

என மேற் சொல்லும். அவற்றுக்குச் செய்யுள் :—

"நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
மஞ்சிய தாங்கே யணங்காரு மென்னுஞ்சொ
லின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னுளும் பாராட்ட யானு
மிதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர
மாயில்வண் சேக்கை மனைந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்
றெரிதிரை முன்கையுள் கையாறு கொள்ளாள்
கடிமகீ காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப் பிரீயாகீ யிலங்குதேர்க் கோடு
நெடுமலே வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருண் முற்று மளவென்று ராய்பிரிவாய்
தாமிடை கொண்ட தடுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலேமாயிற்
றெரியி றுறந்தா ரவரெனத் தம்வயி
னெய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லெ னுயிர்." (கலி. உச)

என்பது, பதினேழடியான் வந்த கலிவெண்பாட்டு.

"சுடர்த்தொடி இ கேளாய் தெருவினு மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையு மாயு மிருந்தேமா வில்லிரே
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்ரு ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வகீமுன்கை பற்றி தலியத் தெருமந்தெட்
டன்னு யிவளெருவன் செய்ததுகா ணென்றேனு
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
ணுண்ணுநீர் விக்கினு னென்றேனு வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணுற் கொல்வான்போ னேக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்." (கலி. நுக)

என்பது, ஒருபொருணுதலிப் பதிணறடியான் வந்தது.

"இருந்தழாய் கேளாய்நம் மூர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை யல்க னீகழ்ந்த தொருநிலையே
மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்கு
லந்துகிற் போர்வை யணிபெறத் தைஇநம்

மின்சாயன் மார்பன் குறிநின்றேன் யானுகத்
திரத் தறைந்த தகூயுந்தன் கம்பலுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பாணத்
தோழிநீ போற்றுதி யென்றி யவனுங்கே
பாராக் குறமுரப் பணியாப் பொழுதன்றி
யாரிவ ணின்றீ ரெனக்கூறிப் பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையா றம்பலந் தின்றியோ வென்றுதன்
பக்கழித்துக் கொண்டி யெனத்தரலும் யாதொன்றும்
வாய்வாளே னிற்பக் கடிதகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியா
னேனைப் பிசாசரு ளென்னை நவிதரி
னிவ்வூர்ப் பலிநீ பெருஅமற் கொள்வே
னெனப் பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப
முதுபார்ப்பா, னஞ்சின னுதை லறிந்தியா னெஞ்சா
தொருகை மணற்கொண்டு மேற்றூவக் கண்டே
கடிதரற்றிப் பூச ரொடங்கின னுங்கே
யொடுங்கா வயத்திற் கொடுங்கேழற் கடுங்க
ணிரும்புலி கொண்மார் நிறுத்த வகீலியுளோ
ரேதில் குறுநரி பட்டற்றும் காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலூஅ
மாகுல மாகி விளைந்ததை யென்றுந்தன்
வாழ்க்கை யதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.'' (கலி. சுரு)

என்பது, இருபத்தொன்பதடியான் வந்த கலிவெண்பாட்டு. ஒழிந்தனவும் அன்ன. நூற்றைம்பது கலியுள்ளுங் கைக்கிளைபற்றி இவ்வாறு வருங் கலிவெண்பாட்டுக் காணுமாயினுமைமையிற் காட்டாமாயினும். இலக்கணமுண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கண்டுகொள்க.

[1] ''கனவினிற் காண்கொடா கண்ணுங் கலந்த
தனவினுண் முன்விலக்கு நாணு—மினவங்கம்
பொங்கோதம் போழும் புகாஅர்ப் பெருமானர்
செங்கோல் வடுப்படுப்பச் சென்று.'' (முத்தொள். நுகூ)

இது, கைக்கிளைபற்றி வந்த கலிவெண்பாட்டென்னுமோவெனின்,—என்னுமன்றே; [2] அது பாடாண்டிணைப் புறப்பொருளாகலானும் ஒருபொருணுதலுதல் ஐந்திணைக்கண்ணதேயாகலானும் பன்னிரண்டடியின் இகந்ததன்றுகலானும் வெண்பாவே

1. கண்ணுங் காண்கொடா; நாணும் விலக்கும்; செங்கோல் சென்று வடுப்படுத்தலால் என்க.

2. அது — இது என்றிருத்தல்வேண்டும். இது என்றது வெண்பாவை.

யாமென்பது. [1] இப் பொருட்பகுதி யுணராதாரும், இது மரபென்பதறியாதாரும், நூற்றைம்பது கலியுள்ளும் [2] இவை கோப்புண்டனவென்பது நினையாதாரும் இவற்றுள் ஒருபொருணுதலிய ஒழிந்தனவெல்லாம் வெண்பாவென்று அடிவரை கூறு தொழிப. அங்ஙனம் மரபழியக் கூறின் ஒரு சாத்தனை நாட்டி. அவனைக் காமுற்று [3] இவன் இன்னவாறுபினனென ஆசிரியத்தானும் வஞ்சியானும் பொருள் வேற்றுமையுடைய ஒருசார்க் கொச்சகமல்லாத கலிப்பாவினுளுஞ் செய்யுள் செய்தலும், இனி அதனிலேயாகிய ஆண்பாற் கைக்கிளை ஆசிரியத்தானும் வஞ்சியானும் வருதலும், பிறவும் [4] இன்னோரன்னவெல்லாம் புலனெறி வழக்கினுட் காட்டல்வேண்டுமென மறுக்க. என்றூர்க்கு வரைவுகடாதற்கண்ணுங் கலிவனை அன்பிலனுகச் சொல்லுவன பாடாண்டிணைக் கைக்கிளையாகாவோவெனின், — 'அவைசுட்டியொருவர் பெயர்' கொள்ளாமையின் ஆகாவென்பது. அஃதேதல்,

''விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறை.'' (கலி. சரு)

என்னுங் குறிஞ்சிப் பாட்டினுள்,

''கால்பொர நுடங்கல கறங்கிசை யருவிநின்
மால்வரை மலிசூன மலரேய்க்கு மென்பதோ
புல்லாரப் புணர்ச்சியாற் புலம்பிய வென்நெஞ்சி
பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை.''

எனவும்,

''நறவினை வரைத்தார்க்கும் வரையார்க்கும்.'' (கலி. கூகூ)

என்னும் மருதப் பாட்டினுள்,

''அறனிழ லெனைக்கொண்டா யாய்புடை யக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றூர்.''

எனவும் இவைசுட்டியொருவர் பெயர்கொள்ளாக் கைக்கிளை வந்தனவாலெனின், — அற்றன்று; தலைமகனன்பின்மையே மெய்யாயினன்றே அன்னதாவது; இவை அன்னவன்றி வரைவு கடா

1. இப் பொருட்பகுதி என்றது பாடாண்டிணைப் பொருள் இதற்குரியது ஐந்திணைப் பொருள் இதற்குரியது, என்னும் பகுதியை.

2. இவை—கலிவெண்பாட்டுக்கள்.

3. இவன் என்பது இவள் என்றும், ஆயினுன் என்பது ஆயினுள் என்றுமிருத்தல்வேண்டும்; இது பெண்பாற் கைக்கிளையாகலின்.

4. இன்னோரன்ன—இவைபோன்றன. என்றது அகத்திணைக் கைக்கிளையில் இவைபோலுஞ் செய்யுள்கள் வருதலை.

வலும் ஊடலுங் காரணமாக அன்பிலனென்று இல்லது சொல் லினமையின் அவை [1] ஒருதலை யன்பாகாவென்பது. மற்று,

"என்னே,
புற்கை யுண்டும் பெருந்தோ ளன்னே
.....
உமணர் வெருஉந் துறையன் னன்னனே." (புறம். அச)

என்னும் புறநானூற்றுப் பாட்டும் பெண்பாற் கைக்கிளையாத லின். அதனை ஆசிரியத்தான் வாராதென்றதென்னையெனின்,—

"ஒத்தவை யெல்லாம் வெண்பா யாப்பின." (சூஉ0)

என்புழி, சிறுபான்மை கலிவி கூற்றுகியே வருவன அமையு மென்று போதந்தாமாகலின் அதுவே பெருவிதியாகாதென்பது.

இனிக் கைக்கிளை வருமாறு:—

"திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடு
மிருநிலஞ் சேவடியுந் தோயு—மரிபரந்த
போகிய முண்கணு மிமைக்கு
மாகு மற்றிவ ளகலிடத் தணங்கே." (பு. வெ. கக—ங)

இது, நெஞ்சிற்கு உரைத்தது [2] [எனத்] தலைமகன் சொல் லினது. [3] நற்காமமன்றுமாகலின், [4] இக்கருத்தினனே இதனைப் புறத்திணையுட் கொண்டாருங் [5] கைக்கிளைப் படலத்து,

"நெஞ்சிற் குரைத்தலுங் கேட்போ ரின்றி
யந்தர மருங்கிற் கூறலு மல்லது
சொல்லுங் கேட்டலு மில்லை யாக
வகத்திணை மருங்கி னிவகை யாலு
[6] மிகுத்த லென்ப விவ்வயி னான."

என்றாரெனக் கொள்க.

[7] பாடாண்கைக்கிளைக்கும் ஈண்டே அளவு கூறுகவெனின்,— கலிவெண்பாட்டினைக் கைக்கிளையென்னுமாயினென்றே அது கடா

1. ஒருதலையன்பு—ஒருபக்கத்தன்பு. என்றது ஒருதலைக் காம மாகிய கைக்கிளையை.
2. என என்பது சில பிரதிகளிலில்லை. அதுவே பொருத்தம்
3. நற்காமம்—அன்புடைக் காமம்.
4. இக்கருத்தினனே என்பது வேண்டியதில்லை.
5. இப்படலம் பன்னிரு படலத்திலுள்ளதோ வேறு நூலி லுள்ளதோ என்பது தெரியவில்லை.
6. இவ்வடி சரியோ பிழையோ என்பது ஆராயத்தக்கது.
7. பாடாண் கைக்கிளை கலிவெண்பாட்டில் வரின் அத னளவே அளவென்றபடி.

வாவது. மருட்பாவிற்குக் கைக்கிளைப்பகுதி [1] வரைந்தோதல்வேண் டுவதின்மையின் அதற்கும் [2] இதுவே அளவாமென்பது. [3] ஒழிந்த மருட்பா மூன்றற்கும் உதாரணம் மேற் காட்டுதும். இக்காலத் தார் 'ஏறிய [4] மடற்றிறம்' என்னும் பெருந்திணைப் பொருண் மேலும். 'காமஞ்சாலா விளமையோ' ளை ஒழிந்த மகளிரொடுங் கூட்டியுரைக்குங் [5] கைக்கிளைப் பொருண்மேலுங் கலிவெண்பாட் டெனப் பெயர்கொடுத்துச் செய்யுள் செய்பவால், அவை அவ் வாறு செய்தற்கும் அவை மூப்பதிற்றடியின் இகந்து [6] எத் தனையடியினும் ஏற்குமென்றற்கும் என்னை ஒக்கெனின்,—அவ் வாறு வருமென்பது இந்நூலுட் பெற்றிலமாயினும் இருபதின் சீர்க் கழிநெடிலடியானும் இது பொழுது செய்யுள்செய்யுமாறு போலக் காட்டலான் அமையும். அவை புலனெறி வழக்கிற்குச் சிறந்திலவாகலிற் சிறுபான்மையென்றொழிக. (சுஉ0)

[புறநிலை வாழ்த்து முதலிய மூன்று செய்யுளும் மருட்பாவால் வருமெனல்.]

சளசு. புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறனிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்
வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப.

இது, கைக்கிளை மருட்பாவல்லாத மருட்பாவும் அதுவே போல வெண்பா முதலாக ஆசிரியம் பின்வந்து முடியுமென்று ஈண்டு அவற்றுக்கு இடம்பட்டது கண்டு கூறியவாறு; என்னை?

"மருட்பா வேனை யிருசா ரல்லது
தானிது வென்னுந் தகவிநிலை யின்றே." (நகூஎ)

என்றவழி, ஆசிரியம் முன்னர் நிறீஇப் பின்னர் வெண்பாவினைக் கூறி,

1. கைக்கிளை மருட்பாவுக்குரியதென்பது முன் கூறப்பட் டுள்ளது.
2. இது — ஒருதலைக்காமக் கைக்கிளை. (அகப்புறக் கைக் கிளை.)
3. ஒழிந்த மருட்பா மூன்று—செவியறிவுறூஉ, வாயுறை, புறநிலை.
4. மடற்செய்யுள்.
5. உலாச்செய்யுள்.
6. எத்தனையடியாயினும் என்றிருந்திருத்தல்வேண்டும்.

"வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின."
(சளசு)

என்றமையின். இங்ஙனம் எண்ணப்பட்ட மூன்று பொருட்கும் இலக்கணம் [1] முன்னர்ப் பாவிரியோத்தினுட் கூறியனவற்றுக்கு இன்னவாறு செய்யுள் செய்கவென்றற்கு இது கூறினனென்பது.

இ—ள்: இம்மூன்றும் வெண்பா முன்னும் ஆசிரியம் பின்னுமாய் வரும் என்றவாறு.

'நிறநிலை மூன்று' என்றான், முற்கூறியனவெல்லாம் அகத்திணையாகலின், இவை புறத்திணையுளல்லது வாராவென்றற்கென்பது. 'திண்ணிதிற் றெரியின்' என்பது, இவை மூன்றுங் கைக்கிளை மருட்பாப்போல ஆண்பாற் கைக்கிளையும் பெண்பாற் கைக்கிளையுமாகி அகனும் புறனும்பற்றி வாராது ஒருதலையாகவே புறத்திணையென்று தெரியப்படுவனவென்றவாறு. இதன் பயம்: கைக்கிளை மருட்பாப் புறத்திணையானும் வருமென்பது. 'இயல்' என இருகாற் சொல்லியவதனான், இயற்சீர் வெள்ளடியான் வெண்பா வருதல் சிறந்ததெனவும், அதற்கேற்றவகையான் ஆசிரியம் இயற்சீரான் வருதல் சிறந்ததெனவுங் கொள்க. 'பண்புற முடிதல்' என்பது, மேற் சிறுமைக்கெல்லை கூறுமையின் வெண்பாவிற்கிழிபாகிய எழுசீரன்றி எண்சீரான் வரினும் ஆசிரியத்திற்கிழிபாகிய மூன்றடி வரினும் எருத்தடி குட்டமாகி வரினும் அங்ஙனம் மூன்றடி வந்தவழி வெண்பா நான்குமுதற் பன்னிரண்டளவும் [2] உயர்தலும் என இவையே பண்பெனப்படுவனவென்னவும், அல்லன சிறப்பிலவென்னவுஞ் சொல்லினவாறு. இக்கருத்தினான் வெண்பாவடி [3] வரையிலவாயினும் ஆசிரியவடி மூன்றிகவாவென்பது [4] கைக்கிளைப்படலத்துள்ளுஞ் சொல்லப்பட்டது; என்னை?

"முச்சீ ரெருத்திற் ருகிமுட் டின்றி
யெச்சீ ராஞ மேகாரத் திறுமே."
(கடியநன்னியார்-யா. வி. ப. உஅச)

1. முன்னர்க் கூறியதை சஉஉ-ம் சூத்திரமுதல் சஉசு-ம் சூத்திரவரையு நோக்குக.

2. உயரினும் அவையெல்லாம் எளவும் பாடம். பவானந்தம்பிள்ளை பதிப்பு நோக்குக.

3. வரையறையிலவாயினும் என்பதே சிறப்பாம்.

4. புறப்பொருள் வெண்பாமாலையிற் காணப்படாமையால் வேறு நூல்போலும்.

என்றாராகலின். 'பாவின' என்றதனால், இவ்விருபகுதியுந் [1] தத்தம் பாக்கள் வேறுவேறு பெற நிகழுமென்பது. எனவே, இயற்சீர்வெள்ளடி யாசிரியந்தொடுக்குங்கால்,

"எறும்பி யகளியிற் குறும்பல் சுனைய
வுகிலக்கல் லன்ன பாறை யேறி."
(குறுந். கஉ)

எனப் பாவினை ஒன்றுகத் தொடுத்தாற்போலத் தொடுத்தல் [2] ஈண்டு அமையாதென்றானும். இவை மூன்றற்கும் உதாரணங் காட்டுங்கால் மேற் காட்டாது நின்ற பாடாண்டிணைக் கைக்கிளை மருட்பாவிற்கு உதாரணங் காட்டியே காட்டப்படும். (ககக)

[பரிபாட்டின் அடிக்கு உயர்பும் இழிவும் இவையெனல்]

சஎச. [3] பரிபாட் டெல்லை
நாலீ ரைம்ப துயர்படி யாக
வையைந் தாகு மிழிபடிக் கெல்லை.

இது, பரிபாட்டின்கண் வரும் வெண்பாவிற்கு அளவு கூறுகின்றது.

இ—ள்: பரிபாடற்கு உறுப்பாகிய வெண்பாவுக்கு நானூறடி பெருக்கத்திற்கெல்லையாகவும் பெறும் என்றவாறு.

அவை பரிபாடலுட் கண்டுகொள்க. (கூஉக)

[அளவியலின்வகை மேற் கூறியனவே எனல்]

சஎடு. அளவியல் வகையே யனைவகைப் படுமே.

இது, மேற்கூறிய அளவினை வரையறுக்கின்றது.

இ—ள்: இத்துணையும் அளவியலான் [4] ஒரு கூறே சொல்லப்பட்டது என்றவாறு.

1. தத்தம் பாக்கள் வேறுபெற நிகழுமென்பது வெண்பா வேறுபெறவும் ஆசிரியம் வேறுபெறவுந் நிகழும் என்றபடி. என்றதுபின் "எறும்பி யகளியிற் குறும்பல சுனைய" எனக் காட்டுமாறு, இரண்டடியுங் கலந்துநிற்கத் தொடுக்கப்படாதென்றபடி. "எறும்பி.....சுனைய" என்பது இயற்சீர் வெள்ளடி. ஏனையது ஆசிரியவடி.

2. ஈண்டு—மருட்பாவிற்கு.

3. பரிபாடல்லே எனவும் பாடம்.

4. ஒருகூறு—அடிவரையறையுடையது. அது பாட்டு.

எழுநிலத்தெழுந்த செய்யுள் (சூசுசு) களுள் அடிவரை யறையுடையனவற்றுக்குக் கூறினன் ஆண்டில்லாதன அடி வரை யறையின்றிவரும் இலக்கணத்தவென்பதூஉம் இனிக் கூறுது மென்பதூஉம் இதனது பயம். (சுசுசு)

[அடி வரையறையில்லாத செய்யுள் ஆறெனல்]

சூசுசு. எழுநிலத் தெழுந்த செய்யுட் டெரியி
னடிவரை யில்லன வாறென மொழிப.

மேலைச் சூத்திரத்தான் அளவியல்வகையை வரையறைப் படுத்தான்; அடி வரையறையின்மையும் அளவியலென்பதுங் [2] குறிப்புக்கருதாவிலக்கணமாகிய [3] செய்யுள் கூறினன் இச் சூத் திரத்தானென்பது.

இ—ள்: அகமும் புறமுமாகிய எழுநிலத்துந் தோன்றிய செய்யுளை ஆராயின் அடிவரையின்றி வரும் [4] இலக்கணத்தளவு ஆறும் என்றவாறு.

இதனானே ஆறென்பதூஉம் ஓரளவியலாயிற்று. (சுசுசு)

[அடி வரையறையில்லாத செய்யுட்கள் ஆறும் இவையெனல்]

சூசுஎ. அவைதாம்
நூலி னெ வரையி னெ
நொடியொடு புணர்ந்த பிசியி னெ
வேது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னெ.

1. எழுநிலத்தெழுந்த செய்யுள்களுள் (சூசுசு) அடிவரை யறை உடையவற்றிற்குக் கூறினும், அல்லாதன அடிவரை யறையின்றிவரும் இலக்கணத்தன என்பதூஉம் இனிக் கூறு தும் என்பதூஉம் இதனதுபயம் என்றும் பாடங் காணப்படு கின்றது. அது சிறப்புடையதாதல் காண்க.

2. குறிப்புக்கருதா—குறிப்புக்கருத என்றிருத்தல்வேண்டும். இவ்வாக்கியத்தில் சில சொல் விடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. செய்யுள் கூறினன்—செய்யுளாறெனக் கூறினன் என வும் பாடம்.

4. இலக்கணத்தளவு—இலக்கணத்தன என்றிருத்தல் வேண் டும். அதுவே சூத்திரத்திற்கியைபாம். நச்சினார்க்கினியருரை நோக்குக.

இது, மேற்கூறி நிறுத்த ஆறற்கும் பெயரும் முறையு முணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: அவைதாமென்பது, அடிவரையில்லன ஆறெனப் பட்டவைதாம் என்றவாறு. நூலின்கண்ணவும் உரையின்கண்ண வும், நொடிதன் மாத்திரையாகிய பிசியின்கண்ணவும், ஒரு மொழிக்கேதுவாகிவரும் முதுமொழிக்கண்ணவும், மறைத்துச் சொல்லுஞ் சொல்லாற் கிளந்த மந்திரத்தின்கண்ணவும், சொல்லு கின்ற பொருளை இடைகரந்து சொல்லுங் குறிப்பின்கண்ணவு மென அறுவகைப்படும் என்றவாறு.

அவற்றுக்கிலக்கணம் போக்கிச் [1] சொல்லுதும். நூலின் கண்ணவு [2] மென்றது சூத்திரச் செய்யுளை நோக்கிக் கூறிய வாறு. [3] அதனுள்ளும் [4] அடிவரையுடைய ஆசிரியம்போல் அளவை பெற்று மேலே அடங்குமென்பது. இனி, அச்சூத்திரப் பொரு ளும் உரையின்கண்ணதாகி வருவதூஉம் ஒரு செய்யுளாம். அத னது விகற்பம் முன்னர்க் கூறுதும்.

நொடியொடு புணர்ந்த பிசியும், ஏது நுதலிய முதுமொழி யும், மறைமொழி கிளந்த மந்திரமும், கூற்றிடை வைத்த குறிப்புமென நான்கும் வழக்குமொழியாகியுஞ் செய்யுளாகியும் வருதலின் அவற்றுட் செய்யுளையே கோடற்கு அவற்றுக்கு 'அளவில' என்றனென்பது. இவை இத்துணையெனவே, இது வும் மேலைச் சூத்திரமும் அளவியலே கூறியவாறாயிற்று. இனி, அவைபடும் பகுதி யாவையுங் கூறுகின்றான், 'நொடியொடு புணர்ந்த' என்ற மிகையாமே இதுவன்றி இதுபோல்வது பண் ணத்தியென்பதும் ஒன்று உண்டென்பது கொள்க. அது முன் னர்ச் சொல்லும். (சுசுரு)

1. சொல்லும் என்றிருத்தல்வேண்டும். ஆசிரியனைக் குறித்த தாதலின்.

2. என்ற சூத்திரம் செய்யுளை நோக்கிக் கூறியவாறு என வும் பாடம். அது பொருத்தமில்லை.

3. அதனுள்—சூத்திரச்செய்யுளுள்.

4. வரையறையின்றி ஓரடியாயும் வருதலின் அடிவரை யுடையன என்றார்போலும்.

[நூலாவது இஃதெனல்]

சஎஅ. அவற்றுள்,
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
யுண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே.

இது, நூலினது பொதுவிலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: நூலென்று [1] சொல்லப்பட்டவற்று முன்னும் பின்னும் மாறுபடாது தொகுத்தும் வகுத்தும் பொருள்காட்டி அடங்கி நின்ற பொருள் விரித்துச் சொல்லப்பட்டுப் பருப்பொருட்டாகாது நுண்பொருட்டாகப் பொருள்விளக்கல். அதற்கிலக்கணம் அது என்றவாறு.

இதன் அகலம் [2] உரையிற் கொள்க. (ககூக)

[நூல் நான்கு பகுதிப்படும் எனல்]

சஎக. அதுவே தானு மீரிரு வகைத்தே.

அதன்வகை உணர்த்துகின்றது.

இ—ள்: அந்நூற்குப் பகுதி நான்குவகையாம் என்றவாறு.

அவை முன்னர்ச் சொல்லும். இதனது பயம்:— மேல் 'தொகையினும் வகையினும்' (சஎஅ) என்றதனானே, தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு (கூடுஉ) என்னும் நால்வகை யாப்பிற்கும், தொகையினும் வகையினும் பொருண்மை காட்டுதல் ஒக்குமென [3] அவையிரண்டும் நான்காதலுமுடைய வென்பது. அவை எழுத்து முப்பத்துமூன்றெனத் தொகுத்த வழி, குறிலும் நெடிலும் மெய் இனமுஞ் சார்ந்துவரும் மூன்று மென வகுத்தலும்,

"இரண்டு தகையிட்ட முதலை கிருபஃ
தறுநான் கிறு." (தொ. எழு. கoங)

1. சொல்லப்பட்டவற்று—சொல்லப்படுவது என்றிருத்தல் வேண்டும். (சூத்திரம் நோக்குக) அன்றேல் முடிபு இயைபின்றும். விளக்கல்—விளக்கலுடையது.

2. உரை—சொல். அவ்வச் சொல்லாற் கொள்க என்றபடி.

3. அவை என்றது தொகையையும் வகையையும்.

என வகுத்தலுமென்றுற்போல்வன. உயர்திணை அஃறிணையெனத் தொகுத்து, ஐம்பாலென வகுத்தலும் அது. [1] ஒழிந்த மூவகை நூலிற்கும் இவ்வாறே ஒருவழித் தொகுத்தலும் வகுத்தலுங் கொள்க. (ககூஎ)

[நூலின் பகுதி நான்கும் இவை எனல்]

சஅo. ஒருபொரு ணுதலிய சூத்திரத் தானு
மினமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானு
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானுமென்
றுங்கனி மரபி னியலு மென்ப.

இஃது, அந்நான்கினையும் பெயரும் முறையுமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: நூலுள் ஒரு பொருளையே நுதலிவருவது சூத்திரமெனவும், இனமாகிய பொருளினையே தொகுப்பது ஓத்தெனவும், பலபொருட்கும் பொதுவாகிய இலக்கணங் கூறுவது படலமெனவும், மூன்றுறுப்பினையுடையது பிண்டமெனவுங் கூறிய மரபினுன் இயலும் நூல் என்றவாறு. (ககூஅ)

[சூத்திரமாவது இஃதெனல்]

சஅக. அவற்றுட் சூத்திரந் தானே
யாடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே.

இது, முறையான சூத்திரவிலக்கண முணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேல் ஓதியவற்றுள் ஒருபொருணுதலியவெனப்பட்ட சூத்திரம் பொருள் நுதலுங்கால் ஆடி சிறிதாயினும் அகன்றுபட்ட பொருளை அறிவித்தற்போலத் [2] தேர்தல்வேண்டாமை அவ்வகன்ற பொருள் அடங்குமாற்றுன் அச்செய்யுளுள் தோன்றச்செய்து முடிக்கப்படுவது என்றவாறு. (ககூக)

1. ஒழிந்த மூவகை நூல்—தொகை ஒழிந்த வகை முதலியன. நூல் நான்காவன: தொகுத்துச் செய்தது, வகுத்துச் செய்தது, தொகுத்தும் வகுத்துஞ் செய்தது, மொழிபெயர்த்துச் செய்தது என்பன.

2. தேர்தல் வேண்டாமை—ஆராய்ந்து பொருள் காணுமல்.

[ஒத்தாவது இஃதென்ன்]

சஅஉ. நேரின மணியை நிரல்பட வைத்தாங்
கோரினப் பொருளை யொருவழி வைப்ப
தோத்தென மொழிப வுயர்மொழிப் புலவர்.

இஃது, ஒத்திலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேல் 'இனமொழி கிளந்தவோத்து' என்றன், அங்ஙனம் இனமொழி கிளக்குங்காற் [1] சிதர்ந்துகிடப்பப் பல வோத்தாகச் செய்யாது நேரினமணியை நிரலே வைத்தீற்போல ஓரினப்பொருளையெல்லாம் ஒருவழியே தொகுப்பது ஒத்தாவது என்றவாறு.

[2] 'நேரின்மணி' எனவே, ஒரு சாதியாயினும் தம்மின் ஒத்தனவே கூறல்வேண்டுமென்பதாம். வேற்றுமையோத்தும் வேற்றுமை மயங்கியலும் விளிமரபும் என மூன்றன்பொருளும் வேற்றுமையென ஓரினமென்று ஓரோத்தாக வையாது [3] வேறு வேறு வைக்கப்படுமென்பது. உயர்மொழிப் புலவரென்பது, அங்ஙனம் நூல்செய்தல் உயர்ந்தோர் கடனென்றவாறு. (கஎ0)

[படலம் இதுவெனல்]

சஅஊ. ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
[4] பொதுமொழி தொடரி னதுபடல மாகும்.

இது, மேல் 'பொதுமொழி கிளந்த படலம்' எனப்பட்டதற்கு இலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒருநெறியவன்றிப் பல்வேறு வகைப்பட்ட பொருளெல்லாவற்றிற்கும் வேறுவேறு இலக்கணங் கூற நுதலின் அவற்றுக்குப் பொதுவாகி வருவது படலம் என்றவாறு.

1. சிதர்ந்துகிடப்ப—சிதறிக்கிடப்ப.

2. நேர்—ஒப்பு. தம்மின் ஒத்த என்றபடி.

3. வேறுவேறு வைத்தது தம்மின் ஒவ்வாமைபற்றி என்றபடி.

4. பொதுமொழி தொடரின்—பொதுவானமொழியாய்நின்று தொடர்ந்துவரின். தொடர்தல்—தொடர்புபடுதல். இவ்வாறு உரைப்பர் இளம்பூரணரும். பொருளதிகாரமென்புழிப் பொருள் என்பது அகத்திணை முதலிய நின்பதியற்கும் பொதுவாய் அவ்வவ்வியற்பொருள்களுக்கெல்லாந் தொடர்பாய்நிற்றல் காண்க. ஏனைய அதிகாரங்களுமனைய.

'பொதுமொழி கிளந்த படலம்' என்றவழி, ஒருநெறிப் பொருட்குப் பொதுவாகப்பட்டதனை விலக்கி ஈண்டு விரவிய பொருட்குப் பொதுவாக மொழிவதே படலமென்றுனென்பது; அவை அதிகாரங்களாமெனக் கொள்க. (கஎக)

[பிண்டம் இதுவெனல்]

சஅச. [1] மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்
றோன்றுமொழிப் புலவரது பிண்ட மென்ப.

இது, பிண்டங் கூறுகின்றது; வாளாதே 'மூன்றுறுப் படக்கிய பிண்டம்' என்றன் மேல், ஈண்டுச் சூத்திரமும் ஒத்தும் படலமுங் கூறிய அதிகாரத்தானே அம் மூன்றனையும் அடக்கிநிற்பது பிண்டமென்கின்றுனென்பது.

இ—ள்: அம்மூன்று உறுப்பினையும் அடக்கிவருவது பிண்டம் என்றவாறு.

அம்மூன்றனையும் உறுப்பெனவே, பிண்டமென்பனதாம் [2] உறுப்பினவென்பது பெற்றும். தொல்காப்பியமென்பது, பிண்டம்; அதனுள், எழுத்ததிகாரஞ் சொல்லதிகாரம் பொருளதிகாரமென்பன படலமெனப்படும்; [3] அவற்றுள் ஒத்துஞ் சூத்திரமும் [4] ஒழிந்த இருகூறுமெனப்படும்.

'தோன்றுமொழிப் புலவரது பிண்டமென்ப' என்றதனால், பிண்டத்தினையும் அடக்கிநிற்பது வேறு பிண்டமுளதென்பது. அஃது முதனூலாகிய அகத்தியமேபோலும்; என்னை? அஃது இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழென்னு மூன்று பிண்டத்தினையும் அடக்கிநிற்றலின். (கஎஉ)

1. சூத்திரமென்னும் ஒருறுப்பு அடக்கிய பிண்டம் இறையனார் களவியல், சூத்திரமும் ஒத்தும் என்னும் இரண்டுறுப்பும் அடக்கிய பிண்டம் பன்னிருபடலம், மூன்று உறுப்பும் அடக்கிய பிண்டம் தொல்காப்பியம் என்பர் நச்சினார்க்கினியர்.

2. உறுப்பின—உறுப்பையுடையன.

3. அவற்றுள்—அவ்வதிகாரங்களுள்.

4. ஒழிந்த—படல மொழிந்த. ஒத்துஞ் சூத்திரமும் படும் என இயைக்க.

[உரைவகை நான்காம் எனல்]

சஅநு. பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப.

இஃது, உரையாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: உரைப்பகுதி வழக்கு இந்நான்காகுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

'பாட்டிடை வைத்த குறிப்பி னானும்' என்பது, ஒரு பாட்டினை இடையிடைகொண்டு நிற்குங் [1] குறிப்பினன் வருவன உரையெனப்படும்; என்னை? பாட்டு வருவது சிறுபான்மையாகின். அவை: தகடூர் யாத்திரை போல்வன.

மற்று, பிறபாடை விரவியும் வருவனவோவெனின்,—அவற்றுள்ளுந் தமிழுரையாயின எல்லாம் 'பாட்டிடை வைத்த குறிப்பு' என ஈண்டடங்கும்; பிறபாடைக்காயின் ஈண்டு ஆராய்ச்சியின்றென்பது.

[2] 'பாவின் றெழுந்த கிளவி யானும்.'

என்பது, பாட்டின்றிச் சூத்திரத்திற்குப் பொருளெழுதுவன போல்வன. சூத்திரம் பாட்டெனப்படாவோவெனின்,—படா; பாட்டும் உரையும் நூலுமென (நூகூக) வேறோதினமையின்; [3] அல்லாத சூத்திரத்தாற் சொல்லாத பொருளினை உரையாற் சொல்லித் தொடர்புபடுப்பது பாட்டிடை வைத்த குறிப்பாவது; இஃது அன்னதன்று, வேறொருவன் சூத்திரத்தாற் கூறிய

1. குறிப்பு—நூல் செய்வோனது குறிப்பு. குறிப்பு—எண்ணம்; கருத்து.

2. பாவின்றெழுந்த கிளவியானும் என்பதற்கு பாக்களியாத்தோற்றிய சொல்வகையானும் என்பது இளம்பூரணருரை. இது பொருத்தம்; முன்னளிலும் தமிழில் வசனநூல்களிருந்தன என்பது இவ்வுரையாலறியக்கிடத்தலின். பின் அவர் கூறும் விரிவுரைகளாலே இதனை நன்கு அறியலாம். மற்றையோருரை பின்னுல் எழுந்த நூல்கள் நோக்கிக் கூறப்பட்டனவாதலின் அவை பொருந்தா.

3. அல்லாத—அல்லதூஉம் என்றிருப்பது நலம். நச்சினார்க்கினியரும் அன்றியும் என்பர்.

பொருளையே மற்றொருவன் கூறுகின்றனவாலெனின்பது. ஒழிந்த பாட்டிற்கும் இவ்வாறே பொருளெழுதின் அஃதொக்கும். அவை பாரதம் பருப்பதம் முதலியன.

'பொருண்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்.'

என்பது, [1] ஒருபொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல்லுவன. அவை: [2] ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச் சென்று இன்னவாறு செய்தனவென்று அவற்றுக் கியையாப் பொருள்படத் தொடர்நிலையான் ஒருவனுரை ஒருவன் கற்று வரலாற்றுமுறையான் வருகின்றன.

பொருளொடு புணர்ந்த நகைமொழியானும் என்பது, பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகுதற்கேதுவாகுந் தொடர்நிலை; அதுவும் உரையெனப்படும்; அவையாவன, சிறுகுரீஇயுரையும், தந்திரவாக்கியமும் போல்வனவெனக் கொள்க. இவற்றுட் சொல்லப்படும் பொருள் பொய்யெனப்படாது [3] உலகியலாகிய நகை தோற்றுமென்பது. இவ்வகையான் உரை நான்கெனப்படுமென்றவாறு. 'உரைநடை' என்னுது 'வகை' என்றதனான் இவ்வுரைப்பகுதி [4] பிறிதும் ஒன்றுண்டு; அது மரபியலுட் பகுத்துச் சொல்லும். (கஎந)

[அந்நான்கும் இரண்டாம் எனல்]

சஅசு. அதுவே தானு மோரிரு வகைத்தே.

இஃது, அவற்றின் தொகை கூறுகின்றது.

இ—ள்: அந்நான்கனுள், முதலன இரண்டும் ஒன்றுகவும், ஏனைய இரண்டும் ஒன்றுகவும் தொகுக்கப்படும் அவ்வாற்றுப் பயன் கொள்ளுங்கால் என்றவாறு. அவையாவன கூறுகின்றன். (கஎச)

1. பொருள்—உண்மை.

2. யானையுங் குதிரையும் என்பர் நச்சினார்க்கினியர். அவற்றுக்கு இயையாப் பொருள் என்றது, அஃறிணைப் பொருளாகிய அவைகளுக்குப் பொருந்தாத பொருள். நட்பாடலும் செய்தலும் அவற்றுக்கியையாத பொருள்.

3. உலகியலாகிய—உலகியலாகி என்றிருப்பது நலம்.

4. பிறிது என்றது அகலவுரையை.

[உரைப்பகுதி இரண்டனுள் ஒரு பகுதி இவர்க்குரித்து; ஒருபகுதி இவர்க்குரித்து எனல்]

சஅஎ. ஒன்றே மற்றுஞ் செவிலிக் குரித்தே
யொன்றே யார்க்கும் வரைநிலை யின்றே.

இஃது, அவற்றது இயல்புணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இதுவும் [1]மேனின்ற அதிகாரத்தான் இறுதி நின்ற இரண்டன் தொகுதியாகிய ஒன்று செவிலிக்கே உரித்து எனவும், ஒழிந்த இரண்டனுளுகிய ஒன்று வரைவின்றி எல் லார்க்கும் உரித்து எனவுங் கூறியவாறு.

தலைமகளை வற்புறுத்துஞ் செவிலியர் புணர்ந்துரைத்து நகு வித்துப் பொழுது போக்குதற்குரியரென்பது இதன் கருத்து. இக்கருத்தேதபற்றிப் பிற சான்றோரும்,

"செம்முது செவிலியர் பொய்ந்நொடி பகர."

என்றுரென்பது; பிறவும் அன்ன.

'மற்றும்' என்றதனான், [2]அவையன்றி வருகின்ற பிசி யுஞ் செவிலியர்க்கு உரித்தென்பது கொள்க. இனி, 'பாட்டிடை வைத்த குறிப்பும் பாவின்றெழுந்த கிளவியும்' (சஅடு) யாருக்கும் வரைவின்றி வருமாறு அவ்வச் செய்யுளுட் காணப்படும். (கஎடு)

[பிசி இரண்டு வகைப்படும் எனல்]

சஅஅ. ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந்
தோன்றுவது கிளந்த துணிவி னனு
மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே.

இது, முறையானே பிசி இரண்டெனப்படுமென்கின்றது.

இ—ள்: ஒப்பொடு புணர்ந்த வுவமமென்பது, தன்கட் கிடந்த ஒப்புமைக் குணத்தோடு பொருந்திவரும் உவமப் பொரு ளானும், மற்று இனி, ஒன்று சொல்ல ஒன்று தோன்றுந் துணிவிற்றாகச் சொல்லுஞ் சொல்லானுமென்று இவ்விரு கூற்ற தாகும் பிசி கூறுபடும் நிலைமை என்றவாறு.

1. மேனின்ற அதிகாரத்தான் என்றது, மேல் நான்கனுள் இறுதி நின்ற இரண்டுமே இச்சூத்திரத்தோடு தொடர்புபட்டு அதிகரித்து நின்றமையான் என்றபடி.

2. அவையன்றி—பொய்ம்மொழியும் நகைமொழியுமல்லை அவை இரண்டுமன்றி,

'அவை பிறைகவ்வி மலைநடக்கும்' என்பது, ஒப்பொடு புணர்ந்த உவமம்; இஃது யானையென்றுவது.

[1]"முத்துப்போற் பூத்து முதிரிற் [2]களாவண்ண
நெய்த்தோர் குருதி நிறங்கொண்டு—வித்துநிர்த்து."

என்பதுமது; இது கழுகின்மேற்று.

"நீராடான் [3]பார்ப்பா [4]னிறஞ்செய்யா [5]னீராடி
ஓராடு நீரிற்காக் கை."

என்பது, 'தோன்றுவது கிளந்த துணிவினுள்' வந்தது, இது நெருப்பென்றுவது. 'வகைநிலை' என்ற மிகையான், இவையுஞ் செவிலிக்குரித்தென்பது கொள்க. (கஎசு)

[முதுமொழி இதுவெனல்]

சஅகூ. நுண்மையுஞ் சுருக்கமு [6]மொளியுடை மையு
மெண்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வருஉ
மேது நுதலிய முதுமொழி யென்ப.

இது, முதுமொழியுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: கூரிதாய்ச் சுருங்கி விழுமிதாயெளிதாகி இயற்றப் பட்டுக் குறித்த பொருளை முடித்தற்கு வருமாயின், அங்ஙனம் [7]வந்ததனைப் பொருண்முடித்தற்குக் காரணமாகிய பொருளினைக் கருதுவது முதுமொழியென்ப புலவர் என்றவாறு.

1. முத்துப்போலப் பூத்துக் காய்முதிரிற் களாவின்காய் நிறத்தையும் கனியாய் முதிரின் இரத்தநிறத்தையுங் கொண்டு. முகிழிற் கிளிவண்ணம் எனவும் பாடம். முகிழ்—மூழ் என வழங்கும். காய் முதிரும்பொழுது மூழ் நீலமும் ஏனைப்பகுதி சிவப்புமாய் இருக்கும் என்பது கருத்து.

2. களா—களாவின்காய்.

3. பார்ப்பான்—பிராமணன்.

4. நிறஞ்செய்யான்—நிறஞ்சிவந்தவன்.

5. நீராடின் காக்கை போல்வான் என்க. இது நெருப்பு.

6. ஒளியுமுடைமையுமென்மையும் எனவும் பாடம். அது பொருளுக்கியைபுடைத்தன்று. ஆதலிற் பொருந்தாது.

7. வந்ததனை முதுமொழியென்ப என இயைக்க. கருது வது முதுமொழி கருதுவதாகிய முதுமொழியென்றியையும். கருதுவதாகிய என்றிருப்பது நலம். நச்சினார்க்கினியரும் இப் பொருள்படக் கூறுமாறறிக.

"உழுத வுழுத்தஞ்செய் யூர்க்கன்று மேயக்
கழுதை செவியரிந் தற்ரூல்—வழுதியைக்
[1] கண்டன கண்க ளிருப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னே பசப்பு." (பழமொழி)

என்றவழி, மற்று வழுதியைக்கண்ட கண் இருப்பத் தோள் பசந்தன என்றக்கால், [2] ஒன்றன் விஞைப்பயன் ஒன்று துகர்ந்த தென்புழிக் குறித்த பொருள் இயைபின்மை கூறுதலாயிற்று. அதனைச், சொற்ரொடர் இனிது விளக்கிற்றன்ரூயினும் முற் கூறிய முதுமொழி முடித்ததென்பது; என்னை? அதன்கண்ணே அது முடித்தற்கேதுவாகிய இயைபின்மை கிடந்தமையினென் பது. இது [3] பருப்பொருட்டன்றி நுண்ணிதாகிச் சொற்சுருக்க முடைத்தாய் விழுமிதாகி எளிதிற் பொருடோன்றியவாறு கண்டு கொள்க. எனவே, இதுவும் இங்ஙாற்பகுதித்தென்றவாறு. (களெ)

[மந்திரம் இதுவெனல்]

சகூ०. நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப.

இது, மந்திரச்செய்பு ளுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: நிறைமொழி மாந்தரென்பது, சொல்லிய சொல் லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் [4] பயக்கச்சொல் லும் ஆற்றலுடையராவார் ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத் தார்க்குப் புலனுகாமன் மறைத்துச்சொல்லுஞ் சொற்ரொடரெல் லாம் மந்திரமெனப்படும் என்றவாறு.

அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க. 'தானே' என்று பிரித் தான், இவை தமிழ் மந்திரமென்றற்கும், பாட்டாகி அங்கத

1. கண்டநங் கருங்கண்ணீ ருகுப்ப எனவும் பாடம். நச்சி னர்க்கினியருரை நோக்குக.

2. ஒன்று=கண். ஒன்று=தோள். கண் அனுபவிக்கவேண் டிய பயனைத் தோள் நுகர்ந்தது பொருத்தமில்லாமையாகும். அப்பொருத்தமில்லாமையை, 'உழுத்தஞ் செய்யைக் கன்று மேய அதன் செவியையரியாமல் கழுதை செவியை யரிந்ததுபோலும்' என்னும் முதுமொழி விளக்கி முடித்துநிற்றலின் முதுமொழி முடித்தது என்ரூர்.

3. பருப்பொருள் — தூலப்பொருள். நுண்ணிதல்லாதது.

4. பயக்க—பயன்பட.

மெனப்படுவனவும் உள, [1] அவை நீக்குதற்குமென உணர்க. அவை:—

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
வந்தண் பொதியி லகத்தியனு ராணையாற்
செந்தமிழே தீர்க்க சுவா."

எனவும்,

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—யரணிய
லானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோட
னனந்தஞ் சேர்க சுவா."

எனவும், இவை தெற்கண் [2]வாயில் திறவாத பட்டிமண்டபத் தார்பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் [3][ஒருவன்] சாவவும் பாடிய [4] மந்திரம் அங்கதப்பாட்டாயின. மேல் 'பாட்டுரை நூல்' (கூகூ) என்புழி அங்கதமென்ரோதினுன் இன்ன மந்திரத்தை. இஃது, ஒருவனை இன்னவாற்றுற் பெரும்பான்மையுஞ் சபித் தற்பொருட்டாகலின் அப்பெயர்த்தாயிற்று. இக்கருத்தேபற்றிப் பிறரும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." (குறள். உஅ)

என்ரூரென்க. அங்கதப்பாட்டாயவழி அவற்றுக்கு அளவை,

"அங்கதப் பாட்டவற் றளவோ டொக்கும்." (சளக)

என மேற்கூறினுனென்பது. (களஅ)

1. அவை—அவ்வங்கதம்.

2. வாயில் திறவாகப் பட்டிமண்டபம் என்றும் பாடம். அது பொருத்தமில்லை. வாயில் திறவாத என்பது நச்சினர்க் கினியருரையினும் உள்ளது. பட்டிமண்டபம்—கல்வி பயிலு மண்டபம்.

3. ஒருவன் என்பது மீளவும் எழுதப்பட்டது. ஒருவன் கெடவும் வாழவும் என்பது நச்சினர்க்கினியருரை. நாடத்துக் குயக்கொண்டானைச் சாகப் பாடிய அங்கதவெண்பா என்று முன்னதற்கும், குயக்கொண்டான் பிழைக்கப் பாடிய அங்கத வெண்பா என்று பின்னதற்கும் தலைக் குறிப்புக்களும், 'குயக் கோடன்' குயக்கொண்டான் என மூலபாடமும் தமிழ் நாவ லர் சரிதையிற் காணப்படுகின்றன.

4. சுவாகாஎன்னவும் பாடம். இது வடமொழி மந்திரங்களிறுதி யினும் வருகின்றது. இது சத்தகோடி மந்திரங்களுளொன்று.

[குறிப்புமொழி இதுவெனல்]

சகூக. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணரா தாகிப்
பொருட்புறத் ததுவே குறிப்புமொழி யென்ப.

இது, முறையானே 'கூற்றிடைவைத்த குறிப்புணர்த்துதல்' தூதலிற்று.

இ—ள்: எழுத்து முடிந்தவாற்றானும், சொல் தொடர்ந்த வாற்றானும், சொற்படு பொருளானும், செவ்வன் பொருளறிய லாகாமையின், எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராது பொருட் குப் புறத்தே பொருளுடைத்தாய் நிற்பது குறிப்பாவது என்ற வாறு.

இதனைப் 'பாட்டுரை நூல்' (நூகூக) என்றவழி, [1] 'வாய் மொழி' என்றோதினான், கவியாற் பொருள் தோன்றுது பின் னர் இன்னது இதுவெனச் சொல்லி உணர்த்தப்படுதலின்.

இனி, அதனை இதன்தொகைச் சூத்திரத்துக் 'கூற்றிடை வைத்த குறிப்பு' (சஎஎ) என்று ஓதினான் பாட்டிடைப்படு பொருள் பிறிதாகி அதனிடையே குறித்துக்கொண்டுணரினல் லது [2] மெய்ப்படாதென்றற்கென்பது. பிறர் அவற்றைப் [3] பொரு ளிசையென்று சொல்லுப.

"குடத்தகிலியர் செல்வாயிற் கொம்பெழுந்தார் கையி
னடக்கிய மூக்கின ராம்."

என வரும். இதனுட் குடமே தலையாகப் பிறந்தாரெனவும், கொம் பெழுந்த வாயினரெனவும், கையுட்கொண்ட மூக்கினரெனவும் கூறியக்கால் எழுத்துஞ் சொல்லும் பொருளும் [4] இயல்பிலவாத லுங் குறிப்பினான் அதனைக் குஞ்சரமென்று கொண்டவாறுங் கண்டுகொள்க. பிறவும் அன்ன.

1. வாய்மொழி—குறித்த பொருள் பாட்டாற்றோன்றுது வாயாற் சொல்லி உணர்த்தப்படுவது.

2. மெய்ப்படாமை—தோன்றுமை.

3. பொருளிசை—சொற்பொருளால் வேறொரு பொருள் தோன்றுவதுபோலும். பிறரென்றது யாரையென்பது புலப்பட வில்லை.

4. இயல்பின்மை—பொருந்துதலின்மை. இயல்பு—இயலல். இயைபின்மை என்று மிருந்திருக்கலாம்.

மற்றிது பிரியெனப்படாதோவெனின்,—இது பாட்டு வடி விற்றுகலின் அற்றன்றென்பது; அஃதேல், பாட்டெனப்படாதோ வெனின்,—குறித்த பொருண் [1] முடிய நாட்டாமையின் யாப் பழிந்து, 'நாற்சொலியலான் யாப்புவழிப்படாமை'(நூகூஉ)யின் மரபும் அழிந்து, பிறவுறுப்புப் பலவுங் [2] கொண்டமையிற் பாட் டெனவும் படாதென்பது. இஃது, 'எழுத்து முதலாக வீண்டிய வடி' (நூகூ೦) யெனப்படாமையின் இதனையும் அடிவரையில்லன வற்றொடு ஒதினானென்பது. அல்லாதார் குறிப்பிசை வந்த செய்யு ளெல்லாங் குறிப்பெனப்படுமென்ப. அங்ஙனங் கூறிற் [3] குறிப் பிசையுடைய [4] பாட்டினுள் வாராவாகிய செல்லுமென மறுக்க. (நூ೫கூ)

[பண்ணத்திச் செய்யுள் இதுவெனல்]

சகூஉ. பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டி னியல பண்ணத்தி யியல்பே.

இது, பண்ணத்தி கூறுகின்றது.

இ—ள்: பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும்போலச் செய்யப்படுவன பண் ணத்தி என்றவாறு.

[5] மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தியென்ப. இஃது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப்

1. முடிய நாட்டாமை என்னூர்; பாட்டாற் பொருள் தோன் றுமைபற்றி.

2. அழிந்து கொண்டமையிற் பாட்டெனப்படாவாயிற்று என இயைக்க. பிறவுங் குறைதலின் என்று நச்சினார்க்கினியர் கூறலானே இவ்வாக்கியத்திற் பிழையுண்டோ என்பது ஆரா யத்தக்கது.

3. குறிப்பிசையுடைய—குறிப்பிசையுடைய செய்யுட்கள்.

4. பாட்டு என்றது "பாட்டுரை நூலே" என்ற சூத் திரத்து முதலிற் கூறிய பாட்டை. பாட்டிற் குறிப்பிசையும் அருகிவருமென்பதை நூகச-ம் சூத்திர உரையுட் காண்க. பாட்டு அடிவரையறையுடையன; குறிப்புமொழி அடிவரையுட்படாதன. ஆதலிற் குறிப்பிசையுடையன பாட்டினுள் வாரா என்றுகும்படி கருத்துச்செல்லும் என்றபடி.

5. மெய்வழக்கல்லாதனவற்றைப் பண்ணத்தி என்று வழங் கல்போல இதனையும் பண்ணத்தி என்று வழங்குவர் என்பது கருத்து.

பண்ணத்தியென்பவென்பது. அவையாவன :—நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதேபோலப் பாட்டென்னுராயினர் நோக்கு முதலாயின உறுப்பின்மையினென்பது. அவை (சூசரு) வல்லார்வாய்க் கேட்டுணர்க. (கஅ0)

[பண்ணத்தி பிசியோடொக்குமெனல்]

சகூகூ. அதுவே தானும் பிசியொடு மானும்.

இதுவும் அது.

இ—ள்: மேற் கூறப்பட்ட பண்ணத்தி பிசியோடொக்கும் என்றவாறு.

அதனை ஒத்தலென்பது, அதுவுஞ் செவிலிக்குரித்தென்றவாறு. 'பிசியோடும்' என்ற உம்மையால்,

"பொருளொடு புணராப் பொய்ம்மொழி யோடும்
பொருளொடு புணர்ந்த நகையோடும்." (சஅரு)

ஒக்குமென்றுணர்க. 'தானும்' என்ற மிகையாற் பாட்டுமடை வகைக் கூத்திற்கே உரித்தென்பது கொள்க. (கஅக)

[பண்ணத்தியின் அடியின் உயர்ந்த எல்லை இதுவெனல்]

சகூசு. அடிநிமிர் கிளவி யீரா ருகும்.

இதுவும் அது.

இ—ள்: அப்பண்ணத்தியின் அடிப் பெருக்கங் கிளக்குங் காற் பன்னிரண்டாம் என்றவாறு.

'ஆகும்' என்றதனாற் சிறுபான்மை அப்பன்னிரண்டடியின் எறியும் வரப்பெறுமென்பது. 'ஈராறுகும்' என்றதனால், இது நெடுவெண்பாட்டாகி வருமெனவும், அதுபோல ஆறடியின் இழிந்து வாராதெனவுங் கொள்க. (கஅஉ)

[அது கூறிய அளவின் மிகுந்தும் வருமெனல்]

[1]சகூரு. அடியிகந்து வரினுங் கடிவரை யின்றே.

இதுவும் அது.

1. இச்சூத்திரத்திற்கு இளம்பூரணர் பன்னிரண்டடியின் மிக்கு வரினும் என்பர். அது கொள்ளத்தக்கது இலக்கியங் காணுமற் பேராசிரியர் இவ்வாறு பொருளுரைத்தது பொருந்துமோ என்பது ஆராயத்தக்கது.

இ—ள்: அது முழுதும் அடியாகி வாராது இடையிடை ஒரோவடி பெற்று அல்லுழியெல்லாம் பரந்துபட்டு வரவும் பெறும் என்றவாறு.

அவை, முற்காலத்துள்ளார் செய்யுளுட் காணுமையிற் காட்டாமாயினும். இக்காலத்துள்ளனவேற் கண்டுகொள்க. இலக்கணம் உண்மையின் இலக்கியங் காணுமாயினும் அமையுமென்பது. (கஅங)

[அளவியற் பகுதி இரண்டேயாமெனல்]

சகூக. கிளரியல் வகையிற் கிளந்தன தெரியி
னளவியல் வகையே யனைவகைப் படுமே.

இதுவும் மேலவற்றுக்கெல்லாம் புறனடை.

இ—ள்: எடுத்தோதிய வகையாற் சொல்லியன ஆராயின் அளவியற்பகுதி அக்கூற்றதாம் என்றவாறு.

எடுத்தோதியவகையா [1]னென்பது, நூலும் உரையும் நன்னூன்கெனவும், பிசி இரண்டெனவும், முதுமொழியும் மந்திரமும் கூற்றிடைவைத்த குறிப்பும் ஒரோவொன்றெனவுங் கூறிவந்தவகையான் அவற்றை இனைத்தென்றெண்ணி அளந்தபகுதியும் அளவியலேயாமாகலின் அவ்வளவியல் அடி வரையறை கூறியவாற்றானும் அடி வரையறையிலவற்றுக்குக் கூறியவாற்றானும் இருவகைப்படும் [2]அளவியல் என்றவாறு. (கஅச)

[திணையாவது இதுவெனல்]

சகூட. கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
முற்கிளந் தனவே முறைநெறி வகையின்.

இது, பதின்மூன்றும் முறைமைக்கணின்ற திணையுறுப் புணர்த்து (நுகஙு) கின்றது.

இ—ள்: கைக்கிளைமுதல் பெருந்திணையிறுவாய் எழும் முன்னர்க் கிளக்கப்பட்டன என்றவாறு.

'முறைநெறி வகையின்' என்பது, அவற்றுக்கு முறைமையாற் புறமெனப்பட்ட வெட்சிமுதல் பாடாண்பகுதியீறுகிய எழு

1. என்பது, என்றவாறு என முடியும்.
2. அளவியல் என்றது வேண்டியதில்லை; மிகையாதலின்.

பகுதியோடுமென்றவாறு. எனவே, [1] அவற்றுக்குப் பொதுவாகிய முறையாற் கரந்தையுள்ளிட்டுப் பதிணைந்து திணையுள் ஒன்று செய்யுட்குறுப்பாகி வரல்வேண்டுமெனவும், முன்னேதியவாறே கொள்ளப்படுமெனவுஞ் சொல்லினுமாம்; இது சொல்லாக்கால் அவை வரினும் வரும், வராதொழியவும்பெறுமென்பது படுமென்பது. இது மேல்வருகின்ற கைகோண் முதலியனவற்றுக்கும் ஒக்கும். (கஅரு)

[கைகோளுட் களவாவது இதுவெனல்]

சகூஅ. காமப் புணர்ச்சியு மிடந்தலைப் பாடும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றுங்கநால் வகையினு மடைந்த சார்பொடு
மறையென மொழிதன் மறையோ ராறே.

[2] களவு கற்பென்பன காமத்திணையின் ஒழுகலான் ஆண்டுப் பரந்துபட்டனவெல்லாந் தொகுத்துக் கூறுகின்றுன், அவை செய்யுட்குறுப்பாயடங்கலின். அவற்றுள் இது களவென்னும் கைகோளுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: [3] காமப்புணர்ச்சியும், அது நிகழ்ந்தபின்னர் இடந்தலைப்பாடும், அதற்குப்பின்னர்ப் பாங்கற்குச் சொல்லி அவனுற் கூடுதலும், அதன்பின்னர்த் தோழியைப் பின்னின்று குறை முடித்துக் கோடலுமென அந்நாற்பகுதிக்கண்ணும் பொருந்திய சார்பினுற் களவொழுக்கம் இதுவென்று கருதுமாற்றுற் செய்யுள் செய்தல் கந்திருவவழக்கம் என்றவாறு.

கந்திருவவழக்கம் மறையோரொழுகிய நெறியதுவாகலான் 'மறையோராறு' என்றுனென்பது. எனவென்பது, விணையெச்சம். எனவே, பாங்கனுந் தோழியும் உணர்ந்தவழியும் அது மறையோர்வழித்தென்றவாறு. காமப்புணர்ச்சி நிகழ்ந்தன்றி

1. அவற்றுக்குப்பொது—அகத்திணைக்கும் புறத்திணைக்கும் கரந்தை பொதுவாகலிற் பொதுவியற்கரந்தை எனப்படும். நச்சரும் இவ்வாறு கூறல் காண்க. தொல்-புறத்திணையியல் நூ-ம் சூத்திரஉரை நோக்குக.

2. களவு கற்பென்பனவாகிய காம ஒழுக்கத்தின்கண் ஒழுகலான் என்க. களவு கற்பென்பன காமத்திணையின் ஒழுகலாறுகலான் என்றிருத்தல்வேண்டும். இது சிதைத்து எழுதப்பட்டது.

3. காமப்புணர்ச்சி—இயற்கைப் புணர்ச்சி.

இடந்தலைப்பாடு நிகழாதெனவும், அவ்விடந்தலைப்பாடு [1] பிற்பயத்தலிதென்பது அவள் ஆயத்தோடுங் கூடிய கூட்டத்தான் அறிந்த தலைமகன் பாங்கனை உணர்த்தி அவனுற் குறை முடித்துக் கோடலும், தன்வயிற் பாங்கன் அவள்வயிற் பாங்கு செய்யாகலின் அதன்பின்னர்த் தோழியாற் குறைமுடித்துக் கோடலுமென இந்நான்கும் முறையான் நிகழுங் களவொழுக்கமென்றவாறு.

"வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலித
லாக்கஞ் செப்ப னுணுவரை யிறத்த
னேக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை."

என்பனவுங் கைகோளாகாவோவெனின்,—ஆகா; கைகோளென்பது ஒழுகலாறுகலான். அவை அவற்றுட் பிறந்த உள்ள நிகழ்ச்சி ஒன்றிரண்டினிற் சிறந்து பெருகியக்கால் அவ்வப் பகுதியாமெனக் கொள்க.

மற்றுக் களவியலுள்,

"ஆங்ஙனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்கி னேரிற் குறிதலைப் பெயலும்
பாங்கினன் றமியோ ளிடந்தலைப் படலும்."

(இறையனர்—கூ)

எனப் பாங்கற்கூட்டம் முற் கூறியதாலெனின்,—இது கைகோள் கூறிய இடமன்மையின் முற்கூறினும் அமையுமென்பது.

மற்று; இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகனைப் பாங்கன்கண்டு இவ்வேறுபாடு எற்றினுலுயிற்றென்று வினவுமன்றே? அதனுற் பாங்கற்கூட்டம் நிகழ்ந்தபின்னரன்றி இடந்தலைப்பாடு நிகழாதாம் பிறவெனின்,—அற்றன்று; யாமோர் கூட்டம் உலகியலாதலான் இல்லதன்றுமாகவே உலகத்தார் நிறையுடையாராகி மறைவெளிப்படாமல் ஒழுகுவாரும் மறைவெளிப்படுத்து விளம்பும் பாங்கனையுடையாருமில்லாதாருமெனப் பலவகையராதலின் வினுதல் ஒருதலையன்றென்பது; அல்லதூஉம், தன்

1. பிறர் பயத்தல் என்பது முற்பாடம். அது பிற்பயத்தல் என்று காணப்படுகின்றது. அதுவே பொருத்தம். ஏனெனின்? ஆயத்தோடு கூடி நிற்றலின், அவளே இடந்தலைப்பாட்டுக் கூடல் பின் அரி தென்றுணர்ந்தா னுதலின். S. கனகசபாபதிப்பிள்ளை பதிப்பிலும் அவ்வாறு உள்ளது.

இடந்தலைப்பாடு [1] நிகழுமதானே துணை வேண்டுமென்பது; என்னை? துணையின்றி நிகழுங் களவு சிறப்புடைத்தாகலானும் பாங்கன் கழறுமென்று அஞ்சி அவனை முந்துற மறைத்தொழுகு மாகலானுமென்பது. களவொழுக்கமெல்லாம் இந் நான்குவகை யானும் அடங்கும். அவற்றுக்குச் செய்யுள்,

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோ நீயறியும் பூவே." (குறுந். உ)

என்னும் பாட்டு, இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்ந்த செய்யுள்.

"சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழதின்
றிருமுக மிறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமங் கைம்மிகிற் றுங்குத லெளிதோ
கொடுங்கே ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிலீ யாடிய புகர்முக வேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி யிவந்தநின்
கண்ணே கதவ வல்ல நண்ணூ
ராண்டலை மதில ராகவு முரசுகொண்
டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத் தோளு முடையவா ணெஞ்சே."
(நற்றிணை—நகூ)

என்பது, இடந்தலைப்பாடு.

"இடிக்குங் கேளிர் துஞ்சுறை யாக
நிறுக்க லாற்றினே நன்றுமற் றில்ல
ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி னூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப்
பரந்தன் றிந்நோய் நொண்டுகொளற் கரிதே." (குறு. நுஅ)

என்பது, பாங்கற் கூட்டத்துக்கண் வந்தது.

"தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகி
நண்டும் வருகுவள் போலு மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை
செவ்வெரி நுழுழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னேளே." (குறு. உஉஉ)

என்பது, தோழியிற் கூட்டம். பிறவும் அன்ன. (கஅசு)

1. நிகழுமதானே—நிகழாதாயினே என்றிருத்தல்வேண்டும். என்னை துணைவேண்டற்குக் காரணமதுவாதலின். நச்சினார்க் கினியருரை நோக்குக.

[கற்பாவது இதுவெனல்]

சகூசு. [1] மறைவெளிப் படுதலுந் [2] தமரிற் பெறுதலு
மிவைமுத லாகிய வியனெறி திரியாது
[3] மலிவும் புலவியு மூடலு [4] முணர்வும்
[5] பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.

இது, கற்பென்னுங் கைகோளுணர்த்துத னுதலிற்று.

இ—ள்: மறைந்தொழுகும் ஒழுகலாறு வெளிப்படுதலும் அதன்பின் தமர்கொடுப்பத் தான் அவ்வகையாற் பெறுதலு மென்னும் இவ்விரண்டும் முதலாகிய வழக்குநெறி திரியாது மகிழ்ச்சியும் புலத்தலும் ஊடலும் [6] உணர்த்தலுமென்னும் நான் குடன் பிரிவுளப்பட்ட ஐந்தும் புணர்ந்தது கற்பென்னுங் கைகோளாம் என்றவாறு.

'இவைமுதலாகிய' என்றதனால்,

"கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான." (கசஎ)

என்றவழிக் [7] கூடிய வதுவைபோல்வன கொள்க. அவைதாங் கற்பெனப்படுவதல்லது ஒழுகலாறெனப்படா; என்னை? இவ ரொழுக்கமன்றி வேள்வியாசான் முதலாயினர் செய்விக் கும் ஒழுக்கமாகலான். அங்ஙனமாயினும் அவற்றையுங் கைகோ ளின்பாற் சார்த்தி யுரைப்படுமென்றற்கு ஈண்டுக் கூறினு னென்பது.

1. மறை வெளிப்படுதல்—களவு வெளிப்படுதல்.
2. தமரிற் பெறுதல்—வரைவு.
3. மலிவு—மகிழ்ச்சி.
4. உணர்வு=உணர்தல். என்றது ஊடலுணர்தலை. உணர்த் தல் என்று பொருள் கூறல் பொருந்துமோ என்பது ஆராயத் தக்கது. இளம்பூரணம் நோக்குக.
5. பிரிவு—ஓதற்பிரிவு முதலியன.
6. உணர்த்தல்—உணர்தல் என்றிருத்தல்வேண்டும். விரி வுரை நோக்குக. உதாரணமும் நோக்குக.
7. கூடிய—நிகழ்ந்த.

[1] இனிக் கூறும் ஐந்தும், தலைவனுந் தலைவியும் ஒழுகும் ஒழுகலாறெனவேபடும். [2] முன்னிய இரண்டும்போலப் பிறர் கொடுக்கப்பட்டனவல்லவென்பது.

மனிதலென்பது, இல்லொழுக்கமும் புணர்ச்சியும் முதலாய வற்றுன் மகிழ்தல்.

புலவியென்பது, புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறை படாமற் காலங்கருதிக் கொண்டுய்ப்பதோர் உள்ள நிகழ்ச்சி.

ஊடலென்பது, உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்புமொழியா னன்றிக் கூற்றுமொழியானுரைப்பது.

அங்ஙனம் ஊடனிகழ்ந்தவழி அதற்கேதுவாகிய பொரு ளின்மை [3] யுணர்வித்தல் உணர்வெனப்படும். இல்லது கடுத்த மயக்கந்தீர உணர்த்துதலால் உணர்த்துதலெனவும், அதனை உணர்தலால் உணர்வெனவும்படும்; புலவிக்காயின் உணர்த்தல் வேண்டா. அது குளிர்ப்பக் கூறலுங் தளிர்ப்ப முயங்கலும் முதலாயவற்றுன் நீங்குதலின். அம்முறையானே கூறி அவற் றுப்பின் பிரிதல் கூறினுன். அஃது இவை நான்கனெடும் வேறு படுதலின்; அதனை ஊடலோடு வைக்கவே அவ்வூடலிற் பிறந்த [4] துனியும் பிரிவின்பாற்படுமென்பது கொள்க. என்னை? [5] காட் டக் காணுது [6] கரந்து மாறுதலின். இவற்றுக்குச் செய்யுள்:

"எம்மனை முந்துறத் தருமோ
தம்மனை யுய்க்குமோ யாதவன் குறிப்பே." (அகம். ககூடு)

என்பது, மறைவெளிப்பாடு.

"தமர்தர,
வோரிற் கூடி யுடன்புணர் கங்குல்." (அகம். அசு)

என்பது, தமரிற்பெறுதல்.

---

1. இனி—மேல்; என்றது மனிதன் முதலாகக் கூறுவன வற்றை.

2. முன்னிய இரண்டென்றது — மறை வெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்.

3. உணர்வித்தல்—உணர்தல் என்றிருத்தல்வேண்டும். அல் லது உணர்வு—உணர்த்தல் என்றிருத்தல்வேண்டும்.

4. துனி—ஊடலின்மிக்கது. 'துனியும் புலவியு மில்லா யின்' என்னுந் தேவர் குறளுரை நோக்குக.

5. காட்டக்காணுது—உணர்த்த உணராது.

6. கரந்துமாறல்—உள்ளங்கரந்து வேறுபடல். மாறுதல்— வேறுபடல், ஒழிதல்.

"கேள்கே னென்ற."
என்னும் அகப்பாட்டினுள், (அகம். கூஎ)

"நலங்கே முகம் பூண்வடுப் பொறிப்ப
முயங்குகஞ் சென்மோ நெஞ்சே."
என்பது மனிதல்.

"தாணுக்கடுங் குரைய ளாகிப்
புலவி வெய்யள்யா முயங்கும் காலே."
என்பது, புலவி.

"நோய்சேர்ந்த நிறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்லினுய் வாராமற் பெறுகற்பின்." (கலி. எஎ)
என்பது, ஊடல்.

"விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனீ முயங்கக் காணவு
மாங்கவிந் தொழியுமென் புலவி." (கலி. எடு)
என்பது, உணர்தல்.

"இறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்." (கலி. அசு)
என்பது, துனி. துனித்தலென்பது, வெறுத்தல். அறுவகைப் பிரிவும் பிரிவெனவே அடங்கும். அவை [1] மேற்காட்டப்பட் டன. (கூஅஎ)

[கைகோள்வகை இவை எனல்]

நூ00. மெய்பெறு வகையே கைகோள் வகையே.

இது, புறத்திணைக் கைகோளுணர்த்துகின்றது.

இ—ள்: பொருள்கள் பெற்ற கைகோட்பகுதி அகத்திணைக் கைகோளே என்றவாறு.

கைகோளென்பது, ஒழுக்கங்கோடல்; எனவே, அகத்திற் குப் புறனுயினும், புறத்திணைக்குக் கைகோள் அவ்வாறு வேறு வகைப்படக் கூறப்படா; பொதுவகையானே [2] மறைந்த ஒழுக்க மும் வெளிப்பாடுமென இரண்டாகி அடங்கும் அவையுமென்ற வாறு. அவை வெட்சியுள்ளும் ஒழிந்த திணையுள்ளுங் காட் டப்பட்டன. (கூஅஅ)

---

1. மேற்காட்டப்பட்டன என்பதை, தொல்.—அகத்திணை யியல் உரு-ம் சூத்திர முதலியன நோக்கி அறிக.

2. மறைந்த ஒழுக்கம்—வெட்சிக்கண் நிரைகாவலர் அறியா மற் சென்று கவர்தல். வெளிப்பாடு—கவர்ந்தமை பின் வெளிப் படல். ஒழிந்த திணை—வஞ்சி முதலியன.

[களவினிற் கூற்றுக்குரியார் இவர் எனல்]

நூ ○ க. பார்ப்பான் பாங்கன் றேழி செவிலி
சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியோ
டளவியன் மரபி னறுவகை யோருங்
களவினிற் கிளவிக் குரிய ரென்ப.

இது, கூற்றென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இ—ள்: எண்ணப்பட்ட அறுவருங் களவொழுக்கினுள் (களவு) நிகழ்ந்தன கூறினராகவல்லது ஒழிந்தோர், கூறினராகச் செய்யுள் செய்யப்பெறுரென்றவாறு.

பார்ப்பானென்பான், நன்றுந் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவானெனப்படும். பாங்கனென்பான், அவ்வாறன்றித் தலைமகன் வழிநின்றொழுகி வருமாகலின் அவனே அவன்பின் வைத்தான். தோழி, அவன்போன்றும் பெண்பாலாகலின் அவளைப் பின்வைத்தான். செவிலி மாற்றஞ் சிறுவரவிற்றுதலின் அவளை அவளின்பின் வைத்தான். அவரிற் சிறந்தமையிற் சீர்த்தகு சிறப்பிற் கிழவனையுங் கிழத்தியையும் அவர்பின் வைத்தான். அவ்விருவருள்ளுங் தலைமகளது கூற்றே பெருவரவினதாகலின் அவளை ஈற்றுக்கண் வைத்தானென்பது. உதாரணம்:

"சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
.....
தேருங்கா னும்மக னுமக்குமாங் கனியளே." (கலி. கூ)

என்பது, பார்ப்பான் கூற்று.

"காமங் காம மென்ப காம
மணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
[1] முதைச்சுவற் கலித்த முற்று விளம்புன்
[2] மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே." (குறுந். உ○ச)

என்பது, பாங்கன் கூற்று.

"ஏனல் காவ லிவளு மல்லள்
.....
சொல்லு மாடுப கண்ணீ ரூனே."

என்பது, தோழி கூற்று.

1. முதைச்சுவல் கலித்த—பழங் கொல்லையாகிய மேட்டு நிலத்தே தழைத்த.
2. மூதா—முதிய பசு.

"பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தன னென்றனள்
.....
ஆம்பன் மலரினுந் தான்றண் ணியளே." (குறு. அச)

என்பது, செவிலி கூற்று.

"பாலு முண்ணுள் பழங்கண் கொண்டு
நனிபசந் தனளென வினவுதி." (அகம். சஅ)

என்பதும் அது.

"கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
.....
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே."
(குறு. உஅ○)

என்பது, கிழவன் கூற்று.

"விளங்குதொடி முன்கை வீழ்ந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே." (அகம். நுஅ)

என்பது, கிழத்தி கூற்று. பிறவும் அன்ன. (கஅகூ)

[கற்பினிற் கூற்றுக்குரியார் இவர் எனல்]

நூ ○ உ. பாணன் கூத்தன் விறலி பரத்தை
[1] யாணஞ் சான்ற வறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்.

இதுவுமது.

இ—ள்: இவ்வெண்ணப்பட்ட எல்லாருஞ் சொல்லிய சொல்லாகச் செய்யுள் செய்யப்பெறுங் கற்பினுள் என்றவாறு.

'முன்னுறக் கிளந்த [2] கிளவி' என்பது, பொருணோக்கிற்று. இசையின் பின்னரது நாடகமாகலிற் பாணன்பின் கூத்தனை வைத்தும், பெண்பாலாகலான் விறல்பட ஆடும் விறலியைக் கூத்தன்பின் வைத்தும், அவ்வினத்துப் பரத்தையரை அதன்பின் வைத்தும், [3] பொருட்குச் சிறந்தாராகலின் நற்

1. ஆணம்—அன்பு.
2. கிளவி—ஈண்டுப் பொருள் நோக்கிற்று என்றபடி.
3. பொருட்குச் சிறந்தார் என்றது, பொருள் பெறுதற்குச் சிறந்தவர் பரத்தையரென்றபடி. அறிவரும் பொருட்குச் சிறந்தாராகலின் அப்பொருட்குச் சிறந்த பரத்தையர்க்குப்பின் அவரை வைத்தாரென்பது கருத்து. அறிவரை நற்பொருளுணரும் அறிவர் என்றமையின். பரத்தையர் தீப்பொருளுணர்வோரென்பது பெறப்படும். எனினும் இருவரும் பொருள் என்ற அளவில் இயையுடையார் என்றபடி.

பொருள் உணரும் அறிவரை அவர்பின் வைத்தும், ஏதிலா கிய கண்டோரை அவர்க்குப்பின் வைத்துங் கூறினனென்பது. இவ்வாற்றான் இவரோடு முன்னர்க் களவொழுக்கத்திற் கூறிய அறுவருங் கூறப்பெறுவரென்றவாறு. 'தொன்னெறி மரபின்' என்றதனாற் பாகனுந் தோழனுங் கூறவும் அமையும்; அவை புறப்பொருட்குச் சிறந்துவரும்; அவற்றுக்குச் செய்யுள் :—

"செவ்வழி நல்யா ழிசையினென் பையெனக்
கடவுள் வாழ்த்திப் [1]பையுண் மெய்நிறுத்
தவர்திறஞ் செல்வேன் கண்டனென் யானே." (அகம். கச)

என்பது, பாணன் கூற்று.

"ஆடலிற் பயின்றகீ யென்னு தென்னுரை
யூடலீற் றெளிதல் வேண்டும்."

என்பது, கூத்தன் கூற்று.

"மரந்தகீ மணந்த நனந்தகீக் கானத்து
.....
நறுங்கண் ணியன்கொ னுகொ யானே."

என்னும் நற்றிணைப் (நூகூச) பாட்டு, கண்டோர் கூற்று.

"விதையர் கொன்ற முதையற் பூழி
.....
மெல்லிறைப் பணைத்தோட் டுயிலமர் போயே."

என்னும் நற்றிணைப் (கஉக) பாட்டுப் பாகன் கூற்று.

ஒழிந்தனவுங் கற்பியலுட் கூறியவாற்றான் அறிக. (ககூ०)

[கூற்றுக்குரியரல்லாதார் இவர் எனல்]

நூ०ங. ஊரு மயலுஞ் சேரி யோரு
நோய்மருங் கறிநருந் தந்தையுந் தன்னையுங்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றவ ணின்மை யாப்புறத் தோன்றும்.

இ—ள்: இவ்விவண்ணப்பட்ட அறுவகையோருஞ் சொல்லிய சொல்லாகச் செய்யுள் செய்யப்பெறார் என்றவாறு.

இவை, களவிற்கும் கற்பிற்கும் பொது. 'கொண்டெடுத்து மொழியப்படுதலல்லது' என்பது, இவர் கூற்றாகப் பிறர் சொல்லினல்லது இவர்தாங் கூறாரென்றவாறு; அவை,

"ஊஉ ரலரெழச் சேரி கல்லென
வானு தலைக்கு மறனி லன்னீர்."
(குறுந். உசூஉ)

எனவும்,

1. பையுள்—துன்பம்.

"தெரிகணீ நோக்கிச் சிலேநோக்கி
.....சாய்த்தார் தலை." (கலி. நூகூ)

எனவும் வருவனபோல்வன.

'யாப்புறத் தோன்றும்' என்றதனான் அகத்திணைக்கண் இவ்வாறு நிலைபெற்றதென்பது; எனவே, புறத்திணைக்கண் அவர் கூறவும்பெறுமென்பது. [1]இது நோக்கிப்போலுங் [2]கூற்றாரையுங் கூறுவாராயிற்றென்பது. 'நோய்மருங்கறிநரை' இடைவைத்தான், முன்னைய மூன்றும் பெண்பாலெனவும், ஒழிந்தன ஆண்பாலெனவும் அறிவித்தற்கென்பது. எனவே, [3]நோய்மருங்கறிநர் பெண்பாலும் ஆண்பாலுமாயிறுறென்பது. (ககூக)

[நற்றாய் தலைவனெடுந் தலைவியொடுங் கூறுள் எனல்]

நூ०ச. கிழவன் றன்னெடுங் கிழத்தி தன்னெடு
நற்றாய் கூறன் முற்றத் தோன்றுது.

இ॰து, எய்தாததெய்துவித்தது; விலக்கியல்வகையால் விதித்ததனவும் அமையும்.

இ—ள்: கிழவனெடுங் கிழத்தியோடும் இடையிட்டு நற்றாய் கூறுதல் நிரம்பத் தோன்றுது என்றவாறு.

'நற்றாய்' என்று ஒருமை கூறியவதனால், தலைமகள் தாயையே கொள்ளப்படும். இதனானே தந்தை தன்னையரென்பன போல்வனவற்றுக்கும் இ॰தொக்கும். 'முற்ற' என்றதனால் தானே தலைவனுதலால் தலைவன் தமர் யாவருங் கூறார்; [4]முற் கூறப்பட்டார் [5]அல்லரென்பது கொள்க. முற்றுதென்னுது 'தோன்றுது' என்றதனால், புறத்திணைக்கண் இவை வரைவின்றி வழக்கினெடு பொருந்துமாற்றாற் கொள்ளப்படுமென்பது. 'கிழவன்றன்னெடுங் கிழத்திதன்னெடும் 'கூறுள்' எனவே, அல்லுழிச் சொல்லப்பெறும் நற்றாயென்பதாம்; அ॰து,

1. இது—புறத்திணைக்கட் கூறல்.

2. கூற்றார்—கூற்று நிகழ்த்தப்பெறுதார். அவர் இச்சூத்திரத்தாற் கூறியவர். கூறுவானுயிற்று என்றிருப்பது நலம். ஆசிரியனே அதலின்.

3. நோய்மருங்கறிநர் — தலைவியின் நோயின் பகுதியைக் குறிப்பாலறிபவர். இளம்பூரணம் நோக்குக.

4. தலைவிதாய் முதலியோர்.

5. அல்லரென்பது அல்லதென்பது என்று இருத்தல் வேண்டும்.

"எம்வெங் காம மியைவ தாயின்
.....
செறிந்த சேரிச் செம்மன் மூதூர்
ரறிந்த மாக்கட் டாகுக தில்ல
.....
மென்றே ளஞ்ஞை சென்ற வாறே." (அகம். கடு)

என வரும். (ககூஉ)

[இடைச்சுரத்துத் தலைவன் தலைவியொடு கண்டார் கூறுவர் எனல்]

நுஂநு. ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப.

இ—ள்: தலைமகனோடும் தலைமகளோடும் இடைச்சுரத்துக் கண்டோர் மொழிதல் அறியப்பட்டது என்றவாறு.

[1] 'ஒண்டொடி மாதர் கிழவன்' எனவே, அவ்விருவர் கூட்டத்துக்கண்ணுமன்றி அவ்விருவரோடுந் தனித்தழிக் கூற்றில்லை என்றவாறு. 'கண்டது' என்றமிகையான், இடைச்சுரத்துக் கண்டோர் செவிலிக்குரைப்பனவுங் கொள்க; அவை,

"இகுளாய் மெல்லியண் மடந்தை
யரிய சேய பெருங்காண் யாறே." (சிற்றட்டகம்)

எனவும்,

"அணித்தாத் தோன்றுவ தெம்மூர்
மணித்தார் மார்ப சேர்ந்தனீ சென்மே."

எனவும் வரும்.

இதனுள், ஒண்டொடி மாதர் கிழவன் எனச் செவ்வனந் தோன்றக் கூறியது [2] தலைமகனையாதலின்,

"வில்லோன் காலன கழலே கொடியோன்
மெல்லடி மேலன சிலம்பே." (குறுந். எ)

என்பது, செவிலிக்குக் கண்டோர் கூறியது. (ககூஎ)

---

1. மாதர்க்குக் கிழவன் என்பது இவர் கருத்து. கிழவன்—உரியோன், மாதர் என்பது கிழவனை விசேடித்து நின்றதென்பது இவர் கருத்து. மாதர்—கிழத்தி. மாதர் என்பதற்குச் செவிலி என்று பொருள்கொள்வர் நச்சினார்க்கினியர். நற்றாய்—தோழி செவிலி என்பர் இளம்பூரணர்.

2. தலைமகனையாதலின் என்பதன்பின் சில வாக்கியம் இருந்திருத்தல்வேண்டும். என்னை? தொடர்பின்றியிருத்தலின்.

[இடைச்சுரத்துத் தலைவன் நீதிநூல் விதிப்படி
தலைவியொடு கூறற்குமுரியன் எனல்]

நுஂஙூ. இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கு முரியன்.

இதுவும், கூற்று விகற்பமே கூறுகின்றது.

இ—ள்: இடைச்சுரத்து உடன்போகிய கிழத்தியொடும் கிழவன் நீதிநூல்வகையாற் கிளத்தற்குமுரியன் என்றவாறு.

நீதிநூல்வகையாற் கிளத்தலென்பது, கிழத்தி தன்தமர் இடைச்சுரத்துக்கண்ணுறின் அவர் கேட்பத் தலைவிக்குச் சொல்லுவானும் [1] வழக்கியல் கூறுதலுமுரியனென்பது. 'வழக்கியலாணை' என்றதனான் நீதிநூல் விதி [2] பிறழக் கூறின் அஃது இராக்கதம்போன்று காட்டுமென்பது. உம்மையாற் கிழத்தியொடு வழக்கியலாணையானன்றி மருட்டிக் கூறவும்பெறுமென்பது.

"அழிவிலர் முயலு மார்வ மாக்கள்
வழிபடு தெய்வங் கட்கண் டாஅங்
கலமரல் வருத்தந் தீர யாழநின்
னலமென் பணைத்தோ ளெய்தின மாகலிற்
பொரிப்பூம் புன்கி னெழிற்றகை யொண்முறி
சுணங்கணி வனமுலை யணங்குகொளத் திமிரி
நிழல்காண் டோறு நெடிய வைகி
மணல்காண் டோறும் வண்ட றைஇ
வருந்தா தேகுமதி வாலெயிற் றேயே
மாநீ கொழுதி மகிழ்குயி லாலு
நறுந்தண் பொழில கானங்
குறும்பல் லூரயாஞ் செல்லு மாறே." (நற்றி. கூ)

என்பதனுள், 'வருந்தாதேகுமதி' எனவே, 'வழிபடு தெய்வங் கட்கண்டால்' விடுவார் இல்லாததுபோல நின்னை விடுதல் எனக்கு அறனன்றெனக் கூறி மெல்லெனச் செல்கவென மருட்டிக் கூறிய வாறு காண்க. (ககூச)

---

1. வழக்கியலாற் கூறல்—நின் தமர்வரின் அவரைக் கொல்லேன் என்றல். உதாரணம் "விளையமையாவையினியவி"..... என்னுந் நற்றிணை நகூஉ-ஞ் செய்யுளில், "நுமர்வரின் மறைகுவன் மாஅயோளே" என்னுமடியானும், "நுமர்வரி னுரைப்பினல்ல தமர்வரின்—முந்நீர் மண்டில முழுவது மாற்ற—தெரிகணை விடுதலோ விலனே—யரிதமர் மழைக்கண் கலுழ்வகை யெவனே." என்னுஞ் செய்யுளானுமறிக.

2. பிறழக் கூறின் என்றது அவரைக் கொல்வேன் எனக் கூறலே. கொன்றுகோடலும் இராக்கதமாதலின் கொல்வேனென்றலு மிராக்கதமாயிற்று.

[கண்டோரும் வழக்கியலாணையிற் கிளப்பரெனல்]

[1] நிஅ. ஒழிந்தோர் கிளவி கிழவன் கிழத்தியொடு
மொழிந்தாங் குரியர் முன்னத்தி னெடுத்தே.

இதுவுங் கண்டோர் கூற்று.

இ—ள்: மேலைச் சூத்திரத்துக் கூறிய தலைமகனையும் தலைமகளையும் ஒழித்து, ஒழிந்தோரெனப்படுவார் கண்டோரெனப்படுப. அவர் கூற்றுங் கிழவன் கிழத்தியொடு மொழிந்தாங்கு வழக்கியலாணையிற் கிளத்தற்கும் உரியரென்பான் முன்னத்தி னெடுத்துக் கூறுபவென்றுனென்பது.

முன்னத்தினெடுத்தலென்பது, அதிகாரத்தான் அறநூற் கருத்தினுனெடுத்துரைப்பவென்றவாறு; அவை,

"பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலியுளே பிறப்பினு மலிக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக னுமக்குமாங் கனையளே." (கலி. கூ)

என்றாற்போல்வன.

இவ்வாறு வழக்கியலாணையாற் கிளவாது வாளாதே அவரைக் கண்டேமெனவும் அவர் இன்னுழிப் புகுவரெனவுஞ் சொல்லுவன:—

"கண்டோர் மொழிதல் கண்ட தென்ப." (நிஅரு)

என்புழிக் கூறினும் என்பது. (ககூரு)

[கேட்போர் இவரெனல்]

நிஅ. மனையோள் கிளவியுங் கிழவன் கிழவியு
நினையுங் காலைக் கேட்குந ரவரே.

இது, கேட்போரென்னும் உறுப்புணர்த்துகின்றது.

1. இளம்பூரணருரையே பொருத்தம்; வருஞ் சூத்திரத்து அவர் என்பது ஒழிந்தோரையே சுட்டலின். இளம்பூரணருரை வருமாறு:—தலைவனையும் தலைவியையும் ஒழிந்த பதின்மரும் அத் தலைவனேடும் தலைவியோடும் சொல்லிப்போந்த மரபாற் சொல்லப்பெறுவர், இடமுங் காலமுங் குறித்து என்றவாறு. சொல்லிப்போந்த மரபாவது: இவ்வாறு சொல்லுவரெனக் கற்பியலிற் சொல்லிப்போந்த மரபு. கண்டோர் கூற்று முன் வந்துள்ளது. அன்றியும் கண்டோர் எனச் சூத்திரியாமையானும் கண்டோர் கூற்றுகப் பொருள்கூறல் பொருந்தாதென்க.

இ—ள்: முன்னர்க் கூற்றிற்குரியரெனப்பட்ட பன்னிரு வருட் கேட்டற்குரியார் தலைமகனும் தலைமகளும் ஒழித்து ஒழிந்த பதின்மரும் என்றவாறு.

[1] அவர் கேட்பனவும் அவ்விருவர் கிளவியுமேயெனவும் [2] தத்தங் கிளவி கேளாரெனவுங் கூறியவாறு. 'மனையோள் கிளவியுங் கிழவன் கிழவியும்' என்பதனை, மேற்போயின கூற்றிற்குங் கூட்டியுரைக்க. உரைக்கவே கூறுவனவுங் கேட்பனவு மெல்லாம் அவ்விருவர் கிளவியுமேயெனவும், தத்தங் கிளவி கூறவுங் கேட்கவும்பெறுரெனவுங் கூறியவாறுயிற்று. இங்ஙனம் விலக்கப்பட்டனவற்றுள் வேறுபட வருவனவும் [3] மேற் கூறுகின்றும். [4] மற்றுக் கூற்றுக்கு உரியரெனப்படுவார் அவ்வயின் தலைவியுந் தலைவனுங் கூறக் கேளாரோவெனின்,—அவை [5] தங்கிளவியாகலின் தாங்கேட்டல் விதந்தோதவேண்டுவதன்றென்பது.

'நினையுங்காலை' என்றதனால், தலைமகள் சொல்லக் கேட்போரும், தலைமகன் சொல்லக் கேட்போரும், தலைவனுந் தலைவியுந் தம்முட் கேட்டனவற்றுக்குரியனவும், ஆராய்ந்து கொள்ளப்படும் [6] மேற் கூறியவகையாலென்பது; எனவே, தலைமகன் கூறப் பரத்தை கேட்டலும், தலைமகள் கூறப் பரத்தை கேட்டலும் முதலாயின [7] புலனெறி வழக்கிற்கேலாதன விலக்கப்பட்டன. ஒழிந்தனவற்றுட் சில வருமாறு:—

1. அவர்—அப்பதின்மரும்.

2. தத்தங் கிளவி—தமதுதமது கிளவி. என்றது அவ்வவர்க்குரிய கிளவியை.

3. மேற் கூறுகின்றும் என்றிருத்தல்வேண்டும். நச்சினார்க்கினியம் நோக்குக.

4. மற்றுக் கூற்றுக்குரியரெனப்படுவார் அவ்வயின் தலைவனுந் தலைவியுங் கூறக் கேளாரோவெனின்? என்பது, மற்றுக் கூற்றுக்குரியார் கூறத் தலைவனுந் தலைவியுங் கேளாரோவெனின்? என்றிருத்தல்வேண்டும். என்னை? சூத்திரத்தால் தலைவனுந் தலைவியுங் கூறக் கேட்போரையே சொல்லப்பட்டதாதலானும், பின் வரும் விடை வினாவிற்குப் பொருத்தமின்றுதலானுமென்க. நச்சினார்க்கினியருரை நோக்குக.

5. தங்கிளவி—தமக்குரிய கிளவி. என்றது இருவர்க்கும் ஒவ்வொருவர்க்குமுரிய கிளவி என்றபடி.

6. மேற்கூறிய வகை—கற்பியலிற் கூறிய வகை.

7. புலனெறி வழக்கு—செய்யுள் வழக்கு. ஏலாதென்றமையான் ஏற்பன கொள்ளப்படும்.

"விளங்குதொடி முன்கை வளைந்துபுறஞ் சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே." (அகம். நுஅ)

என்னுந் தலைமகள் கூற்று, தலைமகன் கேட்டது.

"வருந்தா தேகுமதி வாலெயிற் றேயே." (நற். கூ)

என்பது, தலைமகன் கூற்று, தலைமகள் கேட்டது.

[1] "நின்கேள்,
புதுவது பன்னாளும் பாராட்டி யாங்கு
மிதுவொன் றுடைத்தென வெண்ணி." (கலி. உச)

எனவும்,

[2] "மாலையு முள்ளா ராயிற் காலை
யாங்கா குவங்கொல் பானை." (அகம். கச)

எனவும்,

[3] "உயங்கின் றன்னையென் மெய்யென் றசைஇ." (அகம். கள)

எனவும்,

[4] "ஒண்டா ரகலமு முண்ணுமோ பலியே." (குறுந். நகூஉ)

எனவும்,

[5] "எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ." (கலி. கசஉ)

எனவும் இன்னோரன்ன வெல்லாந் தோழியும் பாணனும் செவிலியும் கண்டோரும் அறிவரும் கேட்பத் தலைமகள் கூற்று வந்தன. பிறவும் அன்ன.

[6] "இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
.....
பரந்தன் றிந்நோய் தொண்டுகொளற் கரிதே." (குறுந். நுஅ)

எனவும்,

[7] "எனைவ கிருஅ ரெம்முறு நண்ப
.....
புதுக்கோள் யானையிற் பிணித்தற்கு மெம்மே" (குறுந். கஉகூ)

எனவும்,

[8] "ஊர்க பாக வொருவினை கழிய." (அகம். சச)

எனவும்,

[9] "பேரமர் மழைக்கணின் றேழி யுறீஇய
வாரஞ் ரெவ்வங் கூஉயா யோவென."

எனவும்,

---

1. தோழி கேட்டது.
2. பாணன் கேட்டது.
3. செவிலி கேட்டது.
4. கண்டோர் கேட்டது.
5. அறிவர் கேட்டது.
6. பார்ப்பான் கேட்டது.
7. பாங்கன் கேட்டது.
8. பாகன் கேட்டது.
9. தோழி கேட்டது.

[1] "சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்." (கலி. கநகூ)

எனவும் இவை பார்ப்பானும் பாங்கனும் பாகனும் தோழியும் கண்டோரும் கேட்போராகத் தலைமகன் கூற்று நிகழ்ந்தன. பிறவும் அன்ன.

"ஒன்றித் தோன்றுந் தோழி." (நகூ)

என்றமையின், தோழி கூற்றுந் தலைமகள் (உஉடு) கூற்றேயா மென்பது. (ககூகூ)

[பார்ப்பார் கூற்றும் அறிவர் கூற்றும் யாவருங் கேட்பரெனல்]

நுஅகூ. பார்ப்பா ரறிவ ரென்றிவர் கிளவி
யார்க்கும் வரையார் யாப்பொடு புணர்ந்தே.

இதுவுமது.

இ—ள்: இது மேற்கூறிய பார்ப்பாரும் அறிவரும் கூறிய கூற்றுக் கேட்போரை இன்னரென்று வரையப்படாது என்ற வாறு.

என்றவழி, 'யார்க்கும்' என்றது, அகத்திணையோர்க்கும் புறத்திணையோர்க்கு மென்றவாறு. 'யார்க்கும் வரையார்' என்றதனை, எச்சப்படுத்துச் சிலர்க்கு வரையப்படுமென்பது கொள்க. என்னை? பார்ப்பார் கூற்று, தலைமகனும் செவிலியும் நற்முயும் கேட்பினல்லது பிறர் கேட்டற் கேலா. அறிவர் கூற்று, தலைமகளுந் தோழியுஞ் செவிலியும் நற்முயும் கேட்டற்குரியர்.

புறத்திணைக்கண்ணும் [2] பொதுவியற் கரந்தையோர்க்கும் (கஅந) பார்ப்பார் கிளவி ஏலாவெனவும், அறிவர்கிளவி ஏற்கு மெனவும், பிறவு மின்னோரன்ன கொள்க.

'யாப்பொடு புணர்ந்து' என்பது, அகப்பொருளும் புறப் பொருளுமாக யாக்கப்படுஞ் செய்யுளெல்லாவற்றோடும் பொருந்து மென்றவாறு. இவர் கிளவி வரையப்படாதெனவே அறிவர் வாயிலாகியவழித் தலைமகள் வாயின் மறுத்தலிலனென்பதூஉம், புறத்திணைத் தலைவர்க்கும் அவ்வாறே [3] வழிநிற்றல் வேண்டு

---

1. கண்டோர் கேட்டது.
2. பொதுவியற் கரந்தை — அகம் புறம் இரண்டற்கும் பொதுவான கரந்தைத் திணை.
3. வழி என்பது அவர்வழி என்றிருப்பது நலம்.

மென்பதூஉங் கூறியவாறுயிற்று; என்னை? அறிவரெனப்படுவார் மூன்று காலமுந் தோன்ற நன்குணர்ந்தோரும் புலனன் குணர்ந்த புலமையோரு மாகலானும், இனிப் பார்ப்பாரும் அவ்வாறே சிறப்புடையராகலானும், அவர்வழிநிற்றல் அவர்க்குக் கடனுகலானு மென்பது. (ககூ)

[பரத்தையும் வாயில்களுந் தலைவி கேட்பச் சொல்லல்வேண்டுமெனல்]

நிகம. பரத்தை வாயி னெனவிரு கூற்றுங்
கிழத்தியைச் சுட்டாக் கிளப்புப்பய மிலவே.

இது, பயனில்கூற்றுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: பரத்தையும் வாயில்களுமென்னும் இரண்டு வேறு பாட்டின்கண்ணும் எழுந்த கிளவி கிழத்தி கேட்பாளாகக் கருதிச் சொல்லாக்காற் பயமிலவென்றவாறு.

கிழத்தியைச் சுட்டாவினவே, [1] பாங்காயினர் கேட்பச் சொல்லினும் அமையுமென்பதாயிற்று.

"செறிதொடி தெளிர்ப்ப வீசிச் சிறிவெ
ணுலைமந்து வருகஞ் சென்மோ தோழி." (அகம். கஎசு)

[2] என்றக்கால், தலைவிக்குப் பாங்காயினர் கேட்ப[ச் சொல்லி]க் கூறல்வேண்டுமென்பது. வாயில்களுந் தலைமகளை ஊடல்காப்ப வல்லது சொல்லாராகலான் தலைமகள் கேட்பாளாகச் சொல்ல வேண்டுமென்பது, 'சுட்டாக் கிளப்புப் பயமில' என்றதனுன், வாயில்கள் கூறுவனவுங் கிழத்திக்குப் பாங்காயின தோழி கேட்பச் சொல்லினும் அமையும். அவற்றுக்குச் செய்யுள்:

"ஒருயிர் மாத ராகலி னிவளுந்
தோ ழுடன்றனண் மன்னே."

என்பது, கிழத்தி கேட்ப வாயில்கள் கூறியது. இது [3] தோழி கேட்பச் சொல்லியதூஉமாம். (ககூஅ)

1. பாங்காயினர்—கிழத்திக்குப் பாங்காயினர்.

2. இது தலைவிக்குப் பாங்காயினர் கேட்பச் சொல்லியது என்றிருப்பது நலம்.

3. தோழி கேட்பினும் தலைவி கேட்டதேயாமென்க அவளின் வேறின்றுகலின் என்க. இனி இவள் அத்தலைவிக்கு அறிவிப்பாளுமாம்.

[தலைமகளைச் சுட்டி வாயில்கள் ஒருவர்க்கொருவர் கூறவும்பெறுவர் எனல்]

நிகக. வாயி லுசாவே தம்முளு முரிய.

இதுவுமது.

இ—ள்: மேனின்ற அதிகாரத்தால் தலைமகளைச் சுட்டி ஒருவரொருவர்க்குரைப்பார்போல வாயில்கள் தம்முட் கூறவும் பெறும், அவையுந் தலைமகள் கேட்பன என்றவாறு.

அதற்குச் செய்யுள்:

"தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணுணிக் [1] காப்பா டும்மே." (குறுந். கூ)

என்பது, பாடினி பாணர்க்குரைத்தது. 'தம்முளும்' என்ற உம்மை எதிர்மறையாகலான், [2] கேட்குநர் அவளெனப்பட்ட வாறன்றித் தம்முள் தாங்கேட்டல் சிறுபான்மையெனக் கொள்க. (கஙக)

[கூறுதன கூறுவனவாகவும் கேளாதன கேட்பனவாகவும் கூறவும்படும் எனல்]

நிகஉ. ஞாயிறு திங்க ளறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
யவையல பிறவு நுவலிய நெறியாற்
சொல்லுந போலவுங் கேட்குந போலவுஞ்
சொல்லியாங் கமையு மென்மனுர் புலவர்.

இது, கேளாதன சிலபொருள் கேட்பனவாகப் பொருளியலுள் (ககஙசு) வழுவமைக்கப்பட்டனவற்றை இலக்கணவகையாற் கூறுவனவுங் கேட்குநவும் ஆகற்கண்ணும் ஆய்கின்றுனென்பது.

இ—ள்: ஞாயிறும் திங்களும் அறிவும் நாணும் கடலும் கானலும் விலங்கும் மரனும் பொழுதும் புள்ளும் நெஞ்சும் இன்னோரன்ன பிறவும் மேற் பொருளியலுள்,

"செய்யா மரபிற் ருழிற்படுத் தடக்கியும்." (ககசு)

என்று பொதுவகையாற் கூறியவாற்ருன் அவை தாம் சொல்லுவனபோலவும் கேட்பனபோலவும் சொல்ல அமையும் என்றவாறு.

1. காப்பாடும்—காத்தல்செய்வேம். கரப்பாடும்மே எனவும் பாடம். கரத்தல்—மறைத்தல்.

2. கேட்குநர் அவர் எனவும் பாடம். அது சிறப்பின்று.

ஈண்டுக் கூற்றும் உடன் கூறினுன் [1] மேலிவற்றை வரையறுத்துக் கூற்றிற்கு உரியவென்றிலனுகலின். புலம்புறு பொழுதென்பது, மாலையும் யாமமும் எற்பாடுங் காருங் கூதிரும் பனியும் இளவேனிலும் போல்வன. 'பிறவும்' என்றதனுல் புல் புதல் முதலியன கொள்க. அவற்றுட் சில வருமாறு:

"கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்நிலை மாட்டிய தீ." (கலி. கசஉ)

என்றூற்போல்வன கண்டுகொள்க. (உ00)

[இடம் இதுவெனல்]

நூகூ. ஒருநெறிப் பட்டாங் கோரியன் முடியுங்
கரும நிகழ்ச்சி யிடமென மொழிப.

இது, களனெனப்பட்ட உறுப்புணர்த்துகின்றது.

இ—ள்: பலவும் ஒருவழிப்பட்டு ஓரிலக்கணத்தான் முடியுங் கரும நிகழ்ச்சியை இடமென்று கூறுப என்றவாறு.

இடமெனினுங் களமெனினும் ஒக்கும். ஒரு செய்யுட் கேட்டால் இஃது இன்னவிடத்து நிகழ்ந்ததென்று அறிதற்கு ஏதுவாகியதோர் உறுப்பினை இடமென்றுனென்பது. ஒருநெறிப்படுதலென்பது, ஒருவழிப் பலவுந் தொகுதல். ஓரியலென்பது, அவற்றுக்கெல்லாம் இலக்கணமொன்றுதல்; அஃதாவது, காட்சியும் ஐயமும் துணிதலும் புணர்ச்சியும் நயப்பும் பிரிவச்சமும் வன்புறையுமென் றின்னேரன்னவெல்லாம் ஒருநெறிப்பட்டு இயற்கைப் புணர்ச்சியென்னும் ஓரிலக்கணத்தான் முடியுமென்பது. கரும நிகழ்ச்சியென்பது, காமப்புணர்ச்சியென்னுஞ் செயப்படுபொருணிகழ்ச்சி; அஃது, இடமெனப்பட்டது. இது [2] வினை செய்யிடம். [3] நிலமாயின முன்னர்த் திணையெனப்பட்டன. காலம் முன்னர்ச் சொல்லும்.

1. இவற்றை என்றிலனுகலின் என இயைக்க. இவற்றை என்றது ஞாயிறு முதலியவற்றை.

2. வினை செய்யிடம் — தொழில் செய்யிடம்; என்றது, புணர்ச்சியாகிய தொழில் நிகழுமிடம் என்றபடி.

3. நிலம்—இடமன்று என்றபடி. நிலமென்பது திணை. களம் என்பது வினைசெய்யிடம். ஆதலால் இது வேறு என்றபடி.

"எனவ சிறுஅ ரெம்முறு நண்ப." (குறுந். கஉகூ)

என்னும் பாட்டும்,

"கேளிர் வாழியோ கேளிர் நாளுமென்
நெஞ்சுபிணிக் கொண்ட வஞ்சில் லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாக
மொருநாள் புணரப் புணரி
னரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே." (குறு. உஅ0)

என்னும் பாட்டும் பாங்கற் கூட்டமே இடனுக ஒருவழிப்பட்டன; என்னை? நின் வேறுபாடு எற்றினுனையிற்றென்று வினவிய பாங்கற்கு இதனினுனையிற்றென்று உரைத்ததூஉம், அதற்குப் பாங்கன் கழறினுனை எதிர் மறுத்ததூஉமென இரண்டும் பாங்கற்கூட்டத்துப் பட்டு ஓரியலான் முடிந்தன. அவை மேற் கூறியவகையானே கண்டுகொள்க. (உ0க)

[காலம் இதுவெனல்]

நூகூ. இறப்பே நிகழ்வே யெதிர தென்னுந்
தீறத்தியன் மருங்கிற் றெரிந்தன ருள்ளப்
பொருணிகழ் வுரைப்பது கால மாகும்.

இது, காலமுணர்த்துகின்றது.

இ—ள்: மூன்று காலத்தினும் நிகழ்கின்ற நிகழ்ச்சி அச்செய்புளுட்டோன்றச் செய்யிற் காலமென்னும் உறுப்பாம் என்றவாறு.

பொருணிகழ்ச்சியைக் காலமென்றதென்னை? காலமென வேறு பொருள் இல்லதுபோலவெனின்,—அஃது ஈண்டாராய்ச்சியின்று, நியாயதாலாராய்ச்சி யென்க.

"வில்லோன் காலன கழலே தொடியோண்
.....
வேய்பயி லழுவ முன்னி யோரே." (குறுந். எ)

என்னும் பாட்டினுள், வில்லோனுந் தொடியோளும் பொருளெனப்படும்;

"வேய்பயி லழுவ முன்னி யோரே."

என்பது, அப்பொருணிகழ்ச்சியான் இறந்த காலமெனப்படும். அப்பாட்டிற்குச் சிறந்தார் அவராகலின் அவரே பொருளாயினு ரென்பது.

[1] "மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே
யரும்பிய சுணங்கி னம்பகட் டிளமுலைப்
பெருந்தோ ணுணுகிய நுசுப்பிற்
கல்கெழு கானவர் நல்குறு மகளே." (குறுந். எக)

என்பது, நிகழ்காலம்.

"பகலும் பெறுவையிவ டடமென் ரூளே." (கலி. சசு)

என்பது, எதிர்காலம்.

புறத்திற்கும் இவ்வாறே இன்றியமையாதென்பது. பெரும் பொழுது சிறுபொழுதென்பன ஈண்டுத் திணையெனப்பட்டு அடங் கின; என்னை? முதலும் கருவும் உரிப்பொருளுங் கூட்டித் திணையாகலின். (உஅ)

[பயன் இதுவெனல்]

நிகநி. இதுநனி பயக்கு மிதனை னென்னுந்
தொகைநிலைக் கிளவி பயனெனப் படுமே.

இது, முறையானே பயனென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இ—ள்: இது மிகவும் பயக்கும் இதனனெனத் தொகுத் துச் சொல்லப்படும் பொருள் பயனென்னும் உறுப்பாம் என்ற வாறு.

"மாருக் காதலர் மலைமறந் தனரே
யாருக் கட்பனி வரலா னுவே
வேரு மென்ரூள் வகிரெதி ழும்மே
கூரும் தோழியான் வாழு மாறே."

என்னும் பாட்டு, தோழியைத் [2] தூது விடுவாளாதற் பயன் பட வந்தது. இவ்வாறு எல்லாப் பாட்டும் பயனுறுப்பாகவன்றி வாராவென்க. இவை புறத்திற்கும் ஒக்கும். (உஅ)

[மெய்ப்பாடாவது இதுவெனல்]

நிகசு. உய்த்துணர் வின்றித் தலைவரு பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பா டாகும்.

இது, மெய்ப்பாட்டுறுப் புணர்த்துகின்றது.

---

1. எனின்—என்று கருதின். இது நிகழ்வின் எதிர்வு. என்னை? கருதுதலாகிய தொழில் நிகழும்பொழுது இவ்வாறு கூறலின்.

2. இச் செய்யுள் தூதுவிடுதலைக் குறிப்பாலுணர்த்திற்று.

இ—ள்: உய்த்துணர்ச்சியின்றி செய்யுளிடத்து வந்த சொல் லப்படும் [1] பொருள் தானே வெளிப்பட்டாங்குக் கண்ணீ ரரும்பன் மெய்ம்மயிர்சிலிர்த்தன் முதலாகிய [2] சத்துவம் படு மாற்றான் வெளிப்படச்செய்வது மெய்ப்பாடென்னும் உறுப்பாம் என்றவாறு.

கவிப்பொரு ளுணர்ந்தால், அதனனே சொல்லப்படும் பொருள் உய்த்து வேறு கண்டாங்கு அறிதலை மெய்ப்பாடென் றான், அது தேவருலகங் கூறினும் அதனைக் கண்டாங்கறியச் செய்தல் செய்யுளுறுப்பாம் என்றவாறு; அவை:—

"மையற விளங்கிய மணிமரு [3] ளல்வாய்தன்
மெய்பெரு மழகியின் விளங்குபு ணீனத்தர." (கலி. அக)

என்றாற்போல வருவன. 'தலைவரு பொருளான்' எனவே, நோக் குறுப்பால் உணர்ந்த பொருட் [4] பிழம்பினைக் காட்டுவது மெய்ப் பாடென்பது இதன் கருத்து. இக்கருத்தினைத் 'கவி [5] கண் காட்டும்' எனவுஞ் சொல்லுப. (உஅ)

[இம் மெய்ப்பாடு முற்கூறப்பட்ட மெய்ப்பாடே வேறன்று எனல்]

நிகஎ. எண்வகை யியனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின தாகுவே.

இஃது, எய்தியது இகந்துபடாமைக் காத்தது.

இ—ள்: மேற்கூறப்பட்ட மெய்ப்பாடே இது; இதுவும் பிறிதிலக்கணத்தனவென்று கொள்ளற்க என்றவாறு. எனவே,

"நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை." (உடுக)

---

1. 'பொருளானே கண்ணீரரும்பல்.....சத்துவம்படுமாற் றான்' என்று நச்சினார்க்கினியர் கூறலின் இவ்வாக்கியத்தில் பிழை யுளதுபோலும்.

2. சத்துவம்—உண்மையை வெளிப்படுத்துவது; விறல்.

3. குழவியின் வாய் நீரொழுகுமாற்றை நேரே கண்டாங் குப் பொருள்தோன்ற இவ்வடிகள் செய்யப்பட்டன.

4. பிழம்பு—வடிவு.

5. கண்காட்டல்—குறிப்பால் தானே தோற்றுவித்தல்.

[1] என(வும்) அவை நங்நான்காமெனவும், மெய்ப்பாட்டியலுட் கூறியவாறெல்லாம் பிறவாற்றுன் வேறுபடுவனவுங் கொள்ளப் படுமென்றவாறு. (உ0நு)

[எச்சம் இதுவெனல்]

நிகஅ. சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை
புல்லிய கிளவி யெச்ச மாகும்.

இஃது, எச்சங் கூறுகின்றது.

இ—ள்: கூற்றினுனுங் குறிப்பினுனும் முடிக்கப்படும் இலக் கணத்தொடு பொருந்திய கிளவி எச்சமென்னும் உறுப்பாம் என்றவாறு.

'முடிவுகொளியற்கை' எனவே, செய்யுளின்கண்ணதன்றிப் பின்கொணர்ந்து முடிக்கப்படுமென்பது பெற்றும். உதாரணம்:—

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானைக்
கழுமுடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்கரந் தட்டே." (குறுந். க)

எனச் செய்யுண் முடிந்தவழியும் [2] 'இவற்றுன் யாங் குறை யுடையேம் அல்லேமென்று தலைவற்குச் சொன்னுளேல் [3] அது கூற்றெச்சமாம்; என்னை? அவ்வாறு கூறவுஞ் [4] சிதைந்ததின்மை யின். தலைமகட்குச் சொன்னுளேல் அது குறிப்பெச்சம்; என்னை? [5] அது காண்பாயாகிற் காணெனத் தலைமகளை இடத் துய்த்து நீக்கிய குறிப்பினளாகி [6] அது, தான்கூறுளாகலின்' என்பது. (உ0ந)

1. எனவும் என்றிருப்பது நலம்.

2. இவற்றுன்—இக் காந்தள்மலர்களான்.

3. இவற்றுன் யாங் குறையுடையேமல்லேம் என்றது கூற் றெச்சம்; இக்கூற்று எஞ்சிநின்றதாகலின். இவ்வாறு எஞ்சுவன இசையெச்சமென்று சொல்லப்படும்.

4. சிதைந்தது இன்மையின் என்றது பொருள் சிதைந்த தின்மையின் என்றபடி. சிதைதல்—வழுப்படல்.

5. அது என்றது காந்தளை.

6. அது—அக்குறிப்பு. அங்கே சென்று தலைவனைக் கூடு என்னுங் குறிப்பு.

[முன்னம் (குறிப்பு) இதுவெனல்]

நிகக. இவ்விடத் தீம்மொழி யிவரிவர்க் குரியவென்
றவ்விடத் தவரவர்க் குரைப்பது முன்னம்.

இது, முன்னமென்று கூறப்பட்ட உறுப்புக் கூறுகின்றது.

இ—ள்: யாதேனுமிடத்தானும் யாதானுமொருமொழி தோன் றியக்கால் இம்மொழி சொல்லுதற்குரியாரும் கேட்டற்குரியாரும் இன்னுரென்று அறியுமாற்றுன் அங்ஙனம் அறிதற்கு ஓரிடம் நாட்டி அவ்விடத்துக் கூறுவார்க்குங் கேட்பார்க்கு [1] மேற்றவுரை செய்யுட்கு [2] ஈடாகச் சொல்லுவது முன்னம் என்றவாறு.

'இவரிவர்க்குரியவென்று' அறிவான், செய்யுட் கேட்டா னெனவும், அவ்விடத்து 'அவரவர்க்கு உரைக்க' என்றுன் ஆசிரிய னெனவுங் கொள்க. என்றென்பது, எனவென்பதுபோலச் [3] சொல்லினெச்சமாதலும் வினையெச்சமாதலும் உடைமையின் இஃது,

"எனவெ னெச்சம் வினையொடு முடிமே."
(தொ. சொ. சஉஅ)

என்பதோர் வினை யெஞ்சிநிற்கும். அவ்வினைதான் எச்சமாக லான் உரைப்பதென்னும் வினைகொண்டு முடியுமென்பது.

"யாரிவ னெங்கூந்தற் கொள்வா னிதுவுமோ
சூராண்மைக் கொத்த படிறுடைத்து." (கலி. அக)

என்றக்கால், இம் [4] மாற்றஞ் சொல்லுகின்றுள் தலைவியெனவும் சொல்லப்பட்டான் தலைமகனெனவும், முன்னத்தான் அறியப் படுத்தலின் இது முன்னவுறுப்பாயிற்று. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். இவையெல்லாம், அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவாகக் கூறுகின்றுனென்பது. (உ0ஈ)

1. ஏற்ற செய்யுட்களாகச் சொல்லுவது எனவும் பாடம்.

2. ஈடு—பொருத்தம்.

3. சொல்லினெச்சம்—சொல்லெச்சம். எனவென்பதுபோல என்று என்பதும் சொல்லெச்சமாயு நிற்கும்; வினையெச்சமாயு நிற்கும். ஈண்டு வினையெச்சமாய் நின்று உரைப்பது என்னும் வினைகொண்டு முடிந்ததென்றபடி.

4. மாற்றம்—சொல்.

[பொருள்வகை இதுவெனல்]

நூஉ. இன்பமு மிடும்பையும் புணர்வும் பிரிவு
மொழுக்கமு மென்றீவை யிழுக்குநெறி யின்றி
யிதுவா கித்திணைக் குரிப்பொரு ளென்னது
பொதுவாய் நிற்றல் பொருள்வகை யென்ப.

இது, பொருள்வகை கூறுகின்றது.

இ—ள்: 'இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் ஒழுக்கமுமெனப்பட்ட இவை இழுக்காதவாற்றான் இத்திணைக்கு இது பொருளென்று ஆசிரியன் ஓதிய உரிப்பொருளன்றி அவற்றுக்கெல்லாம் பொதுவாகப் புலவனுற் செய்யப்படுவது பொருட் கூறெனப்படும் என்றவாறு.

'வகை' என்றதனாற் புலவன் றான் [1]வகைந்தமைத பொருளென்று கொள்க. அஃதன்றிச் செய்யுள் செய்தலாகாதென்பது இதன் கருத்து; அவை,

"கைகவியாச் சென்று கண்புதையாக் குறுகிப்
பிடிக்கை யன்ன பின்னகந் தீண்டித்
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ
நாணெடு மிடைந்த கற்பின் வாணுத
லஞ்ஞிங் ளெவிக் குறுமகண்
மென்றோள் பெறனசைஇச் சென்றவென் னெஞ்சே."
(அகம் கூ)

என்றாற்போலச் செய்யுள் செய்தவன் [2]தானே வகுப்பன வெல்லாங் கோடல்; இது பாலைப்பாட்டினுள் வந்ததாயினும் முல்லை முதலாயவற்றுக்கும் பொதுவாமென்பது. பொதுமை யென்பது எல்லா உரிப்பொருட்கும் ஏற்கப் பல்வேறு வகையாற் செய்தல். (உஅ)

---

1. 'வகைதல்—வகுத்தல்.

2. தானே வகுப்பதென்றது, நெஞ்சிற்குத் தீண்டல், தைவரல், தோய்தல் முதலிய தொழிலைச் செய்தல் இல்லையாயினும் உள்ளதுபோல வகுத்துக் கூறுதல்போல்வன. இப்பொருள்போல்வன எல்லாத் திணைக்கும் பொதுவாதலின் ஏனைத் திணைகட்கும் இப்பொருள்போல்வன அமைத்துச் செய்யுள் செய்யலாம் என்றபடி.

[துறை இதுவெனல்]

நூஉ. அவ்வம் மக்களும் விலங்கு மன்றிப்
பிறவவண் வரினுந் திறவதி னுடித்
தத்த மியலின் மரபொடு முடியி
னத்திறந் தானே துறையெனப் படுமே.

இது, துறையென்னு முறுப்புணர்த்துகின்றது.

இ—ள்: ஐவகை நிலத்திற்கும் உரியவெனப்படும் பல்வேறு வகைப்பட்ட மக்களும் மாவும் புள்ளும் ஓதி வந்தவாறன்றிப் படைத்துச் செயினும் அவ்வத் திணைக்கேற்ற இலக்கணமும் வரலாற்று முறைமையும் பிறழாமைச் செய்யின் அது மார்க்கமெனப்படும் என்றவாறு.

மார்க்கமெனினும் துறையெனினும் ஒக்கும்.

"ஊர்க்கா னிவந்த பொதும்பரு ணீர்க்கால்." (கலி. நுசு)

என்னுங் கலியினுள்,

"கொழுநிழன் ஞாழன் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை."

என நெய்தற்றலைமகள் போலக் கூறி, ஆவினை மருதநிலத்துக் கண்டான் போல

"ஊர்க்கா னிவந்த பொதும்பருள்."

எனவும் சொல்லிப், பின் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தலுரிப்பொருளான் முடித்தான்; இவ்வாறு மயங்கச் செய்யினுங் குறிஞ்சித்துறைப் பாற்படச் செய்தமையின் அத்துறை யுறுப்பான் வந்ததென்பது. இதுவும் மேலைப்பொருள் வகைபோலப் புலவராற் செய்து கொள்ளப்படுவதாகலான் அதற்குப்பின் வைத்தானென்பது. மற்று

"எந்நிலை மருங்கிற் பூவும் புள்ளும்." (தொ. அகத். ககூ)

என்பதனுன், இது மூடியாதோவெனின்,—அது கருப்பொருண் மயங்குதற்குக் கூறினுன்; இது, மக்களே யன்றித் தலைவனுந் தலைவியும் மயங்குமாறும் நான்கு திணையும் ஒன்றொன்றனொடு மயங்குமாறுங் கூறி அது புலவராற் செய்துகொள்ளுவதோர் உறுப்பெனவும் ஓதிவந்த இலக்கணத்ததன்றுயினும் அது பெறுமெனவுங் கூறினுனென்பது. (உகூ)

[மாட்டாவது இதுவெனல்]

நூஉ. அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு
மியன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தன்
மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்.

இது, [1] மாட்டென்னும் உறுப்புணர்த்துகின்றது.

இ—ள்: பொருள் கொள்ளுங்கால் அகன்று பொருள் கிடப்பச் செய்யினும் அணுகிக் கிடப்பச் செய்யினும் இருவகையானுஞ் சென்று பொருள் முடியுமாற்றாற் கொணர்ந்துரைப்பச் செய்தலே மாட்டென்னும் உறுப்பென்று சொல்லுவர் செய்யுள் வழக்கினுள் என்றவாறு.

இதுவும் நால்வகைப் பொருள்கோளன்றிப் புலவரது வேறு செய்கை; அது,

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை யொழிய
வாரேன் வாழிய நெஞ்சே." (பட்டின. உகஅ—உ0)

என நின்றது, பின்னர்,

"வேலினும் வெய்ய கானமவள்
கோலினுந் தண்ணிய தடமென் றோளே." (பட்டின. ஈ00)

எனச் [2] சேய்த்தாகச் சென்று பொருள்கோடலின் அஃது அகன்று பொருள்கிடப்பினும் இயன்று பொருண்முடியத் தந்து உரைத்ததாம்.

[3] "திறந்திடுமின் நீயவை பிற்காண்டு மாத
நிறந்துடிற் பெரிதா மேதம்—உறந்தையர்கோன்
தன்னுர மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணுரக் காணக் கதவு." (முத்தொ. சஉ)

என்பது, அணுகிய நிலையெனப்படும். பிறவுமன்ன; மாட்டுத லென்பது கொண்டுவந்து கொளுத்துதல். (உக0)

---

1. மாட்டுதல்—கொளுவுதல். என்றது சொற்களைக் கூட்டி முடிக்குமாறு பொருள் ஒன்றையொன்று அவாவிநிற்கச்செய்தலே.

2. வாரேன் என்றதற்கு, அவ்விரண்டடியானுங் கூறிய பொருள்கள் காரணமாதலின் சேய்த்தாக நின்ற அவ்விரண்டடியும் ஈண்டுக் கொண்டுவந்து மாட்டி ஏதுவாக்கிப் பொருள் கொள்ளப்படும் என்றபடி.

3. கதவு திறந்திடுமின் என அணுகிநின்ற எழுவாயைக் கொண்டுவந்து கூட்டி முடிக்கப்படலின் அணுகியமாட்டென்றார்.

[மாட்டும் எச்சமுமின்றியும் செய்யுள் செய்யப்படும் எனல்]

நூஉக. மாட்டு மெச்சமு நாட்ட லின்றி
[1] யுடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே.

இது, மேற்கூறியவற்றுள் ஒருசாரனவற்றுக்குப் புறனடை.

இ—ள்: மேற்கூறிய எச்சமும் மாட்டும் இன்றியும் அச் செய்யுளுட் கிடந்தவாறே அமையச்செய்யவும் பெறும் செய்யுள் என்றவாறு.

எச்சமும் மாட்டுமாம் என்னுது, மாட்டு முற்கூறியதென்னை யெனின்,—[2] எச்சம் முதலாகிய ஐந்து உறுப்பும் இவ்விதி பெறுமென்று கோடற்கு எதிர்சென்று தழீஇயினனென்பது.

உதாரணம்:

"வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி நீர
நீலப் பைம்போ துளரிப் புதல
பிலி யொண்பொறிக் கருவிளை யார்ட்டி
நுண்மு ளிங்கைச் செவ்வரும் பூத்த
வண்ணந் துய்ம்மல ருதிரத் தண்ணென்
றின்னு தெறிதரும் வாடையொ
டென்னு யினள்கொ லென்னு தோரே." (குறுந். ககo)

என்பது, எச்சமின்றி வந்தது.

"தாமரை புரையுங் காமர் சேவடி." (குறுந். கடவுள்)

என்பது, முன்னமின்றி வந்தது.

"மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே." (குறு. எக)

என்பது, பொருளின்றி வந்தது.

"ஈயற் புற்றத் தீர்ம்புறத் திறுத்த." (அகம். அ)

என்பது, துறைவகையின்றி வந்தது.

"யாரனே யிண்டை யேனே." (குறுந். ருச)

என்பது, மாட்டின்றி வந்தது.

இடைநின்ற மூன்றனை இலேசினாற் கொண்டு இரண்டினை யெடுத்தோதினான் இவை இரண்டும் அவற்றது [3] துணை இன்றி யமையாச் சிறப்பினவல்லவென்றற்கென்பது. (உகக)

---

1. உடனிலை—உடனிற்றல். சொற் கிடந்தவாறே கிடப்பப் பொருள்பெறச்செய்தல்.

2. எச்ச முதலிய ஐந்தாவன: எச்சம், முன்னம், பொருள், துறை, மாட்டு என்பன.

3. துணை—அளவு. இன்றியமையாச் சிறப்பினவல்ல எனப் பிரிக்க.

[வண்ணம் இத்துணைத்து எனல்]

நூஉச. வண்ணந் தாமே நாலைந் தென்ப.

இது, முறையானே இறுதிநின்ற வண்ணம் இத்துணைப் பகுதித்தென்கின்றது.

இ—ள்: வண்ணம் இருபது வகைப்படும் என்றவாறு.

வண்ணமென்பது, சந்த வேறுபாடு. நூறும் பலவுமாகி வேறுபடினும் அவை ஈண்டடங்குமென்பதூஉம், அவ் வேறு பாடெல்லாஞ் சந்த வேற்றுமை செய்யாவென்பதூஉங் கூறிய வாறு. அது நுண்ணுணர்வுடையார்க்குப் புலனுமென்பது. (உகஉ)

[வண்ணங்களின் பெயர் இவை எனல்]

நூஉரு. அவைதாம்
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ண
மியைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ண நலிபு வண்ண
மகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றுங்கன மொழிப வறிந்திசி னோரே.

இது, மேற்கூறப்பட்ட வண்ணங்களது பெயர் வேறுபாடு கூறுகின்றது.

இ—ள்: மேற்சொல்லிய நாலைந்து வண்ணமும் இவ்விரு பது பெயர் வேறுபாட்டினவென்று சொல்லுப அவற்றை உணர்ந்த ஆசிரியர் என்றவாறு.

இது, முறையாயினவாறென்னையெனின்,—இது வரலாற்று முறைமையென்றற்கு 'ஆங்கன மொழிப வறிந்திசினோர்' என்றுனென்பது. அவையாமாறு சொல்லுகின்றுன். (உகஙு)

[பாவண்ணம் இதுவெனல்]

நூஉசு. அவற்றுள்; பாஅ வண்ணஞ்
சொற்சீர்த் தாகி நூற்பாற் பயிலும்.

இது, நிறுத்தமுறையானே பாஅவண்ணை முணர்த்துதல் துதலிற்று.

இ—ள்: பாஅவண்ணமென்பது, [1]நூற்பாவண்ணம் என்ற வாறு.

எற்றுக்கு? 'நூற்பாற்பயிலும்' என்றமையின், இது சொற்சீரடித்தாகி வருமென்பது. இதனுட் 'பயிலும்' எனவே, அந்நூற்பாவினுளல்லது அகவலுள் இத்துணைப் பயிலாதென்பது; இது,

"வடவேங்கடந் தென்குமரி." (பாயிரம்)

எனவும்,

"எழுத்தெனப் படுப அகரமுத
னகர விறுவாய் முப்பஃ தென்ப." (தொ. எழு. க)

எனவும்,

"அவற்றுள், அஇஉ
எஒ வென்னு மப்பா கூந்தும்." (தொ. எழு. ங)

எனவும் பயின்றுவரும்.

"பெரியகட் பெறினே." (புறம். உங0)

என்பது, சொற்சீராகி அகவலுட் பயிலாது வந்தது. சொற் சீரடியென்னுது 'சொற்சீர்' என்றுன், அடியொடு தொடரா துஞ் சொற்சீர் வருமாதலினென்பது. அவை,

[2]"நன்றுபெரி தாகும்." (தொ. சொல். நசஙு)

என்றுற்போல வேறுகி நிற்பன. கலியுள்ளும் பரிபாட லுள்ளுஞ் சொற்சீர் வருமென மேற்கூறினுனுகலின் [3]அவற் றுள்ளுஞ் சந்த வேற்றுமைப்பட்டன பாஅவண்ணமேயாமென் பது. (உகச)

---

1. நூல்—இலக்கண நூல்.
2. இது அடியோடு தொடராது தனி வந்தது.
3. அவற்றுள்ளும்—கலி பரிபாடலுள்ளும்.

[தாவண்ணம் இதுவெனல்]

நூஎ. தாஅ வண்ண
மிடையிட்டு வந்த வெதுகைத் தென்ப.

இ—ள்: இடையிடுபடத் தொடுப்பது தாஅவண்ணம் என்ற வாறு.

அவை: பொழிப்பும் ஒருஉவுமாகலின் எதுகையென வைத்து கூறினனென்பது; அடியிடையிட்டு வருவது தொடை வேற்றுமையாவதல்லது வண்ண வேற்றுமையாகாதென்பது. ஒரு செய்யுளுட் பல அடி வந்தால் அவை எல்லாம் இடையிட்டுத் தொடுத்தல்வேண்டுமோவெனின், வேண்டா; அவை வந்தவழித் தாஅவண்ணமெனப்படுமென்பது; எனவே, இவ்வண்ணவகைக ளெல்லாஞ் செய்யுண் முழுவதுமே பெறுவனவாகக் கொள்ளக் கிடந்தனவல்ல; இவற்றை உறுப்பென்ற தன்மையாற் கந்திருவ நூலார் வண்ணங் கூறியவாறுபோல ஒரு செய்யுளுட் பலவும் வரப்பெறுமென்பதாம்; அவை,

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு." (முருகு. க)

எனவும்,

"உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை."
(ஐங்குறு. ப. கசஅ)

எனவும் வரும். பிறவுமன்ன. (உகரு)

[வல்லிசைவண்ணம் இதுவெனல்]

நூஅ வல்லீசை வண்ணம் வல்லெழுத்துப் பயிலும்.

இ—ள்: வல்லிசை வண்ணம் வல்லெழுத்துப் பயின்றுவரும் என்றவாறு.

வல்லெழுத்துப் பயின்றுவருதலான் அப்பெயர்த்தாயிற்று.

"முட்டாச் சிறப்பிற் பட்டினம் பெறினும்." (பட். உகஅ)

எனவும்,

"முட்டாட் டாமரைத் தஞ்சி." (முருகு. எஙு)

எனவும் வரும். பிறவும் அன்ன. (உகசு)

[மெல்லிசை வண்ணம் இதுவெனல்]

நூஉ. மெல்லீசை வண்ண மெல்லெழுத்து மிகுமே.

இ—ள்: மெல்லெழுத்து மிகுவது மெல்லெழுத்து வண்ணம் என்று கூறியவாறு.

ஒருசெய்யுண் முழுவதும் ஓரினத்தெழுத்தே பயிலச்செய்தால் இன்னதாதலின் இவை [1]உறுப்பெனப்பட்டு இடையிட்டு வருமென்றுனென்பது. [2]அவ்வாறு செய்யின் அவை [3]மிறைக் கவியெனப்படும். ஒழிந்த எழுத்திற்கும் இஃதொக்கும்.

"பொன்வி னன்ன புன்கூ நுண் டாது." (யா. வி. ப. ஙஅஉ)

என மெல்லெழுத்துப் பயின்றவாறு. (உகஎ)

[இயைபுவண்ணம் இதுவெனல்]

நூஙo. இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே.

இ—ள்: இடையெழுத்து மிகுவது இயைபுவண்ணம் என்ற வாறு.

"அரவி னதிர வுரீஇய வரகுகதிரின்."

என இடையெழுத்து மிக்குவந்தமையின் இயைபுவண்ணமாயிற்று. மென்மை வன்மைக்கு இடைநிகர்வாகிய எழுத்தான் வருதலின் இயைபுவண்ணமென்றுன். (உகஅ)

[அளபெடை வண்ணம் இதுவெனல்]

நூஙக. அளபெடை வண்ண மளபெடை பயிலும்.

இ—ள்: [4]இரண்டளபெடையும் பயிலச் செய்வன அள பெடை வண்ணமாம் என்றவாறு.

"மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்." (அகம். கூகூ)

என்பது, அளபெடை வண்ணம்.

"கண்ண டண்ணெனக் கண்டுங் கேட்டும்." (மலைபடு. நடுஉ)

என்பதும் அது. (உகசூ)

[நெடுஞ்சீர்வண்ணம் இதுவெனல்]

நூஙஉ. நெடுஞ்சீர் வண்ணநெட் டெழுத்துப் பயிலும்.

இ—ள்: நெட்டெழுத்துப் பயின்று வருவது நெடுஞ்சீர் வண்ணம் என்றவாறு. அது,

"மாவா ராதே மாவா ராதே." (புறம். உளங)

என்பது, நெடிதாய் வருவது நெடுஞ்சீரெனப்பட்டது. (உஉo)

---

1. உறுப்பு—அங்கம். அஃதாவது மெல்லெழுத்து மிகுதியும் வந்து சொற்கு உறுப்பாதல். எனவே வெறெழுத்தும் அவற் றோடு கூடிவரும் என்க.
2. அவ்வாறு பயிலச் செய்தல்—ஓரினமே பயிலச் செய்தல்.
3. மிறைக்கவி—சித்திரகவி.
4. இரண்டு—உயிர், மெய்.

[குறுஞ்சீர் வண்ணம் இதுவெனல்]

நூகூ. குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.

இ—ள்: குற்றெழுத்துப் பயில்வது குறுஞ்சீர் வண்ணம் என்றவாறு.

"குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி." (அகம். ச)

என வரும். (உஉக)

[சித்திரவண்ணம் இதுவெனல்]

நூகூச. சித்திர வண்ண
நெடியவுங் குறியவு நேர்ந்துடன் வருமே.

இ—ள்: சித்திரவண்ணம் நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் ஒப்ப விராஅய்ச் செய்யப்படுவது என்றவாறு.

அது,

"சார னுட நீவர லாறே."

என வரும்.

சித்திரவண்ணமென்பது பல வண்ணம்படச் செய்வதாகலின் அப்பெயர்த்தாயிற்று. (உஉஉ)

[நலிபுவண்ணம் இதுவெனல்]

நூகூரு. நலிபு வண்ண மாய்தம் பயிலும்.

இ—ள்: ஆய்தம் பயின்றுவருவது நலிபுவண்ணமாம் என்றவாறு. அஃது,

"அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை."
(குறள். களஅ)

எனவும்,

"னஃகான் றஃகா னுன்க ணுருபிற்கு." (தொ. எழு. கஉங)

எனவும் வரும். [1] நலிபென்பது, ஆய்தம். (உஉங)

[அகப்பாட்டு வண்ணம் இதுவெனல்]

நூகூசு. அகப்பாட்டு வண்ண
முடியாத் தன்மையின் முடிந்ததன் மேற்றே.

இ—ள்: அகப்பாட்டு வண்ணமென்பது, இறுதியடி இடையடிபோன்று நிற்பது என்றவாறு.

1. நலிபு—நலிந்துச்சரிப்பது.

அவையாவன:—முடித்துக்காட்டும் ஈற்றசை ஏகாரத்தானன்றி ஒழிந்த உயிரீற்றினும் ஒற்றீற்றினும் வருவன; அவை:—

"தவம்பவை தாமு மவற்றே ரன்ன." (நுசுஅ)

எனவும்,

"உண்கண் சிவப்ப தெவன்கொ லன்னாய்." (ஐங்குறு. உக)

எனவும்,

"கோடுயர் வெண்மண லேறி
யோடுகல னெண்ணுந் துறைவன் றேழி."

எனவும்,

"ஆணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி." (கலி. கடவுள்)

எனவும்,

"சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ." (அகம். சசு)

எனவும் வரும். இவை ஆசிரியவீற்றன.

"குளிறு குரலருவிக் குன்றத் திதண்மேற்
களிறு வருவது கண்டு—வெளிலென்ன
லாயினுன் பின்னே யணங்கிற் குயிரளித்துப்
போயினுன் யாண்டையான் போன்ம்."

என இதனுள் இறுதியடி முடியாத்தன்மையின் முடிந்ததாகலின் அகப்பாட்டு வண்ணமாயிற்று.

"கொடி யுவணத் தவணரோ."

எனக் கலிப்பாவுள் அரோவந்து பின் முடியாத்தன்மையின் முடிந்தது.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என்பனவற்றுன் ஆசிரியம் இறுமென வரையறுப்பாருண்மையின் அவ்வச் சொல்லாமே அவை முடிந்தனவென்று கொள்வலெனின், — அங்ஙனம் [1] வரையறையில வென்பது [2]மேற்காட்டிய உதாரணங்களால் அறிந்தாமாகலின் அக்கடா வண்ணமென [3] வரையறுப்பார்மேற்றென விடுக்க. (உஉச)

1. ஆசிரியவீறு அங்ஙனம் வரையறையில வென்பது என்க.

2. மேற்காட்டிய உதாரணமென்றது "தவம்பவை தாமு மவற்றே ரன்ன" என்பது முதலாக தாங்காட்டிய உதாரணங்களை. அவற்றில் வேறீறுகளும் வருகின்றன என்றபடி.

3. வரையறுப்பார் என்றது இறுதிநிற்கும் எழுத்துக்களை வரையறுப்பார் மேற்று என்க. வண்ணமென என்பது இடையிற் சேர்த்து எழுதப்பட்டதுபோலும். அன்றேல் ஆசிரியன் மேற்றாகும். அவ்வாறு கொள்ளவின் ஆசிரியற்கிழுக்காம்.

[புறப்பாட்டு வண்ணம் இதுவெனல்]

நிகூ. [1] புறப்பாட்டு வண்ண
முடிந்தது போன்று முடியா தாகும்.

இ—ள்: புறப்பாட்டு வண்ணமென்பது, இறுதி [2] யடிப் புறத்ததாகவும் தான் முடிந்ததுபோன்று நிற்றல் என்றவாறு.

"இன்ன வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய விஃதே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே." (புறம். நகூநக)

என்புழி, ஈற்றயலடி 'முன்னிய விஃதே' என முடிந்தது போன்று முடியாதாயிற்று. (உஉடு)

[ஒழுகுவண்ணம் இதுவெனல்]

நிகூஅ. ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.

இ—ள்: முற்கூறிய வகையானன்றி [3]ஒழுகியலோசையாற் செல்வது ஒழுகுவண்ணம் என்றவாறு.

ஒழிந்தனவும் ஒழுகுமாயினும் அவை வேறு வேறு இலக்கண முடையனவென்பது.

"அம்ம வாழி தோழி காதலர்க்
கின்னே பனிக்கு மின்னு வாடையொடு
புன்கண் மாலை யன்பின்று நலிய
வுய்யல ளிவள்." (யா. வி. ப. நகூசு)

என வரும். (உஉசு)

[ஒரூஉவண்ணம் இதுவெனல்]

நிகூக. ஒரூஉ வண்ண மொரீஇத் தொடுக்கும்.

இ—ள்: யாற்றொழுக்குப் போலச் சொல்லிய பொருள் பிறிதொன்றனோ அவாவாமை அறுத்துச் செய்வது ஒரூஉவண்ணம் என்றவாறு.

ஒரீஇத் தொடுத்தலென்பது, எல்லாத் தொடையும் ஒரீஇச் செந்தொடையால் தொடுத்தலென்பாரும் உளர். செந்தொடையுந் தொடையாகலான் அற்றன்றென்பது; அது,

1. இதனுரை தெளிவில்லை. இளம்பூரணருரை சிறப்பாகும்.

2. இறுதியடிப்புறம்—இறுதி அடியின் புறமாக, என்றது ஈற்றயலடியை. ஏகாரம் வந்தமை குறித்து இவ்வாறு கூறினர். இறுதியடி புறத்ததாகவும் என்று மிருந்திருக்கலாம்.

3. ஒழுகியலோசையாற் செய்வது என்பது நச்சினார்க் கினியருரை.

"யானே யீண்டை யேனே யென்னலனே
யாஞே நோயொடு கான லஃதே
துறைவன் றும்மூ ரானே
மறையல ராகி மன்றத் தஃதே." (குறுந். கூஎ)

என வரும்.

"சிறியகட் பெறினே யெமக்கீ யன்னே." (புறம். உகடு)

என்பதும் அது.

[1] யாப்புப் பொருணோக்கியவாறுபோல இது பொருணோக்காது ஓசையே கோடலானும் அடியிறந்து கோடலானும் யாப் பெனப்படாது. (உஉஎ)

[எண்ணுவண்ணம் இத்துவெனல்]

நிசo. எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்.

இ—ள்: எண்ணுப் பயில்வது எண்ணு வண்ணம் என்றவாறு.

இஃது, அடி எண்ணுப் பயிறலான் எண்ணு வண்ணமெனக் காரணப் பெயராயிற்று; அவை,

"நன்ன னேற்றை நறும்பூ ணத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி." (அகம். சச)

என்றாற்போல்வன.

"நுதலுந் தோளுந் திதலை யல்குலும்." (அகம். ககசு)

என்பதும் அது. (உஉஅ)

[அகைப்புவண்ணம் இதுவெனல்]

நிசக. அகைப்பு வண்ண 'மறுத்தறுத் தொழுகும்.

இ—ள்: அறுத்தறுத்துப் பயில்வது அகைப்புவண்ணம் என்றவாறு.

இது விட்டுவிட்டுச் சேறலின் அகைப்புவண்ணமென்னும் பெயர்பெற்றது,

"வாரா ராயினும் வரினு மவர்நமக்
கியாரா கியரோ தோழி." (குறுந். ககo)

1. யாப்பு என்னும் உறுப்பிற்கும் இவ்வண்ணத்திற்கும் வேறுபாடு யாதெனின், அது பொருணோக்கியது இது ஓசை நோக்கியது. அன்றியும், அது அடியிறந்து பொருள்கொள்ளாதது இது அடியிறந்து பொருள்கொள்வது என்றபடி.

என்புழி, ஒருவழி நெடில் பயின்றும் ஒருவழிக் குறில் பயின்றும் அறுத்தொழுகிய அகைப்புவண்ணமாம். (உஉ கூ)

[தூங்கல் வண்ணம் இதுவெனல்]

[1] நூசஉ. தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.

இ—ள்: தூங்கல் வண்ணந் தூங்கலோசைத்தாகி வருவது என்றவாறு.

வஞ்சியென்பது, வஞ்சித் தூக்குப்போல இதுவும் அற்றுச் சேறலுடைத்தென்பது. அது,

"யானூடத் தானுணர்த்த யானுணரா விட்டபின்
ருனூட யானுணர்த்தத் தானுணரான்." (முத்தொ. கoச)

என நின்ற தொடர்நிலைக்கண்ணே அத்தூங்கல் கண்டு கொள்க. இக்கருத்தறியாதார் கலிப்பாவினுள் வஞ்சிப்பாப் பிறக்குமெனவும் வஞ்சியுட் கலிப்பாப் பிறக்குமெனவும் மயங்குப. (உகo)

[ஏந்தல் வண்ணம் இதுவெனல்]

நூசஈ. ஏந்தல் வண்ணஞ்
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.

இ—ள்: சொல்லிய சொல்லானே சொல்லப்படும் பொருள் சிறப்பச்செய்வது ஏந்தல்வண்ண மென்றவாறு.

ஏந்தலென்பது, மிகுதல்; ஒரு சொல்லே மிக்கு வருதலின் ஏந்தல்வண்ண மென்றுணையிற்று. அது,

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்." (நாலடி. ஈக)

என வரும். (உஈக)

[உருட்டுவண்ணம் இதுவெனல்]

நூசச. உருட்டு வண்ணம் ராகந் தொடுக்கும்.

இ—ள்: உருட்டிச் சொல்லப்படுவது அராகமாகலின் அராகந் தொடுப்பது உருட்டுவண்ணமாம் என்றவாறு.

"உருமுரறு கருவிய பெருமழை தலீஇய." (அகம். கருஅ)

எனவும்,

1. இதற்கு இளம்பூரணருரை பொருத்தமானது.

"எரியுரு வுறழ விலவ மலர." (கலி. ஈஉ)

எனவும் வரும். இது நெகிழாது உருண்டவோசையாகலிற் குறுஞ் சீர் வண்ணமெனப்படாது உருட்டுவண்ணமெனப்பட்டது. (உஈஉ)

[முடுகுவண்ணம் இதுவெனல்]

நூசரு. முடுகு வண்ண
மடியிறந் தோடி யதனே ரற்றே.

இ—ள்: முடுகுவண்ணமென்பது, [1] நாற்சீரடியின் மிக்கு ஓரடி அராகத்தோடொக்கும் என்றவாறு. அது,

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவினீ முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலும்." (கலி. ஈகூ)

என வரும்.

இவற்றைக் கொச்சகம் அராகமெனவுஞ் சொற்சீரடியும் முடுகியலடியுமெனவும் பரிபாடற்கு வேறுபடுத்தோதினுன் [2]இவ் வேறுபாடு நோக்கியென்பது. (உஈஈ)

[வண்ணங்கள் மேற்கூறிய இவையே எனல்]

நூசகூ. வண்ணந் தாமே இவையென மொழிப.

இது புறனடை.

இ—ள்: வண்ணமென்பன சந்தமாதலான் அச் சந்தவேற்றுமை செய்வன இவையல்லதில்லை என்றவாறு.

எனவே, என் சொல்லப்பட்டதாம்: நான்கு பாவினெடும் இவற்றை வைத்துறழவும், அவை மயங்கிய [3] பொதுப்பா இரண்டினேடு உறழவும் நூற்றிருபதாகலானும், [4] உயிர்மெய்வருக்க மெல்லாவற்றோடும் உறழ்ந்து பெருக்கின் எத்துணையும் பல வாகலும், இனிப் பிறவாற்றுற் [5] சிலபெயர் நிறீஇ அவற்றுல்

1. அராகந் தொடுத்த வடியோடு பிறவடி தொடர்ந் தோடுவது எனவும் பாடம்.
2. இவ்வேறுபாடு என்றது அராகத்திற்கும் முடுகுக்கு முள்ள வேறுபாடு.
3. பொதுப்பா இரண்டு—மருட்பா, பரிபாடல்.
4. உயிர்வருக்கம் மெய்வருக்கம் என்க.
5. பிறவாற்றுற் சிலபெயர் என்றது தூங்கிசை ஏந்திசை முதலிய பெயரை. இது அவிநயனுர் கொள்கை. அதனை; "தூங் கேந் தடுக்கல் பீரிதன் மயங்கிசை" என்னும் யாப்பருங்கலப் பாவாலறிக.

உறழ்ந்து பெருக்க வரையறையிலவாகலும் உடையவாயினும் இவ்விருபது வகையானல்லது சந்த வேற்றுமை விளங்காதென்பது கருத்து. (உஙச)

[வனப்புள் அம்மை இதுவெனல்]

ருசஎ. வனப்பிய ருனே வருங்குங் காலைச்
சின்மென் மொழியாற் ருய பனுவலோ
டம்மை நாளே யடிநிமிர் பின்றே.

இது தொகைச்சூத்திரத்துள்,

"ஆறுதலே யிட்ட வந்நா லீந்தும்." .. (நகங)

எனக் கூறுசெய்து நிறீஇப், பின்னர் எட்டுறுப்புக் கூறினனென்றே? இவை அவற்றோடொத்த இலக்கணத்தவன்மையான்; என்னை? அவை ஓரோ செய்யுட்கே ஓதிய உறுப்பாகலானும் இவை பல செய்யுளுந் திரண்டவழி இவ்வெண்வகையும் பற்றித் தொடுக்கப்படுமெனக் கூறப்பட்டதாகலானுமென்பது. இவற்றை வனப்பென்று கூறப்படுமாறென்னை? [1] அச்சூத்திரத்துப் பெற்றிலமாலெனின்,—வனப்பென்பது, பெரும்பான்மையும் பல உறுப்புந் திரண்டவழிப் பெறுவதோர் அழகாகலின் அவ்வாறு கோடும். அதனுற் பல செய்புளும் உறுப்பாய்த் திரண்டு பெருகிய [2] தொடர்நிலையதே வனப்பென்னும் பெயர்ப்பகுதி வகையான் ஏற்பதென்பது. அஃதேல், இவ்வெட்டுந் தனிவருஞ் செய்யுட்கண் வந்தால் அழகுசெய்யாவோவெனின்,—அவைபோல இவை தனிவருஞ் செய்யுட்குமாகுமென்றற்கன்றே அவ்விருபத்தாறுறுப்போடும் இவற்றை ஒருங்கினப்படுத்து ஓதியதென்பது. [3] அஃது, இயைபிற்கொப்ப வாராதென்பது முன்னர்ச் (நுஉ) சொல்லுதும். இதனானே [4] முன்னையுறுப்புக்கள் தொடர்நிலைச் செய்யுட்கு வருமென்பதூஉங் கொள்க; அல்லாக்கால், மாத்திரை முதலாகிய [5] ஓரோவுறுப்பான் அழகு பிறவாதாகிய

1. அச் சூத்திரம்—க-ம் சூத்திரம்.
2. தொடர்நிலையதே—தொடர்நிலைச் செய்யுளதே. தொடர்நிலைச் செய்யுளிலக்கணந் தொல்காப்பியர் கூறிற்றிலராதலின் இது பொருந்துமோ என்பது ஆராயத்தக்கது.
3. அஃது—தனிச் செய்யுளில் வருவது.
4. முன்னையுறுப்புக்கள்—மாத்திரை முதலியன.
5. ஓரோ எனப் பின்வருவது இங்குஞ் சேர்க்கப்பட்டது. அது வேண்டியதில்லை.

செல்லும் [1] இவற்றையே வனப்பென்று ஓரோ செய்யுட்கே கொள்ளினென்பது. இங்ஙனம் இருபத்தாறும் எட்டுமென வகுப்பவே அவை [2] அகமென்பன, தனிநிலைச் செய்யுட்கு முற் கூறப்படா, இத் தொடர்நிலைச் செய்யுட்கு முற் [3] கூறுமென்பது; இனி, இவற்றைச் சூத்திரத்தான் வனப்பென்னுங் குறியெய்துவிக்க வேண்டுவானுகச் சூத்திரத்தை,

"வனப்பிய ருனே வருக்குங் காலைச்
சின்மென் மொழியாற் ருய பனுவலின்." (நுசஎ)

என்பது பாடமாக உரைத்தானெனக; அதுவும் [4] அறிந்த வாறே கொள்க.

இ—ள்: சிலவாய மெல்லியவாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவலிலக்கணத்தோடும் அடிநிமிர்வில்லது அம்மையாம் என்றவாறு.

'அடிநிமிராது' எனவே, அம்மையென்பது முழுவதும் ஒரு செய்புளாகல்வேண்டும்; வேண்டவே, அஃது உறுப்பன்றுகிய செல்லும்: அதனை உறுப்பெனல்வேண்டுமாதலான் அடிநிமிராதெனப்பட்ட செய்புள் உறுப்பாக அவை பல தொடர்ந்து முடிந்து ஈண்டுச் செய்புளாமென்பது. சிலவாகவென்பது, [5] எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாதல், சிலவாகிய சொற்கள் எழுத்தினுன் அகன்றுகாட்டாது சிலவெழுத்தினுன் வருவது. அடிநிமிராதென்றது, ஐந்தடியின் ஏறுதென்றவாறு.

தாயபனுவலோடென்றது, அறம் பொருள் இன்பமென்னும் மூன்றற்கும் இலக்கணஞ் [6] சொல்லுப (போன்று) வேறிடையிடை அவையன்றியுங் காய்ச் செல்வதென்றவாறு; அஃகாவது, பதினெண்கீழ்க்கணக்கென வுணர்க. அதனுல், இரண்டடியானும் ஐந்தடியானும் ஓரோ செய்புள் வந்தவாறும், அவை

1. இவற்றை—அம்மை முதலியவற்றை.
2. அகம்—உள்ளுறுப்பு.
3. கூறும்—கூறப்படும் என்றிருத்தல் வேண்டும். அல்லாக்கால்—தொடர்நிலைக்கென்று கொள்ளாக்கால். இதனை நீக்கியும் விடலாம்.
4. கொள்க என்றது சிலர் அப்பாடம் கொள்ளாமையின்.
5. எண்ணுச் சுருங்குதல் என்றது சில சொற்களால் செய்யுள் ஆக்கப்படுதலை.
6. சொல்லுவ என்றிருத்தல்வேண்டும்போலும்.

சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொருள் இன்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப் பயின்று வருமாறும் [1] கார்காற்பது களவழிநாற்பது முதலாயின வந்த வாறுங் கண்டுகொள்க.

"பொருள்கருவி காலம் வினையிடனே டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்." (குறள். சுஎடு)

என்பது இலக்கணங் கூறியதாகலிற் பனுவலோடென்றுன்.

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று." (குறள். கஙகஉ)

என இஃது இலக்கியமாகலாற் முயபனுவலெனப்பட்டது.

[2] இவை தனித்துவரினும் அவ்வனப்பெனப்படும்; தாவுத லென்பது, இடையிடுதல். இவ்விருவகையுஞ் செய்யுளெனப்படும். அம்மையென்பது, குணப்பெயர்; அமைதிப்பட்டு நிற்றலின் அம்மையென்றுயிற்று. அ தன் உள்ளுறுப்பாகிய பாட்டுக்க டோறும் மாத்திரையுறுப்பு முதலாகிய உறுப்பினுள் ஏற்பன பலவும் வருமாறும், இவ்வனப்பினுள் ஏற்பன பலவும் வருமாறும் அறிந்துகொள்க. (உகடு)

[அழகு இதுவெனல்]

நுசஅ. செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னவ்வகை தானே யழகெனப் படுமே.

இஃது, இரண்டாமெண்ணு முறைமைக்கணின்ற அழ குணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: [3] திரிசொற் பயிலாது செய்யுளுட் பயின்றுவரும் மொழிகளாற் சீரறுத்துப் [4] பொலிவுபட்ட யாப்பின் பொருள அழகு என்றவாறு.

'அவ்வகை' என்றதனுல், அவை வேறுவேறு வந்து ஈண் டியி தொகைநிலைச் செய்யுளென்றவாறு. அவையாவன: நெடுங்

1. *இவ் வாக்கியத்தில் யாதோ தவறியிருத்தல் வேண்டும்.
2. இலக்கண இலக்கியம்.
3. திரிசொல் என்பது தெரிசொல் என்றிருத்தல் வேண் டும். என்னை? செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின் என்றமையின். நச்சினார்க்கினியர் வழக்குச் சொற்பயிலாதென்று கூறுதல் நோக்குக. அங்ஙனம் பர்டமுள்ளது.
4. பொலிவுபட யாப்பின் என்றிருந்திருக்கலாம். பொருள என்பதிற் சிதைவிருக்கிறது.

தொகை முதலாகிய தொகை யெட்டுமென்றவாறு. அழகு, செய் யுண்மொழி யென்றதென்னையெனின்,—அது பெரும்பான்மை யாற் கூறினுன். அம்மொழியானே இடைச்சங்கத்தாரும் கடைச் சங்கத்தாரும் இவ்விலக்கணத்தாற் செய்புள் செய்தார்; இக் காலத்துச் செய்யினும் விலக்கின்றென்பது. மற்று மூவடி முப் பது முதலாயின அம்மையெனப்படுமோ அழகெனப்படுமோ வெனின், — தாயபனுவலின்மையின் அம்மையெனப்படாவென் பது. இவற்றுள்ளும் ஒரோர் செய்யுட்கண்ணே மாத்திரை முத லாகிய உறுப்பும் ஏற்றவகையான் வருவன அறிந்துகொள்க. ஒழிந்தனவற்றிற்கும் இஃதொக்கும். (உகசு)

[தொன்மை இதுவெனல்]

நுசக. தொன்மை தானே
யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே.

இது, தொன்மையுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: தொன்மையென்பது, உரைவிராவுய்ப் பழமைய வாகிய கதைப்பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு. அவை,

பெருந்தேவனுராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத் திரையும் போல்வன. (உகஎ)

[தோல் இதுவெனல்]

நுடம. இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்மொழிப் புலவர்.

இது, முறையானே தோலென்னும் வனப்புணர்த்துதல் நுதலிற்று. அஃதிருவகைப்படும்: கொச்சகக்கலியானும் ஆசிரி யத்தானுஞ் செய்யப்படுவன.

"யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது." (சசுக)

என்றவழி, தேவபாணியும் காமமும் பொருளாகவன்றியும் கொச் சகக்கலி வருமென்றுனுகலான் [1] அவைமேல் வருதல் ஈண்டுக் கொள்ளப்பட்டது.

1. அவைமேல்—தேவபாணியுங் காமமும் அல்லாதவற்றின் மேல்.

இ—ள்: இழு மென்மொழியான் விழுமியது நுவலினும்—மெல்லென்ற சொல்லான் அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுப்பொருள் பயப்பச்செய்வன; அவை செய்தகாலத்துள்ளன கண்டிலம்; [1] பிற்காலத்து வந்தன கண்டுகொள்க.

பரந்தமொழியான் அடிநிமிர்ந்து ஒழுகினும் — ஆசிரியப் பாட்டான் ஒரு கதை மேல் [2] தொடுக்கப்பட்டன; அவையும் பொருட்டொடர்நிலை.

தோல் ஏன மொழிப தொன்மொழிப் புலவர்—தோலென்று சொல்லுப புலவர் என்றவாறு.

'தொன்மொழி' என்றார், பழைய கதையைச் செய்தல் பற்றி; இது, முன்வருஞ் சூத்திரத்தானும் பெறுதும். (உஙஅ)

[விருந்து இதுவெனல்]

நிறுக. **விருந்தே தானும்**
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே.

இ—ள்: விருந்துதானும் புதிதாகப் பாடுக் தொடர்நிலை மேற்று என்றவாறு.

'தானும்' என்ற உம்மையான் முன்னைத் தோலெனப்பட்டதூஉம் பழைய கதையைப் புதிதாகச் சொல்லியதாயிற்று. இது பழங்கதைமேற்றன்றிப் புதிதாகச் சொல்லப்படுதல் ஒப்புமையின் உம்மையான் இறந்தது தழீஇயிஞனென்பது. 'புதுவது கிளந்த யாப்பின் மேற்று' என்றதென்னையெனின்,—புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்புளுங் தொடர்ந்து வரச் செய்வது. அது, முத்தொளாயிரமும், பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்புளுமென வுணர்க. கலம்பகம் முதலாயினவுஞ் சொல்லுப. (உஙக)

[இயைபு இதுவெனல்]

நிறுஉ. **ஞகாரை முதலா னகாரை யிற்றுப்**
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே.

இஃது, இயைபுணர்த்துதல் நுதலிற்று.

---

1. பிற்காலத்து வந்தன சிந்தாமணி முதலியன என்பர் நச்சினார்க்கினியர்.

2. தேசிகப்பா என்பர் நச்சர். கூத்தராற்றுப்படை என்பர் இளம்பூரணர்.

இ—ள்: ஞ ண ந ம ன, ய ர ல வ ழ ள வென்னும் பதினொரு புள்ளியீற்றினுள் ஒன்றனை இறுதியாகச் செய்யுஞ் செய்புள் பொருட்டொடராகவுஞ் சொற்றொடராகவுஞ் செய்வது இயைபெனப்படும் என்றவாறு.

இயைபென்றதனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வருமென்பது கருத்து; சித்தலைச்சாத்தனாரால் செய்யப்பட்ட மணிமேகலையும் [1] கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச்செய்யுளும் போல்வன. அவை னகார ஈற்றன் இற்றன. மற்றையீற்றன் வருவனவற்றுக்கும் ஈண்டு இலக்கணம் உண்மையின் இலக்கியம் பெற்றவழிக் கொள்க. இப்பொழுது அவை வீழ்ந்தன்போலும்.

[2] பரந்தமொழியான் அடிநிமிர்ந்தொழுகிய தோலோடு இதனிடை வேற்றுமையென்னையெனின்,—அவை உயிரீற்றவாதல் பெரும்பான்மையாகலான் [3] வேறுபாடுடைய சொற்றொடரான் வருதலுமுடையவென்பது. சொற்றொடரென்பது, அந்தாதியெனப்படுவது; என்றதனான், உயிரீற்றுச் சொற்றொடர் சிறுபான்மையென்பது கொள்க. (உசஂ)

[புலன் இதுவெனல்]

நிறுக. [4] **சேரி மொழியாற் செவ்வியிற் கிளந்து**
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே.

இது, புலனுமாறுணர்த்துதல் நுதலிற்று.

---

1. கொங்குவேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுள் என்றது உதயணன்காதையை. இது பெருங்கதை எனவும் கொங்குவேண் மாக்கதை எனவும் படும். கொங்கவேளாராற் செய்யப்பட்ட எனவும் பாடம். இதுவும் பொருந்துமேலாராய்ந்து கொள்க.

2. இயைபாகிய இதுவும் பரந்த மொழியான் அடிநிமிர்ந்தொழுகலானே உரையாசிரியர் இரண்டற்கும் வேறுபாடு கூறினர் என்க.

3. இதனிடைச் சில சொற் றவறியிருத்தல் வேண்டும்.

4. தெரிந்தமொழியான் என்பது இளம்பூரணர் கொண்ட பாடம்.

இ—ள்: சேரிமொழியென்பது, [1] பாடிமாற்றங்கள். அவற்றுனே செவ்விதாகக் கூறி ஆராய்ந்துகாணுமைப் பொருட்டோட ரானே தொடுத்துச் செய்வது புலனென்று சொல்லுவர் புலன் உணர்ந்தோர் என்றவாறு.

அவை [2] விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வனவென்பது கண்டு கொள்க. (உசக)

[இழைபு இதுவெனல்]

நூருசை. ஒற்றெடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி யொப்பித்
தோங்கிய மொழியா னுங்கன மொழுகி
னிழைபி னிலக்கண மியைந்த தாகும்

இஃது, இறுதிநின்ற இழையிலக்கணமுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஒற்றெடு புணர்ந்த வல்லெழுத்து அடக்காது—வல்லொற்றடுத்த வல்லெழுத்துப் பயிலாது; [3]குறளடி முதலா ஐந்து அடி ஒப்பித்து—இரு சீரடி முதலாக எழுசீரடியளவும் வந்த அடி ஐந்தினையும் ஒப்பித்து: ஒப்பித்தலென்பது, பெரும்பான்மையான் நாற்சீரடி படுக்கப்பட்டென்றவாறு; ஓங்கிய மொழியான்—நெட்டெழுத்தும் அங்நெட்டெழுத்துப்போல் ஒசை எழும் மெல்லெழுத்தும் லகார ளகாரங்களும் உடைய சொல்லான்; ஆங்கனம் ஒழுகின்—இவையும்,

"சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது." (நூருஉ)

பொருள் புலப்படச் சென்று நடப்பின்.

இழைபின் இலக்கணம் இயைந்ததாகும் — இழைபென்று சொல்லப்படும் இலக்கணத்தது என்றவாறு.

அவையாவன: கலியும் பரிபாடலும்போலும் இசைப்பாட்டாகிய செந்துறை மார்க்கத்தனவென்பது. இவற்றுக்குக் கார

1. பாடி எனினும் சேரி எனினுமொக்கும். மாற்றம்-மொழி.
2. விளக்கத்தார் என்பவர் கூத்தநூலாசிரியரு ளொருவர் போலும். இவர் பெயர் யாப்பருங்கல விருத்தியுள்ளும் வருகின்றது.
3. குறளடி முதலா வைந்தடி என்பதற்கு தொல்காப்பியர் எழுத்தெண்ணி வகுத்த அடிகளேயே கொள்வர் இளம்பூரணர். அது பொருத்தமாதல் காண்க.

ணங் 'தேர்தல்வேண்டாது பொருள் இனிது விளங்கல்வேண்டும்' என்றது, [1] அவியசத்திற்கு உரியவாதல் நோக்கியென்பது. மற்றிதனே வெண்டுறைச் செய்யுட்குமுன் வைப்பினென்னினின்,—இஃது இசைப்பாட்டாகலின். இனி வருகின்றது இசைத்தமிழாகலின் அதற்குபகாரப்பட இதனே இறுதிக்கண் வைத்தானென்பது என்றபடி. (உசஉ)

[இவ்வோத்தின் புறனடை]

நூருஞ. செய்யுண் மருங்கின் மெய்பெற நாடி
யியைத்த விலக்கணம் பிழைத்தன போல
வருவ வுளவெனினும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே.

இஃது, இவ்வோத்திற்கெல்லாம் புறனடை கூறுகின்றது.

இ—ள்: செய்புளிடத்துப் பொருள்பெற ஆராய்ந்து தந்திரம் செய்யப்பட்ட இலக்கணத்தின் வழீஇயினபோன்று பின்தோன்றுவனவுளவேல் முற்கூறப்பட்ட இலக்கணத்தோடு திரியாமல் முடித்துக் கோடல் அறிவுடையோரது கடன் என்றவாறு.

அவை எண்சீர் முதலாயின வரிற் கழிநெடிலடிப்பாற் சார்த்திக் கோடலும், ஏதுநூதலிய முதுமொழியோடு, பாட்டிற்கு இயைபின்றியுந் தொடர்புபடுப்பனவும் யாப்பென்னும் உறுப்பின் பாற் கோடலும், பிறவும் ஈண்டோதாதன உளவெனின் அவையு மெல்லாஞ் செய்புளிலக்கண முடிபாகுமென்றவாறு. (உசஈ)

செய்யுளியல் முற்றிற்று.

1. அவியசம்—பாவகம்; கூத்து.

ஒன்பதாவது : மரபியல்

[மரபுபற்றி வரும் இளமைப் பெயர் இவை எனல்]

நிநிசு. மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பிற்
பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையுங்
கன்றும் பிள்ளையு மகவு மறியுமென்
றொன்பதுங் குழவியொ டிளமைப் பெயரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து என்ன பெயர்த்தோ வெனின்,—மரபியலென்னும் பெயர்த்து. இதனுனே ஓத்து முதலியதூஉம் மரபு உணர்த்துதலென்பது பெற்றும்.

மரபென்ற பொருண்மை என்னையெனின், [1] கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுஞ் [2] செய்யுளியலுண் மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவுமன்றி, இருதிணைப் பொருட்குணனுகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும்பற்றிய வரலாற்றுமுறைமையும், உயர்திணை [3] நான்கு சாதியும்பற்றிய மரபும், அஃறிணைப் புல்லும் மரனும் பற்றிய மரபும், அவைபற்றிவரும் உலகியன்மரபும், நூன்மரபுமென இவையெல்லாம் மரபெனப்படுமென்பது.

மற்றுப் பொருள்களுள் இளமைபற்றி வரும் மரபு கூறினுன் மூப்புப்பற்றி வரும் மரபு கூறுனெனவெனின்,—அது வரையறையின்மையிற் கூறுனென்பது.

மற்று, மேலை ஓத்தினேடு இவ்வோத்திடை இயையென்னையெனின்,—முன்னர் வழக்கிலக்கணங் கூறியதன்பின் செய்யுளிலக்

---

1. கிளவியாக்கத்து மரபு என்று வரையறுத்தோதப்பட்டன—"வினையிற் ருேன்றும் பாலறி கிளவியும், பெயரிற் ருேன்றும் பாலறி கிளவியும், மயங்கல் கூடா தம்மர பினவே" என்னுஞ் சூத்திரத்தானும், பிறசூத்திரங்களானும் மரபு வழுவாமற் காப்பன.

2. செய்யுளியலின் மரபென்று வரையறுத்தோதப்பட்டன வற்றை "பாட்டுரை நூலே" என்பதை முதலாகவுடைய ஙகக-ம் சூத்திரத்தானும், "மரபேதானும் நாற்சொல்" என்னும் ஙகஉ-ம் சூத்திரத்தானும், அதனுரையானு மறிந்துகொள்க.

3. நான்கு சாதி—நான்கு வருணம்.

கணஞ் செய்யுளியலுட் கூறினன். அவ் [1] விரண்டற்கும் பொது வாகிய மரபு ஈண்டுக் கூறினமையின் இது செய்யுளியலோடு இயைபு உடைத்தாயிற்று.

மற்று, [2] வழக்கிலக்கணஞ் செய்யுட்கும் பொதுவாகலின் இங்ஙனம் இரண் [3] டற்கும் பொதுவாகிய மரபினையுஞ் செய்யு ளியலின்முன் வைக்கவெனின்,—அவ்வாறு வழக்குஞ் செய்யுளு மென்று இரண்டுமல்லாத [4] நூலிற்கும் ஈண்டு மரபு கூறின மையின் இது செய்யுளியலின்பின் வைக்கப்பட்டது.

இவ்வோத்தின் முதற்சூத்திரம் என்னுதலிற்றெனின்,— எல்லாப் பொருளின்கண்ணும் இளமைக்குணம்பற்றி நிகழுஞ் சொல் இவையென்று வரையறுத்துக் கூறுகின்றது.

இ—ள்: மாற்றருஞ் சிறப்பின் மரபியல் கிளப்பின்—விலக் கருஞ் சிறப்பிற்றாகிய மரபிலக்கணங் கூறின்; பார்ப்பும் பறழும் குட்டியும் குருளையும் கன்றும் பிள்ளையும் மகவும் மறியும் [5] என்றென்பதுங் குழவியொடு இளமைப்பெயர்—குழவியோடு இவையொன்பதும் இளமைப்பெயர் என்றவாறு.

மேலன எட்டுங் குழவியுமென இளமைப்பெயர் ஒன்ப தாயின. குழவியோடொன்பதென்றது, 'ஒன்பதுங் குழவி யோடு' என மயங்கக் கூறியவதனாற் போத்தென்பதும் இள மைப்பெயரெனவும் பிறவும் வருவன உளவாயினுங் கொள்ளப் படும். இவற்றையெல்லாம் மேல் வரையறுத்து இன்ன பொருட்கு இன்ன பெயர் உரித்தென்பது [6] சொல்லும்.

---

1. இரண்டு—வழக்கும் செய்யுளும்.

2. வழக்கு—அகத்திணைவழக்குப் புறத்திணை வழக்கு முத லியன. அவை செய்யுளியற்கு முற்கூறப்பட்ட ஏழியலானும் கூறப்படுவன.

3. இரண்டற்கும்—வழக்குஞ் செய்யுளுமாகிய இரண்டற் கும்.

4. நூல் என்றது—இலக்கண நூலினை. அதன் மரபென் றது அதன் மரபாகவந்த பகுப்பும் அது செய்யுமுறையு முதலிய வற்றை.

5. என்று ஒன்பதும் என்பதில் ஒன்பதும் என்பது வேண் டியதில்லை.

6. சொல்லும்—செய்யுமென்னுமுற்று. ஆசிரியன் சொல் லும் என்றபடி.

'மாற்றருஞ் சிறப்பின்' என்றதனானே [1] இவை ஒருதலை யாகத் தத்தம் மரபிற் பிறழாமற் செய்யுள் செய்யப்படுமென் பதூஉம், [2] ஈண்டுக் கூறுதனவாயின் வழக்கொடுபட்ட மரபு பிறழவும் செய்யுளின்பம்படின் அவ்வாறு செய்பவென்பதூஉங் கூறியவாறாயிற்று.

"அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி." (பெரும்பாண். க—உ)

எனவும்,

"நும்மினுஞ் சிறந்தது நுவ்வை யாகுமென்
றென்னை கூறினள் புன்னையது சிறப்பே." (நற். களஉ)

எனவும் வரும். அவற்றுள் பரிதியுஞ் செல்வனைப் [3] 'பருகும்', 'காலும்' என்றலும், புன்னைமரத்தினை 'நுவ்வை' யென்றலும் மரபன்மையின் வழக்கினுண் மாற்றுதற்கு உரியவாமென்பது கருத்து.

4. "நிலவுக்குவித் தன்ன வெண்மணல்." (குறுந். கஉங)

எனவும்,

"இருடுணித் தன்ன வேனங் காணின்." (மலைபடு. உசஎ)

எனவும்,

"இருணூற் றன்ன விரும்பல் கூந்தல்."

எனவும் வருவனவும் அவை. (க)

[மரபுபற்றி வரும் ஆண்பாற் பெயர் இவை எனல்]

நுஙஎ. ஏறு மேற்றையு மொருத்தலுங் களிறுஞ்
சேவுஞ் சேவலு மிரலையுங் கலையு
மோத்தையுந் தகரு [5] முதளு மப்பரும்
போத்துங் கண்டியுங் கடுவனும் பிறவும்
யாத்த வாண்பாற் பெயரென மொழிப.

---

1. ஒருதலையாக—துணிபாக.

2. இவற்றிற் குதாரணம் பின்வருகின்றன. அவற்றுள் விளங்குக.

3. பருகும், காலும், நுவ்வை என்பன 'வழக்கொடுபட்ட மரபு பிறழவும்.....அவ்வாறு செய்ப' எனத் தாம் முன்கூறிய தற்குக் காட்டிய உதாரணங்களென்க. பிறவுமன்ன. நுவ்வை —நுமது தங்கை.

4. நிலவைக் குவித்தலும் இருளைத் துணித்தலும் நூற்ற லும் கூடாமையின் அவையும் வழக்கொடுபட்ட மரபன்றாயின.

5. உதள் எனப் பிரிக்க.

இ—ள்: ஆண்பாற்பெயர் இவ்வெண்ணப்பட்ட பதினேந்தும் என்றவாறு.

'பிறவும்' என்றதனுன், ஆணென்றும் விடையென்றும் வருவனபோல்வனவுங் கொள்க.

இவற்றை வரையறை கூறும்வழி (நிஅசூ—சூ০நி) உதாரணங் காட்டுதும். 'யாத்த வாண்பாற் பெயர்' என்றதனுல்; போத்தென்பது இளமைப் பெயராமாயினும் இங்ஙனம் ஆண்பாற்குச் சிறந்து வருமாறுபோலச் சிறவாது [1] அதற்கென்பது கொள்க. (உ)

[மரபுபற்றி வரும் பெண்பாற் பெயர் இவை எனல்]

நிநிஅ. பேடையும் பெடையும் பெட்டையும் பெண்ணு
மூடு நாகுங் கடமையு மளகு
மந்தியும் பாட்டியும் பிணையும் பிணவு
மந்தஞ் சான்ற பிடியொடு பெண்ணே.

இ—ள்: கூறப்பட்ட பதின்மூன்று பெயரும் பெண்மைப் பெயர் என்றவாறு.

[2] கடமையென்பதோர் சாதிப்பெயர் உண்டேனும் அது வன்று, ஈண்டெண்ணப்பட்டது பெண்மைமேற்றென்று கொள்க.

'அந்தஞ் சான்ற' என்பது, முடிபமைந்தன இவையென்றவாறு; எனவே, ஆவென்பது பெண்பெயராதலும் பெண்ணாணென்பன ஒருசார் புல்லிற்கு நேர்தலுங் கொள்க; என்னை? [3] ஆனேறென்பது, ஆவினுள் ஏறெனப்படுதலின். [4] ஆனென்பது ஆண்பாற்கும் பொதுவாகலின் அது முடிபமையாதெனப்பட்டது; அது மேற்காட்டுதும். ஆண்மை பெண்மை புல்லிற்கு

1. அதற்கு—இளமைப் பெயருக்கு.

2. கடமை—காட்டாவுக்கும் பெயர். ஆதலின் அதனைச் சாதிப்பெயர் என்றார்.

3. ஆன் என்றது—பசுப்பொதுவை. ஆனேறு என்புழி ஆ என்ற பெயர் ஆணுக்கும் வருதலால் இச்சூத்திரத்து முடிக்கப்படும் பெண்பாற் பெயர்களோடு சார்த்தி முடிக்கப்படாமையின் முடிபமையாதெனப்பட்டது என்றார்.

4. ஆனென்பது—ஆவென்பது என்றுபாடமுள்ளது. அதுவே பொருத்தம், என்னை? னகரமெய் சாரியையாதலின்.

இன்மையின் அவையும் முடிபுடையன ஆகாவாயினுங் காயாப் பனையை ஆண்பனையென்றும், காய்ப்பனவற்றைப் பெண்பனையென்றும் வழங்குப. இவையெல்லாம் வழக்காகலிற் செய்யுளுள் வருமாறு அறிந்துகொள்ளப்படும். இவற்றுக்கு மேல் வரையறை கூறும் வழி (சூ০சூ—உஉ) உதாரணங் காட்டுதும். (ஊ)

[இளமைப் பெயர்களுள்; பார்ப்பும் பிள்ளையும் இவற்றிற்குரியவெனல்]

நிநிசூ. அவற்றுட்
பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை.

இது, நிறுத்தமுறையானே இளமைப்பெயருண் முற்கூறிய பார்ப்பினைக் கூறுவான் அதனேடொப்புமைகண்டு பிள்ளைப் பெயருங் கூறுகின்றது.

இ—ள்: இவ்விரண்டும் புள் இளமைக்குரிய என்றவாறு.

இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலின் சான்றோர் செய்யுளுட் காணப்படும்; [1] அல்லன வழக்கின்மேற் காட்டுதும்.

"மேற்கவட் டிருந்த பார்ப்பினங் கட்கு." (அகம். நுக)

எனவும்,

"இல்லிறைப் பள்ளிதம் பிள்ளையொடு வதியும்." (குறு. சசு)

எனவும்,

"பைதற் பிள்ளைக் கிளிபயிர்ந் தாஅங்கு." (குறுந். கநசு)

எனவும் இவை பருந்தும் ஊர்க்குருவியும் கிளியுமென்னும் பறவை மேல் வந்தன; பிறவும் அன்ன.

[2] புள்ளுக்குலம் பலவாகலான் இச்சூத்திரத்துள் அடங்கிய மரபு எத்துணையும் பலவாதனேக்கி முதற்சூத்திரத்துட் பார்ப்பினை முற்கூறினனென்பது. (சு)

1. அல்லன—வழக்கின் அரியவல்லாதன.

2. புள்ளினம் பலவாதலின், அவற்றிற்கு வரும் மரபாகிய பார்ப்பும் பலவாதனேக்கி அதனை முற்சூத்திரத்து முற்கூறினார் என்றபடி.

[பார்ப்பும் பிள்ளையும் தவழ்பவைக்கும் ஆம் எனல்]

நிசூ0. தவழ்பவை தாமு மவற்றே ரன்ன.

இ—ள்: பார்ப்பும் பிள்ளையும் தவழ்பவற்றிற்கும் உரிய என்றவாறு.

அவை, ஆமையும் உடும்பும் ஓந்தியும் முதலையும் முதலாயின. ஆமையும் முதலையும் நீருள் வாழினும் நிலத்தியங்குங்கால் தவழ்பவையெனப்படும்; உதாரணம்,

"யாமைப் பார்ப்பி னன்ன
காமங் காதலர் கையற விடினே." (குறுந். கநஉ)

எனவும்,

"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலை." (ஐங்குறு. சக)

எனவும்,

"தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனெடு
பிள்ளை தின்னு முதலைத் தவனுர்." (ஐங்குறு. உச)

எனவும் வரும்.

'தாமும்' என்றதனுன், ஊர்வனவு நடப்பனவுஞ் சிறுபான்மை பிள்ளைப் பெயர்க்கு உரியவெனக் கொள்க. அது 'பிள்ளைப்பாம்பு' என ஊர்வனமேல் வந்தது.

"பிள்ளை வெருகிற் கல்கிரை யாகி." (குறுந். கoச)

என நடப்பனமேல் வந்தது. 'மூங்காப்பிள்ளை' என்பதும் ஈண்டே கொள்ளப்படும். பார்ப்பும் அவ்வாறே வருவன உளவேற் கொள்க. இதுவுந் தவழுஞ் சாதிக்கெல்லாம் பொதுவாகிய பரப்புடைமையின் இரண்டாவது வைத்தானென்பது. (நி)

[குட்டி என்னும் பெயர்க்குரியன இவை எனல்]

நிசூக. [1] மூங்கா [2] வெருகெலி மூவரி யணிலொ
டாங்கவை நான்குங் குட்டிக் குரிய.

இது, மேல் எடுத்தோத்தானும் இலேசானும் அதிகாரப்பட்ட தவழ்வனவும் நடப்பனவும்பற்றிக் குட்டியென்னும் பெயரீனயு முறையன்றிக் கூறுகின்றது.

1. மூங்கா—கீரியு ளொரு சாதி.
2. வெருகு—பூனையுளொருசாதி. காட்டுப்பூனை என்பாருமுளர்.

இ—ள்: குட்டியெனப்படுவன இவை நான்கும் என்றவாறு.

அவை, மூங்காக்குட்டி வெருக்குக்குட்டி எலிக்குட்டி அணிற்குட்டி என வரும்.

'மூவரியணில்' என்றதனுல், ஒழிந்த மூன்றுந் தம்முள் ஒருபிறப்பினவாம்; [1] இவை ஒருங்கரனவே என்பது கொள்க.

'ஆங்கவை நான்கும்' என்றதனுல், தத்துவனவற்றுக்குங் குட்டிப்பெயர் கொடுக்கப்படும்; 'தவளைக்குட்டி' என வரும். மேல் ஊர்வனவற்றுக்கும் தவழ்வனவற்றிலக்கணம் எய்துவித்தமையாற் பாம்புக்குட்டியென்பதுங் கொள்க.

மற்றுக் கீரியும்நாவியும் போல்பவற்றையும் குட்டியென்னாரோவெனின்,—அவை பிள்ளையென்றலே பெரும்பான்மையாகலின் 'உரிய' என்றதனுல், சிறுபான்மை குட்டியென்பதுங் கொள்க. மூங்காவின் விகற்பமென்பாருமுளர். (சு)

[பறழும் மூங்கா முதலிய நான்கற்கும் உரியவெனல்]

நிசூஉ. பறழெனப் படினு முறழாண் டில்லை.

இ—ள்: மேற்கூறிய நான்கும் பறழெனவும்படும் என்றவாறு.

இவை இக்காலத்து வீழ்ந்தன. மற்று முற்கூறிய நான்கினையும் [2] இப்பெயராலே முற்கூறுக, [3] முதற் சூத்திரத்துள் ஓதிய முறைமைக்கேற்பவெனின்,—அற்றன்று; அவற்றுக்கு இப்பெயர் சிறுபான்மையென்பான் பிற் கூறினனென்பது. 'உறழாண்டில்லை' என்ற மிகையாலே,

"கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி." (குறுந். சுக)

என்பதுங் கொள்க. (ஏ)

1. இவை இது என்றிருத்தல்வேண்டும்; அணிலைச் சுட்டுதலின். ஆணும் பெண்ணுமாகிய பன்மைபற்றி ஆசிரியர் இவை என்றார் என்று வேறிடத்துப் பேராசிரியர் கூறுவர். ஆதலின் தாமும் இங்கு அவ்வாறு கூறினரெனினுமாம்.
2. இப்பெயர்—பறழ் என்ற பெயர்.
3. நிநசு-ம் சூத்திரம். (மரபியல்-க.)

[குருளை என்னும் பெயர் இவைக்குரிய எனல்]

நிசூசூ. நாயே பன்றி புலிமுய னென்கு
மாயுங் காலைக் குருளை யென்ப.

இது, முறையானே நான்காம் எண்ணு முறைமைக்கணின்ற குருளையாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: நாயும் பன்றியும் புலியும் முயலும் என நான்கு நுங் குருளையென்று சொல்லப்படும் என்றவாறு.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை." (சிறுபாண். கசஅ)

எனவும்,

"விழியாக் குருளை மென்முகில் சுவைப்பக்
குழிவயிற் றுஞ்சுங் குறுந்தாட் பன்றி."

எனவும்,

"இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை." (குறு. சஎ)

எனவும்,

"குருளை கோட்பட லஞ்சிக் குறுமுயல்
வலியிற் றப்பாது மன்னுயி ரமைப்ப."

எனவும் வரும்.

'ஆயுங்காலை' என்றதனால்,

"சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை." (குறுந். ககசு)

என்பதுங் கொள்க. (அ)

[நரியும் குருளை என்னும் பெயர்க்குரியது எனல்]

நிசூச. நரியு மற்றே நாடினர் கொளினே.

இ—ள்: நரியுங் குருளையெனப்படும் என்றவாறு.

"பிணந்தின் பெண்டிர்க்குக் குருளை காட்டிப்
புறங்காட் [1]டோரி புலவுத்தசை பெறூஉம்."

என வரும்.

'நாடினர் கொளினே' என்றதனானே,

"வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை." (குறுந். சுஅ)

என்றாற்போல முசுவிற்குங் குருளைப்பெயர் கொடுக்க. (கூ)

1. ஓரி—நரி.

[மேற்கூறிய ஐந்தற்கும் குட்டியும் பறழும் உரிய எனல்]

நிசூநி குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்.

இ—ள்: மேற்கூறிய ஐந்தினையும் குட்டியென்றும் பறழென்றுங் கூறுதல்வரையார் என்றவாறு.

அவை, நாய்க்குட்டி பன்றிக்குட்டி புலிக்குட்டி முயற்குட்டி என வழக்கினுள் வந்தன.

"பாசிப் பரப்பிற் பறழொடு வதிந்த
வுண்ணுப் பிணவி னுயக்கஞ் சொலிய
நாளிரை தரீஇய வெழுந்த நீர்நாய்." (அகம். சுசு)

எனவும்,

"வயநா யெறிந்து வன்பறழ் தழீஇ
.....
நறுகட் பன்றி." (அகம். உசஅ)

எனவும்,

"புலிப்பற முன்ன பூஞ்சினை வேங்கை."

எனவும்,

"பதவுமேயல் பற்றி முயற்பற ழோம்புஞ்
சீறூ ரோனே நன்னுதல்."

எனவும்,

"நரிப்பறழ் கவர நாய்முதல் சுரக்கும்."

எனவும் முறையானே வந்தன.

நாயெனச் செந்நாய் நீர்நாய் முதலாயினவும் அடங்குமென்பது. 'மூவரியணில்' என்றவழிச் சொல்லப்பட்டவாறும் உய்த்துணர்க. பிறவும் அன்ன. (கo)

[மேற்கூறிய ஐந்தனுள் நாயொழித்
தேனைய பிள்ளைப் பெயர்க்குமுரிய எனல்]

நிசூசு. பிள்ளைப் பெயரும் பிழைப்பாண் டில்லை
கொள்ளுங் காலை நாயலங் கடையே.

இ—ள்: மேற்கூறிய ஐந்து சாதியுள்ளும் நாயொழித்து ஒழிந்த நான்கற்கும் பிள்ளையென்னும் பெயர்க்கொடையும் உரித்து என்றவாறு.

இனை செய்புட்கண் வருவன கண்டுகொள்க. 'கொள்ளுங் காலை' என்றதனால், முற்கூறிய நாய் முதலாகிய நான்கும் விலக்கி [1]நரிப்பிள்ளையென்பதே கோடலும் ஒன்று. (கக)

1. இக்காலத்தும் வழக்கிலுள்ளது.

[மறி என்னும் பெயர் இவைக்குரியது எனல்]

நிசூ 7. யாடுங் குதிரையு நவ்வியு முழையு
மோடும் புல்வா யுளப்பட மறியே.

இ—ள்: இவ்வைந்து சாதியின் இளமைப்பெயர் மறியெனப் படும் என்றவாறு.

அவை,

"மறித்துருஉத் தொகுத்த பறிப்புற விடையன்." (அகம். கூச)

எனவும்,

"உள்ளில வயிற்ற வெள்கோ வெண்மறி." (அகம். கoச)

எனவும் யாட்டின்மேல் வந்தன. மறிக்குதிரையெனவும் மறிநூக் கிற்றெனவுஞ் சொல்லுதலின் இது குதிரைக்கும் உரித்தாயிற்று.

"நவ்வி நாண்மறி கவ்விக்கடன் கழிக்கும்." (குறுந். உஅஉ)

எனவும்,

"மறியாடு மருங்கின் மடப்பிணை யருத்தித்
தெள்ளறல் தழீஇய." (அகம். நச)

எனவும்,

"தெறித்துநடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி." (குறு. உகந)

எனவும் இவை, நவ்வியும் உழையும் புல்வாயும் முறையானே மறி யென்னும்பெயர் எய்திவாறு அவ்வச் செய்யுளுட் கண்டுகொள்க.

நவ்வியும் உழையும் புல்வாயுள் அடங்குமன்றே, அவற்றை மூன்றாக ஓதியதென்னை? நாயென்றதுபோல அடங்காதோ வெனின்,—[1] மாவென்பது, குதிரையும் யானையும் புலியுஞ் சிங்க மும் முதலாயவற்றுக்கெல்லாம் பெயராகலின் அவ்வாறு ஓதா னென்பது. 'ஓடும் புல்வாய்' என்றதனானே, [2] மடனுடையன நவ்வியெனவும், இடைநிகரன உழையெனவுங் கொள்க. எட்டாம் முறைமைக்கண் ஓதிய மறியினை ஐந்தாம்வழிக் கூறியவதனானே,

"செவ்வரைச் சேக்கை [3] வருடை மான்மறி." (குறு. கஅஎ)

என்றதுபோல்வன கொள்க. (சூஉ)

1. மா என்பது விலங்கு என்னும் பொருளவாகலின் அப் பொதுமைபற்றி அதனுள் வேறுபாட்டுச் சிறப்புடைய குதிரை முதலியனவற்றை அடக்குதல் முடியாதவாறுபோல, புல்வா யென்ற பொதுப்பெயருள் வேறுபாடுடைய நவ்வி முதலிய சிறப்புப் பெயர்களை அடக்குதல் முடியாதென்றபடி. புல்வாய் சிறப்புப் பெயராயும் வருமென்பதுபற்றி அதனையுஞ் சேர்த்துக் கூறினார் போலும்.

2. மடம்—மடப்பம். மடனடையன என்று மிருந்திருக்க லாம் போலும்.

3. வருடை—மலையாடு.

[குரங்கும் குட்டி என்னும் பெயர்பெறும் எனல்]

நிசூஅ. கோடுவாழ் குரங்குங் குட்டி கூறுப.

இ—ள்: கோட்டினையே வாழ்க்கையாகவுடைய குரங்குங் குட்டியென்று கூறப்படும் என்றவாறு.

'கோடுவாழ் குரங்கு' எனவே, குரங்கின் பிறப்புப்பகுதி யெல்லாங் கொள்க. அவை, குரங்குக்குட்டி முசுக்குட்டி [1]ஊகக் குட்டியென்பன. உம்மை இறந்தது தழீஇயிற்றுதலான் மேற் கூறிய யாடு முதலாகிய ஐந்து சாதிக்குங் குட்டியென்னும் பெயர் கூறப்படுமென்பது; அவை, யாட்டுக்குட்டி குதிரைக் குட்டி நவ்விக்குட்டி உழைமான்குட்டி புல்வாய்க்குட்டி என வரும். (கங)

[குரங்கிற்கு மகவு முதலியனவும் உரியவெனல்]

நிசூக. மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பு
மவையு மன்ன வப்பா லான.

இ—ள்: மேலைச் சூத்திரத்து எடுத்தோதிய குரங்கிற்குக் குட்டியென்னும் பெயரேயன்றி மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்புமெனப்பட்ட இந்நான்கும் குட்டியென்னும் பெயர்போல அக்குரங்கின் பகுதிக்கு உரியவாம் என்றவாறு.

"உயர்கோட்டு,
மகவுடை மந்திபோல." (குறுந். உசு)

எனவும்,

"குரங்குப் பிள்ளை."

எனவும்,

"வரையாடு வன்பறழ்த் தந்தை." (குறுந். உசு)

எனவும்,

"ஏற்பன வேற்பன வுண்ணும்
பார்ப்புடை மந்திய மலியிறந் தோரே." (குறுந். உஎஅ)

எனவும் வரும். 'அன்ன' என்பதனான், முன்னியவற்றோடொக் கும்; மிகுதி குறைவு இலவென்பதாம்.

"வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும்." (குறுந். நஅ)

என (நிசூச) இலேசினாற் கூறிப்போந்தமையின் ஈண்டு [2]அது கூறுதலிலான்; அன்றி, அஃது இத்துணைப் பயிலாமையானு

1. ஊகம்—குரங்குள் ஒருசாதி.

2. அது—குருளை.

மென்க. ஏழாமுறை நின்ற மகவினை ஈண்டு வைத்தான் [1] அதிகாரப்பட்ட பெயர்க்குரிமையானென்பது. (கச)

[கன்றென்னும் பெயர்க்குரியன இவை எனல்]

நிசை. யானையுங் குதிரையுங் கழுதையுங் கடமையு
மானே டைந்துங் கன்றெனற் குரிய.

இ—ள்: ஐந்தாம் எண்ணு முறைமைக்கண் நின்ற கன்றென்னும் பெயர்க்கு இவை உரிய என்றவாறு.

அவை, யானைக்கன்று குதிரைக்கன்று கழுதைக்கன்று கடமைக்கன்று ஆன்கன்று என வரும்.

"கன்றுகா லொய்யுங் கடுஞ்சுழி நீத்தம்
புன்றலை மடப்பிடிப் பூசல் பலவுடன்
வெண்கோட் டியானை விளிபடத் துழவும்." (அகம். சுஅ)

என்பது, யானைக்கன்று.

"கன்றுபுகு மாலை நின்றே ளெய்தி." (அகம். சு)

என்பது, ஆன்கன்று: பிறவும் [3] அன்ன உளவேற் கொள்க. இனி, 'உரிய' என்றதனானே, மான்கன்று குதிரைக்குட்டியென்பனவுஞ் சொல்லுப. (கடு)

[கன்றென்னும் பெயர் இவற்றிற்குமுரியதெனல்]

நிசை. எருமையு மரையும் வரையா ரான்றே.

இ—ள்: எருமையும் மரையும் கன்றெனப்படும் என்றவாறு.

அவை, எருமைக்கன்று மரையான்கன்று என்பன வழக்கு.

[4] "கன்றுடை மரையா துஞ்சும்." (குறுந். ககடு)

[5] "கன்றுற்றுப் படுத்த புன்றலைச் சிறுஅர்
.....
குன்ற நாடற் கண்டவெங் கண்ணே." (குறுந். உசக)

1. அதிகாரப்பட்ட பெயர்—குரங்கு.
2. கால் ஒய்யும்—காலை இழுக்கும்.
3. அன்ன · உளவேல்—அவைபோல்வன உளவேல்.
4. இது 'மென்னடை மரையா' என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதித்த குறுந்தொகையுரைப் பதிப்பிற் காணப்படுகின்றது. 'கன்றுடை' என்றும் பாடமோ வேறு நூலடியோ என்பது ஆராயத்தக்கது.
5. இவ்வடி முற்பதிப்புக்களில் விடப்பட்டது. கன்று—எருமைக்கன்று.

எனவும் வரும். 'வரையார்' எனவே, அவையெல்லாம்போலாது சிறுவரவினவென்பது பெற்றும். (கசு)

[கன்றென்னும் பெயரை இவையும் பெறுமெனல்]

நிசை. கவரியுங் கராமு நிகரவற் றுள்ளே.

இஃது, அவற்றோடு மாட்டெறிந்தது.

இ—ள்: கவரியும் கராமும் கன்றெனப்படும் என்றவாறு.

கவரிமான்கன்று கராக்கன்று என வரும். 'அவற்றுள்ளே' என்பது, முற்கூறிய ஏழனுண் முதனின்ற (நிசை) யானையோடொக்குமென்றவாறு.

இதன் பயம்:

"குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை." (நிசை)

என வருகின்ற பெயரும் இவற்றுக்கு எய்துவித்தலாயிற்று; அது முன்னர்ச் சொல்லும். [1] இவையெல்லாம் தம்மிலெத்த வரவின அன்மையின் வேறு வேறு சூத்திரஞ் செய்கின்றவாறுயிற்று. (கஎ)

[கன்றெனற்கு ஒட்டகமுஞ் சிறுபான்மை உரியதெனல்]

நிசை. ஒட்டக மவற்றே டொருவழி நிலையும்.

இ—ள்: சிறுபான்மை ஒட்டகமும் கன்றெனப்படும் என்றவாறு.

அஃது, ஒட்டகக்கன்று என வரும், 'ஒருவழி' என்றதனானே, எவற்றினும் இது சிறுபான்மையெனவுணர்க. (கஅ)

[குழவி என்னும் பெயர் யானைக்குரியதெனல்]

நிசை. குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை.

இ—ள்: ஒழிந்து நின்ற குழவிப் பெயர் குஞ்சரத்திற்கு உரிய என்றவாறு.

1. இவையெல்லாம் என்றது—இச்சூத்திரத்திற் கூறியவற்றையும் இதற்குமுன்னுள்ள சூத்திரங்களிற் கூறியவற்றையும். ஒத்த வரவினவல்லவென்றது எல்லாமொத்த வரவினவாகாது பயின்றும் பயிலாதும் வரும் என்றபடி. அதுபற்றியே வெவ்வேறு சூத்திரம் செய்தார் என்க. கராம்—முதலை.

அது,

"ஒய்யென வெழுந்த செவ்வாய்க் குழவி." (அகம். கசூ)

என வரும். நிகரவற்றுள்ளென [1]மேற் குஞ்சரத்தோடொக்கு மெனப்பட்ட கராத்தின்குழவியுங் கவரிக்குழவியும் வந்தவழிக் கண்டுகொள்க. (கசூ)

[குழவி என்னும் பெயரை இவையும் பெறுமெனல்]

நிஎடு. ஆவு மெருமையு மவைசொலப் படுமே.

இ—ள்: ஆவும் எருமையும் அவைபோலக் குழவிப்பெயர்க் கொடைபெறும் என்றவாறு.

குஞ்சரம், ஆணும் பெண்ணுமென இருகூற்றனவாகலான் [2]'அவை' என்றான். மக்கண்மேல் வருங்காலும் இஃதொக்கும்.

"மடக்கட் குழவி யனைவந் தன்ன
நோயே மாகுத லறிந்துஞ்
சேயர் தோழி சேய்நாட் டோரே." (குறுந். சுச)

என்பது ஆன்குழவி.

"மோட்டெருமை முழுக்குழவி
கூட்டுநிழற் றுயில்வதியும்." (பட்டின. கச-டு)

என்றது, எருமைக்குழவி. (உ0)

[குழவிப் பெயரை இவையும் பெறுமெனல்]

நிஎசு. கடமையு மரையு முதனிலை யொன்றும்.

இ—ள்: இவையும் அப்பெயர்க்கு உரிய என்றவாறு.

குஞ்சரம்போலக் குழவிப்பெயர் பெறுமென்பான் 'முத னிலையொன்றும்' என்றானென்பது. அவை வந்துழிக் கண்டு கொள்க. (உக)

[குழவி என்னும் பெயர் இவற்றிற்குரியதெனல்]

நிஎஅ. குரங்கு முசுவு மூகமு மூன்று
நீரம்ப நாடி னப்பெயர்க் குரிய.

1. மேல் என்றது மரபியல் பதினேழாம் சூத்திரத்தை.

2. குஞ்சரமென்பது ஒருமையாக அவையெனப் பன்மை யாற் சுட்டியது, ஆண் பெண் என்னும் வகைப் பன்மை நோக்கி யென்பது கருத்து.

இ—ள்: இம்மூன்றுங் குழவியென்னும் பெயர்க்கு உரிய என்றவாறு.

'நிரம்ப நாடின்' என்பது, மூன்று பெயரும் ஒருபிறப் பின் பகுதியாகலின் அம்மூன்றற்கும் ஒப்ப வருமென்றவாறு.

இக்கருத்தானே,

"கோடுவாழ் குரங்கு." (டுசுஅ)

என்றவழி, இம்மூன்றுங் கொண்டாமென்பது. இவற்றுக்கு உதா ரணங் காணுமையிற் காட்டாமாயினும். இலக்கணம் உண்மை யின் அமையுமென்பது. (உஉ)

[மேற்கூறிய இளமைப் பெயர்களுள் மக்கட்குரியன இவை எனல்]

நிஎஅ. குழவியு மகவு மாயிரண் [1]டல்லவை
கிழவ வல்ல மக்கட் கண்ணே.

இ—ள்: குழவியும் மகவுமென்னும் இரண்டு [2]மல்லது மக் கட்கணின்ற இளமை தமக்கு வேறு பெயருடையவல்ல என்ற வாறு.

ஆணிளமையும் பெண்ணிளமையுமென இரண்டாகலின் [3]'அல்லவை' எனப் பன்மை கூறினான்.

"காவல்,
குழவிகொள் பவரி னேம்புமதி." (புறம். டு)

எனவும்,

"மான்றேர்ப் பள்ளி மகவொடு முடங்கி."
(பெரும்பாண். அசு)

எனவும் வரும்.

"கிழவவல்ல" என்ற மிகையானே, ஆண்பிள்ளை பெண்பிள்ளை யெனப் பிள்ளைப்பெயரும் மக்கட்பாற்படுவன கொள்க. (உசு)

1. அல்லவை அல்லது என்றிருத்தல் வேண்டும்.

2. அல்லது, உடையவல்லவென இயைக்க.

3. அல்லவை என்பது இவர் கருத்தின்படி அல்ல என்று இருத்தல் வேண்டும்.

[மேற்கூறிய இளமைப் பெயர்களுள் ஓரறிவுயிர்க்குரியன இவை எனல்]

நிஎக. **பிள்ளை குழவி கன்றே போத்தெனக்**
கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே.

இ—ள்: பிள்ளை குழவி கன்று போத்தென்னும் நான்கும் ஓரறிவுயிரின் இளமைப்பெயர் என்றவாறு.

ஓரறிவுயிரென்பன, முன்னர்ச்(நிஅஉ)சொல்லப்படும். ஓரறிவுயிரென்பது, [1] பண்புத்தொகை.

'கமுகம்பிள்ளை', 'தெங்கம்பிள்ளை'

எனவும்,

"வீழி நுழைக் குழவித் தீநீர்." (பெரும்பாண். நடுஎ)

எனவும்,

'பூங்கன்று'

எனவும்,

'போத்துக்கால்'

எனவும் வரும்.

வீழிநுழையெனப்பட்டது, தெங்கு; போத்துக்காலென்பது கரும்பு.

ஓரறிவுயிர்க்குக் கொள்ளவும் அமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிறவழியுங் கொள்ளப்படும்; அவை,

"குழவிவேனில்" (கலி. நகசு)

எனவும்,

"குழவித்திங்கள்." (கலி. கoந; சிலப். உ: நஅ)

எனவும்,

"குழவிஞாயிறு." (பெருங். க–நந: உசு)

எனவும்,

"பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து." (அகம். நகசு)

எனவும்,

1. ஓரறிவுயிர்—ஓரறிவாகிய உயிர் என விரிதலின் பண்புத்தொகையென்றார். அவை மரம் முதலிய பரிச உணர்ச்சி மாத்திரம் உடையன.

"புலிப்போத் தன்ன புல்லணற் காளை." (பெரும்பாண். கநஅ)

எனவும் இவையும் இளமைக் குறிப்பினவாகலிற் காட்டப்பட்டன.

மற்று, ஓரறிவுயிர் ஈண்டுக் கூறியதென்னையெனின்,—குழவிப்பெயர் அதிகாரப்பட்டமையாலெனின்பது. மற்றுப் புல்லும் மரனும் [1] உயிரெனப்படுமோவெனின்,—அவற்றை யுயிரென்றன் மரபுபட்ட வழக்காகலின் அம்மாபுங் கோடற்குக் கூறினன், **'மரம் [2] உய்ந்தது'** என்பவாகலின். (உச)

[மேற் சூத்திரத்துட் கூறிய பெயர்களை நெல்லும் புல்லும் பெரு எனல்]

நிஅo. நெல்லும் புல்லு நேரா ராண்டே.

இது, எய்தியது விலக்குகின்றது.

இ—ள்: அந்நான்கு பெயராலும் நெல்லும் புல்லுஞ் சொல்லப்படா என்றவாறு.

மற்று,

"புறக்கா முனவே புல்லென மொழிப"

என்னுமாகலான் மேற்காட்டிய கமுகு முதலாகிய புல்லும் விலக்குண்ணும் பிறவெனின்,—அற்றன்று; புல்லென்பது பலபெய ரொருசொல்லாகலான் நெல்லென்னும் இனத்தானே வேறுபடுத்துப் [3] புல்லென்பது(புறம். உசஅ)உணவின்மேற் கொள்க. (உந)

[இளமைப்பெயர் அவைஅன்றி இல எனல்]

நிஅக. சொல்லிய மரபி னிளமை தானே
சொல்லுங் காலை யவையல விலவே.

இது, புறனடைச் சூத்திரம்.

1. உயிரெனப்படுமோவெனின் என வினவினமையால் உயிரன்று எனக் கூறுவாருமுளர் என்பது பெறுதும்.

2. உய்தல்—பிழைத்தல். (உயிர் நிலைத்தல்.)

3. புல்—இது நெற்போன்றதொரு சாதிப் பெயர். அதன் தானியத்தைப் புற்றானியமென்றும் அரிசியைப் புல்லரிசியென்றும் வழங்குதலாலறிக. வேறுபடுத்தென்றது புல்லென்னும் பொதுப்பெயரின் வேறுபடுத்துச் சிறப்புப்பெயராகக் கொள்க; அது நெல்லோடு இனம் சேர்த்தி எண்ணினமையாற் பெறப்படுமென்றபடி. உணவு—உணவுக்குரியது.

இ—ள்: சொல்லிய மரபின் இளமை—

"பாடலுட் பயின்றவை நாடுங் காலே." (சு)

எனவும்,

"பாடல் சான்ற புலனெறி வழக்கு." (சுசு)

எனவும் அகத்திணையியலுட் கூறிய புலனெறி வழக்கிற்குரிய இளமை.

சொல்லுங்காலே அவையல இல—அவற்றுக்கு இலக்கணங் கூறுங்கால் வேறு பலவின்றி வரும்; இங்ஙனம் வரையறைப் பட்டன [1] இன்றி என்றவாறு.

'இளமையு மவையல வில' எனவே, அதற்கு மறுதலை யாகிய முதுமையாயின் அவையலவிலவென்பதோர் வரையறைப் படுத்து இலக்கணங் கூறப்படாவென்பது கருத்து.

'சொல்லுங்காலே' என்றதனால், சொல்லாத இளமைப்பெய ருங் கொள்க; அவை,

"நன்னுட் பூத்த நாகிள வேங்கை." (அகம். அசு)

எனவும்,

"நாகிளவஞ்சி" (புறம். உசுசு)

எனவும்,

"கணைக்கோட்டு வாளைக் கமஞ்சூன் மடநாகு." (குறு. கசுச)

எனவும்,

"எருமை நல்லான் கருநாகு பெறூஉம்."

(பெரும்பாண். கசுசு)

எனவும் வரும். இவற்றுள் ஓரறிவுயிர் முதலாக ஐந்தறிவுயிரளவும் நாகென்னும் இளமைப்பெயர் வரையறையின்றிச் சென்றது; [2]வண்டென்பதற்கும் ஒக்கும், [3] அது விரவுப்பெயராகலின். (உசு)

1. இன்றி என்பது அன்றி என்றிருத்தல்வேண்டும்.

2. வண்டும் நாகு என்ற இளமைப்பெயர் பெறுமென்றபடி

3. அது விரவுப்பெயராகலின் என்றது நாகு என்றது ஐயறிவுயிர்க்கும் பொதுவாகலின் என்றபடி.

[ஓரறிவு முதலியன இவை எனல்]

நிஅஉ. ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனெடு நாவே
மூன்றறி வதுவே யவற்றெடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றெடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றெடு செவியே
யாறறி வதுவே யவற்றெடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.

இது, மேல் அதிகாரப்பட்ட ஓரறிவுயிர் உணர்த்தும்வழி அவ்வினத்தனவெல்லாங் கூறுதல் நுதலிற்று.

இ—ள்: ஒன்றறிவதென்பது, ஒன்றனையறிவது; அஃதாவது, உற்றறிவதென்பதும். இரண்டறிவதென்பது, அம்மெய் யுணர்வினோடு நாவுணர்வுடையதெனவும், மூன் [1]றறிவுடையது அவற்றோடு நாற்றவுணர்வுடையதெனவும், நான்கறிவுடையது அவற்றோடு கண்ணுணர்வுடையதெனவும், ஐந்தறிவுடையது அவற்றோடு செவியுணர்வுடையதெனவும், ஆறறிவுடையது அவற் றோடு மனவுணர்வுடையதெனவும், அம்முறையானே நுண் ணுணர்வுடையோர் நெறிப்படுத்தினர் என்றவாறு.

இது முறையாதற்குக் காரணமென்னையெனின்,—[2]எண்ணு முறையாற் கூறினனென்பது; அல்லதூஉம், எல்லாவுயிர்க்கும் [3] இம்முறையானே பிறக்கும் அவ்வவற்றுக்கோதிய அறிவுக ளென்றற்கு அம்முறையாற் கூறினனென்பது; என்னை? அது பெறுமாறெனின்,—'நேரிதி னுணர்ந்தோர் நெறிப் படுத்தினர்' என்பதனாற் பெறுதும்.

மற்று, ஒன்றுமுதல் ஐந்தீறுகிய பொறியுணர்வு மனமின்றி யும் பிறப்பனபோல வேறு கூறியதென்னையெனின், — ஓரறி

1. அறிவுடையது என்பன அறிவது என்றும் பாடம்.

2. எண்ணுமுறை என்றது ஓரறிவுயிர் ஈரறிவுயிர் என எண்ணுமுறை. கூறினனென்பது—கூறினமையான் என்றிருத்தல் வேண்டும்.

3. இம்முறை என்றது பரிசம், இரசம், கந்தம், உருவம், சத்தம் என்னுமிவைகள் இம்முறையே (அஃதாவது' பரிச உணர்ச்சி பிறந்தபின் இரச உணர்ச்சி பிறக்கும் ஏனையவும் அம் முறையே) பிறக்கும் என்றபடி.

வுயிர்க்கு [1] மனமின்மையின் அங்ஙனங் கூறினுரென்பது. அதற்கு உயிருண்டாயின் மனமின்றுமோவெனின், — உயிருடையவாகிய நந்து முதலாகியவற்றுக்குச் செவிமுதலாய பொறியின்மை கண்டிலேயோவென்பது. அவ்வாறே ஒழிந்தவற்றிற்கும் மனவுணர்வில்லையென்பாரும், மனமுண்டென்பாருமென இரு பகுதியர். அவையெல்லாம் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

அல்லதூஉம், பொறியுணர்வென்ப தாமே உணரும் உணர்ச்சி; அங்ஙனம் உணர்ந்தவழிப் பின்னர் அவற்றை மனஞ்சென்று கொள்ளுமென்பதென்னையெனின், — மனம் ஒன்றினை நினையா நிற்க மற்றொன்று கட்புலனுயக்கால் அதனைப் பொறியுணர்வு கொள்ள [2] அதன்வழியே மனந்திரிந்து செல்லுமாகலின்; என்னை? மனவுணர்வு மற்றேர் பொருட்கண் நின்றகாலத்துப் பிற பொருட்கட் சென்றதெனப்படாதன்றே? பின்னர் அதனை அறிவித்தது பொறியுணர்வாகலான் அவை தம்மின் வேற்றுமையுடையனவென்பது. அல்லதூஉம், [3] தேனெய்யினை நாவின்பொறி உணர்ந்தவழி இன்புற்றும், கண்ணுள் வார்த்து மெய்யுணர்வுணர்ந்தவழித் துன்புற்றும்; நறுநாயின மான்மதத்தினை மூக்குணர்வுணர்ந்தவழி இன்புற்றும், கண்ணுணர்வுணர்ந்தவழி இன்பங் கொள்ளாமையும் வருதலின் அவை பொறியுணர்வெனப்படும். மனவுணர்வும் [4] ஒரு தன்மைத்தாகல் வேண்டுமாலெனின், — ஐயுணர்வின்றிக் கனப்போலத் தானேயுணர்வது மனவுணர்வெனப்படும். பொறியுணர்வு மனமின்றிப் பிறவாதெனின், — [5] முற்பிறந்தது மனவுணர்வாமாகவே பொறியுணர் [6] வென்பது ஓரறிவின்றுகியே செல்லுமென்பது. அற்றன்றியும், ஒருவனுயிர்ப்பிரண்டு

1. ஓரறிவுயிர் முதலியவற்றிற்கும் சூக்குமமாக மனமுண்டென்பது ஆன்றோர் கருத்து.

2. அதன்வழி — அக்கட்புலன்வழி.

3. தேனெய் — தேன்குழம்பு.

4. ஒருதன்மைத்தாதல் — ஐந்தின் தன்மையாதலன்றித் தனக்கென ஒருதன்மை உடையதாகல். கனப்போல் என்றது கனவில் பொறிகளின் அறிவின்றித் தானே உணர்தல்போல என்றபடி.

5. முன் — முதலில். முன் பொறியுணர்வும் பின் மனவுணர்வும் பிறக்கும். அன்றெனின் (முன் பிறந்ததும் மன உணர்வெனின்) பொறியுணர்வென ஒருணர்ச்சி இல்லையாம் என்றபடி. ஆக செல்லும் என இயைக்க.

6. என்பது — என என்றிருப்பது நலம்.

தீண்டியவழி அவ்விரண்டும்படினும் ஒருகணத்துள் ஒருமனமே இருமனப்பட்டு அவ்வுறுப்பிரண்டற்கும் ஊற்றுணர்வுகெடாது கவர்ப்பவாங்கிக் கைக்கொண்டு மீளுமென்பது காட்டலாகாமையானும் அஃதமையாதென்பது. (உஎ)

[ஓரறிவுடையன இவை எனல்]

நுஅசு. புல்லு மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, முறையானே ஓரறிவுடையன வுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: புறக்காழனவாகிய புல்லும் அகக்காழனவாகிய மரனும் ஓரறிவுடைய; பிறவும் அக்கிளைப்பிறப்பு உள்ளன என்றவாறு.

'கிளைப்பிறப்பு' என்பது, கிளையும் பிறப்புமென்றவாறு. கிளையென்பன:—புறக்காழும் அகக்காழுமின்றிப் புதலுங் கொடியும் போல்வன. பிறப்பென்பன:— மக்களானும் விலங்கானும் ஈன்ற குழவி [1] ஓரறிவினவாகிய பருவமும், எஞ்ஞான்றும் ஓரறிவினவேயாகிய என்பில் புழுவுமென இவை. இவை வேறு பிறப்பெனக் கொள்க.

மற்றிவற்றுக்கு அறிவில்லை பிறவெனின், — [2] பாலுத் தொடுங்காற் புலருமாகலின் ஓரறிவுடையனவென வழக்குநோக்கிக் கூறினன், இது வழக்குதூலாதலின். அஃதேல், இவை உணர்ச்சியுவாயின் இன்பதுன்பங் கொள்ளுமோவெனின், — அதற்கு [3] மனமின்மையின் அது கடாவன்றென்பது. (உஅ)

[ஈரறிவுடையன இவை எனல்]

நுஅசு. நந்து முரளு மீரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, முறையானே ஈருணர்வுடையன வுணர்த்துதல் நுதலிற்று.

1. ஓரறிவினவாகிய பருவம் — பரிச உணர்ச்சிமாத்திரமுடைய பருவம்.

2. தொட்டாற் சுருங்கி என்னுஞ் செடியாலறியலாம்.

3. மனஞ் சூக்குமமாக உண்டென்பதும் இன்பதுன்பங் கொள்ளுமென்பதும் சிலர் கொள்கை.

இ—ள்: நந்தும் முரளும் ஈரறிவாகிய ஊற்றுணர்வும் நாவுணர்வுமுடையன; பிறவும் அக்கிளைப்பிறப்பு உள என்றவாறு.

இரைசுவைகோடலும், பிறிதொன்று தாக்கியவழி அறிதலுமுடைமையின் மெய்யுணர்வோடு நாவுணர்வுமுடையனவென்றவாறு. இவற்றுக்குக் கிளையென்பன கிளிஞ்சிலும் [1] முற்றிலும் முதலாகிய கடல்வாழ் சாதியும் பிறவுமெனக் கொள்க. பிறப்பென்பன முற்கூறியவாறே கொள்ளப்படும். (உசு)

[மூவறிவுடையன இவை எனல்]

நிஅரு. சிதலு மெறும்பு மூவறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இது, மூவறிவின கூறுகின்றது.

இ—ள்: சிதலும் எறும்பும் ஊற்றுணர்வும் நாவுணர்வும் மூக்குணர்வுமுடைய; அவற்றுக் கிளையும் பிறப்பும் அவ்வாறே மூவறிவுடைய என்றவாறு.

இவை [2] உற்றுணர்ந்து மீடலும், நாச்சுவை கோடலும், நெய்புள்வழி மோந்தறிதலுமென மூன்றறிவினையுடையவாறு கண்டுகொள்க. இவற்றுக்குக் கண்ணுஞ் செவியுமின்மை எற்றுலறிதுமெனின்,—ஒன்று தாக்கியவழியன்றி அறியாமையிற் கண்ணிலவென்பது அறிதும்; உரப்பியவழி ஓடாமையிற் செவியிலவென்பது அறிதும். இவற்றின் கிளையென்பன [3] 'ஈயன் மூதாய்' (அகம். கச) போல்வன. பிறப்பென்பன, முற்கூறியவாறே மக்கட் குழவியும் விலங்கின் குழவியும் இம்மூன்றுணர்வாகிய பருவத்தனவும் அட்டை முதலாகியவுமெல்லாங் கொள்க. (கூ)

[நான்கறிவுடையன இவை எனல்]

நிஅசு. [4] நண்டுந் தும்பியு நான்கறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

1. முற்றில்—மட்டிச்சுண்ணும்பு என்பர்.

2. உற்றுணர்தல்—பரிசித்தறிதல்.

3. ஈயன்மூதாய்—இந்திரகோபம். தம்பலப்பூச்சி என்பது இக்கால வழக்கு.

4. வண்டுந் தும்பியும் என்று பாடமிருந்திருக்கலாம் போலும். நன்னூலார் அவ்வாறு கொள்வர். நச்சினார்க்கினியரும் அவ்வாறு கொண்டனரென்பது பெரும்பாண்.—183-ம் அடியுரையாலறியலாம்.

நண்டுந் தும்பியும் நான்கறிவினவெனவும், அங்நாலறிவினையுடைய கிளையும் பிறப்பும் வேறுளவென்பதூஉங் கூறியவாறு.

இ—ள்: நண்டிற்கும் தும்பிக்கும் செவியுணர் [1] வொழித்து ஒழிந்த நான்கு உணர்வும் உள; அவற்றுக் கிளையும் பிறப்பும் பிறவும் உள என்றவாறு.

மெய்யுடைமையின் ஊற்றுணர்வும், இரைகோடலின் நாவுணர்வும், நாற்றங்கோடலின் மூக்குணர்வும், கண்ணுடைமையிற் கண்ணுணர்வுமுடையவாயின. நண்டிற்கு மூக்குண்டோவெனின்,—அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றும். இவற்றுக்குக் கிளையென்பன:— வண்டுந் தேனீயுங் குளவியும் முதலாயின. பிறப்பென்பன:— நான்கறிவுடைய பிற சாதிகளென முற்கூறியவாறே கொள்க. (கூ)

[ஐயறிவுடையன இவை எனல்]

நிஅஎ. மாவு [2] மாக்களு மையறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இஃது, ஐயறிவுடையன கூறுகின்றது.

இ—ள்: ஐயறிவுடையன விலங்கும் அவைபோல்வன ஒருசார் மானிடங்களுமாம்; அக்கிளைப்பிறப்புப் பிறவும் உள என்றவாறு.

மாவென்பன—நாற்கால் விலங்கு. மாக்களெனப்படுவார்—மனவுணர்ச்சியில்லாதார். கிளையென்பன—[3] எண்கால் வருடையும் குரங்கும்போல்வன. எண்காலவாயினும் [4] மாவெனப்படுதலின் வருடை கிளையாயிற்று. குரங்கு நாற்காலவாகலிற் கிளையாயிற்று. பிறப்பென்பன—கிளியும் பாம்பும் முதலாயின.

1. ஒழித்து என்பதே சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பிற் பாடம். அது பொருத்தமாதல் காண்க. ஒத்து என்பது ஏனைய பதிப்புக்களிற் பாடம். அது பொருத்தமில்லை.

2. புள்ளும் எனப் பாடங்கொள்வர் இளம்பூரணர். அது சிறப்பாதல் காண்க.

3. எண்கால் வருடை—செங்குத்தான மலையில் வசிக்கும் ஒரு விலங்கு. குறுந். 187-ம் செய்யுளுரையும், மலைபடுகடாம், 502 — 3-ம் அடியுரையும், ஐங்குறு. 287-ம் செய்யுளும் பார்க்குக.

4. மாவெனப்படுதலின்—விலங்கு எனப்படுதலின்.

மற்றுப் பாம்பிற்குச் செவியுங் கண்ணும் ஒன்றேயாகிக் கட்செவியெனப்படுமாகலின் ஐயறிவில்லை பிறவெனின்,—பொறி யென்பன வடிவுநோக்கினவல்லவாகலின் ஒன்றே இரண்டுணர் வித்தும் பொறியாமென்பது.

கிளியென்பது பறவையாகலின், அதனை வேறோதுக வெனின்,—[1] முன்னையவற்றிற்கும் பறவையென்றோதியதிலனாகலான் அவ்வச் சூத்திரங்களானே எல்லாம் அடங்குமென்பது.

மற்றுப் புல்லும் மரனும் முதலாக இவ்விரண்டு பிறப் பெடுத்தோதி, ஒழிந்தனவற்றையெல்லாம் 'பிறவுமுள' எனப் புறனடுத்ததென்னையெனின், — அவை வரையறையிலவாகலின், அங்ஙனங் கூறினன்; அல்லதூஉம், மக்களும் புள்ளும் விலங் கும்முதலாயின ஓரறிவினவென்றும், ஈரறிவினவென்றும் எண்ணி வரையறுக்கப்படாமையானும் அவ்வாறு கூறினனென்பது. (கூஉ)

[ஆறறிவுடைய உயிர் மக்கள் எனல்]

நிஅஅ. **மக்க டாமே யாறறி வுயிரே**
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.

இஃது ஆறறிவுயிர் கூறுகின்றது.

இ—ள்: மக்களெனப்படுவார் ஐம்பொறியுணர்வேயன்றி மன மென்பதோர் அறிவும் உடையர்; அக்கிளைப்பிறப்பு வேறும் உள என்றவாறு.

மூப்பத்திரண்டு அவயவத்தான் அளவிற்பட்டு அறிவொடு புணர்ந்த ஆடூஉ மகடூஉ மக்களெனப்படும். அவ்வாறு உணர் வினுங் குறைவுபட்டாரைக் குறைந்தவகையறிந்து முற்கூறிய சூத்திரங்களானே அவ்வப் பிறப்பினுட் சேர்த்திக் கொள்ள வைத்தானென்பது. அவை, ஊமுஞ் செவிடுங் குருடும்போல் வன. கிளையெனப்படுவார்—தேவருந் தானவரும் முதலாயினர். பிறப்பென்றதனால், குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடை

1. முன்னைய—தும்பி வண்டு தேனீ முதலியன. கிளி பேசுப வாதலின் மாக்களுள் அடங்குமெனக் கருதினர்போலும். பாம்பு என்றது நாகர் சாதியை நோக்கிப்போலும். அன்றி இவை விலங்குள் அடங்குமென்றலுமாம். முன்னையவற்றிற்குப் பறவை வேறோதியதிலனாகலான் என்றும் இவ்வாக்கியம் இருந்திருக்க லாம்போலும். முன்னைய—முற்கூறிய பிறப்புக்கள்,

யனவெனப்படும் [1]மனவுணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராயடங்குமென்பது. 'காமே' எனப் பிரித் துக் கூறினமையான் நல்லறிவுடையாரென்றற்குச் சிறந்தாரென் பதுங் கொள்க. (கூகூ)

[மேற்கூறிய ஆண்பாற் பெயருள் களிறு என்னும் பெயர் இதற்குரியது எனல்]

நிஅகூ. **வேழக் குரித்தே விதந்துகளி றென்றல்**
கேழற் கண்ணுங் கடிவரை யின்றே.

[3] 'மக்கடாமே யாறறிவுயிர்' எனப் பிரித்துக் கூறினமை யால், ஆண்பால் அதிகாரப்பட்டதுகண்டு மற்றை விலங்கினுள் ஆண்பாற்குரியன கூறிய தொடங்கியவாறு.

நிறுத்தமுறையாற் கூறாது களிற்றினை முற்கூறினான், அப் பெயர் விலங்கினுட் சிறந்தமையானென்பது. ஏறும் ஏற்றையும் பயின்றுவரவினவாகலின் முதற் சூத்திரத்துண் (நுருசு) முற் கூறினனென்பது.

இ—ள்: யானைக்கு விதந்து களிறென்றலுரித்து; கேழற் கண்ணுஞ் சிறுபான்மை வரும் என்றவாறு.

'விதந்து' என்ற விதப்பினால், களிறென்பது சாதிப்பெயர் போலவும் நிற்குமென்பது; அஃதாவது, யானையென்னுஞ்

1. வாலி சுக்கிரீவன் அநுமன் முதலிய குரங்குச் சாதிகள் ஆறறிவுடையனவாக இராமாயணத்துட் கூறப்படலின் இவ்வாறு கூறினர்போலும்.

2. இதன்முன் ஒரு சூத்திரம் இளம்பூரணத்திலுள்ளது.

3. மக்கடாமே ஆறறிவுயிர் என்று பிரித்துக் கூறினமை யானே, அது மக்களுள்ளும் தக்கது இன்னது தகாதது இன்னது என்று பகுத்துணரும் ஆண்பாலாரையே குறிக்கும் என் பது இவர் கருத்து. பிறரும் இவ்வாறு கருதுவாருமுளர். யானைக்கும் ஆறறிவுண்டென்பது சிலர் கருத்து. அதுபற்றி மக் களுக்கடுக்க வைத்தாரெனினு மமையும் இங்ஙனமன்றி உசஞ் சூத்திரத்தில் ஓரறிவுயிர் அதிகாரப்பட்டமையின் அதுமுதலாக ஓரறிவுயிர் முதலியவற்றை விளக்கி அதன்மேல் மீளவும் தலையில் வைத்த முறைப்படி ஆண்பாற்பெயர் எடுத்துக்கொண் டார் என்றல் பொருத்தமாம். இளம்பூரணருரை நோக்குக.

சாதிப் பெயரினைக் [1] களிறென்னும் பெயர்வந்து [2] குறிப் பித்தால்.

"கடுங்களிற் றிருத்தல்." (கலி. உ)

என்றும் ஆகுமென்பது.

[3] "இரலைமா னேறு."

என்பதும் அதனுற் கொள்க.

பன்றிக்கும் அவ்வாறு வருவன உளவேற் கொள்க.

[4] "கேழற் பன்றி." (புறம். கடுஉ)

என்பதனைக் களிற்றுப்பன்றியென்றுஞ் சொல்லுப. (நச)

[ஒருத்தல் என்னும் பெயர்க்குரியன இவை எனல்]

நிகூ0. புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய காமோ டொருத்த லொன்றும். (நடு)

நிகூக. வார்கோட் டியானையும் பன்றியு மன்ன. (நசு)

நிகூஉ. ஏற்புடைத் தென்ப வெருமைக் கண்ணும்.

இவை, உரையிடைபு நோக்கி உடனெழுதப்பட்டன.

இ—ள்: இவை ஒன்பது பெயரும் ஒருத்தலென்னும் பெய ருக்கு ஒன்றும் என்றவாறு.

இவற்றைப் பெரும்பான்மை சிறுபான்மைபற்றி மூன்று சூத்திரத்தான் ஓதினனென்பது. உதாரணம்:

"காடுமீக் கூறுங் கோடேந் தொருத்தல்." (அகம். சுடு)

என, யானை ஒருத்தலென்றுயிற்று. பிறவும் வந்தவழிக் கண்டு கொள்க. (நஎ)

---

1. களிறு—யானையினுணையுணர்த்தலன்றி யானைச்சாதியை யுணர்த்தும் பெயராயும் நிற்கும் என்றபடி.

2. குறிப்பித்தால் என்பது சிறப்பித்தால் என்றும் பாட முள்ளது. அது பொருத்தமில்லை. களிற்றிருத்தல் என்பதில் ஒருத்தல் என்பது ஆணையுணர்த்தக் களிறு யானையை உணர்த்தி வந்தமை காண்க என்றபடி.

3. இரலை என்பது ஆணை உணர்த்தாது மான்சாதியை உணர்த்திற்று.

4. கேழற்பன்றி—பன்றியுளொருசாதி. எய்ப்பன்றியினீக்கு தற்கு கேழற்பன்றி எனப்பட்டமையிற் பண்புத்தொகை என் பர் மயிலைநாதர்.

[ஏறென்னும் பெயர்க்குரியன இவை எனல்]

நிகூக. பன்றி புல்வா யுழையே கவரி
யென்றிவை நான்கு மேறெனற் குரிய. (நஅ)

நிகூச. எருமையு மரையும் [1] பெற்றமு மன்ன. (நகூ)

நிகூடு. கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே.

இம்மூன்று சூத்திரத்தான் ஓதிய எட்டுச் சாதியின் ஆண் பாலும் ஏறெனப்படும் என்றவாறு.

"காற்றுச்சுவ டொற்றுக் கடிபுனங் கவரு
மேற்றிளம் பன்றியி னீருளை வெரூஉம்."

எனவும்,

"வெருளேறு பயிரு மாங்கண்." (அகம். கஉக)

எனவும்,

"பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
திரிமருப் பேருடு [2] தேரேறக் கோட." (கலி. கநஉ)

எனவும்,

"ஏற்றிளங் கவரி யெரியென வெருவப்
பூத்த விலைவத்துப் பொங்கு சேறி."

எனவும்,

"ஏற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டு." (கலி. கoந)

எனவும்,

"வரிமரற் பாவை மரையேறு கழிக்கும்."

எனவும்,

"புலம்பயி ரருந்த வண்ணனல் லேறு." (குறுந். நசச)

எனவும்,

"சுறவே றெழுதிய மோதிரத் தொட்டாள்." (கலி. அச)

எனவும் வரும். பிறவும் அன்ன. (சo)

[போத்தென்னும் பெயர்க்குரியன இவை எனல்]

நிகூங. பெற்ற மெருமை புலிமரை புல்வாய்
மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே. (சக)

நிகூஎ. நீர்வாழ் சாதியு [3] ளறுபிறப் புரிய. (சஉ)

---

1. பெற்றம்—ஆ.

2. தேரல்தேர்—பேய்த்தேர் (கானற்சலம்).

3. "அது பெறற்குரிய" என்பது இளம்பூரணர் கொண்ட பாடம்.

நிகூஅ. மயிலு [1] மெழாலும் பயிலத் தோன்றும்.

இ—ள்: போத்தென்னும் பெயர் இப்பதின்மூன்று சாதியின் ஆண்பாற்குமுரியது என்றவாறு.

'மற்றிவையெல்லாம்' என்றதனால், பன்றியும் ஓந்தியும் முதலாயினவுங் கொள்ளப்படும். நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பென்பன—சுறவும் முதலையும் இடங்கருங் கராமும் வராலும் வாளையுமென இவை.

'பயிலத் தோன்றும்' என்றதனானே, நாரை முதலியனவுங் கொள்க. மற்றிவை பயிலத் தோன்றுமெனிற் சூத்திரம் வேறுசெய்ததென்னை? முதற் சூத்திரத்துள் எண்ணுக பிறவெனின்,—இவை பறவையுட் பயிலத் தோன்றுமாகலின் வேறோதினனென்க.

[2] "எறிபோத்து." [3] "உழுபோத்து." "எருமைப்போத்து."

எனவும்,

"புலிப்போத் தன்ன புல்லணற் காளை." (பெரும்பாண். கஉஅ)

எனவும்,

"மரைப்போத்து."

எனவும்,

[4]"கவைத்தலை முதுபோத்து காலி னெற்றி
.....
தெறித்துநடை மரபிற்றன் மறிக்குநிழ லாகி."
(குறுந். உகஉ)

எனவும் வரும்.

'எல்லாம்' என்றதனால், 'பன்றிப்போத்து' எனவும் வரும்.

"முதலைப் போத்து முழுமீ னுகும்." (ஐங்குறு. டு)

எனவும்,

"பகுவாய் வராஅற் பல்வரி யிரும்போத்து." (அகம். உசு)

எனவும்,

---

1. எழா அல் — வல் ஆறு. "எழாலுற வீழ்ந்தென" (குறுந். கடுக).

2. எறிபோத்து—குத்தும்போத்து=ஆனேறு.

3. உழுபோத்து—ஆனேறு. எருமைப்போத்தையு முணர்த்தும்.

4. இப்பாடம் டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் வேறுகக் காணப்படுகிறது.

"வாகை வெண்போத் துணீஇய." (அகம். உஎசு)

எனவும், நீர்வாழ் சாதியுட் சில வரும்.

"மயிற்போத் தூர்ந்த வயிற்படை நெடுவேள்."

எனவும்,

[1]"போத்தொடு வழங்கா மயிலு மெழாலும்."

எனவும் வந்தவாறு.

'பயில' என்றதனால்,

"நாரை நிரைபோத் தயிரை யாரும்." (குறுந். ககசு)

எனவும், ஒழிந்தனவும் இவ்வாறே கண்டுகொள்க. மற்று முதலையும் இடங்கரும் காரமும் தம்மின் வேறெனப்படுமோவெனின்,—

"கராஅங் கவித்த குண்டுகண் ணகழி
யிடங்கரும் குட்டத் துடன்றெருக் கோடி
யாமம் கொள்பவர் சுடர்நிழற் கதூஉங்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சி." (புறம். கஎ)

என வேறெனக் கூறப்பட்டனவென்பது.

இனி, [2]செம்போத்தென்பதும் ஈண்டுக் கொள்ளாமோவெனின்,—அது பெண்பாற்கும் பெயராகலின் ஒருபெயரே; பண்புகொள் பெயரன்றென்பதுணர்க. (சஈ)

[இரலையும் கலையும் என்னும் பெயர்கள் இவைக்குரிய எனல்]

நிகூக. இரலையுங் கலையும் புல்வாய்க் குரிய. (சச)

சூ00. கலையென் காட்சி யுழைக்கு முரித்தே. (சடு)

சூ0க. நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்.

இவை மூன்று சூத்திரமும் எண்ணிய மூன்று சாதிக்கும் இரலையுங் கலையுமென்னும் ஆண்பாற்பெயர் இன்னவாறுரியவென்கின்றன.

இ—ள்: இரலையும் கலையுமென்பன புல்வாய்க்குரிய; அவற்றுட் கலையென்பது உழைக்குரித்து; அக்கலையென்பது, முசு

---

1. போத்தொடு வழங்கா என்ற செய்யுள் எதிலுள்ளதென்பது தெரியவில்லை. வழங்கா என்பதனால் 'மயிலும் எழாலும் பயிலத் தோன்றும்' என்னுஞ் சூத்திரத்தோடு மாறுபடுவது ஆராயத்தக்கது.

2. செம்போத்து—சாதிப்பெயர். அது செம்பகம் என இக்காலத்து வழங்கும்.

விற்கு வருங்கால் உழைக்குப்போலச் [1] சிறுவரவிற்றன்றி வரும் என்றவாறு.

"புல்வா யிரலே நெற்றி யன்ன." (புறம். நஎச)

எனவும்,

"கவைத்தலே முதுகலே காலி னெற்றி." (குறுந். உகந)

எனவும்,

"கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலே." (அகம். கூஎ)

எனவும்,

"மைபட் டன்ன மாமுக முசுக்கலே." (குறுந். கஉக)

எனவும் வரும்.

முசுவிற்கு நிலேபெற்றதெனவே, அத்துணே நிலேபேறின்றிக் குரங்கிற்கு வருவனவும் கொள்க. அது,

"கருங்கட் டாக்கலே பெரும்பிறி துற்றென." (குறுந். சுகூ)

என வருமாற்றுன் அறிக. (சசு)

[மோத்தை முதலிய நான்குபெயரும் யாட்டிற்குரிய எனல்]

சுஅஉ. மோத்தையுந் தகரு முதளு மப்பரும்
யாத்த வென்ப யாட்டின் கண்ணே.

இ—ள்: இக்கூறப்பட்ட நான்கு பெயரும் யாட்டிற்குரிய என்றவாறு.

அவை,

"வெள்யாட்டு மோத்தை."

எனவும்,

"தகர்மரும் பேய்ப்பச் சுற்றுபு சுரிந்த." (அகம். கஅக)

எனவும்,

"உதள,
தெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்."
(பெரும்பாண். கசுக—உ)

எனவும் வரும்.

1. சிறுவரவிற்றன்றி—பெருவரவிற்ருய்.

அப்பரென்பது இக்காலத்து வீழ்ந்ததுபோலும். 'யாத்த' என்றதனுல், [1]கடாயென்பதும் யாட்டிற்குப் பெயராகக் கொள்க; அது,

"நிலேக்கோட்டு வெள்ளே நால்செவிக் கடாஅய்."
(அகம். கசுசு)

என வரும்.

இனிக் குரங்கினே அப்பரென்றலுங் கொள்க. (சஎ)

[சேவல் என்னும் பெயர்க்குரியன இவை எனல்]

சுஅந. சேவற் பெயர்க்கொடை சிறகொடு சிவணு
மாயிருந் தூவி மயிலலங் கடையே.

இ—ள்: பறப்பனவற்றுள் ஆண்பாற்கெல்லாஞ் சேவற் பெயர் உரித்து; அவற்றுண் மயிற்காயின் அஃதாகாது என்றவாறு.

"காமர் சேவ லேமஞ் செப்ப." (அகம். கஅந)

எனவும்,

"வலேக்கட் சேவல் வாளாது மடியின்." (அகம். கஉஉ)

எனவும்,

"தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்." (குறுந். கஅஎ)

எனவும்,

"கானங் கோழிக் கவர்குரற் சேவல்."
(குறுந். உசஉ; புறம். நகூசு; மலேபடு. நுகஅ)

எனவும்,

"உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்." (குறுந். அசு)

எனவும் வரும். பிறவும் அன்ன.

'மாயிருந் தூவி மயில்' என்றதனுன் அவை தோகையுடையவாகிப் பெண்பால்போலுஞ் சாயலவாகலான் ஆண்பாற்

1. கடா என்பது, சி. வை. தாமோதரம்பிள்ளே, பவானந்தம்பிள்ளே பதிப்புக்களிற் காணப்பட்ட பாடம், வழக்கிற் கிடாஅய் என வழங்குகின்றது. ஆயின் இது கடா எனவும் வழங்குகின்றது.

றன்மை இலவென்பது கொள்க ; எனவே, [1] செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் [2] நேரவும்படுமென்பது. (சஅ)

[ஏற்றை என்னும் பெயர்க்குரியன இவை எனல்]

சுoசு. ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா
மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப.

இ—ள் : ஏற்றையென்னுஞ் சொல் ஆற்றலொடு கூடிய ஆண்பாற்கெல்லாம் உரித்து என்றவாறு.

அவை,

"குறுங்கை யிரும்புலிக் கோள்வ லேற்றை." (நற். நசு ; குறுந். கசக)

எனவும்,

"செந்நா யேற்றை கம்மென வீர்ப்ப." (அகம். ககக)

எனவும்,

"கொடுந்தாண் முதலைக் கோள்வ லேற்றை." (குறு. நஉச)

எனவும் வரும்.

இக்கருத்தினானே,

"பிணர்மோட்டு நந்தின் பேழ்வா யேற்றை." (அகம். உசசு)

எனவும்,

"புன்ருள் வெள்ளெலி மோவா யேற்றை." (அகம். கநஉ)

எனவும் கூறினர்.

அவையும் அப்பெயரானே வழங்குதல் ஆற்றலுடையவாகத் தோன்றும். 'எல்லாம்' என்றதனால், சிறுபான்மை ஆற்றல் இல்லாதனவுங் கொள்க ; அது,

"இடுகாட்டு ளேற்றைப் பசீன." (நாலடி. கூசு)

என்பதுபோன்று வருவன ; பிறவும் அன்ன. (சகூ)

1. "எழுந்து முன்னுறு மஞ்ஞையஞ் சேவன்மேலேறி" என்பர் கந்தபுராணகாரர். (தெய்வயானையம்மை திருமணப்படலம் ககஉ)

2. நேர்தல்—பொருந்தல்.

[ஆண் பெண் என்னும் பெயர்கள் இவ்விவற்றிற்குரியவெனல்]

சுoடு. ஆண்பா லெல்லா மாணைனற் குரிய
பெண்பா லெல்லாம் பெண்ணைனற் குரிய
காண்ப வவையவை யப்பா லான.

இது, மேற்கூறிய ஆண்பாற் பெயர்க்கும், இனிவரும் பெண்பாற் பெயர்க்கும் புறனடை.

இ—ள் : ஆணைனுஞ் சொல் எல்லாச் சாதியுள் ஆண்பாற்கும் உரித்து ; பெண்ணென்னுஞ் சொல் எல்லாச் சாதியுட் பெண்பாற்கும் உரித்து ; வழக்கினுள் அவ்வாறு காணப்படும் அவை என்றவாறு.

அவை ஆண்யாசீன, பெண்யாசீன ; ஆண்குரங்கு, பெண்குரங்கு ; ஆண்குருவி, பெண்குருவி என்றாற்போல்வன. இவை காணப்படும் எனவே, இத்துணை விளங்கவாராது சிறுவரிஞன் வருவனவுமுள இருபாலு மல்லாதன வென்பது. [1] ஆணலி பெண்ணலி எனவும், ஆண்பசீன பெண்பசீன எனவும் வரும் ; பிறவும் அன்ன. (நிo)

[மேற்கூறிய பெண்பாற் பெயர்களுள் பிடியென்னும் பெயர் இதற்குரியது எனல்]

சுoசு. பிடியென் பெண்பெயர் யானை மேற்றே.

இது, முறையானே மூன்றும் எண்ணு முறைமைக்கணின்ற பெண்மைப்பெயர் கூறிய தொடங்கி ஆண்பாலிற் களிறு முற் கூறியவாறுபோலப் பிடியினை முற்கூறியது.

இ—ள் : பிடியென்னும்பெயர் யானைக்கண்ணது என்றவாறு.

"பிடிபடி முருக்கிய பெருமரப் பூசல்." (அகம். அ)

எனவரும். 'பெயர்' என்றதென்னையெனின்,—அவை தொடங்குகின்றதென்பது அறிவித்தற்கென்பது. (நிக)

1. ஆணலி—ஆண்மை திரிந்து அலியானது. பெண்ணலி—பெண்மை திரிந்து அலியானது. ஆணலி, பெண்ணலி என்பன இக்காலத்தும் உலகவழக்கிலுள்ளது. ஆண்பசீன—காயாப்பசீன ; பெண்பசீன—காய்க்கும்பசீன.

[பெட்டை என்னும் பெயர்க்குரியன இவை எனல்]

சூ0ஈ. ஒட்டகங் குதிரை கழுதை மரையிவை
பெட்டை யென்னும் [1]பெயர்க்கொடைக் குரிய.

இ—ள்: ஒட்டகமுங் குதிரையும் கழுதையும் மரையாவும் பெட்டையென்னும் பெயர்பெறும் என்றவாறு.

ஒட்டகப்பெட்டை குதிரைப்பெட்டை கழுதைப்பெட்டை மரையான்பெட்டை என வரும். (ருஉ)

[அப்பெயரைப் புள்ளும் பெறுமெனல்]

சூ0அ. புள்ளு முரிய வப்பெயர்க் கென்ப.

இ—ள்: எல்லாப் புள்ளும் பெட்டையென்னும் பெயரான் வழங்குதற்குரிய என்றவாறு.

அவை, கோழிப்பெட்டை மயிற்பெட்டை என வரும். பிறவும் அன்ன. (ருங)

[பேடையும் பெடையும் புள்ளுக்குரிய எனல்]

சூ0சு. பேடையும் பெடையு நாடி னென்றும்.

இ—ள்: பேடையும் பெடையு மென்னும் இரண்டும் முன்னர் நின்ற புள்ளிற்கு [2]ஒன்றும் என்றவாறு.

அவை, குயிற்பேடை, அன்னப்பெடை என வரும். 'நாடின்' என்றதனாற் பெட்டையென்பது வழக்கினுட் பயிலாவென்பது. (ருச)

[அளகென்னும் பெயர் இவைக்குரிய எனல்]

சூகo. கோழி கூகை யாயிரண் டல்லவை
சூழுங் காலை யளகென லமையா. (ருஞ)

சூகக. அப்பெயக் கிழமை மயிற்கு முரித்தே.

இ—ள்: கோழியும் கூகையும் மயிலு மென்பனவற்றுக்கு அளகென்னும் பெயர் உரியது என்றவாறு.

1. பெயர்க்கொடைக்கு — பெயரைத் தமக்குக் கொடுத்தற்கு=எனவே பெயரைப் பெறுதற்கு என்றபடி.

2. ஒன்றும்—பொருந்தும் என்றபடி.

"மனைவா ழுளகின் வாட்டொடு பெறுகுவீர்."
(பெரும்பாண். உருசு)

என்பது கோழி; பிறவும் அன்ன. (ருசு)

[பிணையென்னும் பெயர் இவைக்குரியது எனல்]

சூகஉ. புல்வாய் நவ்வி யுழையே கவரி
சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே.

இ—ள்: பிணையென்னும் பெண்பெயர்க்குரியன இவை நான்கும் என்றவாறு.

"அலங்கல் வான்கழை யுதிர்நென் னேக்கிக்
கலைபிணை விளிக்குங் கானத் தாங்கண்." (அகம். கஉசு)

எனவும்,

"சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை." (புறம். உ)

எனவும்,

"சிறுதலை நவ்விப் பிணையிற் றீர்ந்த
நெறிகோட் டிரலை மான். (குறுந். கஅஉ)

எனவும்,

"கவரி மான்பிணை நரந்தங் கனவும்." (பதிற். கக)

எனவும் வரும்.

"சொல்வாய் நாடிற் பிணையெனப் படுமே."

என்பது, பிணையென்னுஞ் சொற்பொருளினை உண்மை நோக்கிற் பிரியாது [1]பிணையும் பிற சாதிக்குஞ் [2]சேவற்குஞ் செல்லுமாயினும், மரபுநோக்கப் பிணையென்றற்குச் சிறப்புடையன இவையென்றவாறு. (ருஎ)

[பிணவென்னும் பெயர் இவைக்குரியதெனல்]

சூகஙு. பன்றி புல்வாய் நாயென மூன்று
மொன்றிய வென்ப பிணவென் பெயர்க்கொடை.

1. பிணையும் என்பது பிணைகின்ற என்னும் பொருள்படநின்றது. பிணைதல்—சேர்தல். அஃதாவது, ஆணும் பெண்ணுமாகப் பிரியாது கூடித்திரிதல்.

2. சேவல் என்பது ஈண்டு வருதல் பொருத்தமாய்க் காணவில்லை. ஆண்பறவை பெண்பறவையோடு கூடித்திரிதலின் அவ்வாறு கூறினரெனினுமாம்.

இ—ள்: இவை மூன்றுசாதியும் பிணவென்னும் பெயர்க் குரியன என்றவாறு.

"நெடுந்தாட் செந்தினைக் கெழுந்த கேழல்
குறுந்தாட் பிணவொடு குறுகல் செல்லாது."

எனவும்,

"குறியிறைக் குரம்பைக் குறத்தி யோம்பிய
மடநடைப் பிணவொடு கவர்கோட் டிரலை."

எனவும்,

"நாய்ப்பிணை வொடுங்கிய கிழநரி யேற்றை."

எனவும்,

"மென்புனிற் றம்பிணவு பசித்தெனப் பைங்கட்
செந்நா யேற்றை கேழ ருக்க." (அகம். உக)

எனவும் வரும்.

'ஒன்றிய' என்றதனான்,

"ஈருயிர்ப் பிணவின் வயவுப்பசி கடீஇய." (அகம். எஉ)

எனப் புலிக்குங் கொள்க; பிறவும் அன்ன. (நிஅ)

[பிணவும் என்னும் பெயரும் அவற்றிற்குரியதெனல்]

சுகசு. பிணவ லெனினு மவற்றின் மேற்றே.

இ—ள்: பிணவலென்பதூஉம் அம்மூன்றற்கும் உரித்து என்றவாறு.

"இரியற் பிணவ றீண்டலின்" (அகம். உக)

என்பது, பன்றி.

"நான்முலைப் பிணவல் சொலியக்கா ணெழிந்து." (அகம். உசஅ)

என்பதும் அது; ஒழிந்தனவும் அன்ன. (நிசூ)

[ஆ என்னும் பெயர் இவற்றிற்குரியதெனல்]

சுகநி. பெற்றமு மெருமையு மரையு மாவே.

இது, மேல் அந்தஞ்சான்ற (நிநிஅ) என்னும் இலேசினானே ஆவென்பது தழீஇக்கொண்டமையின் அஃது [1] இன்னுழியாகாது என்கின்றது.

1. இன்னுழியல்லதாகாதென்றிருத்தல்வேண்டும். அன்றேல் ஆகும் என்றிருத்தல்வேண்டும்.

இ—ள்: ஆவென்னும் பெயர், பெற்றமும் மரையும் எருமையும் பெறும் என்றவாறு.

அவை,

"புனிற்றுப் பாய்ந்தெனக் கலங்கி." (அகம். நிசு)

எனவும்,

"சேற்றுநிலை முனிஇய செங்கட் காரான்."
(அகம். சசு; குறுந். உசுக)

எனவும்,

"மரையா மரல்கவர மாரி வறப்ப." (கலி. சு)

எனவும் வரும். (சுஐ)

[பெண் என்பதும் பிணை என்பதும் மக்கட்குரிய எனல்]

சுகசு. பெண்ணும் பிணவு மக்கட் குரிய.

இ—ள்: பெண்ணும் பிணவும் உயர்திணைப் பெண்மைக் குரிய என்றவாறு.

பெண்ணென்பது,

"பெண்பா லெல்லாம் பெண்ணைனற் குரிய:"
(தொல். மர. நிஐ)

என்றமையின், ஈண்டுக் கூறுதல் மிகையாம் பிறவெனின்,—அற்றன்று; அச்சூத்திரம் அஃறிணையதிகாரமாகலின், ஈண்டு விதந்தோதினானென்பது. ஒன்றென முடித்தல் (சுசுநி) என்பதனான், உயர்திணை ஆணென்பதும் ஈண்டே கொள்ளப்படும்.

"பெண்கோ ளொழுக்கங் கண்கொள நோக்கி" (அகம். ககஉ)

எனவும்,

"ஈன்பிணை வொழியப் போகி." (பெரும்பாண். சுஐ)

எனவும் வரும்.

"ஆண்கட னுடைமையிற் பாண்கட னற்றிய" (புறம். உஐக)

என ஆணென்பது உயர்திணைக்கண் வந்தது. பிறவும் அன்ன. [1] பிணவென்னும் ஆகாரவிறுதி வன்கணமன்மைபிற் குறியதன்

1. பிணவும் என்பது பிணை உம் எனப் பிரிந்து நிற்குங் கால் உம் என்னும் வருமொழி முதலெழுத்து உயிராகும். அதனால் பிணவு என ஆகாரம் அகரமாய் உகரம் பெறுதாயிற்று என்றார். "குறியத னிறுதிச் சினைகெட வுகரம்—அறிய வருதல் செய்யுளு ளுரித்தே." என்னும் உயிர்மயங்கியல் நூ-ம் சூத்திரம் பிணவு என வருதற்கு விதி. பிணவும் என்பது உடம்படுமெய் பெற்று வந்தது.

இறுதிச் சினைகெட்டு உகரம்பெறாது நின்றது. 'மக்கட்குரிய' எனவே, உரியவன்றித்

"நறுகல் விடரகீழப் பிணவுப்பரி கூர்ந்தென." (அகம். கசஎ)

எனப் புலி முதலியவற்றிற்குங் கொள்க. (சூக)

[நாகு என்னும் பெயர் இவைக்குரியதெனல்]

கூகஎ எருமையு மரையும் பெற்றமு நாகே. (கூஉ)

கூகஅ. நீர்வாழ் சாதியு ணந்து நாகே.

இ—ள்: இந்நான்கற்குஞ் நாகெனும் பெயர் உரித்து என்ற வாறு.

"எருமை நல்லான் கருநாகு பெறாஉம்" (பெரும்பாண். கசூடு)

எனவும்,

"உடனிலை வேட்கையின் மடநாகு தழீஇ
பூர்வயிற் பெயரும் பொழுதின்" (அகம். சூச)

எனவும்,

"நாகிள வகீஇயொடு பகன்மணம் புகூஉம்" (புறம். உசூசூ)

எனவும் வரும். (சூகூ)

[மூடும் கடமையும் யாட்டிற்குரிய எனல்]

கூகக. மூடுங் கடமையும் யாடல பெரு.

இ—ள்: இவ்விரு பெயரும் யாட்டிற்கேயுரிய பெண்மைப் பெயர் என்றவாறு.

இவை இப்பொழுது வழக்கினுள் அரிய. (சூச)

[பாட்டி என்னும் பெயர் இவற்றிற்குரியதெனல்]

கூஉ0. பாட்டி என்பது பன்றியு நாயும். (சூடு)

கூஉக. நரியு மற்றே நாடினர் கொளினே.

இ—ள்: பாட்டியென்று சொல்லப்படுவன பன்றியும் நாயும் நரியும் என்றவாறு. [1] பிறவும் அன்ன. (சூசு)

1. பிறவுமன்ன என்பது இவையுமன்ன என்றிருத்தல்வேண்டும். இவையும் அன்னவென்றது இவையும் வழக்கினுள் அரிய என்றபடி.

[மந்தி என்னும் பெயர் இவற்றிற்குரியதெனல்]

கூஉஉ. குரங்கு முசுவு மூகமு மந்தி.

இ—ள்: இம் மூன்றுசாதிப் பெண்பாலும் மந்தியென்னும் பெயர்பெறும் என்றவாறு.

"கைம்மை யுய்யாக் காமர் மந்தி." (குறுந். சூசு)

எனவும்,

[1] "கருமுக மந்தி செம்பி னேற்றை."

எனவும் வரும்.

ஊகத்துக்குஞ் இஃதொக்கும். (சூஎ)

[மரீஇவந்த மரபுப்பெயர்கள் இவை எனல்]

கூஉங. குரங்கி னேற்றினைக் கடுவ னென்றலு
மரம்பயில் கூகையைக் கோட்டா னென்றலுஞ்
செவ்வாய்க் கிளியைத் தத்தை யென்றலும்
வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்
குதிரையு ளாணினைச் சேவ லென்றலு
மிருணிறப் பன்றியை யேன மென்றலு
மெருமையு ளாணினைக் கண்டி யென்றலு
முடிய வந்த வவ்வழக் குண்மையிற்
கடிய லாகா கடனறிந் தோர்க்கே.

இது, மரீஇவந்து முடிந்த மரபுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: ஆண்குரங்கினைக் கடுவனென்றலும், மரப்பொதும் பினுள் வாழுங் கூகையைக் கோட்டானென்றலும், செவ்வாய்க் கிளியைத் தத்தையென்றலும், வெருகினைப் பூசையென்றலும், ஆண்குதிரையைச் சேவலென்றலும், இருணிறப்பன்றியை ஏன மென்றலும், எருமையேற்றினைக் கண்டியென்றலும், அவ்வாறு முடிந்த வழக்குண்மையிற் கடியப்படா கடப்பாடு அறிந்தோர்க்கு என்றவாறு.

1. கருமுகமந்தி, செம்பினேற்றை என்பன இடக்கரடக்கலுக்கு, தொல். சொல். சேனவரையருரை முதலியவற்றில் உதாரணமாக வருகின்றன. அதுநோக்கிக் 'கருமுகமந்தி' என்பதனோடு செம்பினேற்றை என்பதை யாரும் இடைச் செருகினர்களோ அல்லது இரண்டுஞ்சேர்ந்து ஒருசெய்யுளடியோ என்பது ஆராயத்தக்கது.

"கடுவனு மறியுமக் கொடியோ னீயே." (குறுந். உசு)

ஆண்குரங்கு. இதனைக் கடியலாகாது எனப்பட்ட இழுக்கென்னையெனின்,—மக்கட்கும் [1] வெருகிற்கும் அக்காலத்துப் பயின்றனபோலுமாதலின். கூகையைக் கோட்டானென்றலும் வழக்காகலான் அமையும்; 'மரம்பயில் கூகை' யென்ற தென்னையெனின்,—மரக்கோடு விடாமையிற் கோட்டானென்னும் பெயர் பெற்றதென்றற்கு. தத்தையென்பது பெருங்கிளியாதலிற் சிறுகிளிக்கும் அப்பெயர் கொடுத்தலமையுமென்றவாறு. 'செவ்வாய்க் கிளி' என்பதனை, சிறுகிளிமேற் கொள்க.

'வெவ்வாய் வெருகு' என்றதனால், 'படப்பை வேலியும் புதலும் பற்றி, [2] விடக்கிற்கு வேற்றுயிர் கொள்ளும் வெருகினை, இல்லுறைபூசை'யின் பெயர்கொடுத்துச் சொல்லலும் (புறம். சுசஎ—சுஉசு) அமையுமென்றவாறு.

[3] குதிரையைச் சேவலென்றல் இக்காலத்தரிதாயிற்று. அதுவுஞ் சிறகொடு சிவணுதாயினும் அதனைக் கடுவிசைபற்றிப் பறப்பதுபோலச் சொல்லுதல் அமையுமென்பது கருத்து.

எருமையேற்றினையுங் கண்டியென்பபோலும்; அது காணலாயிற்றில்லை; அதனை, இலக்கணவகையானுடைய பெயரென்றலுமாம்; இது பொழுதின்றென்பது.

'கடனறிந்தோர்' என்றதனால், வழக்கினுஞ் செய்புளினும் அவை வந்தமையிற் கடப்பாடறிவோர்க்குக் கடியலாகாதென்றவாறு. இன்னும் [4]இப்பரிகாரத்தாலே கோழியை வாரணமென்றலும், வெருகினை விடையென்றலும் போல்வன பலவுங் கொள்க. அவை,

---

1. இக்காலத்தும் ஆண்பூனைக்குக் கடுவன் என்ற வழக்குண்டு.

2. விடக்கு—இறைச்சி.

3. குதிரையைச் சேவல் என்றது பறவைச் சேவல்போல விரைந்து செல்வதுபற்றி. "புள்ளியற் கலிமாவுடைமையான" என்பது நோக்குக. "புள்ளியன்மான்றேர்" (சிலப். கானல்வரி. கo) என்பதுமது.

4. பரிகாரம்—பாதுகாப்பு. இச்சொல் சேனவரையராலும் ஆளப்படும்.

"கான வாரண மீனுங்
காடாகி விளியு நாடுடை யோரே." (புறம். நுஉ)

எனவும்,

"வாரணக் கொடியொடு வயிற்பட நிரீஇ." (முருகு. உகசு)

எனவும்,

"வெருக்குவிடை யன்ன வெருணைக்குக் கயந்தலை." (புறம். சுஉச)

எனவும் வரும். (சுஅ)

[இவையும் மரீஇவந்த மரபுப்பெயர் எனல்]

சூஉச. பெண்ணு மாணும் பிள்ளையு மவையே.

இதுவுமது. பெண் ஆணென்பன இருதிணைப் பெண்மைக்கும் ஆண்மைக்கும் பொதுவென்பன முற்கூறினான்; மேல் ஒன்றற்குரியபெயர் மரீஇவந்து பிறிதிதான்றற்காயவழியுங் கடியலாகாதென நின்ற அதிகாரத்தான் இவையும் அவ்வாறே திரியினுங் கடியலாகாதென்றவாறு.

இ—ள்: [1] பெண்ணும் ஆணும் பிள்ளையுமென வாளாது சொல்லியவழி உயர்திணைக்கேற்றன மரீஇவந்த மரபு என்றவாறு.

மக, குழவியென்பனவோவெனின், — அவை அத்திணைப் பயின்றில உயர்திணைக்கென்பது; எடுத்தோதிய மூன்றும் [2] ஆயின. வாளாதே 'பெண் வந்தது' என்றவழி, அஃறிணைப் பொருளென்பது உணரலாகாது; 'பெண்குரங்கு வந்தது' என விதந்தே கூறல்வேண்டுமென்பது. 'பெண் பிறந்தது', 'ஆண் பிறந்தது', 'பிள்ளை பிறந்தது' என அடையடாது சொல்லியவழி உயர்திணைக்கேயாம். அஃறிணைக்காயின் அற்றன்றென்பது. (சுசு)

[அந்தணர்க்குரியன இவை எனல்]

சூஉடி. நூலே கரக முக்கோன் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய.

---

1. பெண்பிறந்தது ஆண்பிறந்தது பிள்ளைபிறந்தது என அடையடாது சொல்லின் உயர்திணைக்கேயாம். அடையடுப்பின் அஃறிணைக்காம் என்றபடி. எனவே அஃறிணைக்குத் திரிந்து வந்தது என்பது கருத்து.

2. ஆயின் என்று கொண்டு சிலசொற் றவறியதாகக் கொள்வது நலம்.

இஃது, உயர்திணை நான்குசாதியும்பற்றிய மரபு உணர்த்துவான், முறையானே அந்தணர்க்குரிய மரபுபட்டுவருங் கலப்பை வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: முந்நூலுங் [1] குண்டிகையும் முக்கோலும் [2]யாமை மணையும் போல்வன அந்தணர்க்கு உரிய என்றவாறு.

'ஆயுங்காலை' என்றதனால், குடையும் செருப்பும் முதலாயினவும் ஒப்பன அறிந்துகொள்க.

உதாரணம்:

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலும்." (கலி. கூ)

எனவும்,

"தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே." (குறுந். கடுசு)

எனவும் வரும்.

இன்னும், 'ஆயுங்காலை' என்றதனான், [3] ஒருகோலுடையார் இருவருளர், அவர் துறவறத்து நின்முராகலின் உலகியலின் ஆராயப்படாரென்பது. [4] முக்கோலுடையார் இருவருட் பிச்சைகொள்வானும் பிறுண்டிருந்து தனதுண்பானும் உலகியலின் நீங்காமையின் அவரையே வரைந்தோதினனென்பது.

மற்று, அரசர்க்கும் வணிகர்க்கும் உரிய நூலினை ஈண்டு [5]வரைந்தோதினதென்னையெனின்,—ஒருகோலுடையான் [6]நூல் கலைவாணுகலின் அவனுஞ் சிறுபான்மை அந்தணனெனப்படுமென்பது கோடற்கும் கரகமும் மணையும் உடையனென்றற்குமென்பது. நூலினை முற்கூறினான், [7] பிறப்பு முறையானுஞ்

1. குண்டிகை—நீர் மொண்டுவைத்திருக்கும் பாத்திரம்.

2. யாமைமணை—யாமை வடிவாகச் செய்த ஆசனப்பலகை.

3. ஒருகோலுடையாரிருவர் என்றது: ஹம்சன், பரமஹம்சன் என்னுஞ் சந்நியாசிகளிருவரையும.

4. முக்கோலுடையாரிருவரென்றது: பகூதகன், குடீசகன் என்னுஞ் சந்நியாசிகளிருவரையும். இவர்களியல்பை அரும்பதவுரையுள் கூறுதும். ஆண்டுக் காண்க.

5. வரைந்து—நியமித்து.

6. நூல்கலைவான்—பரமஹம்ச சந்நியாசி.

7. பிறப்புமுறை—துவிஜன் என்னும் பிறப்பைக் காட்டுமுறை.

[1] சிறப்புமுறையானுமென்பது. இனி, குடுமியுங் குசையும்போல்வன கூறிற்றிலன், அது [2] முன்னரும் பின்னரும் வருதலானும், மன்னரும் வணிகரும் பெறுதலானுமென்பது. (எ0)

[அரசர்க்குரியன இவை எனல்]

சுஉசு. படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய.

இது, முறையானே அரசர்க்குரியன கூறுகின்றது.

இ—ள்: [3] கொடிப்படையும் கொடியும் குடையும் முரசும் குதிரையும் யானையும் தேரும் தாரும் முடியும் பொருந்துவன பிறவும் அரசர்க்குரிய என்றவாறு.

'பிறவும்' என்றதனால், [4] கவரியும் அரியணையும் அரண் முதலாயினவுங் கொள்க. 'தெரிவுகொள் செங்கோ லரசர்' என்றதனானே, [5] செங்கோல் கொளப்பட்டது.

[6] 'தார்' எனவே, போர்ப்பூவும் தார்ப்பூவும் அடங்கின. 'படை' என்புழி, 'நடைநவில் புரவியுங் களிறுந் தேரும்' அடங்காதோவெனின்,—அடங்கும், அவை நோக்கிக் கூறினனல்லன்; [7] அவை பட்டஞ் சாத்தியவாதல் நோக்கிக் கூறப்பட்

1. சிறப்புமுறை — ஏனையவற்றிலும் நூல் சிறந்ததாகிய முறை. நூல் இட்டபின் கரகந் தாங்கல்பற்றிப் பிறப்புமுறை என்முர் எனினுமாம். (சுசஉ-ம் சூத்திர உரை நோக்குக).

2. முன்னர்—நூலிடுதற்குமுன். பின்—நூலிட்டபின். குடுமி முன்னும் குசை பின்னுமென்க.

3. கொடிப்படை—கொடி தாங்கும் படை=தார்ப்படை.

4. கவரி—சாமரை. அரியணை—சிங்காசனம். அரண்—மதில். இக்காலத்துக் கோட்டை என்பர்.

5. செங்கோல்—உடம்பொடுபுணர்த்தலாற் கொள்ளப்பட்டது. உடம்படுபுணர்த்தல் என்பர் சங்கரநமச்சிவாயருரையுள் டாக்டர் சாமிநாதையரவர்கள்.

6. தார்—பூமாலை. போர்ப்பூ—வெட்சி, வஞ்சி போல்வன தார்ப்பூ—வேம்பு ஆர் போல்வன.

7. அவை—குதிரையும் யானையும். பட்டஞ்சூட்டல்பற்றியே பட்டத்துக் குதிரை பட்டத்து*யானை என்பர்.

டன. அஃதேல், தேர் கூறியதென்னையெனின், — அதுவும் அவைபோல அரசர்க்கே உரியதென்றுளதென்றற்கும், அது பூண்ட குதிரையும் அவர்க்கே யுரியவென்றுளவென்றற்குங் கூறினனென்பது. இக்கருத்தினுற்போலும் 'நடைநவில் புரவி' எனச் சிறப்பித்து அதனை முற்கூறியதென்பது.

எல்லாவற்றினுஞ் சிறந்ததாதலான் [1] முடி பிற்கூறப்பட்டது. 'தெரிவுகொள் செங்கோ லரசர்' என்பதனுன், அரசரெல்லாந் தங்நாட்டு நன்றுந் தீதும் ஆராய்ந்து [2] அதற்குத்தக்க தண்டஞ்செய்தற்கு உரிமையும் [3] அதுவெனக் கொள்க. (எக)

[அந்தணர்க்குரியவற்றுட் சில அரசர்க்குமுரியவாமெனல்]

சூஉஎ. அந்த ணாளர்க் குரியவு மரசர்க்
கொன்றிய வருஉம் பொருளுமா ருளவே.

இது, மேலதற்கோர் புறனடை.

இ—ள்: அந்தணாளர்க்கு உரியவென மேல் ஓதப்பட்டனவற்றுண் முந்நூலும் மணையும்போல்வன அரசசாதிக்குரியவாகியும் வரும் என்றவாறு.

'பொருளுமாருள' என்றதனுன், அந்தணாளர்க்குரியனவற்றுள் வேள்விக் [4] கலப்பை யொன்றிவருதல் பெரும்பான்மையென உணர்க; ஈண்டு [5] அவற்றை விதந்தோதினுன் ஒழிந்த புலனெறி வழக்கினுட் பயிலாமையினென்பது.

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமு
மைவகை மரபி னரசர் பக்கமு
மிருமூன்று மரபி னேனோர் பக்கமும்." (தொ. புற. உ0)

1. எல்லாவற்றினுஞ் சிறந்ததைப் பிற்கூறலும் வழக்கு. "சிறப்புடைப் பொருளைப் பிற்படக் கிளத்தல்" என்பது பழைய சூத்திரம்.

2. அதற்குத்தக்க—அதற்குத்தக என்றிருப்பதே பொருத்தம். 'அதற்குத்தக வொறுத்தல்' என்பர் பரிமேலழகரும். அதற்கு—தீதிற்கு.

3. அது—செங்கோல்=முறை. செவ்விய கோல்போறலின் முறை செங்கோல் எனப்பட்டது. 'உரிமையும் அது' என்பது உரிமையுடையரென்றும் பாடமுள்ளது.

4. கலப்பை—உபகரணம்.

5. அவற்றை—வேள்விக் கலப்பையை.

பற்றி வாகைப்பொருள் பிறத்தலின் அவற்றைப் புறத்திணையியலுட் கூறினனாயினும், ஈண்டுத் தழீஇக் கொள்ளப்படும் மரபுவகையானென்பது; என்போலவெனின்,—

"அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு." (தொ. எழு. நக)

என நான்மரபினுள் ஓதிய மூவகைச் சுட்டினை இடைச்சொலோத்தினுள் ஓதானுயினுன், அதுபோலவென்பது.

"கொன்று [1] களம் வேட்ட ஞான்றை." (அகம். நசு)

எனவும்,

"அடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய." (புறம். உசு)

எனவும், அரசர்க்கு வேள்வி கூறியவாறு; பிறவும் அன்ன, (எஉ)

[அந்தணர்க்குரித்தல்லாதன இவை எனல்]

சூஉஅ. பரிசில்பா டாண்டிணைத் துறைக்கிழ மைப்பெயர்
நெடுந்தகை செம்ம லென்றிவை பிறவும்
பொருந்தச் சொல்லுத லவர்க்குரித் தன்றே.

இஃது, ஐயம் அறுத்தது; அந்தணாளர்க்குரியன அரசர்க்குமுரியன உளவெனக் கேட்ட மாணாக்கன் 'அரசர்க்குரியனவும் அந்தணர்க்குரியகொல்' என்று ஐயுறுமற் காத்தமையின். இஃது, எய்தியதன்மேற் சிறப்புவிதியெனினும் அமையும்; என்னை? ஈண்டு ஓதப்பட்டவை அரசர்க்குரியவென்பது கொள்ளப்பட வைத்தமையின்.

இ—ள்: பரிசில்—பரிசில் கடாநிலையும், பரிசில் விடையும் போல்வன; பாடாண்டிணைத்துறைக் [2] கிழமைப்பெயர்—பாடாண்டிணைக்குரிய கைக்கிளைப் பொருள்பற்றியுங் கொடைத்தொழில் பற்றியும் பெறும்பெயர்; அவை, காளை இளையோன் என்பன போல்வன [அவையு]ம், நெடுந்தகை செம்மலென்பனவும், இவைபோல்வன பிறவும் புனைந்துரைவகையாற் சொல்லினல்லது சாதிவகையாற் கூறுதல் அந்தணர்க்குரித்தன்று என்றவாறு.

[3] பரிசில் கடாநிலையும் [4] பரிசில் விடையும்போல்வன கூறியும், கைக்கிளைப்பொருள் கூறியும், கொடைத்தொழில் கூறி

1. களம்வேட்டல்—களவேள்வி செய்தல்.
2. கிழமை—உரிமை.
3. பரிசில் கடாநிலை—பரிசில் வேண்டல்.
4. பரிசில் விடை—பரிசில் கொடுத்து விடுத்தல்.

யும், அவற்றிற்கேற்ப எடுத்தோதிய பெயர் கூறியும், அந்தணரைத் [1] தன்மைவகையாற் செய்யுள் செய்யப்பெறுவென்பது கருத்து.

புனைந்துரைவகையான் அவையாமாறு :—

[2] "எண்ணைப் பலவேட்டு
மண்ணைப் புகழ் பரப்பியும்." (புறம். கசுசு)

என வரும்.

கொடுத்தற்றொழில் வேள்விக்காலத்ததென வரையறுத்தலிற் பொருந்தக் கூறுதல் அவர்க்குரித்தன்றென்றுனென்பது.

பாடாண்டிணைத் துறைப்பெயரென்னுது, கிழமைப் பெயரென்றதென்னையெனின்,—அவை ஐந்திணைப் பெயராகி வருங்காலும் அவர்க்குரியவல்லவென்றற்கு; எனவே, அரசர்க்காயின் இவையெல்லாம் உரியவென்பவாயிற்று.

மற்றுப் பாடாண்டிணைக்குரியவல்லவென மற்றைத்திணைக் கிழமைப்பெயர் உரியவாம் பிறவெனின்,—அஃது,

"இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெருஅர்." (தொ. மர. எசு)

என மேற்கூறி விலக்குமென்பது. (எசு)

[நான்கு வருணத்தாருக்கும் ஊர் முதலியவு முரியவெனல்]

சுஉசு. **ஊரும் பெயரு முடைத்தொழிற் கருவியும்**
[3] யாருஞ் [4] சார்த்தி யவையவை [5] பெறுமே.

இது, மேற்கூறிய அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியனவற்றோடு ஒழிந்த சாதியோர்க்கும் ஒப்பன உடன் கூறுகின்றது.

இ—ள்: நான்கு சாதியாரும் பிறந்த ஊரும், அவர்தம் பெயரும், அவர் சாதிக்கு உரித்தென்றற்கேற்ற கருவியும், யாருஞ் சார்த்தப்பட்டு அவை அவை பெறுப என்றவாறு.

1. தன்மை—இயற்கை.
2. எண்—அளவு.
3. யாரும்—எல்லாச் சாதியாரும்.
4. சார்த்தி—சார்த்திச் சொல்லப்பட்டு.
5. பெறும் என்பது உரையிற் கண்டபடி பெறுப என் றிருத்தல்வேண்டும். இளம்பூரணரும் 'பெறும்' என்றே பாடங் கோடலின் இது ஆராயத்தக்கது.

இம்மூன்றும் வரையறுத்துச் சொல்லப்படா, எல்லாச் சாதியார்க்கும் ஒப்பச் செல்லுமென்பது கருத்து; எற்றுக்கு? இவை சாதிபற்றி வேறுபடாப் பொருளாகலின். ஊரும் பெயருமென்பன :—உறையூர்ஏணிச்சேரிமுடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூருருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்குரியன. உறையூர்ச் சோழன், மதுரைப் பாண்டியன் என்பன அரசர்க்குரியன; காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணன், மதுரை அறுவைவாணிகன் இளவேட்டன் என்பன வணிகர்க்குரியன; அம்பர்கிழான் நாகன், வல்லங்கிழான் மாறன் என்பன வேளாளர்க்குரியன.

இனி, 'உடைத்தொழிற் கருவி' என்பன :— அந்தணாளர்க்குச் [1] சுருவையும் [2] சமிதை குறைக்குங் கருவியும் முதலாயின; [3] அரசர்க்கு, குடியும் கூழும் அமைச்சும் நட்பும் முதலாயின. வணிகர்க்கு, [4] நாவாயும் [5] மணியும் [6] மருந்தும் முதலாயின; வேளாளர்க்கு, [7] நாஞ்சிலுஞ் [8] சகடமும் முதலாயின. பிறவும் அன்ன. அவையெல்லாம் அவரவர் செய்புட்குரியவென்பது. (எச)

[தலைமைக் குணச்சொல்லும் நான்கு வருணத்தாரும் பெறுவர் எனல்]

சுஊ. **தலைமைக் குணச்சொலுந் தத்தமக் குரிய**
நிலைமைக் கேற்ப நிகழ்த்துக வென்ப.

இதுவும் அது.

இ—ள்: அந்நான்கு சாதியார் தலைமைக்குணம்படச் சொல்லுஞ் சொல்லும் அவரவர்க்குரிய நிலைமைக்கேற்ப நிகழ்த்தவும் படும் என்றவாறு.

1. சுருவை— நெய்ம்முகந்து ஓமஞ்செய்யுங் கருவி.
2. சமிதை—ஓமவிறகு.
3. இவை பவானந்தம்பிள்ளை பதிப்பி லில்லை.
4. நாவாய்—தோணி.
5. மணி—இரத்தினங்கள்.
6. மருந்து—மருந்துப் பொருள்கள்.
7. நாஞ்சில்—உழுங் கலப்பை.
8. சகடம்—பண்டி (வண்டி).

அந்தணர் தலைமைக்குணங் கூறுங்காற் பிரமனெடு கூறியும், அரசரை மாயனெடு கூறியும், வணிகரை [1] நிதியின் கிழவனெடு கூறியும், வேளாண்மாந்தரை வருணனெடு கூறியுந் தலைமைக் குணச்சொல் நிகழ்த்தப்படும். அவையெல்லாம் அவரவர் செய்யுளுட் கண்டுகொள்க. (எடு)

[அரசரும் வணிகரும் படைவகையும் பெறுவர் எனல்]

சுசுக. இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறுஅ ரென்மனர் புலவர்.

மேல் நான்கு வருணத்தாரையும் உடன் கூறிவந்தான், இது முதலும் கடையும் ஒழித்து இடைநின்ற இரு வருணத்தார்க்கும் ஆவதோர் புறனடை கூறுகின்றது.

இ—ள்: அரசரும் வணிகருமல்லது படைப்பகுதி பெறார் என்றவாறு.

படைப்பகுதியென்பன: வேலும் வாளும் வில்லும் முதலாயின. 'நாடின்' என்பதனுன், ஒருசாரார்தணரும் படைக்குரியாரென்பது கொள்க; அவர், [2] இயமதங்கியாரும் [3] துரோணனும் கிருபனும் முதலாயினரெனக் கொள்க. வேளாண்மாந்தர்க்கும் இஃதொக்கும். இவை விகாரமெனவும் எடுத்தோதிய வருணங்கட்கே இஃது இயல்பெனவுங் கொள்க. (எசு)

[வணிகர்க்கு வாணிகமுரித்தெனல்]

சுசுஉ. வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை.

இது, வணிகர் மரபு கூறுகின்றது.

இ—ள்: வணிகர்க்குத் தொழிலாகிய வாணிக வாழ்க்கை உள்ளுறையாகச் செய்யுள்செய்தல் பெரும்பான்மையுமாம் என்றவாறு.

அவையும் அவர் செய்யுளிற் காணப்படுமாறு அறிந்து கொள்க. (எஎ)

---

1. நிதியின் கிழவன்—குபேரன்.

2. இயமதங்கி—பரசுராமன். இராமாயணத்தும் பாரதத்தும் இவன் படைக்குரியனுதல் கூறப்பட்டுளது காண்க.

3. துரோணனும் கிருபனும்—படைத்தொழிற் பகுதிக்குரிய ராதலைப் பாரதத்துட் காண்க.

[வணிகர் எண்வகைக் கூலமும் பெறுவர் எனல்]

சுசுக. மெய்தெரி வகையி னெண்வகை யுணவின்
செய்தியும் வரையா ரப்பா லான.

இன்னும் வணிகர்க்கே உரிய தொழில் கூறுகின்றது.

இ—ள்: பொருள் தெரிந்தவகையான் எண்வகைக் [1] கூலமுஞ் செய்து விலைத்தலும் அவர் கடன் என்றவாறு.

அவையும் அவர் பண்டத்தொடு உபகாரப்படுமாகலின் வரையப்படாதென்றுணென்பது.

எண்வகையுணவென்பன: பயறும் உழுந்தும் கடுகும் கடலையும் எள்ளும் கொள்ளும் அவரையுமாம். (எஅ)

[அவர் கண்ணீயும் தாரும் பெறுவர் எனல்]

சுசுச. கண்ணியுந் தாரு மெண்ணினு ராண்டே.

இதுவும் அது.

இ—ள்: இவையும் வணிகர் திறத்தன என்றவாறு.

கண்ணியென்பது, சூடும்பூ. தாரென்பது ஒருகுடிப் பிறந்தார்க்குரித்தென வரையறுக்கப்படுவ [2] தாயிற்று. எண்ணப்படுமெனவே [3] அவரவர்க்குரியவாற்றுற் பலவாகி வரும்; அவை வந்தவழிக் கண்டுகொள்க. (எக)

[வேளாளர்க்கு உழவுதொழில் உரித்தெனல்]

சுசுடு. வேளாண் மாந்தர்க் குழுது ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.

இது, வேளாண்மாந்தர்க்குக் கூறப்படுந் தொழில் கூறுகின்றது.

இ—ள்: வேளாண்மாந்தர் பலவகைப்பட்ட தொழிலரேனும் உழுந்தொழிலே பெரும்பான்மைத்தாகலான் அதனையே சிறப்பித்துச் சொல்லுதன் மரபு என்றவாறு.

---

1. கூலம்—பண்டம்.

2. ஆயிற்று—ஈண்டு வேண்டியதில்லை.

3. அவரவர்க்கு உரிய என்றது—அவ்வக் குடிப்பிறந்தார்க்கு உரிய என்றபடி. குடி—இப்பர்குடி, கவிப்பர்குடி, பெருங்குடி என்பன.

'உழுதுண்டு வாழ்வார்' (குறள். கo கூ) என்பது, இதன் பொருளாயிற்று. மற்றுப் [1] பார்ப்பியன் முதலாகிய நால் வகைத் தொழிலும் வாகையுட் (எநி) கூறினமையின் இச்சூத் திரமும் மேலைச்சூத்திரங்களும் மிகையாம் பிறவெனின்,—அற் றன்று ; பார்ப்பியலும் அரசியலும் வாணிகத் தொழிலுமாகிப் பொதுப்படநின்ற ஓதலும் வேட்டலும் ஈதலும் இவர்க்கு ஒத்த சிறப்பினவாகலானும், அவருள் வணிகர்க்கும் ஒழிந்த வேளா ளர்க்கும் ஒத்த செய்கியனவாகிய உழவுத்தொழிலும் நிரை காத்தலும் வாணிகமுமென்பன அவற்றின் ஒத்த சிறப்பின வன்றி அவற்றுள்ளும் ஒரோவொன்று ஒரோவருணத்தார்க்கு உரியவாமாகலானும் ஈண்டு அவை விதந்து கூறினனென்பது. நிரை காவலும் உழவுத்தொழிலும் வணிகர்க்கும் வேளாளர்க் குந் தடுமாறுதல்போலாது வாணிக வாழ்க்கை வேளாண்மாந் தர்க்குச் சிறுவரவிற்றெனவும், உழுதுண்டல் வணிகர்க்குஞ் சிறு வரவிற்றெனவும், எண்வகைக் கூலத்தொடுபட்டதே பெருவர விற்றெனவுங் கூறினன் இச்சூத்திரங்களானென்பது. இதனது பயம்: புலனெறி வழக்கினுள் இவர்க்கு இவை சிறந்த மர பென்றலாயிற்று. (அ○)

[வேளாளர் வேந்தர் கொடுப்பின் படையுங் கண்ணியும் பெறுவரெனல்]

சூகூ. **வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்**
வாய்ந்தன ரென்ப வவர்பெறும் பொருளே.

இது, நான்காம் வருணத்தார்க்கோர் புறனடை.

இ—ள்: வேந்தர் கொடுப்பின் வேளாண் மாந்தர்க்குப் படைக்கலமும் கண்ணியும் பெறும்பொருளாகச் சொல்லப்படும் என்றவாறு.

'வேந்துவிடு தொழில்' என்பது, வேந்தனற் கொடுக்கப் படுங் [2] தண்டத்தலைமையாகிய சிறப்புக் காரணத்தானென்ற வாறு ; அகத்திணையியலுள்,

"உயர்ந்தோர்க் குரிய வோத்தி னான." (நக)

என்புழிக் கூறப்பட்டதெனின்,—வேளாளரையொழித்து ஒழிந் தோரை நோக்கிற்று அச்சூத்திரமென்பது. மேற்கூறியவற்றை

1. பார்ப்பியல்—பார்ப்பனச் சாதியின் இயல்பு.
2. தண்டம்—சேனை.

யும் மரபுபற்றி ஈண்டு வரையறை கூறுகின்றவாறெனக் கொள்க. அவையும் அவரவர் பாட்டுக்களுட் கண்டுகொள்க. (அக)

[அந்தணாளர் அரசுத் தொழிலும் பெறுவரெனல்]

சூகூ. **அந்த ணாளர்க் கரசுவரை வின்றே.**

இஃது, எல்லாவற்றினுஞ் சிறுவரவிற்றாகி அரசர்க்குரிய தொழில் அந்தணர்க்குரியவாகலின் ஈண்டு போதந்து கூறு கின்றது.

இ—ள்: அரசர் இல்வழி அந்தணரே அவ்வரசியல் பூண் டொழுகலும் வரையப்படாது என்றவாறு.

மக்களோத்தின்ற மன்னவர்க்குப்பின்னே மறையோரான் அரசு தோற்றப்பட்டாற்போலக் கொள்க. (அஉ)

[இது குறுநில மன்னர்க்குரியன கூறுகின்றது]

சூகூ அ. **வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந்**
தாரு மாலையுந் தேரும் வாளு
மன்பெறு மரபி னேனோர்க்கு முரிய.

இது, முடியுடை வேந்தரல்லாக் குறுநில மன்னர்க்குரியன கூறுகின்றது.

இ—ள்: இவ்வெண்ணப்பட்டனவெல்லாங் குறுநில மன் னர்க்கு உரியன என்றவாறு.

'மன்பெறு மரபினேனோர்' எனப்படுவார், அரசுபெறு மர பிற் [1] குறுநில மன்னர் எனக் கொள்க. அவை பெரும்பாணற் றுள்ளும் பிறவற்றுள்ளுங் காணப்படும். (அகூ)

[இழிந்தோர் வில் முதலியன பெறார் எனல்]

சூகூக. **அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லே.**

இஃது, எய்கியது இகந்துபடாமைக் காத்தது.

இ—ள்: மன்னவர்போலுஞ் செல்வத்தராகி இழிகுலத் தோர் நாடாண்டாராயினும் அவர்க்கு இவை கூறலமையாது என்றவாறு.

1. குறுநில மன்னராவார் பாரி முதலாயினோர்.

"மன்பெறு மரபி னேனோர்." (சூகூஅ)

எனவே, ஆசிரியர் வைசியரன்றிக் [1] கீழ் அமையாவாயிற்று. (அசை)

[புறக்காழுடையன இன்ன பெயரான் வழங்கப்படுமெனலும் அகக்காழுடையன இன்ன பெயரான் வழங்கப்படுமெனலும்]

சூசo. புறக்கா ழனவே புல்லென மொழிப
வகக்கா ழனவே மரமென மொழிப.

இது, மக்களை வழங்குமாற்றுக்கண் மரபுகூறி, இனி ஓரறிவுயிர்க்கு இன்னவாறு சொல்லுதன் மரபென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: புறத்துக்காழ்ப்புடையவற்றைப் புல்லெனவும் அகத்துக்காழ்ப்புடையனவற்றை மரமெனவுஞ் சொல்லுப என்றவாறு.

'புறக்காழன; எனவே, [2] அல்வழி வெளிறென்பது அறியப்படும்; [3] அவை பனைபுந் தெங்குங் கமுகும் முதலாயின புல்லெனப்படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப்படும். இங்ஙனம் வரையறை கூறிப் பயந்தெதன்னை? புறத்தும் அகத்தும் கொடிமுதலாயின [4] காழ்ப்பின்றியும் அகின் மரம்போல்வன இடைபிடை [5] பொய்ப்பட்டும் புல்லும் மரனும் வருவன உளவாலெனின்,—இரண்டிடத்தும் ஏகாரம் பிரித்துக் கூறினமையானும் 'எனமொழிப' என்று இருவழியுஞ் சிறப்பித்து விதந்தமையானுஞ் சிறுபான்மை அவையும் புல்லும் மரனுமென அடங்குமென்பது.

"இரும்பனம் புல்லின் பசுந்தோட்டுக் குடம்பை."

எனவும்,

"யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவின்." (குறுந். கசூஅ)

எனவும் வரும்.

---

1. கீழ்—குறுநில மன்னரினும் வேளாளர் காணப்படலின் கீழ் என்பதற்கு ஐந்திணைத் தலைவர்போல்வாரைக் கூறல் நலம். இதற்கும் முதற் சூத்திரத்திற்கும் இளம்பூரணர் வேறு பொருள் கூறுவர்.

2. அல்வழி — புறமல்லாத இடம். எனவே அகமென்றாயிற்று.

3. அவை—என்பது வேண்டியதில்லை.

4. காழ்ப்பு—வயிரம்.

5. பொய்—உள்ளீடின்மை.

"நிலாவி னிலங்கு மணன்மலி மறுகிற்
புலாலுஞ் சேரிப் புல்வேய் குரம்பை." (அகம். உoo)

எனப் புறக்காழும் அகக்காழும் அல்லன புல்லெனப்பட்டன வென்பது; [1] அது, பனையோலையுமாகலிற் புறக்காழுடைய பனையுமாமென்பது. [2] ஓதி மரக்கிளவியுமாமென்பது சிறுபான்மை. பிறவும் அன்ன. (அடு)

[புல்லினுறுப்புகளை வழங்கும் வாய்பாடு இவை எனல்]

சூசக. தோடே மடலே யோலை யென்ரு
வேடே யிதழே பாளை யென்ரு
வீக்கே குலையென நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்.

இது, முறையானே புறக்காழனவற்றைச் சொன்மரபுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: எண்ணப்பட்ட வாய்பாடும் பிறவும் புல்லுறுப் பினைச் சொல்லும் வாய்பாடு என்றவாறு.

'பிறவும்' என்றதனால், குரும்பை நுங்கு [3] நுகும்பு போந்தை யென்றற்றொடக்கத்தனவுங் கொள்க.

"இரும்பனை வெண்டோடு மிலைந்தோனு மல்லன்."
(புறம். சரு)

எனவும்,

"மாவென மடலு மூர்ப." (குறுந். கஎ)

எனவும்,

"துகடபு காட்சி யவையத்தா ரோலை." (கலி. கூசு)

எனவும் வரும். ஓழிந்தனவுங் கொள்க.

---

1. அது என்றது 'புல்வேய் குரம்பை' என்பதிற் புல் என்பதை. புல் என்பதற்கு, குரம்பை பனையோலையானும் வேய்தலின் பனை என்றுங் கூறலாம் என்றபடி. புல் என்பது புற்சாதிக்கும் பெயர். அது: "நெல்லும் புல்லும் வரையா ராண்டே" என்பதனாலறிக, புறக்காழுடையவற்றிற்கும் பெயர்.

2. ஓதி—உதி. அது அகக்காழும் புறக்காழு மல்லாதது; அதனை மரமென்றல் சிறுபான்மை என்றபடி. 'உதிமரக் கிளவி' (தொ. எழு. உயிர். சக)

3. நுகும்பு—சுருண்ட குருத்து என்பர் டாக்டர் உ. வே. சாமிநாதையர். (குறுந்தொகை உரை—நo அ). இளமடல் என்பர் நற்றிணை உரையாசிரியர். (நற்றிணை—கூஉ).

"வண்டோட்டு நெல்லின் வருகதிர் வணங்க."(நெடுநல். உஉ)

என்பதும் அது.

'நேர்ந்தன பிறவும்' என்பது, கேட்டாரை உடம்படுவிப்பன பிறவுமென்றவாறு.

"வண்கோட் பெண்ணை வளர்ந்த நுங்கின்."(சிறுபாண். உஎ)

எனவும்,

"பனைநுகும் பன்ன சினைமுதிர் வராலொடு." (புறம். உசக)

எனவும் வரும். பிறவும் அன்ன. (அசு)

[மரவுறுப்புக்களே வழங்கும் வாய்பாடு இவை எனல்]

சூசஉ. இலையே தளிரே முறியே தோடே
சினையே குழையே பூவே யரும்பே
நனையுள் ளுறுத்த வனையவை யெல்லா
மரனெடு வருஉங் கிளவி யென்ப.

இஃது, அகக்காழனவற்றுறுப்பினைச் சொல்லும் மரபுணர்த்துதல் நுதலிற்று.

இ—ன்: எண்ணப்பட்டனவும் பிறவுமெல்லாம் மரத்துறுப்பினைச் சொல்லும் வாய்பாடு என்றவாறு.

'அனையவையெல்லாம்' என்ற புறநடையானே, [1] புல்லுந் தழையும் பொங்கரும் முதலாயின கொள்க. அவை,

"தெய்வ மடையிற் றேக்கிலை குவைஇ."
(பெரும்பாண். கஅச)

எனவும்,

"முரிமே யாக்கை." (நற். கருக; மலைபடு. நகநஉ)

எனவும்,

"யாஅ வொண்டளி ரரக்குவிதிர்த் தன்ன." (அகம். நஉநஉ)

எனவும்,

"தோடுதோய் மலிர்நிரை யாடி யோரே." (அகம். கசுசு)

எனவும்,

"மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை." (குறுந். உசு)

எனவும்,

1. புல்—புற்சாதியினிலையைப் புல் என்றல் வழக்கு. மரங்களுக்குக் காணப்படவில்லை.

"கொய்குழை யகைகாஞ்சித் தழையணி நல்லூர." (கலி. எச)

எனவும்,

"நனைந்த செருந்தி." (அகம். கடுஅ)

எனவும்,

"அண்டர் மகளிர் தண்டழை யுடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல் போல." (அகம். நுகூ)

என்றாற்போல வருவனவுமெல்லாங் கொள்க.

மேலைச் சூத்திரத்து,

"புல்லொடு வருமெனச் சொல்லினர்." (சூசக)

எனவும்,

இச்சூத்திரத்து,

"மரனெடு வருஉங் கிளவி." (சூசஉ)

எனவும் மிகைபடக் கூறியதென்னையெனின்,—அம்மிகையானே எடுத்தோதிய புறக்காழனவும் அகக்காழனவுமன்றி அவற்றொடு தழீஇக் கொள்ளப்படுவனவுமெல்லாம் இவற்றுக்குரியவென்பது கொள்க. அவை, ஊகம்புல்லும் சீழகம்புல்லும் பஞ்சாய் முதலியனவும், [1] புழற்கால் ஆம்பல் முதலியனவும், புல்லெனப்பட்டடங்கி [2]யவற்றின் பெயரும் பெறுமென்பது. பிடாவும், காயா முதலிய புதலும், பிரம்பு முதலாகிய கொடியும் மரமெனப்பட்டவற்று உறுப்பின் பெயர்பெறுமென்பது; அவை, ஊகந்தோடு சீழகந்தோடு எனவும், பிடவிலை காயாம்பூ முல்லைப்பூ எனவும் வரும். பிறவும் அன்ன.

மற்றுப் பிறப்புமுறையால் தளிர் முற்கூறாது இலை முற்கூறியதென்னையெனின்,—புல்லினுள் ஒருசாரன இலையெனவும், பூவெனவும்படுமென [3] அதிகாரங் கோடற்கென்க. அவை,

"சுரும்பிலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை."
(பெரும்பாண். அச)

எனவும்,

'ஆம்பலிலை, தாமரையிலை.'

எனவும்,

'ஆம்பற்பூ, தாமரைப்பூ.'

எனவும் வரும். பிறவும் அன்ன கொள்க.

1. புழற்கால்—துளையுடைய தண்டு.
2. அவற்றின் பெயர் எனப் பிரிக்க.
3. முதற் சூத்திரத்து வந்த புல்லிலை இதற்கும் அதிகாரத்தாற் கோடற்கு என்றபடி.

இன்னும் இவ்விலேசானே புல்லிற்குரியன மரத்திற்கு வருவனவுங் கொள்க; அவை,

"ஈன்றவ டிதலோ [1] லீர்பெய்யுந் தளிசொடும்." (கலி. கூஉ)

என ஈர்க்கென்பது மாவிலேமேல் வந்தது. பிறவும் அன்ன. (அஎ)

[மேற்கூறிய இரண்டற்கும் பொதுவாகச் சொல்லப்படும் உறுப்புக்களிவை எனல்]

கூசகூ. காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றுங் கவையு மன்ன.

இது மேற்கூறிய இரண்டற்கும் பொதுவுறுப்புணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: இவையும் அவ்விருதிறத்தோடொக்கும் என்றவாறு.

உதாரணம்:— தெங்கங்காய் கமுகங்காய் எனவும், வேப்பங்காய் மருதங்காய் எனவும், காயென்பது அவ்விரண்டற்கும் வந்தது. பழமென்பதற்கும் இஃதொக்கும். பனந்தோல் வேப்பந்தோல், பனஞ்செதிள் வேப்பஞ்செதிள், தாழைவீழ் இத்திவீழ் என இவையும் இருபாற்குமுரியவாயின.

மற்றிவையெல்லாம் வரையறையின்றிச் செல்லுமாயிற் புறக்காழன அகக்காழனவென வரையறுத்துப் பயந்தெதன்னேயெனின்,—அவ்விருபகுதியுள் அடங்கக் கூறியவெல்லாம் புல்லெனவும் மரமெனவும்படாவென்றற்கும், [2] அவற்றுறுப்பு ஓதிய வாற்றுற் புல்லின்கண்ணும் மரத்தின்கண்ணும் பெருவரவினவாமென்றற்குமென்பது. (அஅ)

[இருதிணை யைம்பாற்பொருள்களை மரபு பிறழாமற் சொல்லல்வேண்டுமெனல்]

கூசச. நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலக மாதலி
னிருதிணை யைம்பா லியனெறி வழாஅமைத்
தீரில் சொல்லொடு தழாஅல் வேண்டும்.

1. ஈர்—ஈர்க்கு என்றது மாவிலையின் நடுவே செல்லும் காம்பை.

2. அவற்றுறுப்பு என்றது புறக்காழுக்கும் அகக்காழுக்கும் ஓதிய உறுப்புக்கள். அவை, "தோடே மடலே" என்னுஞ் சூத்திரத்தானும், "இலையே தளிரே" என்னுஞ் சூத்திரத்தானும் கூறியன.

இஃது, உலகியலெல்லாம் மரபிற்றிரியாமையின் அதன் சிறப்புணர்த்தி அதற்குக் காரணமுங் கூறுகின்றது.

இ—ள்: நிலனும் தீயும் நீரும் காற்றும் ஆகாயமுமென்னும் ஐம்பெரும் பூதமுங் கலந்த கலவையல்லது உலகமென்பது பிறிதில்லாமையின் அவற்றைச் சொல்லுமாறு சொல்லாது இருதிணைப் பொருளென வேறுபடுத்தும் ஐம்பாலென வேறுபடுத்தும் வழங்குகின்ற வழக்கெல்லாம் மரபிற்றிரியாத சொல்லொடு தழீஇ வரல்வேண்டும் என்றவாறு.

இதன் கருத்து:— "நிலம்வலிது, தீவெப்பது, நீர்தண்ணென்றது, வளியெறிந்தது, விசும்பு அகலியது" என அஃறிணை வழக்கினவாயினும் இவை கலந்தவழியும் அவ்வாய்பாட்டான் வழங்காது உயர்திணை வாய்பாடு வேறுகவும், அஃறிணை வாய்பாடு வேறுகவும் அவை தம்முட் பகுதியாகிய ஐந்து பாற்சொல்லும் வெவ்வேறுகவும் வழங்குகின்ற வழக்கிற்குக் காரணம் மரபல்லது பிறிதில்லையென்றவாறு; எனவே, மரபினை வலியுறுத்தவாறு.

மற்று, நிலம் நீர் தீ வளி ஆகாயமென ஒன்று ஒன்றனுள் அடங்குமுறையாற் கூறுதல்செய்யாது மயங்கக் கூறியதென்னையெனின்,—அவை கலக்குங்கால் ஒரோ பொருளின்கண்ணும் அம்முறையானே நிற்குங்கொலென்று கருதினுங் கருதற்க, மயங்கி நிற்குமென்றற்கு அவ்வாறு கூறினனென்பது. (அகூ)

[செய்யுள் மரபு பிறழாமற் செய்தல்வேண்டுமென்றற்குக் காரணங் கூறல்]

கூசருி. [1] மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபுவழிப் பட்ட சொல்லீ னான.

இது, மரபினையே வற்புறீஇயது.

இ—ள்: வழக்கினகத்து வரலாற்று முறைமை பிறழாது வருதலே தக்கது, மற்றுச் செய்யுள்செய்த சான்றோர் அதற்கேற்றவகையாற் செய்யப்பெறுவராகலின் என்றவாறு.

1. மரபுவழிப்பட்ட சொல்லாற் செய்யப்பெறுதலின் மரபு நிலைதிரிதல் செய்யுளுக்கில்லை எனவே செய்யுள் மரபுவழிப்பட்ட முறையாற் செய்யப்படுமென்பதாம்.

அவர்க்கு இம்மரபு வேண்டுவதன்றுகொலென்று கருதினுங் கருதற்க.

"மரபே தானு,
நாற்சொல் வியலான் யாப்புவழிப் பட்டன." (ந.கூஉ.)

என்றதனான், மரபுவழிப்படுங்காலென்பான்,

"மரபுவழிப் பட்ட சொல்லி னான."

என்றானென்பது. ஆண்டுக் கூறிய மரபு உலகியலாகலான் அவ்வுலகியல் அவ்வாறாதற்குக் காரணம் ஈண்டுக் கூறிச் செய்புட்கும் அதுவே காரணமெனக் கூறினானென்பது. இதனது பயன்: 'செஞ்ஞாயிறு' என்பது, வழக்கன்றாயினும் [1] உண்மைநோக்கி அதனைச் [2] செய்யுள்செய்யுஞ் சான்றோர் அவ்வாறு வழங்கினாற்போல உயர்திணைப் பொருளையும், ஐம்பெரும் பூதங்கள் அஃறிணையான் வழங்குதலுண்மை நோக்கி அவ்வாறுஞ் சொல்லிப்பெறுவகொலென்று ஐயுற்றானை ஐயம் அறுத்தவாறு. அஃறிணைப்பாற்கும் இஃதொக்கும்; அல்லதூஉம், இன்ன செய்யுட்கு இன்ன பொருளுரித்தெனவும், இனைப்பகுதியாற் பெயர் பெறுமெனவும், மரபுபற்றியே சொல்லப்படுமென்றற்கும், இனி, நிறைமொழி மாந்தர் மறைமொழிபோல்வன சில [3] மிறைக்கவி பாடினருளென்பதேபற்றி [4] அல்லாதாரும் அவ்வாறு செய்தன் [5] மாபன்றென்றற்கும் இது கூறினானென்பது; அவை: சக்கரஞ், சுழிகுளம், கோமூத்திரிகை, ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று என்றாற்போல்வன. இவை மந்திரவகையானன்றி வாளாது மக்களைச் செய்யுள்செய்வார்க்கு அகனைந்திணைக்கும் மாபன்றென்பது கருத்து. அல்லாதார் இவற்றை எல்லார்க்குஞ் செய்தற்குரியவென இழியக் கருதி அன்னவகையான் [6] வேறு சில பெய்துகொண்டு அவற்றிற்கும் இலக்கணஞ்

1. உண்மை—ஞாயிற்றுக்குச் செம்மைக்குணம் உண்மை.

2. 'செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும்' என்பது செய்யுள் (புறம்—ந.அ).

3. மிறைக்கவி—சித்திரகவி. தேவார முதலியவற்றில் ஏகபாதம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று முதலியன தேவரைப் பற்றி அமைந்திருக்கின்றன.

4. அல்லாதார்—நிறைமொழி மாந்தர் அல்லாதார்.

5. மரபன்றென்றற்கு என்ற பாடம் பொருத்தம். சி.வை. தாமோதரம்பிள்ளை பாடம் பொருத்தமில்லை.

6. வேறு சில—அதனோடு வேறு சில. அவை ஆசு, மதுரம், வித்தாரம் என்பன.

சொல்லுப. அவை இத்துணையென்று வரையறுக்கலாகா; என்னை? [1] 'ஒற்றை, [2] இரட்டை, [3] புத்தி, [4] வித்தாரம்' என்றாற்போல்வன பலவுங் கட்டிக்கொண்டு அவற்றானே செய்யுள் செய்யினுங் கடியலாகாமையின் அவற்றிற்கு வரையறைவகையான் இலக்கணங் கூறலாகாவென்பது.

[5] "ஐயைதன் கையு விரண்டொழித்தெ கோம்பான்மேற்
பெய்தார் பிரிவுரைத்த வில்லியால்."

எனவும்,

"கோடாப் புகழ்மாறன் கூட லனையாளை
[6] யாடா வடகினுளுங் காணேன்." (திணைமாலை நூற். ச)

எனவும் சொல்லுவார் சொல்லுவனவற்றுக்கெல்லாம் வரையறையின்மையின் அவற்றுக்கு இலக்கணங் கூறார் பண்ணத்திப் பாற் (சகூஉ) படுப்பினல்லதென்பது. (கூ)

[மரபுநிலை திரியிற் பொருள் வேறுபடுமெனல்]

சூசசு. **மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்.**

இது, மேற்போன வழக்கிற்கும் செய்யுட்கும் வருகின்ற இலக்கணத்திற்கும் பொது.

இ—ள்: மரபினை நிலைதிரித்துச் சொல்லுபவெனின்,—உலகத்துச் சொல்லெல்லாம் பொருளிழந்து பிறிதுபிறிதாகும் என்றவாறு.

செவிப்புலனுய ஓசைகேட்டுக் கட்புலனுய பொருளுணர்வதெல்லாம் மரபுபற்றுக அல்லது மற்றில்லையென்றவாறு. (கூக)

[வழக்காவது இதுவெனல்]

சூசஎ. **வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே**
நீகழ்ச்சி யவர்கட் டாக லான.

1. ஒற்றை—தனிநின்று முடிவது.

2. இரட்டை—ஒருவினை கொண்டு முடியும் இரு செய்யுள்.

3. புத்தி—நுட்பபுத்தியினாற் செய்வது போலும்.

4. வித்தாரம்—அகலக் கவி. ஒற்றை, இரட்டை, புத்தி, வித்தாரம் என்பன பேராசிரியர் பிறரைப் பழித்துக் கட்டியது.

5. ஐயைதன்கை எட்டு. அதனுள் இரண்டொழிக்க ஆறும். ஆறு என்றது அறுமீனை=கார்த்திகையை. கார்த்திகை—கார்த்திகைப்பூ. என்றது காந்தட்பூவை.

6. அடாவடகு—விளையாட்டு. ஈண்டு ஆயத்தைக் குறித்ததுபோலும். திணைமாலை நூற்றைம்பதின் உரை நோக்குக. உரைகாரர் ஆடாவடகு நீட்டல் விகாரமென்பர்.

[1] இது, வழக்கினுண் மரபினைப் பிழைத்துக் கூறுவனவும் உளவென்பதுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கே; என்னை? உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினமையின் என்றவாறு.

அவரையே நோக்குகலென்பது, அவராணையான் உலக நிகழ்ச்சி செல்கின்றதென்றவாறு; எனவே, உயர்ந்தோரெனப் படுவார் அந்தணரும் அவர்போலும் அறிவுடையோருமாயினு மென்பது. (கூஉ)

[நூல் இருவகையவெனல்]

சூசஅ. மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூரு மிருவகை யியல
முதலும் வழியுமென நுதலிய நெறியின.

இது, மேற்கூறப்பட்ட மரபு வழக்கிற்கேயன்றி இலக்கணஞ் செய்வார்க்கும் வேண்டுமெனவும், அவ்விலக்கணம் இனைப் பகுதித்தெனவுங் கூறுகின்றது.

இ—ள்: மரபுநிலையில் திரியாமை தமக்குக் குணமாக உடையவாகி எல்லாராலும் உரைக்கப்படும் நூல் இரண்டிலக்கணத்தவாகும்; முதனூலெனவும், வழிநூலெனவுங் கருதிக் கொள்ளும் அடிப்பாட்டான் என்றவாறு.

"மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்." (சூசசு)

என்பதனை இதற்குமேல் எய்துவித்தானன்றே, அதனுன் மரபு நிலை திரியாமையே [2] தமக்குத் தகுதியாவதெனவும், இவ் [3]விரு வாற்றானும் ஒன்றனைச் செய்தலே மரபெனவுங் கூறியவாறு.

'நுதலிய நெறி' என்றதென்னையெனின், — இன்னதே முதனூல் வழிநூலென்பதோர் யாப்புறவில்லை; ஒருநூல் பற்றி ஒருவன் வழிநூல் செய்தவழி அவ்வழிநூல்பற்றிப் பின்னொருகாலத்து ஒருநூல் பிறந்ததாயின் அது வழிநூலெனப்பட்டு

1. உயர்ந்தோர் வழக்கல்லாதன பிழைத்துக் கூறுவன என்பது கருத்து.
2. தமக்கு என்றது—இருவகை நூற்கும் என்றவாறு.
3. இருவாறு—முதல், வழி என்ற இருவாறு.

முன்னை வழிநூலே முதனூலெனப்படுமென்றற்கென்பது. இதனைச் சார்புநூலென்னுமோவெனின்,—[1] வழிநூலுஞ் சார்புநூலு மாகலின் அங்ஙனங் கூறுஞாயினுன். எற்றுக்கு? சார்பு நூலினைப் பற்றி ஒருநூல் பிறந்தவழிச் சார்பின் சார்பெனக் கூறல்வேண்டுவதாகலானும் அதனைச்சார்ந்து தோன்றிற் சார்பென்னுஞ் சொல்லே மும்முறை சொல்லியும் அதன்பின் தோன்றிய நூற்கு நான்முறை சொல்லியும் எண்ணிக்கோடுதலானுமென்பது.

மற்று இரண்டாமெண்ணு முறைமைக்கணின்ற நூலினையே வழிநூலெனக் கொண்டு மூன்றாவது தோன்றிய நூலே சார்பு நூலாகவும் அதன்பின்னர் நூல் செய்யப்பெறுமெனவுங் கொள்ளாமோவெனின்,—முதனூலிற் கிடந்த பொருளை [2] ஓர் உபகாரப்பட, வழிநூல் செய்த ஆசிரியன் செய்தக்காற், சார்பு நூலெனப் பின்னர் ஓர் ஆசிரியன் நூல்செய்ததனும் பயந்ததென்னையென்க. என்றார்க்கு, வழிநூலும் பிற்காலத்தரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்தலன்றே இதனுற் பயந்ததினின்,—அதுதானும் பின்னொருகாலத்து [3] அரிதாமாயின் அதனையும் எளிதாகச் செய்வானல்லனோவென்று மறுக்க. இவ்வாராய்ச்சி வேண்டாவென்றற்கன்றே இவ்விருவகையானும் வருதலே மரபென்பானுரைத்தென் றுரைக்க.

ஒன்றன்வழியே யன்றியுந் தானுந் தானறிந்தவாற்றானும் நூல் செய்யப்பெறுமோவெனின்,—அது மரபன்று; அதுநோக்கியன்றே,

"மரபுநிலை திரியிற் பிறிதுபிறி தாகும்." (சூசசு)

என்றவிதி நூலிற்கும் எய்துவித்துப் புகுந்ததென்பது; என்னை? பிறிதுபிறிதாகுமாறெனின்,—ஒருபொருட்கண்ணே மாறுபட்ட இலக்கணங் கூறின் [4] அவ்விரண்டும் அதற்கிலக்கணமாகாது; என்போல? மாணிக்கமணியினைச் செவ்வண்ணம் முதலாயின சில இலக்கணங் கூறிய நூல் கிடப்பக் கருவண்ணு முதலாயின

1. வழிநூலுஞ் சார்புநூலு மாகலின்—மூன்றாவது நூல், வழிநூலும் சார்புநூலும் எனப்படுமாகலின் என்பது கருத்து. எனவே இரண்டுமெனப்படும். ஆதலின் அங்ஙனம் கூறுர் என்க.
2. உபகாரப்படச் செய்தக்கால் என இயைக்க.
3. அரிது—உணர அரியது.
4. அவ்விரண்டும்—மாறுபட்ட இலக்கணம் இரண்டும்.

வும் அதற்கிலக்கணமென்று ஒருவன் எதிர்நூலென்பதோர் நூல் பிற்காலத்துச் செய்யுமாயின் அஃது அதன் இலக்கணமெனப் படாதாகலானென்பது.

மற்றுக் காலந்தோறும் வழக்கு வேறுபடுதலின் வழக்கு நூலும் வேறுபடவமையும் பிறவெனின்,—

"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான" (சூசஎ)

என்றமையானும், அங்ஙனங் காலந்தோறும் ஓரோர் நூல் செய்யின் [1] வழக்கல்லது எஞ்ஞான்றும் அவ்விலக்கணத்தாற் பயமின்றாகியே செல்லுமாகலானும் அது பொருந்தாதென்பது.

அல்லதூஉம், முற்காலத்து வழங்கிவந்ததனை வழுவென்று களைபவாயினன்றே பிற்காலத்துப் பிறந்த வழக்கு இலக்கணமெனத் தழீஇக்கொள்வதென்க. [2] இந்நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின் இறுதிக்கண் வைத்தான் வழக்குஞ் செய்யுளுமென்று விதந்து புகுந்த இரண்டிலக்கணமும் முடித்தல்லது அவற்றைக் கூறும் இலக்கணங் கூறலாகாமையினென்பது. [3] இக் கருத்தறியாதார் செய்யுளியனினை ஒன்பதாம் ஒத்தென்ப.

அல்லதூஉம் இந்நூலிலக்கணம் வழக்கிற்குஞ் செய்யுட்குமேயன்றி அங்ஙனமாகப் பொருண்மேலும் [4] பண்டம் முதலாயவற்றிற்கு இலக்கணஞ் செய்யுங்காலும் [5] நியாயஞ் செய்யினுந் தமிழ்நூலதற்கிலக்கணம் எவ்வாற்றானும் இதுவேயென்றற்கும் ஈண்டுக் கூறினனென்பது. எனவே, பிறபாடை நூல்களாயின் இம்மரபு வேண்டுவதன்றுயிற்று. மற்று முதனூலினை இன்னதென்பது துணிந்து உரையாரோவெனின்,—அதுவன்றே இனிக் கூறுகின்றதென்பது. (கூஉ)

1. வழக்கல்லது.....செல்லும் என்றது—வழக்கே பயனுவதல்லது அவ்விலக்கணத்தாற் பயமின்றாகியேசெல்லும் என்றபடி.

2. இந்நூலிலக்கணம்—நூல்செய்யு முறைமையைபற்றிய இவ்விலக்கணம். இவ்வோத்து—மரபியல்.

3. இக்கருத்து — இந்நூலிலக்கணத்தைப் பின்வைத்த கருத்து. செய்யுளிலக்கணத்தை ஒன்பதாக வைப்பின் நூலிலக்கணம் இறுதியிற் கூறப்பட்டுவேண்டும். ஆதலின் அது எட்டே என்றபடி.

4. பண்டம்முதலாய—திரவியம்முதலாய. இது தருக்கம்.

5. நியாயம்—நியாய இலக்கணம்.

[முதனூலாவது இதுவெனல்]

சூசகூ. வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்.

மேல் ஒன்றற்கு முதனூலாகியும் ஒன்றற்கு வழிநூலாகியும் வந்து தடுமாறுமென்றான், இனி அவ்வாறன்றி ஒன்றே முதனூலாகவுஞ் சிறுபான்மை உண்டென்கின்றது.

இ—ள்: செய்வினையின் பயன் [1] துவ்வாது மெய்புணர்வுடையனாகிய முன்னோனாற் செய்யப்பட்டதே ஒருதலையாக முதனூலாவது என்றவாறு.

எனவே, மேலைச் சூத்திரத்து முதனூலும் வழிநூலுமெனப்பட்டன முதலுஞ் சினையும்போலத் தடுமாறுமென்பதூஉம் இதுவாயின் தடுமாறுது எஞ்ஞான்றும் முதனூலாமென்பதூஉம் பெற்றும்.

வினையென்பன, இருவினை; இன் நீக்கத்துக்கண் வந்தது. 'விளங்கிய அறிவு' என்பது, முழுதும் உணரும் உணர்ச்சி. 'அறிவின்' என நின்ற இன் சாரியை. இன்ன அறிவினோடு கூடிய முனைவன் அறிவின் முனைவனெனப்படும். முன்னோனை [2] முனைவனென்பது ஒருசொல்விழுக்காடாம். முன்னென்பதனை முனையென்பவாகலின்.

மற்று 'வினையின்' என்ற வேற்றுமை [3] நிற்பதன் நிலையும் நீங்குவதன் நீக்கமும் கூறுமாகலின் ஒருகாலத்து வினையின்கணின்று ஒருகாலத்து நீங்கினன்போலக் கூறியதென்னையெனின்,—அற்றன்று; வினைப்பயந் தொடரற்பாற் பொருளம் இலனென்பதன்றி அவர்க்குச் சில செய்கையுளவென்பது பல்லோர்க்கும் உடம்பாடாகலின், அவ்வினைக்கணின்றே, [4] போகமும் பாவமும் மெய்புணர்வுபற்றித் தெறப்பட்ட வித்துப்போலப் பிறப்பில் பெற்றியனாகி நீங்குமாகலின் அவ்வாறு கூறல் அமையு

1. துவ்வாது—அநுபவியாது. துவ்வாது உடையனாகிய என இயைக்க.

2. முனைவன் — முன்னோன். முனை — முன். விழுக்காடு—விழுகை; கோட்பாடு—கொள்கை என்பதுபோல.

3. நிற்பது—வினை; நிலை—அதன்கண் நிற்றல்.

4. போகமும் பாவமும் நீங்குமாகலின் என இயைக்க.

மென்பது; என்னை? [1]'குற்றங் கெடுத்து முற்ற உணர்ந் தோரும்', கெடுப்பதோர் [2]குற்றமின்றி முழுதுணர்ந்தோரும், எல்லாம் பிறர்க்குறுதியாகிய ஆகமஞ் செய்யினுந் துறக்கம் முதலாகிய பயன்றுய்ப்பாரல்லராகலின்.

இனி முனிவனுற் செய்யப்படுவதோர் நூலில்லையென்பார், அவன்வழித் தோன்றிய நல்லுணர்வுடையார் அவன்பாற் பொருள்கேட்டு முதனூல் செய்தாரெனவும், அம் முனிவன் முன்னர் [3]ஆகமத்துப் பிறந்ததோர் மொழியைப்பற்றி அதனைத் துப் பொருளுங்கண்டு பின்னர் [4]அவற்றவற்றிற்கு நூல்செய் தார் அவரெனவும், அவ்வாகமத்தினையே பிற்காலத்தாரும் ஒழுக் கம் வேறுபடுந்தோறும் வேறுபடுத்து வழிநூலுஞ் சார்புநூலு மெனப் பலவுஞ் செய்தாரெனவுங் கூறுப. அவை எவ்வாற் றானும் முற்ற உணர்ந்தோர் செய்த நூலன்மையின் அவை தேறப்படா; அல்லதூஉம், அவை தமிழ்நூலன்மையின் ஈண்டு ஆராய்ச்சியிலவென்பது.

மற்று, மேலைச்சூத்திரத்து நுதலிய நெறியானே முத லும் வழியுமாமெனவே, எல்லார்க்கும் முதல்வனுயினுன் செய் தது முதனூலேயாமென்பது பெறுதுமாகலின், ஈண்டு இச்சூத் திரங் கூறியதென்னையெனின்,—தாமே தலைவராவாரும் அத்தலை வரை வழிப்பட்டுத் தலைவராயினாரும் பலராகலின் தாமே தலைவ ராயினர் நூல்செய்யின் முதனூலாவதென்னின்,—அற்றன்று; தாமே தலைவராயினர் முற்காலத்துத் தமிழ்நூல் செய்திலராக லின் தலைவர்வழி நின்று தலைவனுகிய அகத்தியனுற் செய்யப் பட்டதும் முதனூலென்பது அறிவித்தற்கும், பிற்காலத்துப் [5]பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் பிற் காலத்தானும் முதனூலாவதென்பது அறிவித்தற்கும், அங் ஙனம் 'வினையினீங்கி விளங்கிய [6]அறிவினுன் முதனூல் செய் தான்' என்பது அறிவித்தற்கும் இது கூறினனென்பது.

1. குற்றங்கெடுத்து என்றது—போகமும் பாவமும் நீங்க லின், குற்றம் அவர்க்கு இல்லை என்றபடி.
2. குற்றமின்றி முழுதுணர்ந்தோர்—இறைவன் கூருனேர்.
3. ஆகமம்—நூல்.
4. அவற்றவற்றிற்கு—அவ்வப் பொருளுக்கு.
5. பெருமானடிகள்—இறையனர்.
6. அறிவினுன்—அறிவினையுடையான்.

எனவே, அகத்தியமே முற்காலத்து முதனூலென்பதூஉம், அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழிநூலென் பதூஉம் பெற்றும்.

என்றூர்க்கு முந்துநூலெனப்பட்டன முற்காலத்து வீழ்ந் தனவெனக் கூறித் தொல்காப்பியர் அகத்தியத்தோடு பிறழ வும் அவற்றுவழி நூல் செய்தாரென்றக்கால் இழுக்கென்னை யெனின்,—அது வேத வழக்கொடு மாறுகொள்வார் இக்காலத் துச் சொல்லினும் இறந்தகாலத்துப் பிற [1]பாசாண்டிகளும் மூன்றுவகைச் சங்கத்து நான்கு வருணத்தொடுபட்ட சான் ரோரும் அது கூறுரென்பது. என்னை? கடைச்சங்கத்தாருட் களவியற் பொருள்கண்ட கணக்காயனர் மகனர் நக்கீரர் 'இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல் காப்பியம்' என்றூராகலானும், பிற்காலத்தார்க்கு உரையெழுதி னேரும் அது கூறிக் [2]கரிபோக்கினுராகலானும், [3]அவர் [4]புலவுத் துறந்த நோன்புடையாராகலாற் பொய் கூறுராகலானுமென்பது. இங்ஙனங் கூறுக்கால் இதுவும் மரபு வழுவென்று அஞ்சி அகத்தி யர் வழித்தோன்றிய ஆசிரியரெல்லாருள்ளும் தொல்காப்பியனுரே தலைவரென்பது எல்லா ஆசிரியருங் கூறுபவென்பது; எங் ஙனமோவெனின்,—

> "கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
> தோரின் றுணர்ந்த றொல்காப் பியன்ற
> னுணியிற் றமிழறிந் தோர்க்குக் கடனே."

இது, பல்காப்பியப் புறனடைச் சூத்திரம்.

> "வீங்குகட ஓடுத்த வியன்கண் ஞாலத்துத்
> தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவளைக் காகென
> வானே ரேத்தும் வாய்மொழிப் பல்புக
> ழானுப் பெருமை யகத்திய னென்னு
> மருந்தவ முனிவ னுக்கிய முதனூல்
> பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோர்
> நல்லிசை நிறுத்த தொல்காப் பியனும்."

1. பாசாண்டிகள்—வேதவழக்கொடு மாறுபட்ட சமயிகள். பாசாண்டிகர் எனவும் வழங்கும். "அறுவகைப் பாசாண்டிகரும் இணைவிழைச்சு நீதென்ப" என்பது களவியலுரை.
2. கரிபோக்கல்—சான்று கூறல். சிலப்பதிகார உரையா சிரியர் அடியார்க்குநல்லாரைக் குறித்ததுபோலும்
3. அவர்—நக்கீரர்.
4. புலவுத்துறந்த நோன்பு—உடம்பை வெறுத்த விரதம்.

என்பதனால் அகத்தியர்செய்த அகத்தியத்தினை முதனூலென வும், அவர் மாணாக்கர் ஏத்தும் வாய்மொழிப் பல்புகழ் ஆனாப் பெருமையுடையாரெனவும், அவராற் செய்யப்பட்ட முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தாருள் தலைவராயினார் தொல்காப்பியனாரெனவும், பன்னிருபடலத்துப் [1] புனைந்துரை வகையாற் பாயிரச் சூத்திரத்துள் உரைக்கப்பட்டது. இனி, பன்னிருபடலம் முதனூலாக வழிநூல் (வெண்பாமாலை) செய்த ஐயனரிதனாரும் இது கூறினார்; என்னை?

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
றன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த."

எனப் பாயிரஞ் செய்தற்கு [2] உடன்பட்டமையினென்பது.

இவற்றானெல்லாம் அகத்தியமே முற்காலத்து முதனூலென்பதூஉம், தொல்காப்பியம் அதன் வழிநூலென்பதூஉம், அதுதானும் பனம்பாரனார்,

"வடவேங்கடம் தென்குமரி." (பாயிரம்)

எனக் குமரியாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரஞ் செய்தமையிற் சகரர் வேள்விக்குதிரைநாடித் தொட்டகடலகத்துப் பட்டுக் [3] குமரியாறும் பனைநாட்டோடு கெடுவதற்கு முன்னைய தென்பதூஉம், அவ் வழக்குநூல் [4] ஈண்டுப் பற்றியல்லது மூன்று வகைச் சங்கத்தாருஞ் செய்புட் செய்திலரென்பதூஉம், ஆசிரியரும் அவர்போல்வாரும் அவர்வழி ஆசிரியருஞ் செய்புள்செய்த சான்றோருஞ் சொல்லாதன சொல்லப்படாவென்பதூஉம் அவருடம்படாதன சொல் உளவென்று எதிர்நூலென ஒருவன் பிற் காலத்து நூல் செய்யுமாயின் தமிழ் வழக்கமாகிய மரபினெடுந்

1. புனைந்துரைத்தல்—புகழ்ந்து கூறல்.

2. உடன்படல்—சம்மதித்தல். தொல்காப்பியரை முதல்வ ரென்று கூறற்குச் சம்மதித்தல்.

3. செய்யுளியல் முதற்சூத்திர உரையுள்ளு மிவ்வாறு கூறுவர். பனைநாடு—ஏழ்குறும்பனைநாடு. அவை குமரியாற்றுக்கும் பஃறுளியாற்றுக்கு மிடையிலிருந்து கடல்கொண்டன. "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்ற அடியின் விரிவுரை நோக்குக. சிலப்பதிகாரம் வேனிற்காதை க-ம் அடி.

4. ஈண்டு என்பது இங்கு வேண்டியதில்லைப்போலும்.

தமிழ் நூலொடும் மாறுபட நூல் செய்தானுமென்பதூஉம், இனித் தமிழ் நூலுள்ளுந் தமது மதத்துக்கேற்பன முதனூல் உளவென்று இக்காலத்துச் [1] செய்துகாட்டினும் அவை முற் காலத்து இலவென்பது முற் கூறிவந்தவகையான் அறியப்படு மென்பதூஉம், [2] பாட்டுந் தொகையும் அல்லாதன சில நாட் டிக்கொண்டு மற்றவையுஞ் சான்றோர் செய்யுளாயின; வழுவில் வழக்கமென்பார் உளராயின் இக்காலத்துள்ளும் ஒருசாராரார்க் கல்லது அவர் சான்றோரெனப்படாரென்பதூஉம், இங்ஙனங் கட்டளைசெய்யவே காலந்தோறும் வேறுபடவந்த [3] அழிவழக் கும் இழிசனர் வழக்கும் முதலாயினவற்றுக்கெல்லாம் நூல் செய்யின் இலக்கணமெல்லாம் எல்லைப்படாது இகந்தோடுமென் பதூஉம், இறந்தகாலத்து நூலெல்லாம் பிறந்தபிறந்த வழக் குப்பற்றிக் குன்றக்கூறல் என்னுங் குற்றந் தங்குமென்பதூஉம், ஒன்றுகப் புறனடுத்து ஒருசூத்திரமே செய்துபோத [4] அமையி னன்றி ஒழிந்த சூத்திரங்களெல்லாம் மிகையாமென்பதூஉமெல் லாம் படுமென்பது. (கூச)

[வழிநூலாவது இதுவெனல்]

கூரு. வழியெனப் படுவ தெதன்வழித் தாகும்.

இது, வழிநூலாமாறுணர்த்துகின்றது.

இ—ள்: நுதலிய நெறியானன்றி வழிநூலென்றற்குச் சிறப்புடையது அம் முதனூல்வழிப் பிறந்த வழிநூல் என்ற வாறு.

அது தொல்காப்பியம். மற்றுப் பல்காப்பியம் முதலியன வோவெனின்,—அவை வழிநூலே; தொல்காப்பியத்தின்வழித் தோன்றினவென்பது; என்னை?

1. செய்துகாட்டினும் என்பது யாப்பருங்கல விருத்தி போல்வனவற்றை.

2. பாட்டுந் தொகையும்—பத்துப்பாட்டும் எட்டுத்தொகை யும்.

3. அழிவழக்குப்பற்றிப் பிற்காலத்து நூல் செய்யின் புற னடைச் சூத்திரம் ஒன்றே செய்ய அமையும். "ஏனைய மிகை யாம். ஏனெனிற் பின் அவ்வழக்குமழிதலின் என்றபடி.

4. அமையுமன்றி என்றிருப்பது நலம்.

" கூறிய குன்றினு முதனூல் கூட்டித்
தோமின் றுணர்த்த லெல்காப் பியன்ற
னூனயிற் றமிழறிந் தோர்க்குக் கடனே."

என்பவாகலானும், இவ்வாசிரியர் பல்காப்பியர், பல்காயனர் முத லாயினரை அவ்வாறு கூறாராகலானுமென்பது; என்றூர்க்குத் தொல்காப்பியங் கிடப்பப் பல்காப்பியனர் முதலியோர் நூல் செய்தலெற்றுக்கெனின், — அவரும் அவர்செய்த எழுத்துஞ் சொல்லும் பொருளுமெல்லாஞ் செய்திலர்; செய்யுளிலக்கணம் அகத்தியத்துப் பரந்துகிடந்தனவே இவ்வாசிரியர் சுருங்கச்செய் தலின் அருமைநோக்கிப் பகுத்துக் கூறினாராகலானும் [1] அவர் தந்திரத்துக்கேற்ப [2] முதனூலோடு பொருந்த நூல்செய்தாராக லானும் அமையுமென்பது. பிற்காலத்துக் காக்கைபாடினி யாரும் தொல்காப்பியரோடு பொருந்தவே நூல்செய்தாரென் பது; மற்று,

" வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு கரைபொரு தொடுங்க
நாட்டியல் வழக்க நான்மையின் கடைக்கண்
யாப்பின திலக்கண மறைகுவன் முறையே."

எனத் தெற்குக் குமரியன்றிக் கடலெல்லையாகிய காலத்துச் சிறுகாக்கைபாடினியார்செய்த நூலினையும் அதன்வழிநூலென்று மோவெனின்,—ஈண்டுக் கூறிய பொருளெல்லாங் தழுவுமாற் றூற் [3] செய்தாராயின் அது வழிநூலாதற்கு இழுக்கென்னை யென்க. இனி, சில குன்றக்கூறினர் தொகுத்து நூல்செய்தா ராகலினென்பாரும் உளர். [4] ஒழிபொருளவாயினது தொகை யெனப்படாமையின் அங்ஙனங் கூறுதல் நூலிலக்கணமன் றென்பது. (கூடு)

---

1. அவர்—தொல்காப்பியர். தந்திரம்—நூல்.

2. முதனூல்—அகத்தியம்.

3. செய்தாராயின் என்னும் பாடமே பொருத்தம். (S. கனக சபாபதிப்பிள்ளை பதிப்பு.)

4. ஒழிபொருளவாயின் அது எனப் பிரிக்க. ஒழிபொருள்—சில குறைவுபட்ட பொருள். அது—அந்நூல். தொகை—தொகுத்துச் செய்யப்பட்ட நூல்.

[வழிநூல் இனைத்துவகையெனல்]

சூடுக. வழியி னெறியே நால்வகைத் தாகும்.

இது வழிநூல் இனைத்துவகைத்தென்கின்றது.

இ—ள்: மேல், வழிநூலெனப்பட்டது நான்குவகையாற் செய்யப்படும் என்றவாறு.

இதன் பயன்:— ஒருநூலுள் ஒன்றல்லது பல வாராவென வும், அதனானே நான்குவகைய வழிநூலெனவும், முதனூலா யின் ஒன்றேயாமெனவுங் கூறியவாறுயிற்று.

அவையாவன மேற்கூறுப. (கூசு)

[வழிநூலின் வகைநான்கும் இவை எனல்]

சூடுஉ. தொகுத்தல் விரித்த றொகைவிரி மொழிபெயர்த் தெதிர்ப்பட யாத்தலோ டனைமர பினவே.

இந் நான்குவகையுங் காரணமாக மேற்கூறிய நால்வகை வழிநூலும் பெறலாம் என்றவாறு.

தொகுத்தலென்பது, முதனூலுள் விரிந்ததனைச் சில்வாய் நாட் சிற்றறிவின் மாக்கட்கு அறியத் தொகுத்துக் கூறல்; விரித்தலென்பது, முதனூலில் தொகுத்துக் கூறப்பட்டு விளங் காது நின்றதனை விளங்குமாற்றான் விரித்துக்கூறல்; தொகை விரியென்பது, அவ்விருவாறும் பற்றித் தொகுத்து முன்னிலை அங்நிறுத்தமுறையானே பின் விரித்துக் கூறுதல். மொழி பெயர்த்தென்பது, பிறபாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ்நூலாகச் செய்வது. அதுவுந் தமிழ்நூலுள் வழிநூற்கு மாபாமென்றவாறு. அதிர்ப்படவென்பது, நெறிப்பட வென்ற வாறு; நெறிப்படுதலென்பது, அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது கிடந்தவாற்றானே செய்யப்படும்; தொகுத்தும் விரித்துந் தொகைவிரியாகவுஞ் செய்ததனைற் பயமில்லை, தமிழார்க் கும் ஆரியர்க்குமென்பது. மொழிபெயர்த்தெனவே, பொருள் பிற நாமை பெற்றும். [1] வழக்குநூலுள்ளும் மொழிபெயர்த்து யாக் கப்படுவன உளவோவெனின்,—[2] அற்றன்று; அது வேண்டுமே?

---

1. இலக்கண நூலுளன்றி வழக்கு நூலுள்ளு மென்க.

2. அற்றன்று—வேண்டியதில்லை.

1 வேதப் பொருண்மையும் ஆகமப் பொருண்மையும் நியாய நூற் பொருண்மையும்பற்றித் தமிழ்ப்படுக்குங்கால் அவற்றிற் கும் இதுவே இலக்கணமென்றற்கு மொழிபெயர்த்தலையும் இவற் றுக்கட் கூறினனென்பது.

இனி, படர்ந்துபட்ட பொருண்மையவாகிய மாபுராணம், பூதபுராணமென்பன சில்வாழ்நாட் சிற்றறிவின் மாக்கட்கு உப காரப்படாமையின், தொகுத்துச் செய்யப்பட்டு வழக்குநூலாகிய தொல்காப்பியம் · இடைச்சங்கம் முதலாக இன்றுகாறும் உள தாயிற்றெனக் கொள்க. (கூ)

[நூலிலக்கணம் இதுவெனல்]

கூருக. ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
யீரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரி
னுலென மொழிப நுணங்குமொழிப் புலவர்.

இஃது, எல்லா நூற்கும் ஆவதோர் இலக்கணமுணர்த்து தல் நுதலிற்று.

இ—ள்: ஒத்த சூத்திரத்தினை உரை நடாத்தல்வேண்டின வழிப் பிறந்த காண்டிகையும், அக்காண்டிகையானும் விளங்காத காலத்து அதனையும் விளங்கக்கூறும் உரை விகற்பத்ததுமாகிப் பத்துவகைக் குற்றமுமின்றி நுண்பொருளவாகிய முப்பத்திரு வகை உத்தியொடு பொருந்திவரின் அதனை நூலென்று சொல் லுப நுண்ணிதின் உணர்ந்துரைக்கும் புலவர் என்றவாறு.

'ஒத்த சூத்திரம்' என்றதனான், நூலின் வேறுகிய இரு வகைப் பாயிரமுஞ் சூத்திரத்தோடு ஒத்த இலக்கணத்தவென் பது கொள்க. 'உரைப்பின்' என்றதனான்,

"உண்ணின் றகன்ற வுரையொடு பொருந்தி." (சளஅ)

வருதலை நூலிலக்கணமெனச் செய்யுளியலுட் கூறிப்போந்தாம்; அங்ஙனம் வேறுகிப் பொருந்தி வருமெனப்பட்ட உரை

1. வேதப் பொருண்மை முதலியன வழக்குநூல்.

யின்றிச் 1 சூத்திரத்தானே பொருள்நிகழ்ந்த காலமும் உண்டென் பதாம்.

இதனது பயம்: உரையுங் காண்டிகையுமின்றிச் சூத்திரத் தானே சொற்படுபொருள் உரைத்தலுமுண்டு, 2 அஃது 3 அவற்றை யொழிய ஆகா இக்காலத்தென்றலாயிற்று.

'உரைப்பின்' என்னும் விணையெச்சம், 'கிளத்தல்' என் பதனோடு முடியும். 'வகை' என்றதனான் உரையெனப்பட்டது தானும் அக்காண்டிகையின் மெய்ப்படக் கிளந்ததேயாகலின் அவ் விரண்டுஞ் செய்யுளியலுட் கூறிவந்த உரை விகற்பமேயென்ப துணர்த்தியவாறு. அஃதேல், காண்டிகையென்றற்போல இதற் குப் பெயர் வேறு கூறுதலெவனின்,—வேண்டியார் வேண்டிய வாறு,

4 "மறுதலைக் கடாஅ மாற்றமும்." (சுருக)

எல்லியின்றி இகந்துவருவனவெல்லாம் 5 உரையுள் எழுதப்படா மையின், 6 அதுவுங் காண்டிகைப் பகுதியேயென்பது அறிவித்த தற்கு வேறு பெயர் கூறுது 'மெய்ப்படக் கிளந்தவகை' என்றே போயினனென்பது.

மற்று இல்லதற்கும் இலக்கணஞ் சொல்லுவார்போல ஈரைங்குற்றமுமின்றி யென்றதென்னையெனின், — அவற்றை எதிர்மறுத்துக்கொள்ளும் பத்துவகைக் குணமுங் கோடற்குத் தந்து கூறினனென்பது. அவை,

"எதிர்மறுத் துணரின் றிறத்தவு மவையே." (சுசுச)

என்புழிச் சொல்லுதும். அல்லதூஉம், 7 இவை கூறியவதனானே பிறிதொரு பொருள் கொள்ளப்படும் இடங்களும் உள; அவை நோக்கி அங்ஙனங் கொள்ளாதனவுந் தொகுத்து உடன் கூறினு னென்பது. 8 அவையும் அவற்று விரிச்சூத்திரத்துட் கூறுதும்.

1. உரைப்பினென்றதனான் உரையின்றி நிகழ்ந்த காலமு முண்டு என இயைக்க.
2. அஃது—அவ்வாறு சூத்திரத்தாற் பொருளுரைத்தல்.
3. அவற்றை—அவ்வுரைக்கப்பட்டவற்றை.
4. மறுதலைக்கடா—தடை: மாற்றம்—விடை.
5. உரை—காண்டிகையுரை
6. அதுவும்—அவ்வுரையும்.
7. இவை—இக்குற்றங்கள்.
8. அவை—பிறிதொரு பொருள்கொள்ளல்.

'ஈரைங் குற்றமும்' என்ற உம்மையை எச்சப்படுத்துப் பிற வுங் குற்றம் உளவென்பதுங் கொள்க. அவை முதனூலொடு மாறுகோடலும், யாப்பினுட் சிதைதலும்போல்வன. அவை முன்னர்ச் சொல்லும்.

'நேரிதின்' என்றதனான், முதல்வன் செய்த நூலாயினும் வழிநூலாயினும் [1]அவ்வழிநூலின் முழுவதூஉங் கெரிந்துணரும் நுண்ணுணர்வினுர்க்கே முப்பத்திருவகை யுத்தியும் புலனுவதெனக் கொள்க. அவையும் முன்னர்ச் சொல்லும். 'வகையதாகி' என்பது, 'புணரின்' என்பதனேடு முடிந்தது. 'புணரின்' என்பது, 'மொழிப' என்பதனேடு முடிந்தது.

ஒத்த சூத்திரத்தினை உரை நடாத்தல்வேண்டிற் காண்டிகைப் பொருளினை விளங்கச்சொல்லும் உரை விகற்பத்ததாகியெனவே, சூத்திரமுங் காண்டிகையும் உரையுமென மூன்றும் அவற்றேடு குற்றமின்மையும் உத்திவகையுங் கூட்ட நூலிலக்கணம் ஐந்தாயின.

இதனது பயம்:— இவற்றது விரிச்சூத்திரங்களான் உய்த்துணர்வான் எடுத்தோதித் தொகுத்துக் காட்டலாயிற்று.

மற்றுக் குற்றத்தினை இடைவைத்து உத்திவகையினை ஈற்றுக்கண் வைத்ததென்னையெனின்,—ஈரைங்குற்றமு[2]மின்றிவரும் இலக்கணம் முதனூற்கண் இல்லையென்பது 'முதல்வன்கண்' (சுகூக) என்புழிச் சொல்லுமாகலின், அவைபோல முதனூற்கண் உத்திவகையும் வாரா, சிறுவரவினவென்றற்கென்பது.

இனி, 'ஒத்த' என்றதனுற் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப் பாயிரமும் சூத்திரமுந் தம்மின் வேறென்றலும், அவ்விருவகைப் பாயிரவுரையுஞ் சூத்திர உரையும் வேறெழுதப்படுமென்றலும், சூத்திரவுரையுட் பாயிரவுரை மயங்கிவருவன உளவென்றலும், [3]அவ்விருவகையுரைக்கும் வேறுயினும் அவ்வுரை செய்தான் பெயர் கூறுதன் முதலாகிய பாயிரவுரை கூற அமையுமென்றலும், [1]சூத்திரந்தானே பாயிரம்போல நிற்குமென்றலும், அங்ஙனம் நின்றவழிப் பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமும் உரைவகைத்தாற் பெய்துரைத்தலும், அவ்விருவகைப் பாயிரமுஞ் செய்தார் இன்னுரென்றலுமென் றின்னோரன்ன கோடலாயிற்று. இவையெல்லாஞ் சூத்திரத்தொடு ஒத்த இலக்கணமேயாதலின் ஒத்தவென்னும் மாட்டேற்ருனடங்கின.

அவை வருமாறு:

"வலம்புரி முத்தின் குலம்புரி பிறப்பும்."

என்னும் பொதுப்பாயிரமும்,

"வடவேங்கடந் தென்குமரி." (பாயிரம்)

என்னுஞ் சிறப்புப்பாயிரமும், ஒழிந்த சூத்திரங்கள் போல நூற்பாவகவலாகி நூலின் வேறுகி இன்றியமையாவாயின. அவற்றிற்குச் சூத்திரவுரையொடு மயங்காமல் வேறு உரையும் ஆண்டெழுதப்பட்டன.

"எழுத்தெனப்படும்" (தொ. எழு. க)

என்னுஞ் சூத்திரத்தினை [2]நிறீஇ, 'என்பது சூத்திரமெனவும், இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோவெனின்' எனவும், 'இவ்வதிகாரம் யாதனை நுதலியதெனவும், [3]அவற்றிற்கு விடை கூறலும், இவ்வதிகாரம் எனைப்பகுதியான் உணர்த்தினுனே வெனின்' எனவுங் கூறி ஒழிந்த ஒத்திற்கும் இவ்வாறே சூத்திரவுரையோடு பாயிரவுரை மயங்கச் சொல்லியவாறும் அவற்றவற்றுட் கண்டுகொள்க.

இனி, [4]இவ்வுரைசெய்தார் யாரோ (வெனின்),—என்ற வழி, மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரரென உரையெழுதினுன் பெயர் கூறுதலும் சூத்திரஞ் செய்தான் பெயர் கூறுதலோடு ஒத்த இலக்கணத்ததாயிற்று.

---

1. அவ்வழிநூலின்—அவ்வழிநூலின்கண்.
2. இன்றிவரும்—இன்றி வருதலாகிய
3. அவ்விருவகையுரை—சூத்திரவுரையும் பாயிரவுரையும். உரைசெய்தான் பெயர் கூறன் முதலாகிய பாயிரவுரை அதற்கு வேறென்க.

1. சூத்திரந்தானே பாயிரம்போல் நிற்பதையும், பாயிரம் பெய்துரைத்தலையும் இறையனர் களவியலுட் காண்க.
2. நிறீஇ எனவும் எனவியைக்க.
3. அவற்றிற்கு விடை கூறலும் என்பது பின்வரும் கூறி என்பதன்பின் வரல்வேண்டும். இவ்வாறே மாறியெழுதின பல.
4. இவ்வுரை—களவியலுரை. எனின் என்பது சிதைவற்றதுபோலும்.

"அன்பி னைந்திணைக் களவெனப் படுவ
தந்தை ருமறை மன்ற லெட்டனுட்
கந்தருவ வழக்க மென்மனார் புலவர்." (இறை. சூ. க)

எஞ்பது, பாயிரமின்றித் தானே தூன்முகத்து நின்று இரு வகைப் பாயிரவுரையும் பெய்து உரைக்கப்பட்டது.

"வடவேங்கடந் தென்குமரி."

என்னுஞ் சிறப்புப்பாயிரஞ் செய்தார் பனம்பாரனாரெனவும்,

"வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்."

என்னும் பொதுப்பாயிரஞ் செய்தான் ஆத்திரையன் பேரா சிரியனெனவும் பாயிரஞ்செய்தான் பெயர் கூறியவாறு.

[1]'என்பது, பாயிரம்; என்னுதலிற்றோ (எனின்),—எனப் பாயிரவுரைக்கு முகவுரை வந்தவாறு கண்டுகொள்க. பிறவும் அன்ன. (கூஅ)

[ஐய மறுத்தல். இதுவு நூற்குரிய இலக்கணமெனினுமாம்]

கூருச. [2]உரையெடுத் ததன்முன் யாப்பினுஞ் சூத்திரம்
புரைதப வுடன்படக் காண்டிகை புணர்ப்பினும்
விடுத்தலும் விலக்கலு முடையோர் வகையொடு
புரைதப நாடிப் புணர்க்கவும் படுமே.

இஃது, ஐயம் அறுத்தலுதலிற்று; என்னை? மேற்கூறிய சூத்திரம் உரைபெறுங்காற் காண்டிகையும் உரையும் வேறு வேறு பிறக்கக்கண்ட மாணாக்கன் ஒழிந்தனவும் ஒன்றிரண்டினை ஒழித்துவருங்கொலென்று ஐயுற்றாற்குக் காண்டிகையும் உரையுமே கண்டாய் ஒன்று ஒன்றினை ஒழிந்து வருவனவென்று ஐயம்அறுத்தமையின். மேலதற்கே புறனடையெனவும் அமையும்.

இ—ள்: உரையெடுத்து அதன்முன் யாப்பினும் — காண்டிகையினை விளக்குங் கருத்தினுலும் அக்கருத்தின்றியும் அச் சூத்திரத்திற்கு [3]உரை தொடர்ந்தெழுதினும்; சூத்திரத்தினை அதுவென்று சுட்டினுன்.

"முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்து."(தொ. சொ. நஉ)

என்பதனுனெனவுணர்க.

1. இங்கும் எனின் என்பது சிதைவுற்றதுபோலும்.
2. இதற்கு உரையாசிரியர் கூறுவதே பொருத்தம்.
3. உரை—விரிவுரை.

சூத்திரம் புரைதப உடன்படக் காண்டிகை புணர்ப்பினும்—அச்சூத்திரத்திற்கு இடையின்றிக் காண்டிகை பொருந்தச்செய்யினும் 'புரைதப' என்பதனுன், மேல் இடைபுகுமெனப்பட்ட பாயிரவுரையின்றிச் [1]செய்த காண்டிகைக்கும் பெரும்பான்மை யெனக் கொள்க. 'உடன்பட' என்பதனுற் காண்டிகையல்லாத முகவுரைக்கண்ணே முன்னும் பின்னுங் காண்டிகை பெய்து உரைத்தலுங் கொள்க. கொள்ளவே [2]முற் கூறிய ஐந்தும் ஒருங்கு வருதலும் இவ்வாறே பெற்றும்.

விடுத்தலும் விலக்கலும் உடையோர் வகையொடு — கடாவிற்கு விடை கூறுவாரும் போலி மறுப்பாருஞ் சொல்லுஞ் சொற்பகுதியோடு; 'வகை' என்றதனுன், அவ்விருபகுதியுங் காண்டிகைக்கு வருங்காற் குறிப்பினுற் கொள்ள வருமெனவும் உரைக்கண் வருங்காற் கூற்றினுற் கொள்ள வருமெனவுங் கொள்க. அஃதேதற் கூற்றினுற் கோடன்,

"மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்" (சூருக)

என வருகின்ற சூத்திரத்திற் பெறுதுமெனின்,—அற்றன்று; அது பிறன்கோள்பற்றி மறுதலைக் கடாஅ மாற்றமுங் கூறுதற்குச் சொல்லினுன்; இஃது அன்னதன்றி அறியாது வினவுங் துணையேயாகலின் வே[3]றென்பன, விடுத்தலெனவே, வினவினை விடுத்தல்பெற்றும். விலக்கலெனவே, அஃதல்லாப் போலியை விலக்குதலென்பது பெற்றும்.

புரைதப நாடிப் புணர்க்கவும்படுமே—காண்டிகையிரண்டும் உரையிரண்டுமென்று வருகின்ற நான்கன்கண்ணும் [4]இடை அந்தரமின்றிப் புணர்க்கவும்படும் [5]அவ்விருபகுதியும் என்றவாறு.

அஃதாவது, [6]காண்டிகைப்பகுதி இரண்டற்கும் 'விடுத்தலும் விலக்கலும் உடையோர்' குறிப்பினுற் கொள்ளவைத்

1. செய்த—செய்தல் என்றிருத்தல்வேண்டும்.
2. முற்கூறிய ஐந்து—சூத்திரம், உரை, காண்டிகை, குற்றமின்மை, உத்திவகை.
3. என்பன—எனப்படும் என்றிருத்தல் வேண்டும்.
4. இடை அந்தரம்—இடைவெளி.
5. அவ்விருபகுதி—விடுத்தலும், விலக்கலும்.
6. காண்டிகையுரைப்பகுதி இரண்டு—சூத்திரம்பட்ட பண்பிற் சொல்வதும் அஃதின்றி வதுவும் எடுத்துக்காட்டும் கூறுவதும். (கoக, கoஉ-ம் சூத்திரம்.)

தலும், [1] ஒழிந்த உரையிரண்டன்கண்ணும் அவை கூற்றினுற் கொள்ளவைத்தலுமென உணர்க. [2] உம்மை, இறந்தது தழீஇ யிற்று; என்னே? காண்டிகையும் உரையும் ஒன்று ஒன்றனை ஒழித்தும் வருமென்றமையின். ஒழியாது வருதல் 'உடன்பட' என்றதனுல் தழுவப்பட்டது. இவற்றிற்கு உதாரணமாமாறு தத்தம் விரிச்சூத்திரத்துட் சொல்லுதும். (கூகூ)

[சூத்திரமாவது இதுவெனல்]

சுருடு. மேற்கிளந் தெடுத்த யாப்பினுட் பொருளொடு
சில்வகை யெழுத்தின் செய்யுட் டாகிச்
சொல்லுங் காலை யுரையகத் தடக்கி
நுண்மையொடு புணர்ந்த வொண்மைத் தாகித்
துளக்க லாகாத் துணைமை யெய்தி
யளக்க லாகா வரும்பொருட் டாகிப்
பலவகை யானும் பயன்றெரி புடையது
சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்.

இது, நிறுத்தமுறையானே சூத்திரமாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேற் கிளந்து எடுத்த யாப்பின் உட்பொருளொடு,

"சூத்திரத் தானே,
ஆடி நிழலி னறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருணனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே."

என மேற் செய்யுளியலுள் விதந்தோதிய இலக்கணமுடைத்தாய்;

எனவே, வழுவமைக்கின்ற இளவியாக்கத்து முற்கண்ணே, வினையியலுட் கூறப்படும் இலக்கணத்தினை ஆண்டு ஓர் உப காரப்படக் கூறியதுபோல, அடிவரையின்மைக்கு ஆண்டுக் கூறியதல்லது இச் சொல்லப்பட்ட இலக்கணம், ஈண்டு இனிக் கூறுகின்ற இலக்கணத்தோடு கூடி மரபெனவேபடும் என்றுணும். ஆண்டுப் பொதுவகையாற் கூறிய தூலிற்கும் இஃதொக்கும்; என்னே? பல சூத்திரந் தொடர்ந்து நூலாகி ஈண்டே

1. ஒழிந்தவுரையிரண்டு—விரிவுரை இரண்டு. பின்வரும் சிறப்புச் சூத்திரங்களை நோக்குக. (சுருஅ, சுருகூ-ம் சூத்திரம்)

2. உம்மை—புணர்க்கவும் என்ற உம்மை.

மரபு கூறப்படுதலின். உரையாயின் அன்னதன்றி [1] நால்வகை யுரையுள் [2] ஏற்பது பகுதி வேறுபடும் மரபுகூறுகின்றமையின் அது செய்யுளியலுட் கூறியவாறுபோலாகாது 'வேறெனவே படும் ஈண்டென்பது.

இனி, முற்கூறிய பாயிரவிலக்கணத்தினை இன்றியமையாதது [3] சூத்திரமென்றற்கும் இதுவே ஒத்தாகக் கொள்க; என்னே? [4] மேற் [5] புறத்துநின்று 'மேற்கிளந் தெடுத்த யாப்பு' எனவேபடுமாகலி னென்பது.

இதனது பயம்: பாயிரவிலக்கணங்களோடு பொருந்தச் சூத்திரஞ்செய்தலென்பதாயிற்று. இஃது ஒப்பக்கூறல் (சுருடு) என்னும் உத்திவகை.

மேற்கிளந்தெடுத்த இலக்கணமாவது, ஆடிநிழற்போல் பொருளானும் [6] தோற்றல் வேண்டாமற் பொருட்பெற்றி உணர் இன்றுங்குச் சூத்திரத்தொடருள் இலக்கியமின்றியினும் [7] அதனை இதுகேட்டான் காணுமாற்றுற் செய்தலாயிற்று.

இனி, மேற் கிளந்தெடுத்த பாயிரவிலக்கணம் சூத்திரத் தோடு பொருந்துங்காற் பொதுப்பாயிரவிலக்கணம் பொருந்தா, சிறப்புப்பாயிரவிலக்கணம் எட்டுமே பொருந்துவனவெனக் கொள்க. அஃதென்னை பெறுமாறெனின்,—மேற்கிளந்த யாப் பென்னுது எடுத்த யாப்பென்றதனானே ஒரு தூற்குச் சிறப்பு வகையான் இன்றியமையாததாகி எடுத்துக்கொள்ளப்படுவது,

"வடவேங்கடம் தென்குமரி." (பாயிரம்)

என்றற்போலுஞ் சிறப்புப்பாயிரமாகலானும், பொதுப்பாயிரம்

1. நால்வகையுரை என்றது—'பாட்டிடை வைத்த' என்னுஞ் (சசுடு-ம்) சூத்திரத்தாற் கூறப்படும் நால்வகையுரையை.

2. ஏற்பது என்றது அவற்றுள் 'பாவின்றெழுந்த கிளவி யானும்' என்று கூறிய உரைப்பகுதியை. பகுதி வேறுபடுதல்—காண்டிகையும் உரையும் எனப் பகுதி வேறுபட்டுப் பின் அவை யும் இவ்விரண்டாதல். சுடுகூ-ம் சூத்திர உரை நோக்குக.

3. சூத்திரம் இன்றியமையாதது என்றற்கும் இதுவே ஒத்து என்க.

4. மேல்—முன்.

5. புறம்—நூற்புறம்.

6. தோற்றல்வேண்டாது—வெளிப்பட என்றபடி.

7. அதனை—அவ்விலக்கியத்தை. இது—இலக்கணம்.

எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படுமென்றற்கும் அங்ஙனங் கூறப்பட்டது.

சில்வகை எழுத்தின் செய்யுட்டாகி—ஆடிநிழலின் அறியச் செய்யுங்கால் அதுபோல ஒருவழிப் பொருளடக்கி ஒருவழி வெள்ளிடை கிடப்பச் செய்யப்படாது பொருட்குவேண்டுஞ் சில சொல்லாற் செய்யுஞ் செய்கைத்தாகி; செய்யுளென்றுன் அடிவரைச் செய்யுளின் [1] வேறுபட்ட பொருட்பாட்டிற்குரிய அடிவரைப் பாட்டினுட் சிறப்புடைய ஆசிரியத்தானும் வெண்பாவானுஞ் செய்யவும்படுஞ் சூத்திரமென்றற்கென்பது; என்னை? [2] மண்டிலப் பாட்டின் உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தமையானும்,

"சின்மென் மொழியிற் ருய பனுவல்." (ருசஎ)

வெண்பாட்டாகி வருமாதலானுமென்பது.

சொல்லுங்காலே உரையகத்து அடக்கி — பொருளானும் போலியானுஞ் சொல்லுவார் சொல்லுங்கால் அவ்வுரையெல்லாந் தன்னகத்தடக்கி,

நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத்தாகி—பருப்பொருட்டாகிய பாயிரம்போலாது நுண்பொருட்டாகிய பொருள் கேட்டார்க்கு வெள்ளிதன்றி உள்ளுடைத்தாகி,

தளக்கலாகாத் தூணிமை எய்தி — முன்னும் பின்னுங் கிடந்த சூத்திரங்களானே தன்னுட்பொருள் இன்றியமையாதாகலெய்தி; எனவே, ஒன்றுன்றனே இன்றியமையாத உறுப்புப்போலச் செய்யல்வேண்டுமென்றவாறுயிற்று.

---

1. வேறுபட்ட பொருட்பாடு என்றது—பாட்டுக்கள் தம்முள் வேறுபட்ட பொருட்டோற்றமுடைத்தாதலே. வேறுபட்ட இலக்கணமுடைத்தாதல் எனினுமமையும். அடிவரைச் செய்யுளின்—அடிவரையறை கூறுஞ் செய்யுளின்கண். அடிவரைப் பாட்டு என்றது இன்னபாட்டு இத்தூணியடியுடையது எனவளவியல் கூறும் ஆசிரிய முதலிய பாட்டுக்களே. அடிவரைச் செய்யுள் என்பது அறுவகைச் செய்யுள் என்றும் பாடமிருந்திருக்கலாமோ என்பது ஆராயத்தக்கது.

2. மண்டிலப்பாட்டின்—மண்டிலப்பாட்டான் என்றவாறு; என்றது மண்டிலவாசிரியப்பாவான் சூத்திரஞ் செய்தமையானே சூத்திரங்கள் ஆசிரியப்பாவானுஞ் செய்யப்படுமென்பது உடம்பொடு புணர்த்திய இலக்கணத்தாற் பெறப்படுமென்றபடி.

அளக்கலாகா அரும்பொருட்டு ஆகி—அளத்தற்கரிய பெரும் பொருட்டாகி.

பல்வகையானும் பயன் தெரிபுடையது — பலவாற்ருலும் பொருள் விளங்க வருவது;

சூத்திரத்து இயல்பென யாத்தனர் புலவர் — இவையெல்லாஞ் சூத்திரத்திலக்கணமென்று முதனூல் செய்த ஆசிரியராற் சொல்லப்பட்டன என்றவாறு.

இஃதியல்பெனவே, இவற்றிற் சிறிய வேறுபட்டன விகாரமென்ருனும்.

"உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமு முயிரும் வருவழி யியற்கை." (தொ. எழு. கசுக)

என்றவழி, யகரமும் உயிரும் வருவழியெனவே இது நிலைமொழித் தொழிலென்பது, ஆடிநிழலின் அறியத்தோன்றிற்று.

இனி, நிலைமொழித் தொழில் வேறு கூறினமையின்,

"மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி." (தொ. பாயிரம்)

எனப் பாயிர இலக்கணத்துடன் பொருந்துவதாயிற்று.

இனி, [1] எண்வகையாற் பரந்துபட்ட புள்ளியீற்றுச் சொல்லினையெல்லாம் 'உகரமொடு புணரும் புள்ளி' யென அடக்கினமையிற் சில்வகையெழுத்தின் செய்யுளுமாயிற்று. 'யகரமும் உயிரும் வருவழி இயற்கை' யென வருமொழிப் பரப்பெல்லாம் அடக்கினமையின் அதற்கும் இஃதொக்கும்; இதனைப்பற்றியெழுந்த பொய்ப்பொருளும் மெய்ப்பொருளும் பல வாகலின் உரையகத்தடக்கலும் உடைத்தாயிற்று.

தொகைமரபினுள்ளும் உயிர் மயங்கியலினுள்ளும் புள்ளி மயங்கியலினுள்ளுங் குற்றியலுகரப் புணரியலினுள்ளும் பரந்துபட்ட பொருளினை நுழைந்து வாங்கிக்கொள்ள வைத்தமையின் நுண்மையொடு புணர்ந்ததூஉமாயிற்று. இச்சூத்திரம் பொருளுரைத்தவழியும் வெள்ளிதன்றி [2] உள்ளுடைத்தாகலின் நுண்மை புடைத்தெனவும்பட்டது.

"குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்." (தொ. எ. கசுo)

என்பதூஉம்,

---

1. ஞ ண ந ம ல வ ள ன என்பன.
2. உள்—உட்பொருள் (சூக்குமம்).

"ஞகாரை யொற்றிய தொழிற்பெயர் முன்னர்."
(தொ. எழு. உகூசு)

என்பதனுஉம் மூதலாயவற்றிற்கும் இஃது இன்றியமையாதாகலும் இதற்கு அவை இன்றியமையாவாகலும் உடைமையின், துளக்கலாகாத் துணைமையெய்தியதாஉமாயிற்று. இருபத்துநான்கீறும் இருபத்திரண்டு முதலும்பற்றி எழுந்த மொழிகளெல்லாம் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் இருமொழித் தொழிலும் ஒருவகையால் தொகுத்துக் கூறினமையின் அளக்கலாகா அரும்பொருட்டாதலும் பெற்றும். இங்ஙனம் வருதல் இயல்பெனவே சிறிய வேறுபட்டு வருவன உளவாயின் அவையும் அமைபுமென்றலும்; அவை,

"அந்நா லைந்து மூன்றுதலை யிட்ட
மூன்றுறக் கிளந்த வுயிர்நிலை யவ்வே." (தொ. எ. உ०சூ)

என்றாற்போல்வனவும் [1] பிறவும் இலேசுச் சொல்லும் இயல்பன்றி விகாரமெனப்படும். (க००)

[காண்டிகை உரை இதுவெனல்]

சூஉசூ. பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்.

இது, முறையானே காண்டிகையாமாறுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: குற்றமில்லாத சூத்திரந் தனதுட்பட்ட இலக்கணத்துள் ஒன்றுங் கரவாது முடியச்செய்வது காண்டிகையாம் என்றவாறு.

'பழிப்பில் சூத்திரம்' என்றதனால், காண்டிகை செய்யத்தகாதென்று இகழ்ச்சிப்படப் பரந்தன உளவாயின் மறுத்துச் செய்கவென்பதாம். இதனை வருகின்ற காண்டிகைக்கும் அகலவுரைக்கும் ஏற்பித்துக்கொள்க.

உதாரணம்: [2] "எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன அகரமுதல, னகரவிறுவாய் முப்பஃது என்று சொல்லுவார் ஆசிரியர், சார்ந்துவரலிலக்கணத்த மூன்றுமல்லாத இடத்து" (தொ. எழு. க) எனவரும்; பிறவும் அன்ன. இனி, மறுத்துச் செய்யுங்கால்,

1. பிற இலேசுச் சொல்லும் எனவும் பாடம். அது சிறப்பு.
2. இது காண்டிகையுரைக் குதாரணம்.

[1] "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளுஞ்." (சூஙு)

என்பது தெய்வச் சிறப்பினை அறியுஞ் சிறப்போடு வெவ்வாயுடைய வேலனது வெறியாட்டினை ஆடிய காந்தளுமென்றாற் போல வருவன பலவுங் கொள்க. இங்ஙனங் கூறிய உதாரணங் காட்டல்வேண்டாமையை உணர்ந்து உரைகடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்களென்பது கருத்து. அஃதேல், உதாரணத்தோடு வருங் காண்டிகையிலவோவெனின்,—அது வருகின்ற சூத்திரத்துட் சொல்லுதும். கரப்பில்லதென்னுது முடிவதென்றான், அதனாற் பரந்துபட்ட சூத்திரத்தினை அங்ஙனம் மறுத்துச்செய்யாது தொகுத்துக் காண்டிகையான் உரைக்குங்கால் உட்பொருளெல்லாம் விளங்காமற் கரந்துசெய்தலும் உண்டென்பது கொள்க; அது,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட் டயர்ந்த காந்தளுஞ்." (சூஙு)

என்பது முதலாக இக்கூறப்பட்ட [2] இருபத்தொரு துறையுங் கரந்தையெனப்படுமென்றாற்போல மாட்டென்னுஞ் செய்யுளுறுப்பினைத் தோற்றுவாய் செய்துவிடுதல். பிறவும் அன்ன. (கo க)

[காண்டிகையுரையின் பகுதி இவ்வாறு வருமெனல்]

சூஙூ. [3] விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திர முடித்தற் பொருட்டா
வேது நடையினு மெடுத்துக் காட்டினு
மேவுங் கமைந்த மெய்ந்நெறித் ததுவே.

இது, மேலதற்கோர் புறனடை; எய்தியதன்மேற் சிறப்பு விதியுமாம்; என்னை? காண்டிகையினை மேலதனோடு இருவகையென்றமையின்.

1. 'வெறியறி சிறப்பின்' என்ற சூத்திரத்துள் (தொல். புற. ரு) சொல்லப்பட்ட இலக்கணம் பலவும் பரந்து சேறலின் அச்சூத்திரம் முழுவதற்கும் உரை கூறுது 'என்றாற் போல (இச் சூத்திரத்துள்) வருவன பலவும்' என்பதே மறுத்துச் செய்தலாம்.

2. இருபத்தொரு துறையுங் கரந்தையென்று கரந்தையை இருபத்தொன்றாக மாட்டியமை காண்க. இது மறுத்துச் செய்யாது தொகுத்துச் செய்தது.

3. இச்சூத்திரமும் காண்டிகை செய்யுமிலக்கணங் கூறிற் றென்றல் பொருத்தம். இளம்பூரணம் நோக்குக.

இ---ள்: [1] விட்டகல்வின்றி விரிவொடு பொருந்தி—சொற் படுபொருள் சொல்லுங்கால் தொடர்மொழிகளைத் [2] தொகைநிலை பயனிலை முதலாயவற்றுற் பகுத்துக்கூறுது பகுத்துக் கூறும் உரை விகற்பம்போன்று மற்றப் பொருள்தோன்றி; விடுத்த லென்பது, [3] கண்ணழிவு: அக்கண்ணழிவான் அகன்றுபடுதல் விட்டகல்வெனப்பட்டது. அங்ஙனம் அகன்றுபடுத [4] லின்றி யெனவே, 'இஃது இன்ன வேற்றுமைத் தொடர் இஃது இன்ன பயனிலைத்தொடர்' என்றுற்போலச் சொன்னிகழ்ச்சியுடைத் தாயின் அஃது உரையெனப்படுமென்றவாறு.

சுட்டிய சூத்திரம் முடித்தற்பொருட்டா—இது நியமச்சூத் திரம் அதிகாரச் சூத்திரமென்றுற்போல முதற்கட் சொல்லிய சூத்திரப் பெயரினை அவ்வாறுகி முடிந்த முடிபு சொல்லுதற் பொருட்டாக; ஏது நடையினும்—நியமச் சூத்திரமென்றுனும் பிறிதொன்றென்றுனும் மேற்கொண்டக்கால் இன்னது கார ணத்தினைக் காரணங்கூறும் வழக்கினுனும்; எடுத்துக்காட் டினும்—அங்ஙனங் காரணங் கூறியக்கால் அதற்கேற்பது ஒன் றுயினும் உதாரணமாயினும் வழிநூற்காயின் முதனூல் எடுத் துக்காட்டுதலாயினும் ஒன்றுபற்றியும்; மேவாங்கமைந்த மெய்ங் நெறித்து அதுவே—சூத்திரஞ்செய்த ஆசிரியன் வேண்டியதே சொல்லிவிடும் பொருளிலக்கணத்திற்று மேற் கூறிவருகின்ற காண்டிகை என்றவாறு.

[5] இது, 'மெய்ந்நெறி' என்பது, சூத்திரத்துச் சொல்லிற் கருதிய பொருளிலக்கணம். அதனை அவன் வேண்டியாங்குச் சொல்லி முடிப்பினல்லது சூத்திரத்துச் சொற்கண் வந்த சொல் லாராய்ச்சியும் எழுத்தாராய்ச்சியும் அறியவேண்டுவனவெல்லாஞ்

1. விட்டகல்வு—பதம் பிரித்துப் பொருள்கூறலால் அகன்று படுதல்.

2. தொகைநிலை பயனிலை முதலாயவற்றுல் என்றது தொகை நிலைத்தொடர், பயனிலைத்தொடர், எண்ணுநிலைத்தொடர் என் பவற்றை. உதாரணம் குடம் வனைந்தான, சாத்தன் வந்தான், தீநீர் என்பன. இவற்றை நன்னூல் விருத்தி ந-ம் சூத்திர உரை நோக்கியறிக.

3. கண்ணழிவு—பதம் பிரித்தல் எனவே பதம் பிரித்துப் பொருள் கூறல் என்றபடி.

4. இன்றி—பதப்பொருள் இன்றி.

5. இது என்பது வேண்டியதில்லை. இனி என்று மிருக்க லாம்.

சொல்லாரென்பது கருத்து. இதனை ஈற்றுக்கண் வைத்ததனுனே வருகின்ற உரையும் இங்ஙனம் விட்டகல்வின்றி வருதலுடைத் தெனக் கொள்க.

உதாரணம்:

"இயற்கைப் பொருளே யிற்றெனக் கிளத்தல்."
(தொ. சொ. கசு)

என்பது, [1] தன்றன்மையான் நிகழ்பொருளை இன்ன தன்மைத் தென்று சொல்லுகவென்றவாறு. அது, [2] 'நிலம் வலிது, நீர் தண்ணிது, தீவெய்து, வளியுளரும்' என்றுற்போல்வன. இதற் குக் [3] கருத்தோதுதல் பாயிரவகையாற் பெறுமென்பது,

"உரைப்பிற் காண்டிகை." (சூருந)

என்புழிக் கூறிவந்தாம்.

மற்று, [4] 'உயர்திணையென்று சொல்லுப ஆசிரியர் மக்கட் சுட்டின்கண், அஃறிணையென்று சொல்லுப ஆசிரியர் அவரல பிறவற்றுக்கண், அவ்விருதிணைப் பொருண்மேலும் இசைக்குஞ் சொல்லினை' (தொ. சொ. க) என்றக்காலும்,

'வேற்றுமையெனப்பட்ட பொருள் ஏழு' என்றக்காலும் உதாரணங் காட்டுமாறென்னை? அவற்றவற்றுப் பின் வேறு சூத்திரங்களாண்,

"ஆடூஉ வறிசொன் மகடூஉ வறிசொற்
பல்லோ ரறியுஞ் சொல்லொடு சிவணி." (தொ. சொ. உ)

எனவும்,

"ஒற்றறி சொல்லே பலவறி சொல்லென்று." (தொ. சொ, ந)

எனவும்,

"அவைதாம் பெயர்ஐ யொடுகு
இன் அது கண்." (தொ. சொ. சுரு)

எனவும் உதாரணங் கூறுமாலெனின்,—அவை துளக்கலாகாத் [5] துணைமையெய்தி நின்றமையின் அவ்வாறு உதாரணம் ஆண்டுக்

1. 'தன்றன்மையான்—தன்னியல்பான்.

2. இது சூத்திர முடித்தற் பொருட்டாக உதாரணங்காட்டி விளக்கியது. இச்சூத்திரம் நியமச் சூத்திரம்.

3. கருத்து—கருத்துரை. என்றது "தன்றன்மையான்..... சொல்லுக" என்ற கருத்துரையை.

4. இது பேராசிரியர் கொண்ட பொருள்.

5. துணைமை—துணைச்சூத்திரங்கள். துணை-உதவி. சுருரு-ம் சூத்திர விரிவுரை நோக்குக.

காட்டாக்காலும் அமையும், அவற்றைப் பிற் கூறுமாகலினென் பது. அல்லதூஉம், எதிரது நோக்கி உயர்திணைச் சொன் மூன் றும் அஃறிணைச் சொல் இரண்டுங் காட்டியக்காலும் இழுக்கன் றென்பது. ஒழிந்தவற்றிற்கும் இஃதொக்கும். (கஅஉ)

[உரையாவது இதுவெனல்]

சூஇஅ. சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
வின்றி யமையா தியைபவை யெல்லா
மொன்ற வுரைப்ப துரையெனப் படுமே.

இது மேல்,

"ஒத்த சூத்திர முரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி." (சூஇஉ)

என நிறுத்தமுறையானே காண்டிகையினை மெய்ப்படக் கிளந்த வகை யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மேல்,

"பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்." (சூஇசூ)

வருதலும், அதுவே ஏதுவும் எடுத்துக்காட்டும் உடைத்தாகி வருதலுமென இருவகையும் உடைத்தென்றுன்; இனிச் சூத் திரத்துட் பொருளன்றியும் ஒருதலையாக அதற்கு இன்றியமை யாது பொருந்துவனவெல்லாம் [1]அதனோடு கூட்டிச் சொல்லு தல் உரையெனப்படும் என்றவாறு.

அவை,

"இயற்கைப் பொருளே யிற்றெனக் கிளத்தல்."

(தொ. சொ. ககூ)

என்றவழி, [2]எடுத்தோத்தின்றி 'நிலம் வலிதாயிற்று'. என் னும் [3]வழுவமைதி கோடலும்,

'ஒத்தசூத்திரம்' (சூஇஎ)

என்றவழி,

பாயிரம் ஒத்தசூத்திரமென்று கோடலும் இன்னோரன்ன கொள்க.

---

1. அது—அச்சூத்திரம்.

2. எடுத்தோத்து—சூத்திரம்.

3. ஆயிற்றென்பது வழு. சேற்றுநில மிதித்துச் சென்றுன் கூறியதாதலின் அமைதியாயிற்று. சேனுவரையருரை நோக்குக.

எல்லாமென்றதனுற் சூத்திரப் பொருளேயன்றி எழுத் துஞ் சொல்லும்பற்றி ஆராயும் பகுதியுடையவாதல்வேண்டும் அவ்வுரையென்பது கொள்க.

இனி, மேற் காண்டிகைக்கு ஓதிய இலக்கணங்களுள் இதற் கேற்பனவெல்லாம் அதிகாரத்தாற் கொள்ளப்படும். அவை ஏது நடையும் எடுத்துக்காட்டுஞ் சூத்திரஞ் சுட்டுதலுமென்(சூஇஎ) றின்னோரன்ன கொள்க. இவையெல்லாந் தழுவுதற்குப்போலும்,

"இன்றி யமையா தியைபவை யெல்லாம்." (சூஇஅ)

என்று எடுத்தோதுவானுயிற்றென்பது. (கஅசு)

[உரையின் பகுதி இவ்வாறு வரும் எனல்]

சூஇகூ. [1]மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானு முடிந்த நூலானு
மையமு மருட்கையுஞ் செவ்விதி னீக்கித்
தெற்றென வொருபொரு ளொற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்ற லென்மனுர் புலவர்.

இதுவுங் காண்டிகைபோல உரையும் இருவகைத்தென்பது அறியுமாற்றுன் எய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: மறுதலைக்கடாஅ மாற்றமும் உடைத்தாய்—மறு தலை மாற்றத்தினை இடைசெறித்துக் கடாவுதலும் அதற்கு மறு மாற்றமாகிய விடை கூறுதலும் உடைத்தாய்; தன் நூலானும்—உரையெழுதுவானுற் கூறப்படுகின்ற உரை தனக்கு முதனூ லாகிய சூத்திரத்தானும், [2]இதனனே உரையின்றிச் சூத்திரமே நூலெனப்படுவதூஉமாயிற்று; முடிந்த நூலானும்—அதன் முத னூலானும்; முடிந்த நூலென்பது இணைநூலென்பாரும் உளர்': [3]இணைவன கூறத் தான் கூறுனுயின் அது குன்றக் கூறலென் மறுக்க. அங்ஙனங் கொள்ளும் பொருண்மையுளவாயின் அவை,

"சூத்திரத் துட்பொரு ளன்றியும்." (சூஇஅ)

என்பதனுன் அடங்கும்.

---

1. இச்சூத்திரத்தையும் விரிவுரை யிலக்கண முணர்த்திய தாகவே இளம்பூரணர் கூறுவர். அது பொருத்தமாதல் காண்க.

2. இதனன்—தன்னூலானுமென்றதனன்.

3. இணைவன—இணைநூல்கள்.

மற்று, முதனூலாற் கூறிய பொருள் சில குன்றக் கூறினுண்போல முடிந்தநூலாற் கொள்க என்றதென்னையெனின்,—அற்றன்று; இப்பொருண்மை [1] முடிந்தநூலினும் உண்டென்று எடுத்துக்காட்டப்படுமென்றுனென்பது; இது மேல்,

"ஏது நடையினு மெடுத்துக் காட்டினும்." (சூருஎ)

என்றவழிப் பெறுதுமாயினும் முதனூலல்லது எடுத்துக்காட்டப்பெறுஅரென்றற்கு ஈண்டு வரைந்து கூறினனென்பது; எனவே, இந்நூலும் அவற்று வழிநூலும் எடுத்துக்காட்டுங்கால் தனக்கு முதல்வராயினுரை நாட்டி அவர் கருத்தேபற்றிப் பிறர் செய்தாரெனினல்லது பிறர்மேல் தலைமை நிறீஇ அவர் கருத்துப்பற்றி இவர் செய்தாரெனக் கூறார். அங்ஙனங் கூறின் அவர்தாற்கே உரையெழுதுவானல்லனெவென மறுக்க. இனி,

"விகாயி னீங்கி விளங்கிய வறிவின் முதனூல்" (சூசசு)

னுற் செய்யப்பட்ட முதனூற்காயின் முடிந்தநூல் எடுத்துக்காட்டுதலென்னும் இவ்விலக்கணமின்றென்பது கொள்க; [2] ஒருதலையன்மையென்னும் உத்திவகைபற்றியென்பது.

ஐயமும் மருட்கையுஞ் செவ்விதின் நீக்கி — ஐயவுணர்வும் பொய்யுணர்வுஞ் செம்பொருளினுன் நீக்கி; தெற்றென ஒரு பொருள் ஒற்றுமை கொளீஇ—அச் செம்பொருள் கருவியாகக் கேட்பான் உணர்வு மருட்கை நீக்கி மெய்யுணர்ந்து தெற்றென வும் இரட்டுறுதனீக்கி ஒற்றுமை கொளுத்தியும்; துணிவொடு நிற்றல் என்மனுர் புலவர்—கவர்படச் சொல்லாது ஒருபொருள் துணிந்துரைத்து [3] மாறுதலும் அதிகாரத்தான் நின்ற உரையிலக்கணம் என்றவாறு.

மறுதலையும் மாற்றமுமென்பது, கடாவிடை; ஐயமும் மருட்கையுஞ் செவ்விதி னீக்கல் ஒருபுடை யொப்புமையுடைய போலியும் அதற்கு ஒன்றும் இயைபில்லாத பொய்ப்பொருளு மெனப்படும்.

"பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலும்."

(தொ. சொ. கo்)

1. முடிந்த நூலினு முண்டென் றெடுத்துக்காட்டுவது வலியுறுத்துவதற்கு. அன்றிக் குறைவை நிறைவுசெய்தற்கன்றென்க.

2. ஒருதலையன்மை—நிச்சயமில்லாமை. சொன்னவிதி யாண்டும் ஒருதலையாக வாராமை.

3. மாறுதல்—நிற்றல்; ஒழிதல்.

என்றவழிப், பிறிதென்று ஒருகாற் சொல்ல ஆருமுருபெனவும், பின்னொருகாற் பிறிதென ஒழிந்த உருபெல்லாந் தழுவுமெனவுஞ் சொல்லுதல் போலியெனப்படும்; என்னை? அவ்வாறுதனொடு ஏழாமுருபும் பிறவுருபேற்கும் வழக்குள்வழி [1] ஒன்றனைக் கொண்டமையின், [2] அஃது ஒருபுடையொப்புமையுடைத்தாகி அப்பொருளன்றெனவும்படாது [3] மற்றொன்றனைக் கோடல் பொருளெனத் துணியவும்படாது ஐயவுணர்வு செய்தமையின் அது போலியாயிற்று.

இனிப்,

"பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலும்."

(தொ. சொல். கo்)

என்னும் இரண்டும்மையும் [4] பொருளிலவென்று பிறிதுபிறிதேற்றல் உருபுதொக வருவதற்கண்ணென்று பொருள் கூறுதல் போல்வன, சூத்திரத்தின் கருத்தறியாது பொய்யை மெய்யென்று மயங்கிய மருட்கையெனப்படும். இவ்விரண்டனையும் நீக்கி உண்மை உணர்த்துதல் உரையெனப்படுவதாயிற்று. நிற்றலென்பது, நிற்க அவ்வுரையென்றவாறு. தன்நூலானும் முதனூலானும் ஐயமும் மருட்கையும் நீக்குங்கால் அவற்றுட் கிடந்த செம்பொருளானே நீக்கப்படு [5] மென்பது 'இரண்டு கண்ணுனுங் கூர்மையாற் பார்த்தான்' என்பதுபோலக் கொள்க. (கo்ச)

[வழிநூல் முதனூலோடு மாறுபடச் செய்யிற் குற்றமாமென்றல்]

சூசo. **சொல்லப் பட்டன வெல்லா மாண்பு**
மறுதலை யாயினு மற்றது சிதைவே.

1. ஒன்றனைக்கொண்டு—ஆருவதையே கொண்டு.

2. அஃது ஒருபுடை ஒப்புமையுடைத்தாகி என்றது ஆருவதனையே கொண்ட அப்பொருள் ஒருபகுதியாகிய ஆருவதனொடு மாத்திரம் ஒப்புமையுடைத்தாய் என்றபடி.

3. மற்றொன்று—ஏழாவது. அது பெயராய் நின்று பிறவுருபேற்கும். ஏழாமுருபு பிறவுருபேற்றற்கு உதாரணம்: தலைக்கணின்முன் இடைக்கணின்முன் என்பன போல்வன. ஆருவது தன்னுடைமைப் பொருளோடு பெயராய் நின்று ஏற்கின்றது; இஃதன்னதன்று. ஆதலின் அப்பொருளன்றெனவும்படாது என்பர்.

4. பொருளில என்றது அசைநிலையை. இவ்வாறு பொருள் கொள்பவர் எவர் என்பது புலப்படவில்லை.

5. என்பது—என்பதை எண்ணிருத்தல் வேண்டும்.

இது, வழிநூற்கே ஆவதோர் வேறுபாடுணர்த்துதல் துதலிற்று.

இ—ள்: மேற்கூறிய சூத்திரமும் காண்டிகையும் உரையுமென்னும் மூன்றற்குஞ் சொல்லப்பட்ட இலக்கணமெல்லாஞ் சிதையாது மாட்சிமைப்படினும் முதனூலோடு மாறுகொள்ளின் அவற்றுள் எல்லாஞ் சிதைந்ததெனவேபடும் அந்நூல் என்றவாறு.

'மறுதலையாயினும்' என்ற உம்மை, எதிரது தழீஇயிற்று; மேற்கூறும் பத்துவகைக் குற்றமுமே (சூருக) யன்றி வழிநூற்கு இதுவுங் குற்றமாமென்றமையின். 'ஈரைங்குற்றமுமின்றி' என்பதனை நோக்க இறந்தது தழீஇயிற்றுமாம். இதனானே பிற்காலத்து நூல்செய்வார் நூலிலக்கணம் பிறழாமற் செய்யினும் முற்காலத்து நூலொடு பொருண் மாறுபடச் செய்யின் அது மரபன்று வழிநூற்கென விலக்கியவாறுயிற்று. எனவே, முதனூற்காயின் இவ்வாராய்ச்சியின்றென்பது கருத்து; என்னை? முதல்வனூன் மாறுபடுதற்கு அதன் முன்னியதோர் நூல் இன்மையினென்பது. அல்லதூஉம், 'மற்றது' என்று ஒருமை கூறினமையானும் இது வழிநூற்கே விலக்கிற்றென்பது கொள்க. மற்று மேல்,

"முதலும் வழியுமென நுதலிய நெறியின." (சூசஅ)

எனவே, முதனூலின் வழித்து வழிநூலென்பதூஉம் மறுதலையாயிற் சிதைவென்பதூஉம் பெறுதுமாகலின் இச்சூத்திரம் மிகையாம் பிறவெனின்,—அற்றன்று; முதல்வழியென்பன முன்னும் பின்னுங் காட்டினன்றி மாறுபடாமைக் கூறல்வேண்டுமென்பதூஉம் [1]பெறுதுமாகலின் [2]அது கூறல்வேண்டுமென்பது. பெறுமாகலின் [3]இது கூறல்வேண்டுமென்பது. அல்லாக்கால்,

[4] "முன்னோர் நூலின் முடிபொருங் கொவ்வாமைப்
பின்னோன் வேண்டும் விகற்பங் கூறுவான்."

செல்லுமென்பது. (கo)

---

1. பெறுதுமாயின் என்றிருத்தல்வேண்டும்.
2. அது என்றது மிகையை,
3. இது—இச்சூத்திரம்.
4. முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்—பின்னோன் வேண்டும் விகற்பங் கூறி என்ற நன்னூற் சூத்திரத்தின் அடிகளைச் சேர்த்து எழுதப்பட்டது இவ்வாக்கியம்.

[முதனூற்கண் குற்றம் இல எனல்]

சுசுக. சிதைவில வென்ப முதல்வன் கண்ணே.

இது, மேற்கூறிய வழிநூற்குப்போல முதனூற்கே ஆவதோர் வேறுபாடுணர்த்துதல் துதலிற்று.

இ—ள்: மேற் பொதுவகையாற் கூறப்பட்ட நூலிலக்கணம் ஐந்தனுள் ஈரைங்குற்றமுமின்றியென முன்னே ஓதிய இலக்கணம் ஒன்று; முதனூற்காயின் அம்மரபின இலக்கணம் வேண்டுவதன்று என்றவாறு.

சிதைவிலக்கணத்தைச் சிதைவென்று ஓதினான் ஆகுபெயராகனென உணர்க. மற்று,

"வினையி னீங்கி விளங்கிய வறிவின் முனிவற்கு" (சுசசு)

சிதைவிலவென்பது அறிவானே உணர்வலெனின்,—எடுத்தோதத்துக் கிளந்து உய்த்துணர்தல் பயமின்றென்பது. அல்லதூஉம், முதனூற்கு முன்னியதோர் நூலினை இலக்கியமாகப் பெறினன்றே முதல்வன்றன் நூலிலக்கணஞ் செய்வது; மற்று [1]அன்னதோர் நூலின் அவன் செய்யாத [2]நூலிலக்கணம் யான் செய்தேனெனவும். [3]அவற்றுட் சிதைவினையே முதனூற்கண் இல்லை [4]யென்றதூஉம், [5]ஒழிந்தநான்கும் முதல்வனூற்கண்ணே உளவாகலின் அவற்றை இலக்கணங் [6]கூறினன் எனவும் இனிக் குற்றங்களும் பிற்றேன்றுங்கொலென்று அஞ்சி இங்ஙனம் அவற்றை வரையறுத்து யான் பாதுகாக்கின்றேனெனவும், அங்ஙனம் பாதுகாத்து இவ்விலக்கணங்கள் ஓதிற்றும் அவன் முத

---

1. அன்னதோர் நூலின் என்பது அன்னதோர் நூலின்மையின் என்றிருத்தல்வேண்டும். இதன் முதற் சூத்திர உரையுள் 'முன்னியதோர் நூலின்மையின்' சுசுo என வருதல் நோக்குக.
2. நூலிலக்கணம் என்றது நூல் செய்யு முறையை. இது பாயிரத்துக்குரியது.
3. அவற்றுள்—அந்நூலிலக்கணங்களுள். அவற்று—அவற்றுள் என்றிருத்தல்வேண்டும்.
4. என்றதூஉம் என்பது என்றது எனவும் என்றிருப்பது நலம்.
5. ஒழிந்த நான்கு—சிதைவு(குற்றம்) ஒழிந்த சூத்திரம், காண்டிகை, விருத்தி, உத்தி என்பன.
6. கூறினேன் என்றிருத்தல்வேண்டும்.

னூலே இலக்கியமாகப் [1] பெற்றெனவும் 'கூறியது கூறல்(சூசூஙூ) போல்வன வேறோர் பொருள் விளக்குமாயிற் குற்றமன்று' என்பதனையும் யானே கூறியதன்றி முதல்வனூலிற் சில்வகை யெழுத்தின் செய்புட்டாகவே அவற்றை வேறுவேறு விதித்துப் பாந்துபடச் செய்புமெனவும், இவையெல்லாம் அறிவித்தற்குச்

"சிதைவில வென்ப முதல்வன் கண்." (சூசூக)

என்றனென்பது.

மற்று, முதல்வன் [2] யாப்பே கூறுமாயின் அந்நூற்குத் தந்திரவுத்தியும் வேண்டுவதன்றும் பிறவெனின்,—அங்ஙனமே முதனூற்காயின் முப்பத்திருவகையுத்தி வாராது சிறுபான்மையான் வருமென்றற்கன்றே,

"ஈரைங் குற்றமு மின்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணர்ந்த." (சூருஙூ)

என ஈண்டு விலக்கப்பட்ட குற்றத்தின்பின்னர் அவ்வுத்தியை வைத்த கருத்தென்பது [3] ஆண்டும் கூறுவாமாயிற்றென்பது.

மற்று, முதனூலினுல் நூல் இலக்கணங் கூறுனெவினின்,—கூறினனேயன்றே? தான் ஒருவகையான் நூல்செய்து மற்றதுவே நூலிலக்கணமெனப் பிற்காலத்தார்க்கு அறிய வைத்தமையினென்பது.

மற்றுச் சிதைவிலவென்பார் யாரோவெனின்,—நிகழ்காலத்தாசிரியரும் எதிர்காலத்தாசிரியரும் என உணர்க. (கஙசூ)

[வழிநூற்கே குற்றம் வருமெனல்]

சூசூஉ. முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே.

இது, முதனூலொடு மறுதலைப்படுதல் வழிநூற்குக் குற்றமென்கின்றது.

---

1. பெற்றனவும் என்ற பாடம் பெற்றெனவும் என்றிருப்பது நலமாதல்பற்றி அது திருத்தப்பட்டது. பெற்று ஓதிற்று என இயைக்க. ஓதிற்று—ஓதியது.

2. யாப்பு—செய்யுள்.

3. ஆண்டு—அச்சூத்திரத்து (சூருஙூ).

இ—ள்: முதல்வழியாயினும் யாப்பினுட் சிதையும்—அதிகாரத்தானே முதனூலினைக் குற்றமின்றி வருவதென்று ஈண்டு இலக்கணங் கூறல்வேண்டுவதன்றென்றுன் இனி அம்முதனூலினை மாறுபடாமல் ஆண்டோதிய பொருண்மை கூறுமாயினும் நால்வகை யாப்பினுண் முதனின்ற மூன்றும்பற்றி வழிநூற்குக் குற்றம் பிறக்கும்; மற்று மொழிபெயர்த்தலொழியக் கொள்ளுமாறென்னையெனின்,—'யாப்பினுட் சிதையும்' என்று [1] இடமும் இடத்தியல்பொருளுமாக ஒதினுனகலின் அஃதொழிக்கப்படும். மற்றஃதொழிக்குமாறென்னையெனின், — [2] தமிழ்நாட்டு வழக்கிற்கு முதனூலாகிய அகத்தியத்துண் மொழிபெயர்த்துச் செய்யவேண்டும் பொருளிலவாகலானும், பிறபாடைக்கும் [3] பொதுவாயின பொருளவாயின் அவையுந் தமிழ் வழக்கு நோக்கியே [4] இலக்கணஞ் செய்யப்படுமாகலானும், [5] அவர்க்கும் மொழிபெயர்த்தல் வேண்டுவதன்றுகலின் அதுவே ஒழிக்கப்படும். இக்கருத்தினனன்றே,

"வழியி னெறியே நால்வகைத் தாகும்." (கூருக)

என வழிநூலையே விரித்து நால்வகை யாப்பிற்கும் உரிமை கூறியதென்பது. அங்ஙனம் முதனூற்கு மொழிபெயர்த்தலின்மையின் [6] யாப்பொன்றும்பற்றிச் சிதைவு பிறவாது, ஒழிந்தனபற்றி வழிநூற்குச் சிதைவுண்டாமென்பது கருத்து.

வல்லோன் புணரா வாரம்போன்றே—வாரம் புணர்ப்பான் வேறொருவனையவழி முதற்கூறு புணர்ந்தாற் புணர்ந்தவாற்றோடு பொருந்தச் செய்யாதவாறுபோல என்றவாறு.

---

1. இடம்—யாப்பு. இடத்தியல்பொருள்—சிதைவு. வழிநூல் செய்வோன் யாத்தற்கண் எனவே முதனூற்கண்ணுள்ளவற்றையே யாப்பதாயிற்று. முதனூல் தமிழ்நூலாதலின் அதன்கண் மொழிபெயர்ப்பு இல்லை.

2. தமிழ்நாட்டு வழக்கையே அகத்தியங் கூறுகிறபடியால் அதனுள் மொழிபெயர்த்துச் செய்யவேண்டும் பகுதியில்லை என்றபடி.

3. பொதுவாயினவாகிய பொருளவாயின் என்பது கருத்து.

4. இலக்கணம் என்றது யாத்தலை.

5. அவர்க்கும்—தமிழ் வழக்கு நோக்கி இலக்கணஞ் செய்வார்க்கும்.

6. யாப்பொன்றும் என்றது—மொழிபெயர்ப்பு யாப்பொன்றையும்.

வாரமென்பது, கூறு; என்னை? ஒரு பாட்டினைப் பிற் கூறு சொல்வாரை,

"வாரம் பாடுந் தோரிய மகளிரும்." (சில. கச : கடுரு)

என்பவாகலின்.

யாப்பினுட் சிதைதலென்பது, முதனூலும் வழக்குநூலா யின் இழிந்தோர் வழக்கும் வழக்கன்றேலெனக் கூட்டி விரித்து யாத்துச் [1] செய்யினும், அழான் புழான் (தொல். எழு. ககஙூ) என்பனபோல்வன இக்காலத்திலிவென்று கூளந்து தொகுத்து யாத்துச் [2] செய்யினும், [3] தொகையிரியும் மயங்குமாற்றுன் [4] விரிந்தது தொகுத்தலென்னும் [5] நூற் புணர்ப்பினைத் தொகை விரியெனும் யாப்பெனக் கூறியதல்லாதவழித் தொகுத்து யாத்தே செய்தலும் இம் மூவகை யாப்பினுடு [6] மெய்த்திறங் கூறுவ லென மொழிபெயர்த்தலே மயக்கிக் கூறுதலுமெல்லாம் யாப் பினுட் சிதைவேயாம். அது பண்ணும் பாணியும் முதலாயின ஒப்பினும் வல்லோன் புணர்த்த இன்னிசையதன் நீர்மைப்படக் காட்டா; வாரம் புணர்ப்பான் புறநீராகிய இசைபடப் [7] புணர்த் தல்போல்வதாயிற்று.

மற்று இழிந்தோர் வழக்கினைப் பிற்காலத்து உயர்ந்தோரும் [8] தகுதிபற்றி வழங்குபவாகலான் அவையும் அமையாவோ வெனின்,—அவை சான்றோர் செய்யுட்குரியவாது; [9] கற்றுணர்ந் தாருங் கற்றுணராதாரும் மற்றவை கேட்டே மனமகிழ்வாரைப் பற்றி நிகழ்ந்தனவாயினும் [10] ஒற்றுமைப்பட்டு ஒருவகை நில்லா;

1—2. செய்யினும் என்பன செய்தலும் என்றிருப்பதுநலம்.

3. தொகையும் விரியும் என்றிருத்தல்வேண்டும்.

4. விரிந்தது தொகுத்தல் என்பது ஒருத்தி.

5. நூற்புணர்ப்பு — உத்தி. புணர்ப்பினைத் தொகுத்து யாத்தே செய்தலும் என முடிக்க. தொகுத்துக்கூறல் என்னும் உத்தி நோக்குக.

6. மெய்த்திறம்—உண்மைப்பகுதி.

7. புணர்த்தல்போல்வது காட்டா என முடிக்க.

8. தகுதி—இந்த இடத்தில் இது வழங்கத்தக்கது என்னும் தகுதி. இனி, இச்சொல்லால் வழங்கத்தக்கது என்னுந் தகுதி எனினுமாம்.

9. கற்றுணர்ந்தாரும் கற்றுணராதாருமாகிய மகிழ்வார் என்க.

10. ஒற்றுமைப்பட்டு ஒருவகை நில்லா என்றது இருவழக் கும் ஒற்றுமைப்பட்டு ஒருவகை நில்லா என்றபடி.

பெற்ற காலந்தோறும் பிறிதுபிறிதாகிக் கட்டளைப்படுத்து நூல் செய்வார்க்குங் கையிகந்து, வரையறையின்றுமாகலின் அஃது இலக்கணமெனப்படாதென்பது. (கஎ)

[குற்றத்தின் விரி இவை எனல்]

சூகூ. சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயக்கங் கூறல்
கேட்போர்க் கின்ன யாப்பிற் றுதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூற
றன்ன னெருபொருள் கருதிக் கூற
லென்ன வகையினு மனங்கோ ளின்மை
யன்ன பிறவு மவற்றுவிரி யாகும்.

இது, நிறுத்தமுறையானே 'ஈரைங்குற்றமும்' (சூருங) உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்: சிதைவு எனப்படுபவை வசையற நாடின்—குற்ற மென்றற்குச் சிறப்புடையனவற்றைக் குற்றந்தீர ஆராயின்: இவற்றை எனப்படுபவென்பதென்? குற்றமாதற்குச் சிறந்தில வாம் பிறவெனின்,—இவ்வாசிரியர் எஞ்ஞான்றுங் குற்றத்திற்கு இலக்கணங் கூறுராகலான் இலக்கணத்தொடு [1] கூறுந்துணைப் பயம்படுதலும் ஒருவாற்றுற் சிறப்பெனவேபடுமென்பது; அல் லதூஉம் ஒழிந்த செய்யுட்காயின் இவையனைத்தும் ஆகாவென் பது ஈண்டே தழாஅல் வேண்டுமாகலானும், செய்யுட்காயின் அவை [2] அமையாச்சிறப்பு உடைமையானும் இது வழக்குஞ் செய்யுளுமேயன்றி அவற்றின் வேறுபட [3] வுஞ் செய்யப்படும் நூலிலக்கணமாகலானும் எழுவகை வழுப்போல அமைவனவே கூறுது நூலுள் வரப்பெறுதனவும் வரைந்து கூறினனென் பது. அமைவனவற்றினஞ்சார்த்தி [4] ஒழிந்தனவுங் கூறினன்; அல்லாக்கால், அவையே குற்றமாகி ஒழிந்தன புகுதப்பெறு வான் செல்லுமென்றஞ்சியென்பது.

1. கூறுந்துணைப் பயம்படல்—கூறுமளவிற்குப் பயன்படல்.

2. அமையா—வழு அமைக்கப்படாத.

3. உம்மை, எச்சம்; வேறுபடாமையேயன்றி வேறுபடவும் எனப் பொருடரலின். இல்லாமலு மிருக்கலாம்.

4. ஒழிந்தன—அமையாத குற்றங்கள்.

'வசையற நாடின்' என்றதனான், இங்ஙனங் குற்றமென்று வரையப்பட்டனவற்றைக்கொண்டு புகுந்து மற்றொரு பொருள் கொள்ளின் அவை வசையற்றனவாமென்பது. அவை, கூறியது கூறல், மாறுகொளக் கூறல், மிகைபடக் கூறல், பொருளில மொழிதல், மயங்கக் கூறல் என்னும் ஐந்துமாயின.

கூறியது கூறல், முன்னொருகாற் சொல்லிய பொருள் பின்னு மொருகாற் சொல்லுதல்; அது,

"உட்குவரத் தோன்று மீரேழ் துறைத்து." (குசு)

எனவும்,

"வந்த வீரேழ் வகையிற் குரும்." (குஅ)

எனவும் இருகாற் சொல்லி [1] ஒருகாற் பயன்கொண்டவாறு.

மாறுகொளக் கூறல்,

"மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை."

(தொ. எழு. குற். கo)

என்றவழி, [2] புல்லினையும் மரமென அடக்குதல். [3] இக்கருத்து நோக்கி (யே) போலும்; [4] ஆண்டு,

"ஒன்றென முடித்தல் தன்னின முடித்தல்."

என்பதனால், புல்லினையும் மாமென்று தழீஇயின [அக்] கருத்தென்பது.

குன்றக் கூறல், சொல்லப்புகுந்த பொருளினை ஆசறக் கூறாது ஒழியப்போதல்; இஃதோர் பயன்படாக் குற்றம்.

மிகைபடக் கூறல், சில்வகையெழுத்தின் செய்புட்டாகச் செய்யாது சூத்திரத்துட் சிலசொன் மிகையாகச் செய்தல்போல்வன; அவை,

---

1. ஒருகால் பயன்கொண்டது என்றது—முன் பதினொரு துறை என்று கூறிப் பின் ஈரேழ்வகைத்து என்றதனால் கவர்தலும் மீட்டலும்பற்றி ஒன்றை இரண்டாக்கி இருபத்தெட்டாகக் கொண்டது என்றபடி.

2. புல்—புறக்காழ். ஆதலின் மரமெனல் முன்பின் மாறும். ஆயினும் உத்திபற்றி அமையும் என்றபடி.

3. இக்கருத்து—குற்றமும் அமைக்கப்படும் என்று இங்கே கூறிய கருத்து.

4. ஆண்டு—அச்சூத்திரத்துள்.

[1] "ஆயிரியல புணர்நிலைச் சுட்டு." (தொ. எழு. புண. டு)

என்றாற்போல்வன. இங்ஙனம் மிகைபடச் செய்புங்கான் முன்னின்ற சொல்லிற்கு ஒன்றும் இயைபில்லன கூறலாகா; என்னை?

"முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன."

(தொ. எழு. நூன். உ)

என்றவழி, 'அவைதாம் முப்பாற் புள்ளியும்' எனப் பயனிலை கொண்டு மாறிப் பின்னர் 'எழுத்தோரன்ன' என்றது, ஆண்டு இயைபில்லதோர் சொல்லென்று [2] இலேசுபடாது தான் சொல்லுகின்ற பொருட்கும் இயைபுபடச் சொல்லியே மிகைப்படுத்தல் வேண்டுமென்பது; என்னை?

"எழுத்தெனப்படுப." (தொ. எழு. நூன். க)

என்பதனுண் மூன்றுமே சிறப்புடையவென்பது கொண்டானுயிற் பின்னர் அம்மூன்றினையுஞ் சிறப்பில்லா முப்பதினோடும் ஒக்குமென உவமிக்கலாகாதெனவும், [3] மாட்டேற்றுச் சூத்திரங்களானெல்லாம் ஒப்புமை பெறுவதல்லது சிறப்பின்மை காட்டப்படாவாகலானும், முப்பஃதுமே சிறந்தனவென்னுங் கருத்தினையுயின் மூன்றுஞ் சிறப்பிலவென்பது [4] முதற் சூத்திரத்துட் பெறப்படுமாகலின் பின்னர் [5] இவ்விலேசு கூறிச் சிறப்பழித்தல்வேண்டாவாகலானும் 'பலபொருட் கேற்பி னல்லது கோடல்' அன்றி [6] ஐயுறற்றேறுஞ் சூத்திரஞ் செய்யானுகலானும்,

"எழுத்தோ ரன்ன." (தொல். எழு. நூன். உ)

என்பது ஆண்டு இயைபில்லதோர் [7] சொல்லென்றதனை ஆண்டுப் பெய்து இலேசுகொண்டானெனல் ஆகாதென்பது.

---

1. ஆயிரியல என்பது மிகை. ஆயினும் வரையறைபற்றிக் கூறலின் குற்றமின்று.

2. இலேசுபடாது—இலேசுபடாமல். இது இயைபுபடச் சொல்லி என்பதனோடு முடியும்.

3. மாட்டுதல்—முன் சொன்ன சூத்திரத்தோடு கொளுவல்.

4. முதற் சூத்திரத்துள் பெறப்படல் எதனாலெனின்? மூன்றையும் வேறு பிரித்துச் சார்ந்துவரல் என்று கூறினமையின். அன்றியும் எழுத்தெனப் படுப என்று சிறப்பித்துக் கூறலானும் பெறப்படும்.

5. இலேசினாற் சிறப்பழிவு கூறுவார் இளம்பூரணர்.

6. ஐயுறற்றேறும் என்றது, ஐயப்படக் கூறிப் பின் ஐயப்படுந்தோறும். அதனை நீக்கற்குச் சூத்திரஞ்செய்யான் என்றபடி.

7. சொல்லென்று அதனை எனப் பிரிக்க.

பொருளில மொழிதல்—தானுதலிய பொருளன்றி

"என்மனார் புலவர்."

என்றாற்போல, வழிநூல் வாய்பாட்டு மாத்திரையே பயனுகச் செய்வன.

மயங்கக் கூறல்—நிறுத்தமுறையானன்றி,

"அத்தி னகர மகரமுனை யில்லை." (தொ. எழு. புண. உஉ)

என மயங்கக் கூறிப் [1] பிறிதொன்று கோடல்.

கேட்போர்க்கின்னு யாப்பிற்றுதல் — சூத்திரச் செய்யுள் கேட்போர்க்கு இன்னதிசைப்பச் செய்தல்.

பழித்தமொழியான் இழுக்கங் கூறல்—முடிவில்லாத சொல்லானும் இழிந்த சொல்லானும் எடுத்துமுடிப்பனவற்றை மறுமுடிபுபற்றி இழுக்கங் கூறலாயிற்று.

தன்னு ணொருபொருள் கருதிக் கூறல் — முன்னோரான் கூறவும்படாது வழக்கினுள்ளதுமன்றித் தன்னுள்ளே ஒரு பொருள் படைத்துக் கூறுதல். [2] (தன்) ஆனென்பது ஒரு சொல்லெனத் தானென்பதோர் சொற்றுய் மெய்யினுள் உணராநின்றது. தன்னுற்றுணொரு பொருள்படைத்துக் குறுகச்செய்தல் மூன்றுவதெனினும் இழுக்காது; என்னை? [3] நுதலிக் கூறலென்னும் பயனிலைக்குத் தானென்னும் [4] பெயர் வெளிப்படாது நின்றது வெளிப்படுத்துக் கொளப்பெறுதுமாகலின்.

என்னவகையினு மனங்கோளின்மை—எவ்வாற்றானும் பொருளறிதற்கு அரிதாகச் செய்தல். இவை நான்குங் குன்றக் கூறலொடு கூட்ட ஐந்தும் எஞ்ஞான்றும் பயன்படாதனவாயின.

அன்ன பிறவும் அவற்று விரியாகும் — அவைபோல்வன பிறவும் ஈரைங்குற்றமெனப்பட்ட தொகை எண்ணிற்கு அவ்

1. பிறிதொன்று கோடல் என்றது 'விளவத்துக்கண்' எனக் கெடாது நிற்றலைக் கோடலை.

2. தன்னுன் என்பதில் தன் சிதைவுபட்டிருத்தல்வேண்டும். தன்னுன் என்பதில் ஆனுஞ் சேர்ந்து தான் என்னும் பொருள்பட நின்றதென்றபடி.

3. நுதலிக் கூறல் என்று உரையுள் வருதலின் சூத்திரமுமப்படி இருந்திருக்கலாம்போலும்.

4. பெயர் என்றது—ஈண்டு எழுவாய்ப்பெயரை.

வாறு தொகுத்தற்கேற்ற விரியெண்ணும் இவையும் இவை போல்வன பிறவும் என்றவாறு.

'விரிந்தது தொகுத்தல்' என்பதனுன், [1] எதிரது நோக்கி [2] ஆண்டுத் தொகுத்தானுதலின் ஈண்டு அவற்றைத் தொகை கூறாது விரித்தெண்ணினுனென்பது.

'பிறவும்' என்றதனுன், 'வெற்றனத் தொடுத்தன், மற்றுன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை' என்றாற்போல்வன கொள்க. இவை மேல் 'ஈரைங் குற்றமும்' (சுருஉ) என உம்மையால் [3] தழுவியவற்று விரியாயின. [4] முதனூலொடு மாறுதலும் யாப்பினுட் சிதைதலும் இவைபோல ஓரோவழி வாரா; அந்நூலின் முழுவதூஉங் கொள்ளக் கிடந்தமையின் ஈண்டவை புறனடையால் தழுவப்பட்டவாறென்பது. இவையெல்லாங் குற்றமென்று கூறப்படுவனவாயினும் 'ஈரைங் குற்றமுமின்றி' என முதற் சூத்திரத்துள் ஓதிப்புகுந்தான், [5] அல்லாக்கால் இவற்றுட் சில நூலுட் புகுதுமாறும் அவற்றாற் பயன்கொள்ளுமாறும் [6] இன்மையினென்பது. பயன்கொள்ளப்படுவன ஐந்தென்பது மேற்காட்டினும்.

இனி, அப்பதினுன்கும் குற்றமேயாகி வருமாறு:—

"தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை யெனஅ."

எனவும்,

"உருவக முவமை வழிநிலை மடக்கே
விரிசுடர் விளக்கென மரீஇ வருவன."

எனவும், சில சூத்திரங்களை முதனிலீஇப், பின்னரும் அவ்வாய்பாட்டானே,

1. எதிரது நோக்கி—பின்வரும் இதனை நோக்கி.

2. ஆண்டு—ஈரைங்குற்றமுமின்றி என்றவிடத்து.

3. தழுவியவற்றுவிரி—தழுவி அவற்று விரி எனப் பிரிக்க.

4. முதனூலொடு மாறுதலும் யாப்பினுட் சிதைதலும் சூசூ0—க-ம் சூத்திரங்களிற் கூறப்பட்டன.

5. அல்லாக்கால்—புகுதராக்கால்.

6. இன்மையின்—இல்லாது முடியுமாதலின்.

"தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை யென்றுங்
கெண்வகை யியல செய்யுட் கணியென
மையறு புலவர் வகுத்துரைத் தனரே."

என்றாற்போலப் பின்னரும் அவ்வாறே சூத்திரஞ்செய்தல் கூறியது கூறலாய்ப் பயன்படாதாயிற்று; என்னை? இவற்றது வேறுபாடு தொகைச் சூத்திரத்துத் [1] துணிந்தெண்ணியதனானே பெற்றவழிப், பின்னும் அவ்வாறே மற்றோர் சூத்திரஞ் செய்ததனாற் பயந்ததின்மையினென்பது.

[2] "அன்றென வொருதலை துணிந்த குற்ற
நன்றறி புலவர் நாட்டுதற் குரிய."

என்றாற்போல்வன [3]வரையாது குற்றமென்றதனானே சான்றோர்க்காயிற் குற்றமாகாதென்றல் மாறுகொளக் கூறலாம். செய்புட்கெல்லாம் அணியிலக்கணங் கூறுவான் குற்றங் கூறும்வழி [4] வரைந்து கூறுதலின்.

செய்யுட்குரிய பொருட்பரப்பையெல்லாவற்றுள்ளும் நல்லனவுந் தீயனவும் இவையென்று சொல்லப்புகுந்தான், அவற்றுட் சில சொல்லியொழிதலும், வழக்கொடு [5] மெய்ப்பொருளும் ஆராய்வ லென்று புகுந்தான், அவற்றுள் வழக்கிற்கு வேண்டுவ கூறி மெய்ப்பொருள் ஆராய்ச்சி முழுவதூஉஞ் சொல்லாது நெகிழ்ந்து போதலும், எடுத்துக்கொண்ட தூஉட் காட்டும் இலக்கியங்களைச் சூத்திரத்தான் அடிவரை செய்வனென்று புகுந்து சில [6] மறுத்துச்செய்து, சிலவற்றுக்குச் செய்யாது போதல்போல்வனவும் குன்றக்கூறலாம். அவை முடிந்தநூலிற் கண்டுகொள்க.

"இடையிடை நிரியா நியனெறி மரபி
னுடைய கருப்பொரு ளொரோவழித் துவன்றவு
மியற்கை மரபி னுரிப்பொரு டோன்றவும்

1. துணிந்து—துணித்து என்றிருப்பது நலம்.

2. அன்று என—பொருந்தாது என்று; ஒருதலை—நிச்சயம்.

3. வரையாது ஆகாதென்றலென இயைக்க.

4. வரைந்து—வரைவுசெய்து, வரைதல்—நியமித்தல். அது சான்றோர்க்காகுமென்றல்.

5. மெய்ப்பொருள்—தத்துவப் பொருள்.

6. மறுத்துச்செய்தல்—ஒன்றைக் கூறி அது முதலாயின என்று செய்தல். சூடுசூ-ம் சூத்திர உரை நோக்குக. இது அறுத்து என்றிருந்திருக்கலாமோ என்று ஆராயத்தக்கது, அறுத்தல்—வரையறுத்தல்.

[1] பன்னிரு காலமும் நால்வகை யிடத்தொடுந்
தொன்னெறி மரபிற் றோன்றினர் செயலே."

எனச் சூத்திரஞ்செய்து நாற்பத்தெட்டினும் நாற்பத்தெட்டு காலமுந் தொக்க சூத்திரத்தால்,

"துடைப்பன துடைத்துச் செயற்கை போல
வழியிட னெழித்துக் காலங் கூறுவல்"

என்று புகுந்து அக்காலத்துள்ளுஞ் சிறுபொழுது கூறுது இடவிலக்கணமே கூறி இடத்திற்குச் சுருங்க வேறு சூத்திரஞ் செய்தவாறுபோலாது [2] அதற்கு இன்றியமையாதனவெல்லாங் குன்றுமற் கூறுது சென்றுபட்ட பரப்பிற்றாகச் சூத்திரஞ் செய்தல்போல்வன மிகைபடக் கூறலாம். அஃதாவது இன்னிள வேனிலென்பது,

"தண்ணிழ லறல்யாற் றடைகரைத் துறைதொறு
மிலங்கு முலைக்க னேய்ப்பக்கோங் கவிழ்ந்து
வண்டுதா தூதுந் தண்டளிர்க் காவிற்
பருமல ருதிர்ந்து முருகுகமழ் பரப்பின்
மண்வயிறு குளிர்க்குந் தண்ணறுங் கயத்து
நிழலிரு ணீடுவ ணைமுலவிர் தாமரைத்
தாள்கறித் தருந்தும் வாளெயிற் றிளமீன்
புள்ளுக வெறிய வெள்ளென்று பிறழும்
பளிங்குநெகிழ்ந் தன்ன துளங்காத் தெண்ணீர்
தளிர்குடைந்து தெவிட்டிய குயில்குளிந்து குடிப்ப
மரவந் தாழ்ந்த கரைமரச் சாரற்
றேனுறு தேறல் வேளிற் கண்ணும்
வாரார் கொல்லென நீர்வார் கண்ணெடு
புலம்புடை மகடூஉக் கலங்கரு செய்த
யாறுங் குளனுங் காவு மாடி
யோருயிர் மைந்தரு மகளிருங் களிப்பக்
காம விழவொடு கன்னியர் நோற்ப
நிலவுஞ் சாந்தும் பலவயிற் பயன்படத்
துன்பக் காலந் துடைத்தனர் பெறூஉ
மின்பக் கால மென்மனூர் புலவர்."

என்றாற்போலப் [3] பற்றிக் கூறிப் பெருஞ்சூத்திரம் செய்தவழியும் பருவத்திற்கு வரையறையிலக்கணம் போதுதலின்றி [4] விடுதலாயிற்று.

1. பன்னிருகாலம்—பெரும்பொழுதாறு சிறுபொழுதாறு; இடம் நான்கோடும் காலம் பன்னிரண்டையும் உறழ ஈஅ கால மாகும். நால்வகை இடம்—குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.

2. அதற்கு—அக்காலத்திற்கு.

3. காலம்பற்றிக் கூறி என்றிருப்பது நலம். பற்றி என்பது இல்லாமலு மிருக்கலாம்.

4. விடுதல்—தவறவிடல்.

இனி,

"அம்மூன் றென்ப மன்னீச் சொல்லே."(தொ. சொ. உருச)

எனவும்,

"அப்பா லெட்டே யும்மைச் சொல்லே."(தொ. சொ. உருஎ)

எனவும்,

"ஆயி ரைந்தொடு பிறவு மன்ன."

எனவும் இன்னோரன்ன யாவும் மிகைபடச்செய்தார் இவ்வாசிரியராகலிற் பிற்காலத்து நூல் செய்தார்க்கும் மிகைபடச் செய்தல் அமையுமென்பாருமுளர்; அற்றன்று,

"யாவயின் வரினுந் தொகையின் றியலா."

(தொ. சொ. இடை. சஉ)

எனப்பட்ட எண்ணுகளின் தொகை கூறினமையானும் வழக்காதலானும் [1]அதுமுதலாக அல்லது சூத்திரச் செய்யுளுஞ் செய்யாராகலானும், அங்ஙனந் தொகை தொடராக்கால் [2]இரண்டாகப்பட்டு [3]விகாரவகையால் தொகுத்தானுமெனவும் அவை பலசொல்லாகலால் தொகுக்கப்படுவனவல்லவெனவுஞ் சொல்லி மறுக்க; அல்லதூஉம், மன்னென்பது ஓரிடைச்சொல்; அது தானடைந்த சொற்பொருளன்றித் தனக்கு வேறுபொருளின்மையிற் பொருள்பற்றி மூன்றெனலாகாது, [4]பலபொரு ளொரு சொல் எனப்படுவதன்றி; அதனுன் அதனை நோக்கி மூன்றென்றுனல்லன், அஃது [5]அடுத்த சொல்லினை மன்னைச் சொல்லென்றுன், அவை மூன்றன்றி எத்துணையும் பலவாயினும் [6]ஒன்றுயினும் மூன்று பகுதிப்படுமென்று கோடற்கென்பது. ஒழிந்த இடைச்சொல்லாயினும் அவற்றிற்கும் இஃதொக்கும். மன்னைச் சொல்லென்பது [7]வேற்றுமைத் தொகையே யன்றிப் பண்புத்

1. அதுமுதலாக—அவ்வழக்கு அடியாக.

2. இரண்டாகப்பட்டு—இடர்ப்பட்டு என்று பாடமுள்ளது. அதுவே பொருத்தம்.

3. விகாரம்—செய்யுள் விகாரம்.

4. பலபொருள் ஒருசொல் என்றது தானே மூன்றுபொருளுணர்த்திற் பலபொரு ளொருசொல்லாம் என்றபடி.

5. அடுத்தசொல்—மன் அடுத்துவருஞ் சொல்.

6. ஒன்றுயினும் மூன்றுபகுதிப்படும் — ஒன்று யிம்மூன்று பகுதிப்படும் என்றிருப்பதே பொருத்தம்.

7. வேற்றுமைத்தொகை—மன்னையுடைய சொல்; பண்புத் தொகை—மன்னடுத்த சொல்லாகிய சொல். மன்—ஆகுபெயர்.

தொகையாகலுமுடைத்து. மன்னடுத்த சொல்லினையும் மன்னென ஆகுபெயராற் கூறினுனென்பது.

"வழக்கு வழிப்பட்ட சொல்லீறு திரியினும்
படைத்துக் கொண்ட சொல்லொடு சிவணித்
திரிசொல் லென்றே செப்பினர் புலவர்
[1]வரிவனப் பகைத்தோண் மடநல் லோயே."

என்றுற்போல இயைபில்லன கூறுதல் பொருளில மொழிதலாம். இவை ஒழிந்த செய்புட்காயின் 'தடங்கண்ணுப்' (நாலடி. உகசு) என்றுற்போல் வரப்பெறுமென்றற்கு ஒத்தென்னையெனின்,—அது செய்புள்செய்வார் வேண்டியவாறு செய்பவாகலின் ஈண்டுச் 'சில்வகையெழுத்தின்' (சுருடு) செய்புட்டாகச் செய்யுநூற்கே இது விலக்கினமையின் அதன் திறத்துக் கடாவின்றென மறுக்க.

மயங்கக் கூறலென்பது,

"மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டுவன்." (பாயிரம்)

என்று புகுந்தாற்போல இன்னது சொல்லுவலென்று புகுந்தான் [2]மெய்ந்நூலும் வழக்குநூலும் உடனராய்தலும் ஆரியமுந் தமிழும்போல்வன உடனராய்தலும் போல்வன.

கேட்போர்க்கின்னு யாப்பாவது,

"கதந பம." (தொ. எழு. சுக)

"சஞயவ."

"உயிர்முன் பின்வல்லினம்."

"லரயநதா மென."

என்றுற்போலச் சூத்திரச் சுருக்கமும் மொழிக்கு முதலா மெழுத்தும் ஈறுமெழுத்தும் பொதுவகையான் அடங்க ஓதுதற் பயனேக்கி இங்ஙனம் இன்னுவோசைத்தாகச் சூத்திரஞ் செய்தல்போல்வன.

பழித்தமொழியா னிழுக்கங் கூறல்.

[3]"விளாமெ னிறுதி பழமொடு புணரிற்
றளாவியற் றன்றி யியற்கை யாகும்."

என்றுற்போல விளாமென்பதோர் வழுச்சொல்லாற் சூத்திரஞ் செய்தல். ஒன்றற்கொன்றென்பதனை,

1. இவ்வடியே இயைபில்லன கூறல்.

2. மெய்ந்நூலும்—தத்துவ நூலும்.

3. விளா என்பது ஆகாரவீற்று மரப்பெயர்.

"ஒன்றினுக்கொன்று."

எனச் சூத்திரஞ் செய்தலும் அது.

தன்னு ளொருபொருள் கருதிக் கூறலென்பது, மலைபடு கடாத்தினை [1] ஆனந்தக்குற்றமெனப் [2] பிற்காலத்தாளொருவன் ஒரு சூத்திரங் காட்டுதலும், [3] பதமுடிப்பென்பதோர் இலக் கணம் படைத்துக் கோடலும் போல்வன.

என்னவகையினி மனங்கோளின்மை வருமாறு.

"இருதிணைப் பிறந்த வைம்பாற் கிளவிக்கும்."
(தொ. சொ. பெ. எ)

என்னுஞ் சூத்திரத்திற்கும்,

"எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி."
(தொ. எழு. புண. உசு)

என்பதற்கும் வேறு பொருள் உரைப்பாருரைக்குமாற்றான் அறி யப்படும்.

இனி, மற்றொன்று விரித்தலென்பது, [4] ஆறுறுப்பும் பாவின முங் கூறுவலென்று புகுந்து பொருளாராய்ச்சி பலவுங் கூறு தல். இதுவும் இன்னோரன்ன மிகைபடக் கூறலாய் அடங்கு மெனினும் அமையும்.

நின்று பயனின்மையென்பது, பிற்காலத்துத் தோன் றிய வழக்கேபற்றி அவற்றிற்குங் குற்றந்தீர இலக்கணங் காட் டியவழி, அது சான்றோர் செய்யுட்குப் பயன்படாது [5] தம்மோ ரன்ன செய்யுட்குப் பயன்பட்டொழியச்செய்தல். அவை வந்த

1. இக்குற்றம் யாப்பருங்கல விருத்தியுள்ளும் காட்டப்பட் டின்றன.

2. பிற்காலத்தான் என்றது யாரை என்பது புலப்பட வில்லை. யாப்பருங்கல விருத்தியுள் ஒழிபியல் 548-ம் பக்கத்தில் "உறுபுகழ் மரபி னுயர்ந்தோர் கூறிய அறுவகை மரபின வானந் தம்மே" என்பது முதலாகச் சில சூத்திரம் மேற்கோளாகக் காட்டி விளக்கவுரையும் எழுதப்பட்டுள்ளன. அதன்கண் மலை படுகடாத்தினும் ஆனந்தக் குற்றங்களைச் சில எடுத்துக்காட் டப்பட்டுள்ளன. ஆண்டு நோக்கி உணர்க.

3. பதமுடிபு காட்டினோர் நன்னூலார்.

4. ஆறுறுப்பு—எழுத்தும், அசையும், சீரும், தளையும், அடி யும், தொடையும்.

5. தம்மோரன்ன—தம்மோரன்னோர் செய்யுட்கு என்றிருத் தல்வேண்டும்.

வழிக் கண்டுகொள்க. [1] பாட்டியன் மரபெனக் காட்டுவனவும் அவை;

இனி, வெற்றெனத் தொடுத்தலென்பது, கேட்போர்க்கின்ன யாப்பின்பாற்பட்டு அடங்கும்.

சென்று தேய்ந்திறுதலென்பது, சொல்லப்புகுந்ததொரு பொருள் எல்லாவிடத்துஞ் சொல்லப்படுவதாகவும் ஈற்றுக்கண் மாய்ந்து மாறுவது. அதுவுங் குன்றக்கூறலாய் அடங்கும். ஒழிந் தனவும் அன்ன.

மற்றுக் கூறியது கூறன் முன்வைத்ததன்னையெனின்,—அது நூலுட்போலச் செய்யுட்கண்ணும் பயன்படவரின் அமையு மென்றற்கென்பது; அவை,

"வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்."(நாலடி. நகூ)

எனவும்,

"வஞ்சியாய் வஞ்சியார் கோ." (யா. வி. ப. உகூ0)

எனவுஞ் சொல்வகையான் இரட்டித்தவாறு. இனியமைவனவற் றிடையே குன்றக்கூறல் வைத்தான் [2] அவற்றுத் துணைச்சிறப் பிலவென்பது ஐயுறுமையென்பது.

இவ்வாசிரியர் யாண்டும் இலக்கணமே கூறி இவ்விலக்கணத் திற் பிறழ வருதலைக் குற்றமென்று கொள்ளவைப்பினன்றி இல்லாத குற்றங்கட்கு இலக்கணங் கூறுதார் [3] இது கூறினர்,

"எதிர்மறுத் துணரின் நிறுத்தவு மவை."
(தொ. பொ. மர. கo கூ)

என வருகின்ற சூத்திரத்தான் இவையும் இலக்கணத்திற்கு உபகாரப்படுதலினென்பது. (கo அ)

[குணம் இவை எனல்]

கூகூச. எதிர்மறுத் துணரின் நிறுத்தவு மவையே.

இது, மேற் குற்றம் பத்துங் கூறி இனிக் குணமும் பத் துளவென்கின்றது. மேலெல்லாம் இவ்வாசிரியன் இலக்கணவழக்

1. பாட்டியன்மரபு—இது ஒரு நூல். அது யாப்பருங்கல விருத்தி செய்யுளியல் 351-ம் பக்கத்தில் "என்பது பாட்டியன் மரபு" என்பதனாலறிக. (கூஉ-சூ)

2. அவற்றுத்துணை—குற்றமென்று கூறப்பட்ட மற்றவற் றளவு.

3. இது—இக்குற்றங்கள் பத்து.

கினையே விதந்தோதி அதனிற் பிறழ்ந்தது குற்றமென்று கொள்ள வைத்தான்; இவ்வோத்தினுள் 'ஈரைங்குற்றமும்' என்பன சில குற்றங் கூறினுன், இது மாறுகொளக் கூறலாங்கொல்லோ வெனின்,—அற்றன்று; இவையும் இலக்கணமே கூறினனென் பான் இவற்றையெதிர்மறுத்துக் கொள்ளவென்றுனென்பது. இதனது பயன்: உள்ளது சொல்லுதலேயன்றி இல்லது சொல்லு தலும் நூலிலக்கணமென்றறிவித்தலாயிற்று; அவை,

[1] "பெயர்நிலைக் கிளவி காலந் தோன்று." (தொ. சொ. எக)

எனவும்,

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது."
(தொ. சொ. உஅ0)

எனவும் வரும். எனவே கூறியது கூறுமையும் 'மாறுகொளக் கூறுமையும்', 'குன்றக் கூறுமையும்' போல்வனவும் பத்து உள நூலிலக்கணமென்றுணும். மேல்,

"ஈரைங் குற்றமு மின்றி."

என்றதல்லது அவற்றை நாட்டிக்கொண்டு எதிர்மறுத்துக் கோடல் பெறுமையின் [2] இது கூறினுனென்பது. (கo கூ)

[உத்தியின் விரி இவை எனலும், நூற் புறனடையும்]

கூகூடு. ஒத்த காட்சி யுத்திவகை விரிப்பி
னுதலிய தறித லதிகார வகையே
தொகுத்துக் கூறல் வகுத்துமெய்ந் நிறுத்தன்
மொழிந்த பொருளோ டொன்ற வவ்வயின்
மொழியா ததனை முட்டின்று முடித்தல்
வாரா ததனுன் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராத துணர்த்தன்
முந்து மொழிந்ததன் றலைதடு மாற்றே
யொப்பக் கூற லொருதலை மொழிதல்
தன்கோட் கூறன் முறைபிற ழாமை
பிறனுடம் பட்டது தானுடம் படுத
லிறந்தது காத்த லெதிரது போற்றன்

1. இதுமுதலிய உதாரணம் இரண்டும், இல்லது கூறலும் இலக்கணமென்றற்குக் காட்டிய உதாரணங்கள்.

2. இது—இச்சூத்திரம்.

மொழிவா மென்றல் கூறிற் றென்ற
றுன்குறி யிடுத லொருதலை யன்மை
முடிந்தது காட்ட லாணை கூறல்
பல்பொருட் கேற்பி னல்லது கோட
றருக்த மொழியான் வகுத்தனர் கோடன்
மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்
பிறன்கோட் கூற லறியா துடம்படல்
பொருளிடை யிடுத லெதிர்பொரு ளுணர்த்தல்
சொல்லி னெச்சஞ் சொல்லியாங் குணர்த்த
றந்துபுணர்ந் துரைத்தன் ஞாபகங் கூற
லுய்த்துக்கொண் டுணர்த்தலொடு மெய்ப்பட நாடிச்
சொல்லிய வல்ல பிறவவண் வரினுஞ்
சொல்லிய வகையாற் சுருங்க நாடி
மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டு
நுனித்தகு புலவர் கூறிய நூலே.

இது, முறையானே இறுதிக்கணின்ற முப்பத்திருவகை யுத்தியுங் கூறி மற்றும் இந்நூலுள் அதிகாரம் மூன்றற்கும் வேண்டும் புறனடையுங் கூறுதனுதலிற்று.

இ—ள்: ஒத்த [1]காட்சி யுத்திவகை விரிப்பின்—முற்கூறிய குற்றங்களோடு ஒப்பத் தோன்றுந் தோற்றத்தினை உடைய வாகிய உத்திக் கூற்றினை விரித்துச் சொல்லின்.

பத்துவகைக் குற்றத்தோடும் ஒத்துவருமெனவே இவை யும் நூற்கணன்றி ஒழிந்த செய்புட்கு வருங்கால் விலக்கப்படு தலும், முற்கூறிய குற்றம்போல இவையும் வேறுசில பொருள் படைத்தலுமுடையவாயின. காட்சியுத்தியென்று இவற்றைக் கூறியவதனுன் நூலுட் காணப்படுமென்ற ஐந்து குற்றத்தோடும் ஒத்தல் கொள்ளப்படும்; அவ்வந் நூற்குப் பயம்பட வரும் பகுதியானென்பது.

1. காட்சி என்றதனுன் காணப்படுதலாகிய உத்தி என் பது பெறப்படும். அதனுல் வழிநூலுட் காணப்படுமென்று முன் னர்க் கூறிய (வேறொரு பொருள்படின் தழுவப்படுமென்ற) குற்றத்தோடு ஒத்த உத்தி என்பது கருத்தாம்.

[1] உத்தியென்பது, நூல் செய்புங்கால் இயல்புவகையாகிய வழக்குஞ் செய்யுளும்போலச் செவ்வனஞ் சொல்லுதல் ஒண்மை யுடைத்தன்றும் பிறவெனின்,—அற்றன்று; அவ்வாறு [2] செய் தக்கால்,

"நுண்மையொடு புணர்ந்த வொண்மைத்தாகல் வேண்டும்."

என்பது [3] முன்னர்ச் [4] சொல்லினும். ஈண்டுச் செவ்வனஞ் சொல் லாத தந்திரவுத்திவகையும் அவ்வாறே ஒண்மையுடையவாமென் பது கருத்து; என்றூர்க்குச் செவ்வனஞ் செய்தலே உத்தியென் ணேனெனின்,—அது சொல்லாமை [5] முடிந்ததாகலினன்றே உத்தியென்னது இவற்றை [6] உத்திவகையென்பாணபிற்றென்பது; அஃதேல், இவற்றை முன் தொகுத்தான்போல விரிப்பினென்ற தென்னையெனின்,—முன்னர் எதிரது நோக்கி மூப்பத்திரண் டெனத் தொகை கூறிப் பின்னர்,

"மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்துகொண்
டினத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டும்."

என்கின்றுணுகலான், அங்ஙனம் இனம்பற்றி [7] அவற்றோடு அடங்குவனவெல்லாம் அவற்று விரியாகுமென்னுங் கருத்தினுற் கூறினனென்பது.

"அவனிவ னுவனென வருஉம் பெயரு
மவளிவ ளுவளென வருஉம் பெயரு
மவரிவ ருவரென வருஉம் பெயரும்
யான்யா நாமென வருஉம் பெயரும்
யாவன் யாவள் யாவ ரென்னு
மாவயின் மூன்றே டப்பறி னீந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயரே." (தொ. சொ. கசுச)

என்பதனுள்,

"ஆவயின் மூன்றே டப்பறி னீந்தும்."

---

1. உத்தி என்பது—இது வேண்டியதில்லை.
2. செய்தக்கால்—நூல் செய்தக்கால்.
3. முன்னர்—சூ.நு-ம் சூத்திரம்.
4. சொல்லினும்—சொல்லினுன் என்றிருத்தல்வேண்டும்.
5. முடிந்தமை—முடிந்துகிடந்தமை.
6. இவற்றை உத்திவகை என்றமையானே உத்தி செவ் வனஞ் சொல்லல் என்றுயிற்று.
7. அம்மூப்பத்திரண்டோடு.

எனத் தொகுத்துக் கூறியவழி அது மிகைபடக் கூறலாகாது; என்னை? [1] உம்மையெண்ணுகலின் தொகையின்றியுஞ் சில்வகை யெழுத்திற் செய்புட்டாக வழக்கியலானே சுருங்கச்செய்வதோர் ஆறுளதாயினும் அப்பதினேந்துமென தொகுத்துக் கூறல் உத்தி வகையான் அமையுமாகலினெண்பது கருத்து. இங்ஙனந் தொகை கூறுதல் வெள்ளிதன்றி ஒள்ளிதாகல்; அவை, [2] பதினேந்து பெயருமே ஒருங்கரணவென்பது அறியலாகுமென்பது.

இனி,

"மெய்பெறு மரபிற் றொடைவகை நாமே." (சகந)

என்னுஞ் சூத்திரம்போல்வன பிறிதொருபொருள் பயக்குமென் றலும் அச்சூத்திரத்துட் காட்டப்பட்டது. இவ்வாற்றுன் இவ் வுத்திவகை எல்லா நூற்கும் இன்றியமையாவாயின.

மற்று, வகையெனப்படாது செவ்வனஞ் செய்யும் உத்தி யாவன யாவையெனின்....

"இயற்கைப் பொருளை [3] யிற்றெனக் கிளத்தல்."
(தொ. சொ. கசு)

என்றுற்போலச் சொல்லியொழிவன. பிறவும் அன்ன.

'விரிப்பின்' என்ற வினையெச்சம் 'சேர்த்தி யுணர்த்தல் வேண்டும்' என்ற முற்றுவினைகொண்டு முடிந்தது. 'மெய்ப்பட நாடி' என்பனபோல்வனவற்றுக்கும் இதுவே முடிபு; அதற்கு நூலென்னும் [4] பெயர்கொடுத்து முடிக்க. நூலியென்று ஐகாரம்

---

1. உம்மையெண் தொகையின்றியும் வருமென்பதனை, தொல் சொல். இடை. நசு-ம் சூத்திரத்தாலறிக.

2. பதினேந்து ஒருங்கரண என்பதை உணர்த்துதற்குத் தொகை கொடுத்தார் என இவர் கூறியவாறுபோலவே, தருக்க சங்கிரகத்திலும். 'பதார்த்தத்தன்மை திரவிய முதலிய ஏழனுள் ஒன்றன்கண் வியாப்பியமாகாதெனவும் பொருள்படுமன்றே அவற்றை நீக்குதற்கு (எனவே ஏழன்கண்ணும் தனித்தனி வியாப்பியமாதலே உணர்த்தற்பொருட்டுத்) தொகை கொடுத் தார் எனத் தருக்கசங்கிரக தீபிகை என்னும் உரைகாரர் கூறு தல் காண்க.

3. இற்றெனக் கிளத்தல் என்பதனுல் இயற்கையை விளக் கினமையின் செவ்வனஞ் செய்தலாயிற்று.

4. பெயர்—எழுவாய்.

விரிப்பின், வேண்டுமென்பது [1] தன்பாலானும் பிறன்பாலானும் பெற்றதோர் பெயர்கொண்டு முடியும்.

(க) நூதலியதறிதல் — சூத்திரத்துள் ஓகிய பொருளாற் சொல்லப்படும் பயன் இல்லதுபோலச் சொல்லியதனானே அதற் கேற்றவகையாற் கருதி யுணரப்படுபொருள் இன்னதென்று கொள்ளவைத்தல்; அது,

"வேறுவினைப் பொதுச்சொ [2]லொருவினை கிளவார்."
(தொ. சொ. ககூ)

எனவும்,

"சிறப்பி னுகிய பெயர்நிலைக் கிளவிக்கு
மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்."(தொ. சொ. சக)

எனவும் இவை வழுவற்க வழுவமைக்க என்னும் இருபகுதியுள்வழு வமைத்தற்கெழுந்தனவென்பது கருதினான் ஆசிரியனென்பது அறியவந்தன. இதனை முதற்கண் வைத்துப்போய் இறுதிக் கண்ணே உய்த்துக்கொண்டுணர்தலை வைத்தான் [3] இதுவும் அது போல் உய்த்துக்கொண்டுணர்தல் ஒருவகையானுடைத்தாயினும் [4] அதனாற் பெற்றபயன் பிறிதுமொன்று உளதாதல் வேற்றுமை யுடைமையினென்பது; அது முன்னர்ச் சொல்லுதும்.

இனி, மூவகைத் தமிழ்வழக்கமும் நூதலியதும் அவற்றுள் இயற்றமிழே நூதலியதும், அதிகாரம் நூதலியதும், அதிகாரத் துள் ஒத்து நூதலியதும், ஒத்தினுட் சூத்திரம் நூதலியது மென இவை நூதலியதறிதற்பகுதியாய் அடங்குமென்பான்,

1. நூலை உணர்த்தல்வேண்டும் உணர்த்துவோன் தன்பால் ஆசிரியன்—பிறன்பால். ஆசிரியன் நூலை உணர்த்தலை வேண்டும் என்க.

2. பொதுவினையாற் கிளத்தல்வேண்டும் இது வழுவற்க என்றது என்றும், இயற்பெயரும் முன்வரல்வேண்டும். இதுவும் வழுவற்க என்றது என்றும் இளம்பூரணர் சேனாவரையர் முதலி யோர் கூறுவர். நன்னூல் விரிவுரையாளர் முன்னியதை வழு வற்க என்றது என்றும், பின்னியதை முற்படக் கிளப்பின் வழு வமைதி என்றுங் கூறுவர். இவரும் வழுவமைதி என்றலின் முன்னியதைக் 'கிளப்பின்' வழுவமைதி என்றும், பின்னியதை முற்படக் கிளப்பின் வழுவமைதியென்றும் கருதுகின்றனர் போலும்.

3. இதுவும் — இவ்வுத்தியும். இதுவும் உடைத்தாயினும் என்க.

4. அதனால்—உய்த்துக்கொண்டுணர்தலால்.

[1] என்கின்றனென்பது; மேல் வருகின்றவற்றுக்குமொக்கும். அஃதேல், இதனை ஆண்டுவைத்து [2] மற்றதனை ஈண்டு வைப் பினும் இஃதொக்கும் பிறவெனின்,—அற்றன்று; நூலின் வேறு கிய பாயிரத்துள்ளாயினும் இந்நூதலியதறிதல் வருதலும் உத்தி யென்றற்கு இதனை முன்வைத்தானென்பது.

(உ) அதிகாரமுறைமை — முன்னின்ற சூத்திரப் பொருண்மை பின்வருஞ் சூத்திரத்திற்கும் பெறற்பாலன பெற வைத்தல்; அவை,

"இயற்கைப் பொருளி யிற்றெனக் கிளத்தல்."
(தொ. சொ. ககூ)

என்றவழி இற்றெனக் கிளத்தல் உரிமைபூண்டதன்றே, [3]அத னைச்,

"செயற்கைப் பொருளி யாக்கமொடு கூறல்."
(தொ. சொ. உ0)

என்புழியுங் கொள்ளவைத்தலும்,

"குற்றிய லிகர நிற்றல் வேண்டும்." (தொ. எழு. ஙச)

என்பதனை,

"குற்றிய லுகரம் வல்லா னூர்ந்து." (தொ. எழு. ஙகூ)

நிற்றல்வேண்டும் என்று கொள்ளவைத்தலும்போல்வன.

இனி, வழக்கியலும் வழக்கியலாற் செய்யப்பட்ட செய்யு ளியலும்பற்றி எழுந்த இலக்கணம் இயற்றமிழெனப்படும்; அச் செய்யுளின்றி அமையாத இசையிலக்கணம் இசைத்தமிழெனப் பெயரெய்தி அவ்வியற்றமிழ்ப் பின்னர் வைக்கப்பட்டதெனப் படும்; இவ்விரண்டன்வழி நிகழ்த்துங் கூத்திலக்கணங் கூறிய நாடகத்தமிழ் அவற்றுப்பின்னர்த்தாமென முறைமை கூறு தலும்; இனி இயற்றமிழுள்ளும் எழுத்ததிகாரத்தோடு சொல் லதிகாரத்திற்கும், சொல்லதிகாரத்தோடு பொருளதிகாரத்திற்

1. என்றனென்றிருத்தல் நலம்.

2. அதனை — உய்த்துக்கொண்டுணர்தலென்னும் அவ்வுத் தியை.

3. அதனை—அவ்வுரிமையை; ஆக்கமொடு கூறல் என்ற வழியுங் கொள்ளவைத்தல் என்றது, ஆக்கமொடு கூறல் செயற் கைக்கு உரிமை எனக் கொள்ளவைத்தல்.

கும் இயைபு கூறுதலும்; அதிகாரத்துள் ஒத்துப் பலவாகலின் அவை ஒன்றன்பிறனென்று வைத்தற்கு இயைபு கூறுதலுமெல் லாம் அதிகார முறைமைக்கு இனமென்று சேர்த்தியுணரப் படும்; பிறவும் அன்ன.

அதிகாரமென்ற பொருண்மையென்னையெனின்,—முறைமை யெனவும், இடமெனவும், கிழமையெனவும் கொள்ளப்படும். அவற்றுள், ஈண்டு அதிகாரமென்றுழியாது முறைமையென வுங் கூறினமையின் அதிகாரமென்பது முறைமைப்பொருட் டன்றி முன் ஓரிடத்து நிறுத்தி அதன்வழி முறையாற் பொருள் கோடல் கொள்க; என்னே? முன்னும் பின்னும் நின்ற சூத் திரம் இரண்டனையும் ஓரிடத்தனவாகக் கருதல்வேண்டும். அங்ஙனங் [1]கருத்தாத லியைபுகொண்டு அன்றி ஒன்றன் பொருண்மை ஒன்றற்கு வருவித்தல் அரிதாகலானும், அங்ஙனம் இடம் பற் றுக்கால் ஒருவன் செய்த நூலோடு பிறிதொரு நூற்கு இயைபு கூறுதவாறுபோல எழுத்ததிகாரத்தோடு சொல்லதிகாரத்திடை இயைபு கூறல்வேண்டுவதன்றுவான் செல்லுமாதலானுமென்பது. எனவே, இடமெனப்பட்டது தானே முறைமைப்பொருளும் படுமாயினும் இச்சூத்திரத்துள் அதிகாரமெனவும் முறைமை யெனவுங் கூறினமையின் ஈண்டு [2]இடமுறைமையென்பதே கருத்தாயிற்று. இதனானே [3]உடன்பிறந்தாருள் ஒருவற்குரியது வழித்தோன்றினுர்க்கும் ஒருவழி உரியவாறுபோல முன்னர் நின்ற விதி பின்னர் வந்ததற்கும் வேண்டியவழிக் கொள்ளப் படுமென்பது உத்திவகையாயிற்று.

இனியொருசாரார், இங்ஙனம் வரைந்துகொண்ட இடத் துள்ளே யாற்றொழுக்குப்போலவன்றி இடையிடையும் பெறு மென்பது நோக்கி அரிமா நோக்குந், தேரைப் பாய்த்துளும், பருந்து வீழுக்காடும் ஆகி வருமெனவுஞ் சொல்லுப; அவை யும் [4]இனத்திற் சேர்த்தி யுணர்த்தவேபடுமென்பது.

1. கருதலியைபு கொண்டன்றி என்றிருத்தல்வேண்டும்.

2. இடமுறைமை – இடவியைபு.

3. உடன்பிறந்தாருள் ஒருவனுக்குரியது உடன்பிறந்தானுக் கன்றி வழித்தோன்றினுர்க்கும் உரித்தாயிற்று என்றபடி.

4. அதிகார முறைமை என்ற உத்தியின் இனமாகச் சேர்க் கப்படும் என்பது கருத்து.

(ரு) தொகுத்துக் கூறல்—தொகுத்தியாத்த நூலுள்ளுந் தொகுத்துக் கூறுதல்.

அவையாவன :— எழுத்து முப்பத்துமூன்று, [1]சொல் லிரண்டு, பொருளிரண்டு என ஆசிரியன்றானே தொகை கூறு தல்போல்வன.

"இருதிணை மருங்கி னைம்பா லறிய
லிற்றினின் றிசைக்கும் பதினே ழெழுத்தும்." (தொ. சொ. கo)

எனப் பல சூத்திரத்து விரிந்தன தொகுத்தலும்,

"ஆவயின் மூன்றே டப்பதி னைந்தும்
பாலறி வந்த வுயர்திணைப் பெயர்." (தொ. சொ. ககூச)

என ஒரு சூத்திரத்து விரித்துத் தொகுத்தலும் போல்வன வும் அதன் பகுதியாய் அடங்கும்.

(ச) வகுத்து மெய்ந்நிறுத்தல் — அங்ஙனந் தொகுத்துக் கூறியவழி எழுத்து முப்பத்துமூன்றென்ற தொகையினைக் குற் றெழுத்தும் நெட்டெழுத்தும் உயிரும் உயிர்மெய்யும் வல்லின மும் மெல்லினமும் இடையினமுமென்றாற்போலவும் உயர்திணை அஃறிணையென்ற தொகையினை ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவென்றாற்போலவும் வகுத்தல்.

"உயர்திணைக் குரிமையு மஃறிணைக் குரிமை
மாயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்." (தொ. சொ. ககூஉ)

எனவும்,

"இயற்சொ றிரிசொ றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே." (தொ. சொ. நகூஎ)

என வருவனவும் அவை. இவற்றுள் [2]இருதிணையெனக் கூறிப் பெயர் மூன்று, வினை மூன்றென்றலும்; இனி, அகத்திணை புறத்திணையெனக் கூறி, அகப்புறமெனக் கோடலும் இனமென் றது; அவை குற்றெழுத்து நெட்டெழுத்தென முற்கூறியனவே

1. சொல் இரண்டு—உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல். பொருள் இரண்டு—அகப்பொருள், புறப்பொருள்.

2. திணை இரண்டென்றதற்கேற்ப உயர்திணைப்பெயர் அஃ றிணைப்பெயரென்னுது பொதுப்பெயர் கோடலும், உயர்திணை வினை அஃறிணைவினையென்னுது பொதுவினை கோடலும் இன மென்றதென்க.

[1] மற்றொரு பெயர் பெற்றுற்போலாது, சொல்வகையான் [2] மூன்றுவதோர் சொல் வேறுபெற்றமையினென்பது. இங்ஙனங் கொள்ளாக்கால் இருதிணைப் பெயரும் வினையும் மும்மூன்றெனல் ஆகாதன்றோவென்பது.

"சொல்லெனப் படுப பெயரே வினையென்
றாயிரண் டென்ப வறிந்திசி னோரே." (தொல். சொ. ககூ0)

என்றவழி,

"இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு
மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப."
(தொல். சொ. ககூக)

என வகுத்தலும், இனி ஆராய்ந்த இயற்சொல்லொடு [3] வேறு மூன்றுசொற் கூட்டி நான்கென்றலும் அவ்வாறே இனமெனப் படும்; என்னை? ஒழிந்த மூன்று சொல்லும் இயற்சொல்லின் வேறுபட்டமை கூறுமாகலினென்பது. அஃதேல், எழுத்து முப்பத்துமூன்றெனக் கூறிப் பின்னர், இருநூற்றொருபத்தாறுயிர் மெய் [4] குப்பைகோடலும் வேற்றெழுத்தாகி வருமென்பது வகுத்து மெய்ங்நிறுத்தல்' என்பதனற் [5] கொள்ளாமோ வெனின்,—கோடுமன்றே;

"புள்ளி யில்லா வெல்லா மெய்யும்." (தொ, எழு. கள)

என்புழி,

"உருவரு வாகி யகரமொ டுயிர்த்தலும்."

என ஆசிரியன் இரண்டெழுத்தின் கூட்டமாகச் சூத்திரஞ் [6] செய்திலனாயினென்பது.

'மெய்' என்றதனான், வகுத்தவற்றைப் பின்னும் வகுத்து நிறுத்தல் கொள்ளப்படும்; என்னை? இயற்சீர் பத்தெனவும் ஆசிரியவுரிச்சீராறெனவும் வகுத்தவற்றை,

---

1. மற்றொருபெயர்—சுட்டெழுத்து, வினாவெழுத்து என்று பெயர்பெறுதல்.

2. மூன்றுவதோர் சொல் என்றது பொதுப்பெயர், பொது வினை, அகப்புறம் என மூன்றுவதாய் வேறு நின்றவற்றை.

3. வேறுமூன்று—திரிசொல், திசைச்சொல், வடசொல்.

4. குப்பை—கூட்டம்.

5. கொள்ளாமோ—கொள்ளுதல்செய்யாமோ.

6. செய்திலனாயிற் கோடுமன்றே என முடிக்க. எனவே இரண்டு எழுத்தின் கூட்டமாகச் செய்தமையின் கோடலாகாது என்றபடி.

"இயற்சீ ரிறுதி நேரவ ணிற்பி
னுரிச்சீர் வெண்பா வாகு மென்ப." (தொ. பொ. ஙஙக)

என இயலசை மயக்கமாகிய நான்கனையே இயற்சீரெனவும்,

"வெண்பா வுரிச்சீ ராசிரிய வுரிச்சீ
ரின்பா நேரடிக் கொருங்குநிலை யிலவே." (தொ. பொ. ஙஙஞ)

என்றவழி, ஆசிரியவுரிச்சீர் ஆறனுள் இரண்டனை ஒழித்து உரியசை மயக்கமாகிய நான்கனையே ஆசிரியவுரிச்சீரெனவும் வகுத்து நின்றமையினென்பது.

'மெய்' என்றதனான், வகுத்தவற்றைப் பின்னும் வகுத்து நிறுத்தல் கொள்ளப்படும்; என்னை?

"இயலசை மயக்க மியற்சீ ரேனை
யுரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்." (தொ. பொ. ஙஉஞ)

என்று பகுத்தோதியவாற்றானென்பது; அக்கருத்தினன்றே [1] ஒழிந்த இரண்டனையும்,

"கலித்தளை மருங்கிற் கடியவும் படாஅ." (தொ. பொ. ஙஙகூ)

என இறந்தது தழீஇ உரைப்பானுமிற்றென்பது,

(ஞ) மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்—எடுத்தோதிய பொருண்மைக்கு ஏற்றவகையான் அப்பொருண்மைக்கட் சொல்லாததொன்று கொள்ளவைத்தல்.

'முட்டின்றி முடித்தல்' என்றதனான், எடுத்தோதாததும் எடுத்தோதியதனோடு ஒக்குஞ் சிறப்பிற்றென்றவாறும். அது போல்வன அதற்கு இனமெனப்படும். [2] மற்றி [3] தனை [4] அருத்தாபத்தியென்னுமோவாமெனின், என்னுமன்றே;

"பிறசீ ருள்வழித் தன்றனை வேண்டுப." (தொ. பொ. ஙகூஎ)

என்னும்பொருட்டன்றித் தன்சீரோடு இயற்சீர் வந்து தனை கொள்ளுமென மொழியாததோர் பொருள் கோடலினென்க; இனி,

---

1. ஒழிந்த இரண்டு — நீடுகொடி குளிறுபுலி என்னும் ஆசிரிய உரிச்சீரிரண்டு.

2. மற்று என்பதன்முன். 'தன்சீ ருள்வழித் தனைவகை வேண்டா' என்னும் உதாரணம் தவறியதுபோலும்.

3. இதனை—இவ்வுத்தியை.

4. அருத்தாபத்தி—பொருட்பேறு. தன்சீருள்வழி என்னுஞ் சூத்திரத்தினால் 'பிறசீ ருள்வழித் தன்றனை வேண்டுப' என்று பொருள்கொண்டாற்றான் அருத்தாபத்தியாம்.

"ரஃகா னெற்றும் பகர விறுதியும்." (தொ. எழு. சகூ0)

என்றவழி, [1] ஒழிந்த நான்கெழுத்தும் ஈற்றினிற்குமென்று கோடல் போல்வனவும் அதன் இனமெனப்படும்; என்னை? 'ஒன்றென முடித்த றன்னின முடித்தல்' எனினும் இழுக்காது; இனி,

"சிரியை மருங்கி னுரைசை யொப்பின்." (தொ. பொ. ஙசூஅ)

என்றவழி, ஒன்றுதது இயற்சீர் வெண்டளையென்று [2] கோடல் அருத்தாபத்தியாகி,

"எடுத்த மொழியினஞ் செப்பலு மூரித்து." (தொ. சொ. சூக)

என்ற வழக்கியலானே வழுவன்றி அடங்குமென்பது.

(சு) வாராததனுன் வந்தது முடித்தல் — ஒரு பொருண்மைக்கு வேண்டும் இலக்கணம் நிரம்ப வாராததோர் சூத்திரத்தானே அங்ஙனம் வந்த பொருண்மைக்கு வேண்டும் முடிபு கொள்ளச்செய்தல்; அது,

"தொடர விறுதி தம்முற் றும்வரின்
லகரம் றகரவொற் றுகனு மூரித்தே." (தொ. எழு. உகச)

என அகரத்திற்குக் கேடுவராத சூத்திரத்தானே, லகரம் றகர வொற்றுய் வருமெனப் பிரித்துத் திரிபு கூறியதே பற்றுக [3] அகரம் ஆண்டு நில்லாது கெடுமென்று கொள்ளவைத்தது னுனே, சிற்சில வித்திப் பற்பல கொண்டார்' என்று வந்த புணர்ச்சி முடித்தவாறு கண்டுகொள்க.

"எல்லா மென்னு மிறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்." (டி. கஅ சூ)

என்றவழி, எல்லாமென்னும் விரவுப் பெயருள் உயர்திணை கூறி வற்றுச்சாரியை பெறுமையான் அது பெற்றுவந்த அஃறிணைக் கூறே முடித்தலும் அது; பிறவும் அன்ன.

1. ஒழிந்த நான்கு—னகரம், ளகரம், ளகரம், மார் என்பன. என்னை? என்று தொடங்கும் வாக்கியம் பொருத்தமில்லை. அதன்முன் சில வாக்கியம் தவறியிருத்தல்வேண்டும்.

2. கோடல்—கொள்ளுதல்.

3. சிலசில—சிற்சில, பலபல பற்பல. இவற்றிலுள்ள அகரக்கேடுதான் இவ்வுத்தியாற் கொள்ளப்பட்டது.

இனி, இங்ஙனம் முடிபுகோடலன்றி [1] ஆண்டுக் [2] குறியிடுதலும், ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தது பின்னர் ஆட்சிக்கண் வாராமையும், வந்தவழிப் [3] பிறவற்றோடு கூறுதலும் அதற்கு இனமெனப்படும். அவை,

"அவ்வகை யொன்பதும் வினையெஞ்சு கிளவி,"
(தொ. சொ. உஉ0)

என முடிந்ததனை மீண்டும்,

"தெரிப்படத் தொன்று மெஞ்சுபொருட் கிளவி." (தொ.சொ. சஉ0)

எனக் குறியிடுதல் எச்சவியலுள் வந்ததாயினும் முன்னர் அக் குறியீடு வந்ததின்மையின் அது வாராததெனப்படுமாகலின் [4] அஃது ஈண்டுக் குறியிடுதலாயிற்று. வினையியலுட் பெயரெச்சமென்று ஆளுதலும் அது.

'வண்ணச் சினைச்சொல்' 'முற்றுச்சொல்' என்பனவும், குற்றியலிகரத்தைப் 'புள்ளி' யென்றலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவாகலின் அவையும் [5] இனி வாராமையான் வந்துழி வந்துழி [6] அவ்வாறு ஆண்டானென்பது.

இனி; [7] புள்ளியென மேல் ஆளவாராததனைப் புள்ளியென்று ஆள்வனவற்றோடு மயக்கங் கூறுதலென்பது,

"அவைதாங்,
குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்ந்த மென்ற
மூப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன." (தொ. எழு. உ)

என்புழி, குற்றியலிகரம் புள்ளியென்று யாண்டும் ஆளவாராமையானும், அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும், அங்ஙனம் புள்ளியென்று ஆளவரும் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும்

1. ஆண்டு என்றது எழுத்தினும் சொல்லினும் என்றபடி.

2. குறி—பெயர்.

3. பிறவற்றோடு கூறுதல் என்றது குற்றியலுகரம் ஆய்தம் என்பவற்றோடு சேர்த்துப் புள்ளி என்று கூறுதல். பின் காட்டும் உதாரணத்தாலறிக.

4. அஃது—வினையெஞ்சு கிளவி. வாராததனுன் வந்தது குறியிடுதலாயிற்று என்றபடி.

5. இனி—பின்.

6. அவ்வாறு—ஆட்சியுங் குறியீடுமாக.

7. புள்ளியென மேல் ஆளவாராதது என்றது குற்றியலிகரத்தைப புள்ளிபெறும் என்று மேல் ஆளவில்லை என்றபடி.

உடன் கூறுதலாயிற்று; இங்ஙனம் உடன் கூறுக்காற் [1] புள்ளி யுங் குற்றிகாமுமெனச் சூத்திரம் பெறுதல் வேண்டுவதாவான் செல்லுமென்பது; இனி,

"ஆ ஏ ஓ அம்மூன்றும் விளி." (தி. நூ உ)

எனவும்,

"மாறுகொ ளெச்சமும் விளவு மையமும்." (தி. உகூ0)

எனக் கூறுவனவும் அவை; என்னை? இடைச்சொல்லோத்தி னுள் விளிவென்றோதாத ஆகாரம் வாராததுடன் ஆண்டு விளி வென்று ஓதிய ஏகார ஓகாரங்கள்,

"ஆ ஏ ஓ அம்மூன்றும் விளி." (தி. நூ உ)

என்று உடன் கூறினமையானும், அவ்வாறு இடைச்சொல்லோத் தினுள் எடுத்தோதாத மாறுகொளெச்சத்தோடும் ஐயத்தோடும் ஆண்டோதிய விளவினையும் எண்ணினையும் எழுத்தோத்தினுள் விதந்து உடன் கூறினமையானுமென்பது; இது நோக்கிப் போலும்,

"ஈற்றசை யிவ்வைந் [2] தேகாரம்." (தொ. சொ. இடை. கூ)

என இடைச்சொல்லீறு எழுத்துச் சாரியை பெய்தோதிய கருத் தானே இப்பொருண்மை கொள்ளவைப்பானுயிற்றுமென்பது.

மற்றிவை எதிரது போற்றலாகாவோதெனின், — [3] அது பொருட்படைக்கண்ணதெனவும், [4] இவை ஆட்சியுங் குறியீடும் பற்றியதோர் பகுதியெனவுங் கூறி விடுக்க. அஃதேல், [5] குறி யீட்டால் ஈண்டாராயாதேனுவெனின்,—இவை உத்திவகையாக லானும் [6] அது தானே உத்தியெனப்படுமாதலானும் அதனை ஈண்டு ஆராயானென்பது.

---

1. குற்றிகரத்தோடு புள்ளிபெறுதலும் உடன் வைத்துச் சூத்திரஞ் செய்தல்வேண்டிவருமென்பது கருத்து.

2 எழுத்துச்சாரியை—காரம்; ஏகாரமென்று சாரியை பெய் தது என்க.

3. அது—அவ்வுத்தி. (எதிரது போற்றல்)

4. இவை—இனங் கூறியவை.

5. குறியீடு—பெயரிடுதல்.

6. அது — குறியீடு.

(எ) வந்ததுகொண்டு வாராததுணர்த்தல்—பின்னெருவழி வந்ததுகொண்டு முன் வாராததோர் பொருள் அறியவைத்தல்; அது,

"[1] ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும்"
(தொ. எழு. உ0ச)

என்பது.

"எஞ்சிய மூன்று மேல்வந்து முடிக்கு
மெஞ்சுபொருட் கிளவி யிலவென மொழிப."
(தொ. சொ. சநகூ)

என வந்ததுகொண்டு மேற் கூறப்பட்ட ஏழெச்சத்திற்கும் மேல் வந்து முடிக்குஞ் சொல் வாராததனை வருமென்றுணர்ந்து கொள்ளவைத்தமையின் இதுவும் அதுவேயாயிற்று.

"ஆயிரு திணையி னிசைக்குமன சொல்லே."
(தொ. சொ. கிள. க)

என்றவழி, [2] திணையென்னும் பெயர் எப்பொருட்கும் எய்து வித்தல் ஒரு சூத்திரத்துள்ளே கோடலின் அதனை அதற்கு இனமென்று கொள்ளப்படும்; பிறவும் அன்ன.

(அ) முந்து மொழிந்ததன் றலைதடுமாற்று—முன்னெருகாற் கூறிய முறையன்றிப் பின்னெருகால் தலைதடுமாறுகக் கூறுதல்; அது,

"பன்னீ ருயிரு மொழிமுத லாகும்." (தொ. எழு. நுகூ)

எனவும்,

"உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா." (தொ. எழு.சு0)

எனவும், உயிரும் மெய்யும் நிறுத்த முறையானன்றிக்

"கதந பமவெனு மாவைந் தெழுத்து
மெல்லா வுயிரொடுஞ் செல்லு மார்." (தொ. எழு. சுக)

என மெய்பற்றி வரையறை கூறுதலும்.

---

1. 'ஞாங்கர்க் கிளந்த' என்றது முதற் சூத்திரத்துள் கூறிய என்றபடி. அதனுள் 'தத்தமொத்தவொற்று' என்றதை. இச்சூத் திரத்தினுல் வல்லெழுத்தென்று பெறவைத்தல்.

2. திணையென்னும் பெயர் எப்பொருட்கும் எய்துவித்தல்— ஆயிருதிணையின் எனத் தொகுத்ததனுல் உயர்திணைப்பொருள் அஃறிணைப்பொருள் என்னும் எல்லாவற்றிற்கும் அத்திணை யென்னும்பெயரை எய்துவித்தல்.

'எல்லா மொழிக்கு மிறுதியு முதலு
மெய்யே யுயிரென் றுரீ ரியல.'' (தொ. எழு. கஅஉ)

என [1]முற்கூறிய முறை பிறழக் கூறுதலுமாயின.

மெய்யும் உயிரும்பற்றி [2]விதந்து வரையறுப்பினும் அஃது இரண்டற்குஞ் செல்லுமென்று கோடற்கும், இனி இயல்பு வகையான் ஈருக ஒருதலையாக உடையன மெய்யென்றற்கும், [3]அவ்வாறு கூறினுன்னுமோவெனின்,—அங்ஙனமே; அக் கருத்தினனன்றே 'ஒத்தகாட்சி' எனக் குற்றத்தோடு ஒப்புமை கூறி [4]மற்றுப் பொருள் பயத்தலின் அமையுமென்று கொள்வா மாயிற்றென்பது.

இனி,

''மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்.''
(தொ. எழு. கஅஉ)

என்றுற்போல்வன இனமெனப்படும்.

''புள்ளி யில்லா வெல்லா மெய்யும்.''(தொ. எழு. நூன். கள)

என்பது மெய் முற் கூறினமையின் இதுவும் இதற்கு உதா ரணமெனப்படும்.

மற்று, [5]மயங்கக் கூறலொடு இதனிடை வேற்றுமை யென்னையெனின்,—அஃது,

''இன்னே வற்றே.'' (தொ. எழு. புண. கள)

என நிறுத்தமுறையாற் கூறுது மற்றதுவே பற்றுக மற்றொரு பொருள் கொள்ளப்படும்; இஃது [6]அன்னதன்றி இங்ஙனம் மயங்கக் கூறல்வேண்டும் பொருண்மைத்தாகி வருமென்பது;

1. முற்கூறிய முறை—உயிர் முற்கூறல்.

2. விதந்துவரையறுத்தல் 'மெய்யேயுயிரென் றுரீரியல' என வரையறுத்தல். அஃது—அவ்வரையறை. இரண்டற்கும் சேறல் என்றது, நிரனிறையாகாது இறுதியு முதலுமாகிய இரண்டற் குஞ் சேறலே.

3. அவ்வாறு என்றது—'மெய்யே உயிரென் றுரீ ரியல' என்ற சூத்திர அடியுள் மெய்யை முற்கூறுதலே.

4. மற்றுப்பொருள் பயத்தலின் அமையும் என்றது, குற்ற மாயினவும் பொருள் பயப்பின் அமையும் என்றபடி.

5. மயங்கக் கூறல் குற்றத்துளொன்று. சூசூஉ-ம் சூத்திரம் நோக்குக.

6. 'அத்தினகர மகரமுனையில்லை' என்ற சூத்திரம் நிறுத்த முறையாற் கூறுது மயங்கக் கூறலே ஆண்டு நோக்கியுணர்க. (சூசூஉ-ம் சூத்திரம்).

அஃதேல், இது மாறுகொளக் கூறலென்னுங் குற்றமாகாதோ வெனின்,—ஆகாது; என்னே? இது முற் கூறிய பொருளினை மாறுபடாமையானும் நிறுத்தமுறை தலைதடுமாறவைக்குந் துணை யாகலானுமென்பது.

(கூ) ஒப்பக் கூறல்—ஒன்று கூறுங்கால் இருபொருட் குரித்தெதன்று இரட்டுறச் செய்தல். அது,

''இன்னி னிகர [1]மாவி னிறுதி
முன்னர்க் கெடுத லரிதா மாகும்.'' (தொ. எழு. கஉ0)

என்றுற்போல்வன.

''விளையெஞ்சு கிளவியு முவமக் கிளவியும்.''
(தொ. எழு. உ0ச)

எனவும்,

''அன்ன வென்னு முவமக் கிளவியும்.'' (தொ. எழு. உக0)

எனவும் இனமல்லனவற்றை உடனெண்ணுதலும்,

''மாமரக் கிளவியு மாவு மாவும்.'' (தொ. எழு. உங்க)

என மாட்டெறியுங்கால் [2]வேறுவேறு விதியுடையனவற்றை ஒருங்கு மாட்டெறிதலும், [3]ஆண்டு ஆறு வல்லெழுத்தினையும் உடன் கோடலும், நிலைமொழித் தொழிலொடு வருமொழித் தொழிலும் ஒப்புக்கொண்டு [4]மாட்டெறிதலும் போல்வன ஒப் பக் கூறலென்னும் பகுதியாய் அடங்குமென்பது.

(கo) ஒருதலை மொழிதல்—ஓர் அதிகாரத்தாற் சொல் லற்பாலதனை வேறு அதிகாரத்துச் சொல்லி அவ்விலக்கணமே [5]ஆண்டுங் கொள்ளவைத்தல். அது,

''அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு.'' (தொ எழு. நக)

எனவும்,

''ஆணும் பெண்ணு மஃறிணை யியற்கை.'' (தொ. எழு. நoங)

எனவும் இவை எழுத்ததிகாரத்துக் கூறியவாற்றுனே சொல்

1. ஆ, மா என நிற்க இரட்டுற மொழிதல்.

2. வேறுவேறு விதி என்றது, மாமரக் கிளவிக்கு வேறு விதி, ஆவுக்கும் மாவுக்கும் வேறுவிதி என்றதை. (எழு. உயி. உக)

3. ஆண்டு—அச்சூத்திரத்து.

4. அவற்றோரன்ன என்று மாட்டியதை.

5. ஆண்டும்—சொல்லாத அதிகாரத்தும்.

லதிகாரத்துள்ளும் [1] அவ்விலக்கணங் கொள்ளவைத்தமையின் அப்பெயர்த்தாயிற்று.

உடம்பொடு புணர்த்துச் சொல்லுவன அதற்கு இன மெனப்படும்; என்னை? [2] விதியல்லாதது விதிபோல மற்றொரு வழிச் சேறலின்.

(கக) தன்கோட் கூறல்—சொல்லாதன பிறவுளவாயினும் அந்நூற்கு வேண்டுவதே கொள்வலென்றல்; அது,

"அஃறிவ ணுவலா தெழுத்துபுறத் திசைக்கு
மெய்தெரி வளியிசை யளபுநுவன் றிசினே."
(தொ. எழு. கoஉ)

எனவும்,

"சகரக் கிளவியு மவற்றே ரற்றே
அஐ ஔவெனு மூன்றலங் கடையே." (தொ. எழு. சுஉ)

எனவும்,

"குற்றெழுத் தைந்து மொழிநிறை யிலவே."(தொ. எழு. சச)

எனவும்,

"பாடலுட் பயின்றவை நாடுங் காலே." (தொ. பொ. ஙு)

எனவும் வரும். இவ்வாற்றானே,

"அளபிற் கோட லந்தணர் மறைத்து." (தொ. எழு. கoஉ)

ஆயினும் அது [3] கூறினேனெனவும், இயற்சொல்லிற் [4] கல்லது நிலைமொழியாக்கங் கூறேனெனவும்,

---

1. அவ்விலக்கணம்—சுட்டிலக்கணமும் ஆண் பெண் அஃறிணை முடிபும்.

2. விதியல்லாதது விதிபோல மற்றொருவழிச் சேறல் என்றது — விதிக்கப்படாதது விதிக்கப்பட்டதுபோல ஓரிடத்துச் சேறல். அஃதாவது ஒன்றற்கு விதிக்கப்படாதது அதற்கு விதிக்கப்பட்டதுபோல அதன்கண்ணுஞ் சேறல். (உ+ம்) திருப்பரங்குன்ற முருகன் திருச்செந்தூரிலுமிருப்பன் ஆவினன் குடியிலுமிருப்பன் என்றல் மற்றிரண்டுக்கும் விதிக்கப்பட்ட இருப்பு விதிக்கப்படாத திருப்பரங்குன்றத்துக்கும் விதிக்கப்பட்டது போல அதன்கண்ணுஞ் சென்றது காண்க.

3. கூறினேன் என்பது கூறேன் என்றிருத்தல்வேண்டும். அதுவே பொருத்தம்.

4. அல்லது என்றதனால் ஏனைய மொழிக்கு என்பது பெறுதும். நிலைமொழியாக்கம்—நிலையும் மொழியாக்கமும். (உம்மைத் தொகை.) நிலை—முதனிலை, இறுதிநிலை. மொழியாக்கம்—இடைநிலைமயக்கம்.

"வழக்குஞ் செய்யுளும் ஆராய்வல்." (பாயிரம்)

என்று புகுந்தான் பாடலுட் பயின்ற வழக்கே கூறுவலென வுங் கூறுதலின் அவை தன்கோட் கூறுதலாம்.

இனி, ஒன்பது மயக்கத்துண் [1] மெய்ம்மயக்கங் கூறி ஒழிந்தன கூறுமையும், வினைத்தொகையும் பண்புத்தொகையும் [2] எடுத்தோதி முடியாமையும்,

"நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்." (தொ. பொ. ருஉ)

பற்றிப் பொருளிலக்கணங் கூறுவலென்றலும், [3] பெரும்பான்மை இலக்கண வழக்கென்ப என்றலும், சிறுபான்மையை மயக்கமென்றலும், அம் ஆம் எம் ஏம் என்பன முதலாயவற்றை அங்ஙனம் பகுத்தோதுதற் பயனும், [4] அவை வினையின்றி அவ்வினை செய்தான்மேல் நிகழ்கின்ற கூறுதலுமேபற்றி,

"வினைசெயன் மருங்கிற் [5] காலமொடு வருநவும்."
(தொ. சொ. உருஉ)

என்று இடைச்சொல்லோடு ஒத்தலும்போல்வன அதற்கு இன மெனப்படும். என்னை? இவைதாங் கூறுவலென்று புகுந்தவற் றுள்ளும் ஒரு பொருளானவற்றை வரைந்து கொண்டமையின் அவற்று விரியெனப்பட்டன.

(கஉ) முறைபிறழாமை — காரணமின்றித் தான் சில பொருள் எண்ணி நிறுத்தியபின்னர் அம்முறை பிறழ்ந்தாலுங்

---

1. ஒன்பது மயக்கம் என்று இவர் கருதியன எவை என்பது நன்கு புலப்படவில்லை. மெய்ம்மயக்கம் — இடைநிலை மெய்ம் மயக்கம்.

2. தொல்காப்பியர் புணர்ச்சியுள் எடுத்தோதிமுடித்திலர். நன்னூலார் முடிப்பர்.

3. ஒன்றற்கு இலக்கணங் கூறுங்கால் பெரும்பான்மைபற்றிச் சொல்லுமாயின் அப்பெரும்பான்மைபற்றி அதனை இலக்கண மாகக் கோடலைப் பெரும்பான்மை இலக்கண வழக்கென்ப என்பது குறித்து நின்றது. சிறுபான்மையாயின் இலக்கண மாகாது வழுவாம் என்றபடி. சிறுபான்மை வழக்கு வழுவமைதி யாகக் கொள்ளப்படும்.

4. அவை—அம் ஆம் முதலிய விகுதிகள். வினைசெய்தான் கருத்தா. பயனுங் கூறுதலும்பற்றி ஒத்தலும் என இயைக்க.

5. காலமொடு வருநவும்—காலங்காட்டுவனவற்றோடு வருவனவும்.

குற்றமில்வழியும் அம் முறையினையே இலக்கணமாகச் சொல்லுதல்; அது,

"பெயர் ஐ ஒடு கு
இன் அது கண்விளி யென்னு மீற்ற."(தொ. சொ. வே. ங)

என [1] நிறுத்தமுறையாற் பற்றி எழுவாய் வேற்றுமை இரண்டாவது மூன்றுவதெனப் பெயர் கொடுத்தல்.

"அகரமுத னகர விறுவாய்." (தொ. எழு. க)

எனவும்,

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்"
(தொ. பொ. அக)

எனவும் வழக்கியலானும் இலக்கணவகையானும் உள்பொருளை [2] விதந்தே எண்ணி நிறுத்தாதவழியும்,

"அவற்றுள்,
அ இ உ எ ஒ." (தொ. எழு. ங)

எனவும்,

"அவற்றுள்,
நடுவ ணைந்திணை நடுவண தொழிய."(தொ. பொ. அக. உ)

எனவும் முறைபிறழாமற் கோடல் அதற்கு இனமெனப்படும்.

(கங) பிறனுடம்பட்டது தானுடம்படுதல்—[3]உள்பொருள் இன்றாயினும் வழக்கியலாற் கொள்பொருள் இதுவெனக் கூறுதல்; அது,

"பண்டியன் மருங்கின் மரீஇய பண்பே."
(தொ. சொ. வே. எ)

என்றாற்போல்வனவற்றான் அறிக. இனி,

"மீயென மரீஇய விடம்வரை கிளவியும்."
(தொ. எழு. உயி. சஅ)

என்புழி, மேலென்பது இலக்கணமென்று எடுத்தோதியதனை மரூஉவென்றமையின் அதுவும் அதன்பாற்படும்; என்னை? முத

1. நிறுத்தமுறைபற்றி என்றிருப்பது நலம். இஃது இவர் கருத்துப்போலும்.

2. விதந்து எண்ணி நிறுத்தல்—உயிர் பன்னிரண்டையும் இவையென எண்ணி நிறுத்தலும் கைக்கிளை முதலிய எழு திணையையும் இவையென எண்ணி நிறுத்தலும் ஆகும்.

3. உள்பொருளின்றாயினும் என்பது உள் பொருளன்றாயினும் என்றிருப்பது நலம். இயற்கையான பொருளல்லவாயினும் எனவே திரிபான பொருளாயினும் என்றபடி.

னூலுட் கொண்டவாறறிந்து மற்றதனைத்தான் இச்சொல் இன்ன வாறுயிற்றென்று இலக்கணங் கூறுது உடம்படுதலின். மற்றதனை இனமென்பதற்றுக்கு? இதுதானே பிறனுடம்பட்டது தானுடம்பட்டதாகாதோ முதனூலாசிரியன் உடம்பட்டதாகலினெனின்,—அற்றன்று; முதனூலாசிரியனைப் பிறனென்றுமையானும், முதனூலின்வழித்தாகிய நூலுள் அவன் உடம்பட்டதென்று உடம்படுமென்று உத்திவகையாற் கொள்ளாது முழுவதூஉங் கொள்ளுமாகலானும், அவ்வாய்பாடு கூறலாகாதென்பது.

இனி, முதனூன் மேலென்பது மீயென மரீஇயிற்றென்று விதந்தோதப்பட்டதனை அங்ஙனங் கூறுது மீயென மரீஇயிற்றென்று வாளாது கூறினமையின், அதனை இனமென்று கொண்டாமென்பது; எனவே ஈண்டுப் பிறனென்றது வழக்கினுள்ளோரை நோக்கியாயிற்று; என்னூர்க்கு, ஒழிந்த வழிநூலாசிரியரைப் பிறனென்றுனென்னுமோவெனின், — அவருடம்பட்டது உடம்பட்டதனுற் பயந்ததென்னை? முதனூலிற் பிறழாமை நூல் செய்யுமாயினென மறுக்க.

அல்லதூஉம் இசைநூலும் கூத்தநூலும்பற்றிப் பிறன்கோட் கூறலென்பதனுற் பிறனென்னினன்றி இயற்றமிழ்க்கண்ணே முதனூலாசிரியனைப் பிறனென்றுனென்பது; அஃதேல் வழக்குநூல் செய்வான் அவ்வழக்கினை வழங்குவாரைப் பிறனென்னுமோவெனின்,—இலக்கணமும் வழக்குமென இரண்டனுள் இஃது இலக்கணமாதலின் அவ்வழக்கினுள் வழங்குவாரைப் பிறனென்றல் அமையுமன்றோவென்பது; என்னூர்க்கு அவருடம்பட்டது உடம்படுதல் உத்திவகையென்பதெற்றுக்கு? அஃது இயல்பேயன்றோவெனின், — அங்ஙனம் [1] மரீஇயினும் இலக்கணமென்பது திரிபில்லாததாகலிற் றிரிபுபடும் வழக்கினை உடம்படுதல் இலக்கணமன்றாயினும் அது வழக்கினுள்ளார் வேண்டுமாற்றான் இலக்கணமேயாமென்பது கருத்து; அல்லாக்கால் 'எள்ளேபோல [2] எட்குப்பையுந் தன்தன்மையான் உள்பொருளாகலும்வேண்டும்' அன்றோவென்பது.

1. மரீஇயினும் இலக்கணமாமென்பது கருத்து எனமுடிக்க.

2. எட்குப்பை—எள்ளுக் கூடிக் குப்பையாதலின் திரிபெனலூர்.

(கச) [1] இறந்ததுகாத்தல் — முற் கூறியவோர் சூத்திரப் பொருண்மை பின்னொரு சூத்திரத்தான் விலக்குதல்; அது,

"பால்கெழு கிளவி நால்வர்க்கு முரித்தே." (தொ. பொ. டு)

எனக் கூறியபின்னர்,

"நட்பி னடக்கை யாங்கலங் கடையே." (தொ. பொ. சு)

என்றாற்போல விலக்குதல்.

நூற்புறனடையும் ஒத்துப்புறனடையும் அதிகாரப்புற னடையும்போல்வன அதற்கு இனமெனப்படும்; அவை,

"ஈறியன் மருங்கி னிவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லா
மெய்த்தகூப் பட்ட வழக்கொடு சிவணி
யொத்தவை யுரிய புணர்மொழி நிகூயே."

(தொ. எழு. களத)

எனவும்,

"புள்ளி யிறுதியு முயிரிறு கிளவியுஞ்
சொல்லிய வல்ல வேகூய வெல்லாம்." (தொ. எழு. உ0உ)

எனவும் வருவனபோல்வன.

(கடு) எதிரது போற்றல் — வருகின்ற சூத்திரப் பொருண்மைக்கேற்ப வேறொரு பொருண் முற்கூறுதல்: அது,

"ஈருரு புள்ளி யகரமொடு நிகூயும்." (தொ. எழு. தொ. கசு)

என வருகின்றதனை நோக்கி,

"ஆற னுருபி னகரக் கிளவி
யீரு ககரமுங்கெ டுதல் வேண்டும்." (தொ. எழு. ககடு)

எனக் கூறுதலும்,

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை." (தொ. சொ. உஉசு)

என வருகின்றதனை நோக்கித்,

"தன்மைச் சொல்லே யஃறிணைக் கிளவியென்
றெண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார்."

(தொ. சொ. சஅ)

என வழுவமைத்தலும் போல்வன.

இனி, ஒரு சூத்திரத்துள்ளே,

"ஈருரு புள்ளி யகரமொடு நிகூயும்." (தொ. எழு. ககசக)

என வருவதனை நோக்கிக் கூறிய,

"குற்றெழுத் திரட்ட விற்கூ." (தொ. எழு. தொகை. ககசு)

என்றல் அதற்கு இனமெனப்படும்.

---

1. இறந்தது—விதியைக் கடந்து வருவது. எனவே விதித்த சூத்திரப் பொருளைக் கடந்து வருவதைக் காப்பது என்றுயிற்று.

(கசு) மொழிவாமென்றல்—ஒரு பயனேக்கி முற் கூறுது மென்றல்: அவை,

"உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்,"

(தொ. எழு. மொ. உ)

எனவும்,

"கடப்பா டறிந்த புணரிய லான." (தொ. எழு. மொ. ச)

எனவும்,

"அவ்வே,
இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப."

(தொ. சொ. கஉக)

எனவும் வரும்.

இங்ஙனங் கூறியதனாற் பயன், குற்றுகரவீற்றுக்க ணன்றிப் புணர்மொழிக் குற்றிகாமின்றென்பதூஉம், இனிப் புணர்மொழிக் குற்றிகரம் பெருவரவிற்றென்பதூஉம் அறிவித்த லாயிற்று.

"அவ்வே,
இவ்வென வறிதற்கு மெய்பெறக் கிளப்ப."

(தொ. சொ. கஉக)

என்பதூஉம்,

[1] "அவ்விளி யேலா." (தொ. சொ. கஉசு)

என்றதூஉம் அவ்விளியிலக்கணமென்றற் பயம்பட வந்தது.

ஈற்றுப் பொதுவினில் விளியேற்குமென்று ஓதப்பட்ட பெயருள் இவை விளியேலாவென விளிவிலக்கல் வேண்டுதலா னும், [2] நீ வாராயென்பது இயல்புவிளியன்றென விலக்குதலும் விளியிலக்கணமேயாதலானுமென்பது. இனி,

"மெய்பெறக் கிளந்து பொருள்வரைத் திசைக்கு
மைகார வேற்றுமைத் தெரிபென மொழிப."

(தொ. எழு. தொகை. கடு)

எனவும்,

"மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னு மொற்று கும்மே."

(தொ. எழு. தொகை. க)

---

1. விதியன்றி விலக்கும் இலக்கணமாம் என்றபடி. "அவ் விளி யேலா" என்று சூத்திரமில்லை. ஆதலால் "தாம் விளி கொள்ளா" என்றதை மாறி எழுதினர்போலும்.

2. நீ என்பது முன்னிலைப் பெயரேயன்றி இயல்பு விளி யன்று என்றபடி.

எனவும் வருவன அதன்பாற்படும்; என்னை? [1]அவையும் முன்னர்ப்போய் மொழிவனவற்றை அவாவி நின்றமையினென்பது.

(கஎ) கூறிற்றென்றல்—முற்கூறியதோர் இலக்கணத்தினை மற்றொரு பொருட்கும் விதிக்கவேண்டியவழி, அவ்விலக்கணத்தினை மீட்டுங் கூறுது மேற்கூறியவாற்றானே கொள்கவென்பான் அவை கூறினுமென்று நெகிழ்ந்துபோதல்: அவை,

"கைக்கிளை முதலா வெழுபெருந் திணையு
முற்கிளந் தனவே முறைநெறி வகையின்."
(தொ. பொ. சகூஎ)

எனவும்,

"எண்வகை யியனெறி பிழையா தாகி
முன்னுறக் கிளந்த முடிவின தாயினும்." (தொ. பொ. ருகஎ)

எனவும் வரும். இவை அகப்பொருட்கும் புறப்பொருட்கும் ஓதிய இலக்கணஞ் செய்யுளுள்ளும் அவ்வாறெய்துவித்தவாறுயிற்று.

"முதலெனப் படுவ தாயிரு வகைத்தே." (தொ. பொ. கஎ)

எனவும்,

"மெய்பெறு மவையே கைகோள் வகையே."(தொ. பொ. ரூஅ)

எனவும்,

"மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்."(தொ. பொ. ஈகசு)

எனவும் வருவன அதற்கு இனமெனப்படும்; என்னை? கைக்கிளை பெருந்திணைக்கும் இவையே முதலென்றலானும், திணையுங் கைகோளும்போல்வன புறப்பொருட்கும் கோடற் பயன்படவைத்தமையானும், முற்கூறிய [2]மாத்திரையும் [3]எழுத்தும்

1. அவையும் முன்னர்ப்போய் மொழிவனவற்றை அவாவி நின்றன என்றது அகத்தோத்துட் கூறுஞ் சிறப்பு விதிகளை அவாவிநின்றன என்றபடி. அகத்தோத்து என்றது அகச்செய்கை கூறும் உயிர்மயங்கியல் புள்ளிமயங்கியல்களை. அவற்றுள், "மரப் பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே" என்னும் (உயிர் மய. கரு-ம்) சூத்திரத்தையும், "அல்வழி யெல்லா மெல்லெழுத் தாகும்" என்னும் (புள்ளி. ககூ-ம்) சூத்திரத்தையும், "மெல்லெழுத் தியற்கை.....கும்மே" (தொ. கை. க) என்னும் சூத்திரம் அவாவி நின்றது. ஏனையதையும் அவ்வாறே அறிந்துகொள்க.

2. மாத்திரை வேறுபடுதல், செய்யுளியலில் வரும் "குறிலினை யுகர மல்வழியான" என்பதாலும் "எழுத்தள வெஞ்சினும்" என்ற சூத்திரத்தாலும் பிறவற்றானும் பெறப்படும்.

3. எழுத்து வேறுபடல்—செய்யுட்கேற்பப் பதினைந்தாக வகுத்துக் கோடல்.

பிறவாற்றாற் செய்யுட்குப் பயன்படுமாற்றான் வேறுபட்டதல்லது அவை மேற்கூறிய மாத்திரையும் எழுத்துமே என்றமையானுமென்பது.

(கஅ) தான்குறியிடுதல்—உலகு குறியின்றித் தன்னூலுள்ளே வேறு குறியிட்டாளல்: அவை,

[1]உயர்திணை அஃறிணையெனவும், கைக்கிளை பெருந்திணையெனவுஞ் சொல்லிற்கும் பொருளிற்கும் வழக்கியலானன்றி ஆசிரியன் தானே குறியிடுதல். வண்ணச் சினைச்சொல், முற்று வினைச்சொல்லென [2]ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவும், வினையெஞ்சுகிளவியும் பெயரெஞ்சுகிளவியுமென்று ஆண்டு,

"ஆயீ ரைந்து
நெறிப்படத் தோன்று மெஞ்சுபொருட் கிளவி."
(தொ. சொ. சஈ0)

எனக் குறியிடுதலும் அது.

"இரண்டா குவதே
யெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி."
(தொ. சொ. எஉ)

எனவும்,

"மூன்றனு மைந்தனுந் தோன்றக் கூறிய
வாக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி." (தொ. சொ. கூஈ)

எனவும் [3]பெயர்கொடுத்தல் அதற்கு இனமெனப்படும்.

(ககூ) ஒருதலையன்மை—

"வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகும்."
(தொ. எழு. உஈடு)

என விரித்தாற்போலாது இலக்கணங் கூறி ஒழிதல்: அது,

1. உயர்திணை அஃறிணையென்று சொல்லிற்கும், கைக்கிளை பெருந்திணையெனப் பொருளுக்கும் நிரனிறையாகக் கொள்க.

2. ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்தல் என்றார், அச்சூத்திரங்களிலன்றிப் பின் அக்குறியை எடுத்தாளாமையின். 'வாராததனன் வந்தது முடித்தல்' என்பதனுரை பார்க்க.

3. இரண்டாவது என்றும் ஏதுக்கிளவி என்றும் பெயர் கொடுத்தல் குறியீடாம் இனமென்றது, வேற்றுமைப் பொதுச் சூத்திரத்துப் பெயர் கொடாது சிறப்புச் சூத்திரத்துப் பெயர் கொடுத்தமையானும் மயக்கச் சூத்திரத்து ஏதுக்கிளவி எனப் பெயர் கொடுத்தமையானும் இவ்வாயின என்றபடி.

"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே."
(தொ. எழு. நஅ)

என்றக்கால் யாண்டும் [1] ஒருதலையாக வாராது, வருஞான்று வருவது ஆண்டென்று கொள்ளவைத்தல்.

இனிச் சொல்லோத்தினுள் வேற்றுமையென்று ஓதப்பட்ட எட்டனுள் எழுவாய் வேற்றுமையினையும் விளிவேற்றுமையினையும் வேற்றுமையென்னுது எழுத்தோத்தினுள் அல்வழியென்றல்போல்வன அதற்கு இனமெனப்படும்.

(உ0) முடிந்தது காட்டல் — சொல்லுகின்ற பொருட்கு வேண்டுவனவெல்லாஞ் சொல்லாது தொல்லாசிரியர் கூறினு மென்று சொல்லுதல்:

அஃது, 'ஒன்றறிவது உற்றறிவது' என்றற்கும், 'இரண்டறிவது உற்றுஞ் சுவைத்தும் அறிவது' என்றற்கும் முறைமையாற் சூத்திரஞ் செய்வான் அவை அவ்வாறுதற்குக் காரணங் கூறுது,

"நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."
(தொ. மர. எஉ)

என முடிந்தது காட்டல்.

"நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே."
(தொ. எழு. நூன். எ)

என்றற்போல்வன அதற்கு இனமெனப்படும்,

(உக) ஆணை கூறல்—இவ்வாசிரியன் கருத்து இதுவெனக் கொள்ளவைத்தல். அது,

"அம்மி னீறுதி கசதக் காலை
தன்மெய் திரிந்து ஙஞந வாகும்." (தொ. எழு. கஉக)

எனக் கருவியோத்தினுட் சாரியை மகரம் பகரவருமொழிக்கண் திரியாதென்றுபோய்ச் செய்கையுள் வல்லெழுத்தினது [2] இயற்கைமெல்லெழுத்தாதல் அறிவித்தற்கு 'அல்வழியெல்லா

1. ஒருதலை—நிச்சயம். குறியதன் முன்னர் வரும் உயிரொடு புணர்ந்த வல்லெழுத்தாறன்மேலெல்லாம் ஆய்தம் வருதல் நிச்சயமன்று என்றபடி.

2. இயற்கை மெல்லெழுத்து என்றது அம்மகரம் பகரத்தின் இயற்கை மெல்லெழுத்தாதலின் திரிபுவிதி வேண்டியதில்லை. அது "அல்வழியெல்லாம்—ஆகும்" என்றதனால் அமையும்.

மெல்லெழுத்தாகு' மெனச் சொல்லுதல்போல்வன. ஙஞந ஆதற்கும் இஃதொக்கும்.

"ஓம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த லென்மனார் புலவர்."(தொ. சொ. நகசு)

என்றற்போல்வன அதற்கு இனமெனப்படும்.

மற்றுத் தன்கோட் கூறலொடு இதனிடை வேற்றுமை யென்னையெனின்,— [1] அது [2] தந்திரஞ் செய்யும் பகுதிக்கண்ணது; இஃது அன்னதன்றிப் புணர்ச்சிக்கட் சிறப்புடைய நிலை மொழி [3] வருமொழிக்குத் திரிபுபோலாதென்று [4] கருவியாகிய இடைச்சொற்காயின் இத்துணையமையுமென்று ஆணைசெய்தலின் அப்பெயர்த்தாயிற்று.

(உஉ) பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்—ஒரு சூத்திரத்துட் பயந்த சொற்றொடர் பலபொருட்கு ஏற்றதாயினும் நல்லது கொள்கின்றுரெனக் கருதி அவ்வாறு செய்தல்: அவை,

"ஒருவ ரென்னும் பெயர்நிலைக் கிளவி
யிருபாற்கு முரித்தே தெரியுங் காலை." (தொ. சொ. ககநக)

என்றவழி, ஒருவரென்பதொருசொல் தன்கண்ணே [5] இருபாலாரையுந் தழீஇ நிற்குமெனவும், அது கருவியாக இருபாலாரையும் சொல்லப்படுமெனவுங் கவர்த்தவழி,

"தன்மை சுட்டிற் பன்மைக் கேற்கும்." (தொ. சொ. ககூச)

என்பதனோடு படுத்துநோக்க, இருபாலாரையும் ஒருசொல் தன்கட்டழீஇ நிற்றலே நல்லதென்று கொள்ளவைத்தல்.

"நும்மெ னீறுதி யியற்கை யாகும்." (தொ. எழு. கஅள)

என்புழி, எழுத்து விகாரமுடையதனைக் களைந்து சாரியைக் கண்ணே [6] இயற்கை கோடலும் அதன்பாற்படும். [7] இதனை

1. அது—தன்கோட் கூறல்.

2. தந்திரம்—நூல்.

3. வருமொழித் திரிபுபோலாதென்றிருப்பது நலம். அல்லது பிறவாறுமிருக்கலாம்.

4. கருவி என்றது அம் சாரியையை.

5. ஆண் பெண் என்னும் இருபாற்கும் பொதுவாய் இருபாலையுந் தழுவல்.

6. இயற்கைகோடல் என்றது, எழுத்து விகாரப்படாது இயல்பாம் என்று பொருள் கொள்ளாது சாரியை பெறுது இயற்கையாம் என்று பொருள்கோடலே.

7. இதனை—இவ்வுத்தியை.

ஏற்புழிக் கோடலெனவும், ஒருபுடைச் சேறலெனவுஞ் சொல்லுப.

(உஉ) தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்—ஒரு வாய்பாடு எடுத்தோதப் பல வாய்பாடு அதற்கு வந்து [1] பூணுமென்று வகுத்துக் கொள்ளவைத்தல். அது,

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
வவ்வகை யொன்பதும் விகுதியெஞ்சு கிளவி."
(தொ. சொ. உஉ○)

எனவும்,

"காப்பி னேப்பி னூர்தியி னிழையின்." (தொ. சொ. எஉ)

எனவும் ஒரு வாய்பாடு தொகுத்து ஓதியவாற்றானே பல வாய்பாடு வகுத்துக் கொள்ளவைப்பதென்பது. செய்தென்பதனை,

"நக்கு, வந்து, கண்டு, நின்று, பாடி, போய்"

எனப் பலவாக்குதலும், மூற்று வாய்பாடு பலவுமாக்குதலும், இனிக் 'காப்பின்' என்றவழி,

"புரத்தல் புறந்தர லோம்புதல் போற்றல்."

எனப் பலவாக வகுத்தலுங் கண்டுகொள்க.

"உருவென மொழியினும்." (தொ. சொ. உச)

என்றலுப்,

"இதன இது விற்று." (தொ. சொ. ககக)

என்றலும்போல்வன அதற்கு இனமெனப்படும்.

(உசு) [2] மறுதலை சிதைத்துத் தன்றுணி புரைத்தல்—ஒரு பொருளினை ஒருவன் வேறுபடக் கொள்வதோர் உணர்வு தோன்றியக்கால் அவ் வேறுபாட்டினை மாற்றித் தான் துணிந்தவாறு அவற்கும் அறிவுறுத்தல். இது மறுதலை சிதைத்தலுடைமையின் வாளாது தன்கோட் கூறலின் அடங்காதாயிற்று.

உதாரணம்:

"மூவள பிசைத்த லோரெழுத் தின்றே." (தொ. எழு. ரு)

எனவும்,

1. பூணல்—அகப்படல்.
2. மறுதலை—எதிர்க்கொள்கை.

"நீட்டம் வேண்டி னவ்வள புடைய" (தொ. எழு. கூ)

எனவும்,

"குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்."
(தொ. எழு. சக)

எனவும் [1] மூன்றுமாத்திரையான் ஓரெழுத்து உண்டென்பாரை விலக்கி வழக்கியலான் இல்லையென்று தன்றுணிபு உரைத்தவாறு.

உயிர்மெய் வேறெழுத்தன்றென்பான்,

"புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவரு வாகி யகரமோ டுயிர்த்தலும்." (தொ. எழு. கள)

எனவும்,

"மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே." (தொ. எழு. கஅ)

எனவும் வேறுபடாது கூறுதலும் அது.

வழக்கினுள் அறியாதார்மாட்டு ஒன்றுபோல இசைப்பன வாயினும் அன்றென்று கூட்டமுணர்த்தினமையின்,

"மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினு
மெழுத்திய றியா."
(தொ. எழு. ருஉ)

என்றலும் அதன்பாற் சார்த்தி யுணரப்படும்; பிறவும் அன்ன.

(உரு) பிறன்கோட் கூறல்—தன்னூலே பற்றுகப் பிறனூற்கு வருவதோர் இலக்கணங்கொள்ளுமாறு கூறுதல்: அது,

"அரையளபு குறுகன் மகர முடைத்தே
யிசையிட னருகுந் தெரியுங் காலை."
(தொ. எழு. கஉ)

எனவும்,

"அளபிறந் துயிர்த்தது மொற்றிசை நீடலும்
.....
நரம்பின் மறைய வென்மனார் புலவர்."
(தொ. எழு. ஙஉ)

எனவும்,

"பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானென் கென்ப."

எனவும் [2] இவை அவ்வந் நூலுட் கொள்ளுமாற்றான் அமையுமென்றவாறுயின.

"அளபிற் கோட லந்தணர் மறைத்து." (தொ. எழு. கoஉ)

1. ஓரெழுத்தே அளபெடுக்குமென்பார் தொல்காப்பியர் காலத்து முளர்போலும். பிற்காலத்து நேமிநாத நூலாரும் நன்னூலாரும் அவ்வாறு கூறுவர்.
2. இவை என்றது இசைத்தமிழையும் நாடகத்தமிழையும் குறித்தன.

என்பது அதற்கு இனமெனப்படும்; என்னை? [1]அவர் மதம் பற்றி இவர் கொள்வதோர் பயனின்றுகலினென்பது.

(உசு) அறியாதுடம்படல் — தாமுணுதிய இலக்கணத்தின் வேறுபட வருவன தான் அறிந்திலனுகக் கூறி அதன்புறத்துச் செய்வதோர் புறனடை; அவை,

"கிளந்த வல்ல வேறுபிற தோன்றினுங்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே."
(தொ. சொல். ககசு)

எனவும்,

"வருவவுள் வெனினும் வந்தவற் றியலாற்
றிரிவின்றி முடித்த றெள்ளியோர் கடனே"
(தொ. பொ. நருடு)

எனவும் வரும்.

இறந்தது காத்தலோடு இதனிடை வேற்றுமை என்னை யெனின்,—இறந்ததென்பது தான் துணிந்து சொல்லப்பட்ட பொருளாகல்வேண்டும்; இஃது அன்னதன்றிச் சொல்லப் படாத பொருண்மேற்றுகி அதுவுந் தான் துணியப்படாத பொருளாகித் தான் நூல்செய்தகாலத்தே உள்ளவற்றுள் ஒழியப் போயின உளவாயினுங் கொள்கவென்பான், வேறு பிற தோன்றினும் எனவும்; வருபவுளவெனினும் எனவுந் தேறுது அதன் ஐயப்பாடு தோன்றச் சொல்லுதலின் இது வேறென்க. முழு துணர்ந்தார்க்கல்லது பழுதறச் சொல்லலாகாமையின் [2]இஃது அவையடக்கியல்போல்வதோர் உத்தியெனக் கொள்க.

"குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டனு
மறியத் தோன்றிய நெறியிய லென்ப." (தொ. எழு. ககூ0)

எனவும்,

"செல்வழி யறிதல் வழக்கத் தான." (தொ. எழு. நகஉ)

எனவும் வருவன அதற்கு இனமெனவுணர்க.

(உஎ) பொருளிடையிடுதல்—[3]வேற்றுமைப் பொருளினைச் சொல்கின்ற பொருண்மைக்கிடையே பெய்து சொல்லுதலும், சொல்கின்ற பொருட்கு இயைபுடையதனை ஆண்டுச் சொல்லாது

1. அவர்—அந்தணர்.

2. இஃது—அறியாதுடம்படல்.

3. வேற்றுமைப்பொருள் — வேறுன பொருள். சம்பந்த மில்லாதது.

இடையிட்டுப் போய்ப் பிறிதொருவழிச் சொல்லுதலும்போல் வன; அவை,

"முறைப்பெயர்க் கிளவி யேயொடு வருமே."
(தொ. சொ. விளி. ககூ)

என்றுற்போலச் சொல்கின்ற உயர்திணைப் பெயரிடை விரவுப் பெயர் பெய்துரைத்தலும், வழுவமைக்கின்ற கிளவியாக்கத் துள் ஒதாது எச்சவியலுட் போக்கி,

"அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்."
(தொ. சொ. எச். சசூ)

எனச் சொல்லுதலும்போல்வன.

"தானென் பெயருஞ் கூட்டுமுதற் பெயரும்
யானென் பெயரும் விஞவின் பெயரு
மன்றி யகனத்தும் விளிகோ ளிலவே." (தொ. சொ. கஉகூ)

என்றவழி, [1]தானென்னும் விரவுப் பெயரினை இடைப்பெய்து விலக்குதலும், வேற்றுமைக் கிளவியோத்தினுட் கூறுது எஞ்சி நின்ற வேற்றுமைத்தொகை முதலிய எச்சங்களை எச்சவியலுட் சொல்லுதலும்போல்வனவும் அதன்பாற் சார்த்தியுணர்க.

(உஅ) எதிர்பொருளுணர்த்தல்—தான் கூறிய இலக்கணத் திற் சில பிற்காலத்துத் திரிபுபடினும் படுமென்பது, முதற் கால முதனூலுங் கொண்டுணர்ந்த ஆசிரியன் எதிர்காலத்து வருவது நோக்கி அதற்கேற்றதோர் இலக்கணங் கூறிப்போதல்.

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி யொன்பஃ தென்ப
புகரறக் கிளந்த வஃறிணை மேன."
(தொ. எழு. அஉ)

என்று ஓதிய இலக்கணத்துச் சில பிற்காலத்துக் குறையவரு தல் எதிர்பொருளெனப்படும். அதனைத் தான் உணர்ந்து,

"கடிசொ லில்லீக் காலத்துப் படினே."
(தொ. சொ. எச். நுசூ)

என்று கூறவே, முற்கூறிய பொருளினை வற்புறுத்தலாம் அது வென்பது. இங்ஙனந் திரிபுபடுதல் அறிந்தே கூறுதலானும் எதிர்பொருளாகலானும் இஃதறியாது உடம்படுதலி னடங்கா தாயிற்று.

1. உயர்திணை விரவுப்பெயரை உயர்திணைப் பெயரோடு கூட்டி விளிக்குமாறு ஓதப்பட்டமையின் இதனையும் விலக்கினர் என்பர் சேனவரையர்.

"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னரையர் யாத்தனர் கரணம்."

என்பதூஉம் அதன்பாற்படும்.

(உசு) சொல்லி னெச்சஞ் சொல்லியாங் குணர்த்தல் — சொல்லினுற்றலாற் பெறப்படும் பொருளினையும் எடுத்தோதி யாங்குக் கொள்ளவைத்தல்; அஃது,

"எஞ்சிய வெல்லா மெஞ்சுத லில." (தொ. எழு. மொ. சச)

என்புழி, எல்லாமென்பதனை [1] எச்சப்படுத்தற்காகாதன இருபத்தாறு கொண்டவழியும் அதனை [2] எடுத்தோதிற் சிறப்பின்றென்று கொள்ளற்க என்பது இதன் கருத்து.

எச்சவியலுட் கூறிய பொருள் [3] அகத்தோத்துக் கூறிய பொருளோடு ஒப்பக் கூறுதலும் அதன்பாற்படும்.

'மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்த'லொடு இதனிடை வேற்றுமையென்னையெனின்,—அஃது, எடுத்தோதப்பட்ட பொருட்கண்ணதெனவும், இஃது எடுத்தோத்திலோடு ஒக்கும் எச்சப்படவைத்துக்கொள்ளும் இலக்கணங்களெனவும் அதனோடிதனிடை வேற்றுமையுணர்க.

(ஊ) தந்து புணர்ந்துரைத்தல் — உள்பொருளல்லதனை உளபோலத்தந்து கூட உணர்த்தல்; அவை,

"அளபெடை யசைநிலை யாகலு முரித்தே." (தொ. செ. கள)

எனவும்,

"குறினீண் டிசைக்கு மல்வழி யான." (தொ. செ. ரு)

எனவுங் கூறுங்கால் அளபெடையினை எழுத்துப்போலவுங் குற்றுகரத்தினைக் குற்றெழுத்துப்போலவும் ஓதுதல்போல்வன.

1. எச்சப்படுத்ததற்காகாத என்பதில் தகரம் விடப்பட்டது. எச்சப்படுத்து—அதற்காகாத எனப் பிரிக்க. அதற்கு—ஈறுதற்கு. எச்சம்—எஞ்சிநிற்கும் பொருள். அதற்காகாதன இருபத்தாறு என்றது, இருபத்தாறு எழுத்து ஈறுய் வராதன. அவையும் தம்பெயர் கூறின் ஈறும் என்பது எல்லாம் என்பதாற் கொள்ளப்பட்டது. எச்சப்படுத்து ஈறுகாதன எலவும் பாடம். அது நன்கு பொருந்தும்.

2. எடுத்தோதின்—தம்பெயர் கூறின்.

3. அகத்தோத்து—பெயர் வினை முதலிய இயல்.

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்."
(தொ. எழு. புண. உ)

எனவும்,

"மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்."
(தொ. எழு. புண. ஈஎ)

எனவும் மேற்கூறிய புள்ளியினையே ஒருபயனேக்கி மீட்டும் புள்ளிபெறுமெனக் கூறுதல் அதற்கு இனமெனப்படும்.

"குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல."
(தொ. எழு. ரூ0)

என்பதேபற்றி,

"நெடியதன் முன்ன ரொற்றுமெய் கெடுதலும்."
(தொ. எழு. தொகை. கஅ)

என்புழித் [1] தொடர்மொழியையே நெட்டெழுத்தாக்கிக் கோடலும் அது.

(ஊக) ஞாபகங் கூறல்—சூத்திரஞ் செய்யுங்கால் அதற்கு ஓதிய இலக்கணவகையானே சில்வகையெழுத்தின் செய்யுட்டாகவும் நாடுதலின்றிப் பொருணனி விளங்கவும் செய்யாது அரிதும் பெரிதுமாக நலிந்து செய்து மற்றதனானே வேறு பல பொருளுணர்த்தல்; அது,

"மெய்பெறு மரபிற் றொடைவகை தாமே
.....உணர்ந்திசி னோரே." (தொ. செ. கoக)

என வருதல். இதனைற் கொண்ட பொருண்மையில்லாஞ் செய்யுளியலுட் காட்டப்பட்டன.

"எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
யக்கி னிறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே."

என்றாற்போல்வன அதற்கு இனமெனப்படும்; பிறவும் அன்ன.

(ஊஉ) உய்த்துக்கொண்டுணர்தல்—ஒருவழி ஒரு பொருள் சொல்லியக்கால் அதன்கண்ணே மற்றொரு பொருளினையுங் கொணர்ந்து கொண்டறியுமாறு தோன்றச்செய்தல்: அவை,

"நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றார்ந்தே." (தொ. எழு. ஈசு)

1. தொடர்மொழி—புகர் புகழ் போல்வன.

என இடனும் பற்றுக்கோடும் கூறி அதனன் ஈறு ஆக்கங் கோடலும்,

"குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி
னெற்றிய நகரமிசை நகரமொடு முதலும்."
(தொ. எழு சூஎ)

என முதலாக்கங் கூறியதனானே இடனும் பற்றுக்கோடும் அதுவேயெனக் கோடலும்போல்வன.

பெயர் வினைக்கு ஓதிய இலக்கணம், ஒழிந்த சொற்குஞ் செவ்வனஞ் செல்லுமென்று கோடல் அதற்கு இனமெனப் படும்; பிறவும் அன்ன.

மற்று நுதலியதறிதலொடு இதனிடை வேற்றுமையென்னை யெனின்,—அது [1] வாளாது பயமில கூறியதுபோலக் கூறிய வழி இவ்வாறு கூறியது இன்ன கருத்துப்போலுமென்று அறிய வைத்தலும், உரைவகையானும் நுதலியதறியச் சொல்லுதலு மாம்; இஃது, அன்னதன்றி அச்சூத்திரம் தன்னுன் ஒரு பொருள் பயந்ததன்றிலியும் பின்னொருபொருள் பெறவருதலின் இது வேறென்பது.

மற்று ஞாபகங் கூறலொடு இதனிடை வேற்றுமையென்னை யெனின், — பயமில்லதுபோலவும் அரிதும் பெரிதுமாகவும் இயற்றி எளிதுஞ் சிறிதுமாக இயற்றுது சூத்திரஞ் செய்தல் வேறுபாடே [2] நிமித்தமாகத் தோற்றிக்கொள்வதோர் பொருள் பெறவைத்தலின் இதுவும் வேறெனப்படுமென்பது.

மெய்ப்பட நாடிச் சொல்லிய அல்ல பிற அவண் வரினும்—உய்த்துக்கொண்டுணர்தலொடு மேற்கூறிய முப்பத்திரண்டும் இச் சூத்திரத்துள் எடுத்தோதிய பொருள்வகையான் ஆராய்ந்து சொல்லப்பட்டனவன்றே? அங்ஙனஞ் சொல்லாதன பிறவும் இந்நூலுள் வரினும்; சொல்லியவகையாற் சுருங்க நாடி—உத்திவகையென வகுத்துக்கொண்டு ஓதிய முப்பத்திரண்டு பகுதியான் அடங்குமாறு ஆராய்ந்து; மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு—ஓதப்பட்ட உத்தி பலவும் ஒருங்கு வரினும் உள்ளத்தால் தெள்ளிதின் ஆராய்ந்து மயக்கந்தீர

1. வாளாது—ஒருபயனுமின்றி.
2. நிமித்தம்—ஏது.

வேறுவேறு தெரிந்து வாங்கிக்கொண்டு; இனத்திற் சேர்த்தி உணர்த்தல்வேண்டும் — முப்பத்திரண்டற்கும் ஏற்றவகையான் இனஞ் சார்த்தி மற்றவற்றை இன்னது இதுவெனப் பெயர் கூறல்வேண்டும், அங்ஙனந் தொகை நின்றவழியும் வேறுவேறு கொண்டு; நுனித்தகு புலவர் கூறிய நூலே—தலைமைசான்ற ஆசிரியராற் கூறப்பட்ட நூல் என்றவாறு.

எண்ணிய முப்பத்திரண்டுமல்லன தோன்றினும் அவற் றுள் அடக்கி, [1] அவைதாம் ஒருங்கு வரினும் வேறு தெரிந்து இனந்தொறுஞ் சேர்த்துதலே அவாவி நிற்கும் ஈண்டு ஓதிய நூலென்பது கருத்து.

சொல்லியவல்ல பிற அவண் வருமாறும், அவை சொல் லியவகையாற் சுருங்கநாடி இனத்திற் சேர்த்துமாறும் மேற் காட்டப்பட்டன.

இனி, ஒருங்கு பலவுத்தி வந்தவழி உள்ளத்தால் தெள் ளிதினெண்ணித் தெரிந்துகொண்டு இனத்திற் சேர்த்துதல் வருமாறு;

"அன்ன பிறவுங் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வருஉ
மூரிச்சொ லெல்லாம் பொருட்குறை கூட்ட
வியன்ற மருங்கி னெனைத்தென வறியும்
வரம்புதமக் கின்மையின் வழிதனி கடைப்பிடித்
தோம்படை யாணையிற் கிளந்தவற் றியலாற்
பாங்குற வுணர்த்த லென்மனார் புலவர்."(தொ. சொ. நகூசு)

என்றவழி,

"அன்ன பிறவும் கிளந்த வல்ல
பன்முறை யானும் பரந்தன வருஉ
மூரிச்சொல்."

என்பது, இறந்தது காத்தலாம்; என்னை? இசையுங் குறிப் பும் பண்புமேயன்றிச் [2] சீர்த்தியும் [3] புனிறும்போல்வன வேறும் உள எடுத்தோதப்பட்டன எனவும், எடுத்தோதாது இசையுங் குறிப்பும் பண்புமன்றிச் சேணெண்றுங் தொறுவென்றும் வரு வன உளவென்றுங் கூறினமையின்.

1. அவைதாம்—அம்முப்பத்திரண்டு உத்திகடாம்.
2. சீர்த்தி—மிகுபுகழ்.
3. புனிறு—ஈன்றணிமை. } இவை பண்புளடங்கும்.

'வரம்புதமக் கின்மையின்' என்பது, எதிர்பொருளுணர்த்தலும் அறியாதுடம்படலுமாம். 'ஓம்படை யாணை' என்பது ஆணை கூறலாம். இங்ஙனம் ஒரு சூத்திரத்துட் பல வந்தவழி ஒன்றே உத்தியென்றுணராது மனத்தினெண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இவ்வாற்றுன் இனத்திற் சேர்த்துக என்றுன் ஆசிரியனென்பது.

"மரபுநிலை திரியா மாட்சிய வாகி
யுரைபடு நூரு மிருவகை நிலைய."

என்பது முதலாக இத்துணையும் வழக்குநூலிலக்கணங் கூறினுன், எழுநிலத்தெழுந்த செய்யுளின் [1] இதுவும் ஒன்றுகலின் இதனைச் செய்யுளியலிற் [2] கூறினுன், ஈண்டு மரபு கூறும்வழி ஒழிந்த செய்யுட்குப்போலாது, நூலிற்குப் பொருட்படையாகிய யாப்புக் குற்றங்களும் உத்திவகையுங் கூறல்வேண்டுதலிற் கூறினு னென்பது. அங்ஙனங் கூறுக்காற் 'பாட்டின் மரபு' [3] கட்டுரை போலவும்,

"கட்டளை [4] அரங்கின்றி வட்டா டியது"

போலவும் வரம்பின்றி வேண்டியவாறு நூல்செய்தல் விலக்கின்றுவான் செல்லும்; செல்லவே எழுசீராஞகிய முடுகியலடியானும், எத்துணையும் நீண்டதோர் வஞ்சிப்பாட்டானும் பிறவும் வேண்டியவாறுஞ் சூத்திரஞ் செய்தலும், ஒருவன் பெயரினை அவ்வச் சூத்திரச் செய்யுளுட் [5] சார்த்துவகையாற் பெய்து கூறலும், உணர்த்தப்படும் பொருளினை முதனூலுட் கிடந்தவாறுபோலாது மரபுநிலை திரியச்செய்தலும், நால்வகை யாப்பொடு மாறுபடச் செய்தலும், வேண்டியவர் வேண்டியவாற்றுற் சில பொருள்களை வேறு தோற்றிக்கொண்டு நூல்செய்தலும் விலக்கின்றுகல் படுமென்பது.

---

1. இதுவும்—நூலும்.
2. கூறினுன்—பெயர்.
3. கட்டுரை—வாக்கியம்.
4. "அரங்கின்றி வட்டாடியற்றே" என்ற குறள் நோக்குக.
5. சார்த்துவகையாற் கூறல் என்பது, முன் குற்றத்து (கசுஙு) "வரிவளைப் பணைத்தோண் மடநல் லோயே" என்றுற் போல இயைபில்லன கூறல் என்று இவரே கூறலின் அதனைக் குறித்ததுபோலும்.

இனி, உத்திவகையும் அவ்வாறே இன்றியமையாதனவெனப்படும். என்னே? உணர்த்தப்படும் பொருள் இதுவென்று அறிவித்தலும், எழுத்துச் சொற்பொருளெனப் பகுத்துக்கொண்டு அதிகாரஞ் செய்தலும், உணர்வு புலங்கொள்ளுமாற்றுல் தொகுத்துக்காட்டலும், மற்றவற்றை வகுத்துக்காட்டியவழிப் பயமில கூறலென்று கருதாமல் அதுதன்னு னேர்பயம்படச் செயதலும், முதனூலாயினவெல்லாம் நூற்பொருளுணர்தற்குக் கருவியுஞ் சூத்திரச் சுருக்கத்துக்கேதுவாகலும் உடைமையின் அவையும் வேண்டப்பட்டனவென்பது.

இனி, அவற்றை இத்துணையென வரையறுக்கால் எத்துணையும் பலவாகி இகந்தோடுதலும், வழிதான் முதனூல்வழித்தன்றுகலும்படும். முப்பத்துமூன்றெழுத்தென்றுயினும் அப்பெற்றித்தன்றி [1] அறுபத்தாறுகக் கொள்ளவைத்தானென்று உத்தி கூறலும் உடம்படுவானுதல் செல்லுமென மறுக்க.

இனி, 'நுனித்தகு புலவர் கூறிய நூல்' என்றதனுனே, பாயிரச்செய்யுளுஞ் சூத்திரச்செய்யுளும் ஆசிரியப்பாவும் வெண்பாவும் பெற்றுவருதலும் அவ்விருபாவும் பெற்றுவருதலும், பாட்டுப்போல எல்லாவுறுப்பும் பெறுதற்குச் செல்லாவென்பதூஉம், மாத்திரை முதலாகப் பாவீறுகவந்த பதினெண்ணும் வண்ணங்களுள் ஏற்பனவும் கொள்ளினுங் கொள்ளுமெனவும் யாப்புறுப்புக் கொள்ளுங்கால் ஈண்டோதிய மரபுங் கொள்ளப்படுமெனவுங் கொள்க. உரைக்குங் காண்டிகைக்கும் இவற்றுள்ளும் ஏற்பன அறிந்துகொள்க.

இன்னும் 'நுனித்தகு புலவர்' என்றதனுனே [2] தந்திரமும் சூத்திரமும் விருத்தியுமென மூன்றும் ஒருவரேயன்றி ஒன்று ஒருவர் செய்தலும், இரண்டு செய்தலும் பெறப்படுமென்றலும், ஒருசாலை மாணுக்கரும் தம்மாசிரியரும் தம்மிடை நூல்கேட்ட மாணுக்கரும் பாயிரஞ்செய்யப் பெறுபவென்றலும், பொதுப்பாயிரமும் சிறப்புப்பாயிரமுமென அப்பாயிரந்தாம்

---

1. அறுபத்தாறு—ஒலிவடிவு 33; வரிவடிவு 33;—ஆக 66 என்பது கருத்துப்போலும்.
2. தந்திரம்—நூல். "தந்திரம் சூத்திரம் விருத்தி மூன்றற்கும் — முந்துநூ லில்லது முதனூ லாகும்" என்பது சூத்திரம் (இறையனர் களவியல் க-ம் சூத்திர உரை).

இரண்டாமென்றலும், ஈவோன்றன்மையும் ஈதலியற்கையும் கொள்வோன்றன்மையும் கோடன்மரபு மென்ற நான்குறுப் புடையது பொதுப்பாயிரமென்றலும், அதன்வழியே கூறப்படுஞ் சிறப்புப்பாயிரந்தான் எட்டிலக்கணமுடைத்தென்றலும், அவை ஆக்கியோன் பெயரும் வழியும் எல்லையும் நூற்பெயரும் யாப் பும் நுதலியபொருளும் கேட்போரும் பயனுமெனப்படுமென் றலும், அவைதாம் நூற்கின்றியமையாவெனக் கொள்ளப்படு தலுங் கூறி முடிக்க.

சிறப்புப்பாயிரத்தானே நூலிலக்கணம் ஒருவகையான் உண ரப்படும்; பொதுப்பாயிரத்தானே ஆசிரியரும் மாணாக்கரும் நூலுரைத்தலும் நூல்கேட்டலும் மாசறவறிந்து உரை நடாத் துவாராக. அதனானே இவை நூன்முகத்தினின்று நிலாவுமென் பது. (சுசo)

" நுண்மா ணுழைபுலம் இல்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று."
(குறள் சoஎ)

" ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனடி
பல்காற் பரவுது மெழுத்தொடு
சொல்கா மருபொருட் டொகைதிகழ் பொருட்டே."

மரபியன் முற்றிற்று.

பொருளதிகார முற்றிற்று.

தொல்காப்பிய முற்றிற்று.

சூத்திரமுதற்குறிப்பகராதி

எண் — பக்க எண்

அ

அஃதான்றென்ப	375
அஃதொழி	389
அகப்பாட்டு	606
அகவல்	374
அகன்று	600
அகைப்பு	609
அங்கதந்	461
அங்கதப்	547
அசைகூன்	312
அசைச்சீர்	361
அசையுஞ்	236
அடக்கியல்	486
அடிதொறும்	384
அடிநிமிர்	572
அடியிகந்து	572
அடியிறந்து	294
அடியின்	296
அடியுள்ள	293
அடுக்கிய	178
அடைநிலைக்	476
அணங்கே	22
அதுவே...பிசி	572
அதுவே...மீ	560
அதுவே...மோ	565
அதுவேவண்	482
அந்தணுளர்க்க	671
அந்தணுளர்க்கு	664
அந்நிலை...வஞ்சி	290
அந்நிலை...னற	436
அப்பெயர்	654
அம்போத	514
அல்குறை	70
அவ்வம்	599
அவ்விய	377
அவற்றுட், சூ	561
அவற்றுட், பாஅ	603
அவற்றுட், பார்ப்	625
அவற்றுண்மாத்	214
அவற்றுள், நூலெ	560
அவற்றுள், ஒத்	470
அவைதாம், அன்ன	130
அவைதாம், நூ	558
அவைதாம், பாஅ	602
அவையடக்	445
அளபெடைத	380
அளபெடைய	253
அளபெடைவ	605
அளபெழி	405
அளவடி	344
அளவியல்	557
அளவுஞ்	342
அறுசீர	351
அன்னபிற	50
அன்னரா	671
அன்னவா	134
அன்னவெண்	135

ஆ

ஆங்கவை	30
ஆங்கனம்	325
ஆசிரியப்பா	544
ஆசிரியகடை	437
ஆசிரியம்	433
ஆசிரியமருங்	355
ஆண்பா	653
ஆயிரு	391
ஆவுமெரு	634
ஆற்ற	652

இ

இசைநிலை	278
இடைச்சுர	585
இடைநிலை...டொ	470
இடைநிலை...டே	473
இடையிரு	668

இடையும் 356
இதழனி 594
இயலசை...ய 246
இயலசைமுத 227
இயலசையீற் 252
இயற்சீர்ப் 279
இயற்சீர்வெள் 347
இயற்சீரிறுதி 263
இயைபு 605
இரட்டைக் 152
இரலையுங் 649
இருசீ 410
இருவகை 221
இலேயே 674
இவ்விடத் 597
இவையுங் 56
இழுமென் 615
இளிவே 13
இறப்பே 593
இறுவா 404
இன்சீ 289
இன்பத் 57
இன்பமு 598
இனிதறு 192

ஈ

ஈரசை 242
ஈற்றய 356

உ

உய்த்துணர் 594
உயர்ந்ததன் 118
உயிரில் 309
உருட்டு 610
உரை 694
உவமத் 174
உவமப்பொருளி 149
உவமப்பொருளே 152
உவமப்போலி 154
உவமையும் 126
உறுப்பறை 26

ஊ

ஊரும்பெ 666
ஊருமயலும் 582

எ

எண்ணிடை 489
எண்ணு 609
எண்வகை 595
எதிர்மறு 723
எருத்தே 515
எருமையு...அ 647
எருமையு...ஈ 658
எருமையு...வ 632
எழுசீரடி 353
எழுசீரிறு 364
எழுத்தள 303
எழுத்தமுத 366
எழுத்தெடு 570
எழுநிலத் 558
எள்ளலி 10
எள்ளவிழைய 136

ஏ

ஏந்தல் 610
ஏழெழுத் 297
ஏற்புடை 646
ஏறுமே 623
ஏனை 481

ஐ

ஐவகையடி 328
ஐவகை...விரி 314

ஒ

ஒட்டகங் 654
ஒட்டகமவ 638
ஒண்டொடி 584
ஒத்தகா 724
ஒத்தசு 690
ஒத்தாழிசைக் 467
ஒத்தாழிசையு 446
ஒத்து 485
ஒப்பொடு 566
ஒரீஇக் 173
ஒருசீரி 409
ஒருநெறிப் 592
ஒருநெறியி 562
ஒருபான் 513
ஒருபொரு...சு 561
ஒருபொரு...வெ 518
ஒருபோகி 495
ஒருஉ 608
ஒழிந்தோர் 586
ஒழுகு 608
ஒற்றள 259
ஒற்றெழு 229
ஒற்றொடு 618
ஒன்றறி 639
ஒன்றே 566

க

கட்டுரை 458
கடமை 634
கடல் 647
கடுப்ப 137
கண்ணியுங் 669
கண்ணினுஞ் 81
கல்வி 24
கலித்தளைமரு 273
கலித்தளையடி 275
கலிவெண் 548
கலியென் 649
கவரியுங் 633

கா

காமப் 574
காயே 676

கி

கிழக்கிடு 123
கிழவன் 583
கிழவி 160
கிழவோட் 163
கிழவோற் 161
கிழவோற்காயி 164
கிளரியல் 573

கு

குஞ்சரம் 633
குட்ட 448
குட்டி 629
குரங்கினே 659
குரங்கு..மஞ்சி 659
குரங்கு...மூ 634
குழவி 635
குற்றியலுகா 235
குறளடி 335
குறிலிணை 226
குறிலே 219
குறுஞ்சீர் 606

கூ

கூழை 37
கூற்று 540

கை

கைக்கிளைதானே 452
கைக்கிளைமு 573

கொ

கொச்சகம் 453
கொச்சகவொ 496

கோ

கோடுவாழ் 631
கோழி 654

சி

சித்திர 606
சிதலு 642
சிதைவில 709
சிதைவெ 713
சிறப்பே 121

சீ

சீர்கூ 313
சீர்நிலை 299
சீரியை 334

சு

சுட்டி 126

சூ

சூத்திர 704

செ

செம்பொரு 462
செய்யுட்டா 464
செய்யுண்மரு 619
செய்யுண்மொ 614
செல்வம் 28
செலியுறை 445

சே

சேரி 617
சேவற் 681

சொ

சொல்லப் 707
சொல்லியதொ 420
சொல்லியமர 637
சொல்லொடுங் 596
சொற்கீ 457

ஞ

ஞகாரை 616

ஞா

ஞாயிறு 591

த

தடுமா 177
தத்த 140
தரிய 477
தரிற்சு 486
தரின் 497
தரவும் 522
தரவே...கால 473
தரவே...கான் 484
தலைமை 667
தவலருஞ் 155
தவழ் 626
தன்சீர் 330
தன்சீருள் 333
தன்சீரொழுத் 310
தன்பா 270
தனி 227

தா

தாஅ 604

து

துகளொடும் 465
துள்ள...கலி 375

தூ

தூக்கியல் 378
தூங்கல் 610
தூங்கலோ 376

தெ

தெய்வ 70
தெரிந்த 428
தெரிந்து 45

தொ

தொகுத் 689
தொடை 429
தொன்மை 615

தோ

தோடே 673
தோழி 165

ந

நகையே 8
நண்டுங் 642
நந்து 641
நரியு 628
நரியு 658
நலிபு 606

நா

நாயே 628
நாலிர 7
நாலிரண் 143
நாலெழு 297
நாற்சீர் 262

நி

நிம்பிரி 80
நிரனிறுத் 179
நிரனிறுத்தமை 382
நிரைமுதல் 345
நிரைய 363
நிலந்தீ 676
நிலையிற் 649
நிறை 568

நீ

நீர்வா...ணந்து 658
நீர்வாழ்...ளறு 647

நு

நுண்மை 567

நூ

நூலே 661

நெ

நெடுஞ்சீர் 605
நெடுவெண்பா 450
நெடுவெண்...மு 545
நெல்லும் 637

நே

நேர்நிலை 302
நேரவ 251
நேரின 562
நோற் 362

ப

படையு 663
பண்ணை 1
பத்தெழு 298
பரத்தை 590
பரிசில் 665
பரிபாட் 557
பரிபாடல் 452
பழிப் 700
பறழினப் 627
பன்றிபுல் 647
பன்றி...நா 655

பா

பாட்டிடைக் 571
பாட்டிடைவை 564
பாட்டியென் 658
பாட்டுரை 368
பாணன் 581
பாநிலை 529
பார்ப்பார 589
பார்ப்பான் 580
பாராட் 43
பாவிரி 437

பி

பிடி 653
பிணவ 656
பிள்ளகு 636
பிள்ளப் 629
பிறப்பே 75
பிறிதொடு 153

பு

புகுமுகம் 34
புதுமை 16
புல்லு 641
புல்வாய்நவ் 655
புல்வாய்புலி 646
புள்ளு 654

புறக்கா 672
புறஞ்செ 48
புறநிலை 555
புறப்பாட்டு 608

பெ

பெண்ணும் 657
பெண்ணுமா 661
பெருமையுஞ்சி 146
பெருமையு...மெ 128
பெற்றமுமெரு 656
பெற்றமெரு 647

பே

பேடையும்பெ 624
பேடையும்பெ 654

பொ

பொருளே 127
பொழிப்பு 381

போ

போக்கியல் 477
போல 139

ம

மக்க 644
மகவும் 631
மண்டிலங் 448
மயிலு 648
மரபுநிலை திரி 677
மரபுநிலைதிரியா 680
மரபுநிலைதிரியி 679
மரபே 369
மருட்பா 376
மறுதலை 705
மறை 577
மனை 586

மா

மாட்டு 601
மாத்திரைமு 429
மாத்திரையெ 201
மாவு 643
மாற்றருஞ் 621

மு

முச்சீர் 358
முச்சீராணும் 311

முட்டு 65
முடுகி 353
முடுகு 611
முதல்வழி 710
முதலுஞ் 124
முதற்றே 487
முற்றிய 231
முன்னிரை 249

மூ

மூங்கா 626
மூடுங் 658
மூப்பே 16
மூவா 298
மூவை 298
மூன்றுறு 563

மெ

மெய்தெரி 669
மெய்பெறுமர 423
மெய்பெறுவ 579
மெல்லி 604

மே

மேற்கிள 696

மொ

மொழிகாந்த 463
மொழியினும் 403

மோ

மோத்தையுங் 650
மோனே 379

யா

யாடு 630
யானே 632

வ

வசையொடு 466
வஞ்சிச்சீ 265
வஞ்சித்தா 359
வஞ்சிமருங்கினு 270
வஞ்சிமருங்கி 270
வஞ்சியடி 310
வண்ணகங் 483
வண்ணந்தா 602
வண்ணந்...யி 611
வல்லிசை 604
வழக்கெனப் 679
வழிபடு 441
வழியினெறியே 689
வழியெனப் 687
வனப்பி 612

வா

வாயி 591
வாயுணை...ய 442
வாயுறை...வா 444
வார்கோட் 646
வாழ்த்திய 439

வி

விட்டகல் 701
விரவி 117
விராஅய் 329
விராயதனே 346
விருத்தே 616
வில்லும் 671
வினேபயன் 109
வினேயி 683
வினேயுயிர் 54

வெ

வெண்ஞி 281
வெண்டளே 348
வெண்பாட் 360
வெண்பாவிய 364
வெண்பாவுரி 271

வே

வேந்து 670
வேறுபட 166
வேழக் 645
வேளாண் 669

வை

வைகிகன் 668

உதாரண அகராதி

எண் – சூத்திர எண்

அ

அஆவிழந்தான் 319
அஉ அறியா 319
அஃகாமை செல்வற்கு 535
அகமலி உவகை 261
அகரமுதல 307
அகனமர் கேள்வன் 312
அகல்வயல் 338
அகலிருவிசும்பின் 368, 556
அகலிருவிசும்பு 405
அகன்ஞாலம் 467
அச்சாறுக 256, 272
அஞ்சுடர் நெடுங்கொடி 290
அடன்மா மேல் 257
அடல்வேலமர் 403
அடிநோக்கின் 307
அடிதாங்குமளவு 341
அடியதர் 360
அடுகளம்வேட்ட 627
அடைமரையாயிதழ் 281
அட்டாலும் 384
அணங்குறு 253
அணங்குடை நெடுவரை 273
அணங்குகொலாய்மயில் 278
அணிகிளர் சாந்தின் 256
அணித்தாத்தோன்று 505
அணைத்தோள் 276
அண்டர்மகளிர் 642
அத்தக்கள்வர் 406
அத்தீங்கிளவி 270
அமைவிடுகொடி 369
அம்ம வாழி தோழி 538
அயிரைபரந்த 272
அயிற்கதவம் 386
அரவுநுங்குமதியி 280
அரவணிந்த 375
அரிதாய அறனெய்தி 260, 336, 341, 344, 347, 388, 389, 417, 427
அரிமலராய்ந்த 310
அரிதே தோழி 446
அரிதினிற்றேன்றிய 466
அரிநீரவிழ் நீலம் 468
அரிமாவன்ன 278, 279
அருளல்லதியாதெனில் 320
அரும்பொருள் வேட்கை 465
அருமுன்த காட்சி 467
அலந்தாங்கமை 270
அலரிநாறு 343
அலங்கல்வான்கழை 612
அவணுந்தான் 273
அவர்நாட்டு மாலைப்பெய்த 270
அவரே கேடில் 325, 361
அவரோ வாரார் 408
அவற்றுள் அஇஉ 466
அவன்வயிற் சேயேன்மன் 273
அவாப்போ லகன்ற 285
அவிசொரிந்தாயிரம் 470
அவ்வானிலங்குபிறை 277
அழல்போல் வெங்கதிர் 289
அழிவிலர் முயலு 506
அறச்சுவையிலன் 437
அறவையாயின் 440
அறிந்தானே ஏத்தி 470
அறியாய்கொல்லோ 265
அறிவறிந்தார் 370
அறுசுவையுண்டி 344
அனையையாகன்மாறே 383
அன்ஞனெருவன் 255
அன்னைசொல்லுமுய்க 267
அன்ஞய் வாழி 270
அன்னை வாழி 304
அன்னதேயாயினுமாக 468

ஆ

ஆகத்தொடுக்கிய 312
ஆடலிற் பயின்றனை 502
ஆடுகொடி 366
ஆணமில் பொருள் 536
ஆண்கடனுடைமையின் 616
ஆமிழியணிவரை 271
ஆயிரம் விரித்த 432
ஆரிய நன்று 490
ஆர்கலியுலகத்து 461
ஆழ்ந்துபட்ட 338
ஆறறியாதணர் 461
ஆனுநோயொடு 330

இ

இகலிலர் 259
இடனின்றி 272
இடிக்குங் கேளிர் 498, 508
இடுகாட்டுளேற்றை 604
இணரொரி தோய்வன்ன 276
இந்திரனென்னின் 307
இமயமுங் களக்கும் 254
இமிழ்கடல் 342
இமிழ்தூங்கிசை 369
இமிழ்கண் முழவு 406
இமையா முக்கண் 422
இமையவில் வாங்கிய 449
இரண்டறி கள்வி 275
இரிபெழுபதிர் 378
இரியற்பிணவறீண்டலின் 614
இருணூற்றன்ன 556
இருநிதி மதிக்கும் 289
இருள்கழி 415
இருங்கடலுடுத்த 424
இருடீர்மணி 437, 471
இருடுணிந்தன்ன 556
இரும்புலிக் குருளை 563
இரும்பனம் புல்லின் 640
இரும்பனை வெண்டோடு 641
இலமலரன்ன 259
இலங்குபிறையன்ன 271, 288
இலங்குவளையன்ன 311
இலங்காழிவெண் 467
இல்லிறைப்பள்ளி 559
இல்லிதூர்ந்த 253
இல்வழங்கு 253
இவளேயணியினும் 266
இழைபெற்ற பாடினி 383
இளையண்மெல்லியள் 505
இனியானுண்ணலு 270
இனிதெனக் கணவன் 267
இன்ன விறலு 253
இன்னுயிர் கழிவ 271
இன்றுளனுயின் 438
இன்மணிச் சிலம்பு 444
இன்னு வைகல் 537

ஈ

ஈத்திலே வேய்ந்த 642
ஈயற்புற்றத் தீர்ம்புறம் 523
ஈரத்தளின்னவை 291
ஈருயிர்ப்பிணவின் 613
ஈர்ந்தநிலந்தோயு 311
ஈன்பிணவொழிய 616
ஈன்றவடிதலேபோல் 612

உ

உகுவதுபோலுமென் 435
உடைதிரைப்பிதிர்விற் 428
உண்கண் சிவப்ப 536
உதளெடுந்தாம்பு 602
உதக்காண்சுரம் 361
உப்போவென 329
உப்பிலா 381
உயங்கின்றன்னை 508
உயர்கோட்டு மகவுடை 509
உரனுடை உள்ளத்தை 259
உரல்புரை பாவடி 290
உருமெனச் சிலைக்கு 289
உருவுகிளரோவினை 276
உருவுகண்டெள்ளாமை 295
உருமுரறு கருவிய 544
உலகமுவப்ப 324, 340, 527
உவவினிவாழி 259
உவவுமதியுரு 326, 366, 406
உழுந்தினுங்வ்வா 273

உழுதநோன்பகடு 295
உழுதபோத்து 596
உள்ளினுள்ளம் 271
உள்ளினென் 273
உள்ளுதாவியிற் 280
உள்ளார்கொல்லோ 399, 411, 417, 527
உள்ளிலவயிற்ற 567
உள்ளுர்க்குரீஇ 603
உறக்குந்துணையதோ 255
உறுஅர்க்குறுநோய் 386, 466
உறுபுலியுரு 337
உறுதுப்பஞ்சா 258
உறைபதியி 458
உறையுண்முனியு 260

ஊ

ஊரனூரன் 270
ஊர்க்குறுமாக்கள் 307

எ

எண்ணுணப் பலவேட்ட 627
எம்போற் புல்லுளை 272
எம்மிகழ்வோரவர் 437
எம்மனை முந்துற 499
எம்வெங்காமம் 503
எய்தோற் கிடந்தான் 321, 387
எரியகைந்தன்ன 287
எரியுருவுறழ 291, 544
ஸ்ரீமலர்கினை இய 433
எருமையன்ன 255
எருத்துமேல் 256
எருமைகல்லான் 581, 617, 618
எருமைப்போத்து 596
எலுவசிறுஅரைம்முறு 508, 510
எல்லீரு மென்செய்தீர் 508
எல்லிமனைசேர் 270
எல்லோம் பிரியற்கெம் 433
எவ்வியிழந்த 270
எழிலிவான் 289
எழுத்தெனப்படுவ 526
எள்ளிகழினும் 252
எறித்தரு கதிர்தாங்கி 625
எறிபோத்து 596
எறும்பியளை 394, 473
என்மலைந்தனன் 271
என்றேழையெழுதிய 273
என்றவியப்ப 278
என்னைபுற்கை 472

ஏ

ஏடுகொடியாக 326
ஏற்பன ஏற்பன 569
ஏற்றிளங்கவரி 594
ஏற்றெருமை நெஞ்சம் 594

ஐ

ஐயர்பாங்கினும் 272
ஐயாவெனின் 253

ஒ

ஒக்குமேயொக்குமே 403
ஒண்செங்காந்தள் 291
ஒண்டாரகலமும் 508
ஒத்ததறிவான் 283
ஒய்யெனவெழுந்த 574
ஒருகையுடையதெறி 254
ஒருநாள் வந்து 264
ஒருக்குநாமாடும் 267
ஒருவான்யாறொடு 461
ஒருஉநீ யெங்கூந்தல் 468
ஒருஉக்கொடியிய 435
ஒழிகோயானென 275
ஒழுகைநோன்பகடொப்ப 287
ஒளித்தியங்கு மரபின் 287
ஒன்றிரப்பான்போல் 254
ஒன்றேனல்லெ னெனறுவென் 301, 350
ஒன்றிரப்பான்போலும் 467

ஓ

ஓங்குகோட்டு 366
ஓங்குதிரை 326, 336 406,
ஓங்குமலைப் பெருவில் 366, 396
ஓதியு நுதலு நீவி 263
ஓதியுமோதார் 391

ஓரிரா வைகலுட் 456
ஓருயிர் மாதராகலின் 511

கூ

கூடம்பமர் நெடுவேள் 281
கடல்போற்றோன்றல 290
கடல்கண்டன்ன 272, 278
கடறுகவரா 343
கடாமுங் குருதியும் 461
கடுவனுமறியுமக் 623
கடுங்களிற்றெருத்தல் 589
கடையிற் சிறந்த 255
கடைக்கண்ணுற் 276
கடையாயார் 392
கணைகழிகல்லாத 270
கணைதோட்டுவாஅ 581
கண்ணெடு நிகர்க்கும் 290
கண்போன் மலர்ந்த 290
கண்ணியன் வில்லன் 273
கண்ணனவனிவன் 307
கண்ணரக் காணக் கதவு 321
கண்ணுக்கருவிளை 278
கண்ணுடண்ண் 330
கண்போல் 343
கண்டகம்பற்றி 375
கண்டற்கானல் 404
கதிர்பகா ஞாயிறே 513
கயமலருண்கண்ணுய் 253
கயமூழ்கு மகளிர் 287
கயாடி யானையின் 287
கரடி வழங்கு 343
கரந்தங்கே இன்ன 466
காஅங்கலித்த 598
காத்தின் 303
கருங்கால் வேங்கை 297
கரும்புகடு பாத்தி 300
கருங்கோட்டெருமை 302
கருப்புக் கொழுத்து 323
கருங்கோட்டுநறும் 446, 449
கருங்கட்டாக்கலை 601
கருமுகமந்தி 386, 622
கரைபொரு கான்யாற் 376
கரைசேர் வேழம் 300
கலங்கவிழ்த்த 294
கலக்கொண் 406
கலாஅற்கிளி 386
கல்லாக் கோவலர் 270
கல்லெனக் கவின் 456
கல்லாலந் தண்ணிழல் 461
கவரிநரந்தம் 412
கவரிதழ் ததவிய 377
கவைத்தலை முத்தலை 598
கழங்காடாயத் 270
கழனிமாஅத்து 303
கழறொழா 339
கழியாக் காதலர் 257
களிறுகவ 272
கள்ளியங் காட்ட 601
கனவினிற் காண் 472
கன்று குணிலா 461
கன்றுகாலொய்யும் 570
கன்றுபுகுமாலை 570
கன்றுடை மரையா 571

கா

காக்கைச் சிறகன்ன கருமயிர் 283
காடுதோரா 343
காடுமீக்கூறும் 592
காடோங்கிய 369
காணுமையிருள் 444
காண்பானவாவினுல் 467
காதலெவாழி 308
காமரு சுற்றம் 433
காமர்கடும்புனல் 337, 467
காமன்காஎன்று 331
காமரு நோக்கினை 270
காமங்காமமென்ப 501
காமர்சேவல் 603
காயாமென்சினை 277
காய்சினவேற் 386
காரெதிர்கலி 378
கார்மழை முழங்கிசை 287
கார்கள்ளவுற்ற 289
கார்விரி கொன்றை 291, 421
கால்காய்ந்தது 369
காவல்குழவி கொள்பவரின் 578
காழ்விரிகவையார 442
காற்றுச்சுவடொற்று 593
கானலுங் கழறுது 271
கானங்கோழிக் 603
கானவாரண மீனும் 623

கி

கிண்கிணி கவிந்த 255

கு

குரங்குளைப் பொலிந்த 533
குரங்குப்பிள்ளை 569
குருளைகோட்படல் 563
குருத்துக் குறைத்து 323
குழவிவேனில் 579
குழவித் திங்கள் 579
குழவி ஞாயிறு 579
குளிறுகுரலருவி 536
குளிரும் பருவத்தே 272
குளித்துப் பொருகயலிற் 286
குறிக்கொண்டு 252
குறுந்தொடியேய்க்கு 287
குறுங்கையிரும்புலி 684
குன்றியுங் கோபமும் 286
குன்றினனேயாரும் 286
குன்றக்குறவன் 304
குன்றகாடன் கண்ட 571

கூ

கூவற், குராலான் 281

கே

கேடில் விழுப்பொ 406
கேழற்பன்றி 589
கேளிர்வாழியோ 501, 510
கேள்கேடுன்றவும் 273, 499

கை

கைகவியாச்சென்று 520
கைம்மையுய்யாக் காமர் 562, 622

கொ

கொங்குதேர் வாழ்க்கை 498
கொடிகுவளை 312

கொடியவுங் கோட்டவும் 467
கொடியுவணத்தவனரோ 536
கொடுமிடல் காஞ்சில் 467
கொய்குழையகை 642
கொல்வினைப் பொலிந்த 309, 392
கொலைக்களிறுகடாப் 358
கொலைவில்வேட் 374
கொழுவினை 387
கொற்றக்கொடி 338
கொற்றச்சோழர் 392
கொன்றன்ன இன்ன 276
கொன்றுகோடு 358
கொன்றைவேய்ந்த 461
கொன்றுகளம் வேட்ட 627

கோ

கோடுயர் வெண்மணல் 536
கோட்டுமண் 386
கோதை மார்பில் 404

ச

சந்து சிதைய 343

சா

சாந்தகத்தண்டென்று 294
சாரலுட நீவரலானே 534
சாறுதலைக்கொண்டென 295
சான்றவிர் வாழியோ 466, 508

சி

சிறுசோற்றினு 375
சிறுகட் பெறினே 539
சிறுவெள்ளரவின் 563
சிறுதலை நவ்வி 612
சினவாடச் சிறக்கு 272

சீ

சீர்கெழு வெண்முத்தப் 501
சீற்றமிகுபு 332

சு

சுஃஃறென்னுந்தண் 323
சுடர்த்தொடீஇ 472
சுரஞ்செல்யானை 261

சுரும்புலவுநறுந் 321
சுரும்புழுசா 284
சுறவேறெழுதிய 594
சுற்றுவிற் காமனும் 307

சூ

சூரலங்கடுவளி 411

செ

செங்களம்படக்கொன்றவு 518
செங்காந்தள் கைகாட்டு 376
செங்காற்பைந்தினை 413
செஞ்சாந்தெறியினும் 260
செஞ்சுடர்வடமேரு 464
செந்தீயோட்டிய 290
செந்தொடைப்பகழி 407
செந்நாயேற்றை 604
செயலையந்தளிரேய்க்கு 291
செய்தவறில்வழி 258
செய்தானக்கள்வன் 382
செல்லினிச்சென்று 467
செவ்வானன்ன 279, 288
செவ்வேற்சேய் 407
செவ்விய தீவிய 467
செவ்வழிநல்யாழ் 502
செவ்வரைச் சேக்கை வருடை 564
செறிதொடி 511
செறுநர் விழையா 433
சென்றே 346
சென்றீபெரும 536

சே

சேயளரியோள் 254
சேயிதழனைய 290
சேயிருமுகந்த 412
சேயேன்மன் 253
சேய்நின்று 256
சேற்றுக்காணீலஞ் 322

சொ

சொல்லிற்சொல் 498

சோ

சோறுவாக்கிய 285

த

தஎன்று தாமிசைப்ப 412
தகர்மருப்பேய்ப்ப 602
தகைமிகு தொகை 375
தஞ்சொல் வாய்மை 467
தடந்தாட்கொத்த 461
தடங்கடற் பூத்த 461
தண்டளிர் வியப்ப 291
தண்டுளிக்கேற்ற 268
தண்டண்டலைத் 332
தண்ணியலற்ற 407
தண்ணந்துறைவன் 467
தண்டொடு பிடித்த 625
தமர்தரவோரின் 499
தலைப்புணைக்கொளினே 498
தவழ்பவைதாமும் 536
தழைபச்சென்னும் 369
தழைபூஞ்சாரல் 411
தளிர்ஈவந்தாங்கு 276
தளிபெற்றுவைகிய 310
தன்னகம்புக்க 257
தன்சொல் உணர்ந்தோர் 291
தன்னசை உள்ளத்து 268, 273
தன்பார்ப்புத் தின்னும் 300, 301, 560
தன்பால் 338

தா

தாதுசேர் வண்டின் 466
தாதுண் பறவை 278
தாதுறுமுறிசெறி 377
தாமரைபுரையும் 281, 469, 523
தாமரைவண்டு 304
தாய்சாப் பிறக்கும் 303, 306, 560
தாழ்தாழைத் 335
தானுற்ற 253

தி

திங்களங்கதிர் 422
திருமழை 344
திருமழை தலைஇய 378
திருந்திழாய் கேளாய் 472
திருநுதல் வேரும் 472
திரைத்தவிரிக்கின் 425

திறனல்ல 252, 499
திறந்திடுமின் தீயவை 522
திறவாக்கண்ணைசாய் 563
தினைப்புனத்திதண் 369

தீ

தீநீர் நஞ்சம் 407
தீம்பாலூட்டினும் 270
தீம்பால் கறந்த 465
தீயினன்னவொண் 291

து

துகடீர்பெருஞ் 470
துகடபுகாட்சி 641
துணிவொடு வரூஉம் 300
தும்முச்செறுப்ப 312
துளியிடை 253
துளிதலைத்தலைஇய 291
துறந்தார் பெருமை 286
துறுகல்விடரூள 616

தூ

தூஉத்தீம்புகை 374
தூஉமணிகெழூஉ 329
தூங்குசிறை 326
தூதவர் விடுதார் 270
தூதுணம்புறவென 286
தெம்முனையிடத்திற் 276
தெய்வமடையிற் 642
தெரிகணை நோக்கி 503
தெறித்தநடைமரபின் 567

தே

தேஎந்தேரும் 329
தேமாஞ்சோலைத் 346
தேர்வண்கோமான் 300
தேன்றூட்டிங் 338
தேன்பெய்தது 369

தொ

தொக்குத்தூறை படியும் 376
தொடித்தலை 254
தொடிக்கண் 259
தொடிஞெகிழ்ந்தனவே 365
தொடிநிலை நெகிழ 270

தோ

தோடுசெங்கெற்றி 603
தோடுதோய் 642

ந

நகுதக்கனரே 252
நகைநீ கேளாய் 252
நகையாகின்றே 252
நச்சல்கூடாது 449
நயனும் வாய்மையும் 467
நரந்தநாறும் 380, 381, 399
நரிபறழ்கவர 565
நலமிகநந்திய 468
நல்லமன்னென 252
நல்வரைநாட 271
நல்கூர்ந்தது 369
நல்விநாண்மறி 567
நறவினைவரைந் 472
நறவுண்மண்டை 325
நறுமுல்லை நேர்முகை 290
நற்றாரகலத்து 272
நனைத்தசெருந்தி 642
நன்னுட் பூத்த நாகிள 581
நன்றுய்ந்தசெங் 438
நன்கலம் பெற்ற 259
நன்னனேற்றை 540

நா

நாகிளவளையொடு 617
நாகிளவளை 581
நாணகையுடைய 252
நாணுத்தளையாக வைகி 321, 322
நாணுடை அரிவை 321
நாணுத்தளை 329
நாணுக்கடுங்குரை 499
நாண்ஞாயிறுற்ற 470
நாய்காக்கு 312
நாய்பிணவொடுங்கிய 613
நாரை நிரைபோத் 598
நாவொடு நவிலா 252
நாஞற்றிசையும் 470
நான்முலைப் பிணவல் 614

நி

நிணங்கொள் புலால் 467
நிலவுக் குவித்தன்ன 556
நிலமிசை நீடுவாழ்வார் 323
நிலவுமணல் 326
நிலம்பாய் 329
நிலாவினிலங்கு 640
நிலைக்கோட்டு வெள்ளே 602
நிவக்துதோன்று 366
நிறைமொழி மாந்தர் 490
நினக்கியான் சொல்லிய 320
நின்மகன் படையழிந்து 258
நின்ற சொல்லி 272
நின்னுறு விழுமம் 270
நின்மக 273
நின்னேரனையை 308
நின்றுநினைந்து 370
நின்கண்ணுற் காண் 382
நின்னெக்கும் புகழ் 433, 435
நின்கேள் புதவது 508

நீ

நீத்தநீர்ப்பரப்பு 327
நீயே வினைமாண் 442
நீரறவறியா 380, 381
நீரலர் தூற்ற 467
நீரார்செறுவின் 445
நீரின்றன்மை 380, 381
நீரின்றன்மையும் 427
நீருட்குவளே 294
நீருறை கோழி 300
நீரோரன்ன 407
நீர்வரக்கண் 382
நீர்வார் நிகர்மலர் 290
நீலமேனிவாலிழை 469
நீளரையிலவத் 309
நீறணிந்த திருமேனி 461

நு

நுதலும் தோளும் 540
நுதலு முகனுங் 278
நுதலதிமையாநாட்டம் 323
நும்மில் புலம்பினு 406
நும்மினுஞ் சிறந்தது 556
நும்மொடு நக்க 252

நூ

நூற்றுவர் தலைவனே 436

நெ

நெஞ்சு நடுக்குற 472
நெஞ்சிற்குரைத் 472
நெடுந்தோடிரும்பனை 307
நெடுந்தாட்செந்தினை 613
நெய்த்தோர்மீமிசை 406
நெய்யொடு தீயொக்க 461
நெய்பெய் தீயின் 271
நெய்தனெறிக்கவும் 273
நெருப்பெனச் சிவந்த 291
நெருநலெல்லை 258
நெருப்புச்சினந் 258
நெருப்பினன்ன 281
நெருப்புச் சினந்தணிந்த 322
நெருப்புக் கிழித்து 461
நெறியறிசெறிகுறி 545

நே

நேரிழைமகளி 383

நொ

நொ அலையல் 319
நொச்சிவேலி 271

நோ

நோய்சேர்ந்த 499
நோய்சேர்ந்த திறம்பண்ணி 267

ப

பகலும்பெறுவை 514
பகுவாய்வராற் 579, 598
படங்கெழு நாகம் 286
பட்டழியறியாது 272
பணிவுடையன் 426
பண்டரங்க 341
பதவுமேயல்பற்றி 565
பரவைமாக்கடல் 403, 408
பலவுறுநறுஞ்சாந்தம் 507

பலர்புகழ் ஞாயிறு 291
பலாஅக்கோட்டு 329
பலாஅஞ்செவி 337
பலியுருவிற்கேலாத 458
பல்லோர் நிகர்ப்ப 289
பல்லிருங்கூந்தன் 257
பழிதபுளாயிறை 270
பறைக்குரலெழிலி 276
பனைநுகும்பன்ன 641
பன்மருண்மருப்பு 467
பன்மாடக்கூடல் 470

பா

பாஅலஞ் 409
பாஅல்புளிப் 374
பாங்கர்ப்பல்லி 270
பாசடைநிவந்த 295
பாசிப்பரப்பிற்பறழ் 565
பாடின்றிப்பசந்த 449
பாடிச்சென்ற பரிசிலர் 294
பாடுகோ பாடுகோ 403
பாம்புமணி 366
பாம்புருவொடுங்க 290
பாரிபாரியென்று 309
பாலுமுண்ணுள் 501
பாவைமாய்த்த 312
பாவையன்ன 279
பான்மருண்மருப்பி 291

பி

பிடிபடிமுருக்கிய 606
பிணர்மோட்டுநந்து 604
பிணந்தின் பெண்டிர்க்கு 564
பிள்ளைவெருகிற்கு 560
பிறங்குநிலைமாடத் 392
பிறங்கிருமுந்நீர் 270
பின்னெடுமுடித்த 253

பு

புகலிரும்பனிச்சோலை 461
புட்டேம்ப 335
புத்தேளுலகிற் 289
புரிபுபுரிபு 378
புரிவுண்ட புணர்ச்சி 466
புலர்குரலேனற் 270
புலம்பயிரருந்த 594
புலிபோலப் பாய்ந்தான் 283
புலிவிறப்ப 287
புலியென்னக் கலிகிறந்து 287
புலிசெத்து வெரீஇய 290
புலிப்பற் கோத்த 392
புலிப்பறழன்ன 565
புலிப்போத்தன்ன 579, 596
புல்வாயிரலை 599
புல்வீழிற்றி 271
புள்ளியிறுதியும் 406
புனலுடர்கோமானும் 307
புனலுடன் 339
புனிற்றுப்பாய்ந்தென 615
புனைமலர்க்கடம்பின் 461
புன்வேங்கைத் தாது 467
புன்னைதீழ 467
புன்றுள்வெள்ளெலி 604
புன்காற்புணர் 338

பூ

பூசைபோலப் பாய்ந்தான் 283
பூணுகவென்பணி 461
பூண்டபறையறைய 461
பூண்டுகிடந்து வளரும் 325
பூத்தவேங்கை 412

பெ

பெண்டிர்நலம் 254
பெண்ணன்றுரைத்த 273
பெண்கோளொழுக்கம் 616
பெயர்த்தனென் முயங்க 501
பெரியகட்பெறினே 381, 526
பெருஞ்செல்வரில்லத்து 294
பெரும்புழுக்குற்ற 261

பே

பேரமர்மழைக்கணின் 508
பேரூரட்ட 312
பேர்துசென்று 324

பை

பைதற்பிள்ளைக்கிளி 559

பொ

பொய்கைப்பள்ளி 308
பொரிமலர்ந்தன்ன 594
பொருள்கருவிகாலம் 547
பொன்காண்கட்டளை 297
பொன்னுரைகடுக்குந் 291
பொன்னினன்ன புன்னை 529

போ

போத்தொடு வழங்கா 598

ம

மகன்ரூயாதல் 289
மக்கட்குழவி 575
மக்களேபோல்வர் 307
மடவரன்மகளிர் 406
மணிநிறமறுத்த 291
மணிநிறம் மாற்றிய 286
மணிவாழ் பாவை 276
மணிவிளங்குதிரு 458
மணிமருடகை 435
மணிநிறமலர்ப் 388, 389
மணிபுரைதிருமார்பு 372
மணிவெண்ணகை 390
மண்டிணிந்த 338
மண்படு 307
மண்மாய்ந்தென 369
மண்டிலமழுங்க 390
மண்ணுர்ந்திசைத்த 432
மதியம்பொற்ப 286
மதியொத்தது மாசற்ற திரு முகம் 286
மதியத்தன்ன 311
மம்மர்நெஞ்சினேன் 324
மயிற்ரோகைபோலுங் கூந்தல் 283
மயிற்போத்தார்ந்த 598
மரந்தலைமணந்த 502
மராஅமலொடு 531
மருந்தெனின் மருந்தே 303, 514, 523
மருந்துகொண் மாத்தின் 295
மருந்துநாடாத் 343
மரைப்போத்து 598
மரையாமரல்கவர 465, 615
மலர்காணின்மையாத்தி 532
மலர்மலிபுகலெழ 378
மலிதிரையூர்ந்ததன் 467
மலைமிசைத் தோன்று 347
மல்லரை மறஞ்சாய்த்த 294
மல்லர்க்கடந்தான் 368
மல்லலூர 467
மழையொன்றுவண்டடக்கை 286
மழைவிழைதடக்கை 289
மழைபெய்தென 369
மழைதுழைத்துப்புறப் 461
மறியாடுமருங்கின் 567
மறித்தருந்தெகுத்த 567
மனைக்குறைகள் 369
மனைவாழளகின் 610
மன்றுபார்த்து 375, 467
மன்றுபாடவிந்து 271

மா

மாக்கடல் நடுவண் 284
மாணமறந்துள்ளா 267
மாணெழில்வேய் 290
மாதர்முகம்போல் 308
மாநிலஞ்சேவடி 469
மாமலர்முண்டகந் 467
மாயப்பொய்ம்மொழி 254
மாயிதழ்புரையு 291
மாயோன்மார்பில் 390, 469
மாயோன்மேய 405
மாயோன்மார்பு ~~347~~
மாரியன்ன 276, 288
மாரிப்பீரத்தலர் 276
மாரியம்பின் 278
மாலையு 508
மாவழங்குபெருங் 374
மாவாராதே 532
மாவெனமடலு 270, 642
மாரூக்காதலர் 427, 515
மானேக்கு 287
மான்ரூற்பள்ளி 309, 578

மி

மின்உறழிமைப்பின் 287
மின்னுமிளிர்ந்தன்ன 321
மின்னெளி 467

மு

முகைமொக்குள் 261
முட்டாச் சிறப்பிற் 522
முதிர்கோங்கின் முலையென 307
முத்துடை வான்கோடு 290
முந்தியாய்பெய்த 320
முயங்கல்விடாஅல் 272
முயற்கோடு சீவி 390
முரணில் பொதியிற் 490
முரசுமுழங்கு 279
முல்லைமுகை 273
முல்லைவைந்நுனை 416
முழவுமுகம்புலரா 324
முழவுறழ்தடக்கையினியல 290
முறிமேயாக்கை 642
முன்றிலாடு 343
முன்னேத்தஞ் 376, 406
முன்பொழுது 412

மூ

மூத்தத்தலை இறைஞ்சிய 254

மெ

மெமுகுமாப்பி 253
மென்புனிற்றம்பிணவு 613
மென்ரோணெகிழ 270

மே

மேக்கெழுபெருஞ்சினை 642
மேற்கோட்டுநீர் 332
மேற்கவட்டிருந்த 559

மை

மைபட்டன்ன மாமுகம் 601
மையணிகண்டனை 461
மையறவிளங்கிய 516

மோ

மோட்டிரும்பாறை 290

யா

யாஅங்கொன்ற 640
யாஅவொண்டளிர் 642
யாங்கனமொத்தியோ 308
யாரிவனெங்கூந்தல் 519
யாமைப் பார்ப்பினன்ன 560
யாழ்கெழுமணிமிடற்றந்தணன் 287
யாழ்கொண்ட இமிழிசை 289
யாழ்செத்திருங்கல் விடரளை 209
யானுடத் தானுணர்த்த 324, 346
யானேயீண்டையேனே 523, 539
யானேயனையவர் 285
யாரெனக்குங்கால் 261
யான்தற்காண்டொறும் 261
யான்தன்னறிவல் 254, 271

வ

வசையில்புகழ் 335, 417
வஞ்சியேன் என்று 336
வடவேங்கடம் 391, 526
வடாஅது பனிபடு 426
வண்டணிகொண்ட 461
வண்டொன்று 387
வண்டுமலர் 360
வண்புகழ்நிறைந் 325
வண்ணவொண்டழை 300
வண்டோட்டுநெல் 641
வயங்குகதிர் 406
வயலாமைப்புழுக்கு 200, 419
வயாஎயறிந்து 565
வரிவயம்பொருத 258
வரிமரற்பாவை 594
வருமுலையன்ன 284
வருதுமென்ற 270
வருந்தாதேகுமதி 508, 569
வரைபுரையுமழகளிற்றின்மிசை 281
வரைபுரைதிரை 324
வலியரென 254
வலிமுன்பின் 442
வல்லார்முன் 257
வளைக்கட்சேவல் 603
வள்ளெயிற்றரிமா 249

வள்ளத்தினீர்கொண்டு 285
வறிதகத்தெழுந்த 252
வன்கண்குடிகாத்தல் 273
வன்புலக்கேளிர்க்கு 306

வா

வாமானேறி 346
வாயென்ற பவளம் 286
வாய்பவளம் 278
வாரணக்கொடியொடு 623
வாராராயினும் 523, 541
வாராதாயினும் 270
வாரார்கொல்லென 270
வாராது நீத்தகன்ஞர் 376
வாரிய பெண்ணை 385
வாரிநெறிப்பட 468
வாளினிலங்கு 270
வாளவெண்போத்து 598
வாள்வலந்தர 360
வாஞ்செழிலி 433
வானுற நிமிர்ந்தனை 461
வானூர்மதியம் 465
வான்றோய்வன்ன 276
வான்பெய்யாது 332
வான்பெய்தது 369

வி

விசும்புரிவதுபோல் 276
விசும்பினன்ன 281
விடியல்வெங்கதிர் 472
விண்பொருபுகழ் 289
விண்ணதிரிமிழிசை 289
விண்ணுயர்விறல்வரை 262
விண்பாய்ந்தென 369
விதையர்கொன்ற 502
விரியுளைக்கலிமான் 272
விருந்தெதிர்கொள் 499
வில்லோன்காலன் 505, 514
விழவுத்தலைக்கொண்ட 321
வீழியாக்குருவே 563
வீளங்குமணி 336
வீளங்குதொடி முன்கை 501, 508
வீளிங்கிலகேளாள் 312

வீ

வீங்குசுரைநல்லான் 289
வீழில்தாழைக் குழவித்தீர் 579

வெ

வெண்பலிச்சாந்த 461
வெண்பூம்பொய்கை 300
வெல்புகழ்மன்னவன் 469
வெயிலொளிக்காய்த்த 291
வெயிலாடுமுசுவின்குருவே 569
வெருக்குவிடையன்ன 564, 623
வெளிற்றுப்பனந் 325
வெள்ளிவள்ளி 406

வே

வேப்புநனையன்ன 275
வேயொடு நாடிய 286
வேயொன்று தோளொருபால் 286
வேய்பயிலழுவம் 514
வேய்மருள்பணைத்தோள் 290
வேரல்வேலி 469
வேலாண்முகத்த 321
வேலொன்றுகண்ணுர்மேல் 285
வேனிற்புனலன்ன 295
வேனிலுழந்த 467

வை

வைகலும் வைகல் 405, 543
வையம்புரவூக்கு 257
வையங்காவலர் 307

அரும்பதமுதலியவற்றின் அகராதி

எண் — பக்க எண்

அ

அஃகாமை-சுருங்காமை 606
அஃகி-சுருங்கி 112
அகலம்-மார்பு 362, 495
அகல்-சிறிய சட்டி 27
அகவல்-அழைத்தல், அழைத்துக் கூறும் பா 374
அகைதல்-நெருங்குதல் 134
அங்கதம்-வசைப்பாட்டு 450
அச்சுதன்-விஷ்ணு 495
அசை-அசைத்து இசைகொள்வது 201
அஞ்சி-ஆவி என்னும் ஊர்க்குத் தலைவன் 463
அஞ்ஞை-தாய் 584
அளர்-துன்பம் 588
அடக்கியல்-சுரிதகம் 486
அடர்-தகடு 175
அடல்-வலி 527
அடார்-ஒருவகைப் பொறி 255
அடியுறை-அடிக்கணுறைதல் 457
அடுக்கம்-மலைப்பக்கம் 20
அடுதல்-சமைத்தல் 181, கொல்லுதல் 240
அடும்பு-ஒருகொடி 438
அடை-தனிச்சொல் 470
அடைய-ஒருசேர 430
அண்டர்-இடையர் 675
அணங்கு-தெய்வம் 22, 119
அணங்குதல்-வருத்துதல் 23
அணல்-தாடி 637
அணவரல்-விரும்பல், தலையெடுத்தல் 17
அத்தம்-காடு 395
அதர்-வழி 262
அதர்ப்பட யாத்தல்-மொழிபெயர்த்தல் 689
அதோளி-அல்லிடம்

அம்போதரங்கம்-நீர்த்திரை போல வரவரச் சுருங்கி வரும் ஒரு செய்யுளுறுப்பு 484
அமர்தல்-விரும்பல்,பொருந்தல் 293
அமலல்-நெருங்கல் 430
அமை-மூங்கில் 533
அயிரை-ஒருமீன் 17
அயில்-கூர் 534
அரங்கு-சபை 7
அரவம்-ஒலி 58, பாம்பு 508
அரவு-பாம்பு 124
அரற்றல்-பலவுஞ் சொல்லிக் குறை கூறல் 30
அராகம்-அரு அது கடுகிச்செல்லும் அடியையுடையஉறுப்பு 516
அராகித்தல்-அரு அது கடுகிச் சேறல் 516
அரிமா-சிங்கம் 122
அரில்-குற்றம் 445
அருங்குரைத்து-அரிது 41, 323
அல்குல்-நிதம்பம் 40
அல்லல்-துன்பம் 474
அல்லாத்தல்-துன்பப்படல் 521
அலங்கல்-அசைதல் 655, மாலை 171
அலகிடல்-எழுத்தெண்ணி அசைசீர் அடிகளை வகுத்தல் 237, 238
அலகு-எண் 223
அலகுபெறல்-எண்பெறல் 244
அலமரல்-சுழலல் 74
அலம்வரல்-சுழலல் 50
அலர்-பழிமொழி 44
அலவன்-நண்டு 67
அலறுதல்-அழுதல் 395
அவல்-பள்ளம் 430
அவலம்-துன்பம் 474
அவிதல்-அடங்குதல் 66
அவிர்தல்-விளங்கல் 456
அவிழ்தல்-அலர்தல் 430

அவையடக்கு-அவையை வாழ்த்தியடக்குதல் 442
அழுங்கல்-தவிர்தல் 61
அழுவம்-காடு 593
அள்ளல்-சேறு 130
அளபெடை-அளபெடுப்பது 213
அளவியல் - அளவிலக்கணம், பாவின் வரையறை 201
அளியர்-அளிக்கத்தக்கார்; இரங்கத்தக்கார் 17
அளை-புற்று 348
அளை இ-அளவி; கலந்து 455
அற்றம் - இரகசியத்தானம்; சோர்வு 41
அறல் - கருமணல்; அற்றுச் சேறல்; நீர் 630
அறவை-அறமுடைய 466
அறை-பாறை 576
அறைதல்-அணித்தல் 530
அன்றில்-ஒரு பறவை 58
அனு-ஒத்த எழுத்து 391
ஹம்சன்-இவன் மோட்சத்தையே விரும்பி விரதங்களையநுட்டித்து மரத்தினடியிலாயினும் குகையிலாயினும் வசிப்பான்; ஏகதண்டம், கந்தை, கௌபீனம், கமண்டலந்தரிப்பவன். தேவபேதமின்றி பிரமத்தியானஞ் செய்பவன். 662

ஆ

ஆகம்-மார்பு 579
ஆங்கு-அசைநிலையாய் வரும் ஓரிடைச்சொல் 476
ஆடல்-கூத்தாடல் 485
ஆடாவடகு - விளையாட்டு; (இஃது அடாவடகின் விகாரம்) 679
ஆணம்-அன்பு 581
ஆணை-கட்டளை 24
ஆப்பி-சாணகம் 14
ஆய்-ஒரு வள்ளல் 111
ஆரம்-முத்துவடம் 367; சந்தனம் 68
ஆரியம்-வடமொழி 569
ஆலி-நீர்த்துளி 175
ஆழி-சக்கரம் 495
ஆள்வினை-முயற்சி 480
ஆன்-பசு 20
ஆனந்தம்-ஒருகுற்றம் 184, 723
மரணம் 569
ஆஞமை-நீங்காமை 260
ஆனிழற் கடவுள்-சிவன் 490

இ

இகந்தபடல்-அளவிற் கடத்தல் 325
இகுத்தல்-வளைத்தல்; தாழ்த்தல் 36; நீங்கல் 456
இசை-ஓசை 236
இசைமை-புகழ் 24
இடங்கர்-முதலைச் சாதியிலொன்று 649
இடும்பை-துன்பம் 526
இணைநூல்-தம்மோடொருங்கு கற்றோர் செய்தநூல் 212
இதணம்-பரண் 426
இமிர்தல்-மொய்த்தல் 474
இமிழ்தல்-ஒலித்தல் 492
இயம்-வாச்சியம் 517
இயலசை-இயல்பாக நடக்கும் அசை 227
இயலல்-செல்லல் 120
இயவு-வழி 672
இயைபு-ஒருதொடை 404
இரட்டும்-ஒலிக்கும் 372
இரலை-மான் 646
இரியல் - புறங்கொடுத்தல்; ஓடல் 656
இரும்-இருமல் 17
இல்லம்-தேற்று 460
இல்லாள்-மனைவி 293
இல்லி-மூலை 16
இல-இலவு 29
இலயம்-தாளவறுதி 243
இலேசு-மிகை 300, 700
இழவு-இழத்தல் 13
இழுக்கு-வழு; குற்றம் 449
இழுது-வெண்ணெய் 175
இழை-ஆபரணம் 360
இழைத்தல்-செய்தல் 536
இளிவரல்-இழிபு 8
இளிவு-எளிமை 13
இற்செறிப்பு-தலைவியை வெளியிற் செல்லாமல் இல்லில் தடுத்துவைத்தல் 46
இறத்தல்-கடத்தல் 247
இறந்தபடல்-கடந்தபடல் 744
இறுவாய்-ஈறு 404
இறைஞ்சுதல்-வணங்குதல்; தாழ்த்தல் 36
இன்னு-துன்பம் 255
இன்னோசை-இனிமையில்லாத ஓசை 236

ஈ

ஈண்டுதல்-நெருங்குதல் 445
ஈர்-ஈர்க்கு 676
ஈர்ந்து-இழுக்கப்பட்டு 179
ஈரம்-அன்பு 43, 147
ஈற்றுசீர்-ஈன்றணித்தான பசு 4

உ

உகிர்-நகம் 494
உகுதல்-சொரிதல் 460
உசா-ஆராய்ச்சி 149
உட்கு-அச்சம் 714
உடலல் பகைத்தல் 282
உடற்றியோர்-பகைத்தவர் 359
உடுக்கை-உடை 132
உடை-உடைவேல் 444
உதள்-ஆட்டின் ஆண் 650
உத்தி - ஆற்றுவெள்ளம் 62; கொப்பூழ் 493
உமணர்-உப்பமைப்போர் 554
உய்த்துணர்தல்-ஆராய்ந்துணர்தல் 594
உய்ப்போன்-செலுத்துவோன் 5
உயங்கல்-வருந்தல் 588
உயிர்-உயிர்த்தல் 309
உயிரில் எழுத்து-மெய், ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம் 309
உரவோன்-வலியோன் 25
உரன்-அறிவு, வலி 28
உரற்பாணி- 2
உரிச்சீர்-உரியசையாலாய சீர் 246
உரியசை-இயலசை செய்யுந் தொழிற்குரிய அசை 227
உரு-நிறம் 109
உருத்திரம்-கோபம் 3
உருப்பு-வெப்பம், உருத்தல் 506
உரும்-இடி 137
உலமரல்-சுழற்சி 590
உலக்கல்-பட்டடைக்கல் 348
உவ-உவப்பாய் 29
உவணம்-கருடன் 495
உவமத்தரு-இசைப்பாட்டின் வகை 327
உவர்த்தல்-வெறுத்தல் 70
உவவுமதி-பூரணசந்திரன் 250
உழத்தல்-வருந்தல் 480
உழை-மானுள் ஒருசாதி 630
உள்ளுதல்-நினைத்தல் 467
உளை-குதிரையின் நெற்றிமயிர் 430
உற்றுணர்தல்-பரிசித்தறிதல் 112
உறழ்தல்-பெருக்கல் 251
உறை-நீர்த்துளி 430
உறையுள்-உறைதல், இருத்தல் 33

ஊ

ஊகம்-குரங்கினுள் ஒருசாதி 634
ஊடல் ஊடுதல் 577
ஊதை-காற்று 298
ஊழ்-முறை 474
ஊழி-முறை 37

எ

எஃகு-கூரிய அறிவு 29
எஃகுசெவி-நுண்ணிதாகக்கேட்கும் செவி
எக்கர்-மணற்குவியல் 474

எச்சம்-எஞ்சிநிற்பது 201
எடுத்துக்காட்டு-மேற்கோள் 701
எண்-அளவு, அம்போதரங்கம் 487
எண்பதம்-எளியசெவ்வி 446
எதிகை-ஒருதொடை 379
எய்-முட்பன்றி 176, 234
எயில்-மதில் 362
எயிறு-பல் 14
எரி-நெருப்பு 134
எருத்து-கழுத்து 23, தரவு 453
எருத்தடி-ஈற்றயலடி 356
எல்லா-எடி
எல்லி-இரா 499
எலுவன்-தோழன் 588
எவ்வம்-துன்பம் 16
எவ்வி-ஒருவேள் 65, 136
எழாஅல்-யாழ் 121, வல்லூறு 648
எள்ளல்-இகழ்ச்சி 10
எறிதல்-கொல்லல் 629
எறும்பி-எறும்பு 348

ஏ

ஏகபாதம்-ஒற்றைக்கால். அஃது ஒற்றைக் காலுடைய உயிர் களே உணர்த்திவந்தது. 4
ஏடு-இதழ் 251
ஏதம்-இடையூறு 59, குற்றம் 489
ஏர்-அழகு 525
ஏர்தல்-எழுதல் 280
ஏழைமை-அறியாமை; வெள்ளை அறிவு 80
ஏழிற்கோ-ஏழில் என்னும் ஊர்க் காசன் 462
ஏறு-இடியேறு 23
ஏனம்-பன்றி 659
ஏனல்-தினை 60

ஐ

ஐம்பால்-கூந்தல் 526
ஐயை-துர்க்கை, காளி 679

ஒ

ஒத்தாழிசை-கலிப்பாவின் ஓர் உறுப்பு 446
ஒதுக்கு-கடை 114
ஒய்யென-விரைய 36
ஒருதலை நிச்சயம் 748
ஒருபோகு-ஒன்றுகிய போகியதையுடையது 482, 496
ஒருஉ-நீங்கு 23, ஒருதொடை 410
ஒல்கல்-நுடங்கல்
ஒல்லாமை,பொருந்தாமை 447
ஒழியசை-அசைத்தன்மை ஒழிந்துநிற்கும் சொற்சீரடி 458

ஓ

ஓத்து-இயல் 561, வேதம் 670
ஓதம்-வெள்ளம் 445
ஓதை-ஒலி 445
ஓதி-கூந்தல் 40, 42
ஓரி-நரி 628
ஓலைப்பாயிரம்-இது ஓலைப்பாசுரம் என்று இருத்தல்வேண்டும் 504. சிலப்பதிகாரம் நோக்குக.
ஓவம்-சித்திரம் 122
ஓவினை-சித்திரத் தொழில் 114

க

கஃறு-நிறத்தையுணர்த்தும் குறிப்புமொழி 405
கங்குல்-இரா 474
கட்டி-ஒரு சேனைத்தலைவன் 463
கட்டளை-வரையறை
கட்டுரை-வாக்கியம் 458
கடகம்-கையணி 350
கடகண்டு-ஒருநூல் 572
கடமை-காட்டுப்பசு 632
கடறு-காடு, பாலைநிலம் 293
கடப்பு-கடத்தல் 467
கடாவுதல்-விரைதல் 775
கடிசூத்திரம்-அரைப்பட்டிகை என வழங்குவதுபோலும் 41
கடிதல்-நீக்கல் 273, தரத்தல் 426
கடு-கடுக்காய் 3
கடுஞென்-ஆண்குரங்கு 258, 659

கடை-வாயில் 492
கடைசி-மருதநிலப் பெண் 177
கண்டம்-துண்டு 211
கண்டல்-தாழை 367
கண்ணி-சூடும்பூ 669
கண்ணைடல்-இரங்கல் 16
கணிச்சி-குந்தாலி 440
கணை-அம்பு 506
கதவு-கோபமுடையன 576
கதழ்தல்-விரைந்து செல்லல் 63
கதுப்பு-முற்பக்க மயிர் 129
கந்திருவம்-இசைநூல் 521
கபாலி-சிவன் 512
கம்பலம்-கம்பளம் 517
கம்பலை-ஒலி 75
கயம்-குளம் 134
கரகம்-நீர்வைத்திருக்கும் பாத்திரம் 661
கரத்தல்-அழித்தமறைத்தல் 58
கரந்த-மறைந்த 538
கரந்தை- 589
கரம்பை-பாழ்நிலம் 176
கராம்-முதலையுள் ஒருசாதி 633
கருப்பை-காசெலி 176
கல்லாரம்-குவளை 178
கலம்-தோணி 147
கலம்-பாத்திரம் 275, 520
கலி-ஒலி 134
கலித்தல்-தழைத்தல் 140
கலுழ்தல்-நீர்சொரிதல் 14
கவடு-மரக்கொம்பு 625
கவரி-மான் 633
கவான்-மலைப்பக்கம் 40
கவின்-அழகு 359
கழனி-வயல் 162
கழிநெடிலடி-பதினேழு எழுத்துமுதல் இருபது எழுத்துவரையில் உள்ளஅடி. அறுசீரடி 298
கள்வன்-திருண்டு 626
களமர்-மருதநிலமாக்களுள் ஒரு பகுதியார் 455
களம்-போர்க்களம் 375, இடம் 201
களியர்-கள்ளுண்டு களிப்பார் 3
காதல்-நீக்குதல் 521
கறிக்கும்-கடிக்கும் 647

கா

காடுகெழு செல்வி-துர்க்கை 33
காடுறையுலகம்-முல்லைநிலம்
காதலர்-தலைவன் 468
காதல்-ஆசை 25
காபாலம்-சிவனுடலிலொன்று 502
காரான்-எருமை 657
காரிகை-பேரழகு 475
காழ்-இருப்புக்கோல்364,வடம் 468
காழ்ப்பு-வயிரம் 672
காழகம்-ஒருடைவிசேடம் 468
கானம்-காடு 404
கானல்-கழிக்கரை, கடற்கரைச் சோலை 250
கானவன்-வேட்டுவன் 403

கி

கிண்கிணி-சதங்கை 21
கிழக்கு-கீழ் 123
கிளத்தல்-சொல்லுதல் 621
கிளவி-சொல் 162, 580
கிளைத்தல்-வளர்தல் 500
கிளைஞர்-சுற்றத்தார் 78

கீ

கீழ்-இழிந்த சாதி 672

கு

குசை-தருப்பைப்புல் 663
குஞ்சரம்-யானை 633
குட்டம்-நாற்சிரிற்குறைந்து வருமடி 444, 446
குடங்கை-உள்ளங்கை 264
குடம்பை-பறவைக்கூடு 672
குடவாயில்-கும்பகோணம் 373
குடாரி-குந்தாலி
குடிஞை-ஆந்தை 372

குடிசகன்-பிறரில்லத்தில் வசித்து, தன்னில்லத்திலாயினும்பிறரில்லத்திலாயினும் பிச்சையெடுத் துண்பவன், சிகை, பூணூல், பிட்சாபாத்திரம், திரிதண்டம் தரிக்க வேண்டியன. தலையமொட்டையாக்கிக் காஷாயமும் தரிக்கலாம். தெய்வ வழிபாடு, செபம், தியானம் முதலியனவற்றிற் காலங் கழித்தல்வேண்டும். 662
குண்டிகை-நீர் மொண்டுவைத்திருக்கும் பாத்திரம் 662
குணுது-கிழக்கின்கண்உள்ளது 430
குணில்-குறுந்தடி 499
குராலான்-கபிலப்பசு 125
குரம்பை-சிறுகுடில் 673
குரல்-பெண்மயிர் 460
குழை-காதணி. இக்காலத்தில் தோடு என்ப 371, தளிர் 371
குறங்கு-தொடை 462
குறத்தி-குறமகள் 656
குறளடி-நாலெழுத்து முதல் ஆறெழுத்துவரையுமுள்ள வடி 297
குறிப்பிசை-எழுத்தலோசை 571
குறிப்பு-சுவைக்குறிப்பு 3, குறித்தல் 570
குறியீடு-பெயரிடுதல் 735
குறுங்கை-குறியகை 652
குறை-துணிக்கப்பட்ட இறைச்சி 27
குன்றம்-மலை 430
குன்றல்-குறைதல் 303
குன்றி-ஒருவகைக் கொடி 132

கூ

கூடல்-மதுரை 679
கூடு-நெற்கூடு 634
கூதாளி-ஒருவகைச் செடி
கூவல்-அழைத்தல் 359
கூழை-கூந்தல் 599
கூற்று-யமன் 493
கூன் 312

கே

கேடகம்-பரிசை 516
கேழல்-பன்றி 945
கேள்-உறவு 42
கேளிர்-சுற்றம் 78

கை

கைக்கிளை-ஒருதலைக் காமப் பொருளில் வரும் பாட்டு 440
கைகோள்-ஒழுக்கங்கோடல் 201, 576
கைதை-தாழை 178
கைப்பு-ஒருசுவை 5
கைமை-வித்தவை 627
கையறல்-செயலறல் 48

கொ

கொங்கு-பூந்தாது 576
கொச்சகம்-கொச்சக உடைபோல் அடுக்கிச் செய்யப்படும் பாட்டு 515
கொட்டை-தாமரைப் பொகுட்டு 180
கொடிச்சி-குறிஞ்சிநிலப்பெண் 421
கொடுகொட்டி-சிவன் ஆடலிலொன்று 502
கொடுமடி-வளைந்தமடி 31
கொல்வினை-கொற்றொழில் 175
கொழுநன்-நாயகன் 364
கொளாஅல்-கொளுத்துக 166
கொற்றம்-வெற்றி 277

கோ

கோட்டான்-கூகை 659
கோட்டுமண் கொளல்-கொம்பால் மண்ணைக் குத்தி எடுத்தல் 435
கோட்படல்-கொள்ளப்படல், கொலைப்படல் 648
கோடியர்-கூத்தர் 181
கோதை-மாலை 521, சேரன் 24

கோய்-கள்முகக்கும் பாத்திரம் 181
கோழிலை-கொழுத்த இலை 269

கௌ

கௌவை-பழிமொழி 54

ச

சகடம்-பண்டி 495
சகரர்-சூரியகுலத்தரசர் 686
சடாடவி-சடைக்காடு, சடா+அடவி 508
சத்துவம்-உள்ள நிகழ்ச்சியை வெளிப்படுத்தும் மெய்ப்பாடு 3

சா

சாதி-குலம், பிறப்புமாம் 301
சாதிப்பாட்டு-இசைப்பாட்டின் வகை 327
சாய்தல்-ஒருபக்கஞ் சார்தல் 17
சாயின-மெலிந்தன 39
சாறு-விழா 150
சான்றவர்-அறிவின் நிறைந்தவர் 525

சி

சிதல்-கறையான் 642
சிதைதல்-வழுப்படுதல், குற்றப்படுதல் 707, 710, 711, அழிதல் 48
சிதைவு-குற்றம் 709
சிந்தடி-எழெழுத்தமுதல் ஒன்பதெழுத்து வரையு முள்ள வடி, முச்சீரடி 297
சிந்தன்-குறளன் 299
சிம்புளித்தல்-கண்மூடல் 141
சிலம்பி-ஒருவகைப் பூச்சி 435
சிலம்பு-காலணியுளொன்று 584
சிலைத்தல்-ஒலித்தல் 23
சிற்றிசை-இசைப்பாப்பகுதி 522
சிற்றில்-சிறுவீடு 365
சிறங்கணித்தல்-கண்ணைச் சுருக்கிப் பார்த்தல் 12
சின்மை-சிற்றெல்லை, இழிந்த வெல்லை 310
சினம்-கோபம் 27
சினை-மரக்கிளை 176

சீ

சீர்-அசையாலாயது 201
சீர்த்தி-மிகுபுகழ் 757
சீரை-தாலைக்கோற்றட்டு 25

சு

சுட்டல்-குறித்தல் 71
சுணங்கு-தேமல் 521
சுரம்-பாலைநிலம் 36, 341, 534
சுரத்தல்-கொடுத்தல் 313
சுரிதகம்-கலிப்பாவினுறுப்பு 470
சுரும்பு-வண்டு 121, 474
சுரை-முலைமடி 136
சுவடு-நுண்மை 209, அடையாளம் 491
சுவல்-பிடர்மயிர் 430
சுவர்ணம்-பொன் 343

சூ

சூர்-சூரன் 516
சூரல்-சுழல்காற்று 410
சூல்-கருப்பம் 23
சூழ்ச்சி-சுழற்சி 32, ஆராய்ச்சி 125
சூள்-சத்தியம் 24

செ

செகுத்துண்ணல்-கொன்றுண்ணல் 546
செந்தூக்கு-ஆசிரிய அடி 359
செப்பிக் கூறல்- 375
செப்பல்-சொல்லுதல் 453
செம்பால்-சமபாகம் 514
செய்-வயல் 55
செயலை-அசோகு 140
செவ்வழி-ஓர்பண் 582
செவிலி-கைத்தாய் 566
செவியறிவுறூஉ-செவியிலறிவுறுத்தவை 442
செற்றம்-கோபம் 491
செற்றல்-செறிதல்
செறுநர்-பகைவர் 137
சென்னி-சோழன் 441, தலை 446

சே

சேந்தன்-முருகக்கடவுள் 463
சேய்மை-தூரம் 18
சேவல்-மயிலொழிந்த ஆண் பறவை 651, ஆண்குதிரை 659

சொ

சொல்லின் முடியுமிலக்கணம்-சொல்லான் முடிந்துகிடக்கு மிலக்கணம் 34
சொலிய-நீங்க 656
சொற்சீரடி-சொல்லே சீராக வருமடி 457

ஞ

ஞாலல்-ஒலித்தல் 439

ஞா

ஞாண்-நாண்: கயிறு 250
ஞாணூல் 440
ஞாழல்-புலிநகக் கொன்றை 534
ஞான்று-நாள் 46
ஞாலம்-பூமி 494

ஞெ

ஞெமுங்கல்-அழுந்தல் 55
ஞெகிழ்தல்-கழலுதல் 36

த

தகடூர் யாத்திரை-ஒருதூல் 615
தகர்-ஆட்டின் ஆண் 650
தண்ணுமை-மத்தளம் 418
தணத்தல்-பிரிதல் 59
தத்தை-பெருங்கிளி 659
ததைதல்-நெருங்குதல் 244
தந்திரம்-தூல் 748
தந்திர வாக்கியம்-ஒருசொல் 565
தப்பியார்-பகைவர் 547
தபுதி-அழிவு 25
தமனியம்-பொன் 494
தலைக்கீடு-சாட்டு 535
தலைஇ-பெய்து 66
தவிர்தல்-நீங்குதல், தங்குதல் 440
தழை-ஒருவகை உடை, பூவுந் தளிரும் விரவத்தொடுத்தது 158
தளை-கட்டு, பந்தம் 279
தறுகண்மை-அஞ்சாமை 24

தா

தாங்கல்-அடக்குதல், மறைத்தல் 38, தடுத்தல் 446
தாது-மகரந்தம் 28
தாதுண் பறவை-வண்டு 79
தாம்பு-கயிறு 650
தாரகை-நட்சத்திரம் 492
தாலி-ஐம்படைத் தாலி 371
தாவல்-இடையிட்டுச் செல்லல் 612
தாள்-நாளம், அடி 291
தானை-வஸ்திரம் 32

தி

திகிரியோன்-திருமால் 544
திங்களூர்-ஒருர் 442
திட்டி-தேமல் 14
திதலை-தேமல் 60
திமிர்தல்-அப்புதல் 585
திரிகோட்டவேணி-கோடுபோலத் திரிந்ததாகியவேணியையுடையவன் 496
திரிவிரி இசை-இசைப்பாட்டின்வகை 327
திவவு-நரம்புக்கட்டு 135
திறம்-பகுதி 456

தீ

தீர்தல்-பிரிதல், நீங்கல் 447

து

துஞ்சல்-உறக்கம் 33
துடி-உடுக்கை 509
துடுப்பு-சுருக்குசுருவம் 118
துப்பு-பவளம் 372
தும்பி-வண்டு 474, 565
துய்க்கும்-அனுபவிக்கும் 455
துயல்வரல்-அசைதல் 29
துயில்-நித்திரை 17
துளக்கல்-அசைதல் 455
துளங்கல்-அசைதல் 599
துறை-மார்க்கம் 327
தூனை-விரைவு

தூ

தூக்கு-பாக்களைத் தணித்து நிறுப்பது 201
தூங்கல்-தூங்குதல் 376
தூணி-அம்புக்கூடு 175
தூம்பு-துளை 73

தெ

தெவிட்டல்-நிறைதல் 719
தெருமரல்-சுழற்சி 420
தெருள்-தெளிவு 526
தெளித்தல்-சத்தியஞ்செய்து தெளிவித்தல் 475
தெறித்தல்-தள்ளல் 430, 630

தே

தேல்தேர்-பேய்த்தேர், கானல் 476
தேவபாணி-கடவுள் வாழ்த்துச் செய்யுள் 458, 491
தேறுதல்-தெளிதல் 525

தை

தைஇ-செய்து 521, 551
தைவரல்-தடவல் 580

தொ

தொடை-தொடுக்கப்படுஞ் செய்யுளுறுப்பு, மாலை 206, 426
தொண்டு-ஒன்பது 423
தொய்யில்-மகளிர் முலையிலும் தோளிலும் எழுதுங்கோலம் 521
தொழுதை-ஓராறு 29

தோ

தோரிய மகளிர்-பிற்கூறுபாடுவோர் 712
தோற்றுவாய்-தொடக்கம் 471

ந

நகுதல்-சிரித்தல் 11
நகை-சிரிப்பு 8
நச்சல்-விரும்பல் 471
நசை இ-விரும்பி 404, 492
நட்டல்-நண்புசெய்தல் 361
நடு-நடுநிலை 533
நத்தை-சங்கு 641
நயத்தல்-விரும்பல் 163
நரந்தம்-நாரத்தை, கத்தூரி 357
நலம்-இன்பம் 430
நலிதல்-வருத்துதல் 475
நலிபு-ஆயுதம் 606
நவ்வி-மானுள் ஒருசாதி 630
நவிலல்-பயிறல் 12, 470
நனவு-விழிப்பு 536

நா

நாகம்-பாம்பு 491
நாஞ்சில்-கலப்பை 667
நாட்டல்-நிறுத்தல், யாத்தல் 183
நாய்கன்-மீகாமன் 147
நாவல்-ஒருமரம் 369, 492
நாவாய்-தோணி 363
நாறல்-மணத்தல் 158
நான்மாடக்கூடல்-மதுரை 454

நி

நிணம் 27
நிம்புரி-பொருமை 80
நிமித்தம்-காரணம் 756
நியிர்தல்-உயர்தல் 506
நிரணிறை-முறைநிறுத்தல் 179
நிலை-இயல்பு, தன்மை 43
நிவத்தல்-உயர்தல் 252

நு

நுகும்பு-இளங்குருத்து 973
நுசுப்பு-இடை 129
நுதல்-நெற்றி 34
நுதலுதல்-கருதுதல் 518
நுவ்வை-நுமது தங்கை 623

நெ

நெகிழ்தல்-கழலுதல் 447, மெலிதல் 19
நெடிலடி-பதினெந்தெழுத்து முதல் பதினேழு எழுத்து வரையுமுள்ளவடி. ஐஞ்சீரடி 298
நெய்த்தோர்-இரத்தம் 176
நெய்தல்-இரங்கற்பறை, சாப்பறை 421

நே

நேமி-சக்கரம் 490
நேரடி-அளவடி பத்தெழுத்து முதல் பதினொன்று எழுத்து வரையுமுள்ளவடி; நாற்சீரடி 298
நேர்நிலை வஞ்சி-சமநிலை வஞ்சி இருசீரடியால் வருவது 302

நோ

நோக்கு-நோக்கிக்கொள்ளும் பொருள்பெறச் செய்வது 201
நோய்சேர்ந்த திறம்-நோதிறம், ஒருபண் 54
நோன்றல்-பொறுத்தல் 73

ப

பகடு-எருமை 150
பகழி-அம்பு 205, 371, 403
பகல்செய்வான்-ஞாயிறு
பகல்-நுகத்தின் நடுவாணி 63
பகுதகன்-சந்நியாசியாகி ஏழு வீட்டில் பிச்சை யெடுத்துண்ணல்வேண்டும். தன் வீட்டில் பிச்சையெடுக்கலாகாது; தன் பூமியில் வசிக்கலாகாது. பற்றையொழித்தல்வேண்டும். 662
பசலை-பசப்பு 59
பட்டாங்கு-உண்மை 45
படப்பை-தோட்டம் 660
படலம்-அதிகாரம் 562
படாம்-வஸ்திரம் 509
பண்டாரங்கம்-சிவனுடலிலொன்று 502
பண்ணத்தி-ஒருவகைச் செய்யுள் 571
பண்ணை-வீளையாட்டு 158
பதம்-செல்வி 449
பதவு-புல்லு 629
பதி-ஊர் 455
பயிற்றல்-அணைத்தல் 647
பரமஹம்சன்-எல்லாம் பிரமமெனவெண்ணி, பிரமத் தியானஞ் செய்பவன். இவன் ஏகண்டம், கந்தை, கௌபீனந் தரித்தல்வேண்டும். பிராமண சந்நியாசி காஷாயந் தரிக்கலாம். சமபுத்தி யிருத்தல் வேண்டும். பூணூல் களைய வேண்டும் 662
பரம்-மேல் 214
பரலோகழக்கு-உலகவழக்கு
பரிகலம்-பிச்சை ஏற்கும் பாத்திரம் 491
பரிசில்கடாநிலை-பரிசில் வேண்டல் 665
பரிசில்விடை-பரிசில் விடுத்தல் 665
பரிதல்-வருந்தல் 57
பரிதி-சூரியன் 492
பரிபாடல் 557
பருவரல்-துன்பப்படல் 59
பலித்தல்-பயன்படல் 512
பலி-பிச்சை, தெய்வங்களுக்குப் பலியிடுதல் 492
பழங்கண்-துன்பம் 59
பழனம்-வயல் 162
பறத்தலை-போர்க்களம் 16
பறி-ஓலைப்பாய் 630
பறை-சிறை 17
பனிச்சை-ஐம்பாலிலொன்று 455
பனித்தல்-நடுங்கல் 47

பா

பாக்கம்-நெய்தனிலத்தூர் 421
பா-பரந்துபட்டுச்செல்லும் ஓசை 201
பாங்கு-பகுதி
பாட்டங்கால்-தோட்டம் 520
பாடாண்கைக்கிளை-பெண்பாற் கைக்கிளைபற்றி ஒரு ஆண் மகனது வீரம் அழகு முதலியவற்றைப்புகழ்ந்துகூறல் 554
பாடினி-விறலி 360
பாணி-தாளம் 248

பாயல்-துயில் 543
பால்-பகுதி 439
பால்நிறவண்ணன்-பலதேவன் 490
பாளுள்-பாதிநாள் இரவினடுக்கூறு

பி

பிசி-நொடி 558
பிடகை-பூந்தட்டு 394
பிடி-பெண்யானை 180, 653
பிண்டி-அசோகு 454
பிணர்-சருச்சரை 652
பிணவு-பெண் 166
பிணி-நோய் 456
பிணித்தல்-கட்டுதல்
பித்திகை-கருமுகை 576
பித்தை-ஆண்மயிர் 467
பிதிர்தல்-உடைதல், அகளாதல் 494
பிழம்பு-வடிவு 111
பின்னகம்-பின்னிமுடிப்பது 372

பீ

பீர்-பசப்பு 359
பீரம்-பீர்க்கு 114
பீலி-மயிலிறகு 517

பு

புகார்-காவிரிப்பூம் பட்டினம் 552
புத்தி-பொருத்தமாறு
புணை-தோணி 64
புய்க்கல்-பிடுங்கல் 480
புரைதல்-ஒத்தல் 457
புரையோர்-மேலோர் 445
புல்வாய்-மானுளொருசாதி 630
புலநெறி வழக்கம்-செய்யுள் வழக்கம் 110
புலம்பு-தனிமை 485, வறுமை 430
புலவி-புலத்தல் 577
புலவியுளழுதமங்கலம் 183
புலவு-புலான்மணம் 628
புலன்-புலம் = அறிவுடைமை 80, வனப்புளொன்று 201
புழல்-தலை 176
புழுகு-மொட்டு (முட்டு) 175, 372
புறங்காடு-சுடுகாடு 444, 628
புறம்-பொருட்பகுதி 1, புறப்பொருள் 597
புறநிலைவாழ்த்து-தெய்வத்தைப் புறநிறுத்தி வாழ்த்துவது 441
புனிற்று-ஈன்றணிமையையுடைய பசு 161

பூ

பூசல்-போர் 375
பூண்-ஆபரணம் 457

பெ

பெண்ணை-பனை 58, 435
பெருமிதம்-வீரம் 8
பெற்றம்-பசு 647

பே

பேதுறல்-மயங்கல், வருந்தல் 79
பேதுறல்-வருந்தல் 430

பை

பைதல்-துன்பம் 625
பைதல-வருத்தமுடையவாய் 480
பையுள்-துன்பம் 582

பொ

பொச்சாப்பு-சோர்வு 33
பொதுவன்-இடையன் 521
பொருளிசை, 570
பொழில்-உலகம் 492, சோலை 368
பொழிப்பு ஒரு தொடை 409
பொறுமை-அழுக்காறு 33

போ

போருக்கு-சுரிதகம் 470
போழ்தல்-பிளத்தல் 367

பௌ

பௌவம்-கடல் 212

ம

மக்கள்-ஆறறிவுடையமனுஷர் 644
மகப்பிள்ளை 16
மகரம்-ஒருவகை மீன்

மகிழ்-ஒருபுரம் 454
மடங்கல்-இயமன் 444
மடன்-மடம்-கொழுத்தக் கொண்டுகொண்ட தலிடாமை 10
மடன்மா-பரிமடற் குதிரை 25
மடல்-பரிமடல் 525
மடிமை-சோம்பல் 81
மண்டிலப்பாட்டு, எல்லாவடியும் நாற்சீராய்வரும் ஆசிரியப் பாட்டு 498
மண்டை-பாணர்கையிலுள்ள ஏற்கும் பாத்திரம் 247
மண்ணல்-கழுவல் 455
மதியம்-சந்திரன் 492
மதுகை-வலி 535
மந்தி-குரங்கு 20
மம்மர்-மயக்கம் 12, 526
மயல்-மயக்கம் 491
மரல்-ஒருசெடி 520
மரா-கடம்பு 454
மருகன்-வழித்தோன்றல் 25
மருங்குல்-இடை 112
மருட்கை-வியப்பு 19
மல்லல்-நிறைதல்
மலிவு-வரைவுமகிழ்சி 577
மழு-ஒரு ஆயுதம் 491
மள்ளர்-வீரர் 395
மறக்குடி-வீரர்குடி 27
மறுகு-வீதி 130, 421
மன்று-பசுத்தொழுவம் 350

மா

மாக்கள்-ஐயறிவுடையமனுஷர்
மாட்டுதல்-கொளுவுதல், இயைத்தல் 201, 600
மாத்திரை-அளவு 201
மாமை-மாந்தளிர் 60
மாய்தல்-மறைதல் 64
மாரி-மேகம் 166
மாற்றம்-சொல் 49

மி

மிடைதல்-நெருங்குதல் 17

மீ

மீக்கூறல்-உயர்த்திக்கூறல் 11, 18
மீன்-நாண்மீன் 441

மு

முகை-அரும்பு 76
முட்டு-முட்டுப்பாடு; தடை 66
முட்டின்று-முட்டையுடையது 68
முட்டுதல்-நிறைதல் 458
முதுமொழி-பழமொழி 567
முதை-பழங்கொல்லை 580
முந்நீர்-கடல் 395
முரணல்-மாறுபடல்
முரண்-மாறுபாடு 82, ஒரு தொடை 379
முரள்-சிப்பிவகை 641
முரலல்-தள்ளியொலித்தல் 375
முரற்கை-கலிப்பா 358
முற்றில்-சிப்பிவகையிலொன்று 642
முறுவல்-சிரிப்பு, பல் 394, 526
முன்றில்-முற்றம் 291
முன்னம்-குறிப்பு 586 குறிப்பால் இம்மொழி இவர்க்கு உரிய என்பதை அறியச் செய்தல் 597
முனைதல்-வெறுத்தல் 657
முனைவன்-முன்னோன் 683

மூ

மூங்கா-கீரியுள் ஒரு சாதி 626
மூதா-முதியபசு 580
மூதிற்பெண்டிர்-முதிய மறக்குடியிற் பிறந்த மகளிர் 16

மெ

மெய்-வடிவு 109
மெய்ப்பாடு-பொருட்பாடு, மெய்யின்கட்பட்டுத் தோன்றுவது 1
மென்புலம்-மருதமும் நெய்தலும் 455

மே

மேவார்-பகைவர் 278
மேற்கோடு-மேற்கொம்பு 625

மை

மைந்து-வலி 78

மொ

மொக்குள்-முகிழ்ப்பு 36
மொய்ப்பு-வலி 460

மோ

மோடு-பெருமை 137
மோத்தை-ஆட்டிறுண் 650
மோதிரப்பாட்டு-ஒருவகைப் பாட்டு 572
மோனை-ஒரு தொடை 379

யா

யா-ஒருமரம் 672
யாத்தல்-கட்டல், தொடுத்தல் 204
யாப்பு-அடிதோறும் பொருள் முடியச்செய்வது 204, 366

வ

வகையுளி-அசைகளை இசைப்படி வகுத்தல் 237
வங்கம்-தோணி 552
வஞ்சி-வஞ்சிப்பா 271
வடுகு-வடுகநாடு 688
வண்ணித்தல்-வர்ணித்தல்,புனைந்துரைத்தல் 483
வண்டல்-மணல் விளையாட்டு 585
வண்ணம்-சந்தவேறுபாடு 602
வணர்தல்-வளைவு, கடைகுளர்வுதல் 526
வதி-தங்குமிடம் 474
வம்பலர்-வழிச்செல்வோர்
வயவு-வேட்கை 157
வரன்றல்-வாரல், வாருதல் 297
வரி-இசைப்பாட்டுவகை 522
வரிவயம்-புலி 27
வரை-எல்லை, வரையறை 558
வரைஉலகம்-குறிஞ்சி நிலம் 67
வரைதல்-நீக்கல், நியமமான ஒழுக்கம் 30
வரைப்பு-எல்லை 441
வழங்கல் செல்லல்; திரிதல் 649
வழியசை-பின்னுமசைவருவதற்கு ஏதுவானது 458
வள்-வார் 430
வள்ளியோன்-கொடையாளன் 132
வள்ளம்-சிறு கிண்ணம் 130
வளி-காற்று 35, 277
வளை-சங்கு 638, வளையல் 492
வறத்தல்-வற்றல் 657
வறிது-சிறிது 13
வன்புலம்-முல்லையும் குறிஞ்சியும் 455

வா

வாணிகம்-வியாபாரம் 668
வாமன்-அருகன் 396
வாய்மொழி-குறிப்புமொழி368,570
வாய்ப்புள்-சொல்நிமித்தம் 521
வாயாகுதல்-உண்மையாதல் 37
வாயுறை-செரன்மருந்தென்பர் பேராசிரியர். மெய்ப்பொருளை யறிவுறுத்தவது 442
வாரணம்-கோழி 661
வாரம்-அரிதகம் 486, செம்பாலின் சமபாகம் 514, பிற்கூறு , 712
வால்-வெண்மை, தூய்மை 125

வி

விசித்தல்-கட்டுதல் 438
விடக்கு-இறைச்சி 660
விடாஅல்-விடற்க 74
விடுத்தல்-விடைகூறல் 695
விதத்தல்-சிறப்பாயெடுத்துக் கூறல் 645
விரவல்-கலப்பு 348
விலக்கல்-மறுத்தல் 695
விழுமம்-துன்பம் 58
விழைதல்-விரும்பல் 438
விள்ளல்-அலர்தல்
விளித்தல்-அழைத்தல் 183
விறலி-ஆடுமகள் 20

விறல்-சத்துவம், வென்றி 16
விறத்தல்-செறிதல் 144

வீ

வீழ்-விழுதல் 68
வீழில்தாழை-தெங்கு
வீஞை-சீழ்க்கை 32
வீற்றுவீற்று-வேறுவேறு 247

வெ

வெஃகாமை-விரும்பாமை 606
வெகுளி-கோபம் 8
வெண்மீன்-வெள்ளி 243
வெரிந்-முதுகு 176
வெரூஉதல்-அஞ்சுதல் 543
வெருவரல்-அஞ்சுதல் 16
வெருகு-பூனையுள் ஒருசாதி 626
வெளில்-தறி
வெள்ளில்-பாடை 444
வெள்ளை-வெண்பா 342, வெள்ளாடு 403
வெறுத்திசை-இன்னிசைவோசை 236

வே

வேய்-மூங்கில் 120
வேட்கோ-குயவன் 569
வேட்கை-விருப்பம், ஆசை 132
வேட்டல்-வேள்விசெய்தல் 666
வேலி-மதில் 66
வேழம்-யானை 138

வை

வை-கூர்மை 430
வைப்பு-சரிதகம் 477
வைகல்-நாள், கழிதல் 360
வைகறை-விடியல் 82